# இந்துக்கலைக்களஞ்சியம்

தொகுதி - பத்து (ப-பௌ)



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் - இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்கலைக்களஞ்சியம்

தொகுதி - பத்து (ப - பௌ)


பிரதம பதிப்பாசிரியர்

**பேராசிரியர் சி.பத்மநாதன்**

உதவிப் பதிப்பாசிரியர்கள்

**திரு. க.இரகுபரன்**

**திருமதி தேவகுமாரி ஹரன்**

நிர்வாக ஆசிரியர்

**திருமதி சாந்தி நாவுக்கரசன்**



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் - இலங்கை

**2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **முதற்பதிப்பு** | : | டிசெம்பர் 2009 |
| **வெளியீடு** | : | இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்<br>248 - 1/1, காலி வீதி, கொழும்பு – 04,<br>இலங்கை. |
| **பதிப்புரிமை** | : | இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் |
| **அச்சு பதிப்பு** | : | கௌரி அச்சகம்,<br>207, சேர் இரத்தினசோதி சரவணமுத்து மாவத்தை,<br>கொழும்பு – 13. |
| **விலை** | : | **600/=** |
| ISBN NO. | : | 978 - 955 - 9233 - 14 - 5 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HINDU ENCYCLOPAEDIA

Volume - X

Editor in Chief

**Prof.S.Pathmanathan**

Sub Editors

**Mr.K.Raguparan**

**Mrs. Thevakumary Haran**

Managing Editor

**Mrs. Shanthi Navukkarasan**

Department of Hindu Religious & Cultural Affairs

**2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **First Edition** | : | **December 2009** |
| **Puplished By** | : | **Department of Hindu Religious & Cultural Affairs,<br>248 - 1/1, Galle Road, Colombo - 04,<br>Sri Lanka.** |
| **Copy Right** | : | **Department of Hindu Religious & Cultural Affairs** |
| **Printed By** | : | **Gowriy Printers,<br>207, Sir Ratnajothi Saravanamuthu Mawatha,<br>Colombo - 13.** |
| **Price** | : | **600/=** |
| **ISBN** | : | 978 - 955 - 9233 - 14 - 5 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்கலைக்கலஞ்சியம்

தொகுதி - பத்து

## எழுத்தாளர் குழு

பேராசிரியர் சி.பத்மநாதன்

பேராசிரியர் வி.சிவசாமி

கலாபூஷணம் வசந்தா வைத்தியநாதன்

திரு.க. இரகுபரன்

திரு. ஸ்ரீ. பிரசாந்தன்

திருமதி இந்திராதேவி சதானந்தன்

திருமதி தேவகுமாரி ஹரன்

திருமதி நித்தியவதி நித்தியானந்தன்

திருமதி ஹேமலோஜினி குமரன்

செல்வி ச. நந்தினி

திரு சு. துஷ்யந்

கலாநிதி ப. கணேசலிங்கம்

கலாநிதி வ. மகேஸ்வரன்

பேராசிரியர் கலைவாணி இராமநாதன்

---

கட்டுரைகளின் இறுதியில் அவ்வக் கட்டுரைகளின் ஆசிரியர்களின் பெயர்களின் சுருக்கம் தரப்பட்டுள்ளது. மேற்படி கட்டுரை ஆசிரியர்களின் பெயர்ச்சுருக்கங்கள் முறையே வருமாறு :

(சி.ப). (வி.சி). (வ.வை). (க.இர). (ஸ்ரீ.பி). (இ.ச). (தே.ஹ). (நி.நி). (கே.கு). (ச.ந). (சு.து). (ப.க). (வ.ம). (க.இரா.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரை ஆசிரியர்கள்

கலாநிதி ஜே. வி. சரோஜா

கலாநிதி அ. மா. பரிமணம்

டாக்டர். சி.கே. சிவப்பிரகாசம்

டாக்டர். சு. சாமிஐயா

திரு. அம்பை. இரா. சங்கரன்

புலவர் க. மருதமுத்து

டாக்டர். வெ. பாலம்பாள்

டாக்டர். ப. சண்முகம்

பேராசிரியர் ஞானா குலேந்திரன்

பேராசிரியர் ந. க. மங்களமுருகேசன்

திரு. த. அகரமுதல்வன்

கலாநிதி. சு. இராஜவேலு

கலாநிதி. பி. செல்லத்துரை

கலாநிதி. இராச மாணிக்கனார்

திரு. எம். இராஜகோபாலன்

கலாநிதி. எஸ். ஜெகதீஸ்வரன்

மேற்படி அறிஞர்களின் கட்டுரைகள் இத்தொகுதிக்கென எழுதப்பட்டவை அல்ல ; வேறு நூல்களிலிருந்து பெறப்பட்டவை. இவர்களின் பெயர்ச் சுருக்கங்கள் முறையே வருமாறு : (ஜெ.வி.ச.). (அ.மா.ப.). (சி.கே.சி.). (சு.சா.). (அ.இ.ச.). (க.ம.). (வெ.பா.). (ப.ச.). (ஞா.கு.). (ந.க.ம.). (த.அ.). (சு.இ.). (பி.செ.). (இ.மா.). (எம்.இ.) (எஸ்.ஜெ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

திருமதி. சாந்தி நாவுக்கரசன்,
பணிப்பாளர்.
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்டு வரும் இந்துக் கலைக்களஞ்சியத்தின் பத்தாம் தொகுதி இதுவாகும். இந்துக் கலைக்களஞ்சியத்தில் இத்தொகுதி 'ப' வரிசையில் உள்ள உயிர்மெய்களை முதலெழுத்துக்களாகவுடைய சொற்களைத் தலைப்புகளாகக் கொண்ட கட்டுரைகள் அடங்கியது. முன்னையத் தொகுதிகளைப் போன்றே இத் தொகுதியிலும் இந்து சமயத்துடன் தொடர்புடைய வரலாறு, திருத்தலங்கள், கலைகள், கலாசார சின்னங்கள், தத்துவங்கள் போன்ற பல்வேறு அம்சங்கள் விளக்கப்பட்டுள்ளன.

கலைக்களஞ்சியம் ஒன்றைத் தொகுத்து வெளியிடுவதென்பது ஒரு நீண்டகாலப்பணியாகும். இப்பணி தொடர்பாக வளவாளர்களை இனம் கண்டு கொள்வதும் சிரமமானது. இத்தகைய இடர்களை எதிர்நோக்கிய பொழுதும் இந்துக் கலைக்களஞ்சியமானது வருடாந்தம் வெளியிடப்படுகின்றது. இவ்வகையில் பத்தாம் தொகுதியின் கட்டுரை ஆசிரியர்களில் சிலர் எமது திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்களாக உள்ளனர். வேறு சிலர் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆவர். அவர்களின் கட்டுரைகள் வித்துவப் புலமை நோக்கில் அமைந்தவை. அவை ஆழமானவை. கட்டுரையாளர்களின் ஒத்துழைப்பும் கட்டுரைகளின் தராதரமும் பாராட்டுக்குரியவை.

இந்துக்கலைக்களஞ்சியத்தின் பதிப்பாசிரியராக பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் பணிபுரிகின்றார். ஆய்வாளர்களால் சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் அனைத்தையும் உரியமுறையில் செப்பம் செய்து வழங்கி இப்பணிக்கு பேருதவி புரிந்துள்ளார். இவரது ஊக்கமும் ஆக்கமும் மிகுந்த இந்தப் பணியானது எம்மால் பாராட்டத் தகுந்ததாகும். அவருடன் உதவிப் பதிப்பாசிரியராக கடமையாற்றும் திரு.க.இரகுபரன் அவர்களின் பணிகளும் மிகச்சிறப்பானவை. அவர்கள் இருவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது திணைக்களத்தின பணிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் மத விவகார அமைச்சர் மாண்புமிகு பண்டு பண்டாரநாயக்கா அவர்கள், அமைச்சின் செயலாளர் திரு.எச்.எம்.ஹேரத் அவர்களுக்கும் எமது நன்றியைக் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் இத்தொகுதிக்கு தமது பங்களிப்பை மேற் கொண்ட கட்டுரையாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இந்துக்கலைக்களஞ்சியத் தொகுப்பு பதிப்புப் பணியில் உதவுகின்ற உதவிப்பணிப்பாளர் திரு.ம. சண்முகநாதன், மிகச்சிறப்பாக கடமையாற்றும் சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர் திருமதி தேவகுமாரி ஹரன், திருமதி நித்தியவதி நித்தியானந்தன், திரு ஸ்ரீ பிரசாந்தன் ஆகியோருக்கும் எனது பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்தரப் பிரிவுகளில் இந்து சமயம், இந்து நாகரீகம் ஆகிய பாடங்களைப் பயிலும் மாணாக்கரும், அவர்களின் போதனாசிரியர்களும் இந்துக்கலைகளஞ்சியத்தின் தொகுதிகளை ஆர்வத்துடன் படிக்கின்றனர். அது போன்று தமிழகம், வெளிநாடுகளில் வாழ்கின்ற அறிஞர்களும் இத்தொகுதிகளைப் பெரிதும் பாராட்டுகின்றனர். இத் தொகுதியும் முன்னைய தொகுதியைப் போன்று அனைவருக்கும் பயன்பெறும் ஒன்றாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பேராசிரியர் சி. பத்மநாதன்
தகைசார் பேராசிரியர்

# சிந்தனையில் நிதானம் வேண்டும்

இந்நாட்களிலே தென்னாசியா என வழங்கும் பரத கண்டத்திலே பல மொழிகளைப் பேசும் சமூகங்களும் பல சமய நெறிகளைப் பின்பற்றும் சமூகங்களும் வாழுகின்றன. இப்பன்முகத் தன்மையின் மூலங்கள் புராதனமானவை. இப்பிராந்தியத்தில் அமைந்திருக்கும் நாடு ஒவ்வொன்றின் வரலாற்றிலும் பாரம்பரியத்திலும் அப்பன்முகத்தன்மை இளையோடி இருந்துள்ளது. அது இந்தப் பிராந்தியத்திற்குச் சிறப்பானது: அது பெருமைக்கும் உரியதாகும். அப்பன்முகத் தன்மையைப் புரிந்து கொள்ளாதவிடத்துப் பூசல்களும் கலவரங்களும் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகும்.

வழிபாடு, சமயநெறிகள், சமூகவழமைகள் என்பன தொடர்பாக வேற்றுமைகளை மதிக்க வேண்டும் என்பதே இந்து தர்மக் கோட்பாடாகும். அரசனொருவன் தனது குடியானவர்களின் சமய நெறிகளைப் பேணிப்பாதுகாப்பதோடு அவை எல்லாவற்றுக்கும் ஆதரவு வழங்க வேண்டும் என்பது தர்மசாஸ்திர நூல்களிலுள்ள அரசியல் பற்றிய சிந்தனையின் சாராம்சமாகும்.

மன்னரில் மேலானவன் என்று புகழப்படும் அசோகனின் கொள்கையும் இதுவேயாகும். அசோகன் ஒரு கால கட்டத்திலே பௌத்த சமயத்திற் சேர்ந்து கொண்டான். ஆயினும் எல்லாச் சமயத்தவரையும் மதித்து அவர்களுக்குச் சமமான முறையில் ஆதரவு வழங்குவது அசோக தர்மமாக அமைந்திருந்தது. தர்ம காரியங்களைச் செய்வதற்கென்று தர்மமகாமாத்திரர்கள் என்னும் அதிகாரிகளை அவன் நியமித்தான். அவர்கள் பிராமணருக்கும், பௌத்த, சமணத் துறவிகளுக்கும், ஆசிவிகருக்கும் பிறரான துறவிகளுக்கும் ஆதரவு புரிகின்றனரென்று அசோகன் தனது சாசனங்களில் உரிமை பாராட்டுகின்றான்: அதனைச் சொல்லிப் பெருமைப்படுகின்றான்.

மொகாலயப் பெருமன்னரான அக்பர் அரசு சமயச்சார்புடைய கொள்கைகளைப் பின்பற்றுவதனால் பெருங்கேடு நிகழும் என்பதை யதார்த்த பூர்வமாக அறிந்து கொண்டார். இந்துக்களும் இஸ்லாமியரும் இந்துஸ்தானத்திலே சம உரிமைகளோடு வாழ்வதற்கு வழி செய்வதன் மூலமே மொகாலயரின் ஆதிக்கத்தை நிலைபெறச் செய்யலாம் என்பது அக்பரின் சிந்தனையாகும்.

தென்னிந்திய அரசர்களின் பெரும்பாலானோர் சமய நெறிகளைப் பொறுத்தவரையில் தர்மசாஸ்திர சிந்தனைகளை அனுசரித்தனர். சின்னமனூர்ச் சாசனம் ஒன்று பாண்டிய மன்னனொருவனை மேல்வருமாறு புகழ்ந்துரைக்கின்றது.

"எண்ணிறந்த பிரம்மதேயமும்
எண்ணிறந்த தேவதானமும் எண்ணிறந்த
பள்ளிச்சந்தமும் எத்திசையும் இனிதியற்றி"

சைவம், வைணவம், சமணம், பௌத்தம் ஆகியவற்றுக்கும் அவற்றைச் சார்ந்த சமூகத்தவருக்கும் ஆதரவு புரிந்தமை பாண்டியனது புகழுக்குரிய செயலாக இங்கே போற்றப்படுகின்றது. இந்து சமயத்தையும் சமுதாயத்தையும் பாதுகாப்பதற்கென்று விஜய நகர இராச்சியம் அமைக்கப்பட்டது ஆயினும், குடியானவர்களின் சமய வழிபாடுகளைப் பொறுத்த வரையில் அரசு பக்கச் சார்பான முறையில் அவற்றிலே தலையிடாதென்று விஜய நகர மன்னர் பகிரங்கமாகப் பிரகடனஞ் செய்த வரலாறுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்களில் மனிதரின் எல்லா உரிமைகளும் மனித உரிமைக்கோட்பாட்டில் அடங்கிவிடும். அரசியல் நாகரீகம் முன்னேற்றமடைந்துள்ள சமுதாயங்களில் மனித சமுதாயம் பற்றிய விடயங்களில் மனித உரிமைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. ஆயினும் பாஸிஸச் சாயல் கொண்ட தேசியவாதமும் அடிப்படைவாதமும் மனித உரிமைக் கோட்பாடுகளை மனமுவந்து ஒப்புக்கொள்வதில்லை. இந்நூற்றாண்டில் மனித உரிமைகளுக்கும் அடிப்படை வாதத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் முனைப்புப் பெறக் கூடிய சாத்தியங்கள் உண்டு. அடிப்படைவாதமும் பாஸிஸமயமான தேசியவாதமும் ஜனநாயக முறைமைகளுக்கும் சிந்தனைகளுக்கும் விரோதமான போக்கினைக் கடைப்பிடிக்கின்றமை இன்னுமொரு விடயமாகும்.

இலங்கை பல இனத்தவர் வாழும் நாடு, நெடுங் காலமாக இங்கு பல சமயங்களும் நிலவிவருகின்றன. சுதேச மன்னர்கள் இலங்கைச் சமுதாயத்தின் பல்லினப் பன்முகப் பண்பாட்டுத் தன்மையை ஏற்றுக்கொண்டு அதனைப் பேணி வந்துள்ளனர் என்பதே வரலாறாகும். ஆயினும், இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு வித்தியாபீடங்களிலுள்ள பட்டவர்த்தனரிற் பலரும் இதனை மறைக்கத் தலைப்பட்டுள்ளனர்.


அண்மைக் காலங்களிற் பல புதிய கிறிஸ்தவ சமயக் குழுக்கள் சமயப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. சமய மாற்றத்தை ஏற்படுத்துவதில் அவை அதிக முன்னேற்றங் கண்டுள்ளன. தென்னிலங்கையிலும் குறிப்பாக வடகிழக்கு மாகாணங்களிலும் சமய மாற்றங்கள் பெருமளவில் ஏற்பட்டு வருகின்றன. சமூக பொருளாதார நிலைகளே அதற்கேதுவான பிரதான காரணமாகும். போரின் காரணமாக வாழ்விழந்தோர் பல்லாயிரக் கணக்கிலானோர். அவர்கள் தங்கள் வீடு வாசல்களையும் காணிபூமிகளையும் சீவனோபாயத்திற்கு வேண்டிய தொழில்களையும் இழந்து விட்டனர். சர்வதேச மயமான கிறிஸ்தவ அமைப்புகள் பல இங்குள்ள நிலைகளைச் சாதகமாகப் பயன்படுத்தி நிவாரணங்களை வழங்குவதற்கு முன்வருகின்றன. கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதும் அவர்களின் நோக்கமாகவுள்ளதும் தனது ஆதிபத்தியத்திற்குள் அடங்கிய நிலப்பகுதிகளில் வாழும் மக்களின் குறைகளைச் சாதி, சமய, இன பேதமின்றிப் போக்குவது அரசின் கடமையாகும். தென்னிலங்கையில் நலிவடைந்த சமூகப்பிரிவுகளின் வாழ்க்கையினை மேம்படுத்தக்கூடிய வளங்களும் வசதிகளும் அங்குள்ள முதலாளி வர்க்கத்தினரிடையில் உண்டு.

பாராளுமன்றச் சட்டத்தின் மூலமாக சமயமாற்றங்களைத் தடைசெய்ய வேண்டுமென்ற கோஷம் தென்னிலங்கையிலே கிளம்பியுள்ளது. தியாகராசா மகேஸ்வரனும் இந்து சமய விவகாரங்களுக்கும் பொறுப்பான அமைச்சராகவிருந்த காலத்தில் அதற்கு உடன்பாடாகவிருந்தார். ஆயினும், சமயமாற்றங்களைத் தடை செய்யும் சட்டத்தினால் என்ன பலன் கிடைக்கும்? சமய மாற்றங்களை அதனாற் தடை செய்ய முடியுமா? அதற்கான சாத்தியங்கள் இல்லை. ஒரு தலைப்பட்சமாகப் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் விவாதங்களினாலும் பொதுமேடைகளிற் சொல்லப்படும் கருத்துகளினாலும் உணர்ச்சி அலைகள் மேலோங்கும். சாதாரணமான பௌத்தர்கள் கத்தோலிக்கரையும் சீர்திருத்தவாதக் கிறிஸ்தவரையும் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே மிஷனரிமாருக்கு எதிராகப் பௌத்தகுருமார் சிலர் பொது மேடைகளிற் பிரசாரஞ் செய்தனர். உணர்ச்சிப் பிரவாகம் தோன்றியது. கலகம் விளைந்தது. சமய மாற்றங்களை ஏற்படுத்துவதில் ஈடுபாடு கொள்ளாத கத்தோலிக்க சமயத்தவரும் அவர்களின் தேவாலயங்களும் கொட்டாஞ்சேனைக் கலவரத்திலே தாக்குதல்களுக்கு இலக்காகின.

ஒரு சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகளுக்கு வகுக்கக் கூடிய இயக்கங்களில் இந்நாட்டுச் சைவர்கள் சேர்ந்து கொள்வது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். நாட்டில் வாழும் எல்லாச் சமூகத்தவரும் சமயத்தவரும் அரசின் ஆதரவுக்கும் பாதுகாப்பிற்கும் உரியவர்கள்.

இவ்விடயந் தொடர்பாக அரசு சில ஆக்க பூர்வமான வேறு முயற்சிகளை மேற்கொள்ள முடியும். அவற்றைச் செய்யுமாறு அரசினை வலியுறுத்துவதே முக்கியமான விடயமாகும்.

புனர்வாழ்வு, வறுமையொழிப்பு, மனித உரிமைகள் பேணல் என்பவற்றின் மூலமாகவே சமய மாற்றங்களைத் தவிர்க்க முடியும். இவ்விடயந் தொடர்பாக உணர்ச்சி வசப்படாது அறிவியல் பூர்வமாகச் சிந்திப்பது அவசியமானது. சமூகங்களின் பரஸ்பர உறவுகளைப் பற்றிய சிந்தனைகளில் நிதானம் அவசியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பார்வதி சிற்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலன்னறுவை – சிவன்கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேலூர் சென்னக் கேசவர் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேலூர் சென்னகேசவர் கோயிற் சிற்பங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பூரி ஜெகந்நாதர் கோயிலும் மூர்த்திகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







புள்ளபங்கை கோவிலின் கோபுரமும், சிற்பமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பல்லவர்கால கலைப்படைப்புக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பல்லவர்காலச் சிற்பங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஞ்சமுக ஆஞ்சநேயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரதநாட்டியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாண்டிருப்பு திரௌபதையம்மன் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திராசலம் ஆலயம்



பண்டரிபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப

## பகதத்தன்

ஆதிவராக மூர்த்திக்கும் பூமி தேவிக்கும் பிறந்தவன். இந்திரனுடன் யுத்தம் புரிந்த அரக்கர்கள் ஓடி ஒளிக்கும்படி இந்திரனுக்கு உதவி புரிந்து அவனிடம் தோழமை பெற்றவன். இவனைப் பாஷ்கலன் அம்சம் என்பர். இவனுடைய நகரம் பிராக் சோதிஷம் ஆகும்.

இவன் ஒருமுறை அர்ச்சுனனுடன் யுத்தம் புரிந்து அவனுடன் நட்பு கொண்டவன். பாரத முதல் நாள் யுத்தத்தில் துரியோதனனுக்கு உதவியாய் கடோற்கசனுடன் சண்டையிட்டவன். இவன் தாயாகிய பூமாதேவியின் வேண்டுகோளினால் கண்ணன் இவரைக் கொல்லாது விட்டார் என்பர். (தே. ஹ.)

## பகவத் கீதை

பகவத்கீதை என்ற சொல்லுக்கு தெய்வப் பாடல் என்பது பொருள்.குருஷேத்திரப் போர்க்களத்தில் பாண்டவ-கௌரவ அணிகளுக்கிடையில் போர்மூளவிருந்த சூழலில் பாண்டவ வீரனான அருச்சுனன் உறவுசார் உணர்வுகளாற் பாதிக்கப்பட்டு மனச்சோர்வடைகிறான். இந்நிலையில் சாரதியாகக் கண்ணன் அவனது மனச்சோர்வுக்கான அடிப்படைகளை அகற்றும் வகையில் புத்தி புகட்டுகிறான். தனது தெய்வீகக் காட்சியை வழங்கி அதன்மூலம் அவனைப் பேரூக்கத்துக்கு நெறிப் படுத்துகிறான். ஈற்றில் சோர்வு அகன்ற அருச்சுனன் கண்ணன் சொற்படி செயற்பட ஆயத்தமாகிறான். மகாபாரதக் கதையமைப்பிலே கீதை உபதேசிக்கப்பட்ட சந்தர்ப்பம் இது.

கௌரவ-பாண்டவர்களுக்கிடையில் நடைபெற்ற போர் நிகழ்ச்சிகளை அஸ்தினாப்புரத்து அரண்மனையில் இருந்த திருதாராஷ்டிர மன்னன் கேட்டுக்கொண்டபடி சஞ்சயர் நேர்முக வர்ணனையாக எடுத்துரைத்தார். இவ்வாறு தொடங்கிய கீதை இறுதி இயலின் முடிவுரையும் சஞ்சயர் கூற்றாகவே அமைந் துள்ளது. போர்க்களத்தில் தன்னால் எதிர்க்கப்பட வேண்டிய கௌரவப் படையை நோக்கிய அருச்சுனனுக்கு அதில் தனது உறவினர்களும் நண்பர்களும் வணக்கத்துக்குரியவர்களும் இருப்பதைக் கண்டபோது பாசபந்த உணர்வுகள் மேலிட உடல் தளர்ந்து, மெய் நடுங்கி தேர்த் தட்டில் அமர்ந்து விட்டான். அவனது மனச்சோர்வைப் போக்கி ஆன்ம அறிவை மேன்மையுறச் செய்யும் நோக்கில் கண்ணனால் அருச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்ட கீதையில் எழுநூறு வாக்கியங்கள் இடம்பெற்று உள்ளன. இலட்சம் சுலோகங்களோடு கூடிய மகாபாரதத்தில் பீஷ்ம பருவத்தில் 25ஆம் அத்தியாயத்திலிருந்து 42ஆம் அத்தியாயம் வரை இவ்வுபதேசம் இடம்பெற்றுள்ளது. இதில் உள்ள பதினெட்டு அத்தியாயங்களும் மூன்று சட்கங்களாகப் (மூவாறு அத்தியாயங்கள்) பகுக்கப்பட்டு முறையே கர்மம், பக்தி, ஞானம் என்னும் மூன்றுக் காண்டங்களைக் கொண்டதாக அமைகின்றது. பதினெட்டு அத்தியாயங்களிலும் கர்மயோகம், இராஜயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்ற நான்கு யோகங்கள் பேசப்படுகின்றன. தொடக்க நிலையில் இருக்கும் கருமயோகம் பின் இராஜயோகமாகப் பரிணமித்து பக்தியோகமாகிப் பின் ஞானமாக முற்றுப் பெறுகிறது. என்பதை இவ்வத்தியாயங்கள் தெளிவுபடுத்துகின்றன. இதில் கூறுப்படும் நான்கு யோகங்களும் ஒன்றை விட மற்றது மேலானதென்று கூறவியலாதபடி அனைத்து யோகங்களையும் சமமாகக் காட்டுவது கீதையின் சிறப்பாகும். இவை நான்கும் ஒரே காலத்தில் சேர்ந்து கடைப்பிடிக்கப்படும் போது வாழ்க்கையின் குறிக்கோள் நிறைவேறுவதாகக் கீதை கூறுகிறது.

இந்நூலில் முதலாவது இயல் அருச்சுனவிவாத யோகம். அருச்சுனனுக்கு ஏற்பட்ட மனத்துயர் இங்கு எடுத்துக் கூறப் பட்டுள்ளது. இரண்டாவது இயல் சாங்கிய யோகம் ஆகும். சாங்கியம் என்பது நிறைஞானம் எனப் பொருள்படும். அருச்சுனனின் மனக் குழப்பத்திற்குரிய அடிப்படை அறியாமையை அகற்றி அவனுக்கு ஆத்ம அறிவு புகட்டும் நிகழ்ச்சி இது. 72 சுலோகங்களில் நீண்டமைந்த இந்த இயலில் முதலில் கண்ணன் அர்ச்சுனனின் கோழமையைக் கண்டிக்கின்றான்.

"அழியாப் பொருளாகிய உயிருக்காகவோ, அன்றேல்
அழியும் பொருளாகிய உடலுக்காகவோ
கவலை கொள்வது அறிவீனம்"

என்கின்றான். பின்னர் இன்பதுன்பங்களைச் சமமாக நோக்க வேண்டுமென அறிவுறுத்துகிறான். இறுதியாக இவ்வாறு சமத்துவ நோக்குடன் செயல்படும் முற்றறிஞனின் இயல்புகளை விவரிக்கின்றான். இம் முற்றறிஞனை கீதை ஸ்திதப்ரக்ஞன் (நிலையான உணர்வினன்) என்று குறிப்பிடுகிறது. ஆசைகளை அகற்றி, புலன்களை ஒடுக்கி, இன்ப துன்பங்களைச் சமமாக மதிப்பவனே முற்றறிஞன். இத்திறன் கைவரப் பெற்றவன் சாந்தி அடைகிறான். அதுவே பிரம்ம நிலைபேறு ஆகும்.

இவ்வாறு இரண்டாவது இயலில் கூறப்பட்டவற்றால் அர்சுனனுக்குத் திருப்தி ஏற்பட்டிருப்பின் கீதை அவ்வளவுடன் நிறைவு பெற்றிருக்கும். ஆனால் அவ்வாறு நிகழவில்லை. அர்ச்சுனனுக்கு ஐயமே ஏற்படுகிறது. அவன் வினா எழுப்புகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"செயலைவிட அறிவு சிறந்ததாயின் என்னை ஏன் கொடுந்தொழிலுக்குத் தூண்டுகிறீர்"*

இந்த வினாவுடன் மூன்றாம் இயலான கர்மயோகம் தொடங்குகிறது. அறிவுநிலை முற்றறிவினர்கே (சாங்கியர்) உரியது. அர்ச்சுனன் அந்நிலையினன் அல்லன். அவன் செயலாற்ற வேண்டியவன். அதனைத் துறந்து அவன் விலக முடியாது. அப்படித் துறப்பது பயனும் தராது. எனவே கண்ணபிரான் அர்ச்சுனனை சத்திரிய தர்மத்தை மேற்கொள்ளும்படி கர்மயோகம் பற்றிக் கூறுகிறான்.

"கருமத்தைச் செய்தற்கு மட்டுமே உனக்கு உரிமை உண்டு

அதன் பலனுக்கு நீ உரிமை பாராட்டக் கூடாது. பலனைக் கருதி வினையைச் செய்யாதே. அதே போலக் கடமையைச் செய்யாமலும் பின்வாங்காதே"

என்று கூறி சத்திரியருக்குரிய ("துஷ்ட நிக்காரக இஷ்ட பரிபாலன") தலையாய கடமையை வலியுறுத்துகிறான். அடுத்து வரும் ஞானகர்மஸந்யாஸ யோகம், ஸந்யாஸ யோகம் ஆகிய இரு இயல்களுள்ளும் கர்ம யோகத்தின் விரிநிலை விபரங்கள் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு செயல்புரியும் நிலையில் பற்றின்றி இருப்பதற்கான வழிநிலையாக தியான யோகம் கூறப்படுகிறது. புலனடக்கம், மனவடக்கம், அறிவினாலும், அனுபவத்தாலும் திருப்தி அடைதல் ஆகியன மூலம் இறைவனைச் சரணடைதல் இதில் விபரிக்கப்பட்டுள்ளது.

7-12 வரையான இயல்கள் சரணாகதி அடைவதற்குரிய பரம் பொருளின் பரத்துவம், சரணடைவதற்கான அணுகு முறைகள் ஆகியன பற்றிக் கூறப்படுகின்றது. இதில் முதல் நான்கு இயல்களும் உலகின் தோற்ற, ஒடுக்கத்திற்கு காரண கர்த்தாவாக கண்ணன் உள்ளதைப் பேசுகின்றது. இதை நிரூபிக்கும் விதத்தால் தன் ஒப்பற்ற விஸ்வரூபத்தை அர்ச்சுனன் தரிசிக்கும் வகையில் காட்டுகிறான். அதனைப் பற்றி 11ஆம் இயலான விஸ்வரூப தர்சன யோகம் விபரிக்கிறது.

இவ்விளக்கங்களுக்குப் பின்பும் அர்ச்சுனனுக்கு ஏற்பட்ட சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு கண்ணன் தரும் விரிவுரைகளாகவே 13முதல் 18 வரையான இயல்கள் அமைகின்றன. 13ஆம் இயல் உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு பற்றிப் பேசுகிறது. அடுத்து வரும் இயல் முக்குண இயல்புகளை விபரிப்பது ஆகும். 15ஆம் இயலில் பிரபஞ்சம், மூலப் பிரகிருதி என்பவற்றிலிருந்து விடுபட்ட நிலையிலுள்ள புருஷோத்தமனாகிய தனது இயல்பைக் கண்ணன் கூறுகிறான். 16ஆம் இயல்பு தெய்வசம்பத்து அசுரசம்பத்து என்னும் பெயர்களில் நல்லோரியல்பு, தீயோரியல்பு என்பனவற்றை வேறுபடுத்தி இயம்புகின்றது. 17ஆம் இயல் முக்குணங்களுடனும் செயற்படுவோர் இயல்பு கூறுகின்றது. இறுதியாகவுள்ள 18ஆம் இயல் *"மோகவுசன்யாஸ யோகம்"*

"என்னிடம் முழுமையாக உன்னை ஒப்படைத்து விடு" என்ற சரணாகதி மார்க்கத்தை முன்வைக்கிறது. இவ்வுபதேசங்கள் அனைத்தையும் கூறிய பின் "தனஞ்சயா உன் அறியாமை நீங்கிற்றா" என்ற வினாவுடன் போதனையை நிறைவு செய்கிறான்.

இந்து சமயத்தின் ஆதார நூல்களாகக் கொள்ளப்படும் "பிரஸ்தானத்திரையத்தில்" (உபநிடதம், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை) ஒன்றாகக் கருதப்படும் பகவத்கீதையை பொதுவாக வேத இலக்கியத்தின்-குறிப்பாக உபநிடதங்களின் சாரம் என்பது மரபு. கீதையின் ஒவ்வொரு இயலின் இறுதியிலும் 'இதிஸ்ரீமத் பகவத்கீதாஸீபநித்ஸீ என அமையும் தொடர் இந்நூல் ஒரு உபநிடதமாகவே கணிக்கப்பட்டு வந்தமையை உணர்த்து வதாகும். கீதைப் பதிப்புகளின் முன்னீடாக அமைந்த தியான சுலோகங்களில் ஒன்று இதனை உபநிடதப் பசுக்களின் பால் என வர்ணிக்கிறது.

"உபநிடதங்கள் யாவும் பசுக்கள்; பால் கறப்பவன் கோபால நந்தன், (கண்ணன்) அருச்சுனன் பசுக்கன்று அருந்துவோர் பேரறிவாளர். (இவ்வாறு இருந்தப் பெறும்) கீதை ஆகிய அமிழ்தம் மேன்மை மிக்க பால் ஆகும்"

இவை கீதையை உபநிடதங்களுடன் தொடர்புபடுத்திக் காட்டும் சான்றுகளாகும். அமைப்பு நிலையில் கீதை உபநிடத மகாவாக்கியமான 'தத்துவமஸி' என்பதன் விளக்கமாக உளது என்ற கருத்து அறிஞர் மத்தியில் நிலவுகிறது. கீதைக்கு உரை வகுத்தோரில் ஒருவரான சுவாமி சித்பவானந்தர் தமது முகவுரையில் இதனைச் சுட்டியுள்ளார். (நி.நி.)

## பகழிக் கூத்தர்

திருச்செந்தூர் முருகன்மீது பிள்ளைத் தமிழ் பாடியவர் பகழிக்கூத்தர். இவர் சேது மன்னரின் ஆட்சிக்குட்பட்ட செம்பி நாட்டுச் சிற்றூரில் அந்தணர் மரபில், திருமால் அடியரான தர்பாதனர் என்பாருக்கு மகனாகத் தோன்றினார். கல்வி, கேள்விகளில் வல்லவராகத் திகழ்ந்த இவருக்கு தீராத வயிற்றுவலி இருந்தது. இவர் திருமால் அடியராக இருந்த போதும் செந்திலாண்டவன்மீது பிள்ளைத்தமிழ் பாடி அதனை அப்பெருமான் திருமுன் அடியார்கள், புலவர்கள் நிறைந்த அரங்கில் அரங்கேற்றம் செய்தார்.

நூல் அரங்கேற்ற முடிவில் திருமால் அடியாரான பகழிக்கூத்தருக்கு எதுவித மரியாதையும் செய்யாது விடுத்தனர். இந்நிலையில் அவரது தீராத வயிற்று வலி தீர்ந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகழிக் கூத்தாரும் தூங்குசம் சென்று விட்டார். முருகப் பெருமான் தன் பக்தர்கள் தனக்குச் சாத்திய மாணிக்கப் பதக்கத்தைப் பகழிக் கூத்தருக்குச் சாத்தியருளினார். மறுநாட் காலையில் முருகப் பெருமான்மீது சாத்தப்பட்டிருந்த மாணிக்கப் பதக்கத்தைக் காணாத அடியார்கள் எல்லா இடமும் தேடலாயினர். அப்பதக்கம் பகழிக்கூத்தர் மார்பில் இருக்கக் கண்டு தாம் செய்ய வேண்டிய சிறப்பினை இறைவன் செய்தருளினார் என வியந்து அவரைப் பல்லக்கில் ஏற்றி ஊரெல்லாம் பவனிவரச் செய்தனர்.

காஞ்சிபுரம் சிதம்பர முனிவர் வரு வரு புலவர் கொண்டாடும் நல்ல பகழிக் கூத்தர் என்று கூறியிருப்பதிலிருந்து அவரது பெருமை நன்கு விளங்கும். இப்புலவர் திருத்தக்கதேவர் செய்தருளிய சீவக சிந்தாமணியென்னும் நூலைச் **சீவக சிந்தாமணிச் சுருக்கம்** என்ற நூலாக ஆக்கியுள்ளார். இவரது காலம் அருணகிரியாரின் காலம் என்பர். அதாவது 15ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம்.

பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனைப் பிள்ளையாகக் கண்டு பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார் பகழிக் கூத்தர். பிள்ளைத் தமிழுக்குரிய பத்துப் பருவங்களையும் தம் நூலின்கண் சிறப்பாகப் பாடியுள்ளார். இதில் நெய்தல் நில வருணனைகளும் அந்நிலத்துக் கருப்பொருளாகிய கடல், முத்து, சங்கு என்பனவற்றின் சிறப்புகளும், அந்நில மக்களின் வாழ்க்கை முறைகளும் நன்கு அணிபெற அமைக்கப் பெற்றுள்ளன. பாக்கள் இனிய நடையில் சொல்நயம், பொருள் நயம், கற்பனை வளம் பொருந்தினவாய், கற்போர் சுவைத்துப் படிக்கும் வண்ணம் அமைந்துள்ளன.

பிள்ளைத்தமிழ் பாடுமிடத்து இரண்டாம் மாதத்தால் பிள்ளையைக் காக்க என்று திருமால் முதலான தெய்வங்களை வேண்டிக் கொள்வது மரபு. அம்முறைக்கேற்ப திருமாலை முதலாக வைத்து பின் சிவன், சக்தி, விநாயகர், கலைமகள், பிரமன், இந்திரன், அரிகரபுத்திரன், ஆதித்தன், பகவதி ஆகிய பல கடவுளரையும் பிள்ளையைக் காக்க வேண்டும் என வேண்டுகிறார்.

அடுத்துள்ளது செங்கீரைப் பருவம். இப் பருவத்தில் நிகழும் செயல் ஒரு கால் மடக்கி, ஒரு காலை நீட்டி இரு கைகளையும் நிலத்தில் ஊன்றித் தலை நிமிர்த்தி முகம் அசைய ஆடுதலாகும். இது ஐந்தாம் மாதத்தில் நிகழ்வது. பகழிக் கூத்தர் செந்தில்நாதனை,

*"சீர் கொண்ட நக்கீரனைச் சிறை விடுத்தவா*
*செங்கீரை யாடி யருளே"*

என்று செங்கீரை ஆட அழைக்கிறார்.

குழந்தையைத் தொட்டிலிட்டு தாலாட்டுப் பாடுவது தாலாட்டுப் பருவமாகும். தாய்மையுள்ளத்தோடு திருச்செந்தூர் முருகனை

*"திண்தேர் மறுகுந் திருச்செந்தூர்ச் செல்வா தாலோ*
*தாலேலோ"*

என்று பாடுவது அவர் முருகன் மீது கொண்டிருந்த அன்பின் ஆழத்தைப் புலப்படுத்துகிறது.

குழந்தை நிமிர்ந்து உட்கார்ந்து கை கொட்டி மகிழும் பருவமே சப்பாணிப் பருவமாகும்.

*"தார் கொண்ட மணிமார்ப செந்தில் வடிவேலனே*
*சப்பாணி கொட்டி யருளே"*

என்றும் பலவாறாகப் பகழிக் கூத்தர் செந்திற்குமரனை சப்பாணி கொட்டச் செய்யும் பாடல்கள் நெஞ்சை நெகிழ வைக்கும்.

அண்டங் கடந்த அண்ணலைக் குழந்தையாக்கி அதன் முத்தத்துக்கு ஏங்குகிறார் பகழிக் கூத்தர். சப்பாணிப் பருவத்திற்கு அடுத்து வருவது முத்தப் பருவம்.

*"முத்தஞ் சொரியும் கடலலைவாய்*
*முருகா முத்தந் தருகவே*
*மொழியுஞ் சமயம் அனைத்தினுக்கும்*
*முதல்வா முத்தந் தருகவே"*

என்று உருகி நிற்கிறார்.

அடுத்து வரும் அம்புலிப் பருவம் அழகிய பருவமாகும்.

*"அலையாழி சூழ்திருச் செந்தில் வடி வேலனுடன்*
*அம்புலி ஆடவாவே*
*அரவின் முடி நெளிய மயில்முதுகில் வரு குமாரனுடன்*
*அம்புலி ஆடவாவே"*

என்று அம்புலியை விளித்துப் பாடுகிறார்.

மேலும் சிற்றில் பருவத்தில் சிறுமியர் தாம் எழுப்பிய வீட்டை அழிக்க வேண்டாம் எனக் குமரனை இரந்து நிற்பது போன்று பாடுகிறார்.

இப்புலவர் தமிழ் மொழியை முருகனோடு தொடர்புபடுத்தி அதன் சிறப்பையும், தொன்மையையும் விளக்கி உள்ளார்.

*"சங்கத் தமிழ்ப் புலவ! துங்கக் கொடைக் குமர"*
*"குறுமுனிக்கும் தமிழுரைக்கும் குழவி"*

என்றெல்லாம் முருகனைப் புகழ்ந்துள்ளார். முருகனே ஞானசம்பந்தராக இம் மண்ணுலகில் அவதரித்தாரென்பதை இவர் தம் நூலில் குறிப்பிடுகின்றார்.

பகழிக் கூத்தர் இத் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழின் கண் பல புராணக் குறிப்புகளைக் குறித்துள்ளார். காஞ்சியில் உமையம்மை இரு நாழி நெற் கொண்டு முப்பத்திரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறங்கள் வளர்த்தது. அகத்தியருக்குத் தமிழ் உரைத்தது. விநாயகர் அகவல் பாடிய ஔவையாரை அப்பெருமான் கயிலையின் கண் உய்த்தது. விநாயகர் பாரதப் போரை வட வரையில் பொறித்தது. மாங்கனியைப் பெறத் தந்தையை வலம் வந்தது. பிரணவப் பொருளறியாப் பிரமனைச் சிறையிலிட்டது. பூதம் உண்ணவிருந்த நக்கீர் திருமுருகாற்றுப் படை பாட உய்தி பெற்றமை. புறாவிற்காக சிபி உயிர் கொடுத்தது. மங்கையற்கரசி. குலச்சிறையார் இவ்விருவர் வேண்டுகோளால் ஞானசம்பந்தர் மதுரைக்கு வந்து சைவத்தை நிலை நாட்டியது. திருமால் வெண்ணெய் உண்டது. பாண்டவர்க்கு உதவி செய்தது. கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்தது முதலிய குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

இப்புலவர் பெருமான் செவிலித் தாயார் கூற்றாக வைத்து முருகனை அழைப்பதாக பாடல்கள் அமைந்திருப்பினும். தானே நேரில் வந்து முருகனைப் பணிந்து இரங்கி வேண்டுவது போன்றுள்ளது இவரது பாடல்கள். இறுதியாக முருகனின் திருநாமத்தை. எழுதுவார். கற்பார். படிப்பார் அனைவரும் சாயுச்சிய நிலை எய்துவர் என முடித்துள்ளார். (நி. நி.)

## பகன்

இந்திய பௌராணிக மரபில் பகன் என்ற பெயருடைய பலரைக் காணலாம்.

1. சூரியன் பன்னிரு மாதங்களில் பன்னிரு அம்சங்களாக இருந்து அருள்புரிகின்றான்.

| | | |
|---|---|---|
| 1. விவஸ்வான் | 2. அர்யமா | 3. பூஷா |
| 4. த்வஷ்டா | 5. ஸவிதா | 6. பகன் |
| 7. தாதா | 8. விதாதா | 9. வருணன் |
| 10. சக்ரன் | 11. உடுக்ரமன். | |

ஆகவே சூரியதேவனை த்வாதசாத்மன் என அழைப்பர். பகன் பன்னிரு ஆதித்தர்களில் ஒருவன். தக்ஷயாகத்தில் அவிர்பாகத்திற்கு ஆசைப்பட்டுச் சென்று வீரபத்திரரால் கண் பறிக்கப்பட்டவன்.

2. கண்ணனை ஆயர்பாடியில் கொல்லுவதற்கு கொக்குருவாய் கம்சனால் அனுப்பப்பட்ட அசுரன். கண்ணனை விழுங்க முயன்ற பொழுது வாய் பிளவுண்டு இறந்தவன் பகாசுரன் என்னும் **பகன்.** இவனது தம்பி அகாசுரன்.

3. பிருகு முனிவரின் பேரன் பகன். தாய் வயிற்றில் நூறாண்டு இருந்தவன். தந்தை பிருகு முனிவரின் குமாரன் கிருதவீரியனால் இறந்ததை அறிந்து அவன் வம்சத்தவரைக் கொல்லத் தவம் செய்கையில் இவனது பிதுர்க்கள் அத்தவத்தை தடை செய்ய. அத்வாக்கினியை அவர்கள் கட்டளையின் வண்ணம் கடலில் விட அது பெண்குதிரை உருக்கொண்டு தீ ஆயிற்று. இதுவே **வடவாமுகாக்கினி** அல்லது **படவா** என்ற வடவைத்தீ.

4. மகாபாரதத்தில் பாண்டவர்கள் அரக்கு மாளிகையினின்று தப்பி ஏகசக்கிர வனத்தில் வசித்தார்கள். அங்கு குடிமக்களை கொடுமைப்படுத்திக் கொண்டிருந்தான் ஒரு அசுரன். அவன் பெயர் பகாசுரன் (பகன்).

பாண்டவர்கள் யாரும் அறியாதவாறு ஏக சக்கிர புரத்தில் வசித்து வருகையில் இந்த அசுரனுக்கு ஒரு வண்டி அன்னம் இரண்டு கடாக்கள் ஓட்டுபவன் என்று முறையாக வீட்டிற்கொருவராக அனுப்பி வந்தனர். அசுரனும் அவர்களை உண்டு மகிழ்ந்தான். பாண்டவர்கள் குடியிருக்கும் வீட்டுக்காரியின் முறை வந்தது. அவள் தன்னுடைய மகனை அசுரன் இரையாகக் கொள்வானே என்று புலம்பி அழுதாள்.

அவளது துன்பத்தைத் துடைக்கப் பாண்டவர்களின் தாயாகிய குந்திதேவி முற்பட்டாள். தனது மகன் வீமனை அனுப்பினாள். வீமனும் ஒரு வண்டிச் சோற்றை இரண்டு மாடுகள் பூட்டி ஏற்றி. வண்டி ஓட்டுபவனாகத் தானே சென்றான். அசுரனின் இடம் வந்ததும் மாடுகளை அவிழ்த்து விட்டு ஒரு வண்டி சோற்றையும் பசிதீர புசித்து மகிழ்ந்தான். பின்பு பசியின் மிகுதியால் கோபமுற்ற பகாசுரனைப் போரிட்டுக் கொன்றான். (வ. வை.)

## பகீரதன்

சூரிய குலத்துதித்தவன். கங்கையைப் பூவுலகிற்குக் கொண்டு வந்தவன். சம்பரன் என்னும் மன்னன் சம்பரபுரி என்னும் நகரை உருவாக்கி புகழோடு ஆட்சி செலுத்தி வந்தான். அவன் பரம்பரையில் வந்த பாகுகன் காலத்தில் விரோதிகள் சம்பரபுரியைக் கைப்பற்றிக் கொண்டார்கள். பாகுகன் எதிரிகளிடம் சிக்காமல் மனைவிகளுடன் காட்டிற்கு ஓடி விட்டான். அங்கு அவன் விதி முடியவே இறந்துவிட்டான். அவ்வேளையில் அவனது மனைவிகளில் ஒருத்தி கர்ப்பிணியாக இருந்தாள். தனது கணவனின் இறப்பைத் தாங்கமுடியாது அவளும் உடன்கட்டை ஏறமுற்பட்டாள். அவ்வேளையில் ஔரவர் என்ற மகரிஷி அவளைத் தடுத்து விட்டார். அவள் தாய்மைப் பேற்றை அடைந்து விட்டாள். எமக்கு அப்பாக்கியம் கிடைக்கவில்லை எனக் கருதிய சக்களத்திகள் அவளது வயிற்றில் வளரும் குழந்தையைக் கொல்வதற்காக. அவளது உணவில் விஷத்தைக் கலந்து கொடுத்து விட்டனர். ஆனால் மகரிஷியின் கருணையினால் நஞ்சு குழந்தையைப் பாதிக்கவில்லை. குழந்தை சுகமாகப் பிறந்தது. குழந்தைக்கு சகரன் என்று பெயரிட்டார்கள். வடமொழியில் ''கரம்'' என்றால் விஷம். சகரம் என்றால் விஷத்தோடு பிறந்தவன் என்று பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகரன் வளர்ந்தான். தன் தந்தையைக் காட்டிற்கு விரட்டிய பகைவர்களை எல்லாம் வெற்றி கொண்டு ஆட்சியை மீண்டும் கைப்பற்றினான். தன் குருவான ஔரவரின் யோசனைப்படி வெற்றி கொண்ட பகைவர்களைக் கொல்லாமல் அவர்களை மொட்டை அடித்தும் வேறுபலவகையில் அவமானப்படுத்தியும் துரத்திவிட்டான். இவ்வாறு வெற்றி வாகை சூடிய மன்னன் பல அசுவமேதயாகங்களைச் செய்தான். ஒரு யாகத்தின்போது தன் இந்திரபதவிக்கு ஆபத்து வந்துவிடும் என அஞ்சிய இந்திரன் யாகக் குதிரையை எங்கோ ஒழித்துவிட்டான். குதிரையை மீட்காமல் அசுவமேதயாகம் நடத்த முடியாது. அதனால் யாகம் தடைப்பட்டது.

சகரனின் மனைவியருள் ஒருத்தியான சுமதிக்குப் பல மைந்தர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் தந்தையின் யாகக் குதிரையைத் தேடிக் கொண்டு கிளம்பிவிட்டார்கள். சூரர்களான இவர்கள் பூவுலகில் எங்கிருந்தாலும் யாகக் குதிரையைக் கண்டுபிடித்து விடுவார்கள் என அஞ்சிய இந்திரன் பாதாள உலகிற்கு எடுத்துச் சென்று கபிலரின் ஆசிரம வாயிலில் கட்டிவிட்டான்.

சகரரின் மைந்தர்கள் பூமண்டலம் முழுவதும் குதிரையைத் தேடிக் காணாமல் பூமியைத் தோண்டலானார்கள். (அவ்வாறு தோண்டியதால் தான் கடல்கள் தோன்றின என்றும், சகர புத்திரர்கள் பூமியைக் குழித்து உண்டாக்கியதினாலேயே கடல்களுக்குச் சாகரம் என்று பெயர் ஏற்பட்டது)

பூமியைத் தோண்டிச் சென்றவர்கள் பாதாளம் வரை போய்விட்டார்கள். அங்கு தவத்தில் இருந்த கபிலரின் வாசலில் யாகக் குதிரையைக் கண்டு கொண்டார்கள். யாகக் குதிரையைத் திருடிக் கொண்டு, இங்கு வந்து ரிஷி வேடம் போட்டுக் கொண்டு தவம் செய்கிறான் திருடன் என்று பலவாறு ஏசியபடி கபில முனிவரைத் தாக்க முற்பட்டார்கள். அவ்வேளையில் கபிலரின் நிஷ்டையும் கலைந்தது. அவரது சாபத்துக்கும் ஆளானார்கள். சகரனின் மைந்தர்கள் அனைவரும் சாம்பலாகிவிட யாகக் குதிரையை மீட்கமுடியவில்லை. மேலும் யாகமும் நிறைவேறவில்லை.

சகரனுக்குக் கேசினி என்றொரு மனைவியும் இருந்தாள். இவர்களுக்கு அஸமஞ்சன் என்றொரு மகன் இருந்தான். அஸமஞ்சன் என்றால் படு அசடு என்று பொருள். அஸமஞ்சன் பித்தன் போலப் பிறருக்குத் தோன்றினாலும் பூர்வஜென்மத்தில் அவன் பெற்ற யோக சித்திகளின் நினைவுகளால் விருப்பு வெறுப்புகள் இல்லாதவனாக வளர்ந்து வந்தான். தோற்றம் மட்டுமே அசடு ஆனால் மாசற்ற மனத்தவனாக இருந்தான். கானகம் சென்று தவமியற்ற விரும்பிய அவன் பெற்றோர்கள் வெறுக்கத்தக்க பல காரியங்களைச் செய்து வந்தான். இவனது அசட்டுத்தனமான காரியங்களால் நாட்டு மக்களது ஏச்சுகளுக்கும் ஆளாகிக் காட்டுக்குச் சென்றுவிட்டான். அஸமஞ்சன் காட்டுக்குச் சென்ற பிறகு தான் சகரனுக்குத் தன் மகனுடைய பெருமை தெரிந்தது.

இந்த அசமஞ்சனுக்கு அம்சுமான் என்று ஒரு மகன் இருந்தான். இவன் தன் தாத்தா சகரனுக்கு உதவியாக இருந்து வந்தான். அசுவமேத யாகக் குதிரை காணாமல் போனதையும் அதைத் தேடிப் போன சிற்றப்பாக்கள் திரும்பி வராததையும் அறிந்திருந்தான். ஆகவே தனது சிற்றப்பாக்களையும், யாகக் குதிரையையும் தேடிச் செல்ல அனுமதி வழங்குமாறு அம்சுமான் தனது தாத்தாவைக் கேட்டுக் கொண்டான். மன்னன் சகரனும் தம் பேரனுக்கு அனுமதி வழங்கி ஆசீர்வதித்து அனுப்பினான்.

சகரர்கள் பூமியைத் தோண்டிச் சென்ற பாதையைப் பின்பற்றி பாதாள உலகத்தை அடைந்தான் அம்சுமான். சாம்பல் குவியல்களுக்கிடையில் யாகக் குதிரை கட்டப்பட்டு இருப்பதையும் கபில மகரிஷி தவம் செய்து கொண்டிருப்பதையும் கண்ணுற்று அவரை வணங்கி நின்றான். கண் விழித்த கபிலர் அடக்கத்துடன் நிற்கும் அம்சுமானைக் கண்டு மனம் மகிழ்ந்து அரசகுமாரனே! இங்குள்ள சாம்பல் உன்னுடைய சிறிய தகப்பன்மார்களுடையதே. இவர்களை உயிர்ப்பிக்க தேவலோகக் கங்கையை இந்தச் சாம்பலின் மீது ஓடச் செய்ய வேண்டும். ஆனால் அது இப்போது உன்னால் முடியாது. இந்த யாகக் குதிரையைக் கொண்டு சென்று உன் பாட்டனாரின் அசுவமேத யாகத்தைப் பூர்த்தியடையச் செய். அதற்குப் பிறகு கங்கையைப் பூவுலகம் கொண்டு வருவதில் முயற்சி செய்யலாம் என்று கூறி ஆசீர்வதித்தார். அவ்வாறே அம்சுமான் யாகக் குதிரையுடன் சகரனிடம் வந்தான். யாகம் பூர்த்தியடைந்தது. இதன்பின் சகரச்சக்கரவர்த்தி நாட்டை அம்சுமானிடம் ஒப்படைத்துவிட்டு இறந்துவிட்டார்.

அம்சுமான் கங்கையைப் பூலோகம் கொண்டுவர பல காலம் தவம் இருந்தான். அது நிறைவேறவில்லை. அவன் மகன் திலீபன் முயற்சி எடுத்தான் அது கைகூடவில்லை. திலீபன் மகன் தான் பகீரதன்.

தன் முன்னோர்களைப் போலவே அவனும் தவம் இயற்றினான். அவனது கடும் முயற்சியினால் கங்கை அவன் முன் தோன்றினாள். 'பகீரதா! நான் பூமிக்கு வந்தால் என் வேகத்தைத் தாங்குவது யார்? என் வேகத்தால் பூமி நாசமாகிவிடுமே தவிர, பாபம் செய்தவர்கள் தங்களுடைய பாபங்களை என்னிடம் கொண்டு வந்து கரைப்பார்கள். அந்தப் பாபங்களை நான் எங்கு கொண்டு போய்த் தீர்ப்பது, என்று கேட்டாள்.

''அன்னையே உங்கள் வேகத்தைத் தாங்கக்கூடியவர் அந்தப் பரமேஸ்வரனே. அவரை நோக்கித் தவமியற்றுகிறேன்'' என்றான் பகீரதன். 'அப்படியே செய்' எனக் கூறி மறைந்தாள் கங்கை. பகீரதன் சிவனை நோக்கி மீண்டும் தவமிருந்தான். சிவபெருமான் பகீரதன் தவத்தால் மகிழ்ந்து, ''கங்கையைப் பிரார்த்தித்துப் பூவுலகம் வரச் சொல் நான் தாங்குகிறேன்'' என்றார்.

பகீரதன் கங்கையை நோக்கித் துதித்தான். உக்கிர வேகத்துடன் ஆகாயத்தில் இருந்து பாய்ந்தாள் கங்கை. அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்வத்தை உணர்ந்த சிவன் சடை முடியை விரித்தார். அட்டகாசமாக வந்த கங்கை கைலாசபதியின் சடைமுடியினுள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனாள். அவள் கர்வத்தை அடக்கித் தன் சடை முடியினுள் கட்டிப் போட்டு விட்டார் சிவன்.

தான் பட்ட பாடெல்லாம் வீணாகப் போய்விட்டதே எனக் கவலையுற்ற பகீரதன் மீண்டும் சிவனைத் துதித்தான். சிவனும் மனமிரங்கி "உனது மூதாதையர் சாம்பலாகிக் கிடக்கும் இடத்துக்குப் போகும் வழியைக் காட்டு. உன் விருப்பப்படி கங்கை உன்னைப் பின்தொடர்ந்து வருவாள்" என்றார். பகீரதன் தன் இரதத்தில் ஏறி வழிகாட்டிச் சென்றான். சிவன் தன் விரிசடையில் அடங்கிக் கிடந்த கங்கையைத் தன் முடியின் ஒரு புரியை விடுவித்து வெளியிட்டார். தன் வேகத்தைத் தாங்க வல்லவர் யார் என அகம்பாவத்துடன் கேட்டகங்கை பகீரதன் பின்னால் ஓடலானாள். கங்கை பூமியில் ஓடிய இடங்கள் எல்லாம் செழித்தன. பின் சகரபுத்திரர்கள் தோண்டிய பள்ளத்தில் இறங்கி அவர்களது சாம்பலைக் கலைத்து அவர்களுக்கு மோட்ச கதியைக் கொடுத்தாள்.

இவ்வாறு யாராலும் சாதிக்க முடியாததைப் பெருமுயற்சி கொண்டு சாதித்தான் பகீரதன். கடினமான முயற்சிகளை மேற்கொள்பவர்களை இன்றைக்கும் நாம் பகீரதனுக்கு ஒப்பிடுகிறோம் - பகீரதப் பிரயத்தனம் செய்கிறான் என்று.

(நி. நி.)

## பங்குனி உத்திரம்

பங்குனி உத்தரம் சிவ வழிபாட்டுக்குரிய சிறப்பான நாளாகும். சிவபிரானைக் கலியாணசுந்தர மூர்த்தியாக வழிபட்டு அநுட்டிக்கப்படும் விரதமாகும். சிவபெருமான் சுந்தரேசர் என்ற பெயரில் மதுரையில் திருமணம் செய்து கொண்டது இந்நாளில் ஆகும்.

சிவசக்தி தத்துவம் சைவ நெறியின் அடிநாதமாக விளங்கும் மகாதத்துவமாகும். சிவமும் சக்தியும் இணைந்துள்ளமை எனும் தத்துவம் உலக இயக்கத்தின் தத்துவம். சிவமும் சக்தியும் இணைவதான ஒரு நிகழ்வாகப் பார்வதி, பரமேஸ்வரன் திருமண வைபவம் நடத்தப் பெறுகின்றது. பங்குனி உத்தர உற்சவத்தின் மகிமை, சிவசக்தி சங்கமம் அல்லது சிவசக்தி இணைப்பு என்னும் அரிய தத்துவத்தை உலகத்தவர்க்கு உணர்த்துவதாகப் பங்குனி உத்தர திருக்கலியாண விழா உள்ளது. இதனால் இந்நாள் கலியாண விரதநாள் என்றும் பெயர் கொள்ளலாயிற்று. இவ்விரதம் திருமணவிரதம், கலியாணசுந்தர விரதம் எனவும் போற்றப்படுகின்றது. இத்தினத்தில் பார்வதி சமேதராகப் பரமேஸ்வரனைத் திருமணக் கோலத்தில் விரதம் அநுட்டிப்பவர்கள் பகல் முழுவதும் உணவு உட்கொள்ளாமல் இரவிலே பரமான்னமும் பழமும் உட்கொள்வர். எல்லா சிவத்தலங்களிலும் திருக்கலியாணப் பெருவிழா பங்குனி உத்தரத்தன்று நடத்தப்படுகின்றது. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய தலங்களில் இவ்வுற்சவம் மிகச் சிறப்பாக ஆண்டு தோறும் நடைபெறுகின்றது. பங்குனி உத்திரத்தை இறுதியாகக் கொண்டு சிவாலயங்களில் கொடியேற்றத்துடன் மகோற்சவம் நடைபெறுகின்ற வழக்கமும் உண்டு. கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயம், வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம், திருகோணமலை பத்திரகாளியம்மை ஆலயம் ஆகியவற்றில் இக்காலத்தில் மகோற்சவம் நடைபெறுகிறது. மதுரையில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கலியாணம் இத்தினத்திலேயே நிகழ்த்தப் படுகின்றது.

இந்நாளின் சிறப்பை உணர்த்தும் வகையில் பின்வரும் செய்திகள் சில நிலவி வருகின்றன. கிருதயுகத்தில் இரகு என்னும் அரசன் ஆட்சி புரிந்து வந்தான். அவன் ஆட்சியில் மக்கள் எல்லா நலங்களையும் பெற்றாலும் ஓர் அரக்கனால் அவர்களுக்கு அவ்வப்போது தொல்லைகள் இருந்தன. மக்களால் தம் முயற்சியால் அந்த அரக்கனை அழிக்க முடியவில்லை. இறுதியாக அரசனாகிய இரகுவிடம் முறையிட்டனர். இரகு, நாரதர் அறிவுரையின்படி தாமும் தம் மக்களும் பங்குனி உத்தர நன்னாளில் அதற்காக விரதம் மேற்கொண்டனர். விரதம் மேற்கொண்டதன் பயனாக அந்த அரக்கன் அழிந்ததோடு, அவர்களுக்கு வாழ்வும் வளமும் பெருகலாயின. இந்த விரதம் மதுரை, திருவாரூர், காஞ்சிபுரம், வேதாரணியம், திருநெல்வேலி, பேரூர் ஆகிய சிவாலயங்களில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த உத்திர நன்னாளில்தான் பார்வதி காஞ்சிபுரத்தில் ஒரு மாமரத்தின் கீழ் இருந்து தவம் செய்து சிவபெருமானின் அருள் பெற்றுத் தான் இழந்த பழைய நிலையையும் எய்தினாள் என்ற செய்தியும் உண்டு. சிவபெருமான் ஒருசமயம் தவத்தில் ஆழ்ந்து இருக்கும் பொழுது மன்மதன் அதற்குத் தடையாய் நின்றான். அதனால் சீற்றம் கொண்ட சிவபெருமான் தன்நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித்துச் சாம்பலாக்கினான். அதையறிந்த இரதிதேவி திருமாலிடம் முறையிட்டாள். அவர் ஆணைப்படி இரதி தண்டகவனத்தில் சிவனை நோக்கித் தவம் செய்தாள். அத்தவத்திற்கு மனமிரங்கிய சிவபெருமான் பங்குனி உத்திர நாளில் மன்மதன் உயிரை மீண்டும் அளித்தான். இச்செய்திகள் உத்திர நன்னாளின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகின்றன. இவ் உத்தர திருநாளில் விரதம் அநுட்டித்து வழிபாடு செய்தால் அவர்களுக்குத் திருமணம் விரைவில் நிறைவேறுகின்றது. வேண்டுவார் வேண்டுவனவற்றை ஈவான் இறைவன். தேவர்களும் தெய்வநிலையில் உள்ளவர்களும் தேவ தேவியரை வழிபட்டு இத்தினத்தில் விரதம் அநுட்டித்து வேண்டும் வரங்களைப் பெற்றனர். திருமகள் மகாவிஷ்ணுவின் திருமார்பில் வீற்றிருக்கும் பேற்றினைப் பெற்றாள். இந்திரன் இந்திராணியை அடைந்ததும், பிரமன் சரஸ்வதியை நாவில் பெற்றதும் இவ்விரதத்தின் மகிமையால் என்று புராணங்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநேசர் என்பவர் திருமயிலாப்பூரில் வாழ்ந்து வந்த சிவ பக்தர். அவரது புதல்வி பூம்பாவை. திருஞானசம்பந்தருக்கு உரியவள் என்று எண்ணியிருந்த காலத்தில் பூம்பாவை பூக்கொய்ய நந்தவனம் சென்ற பொழுது அரவம் தீண்டி இறந்து விட்டாள். அவளின் உடலைத் தகனம் செய்து பெற்ற சாம்பலையும் எலும்பையும் பொற்குடத்திலிட்டு வைத்திருத்தார் சிவநேசர். திருஞானசம்பந்தரும் அவர் எதிர்பார்த்தபடி அவ்வூருக்கு வருகை தந்தார். அன்றைய தினம் மயிலாப்பூர் கபாலீச்சரருக்கு ஒன்பதாம் திருவிழா. அது பங்குனி உத்தரத் திருநாள் ஆகும். பொற்குடம் அங்கு கொண்டுவரப்பட்டது.

*''மலி விழா வீதி மட நல்லார் மாமயிலைக்*
*கலிவிழா கண்டான் கபாலீச்சரமமர்ந்தான்*
*பலிவிழா பாடல்செய் பங்குனியுத்தர நாள்*
*ஒலிவிழா காணாதே போதியோ பூம்பாவாய்''*

என்று தொடங்கும் திருப்பதிகத்தைத் திருஞானசம்பந்தர் பாடினார். பூம்பாவையும் விடம் நீங்கப் பெற்ற நிலையில் உயிர் பெற்றாள். சம்பந்தர் காலத்திலும் பங்குனி உத்தர விழா சிறப்புற்று விளங்கியமையை இது தெளிவாக்குகின்றது.

இவ்வுத்திர நன்னாளில் தமிழ் நாட்டில் முருக பக்தர்கள் ஆற்றில் நீராடிக் குடங்களில் தூய நீர் நிரப்பி நீர்க்காவடிகளை எடுத்துக் கொண்டு பழநி முருகனை நீராட்டும் வழக்கம் இருந்து வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (தே.ஹ.)

## பங்குனி மாதம்

வட மொழியில் பல்குனி என்று சொல்லப்படும் மாதமே தமிழில் பங்குனி என்று வழங்கப்படுகின்றது. தமிழில் சித்திரை முதற்கொண்டு பங்குனி இறுதியாகப் பன்னிரு மாதங்கள் ஓராண்டாகக் கொள்ளப்பட்டன. தெலுங்கு மரபில் அமாவாசையன்று மாதம் மாறுகிறது. தமிழில் முழுமதி நாள் அன்று மாதம் மாறுகின்றது. ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு இராசிக்குரியன. இவ்வகையில் பங்குனி மீன இராசிக்கு உரியதாகின்றது.

பொதுவாக மீன இராசி சிறந்த இராசியாகக் கருதப்படுகின்றது. ஆகவே மீன இராசிக்குரிய பங்குனி மாதமும் பல நல்ல காரியங்களுக்கு உகந்ததாகின்றது. இப்பங்குனி மாதம் உத்திரநட்சத்திரமும், நிறைமதியும், கூடியதாகும்.

பங்குனித் திங்கள் இளவேனிற் காலம் தொடங்கி மக்களுக்குண்டாகும் இன்பத்தைக் குறித்து நிற்கிறது. வாடைக்காற்றும், நடுங்கும் குளிரும், வருத்தும் பனியும் நீங்கி வசந்தகாலம் அரும்புவதைக் காட்டும் திங்கள் பங்குனியாகும். முந்திய வாடையால் இலை உதிர்ந்துபட்டுவிட்டன போலக் காணப்பெறும் மரங்களும் செடிகளும் புதுத்தளிரைக் கொண்டு பூத்துக் குலுங்கும் மாதம் இதுவேயாகும்.

திருத்தக்க தேவர் இப்பங்குனியைப் ''பாசறைப்பிரிவு தீர்க்கும் பங்குனிப் பருவம் செய்தான்'' என்று குறிப்பிடுகின்றார். தமிழ் இலக்கியங்களிலும் இந்த பங்குனி உத்திர நாளின் சிறப்புப் பேசப்படுகின்றது. பங்குனி மாதத்திலே திங்கட்கிழமைகளிலே அம்பாள் ஆலயங்களில் குளிர்த்தி எனும் கிராமிய பண்பாட்டுடனான பக்தி வழிபாட்டு முறைமை அநுட்டிக்கப்படுகின்றது. அபிடேகம், பொங்கல், படையல், பழமடை, நீர்ச்சோறு, தயிர்ச்சாதம் என்பன அன்னைக்கு நிவேதனம் செய்யப்படுகின்றன.

இம்மாதம் சிவ வழிபாட்டுக்குரிய சிறப்புடைய மாதமாக ஏற்கப்பட்டுள்ளது. ஆகம விதிப்படி பங்குனி உத்தர திருக்கலியாண விழா சிவாலயங்களில் நிகழ, பக்திமுறைப்படி அம்பாள் ஆலயங்களில் பங்குனித் திங்களில் குளிர்த்தி வழிபாடு நடைபெறுகிறது. (தே. ஹ.)

## பசு (ஆன்மா)

சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்கள் பற்றிக் கூறுகின்றது. இவற்றை இறை, உயிர், தளை எனவும் கூறுவர். அவற்றுள் பசு என்பது ஆன்மாவைக் குறிப்பதாகும். இப்பசுவானது பாசத்தால் கட்டப்பட்டதாகும். காணப்படுகின்ற உலகம் அறிவுடையதும், அறிவு இல்லாததும் என இரு வகைப்படும். இவற்றில் அறிவுடைய உலகம் உயிர் எனக் கொள்ளப்படுகிறது. எனவே அறிவுடைய உலகம் சேதனப் பிரபஞ்சம் என்றும், அறிவில்லாத (சட) உலகம் அசேதனப் பிரபஞ்சம் என்றும் கூறப்படும்.

பாசம் அறிவற்றது, அதனைச் சடம் என்பர். பதி அறிமையாற் பற்றப்படாதது - பேரறிவுடையது என்பர். பசு அறிவற்ற சடமுமன்று, அறிவு வடிவான பேரறிவும் அன்று. அது இவை இரண்டிற்கும் இடைப்பட்ட, அறிமையால் பற்றப்பட்ட சிற்றறிவுப் பொருளாகும்.

சடமாகிய பாசம், அறிவித்தாலும் அறிய மாட்டாது. பேரறிவாகிய பதி, பிறர் அறிவிக்க வேண்டாது தானே அறியும் தன்மையுடையது. பசு ஒன்றையும் தானாக அறியாது, அறிவித்தால் அறியும் தன்மையுடையது. அது ஒரு காலத்தில் ஒரு பொருளையே சுட்டியறியும். பசு சிற்றறிவானது. இதனையே சார்ந்ததன் வண்ணமாதல் என்பர். மேலும், உள்ளது அழியாது என்பதால் ஆன்மாவும் (பசு) இறைவனைப் (பதி) போன்று அநாதி நித்தியப் பொருளாகும்.

**சதசத்து - விளக்கம்**

சதசத்து என்பது சத்து, அசத்து என்னும் இரண்டு சேர்வதால் தோன்றுவதாகும். பதி தோன்றி நின்று, அழியும் தன்மையற்றதால் சத்து எனப்படும். தோன்றி, நின்று, அழியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை கொண்ட பாசம் அசத்து எனப்படும். பசு இத்தோற்றக் கேடுகள் அற்றதாய் சத்தைச் சார்ந்த போது சத்தாகவும், அசத்தைச் சார்ந்த போது அசத்தாகவும் விளங்கும். அதனால் பசு சதசத்து எனப்படுகிறது. பசு சதசத்தாக உள்ளது போன்று சிதசித்தாகவும் உள்ளது. அதாவது சித்தும் (அறிவுடையதும்) ஆகாமல் அசித்தும் (அறிவற்றதும்) ஆகாமல் இரண்டிற்கும் இடைப்பட்டதாய் நிற்கும் நிலையாகும். எனவே, பதி சூக்குமப் பொருள், வியாபகமாயும் (பரந்தது) தூலப்பொருள் வியாப்பியமாயும் (உள்ளடங்கியது) அமைந்திருக்கும். பதியில் பசு தூலமாகவும், பாசத்தில் பசு சூக்குமமாகவும், பசுவில் பாசம் வியாப்பியமாகவும் இருக்கும். இதனை, கடல் போன்றது பதி, கடல் நீர் போன்றது பசு, அந்நீரில் கலந்துள்ள உப்புப் போன்றது பாசம் என்று விளக்குவர்.

சிதசித்தாகிய ஆன்மா கருவிகளின்றி அறிவு பெறமாட்டா. ஆன்மாவின் அறிவு எப்பொழுதும் ஆணவத்தால் மறைக்கப்பட்டது. ம்மறைப்பு நீங்கத்துணை செய்வன தனு, கரண, புவன, போகம் என்பனவாம். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கொண்டு சகலநிலை நிற்கும் ஆன்மாவை சகலர் என்பர். மாயை மலம் நீங்கி ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களுடன் இருக்கும் ஆன்மாவை பிரளயாகலர் என்பர். மாயை, கன்மம் ஆகிய இரு மலங்கள் நீங்கி ஆணவமலம் மட்டும் கொண்டவர் விஞ்ஞான கலர் எனப்படுவர்.

அநாதியில் ஆணவ மலத்தோடு கூடிய ஆன்ம அனுபவம் கேவலாவத்தை (பெத்தம்) எனப்படும். பின்னர் ஆணவ கன்ம மாயை மல இணைப்பில் ஆன்ம அனுபவம் சகலாவத்தை எனப்படும். மும்மலங்களில் இருந்தும் நீங்கிய நிலையில் ஆன்ம அனுபவம் சுத்தாவத்தை எனப்படும்.

சகல நிலையில் ஆன்மாவானது சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் முதலிய ஐந்து அனுபங்களை ஐந்து இடங்களில் நின்று பெறும். அவற்றைக் கீழ்வரும் அட்டணை மூலம் காணலாம்.

| அவத்தை | கருவிகள் | இடம் |
|---|---|---|
| சாக்கிரம் | முப்பத்தைந்து (35) | புருவ நடு |
| சொப்பனம் | இருபத்தைந்து (25) | கழுத்து |
| சுழுத்தி | மூன்று | இருதயம் |
| துரியம் | இரண்டு | நாபி |
| துரியாதீதம் | ஒன்று | மூலாதாரம் |

ஆன்மா அறிவுடைப் பொருளாதலால் அதற்கு இச்சை, செயல் ஆகியன உண்டு. எனவே, இறைவனைப் போலவே ஆன்மாவும் இச்சை, ஞானம் கிரியைகளைக் கொண்டது. ஆன்மாவைப் பொறுத்த வரையில் இவை ஆணவத்தால் மறைக்கப்பட்டுக் கேவலத்திற் சிறிதும் தோன்றாமலும், சகலத்திற் சிறிது தோன்றியும், சுத்தத்தில் முற்றம் தோன்றியும் நிற்கும். கேவலம் இருள் போன்றது என்றும் சுத்தம் சூரிய ஒளி போன்றது என்றும் விளக்குவர். எனவே கேவலம், சகலம், சுத்தம் என்பனவற்றை இருள்நிலை, மருள் நிலை, அருள் நிலை என்ற கூறலாம்.

கேவலத்தில் இருந்த ஆன்மா இறைவனது திரோதான சக்தியாற் சகலத்திற்கு வந்து பிறப்பு இறப்புக்களில் உழலும். பின்னர் இருவினையொப்பு, மலபரிபாகம் வந்தபின் இறைவனது அருட்சக்தியால் ஞானம் பெற்று முக்தியடையும் (இறைவனோடு இரண்டறக் கலக்கும்). (சந.)

## பசுபதி

சைவ முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுக்குரிய சிறப்பான திருப் பெயர்களிலே பசுபதியும் ஒன்றாகும். பசுபதி எனில் மிருகங்கள் அல்லது உயிர்களின் தலைவன் அல்லது பாதுகாவலன் எனப் பொருள்படும். வேதங்களிலே காலத்தால் முந்திய இருக்கு வேதத்திலே சிவபிரானைப் பற்றிய பாடல்கள் இல்லாவிடினும் ருத்திரனைப் பற்றிய பாடல்களும், அவர் பற்றி வேறு பாடல்களில் வரும் குறிப்புகளும் சிவபிரானைப் பற்றியதாகப் பொதுவாகக் கொள்ளப்படுகின்றன. அனைத்து தெய்வங்களையும் ஒன்று சேர்த்துப் போற்றும் பாடல் (விஷ்வே தேவாஹ 10.92.9) ஒன்றிலே சிவ(ன்) பதமும் வந்துள்ளமை குறிப்பிடற் பாலது. பிறிதொரு பாடலில் (10.114.9) அவர் பசுபதி என்னும் கருத்துப்படப் 'பசுபா' எனக் கூறப்படுகின்றார் எனினும் வேதங்களிலே பிற்பட்ட பகுதிகளிலே தான் 'பசுபதி' எனும் பதம் வந்துள்ளது. எனவே வேத காலத்திற்கு முற்பட்ட சிந்து சமவெளி நாகரிகத்திலே இது பற்றிய சான்றுகள் எவையேனும் இருந்தனவா என்பது உற்று நோக்கற்பாலது.

சிந்து சமவெளி நாகரிகம் பொதுவாக, கி.மு 2500-1500 வரையுள்ள காலப் பகுதியைச் சேர்ந்ததெனக் கொள்ளப்படுகின்றது. இந்நாகரிகத்தைச் சேர்ந்த தொல்லியற் சின்னங்களில் ஒரு முத்திரை குறிப்பிடற்பாலது. இம்முத்திரையிலே பத்மாசன முறையிலே யோகம் செய்பவராக மூன்று முகங்களுடன் ஒருவர் வீற்றிருக்கிறார். அவரின் வலப்புறத்தில் யானையும், புலியும் இடப்புறத்தில் காண்டா மிருகமும், எருமையும் உள்ளன. அவரின் ஆசனத்தின் கீழே இரண்டு மான்கள் ஒன்றையொன்று நோக்கிய வண்ணம் உள்ளன. அவ்வுருவத்தின் தலையிலே இரண்டு கொம்புகள் காணப்படுகின்றன. இந்நாகரிகம் பற்றி நன்கு ஆராய்ந்தவர்களில் ஒருவரான சேர் ஜோன் மார்சல் இவ் உருவம் பிற்கால சிவபிரானின் திருவடிவங்களில் ஒன்றான பசுபதியை நினைவூட்டுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தினை ஒரு சாரார் ஏற்றுள்ளனர். பிறிதொரு சாரார் ஏற்றிலர். எனினும் இவ்வுருவம் உற்று நோக்கற்பாலது. இவ்வுருவத்தைச் சூழ்ந்துள்ள மிருகங்கள் அவர் பசுபதி (மிருகங்களின் தலைவர் / பாதுகாவலர்) என்ற கருத்தினைச் சுட்டலாம். பத்மாசன நிலையில் யோகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயித்திருப்பதும் சிவபெருமானுக்குப் பொருந்தும். அவர் மஹாயோகி - யோகீஷ்வர் எனப் போற்றப்படுகின்றார். தலையிலே தற்பொழுது இரண்டு கொம்புகளிருப்பினும் முன்னர் மூன்றிருந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. சிவபிரானுக்கு மூன்று, ஐந்து எனப் பல திருமுகங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இத்தகைய அமிசங்கள் பிற்கால சிவபிரான் பற்றிய கருத்துகளுக்கு முன்னோடியாக விளங்கியிருக்கலாம்.

சிந்துவெளி நாகரிகத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட வேதகால (சுமார் கி.மு 1500 - 500 வரை) நாகரிகத்தின் முற்பகுதியைச் சித்தரிக்கும் இருக்கு வேதத்தில் மேற்குறிப்பிட்ட அமிசங்களோடு கூடியவராக ருத்திர(ன்) பொதுவாகப் போற்றப்படவில்லை. வேதங்கள் கூறும் ஆரிய நாகரிகமும் முற்பட்ட கால சிந்து சமவெளி நாகரீகமும் (இந்நாகரிகத்தைச் சேர்ந்தவர்கள் ஆரிய நாகரிகம் பரவு முன்னர் வட இந்தியாவில் வாழ்ந்த ஆதி-ஒஸ்ரலோயிட் குறிப்பாகத் திராவிடர்களெனப் பொதுவாக கருதப்படுகின்றது) பிந்திய வேதக் காலப்பகுதியிலே தான் படிப்படியாக ஒன்றுபடலாயின. இப்போக்கினைப் பிந்திய வேத இலக்கிய நூல்களான சாம, யசுர், அதர்வ வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யகங்கள், உபநிஷதங்கள் சூத்திரங்களாகியவற்றிலே காணலாம். இத்தகைய வரலாற்றுப் பின்னணியிலே நோக்கும்போது யசுர் வேதத்திலுள்ள (16) சதருத்திரீயமும், அதர்வ வேதமும் (15.5) நன்கு குறிப்பிடற்பாலன. சதருத்திரீயத்திலே ருத்திரனுடைய நூறு திருப்பெயர்கள் உள்ளன. இவற்றுள்ளே சிவ, சங்கர, பவ, சம்பு, ஈசான, மஹாதேவ, ஹர முதலிய பெயர்களுடன் பசுபதி என்னும் பெயரும் வந்துள்ளது. அதர்வ வேதத்திலும் ருத்திரனுடைய சாந்தமான பெயர்களுடன் பசுபதி யென்னும் பெயரும் வந்துள்ளமை குறிப்பிடற்பாலது. தொடர்ந்து நோக்கும் போது சைவ உபநிஷத் ஆக விளங்கிய சுவேதாஸ்வதரோபநிடதத்தில் ருத்திரன் இரண்டு கால், நாலு கால் உள்ள உயிர்கட்குத் தலைவராகக் குறிப்பிடப்படுகிறார். ஆஸ்வலாயன கிருஷ்சிய சூத்திரத்தில் ருத்திரனுடைய பன்னிரண்டு பெயர்களிலே பசுபதியும் வந்துள்ளது. தொடர்ந்து பிற்பட்ட வடமொழி இலக்கிய நூல்களிலே குறிப்பாகச் சைவ சமய நூல்களில் இப்பதம் வந்துள்ளது. தொடக்கத்தில் மிருகங்களுக்குத் தலைவன் / பாதுகாவலன் எனக் கருதப்பட்டாலும் காலப் போக்கில் எல்லா உயிர்களுக்கும் / ஆன்மாக்களுக்கும் தலைவனாக, பாதுகாவலனாக இறைவன் போற்றப்படுகிறார்.

சிவபெருமான் முழுமுதற் கடவுளாக அனைத்து உயிர்களுக்கும் / ஆன்மாக்களுக்கும் தலைவனாக, பாதுகாவலனாக விளங்குகின்றார். தமிழகத்திற்குச் சிறப்பான சைவ மெய்யியலான சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களான பதி, பசு, பாசம் என்பனவற்றிலே பதி (தலைவன்/சிவபிரான்), பசு (ஆன்மா), பாசம் (மும்மலங்கள்) இடம் பெற்றுள்ளன. ஆன்மா பதியை வணங்கிப் பாசங்களிலிருந்து விடுதலை அடையும் எனச் சைவ சித்தாந்தம் கூறும். வடமொழியில் மட்டுமன்றி தமிழிலும் சிவபிரான் பசுபதி யெனவும் அழைக்கப்படுகிறார். பசுபதீஸ்வரர் என்ற பெயரிலே, தமிழ் நாட்டிலும், யாழ்ப்பாணத்திலும் சிவாலயங்கள் உள்ளன. பசுபதீஸ்வரர் என்பது புலப்படுத்தும் கருத்துள்ள பசுபதி நாத் என்ற பெயருடைய சிவாலயம் நேபாளத்தில் உள்ளது. சைவ நூல்களிலே சிவபிரானை இது குறிக்கின்றது. உதாரணமாக "பவித்திரனைப் பசு பதியை" எனத் தேவாரமொன்று கூறுகின்றது.

(வி. சி.)

## பசுபதிநாதர் ஆலயம்

நேபாளம் காட்மண்டுவில் உள்ள ஆலயம் இதுவாகும். இவ்வாலயம் மிகவும் பழமை மிக்கது. இது கி.பி 3ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது என்று கோயிலைப் பற்றிய வரலாறு தெரிவிக்கின்றது. இக்கோயிலை இப்போதுள்ள நிலையில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு பூபால சிங்கமல்லா என்ற அரசர் கட்டினார்.

இங்கு பசுக்களைக் காப்பாற்றுபவராக ஈசனை மக்கள் வழிபடுகிறார்கள். அதனால் நேபாளத்தில் யாரும் பசு மாமிசம் சாப்பிடுவதில்லை. மேலும் ஆலயத்தினுள் தோலினால் செய்த பொருட்களை அனுமதிப்பதும் இல்லை. பசுபதி நாதர் கோயிலின் கோபுரம் பகோடா பாணியில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோபுரத்தில் பல மூர்த்திகளின் பதுமைகள் காட்சியளிக்கின்றன. பகோடா பாணியில் அமைந்துள்ள சிகரங்களில் உருவங்களின் அடுக்குகளின் நான்கு மூலைகளிலும் புலியின் உருவம் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. புலி நேபாளத்தின் தெய்வீக மிருகம் என்பர்.

கிழக்கு பக்க வாயிலில் நுழையுமுன் மேலே ஒரு ஓங்காரம் இருக்கிறது. அதற்கு மேல் தட்டில் கைலாயத்தில் இருக்கும் சிவபெருமானின் நிற்கும் உருவம் பல வண்ணங்களுடன் பிரகாசிக்கின்றது. சிவனின் வலப்பக்கத்தில் சற்றுக் கீழே கணேசரின் சித்திரமும், இடப்பக்கத்தில் குமரனின் சித்திரமும் காணப் படுகின்றன. இந்த இரு சித்திரங்களின் உச்சியில் சூரியனின் சித்திரமும், மத்தியில் சிவனார் தம் சடையில் கங்கையை ஏற்றுக் கொண்டிருக்கும் சித்திரமும் காணப்படுகின்றன.

கோயிலின் மேற்பகுதியில் தங்கம் பூசப்பட்ட பித்தளைத் தகடுகளால் போர்த்தப்பட்ட பெரிய நந்தி ஒன்று காட்சியளிக்கிறது. இந்த நந்திக்கும் கோயிலுக்கும் இடையில், தங்கத்தினால் அதே போன்று வடிவம் அமைக்கப்பட்டிருக்கும் பசுவின் உருவமும் அமைந்திருக்கின்றது. மேற்படி நந்தி, பசு ஆகியவற்றுக்கு நடுவில் எவரும் நடக்கக் கூடாது என்னும் ஐதீகம் இங்கே இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுபதிநாதர் கோயிலைச் சுற்றிச் சிறுசிறு கோயில்களில் மூர்த்திகளும், மண்டபங்களும் உள்ளன. தெற்குப் பிரகாரத்தில் உன்மத்த பைரவரின் கோயில் உள்ளது. பைரவர் பெரிய கோரைப் பற்களுடனும் எட்டுக் கைகளுடனும் பல விதமான ஆயுதங்களுடனும் காணப்படுகின்றார். ஆறடிக்கு மேல் உள்ள பைரவரின் விக்கிரகம் மிகவும் பயங்கர வடிவத்தில் அமைந்துள்ளது.

நந்தி வீற்றிருக்கும் கிழக்கு முகவாயில் வழியே கோயிலுக்கு உள்ளே நுழைந்தவுடன் ஒரு பக்கத்தில், வடக்கு நோக்கிய அனுமானின் விக்கிரகம் இருக்கிறது. ஆறடி உயரமுள்ள அந்த விக்கிரகம் கை கூப்பியபடி பக்திப்பரவசத்துடன் தோற்றமளிக்கிறது.

இவ் ஆலயத்தின் சந்நிதி உயரமான மண்டபத்திலே அமைந்திருக்கின்றது. சுமார் 50 அடி உயரத்தில் நடுவே உள்ள மேடையில், கர்ப்பகிருகத்தில் ஈசன் லிங்கத் திருமேனியராய் காட்சியளிக்கின்றார். இக்கருவறை உள்ள மண்டபத்தைப் படிக் கட்டுகள் மூலமாக ஏறித் தரிசனம் செய்யலாம்.

கர்பக்கிரகத்தின் உள்கதவுகள் வெள்ளித் தகடுகளால் போர்த்தப்பட்டுள்ளன. இக்கதவுகளில் சிவகணங்களின் உருவங்களும், யஷ, கந்தர்வ உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. நான்கு திசைகளைப் பார்த்த திருவுருவங்களுள் பல வலக்கையில் பதினாறு மணி கொண்ட உருத்திராட்ச மாலையையும், இடக்கையில் கமண்டலத்தையும் கொண்டிருக்கின்றன.

கருவறையில் ஈசன் பஞ்சமுகலிங்கமாய் உள்ளார். நான்கு முகங்கள் நான்கு திசைகளை நோக்கியும், ஐந்தாவது முகம் மேலே பார்த்தபடியும் அமைந்திருக்கிறது. பசுபதி நாத் சிவலிங் கத்தின் ஐம்முகங்களைப் பற்றி இருவிதமாய்ச் சொல்கிறார்கள். மேற்கு பார்த்த முகம் சத்யோஜமுகம் என்றும், வடக்கு நோக்கிய முகம் வாமதேவ முகம் என்றும், தெற்கு நோக்கிய முகம் அகோர முகம் என்றும், கிழக்கு நோக்கிய முகம் தற்புருஷ முகம் என்றும், மேல் நோக்கிய முகம் ஈசனாரின் முகம் என்றும் கூறப்படுகின்றது.

மற்றொரு விதமாய் தெற்கு நோக்கிய முகம் ராமேஸ்வர லிங்கம் என்றும் மேற்கு நோக்கிய முகம் துவாரகை லிங்கம் என்றும், வடக்கு நோக்கியமுகம் பூரிஜெகந்நாத்லிங்கம் என்றும் மேல் நோக்கியது பசுபதீஸ்வர் என்றும் கூறப்படுகின்றது. சிவலிங்கத்தின் மேல் நோக்கிய தலைப்பாகமாகிய ஈசான ரூபமே பசுபதி நாதரின் சிரேஷ்டமான பாகம் எனக் கருதப்படுகின்றது. சக்தி மற்றும் எல்லாவிதமான புருடார்த்தங்களையும், ஞானத்தையும் பெறுவதற்கும் இம்முகத்தினை ஆராதனை செய்கிறார்கள்.

காவி உடை தரித்த பூசாரிகள் இங்கு இறைவனுக்குப் பூசை செய்கிறார்கள். இவர்கள் "பூசாரிப்பட்டர்" என அழைக்கப்படு கிறார்கள்.

இக்கோயிலில் வடகிழக்கு பாகத்திலே ஒரு நாக கடவுளின் (வாசுகி) கோயில் உள்ளது. முதலில் இக் கோயிலைத் தொழுத பின்னர் தான் பசுபதிநாதரைத் தொழ வேண்டும் என்ற நியதி உண்டு. இக்கோயிலில் உள்ள மற்றொரு விசேடம் கோயிலின் தெற்குப் பாகத்தில் 64 சிவலிங்கங்கள் கொண்ட கோயில் ஒன்று உளது. அவற்றைச் சுற்றி 1008 சிவலிங்கங்கள் ஒரடிக்கு ஒன்றாக வரிசையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைச் சுற்றி வருவதற்கான பாதைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த 1008 சிவலிங்கங்களையும் சுற்றி வரும்போது 64 சிவலிங்கங்க ளையும் பிரதட்சணம் செய்ததாகிவிடும் என்பர்.

நேபாள மன்னர்களால் பரிபாலிக்கப்பட்டு, அவர்களால் தொழப்படும் பெருமை வாய்ந்த இக்கோயில் இவ் ராஜ்ஜியத்தின் முக்கிய அம்சமாக கருதப்படுகின்றது. கோயிலைச் சுற்றியுள்ள மண்டபத்தின், ஒரு பக்கத்தில் தொன்று தொட்டு ஆட்சி செய்த மன்னர்களின் புகைப்படங்களைக் காணலாம்.

இவ் ஆலயத்தில் சிவராத்திரி மிக விசேடமான திரு விழாவாக கொண்டாடப்படுகின்றது. சிவராத்திரியன்று கோயில் முழுவதும் இலட்சம் தீபங்களை ஏற்றுகிறார்கள். ஆண்களும் பெண்களும் புது ஆடை அணிந்து, பசுக்களை அழைத்து வருகிறார்கள். பசுவிற்குப் பூசையும் செய்கின்றார்கள். பசுபதிநாதர் கோயிலை சுற்றியுள்ள மண்டபங்களில் இருந்து பக்தர்கள் மகாருத்ரம் போன்ற மந்திரங்களை உச்சரிக்கின்றார்கள். மேலும் மேள வாத்தியங்களும் இசைக்கப்படுகின்றது.

பசுபதி நாதர் கோயிலுக்கு பின்புறத்தில் பாக்மதி நதி ஓடுகிறது. இந்நதி தெற்கு முகமாகப் பாய்ந்து, பின் மேற்கு நோக்கிப் பாய்கிறது. பின் கங்கையுடன் கலக்கிறது. பாக்மதி நதிக்கரையில் மக்கள் நீராடி, ஆலயத்திற்கு செல்கின்றனர். கங்கை கரையில் நடப்பதைப் போன்று இங்கும் அஸ்தி கரைக்கப்படுகிறது.

(தே. ஹ.)

## பசோலி ஓவியங்கள்

இவை ஜம்மு காஷ்மீர் பகுதிகளில் கி. பி. 17-18 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றி வளர்ந்த ஓவியப் பாணியில் தீட்டப்பெற்ற ஓவியங்களாகும்.

பலூரியா என்னும் அரச பரம்பரையைச் சார்ந்த புபத்பால் என்னும் அரசனால் பசோலி என்னும் நகரம் (கி. பி 1598 - 1668) உருவாக்கப்பட்டது. இவ்வரச பரம்பரையைச் சார்ந்த மன்னர்கள் திருமாலிடம் மிகுந்த பக்தி மிக்கவர்கள். இதனால் இவ்வோவியப் பாணி இப்பகுதியில் வளர்ச்சி பெற அடிகோலினர்.

இப்பாணி ஓவியங்களில் பாகவத புராணம் இரச மஞ்சரி, கீத கோவிந்தம், இராமாயணம் ஆகிய இலக்கிய காட்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மை பெறுகின்றன. இவ்வோவியங்கள் பொதுவாகச் சிவப்பு, மஞ்சள் நிறங்களில் கண்ணைப் பறிக்கும் வண்ணக்கலவையில் தீட்டப் பெற்றுள்ளன. சிறிய முகமும் கூரிய மூக்கும் கூர்ந்து நோக்கும் கண்களும் இந்த ஓவியங்களின் சிறப்புத் தன்மையைக் குறிக்கும். மரங்கள் ஒரே மாதிரி வடிவினை உடையன. ஓவியங்கள் தீட்டப் பயன்படுத்தப்பட்ட வண்ணங்களுள் மஞ்சள், வசந்தத்தையும் சூரிய உதயத்தையும் உணர்த்தும்.

நீலநிறம் கிருஷ்ணனையும், கார்மேகத்தையும் குறிக்கும். இடியும் மின்னலும் வெண்மை மற்றும் பொன் நிறக் கோடுகளால் காட்டப்பட்டிருக்கும் இவ்வோவியங்களில் சிறந்தவைகளை லாகூர், அகமதாபாத், ஜம்மு, மற்றும் இலண்டன் அருங்காட்சியகங்களில் காணலாம்.

இவ்வோவியங்களுள் தேவியின் உருவங்கள், அரசரின் உருவங்கள், பாகவத புராணக்காட்சிகள் இராமாயணக் காட்சிகள், கீத கோவிந்தக் காட்சிகள், இராச மந்திர காட்சிகள் ஆகியவை சிறப்பானவை. பாகவதபுராணக் காட்சிகளில் அண்டத்தின் பிறப்பு, பல்வேறு உயிர்களின் தோற்றம் ஆகியவை தீட்டப்பெற்றுள்ளன. தேவர்கள் பாற்கடலைக் கடையும் காட்சியும், கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்திருக்கும் காட்சியும் நன்கு தீட்டப்பெற்றுள்ளன. இராமாயணக்காட்சிகளில் இராமர் வனவாசத்திற்கு புறப்படும் காட்சியும், சீதையை இழந்த நிலையில் துயரவடிவத்தோடு காட்டப்படும் இராமன், இலக்குவன் ஆகியோரின் சித்திரங்களும் நேர்த்தியாகத் தீட்டப்பெற்றுள்ளன. காதல் வயப்பட்ட கண்ணனும், இராதையும் யமுனைநதிக் கரையில் இணையும் கீதகோவிந்தக் காட்சி சிறந்த ஓவியமாகும். இளமையும் வனப்பும் மிக்க நாயகி, நாயகனின் வரவுக்காக ஏங்கும் காட்சியும் நாயகனின் வரவுகண்டு பொய் உறக்கத்தில் உள்ள நாயகியின் தோற்றமும் மிகச் சிறந்த படைப்புகளாகும்.

(தே.ஹ.)

# பஞ்சகன்னியர்

பஞ்ச கன்னியர் என்பது ஐந்து பெண்கள் எனப் பொருள்படும். இவர்கள் அகல்யை, தாரை, சீதை, மண்டோதரி, திரௌபதி எனும் ஐவரும் ஆவார்.

*"அஹல்யா த்ரௌபதி ஸீதா தாரா மந்தோதரீ:*

*ததா பஞ்ச கன்யா: ஸ்மரேந்நித்யம் மஹாபாதக நாசனம்"*

எனும் சுலோகம் ஊடாக அறிய முடிகிறது. கற்பில் சிறந்தவர்களாகவும் நற் பெண்களாகவும் இவர்கள் காவியங்களில் விளங்குகின்றனர். இதனால் இவ்ஐந்து கன்னியரும் பஞ்ச கன்னியர் எனச் சிறப்பிக்கப்படுகின்றனர்.

பஞ்ச கன்னியரில் ஒருவர் **அகலிகை**. முத்கல முனிவரின் மகளாகவும் கௌதம முனிவரின் மனைவியாகவும் விளங்கியவர். மிகவும் கற்பும், அழகும் உடையவளாகிய அகலிகை மீது இந்திரன் ஆசை கொண்டான். இதனால் தனது வல்லமையினால் சேவலாக மாறி, சாமத்தில் கூவி கௌதம முனிவரை கங்கா தீர்த்தத்திற்கு நீராட அனுப்பி வைத்தான். சூழ்ச்சியை அறியாத கௌதம முனிவர் அதிகாலை வந்து விட்டது என எண்ணி நீராடச் சென்றார். அத்தருணம் கௌதம முனிவரின் உருவெடுத்து இந்திரன் அகலிகை வீட்டிற்கு வந்து அவளுடன் புணர்ந்தான். அத்துடன் முனிவர் வருவதை அறிந்த இந்திரன் பூனை உருக் கொண்டு ஓட முனையும்போது கௌதமர் நீ ஆயிரம் பெண்களுக்குரிய குறிகளைப் பெறுக என சபித்தார். அத்துடன் இந்திரனுடன் புணர்ந்த அகலிகையை கல்லாக மாறும்படி சபித்தார். பின்னர் அகலிகை வேண்டிட, மனமிரங்கி சாப விமோசனமாக இராமபிரான் மிதிலைக்கு வரும் போது அவரது திருவடி பட உருப்பெறவும் கருணை செய்தார். இதனால் இராம பிரானின் திருவடி பெற்று பெண்ணாக உருக்கொண்டாள். இவளைப் பாற்கடலில் பிறந்தவள் என சிவபுராணம் கூறுகிறது.

**தாரை** வாலியின் மனைவியாகவும் அங்கதனின் தாயாகவும் விளங்கியவள். வாலி இறந்ததன் பின்னர் சுக்கிரீவன் தாரையை மனைவியாக ஏற்றுக் கொண்டான் என இராமாயணம் மூலம் அறிய முடிகின்றது. இதனை விட இவள் இரவிவர்மனின் புத்திரியாகவும் துச்சயராசன் மனைவியாகவும் விளங்கியவள் எனவும் தன்னுடன் பிறந்த வீர யானையால் கொல்லப்பட்டாள் என அறிந்து மேல் மாடத்திலிருந்து கீழே விழுந்து இறந்து மாதவியாக பிறந்தாள் என மணிமேகலை கூறுகிறது.

**சீதை** ஜனக மகாராஜனின் மகள். இராமபிரானை மணந்தவள். இராமன் காட்டிற்கு போகும் போது தானும் கணவனுடன் மரவுரி தரித்து காட்டிற்குச் சென்றாள். அங்கே இராவணனால் கடத்திச் செல்லப்பட்டு இலங்கையில் சிறை வைக்கப்பட்டாள். பின்னர் இராமன் இலங்கை மீது போர் தொடுத்து சீதையை மீட்டான். இராவணன் இறந்த பின் அக்கினியில் குதித்து தன் கற்பினை வெளிப்படுத்தினாள். லவன், குசன் எனும் இரு மகனைப் பெற்றெடுத்தாள். தன் கணவனினதும் பிள்ளைகளினதும் முன்னிலையில் பூமாதேவியை நோக்கி **"நான் என் கணவரை தெய்வமாக கொண்டது உண்மையாயின் என் தாய் எனக்கு இடங்கொடுக்க"** எனக் கூற பூமாதேவி பிளந்து சீதையை தழுவ பரமபதமடைந்தாள்.

**மண்டோதரி** மயனின் மகள். இராவணனின் மனைவி. இந்திரசித்தனின் தாய். இவள் அரக்கியாக இருந்த போதிலும் இராவணன் இறந்ததும் துக்கத்தினால் அவன் உடல் மீதே உயிர் விட்டவள். இவளின் இவ்வாறான அரிய பண்புகளால் பஞ்ச கன்னியரில் ஒருத்தியாகக் கொள்ளப்படுகிறாள்.

பதிவிரதாசிரோமணி எனச் சிறப்பிக்கப்படுபவள் திரௌபதியாவாள். பாஞ்சால தேசாதிபதியாகிய துருபதனின் யாகத்தில் பிறந்ததால் திரௌபதி எனும் பெயர் பெற்றாள். இவளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஞ்சாலி எனவும் அழைப்பர். இவள் கணவனை வேண்டிச் சிவனை எண்ணித் தவமிருந்தாள். சிவமூர்த்தி அவள் முன் தோன்றி யாது வேண்டும் எனக் கேட்க "பதிம்தேஹி" அதாவது கணவன் வேண்டும் என ஐந்து முறை வேண்டவே சிவனும் வரமளித்தான். இதன்படி பஞ்சபாண்டவரை மணந்து ஐந்து கணவருக்கு மனைவியாக விளங்கினாள். பின்னர் சூழ்ச்சியால் அரசிழந்து, அடிமையாகி துகில் உரியப்பட்ட போதும் கண்ண பிரானில் அன்பு கொண்டு அவனருளால் துகில் நீளப் பெற்றாள். இவ்வாறாக பஞ்ச பாண்டவர்களின் மனம் கோணாது சிறந்த மனைவியாக வாழ்ந்து இளம் பஞ்ச பாண்டவர்கள் ஐவரைப் பெற்றாள். பதி விரதையாகிய இவள் பஞ்ச கன்னியரில் ஒருத்தியாக விளங்குகிறாள்.

இவ்வாறாக சூழ்ச்சிகள் மாயங்கள் போன்ற துன்பகரமான சூழ்நிலைகளிலும் தம் கற்பினின்றும் வழுவாது பதிவிரதைகளாக விளங்கிய இவ் ஐவரும் பஞ்ச கன்னியர் எனச் சிறப்பிக்கப் படுகின்றனர். இவர்களை விட மேனை, சாவித்திரி, அருந்ததி, அநசூயை, சுநீதி எனும் ஐவரும் பஞ்ச கன்னியராகவே கருதப்படுகின்றனர். (ஷே.கு.)

## பஞ்ச கிருத்தியம்

ஆன்மாக்கள் உய்வடையும் பொருட்டு இறைவன் மேற்கொள்ளும் ஐந்தொழில்கள் பஞ்ச கிருத்தியங்கள் என அழைக்கப்படும். சிதம்பர சுவாமிகள் எழுதிய பஞ்சாதிகார விளக்கம் என்னும் நூலிற் சிருஷ்டி, திதி, சங்காரம் முதலிய மூன்றும் சடத்திலும், மறைத்தல், அருளல் இரண்டும் உயிரிலும் நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது.

ஐந்தொழில் நித்திய பஞ்ச கிருத்தியம், மகா பஞ்ச கிருத்தியம் என இரண்டு வகைப்படும். நித்திய பஞ்சகிருத்தியம் என்பது, தூல உடம்பைக் கொடுத்தல், நிறுத்துதல், சங்கரித்தல் (படைத்தல், காத்தல், அழித்தல்) பின் ஆணவ வலியை அடக்கல், (மறைத்தல்) இறைவன் திருவடிப் பேற்றை அநுபவிக்க வைத்தல் (அருளல்) என்பன நித்திய பஞ்ச கிருத்தியமாகும்.

மாயையிலிருந்து தநு, கரண, புவன, போகங்களைத் தோற்றுவித்தலும், தோற்றுவிக்கப்பட்டவைகளை உரிய காலம் வரை நிலை நிறுத்தலும், அவற்றைத் தத்தம் காரணத்தில் ஒடுக்கலும், (அழித்தல்) ஆன்மாக்கள் பக்குவமடையும் வரை கன்மங்களை அனுபவித்தலும், (மறைத்தல்) பக்குவ ஆன்மாக்களுக்கு தீட்சை கொடுத்து பாசத்தை அழித்து திருவடி நிழலிற் சேர்த்தலும் முறையே மகா பஞ்சகிருத்தியங்களாகும். சிவாலயங்களில் நடைபெறும் நித்திய பூசைகளும் திருவிழாக்களும் இவ்விருவகைப் பஞ்ச கிருத்தியங்களை உணர்த்துவனவாகும்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்ச கிருத்தியங்களும் மண், நீர், நெருப்பு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களுடன் தொடர்புற்று நிற்கின்றன. இவற்றுள் ஆகாயம் அருவுருவ பூதம். இவ்வருவுருவ பூதத்தினின்று மண், நீர், நெருப்பு, வாயு என்னும் உருவப் பூதங்கள் தோன்றின. இது தூல நிலை (காணக்கூடிய) இது போன்றே நிஷ்கள, சகள வடிவினராகிய சதாசிவ மூர்த்தியினின்று - மகேஸ்வரர், உருத்திரர், பிரம்மா, விஷ்ணு ஆகிய சகள மூர்த்திகள் நால்வரும் தோன்றினர். மண் (பிருதுவி) தத்துவத்தினுள் வியாபித்து நின்று நிவர்த்தி கலையை அதிட்டித்து பிரம்ம தேவர் உலகங்களைப் படைப்பார். நாராயணர் (நீரில் தோன்றிய) உலகங்களைக் காப்பார். அக்கினி புவனத்தில் இருக்கும் உருத்திரர் அழித்தல் தொழிலைச் செய்வார். வாயு புவனத்தில் நின்ற மகேஸ்வரர்; மறைத்தல் தொழிலைச் செய்வார். ஆகாய புவனத்தில் இருக்கும் சதாசிவர் அருளல் தொழிலைச் செய்வார். அதாவது, மண்ணொடு படைத்தலும், நீரோடு காத்தலும், ஆகாயத்தோடு அருளலும், நெருப்போடு அழித்தலும், வாயுவுடன் மறைத்தலும் தொடர்புபடுத்தப்படுகின்றன.

இறைவன் இப்பஞ்ச கிருத்தியங்களைச் செய்வதற்காகவே நாதாந்த நடனத்தை ஆடுகிறான். இது தில்லைச் சிதம்பரப் பொற்சபையில் நடைபெறுவது. தில்லையில் ஆடிய நாதாந்த நடனமே தென்னிந்திய நடராஜர் சிலைகளாய் அமைந்தது. இவைகளில் பலவகை அமைப்புகளுண்டு. ஆனால் அவற்றின் மூலாதாரமான கருத்து ஒன்றே. இத் திருநடனம் பஞ்சகிருத்தியங்களைக் குறிக்கும். உண்மை விளக்கம் முப்பத்தாறாவது செய்யுள் இந்த நாதாந்த நடனத்தின் தத்துவத்தை மேல்வருமாறு விளக்குகின்றது.

*"தோற்றம் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்*
*சாற்றியிடு மங்கியிலே சங்கார - மூற்றமா*
*வூன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு"*

இறைவன் ஒருகையில் ஏந்தியிருக்கும் டமருகம் படைப்பினையும், அழல் - அழித்தலையும், மற்றொரு கரம் உயிர்களுக்கு அபயம் தரும்படி காத்தல் தொழிலையும், முயலகன் மேல் ஊன்றி நிற்கும் பாதம் மறைத்தலையும், தூக்கிய திருவடி உயிர்களுக்கு அருளலையும் குறிக்கிறது.

திருமூலர் திருமந்திரத்திலே திருகூத்துத் தரிசனம் என்னும் அதிகாரத்தில் ஐந்தொழில் நடனத் தத்துவம் கூறப்படுகிறது.

*"ஆன நடம்ஐந்து அகள சகளத்தர்*
*ஆன நடமாடி ஐங்கரு மத்தாக*
*ஆனதொழில் அருளால் ஐந்தொழில் செய்தே*
*தேன்மொழி பாகன் திருநட மாடுமே"*

உருவமில்லாத இறைவன் உருவை எடுத்துக் கொண்டு ஆன்மாக்கள் பொருட்டுப் புரிகின்ற நடனம் ஐந்தாகும். அந்த நடனத்தைப் புரிந்து ஐந்தொழில்களையும் செய்கின்றான். தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியனான உமைபாகன்; இவ்வாறு இறைவன் ஆடுகின்ற ஆட்டத்தின் இலட்சியத்தையும் திருமூலர் பொற்றில்லைக் கூத்து என்னும் பகுதியில் விளக்குகிறார். திருக்கூத்துப் புரியும் திருவடியும், அத்திருவடிகளில் நின்று ஒலிக்கும் சிலம்பு ஓசையும், திருப்பாடல்களும், திருநடனங்களும் சிவபெருமான் ஆன்மாக்கள் மீதுகொண்ட திருவருளால், புரிந்தருளுகின்றான். மேலும் ஆன்மாக்களின் மெய்யுணர்வின் பொருட்டு அவன் கொண்ட கோலங்களும் பலவாக உள்ளது. இத்தகைய கருணா மூர்த்தியை **'தேடியுளே கண்டு** பாசத்தளையைத் தீர்த்துவிடுதலே ஆன்ம லட்சியமாய் அமைய வேண்டும். இதற்கு இறை சிந்தனை அன்றி வேறு சிந்தனைக்கு இடமளிக்கலாகாது.

முழுமுதற் கடவுளான நடராசப் பெருமான் ஐந்தொழிலைச் செய்யினும் அவர் விவகாரப்படுவதில்லை. ஆகாயத்தில் ஒளிவீசும் சூரியனின் சந்நிதியில் தாமரைகளில் ஒன்று மலரும்; ஒன்று மலருவதற்குரிய மொட்டாக இருக்கும்; மற்றொன்று வாடி உலரும். இங்ஙனம் மலர்தல், அரும்புதல், உலர்தல் ஆகிய மூன்று தொழில்களும் சூரிய சந்நிதியில் நிகழ்ந்தாலும் கதிரவன் விகாரப்படுவதில்லை. அதே போன்று பதியின் சந்நிதான விசேடத்தால் இப்பிரபஞ்சம் முழுவதும் ஐந்தொழிலின் செயற்பாடுகள் நிகழ்கின்ற போதும் சிவம் நிர்விகாரியாகவே இருப்பார். இதனைத் தாயுமான சுவாமிகள் பாடிய ஆனந்தக் களிப்பில் அழகாக விளக்கியுள்ளார். "ஆக்கியழித்துத் துடைக்குந் தொழிலத்தனை வைத்தும் எள்ளத்தனையேனும் தாக்கற நிற்குஞ் சமத்தன்" என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

(நி. நி.)

## பஞ்ச கௌவியம்

பசுவினது பால், தயிர், நெய், கோமயம், கோசலம் ஆகிய ஐந்து பொருட்களினதும் கலவையே பஞ்ச கௌவியம் ஆகும். பஞ்ச கௌவியம் மருந்தாகவும் சிறந்த அபிசேகப் பொருளாகவும் விளங்குகின்றது. உலர்ந்த கட்டைகளை தீயானது எவ்வாறு எரித்து சாம்பல் ஆக்குகிறதோ அவ்வாறு ஒருவரது பாவத்தையும் வியாதிகளையும் பஞ்சகௌவியம் நீக்கவல்லது. அந்தளவிற்கு இதில் தெய்விகம் நிறைந்துள்ளது. பசுவினது பாலில் சோமனும், தயிரில் வாயுவும், நெய்யில் சூரியனும், கோமயத்தில் அதாவது பசுவினது சாணத்தில் அக்கினியும், கோசலத்தில் வருணனும் வசிக்கின்றனர்.

இப்பஞ்ச கௌவியம் பெறப்பட வேண்டிய பசுக்களின் தன்மை பற்றித் தர்ம சாஸ்திரம் அழகாகக் கூறுகிறது. பசுக்கள் நத்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என ஐந்து வகைப்படும். இவை முறையே கபில நிறம், கருமை நிறம், புகைநிறம், வெள்ளை நிறம், செந்நிறம் ஆக இருக்கும். இதில் பஞ்ச கௌவியம் தயாரிப்பதற்கு பத்திரை பசுவினது பாலும், சுமனையினது பாலிலிருந்து பெறப்பட்ட தயிரும் நத்தையின் பாலிருந்து பெறப்பட்ட நெய்யும், பத்திரையின் சலமும் (கோசலம்) சுசீலையினது சாணமும் எடுக்கப்படல் வேண்டும். இவ்வாறு ஐவகை பசுக்களிலிருந்து இவற்றைப் பெற முடியாவிட்டால் கபில நிறமுடைய நத்தை பசுவிலிருந்து ஐந்து பொருட்களையும் பெற்று பஞ்ச கௌவியம் தயாரிக்கலாம்.

இதனை தயாரிப்பதற்கு ஐந்து பொருட்களையும் சேர்க்க வேண்டிய அளவுகள் பலம் எனும் எடைக் கணக்கில் சொல்லப்பட்டுள்ளது. பலம் என்பது மூன்று ரூபாய் எடைக்கு சமனாகும். ஏழு பலம் பால், மூன்று பலம் தயிர், ஒரு பலம் நெய், ஒரு பலம் கோசலம், கட்டை விரலின் பாதியளவு சாணம் ஆகியவற்றுடன் ஒரு பலம் தர்ப்பையின் நீர் ஆகியவற்றுடன் சேர்த்து கலந்து பஞ்ச கௌவியத்தைத் தயாரித்துக் கொள்ளலாம்.

இதில் அதி தேவதைகள் உறைவதால் இறைவனின் திருமஞ்சன நீராட்டத்திற்கு மிகவும் சிறப்பானதாகும். அபிசேகப்பிரியரான சிவபெருமானுக்கு பஞ்ச கௌவியத்தால் அபிசேகம் செய்து வழிபட்டால் அவனின் அருளை எளிதில் பெறலாம். அத்துடன் பாவங்கள் குறைந்து புண்ணியம் கூடும். சிவனுக்கு பிரியமான அபிசேகப் பொருளும் இதுவாகும். இதனால் சிவராத்திரியன்று முதற்காலம் முதற் பூசையின் முக்கிய பொருளாக இது விளங்குகின்றது. இதனால் அபிசேகம் செய்யும் போது பசும்பால் ஆரோக்கியத்தையும், ஆயுள் விருத்தியையும் அளிக்கிறது. தயிர் பாரம்பரிய விருத்தியையும் நெய் மோட்சத்தையும், தருவதுடன் கோசலம் தீட்சை தருகிறது. கோமலம் கிருமிகளை ஒழிக்கின்றது. அத்துடன் தெய்வ சிலைகளினது ஆற்றலும் அதிகரிக்கின்றது.

அபிசேகப் பொருளாக மட்டுமன்றி மருந்தாகவும் பஞ்சகௌவியம் விளங்குகின்றது. சாமவேதத்தில் அதனை உப கர்மா செய்யத் தொடங்கும் முன் நீராட்டி பஞ்ச கௌவியத்தை உட்கொண்ட பின்னரே உபகர்மா செய்வார்கள். ஆயுர்வேத மருத்துவத்தில் "பஞ்ச கௌவிய கிருதம்" என குறிக்கப்படுகிறது. கிருதம் என்றால் திரவிய மருந்து என்று பொருள். காக்காய் வலிப்பு நோய்க்கும் இதனை உபயோகிப்பார்கள். பஞ்சகௌவியத்தை உட்கொள்வதால் உடலில் உள்ள மாசுகள் நீங்கி சுத்தி பெறும் என அமிர்தசாகரம் - பதார்த்த சூடாமணி எனும் நூலிலிருந்து அறியலாம்.

பஞ்ச கௌவியத்தை தமிழில் "ஆனைந்து" "ஆனஞ்சு" "ஆபயன்" எனவும் அழைப்பர். திருஞானசம்பந்தர் "ஆனிடை ஐந்து உகந்து ஆடினானை...." "ஆனஞ்சாடும் முடி அடிகள் வேடங்களே...." எனவும் திருநாவுக்கரசர் "ஆனிடை ஐந்தும் வைத்தார்....." "கோதனத்தில் ஐந்து ஆடிகளாய்....." "ஆடும் ஆனைந்தும் உகப்பராய் போற்றி...." எனவும் சிறப்பித்துள்ளனர். அத்துடன் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் "தூய திரு மஞ்சனம் ஐந்தும் அளிக்கும் உரிமைச் சுரபிகள்" என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுவை சண்டேஸ்வர நாயனார் கூறுவதாக கூறுகிறார். திருவள்ளுவர் "காவலன் காவான் ஆயின் ஆபயன் குன்றும்" எனக் கூறுகிறார்.

பசுவினதும், பஞ்சகௌவியத்தினதும் அருமையை அறிந்தே அன்றைய மன்னர்கள் ஆலயங்களுக்கு பசுக்களைத் தானமாக வழங்கினார்கள். (ஹே.கு.)

## பஞ்ச சுத்தி

ஐந்து வகையான சுத்திகளைப் பஞ்ச சுத்தி என்பர். ஆன்ம சுத்தி, தானசுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தி என்னும் ஐந்தே பஞ்ச சுத்திகளாகும்.

கிரியை மேற்கொள்ளும் கர்த்தா நீராடித் தூய உடை உடுத்து தக்க ஓர் ஆசனத்தில் இருந்து கொண்டு வலது உள்ளங்கையில் மந்திர பூர்வமாக நீரை எடுத்து மூன்று முறை உட்கொள்வதே ஆசமனம் எனப்படும். ஆசமனம் செய்து விபூதி, உருத்திராக்கம் அணிந்து கொள்வர்.

ஆசமனம் செய்வதன் மூலம் ஆன்ம சுத்தி ஏற்படுகிறது. ஆன்ம போதம் நீங்கி சிவபோதம் தலை கூடுவதுடன் இறை அருள் தொடர்புபடுவதாகப் பாவனை செய்யப்படுகிறது.

பூசை செய்யும் இடத்தை மந்திரத்தால் சுத்தம் செய்வது தானசுத்தி.

பூசைக்குரிய பொருட்களை மந்திர நீரால் சுத்தி செய்தல் திரவிய சுத்தி.

மூலமந்திரம், பஞ்ச பிரம்ம மந்திரங்கள், சடங்கு மந்திரங்களை முறையோடு உச்சரித்தல் மந்திர சுத்தி.

மேற்கூறிய சுத்திகளால் ஏற்படுகின்ற தெய்வ சாந்நித்தியத்தை சராசரங்களில் பாவித்தல் இலிங்க சுத்தி எனப்படும்.

பஞ்ச சுத்திகளையும் ஆகம விதிகளுக்கமைய மேற்கொண்டு உரிய முறையில் கிரியைகளைச் செய்ய வேண்டும் என்பது பிரமாணம். (ஹே. கு.)

## பஞ்ச தசாக்ஷரி

அம்பிகையை வழிபடுகின்ற ஸ்ரீவித்யை பதினைந்து அக்ஷரங்களைக் கொண்டது. பஞ்ச என்றால் ஐந்து தசம் என்றால் பத்து. பஞ்சதசாக்ஷரி பதினைந்து எழுத்துக்கள். அவையாவன:

க - ஏ - ஈ - ல ஹ்ரீம் (5)

ஹ - ஸ - க - ஹ - ல - ஹ்ரீம் (6)

ஸ - க - ல ஹ்ரீம் (4)

முதலிலே காணப்படும் ஐந்து அக்ஷரங்களை வாக்பவ கூடம் என்றும் நடுவில் உள்ள ஆறு அக்ஷரங்களை காமராஜ கூடம் என்றும் இறுதி நான்கு அக்ஷரங்களை சக்தி கூடம் என்றும் கூறுவர்.

தேவி சிதக்னிகுண்டமாகிய யாககுண்டத்திலிருந்து தோன்றியபொழுது முதலில் வெளிப்பட்டது தேவியின் முகமண்டலமே. மனத்தை வெளியே சொல்லப் பயன்படுத்தும் கருவிகளில் பெரும்பாலானவை அமைந்த இடம் முகம். வாக்கை முக்கியமாகக் கொண்ட தேவியின் முகமண்டலத்திலிருந்து தோன்றியது வாக்பவம் என்னும் கூடம் (கூறு). அந்த வாக்பவ கூடம் க ஏ ஈ ல ஹ்ரீம் என்ற ஐந்து அக்ஷரங்களால் அமைந்த கூறு. அது தேவியின் மந்திர வடிவம். ஞானத்தை அருள்வது.

உடலில் கழுத்திலிருந்து கீழே இடுப்புவரை உள்ள பகுதி மத்திய கூடம். இது பஞ்சதசாக்ஷரியின் நடுவில் அமைந்திருப்பது. இது ஹ-ஸ-க-ஹ-ல-ஹ்ரீம் என ஆறு அக்ஷரங்களால் அமைந்தது. விருப்பம் வெளிப்படும் இடமாதலால் இது இச்சா சக்தியின் வடிவம். ஆதலால் காமராச கூடம் எனப்படுகின்றது.

படைக்கும் சக்தியான கிரியாசக்தி வெளிப்படும் இடம் கீழ்ப்பகுதி. மந்திரத்தின் கடைப்பகுதி ஸ - க - ல - ஹ்ரீம் என்ற நான்கு அக்ஷரங்கள் கொண்டது. தேவியின் மந்திரமயமான கீழ்ப் பகுதியாக இக்கூடம் சக்தி கூடம் எனப்படுகின்றது.

பஞ்சதசாக்ஷரியின் முதல் பாகம் ஆறு ஆதாரங்களில் மூலாதாரத்தையும் சுவாதிஷ்டானத்தையும் கொண்ட அக்னி கண்டம் என்றும் இரண்டாம்பகுதி மணிபூரகத்தையும், அநாஹதத்தையும் கொண்ட சூர்ய கண்டம் என்றும் மூன்றாம் பகுதி விசுத்தியும், ஆக்ஞையும் கொண்ட சந்திர கண்டம் என்றும் அழைக்கப்படுகின்றன.

பஞ்ச தசாக்ஷரியின் எழுத்துக்களில் சில சிவாம்சம் கொண்டவை. சில சக்தியம்சம் கொண்டவை. சில சிவசக்தியம்சம் கொண்டவை.

மெய்யெழுத்துக்களையெல்லாம் சிவனாகவும், உயிர் எழுத்துக்களையெல்லாம், சக்தியாகவும் கொள்ளும் மற்றொரு வகையும் உண்டு. பஞ்சதசாக்ஷரியின் மொத்த சக்தி ஹ்ரீம் மிலுள்ள ஈம் இல் அடங்கியுள்ளது. ஈம் மைக் காமகலா என்பர். அதுவே மந்திரத்தின் மூலவேராகிய மூலமந்திரம். இதனை தியானம் செய்பவன் வசீகரண சக்தி பெறுகிறான்.

ஸ்ரீ லலிதா த்ரிசதி தேவியின் முந்நூறு ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் நாமாக்களைக் கொண்டது. பராசக்தியின் "காதி வித்யை" எனும் ஸ்ரீ பஞ்சதசாக்ஷரியின் ஒரு அக்ஷரத்திற்கு இருபது நாமாக்களாக பதினைந்து அக்ஷரங்களுக்கு முந்நூறு நாமாக்களால் ஆகியது.

ஸ்ரீ லலிதா த்ரிசதி மிக உயர்ந்தது. இதற்கு ஸ்ரீ ஆதிசங்கரர் உரை எழுதியிருப்பது ஒன்றே இதன் சிறப்பிற்குச் சான்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தியமுனிவர் ஸ்ரீ ஹயக்ரீவரிடம் ஸ்ரீ லலிதோபாக்யானம், ஸ்ரீ லலிதா சஹஸ்ர நாமம் முதலியவைகளைக் கேட்டும் மன அமைதி பெறாது த்ரிசதியைக் கேட்டபின்பே மனச்சாந்தியுற்றதாகக் கூறுவர்.

(வ. வை.)

## பஞ்ச துவாரகை

பஞ்சதுவாரகை என்பது மோட்சதுவாரகை, பேட் துவாரகை, மூலத்துவாரகை, ஸ்ரீ நாத்துவாரகை, டாங்க்ரோடி துவாரகை என ஐந்து ஊர்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

### மோட்சதுவாரகை

பஞ்ச துவாரகையில் இதுவே பிரதான துவாரகை எனக் கருதப்படுகிறது. இதைத் திருத்துவாரகை என்றும் அழைப்பர். மோட்சத்திற்கு இத்தலம் வழியாக (துவாரம்) கருதப்படுகின்றது. 108 திவ்யதேசங்களில் 104வது திவ்யதேசமாகும். பெரியாழ்வார் , நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், ஆண்டாள் ஆகியோரால் 13 பாசுரங்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டது ஆகும்.

குஜராத் மாநிலத்தில் ஓகா துறைமுகத்திற்கு அருகில் கோமதி என்னும் புண்ணிய நதிக்கரையில் இத்தலம் அமைந்துள்ளது. ஆதிதுவாரகை கடலில் மூழ்கி விட்டது என்பர். இங்குள்ள ஆலயம் 5000 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. கடற்கோள், அந்நியப்படையெடுப்பு போன்றவற்றால் சிதைவுற்றாலும் மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

இங்குள்ள மூலவரை துவாரகாநாத்ஜி என்றும் கல்யாண நாராயணர் என்றும் அழைக்கின்றனர். தாயார் லட்சுமிதேவி, ருக்மணி, பலராமர், துர்வாச மகரிஷி ஆகியோருக்குத் தனித்தனி சன்னிதிகள் உண்டு. கிருஷ்ணருக்கு 17முறை நைவேத்யமும், மணிக்கொரு முறை அலங்காரமும் செய்யப்படுகின்றது.

### பேட்துவாரகை

கடலினுள் தீவுபோல் இத்தலம் இருப்பதால் இதை தீவுத் துவாரகை என்றும் பேட்துவாரகை என்றும் அழைக்கின்றார்கள். இங்கு மூலவர் சங்கு சக்கரத்துடன் காட்சியளிக்கின்றார். இதை கிருஷ்ணர் வாழ்ந்த திருமாளிகை என்றும் அழைக்கின்றார்கள். இங்கு கடலுக்குக் கீழ் அகழ்வாராய்ச்சி செய்வோருக்கு இன்றும் பல அற்புதங்கள் கிடைத்துள்ளன. இத்தலத்தில் ஜாம்பவதி சன்னி தியையும் சேர்த்து ஐந்து சன்னதிகள் உண்டு. தீர்த்தம், சங்கதீர்த்தம் என அழைக்கப்படுகின்றது.

### ஸ்ரீநாத் துவாரகை

திருப்பதிக்கு ஒப்பான தலமாக இத்தலம் குறிப்பிடப்படுகின்றது. மகாத்மா காந்தி பிறந்த போர்பந்தரில் இருந்து 22 கிலோமீற்றர் தூரத்தில் இத்தலம் அமைந்துள்ளது. இங்கே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு எட்டு வேளை பூஜை செய்யப்படுகின்றது. சுவாமிக்கு வைரம், வைடூரியம் முதலான நவரத்தினங்களால் அலங்கரிக்கப் பட்டுள்ளது.

### டாங்ரோடி துவாரகை

ஸ்ரீநாத் துவாரகையில் இருந்து 10 கி.மீ. தொலைவில் இத்தலம் உள்ளது. ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவதரித்த ஊரான மதுராவிலிருந்து பாதாள வழியாக தீர்த்தம் நதியில் பாய்ந்து இவ்வூருக்கு வருவது குறிப்பிடத்தக்கதாகும். மூலத்துவாரகை போர்பந்தர் அருகில் 22 கிலோமீற்றர் தொலைவில், கொஷநார் என்னும் ஊருக்கு அருகில் கடற்கரையில் மூலத் துவாரகை அமைந்து இருக்கிறது. இங்கு சிறிய ஆலயத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் கோயில் கொண்டுள்ளார். கடற்கரையிலிருந்து 2 கி.மீ. தொலைவில்தான் ஸ்ரீ கிருஷ்ணர் வைகுண்டம் சென்ற பின் மூழ்கிய துவாரகை இருக்கிறது என்கின்றார்கள். மஹா மஹோபாத்யாய ஹத்திபாய் சாஸ்திரி தன்னுடைய நூலில் **"ஸ்கந்த புராணம், ப்ராபாஸ காண்டம், திவாரகா மஹாத்மியத்தில் உள்ள முக்கிய நதிகள் அனைத்தும் இந்த மூலத்து வாரகையில் உள்ளன"** என்று குறிப்பிட்டுள்ளார். (ப. மு.)

## பஞ்சநதம்

இது வாரணாசி எனப்படும் காசியில் கங்கைக்கரையில் அமைந்து விளங்கும் புனித நீராடும் துறைகளுள் பஞ்சநதம் ஒன்றாகும். ஐந்து ஆறுகளின் கூட்டம் என்பது பஞ்சநதம் என்பதன் பொருளாகும். புராண மரபில் இதுபற்றிக் கூறப்படும் செய்தி வருமாறு: வேத சிரசு என்னும் முனிவர் சுசி என்பாளைக் கூடி ஒரு பெண் பெற்றார். அப்பெண் தவம் புரிகையில் தருமன் என்பான் அவளை வலிதிற்கூடவே அவள் அவனை ஆறாகுமாறு சாபமிட்டாள். அதற்கு மாறாக அவனும் அவளை ஒரு ஆறாகுமாறு சாபமிட்டான். இவற்றை உணர்ந்த முனிவர் அப்பெண்ணைத் தூதபாவை எனும் பெயரில் நதியாகச் சென்று தருமனைக் கூடுமாறு ஏவினார். அவ்வகையில் அமைந்த இரண்டு ஆறுகளோடு சூரியன் தவமியற்றியதால் அவன் உடலில் தோன்றிய வியர்வை நீர் பெருகி ஓடிய வெள்ளமாகிய கிரணை என்னும் ஆறும் யமுனை, கங்கை ஆகிய ஆறுகளும் கூடிய இடம் பஞ்சநதம் எனப்பட்டு புனித நீராடும் இடமாயிற்று. இச்செய்தி காசிகாண்டம் என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

(அ.மா.ப.)

## பஞ்சபத்திரங்கள்

பஞ்சபத்திரங்கள் என்பது ஐந்து வகையான இலைகளைக் குறிக்கும். அவையாவன துளசி, வில்வம், வேம்பு, அறுகு, வன்னி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவையாகும். இந்து சமய மரபில் பூக்களும் இலைகளும் அர்ச்சனைக்கு உகந்தவையாகக் கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் பஞ்சபத்திரங்கள் புனிதமானவையாகவும், மருத்துவக் குணங்கள் கொண்டவையாகவும் விளங்குகின்றன. இதனால் சமயத்திலும் சமூகத்திலும் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

## துளசி

துளசி என்ற சொல்லுக்கு **'தன்னிகரில்லாதவள்'** என்று பொருள். ஸ்ரீ லக்சுமியே துளசி செடியாக அவதரித்துள்ளாள். விஷ்ணுவுக்கு உகந்த பத்திரமாக துளசி விளங்குகின்றது. வைணவ மரபில் துளசியை **'திருத்துழாய்'** என அழைப்பர். துளசி இரண்டு வகைப்படும். கருந்துளசி, வெண் துளசி என்பவையாகும். வேதங்களிலும் துளசியின் மருத்துவக் குணங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இது கிருமிகளை அழிக்கும் வல்லமை கொண்டது. நாம் அசுத்தமாக இருக்கும் போது துளசிச்செடி அருகே செல்லக் கூடாது. பௌர்ணமி அமாவாசை, துவாதசி, மாதப்பிறப்பு, வெள்ளி, செவ்வாய், நடுப்பகல், இரவு, சந்தியா காலங்கள் என்பவற்றிலும் எண்ணை தேய்த்துக் கொண்டும் துளசியை பறிக்கக் கூடாது என்பர்.

விஷ்ணு திருவோண நட்சத்திரத்தில் அவதரித்ததால் குளிர்மை பொருந்திய அவருக்கு வெப்பத்தையுடைய துளசியை பூசைப் பொருளாக நம் முன்னோர்கள் பயன்படுத்தியுள்ளனர். விஷ்ணுவும் **"துளசி தீர்த்தத்தில் எனக்கு அபிஷேகம் செய்தால் ஆயிரம் அமிர்தக் குடங்களால் அபிஷேகம் செய்த அளவிற்கு ஆனந்தமடைவேன்"** எனக் கூறியுள்ளார். எனவே விஷ்ணு கோயில்களில் பெருமாளுக்கு துளசி அர்ச்சனை நடைபெறுகிறது. துளசி மாலை அணிவிக்கப்படுகிறது. துளசி தீர்த்தமாக வழங்கப்படுகிறது. இறைவனுக்கு அர்ச்சனை செய்த துளசி பல வியாதிகளை போக்கும் அருமருந்தாக பயன்படுகிறது.

துளசி தீர்த்தம் கங்கைக்கு ஒப்பானது. இதனை பருகுவதால் பாவங்கள் விலகும். துளசியை இட்டு வழிபாடாற்றினால் வறுமை அகலும் இதனை மூன்று மாதங்களுக்கு வைத்து பூஜிக்கலாம். பித்ரு காரியம், தானம் போன்றவற்றிற்கு துளசி முக்கியமானது. இடைவிடா விரதம், தேவதாபிரதிஷ்டை, தேவபூசை என்பனவற்றுக்கு துளசியும் முக்கியமானது. வீட்டில் துளசிமாடம் அமைத்து வழிபடுவது சிறப்பானது.

## வில்வம்

சிவபெருமானுக்கு பிரியமான பத்திரம் வில்வமாகும். ஒரு வில்வதளத்தினால் பூசை செய்தால் அது லட்சம் ஸ்வர்ண புஷ்பத்துக்குச் சமமாகும். வில்வத்தில் லக்ஷ்மி வசம் செய்கிறாள். வடமொழியில் வில்வம் ஸ்ரீபலம், சிரேஷ்ட, வில்வம், கந்தபல எனப் பல பெயர்களினால் சுட்டப்படுகிறது. மண்ணுலகில் உள்ள ஆன்மாக்களின் பாவங்களைப் போக்கவென ஈசனின் இச்சா, கிரியா, ஞான வடிவமாய் ஈசனின் அருளால் பூமியில் தோன்றியது வில்வம். எனவே இவ்விருட்சத்தைப் பூசிப்பவர்கள் சகல சித்திகளும் அடைவார்கள்.

வில்வத்தின் பெருமையை சாஸ்திரங்கள் விளக்கமாகக் கூறுகின்றன. வில்வத்தின் மூன்று இலைகளும் சிவன் ஏந்தியுள்ள திரிசூலத்தின் வடிவத்தையும், இறைவனின் முக்குணங்களையும் குறிப்பனவாக விளங்குகின்றன. ஊழிக்காலத்தில் அனைத்தும் அழியும் என உணர்ந்த வேதங்கள் தாங்கள் அழியாதிருக்க என்ன வழி என ஈசனிடம் கேட்க ஈசனும் **திருவைகாவூர் திருத்தலத்தில் வில்வ மரத்தின் வடிவில் நின்று தவம் செய்யுமாறு** அருளினார். அதன்படி வேதங்களும் வில்வமரங்களாக தவமியற்றியதால் திருவைகாவூர் என்ற ஊர் **'வில்வாரண்யம்'** எனச் சிறப்புப் பெற்றது.

சிவன் திருவாதிரை நட்சத்திரம். அது எரிநட்சத்திரமாக விளங்குவதால் சிவனின் சூட்டினை தணிக்க எம் முன்னோர்கள் குளிர்மை பொருந்திய வில்வத்தை சார்த்தி வழிபட்டுள்ளனர். அத்துடன் சிவன் இமய மலையில் இருப்பவன் இமயத்தில் பனி அதிகம். தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு நன்மையாக தனக்கு செய்யப்படும் பூசைகளுக்கு வில்வத்தை ஏற்றுக் கொண்டான். ஏனெனில் வில்வம் பனியாலும் சளியாலும் வரும் துன்பங்களை போக்க வல்லது. வில்வமரத்தை வளர்ப்பதால் அஸ்வமேத யாகம் செய்த பலன் கிடைக்கும். ஒரு வில்வத்தை சிவனுக்கு அர்ப்பணிப்பதால் சகல பாவங்களும் நீங்கி, அனைத்து நன்மைகளும் உண்டாகும். வில்வத்தின் இலை பலவகையான நோய்களுக்கும் மருந்தாக விளங்குகிறது.

மாதப்பிறப்பு, சோமவாரம், அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, அஷ்டமி, நவமி ஆகிய தினங்களில் வில்வத்தைப் பறிக்கக்கூடாது. இந் நாட்களில் பூசைக்கு தேவையானதை முதல் நாளே பறித்து வைக்க வேண்டும். வில்வத்தைப் பறித்து ஆறுமாதம் வரை வைத்துப் பூசை செய்யலாம். உலர்ந்த வில்வம், ஏற்கனவே பூஜித்த வில்வம் முதலியவற்றாலும் பூசை செய்யலாம். அவ்வளவு புனிதமானது. சிவ அர்ச்சனையில் வில்வ அர்ச்சனை கோடி புண்ணியம் தரவல்லது.

## வேம்பு

பண்டைக் கால இலக்கியங்கள் **'சர்வரோக நிவாரணி'** எனச் சிறப்பிக்கும் வேம்பு இந்துக்களின் வழிபாட்டோடு இரண்டறக் கலந்துள்ளது. மாரியம்மனுக்கு வேப்பிலை மிகவும் பிடித்த பொருளாகும். இது குளிர்ச்சியை அளித்து நோய்க்கிருமிகளையும் அழிக்கிறது. மாரியம்மன் வழிபாட்டில் வேப்பிலைதான் முதலிடம் பெறுகிறது. அம்மனுக்கு கூழ் வார்க்கும் போதும், குளிர்த்தி செய்யும் போதும் கோயில் முழுவதும் வேப்பிலை சாத்தப்பட்டிருக்கும். அத்துடன் அம்மைநோய் கண்டதும் வேப்பிலையை வீட்டு வாசலிலும் படுக்கையிலும் வைக்கும் வழக்கம் இன்று வரை இருந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சபத்திரங்களில் ஒன்றாகிய வேம்பு தலவிருட்சங்களாக விளங்குகின்றது. வேப்பமரமும் அரசமரமும் இணையும் இடம் சிறப்புக்குரியது. வேம்பு சமயத்துடன் மட்டுமின்றி சமுதாயத்திற்கு உரிய பத்திரமாக விளங்குகிறது.

### அறுகு

கணபதிக்கு உரியது அறுகம்புல். விநாயகர் தனக்கு விருப்பமான பத்திரமாக தனது தலையில் சூட்டிக் கொண்டுள்ளார். சிறு புல்லாக விளங்கும் அறுகு வெட்ட வெட்ட முளைக்கும் தன்மையுடையது.

**'தூர்வாஸூக்தம்'** எனும் வேத மந்திரம் இதன் சிறப்பை விளக்குகின்றது. அறுகில் நிலத்தில் தோன்றுவது நீரில் தோன்றுவது என இரு வகை உண்டு.

அறுகம்புல் தொன்று தொட்டு மருத்துவப் பொருளாகவும் விளங்குகின்றது. துவர்ப்பும், இனிப்பும் கலந்த சுவையுடைய அறுகு பல நோய்களைத் தீர்க்க வல்லது. அறுகம் புல்லால் தேவர்கள் விநாயகரைக் குளிர்விப்பதற்காக பூசை செய்தனர். சூட்டைத் தணிப்பதில் சிறந்த பத்திரமாக இது விளங்குகிறது. அர்ச்சனை பொருளாகவும் மருத்துவக் குணமுடையதாகவும் அறுகு விளங்குகிறது. மணமக்களை வாழ்த்தும் போது ஆல் போல தழைத்து அறுகுபோல் வேரூன்றி வாழ்க என வாழ்த்தப்படுகிறது.

### வன்னி

பஞ்ச பத்திரங்களுள் ஒன்றான வன்னி விநாயகருக்கும் அக்கினிக்கும் உகந்த பத்திரம். இது பாவத்தை சமிக்கச் செய்வதால் சமி எனவும் அழைக்கப்படுகிறது. விநாயகரின் அம்சமாகவும் விளங்குகிறது. வன்னி மரத்தில் அக்கினியும் வாசம் செய்கிறது என்பர். இதனால் வன்னி யாக காரியங்களுக்கு உகந்த பத்திரமாக விளங்குகிறது. விநாயகர் விரும்பி உறையும் இடங்களில் வன்னி மரத்தடி சிறப்பானதாகும். இராமபிரான் அருச்சனன் ஆகியோரால் பூஜிக்கப்பட்டது. அருச்சனன் அஞ்ஞான வாசத்தின்போது தமது ஆயுதங்களை வன்னி மரப்பொந்தில் ஒளித்து வைத்து, பின் விஜயதசமி அன்று அதற்கு பூசை வைத்து எடுத்துச் சென்றான் என்பது இதிகாசம் தரும் செய்தி. இதனை விஜயதசமி அன்று நடைபெறும் மானம்பூ விழாவில் வன்னிமரம் அல்லது வாழை மரம் நாட்டுவது வழக்கம். இதில் வன்னி மரமே சிறந்தது.

வன்னி இலையினால் பூஜிப்பதால் பாவங்கள் விலகுகின்றன. வன்னி இலை பூசைகளிலும், கிரியைகளிலும் சமித்துக்களாகவும் பயன்படுகின்றது.

(ஹே. கு.)

## பஞ்ச பருவங்கள்

பஞ்ச பருவங்கள் எனப்படுவது ஐந்து பருவங்களை குறிக்கின்றது. அவையாவன மாதப்பிறப்பு, கிருஷ்ணபட்சத்து அட்டமி, கிருஷ்ணபட்சத்து சதுர்தசி, பௌர்ணமி, அமாவாசை என்பனவாகும்.

மேஷம் முதல் மீனம் வரையுள்ள பன்னிரண்டு ராசிகளுக்கும் சூரியன் சென்று வருகின்றான். இச்சூரியன் ஒரு ராசியிலிருந்து இன்னொரு ராசிக்கு மாறும் தினம் மாதப் பிறப்பாகும். இதில் சூரிய பகவான் மேடராசிக்குள் பிரவேசிக்கும் காலம் சித்திரை மாதப்பிறப்பு எனப்படும். அன்று வருடப் பிறப்பாகவும் கொண்டாடப்படுகிறது. இது போல் தை மாதப்பிறப்பு தைப்பொங்கலாக கொண்டாடப்படுகின்றது.

கிருஷ்ண பட்சத்து (தேய்பிறை) அட்டமி எனப்படுவது பௌர்ணமிக்கு பின்வரும் எட்டாம் நாள் திதியாகும். பொதுவாக பதினைந்து திதிகளில் அட்டமியிலும் நவமியிலும் எக்காரியமும் செய்வதில்லை.

அடுத்து பௌர்ணமிக்கு பின்வரும் பதினான்காம் நாள் வருவது கிருஷ்ண பட்சத்து சதுர்த்தசியாகும். ஐப்பசி மாத கிருஷ்ணபட்ச சதுர்தசியில் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப் படுகிறது. இத்திருநாளில் நரகாசுரன் என்னும் அசுரனை கிருஷ்ண பகவான் கொன்ற நாளாகும். இந்நாளில் கிருஷ்ணரை வேண்டுபவர்கள் வேண்டும் வரங்களைப் பெறுவர்.

சூரியனும் சந்திரனும் ஒன்று சேரும் திதியே அமாவாசையாகும். முப்பது நாட்களுக்கு ஒருமுறை வரும். அமாவாசை அடுத்து வரும் திதிகள் சுக்கிலபட்ச திதி அல்லது வளர்பிறை திதி எனப்படும். ஒரு மாதத்தில் இரண்டு அமாவாசைகள் வந்தால் அது மலமாதமாகும் அதில் சுபகாரியங்கள் செய்யக் கூடாது. அமாவாசை பிதிர் காரியங்கள் செய்வதற்கு உகந்த தினம். பிதிர்களை நோக்கி தான தர்ப்பணம் செய்து அவர்களது பூரண கிருபையை பெறும் நாளாக அமாவாசை விளங்குகிறது. தந்தையை இழந்தவர்கள் விரதமிருக்க உகந்த நாள். இதில் சிறப்பாக ஆடி அமாவாசை உகந்தது. தை அமாவாசை அன்றுதான் அபிராமி பட்டரின் பிரார்த்தனையின் பொருட்டு அம்பிகை அருளால் பூரணைத் தினமாக காட்சியளித்த தினமாகும்.

பௌர்ணமி மாதமொருமுறை பூரண சந்திரன் வரும் திதியாகும். பௌர்ணமியை அடுத்து வரும் பதினான்கு திதிகளும் தேய்பிறைத் திதிகளாகும். பௌர்ணமியில் சித்திரா பௌர்ணமி சிறப்பு வாய்ந்தது வருடம் பிறந்து முதலாவதாக வருவது. அத்துடன் இத்தினத்திலேயே எமது வாழ்நாள் கணக்குகளை எழுதிப் பேணும் யமதர்ம ராஜரின் கணக்குப்பிள்ளை சித்திரக் குப்தன் திரு அவதாரம் செய்த நாளாகும். இத்தினம் தாயை இழந்தவர்கள் விரதமனுட்டித்து பிரார்த்தனை செய்ய உகந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம். ஒரு மாதத்தில் இரண்டு பௌர்ணமிகள் வந்தால் அது மலமாதமாகும். இம்மாதத்தில் திருமணம் போன்ற நற்காரியங்கள் செய்யக் கூடாது.

இவ்வாறாக மாதப்பிறப்பு, அட்டமி, சதுர்த்தி, அமாவாசை, பௌர்ணமி முதலிய பஞ்ச பருவங்களும் இந்துகள் வழிபாட்டில் முக்கிய இடம் வகிக்கின்றன. (ஹே.கு.)

## பஞ்ச பாரதீயம்

பஞ்சபாரதீயம் என்ற இசைத்தமிழ் நூல் நாரத முனிவரால் இயற்றப் பெற்றது என்பதும், அது மறைந்து விட்டது என்பதும் அடியார்க்கு நல்லார் உரையினின்றும் அறிய முடிகிறது. நாரதமுனி வழி வந்தது தமிழ் நாட்டு இசை மரபு என்பர். இந்த செவி வழிச் செய்தி, நாரத முனிவர் இந்நூலை இயற்றினார் என்பதினின்றும் உறுதிப்படுகின்றது.

சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் நாரத முனிவர் நல்லிசையை,

"*நாரத வீணை நயந்தெரி பாடல்* (கடலாடுகாதை)
"*முறு மறைதேர் நாரதனார் முந்தை முறை நரம்புளர்வார்*
(ஆய்ச்சியர் குரவை)
"*குயிலுவருள் நாரதனார் சாபுணர் சீர் நரம்புளர்வார் கொளை*
(ஆய்ச்சியர் குரவை)

என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

சிலம்புக்கு உரை வகுத்த அடியார்க்கு நல்லார் நாரதமுனிவரின் பஞ்ச பாரதீயத்தினின்றும், ஒரு சூத்திரத்தை மேற்கோளாகக் கூறியுள்ளார்.

" *இன்னிசை வழிய தன்றியிசைத்தல் செம்பகையாகும்*
*சொன்னமாத் திரையினோங்க விசைத்திடுஞ் சுருதியார்ப்பே*
*மன்னிய விசை வராது மழுங்குதல் கூடமாகும்*
*நன்னுதால் சிதறவுந்த லதிர்வென நாட்டினானே*

இவ்வோர் இசையிலக்கணச் சூத்திரத்தை தவிர அந்நூலின்று வேறெதும் அறிய முடியவில்லை. (நன்றி: இசையியல்)

(தே. ஹ.)

## பஞ்சபுராணம்

சிவபெருமானிடம் அருள் பெற்ற சிவனடியார்களினால் அருளப்பெற்றவை திருமுறைகள். இவை தமிழ் வேதங்கள் என அழைக்கப்படுகின்றன. இத்திருமுறைப் பாடல்கள் ஆக்கவும், காக்கவும் அழிக்கவும் வல்லன. தெய்வீக சக்தியுடையன. அவற்றை மெய்யன்போடு பொருளுணர்ந்து பண்ணமைய வழுவின்றி ஓதுதல் வேண்டும். இத்தகைய சிறப்பு மிக்க இத் திருமுறைகளை முன்பின் முறை மாறாது ஓதுதல் வேண்டும். அவ்வாறு ஓதமுடியாத விடத்து பஞ்ச புராணம் ஓதும் மரபு காணப்படுகிறது. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் எனும் ஐந்தும் பஞ்சபுராணம் ஆகும்.

பஞ்ச புராணமானது பன்னிரு திருமுறையில் மூவர் பாடல்களில் இருந்து ஒரு தேவாரமும் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்திலிருத்து ஒரு பாடலும், ஒன்பதாம் திருமுறையில் இருந்து திருவிசைப்பா, திருப்பல்லாண்டும், சேக்கிழாரின் பெரிய புராணத்திலிருந்து ஒரு பாடலும் அடங்குவதாகும். ஆலயத்தில் பஞ்ச புராணம் பாடும்போது அவ் ஆலயம் பாடல் பெற்ற தலமாக விளங்குமானால் அத்தலப் பதிகத்திலிருந்து பாடல் பாடுவது சிறப்பாகும்.

பஞ்சபுராணம் பாடும் மரபு காலகாலமாக இருந்து வருவதை சிவாலய தரிசன விதி பற்றிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் பாடல் பின்வருமாறு கூறுகிறது.

"*நிறையருட் பாடலாகி நிரம்பு தேவாரம் பாடும்*
*அறை திருவாசகம் சீர் அமை இசைப்பா பல்லாண்டு*
*குறை தவிர் புராணம் இன்ன கொண்டுறத் துதித்தல்*
*மறைபுகழ் வீபூதிமேனி வளைத்திருகையால் செய்து ஏற்க*"

இப்பாடலில் இருந்து பஞ்சபுராணம் ஓதுவதின் சிறப்பையும் பழமையையும் அறிந்து கொள்ள முடிகிறது.

(ஹே.கு.)

## பஞ்சபூத சிவத்தலங்கள்

சைவ மரபிலே காஞ்சிபுரம், திருவானைக்கா, காளத்தி, திருவண்ணாமலை, சிதம்பரம் ஆகிய ஐந்து தலங்களும் பஞ்ச பூதத்தலங்களாகக் கொள்ளப்படுகின்றன. இந்த உலகம் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களால் ஆனது. சிவபெருமான் பஞ்ச பூதங்களிலிருந்தும் அருள் பொழிகின்றார்.

**பிருதிவிதலம்:-** காஞ்சிபுரம் பஞ்ச பூதங்களில் பிருதிவி (மண்) தலம். இங்கு 108 சிவாலயங்கள் இருக்கின்றன. அதில் முக்கியமான ஆலயமாகத் திகழ்வது ஏகாம்பரேஸ்வரர் ஆலயம். இங்குள்ள மூலவர் சுயம்புலிங்கம். இவர் மண் வடிவில் அமைந்துள்ளார்.

சிவன் தன் வழமையான படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலையும் செய்து கொண்டிருந்தபோது பார்வதி விளையாட்டாக அவரது கண்களை மூடினார். இதனால் உலகமே இருண்டு விட்டது. கோபமடைந்த சிவன் பார்வதியைப் பூலோகம் சென்று தன் தவறினை உணருமாறு பணித்தார். பார்வதி காஞ்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பா நதிக்கரையில் மண்ணினாற் சிவலிங்கம் அமைத்துப் பூசை செய்து வந்தார். இவரது பக்தியைப் பரீட்சித்துப் பார்க்க விரும்பிய சிவன் வெள்ளப் பெருக்கினை ஏற்படுத்தினார். வெள்ளம் வரவே பார்வதி சிவலிங்கத்தை அணைத்து வெள்ளத்திலிருந்து காத்தார். பார்வதியின் பக்தியை மெச்சிய சிவன் அவரைப் பங்குனி உத்தரத்தன்று திருமணம் செய்வதாக வாக்களித்தார். மேலும் பார்வதியின் வேண்டுகோளுக்கமைய மாமரத்தின் கீழ் அமர்ந்திருக்கவும் சம்மதம் தெரிவித்தார். ஏகாம்பர நாதர் கோயிலில் இன்றும் காணப்படும் மாமரத்தின் நான்கு கிளைகளிலுமுள்ள இலைகள் வேறுபட்டனவாகவும், அவற்றின் கனிகளும் வேறுபட்ட சுவையினைக் கொண்டதாகவும் உள்ளன. உமாதேவி வழிபட்ட மண் சிவலிங்கமே கர்ப்பக்கிருகத்தில் உள்ளது. இதற்கு உலோகத்தாலான கவசம் சாத்தப்பட்டுள்ளது. சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஏகாம்பரத்தில் பாடிய தேவாரத்தில் பாட்டுக்குப் பாட்டு அம்பாள் பூசை பண்ணிய மகிமையை விவரிக்கின்றார்.

**அப்புதலம்:-** ஸ்ரீரங்கத்திற்கு அருகில் உள்ள திருவானைக்கா நீர்த் தலமாகக் கொள்ளப்படுகிறது. இங்கு எழுந்தருளியுள்ள லிங்கமூர்த்தியைச் சுற்றி சதா காலமும் நீர் சுரந்துக் கொண்டிருக்கும். இங்கு பரமேஸ்வரன் நீர் வடிவில் மக்களுக்கு அருள் புரிகின்றார்.

இங்கு ஜம்பு மஹரிஷி என்பார் ஜம்பு (நாவல்) விருட்சமாக அமைந்திருக்க கீழே ஈஸ்வரன் கோயில் கொண்டார். அங்கு இலிங்கத்திற்குச் சிலந்தி ஒன்று பந்தர் போட்டு வழிபாடு நடத்தியது. அந்தப் பந்தரை அறுத்துக் கொண்டு யானை அபிஷேகம் பண்ணியது. இதனாற் கோபங்கொண்ட சிலந்தி யானையின் துதிக்கையினுள் நுழைந்து அதனைத் துன்புறுத்தியது. அப்போது யானை துதிக்கையை நிலத்தில் மோதித் தானும் இறந்து சிலந்தியையும் கொன்று விட்டது. இந்தச் சிலந்திதான் பின்னர் கோச்செங்கட் சோழனாகப் பிறந்தது. அவன் ஜம்புகேஸ்வர ஆலயத்தைக் கட்டினான். இந்தக் கதை தல புராணத்தில் உள்ளது. மூலஸ்தானத்தில் எப்போதும் காவேரி ஊற்று இருக்கும் படியான அற்புதத் தலம் இது.

*"சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற் பந்தர் செய்து*
*உலந்தவன் இறந்த போதே கோச்செங்க ணானுமாகக்*
*கலந்த நீர் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்*
*குலந்தனில் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே"*

என்று அப்பர் பெருமான் இந்நிகழ்ச்சி பற்றிப் பாடியுள்ளார்.

**வாயுதலம்:-** ஆந்திர மாநிலத்தில் மலைகள் சூழ்ந்த பகுதியில் ஸ்வர்ணமுகி ஆற்றங் கரையில் அமைந்துள்ள தென்காசி எனப் போற்றப்படும் ஸ்ரீகாளகத்தீஸ்வரர் ஆலயம் வாயுத் தலமாகப் போற்றப்படுகிறது. மூலஸ்தானத்தில் உள்ள விளக்குகள் எப்போதும் காற்றால் அசைந்துக் கொண்டே இருக்கும். மூலஸ்தானத்திலுள்ள திரு உருவில் சிலந்தி, யானை, பாம்பு மூன்றும் உள்ளன. சுயம்பு லிங்கம் நீண்ட பல செங்குத்தான உட் குழிந்த குடைவுகள் நிரம்பிய திருமேனி.

இங்கு கோயில் கொண்டுள்ள காளத்தீஸ்வரன் மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இந்த அமைப்பு இந்தக் கோயிலின் சிறப்புகளில் ஒன்று. இந்த ஆலயம் நவக்கிரக சாந்திக்கு சிறந்ததாகவும் விளங்குகிறது.

**தேயுதலம்:-** திருவண்ணாமலை பஞ்ச பூதத் தலங்களில் தேயு தலம். இங்கு மலையே இலிங்கமாகவும் மலையைச் சுற்றிய பகுதி திருக்கோயிலாகவும் அமைந்துள்ளது மிக விசேஷமான அம்சமாகும்.

மாணிக்கவாசகர் திருவெம்பாவை பாடிய தலம். பார்வதி தேவி தவம் செய்து இறைவன் இடப்பாகம் பெற்ற தலம். பிரம்மா விஷ்ணு இருவரும் வாதிட்டு நின்ற வேளையில் இறைவன் ஒளிப்பிழம்பாய் நின்ற தலம். சிவபெருமான் அழற் பேருருவாய் நின்ற தன்மையால் எப்படி அவரை வணங்குவது எனத் திருமாலும் பிரம்மனும் வேண்டியதற்கிணங்க சிவபெருமான் இலிங்கத் திருவுருவில் இம் மலையினின்றும் தோன்றினார். நெருப்பின் வடிவாக இறைவன் தோன்றியதால் இது பஞ்ச பூதத் தலங்களில் அக்கினிக்கு உரிய தலமாக விளங்குகிறது.

திருவண்ணாமலை என்ற உடன் நினைவுக்கு வருவது கார்த்திகைத்தீபம். சிவபெருமான் முப்புரங்களை எரித்த நாளே கார்த்திகைத் தீபமாகக் கொண்டாடப்படுகிறது. சிவபெருமான் அழலுருவாகத் தோன்றியதன் காரணமாகத் தீபவிழா கொண்டாடப் படுகிறது என்பாரும் உளர். இங்கு இறைவி கார்த்திகைத் திங்களில் பெருவிழா நடத்தி பௌர்ணமியோடு கூடிய கார்த்திகை நாளில் பிரதோச காலத்தில் மலைமேல் ஜோதி தரிசனம் கண்டு மகிழ்வெய்தி ஈசனின் இடப்பாகம் பெற்றார் என்பதும் ஒரு ஐதீகம். இங்கு எழுந்தருளியிருக்கும் சோதிவடிவான இறைவன் குறித்து சம்பந்தர் இரண்டு பதிகங்களும் அப்பர் மூன்று பதிகங்களும் பாடியுள்ளனர்.

*"ஓதிமா மலர்கள் தூவி உமையவள் பங்கா மிக்க*
*சோதியே துளங்கும் எண்தோள் சுடர் மழுப்படையினானே*
*ஆதியே அமரர் கோவே அணியணா மலையுளானே*
*நீதியால் நின்னை அல்லால் நினையுமா நினைவிலேனே"*

(திருநாவுக்கரசர் 4ம் திருமுறை)

**ஆகாயதலம்:-** பஞ்ச பூதத்தலங்களில் சிதம்பரம் ஆகாயத் தலமாகும். வைணவர்கட்கு கோயில் என்றால் திருவரங்கம் போல் சைவர்கட்குக் கோயில் சிதம்பரமாகும். மாணிக்கவாசகர் திருவாசகத்தில் "அனைத்துலகும் தொழுந் தில்லை அம்பலம்" என இத்தலத்தினைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். தரிசிக்க முக்தி கிடைக்கும் தலம் என்ற பெருமை இதற்குண்டு. தமிழ் நாட்டிலுள்ள நடராஜருக்குரிய ஐந்து சபைகளுள் சிதம்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகசபையாகும். (பொன்னம்பலம்) இங்கு சிவனின் ஆனந்தத் திருநடனம் நடைபெறுகின்றது.

சிற்றம்பலம் என்பது இத்தலத்தின் பழைய பெயரென்றும் இது வட மொழியில் சிதம்பரம் எனத் திரிந்தது எனவும் கூறப்படுகின்றது. `சித்' என்றால் ஞானம், அறிவு, அம்பலம் என்றால் அளக்க முடியாத வெட்டவெளி, அதாவது, ஆகாயம் என்று பொருள் கண்டு, சிதம்பரம் என்றால் எல்லையற்ற அறிவு, அதாவது ``ஞானாகாசம்'' எனப் பொருள் கொள்ளப்படுகிறது. பரமேஸ்வரன் அண்டப் பெருவெளி எங்கும் இருக்கின்றான் என்பதுதான் இதன் தத்துவம். இதுதான் சிதம்பர ரகசியம்.

பஞ்ச பூதங்களால் ஆன இவ்வுலகை இறைவன் இவற்றில் பரவிப்படர்ந்து நின்றே இயக்குகிறார். (நி. நி.)

## பஞ்ச மகா யக்ஞங்கள்

இல்லற வாழ்வில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு இந்துவும் செய்ய வேண்டிய முக்கிய ஐந்து கடமைகள் உள்ளன. அவையே பஞ்ச மகா யக்ஞங்கள் ஆகும். தேவ யக்ஞம், பிதிர் யக்ஞம், பூத யக்ஞம், மனித யக்ஞம், பிரம யக்ஞம் எனும் ஐந்துமே அவை. தன்னை ஓம்புதலுடன் தான் வாழும் சமூகத்தையும் ஓம்பி வாழ வேண்டும் என்கிறார் வள்ளுவர். இல்லறத்தார்களின் கடமை பற்றி சொல்ல வந்த வள்ளுவர்.

*``தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்*

*தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை''*

என பஞ்சயக்ஞத்தினை செய்யவேண்டிய அவசியத்தைக் கூறியுள்ளார்.

தேவயக்ஞம் என்பது தேவர்களையும் எமது இஷ்ட தெய்வங்களையும் நினைத்து வழிபடுவது ஆகும். இதனுள் ஆலய வழிபாடு, பூசை, திருமுறையோதல், ஹோமம் செய்தல் முதலியன அடங்கும். இதன் மூலம் தேவர்கள் மகிழ்ந்து இல்லறத்தை இனிதே நடத்த அருள் புரிவார்கள்.

பிதுர்யக்ஞம் எனப்படுவது இறந்து போன எம் முன்னோர்களுக்கு பிதிர்க்கடன் செய்வதாகும். வள்ளுவரும் முதலில் தென்புலத்தார் என பிதிர்கடனையே சுட்டியுள்ளார். பிதிர்க் கடன் செய்யாதோர் பிதிர்களின் வருத்தத்துக்கு ஆளாக நேரிடும். இதனால் வாழ்வில் துன்பம் மேலிடும். இதனை தவறாது செய்து வருபவர்கள் பெரும் பேறுகளும் சித்திகளும் பெறுவார்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு எமது முன்னோர்களின் ஆசீர்வாதம் கிடைப்பதற்கு பிதிர்க்கடன் முக்கியமானதாக விளங்குகிறது.

பூதயக்ஞம் என்பது ஐந்தறிவு படைத்த பிராணிகளுக்கு தன்னிடமுள்ள உணவுப் பொருட்களில் சிறிதளவேனும் கொடுத்து அவைகளின் வாழ்வுக்கு ஆதாரமாக இருத்தலாகும். இதன் மூலம் பிற உயிர்களின் வாழ்வுக்கும் அதாவது எறும்பு, காக்கை, நாய், பூனை முதலிய பிராணிகளின் வாழ்வுக்கும் இல்லறத்தான் உதவ வேண்டும்.

மனித யக்ஞம் என்பது தன்னை நாடி வரும் மனிதர்கள் யாரானாலும் அவர்களை உபசரித்து தன்னிடமுள்ள உணவுகளை அவருக்கும் கொடுத்து மகிழ்தலாகும். இதனால் தான் விருந்தோம்பல் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

*``செல் விருந்தோம்பி வருவிருந்து காத்திருப்பான்*

*நல்விருந்து வானத்தவர்க்கு''*

என்பது வள்ளுவன் வாக்கு.

பிரம யக்ஞம் என்பது வேதங்களையும் முன்னோர் காத்து வந்த நூல்களையும் கற்று அதன்படி வாழ்தலாகும். இவ்வாறாக இல்லறத்தான் தான் வாழ்க்கையை நடத்தும் அதேவேளை தன்னைச் சுற்றியிருப்பவர்களையும் பாதுகாத்து அவர்களுக்கு வேண்டியதை செய்து வாழ்வதே அவனின் கடமையாகும். இவ்வாறான ஐந்து கடமைகளையும் செய்து நற்கதி அடைவதே இல்லறத்தானின் கடமையாக விளங்குகிறது. எனவே ஒவ்வொரு இல்லறத்தானும் தன்னுடைய கடமைகளை உணர்ந்து பிதிர், தேவர், மனிதர், பிரமம், பூதம் ஆகிய ஐந்து யாகங்களையும் இனிதே ஆற்றி வர அவனது வாழ்வும் இன்பமயமானதாக விளங்கும். இதனாலேயே வள்ளுவர் அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையுங் கூறி இதை செய்தால் வீடுபேற்றை அடையலாம் என நினைத்து வீடுபேறு பற்றி எதுவும் கூறவில்லை என்பது புலனாகிறது. (ஹே.கு.)

## பஞ்சமரபு

பழந்தமிழ் மக்களின் அருங்கலைகளாகிய இசை, கூத்து ஆகியவற்றின் இலக்கணம் கூறும் நூல்களுள் பஞ்சமரபும் ஒன்றாகும். இந்நூல் இசைமரபு, வாச்சியமரபு, நிருத்த மரபு, அவிநய மரபு, தாளமரபு என்னும் ஐந்து பிரிவுகளை உள்ளடக்கியது. இவ் ஐம்பெரும் பிரிவுகளில் அவற்றின் பல உட்பிரிவுகள் இடம் பெற்றுள்ளன. இந் நூற்றொடக்கத்தில் பாயிரம் என்னும் தலைப்பில் ஆறு செய்யுள்கள் காணப்படுகின்றன. இப்பகுதியில் காப்புச் செய்யுளும் அவையடக்கமாக நூற்பெயர், காரணம், நூலாசிரியர், நூலினளவு, பயன் ஆகிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

முதற்பெரும் பிரிவான இசைமரபிலே யாழ்மரபு, வங்கிய மரபு, கண்டமரபு, நிருத்தமரபு, வகையொழிபு மரபு என்னும் ஐந்து சிறுபிரிவுகளும் இரண்டாம் மரபான வாச்சிய மரபில் முழவு மரபு, பிண்ட மரபு, எழுத்து மரபு என்னும் மூன்று சிறு பிரிவுகளும் இந்நூலின் முதற்பகுதியில் அடங்கியுள்ளன. இந்நூலின் இரண்டாவது பகுதியில் மூன்று பெரும் பிரிவுகளும் பிற்சேர்க்கைகளும் இடம்பெற்றுள்ளன. மூன்றாவது பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவான நிருத்தமரபில் நிருத்த வகைமரபு, தாண்டவ மரபு, அகமார்க்கப் பொருள் தரு வரலாறு மரபு, கூத்திலக்கணமரபு என்னும் சிறு பிரிவுகள் அடங்கியுள்ளன. நான்காவது பெரும் பிரிவான அவிநய மரபில் ஒற்றைக்கைமரபு, இரட்டைக்கைமரபு, அங்கக்கிரியை மரபு, காற்றொழில்மரபு, அரங்கஇலக்கண மரபு, பிரம்பிலக்கண மரபு என்னும் ஆறு சிறு பிரிவுகளும் அடங்கியுள்ளன. ஐந்தாவது பெரும் பிரிவான தாள மரபில் தாள மரபு வரலாறு, அட்டகண மரபு, தாள நூற்பா மரபு என்னும் மூன்று பிரிவுகளும் பிற்சேர்க்கையாகத் ''தாண்டவப் பொதுவியல்'' என்னும் பிரிவும் அடங்கியுள்ளன.

பஞ்ச மரபின் ஐந்தாவது பாயிர உரையால் இந்நூல் இருநூற்றுநாற்பது வெண்பாவால் முற்றுப் பெற்றது என்று அறியலாம். பழந்தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ள நூற்று மூன்று பண்கள், நூற்றுஎட்டுத்தாளங்கள் ஆகியவை பற்றிய விவரங்கள் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

பஞ்சமரபின் நூலாசிரியராகிய அறிவனார் சேறை என்னும் ஊரைச் சேர்ந்தவர் என அறிய முடிகின்றது. இந் நூலின் பாயிரம் ஐந்தாவது செய்யுளில் சேறையறிவனார் செய்தமைந்த ஐந்துதொகை எனக் கூறப்பட்டுள்ளது. பஞ்சமரபின் காலம் தொடர்பாக பல்வேறு விதமான கருத்துக்கள் ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகின்றன. அறிவனார் முடத்திரு மாறனை முன்னிலைப்படுத்தி ''மன்ன திருமாற வன்கூடற் கோமானே'' என்றும் ''நண்ணிய மன்னர்க்கு மண்கொடுத்து மாற்றார்க்கு விண் கொடுத்த தென்னர் கோமானே'' என்றும் பல இடங்களில் இவர் கூறியுள்ளதால் இந்நூல் கூடலில் நிறுவப்பட்டிருந்த கடைச் சங்க காலத்தைச் சேர்ந்தது எனக் கூற முற்படுகிறார்கள்.

பஞ்சமரபு நூலில் பல வடமொழிச் சொற்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. நூலின் தலைப்பும் வடமொழிச் சொல்லுடன் கலந்துள்ளது (பஞ்ச - வடமொழி - மரபு - தமிழ்) சங்க நூல்களில் வடமொழிச் சொற்கள் பெரிதும் காணப்படவில்லை. இதன் காரணமாக இப்பொழுது வெளியிடப்பட்டுள்ள பஞ்சமரபு நூல் சங்க கால நூலாக இருக்க இயலாது என்பதற்கு காலத்தால் பிற்பட்டது என்பதற்கும் மேலும் பல காரணங்கள் உள என்றும் கூறப்பட்டுள்ளன.

பஞ்சமரபின் இசைமரபில் சாளரபாணி என்னும் பண் ஏழு பெரும் பாலைப் பண்களில் ஒன்றான படுமலைப்பாலைப் பண்ணில் பிறந்துள்ள பதினோராவது பண்ணாக சுட்டப் பெற்றுள்ளது. பண்ணியற்றிறப் பண்கள் எழுபதில், எழுபதாவதாக இப்பண் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் இயற்றப்பட்ட தேவாரப் பாடல்களைப் பாடுவதற்கு குறிக்கப்பட்டுள்ள பண்களில் சாளரபாணி என்னும் பண் காணப்படவில்லை. பதினொராம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பூந்துருத்திநம்பி காடநம்பி என்பவர் தில்லைத் தலத்தின் மீது சாளரபாணிப் பண்ணில் ஒரு திருவிசைப்பா பாடியுள்ளார். இது ஒன்பதாவது திருமுறையில் உள்ளது. பஞ்ச மரபு சாளரபாணிப் பண்ணிற்கு இலக்கணம் கூறியுள்ளதால் இது எட்டு முதல் 11 ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலமாகிய 9 ஆம் நூற்றாண்டிற்குரியது எனக் கொள்வது பொருத்த முடையது எனப் பேராசிரியர் அருணாசலம் தமிழ் இலக்கிய வரலாறு நூலில் குறிப்பிடுகின்றார்.

சங்ககால இலக்கிய இலக்கண நூல்களில் எல்லாம் பெரும்பாலும் ஆசிரியப் பாக்களே காணப்படுகின்றன. குறள் வெண்பாக்கள் நான்காம் நூற்றாண்டு எட்டாம் நூற்றாண்டு காலத்தில் தோன்றியவை. பஞ்சமரபு முழுவதும் வெண்பாக்களால் ஆனநூலாகும். ஆகவே இது காலத்தால் பிற்பட்டது என இலக்கிய வல்லுநர்கள் கூறுகின்றனர். இசை மரபின் நான்காவது உட்பிரிவாகிய நிருத்த மரபில் காணப்படும் 62 ஆவது பாடலில் மிடற்றுக்காகாதவை கூறப்பட்டுள்ளது. ''நகை புகை யெட்காடி'' எனச் சொல்லப்பட்டுள்ளதால் புகைபிடிக்கும் வழக்கம் மக்களிடையே வேரூன்றிய பிற்காலத்தில் இது பாடப்பெற்றது என்பது தெளிவாகின்றது. ஏழு சுரங்களும் பழந்தமிழ் நூல்களிலே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏழாவது நூற்றாண்டைச் சேர்ந்த குடுமியா மலைக் கல்வெட்டில்தான் முதன் முதலாக ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. பஞ்சமரபு இசைமரபின் உட்பிரிவாகிய வங்கிய மரபில் மேல்வருமாறு கூறப்பட்டுள்ளது.

*''சரிகமபதநியெனும் சத்தவெழுத்தால்*
*வரிபரநித கண் மடவாய் வைக்கத் தெரியவரிய*
*ஏழிசையுந் தோன்று மிதனுள்ளே பண் பிறக்குஞ்*
*சூழ்முதலாய்ச் சுத்தத் துளை'*

பஞ்ச மரபு - வங்கிய மரபு - செய்யுள் 28

பஞ்சமரபு இரண்டாம் பகுதி தொடக்கத்தில் நிருத்த மரபு கூறப்பட்டுள்ளது. இதன் முதல் பாடலில் பரத முனிவர் செய்த வடமொழி நூலை முதலாகக் கொண்டு ஏழுவகைக் கூத்தின் இலக்கியங்களும் தமிழில் கூறுவதற்கு ஐங்கரனே காப்பு என்று கூறப்பட்டுள்ளது. விநாயக வழிபாட்டு மரபு பிற்காலத்தைச் சேர்ந்தது. ஆகவே இது சங்ககாலத்து அறிவனார் இயற்றிய பஞ்சமரபாக இருக்கமுடியாது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தாளமரபில் கூறப்பட்டுள்ள சில வெண்பாக்கள் பரத சூடாமணி என்னும் வேந்தனால் இயற்றப்பட்ட ''தாள சமுத்திரம்'' என்னும் நூலைச் சேர்ந்ததாகும். இந்நூலின் பிற்சேர்க்கையாகத் தரப்பெற்றுள்ள தாண்டவப் பொதுவியல் ஒழிபு மரபு என்னும் பகுதியும் பிரம்பிலக்கணம் முதலிய பகுதிகளும் அறம் வளர்த்தான் என்னும் ஆசிரியரால் இயற்றப்பெற்ற பரத சங்கிரகம் என்ற நூலைச் சார்ந்தன எனத் தெரிகின்றன.

இந்நூலின் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ள காப்புச் செய்யுளின் விளக்கவுரையில் தாளம், வடதாளம், தமிழ்த்தாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என இரண்டுவகைப்படும் எனக் கூறப்படும் வழக்கு சிலப்பதிகார உரையாசிரியர்க்கு பிற்பட்டதாகும்.

ஆகவே. இப்பொழுது வெளியிடப்பட்டுள்ள பஞ்சமரபு. இசைத்தமிழ் நூல்களில் பாடல்கள் சிலவும் அவற்றை அடியொற்றி ஐவகை இசைமரபுகளை விரிந்துரைக்கும் பிறநூற்பகுதிகளின் சிலவும் ஒருங்கு இணைக்கப்பட்டதாகும்.

(நன்றி - இசைத்தமிழ் வரலாறு - பஞ்சமரபில் இசைச் செய்திகள்)

(தே.ஹ.)

## பஞ்சமி

சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடைப்பட்ட தூரம் திதியாகும். அமாவாசை. பூரணை என்பவற்றை அடுத்து ஐந்தாம் நாளில் வரும் திதி பஞ்சமி ஆகும். இது அமாவாசையை அடுத்து ஐந்தாம் நாள் வரும் போது சுக்கில பட்சத்து பஞ்சமி அல்லது வளர்பிறை பஞ்சமி எனப்படும். பௌர்ணமியை அடுத்து ஐந்தாம் நாள் வரும்போது கிருஷ்ணபட்சத்து பஞ்சமி அல்லது தேய்பிறைப் பஞ்சமி எனப்படும்.

ஆவணி மாதம் வளர்பிறைப் பஞ்சமி திதி கருட பஞ்சமி என அழைக்கப்படும். இந்நாளில் கருடனை வழிபடுவது சிறப்பானதாகும். கருட பஞ்சமியை விரதமாக சுமங்கலிகள் கடைப் பிடிக்கிறார்கள். ஒரு காலத்தில் அரச குமாரர்கள் எழுவர் பாம்பு தீண்டி இறக்க அவர்களில் தங்கை இத்திதியில் இவ்விரதத்தை அனுஷ்டித்து பாம்பு புற்றை பூஜித்து அப்புற்று மண்ணை நீரில் கலந்து தெளித்து அவர்களை உயிர்ப்பித்தாள் என இவ் விரதத்தின் சிறப்பைக் குறித்து ஒரு ஐதீகம் நிலவுகிறது.

புராட்டாதி மாத சுக்கிலபட்ச பஞ்சமி ரிஷிபஞ்சமி என்றழைக்கப்படுகிறது. இவ்விரதம் சப்தரிஷிகளை நோக்கி பெண்களால் அனுஷ்டிக்கப்படும். மாதவிலக்கு காலத்தில் பெண்களுக்கு ஏற்படும் சில தோஷங்களை நிவர்த்தி செய்கிறது இந்த ரிஷிபஞ்சமி விரதமாகும்.

அவிட்டம். சதயம். பூரட்டாதி. உத்திரட்டாதி. ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் ஒருவர் இறந்தால் பஞ்சமி தோஷமாகும். இதனை தனிஷ்டா பஞ்சமி தோசம் என அழைப்பர். இதில் ரேவதி நட்சத்திரத்தில் இறந்தால் ஒன்றரை மாசமும். பூரட்டாதி. உத்திரட்டாதி இறந்தால் மூன்று மாதமும் அவிட்டம். சதயம் எனின் ஆறு மாதமும் தனிஷ்டா பஞ்சமி தோஷமாகும். எனவே இந்நட்சத்திரங்களில் ஒருவர் மரணமடைந்தால் தனிஷ்டா பஞ்சமி தோஷ நிவர்த்தி செய்யப்பட வேண்டும். (கே. கு.)

## பஞ்சமுக ஆஞ்சநேயர்



பஞ்சமுக ஆஞ்ச நேயர் ஐந்து முகங்களையும் பதினைந்து கண்களையும் கோடிக் கதிரவன் ஒருங்கிணைந் தாற் போன்ற ஒளியினையும் தெற்றுப் பற்களோடு கூடிய அச்சம் தரும் தோற்றத்தையும். புருவ நெறிப்பால் கோணலான பார்வை யையும் உடையவராவார். வராகர். கருடர். ஆஞ்ச நேயர். நரசிம்மர். ஹயக்ரீவர் முதலிய முகங்களுடனும் பத்துக் கரங்களுடனும் காட்சி யளிக்கின்றார். அரக்கர்களை வதைத்துப் பிரமனுக்கு வேதங்களை மீட்டுக் கொடுத்த ஹயக்ரீவருடைய முகம் பக்தர்களுடைய அஞ்ஞானம் அகற்றி. ஞானம் அளிக்க வல்லது. இரண்ய சம்ஹாரம். செய்த நரசிம்மர் முகம் பக்தர்களைப் பேய் பிசாசுகளுடைய தொல்லைகளிலிருந்து காக்கக் கூடியது. கருடருடைய முகம் பாம்பின் கொடிய நஞ்சு போன்றவற்றிலிருந்து காக்கவல்லது. பாதாளம் சென்று பூமியை மீட்டு வந்த வராகருடைய முகம் மக்களை நோய் நொடிகளினின்றும் காப்பது. நடுவிலுள்ள ஆஞ்ச நேயர் முகம் பக்தர்களை அவர்களுடைய பகைவர்களிடமிருந்து காப்பது ஆகும்.

ஆஞ்சநேயர் கத்தி. முச்சூலம். கட்வாங்கம். அங்குசம். மலை. மரம். சோமுந்திரிகை. முண்டம் தரித்திருப்பவர். இவர் பொன்னிற மேனியுடையவர்.

இவருடைய தோற்றம் பற்றிய கதை வருமாறு. இராமர் இராவணனை வதம் செய்வதைக் கேட்டு சதகண்டன் என்னும் அரக்கன் இராமனுடன் யுத்தம் செய்ய எண்ணினான். இதையறிந்த இராமர் அனுமானுடன் சதகண்டன் பட்டணம் சென்று போர் புரிந்தார். அரக்கன் மாயையால் பலவுருவங்கள் எடுத்துப் போர் புரிந்தான். இதனால் ஆஞ்சநேய பகவான் இராமரை இளைப்பாறச் செய்து தான் குரங்கு. நரசிங்கம். கருடன். வராக. குதிரை முதலிய ஐந்து முகங்களுடன் தோன்றி அரக்கனை வதம் செய்தார் என்பர்.

பஞ்சமுக ஆஞ்சநேயருக்கு தோத்திரம் உள்ளது. கிழக்கு முகமாக தரிசனம் தரும் அனுமானின் திருமுகம் கடாஷம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்துருக்கள் பயத்தினை நீக்கும். அதற்குரிய மந்திரம்

**1. ஓம் நமோ பகவதே பஞ்ச வதனாய பூர்வ கபிமுகே ஸகல சத்ரு, ஸம்ஹாரனாய ஸ்வாஹா!!**

மேற்கு முகம் - கருட சொரூபம்

**2. ஓம் நமோ பகவதே பஞ்சவதனாய பக்ஷிமமுகே கருடய ஸகலவிஷ ஹாரனாய ஸ்வாஹா!!**

வடக்கு முகம் அருள் பாலிக்கும் வராஹர் முகம்

**3. ஓம் நமோ பகவதே பஞ்சவதனாய உத்தர முகே ஆதி வராஹாய ஸகல ஸம்பத் கராய ஸ்வாஹா!!**

மேற்கு முகமாக காட்சி தரும் ஹயக்ரீவர் முகம்

**4. ஓம் நமோ பகவதே பஞ்சவதனாய ஊர்த்துவ முகே ஹயக்ரீவாய ஸகல ஜனவசீகரணாய ஸ்வாஹா!!**

தெற்கு முகமாக தரிசனம் தரும் நரசிம்ம சொருபம்

**5. ஓம் நமோ பகவதே பஞ்சவதனாய தஷிணா முகே கராலவதனாய நரஸிம்ஹாய ஸகல பூதப்ரேத ப்ரமதனாய ஸ்வாஹா!!**

இத் தோத்திரங்களை உச்சரிப்பதன் மூலம் அதற்குரிய பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பர். (தே.ஹ.)

# பஞ்சமுக வாத்தியம்

இவ்வாத்தியம் ஐந்து முகங்களைக் கொண்ட ஒரு தோற்கருவியாகும். இதில் காணப்படும் ஐந்து முகங்களில் நடுவில் உள்ள முகம் பெரியதாகக் காணப்படும். மற்றைய நான்கு முகங்களும் ஒரே அளவினதாய் அமைந்திருக்கும். இவ்வாத்தியம் முழவம், குடமுழவம், குடபஞ்சமுகி, குடமுழா, பஞ்சானனம், பஞ்சமூதை, குட முழக்கம் என்னும் பல பெயர்களால் அழைக்கப்படும். இவ் வாத்தியத்தின் ஐந்து முகங்களும் சத்தியோ ஜாதம், ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம் என்னும் ஐந்து முகங்களைக் குறிப்பிடுகின்றன என்பர். இவ்வாத்தியத்தை பாணாசுரன் என்பவன் தனது ஆயிரம் கைகளினால் வாசித்ததாக ஓர் ஐதீகம் உள்ளது.

இவ்வாத்தியம் கோயில்களில் கிரியைகளின்போது வாசிக்கப்பட்டதாகும். இன்று இவ்வாத்தியத்தினை வாசிப்போர் இன்மையால் அருகிவிட்டது. திருவாரூர்க் கோயிலிலும் திருத்துறைப்பூண்டி கோயிலிலும் இதனை மரபாக வாசிக்கக் கூடியவர்கள் வாசித்து வருகின்றனர். அருணகிரிநாதர் தாம் பாடியருளிய திருவகுப்பு என்னும் நூலின் பூத வேதாள வகுப்பில் இந்த இசைக்கருவியினைக் குடபஞ்சமுகி எனக் குறிப்பிடுகின்றார்.

*"காரென முழங்கு குரலேறுதுடி சந்த்ரவளை*
*வீரமுரசந் திமில் தடாரி குட பஞ்சமுக"*

இவ்வாத்தியத்தினின்றும் எழுப்பப்படும் ஐந்து முகத்தின் ஒலியும் வேறுபட்டவையாகும். இதனால் இதற்குப் பஞ்ச மகா சப்தம் என்னும் பெயரும் உண்டு. பஞ்சமுக வாத்தியத்தின் அமைப்பினைச் சிற்பங்களிலும் காட்டியிருக்கின்றார்கள். திருப்புன் கூரிலுள்ள நடராசர் வெண்கலச் சிலையிலும் தில்லைச் சித்திரசபைக் கல் தேரிலும் இவ்விசைக் கருவியின் அமைப்பினைக் காணலாம். (தே.ஹ.)

# பஞ்சராத்திரம்

பஞ்சராத்திரம் எனில் ஐந்து இரவுகள் எனப் பொருள்படும். இது பாசமகா கவியினால் எழுதப்பட்டது. பாசன் பதின்மூன்று நாடகங்களை எழுதியுள்ளார். இந்நாடகங்களுக்குரிய பொருளை இராமாயணம், மகாபாரதம், பிருகத்கதை ஆகிய இலக்கியங்களில் இருந்தே எடுத்துள்ளார். இவர் கி.மு. 3 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர்.

பஞ்சராத்திரம் மூன்று அங்கங்களைக் கொண்டது. விராட நகரத்திலே பஞ்சபாண்டவர் கரந்துறைந்த காலத்தில் கடைசி ஐந்து நாளிரவில் நடந்த சம்பவங்களைப் பொருளாகக் கொண்ட நாடகம் இது. இது கௌரவர் விராட நாட்டின் மீது போர் தொடுத்தலும் பீமனும் அருச்சுனனும் போரில் ஈடுபடுதலும் விராடன் மகனை அபிமன்யு மணத்தலுமாகிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகின்றது.

மகாபாரதக் கதைப்பகுதியை பஞ்சாத்திரம் என்ற நாடகத்திற்குப் பொருளாக எடுத்தாண்ட ஆசிரியர் பல இடங்களில் நாடக அமைதிக்காக மாற்றியும் அமைத்துள்ளார். துரோணாச்சாரியார் துரியோதனன் சார்பில் ஒரு பெரிய வேள்வி செய்கிறார் ஈற்றில் அதற்கு தட்சணையாக இராச்சியத்தின் பாதியைப் பெற்று அதனை பாண்டவருக்குக் கொடுக்க விரும்புகிறார். அபிமன்யு பாண்டவர் கரந்துறைவதை அறியாமல் விராடனுக்கு எதிராகச் சண்டை செய்து ஈற்றில் பீமனாற் சிறைப்படுத்தப்படுகின்றான். ஆனால் உண்மையை உணர்ந்ததும் அவனுக்கும் விராடன் மகளான உத்தரைக்கும் திருமணம் நிறைவேறுகிறது. பஞ்சராத்திரம் சமவஹார நாடக வகைச் சார்ந்தது. (இ. ச.)

# பஞ்சவரதர் திருத்தலம்

சென்னையினின்றும் ஏறக்குறைய எண்பது கிலோ மீ. தொலைவிலும், காஞ்சிபுரத்தினின்றும் இருபது கிலோ மீ. தொலைவிலும் உத்திரமேரூர் என்ற தலம் உள்ளது. காஞ்சிபுரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பகோணம் போன்று கோயில்களின் நகரம் என்று சொல்லும்படி பல கோயில்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வரலாற்றுப் புகழ்ப் பெற்ற குடவோலைக் கல் வெட்டினை உடைய வைகுந்தப் பெருமாள் கோயில், அருணகிரிநாதரால் பாடல் பெற்ற முருகப் பெருமானது ஆரிய திருவுருவினை மூலவராகக் கொண்ட சுப்ரமணிய சுவாமி கோயில் ஆகியவையன்றி சிறப்பு மிக்க சுந்தரவரதப் பெருமாள் கோயிலும் இங்கு உள்ளது.

ஒன்றின் மேல் ஒன்றாக மூன்று தளங்களைக் கொண்ட அமைப்பினை உடையது இந்தக் கோயில். கீழ்த்தளத்தில் கிழக்கு நோக்கி மலர் மகள் மண் மகளுடன் சுந்தர வரதப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் உள்ளான். இவனது நான்கு கைகளில் பின் இருக்கைகளில் சங்கும் சக்கரமும் இருக்க, முன் இருகைகள் அபய மற்றும் ஊரு முத்திரைகளில் காணப்படுகின்றன. இவன் பஞ்சபாண்டவரில் பீமனால் வணங்கப்பட்டவனாக் கருதப் படுகிறான். முகமண்டபத்தில் காளிங்க நடனக் கண்ணன், ஆஞ்சநேயர், இலட்சுமணன், சீதையுடன் இராமன், சக்கரத்தாழ்வார், தேவியுடன் கூடிய புருஷாமிருகம் ஆகியவற்றின் திருவீதி உலாநாயகர் வடிவங்கள் (உற்சவ வடிவங்கள்) உள்ளன. தெற்கு நோக்கி அருச்சுனனால் தொழப்பட்ட அர்ச்சுத வரதன் தன் இரு துணைவியருடன் நின்ற திருக்கோலத்தில் காணப்படுகிறான். இவனுடன் கஜலட்சுமி உள்ளாள். மேற்கு நோக்கி நகுலனால் பூசிக்கப்பட்ட அனுருத்திர வரதன் நின்ற திருக்கோலத்தில் தன் இரு துணைவியருடன் உள்ளான். அவனுடன் ரதியும் மன்மதனும் காணப்படுகின்றனர். வடக்கு நோக்கிச் சகாதேவனால் வணங்கப் பட்ட கல்யாண வரதன் தன் இரு துணைவியருடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் உள்ளான். உத்குடி இருக்கையில் உட்கார்ந்துள்ள இவனது முன் வலக்கை பின்னால் ஊன்றிய நிலையிலும், முன் இடக்கை முழங்கால் மேல் நீட்டிய நிலையிலும் உள்ளான். இவனுடன் பிருகு முனிவரும் காணப்படுகிறார்.

கீழ்த்தளத்தில் தென்கோடியில் திரௌபதியால் தொழப்பெற்ற ஆனந்தவல்லித் தாயாரும், வடகோடியில் சூடிக் கொடுத்த நாச்சியாரும் காணப்படுகின்றனர். தாயாரின் வடிவங்கள் மட்டும் சிலா வடிவங்கள். எனவே இவற்றிற்கு மட்டும் அபிடேகம் செய்யப் படுகிறது. வரதர்களின் வடிவங்கள் தருவால் அதாவது மரத்தால் செய்யப் பெற்றவை. எனவே அவற்றிற்கு அபிடேகம் கிடையாது. இங்கு விசுவச்சேனர், நம்மாழ்வார், பெரியாழ்வார், மங்கை மன்னன் உடையார், வேதாந்த தேசிகர் ஆகியோரின் மூலவர் மற்றும் திருவீதி உலா நாயகர் வடிவங்கள் உள்ளன.

இரண்டாவது தளத்தில் கிழக்கு நோக்கி தர்மராசரால் வணங்கப் பெற்ற வைகுண்டவரதன் மண் மடந்தை, மலர் மடந்தை இருபாலும் சூழ வீற்றிருந்த திருக்கோலத்தில் காணப்படுகிறான். சுகாசனத்தில் அமர்ந்துள்ள இவனது முன் இடக்கை முழங்கால் மீது நீட்டிய நிலையில் உள்ளது. தெற்கு நோக்கி உள்ள கருவறையில் கைகள் அபய மற்றும் வரத முத்திரைகளில் உள்ள கண்ணனும், அவனுக்கு எதிரில் கூப்பிய கைகளைக் கொண்ட அர்ச்சுனனும் காணப்படுகின்றனர். மேற்கு நோக்கி யோக நரசிம்மர் இருகால்களும் குத்திட்ட நிலையில் உட்கார்ந்து உள்ளான். இவனது பின் இரு கைகளில் சங்கும் சக்கரமும் இருக்க, முன் இருகைகள் முழங்கால்கள் நீட்டியப்படி உள்ளன. வடக்கு நோக்கி சுகாசனத்தில் உட்கார்ந்துள்ள பூவராகர் காணப்படுகிறார். இவரது மடியில் மண் மகள் அமைக்கப் பட்டுள்ளாள். இவரது பின் இருக்கைகளில் சங்கும் சக்கரமும் இருக்க, முன் வலக்கை அன்னையின் கால்களைப் பிடித்தப்படியும், முன் இடக்கை அவளை அணைத்தப்படியும் உள்ளன. இரு கைகளையும் கூப்பியபடி உள்ள மண் மடந்தை தன் கால்களை நீட்டியபடிக் காணப்படுகிறாள்.

மேல் தளத்தில் சயனத் திருக்கோலத்தில் அரங்க நாதன் உள்ளான். இவனது வலக்கை மார்கண்டேயனுக்கு முக்தி அளிக்கும் நிலையிலும், இடக்கை நீட்டிய படியும் அமைக்கப் பட்டுள்ளன. இவனது நாபிக்கமலத்தில் பிரமாவும், காலடியில் தாமரைப் பூவும் மதுகைடபரும் காணப்படுகின்றனர். வடக்கு நோக்கி நான்கு முகங்களுடன் பிரமா தனியாகவும், மார்க் கண்டேயருக்கு எதிரில் மண் மடந்தையும் உள்ளனர்.

அதிட்டானம் கருங்கற்களாலும், அதற்கு மேல் உள்ள பகுதி செங்கல்லால் கட்டப் பெற்று, சுண்ணாம்பு பூசப்பட்டுள்ளதால், இந்தக் கோயில் கலப்புக் கோயில் (மிஸ்ரா கோயில்) என்ற வகையைச் சார்ந்தது. இது துலாபாரத் தளி என்றும் அக்காலத்தில் அழைக்கப்பெற்றது. இதினின்றும் இங்குள்ள இறைவனுக்கு துலாபாரத்தில் காணிக்கை அளிப்பது சிறப்பாகக் கருதப்பட்டு பெரும் அளவில் நடைபெற்று இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. கேரள மாநிலத்தைச் சார்ந்த குருவாயூர் கிருஷ்ணன் கோயிலில் இரு நாட்களில் துலாபாரக் காணிக்கை சிறப்பாக நடைபெற்று வருவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

கல்வெட்டுக்களில் இந்தக் கோயிலின் பெயர் 'ஸ்ரீ வெனி விஷ்னு கிருகம்' என்றும், இறைவனது திருப்பெயர் 'ஸ்ரீ கோபால் வெள்ளை மூர்த்தி பெருமாள் அடிகள் என்றும் குறிக்கப்பட்டுள்ளன. கி.பி.786 முதல் 836 வரை ஆட்சி புரிந்த பல்லவ மன்னன் நந்திவர்மனின் பத்தாவது ஆட்சி ஆண்டு கல்வெட்டு இங்கு காணப்படுகிறது. இது அவன் காலத்தில் கட்டப்பெற்றதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. முதல் பராந்தக சோழன் கல்வெட்டில் இந்தக் கோயிலின் பெயர் '*துலாபார ஸ்ரீ கோயில்*' என்றுள்ளது. மூன்றாம் குலோத்துங்க சோழனின் 38ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டினின்றும் கோபால் தேவரடியான் ஆயிரத்தி இருநூற்றுவ மாணிக்கம் என்பவன் வெளிமதில், அபிடேக மண்டபம் ஆகியவற்றைக் கட்டியதாக தெரிகிறது. அதே கல்வெட்டில் இந்தக் கோயிலின் பெயர் "*இராஜந்திர சோழ விண்ணகரம்*" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பதினெட்டு நாட்டின் வைணவர்களை வைணவக் கோயில்களுக்குக் காப்பாளர்களாக நியமித்ததை மற்றொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டுக் கூறுகிறது. இறையன்பர்களிடமிருந்து நிபந்தங்களைப் பெறவும். அவற்றை நிர்வகிப்பது பற்றியும் இந்தக் குழுவின் அனுமதி பெற வேண்டும்.

நின்ற திருக்கோலம். வீற்றிருந்த திருக்கோலம். மற்றும் சயனத் திருக்கோலம் என்ற திருமாலின் மூன்று திருக்கோலங்களையும் உடைய மூன்று தலங்களுடன் இதுவும் ஒன்று. ஏனையவை திருக்கோட்டியூர் சௌமிய நாராயணன் கோயில். மதுரை கூடல் அழகர் கோயிலாம்:- பஞ்ச பாண்டவர்களால் பூசிக்கப் பெற்றதாகப் போற்றப்படும் சுந்தர வரதர், அச்சுத வரதர், அனுருத்திர வரதர், கல்யாண வரதர் மற்றும் வைகுண்ட வரதர் ஆகிய ஐந்து வரதர்களை மூலவர்களாக உடைமையால் இது *'பஞ்ச வரதர் திருத்தலம்'* என புகழப் பெறுகிறது. பஞ்ச வரதர்களேயன்றிக் கண்ணன் யோக நரசிம்மர், பூவராகர் மற்றும் அரங்கநாதன் என மேலும் நால்வர் மூலவர்களாக இங்கு உள்ளனர். மூன்று தலங்களைக் கொண்ட காஞ்சிபுரம் வைகுந்தப் பெருமாள் கோயில், மன்னார் கோயில் வேதநாராயணன் கோயில் போலன்றி இங்கு திருமாலின் ஒன்பது மூலவர் வடிவங்கள் உள்ளமை இதன் தனிச்சிறப்பாகும். எனவே இது நவபெருமாள் கோயில்' எனவும் போற்றி வணங்கப்படுகிறது.

பல்லவர் காலத்தில் கட்டப்பெற்ற இந்தக் கோயிலின் அமைப்பு வேறு எங்கும் காண இயலாத ஒன்றாகும். இதை முன்னோடியாகக் கொண்டு அண்மையில் சென்னையில் அதிஷ்டலட்சுமி கோயில் கட்டப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இரா. மா.)

# பஞ்ச வில்வங்கள்

வில்வம், கிளுவை, மாவிலங்கை, விளா, நொச்சி அல்லது நாயுருவி என்பன பஞ்ச வில்வங்களாகும்.

சிவ பூஜைக்கு மிகச்சிறப்பானது வில்வம். மகாலட்சுமி வாசம் செய்வது வில்வத்தில். மலர்களைப் போலவே பத்திரங்கள் (இலைகள்) பூஜைக்குப் பயன்படுவனவாகும். அதிலும் வில்வ பத்திரம் மிக மிக உயர்ந்ததாகும். வில்வம் வேரிலிருந்து, பட்டை, இலை, காய், பழம் எல்லாமே உயர்வு மிக்கனவே. மற்றைய பத்திரங்களுக்கு இல்லாத சிறப்பு வில்வத்திற்கு உண்டு. வில்வம் நிர்மால்ய தோஷம் இல்லாததாகும்.

ஒரு முறை அர்ச்சனை செய்து களைந்த மலரோ பத்திரமோ மறுமுறை பூஜை செய்வதற்கு ஏற்றதல்ல. நிர்மால்யம் என ஒதுக்கப்படும். ஆனால் வில்வத்தை ஒருமுறை பூஜை செய்துவிட்டு நீரில் நனைத்து மீண்டும் பூஜைக்குப் பயன்படுத்தலாம். ஆறுமாதங்கள் வில்வத்தைப்பத்திரப்படுத்தி வைத்து பூஜை செய்யலாம். இது வில்வ பத்திரத்திற்குரிய சிறப்பு. வில்வம் மருத்துவப் பயன்மிக்கது. வில்வத்தை ஒத்த உயர்ந்த சிறப்புக் கொண்டவை பஞ்ச வில்வங்கள். பஞ்ச வில்வங்கள் மகாபாதகங்களையும் தீர்க்கும் சக்தி மிக்கவை. (ஹே.கு.)

# பஞ்சாக்கரமாலை

பஞ்சாக்கரம் என்பது ஆதிமந்திரமாகிய திருவைந்தெழுத்தையே குறிக்கும். இத்திருவைந்தெழுத்தின் வகையையும் சிவலிங்கத் திருமேனியில் இவ்வெழுத்து நிற்கும் முறையையும் சக்திகளை இவை அதிட்டித்து நிற்கும் முறையையும் இதனை இடையறாது எண்ணுவார்க்குச் சிவாலயம் கிடைக்கும் முறையையும் அவ்வனுபவத்தையும் தொடர்ச்சியாக இந்நூல் கூறுதலின் பஞ்சாக்கர மாலை எனப் பெயர் பெற்றது.

இந்நூல் காப்பு முதலாக அறுபது வெண்பாக்கள் உடையது. தூலபஞ்சாக்கரம், சூக்குமபஞ்சாக்கரம், சீவன் முத்தர், ஞானபூசைக் கிரமம் என்னும் மூன்று பிரிவினையுடையது. கடவுள் வாழ்த்தில் மூத்த பிள்ளையாருக்கு உரிய வணக்கம் அமைந்துள்ளது. மூத்த பிள்ளையாரை வணங்கின் இயமன் அஞ்சுவான். திருவைந்தெழுத்து மக்களுக்கு அரணாக அமையும் எனக் கூறுகின்றது.

தூலபஞ்சாக்கரம் என்பது நமசிவாய என்பதாம். சூக்கும பஞ்சாக்கரம் சிவாயநம என்பதாம். இத்திருவைந்தெழுத்தை இடையறாது எண்ணி அதன் வழி மல நீக்கம் பெற்றுச் சிவானுபவம் பெற்றவர்கள் சீவன் முத்தர் எனப்படுவர். அவர்கள் அந்நிலைக்கு வருமளவும் திருவைந்தெழுத்தையே பற்றுக்கோடாக கொள்வர். இதனை அருளியவர் கண்ணுடைய வள்ளல் என்பார். இவர் சீர்காழிப்பதியினர் தம் முன்னோராய திருஞான சம்மந்தர் மீது அளவிலாப் பற்றுடையவர். இவர் காலம் கி.பி 14ஆம் நூற்றாண்டின் இறுதியும் 15ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும். (தே.ஹ.)

# பஞ்சாங்க நமஸ்காரம்

ஆலய வழிபாட்டில் நமஸ்காரங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. ஏகாங்க நமஸ்காரம், திரியாங்க நமஸ்காரம், பஞ்சாங்க நமஸ்காரம், அட்டாங்க நமஸ்காரம், என நமஸ்காரங்கள் நான்கு வகைப்படும். இதில் பஞ்சாங்க நமஸ்காரம் என்பது பஞ்ச + அங்கம் அதாவது, தலை, கையிரண்டு, முழந்தாள் இரண்டும் ஆகிய ஐந்து அங்கங்கள் நிலத்தில் படும்படி வணங்குதலே பஞ்சாங்க நமஸ்காரம் ஆகும். இது பெண்கள் செய்யும் நமஸ்காரம் ஆகும்.

நமஸ்காரம் செய்யும் திசைபற்றியும் ஆகமங்கள் கூறுகின்றன. அதாவது கிழக்கு, மேற்கு நோக்கிய சந்நிதிகளில் வடக்கே தலைவைத்து வணங்க வேண்டும். தெற்கு, வடக்கு நோக்கிய சந்நிதிகளில் கிழக்கே தலைவைத்து, வீழ்ந்து வணங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஆலயத்தில் கொடித் தம்பத்தின் முன்னே விழுந்து வணங்க வேண்டும். பெண்களின் மார்பு நிலத்தில் படக்கூடாது என்பதனையே பஞ்சாங்க நமஸ்காரம் பெண்களுக்கு உரியதாக சொல்லப்பட்டுள்ளமைக்கான காரணம் எனக் கொள்ளலாம்.

(ஹே.கு.)

## பஞ்சாங்கம்

பஞ்ச+அங்கம், பஞ்சாங்கம் ஆகும். அதாவது ஐந்து அங்கங்களைக் கொண்டது. வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்பவையே ஐந்து அங்கங்களாகும். சோதிடக் கலையில் பஞ்சாங்கம் முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்துக்கள் எக்காரியத்தை ஆரம்பிக்கும் முன்பும் பஞ்சாங்கம் பார்த்து நல்ல நேரம் குறித்து ஆரம்பிக்கின்றனர். சித்திரை வருட பிறப்பன்று பஞ்சாங்கம் படிப்பதும் அவ்வருட பலனை அறிவதும் ஒரு முக்கிய நிகழ்வாக இருந்து வருகின்றது.

பஞ்சாங்கத்தின் முதலங்கமாக விளங்குவது வாரம் ஆகும். நவக்கிரகங்களில் ராகு, கேதுவை தவிர மற்ற ஏழு கிரகங்களுக்கும் ஒவ்வொரு நாளும் ஆட்சி முகூர்த்தங்கள் மாறி மாறி வருகின்றன. சூரியோதய காலத்தில் யாருடைய ஆட்சி வருகிறதோ அந்தக் கிரகத்தின் பெயர் அவ்வாரத்துக்கு கொடுக்கப்படுகிறது. இதன் படியே வாரங்கள் ஏழும் கணிக்கப்பட்டுள்ளது. அவையாவன ஞாயிறு சூரியனை குறிக்கும் நாள்; இது பானுவாரம், ஆதிவாரம் எனவும் அழைக்கப்படும். திங்கள் சந்திரனைக் குறிக்கும் நாள்; சோமவாரம், இந்துவாரம் எனப்படும். செவ்வாய் செவ்வாயைக் குறிக்கும். இது மங்கள வாரம், பௌமவாரம் என்றழைக்கப்படும். புதன் புதனைக் குறிக்கும் இது சௌமிய வாரம் புதவாரம் எனப்படும். வியாழன் குருவைக் குறிப்பதால் குருவாரம் எனவும் வெள்ளி சுக்கிரனைக் குறிப்பதால் சுக்கிர வாரம், பார்க்கவ வாரம் எனவும் சனி சனியைக் குறித்து சனி வாரம், ஸ்திரவாரம் எனவும் அழைக்கப்படுகின்றது.

**திதி:** திதி எனப்படுவது சந்திரன் ஆகாயத்தில் செல்லும் தூரத்திலிருந்து சூரியன் செல்லும் தூரத்தை கழித்து வரும் மிகுதி திதியாகும். அதாவது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரமாக இது விளங்குகிறது. திதிகள் பதினைந்து ஆகும். அவையாவன.

| | | |
|---|---|---|
| அமாவாசை | பிரதமை | தசமி |
| துதியை | ஏகாதசி | திரிதியை |
| அஷ்டமி | திரியோதசி | சதுர்த்தி |
| நவமி | சதுத்தசி | பஞ்சமி |
| சஷ்டி | பூர்ணிமை | ஸப்தமி |

இப்பதினைந்து திதிகளும் வளர்பிறையில் பதினைந்து தேய்பிறையில் பதினைந்துமாக வரும். இதில் அமாவாசைக்கு அடுத்து வரும் பதினைந்து திதிகளும் சுக்கிலபட்சம் அல்லது பூர்வபட்சம் அல்லது வளர்பிறை என அழைக்கப்படும். பௌர்ணமிக்கு பிறகு வரும் திதிகள் பதினைந்து நாட்கள் கிருஷ்ண பட்சம், அபரபட்சம், தேய்பிறை என அழைக்கப்படும். இவ்வாறாக பிரதமை முதல் பௌர்ணமி வரையும் திதிகள் முப்பதாக விளங்குகின்றன. அத்துடன் சூரியனும், சந்திரனும் ஒன்று சேரும் திதி அமாவாசையாகும்.

திதிகள் ஒவ்வொன்றிலும் செய்யக்கூடிய காரியங்கள் பற்றி சோதிட நூல்கள் கூறியுள்ளன.

ஒரு மாதத்தில் இரண்டு அமாவாசை திதிகள் அல்லது இரண்டு பௌர்ணமி திதிகள் வந்தால் அது மல மாதம் எனப்படும். இம்மாதத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் செய்ய கூடாது என்பது விதி.

**நட்சத்திரம் :** பஞ்சாங்கத்தில் நட்சத்திரம் ஒரு அங்கம் ஆகும். ஆகாயத்தில் கிரகங்களைப் போல் ஒளி விட்டுப் பிரகாசிப்பவை நட்சத்திரங்கள் இவை பலவகை நிறங்களையும் உருவங்களை யும் கொண்டு விளங்குபவை. நட்சத்திரங்களும் சூரியனை சுற்றி வருகின்றன. எந்த தினத்தில் எந்த நட்சத்திரத்திற்குச் சமீபமாக சந்திரன் இருக்கிறானோ அந்த தினத்தில் அந்த நட்சத்திரம் சுட்டப்படும். இவ்வாறாக இருபத்தேழு (27) நட்சத்திரங்கள் கொள்ளப்படுகின்றன. ஒரு நட்சத்திரம் நான்கு பாதங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. பாதத்தையும் நட்சத்திரத்தையும் வைத்தே ஒவ்வொரு ராசியும் அமையும். நட்சத்திரங்கள் இருபத்தேழும் மேல்வருமாறு.

| | | |
|---|---|---|
| அச்சுவினி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கார்த்திகை | உத்தரம் | உத்தராடம் |
| ரோகிணி | அத்தம் | திருவோணம் |
| மிருகசீரிடம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சுவாதி | சதயம் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுஷம் | உத்தரட்டாதி |
| ஆயிலியம் | கேட்டை | ரேவதி |

**யோகம் :** யோகம் என்பது தினமும் சூரியன் செல்லும் கதியுடன் சந்திரன் செல்லும் கதியைக் கூட்டி வந்த தொகையாகும். யோகங்கள் இருபத்தேழு. அவையாவன.

| | | |
|---|---|---|
| விஷ்கம்பம் | அரிஷணம் | சௌபாக்கியம் |
| வியதீபாதம் | சுகர்மம் | சிவம் |
| கண்டம் | சுபம் | வியாகாதம் |
| மாகேந்திரம் | சித்தி | ஆயுஸ்மான் |
| பரிகம் | அதிகண்டம் | சாத்தியம் |
| சூலம் | பிராமியம் | துருவம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பிரீதி | வச்சிரம் | சோபனம் |
| வரியான் | திருதி | சித்தம் |
| விருத்தி | சுப்பிரம் | வைதிருதி |

இவை ஒவ்வொன்றும் தனித் தன்மைகளையும் குணங்களையும் பெற்று விளங்குகின்றன. சுபகாரியங்களை செய்யும் போது அவற்றுக்குரிய சுபயோகங்களைப் பார்த்துச் செய்ய வேண்டும். இவற்றை விட ஒவ்வொரு பஞ்சாங்கத்திலும் அமிர்தசித்த யோகம், சித்தயோகம், மரணயோகம், பிரபலாரிஷ்ட யோகம் எனும் நான்கு யோகங்களும் காணப்படும். அவை பதினொன்று

| | | |
|---|---|---|
| பவம் | கரசம் | தைதுலம் |
| சகுனி | பத்திரை | கிம்ஸ்துக்கினம் |
| நாகவம் | கௌலவம் | பாலவம் |
| வணிசம் | சதுஷ்பாதம் | |

என்பவை கரணங்களாகும் **"கரணாக் காரிய சித்தி"** என்பதற்கேற்ப கரணத்தை அறிந்து அதற்கேற்றவாறு காரியங்களை செய்தால் நன்மை அடையலாம்.

இவ்வாறாக ஐந்து அங்கங்களையும் உடைய பஞ்சாங்கம் மிகப் பழங்காலத்திலிருந்தே முன்னோர்களின் நம்பிக்கைக்குரியதாக விளங்குகிறது. இதனூடாக ஆண்டொன்றில் நடைபெறும் சகல விரதங்கள், விழாக்கள், பண்டிகைகள், குருபூசைகள் போன்ற அனைத்து அம்சங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது. திருமணம் செய்வதற்கான பொருத்தங்கள், சுபமுகூர்த்தங்கள் என பல்வேறு இந்துசமயம் சார்ந்த அம்சங்களை பஞ்சாங்கம் மூலம் கணித்து அதன்படி நடந்து, நன்மைகளை அடைய முடிகிறது எனவே இந்துக்களின் வாழ்வில் பஞ்சாங்கம் சிறப்பிடம் பெறுகிறது.

(ஹே.கு.)

## பஞ்சாட்சரம் (பஞ்சாக்கரம்)

பஞ்ச+அட்ஷரம் =பஞ்சாட்ஷரம் ஆகும். அதாவது ஐந்து அட்சரங்கள் என வடமொழியில் அமைந்துள்ளது. இதனைத் தமிழில் **திருவைந்தெழுத்து** என்பர். பஞ்சாட்ஷரம் ஆன்மாவுக்கு புத்தி, முத்தியைக் கொடுப்பதனால் **மந்திரம்** என அழைக்கப்படுகின்றது. மந்திரம் - நினைப்பவரைக் காப்பது என்று பொருள்படும். நினைப்பவரை காத்தல் இறைவனின் திருவருள் என்ற வகையில் மந்திரமும் இறைவனாகவே கொள்ளப்பெறும்.

பஞ்சாக்கரம் என்பது தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம் என இருவகைப்படும். **'ந'** கரம் முதலாக அமையும் 'நம சிவாய' எனும் மந்திரமே தூல பஞ்சாக்கரம் ஆகும். இதுவே திருமுறைகளில் பெரும்பாலும் குறிப்பிடப்பட்டுள்ளது. நமச் சிவாய என்று மெய்யெழுத்து மிகுத்துச் சொல்லப்பட்டாலும், அம்மெய்யெழுத்து எண்ணப்படாமல் எழுத்துக்கள் ஐந்தாகவே கொள்ளப்படுகின்றது.

உ+ம் : *"சொற்றுணை வேதியன் சோதி வானவன்*
*பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்*
*கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்*
*நற்றுணை யாவது நமச்சி வாயவே"*

(04:11:01)

**'சி'** கரம் முதலாக அமையும் **'சிவாயநம'** என்னும் மந்திரம் சூக்கும பஞ்சாக்கரம் எனப்படும். இது திருமுறைகளில் குறைந்தளவிலேயே குறிக்கப் பெற்றுள்ளமைக் காணலாம்.

உ+ம் : கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்

*"உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றே னுனதருளால்*
*திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்*
*தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரனே"* (04:94:06)

சூக்கும பஞ்சாக்கரம் **'சிவா'**, **'ய'**, **'நம'** என்னும் மூன்று கூறுகளைக் கொண்டு அமைந்துள்ளது. இதில் முதற்கூறான **'சிவா'** என்பது பதியையும், **'ய'** என்பது பசுவையும், **'நம'** என்பது பாசத்தையும் குறிக்கின்றன. **'சிவா'** என்பதில் சிகரம் சிவனையும், வகாரம் சிவனின் அருட்சக்தியையும் குறிக்கும். கடைக்கூறான **'நம'** இலுள்ள நகாரம் திரோதான சக்தியையும், மகாரம் ஆணவத்தையும் குறிக்கின்றது. இடையிலுள்ள யகாரம் என்பது ஆன்மாவாகும். இது பதி, பாசம் ஆகிய இரண்டின் பக்கமும் சென்று சேர்ந்து நிற்கும் தன்மை கொண்டதாகும்.

பஞ்சாக்கரத்தை நகாரம் முதலாகச் சொல்லும் போது அது ஒரு தொடர் மொழியாக நின்று **சிவனுக்கு வணக்கம்** என்னும் பொதுப் பொருளைத் தருதலால் தூல பஞ்சாக்கரம் என்று அழைக்கப்படுகின்றது. சிகாரம் முதலாகச் சொல்லும் போது ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு பொருளைக் குறிப்பதுடன், ஆன்மா பாசங்களினின்று நீங்கித் திருவருள் வழியாகச் சிவத்தை அடைதல் வேண்டும் என்னும் சிறப்பு பொருளைத் தருதலால் அது சூக்கும பஞ்சாக்கரம் எனப்படுகிறது.

தூல பஞ்சாக்கரம் சமய தீக்கையிலும், சூக்கும பஞ்சாக்கரம் விசேட தீக்கையிலும் உபதேசிக்கப்படும். எனவே, சரியை நெறியில் நிற்போர் **நமச்சிவாய** என்ற மந்திரத்தையும் கிரியை, யோகநெறியில் நிற்போர் **சிவாயநம** என்ற மந்திரத்தையும் உச்சரித்தல் வேண்டும்.

உலகப் பற்றில்லாது ஞானநெறியில் நிற்போர்க்கு உரியதாக முத்தி பஞ்சாக்கரம் விளங்குகின்றது. இதில் நாகாரம், மகாரம் என்ற இரு பாச எழுத்துக்களும் நீக்கப்பட்டு **சிவாய** என்ற மூன்றெழுத்துக்களைக் கொண்டமைந்தது **முத்தி பஞ்சாக்கரம்** ஆகும். இதனை அதி சூக்கும பஞ்சாக்கரம் என்றும் கூறுவர். நிருவான தீக்கை பெற்றவர்களே இதனை உச்சரிப்பதற்கு உரித்தானவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாக்கரத்தை மூன்று வகையாக உச்சரிக்கலாம். அவை மானதம், மந்தம், உரை என்பனவாகும். மானதம் என்பது மனதினாலே உச்சரித்தல் ஆகும். அதாவது ஒலி எழுப்பாமல் உச்சரித்தல். மந்தம் என்பது தன் செவிக்கு மட்டும் கேட்கத் தக்கதாக உச்சரித்தல் ஆகும். அதாவது, சிறிய ஒலியெழுப்பி உச்சரித்தல். இதனை உபாஞ்சு என்றுங் கூறுவர். உரை என்பது பிறர் செவிக்குக் கேட்கத்தக்கதாக உச்சரித்தலாகும். இதனை வாசகம் என்றுங் கூறுவர். இவற்றில் மானத முறையே சிறந்ததாகும். மானத முறையில் கோடி மடங்கு பலனும், மந்த முறையில் பதினாயிரம் மடங்கு பலனும், உரையால் நூறு மடங்கு பலனும் கிடைக்கும். (ந. ச.)

## பஞ்சாமிர்தம்

பஞ்சாமிர்தம் அபிஷேகப் பொருட்களில் ஒன்று. பஞ்சாமிர்தமானது ரசபஞ்சாமிர்தமென்றும், பல பஞ்சாமிர்தம் என்றும் இரு வகைப்படும். பால், தயிர், நெய், தேன், சக்கரை என்பனவற்றை விதிப்படி சேர்ப்பின் இரச பஞ்சாமிர்தம் எனப்படும். பால் தயிர், நெய், தேன், சர்க்கரை, கருப்பஞ்சாறு என்பவற்றால் பஞ்சாமிர்தம் செய்து பஞ்சகவ்வியம் போற் பூசிக்க வேண்டும். இதனால் பஞ்சபாதகங்கள் நாசமுண்டாம் என மகுடாகமம் கூறுகின்றது. தேன், பால், தயிர், நெய், சர்க்கரை என்பனவற்றோடு விதிப்படி அமைக்கப்பட்ட வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் என்பவைகளது தொகுதி பல பஞ்சாமிர்தம் என்று சொல்லப்படும். வாழைப்பழம், பலாப்பழம், தேங்காய் துருவல், மாம்பழம், மாதுளம்பழம் என்பவற்றைச் சேர்ப்பது பல பஞ்சாமிர்தம் என்று சூட்சுமாகமம் கூறுகின்றது. பலாப்பழம், மாம்பழம், தேங்காய்த்துருவல், வாழைப்பழம், கருப்பஞ்சாறு என்னும் ஐந்து திரவியங்களைச் சேர்த்துக் கொண்டு அபிஷேகிப்பதால் மகாபாதக நாசமுண்டாகுமென்று காரணாகமம் கூறுகின்றது.

எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம் சாறு, குளஞ்சிப்பழச்சாறு, தாமரத்தம்பழச்சாறு, மாதுளம்பழச்சாறு ஆகிய இவைகளை விதிப்படி கூட்டின் பஞ்சபலோதகம் எனப்படும். இவைகளைப் பத மந்திரமுச்சரித்து அபிஷேகிப்பர். அபிஷேகத்தில் ரசபஞ்சாமிர்தம் வெற்றியையும், பல பஞ்சாமிர்தம் செல்வத்தையும், பஞ்சபலோதகம் மந்திரசித்தியையும், பால் ஆயுள் விருத்தியையும், நெய் மோட்ஷத்தையும், சர்க்கரை சத்துருநாசத்தையும், தேன் சங்கீத வன்மையையும், கருப்பஞ்சாறு நித்திய சுகத்தையும், வாழைப்பழம் பயிர் விருத்தியையும், பலாப்பழம் லோகவசியத்தையும், மாம்பழம் சகல வெற்றியையும், தாமரத்தம்பழம் பூமி இலாபத்தையும், நாரத்தம்பழம் சற்புத்தியையும், எலுமிச்சம் பழம் மித்யு நிவாரணத்தையும், தேங்காய்த்துருவலும் அன்னமும் அரசுரிமையையும், இளநீர் சற்புத்திரப் பேற்றையும் தரும் என அபிஷேகப் பலன் பற்றி வீராகமம் கூறுகின்றது.

பஞ்சாமிர்தம், அபிசேகப் பொருட்களில் ஒன்று. பஞ்சாமிர்த அபிசேகம் முருகனுக்கு மிகவும் பிடித்ததாக கூறப்படுகிறது. இதனை உட்கொள்ளுவதால் உடலில் உள்ள வியாதிகள் அகலுவதுடன் தென்பும் பலமும் உண்டாகிறது. பழனி, பஞ்சாமிர்தத்திற்குப் பிரசித்தி பெற்றது. (ஹே.கு.)

## பஞ்சாயுதம்

பஞ்சாயுதம் என்றால் ஐந்து ஆயுதம் என்று பொருள்படும். இவை சங்கு, சக்கரம், வாள், சுதை, கோதண்டம் என்பனவாகும். குழந்தை பிறந்து ஐந்தாம் நாள் பாவக்கிரகங்களின் தோஷ நிவர்த்திக்காக பஞ்சாயுதம் குழந்தையின் அரைஞாணில் கட்டப்படுகிறது. இதனை பஞ்சாயுதரக்ஷை எனவும் அழைப்பர். கிராமப் புறங்களில் இது மிகவும் முக்கியமாக செய்யப்படுகிறது. பேய், பிசாசுகள் குழந்தையை அணுகாதபடி பஞ்சாயுதம் அணிவிக்கப்படுகிறது. ஒருவகையில் இது குழந்தைக்கு ஒரு காப்பாக அமைகிறது.

அரைஞாணில் கட்டப்பட்ட பஞ்சாயுதம் காலப்போக்கில் குழந்தையின் கழுத்தில் கறுப்பு நூலில் கோத்து அல்லது தங்கச் சங்கிலியில் கோத்து அணிவிக்கப்பட்டு வருகிறது. சங்கு, சக்கரம், சூலம், வில்லும் அம்பும், கத்தி ஆகிய ஐந்தும் அப் பஞ்சாயுதத்தில் காணப்படும். இதனை தங்கத்தாலோ ஐந்து உலோகங்கள் கலந்த பஞ்சலோகத்தினாலோ செய்து அணிவிப்பார்கள்.

திருமால் சங்கு, சக்கரம், வாள், கோதண்டம், கதை என்னும் ஐந்து ஆயுதங்களை ஏந்தி இருப்பதால் பஞ்சாயுதன் எனச் சிறப்பிக்கப்படுகின்றான். ஒரு வகையில் காத்தற் கடவுளாகிய விஷ்ணுவின் பஞ்சாயுதங்களே இவ்வாறு அமைக்கப் பெற்றன. குழந்தைகளை நோய் நொடியில் இருந்து காக்கும் பொருட்டே பண்டைக் காலத்திலிருந்து பஞ்சாயுத தாரணை வழக்கத்தில் இருந்து வருகிறது. (ஹே.கு.)

## பஞ்சாயதன பூஜை

உலகின் தொன்மையான சமயம் இந்து சமயம். இது பல கிளைப்பரப்புக்களைக் கொண்ட ஆலமரம் போன்றது. ஒரு மரத்தின் கிளைகள் ஒரே அமைப்பிலே அமைவது இல்லை. ஆனால் மூலவேரினின்றுதான் சக்தியைப் பெற்று உயிர் வாழ்கிறது. அதுபோல மூலவேராகிய இந்து சமயத்தினின்றும் எழுந்து பல்வேறுபட்ட கடவுட்கொள்கைகளைத் தன்னுட்கொண்டு அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம் என்று பல்வேறு தத்துவக் கொள்கைகளைப் பரப்பி வருகின்றது. உயர்ந்த கொள்கைகளையும் உயிர்த்துடிப்பான சிந்தனைகளையும் கொண்டது இச்சமயம். ஏனைய சமயங்கள் தனிமனிதனின் சுதந்திரச் சிந்தனைக்கு இடம்தராமல் அவற்றை உருவாக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்களின் கொள்கைகளையே தீவிரமாகப் பின்பற்றுமாறு வற்புறுத்தும் தன்மை கொண்டன. அரசர்கள் கூட மக்களை தமக்குச் சாதகமாக்கிச் சமயங்களை வளர்த்தனர்.

இந்து சமயத்திலும் விரும்பத்தகாத செயல்கள் பலவந்தமாக உட்புகுத்தப்பட்டன. வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டதும் கொள்ளாததுமான எழுபத்திரண்டு சமயங்கள் தோன்றின. தங்கள் தங்கள் சமயமே உயர்ந்ததென்று பூசலிட்டனர் சமயவாதிகள். மேலும் சைவத்தின் அகப்புறச் சமயமான பாசுபதர், காளாமுகர், காபாலிகர், மாவிரதர், வைதவ மதத்தினர் போன்றோர் கொடிய நரபலியை ஊக்குவித்தனர். அன்பே உருவாகிய இந்து சமயம் கயவர்களின் கைப்பட்டு உருக்குலைந்து நின்றது. இந்தத் தருணத்தில் ஆதிசங்கர பகவத் பாதரின் அவதாரம் நிகழ்ந்தது. பாரத நாடெங்கும் சென்று நிலைகெட்டிருந்த சமயங்களை ஒன்றாக்கினார். தெய்வ ஆராதனை பலவிதம், அவரவர் மனோ பாவத்திற்கு ஏற்ப ஆறு சமயங்களாக வகுத்தமைத்தார். பூசை முறையையும் ஒழுங்குபடுத்தி பஞ்சாயதன பூஜையையும் ஏற்படுத்தினார்.

ஆதித்யம், அம்பிகாம், விஷ்ணும், கணநாதம் மஹேஸ்வரம் (சூரியன், அம்பிகை, விஷ்ணு, பிள்ளையார் சிவன்) ஆகிய ஐம்பெருந் தெய்வங்களுக்கும் ஒரே நேரத்தில் ஒரே பீடத்தில் பூசை செய்யப்படுகின்றது. பூஜைசெய்யும் பக்தர், நிருதியிலே - (தென்மேற்கு) கணபதியையும் வாயுதிக்கில் (வடமேற்கு) சூரியனையும், ஈசானத்தில் (வடகிழக்கு) விஷ்ணுவையும் அக்னி திக்கில் (தென் கிழக்கு) சிவனையும் நடுவில் அம்பிகையையும் வைத்து பூஜை செய்வர். இந்த ஐந்தில் தமது உபாசனாமூர்த்தியை நடுவில் வைத்து மற்ற நான்கையும் நான்கு மூலைகளில் அமைத்துக் கொள்வதும் உண்டு. உபாசகரின் இஷ்ட தெய்வத்தின் பெயராக கணபதி பஞ்சாயதனம், சிவபஞ்சாயதனம், விஷ்ணு பஞ்சாயதனம், சூர்யபஞ்சாயதனம், தேவிபஞ்சாயதனம் என அழைக்கப்படுகின்றது.

பஞ்சாயதன பூஜையின் சிறப்பு அம்சம் அதில் விக்கிரகங்கள் கிடையாது. இயற்கையில் கிடைக்கும் ஐந்து வகை கற்களையே விசேஷ மூர்த்திகளாக அமைக்கின்றனர். நேபாளத்தில் கண்டகி நதியில் கிடைக்கும், சாளக்ராமத்தை விஷ்ணுவாகவும், அம்பிகை மூர்த்தமான ஸ்வர்ணரேகா சிவா, அதாவது தங்க ரேகை ஓடும் கல். இது ஆந்திரப் பிரதேசத்தில் கூடுக் பகுதியில் ஸ்வர்ணமுகி (பொன்முகலி) ஆற்றில் கிடைக்கின்றது. பிள்ளையாருக்கு சோணபத்ரம் என்ற சிவப்புக்கல் சோண பத்திரை ஆற்றில் கிடைக்கிறது. இந்த ஆறு பாட்னாவுக்கு இருபது கல் மேற்கே கங்கையில் கலக்கிறது. தஞ்சைக்கு அருகே உள்ள வல்லம் என்ற ஊரில் இயற்கையாக அமைந்துள்ள ஏரியில் கிடைக்கும் ஸ்படிகமே சூர்யனுக்கு அமைகின்றது. சிவனுக்கு நர்மதை நதியில் ஓங்கார குண்டத்தில் கிடைக்கும் பாணலிங்கத்தை அமைக்கின்றனர்.

பாரத தேசமே ஒரு பஞ்சாயதன வடிவம் கொண்டது என்பது ஆன்றோர் கருத்து. ஈஸ்வர மூர்த்தியான பாணம் பாரத தேச மத்தியில் ஓடுகின்ற நர்மதையிலே கிடைக்கின்றது. இது இதயஸ்தானமாகக் காணப்படுகின்றது. ஈசான திசையில் விஷ்ணு நேபாளம், சூரியன் தஞ்சாவூர் சோணபத்திரம் அமரகண்டம் நர்மதையின் தென்மேற்கில் சக்தி வடிவமான ஸ்வர்ணமுகி காஷ்மீரத்தில் கிடைக்கிறது. பஞ்சாயதன பூஜை பாரத தேசம் முழுவதையும் ஒரு பூஜை அறையுள் கொண்டுவருகின்றது.

(வ.வை.)

## பஞ்சேந்திரியம்

பஞ்சேந்திரியம் என்பது பஞ்ச(ஐந்து), இந்திரியம் (கருவிகள்) என்ற இரு சமஸ்கிருத சொற்கள் இணைந்து தோன்றியதாகும். சைவ சித்தாந்தத்தின் முப்பத்தாறு தத்துவங்களில் ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கினுள்ளும் இருவகையான இந்திரியங்கள் பற்றிக் கூறப்பெற்றுள்ளன. அவை ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள் என்பனவாம். ஆன்மாவின் ஞானசக்தியை ஐந்து ஞானேந்திரியங்களும், கிரியா சக்தியை ஐந்து கன்மேந்திரியங்களும் விளக்கும் வகையில் பத்து இந்திரியங்கள் அமைந்துள்ளன.

### ஞானேந்திரியம்

ஆன்மாவின் ஞானசக்தியை விளக்குவது ஞானேந்திரியம் ஆகும். அதாவது ஆன்மா புறத்தேயுள்ள புலன்களை அறிவதற்குக் கருவிகளாக ஞானேந்திரியங்கள் விளங்குகின்றன. அவையாவன செவி, மெய், கண், வாய், மூக்கு என்பனவாகும். இவை ஐந்தும் முறையே ஓசை, ஊறு, ஒளி, சுவை, மணம் என்னும் ஐம்புலன்களை அறிவதற்குக் கருவிகளாக விளங்குவதனால் ஞானேந்திரியங்கள் எனப்பட்டன. இவற்றை ஐம்பொறிகள், அறிகருவிகள் எனவும் கூறுவர்.

செவி - ஓசையையும், மெய் - ஊறையும் (ஸ்பரிசம்), கண் - ஒளியையும், வாய் - சுவையையும், மூக்கு - மணத்தையும் அறியும் தன்மையன. அவ்வாறு அறியும் ஆற்றலே ஞானேந்திரியம் என்று கொள்ளப்படுகின்றது. அதாவது, செவியிருந்தும் ஓசையை அறியமுடியாத தன்மையும் காணப்படுவதால் இந்திரியம் என்பது உறுப்பில் (செவி) தங்கி நின்று அறியும் ஆற்றலாக அமைகிறது. இவ் ஞானேந்திரியங்கள் யாவும் சாத்துவிகக் குணக்கூறான தைசத அகங்காரத்தில் இருந்து தோன்றுவனவாகும்.

### கன்மேந்திரியம்

ஆன்மாவின் கிரியா சக்தியை விளக்குவது கன்மேந்திரியம் ஆகும். அதாவது, ஆன்மா தொழில் புரிவதற்கு வேண்டிய கருவிகளாக கன்மேந்திரியங்கள் விளங்குகின்றன. அவையாவன வாக்கு (வாய்), பாதம் (கால்), பாணி (கை) பாயு (எருவாய்),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபத்தம் (கருவாய்) என ஐந்தாகும். இவை முறையே வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் ஆகிய தொழில்களைச் செய்யும் கருவிகளாகும். இவற்றை தொழிற்கருவிகள், செயற்கருவிகள் என்றுங் கூறுவர்.

வாய் - பேசுதலையும் (வசனம்), கால் - நடத்தலையும், கை - ஏற்றல் இடுதல் முதலிய அனைத்துச் செயல்களையும், எருவாய் - உடலின் கழிவுகளை அகற்றுதலையும், கருவாய் - இனப்பெருக்கத்தையும் செய்யும் தன்மை கொண்டன. அவ்வாறு செயற்பொறிகள் ஐந்தையும் செய்யும் ஆற்றல்கள் கன்மேந்திரியங் களாகக் கொள்ளப்படுகின்றன. இக் கன்மேந்திரியங்கள் ஐந்தும் இராட்சத குணக்கூறான வைகாரி அகங்காரத்தில் இருந்து தோன்றுவனவாகும். (ந. ச.)

# பஞ்சோபசாரம்

**இறைவனுக்குச் செய்யும் ஐவகை உபசாரம்,**

இறை உருவை மனத்துள் தியானம் செய்த பிறகு வழிபாடுகள் செய்ய வேண்டும் ஜபம், பாராயணம் என்பன மானஸயாகம் - அந்தர் யாகம் - தியானம் எனப்படும். உபசார வழிபாடு பாஹ்யபூஜை எனப்படும்.

இந்த உபசார வழிபாடு ஐந்து, பதினாறு, அறுபத்து நான்கு என விரியும். விரிந்த உபசார வழிபாடுகளான சதுஷ்ஷட்டி உபசாரம், ஷோடசோபசாரம் என்பனவற்றை சுருக்கி, எளிதாக்கி ஐந்து உபசாரங்களாக பஞ்சோபசாரமாகக் கொள்ளப்படுகின்றது. இந்த உபசாரத்திற்கு அமைந்தன பஞ்ச பூதங்களான பிருத்வீ, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பனவாகும். (நிலம்-நீர்-நெருப்பு-காற்று-ஆகாயம்)

இறைவனுக்கு அளிக்கும் சந்தனப் பூச்சு பிருத்வீ தத்துவத்தால் (நிலம்) தரும் உபசாரம்.

நீரின் தன்மை சுவை. உண்ணப்படும் உணவுப்பொருள் வாயிலுள்ள நீருடன் கலப்பதாலேயே சுவை உணரப்படுகின்றது. நீரை அமிர்தமாகக் கூறுவது வழக்கம். அமிர்த தத்துவமான ஜலத்தால் அளிக்கப்படும் உபசாரம் நைவேத்தியம்.

அக்னி தத்துவத்தால் தரும் உபசாரம் தீப உபசாரம். தீபங்கள் பலவகையாக உண்டு. அடுக்கு தீபம், அலங்கார தீபம், நட்சத்திரதீபம், நாகதீபம், பஞ்சமுக தீபம், வில்வ தீபம், புருஷாமிருக தீபம், கும்பதீபம், ஈசானாதி பஞ்ச தீபங்கள் ஒற்றைத்தீபம், கற்பூரதீபம், பஞ்சராத்திரிகை முதலியன வரிசைக் கிரமமாக காட்டப்பட வேண்டும்.

தூபம் வாயுதத்துவ உபசாரம். மலர்கள் ஆகாய தத்துவ உபசாரம் பூமலர இடைவெளி தேவைப்படுகின்றது. இடைவெளியின்றி மலர்ச்சியில்லை. மொட்டு பூவாக ஆகாசமாகிய இடைவெளி தேவைப்படுவதால் மலர்கள் ஆகாய தத்துவமாகக் கொள்ளப்படுகின்றது.

பஞ்ச பூத சக்தியும் ஐந்து அக்ஷரங்களில் அடங்குவன. ஒவ்வொரு பூத சக்திக்கும் ஒவ்வொரு அக்ஷரம் உரியது.

*லம் - பிருதிவீ பீஜாக்ஷரம்*
*வம் - அம்ருத (நீர்) பீஜாக்ஷரம் (நீர்)*
*தம் - அக்னி பீஜாக்ஷரம்*
*யம் - வாயு பீஜாக்ஷரம்*
*ஹம் - ஆகாச பீஜாக்ஷரம்*

கரநியாசத்தில் செய்தது போல இதனையும் மேற்கொள்ள வேண்டும். லம் எனக் கட்டைவிரலை ஆள்காட்டி விரலால் தடவுதல். ஹம் எனக் கட்டைவிரலால் ஆள்காட்டி விரலையும் யம் எனக் கட்டைவிரலால் நடு விரலையும் தம்....... எனக் கட்டைவிரலால் மோதிர விரலையும் வம் எனக் கட்டை விரலால் சுண்டு விரலையும் தடவ வேண்டும். மற்றைய உபசாரங்களுக்காக ஸம் பீஜாக்ஷரத்தைச் சொல்லிப் பாவனை செய்ய வேண்டும். இரண்டு உள்ளங் கைகளையும் தடவி விடுவதே இதற்கான நியாசமாகும்.

இந்த பஞ்சோபசாரம் பஞ்சபூத ஸ்வரூபிணியான அம்பிகையை எளிதிற் சென்றடையும். (வ.வை.)

# பட்டணம் சுப்பிரமணிய அய்யர்

தஞ்சாவூரில் பரதம் வைத்திய நாத அய்யரின் மகனாக 1845ம் ஆண்டு பிறந்தார். இவர் ஒரு தமிழ்ப் பிராமணர். முதலில் இசையை தனது மாமாவாகிய மெரட்டூர் கணபதி சாஸ்திரிகள் என்பவரிடமும், பின்பு ஸ்ரீ தியாகராஜரது உறவினரும் சிஷ்யருமான மானம்பு சாவடி வெங்கட சுப்பையரிடமும் கற்றுக் கொண்டார். முதலில் இவருடைய குரல் கடினமாகவும், இனிமையற்றதாயும் இருந்தது. ஆயினும் இவர் தனது கடினமான உழைப்பினாலும் பயிற்சியினாலும் குரலை மிருதுவாகவும் இனிமையாகவும் அமைத்துக் கொண்டார். தியாகராஜருடைய கிருதிகளை கவர்ச்சி கரமாகப் பாடுவதில் திறமைப்பெற்று விளங்கினார். இவர் 30ஆம் வயதில் சங்கீதத்தை தொழிலாக மேற்கொண்டார். இவருக்கு 32ஆம் வயதில் திருமணம் நடந்தது. இவர் திருவையாறு வந்து அங்கேயே தங்கலானார். இவரது இசை நயத்தின் கவர்ச்சியால் இவரது பெயரும் புகழும் எங்கும் பரவலாயிற்று. ஜமீன்தார்களும் ராஜாக்களும் தனவந்தர்களும் இவரது இசையைக் கேட்க விரும்பி அழைப்பு விடுத்தனர். இவர் மிகவும் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

சுப்பிரமணிய அய்யர் தனது சிஷ்யை, சேலம் மீனாட்சி என்பவரது அழைப்பின் பேரில், சென்னைப் பட்டணம் வந்து தங்கி மீனாட்சியின் இரு குமாரத்திகளுக்கு இசைப்பயிற்சி அளித்தார். நீண்ட காலம் சென்னைப்பட்டனத்தில் தங்கிய காரணத் தால் பட்டணம் சுப்பிரமணிய அய்யர் என அழைக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் கணபதி உபாசகர். விநாயக சதுர்த்தியை மிகவும் விமர்சையாக கொண்டாடுவது வழக்கம். இவர் தனது தமக்கையின் பேரனை சுவீகாரம் செய்து கொண்டார். இசை உலகின் புகழுடன் வாழ்ந்து 1902ஆம் வருடம் ஜீலை 31ஆம் நாள் விண்ணுலகு எய்தினார்.

தியாகராஜ கீர்த்தனைகளை பாவத்துடன் நயம் பாடுவதில் தனித்திறமை பெற்றிருந்தார். மனோதர்ம சங்கீதத்தில் தனிச்சிறப்பு பெற்றிருந்தார். இவரது கச்சேரிகள் காதுகளுக்கு விருந்தாக அமைந்தன. அபூர்வமான இராகங்களையும் விஸ்தாரமாகக் கை யாளும் ஆற்றல் மிக்கவர். இவரது இசை, பிர்காக்கள், ரவை ஜாதிகளுடன் இணைந்து சிறந்த கல்பனை நயத்துடன் கேட்போரின் உள்ளத்தைக் கவரும் சிறப்பினைப் பெற்றது. பட்டணம் சுப்பிரமணிய அய்யர் பேகட இராகத்தைப் பாடுவதில் தனித்திறமை வெளிப்படுத்திய காரணத்தால், இவரை பேகட சுப்பிரமணிய அய்யர் என குறிப்பிடுவதுமுண்டு. இவர் ஒரு பல்லவி வித்வான் ஆவார். தன்னடக்கமுள்ளவர். இவரது சிஷ்யர்கள் இராமநாதபுரம் சீனுவாச அய்யங்கார், மைசூர் வாசுதேவாச்சாரியார், டைகர் வரதாச்சாரியார் முதலானோர். (தே.ஹ.)

## பட்ட நாராயண கண்டர்

கி.பி. 8 ஆம் நூற்றாண்டு முதல் 15 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்திலே தமிழ் நாட்டையும், காஷ்மீரத்தையும் சார்ந்த அறிஞர்கள் பலர் சிவாகமங்களின் உட்பொருளை விளக்கி உரையாத்தார்கள். அவ்வாறான உரைப்பணிகள் மூலம் சைவத்தையும், சைவசித்தாந்தத்தையும் நிலை பெறச் செய்தனர். அவர்களில் பட்ட நாராயண கண்டரும் அவரின் மகனான பட்ட ராம கண்டரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களின் காலத்தை நோக்கும்போது, பட்டநாராயண கண்டர் தமது ஆகம உரையிலே ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவரான உத்பல தேவரின் ஈசுவரசித்தி எனும் நூலிலிருந்து மேற்கோள் காட்டுவதிலிருந்து அவர் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக இருக்கலாம் எனக்கருதமுடிகின்றது. அவரின் மகனான பட்டராம கண்டர் பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என அவரின் நூலாக்கங்களிலிருந்து தெரியவருகின்றது.

பட்ட நாராயண கண்டரின் உரைப்பணிகளிற் சிறப்பானது மிருகேந்திர ஆகம உரையாகும். காமிகம் எனப்படும் ஆகமத்தைச் சார்ந்த உபாகமம் மிருகேந்திரமாகும். சிவன் சிங்க மிருக வடிவம் தாங்கி இந்திரனுக்கு உபதேசித்தருளிய ஆகமம் மிருகேந்திரமாகும். சைவசித்தாந்த தத்துவத்தை தெளிவுபடுத்தும் உபாகமங்களுள் இது முதன்மையும் சிறப்பும் பெற்றது. இவ் ஆகமத்தின் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு பாதங்களுக்கும் பட்ட நாராயண கண்டர் சிறந்தவொரு விளக்கமான விரிவுரை எழுதியுள்ளார். அதிலும் இவர் ஞானபாதத்திற்குப் படலம், படலமாக எழுதியுள்ள விளக்கவுரை மிகவும் குறிப்பிடற்பாலது. இதனைப் பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த உமாபதி சிவாசாரியார், சதரத்தின சங்கிரகம் என்ற நூலிற் சிவாகமங்களில் ஞானபாத சூத்திரங்கள் உள்ளடங்கியுள்ளவற்றைத் தொகுப்பாக வெளியிட்டுள்ளமை சிறப்பிற்குரியது. மேலும் சத்திய ஜோதி சிவாசாரியார் எழுதிய தத்துவ சங்கிரகம் எனும் நூலுக்கு பிருஹத்டீகை எனும் உரையையும் எழுதியிருப்பதோடு, தோத்திராவளி என்ற நூலையும் இயற்றியுள்ளார்.

பட்டராம கண்டர் என்ற பெயர் கொண்ட இருவர் உள்ளனர். அவர்களில் ஒருவர் பட்ட நாராயண கண்டரின் தந்தையான வித்தியா கண்டரின் குருவாக இருந்தவர். அவர் ஸத் விருத்தி என்ற பேருரை ஒன்றை எழுதியவர். அடுத்தவர் ஆகம உரையாசிரியர் என்ற வகையிலுள்ள பட்டராம கண்டர்.

பட்டராம கண்டரின் படைப்புக்கள் ஆகமத்தின் உயர்வையும், சைவத்தையும், சைவசித்தாந்த தத்துவத்தையும் தெளிவாக வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. அவர் மேல்வரும் பன்னிரு நூல்களை இயற்றினார்.

1. கிரணாகம விருத்தி
2. மோக்ஷ காரிகை விருத்தி
3. மதங்க பாரமேசுவர விருத்தி
4. சார்ததிரிசதி காலோத்தரவிருத்தி
5. பரமோக்ஷ நிராசகாரிகை விருத்தி
6. ரௌரவ விருத்திடீகை.
7. நரேசுவர பரீக்ஷைப் பிரகாசம்
8. நாத காரிகை
9. ஜாதி நிர்ணய பூர்வக ஆலயப் பிரவேச விதி
10. வியோம வியாபிஸ்தவம்
11. மந்திர வர்த்திக டீகை
12. ஆகம விவேகம்

இவர் ஆகம ஞானத்திலே முதிர்ந்த அறிவும் புலமையும் பெற்றவர். இவரது ஆகம உரைகள் தத்துவச் செறிவும் தெளிவும் நிறைந்து காணப்படும். தனித்துவம் வாய்ந்தவை. ஆகமங்கள் கூறும் ஞானபாதப் பகுதிக்கு நுணுக்கமான, தெளிவான, விளக்கமான உரையாத்தவர்களில் இவரை விட மிஞ்சியவர்கள் எவரும் இல்லை எனக் கூறலாம். இவர் புராணக் கதைகளையும், உபநிடத மரபுகளையும் வெளிப்படுத்தி உரை எழுதியிருப்பது இவரின் தனித்துவமான புலமையாற்றலை உணர்த்துகின்றது.

பட்டநாராயண கண்டரும், பட்டராம கண்டரும் ஒருமித்த போக்கிலேயே உரை வரைந்துள்ளனர். தந்திரவத்து, சூத்திரம், வாக்கியம், பிரகரணம், படலம் முதலிய ஐந்து வகையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தங்களினூடாக ஆகமத்தின் ஒரு படலத்திற்கும் அடுத்த படலத்திற்குமுள்ள தொடர்புகளை தெளிவுபடுத்தி உரை வரைந்துள்ளனர் என்பது சிறப்பிற்கப்பாலது. பட்ட ராம கண்டரின் ஆகம உரைப்பணியின் பயன் சைவ சித்தாந்தத்தை பரப்பு வதிலேயே பெரிதும் தங்கியிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(சு. து.)

## பட்டினத்தார்

காவிரிப்பூம்பட்டினத்திலே சிவநேசர் ஞானகலாம்பைத் தம்பதியர்க்கு மகனாகப் பிறந்த இவரது பிள்ளைத் திருநாமம் திருவெண்காடர். 'பட்டினத்துப் பிள்ளையார் வரலாறு' என்று வழங்கி வரும் சரிதத்தின்படி சிவபெருமானின் ஆஞ்ஞைப்படி குபேரனே, பட்டினத்தாராக அவதரித்தான் என்பர். இச் சரிதச்சுருக்கம் வருமாறு:

"இளமையிலே தந்தையாரை இழந்த இவரது கனவில் ஒருநாள் சிவபெருமான் தோன்றி, திருவெண்காடு செல்லுமாறு ஆற்றுப்படுத்தி, ஓர் அந்தணராகி வந்து தாமே தீட்சை செய்தருளி வழிபாட்டிற்கென லிங்கம் வழங்கியுதவினார்.

சிவபூசை, மாகேசுரபூசைகளாலே பொருளிழந்த பட்டினத்தாருக்குச் சிவன் கனவிலே தோன்றிக் கூறியது போலவே இல்லம் முழுவதும் செல்வம் வழங்கினார். பின் தமது பூசைகளைத் தொடர்ந்தபடியே காவிரிப்பூம்பட்டினம் திரும்பிய பட்டினத்தார் பதினாறாவது வயதில், சிதம்பரச் செட்டியார் சிவகாமியம்மை தம்பதியினரின் புதல்வியாரான சிவகலை என்பாளைத் திருமணம் செய்து கொண்டார்.

இவர், தமக்குக் குழந்தைச் செல்வம் உண்டாகாமையால், சிவசருமர் சுசீலை வழங்கிய ஓர் ஆண்மகவை, நிறைக்குப் பொன்கொடுத்துப் பெற்றார். மருதப்பிரான் எனப் பெயரிடப்பட்ட அம்மகன், வெளியூர் சென்று பொருள் தேடிவந்து, "காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே" என்று இவருக்கு எழுதி ஓலை சேர்ப்பித்து, திருவிடைமருதூரில் இறையோடு இரண்டறக் கலந்தனன். இவ்வோலை கண்டு துறவியாரான இவர், விஷ அப்பம் வழங்கிய தமக்கையாரின் இல்லத்தை அவ்வப்பத்தை வீட்டிறப்பிலே சொருகி வீட்டையே எரிப்பித்தார்; இறந்த தாயாரின் உடலை வாழைத்தண்டுகளின் மேல் வைத்துப் பாடல் பாடி நீறாக்கினார்;

பின், திருமருதூர், திருவாரூர், கொங்கு தேசம் வழியாக உச்சயினிபுரம் அடைந்தார். அங்கே, காட்டுக் கணபதி ஆலயத்தில் நிட்டை கூடி இருந்தார். ஒருநாள் காணிக்கையாகக் கள்வர்கள் பிள்ளையாருக்குச் செலுத்திய முத்துமாலை தவறுதலாக இவர் கழுத்தில் விழுந்து விட, இவரைக் கள்ளனாய்க் கருதிய பத்திரகிரிராஜன் கழுவேற்றப் பணித்தனன். அப்போது, 'என் செயலாவது' என இவர் பாடல் பாடக் கழுமரம் எரிந்தது.

இச்சம்பவத்தால் துறவியான பத்திரகிரியாருக்கு ஞானோபதேசம் செய்து திருவிடை மருதூர் செல்ல ஆற்றுப்படுத்தி, பின் தாமும் தலயாத்திரை புரிந்து அவ்விடம் சென்றார். பத்திரிகிரியார் இறைவனோடு கலந்தமை அறிந்த இவர் இறைவனைத் தாமும் அது குறித்து வேண்ட, இறைவனால் திருவொற்றியூரில் வருமாறு பணிக்கப்பட்டார். வழியில் தமக்கு முன்பு கணக்கப் பிள்ளையாகவிருந்த சேந்தனாரைச் சிறை மீட்பித்து அவரைச் சிதம்பரம் செல்ல ஆற்றுப்படுத்தினார். பின் சீர்காழி, சிதம்பரம், திருவேகம்பம், திருக்காளத்தி, திருவாலங்காடு முதலிய பதிகளைத் தரிசித்து திருவொற்றியூர் அடைந்து ஓர் நாள் இடையினச் சிறுவர்களோடு விளையாடிக் கொண்டிருந்து, நிறைவில் அவர்களிடம் தம்மை மூடுமாறு பணித்து, அவ்வாறே நிகழ்ச் சிவலிங்க வடிவமாயினார்."

பட்டினத்தார் பெயரில் வழங்கும், கோயில் நான்மணி மாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபது ஆகிய பிரபந்தங்கள் பதினொராந் திருமுறையில் அடங்கியுள்ளன. வேறு பல பாக்கள் 'பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல் திரட்டு' எனும் பெயரில் தொகுக்கப் பட்டுள்ளன. இத்திரட்டில் உள்ள பாடல்கள் பதினொராந் திருமுறையிலமைந்துள்ள இவர் பிரபந்தங்களை விட, சொற்பொருள் நடைகளால் வேறுபட்டன. இதனால், பட்டினத்தார் எனும் ஒரே பெயரில் அறியப்பட்ட இருவேறு ஞானியரின் பாடல்களாக இவை இருக்கலாம் என்பர் ஆய்வாளர்.

எவ்வாறாயினும் இவ்விரு பாடல் திரட்டுகளும் தோன்றிய காலம் கி.பி 10ஆம், 11ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதி என்பதில் கருத்து முரண்பாடில்லை.

இவரை, "பட்டினத்துப் பிள்ளை போல் ஆருந் துறக்கை அரிதரிது" எனத் தாயுமானவர் முதலியோர் பாடியுள்ளனர். இவர் குருபூசை தினம் ஆடி உத்திராடம். (ஸ்ரீ.பி.)

## பட்டினத்துப் பல்லவனீச்சரம்

### வரலாற்றில் பல்லவனம்:

மணிமேகலை காலத்தில் கடற்கோளால் காவிரிப்பூம் பட்டினம் ஓரளவு கடலுள் அமிழ்ந்தும் அழிந்தும், போயினும் எஞ்சிய பெரும் பகுதி பல்லவர் காலத்தில் பெருநகரமாக விளங்கியுள்ளது. அந்நகரின் நடுநாயகமான பகுதியில் விளங்கிய திருக்கோயிலிலே பல்லவனீச்சரம். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அங்கு எழுந்தருளிய ஞானசம்பந்தப் பெருமான் அன்றிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருநகரையும் திருக்கோயிலையும் பாடுகிறார். அது கடற்கரைப் பட்டினமென்பதை

*'வங்கமாரு முத்தமிப்பி வார்கடலூடலைப்பப்*
*பங்கமில்லார் பயில்புகாரிற் பல்லவனீச்சரமே'*

என்றும், அப்பட்டினத்தில் மாட மாளிகைகள் வானளாவ நிறைந்திருந்ததை.

*'கடையார்மாட நீடியெங்குங் கங்குல்புறந்தடவப்*
*படையார் புரிசைப் பட்டினஞ்சேர் பல்லவனீச்சரமே'*

என்றும் பாடுகிறார். பதிகம் முழுவதும் பட்டினத்தையும் பல்லவனீச்சரத்தையும் இணைத்தே பாடியுள்ளார். ஏழாம் நூற்றாண்டில் அவர் பாடிய மாடமாளிகைகள் பதின்மூன்றாம் நூற்றாண்டில் மாறவர்மன் சுந்தர பாண்டியனால் அழிக்கப்பட்டன. அன்று சோழநாட்டை ஆண்டு வந்த மூன்றாம் இராஜராஜனைத் தோற்கடித்துப் புகார் முதலிய சோழ நாட்டு நகரங்களையும் அவன் அழித்தான். பூம்புகாரில் அவனால் அழிக்கப்படாமல் எஞ்சி நின்றது.

பட்டிப்பாலை இயற்றியதற்காக உருத்திரங் கண்ணனார் திருமாளவனிடம் பரிசிலாகப் பெற்ற பதினாறுகால் மண்டபம் மட்டுந்தான் என்று.

*'வெறியர் தளவத் தொடைச்செய மாறன் வெகுண்டதொன்றும்*
*அறியாத செம்பியன் காவிரி நாட்டிலர மியத்துப்*
*பறியாத தூணில்லை கண்ணன் செய் பாலைக்கன்று*
*நெறியால் விடுந்தூண் பதினாறுமே யங்கு நின்றனவே'*

என்னும் திருவெள்ளறைக் கல்வெட்டு குறிக்கின்றது. புலமையின் பரிசிலை மதித்த அம்மன்னன் இறைமையின் சின்னங்களையும் அழித்திருக்க மாட்டான். அவனுடைய வஞ்சினத்திற்கு எஞ்சி நின்ற பூம்புகார் திருக்கோயில்களுள் ஒன்றுதான் பட்டினத்துப் பல்லவனீச்சரமும்.

## திருக்கோயில் அமைப்பு:

பூம்புகார் - கல்லணை நெடுஞ்சாலையினை ஒட்டித் தெற்கில் அமைந்திருக்கிறது இத்திருக்கோயில். கிழக்கு மேற்கில் 207 அடியும் தெற்கு வடக்கில் 115 அடியும் கொண்டது இத்திருக்கோயில். மூலஸ்தானம் திரிதள விமானமான உயர்ந்துள்ளது. ஐந்து நிலை இராஜ கோபுரமும் ஒன்றுள்ளது. கிழக்கு பார்த்த சந்நிதி. வாசலில் உள்ள வளைவில் நிற்கும் . கோவலன், கண்ணகி, பட்டினத்தார், கரிகாலன் கதைகள் இந்த நூற்றாண்டினைச் சேர்ந்தவை. சந்நிதிக்கு எதிரில் ஜானவி தீர்த்தம். அது அகத்தியரால் உண்டாகப் பெற்றதாகப் புராணம். குளத்தின் நாற்புறமும் கல் அரண் இருப்பது சிறப்பு. குளக்கரை விநாயகரை வணங்கி, கோபுரத்தினுட் சென்று உட்பிரகாரத்தில் வலமாக வந்தால் சூரியன், சிவலிங்கங்கள், பட்டினத்தார், தலவிநாயகர், வள்ளி தேவசேனையுடன் கம்பீரமாக காட்சி தரும் சுப்பிரமணியர், கஜலட்சுமி, யாகசாலை, அகத்தியர், சம்பந்தர், வைரவர், சந்திரன், நவக்கிரகங்கள் ஆகியோரைத் தரிசிக்கலாம். பின்னர் மகா மண்டபத்தையும் ஸ்நாபன மண்டபத்தையும், அர்த்த மண்டபத்தையும் கடந்து கர்ப்பக் கிரகத்தில் பல்லவனீச்சுரரை லிங்க வடிவில் கண்ணாரக் கண்டு நெஞ்சாரத் துதிக்கிறோம்....

*'பத்தரேத்தும் பட்டினத்துப் பல்லவனீச் சரத்தெம்*
*அத்தன்றன்னை யணிகொள்காழி ஞானசம்பந்தன்சொற்*
*சித்தஞ்சேர செப்புமாந்தர் தீவினை நோயிலராய்*
*ஒத்தமைந்த வும்பர்வானி லுயர்வினொ டோங்குவரே'*
*''பரசுபாணியர் பாடல்வீணையர் பட்டினத்துறை*
*பல்லவனீச்சரத் தரசுபேணி நின்றா ரிவர் தன்மை*
*யறிவாரார்?'*

என்று திருஞானசம்பந்தர் இத்தலத்தில் பாடியருளிய சில பாடல்களைப் பாடித் துதிக்கிறோம். பின்னர் நடராசப் பெருமானையும், தெற்கு நோக்கியுள்ள சௌந்தரநாயகி என்னும் அம்பாளையும் வழிபடுகிறோம்.

## சிலைகளின் சிறப்பு:

சோமாஸ்கந்தர், சௌந்தரநாயகி, ரிஷிபாரூடர் முதலிய ஐம்பொன் வார்ப்புச் சிலைகள் இங்குள்ளன. இவைகள் சோழற்காலச் சிற்பச் சிறப்பின் உச்ச நிலையைக் காட்டும் உன்னத சிலைகள். கலை உலகினர் ஏற்றிப் போற்றும் குகாம்பிகை சிலையும் இங்குதான் உள்ளது.

அழகே வடிவான குகாம்பிகை கையில் தாமரை மலருடன் வலக்காலை மடக்கி இடக்காலைத் தொங்கவிட்டு அமர்ந்துள்ளாள். பக்கத்தில் குழந்தை முருகனும் அமர்ந்து விளையாடுகிறான். இது 9ஆம் நூற்றாண்டினுடைய சோழர் கலைப் பணியாகும். ரிஷபவாகன தேவர் உமாதேவியுடன் நின்ற நிலையில் நான்கு கரங்களுடன் காட்சி தருகின்றார். பின்னே ரிஷபம் இல்லை எனினும் ரிஷபத்தில் சாய்ந்து நிற்பது போன்ற பாவனை. முதலாம் ஆதித்த சோழன் காலத்தியதாக (கி.பி87-907) இத்திருமேனிகள் காணப்படுகின்றன. சோமாஸ்கந்தரும் ஆடவல்லாரும் பிற்காலச் சோழர் கலைப்படைப்புக்கள். சோமாஸ்கந்தரின் கம்பீரம் சொக்க வைக்கிறது.

இக்காலப் படிமங்களான சிவசர்மர், சுசீலை, மருதவாணர், ஞானகலாம்பிகை, பட்டினத்தார், சேந்தனார், பத்தினி முதலியவைகளையும் இங்கு காணுகிறோம். கிழக்குப் பிரகாரத்திலுள்ள சுப்பிரமணியரின் கற்சிலை துர்க்கை அம்மன் கோயிலுக்கு அருகில் இருந்ததெனவும், பின்னர் இங்கு கொண்டுவந்து பிரதிஷ்டை செய்தனர் எனவும் கூறுவர். வள்ளி தெய்வயானை சிலைகள் பின்னர் செய்து சேர்ப்பிக்கப் பெற்றனவாம். பூம்புகாரில் வேற்கோட்டம் ஒன்றிருந்து மறைந்துள்ளதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னரே கண்டோம். அக்கோட்டத்தைச் சேர்ந்த சிலையாகவும் இது இருக்கலாம்.

### கல்வெட்டுக்கள்:

இக்கோயிலில் இரண்டு கல்வெட்டுக்களே உள்ளன. ஒன்று கருவறையின் மேற்குச் சுவரிலும் இன்னொன்று கோயில் முற்றத்திலும் காணப்படுகின்றன. மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தர பாண்டியனது 17ஆம் ஆட்சியாண்டில் இராஜாதிராஜ வளநாட்டுக் காவிரிப்பூம் பட்டினத்துக் கோயிலுக்கு நிலம் வழங்கியதை முதற்கல் வெட்டு கூறுகிறது. (272) சாலிவாகன சகம் 1679 (கி.பி. 1757) ஜயவருடம் ராயரவுத்த மிண்ட நாயனார் முதலியோர் திருச்சாய்க்காட்டு சீமை. காவிரிப் பூம்பட்டினம் மாகாணம் பல்லவனீச்சரக் கோயில் திருப்பணிக்கும். வழி பாட்டிற்கும் நிலம் வாங்கிய செய்தியைக் குறிப்பிடுகிறது (273) அடுத்த கல்வெட்டு.

### நிர்வாகம் :

இக்கோயில் இந்துசமய அறநிலையத் துறையினரின் நிர்வாகத்தில் உள்ளது. இக்கோயிலுக்கு 30 ஏக்கர் நஞ்செய்யும் 30 ஏக்கர் புஞ்சையும் உள்ளன.

### திருவிழாக்கள்:

இத்திருக்கோயிலில் அன்றாடம் ஐந்து கால பூசைகள் நடப்பதோடு. பிற சிவாலயங்களில் நடப்பது போல் மாத விழாக்களான பிரதோஷம் முதலியனவும் சிறப்பாக நடைபெறு கின்றன. ஆடி மாதத்தில் நடைபெறும் பட்டினத்தார் திருவிழா இக்கோயிலின் தனிப்பெரும் விழா. இதனை நாட்டுக்கோட்டை நகரத்தார் இங்கு வந்திருந்து சிறப்பாக நடத்துகின்றனர். இவ்விழா ஆடி மாத உத்திரத்தில் தொடங்கி. உத்திராடத்தில் நிறைவடை கிறது. இவ்விழாவில் பட்டினத்தார் வரலாறு காட்சிகளாக விளக்கப் படுகிறது.

### புத்த விகாரம்:

பல்லவனீச்சரம் கோயிலுக்கு வடக்கே சாலையை ஒட்டி 1960-61ல் நடந்த அகழ்வாய்வில் கிடைத்துள்ள புத்த விகாரத்தையும் கண்டு செல்லலாம். பௌத்த சமயத்திற்கும் பூம்புகாருக்கும் கி.மு இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி எட்டாம் நூற்றாண்டு வரை நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது. வடஇந்தியாவில் பார்குத் என்ற இடத்தில் கிடைத்த கற்றூணில் உள்ள கல்வெட்டில் 'காகந்தி நகரைச் சேர்ந்த சோமா என்ற பிக்குனியால் இத்தூபி தானமாக தரப்பட்டது' என்று காணப்படுகிறது. அக்கற்றூண் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பூம்புகாரைப் பற்றிய செய்திகள் பிராகிருத நூல்களில் உள்ளன. கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த மிளிபந்தண என்ற நூலில் சோல பட்டணம் (சோழபட்டணம்) என்ற பெயரால் புகார் அமைக்கப்பட்டுள்ளது.

அக்கீர்த்தி என்பவர் காசியை விடுத்துக் காவிரி பூம்பட்டினத்தில் ஒரு வனத்தில் வாழ்ந்ததாகப் புத்த ஜாதகக் கதைகள் கூறுகின்றன. அக்கீர்த்தி என்பவர் புத்தரின் முந்தைய அவதாரங்களுள் ஒருவர் என்றும். புத்த ஜாதகக் கதைகள் புத்தர் அவதரிக்கு முன்னரே (கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலே பிறந்து விட்டன என்றும் கூறுவர்.)

புத்ததத்தர் என்பவர் 'அபிதம்மாவதாரம். 'புத்தவம்சாத்த கதா' என்ற நூல்களை எழுதியுள்ளார். அதில் கணதாசன் என்ற சாதுவால் கட்டப்பட்ட விகாரம் ஒன்று அங்கிருந்தது. அந்த விகாரத்தில் நான் இருந்த போது சுமதி என்ற மாணவரின் வேண்டு கோளுக்கிணங்க இந்த நூலை எழுதினேன்' என்று குறிப்பிடுகிறார். அந்த விகாரமே தற்போது அகழ்வாய்வில் கிடைத்துள்ளது.

60அடி நீளமும் பல சதுரமான அறைகளைக் கொண்டும் உள்ளது இந்த விகாரம். இதே இடத்தில் 1927இல் போதி சத்துவமைத்ரேயரின் தங்கமுலாம் பூசப்பட்ட திருமேனியொன்று கிடைத்துள்ளது. அது இப்போது சென்னை அருங்காட்சிய கத்தில் உள்ளது. கல்லில் செதுக்கப்பட்ட புத்த பாதமும் இங்கு கிடைத்துள்ளது. 3 1/2 அடி நீளமும் 2 1/2 அடி அகலமும் கொண்ட இந்தப் புத்தபீடிகையில் சுவஸ்திகம். பூர்ணகலசம். ஸ்ரீவத்சம் ஆகிய மங்கலச் சின்னங்கள் செதுக்கப் பெற்றுள்ளன.

(த.அ.)

## பட்டீஸ்வரம் துர்க்கை ஆலயம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திற்குத் தென் மேற்கில் எட்டு கிலோ மீற்றர் தொலைவில் பட்டீஸ்வரம் இருக்கிறது. தேவாரப் பாடல் பெற்ற இத்தலம் முடிகொண்ட சோழபுரம். திருமழபாடி என்ற பெயர்களையும் பெற்றிருந்தது. சோழ மன்னர்கள் முடி சூடும் பெருநகரங்களில் பேசப்படும் நகரம் பழையாறை. பட்டீஸ்வரம் என்பது பழையாறையைச் சேர்ந்த மழபாடியிலிருந்த கோயிலின் பெயராக விளங்கியது. கோயிலின் பெயரே நாளடைவில் ஊரின் பெயராகிவிட்டது.

பட்டீஸ்வரம் பற்றிய பல புராண வரலாற்றுக் கதைகள் கூறப்படுகின்றது. இராவணன் பல கலைகளில் வல்லவன். அவனைக் கொன்றதால் இராமருக்கு சாயஹத்தி தோஷம் ஏற்பட்டு விட்டது. கலைகளில் தேர்ச்சி பெற்றவர்களை சாயை என்பார்கள். இராமருக்கு ஏற்பட்ட சாயஹத்தி தோஷம் நீங்க பட்டீஸ்வரத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து அத்தோஷத்தை அவர் நிவர்த்தி செய்தார் என்று ஒரு கதை உள்ளது. மேலும் வானரக் குலவேந்தன். வாலியை மறைந்திருந்து கொன்றதால் சாயஹத்தி தோஷம் ஏற்பட்டது. அதிலிருந்து விடுபட இத் தலத்தில் கோடி தீர்த்தம் அமைத்து சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்டதாகவும் கூறப்படுகிறது.

தேவிபராசக்தி தனித்துத் தவம் செய்ய இத் தலத்தைத் தேர்ந்தெடுத்து ஒரு வனம் அமைத்து தவம் செய்தார். தேவியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவத்திற்கு உதவியாக காமதேனு பசுவின் புத்திரி பட்டியை அனுப்பியிருந்தது. பட்டிதேவி வனத்திலிருந்த சிவலிங்கத்தைத் தூய்மையான பால் கொண்டு நீராட்டி வழிபட்டு வந்தது. பட்டி வழிபட்டு வந்ததால் இறைவன் பட்டீஸ்வரன் என்றும், தலம் பட்டீஸ்வரம் என்றும் அழைக்கப்பட்டதாகத் தல வரலாறு கூறுகிறது.

பட்டீஸ்வரம் பஞ்ச நந்திஷேத்திரம் என்றும் அழைக்கப்படு கின்றது. நந்தி, சந்நிதியிலிருந்து விலகியிருப்பது இக் கோயிலின் தனிச்சிறப்பு. திருஞானசம்பந்தர் சிவாலயங்களைத் தரிசித்துக் கொண்டு இத் தலத்திற்கு அருகிலுள்ள திருச்சக்திமுற்றத்துக்கு வந்து சேர்ந்தார். பட்டீஸ்வரப் பெருமானை அடுத்துத் தரிசிக்க வேண்டும். கோடை காலம் ஆதலால் வெய்யில் தகித்தது. வெப்பம் திருஞானசம்பந்தரைத் தாக்காவண்ணம் இறைவன் பூதகணங்கள் மூலம் முத்துப்பந்தல் ஒன்றை அனுப்பினார். முத்துப் பந்தர் நிழலில் சம்பந்தர் நடந்து வரும் அழகிய காட்சியைக் காண்பதற்காகவும், திருஞானசம்பந்தர் தன்னைத் தடையின்றித் தரிசனம் செய்வதற்கு ஏதுவாகவும் பட்டீஸ்வரர் நந்தியை விலகி இருக்குமாறு பணித்தார் என்பது தல வரலாறு. ஆண்டுதோறும் ஆனி மாதம், முதல் தேதியன்று இவ்வாலயத்தில் முத்துப் பந்தல் விழா சிறப்பாக நடத்தப்படுகிறது.

கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலின் மண்டபங்களிலும், தூண்களிலும் கலைநுட்பம் பொருந்திய பல அற்புதச் சிற்பங்கள் உள்ளன. இத் தலத்தில் தேவி தவம் செய்தார் என்பதைக் குறிப்பிடும் வகையில் ஓரிடத்தில் ஒற்றைக் காலில் நின்று ஒரு கையைத் தலைமேல் வைத்து தவம் செய்யும் தோற்றத்தில் ஒரு அழகான அம்மன் சிற்பம் உள்ளது. பட்டிப்பசு சிவலிங்கத் திருமேனிமேல் பால் பொழிவது போல் ஒரு சிலை காட்சி தருகிறது.

மண்டபத் தூண்களிற் சிங்கம் மற்றும் யாளியின் உருவங்களைக் காணலாம். தேவி ஞானாம்பிகை சந்நிதி மேல் விட்டத்தில் கல் சங்கிலிகளும் பாம்புகளுடன் பொருத்தப்பட்ட சித்திரக்கல் ஒன்று சுழலும் நிலையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

முதல் பிரகாரத்தில் உள்ள மண்டபத்தில் மூலவர் பட்டீஸ்வரரின் சந்நிதி உள்ளது. இறைவனுக்கு தேனுபுரீஸ்வரர் என்ற பெயரும் உண்டு. மூலவர் சந்நிதானத்தின் வடபுறத்தில் தேவி ஞானாம்பிகையின் கோயில் உள்ளது.

கோயிலின் இரண்டாம் பிரகாரத்தில் மதவாரணப் பிள்ளையார் சந்நிதி இருக்கிறது. உள் கோபுர வாயிலை அடுத்து அனுக்ஞை விநாயகரைப் பார்க்கலாம். திருச்சுற்றில் சப்த கன்னிகைகள், ஸ்வர்ண விநாயகர், மகாலிங்கம், சுப்ரமணியர், வள்ளி, தெய்வானை சமேத சண்முகப் பெருமான், காசி விஸ்வநாதர், கஜலட்சுமி ஆகியோர் சந்நிதிகள் அமைந்துள்ளன. யாக சாலையை அடுத்து பைரவர் சந்நிதி இருக்கிறது. வடக்கு கோபுர வாயிலை ஒட்டித் துர்க்கை சந்நிதி இருக்கிறது.

துர்க்கையின் சந்நிதியைச் சுற்றிலும் கலையம்சத்துடன் கூடிய அங்கப் பிரதட்சண மண்டபம் இருக்கிறது. மற்றைய திருத்தலங்களில் இருப்பது போல் இல்லாமல் இத்தலத்தில் துர்க்கை சாந்தஸ்வரூபிணியாகக் காட்சி தருவது இத் தலத்தின் சிறப்பாகும். மகுடன் தலைமேல் அஷ்ட புஜங்களுடன், கண்களில் கருணை ததும்ப, நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். காளி துர்க்கைக்கு சிம்மவாகனம் வலப்புறம் நோக்கியதாகத் தான் இருக்கும். இத் தலத்து துர்க்கைக்கு சிம்மவாகனம் இடப்புறம் நோக்கியதாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

மூன்று கண்கள், புன்னகை பூக்கும் உதடுகள், காதுகளில் குண்டலங்கள், அபயகரத்துடன் சங்கு, சக்கரம், வில், அம்பு, கத்தி, கேடயம், கிளி என்பவற்றைத் தாங்கி உள்ளாள் துர்க்கை.

மாமன்னன் இராஜராஜன் முதலாக சோழமன்னர்கள் அனைவராலும் வழிபடப்பட்டு வந்தது இத் தெய்வம். சோழ மன்னர்கள் துர்க்கையை தமது அரண்மனையில் வைத்துக் குல தெய்வமாகப் போற்றியதுடன் முக்கிய அரச முடிவுகள் எடுக்கும் முன்பும் போர்க்களம் புகு முன்பும் இந்தத் தேவியை வழிபட்டு உத்தரவு பெற்ற பின்னரே செயற்பட்டனர் என்றும் அறியக் கூடியதாக உள்ளது. (நி. நி.)

# பண்டரிபுரம்

மகாராஷ்டிர மாநிலம் கோலாப்பூர் மாவட்டத்தில் பண்டரிபுரம் உள்ளது. பல நூல்களில் இந்த ஊர் பல பெயர்களால் வழங்கப்படுகிறது. பண்டரி, பாண்டுரங்கபுரம், பாகனிபுரம், புண்டரிசேத்திரம், பாண்டுரங்கப்பள்ளி ஆகியவை குறிப்பிடத்தக்க பெயர்கள். இது திருமால் வழிபாட்டுத் தலம்; இந்தியா முழுதும் அறிந்த புகழ் பெற்ற வழிபாட்டுத் தலம்; இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் இறைவி பெயர்கள் விட்டோபா-ருக்மணி ஆகும். கோயில் ஊரின் நடுவாக அமைந்துள்ளது. ஊருக்கு அருகே பிறைவடிவில் உள்ள சந்திரபாகா ஆறு குறிப்பிடத்தக்கது.

பண்டரிபுர ஆலயம் கி.பி. 83-ஆம் ஆண்டு சாலிவாகன் என்ற மன்னனின் ஆணையின்படி கோலி இன வீரர்களால் கட்டப்பட்டது என்பர். ஒய்சள மன்னன் விட்டுணுவர்த்தனின் காலத்தில் (கி.பி 1117-1137) கட்டப்பட்டது என்பது வரலாற்றறிஞர்களின் கருத்து. அம்மன்னன் சமணத்தை விட்டு வைணவத்தைத் தழுவினான் என்பர்.

மகாராட்டிரத்தில் தோன்றிய பக்தி இயக்கத்திற்குச் சீரிய மையமாக அமைந்தது பண்டரிபுரம். அதனால், அவ்வியக்கம் பண்டரிபுர இயக்கம் என்றே சொல்லப்பெற்றது. பக்தி இயக்கத்தால் மக்களிடையே மண்டிக்கிடந்த வேற்றுமை உணர்வுகள் மறைந்தன. எல்லா உயிர்களும் இறைவனின் வடிவம் என்ற கருத்து வற்புறுத்தப் பெற்றது. நாடு முழுவதும் பண்டரிபுர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டோபாவின் பெருமை பரவப் பக்தி இயக்கமே காரணம் ஆயிற்று. இவ்வியக்கம் செழுமையுற ஞானேசுவரர், நாமதேவர், துக்காராம், ஏகநாதர், சவேதாமாலி, கோராகும்பர், சொக்கமேளா ஆகியோர் அயராது உழைத்தனர்; பஜனைகள் செய்தும் கீர்த்தனைகள் பொழிந்தும் பண்டரிபுரத்தின்பால் மக்கள் கவனத்தை ஈர்த்தனர். அவ்வியக்கத்தின் உச்சக்கட்டம் கி.பி.17ஆம் நூற்றாண்டு என்பர்.

புண்டரீகர் என்னும் வைணவ இறை அடியாரின் பெருமை பத்மபுராணத்தில் பேசப்படுகிறது. பெற்றோர்களுக்குத் தொண்டுசெய்வது கடவுள் தொண்டிற்கு மேம்பட்டது என்னும் கருத்தைப் புண்டரீகர் வரலாறு வற்புறுத்துகிறது. (சு.இ.)

## பண்டார்க்கர் இராமகிருட்டிண கோபால்

இரத்தினகிரி மாவட்டத்தில் கி.பி. 1837ஆம் ஆண்டு மாளவத்தில், சரசுவதி பிராமண குடும்பத்தில் பிறந்த இராமகிருட்டிணகோபால் பண்டார்க்கர் வடமொழி இலக்கியத் துறைக்கும், இந்தியப் பண்பாட்டு வரலாற்றுத் துறைகளுக்கும் அரும்பெருந்தொண்டாற்றி, இந்தியாவின் சிறப்பினை உலகறியச் செய்த சான்றோர்களுள் ஒருவராவார்.

இளம் வயதில் மாளவத்திலும் இரத்தினகிரியிலும் கல்வி பயின்று, கி.பி. 1852இல் பம்பாய் நகரில் எல்பின்ஸ்டன் கல்வி நிறுவனத்தில் உயர்கல்வியைப் பெற்றார் பண்டார்க்கர். கணிதத்தில் மிக்க ஆர்வம் கொண்ட இவர், அப்பாடத்தை தாதாபாய் நவரோசியிடம் பயின்றார். பம்பாய்ப் பல்கலைக் கழகத்தில், முதன்முதல் இளங்கலைப் பட்டம் பெற்றவர்களுள் இவர் ஒருவர். பிறகு பூனா நகரிலிருந்து வடமொழி இலக்கியம் மற்றும் பண்பாட்டுத் துறைகளில் சீரிய முறையில் ஆய்வினை மேற்கொண்டார். அடுத்து அரைநூற்றாண்டு காலத்திற்கு வடமொழி இலக்கியம், ஒப்புமை மொழியியல், சாசனவியல், வரலாறு ஆகிய துறைகளின் ஆராய்ச்சிக்கு இவர் தம்மை ஆட்படுத்திக் கொண்டார். அரசு உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த இவர், கி.பி. 1868-81ஆம் ஆண்டுகளில் தாம் படித்த எல்பின்ஸ்டன் கல்லூரியிலே துணைப்பேராசிரியராகப் பணிபுரிந்து தமக்கும் நிறுவனத்திற்கும் பெருமை சேர்த்தார். பூனா தக்காணக் கல்லூரியில் கி.பி.1882ஆம் ஆண்டு முதல் 1893ஆம் ஆண்டு வரை வடமொழிப் பேராசிரியராகப் பணிபுரிந்த முதல் இந்தியர் ஆவார். பம்பாய்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக கி.பி. 1893ஆம் ஆண்டிலிருந்து 1895ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தார். மேலும், 1903இல் அரசப்பேராளரின் சட்டமன்றக்குழு உறுப்பினராகவும்,1904இலிருந்து 1908ஆம் ஆண்டுவரை பம்பாய்ச் சட்டமன்றக் குழுவில் பல்கலைகழகச் சார்பு உறுப்பினராகவும் பொதுமக்கட் சேவை புரிந்தார். இவர் கி.பி. 1889இல் சி.ஐ.ஈ. (C.I.E) என்னும் பெருமையையும், 1911இல் தில்லி அவையில் மாவீரர் (Knight) என்ற விருதையும் பெற்றார்.

பண்டார்க்கரின் இலக்கியப் படைப்புகளும் வரலாற்று நூல்களும், முழுமையும் தெளிவும் கொண்டு, பல்துறைகளில் இவர் கொண்டிருந்த நுண்ணிய அறிவினை எடுத்துக் காட்டுகின்றன. முதன்முதலாக மேலைநாட்டு முறைகளைக் கொண்டு, வடமொழி மற்றும் இந்தியாவின் பழம்பெருமைகளை ஆராய்ந்தவர் இவர். இவருடைய ஆய்வுகள் மேலை மற்றும் கீழைநாட்டுக் கூறுகளின் மகிழ்ச்சிகரமான இணைவினை வெளிப்படுத்துகின்றன. 'கேங்' (Hang) என்பவர் மொழி பெயர்த்த 'ஆத்திரேய பிராமணம்' என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரை பேறிஞர் வெபர் (Weber) போன்றோரின் கவனத்தை ஈர்த்தது. இவர்தம் வடமொழி நூல்கள் இந்தியா முழுவதும் மாணாக்கர்களிடையே புகழ் பெற்றன. பவபூதியின் மாலதி மாதவம் என்னும் நாடகத்தை ஆராய்ச்சியுரைகளுடன் பதிப்பித்தார். மேலும் இவர், கி.பி. 1877இல் 'வில்சன் ஒப்புமை மொழியியல்' என்ற தலைப்பில் ஆற்றிய பேருரை இன்றும் ஆய்வாளர்களிடையே முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கிறது. 'வடமொழிக் கையெழுத்துப் பிரதிகளின் கண்டுபிடிப்புகள்' பற்றி இவர் உருவாக்கிய அறிக்கை வடமொழி, வரலாறு ஆகிய துறைகளில் இவர் ஆற்றிய பணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாம்.

வரலாற்று வரைவியலில், மேலை நாட்டு முறையில் வரலாற்றுச் சான்றுகளையும் செய்திகளையும் ஆராயும் முறையினை இவர் வலியுறுத்தினார். இந்திய வரலாற்றில் உள்ள சிக்கல்களை 'இராங்கே முறை' (Ranke Method) கொண்டு ஆய்ந்த முதல் இந்திய வரலாற்று வல்லுனர் இவர். திறனாய்வின் அடிப்படையில் சான்றுகளை ஆராயும் பணியில், இந்திய வரலாற்றை எழுதிய பல ஐரோப்பிய வரலாற்று வல்லுனர்களைவிடப் பண்டார்க்கர் மிகுதியும் திறன் படைத்தவர். இவர் பதஞ்சலியின் காலத்தை ஆய்ந்து நிருணயித்தார். 'தக்காணத்தின் பண்டைய வரலாறு', 'பண்டைய இந்திய வரலாற்றில் ஓர் கண்ணோட்டம்', மற்றும் 'வைணவம், சைவம் மற்றும் சிறு சமயங்கள்' ஆகிய தலைப்புகளில் இவர் எழுதிய நூல்கள் மிகச் சிறந்த வரலாற்றுப் படைப்புகளாகும்.

இலண்டன் மாநகரத்தில் கி.பி. 1876ஆம் ஆண்டு நடைபெற்ற கீழைநாட்டுப் பண்பாட்டு ஆய்வு, அனைத்து நாடுகள் மாநாட்டிற்குப் பண்டார்க்கர் தம்முடைய ஆய்வுக் கட்டுரையை அனுப்பி வைத்தார்; வியன்னா நகரில் கி.பி. 1886ஆம் ஆண்டு நடைபெற்ற அதே மாநாட்டில் நேரடியாகப் பங்கேற்றார். அம்மாநாடுகளில் இவர்தம் ஆய்வுத்திறனையும், அறிவினையும் அறிந்த அறிஞர் உலகம் இவரை மிகுதியும் பெருமைப் படுத்தியது. இவர் பிரிட்டன், செர்மனி, பிரான்சு, இத்தாலி, உருசியா ஆகிய நாடுகளின் ஆசியக் கழகங்களில் மதிப்பியல் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கோட்டின்சன் (Gottingen), கல்கத்தா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பாய்ப் பல்கலைக் கழகங்கள் இவருக்கு மதிப்பியல் முனைவர் பட்டம் அளித்துச் சிறப்புற்றன.

பிரார்த்தன சமாசத்தின் தீவிர உறுப்பினரான பண்டார்க்கர், இந்திய மக்களின் மனத்தைக் கவர்ந்த சமுதாய சீர்திருத்த வாதியாவார். தம் காலத்துப் பழமைக் கருத்துக்களும், மூடநம்பிக்கைகளும் பண்டைய இந்துசமயத்தில் காணப்படவில்லை என்பதனைத் தம்முடைய வடமொழி அறிவினைக் கொண்டு வரலாற்று முறையில் உறுதிப்படுத்தினார். ஆங்கிலேயர் ஆட்சியின் தாக்கத்தினால் இந்தியாவில் சமுதாய மாற்றங்கள் ஏற்படுகின்றன என்றுணர்ந்த பண்டார்க்கர், இந்தியா ஆங்கிலப் பேரரசின்கீழ் இருப்பதைப் பெரிதும் விரும்பினார். இந்தியாவை விட்டு ஆங்கிலேயர் விலகும் பொழுது, இந்தியர்கள் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பிவிடுவர் என்ற கருத்தினைக் கொண்டிருந்தார்.

பண்டார்க்கர் எண்பதாம் வயது நிறைவுற்ற போது 1917ஆம் ஆண்டு சூலை 6ஆம் நாள், இவர் பெயரால் 'பண்டாக்கர் ஆய்வு மையம்' பூனாவில் நிறுவப்பட்டது. பல்வேறு ஆராய்ச்சித் துறைகள் கொண்ட இந்த மையம் மகாபாரதத் துறை என்ற ஒன்றையும் கொண்டுள்ளது. இவர் 1925ஆம் ஆண்டு காலமானார்.

(சி.கே.சி.)

## பண்டாரக் கவிராயர்

இப் புலவர் மேலகரம் என்னும் ஊரில் பிறந்தவர். மேலகரம், திருநெல்வேலி மாவட்டத்தில் திருக்குற்றாலத்தினை அடுத்துள்ளது. இங்கு வாழ்ந்த திரிகூடராசப்பக் கவிராயர் திருக்குற்றாலத் தலபுராணம், குற்றாலக் குறவஞ்சி ஆகிய நூல்களை இயற்றிப் புகழ்பெற்றவர்.

திர்கூடராசப்பக்கவிராயர் இலஞ்சி முருகனை வேண்டிப் பெற்ற புதல்வரே கவிராயர் ஆவார். இவரது இயற்பெயர் தெரியவில்லை. இவர் கவி இயற்றுவதில் வல்லவர். இவர் உள்ளம் சொற்களஞ்சியம், பொருட் களஞ்சியங்களால் நிறைந்ததாகையால், இத்தகையோரால் இயற்றப்பட்ட செய்யுள்களும் சொற்களஞ்சியம், பொருட் களஞ்சியமாகத் திகழ்ந்தமையால் இத்தகைய களஞ்சியங்கள் நிறைந்த பண்டாரம் எனப் போற்றினார்கள் (பண்டாரம் - கருவூலம், சரக்கறை). இக்காரணத்தால் பண்டாரக் கவிராயர் எனப் போற்றப்பெற்றார்.

திரிகூடராசப்பக் கவிராயரின் மூத்த புதல்வராகத் தோன்றிய இவர் இலஞ்சி முருகனையே வழிபடு கடவுளாகக் கொண்டார். இலஞ்சிக்கோவில் திருக்குற்றாலத்தின் வடக்கே அமைந்துள்ளது.

இம் முருகப்பெருமான் திருவீதி உலா வருதலைக் கண்டு மகிழ்ந்து வழிப்பட்ட அவர் அப்பெருமான் மீது 'உலாப் பிரபந்தம்' பாடத் தொடங்கினார். இவ்வுலா நூலிற்கு 'இலஞ்சித் திருமுருகன் உலா' எனப் பெயரிட்டார். இவ்வுலாவில் இலஞ்சி முருகனின் எழிலார் திருவடிவம் இனிதே போற்றப் பெற்றுள்ளது. உலாவில் முருகப்பெருமானுடன் வரும் குழாங்களின் சிறப்பைக் கவிராயர் தரும் அழகு போற்றற்பாலதாகும். முருகன் எழுந்தருளும் வாகனம், அதனில் ஏறியருளும் சிறப்பு ஆகியவற்றையும் அவ்வுலாவைக் காணக் குழுமியுள்ளோர் சிறப்பையும் தமக்கேயுரிய வருணனைத் திறனால் ஓவியமாக்கிக் காட்டுகிறார். அவ்வுலாவைக் கண்ட ஏழு பருவப்பெண்களுடைய நிலைகளையும் அவர்கள் வயதிற்கேற்ற உளப்பாங்கினையும் இவர்கள் இலஞ்சித் திருமுருகனிடத்திலே ஈடுபடும் சிறப்பையும் விளக்கிக் காட்டும் திறம் போற்றற்பாலது. கலிவெண்பாவால் இயற்றப்பெற்ற அந்நூல் நானூற்றறுபது கண்ணிகளால் அமைக்கப் பெற்றுள்ளது.

இத்தகைய நூல்களோடு இவர் பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார்; தம் தந்தை திரிகூடராசப்பக் கவிராயரைப் போலவே சொல்நயம், பொருள்நயம் பெறப் பாடுவதில் சிறந்து விளங்கினார். இவர் நூல்கள் பல வெளிவாராமற் போயின. உலா மட்டுமே இவர் புகழை நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறது.

(சு.சா.)

## பண்டார சாத்திரம்

சைவ சித்தாந்த சாத்திரங்கள் எனப் பெறும் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்தவை பண்டார சாத்திரங்கள் ஆகும். இவையும் பதினான்கு நூல்களாகும். திருவாவடுதுறை ஆதீனப் பண்டாரங்கள் செய்தமையால் இவை பண்டார சாத்திரங்கள் எனப்படுகின்றன.

சைவத்துறவிகளை 'பண்டாரம்' என்றழைப்பர். சைவ மடங்களின் தலைவர்களை 'பண்டார சந்நிதி (கள்)' என்று கூறுவது வழக்கம். பண்டாரம் என்பது கருவூலம் எனப்பொருள்படும். அந்த வகையில் ஆதீன குருமகா சந்நிதானங்களாகிய பண்டார சந்நிதிகள் அருளிச் செய்த ஞானக் கருவூலங்களே பண்டார சாத்திரங்களாகும்.

பண்டார சாத்திரங்களும் அவற்றின் ஆசிரியர்கள் விவரமும் வருமாறு:

1. அம்பலவாணதேசிகர் தசகாரியம்
2. சன்மார்க்க சித்தியார்
3. சிவாச்சிரமத் தெளிவு
4. சித்தாந்தப் பஃறொடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சித்தாந்த சிகாமணி

6. உபாயநிட்டை வெண்பா

7. நிட்டை விளக்கம்

8. உபதேச வெண்பா

9. அதிசய மாலை

10. நமச்சிவாய மாலை

11. தட்சணா மூர்த்தி தேசிகர் தசகாரியம்

12. உபதேசப் பஃறொடை

13. சுவாமிநாததேசிகர் தசகாரியம் - சுவாமிநாததேசிகர் இயற்றியது

14. பஞ்சாக்கரப் பஃறொடை - பேரூர் வேலப்ப தேசிகர் இயற்றியது.

பாஷாண்ட நிராகரணம், அநுபோக வெண்பா, ஞானத்தாராட்டு (தாலாட்டு), உற்சவ விளக்கம், முத்தி பஞ்சாக்கர மாலை ஆகிய ஐந்து நூல்களையும் மேற்கூறிய பதினான்கு சாத்திரங்களுடன் சேர்த்துக் கூறுவதும் உண்டு.

தசகாரியம் என்பது தசம் - பத்து, காரியம் - செயல் என அமையும். அவை தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பனவாம். தத்துவம், ஆன்மா, சிவம் எனும் மூன்று பொருள்கள் ரூபம், தரிசனம், சுத்தி எனும் மூன்று அனுபவநிலைகளுடன் சேர்ந்து (3X3=9) ஒன்பது செயல்கள் ஆகின்றது. சிவத்தில் சுத்தி சொல்லப் பெறாமல் சிவயோகம் எனப் பெறும். இவற்றின் பயனாக வருவது சிவபோகம் ஆகும். அதாவது ரூபம் - தரிசனம் - சுத்தி - யோகம் - போகம் என்ற ஐந்து நிலைகள் பத்து செயல்களாகத் திகழ்வது தசகாரியம் எனப் பெறுகின்றது. (ந. ச. ம.)

## பண்டார மும்மணிக்கோவை

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் தம் குருநாதராகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை ஞானம் பொதிந்த களஞ்சியமாகக் கண்டு அவர்கள் பெயரிற் பாடிய மும்மணிக் கோவையே பண்டார மும் மணிக்கோவையாகும். திருவாரூர் நான்மணிமாலை, சகலகலாவல்லி மாலை, தில்லைச் சிவகாமி அம்மன் இரட்டை மணிமாலை, மதுரை மீனாட்சி அம்மன் இரட்டை மணி மாலை எனக் கடவுள்க்குப் பாமாலை புனைந்து சூட்டிய குமரகுருபரர் தமது குருநாதருக்கு ஆசிரியம், கலித்துறை, வெண்பா என்ற முறை வைப்பில் அந்தாதியாகப் பாடிப் பண்டாரமும்மணிக் கோவை என்னும் இந்நூலை இயற்றினார்.

அத்துடன் அவர் சிதம்பர மும்மணிக்கோவை என்னும் ஒரு நூலும் புனைந்துள்ளார்கள்.

இந்நூல் சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துக்கள், இலக்கிய நயங்கள், உருக்கமிகு வேண்டுகோள்கள் மரபுச் செய்திகள் பலவற்றின் விளக்கங்கள் ஆகியவற்றைக் கொண்ட நூலாக உள்ளது. குருவின் பெருமையைச் சமய இலக்கியங்களும், சாத்திரங்களும் நிறைவாக விவரித்துக் கூறியிருப்பது உண்மை. எனினும் அப் பெருமைகளை முழுமையாகவும் தனியாகவும் விரித்துரைக்கும் நூல் இதுவொன்றே ஆகும். சிவமே குருவாக எழுந்தருளியிருத்தலை நூலின் பல இடங்களிலும் சுவாமிகள் அறிவித்துள்ளார். முதற் பாடலில்,

*மீகெழு பரஞ்சுடர் வெளிப்பட்டம்ம*
*எம்மனோர் போல இனிதெழுந் தருளிக்*
*கைம்மா றற்ற கணக்கில் பேரின்ப*
*மோனவாழ் வளிக்கும் ஞான தேசிகன்*

என்று கூறியுள்ளார். எனவே பரம்பொருளிடத்தில் வேண்டுவதாகவே இவர் தம் வேண்டுகோள்கள் அமைகின்றன. ஐந்து புலன்களும் ஐந்து பக்கங்களுக்கு இழுக்க, இந்தப் பிறப்பு, இறப்பு என்னும் சாகரத்தில் உழலாது முத்தி அடைவதற்கு ஞானம் வழங்க வேண்டும் என்று இரந்து நிற்கிறார்.

*இறவாநிலைமை பெற்று இன்பமர்த் திருக்கும்*
*பிறவா நன்னெறி பெறப் புரிவதுமே*
*ஈதியால் நின்னருள்*
*ஈண்டெனக் கருளுதி இறைவ*

என்னும் இவ்வேண்டுதல்களை இறைவனிடம் உருக்கமாக வேண்டுகிறார். இவ்விடத்தில் குமரகுருபரர் விண்ணுலக ஆட்சியும் தமக்கு வேண்டுவதில்லை குருவின் பரிகலம் மாந்திப் பாவக்கடல் உழக்கும் நமலியாய்ப் பிறந்தாலும் போதும் என்கிறார்.

மூன்றாம் ஆசிரியப்பாவில் முழுமையாகச் சமயக் கருத்துக்களை அமைத்துப் பாடுகிறார். மிக்க சுவையோடு செய்திகளைச் சொல்கிறார். உயர்ந்தோன் தலைவனாகி இழிந்தோட்புணரினும் இழிவெனப்படாது. எனவே இழிந்தவராகிய தாம் அவரைக் காதலித்தமையால் தம்மைக் கைப்பிடித்தல் தகும் என்கிறார்.

நான்காம் ஆசிரியப்பா மிக்க சிறப்புடையது. எங்குமே இவர் பாடல்கள் உருவகமாய் இருக்கின்றன. இங்கு ஆசாரியர் உயிர்த்தொகுதி உய்வதற்காகக் குடிலை என்னும் வயலில் அருள் ஆகிய வித்திட்டு, கருணை என்னும் நீர் பாய்ச்சி, வேதம் என்னும் மரத்தை வளர்த்தார். அதிற் பலபேர் பயன்பெற்றார்கள். இலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளிர், அரும்பு, மலர், பிஞ்சு, அருங்காய் என்று அவரவர் விருப்பம் போல் பெற்றார்கள். ஆனால் அவை அல்லாமல் சிலரே அதனிடத்துச் சைவ சித்தாந்தமாகிய கனிபிழிந்து தேனமுது பெற்றனர் என்கிறார்.

*பல்லுயிர்த் தொகுதியும் பயங்கொண் டுய்கெனக்*
*குடிலை யென்னுந் தடவயல் நாப்பண்*
*அருள்வித் திட்டுக் கருணை நீர் பாய்ச்சி*
*வேதம் என்னும் பாதவம் வளர்த்தனை*
*பாதவ மதனிற் படுபயன் பலவே அவற்றுள்*
*இலைகொண் டுவந்தனர் பலரே, இலையொரீஇத்*
*தளிர் கொண் டுவந்தனர் பலரே, தளிரொரிஇ*
*அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை*
*விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே*
*அவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப*
*ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த*
*ஆரா வின்ப வருங்கனி பிழிந்து*
*சாரங் கொண்ட சைவ சித்தாந்தத்*
*தேனமு தருந்தினர் சிலரே*

என்று கூறிச் சைவசித்தாந்தத்தின் ஏற்றத்தை உலகறிய உணர்த்தினார்.

இவர் தம் பத்தாம் ஆசிரியப்பாவில் உன் சந்நிதிபட்ட மாத்திரத்தில் எனக்குச் சத்திநிபாதம் எய்தியது. அதனால் சரியை, கிரியை, யோகம், போகம் என்றெல்லாம் கூறாமல் நாளை என்று தட்டாமல் உடனே அருளவேண்டும் என வேண்டுகிறார்.

(நி. நி.)

# பண்டிகைகள்

இந்துக்களது சமய, சமூக வாழ்வியலில் விழாக்களும் விரதங்களும் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. இந்துக்களின் வாழ்க்கை இலட்சியத்தின் இறுதிப் பேறான முக்தியை அடைவதற்கு இவை வழிகாட்டியாகவும் அமைந்துள்ளன. இதனால் இவை இந்துக்களின் வாழ்க்கையில் மாறி மாறி அனுஷ்டிக்கப்படும் தினங்களாக வருகின்றன. இவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் அகத்தூய்மை, புறத்தூய்மை, புனிதத் தன்மை, ஐக்கியம், நல்லிணக்கம், தேசிய உணர்வு முதலியவை மேலோங்குகின்றன

பண்டிகை என்பது தாம் சார்ந்த சமூகத்திலும், சமயத்திலும் முக்கியத்துவம் பெற்றதாகக் கருதப்படும் நிகழ்வுகளை நினைவு கூருவதாகவும், தொழில்துறைகளில் தாம் பெற்ற பயனுக்கு நன்றி கூறுவதற்காகவும், விருப்புடனும், விருந்துடனும், மகிழ்வுடனும் கொண்டாடப்படும் விசேட விழாக்கள் பண்டிகை எனப்படும். வருடத்தில் ஒருமுறை ஒரு விசேட காரணம் கருதி, நன்றி செலுத்துதல், நினைவு கூரல், அருள் வேண்டல், பயன் பெறுதல் என்னும் நோக்கங்களுக்கு இசைவாக அமைவதும் பண்டிகைகளாகும்.

| | |
|---|---|
| தைப்பொங்கல் | தீபாவளி |
| சித்திரை வருடப்பிறப்பு | காமன் பண்டிகை |
| ஆடிப்பெருக்கு | போகிப் பண்டிகை |
| ஓணம் பண்டிகை | |

என்பன இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளில் குறிப்பிடத் தக்கனவாகும்.

## தைப்பொங்கல்

தைப்பொங்கல் பெருநாள் உழவர் திருநாள். விதைத்ததின் பயனை அறுவடை செய்து ஆனந்தமடையும் நல்நாள். பால் பொங்குவது போல உள்ளம் பொங்கி உவகையடையும் உயரிய நாள். என்றெல்லாம் தைத்திருநாளைப் போற்றி நிற்பர்.

தைமாதம் முதல் தேதியை மகர சங்கராந்தி என்பர். உத்தராயணம் தொடங்கும் நாளும் அதுவே. தென் திசையிலிருந்து வடக்கு நோக்கிச் சூரியன் திரும்புவதை உத்தராயணம் என்பர். தை தொடக்கம் ஆனி ஈறாகவுள்ள ஆறு மாதங்களைக் கொண்ட உத்தராயணம் புண்ணிய காலம் என்றும், மங்கள காரியம் நடைபெறுவதற்குரிய காலம் என்றும் கூறுவர். இந்நன் நாளிலேயே தைப்பொங்கல் பண்டிகையும் வருகின்றது. இதனாலேதான் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என ஆன்றோர் செப்புகின்றனர்.

பயிர்த்தொழிலே உலகத்துக்கு உயிர்த்தொழில். உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே. உண்டியை உதவுகின்றவர்கள் உழவர்களே. மிகப் பழங்காலத்திலிருந்தே அவர்களுடைய வாழ்வில் ஒரு விழாவாகக் கொண்டாடப்பட்டு வந்திருக்கின்றது. தொல்காப்பியருடைய காலத்திலே இத்தகைய விழா கொண்டாடப் பட்டதற்கு ஆதாரமுண்டு. அறக்களவேள்வி யென்றும், மறக்கள வேள்வியென்றும் இருவகையான வேள்விகள் பற்றிய செய்திகள் பழந்தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. அறக்கள வேள்வியை "ஏரோர்களவழி" என்று தொல்காப்பியம் பேசும். இதனையே இக்காலத்தில் தைப்பொங்கல் விழாவாகக் கொண்டாடுகிறோம். ஆனால் இந்த விழாவை ஆரம்ப காலத்தில் கொண்டாடிய முறையும், இக்காலத்தில் கொண்டாடும் முறையும் மாறுபட்டிருக்கின்றது. இவ்வாறு முறையும், பெயரும் மாறுபட்டிருந்தாலும் அடிப்படை நோக்கத்தில் மாறுபாடு எதுவுமில்லை.

இவ்விழா வயல் அறுவடை முடிந்ததும் பொருத்தமான இடத்தை தெரிவு செய்து, நெற்கதிரையெல்லாம் குவித்து வைத்து, அருகில் களம் அமைத்துக் கொண்டு, அதன் அருகாமையில் குடிசையும் இட்டு, கரும்புகளை ஒழுங்காக பரப்பிக்கட்டிய குடிசையை நெற்கதிர்களால் வேய்ந்து கொள்வார்கள். அடித்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகற்றித் துப்பரவு செய்யப்பட்ட களத்தில் நெற்கதிர்களைப் பரப்பி அதன்மேலே மாடுகளை ஏற்றி நெல்மணிகளை வேறாக்குவர். இவ்வாறு பெற்ற நெல்லை அரிசியாக்கிக் கொண்டு அதே களத்தில் பொங்கல் பொங்கிப் படைத்துப் பலி கொடுத்த பின்பு, அங்கு வந்துள்ள பரிசிலாளர்களுக்கு அவரவர் வரிசைக்குத் தக்க பரிசில்கள் அளிக்கப்படும். அதன்பின் இனசனத்துடன் பொங்கல் உண்டு மகிழ்வர். இத்தகைய விழாவை 'சாறு கொள் களம்' என்று பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன.

தைப்பொங்கல் தமிழர் திருநாளாதலின் இப்பொங்கல் வகையறாக்களில் தமிழர் தம் பண்பாடுகளும் சுடர் விட்டுப் பிரகாசிப்பது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. சூரியனே உலகிற்கு வெயிலையும், மழையையும் கொடுக்கின்றான். பூமியிலே உயிர்கள் உற்பத்தியாகி செழித்து வளம் பெறுவதும் அவனாலே. அத்தகைய சூரியபகவானுக்கு நன்றி செலுத்த பொங்கல் பொங்கிப் படையலிட்டுப் புத்தாடை அணிந்து வழிபாடு இயற்றப்படுகின்றது.

சூரியனுக்கு நன்றி பாராட்டும் மக்கள் தமக்கும் தம் உழவிற்கும் உறுதுணையாக இருந்த பசுக்களையும், எருதுகளையும் நீராட்டி வண்ண மைகளினால் அலங்கரித்துப் பட்டியில் பொங்கல் பொங்கிப் படைத்து, அவற்றிற்கும் பொங்கல் ஊட்டி தாமும் உண்டு மகிழ்ச்சியடைவர். இதனை மாட்டுப் பொங்கல் என அழைப்பர்.

தையிலே இடம் பெறும் முதற் பொங்கல் ஆகையால் அனைத்தும் புதியனவாகவே நடைபெறும். புத்தாடை அணிந்து, புதிய நெல்லைக் குற்றி எடுத்த அரிசியைப் புதிய பானையில் இட்டு, புது அடுப்பு மூட்டி முற்றத்தில் பொங்குவர். பொங்கல் பானையில் புதிய மஞ்சள், இஞ்சி, கரும்புக் கொத்துக்களைக் கட்டி, பசும்பாலில் பொங்கலைத் தயார் செய்வார்கள். பால் பொங்கும் போது "பொங்கலோ பொங்கல்" எனக் கூவிப் பானையில் குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் அரிசியிட்டு மகிழ்வார்கள். முற்றத்தில் கோலமிட்டு, புதிதாக விளைந்த காய் கனிகளையும், பொங்கலுடன் சேர்த்துப் படைத்து, வாசலில் பிள்ளையார் பிடித்து வைத்து, விளக்கேற்றிச் சூரியனை வழிபாடு செய்து போற்றுவர்.

### சித்திரை வருடப்பிறப்பு

ஓர் ஆண்டைக் கணிக்கும் முறைகளில் இரு கணிப்பு முறைகள் தென்னாட்டில் முக்கியம் வாய்ந்தன. அவை சௌரமானம், சாந்திரமானம் என்பனவாகும். சௌரமானம் என்பது சூரியன் மேடராசியிலிருந்து மீனராசிவரையுள்ள பன்னிரு இராசிகளிலும் சஞ்சரிக்கும் காலங்களைச் சூரிய மாதங்களாகக் கணக்கிட்டு, சித்திரை முதல் பங்குனி வரையுள்ள பன்னிருமாதங்களைக் கொண்டதே ஓர் ஆண்டு எனக் கொள்ளும் முறையாகும்.

இந்துத் தமிழ் மக்கள் சித்திரை மாதப்பிறப்பை புத்தாண்டு எனக் கருதியே கொண்டாடுகின்றனர். சூரியன் மேடராசியில் புகும் தமிழ்ப்புத்தாண்டு பிறப்பிற்கு இரு முக்கியத்துவங்கள் கூறப்படுகின்றது. அவற்றில் ஒன்று பிரமன் சித்திரை மாத முதல் நாளன்றே தனது படைப்புத் தொழிலைத் தொடங்கியதாக புராணமரபு கூறுகின்றது. மற்றது, வடதிசை நோக்கிச் செல்லும் சூரியன் மதுரை மீனாட்சியம்மன் கோயிலின் கருவறையைக் கடந்து செல்லும் தினம் சித்திரை முதல் நாள் ஆகும்.

சித்திரைப் புத்தாண்டு அன்று பிறக்கும், பஞ்சாங்கம் குறிக்கும் சுப நேரத்தில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட மருத்து நீரைத் தலையில் வைத்து நீராடி, புத்தாடை அணிந்து, திருக் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்தல் வேண்டும். அதற்கு முன்பு சூரியனுக்குப் பொங்கலிட்டு இல்லத்தில் வழிபாடு இயற்றல் வேண்டும். பிறந்த சுபநேரத்தில் கைவிஷேசம் பரிமாறிப், பெரியோர்களிடம் ஆசீர்வாதம் பெறுதல் வேண்டும். இந்நாளில் புது விதைப்பு, புதிய கணக்குத் தொடங்குதல், புது வாணிப முயற்சிகள் தொடங்குதல், புதிரெடுத்தல், வித்தியாரம்பம் முதலிய நற்கருமங்களும் தொடங்கும் வழக்கம் தமிழ் மக்களிடம் உள்ளது.

தென்னாட்டில் வருஷப்பிறப்பன்று நவக்கிரக பூசை, பித்ரு தர்ப்பணம், காலை அல்லது மாலையில் பஞ்சாங்க பூஜை, சோதிடம் அறிந்தவரைக் கொண்டு பஞ்சாங்க படனஸ்வரணம் பாநக பூஜை அக்காலத்திற்கேற்றபடி உஷ்ணத்தை அடக்கும் படியான பருப்பு, சுண்டல், பழங்கள், நீர், மோதகம், பானகம், விசிறி, பஞ்சாங்கம், தாம்பூலத்துடன் தட்சணை முதலியவைகளை பந்துக்களுக்கும் சாதுக்களுக்கும் அளிப்பதென தொன்று தொட்டு நடந்திருக்கின்றது. கேரளத்தில் கேரளத்தவர் அன்று அதிகாலையில் எழுந்தவுடன் முதலில் நல்லதைக் காண வேண்டும் என்று கனிவர்க்கம், காய்கறிகள், புதுவஸ்திரம், ஆபரணம், நவரத்தினம் முதலியவைகளை முதல் இரவே ஓரிடத்தில் கொலுபோல் அழகாக அமைத்து, அதிகாலையில் தீபமேற்றி அதனைத் தரிசிப்பர். காலைக் கர்மாக்களை முடித்து புதுவஸ்திரம் அணிந்து பெரியோரை நமஸ்கரிப்பர்.

### சித்திரா பௌர்ணமி

சித்திரை மாதத்தில் வரும் பூரணை தினம் இந்துக்களுக்குப் ஒரு புனித தினமாகும். இத் தினத்தையொட்டி சித்திர குப்தனை நோக்கி விரதமிருந்து பிதிர்களுக்குக் கடன் செய்தல் வேண்டும். உயிர்கள் புரியும் பாவக்கணக்குகளை பரீசீலிக்கும் பொறுப்பு சித்திரகுப்தனையே சாரும் என்பது புராணக்கதை. இந்நாளில் பொன், வெள்ளி இவைகளாலான பதுமையில் சித்திர குப்தனை இருத்தி நியமப்படி வழிபாடு செய்ய வேண்டும். அன்னம், வெல்லம், எள், பால், நெய், பழம் முதலியவற்றைப் படைத்தும், கஞ்சி வார்த்தும் வழிபடல் வேண்டும். இதனைச் "சித்திரைக் கஞ்சி" எனக் கூறுவர். நாம் இறந்த பின் நரகத்திற்குச் செல்லாதிருப்பதற்கும், யமபயமில்லா திருப்பதற்கும் இவ்விரதமும், விழாவும் அனுட்டிக்கப்பட்டு வருவது குறிப்பிடற்பாலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபாவளி

இந்துக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் இதுவும் ஒன்று. இப்பண்டிகையுடன் தொடர்புடைய மரபுக் கதைகள் வடநாட்டில் வேறாகவும், தென்னாட்டில் வேறாகவும் அமைந்து காணப்படுகின்றன. வடநாட்டவரின் கதைப்படி இராமன் வனவாசம் முடித்து அயோத்திக்கு வரும்போது அயோத்தி மக்கள் தீபங்களை ஏற்றி இராமனை வரவேற்றதினமே தீபாவளி என்பர். வடநாட்டில் சுகராத்திரி, தீபோற்சவம், ஜெகத்ராத்திரி, தீபமாலாவர்ணம், யட்ச ராத்திரி என்னும் பெயர்களில் தீபாவளி கொண்டாடப்படுகின்றது. அந்நாட்டில் இப்பண்டிகையை மூன்று நாட்கள் கொண்டாடுவர். அவை சோடா தீபாவளி, படாதீபாவளி, நரகாசுரன் வதை செய்த தீபாவளி எனக் கருதியவைகளாக அமைகின்றது.

தென்னாட்டில் உள்ள கதைப்படி பூமாதேவிக்கும், திருமாலுக்கும் மகனாகப் பிறந்த நரகாசுரன் கடுந்தவம் புரிந்து பல கொடுமைகளைப் புரிந்து வந்தான். இதனால் பகவான் கிருஷ்ணராக அவதாரமெடுத்து சத்திய பாமாவுடன் சேர்ந்து பஞ்ச ஆயுதங்களைக் கொண்டு நரகாசுரனை வதைசெய்த தினமே தீபாவளி தினம் எனக் குறிப்பிடப்படுகின்றது. இறக்கும் தறுவாயில் அவ் அசுரன் ``நான் அழியும் இத்தினத்தில் மக்கள் மகிழ்ந்து நீராடிப் புத்தாடை அணிந்து உன்னை வழிபடுவர். அவர்களுக்கு அருள் புரிவீர்`` எனக் கூறி இறந்து போன தினத்தையே சைவர்களும் வைணவர்களும் தீபங்களை வரிசையாக ஏற்றிக் கொண்டாடினார்கள். மகாராஷ்டிரம், உத்திரப்பிரதேசங்களில் மகாபலியின் சாம்ராட்சியத்தை விஷ்ணு வாமன அவதாரம் எடுத்து வென்ற நாளையே தீபாவளியாக கொண்டாடுகின்றனர். வங்காளம், பஞ்சாப் பிரதேசங்களிலும் வேறுவேறு கதைப்பின்னணியில் இப்பண்டிகை கொண்டாடப்பட்டு வருகின்றது.

சமண நூல்களின்படி சமணர்களிடமிருந்து பெற்றக்கொண்ட பண்டிகையாகக் கூறப்படுகின்றது. சமண இறுதி தீர்த்தங்கரரான வர்த்தகமான மகாவீரர் விடிய விடிய சொற்பொழிவு நடாத்தி தாம் அமர்ந்த ஆசனத்திலிருந்தபடியே வீடுபேறடைந்தார். அவர் வீடுபெறு அடைந்த நாளில் வீடுகளில் விளக்குகளை ஏற்றி வழிபாடு செய்யும்படி அக்காலத்து அரசன் ஏற்பாடே இதுவாகும் எனக் கூறப்படுகின்றது. தீபாவளி என்பது தீபம் = விளக்கு, ஆவலி = வரிசை எனப் பொருள்பட்டு `தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்தல்` என அர்த்தப்படுகின்றது.

ஐப்பசிமாத தேய்பிறை சதுர்த்தசித் தினத்தன்று உதயத்தில் எண்ணெய் தேய்த்து நீராடிப் புத்தாடை அணிந்து, ஆலய வழிபாடு செய்து மாலையில் வீடுகளில் தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்து வெற்றிலை பாக்கு, பழம், வெல்லப் பண்டங்கள் படைத்து கண்ணகியையும் சத்தியபாமாவையும் வழிபடவேண்டும். வட பாரதத்தில் பழைய பொருட்களை நீக்கி விட்டுப் புதுப்பொருள் வாங்குதல், வீட்டில் மாவிளக்கேற்றல், சாணத்தால் செய்த மனித உருவத்தின் தலையில் விளக்கேற்றல், கோவர்த்தன கிரி உருவம் செய்து அதனைச் சூழ்ந்து ஆடிப்பாடுதல், மணமான பெண்கள் பூசை செய்த பின் தங்கள் சகோதரர்களுக்குத் திலகமிட்டு விருந்துக்கு அழைத்தல் போன்றவைகள் கொண்டாட்டங்களாக நடைபெறும்.

ஒவ்வொருவரது மனதிலும் இருளை அகற்றி ஞான ஒளியினை அடையச் செய்வதனையே தீபாவளிப் பண்டிகையின் தத்துவம் உணர்த்தி நிற்கின்றது. அதாவது நல்லெண்ணம் என்னும் எண்ணெய்யை எமது உடலில் பூசி, சித்தம் என்னும் அரப்பினால் அழுக்காகிய கோபம் ஆகியவற்றை தேய்த்துப் போக்கி, ஞானமாகிய புதிய ஆடையைப் பூண்டு புனிதமானவர்களாக விளங்குதல் வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது.

## ஆடிப்பெருக்கு

ஆடிமாதம் மங்களகரமான காரியங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாதமாகும். ஆடித்திங்களில் முதன் முதலாக ஆறுகளில் நீர் பெருகி வருவதைக் களிப்புடன் வரவேற்று இந்துக்களால் கொண்டாடப்படும் பண்டிகை இதுவாகும். ஆடி 18ஆம் நாளில் கொண்டாடப்படுவதனால் ஆடி பதினெட்டு அல்லது பதினெட்டாம் பெருக்கு எனவும் கூறுவர். தமிழர் இவ்விழாவை ஆடிப்பிறப்பு என்றே கூறுகின்றனர்.

தென்னாட்டு மக்கள் காவிரி போன்ற ஆற்றங்கரைகளில் சித்திரான்னம் உண்டு, படகோட்டம் போன்ற கேளிக்கைகளில் பங்கு பற்றி இவ்விழாவைக் கொண்டாடுவார்கள். ஈழநாட்டில் ஆடிக்கொழுக்கட்டை, பனங்கட்டிக் கூழ் போன்றவற்றை விருந்துகளுடன் விசேடமாகத் தயாரித்து, உறவினர்களுக்கும் பகிர்ந்தளித்து உண்டு மகிழும் இனிய பண்டிகையாக ஆடிமாதப் பிறப்பு விளங்குகின்றது.

## காமன் பண்டிகை

பாங்குடை மதனைப் பொடியாய் எரித்து, அவன் தேவி வெண்ட முன் கொடுத்த விமலனார்` எனச் சம்பந்தப்பெருமான் சிவன் காமாரி வடிவம் பூண்டு காமனைத் தகனம் செய்த புராண வரலாற்றைப் பாடுகின்றார். இப்புராண மரபுடன் தொடர்புடைய பண்டிகையே இதுவாகும். அட்டவீரட்டானத் தலங்களில் திருக்குறுகை என்னும் சிவத்தலத்தில் இவ்வரலாறு நிகழ்ந்தது எனக் கூறுவது சைவ மரபு. தமிழ் நாட்டில் இம்மரபை கூத்து வடிவில் நிகழ்த்திக் காட்டும் நிகழ்வாக இடம் பெற்று வருகின்றது. காலப்போக்கில் இதன் நிலை மாற்றமடைந்து காமன் கூத்து என்னும் கலை வடிவமாக முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஈழத்தில் உள்ள மலையக மக்களின் மங்காத கலை நிகழ்வாக இப்போதும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஓணம் பண்டிகை

ஆவணி மாதத்துப் பூரணையுடன் கலந்த திருவோண நட்சத்திரம் பெரும்பாலும் இவ்விழாவின் நாளாக அமையும். மலையாள தேசத்தவர்களுக்கு இந்த நாளே ஆண்டின் மிகமிகச் சிறந்த நாள். இவ்விழா சாதிமதபேதமின்றிக் கொண்டாடப்பட்டு வருகின்றது. சிறுபோக அறுவடை விழாவாகவும் இதனைக் கொண்டாடுவர். சைவர்கள் ஐப்பசி ஓணத்தில் இவ்விழாவைக் கொண்டாடினார்கள் என்று சம்பந்த பெருமான் கூறியுள்ளார்.

*'மைப்பயந்த ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்*
*கைப்பயந்த நீற்றான் கபாலீச்சர மமர்ந்தான்*
*ஐப்பசி ஓணவிழாவும் அருந்தவர்கள்*
*துய்ப்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய்?'*

ஓண நட்சத்திரம் திருமாலுக்குரிய விசேட நட்சத்திரமாயினும், எவ்வித பேதமும் இன்றிச் சைவர்களே கொண்டாடியுள்ளார்கள். அறுவடையில் கிடைத்த பொருளைக் கொண்டு அரிய தவத்தோர்களாகிய அடியார்கள் திருவமுது செய்த காட்சியும் குறிக்கப்பட்டன. ஓணத்தில் கொடியேற்றமும், கிருத்திகையில் தீர்த்தவாரியும் நடைபெறும் எனத் தல வரலாறு கூறுகின்றது.

திருமால் மூன்றடி மண் கேட்டு மகாபலிச் சக்கரவர்த்தியை வென்று அடக்கிய போது, அச்சக்கரவர்த்தி ஒவ்வோராண்டிலும் திருவோண நட்சத்திரத்தன்று ஒரு நாளாவது இந்த நாட்டையும் மக்களையும் நான் காணவேண்டும் என்று திருமாலைக் கேட்டுக் கொண்டான். இதையொட்டி சக்கரவர்த்தியின் நினைவு நாளாகவும் அவர் மக்களைக் காணவரும் நாளாகவும் இவவிழா நடைபெறுகின்றது என்றும் சொல்வர்.

ஓணம் என்ற சொல்லுக்கு ஆறு என்ற பொருளும் உண்டு. "கங்கையாதி ஓணநீர்" என்று சேது புராணம்கூறுகின்றது. அந் நன்னாளில் புனித தீர்த்தங்களில் நீராடி சிவனையோ திருமாலையோ வழிபாடு செய்வர். வீர விளையாட்டுக்களும், தானம் வழங்குதல் போன்றவைகளும் இந்நன்னாளில் இடம் பெறும்.

### போகிப் பண்டிகை

பொங்கலுக்கு முதல்நாள் கொண்டாடப்படும் பண்டிகை இதுவாகும். 'போகி' என்பது வீட்டிலும், மனித உள்ளத்திலும் உள்ள அழுக்குகளைப் போக்கும் நாளாகும். 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்னும் முது மொழிக்கேற்ப வீட்டில் உள்ள பழைய பொருட்களை முற்றத்திலே தீயிட்டு எரிப்பார்கள் அதே போல் பழைய வருடத்தில் கடைப்பிடித்த மலமாசுக்களையும் அன்றைய தினம் எமது உள்ளத்தை விட்டு அகல வேண்டும் என்பதே இப்பண்டிகையின் தத்துவமாகும். மார்கழி மாதத்தின் இறுதி நாள் போகி நாளாகும். வடநாட்டில் இவ்விழாவை இந்திரனுக்கு வழிபாடு இயற்றும் விழாவாகவே கொண்டாடுகின்றனர். தமிழர் மழையை அளித்து விளைவைப் பெருக்க வைக்கும் தன்மை கொண்ட இந்திரனுக்கு விழா எடுத்து வழிபாடியற்றினர் எனக் கூறப்படுகிறது. (சு. து.)

## பத்தராய்ப் பணிவார்

பத்தராய்ப் பணிவார் என்போர் பெரியபுராணத்துள் தனி அடியார் அறுபத்து மூவரைத் தவிர்த்துத் தொகையடியாராகக் கூறப்பெற்ற ஒன்பது வகையினருள் ஒரு பிரிவினராவர். தொகையடியார், தில்லைவாழ் அந்தணர், பொய்யடிமையில்லாப் புலவர், பத்தராய்ப் பணிவார், முப்போதும் திருமேனி தீண்டுவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலுமடிச் சார்ந்தார் என்போராவர். பத்தராய்ப் பணிவார் யார் என்று அத்தொகையடியாரைப் பற்றிக் கூறும் பகுதியில் சேக்கிழார் சுவாமிகள் எட்டுத் திருப்பாடல்களில் மிகவும் சுவை ததும்பக் கூறுகிறார்கள். அவ்வெட்டுப் பாடல்களில் காணப்பெறும் பண்புகளைச் சுருக்கி அடியார் பக்தி, சிவபூசை மகிழல், சிவார்ச்சனை புரிதல், சிவார்ப்பணம் செய்தல், சிவபுண்ணிய வரலாறுகளைக் கேட்டல், இறைவனை நினைத்துப் பரவசமாதல், சிவன் அடியைத் தினைத்துணையும் மறவாதிருத்தல், பொய்வேடமின்மை என்னும் எட்டாகக் கூறலாம். சிவனடியார்களைக் கண்டால் பசுவைக் கண்ட கன்று போல பிரியாதுறைந்து மனம் மொழி மெய்களாலும் அவர்க்கினியன செய்ய வேண்டும். சிவபெருமான் திரு உருவத்தை எங்கு கண்டாலும் எண்ணத்தால், உறைத்த பக்தியால் அகத்தும் புறத்தும் நோக்கி வழிபாடாற்ற வேண்டும். இறைவனையோ அவன் அடியாரையோ நிறைந்த அன்புடன் வழிபட்டுப் போற்ற வேண்டும். இவ்வுடம்பால் செய்த நல்வினைகளையெல்லாம் பெருமானுக்காகட்டும் என உரிமையாக்கி மீண்டும் பிறவா நெறியை அடைய முயல வேண்டும். ஆரவாரமற்ற உள்ளன்போடு இறைவன் புகழைக் கேட்டும் படித்தும் இன்புற்றிருக்க வேண்டும். இறைவனை நினைந்து நினைந்து அவன் பெருமையையும் தன் சிறுமையையும் எண்ணி அப்படி வேறுபட்டிருந்தும் அவன் எளிவந்து தன் அருளுக்கு ஆளாக்கவேண்டும் என நினைத்து, ஆட்கொள்ள நினைக்கும் அருளை மெய்ம்மயிர்க் கூச்செறிய ஆனந்தக் கண்ணீர் உகுத்து எண்ணி இன்புற வேண்டும். 'நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும் மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்' என்னும் திருப்பாட்டில் பத்தரைப் படம்பிடித்துச் சேக்கிழார் சுவாமிகள் காட்டியுள்ளார். அடியார் வேடம் பூண்டு தன்னலம் பேணாது இறைவன் பெருமையை எடுத்துரைக்கும் நிலையினராய் இருக்க வேண்டும். இவை போன்ற பண்புடையோரே பத்தராய்ப் பணிவார் எனச்சேக்கிழார் குறிப்பிடும் சிறப்பு மிகவும் மேலானது.

(அ.இரா.ச.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரகிரியார்

முடிசார்ந்த மன்னராக இருந்தும், முற்றத் துறந்த பட்டினத்தடிகளின் சீடராகி ஞானியின் அடிசார்ந்து பேறுபெற்று பட்டினத்தாருடன் வைத்து எண்ணப்பட்டவர் பத்திரகிரியார்.

துளுவ நாட்டில் உஞ்சேனைமாகாளம் என்னும் பகுதியை ஆண்ட மன்னர் பத்திரகிரியார். இவர் அரண்மனையில் திருடத் திட்டமிட்ட கள்வர் பலர், தங்கள் நாட்டம் கொண்ட வேட்டை பலிக்க, அந்த நகர்ப்புறத்துக் காட்டிலுள்ள விநாயகப் பெருமானை வேண்டினர். பெருஞ்செல்வங்களைக் கொள்ளையிட்டுத் திரும்பும் பொழுது விலைமிக்க மாணிக்க மாலையொன்றைப் பிள்ளையார் கழுத்தில் வீசிவிட்டுச் சென்றார்கள். நள்ளிருளாக இருந்ததால், இந்த மாணிக்கமாலை பிள்ளையாருக்குப் பின்னால் யோகநிட்டை யிலிருந்த பட்டினத்துப் பிள்ளையார் கழுத்தில் விழுந்தது. இறையுணர்வில் ஒன்றியிருந்த பட்டினத்தார் இதை உணரவில்லை. திருடர்களும் அறியவில்லை. மறுநாள் அரண்மனைக் காவலர் தேடி வந்து, கழுத்தில் அரசனுடைய மாணிக்கமாலையுடன் யோகத்தில் ஆழ்ந்து கண்மூடியிருந்த பட்டினத்தாரை அப்படியே தூக்கிக் கொண்டு சென்று அரசன் முன் விட்டார்கள். பட்டினத்தார் கழுத்தில் துலங்கும் மாணிக்க மாலையைக் கண்டதும் ஏதும் விசாரிக்காமல் அவரைக் கழுவேற்ற அரசன் ஆணையிட்டான். கழுமரத்தடியில் அழைத்துச் செல்லப்பட்ட பட்டினத்தார் யோகநிட்டை கலைந்து கழுமரத்தைப் பார்த்தார். 'என் செயலாலாவது யாதொன்றுமில்லை' எனத் தொடங்கும் திருப்பாடலை அருளினார். உடனே கழுமரம் தீப்பற்றி எரிந்தது. இதையறிந்த அரசன் ஓடிவந்து பற்றி எரியும் கழுமரத்தையும் பாசம் அறுத்த பட்டினத்தடிகளையும் கண்பெற்ற பேற்றால் கண்டு தன்னை மறந்து வழிபட்டான். அடிகளின் அடிகளில் அடியற்ற மரம்போல் வீழ்ந்த அரசனுடைய பக்குவத்தை உணர்ந்த பட்டினத்தார் பத்திரகிரி மன்னனுக்கு உபதேசித்தார்.

அவர், தம் சீடராகிய பத்திரகிரியாரைப் பார்த்துத் 'திருவிடை மருதூர்க்குச் செல்க' என ஆணையிட்டார். அதன்படி பத்திரகிரியார் திருவிடைமருதூர் செல்ல பட்டினத்தாரும் அங்குச் சென்றார். பட்டினத்தார் கீழ்க்கோபுர வாயிலிலும் பத்திரகிரியார் மேலைக் கோபுர வாயிலிலும் இருந்தனர். பத்திரகிரியார் வீடுதோறும் பிச்சையெடுத்து, குருநாதனுக்குப் படைத்து எஞ்சிய உணவை தாம் உண்டார். பசி கொண்ட பெண்நாயொன்று பத்திரகிரியார் பக்கத்தில் வந்து வாலைக் குழைத்து நின்றது. மனமிரங்கிய பத்திரகிரியார் அதற்கும் அன்னமிட அந்நாயும் அவரோடு தங்கலாயிற்று. அந்த நாய் முற்பிறப்பில் விலைமகளாயிருந்து தானும் தன் சோரநாயகனும் உண்ட உணவின் மீதியைக் குருவின் ஆணைவழி ஒழுகிய ஒரு சிவஞானிக்குப் பிச்சையிட, அந்த ஞானி அதைக் குருவுக்கு அர்ப்பணித்துப் பசியாறினார். நாய்ப் பிறவி வந்தாலும் சிவஞானியின் பசி தீர்த்த புண்ணியத்தால் பத்திரகிரியாரின் எச்சிலையருந்தும் பேறு கிடைத்தது.

இந்நிலையில் பத்திரகிரியார் பெருமையை உலகுக்கு அறிவிக்க எண்ணிய சிவபெருமான் ஒரு சாதுவாக வடிவெடுத்து பட்டினத்தாரிடம் சென்று 'பசியாயிருக்கிறது அன்னமிடுங்கள்' என வேண்ட, பட்டினத்தார் 'நான் இந்தக் கோவணத்தையே பாரமாகக் கருதுகிறேன். மேலைக் கோபுர வாசலில் ஓர் குடும்பி இருக்கிறான். அவனிடம் செல்க' என்றார். ஏழை பங்காளனாகிய இறைவன் பத்திரகிரியாரிடம் வந்து 'கீழைக்கோபுர வாயிலில் உள்ள பெரியவர்பால் அன்னம் கேட்டேன். அவர் மேலைக்கோபுர வாயிலில் ஒரு குடும்பியிருக்கிறான் அவன்பாற் செல்க என்றார். அவர் கூறியபடி என்பசி மாற்றுக' என்றார். இதைக்கேட்ட பத்திரகிரியார் 'பிச்சையெடுக்கும் திருவோடும் எச்சில் அருந்தும் இந்நாயுமல்ல வா என்னைக் குடும்பி (சம்சாரி) ஆக்கிவிட்டன' எனக் கூறித் திருவோட்டை எறிந்தார். அது நாய்மீது தாக்க, நாயும் இறந்து ஓடும் உடைய, வந்த சாது மறைந்தருளினார். இதையுணர்ந்த பத்திரகிரியார் 'மெய்ஞ்ஞானப் புலம்பல்' பாடி உருகினார். இறந்து போன நாய் ஞானியின் எச்சிலையுண்ட மேன்மையினால் காசி மன்னன் மகளாகப் பிறந்தது. ஞானவல்லியாக வளர்ந்தது. மணப்பருவமுற்ற பெண்ணுக்கு மன்னன் மாப்பிள்ளை தேடி முயன்றான். அம்மன்னன் திருவிடைமருதூருக்கு மகளை அழைத்து வந்தான். ஞானவல்லி பத்திரகிரியாரை வணங்கினாள் 'அடிநாய் மறுபடியும் திருவடி நாடி வந்தது' என்றாள். பத்திரகிரியார் அவளை அழைத்துக்கொண்டு பட்டினத்தாரிடம் சென்றார். 'குருதேவா! தங்கள் எச்சிலையுண்ட நாய்க்கும் பிறவி உண்டாகலாமோ' என்று பத்திரகிரியார் கேட்க, 'எல்லாம் சிவன் செயலேயாம்' என்றார் பட்டினத்தார். அப்போது ஒரு பெருஞ்சோதி தோன்றப் பத்திரகிரியாரும் ஞானவல்லியும் சிவப்பேரொளியில் கலந்து பெருவாழ்வு பெற்றனர். ஒரு சித்திரை மாதம் மக நாளில் பத்திரகிரியார் பரஞ்சோதியில் கலந்தார்.

பட்டினத்தார் என்ற பெயரில் இரண்டு பெருமக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். ஒருவர் கி.பி.10ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்து 11ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ள பிரபந்தங்களைப் பாடியவர். மற்றொருவர் கி.பி. 14ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி. 15ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர். இந்த இரண்டாம் பட்டினத்தார் காலமே பத்திரகிரியார் காலமாகும்.

வள்ளலார் சாத்திரம் என்ற நூலின் சிவஞான வள்ளல் பத்திரகிரியாரைக் குறிப்பிடுகிறார். 'துறவாவது பற்றறத் துறத்தல், கர்மத்தை நீங்கலாவதெப்படி? பட்டினத்தார், பத்திரகிரி, சுகர், வாமதேவர், சடபரதர் முதலாயினோர் பற்றற நிற்றல் போல' என்று குறிக்கிறார். சிவஞான வள்ளல் காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி. எனவே, பத்திரகிரியார் கி.பி. 14ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் கி.பி. 15ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் என்பது பெறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெண் சித்தர் ஞானக்கோவை என்ற நூல் பத்திரகிரியாரைச் சித்தருள் ஒருவர் என்று குறிக்கிறது. பத்திரகிரியார் அருளிய மெய்ஞானப்புலம்பல் என்னும் நூல் காப்பு உள்பட 231 கண்ணிகளைக் கொண்டது. தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுதல், தேங்காக் கருணை வெள்ளம் தேக்குதல், பேய்போல் இருந்து பிரமை கொள்ளல் ஆகிய அனுபவங்களையும், ஆன்மா கருவிகளோடு அவத்தைகளில் புகுவதையும், அட்டாங்கயோகம், புழு குளவியாவது ஆகியவற்றையும் அழகாகப் பாடுகிறார் பத்திரகிரியார். ஆவியொடு காயம் அழிந்தாலும் மேதினியில் பாவியென்ற நாமம் படையாதே என்ற சான்றோர் கருத்தை, 'பாவியென்றே பேர்படைத்துப் பாழ்நரகில் வீழாமல், ஆவிநின்ற சூத்திரத்தை அறிவதினி எக்காலம்?' என்று பாடுகிறார் பத்திரகிரியார்.

இவர் இயற்றிய மெய்ஞ்ஞானப் புலம்பல் என்னும் நூல் 231 கண்ணிகளைக் கொண்டது. இக் கண்ணிகள் வேதாந்தக் கருத்துக்களையும், தத்துவங்களையும் விளக்கும் ஞானத் தமிழ் மாலையாக விளங்குகின்றது. மனிதன் ஞானம் பெறுவதற்கு முயலவேண்டும் என்ற இவரது கருத்துக்களால் இதற்குப் புலம்பல் என்ற தகுதியும் வந்தது. குருவணக்கம், பரம்பொருள் வாழ்த்து, ஆன்மா, கர்மவினையும் பிறவித் தளையும், ஆசை, நிலையாமை, புலனடக்கம், யோகம், பிராணாயாமம், தியானம், சமாதி, முக்தி ஆகிய விடயங்கள் இவரது நூலில் இடம்பெற்றுள்ளன.

இறப்பு, பிறப்பு என்ற பிறவிக் கடலில் நீந்துபவர்கள் பிறவா நிலையாகிய முத்தி பெறுவதையே தமது குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். அதற்கு குருவின் வழிகாட்டல் அவசியம் என்கிறார் பத்திரகிரியார். கர்மபந்தங்களால் பிறவிகளிற் சிக்கி உழலுகின்ற மானுட வாழ்வை வலையில் சிக்கித் தவிக்கும் மீனுக்கு ஒப்புக் கூறுகிறார். இத்துயரத்தில் இருந்து மனிதரை மீட்க வல்லவர் குருதேவரே ஆவர்.

*தூரியினில் மீன்போல் துக்கித்து வாடாமல்*
*ஆரியனைத் தேடி அடிபணிவ தெக்காலம்*

தன்னிடம் உள்ள ஞானத்தால் பாவிகளின் கர்மபந்தத்தை ஒழிக்கவல்ல குருநாதரைத் தேடி அடிபணிய ஏங்குகிறார்.

முதலில் குருதேவரைப் போற்றிய பின் பரம்பொருளின் உண்மைத் தன்மையையும், அதன் இருப்பையும் பாடுகிறார் பத்திரகிரியார். பரம்பொருளைப் படித்தோ, பேசி விவாதித்தோ, பூசைகள் செய்தோ உணர முடியாது. இறைவனைத் தேடி அலைவதைக் கீழ்மையாகக் கூறுகிறார். இறைவன் வெளியே இருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கும்வரை மனிதன் அஞ்ஞானி. அது தன்னிடம் இருக்கின்ற நிலையை அறிவதே மெய்ஞ்ஞானம் என்பதை அவரது பின்வரும் பாடல் வலியுறுத்தி நிற்கிறது.

*ஓடாம லோடி உலகைவலம் வந்துசுற்றித்*
*தேடாம லென்னிடமாய் தெரிசிப்ப தெக்காலம்*

மனிதன் ஆத்மாவை அறிகின்றபோது பரமாத்மாவையும் அறிந்து விடுகின்றான். மானுட உடம்போடு கூடிய ஆசாபாசப் பற்றுக்கள் பரமாத்மாவிலிருந்து ஜீவாத்மாவை வேறுபடுத்துகின்றன. பற்றுக்கள் தகர்ந்தபோது ஜீவாத்மா பரமாத்மாவோடு சங்கமிக்கிறது. இதுதான் ஆன்ம விடுதலை. இதையே உன்னில் பிறந்து உன்னில் ஒடுங்குவது எக்காலம் எனக் கூறிக் கலங்குகிறார்.

பரம்பொருளிலிருந்து வந்த ஜீவாத்மா ஓர் உடம்பைத் தாங்கி மண்ணுலகில் சீவிக்கிறது. தனது வாழ்நாளில் தான் தேடிக் கொண்ட கர்மவினைகளுக்கும், ஆசாபாசங்களுக்கும் ஏற்ப மரணத்துக்குப் பின் உடல் எடுக்கிறது. பிறப்பு, இறப்பு என்னும் இச் சங்கிலித் தொடர் தொலைய வேண்டுமானால் உலகப் பற்றுக்கள் அகல வேண்டும். பற்றுக்களை அறுக்கின்ற வல்லமை தவத்துக்கு மட்டுமே உண்டு.

*கருவின் வழியறிந்து கருத்தைச் செலுத்தாமல்*
*அருவி விழிசொரியத் தவமுடிப்ப தெக்காலம்*

என ஏங்குகிறார்.

கர்மவினைகளை மனிதன் சேர்ப்பதற்கு மூலகாரணமாக இருப்பது ஆசை. ஆசை என்பது மனித மனத்துக்குள் புகுந்தால் அங்கே சகல பாவங்களும் புகுந்துவிடும்.

*ஆசைவலைப் பாசத் தகப்பட்டு மாயாமல்*
*காசில் ஒரு பொருளாய்க் கண்படுவ தெக்காலம்*

ஆசாபாசக் குற்றங்கள் இல்லாத ஒரு தூய்மையான நிலை ஏற்படுவது எப்போது எனப் புலம்புகிறார்.

கர்மபந்தங்களே பிறவிக்கு வித்தாகிறது. பந்தங்களினின்றும் விடுபட ஆசையை அறுக்க வேண்டும். ஆசை அறுபடுவதற்கு உலகமும், உடலும், சுகபோகங்களும் நிலையற்றவை என்பதை உணர வேண்டும். இந்நோக்கில் பத்திரகிரியார் தமது மெய்ஞ்ஞானப் புலம்பலில் நிலையாமை பற்றி அழகாக எடுத்துக் கூறி உள்ளார்.

*நீரிற் குமிழிபோல் நிலையற்ற வாழ்வைவிட்டுன்*
*பேரின்பக் கருணை வெள்ளம் பெருக்கெடுப்ப தெக்காலம்*

மானுட வாழ்வு நிலையற்றது. நீரின்மேல் தோன்றும் குமிழி எப்போது வேண்டுமானாலும் உடைந்து போகும் தன்மையுடையது. அது போன்றே மானுட ஆயுளும் முடிந்து போகக் கூடியது. எனவே நிலையற்ற இந்த வாழ்விற்காக ஏங்கித் தவிக்காமல் பிறவாப் பெருவாழ்வு பெற்றுயர வேண்டும் என இறைஞ்சுகிறார்.

இவ்வுலக வாழ்வும், பெறும் போகங்களும் நிலையற்றவை என்பதை உணர்ந்து நாம் செயற்படுவதற்கு ஐம்புலன்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கி வாழும் வல்லமை அவசியம் எனப் பாடியுள்ளார். இந்தப் புலன்கள் ஐந்தும் நம் கட்டுப்பாட்டில் இல்லாமல் தன்னிச்சையாகத் திரிவதனால்தான் வினைகள் நிகழ்கின்றன. இவ்வினை தாம் எமது பிறவிப் பெருந்துயருக்குக் காரணமாய் அமைகின்றன. ஆகவே ஆமை தனது ஓட்டுக்குள் தன்னை ஒளித்துக் கொள்வது போலப் புலன்களைத் தனக்குள்ளே ஒடுக்கி மௌனமான தியான நிலை எய்த வேண்டும் என்கிறார்.

*ஆமை வருமாட்கண்டு ஐந்தடக்கம் செய்தாற்போல்*
*ஊமை உருக்கொண்டு ஒடுங்குவதும் எக்காலம்*

என்பது அவரது ஏக்கம்.

புலன்களையும், மனதையும் ஒரு நிலைப்படுத்துவது அசாத்தியமான காரியம். இது விரிவான ஒருவகைப் பயிற்சி. யோக நெறிகளால் மட்டுமே கைவரக் கூடியது. ஆகவே புலனடக்கத்தின் அவசியத்தையும், மனதின் சமநிலையையும் வற்புறுத்திய பத்திரகிரியார் அதற்கு வழியாக யோக நெறியைக் கூறுகிறார். யோகநெறி என்பது ஆசனம், பிராணாயாமம், தியானம், சமாதி என நான்கு பிரிவுகளைக் கொண்ட ஒழுங்குபடுத்தப்பட்ட நெறியாகும். இந்த நான்கு முறைகளும் உடம்பு, உயிர், மனம், ஆன்மா என்ற நான்கையும் உயர்த்தி மனிதனைப் படிப்படியே உயரச் செய்கிறது.

பொதுவாகச் சித்தர்கள் மனித குலத்திற்குச் செய்கின்ற போதனைகளைக் கூர்ந்து நோக்கின் அவர்கள் அனைவரும் யோகநெறியை வற்புறுத்தி நிற்பதை அவதானிக்கலாம். அவ்வாறே பத்திரகிரியாரும் யோகநெறி நிற்றலை தமது பாடல்களில் வலியுறுத்தி உள்ளார்.

*வேதாந்த வேதமெலாம் விட்டொழிந்தே நிட்டையிலே*
*ஏகாந்தமாக இருப்பதினி எக்காலம்*

வேதங்களும், வேதாந்தங்களும் மெய்ப்பொருளாகிய பரம்பொருள் அனுபவத்தை விளக்குகின்றன. அவற்றைப் படித்துப் பெறுவது வெறும் ஏட்டறிவு. அவ்வறிவு பேரானந்தம் பெற உதவாது. வேதாந்த வழியாகிய யோக நெறியை அப்பியாசம் செய்வதன் மூலம் பரமானந்தப் பேறு எய்தலாம் என்கிறார்.

எத்தனை நாள் வாழ்ந்தாலும் மரணம் ஒரு நாள் வந்தே தீரும். மரித்ததும் பிறப்பும் தொடரும் சுகதுக்கங்களும் தொடரும். இந்தத் துயரத்தினின்றும் விடுதலை வேண்டும். இதற்கான பாதையைத்தான் பத்திரிகிரியார் தன் மெய்ஞானப் புலம்பலில் அழகாகக் கூறியுள்ளார்.

இவர் தம் கண்ணிகள், வேதாந்தக் கருத்துகளையும் தத்துவங்களையும் விளக்கும் ஞானத்தமிழ் மாலையாக விளங்குகின்றன. பாராளும் பதவியையே பட்டினத்தார் பார்வையினால் விட்டு வந்த பத்திரகிரியார், குருநாதன் காணச் சிவனொளியில் கலந்தார். இவருடைய பற்றற்ற மனம், இன்ப துன்பங்களைக் கண்டு மகிழ்ந்தும் வருந்தியும் அல்லற்படும் மக்களுக்குத் தக்க வழிகாட்டியாக அமைகிறது. (ஸ்ரீ. பி.)

## பத்திரபாகு முனிவர்

பத்திரபாகு என்பவர் சமணப்பெரியார்களுள் ஒருவராவார். சுருதகேவலி பத்திரபாகு கி.மு. 317 - கி.மு. 297 முடியச் சமண சமயத் தலைவராகப் பணிபுரிந்தார். இவர் மௌரியப் பெருமன்னரான சந்திரகுப்தருக்குச் (கி.மு. 322-298) சமய குருவாகவும் விளங்கினார். சமண சமயம் தென்னகத்தில் பரவ இவரே காரணமாக இருந்தார். மைசூர்ப் பகுதியில் தங்கிச் சமயப்பணி புரிந்த இவர் அங்கேயே காலமானார்.

மைசூர்ப் பகுதியில் கிடைத்துள்ள கல்வெட்டுகளும் பத்திரபாகு சரித்திரம் என்னும் வடமொழி நூலும், அரிசேனர் இயற்றிய பிரகத் கதாகோசாக்கு என்னும் வடமொழி நூலும், சிந்தானந்த கவி (கி.பி. 1680) என்பார் இயற்றிய 'முனிவம்சாபயுதய' என்னும் கன்னட நூலும், தேவசந்திரரால் இயற்றப்பட்ட இராசாவளிசரிதம் (கி.பி.1838) என்னும் கன்னட நூலும் பத்திரபாகு சரவண பெல்கோலாவில் தங்கியிருந்து, சமயப் பணியாற்றிய செய்தியைக் குறிப்பிடுகின்றன. மைசூர் நாட்டு வரலாறும், இடப் பெயர்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன. சமண முனிவரான பத்திரபாகுவும் சந்திரகுப்த மௌரியரும் தென்னிந்தியாவிற்கு வந்தசெய்தி, சமணர்களால் ஒரு மரபு வரலாறாகப் பேசப்படுகிறது.

மகத நாட்டில் பன்னீராண்டு பெரும் பஞ்சம் ஏற்பட விருந்தது. இதனை முன் கூட்டியே அறிந்து கொண்ட பத்திரபாகு முனிவர், பன்னீராயிரம் சமண முனிவர்களைக் கொண்ட சங்கத்தைப் பஞ்சத்தின்றும் காக்க முற்பட்டார். எனவே, இவர் அவர்களைப் பஞ்சமில்லாத தென்னிந்தியாவிற்கு அழைத்து வந்தார். மன்னன் சந்திரகுப்த மௌரியரும், தமது அரசபதவியைத் துறந்து, இம்முனிவரின் சீடராகி, இவருடன் தென்னிந்தியாவிற்கு வந்தார். தென்னிந்தியாவிற்கு வந்த இவர்கள், கர்நாடக மாநிலத்திலுள்ள சரவண பொல்கோலாவில் தங்கிச் சமணப்பள்ளியை நிறுவிச் சமண சமயத்தைப் பரப்பினர். பத்திரபாகு முனிவர் தம் சீடரான விசாக முனிவரை அனுப்பிச் சோழ, பாண்டிய நாடுகளில் சமணக் கோட்பாடுகளைப் பரவச் செய்யத் தக்க ஏற்பாடுகளைச் செய்தார்.

பத்திரபாகு இறந்த பின்னர், சந்திரகுப்தரும் சமணசமய மரபுப் படி வடக்கிருந்து உயிர் நீத்தார். பத்திரபாகு முனிவரின் பெயரில் மைசூரில் குகையொன்றுள்ளது. அவர் அக்குகையில் வசித்து சமயப் பணிபுரிந்து அங்கேயே இறந்தாரெனக் கருதப்படுகிறது. அங்குள்ள காலடிச்சுவடுகள், இம்முனிவருடையன எனக் கருதப்பட்டுப் பூசிக்கப்படுகின்றன. இக்குகையிலுள்ள கி. பி. 1110ஆம் ஆண்டினதான கல்வெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று இம் முனிவரின் அடிச்சுவடுகளுக்கு வழிபாடு செய்யப்பட்டதனைக் குறிப்பிடுகிறது. (ந.சு.ம.)

## பத்திராசலம்

இது ஆந்திரப்பிரதேசம் நல்கொண்டா மாவட்டத்தில் உள்ள புகழ் பெற்ற ஒரு திருமால் திருத்தலம். கோதாவரி ஆற்றின் இடக்கரையில் உள்ள ஒரு சிறு குன்றின் மீது அமைந்துள்ளது. இராசமுந்திரியிலிருந்து இது ஏறத்தாழ 120 கி.மீ. தொலைவு மேற்கே உள்ளது. இராமபக்தரும் சிறந்த பாடலாசிரியருமான இராமதாசரால் இக்கோயில் கட்டப்பட்டது. பத்திரன் என்ற முனிவருக்கு இராமர் அருள் பாலித்த இடம் என்று தலபுராணம் குறிப்பிடும். இக்கோயிலில் இராமர், சீதை அமர்ந்த நிலையிலும், இலட்சுமணர் நின்ற நிலையிலும் காட்சி தருகின்றனர். கோவிலைச் சுற்றி 12 ஆழ்வார்களின் சிறு கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இராமர் சந்நிதிக்கு நேரே இராமதாசரின் கோயில் உள்ளது. தம்புராவை ஏந்தி இராமரைப் பாடும் நிலையில் அவரது திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. இராமபத்திரர் ஆலயத்திற்கு அருகில் மலைமீது குசண அரநாதர் என்னும் ஆலயம் உள்ளது. இவ்வாலயம் இராமதாசருக்கு முன்பே கட்டப்பட்டது. இவ்வாலயத்துக்கு அருகே இராமதாசர் கட்டிய பிறிதொரு கோவிலும் உள்ளது. இராமதாசர் செய்து கொடுத்த வெள்ளி அனுமன் வாகனமும், வெள்ளிக்கருட வாகனமும் சிறப்பானவை. இக்கோயிலில் இராமநவமி சிறப்பாகக் கொண்டாடப்படும் திருவிழாவாகும். (வெ.பா.)

## பத்திரிநாத்

இதனைப் பதரீ, பதரி நாராயண, பதரிகாசிரமம் என்றும் கூறுவர். இது இருசிகேசம் என்னும் இடத்திலிருந்து 268.கி.மீ. தொலைவில் இருக்கிறது. இமயமலையில் கடல் மட்டத்தின் மேல் 3400 மீ. உயரத்தில் உள்ளது. சய, விசய என்ற இரு மலைச் சிகரத்தின் நடுவில் அலக்நந்தா ஆற்றின் கரையில் இவ்வூர் அமைந்துள்ளது.

இத்தலத்தில் வியாசர் குடில் அமைத்துப் பாரதம், புராணங்கள் ஆகியன இயற்றினார் என்று கருதுகின்றனர். பராசரர் என்ற முனிவர் மனுதரும சாத்திரத்தை இங்கே இயற்றினார். நர நாராயண என்ற முனிவர் இங்கே தவம் புரிந்தார்.மேலும் நாரதர், துருவன், பிரகலாதன், சந்திரன், உத்தலன் முதலியோர் தவம் புரிந்தனர். புரூரவர் ஊர்வசியோடு இங்கே உலவினார் என்பதும் புராணச் செய்தி.

இத்தலத்தைக் குறித்துப் பதுமபுராணம் உத்தர காண்டம், மகாபாரதம் வனபர்வம், வராக புராணம், பாகவதம், தேவிபாகவதம் ஆதி பிரகம புராணம் (69ம் அத்தியாயம்), கருடபுராணம், பூர்வாபார்சுகாந்த புராணம், கேதார காண்டம் (1-58).வாமன புராணம் ஆகிய புராண நூல்களில் குறிப்புகள் உள்ளன.

'அலக்நந்தா' ஆற்றின் தெற்கில் பத்திரிநாத் கோவில் உள்ளது. அக்கோவிலில் 45 அடி உயரமுள்ள இரண்டு கையுடைய நாராயணன் காட்சி அளிக்கிறார். அச்சிலை சாளக்கிராமம் எனப்படும் கல்லினால் உருவானது.

பத்திரி நாராயணனை முற்காலத்தில் தேவர்கள் பிரதிட்டை செய்தனர் என்பர். அப்பொழுது நாரதர் பூசனை புரிபவராக இருந்தார். காலப்போக்கில் பௌத்தம் வளர அம்மூர்த்தியைப் புத்தராக வழிபட்டனர். ஆதிசங்கரர் அதை மீண்டும் பத்ரி நாராயணனாக வீற்றிருக்கச் செய்தார். மேலும் அங்கு நாரதர், விநாயகப் பெருமான், கருடன் ஆகிய மூர்த்திகளையும் அமைத்தார். பத்ரிநாதர் கோவிலை வைகாசி முதல் கார்த்திகை வரை திறந்து வைப்பர்; பிறகு மூடி விடுவர். குளிர் காலத்தில் பத்திரிநாராயணன் உற்சவ மூர்த்தியைச் யோதிர் மடத்தில் வைத்துப் பூசை செய்வது வழக்கம்.

பத்திரிநாதனைப் பூசிப்பது 'நம்பூதிரி அந்தணர்' என்பது குறிப்பிடத்தக்கது. பூசிப்பவர் 'இராவல்' என்று கூறப்படுவர். அக்கடவுளுக்குச் சோற்றினைப் படையலாக வைப்பது மரபு. அதனைச் சாதி, மத வேறுபாடு இல்லாமல் உட்கொள்வதும் மரபு. பத்திரியில் இருசி கங்கை, கூர்மதாரா, பிரகலாத தாரா, தப்த குண்டம், நாரத குண்டம் என ஐந்து தீர்த்தங்கள் உள. இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் தம் வாழ்க்கையில் தவறாமல் தரிசிக்க வேண்டிய திருத்தலங்களுள் ஒன்று பத்திரி ஆகும். (இ.ச.)

## பத்தினித் தெய்வம்

கண்ணகி வழிபாடு மிகப் புராதனமானது. கண்ணகியை பத்தினித் தெய்வம் என்று சொல்வதும் மரபாகும். இவ்வழிபாடு ஒரு கால கட்டத்திலே பௌத்த சமய தொடர்பு பெற்றுவிட்டது. சிலம்பு தந்த சிலப்பதிகாரத்தின் பிரதான கதாபாத்திரமாகக் கொள்ளப் பட்டதோடு, மணிமேகலையிலே பத்தினித் தெய்வம் பௌத்த சமயக் கோயிற் படிமக் கோலத்தில் இருந்தமைப் பற்றிச் சொல்லப் படுகின்றது. தென்னிந்திய பௌத்தச் சமயத் தொடர்பின் விளைவாக இலங்கையிலும் அவ்வழிபாடு பரவியது. இலங்கையில் ஏற்பட்ட சூழ்நிலை மாற்றங்களின் காரணமாக பௌத்த சமயம் தமிழரி டையே வழக்கொழிந்த காலத்திலே பத்தினி வழிபாடு தொடர்ந்து நிலைப்பெற்றதோடு காலப்போக்கில் சைவ சமயத்தோடு சங்கமமாகி விட்டது.

இப்புராதன வழிபாட்டை இலக்கியங்கள், கோயில்கள், படிமங்கள் போன்ற தொல்பொருட் சின்னங்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர, சோழ, பாண்டிய நாட்டவர் போற்றிய பெருமை கண்டவள் கண்ணகி என்பதைச் சிலப்பதிகாரம் எனும் நூல் சாற்றும். பத்தினியாகிய கண்ணகியைப் பற்றிச் சிலப்பதிகாரங் கூறும் சில பகுதிகளைக் குறிப்பிடுவது இங்கு பொருத்தமான தாகும். அந்நூல் மேல்வருமாறு சொல்கிறது.

"பட்டாங்கி யானுமோர் பத்தினியே யாமாகில்
ஓட்டே னரைசோ டொழிப்பேன் மதுரையு மென்
பட்டிமையுங் காண்குறுவாய் நீயென்னா விட்டகலா
நான் மாடக் கூடன் மகளிரு மைந்தரும்
வானக் கடவுளரு மாதவருங் கேட்டீமின்
யானமர் காதலன் றன்னைத் தவறிழைத்த
கோநகர் சீறினேன் குற்றமிலேன் யானென்
றிடமுலை கையாற் றிருகி மதுரை
வலமுறை மும்முறை வார வலம் வந்து
மட்டார் மறுகின் மேனி முலையை வட்டித்து
விட்டா ளெறிந்தாள் விளங்கிழையாள்."

கணவனாகிய கோவலனுக்கு நேர்ந்த அநீதியால் ஆவேச முற்ற பத்தினியாகிய கண்ணகி பாண்டியரின் அரசோடு மதுரை மாநகரையும் ஒழிப்பேனெனச் சபதமிட்டாள். நான்மாடக் கூடல் மாந்தரையும் மாதவரையும், வானவரையும் விழித்துக் கதறினாள். நகரினை மும்முறை வலம் வந்து தன் இடது முலையினைத் திருகிப் பெயர்த்து வீதியிற் சபித்து எறிந்தாள். பத்தினி கூறிய வெஞ்சினம் பலிக்குமென்பதை உணர்ந்த அக்கினிதேவன் வந்தான்; அந்தணன் உருவிற் செந்தழல் கொணர்ந்து எரியூட்டினான். காவற்தெய்வங்கள் தென்னவன் மாநகரை விட்டு நீங்கலாயின. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றுவனாகியது. கோல் கோடின் கொனொடு சுற்றமும் நாடும் கேடுறும் என்பது மனுவின் மொழியுமாகும். உரைசால் பத்தினி என்னும் பெற்றியினைக் கண்ணகி பெற்றாள்.

சிலப்பதிகாரத்தின் வஞ்சிக் காண்டத்தில் வருகின்ற குன்றக் குரவைப் (15-22) பாடல்கள் பத்தினியைப் போற்றும் முறைகளைத் தெரிவிக்கின்றன:

சிறு குடியீரே! சிறு குடியீரே!
தெய்வங் - கொள்ளுமின் சிறு குடியீரே!
நிறங்கிளர் அருவிப் பறம்பின் தாழ்வரை
நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்
தெய்வங் கொள்ளுமின் சிறு குடியீரே!
தொண்டகம் தொடுமின் சிறுபறை தொடுமின்
கோடுவாய் வைம்மின்! கொடுமணி இயக்குமின்
குறிஞ்சி பாடுமின் நறும்புகை எடுமின்
பூம்பலி செய்ம்மின் காப்புக்கடை நிறுமின்
பரவலும் பரவுமின் விரவு மலர் தூவுமின்
ஒரு முலை இழந்த நங்கைக்குப்
பெருமலை துஞ்சாது வளஞ்சுரக்க.



காரைதீவு கண்ணகையம்மன்

கண்ணகி மதுரையை எரியூட்டிய பின் மலர்கள் நிறைந்த ஒரு வேங்கை மர நிழலில் நின்ற போது, மதுராபுரித் தெய்வம் தோன்றி இவையெல்லாம் முற்பிறவியின் பயன் எனக் கூறி **"உனது கணவன் இறந்ததிலிருந்து பதினான்காம் நாள் நீ அவனுடன் சேருவாய்"** என்று கூறியதன்படி, பதினான்காம் நாள் பகற்பொழுது சென்ற பின் கண்ணகி வானுலகத்திலிருந்து தேவர்களுடன் தெய்வ வடிவுடன் வந்த கோவலனுடன் வானவூர்தியிலே தேவருலகம் சென்றாள். இக்காட்சியைக் கண்ட சேரநாட்டுக் குன்றக் குறவர்கள் பரவசத்தில் மூழ்கி ஊரவரை அழைத்துக் கண்ணகியை குல தெய்வமாகப் போற்றி வேங்கை மரத்தடியில் தேவகோட்டம் அமைத்து வழிபாடு செய்யும்படி அறிவித்து, இச்செய்தியைச் சேரவேந்தன் செங்குட்டுவனிடம் சென்று தெரிவித்தனர்.

சேரன் செங்குட்டுவன் முதன்முதலாக கண்ணகிக்கு விழா எடுத்தான். இவ்விழாவில் கலந்து கொள்ள அருஞ் சிறையினின்றும் நீங்கிய ஆரிய மன்னர்களும், பெரிய காவற் கூடத்தினின்றும் விடுதலை பெற்ற பிற வேந்தரும், குடக நாட்டுக் கொங்கரும், மாளுவ நாட்டு வேந்தரும், கடல் சூழ் இலங்கை அரசன் கயவாகு மகாராசனும் அழைக்கப்பட்டதாக இளங்கோவடிகள் வரந்தரு கதையில் (155 - 164) மேல்வருமாறு தெரிவித்துள்ளார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வலம்முறை மும்மறை வந்தனன், வணங்கி*
*உலக மன்னவன் நின்றோன் முன்னர்*
*அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்*
*பெருஞ் சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்*
*குடகக் கொங்கரும், மாளுவ வேந்தனும்*
*கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தனும்*
*எந்நாட்டாங் கண் இமைய வரம்பனின்*
*நன்னாள் செய்த நாளணி வேள்வியில்*
*வந்தீ கென்றே வணங்கினர் வேண்டத்*
*தந்தேன் வரம்!......''*

இங்கு கூறப்படுகின்ற கயவாகு வேந்தன் கி.பி. 2ஆம் நூற்றாண்டிலே அனுராதபுரத்தை ஆட்சி புரிந்தவன். இவனாலேயே முதன்முதலில் இலங்கைக்கு இவ்வழிபாடு கொண்டு வரப்பட்டது. இவ் அரசன் சம்புகோளம் எனப்படும் சம்புத் துறைமுகம் வழியாக வந்து இறங்கி அதன் அருகாமையில் உள்ள அங்கணாமைக் கடவை என்னும் இடத்திலேதான் கண்ணகிக்கு முதன்முதலில் கோயில் அமைத்தான் என நம்பப்படுகின்றது. இதை மட்டக்களப்பு ஊர்சுற்றுக் காவியத்தில் பல இடங்களில் தரிசிக்க முடிகின்றது.

*'அங்கணாமைக் கடவை வாழ் கண்ணகையார்'*
*'அங்கணாமைக் கடவை மருவு கண்ணகையே'*
*'நவமான அங்கணாமைக் கடவை வாழ்கின்ற நாயகி'*

## இலங்கையில் பத்தினி வழிபாடு:

இலங்கையிலுள்ள பத்தினி வழிபாட்டின் வரலாறு கயவாகு வேந்தனுடைய வரலாற்றிலிருந்தே ஆரம்பமாகின்றது என்பதை அறிய முடிகின்றது. இலங்கையின் சிங்களப் பிரதேசங்களில் பௌத்த சமய மரபிலும் தமிழர் வாழும் தேசங்களில் இந்துமரபிலும் இவ் வழிபாடு சங்கமித்து விட்டது என்பதே உண்மையாகும்.

ஆடி (எசலா) மாதப் பூரணை நாளில் சிங்கள மக்கள் பத்தினித் தெய்வத்திற்கு விழா எடுத்து வருகின்றனர். அத்தோடு அங்கெலிய என்ற கொம்பு முறித்தலும், போர்த்தேங்காய் அடிக்கின்ற வழக்கமும் பத்தினி வழிபாட்டில் இடம் பெற்றன. தொடர்ந்து கண்டி, இராசரட்டை, உறுகுணை போன்ற பகுதிகளிலும், பிற்காலத்தில் தலை நகரங்கள் மாற்றம் பெற்ற இடங்களிலும் பௌத்த மக்கள் பத்தினிக்குக் கோயில் அமைத்து வழிபட்டு வந்துள்ளனர். சில கோயில்கள் காலப்போக்கில் கை விடப்பட்டன என்றும் அறிய முடிகின்றது. கி.பி. 16ஆம் நூற்றாண்டு முதலாகவுள்ள ராஜாவலிய, கஜபாகுகதா, இராஜரத்தினாகர போன்ற சிங்கள இலக்கியங்களிலும், சிலாசாசனங்களிலும் பத்தினி பற்றிய பல வர்ணனைகள் காணப்படுகின்றன.

இலங்கையில் உள்ள பௌத்தர்கள் நாததெய்யோ, விஷ்ணு தெய்யோ, கதிர்காமத் தெய்யோ என்ற தெய்வங்களுடன் பத்தினித் தெய்யோவையும் சேர்த்து நான்கு காவல் தெய்வங்களாக வழிபட்டு வருகின்றனர்.

அனுராதபுரத்திலே பத்தினி வழிபாடு நிலவியமைக்குரிய ஆதாரங்களை நோக்கும்போது கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திலே வழிபாட்டு அமைவிடங்கள் அமைக்கப் பட்டிருக்கலாம் எனக் கருத முடிகின்றது. ஜேதவனாராமத்துப் பத்தினிப் படிமங்கள் இலங்கையிலுள்ள இவ்வழிபாட்டைப் பொறுத்த வரையில் பல முக்கியத்துவங்களைக் கொண்டு விளங்குகின்றது. இப்படிமங்கள் இவ்வழிபாடு தொடர்பான கால நிர்ணயம், இப்படிமத்திற்கும் பௌத்த சமயத்திற்குமுள்ள தொடர்பு என்பவற்றைத் தெளிவுபடுத்துவனவாகவும் அமைகின்றன. இப்படிமங்கள் ஜேதவனாராமத்திற்கு அருகாமையில் கிடைத்தமையால் அநுராதபுரத்திலே இவ்வழிபாடு நிலவியதென்று கருத முடிகின்றது.

17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ''ராஜாவலிய'' என்ற சிங்கள இலக்கியம் கயபாகு அரசனின் காலத்தில் இவ்வழிபாடு இலங்கையில் ஆரம்பமானது என்ற கருத்தினைப் பிரதிபலிக்கின்றது. ஆயினும் 14ஆம் நூற்றாண்டு வரை பத்தினி வழிபாடு பற்றிய ஆதாரங்கள் எதுவும் காணப்படவில்லை என்பதனால் இவ்வழிபாட்டை கயபாகு அரசனோடு தொடர்பு படுத்தும் மரபுகள் அனைத்தும் ஆதாரமற்றவை என கணநாத் ஒபெயசேகர என்ற சமூகவியலாளர் கூறுகின்றார். காலப்போக்கில் பத்தினி வழிபாடு தமிழரிடையேயும், சிங்களவரிடையேயும் முக்கியத்துவம் பெறுகின்ற வழிபாடாக பரவல் அடைந்தது. இந்துக்கள் செறிந்து வாழும் பல பகுதிகளில் பத்தினிக்குக் கோயில் அமைத்து வழிபாடியற்றும் மரபுகளும் வளர்ச்சி பெறலாயின.

சிங்கள அரசனால் கொண்டு வரப்பட்டது. இவ்வழிபாடு என்பதை அறிய திட்டவட்டமான ஆவணங்கள் எதுவும் கிடைக்கவில்லையாயினும், அநுராதபுரத்திலிருந்து முல்லைத் தீவைச் சேர்ந்த வற்றாப்பளைக்கும் அங்கிருந்து கடல்மார்க்கமாக மட்டக்களப்புக்கும் கொண்டுவரப்பட்டது என்ற செவிவழி மரபொன்று மட்டக்களப்புத் தேசத்தாரிடம் உலாவி வருகின்றது. மட்டக்களப்பிலே உள்ள பெருந்தொகையான கண்ணகி கோயில் எக்கோயில் முதல் எழுந்தது என்ற ஐயம் நிலவுகின்றது. வீரமுனை, காரதீவு, தம்பிலுவில் போன்ற இடங்களில் கிடைக்கின்ற சான்றுகளை வைத்துப் பார்க்கும் போது கண்ணகி வழிபாடு அங்கிருந்தே வேறு இடங்களுக்கு பரப்பப்பட்டிருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது.

மட்டக்களப்பிலே கோயில் கொண்டிருக்கும் கண்ணகியை அத்தேசத்தில் எழுந்த ஊர்சுற்றுக் காவியத்தில் தரிசிக்க முடிகின்றது. அதில் காரைதீவு, தம்பிலுவில், வீரமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கலாக பல இடங்களில் எழுந்தருளியுள்ள விவரங்களை மேல் வரும் பாடலில் தரிசிக்க முடிகின்றது.

*"பட்டிநகர் தம்பிலுவில், காரைநகர், வீரமுனை*
*பவிசு பெறு கல்முனை கல்லாறு மகிழூர் எருவில்*
*செட்டி பாளையம், புதுக்குடியிருப்பு, செல்வ*
*முதலைக்குடா கொக்கட்டிச் சோலை*
*அட்டதிக்கும் புகழ் வந்தாறு மூலை*
*அன்பான சித்தாண்டி நகரதனில் உறையும்*
*வட்டவப் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை*
*மனதினில் நினைக்க வினை மாறி யோடிடுமே."*

(ஊர்சுற்றுக்காவியம் - 71ஆம் பாடல்)

அனுராதபுரத்தில் பத்தினி வழிபாடு நிறுவப்பட்டதற்குப் பின்பு சிங்கள நாட்டிலிருந்த குறுநில மன்னர்கள் தத்தம் இடங்களிலும் அவ்வழிபாட்டைக் கொண்டு சென்ற போது கண்டிக்கும் அம்மரபு சென்றது. பின்பு கண்டியிலிருந்தே மட்டக் களப்பிற்கு கொண்டுவரப்பட்டது என்றும் கூறப்படுகிறது. முற்காலங்களில் கண்டிநகருக்கும், மட்டக்களப்புக்கும் ஓர் பாதை இருந்ததாகவும் அது காரை தீவிலிருந்து சம்மாந்துறை வீரமுனைக்கூடாகச் சென்றது என்றும், அப்பாதை வாணிபத் தொடர்புகளுக்குப் பயன்படுத்தப்பட்டது எனவும் அறிய முடிகின்றது. இப்பாதை வழியாகவே கண்டியிலிருந்து வீரமுனை வழியாகக் கண்ணகி வழிபாடு வந்து மட்டக்களப்பின் வடபிராந்தியங்களில் பரவியது என்றும் கூறப்படுகிறது. இதற்கேற்றால் போல் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி கண்ணகி பறவை போல் பறந்து வந்தாள் என்று வழங்கும் மரபுக் கதைகளும் அமைந்திருக்கின்றன.

இலங்கைக்கு கண்ணகி வழிபாடு வந்த காலத்திலிருந்து ஈழத்தின் வடக்குப் பிரதேசங்களில் பல கண்ணகி கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. முல்லைத்தீவு, பருத்தித்துறை, நயினாதீவு, மட்டுவில், சுட்டிபுரம், செட்டிக்குளம், அளவெட்டி, சுருவில், கரம்பன், புங்குடுதீவு போன்ற இடங்களில் இவ்வழிபாடு பரவலடைந்துள்ளது. வற்றாப்பளைக் கண்ணகியம்மன் கோயில், பன்றித் தலைச்சி கண்ணகியம்மன் கோயில் போன்றவை வட இலங்கையிலே மிகப்பிரசித்தி பெற்ற கோயில்களாகும்.

## இலக்கியங்கள்

தமிழகத்தில் கண்ணகி வரலாற்றை வெளிப்படுத்தும் இலக்கியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை முக்கியத்துவம் பெற்றவை ஆகும். இலங்கையின் வடக்குப் பகுதிகளிலும் கண்ணகியம்மன் மீது பல பிரபந்தங்கள் எழுந்துள்ளன. அவற்றில் வன்னி மாவட்டத்து சிலம்பு கூறல் காவியம், யாழ்ப்பாணத்துக் கோவலன் கதை போன்ற நூல்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

மட்டக்களப்பு தேசத்தில் பேசப்படும் கண்ணகி வழக்குரை மிகவும் பிரசித்தம் வாய்ந்த இலக்கியமாகும். கண்ணகியின் வரலாற்று ஏடு சிறப்பு வாய்ந்தது. அதனுள் ஊர்சுற்றுக் காவியம், மழைக்காவியம், ஊஞ்சல் போன்றவை அடங்கி உள்ளன. இவை தவிர கலியாண ஏடு, கண்ணகியம்மன் உடுக்குச் சிந்துப் பாடல்கள், கண்ணகியம்மன் காவியங்கள், கண்ணகியம்மன் அகவல்கள் முதலியனவும் அடங்குகின்றன. இவற்றில் பல இலக்கியங்கள் நேரடியாக வழிபாட்டுடன் தொடர்புபட்டவையாக விளங்குகின்றன. மட்டக்களப்பிற் ஏட்டுருவில் கிடைக்கும் அழியாத இலக்கியச் செல்வங்களுள் ஒன்றாக விளங்குவது கண்ணகி வழக்குரை ஆகும். கண்ணகியம்மன் வழிபாட்டு வேளையில் இந்நூல் இசை தொடுத்து இருவரால் மாறி மாறிப் படிக்கப்படும். இதற்கென அமைந்த இசையானது கேட்போர் நெஞ்சைப் பக்தியால் உருக்கிச் செல்லும் தன்மை கொண்டது.

## சடங்கு முறைகள்

வன்னி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பிரதேச வேறுபாடுகளுக்கேற்ப சடங்கு முறைகள் நடைபெற்று வருகின்றன.

மட்டக்களப்பு பிரதேசங்களில் **"வைகாசித் திங்களில் வருவேன்"** என்று கண்ணகி கூறியதாகையால் வைகாசிப் பூரணையை குளிர்த்தி நாளாக ஏற்று மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு நாட்கள் சடங்குகள் நடைபெறும். ஊர்காவல் பண்ணுதல், கதவு திறத்தல், பூரண கும்பம் வைத்தல், கலியாணக்கால் வெட்டுதல், கலியாணச் சடங்கு, ஏடுபடித்தல், பச்சைக்கட்டுத் தோரணம் ஏற்றல், விநாயகப் பானை எழுந்தருளப் பண்ணுதல், மடை பரவுதல், திருக்குளிர்த்தியாடல், எட்டாம் சடங்கு என்பன முறையாக நடைபெறும். இச்சடங்கின் போது மடிப்பிச்சை எடுத்தல், நெல்லுக்குற்றுதல், பாளை விற்றல், மடை கொடுத்தல், அங்கப்பிரதட்ஷணம் செய்தல், போர்த் தேங்காய் அடித்தல், கொம்பு முறித்தல், என்பன நேர்த்தியாக இடம்பெறும்.

வன்னிப் பகுதிகளில் பஞ்சாங்கம் பார்த்தல், பாக்குத் தெண்டல், ஊர்காவல் பண்ணுதல் - பண்டம் எடுத்தல், பரிகலம் அடித்தல், கும்பம் வைத்தல், தூளி பிடித்தல், தீர்த்தம் எடுத்தல், கச்சு நேர்தல், நோற்புக்குற்றல், பரிகலம் வழிவிடல், என்பவற்றோடு கோவலன் கூத்து, கொம்பு முறித்தல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

வைசூரி, குக்கல், கண்நோய், கடுஞ்சுரம், வயிற்று நோய், அம்மைநோய் முதலியவை அம்மனின் சீற்றத்தினாலேயே பரவுகின்றன. இதனால் குளிர்ச்சியைப் பெறவும், மழைவளம், நிலவளம், உடல்வளம் செழிக்கவும் குளிர்த்திப் பாடல்கள் பாடி வழிபாடு செய்கின்றனர். இதை சிலப்பதிகார உரை பெறு கட்டுரையும் மேல்வருமாறு உணர்த்திக் காட்டுகின்றது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அன்று தொட்டுப் பாண்டியநாடு மழைவறங் கூர்ந்து வறுமை எய்தி வெப்புநோயும் குருவும் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றி வேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லராயிரவரைக் கொன்று கள வேள்வியால் விழாவோடு சாந்தி செய்து, நாடுமலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கியது*

இக்கருத்தை மட்டக்களப்பு கண்ணகையம்மன் குளுத்திப் பாடல்களுள் வருகின்ற மழைக்காவியப் பாடலொன்று மேல்வருமாறு கூறுகின்றது:

*எந்த விதமான பிழை செய்தாலும் நீபொறுத்*
*தேழையடி யார்கள் எனவே மனமிரங்கி*
*நொந்த கண்ணாலிப்போ ஆறிலொரு மழைவெள்ளம்*
*நூதன மதாகவே நீயருள வேண்டும்.*

(க. து.)

## பத்துமலை முருகன் கோயில்

மலேசியாவிலுள்ள பிரசித்தமான இந்து ஆலயங்களில் பத்துமலை முருகன் ஆலயமும் ஒன்றாகும். மலை உச்சியில் உள்ள குகையில் இவ்வாலயம் அமைந்துள்ளது. கோலாலம்பூர் மாநகரிலிருந்து 7மைல் தொலைவில் இருக்கும் பத்து மலையில் 1888இல் முதன்முதலாக வேல் ஒன்றை வைத்து பாட்டாளி மக்கள் வணங்க ஆரம்பித்தனர். ஆண்டு தோறும் குமரனுக்குரிய தைப் பூசத்திருநாளைப் பொலிவுடன் கொண்டாடுவதெனத் திட்டமிட்டப் போதும் கோலாம்பூர் மாவட்ட ஆட்சியாளர் அந்த வேலைப்பிடுங்கி எறியக் கட்டளையிட்டார். இக் கட்டளைக்கு எதிராகப் பாட்டாளி மக்கள் வழக்குத்தொடுத்தனர். மக்கள் வெற்றி பெற்றனர் இவ்வெற்றியின் வெளிப்பாடே பத்துமலைக் கோயில் இந்துக்களின் வழிபடுதலமாக வளர்ந்தது.

1920இல் பத்துமலைக் குகைக் கோயிலுக்குச் செல்லப் படிக் கட்டுக்கள் அமைந்தனர். இந்த 272 படிகளைக் கட்டுவதற்காகவும் திருப்பணிக்காகவும் உழைக்கும் இந்துக்கள் தமது ஒருநாள் சம்பளத்தைக் கொடுத்துள்ளனர். 1952இல் பத்துமலைப் படிக்கட்டுகளுக்கு மின்விளக்கு அமைக்கப்பட்டது. மலை உச்சியிலும் அடிவாரத்திலும் சித்திர கோபுரங்கள் இரண்டு அமைக்கப்பட்டு தென் இந்தியக் கோவில்களுக்கு ஒப்ப கலை அம்சமாக விளங்குகின்றன.

உலகப் பொதுமறையாகக் கருதப்படும் திருக்குறளை உலகறியச் செய்யும் உன்னத நோக்கு இவ்வாலய அமைப்பிலே காணக் கூடியதாக உள்ளது. குகையின் ஓரிடத்திலே நடுநாயகமாக வள்ளுவர் சிலையை வைத்து சுற்றிலும் 1330 குறட் பாக்களையும், 133 பளிங்குக் கற்களில் வடித்துள்ளனர். 5 அடி உயரத்தில் கருங் கல்லில் திருவள்ளுவர் சிலை வடிக்கப்பட்டுள்ளது. மூல ஸ்தானத்திற்குப் பக்கத்திலுள்ள சமதளத்தில் அருள்மிகு வள்ளி தெய்வயானை உடனுறை முருகர் கோயில் பக்திப் பரவசம் ஊட்டும் கோபுர சிற்ப வேலைப் பாடுகளுடன் அமைந்து, கண்ணையும் கருத்தையும் கவர்கிறது.

இந்த ஆலயத்தில் தைப்பூசமும், வைகாசி விசாகமும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. தைப்பூசத்தன்று முருகன் மலையடிவாரத்தில் வீற்றிருந்து அருள் பரப்புவதற்காய் அழகான மண்டபமும் கட்டப்பட்டுள்ளது. அன்றைய தினம்தான் இவ்வாலயத்தின் தேர்த் திருவிழாவாகும்.

பத்து மலையின் மேற்குகையில் தமிழகத்தில் உள்ள திருமுருகனின் திருத் தலங்களான ஆறுபடை வீடுகளைச் சித்திரிக்கும் திருவுருவக் காட்சிகள் மிகவும் அற்புதமான முறையில் அமைக்கப்பட்டுள்ளன. (ப. மு.)

## பத்மநாபபுரம்

திருவிதாங்கூர் மன்னர்களின் கலைச் சின்னங்களைக் கொண்ட நகரம். இது தமிழ் நாட்டின் தென்கோடியில் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலுக்கு மேற்கே, சுமார் 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்நகரம் கி.பி. 1744 வரை கல்குளம் என்று சொல்லப்பட்டு வந்தது. திருவிதாங்கூர் மன்னரான மார்த்தாண்ட வர்மர் (கி.பி. 1741-1758) காலத்தில் இந்நகரம் தலைநகராக்கப்பட்டுப் பதுமநாபபுரம் என்று பெயரிடப்பட்டது. இங்குள்ள அரண்மனை, புராதன கட்டிடங்கள், மரச்சிற்பங்கள், ஓவியங்கள் யாவும் கி.பி. 18ஆம் நூற்றாண்டு கேரளப் பாணியை ஒத்து அமைந்துள்ளன. இங்குள்ள சதுரவடிவான அரண்மனை ஏறத்தாழ 4. கி.மீ. சுற்றளவுடைய கோட்டையினுள் அமைந்துள்ளது. அக்கோட்டை முதலில் மண்கோட்டையாக இருந்தது. மார்த்தாண்டவர்மர் அதனை உறுதியான கற்கோட்டையாகக் கட்டினார். அக்கோட்டையின் மதில்கள் சிற்சில இடங்களில் 5 மீட்டரிலிருந்து 8 மீட்டர் வரை உயரம் உடையன. சீரான அமைவு திட்டம் இன்றி அரண்மனையின் பகுதிகள் பல தேவைக்கு ஏற்றாற்போல அவ்வப்போது கட்டப்பட்டன. அவற்றுள் தாய்க் கொட்டாரம் மிகத் தொன்மையான பகுதியாகும். ஒரு முற்றத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட தாழ்வாரம், அறைகளைக் கொண்டது. மற்ற முக்கிய பகுதிகள் வாயில் மண்டபம், கூட்ட அரங்கு, நாடக அரங்கு, பூசை மண்டபம் ஆகியன. சரசுவதி கோயிலும், அதன் முன் அமைந்த நவராத்திரி மண்டபமும் மற்ற முக்கிய கட்டிடங்களாகும். அந்த அரண்மனையின் மிகவும் கவர்ச்சியான பகுதி நடுவே அமைந்துள்ள மூன்றடுக்கு உப்பரிகை மாளிகையாகும். அதன் மூன்றாம் தளத்தில் நாற்பது அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவற்றில் தீட்டப்பட்டுள்ள இந்து சமயக் கதைகளில் திருமால் துயில் கொள்ளும் அனந்தசயன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியமும், இலட்சுமி நாராயணர், அர்த்தநாரீசுவரர், தேவிகளுடன் கிருட்டிணர், நடராசர் ஆகியனவும் சிறப்பானவையாகும். மரச்சிற்ப வேலைப்பாடுகள் இவ்வரண்மனையின் சிறப்பை உணர்த்த வல்லன. அரண்மனையின் கீழ்ப்பகுதியில் அறுபத்து நான்கு மூலிகை மரங்களால் செய்யப்பட்ட ஒரு கட்டில் சிறப்பான கலையமிசத்துடன் உள்ளது. பல வடிவங்களில் செதுக்கப்பட்ட மரச் சன்னல்கள், கொடிகளைப் போன்று சித்திரிக்கப்பட்ட தாங்குநிலைகள், மரத் தொங்கல்கள் மற்றும் நன்கு செதுக்கப்பட்ட கலையமிசம் கொண்ட மரச் சட்டங்கள் ஆகியவற்றை இங்கே காணலாம். அக்கால மக்கள் பயன்படுத்திய போர்க்கருவிகளும் டச்சுக்காரர்களிடமிருந்து கவர்ந்த போர்க்கருவிகளும் இந்த அரண்மனையில் பாதுகாக்கப்பட்டுள்ளன. (ப.ச.)

## பத்ராசல ராமதாஸ்

பத்ராசல ராமதாஸ் ஒரு ராமபக்தர். இவரது தந்தை லிங்கண்ண மந்திரி, தாய் காமாம்பா. இளமையில் இவருக்கு 'கோபன்னா' என்று பெயர். இவர் ஒரு தெலுங்கு பிராமணர். இவர் பக்தியில் திளைத்தவர். ஒரு சமயம், இவர் கனவில் கபீர் தாசரிடமிருந்து தான் தாரக மந்திர உபதேசம் பெற்றதாக, இவரது தன்யாசி ராகக் கிருதியில் 'தாரக மந்திரமு கோரிதி தொரிகெனு' எனக் குறிப்பிடுவதினால்தான் அறிகிறோம். இதனால் கோபன்னாவின் ராமபக்தி பன்மடங்கு பிரகாசித்தது. இது முதற்கொண்டு, இவர் இராமன் பேரில் அழகிய பல கிருதிகளை பாட ஆரம்பித்தார். இவருக்கு ஒரு மகன் பிறந்தான். அந்த மகனுக்கு 'ராமுடு' என்று பெயரிட்டனர். உயர்ந்த உத்தியோகத்தை வகித்திருந்த தனது தாய் மாமனின் உதவியால், இவருக்கு பத்ராசலம் தாலுகாவின் தாசில்தாராக உத்தியோகம் கிடைத்தது. அரசாங்கத்திற்கு நல்ல வரி வசூல் செய்ததின் மூலமாக இவர் ஒரு திறமை மிக்க தாசில்தாராக கருதப்பட்டார்.

கோபன்னா ஸ்ரீராமநவமி உற்சவத்தை மிகச்சிறப்பாக செய்து வந்தார். அப்போது நூற்றுக்கணக்கானவர்களுக்கு உணவிட்டு மகிழ்வது வழக்கம். ஒரு முறை ஸ்ரீராமநவமி உற்சவத்தின்போது விருந்தினர்களுக்கு பந்தி பரிமாறுவதில் கோபன்னாவும் அவரது மனைவியும் ஈடுபட்டிருந்தனர். அது சமயம் அவர்களது குழந்தை "ராமுடு" தவழ்ந்து வந்து சூடான கஞ்சிக் குழியில் தவறி விழுந்து இறந்தது. கோபன்னாவின் மனைவி தன் குழந்தையின் பரிதாப நிலைக் கண்டு வெதும்பினாள். விருந்தினர்களை உபசரித்துக் கொண்டிருக்கும் தன் கணவனிடம், அதுசமயம் இத்துக்கச் செய்தி சொல்வது அபசாரமாகுமே எனக்கருதி, விருந்தினர் யாவரும் சென்றபின், தங்களின் ஒரே குழந்தையின் அவல முடிவை ஆற்றொணாத் துயரம் மிக்கத் தெரிவித்தாள். கோபன்னா கண்ணீர் விட்டு கதறி அழுதார். இறந்த குழந்தையின் உடலை எடுத்துக் கொண்டு, ஸ்ரீ ராமபிரான் விக்கிரகத்தின் முன் வைத்து பலவாறாக தங்கள் துயரத்தை வெளியிட்டுக் கதறினார்கள். இறுதியில் ஸ்ரீ ராமபிரானின் அனுக்ரஹத்தால் குழந்தை துயிலினின்றும் விழிப்பவன்போல் உயிர் பெற்று எழுந்தான். இந்த நிகழ்ச்சி கோபன்னாவுக்கு இராமபிரான் மீதிருந்த நம்பிக்கையையும், பக்தியையும் பன்மடங்கு அதிகமாக்கியது. இராமபிரான் மீது இவருக்கிருந்த அபரிதமான பக்தியின் காரணமாக இராமதாசர் என்ற பெயர் வழங்கலாயிற்று.

மாணிக்கவாசகர் போன்றே அரசாங்க பணத்தை கோயில் திருப்பணிக்காக கையாடியவர் ராமதாசர். ராமதாஸ் பத்ராசலத்தில் ஸ்ரீராமபிரானுக்கு ஒரு கோயில் அமைக்கக் கருதி நிதி வசூலித்தார். கோவில் கட்டி முடிக்க பணம் போதாததால் கஜானாவிலிருந்த அரசாங்கப் பணத்தைக் கொடுத்து கோயில் திருப்பணியை முடித்தார். இதனை அறிந்த தானிஷா, கோபன்னாவுக்குக் கடும் தண்டனை விதித்து 12 வருடம் காவலில் வைக்க உத்தரவிட்டார்.

கோபன்னாவுக்கு 12 வருட சிறைவாசம் முடியும் தருவாயில் ஸ்ரீராம, லட்சுமணர், சேவகர்கள் ரூபத்தில் தானிஷாவிடம் வந்து கோபன்னா கோவில் பணிக்காக உபயோகித்த பணத்தைச் செலுத்தி அவரை விடுதலை செய்யும்படி செய்தனர். வந்தது ராம, லட்சுமணர் என்பதை அறிந்த தானிஷா, கோபன்னாவின் ராமபக்தியினது பெருமையை அறிந்து அவரிடம் மன்னிப்புக் கோரினார். விடுதலை பெற்ற கோபன்னா, தன் வாழ்நாட்களை ராமபிரானின் கைங்கர்யத்திலேயே கழித்தார்.

### ராமதாசரின் இசைத்தொண்டு

பத்ராசல ராமதாஸ் நூற்றக்கணக்கான கீர்த்தனைகளை, ஸ்ரீ ராமனின் மீது இயற்றியுள்ளார். அவை பக்தியின் அடிப்படையிலிருந்து உண்டான பாடல்களாகும். இவரது கீர்த்தனைகள் ராமதாசரின் பக்திப் பெருக்கையும் உணர்ச்சியையும் 'உள்ளங்கை நெல்லிக் கனி' போல் எடுத்துக்காட்டுபவை. ராமதாஸரின் கீர்த்தனைகள் தெலுங்கிலும், சில சமஸ்கிருதத்திலும், இயற்றப்பட்டுள்ளன. இவைகளை 3 வகையாகப்பிரிக்கலாம்.

1. சிறைவாசத்திற்கு முன்பு இயற்றப்பட்டவை.
2. சிறைவாசத்தின் போது இயற்றப்பட்டவை.
3. சிறைவாசத்திற்கு பின்பு இயற்றப்பட்டவை.

ராமதாஸர் ஒரு சிறந்த ராமபக்தர். ஆகையினால் அவரது பாடல்கள் ஸ்ரீராமனின் பிரபாவத்தை விளக்குவனவாகவே உள்ளன.

ராமதாஸரின் கீர்த்தனைகள் சுலபமான தெலுங்கு பாஷையில், இனிமையான இசைச்சுவையுடன், பக்தி சுவை ததும்ப அமைந்துள்ளன. சிறைவாசத்துக்கு முன் இயற்றப்பட்டவைகள் பொதுவாக இராமனைப் பற்றியும் அவனது பெருமையைப் பற்றியும் கூறுவனவாகவே உள்ளன. சிறைவாசத்தின் போது இயற்றப்பட்டவைகள் பக்திச் சுவையுடன், ராமனது கருணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத் தினையும், பக்தர்களைக் காக்கும் பண்பினையும் விளக்கு வனவாக உள்ளன. சோக ரஸத்தின் எல்லையை இவைகளில் காணலாம். சிறைவாசத்திற்குப் பின் செய்த கிருதிகளுள், இவரது நம்பிகையின் குரல் தொனிக்கிறது.

பத்ராசல ராமதாஸரது உருப்படிகள் அழகிய கவர்ச்சி மிக்க மெட்டுக்களில் அமைந்து பிரபல்யமாய் பாடப்பட்டு வருகிறது. இவைகளில் உயர்ந்த கருத்துக்கள் சிறந்த முறையில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

அவர் தனது கிருதிகளில் அவரது முத்திரை வார்த்தையினை பல்வேறு வடிவங்களில் முத்திரையாக அமைந்துள்ளார். திருவடிகளே சரணம் போன்ற தமிழ் பதங்களையும் உபயோகித்துள்ளார். இவரது முத்திரை, பத்ராத்ரி, பத்ரகிரி, பத்ராசல போன்றவை. இவர் 24 ரக்தி ராகங்களைக் கையாண்டுள்ளார். ராகங்களின் ஸ்வரூபங்களுக்கு சிறந்த லட்சியங்களாக இவரது கீர்த்தனைகள் திகழ்கின்றன. பத்ராசல ராமதாசரது பக்தியின் ஆழத்தினை உணர்ந்த தியாகராஜர், இவரது பக்தியின் சிறப்பினைப் புகழ்ந்து தனது கிருதிகளில் குறிப்பிட்டுள்ளார்.

1. க்ஷீரஸாகர சயனா - தேவகாந்தாரி - ஆதி
2. ப்ருந்தாவன லோலா - தோடி - ரூபகம்
3. கலிகியுண்டேகதா - கீரவாணி - ஆதி
4. ஏமிதோ பல்கு - ஸாரங்கா - ஆதி
5. பிரஹலாத பக்திவிஜயம் என்னும் இசை நாடகத்தின் ஆரம்பத்திலுள்ள 7வது கண்ட பத்யம்.

(தே .ஹ.)

## பத்மபாணி

ஐந்து தியானி புத்தர்களிலிருந்து தோன்றிய பல போதி சத்துவர்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர். இவரது இருப்பிடம் அமராவதிக்குத் தெற்கே அமைந்துள்ள போதாலகம் (Potalaka) என்று புத்த சமய நூல்கள் குறிக்கும். மணிகம்பன் (ManiKamban) என்னும் திபேத்திய நூல் இவரது வரலாற்றை விளக்குகிறது. அமிதபா (Amitabha) என்னும், தியானி புத்தர், தியானம் புரிகையில் வலக்கண்ணிலிருந்து வெண்சுடர் ஒளியை வெளியிட்டார். அச்சுடரிலிருந்து பத்மபாணி போதிசத்துவர் தோன்றினார். இவர், பத்ரகல்ப (Bhadrakalpa) என்ற இக்கால உலகின் நாயகர். மக்கள் அனைவரும் ஞானம் பெறப் பாடுபடுவதே இவரது குறிக்கோள். இதற்காகவே இவர் நிருவாணத்தை அடைய முயலவில்லை: நிருவாணத்தை ஏற்பது தன்னலமுடையது என்று கருதினார். இவர் சின்னங்கள், அக்கமாலை, பத்மம் ஆகியன. இவர் துணைவர்கள் மகேசுவரனும் உமையுமாவர். இவரை அவலோகிதீசுவரர் (Avalokitesvarar) என்றும் குறிப்பிடுவர். இவர் மக்களை அன்புடன் நேசிக்கும் போதிசத்துவர். மக்களை நன்னெறிப்படுத்த ஏறத்தாழ 333 அவதாரங்கள் எடுத்துள்ளார் என்று புத்தசமயச் செய்திகள் குறிப்பிடும். சாதனமாலா (Sadanamala) என்னும் நூல் இவர்தம் 15 மாறுபட்ட அவதாரங்களைக் குறிக்கும்: இவரது 108 அவதாரங்கள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டு, காட்மாண்டு புத்த கோவிலை அணிசெய்கின்றன. இவரது வழிபாடு, வட இந்தியாவில் ஏறத்தாழ கி.பி 3-7ஆம் நூற்றாண்டுகளில் சிறப்படைந்தது. பாகியானும் யுவான் சுவாங்கும் அவ்வழிபாட்டைக் குறிக்கின்றனர். இவர்தம் உருவங்கள் நின்ற அல்லது அமர்ந்த நிலையில் அமைக்கப்படும்: இரண்டு கைகளுடன் வலக் கையில் வரத முத்திரையும் இடக்கையில் தாமரையும் கொண்டிருக்கும். சில சமயம், அருகில் நின்ற நிலையில் தாராவுடனும், மேற்புறத்தில் தியானி புத்தருடனும் இவர் திருஉருவங்கள் ஆக்கப்படும். எல்லோராக் குடைவரைகளில், பத்மபாணிச் சிற்பமும் ஓவியமும் காணப்படுகின்றன. அவுரங்கபாத்திலுள்ள பத்மபாணி உருவங்களைச் சுற்றிலும் சிறு சிறு உருவங்கள் பொறிக்கப் பட்டுள்ளன.

(ப.ச.)

## பத்மபுராணம்

இது பதினெட்டுப் புராணங்களுள் மிக முக்கிய புராணமாகவும், அவற்றுள் மிகப் பெரியதாகவும் சொல்லப்படுகிறது. இப்புராணம் இரண்டு பதிப்புகளில் கிடைத்துள்ளது.முதல் பதிப்பு வங்காள மொழியில் கையால் எழுதப்பட்ட பிரதியாகும். இரண்டாவதாக இப்பொழுது கிடைக்கும் பதிப்பு மொத்தம் 55,000 செய்யுள்களுடன், 6 பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்புராணத்தில் பிரமன் தாமரை மலரில் தோன்றிப் படைப்புத் தொழிலில் ஈடுபட்டான் என்று குறிப்பிடுவதனால் இப்புராணத்திற்குப் `பதும' (தாமரை) புராணம் என்பது பெயர். சாத்வீக குணம் பொருந்திய வைணவ புராணங்கள் ஆறினுள் இது ஒன்று.

அச்சு வடிவத்தில் கிடைக்கின்ற இப்புராணத்தின் இரண்டாம் பாகம் சிருட்டி, பூமி, சுவர்க்க, பாதாள, உத்திர, கிரியாயோகசார என்று ஆறு காண்டங்களுடன் காணப்படுகிறது. கடைசிப் பகுதியாகிய கிரியாயோகசார காண்டம் என்பது ஐந்தாம் காண்டமாகிய உத்திரகாண்டத்தின் பிற்பகுதி என்று சிலரால் சொல்லப்படுகின்றது. ஆகவே, இப்புராணம் ஐந்து காண்டங்களுடன் கூடியது என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஆறுகாண்டங்களில் பெயர்களுக்கேற்ப அக்காண்டங் களின் செய்திகளும் காணப்படுகின்றன. சிருட்டி காண்டம், படைப்புத் தொழில் மற்றும் அரசவமிசங்களின் தோற்றங்களையும், பூமி காண்டம், பூமியின் பல பிரிவுகளையும், `புட்கரம்' போன்ற சில புனிதமான, சிறந்த யாத்திரைத் தலங்களைப் பற்றியும், சுவர்க்க காண்டம் தேவலோகத்தின் சிறப்புகளையும், பாதாள காண்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் உலகங்களின் சிறப்புகளையும் கூறுவதோடு இராமபிரானின் கதையையும், பதினெட்டுப் புராணங்களின் தோற்றங்களையும் குறிப்பிடுகின்றன. இங்குதான் வியாசர் முதலில் பத்ம புராணத்தையும், பிறகு 16 புராணங்களையும், கடைசியாகப் பாகவத புராணத்தையும் குறிப்பிட்டுள்ளார் என்பது கூறப்படுகிறது. 5ஆம் காண்டமாகிய உத்திரகாண்டத்தில் மாதங்களின் சிறப்புகளும் புனிதத் தன்மைகளும் அந்தந்த காலங்களில் செய்யவேண்டிய நோன்புகள், தான தருமங்களின் சிறப்புகள் ஆகியனவும் கூறப்படுகின்றன. கிரியாயோகசார காண்டத்தில் 'விட்டுணுபக்தியின் சிறப்புகளும், வைணவ பக்தர்களால் செய்ய வேண்டிய சடங்குகள், நோன்புகள் மற்றும் வழிபாட்டு முறைகளும் சொல்லப்படுகின்றன.

மகாகவி காளிதாசன் தன்னுடைய இரகுவம்ச மகா காவியத்தில் இராமருக்குப் பிறகு ஆண்ட அரசர்களின் சரித்திரத்தை எவ்வாறு கூறி இருக்கின்றானோ அவ்வாறே இப்புராணத்தில் காணப்படுவதாலும், காளிதாசனின் சாகுந்தல நாடகக் கதையும் அவன் கூறியபடியே இப்புராணத்தில் சொல்லப்படுவதனாலும், இப்புராணம் காளிதாசனுக்குப் பிறகு தொகுக்கப்பட்டுள்ளதாக இருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. பல புனிதத் தலங்களின் சிறப்பு களையும், முக்கியமாகத் திருவரங்கம், திருவேங்கடம் (திருப்பதி) போன்ற தலங்களின் பெருமைகளையும், பாகவத சம்பிரதாயங் களையும் இப்புராணம் கூறுவதனாலும், இப்புராணம் பிற்காலத்தில் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

இப்புராணத்தில் துர்க்கை வழிபாட்டு முறைகளையும், முருகப் பெருமான் பிறப்பு, திருமணம், மார்கழி மாதத்தில் கொண்டாடப்படும் 'இராதாஜன்மாட்டமி' நோன்பு ஆகிய வற்றையும், கார்த்திகை மாதத்தில் செய்யவேண்டிய 'தீபதான' சிறப்புக்களையும் காணலாம். மும்மூர்த்திகளுள் திருமாலையும் வைணவ பக்தியின் சிறப்புக்களையும் உயர்வாகப் பேசும் புராணமாகும் இதுவாகும். இங்கு சிவபெருமானே பார்வதி தேவிக்கு விட்டுணு பக்தியின் சிறப்பைக் கூறுகின்றார். பிருகு முனிவரால் நடத்தப்படும் மும்மூர்த்திப் பரீட்சையும் எவ்வாறு திருமால் மற்றவர்களைக் காட்டிலும் சிறப்புடன் விளங்கி முனிவரைக் கவர்ந்தார் என்பதும் சொல்லப்படுகின்றன.

(எஸ்.ஜெ.)

## பதஞ்சலி

மகாபாஷ்யம் என்னும் இலக்கண நூலின் ஆசிரியரான பதஞ்சலி கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் புஷ்யமித்திர சுங்கனின் காலத்தவர். அவனது யாகமொன்றைப் பற்றி அவர் குறிப்பிடுகின்றார். "இஹபுஷ்யமித்ரம் யாஜயாமஹ்." இங்கு புஷ்யமித்திரனுக்கு யாகங்கள் செய்கின்றோம். புஷ்யமித்திர சுங்கன் வைதீக சமயச் சார்புடையவன். அஸ்வமேதம் முதலான யாகங்கள் செய்தவன். அவனது யாகத்தை நடைபெறுகின்ற நிகழ்கால நிகழ்ச்சியாகப் பதஞ்சலி குறிப்பிடுவதால் பதஞ்சலி புஷ்யமித்திரனது காலத்தவர் என்பது தெளிவாகும்.

யவனரின் படையெடுப்புகள் நடைபெற்ற காலத்திலே பதஞ்சலி வாழ்ந்தவர். கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே மோரியரின் ஆதிக்கம் வீழ்ச்சியுற்ற காலகட்டத்தில், இந்தியாமீது யவனராகிய கிரேக்கர் மீண்டும் படையெடுத்தனர். சாகேதம், மத்யாமிகம் என்னும் நகரங்கள் மீது யவனர் படையெடுத்தமை பற்றிப் பதஞ்சலி மேல்வருமாறு சுருக்கமாகக் கூறுவார். **அருணத் யவனா சாகேதம் அருணத் யவனா மத்யாமிகம்** அண்மையில் நடைபெற்ற, சென்றகால நிகழ்ச்சிக்கு உதாரணமாக யவனர் படையெடுப்பு குறிப்பிடப்படுகின்றது. பதஞ்சலி கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்ற கருத்தை இது உறுதி செய்கின்றது.

பதஞ்சலியின் காலத்து மொழிவழக்கு காத்தியாயனரின் காலத்து வழக்கிலிருந்து குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் கொண்டிருக்கவில்லை. சில சொற்களும் தொடர்களும் வழக்கற்றுவிட்டமையினை அவர் குறிப்பிடுகின்றார். **நிவசநே - க்ரி, அந்வஜே-க்ரி, உபாஜே-க்ரி** என்பன சில உதாரண ங்களாகும். வழக்கொழிந்துவிட்ட சில இடை, உரிச் சொற்களையும் உருபுகளையும் பின்னொட்டுகளையும் அவர் குறிப்பிடுகின்றார்.

சிஷ்டர்களின் மொழிவழக்கே சிறந்ததென்று பதஞ்சலி கருதினார். ஆர்யாவர்த்தத்தில் வாழும் பிராமணர்களையே அவர் சிஷ்டர் என்று கொள்வார். பாணினியின் நூலைப் படிக்காத பொழுதிலும் அவர்கள் சமஸ்கிருத மொழியினைப் பிழையின்றிப் பேசும் திறனுடையோர் என்பது அவரின் சிந்தனை. சிஷ்டர்களின் மொழிவழக்கை ஆதாரமாகக் கொண்டே சொற்பிரயோகங்களின் இலக்கணம் நிச்சயிக்கப்பட்டது. ஏனையோர் சமஸ்கிருத மொழியினைப் பேசிய பொழுதும் அவர்களின் மொழியிலே பல தவறுகள் காணப்பட்டன. அவை பெரும்பாலும் பிராகிருதச் செல்வாக்கினால் ஏற்பட்டவை. உதாரணமாக க்ரிஷி, த்ரிஸி என்பவற்றை அவர்கள் கசி என்றும் திஸி என்றும் உச்சரித்தனர். வினைச் சொற்களைப் பொறுத்தவரையில் ஆஜ்ஞாபயதி என்பதை ஆணாபயதி என்றும் வர்த்ததி என்பதை வட்டதி என்றும் வர்த்$_{2}$த$_{3}$தி என்பதை வட்ட$_{4}$தி என்றும் சொல்வர்.

பிற்காலத்துச் சமஸ்கிருதப் புலவர்கள் பாணினி, காத்தியாயனர், பதஞ்சலி ஆகியோரின் இலக்கண விதிகளைக் கிரமமாகப் பின்பற்றித் தங்கள் ஆக்கங்களைப் படைத்தனர். வசன நடையிலும் செய்யுள் நடையிலும் சொல்லாக்கத்திலும் இயல்பான தன்மை நீங்கிச் செயற்கை முறையிலான மொழிநடை உருவாகியது. அதனை அணியிலக்கணங்கள் மேலும் அணி செய்தன. சமஸ்கிருதம் பிராகிருதத்திலிருந்தும் வேறுபட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமைப்பட்டுத் தேசவழக்கிலே செல்வாக்கினை இழந்தது. இலகுபடுத்தப்பெற்ற மொழி நடையினையும் சொற் பிரயோகங்களையும் கொண்ட பிராகிருதம் பொதுமக்களின் மொழியாக வளர்ச்சி பெற்றது. ஆயினும், மேதாவிலாசமுடைய கவிஞரதும் புலமையாளரதும் படைப்புகளின் காரணமாகச் சமஸ்கிருத இலக்கியம் உன்னதமான வளர்ச்சியை அடைந்தது. அரசரும் பிரதானிகளும் பெருவணிகரும் சமஸ்கிருத மொழியில் அபிமானங் கொண்டிருந்தனர். கவிஞரும் இலக்கியவாதிகளும் அவர்களதும் சமய நிறுவனங்களினதும் ஆதரவினைப் பெற்று அருஞ்சாதனைகள் புரிந்தனர். குப்தப் பேரரசரின் காலத்திலே சமஸ்கிருதம் இந்தியப் பண்பாட்டின் அடையாளமாகிவிட்டது. அது தொடர்பு மொழி, பொதுமொழி என்ற நிலையை அடைந்துவிட்டது. பௌத்தரும் சமணரும் சைவரும் வைணவரும் தங்கள் சமயநூல்களை அம்மொழியில் எழுதினார்கள். அதன் இலக்கியம் அவனியிலே தன்னேரிலாத் தன்மையை எய்தியது.

கவிஞரும் மகாபண்டிதர்களும் பாணினி முதலான மூவரின் இலக்கண விதிகளைச் சுருதிப் பிரமாணமாகக் கொண்டனர். சம காலத்து நிலைகளைப் பற்றிப் பதஞ்சலி ஆங்காங்கு குறிப்பிடுகின்றமை கவனித்தற்குரியது. அவர் ஆசிவிகரைப் பற்றியும் பாகவதரைப் பற்றியுஞ் சொல்கின்றார். மீமாம்சை கற்ற பெண்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றார். பணம் சேர்க்கும் நோக்கத்தோடு சிவன், ஸ்கந்த, விஸாக போன்ற தேவர்களின் படிமங்களை மோரியர் விற்பனை செய்தனரென்று பதஞ்சலி கூறுவார்.

(சி. ப.)

## பதம்

நாட்டியத்திற்குரிய இசைப்பாடல் வகைகளுள் 'பதம்' என்பதும் ஒன்றாகும். இப்பாடல்களில் தலைவன், தலைவி உறவில் ஏற்படும் பல்வேறு காதல் உணர்வுகள் சித்திரிக்கப்பட்டிருக்கும். இவை சிற்றின்ப உணர்வைத் தருபவைபோல் அமையினும், உயர்ந்த பேரின்பத் தத்துவத்தையே உணர்த்துபவையாகும். தலைவன் இறைவனாகவும், தலைவி பக்தனாகவும், தோழி குருவாகவும் நின்று வீடுபேறடையும் வழிகள் இப்பாடல்களில் அழகுற உணர்த்தப்பட்டிருக்கும்.

பதங்களில் இறை அனுபவத்திற்குக் காதலும் அன்பும் சாதனமாக அமைகின்றன. எனவே, காதல் நிலையில் ஏற்படும் இன்பம், வீரம், பயம், அற்புதம், இழிப்பு, அவலம், நகை, நடுவுநிலை, கோபம் ஆகிய ஒன்பான் சுவைகளும் பதங்களில் சிறப்பாக இடம் பெறுகின்றன. இப்பல்வேறு உணர்வுகளையும் வெளிப்படுத்தப் பாடற் பொருளும், பாட்டின் இசையும், அபிநய பாவங்களும் பதங்களில் முதன்மை பெறுகின்றன.

பதங்களை இயற்றுபவர்கள் நல்ல மொழிப் புலமையும், தலைவன், தலைவி உறவுகள் பற்றிய ஆழ்ந்த உணர்வும், அலங்கார இலக்கணங்களில் சிறந்த அறிவும், இராகச் சுவைகள் பற்றிய நுட்பமான அறிவும் பெற்றிருப்பது அவசியம். இத்தகு திறமைகளோடு இயற்றும் பதங்கள் எளிமையானவையாக இருப்பினும், ஆழ்ந்த உட்கருத்துக்கள் பொதிந்தவையாக இருக்கும்.

எடுப்பு, தொடுப்பு, முடிவு என்ற பகுதிகளைக் கொண்டது பதம். ஒன்றிற்கு மேற்பட்ட சரணங்களும் சில பதங்களுக்கு உள்ளன. பதம், தாழ்ந்த செலவினையுடைய முதல் நடையில் (விளம்ப காலம்) சுரஅசைவுகளுடன் (கமகங்கள்) மிக அழுத்தமாகவும் நிதானமாகவும் பாடப்பெறுவதால், இசையின் இராகச்சுவை (பாவம்) இப்பாடல் வகையில் மிகச்சிறப்பாக வெளிப்படுத்தப்படுகின்றது. பதங்கள் பெரும்பாலும் காம்போதி, முகாரி, பைரவி, கல்யாணி, சாவேரி, தோடி, கேதாரகௌளை, ஆனந்தபைரவி, மத்யமாவதி, சங்கராபரணம், ஆகிரி, உசேனி, புன்னாகவராளி, சௌராட்டிரம், பேகட, நவரோசு, சைந்தவி, நீலாம்பரி, கானடா, தன்யாசி, சுருட்டி, அடாணா ஆகிய இராகங்களில் அமையக் காணலாம். பதங்களில் தாளம் அத்துணை முக்கியம் பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பதங்களில் அபிநயம் முதன்மை பெறுவதால் பதங்கள் 'அபிநய பதங்கள்' என்றும் கூறப்படுகின்றன. ஆடலில் நல்ல தேர்ச்சி பெற்றவர்களே பதங்களைச் சிறப்புற ஆடி அபிநயித்துக் காட்ட வல்லார். நுட்பமான அக உணர்வுகளைப் பல்வேறு வகையில் கற்பனை செய்து கை முத்திரைகளாலும், முக பாவத்தாலும், உடல் அசைவுகளாலும் ஆடி அபிநயிப்போர், பாடல் பாடப்பட்ட சூழ்நிலையையும், பாடற் பொருளுக்குரியவர் மனநிலையையும் நன்குணர்ந்து ஆடுவது சிறப்பாகும். பொருத்தமான பாடல் வரியைப் பல தடவைகள் பாடப் பல்வேறு கற்பனைகளைப் பல வகையில் ஆடி அபிநயிப்பதற்குப் பதங்கள் நல்ல வாய்ப்பளிக்கின்றன. வெவ்வேறு வகையான தலைவியரின் தன்மைகளுக்கேற்ப அபிநய பாவங்கள் பொருத்தமாக அமைவதும் பதத்தில் மிக முக்கியமாகும்.

பதங்களின் பாட்டுடைத் தலைவன் இறைவன் என்ற வகையில் பெரும்பாலும் தமிழ்ப் பதங்களில் முருகனும், தெலுங்குப் பதங்களில் கண்ணனும் தலைவனாக அமைகின்றனர். மன்னனையும் வள்ளலையும் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட பதங்களும் உள்ளன.

தமிழ், தெலுங்கு, வடமொழி, மராத்தி ஆகிய மொழிகளில் அளவற்ற பதங்கள் இயற்றப்பட்டுள்ளன. தமிழ்ப் பதங்கள் இயற்றியவர்களுள் முத்துத் தாண்டவர், கவிகுஞ்சர பாரதியார், மாம்பழக் கவிராயர், கனம் கிருட்டிணய்யர், வாசுதேவ கவி, வைத்தீசுவரன் கோயில் சுப்பராம ஐயர், ஊத்துக்காடு வேங்கட சுப்பையர் ஆகியோரும், தெலுங்குப் பதங்கள் பாடியவர்களுள் சேத்ரக்ஞர், கத்தூரிரங்கர், பரிமளரங்கர், மெலட்டூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேங்கடராமசாத்திரி, சாரங்கபாணி, தஞ்சாவூர் சகாசி மன்னர், கவி மாத்ரு பூதையா ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

நாட்டிய அரங்குகளில் இடம்பெறும் பதங்கள், அவற்றின் உயர்ந்த இசைத்தகுதி காரணமாக இன்று இசையரங்குகளிலும் இசைக்கப்படுகின்றன. (ஞா.கு.)

## பதரி (திருவதரி)

வடநாட்டு வைணவத் திருத்தலங்கள் பன்னிரண்டில் இதுவும் ஒன்று. இது அழகான மிதிவட்டரங்கு போன்ற ஓர் அகன்ற பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. இது அருகில் ஓடும் அலக நந்தா நதியின் மேற்றிசையிலுள்ள கரையிலும் நாராயண பர்வதத்தின் அடிவாரத்திலுமாக உள்ளது. இதன் பின்புறமாக 'இமாலயத்தின் இராணி' என வழங்கப்படும் புகழ்மிக்க நீலகண்டமலைச் சிகரம் (21,640 அடி) அமைந்து இத்தலத்திற்கு ஒரு பொலிவினைத் தருகின்றது. திருக்கோயிலின் கீழே ஒரு சறுக்குப் பாறை உள்ளது. இதன் சரிவு மிகவும் ஆபத்தானது. கோயிலின் இருப்பு மிகப்புனிதமானது எனக் கருதப்படுவதால் இதன் இருப்பிடத்தை மாற்றுவது இயலாது. ஆகவே இதற்கு எதிர்ப்புறத்தில் ஒரு நகரியம் (Township) வளர்ந்து வருகின்றது. ஆன்மக் கிளர்ச்சியூட்டும் இத்தெய்வீகத் திருத்தலம் நாற்புறமும் கவர்ச்சியூட்டும் சுற்றுப்புறங்களால் சூழப்பட்டிருப்பதால் நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான திருத்தலப் பயணிகளை ஈர்த்த வண்ணம் உள்ளது. இதனால்தான் மங்கையாழ்வார் 'பாரோர் புகழும் வதரி' என்று குறிப்பிட்டார் போலும்.

**பதரியாச்சிரமம்:** இதுவே கோயில் அமைந்துள்ள இடம். திருக்கோயில் அமைந்துள்ள இடம் 'விசாலபுரி' என்று வழங்கப்படுகின்றது. திருக்கோயிலுக்கும் அலகநந்தா நதிக்கும் இடையில் 'தப்த குண்டம்' உள்ளது. நாள் முழுவதும் வெந்நீர் ஊற்றுகளிலிருந்து வரும் வெந்நீரால் அடிக்கடி இது நிரப்பப் படுகின்றது. திருத்தலப் பயணிகள் இதில் நீராடியதும் திருக்கோயில் வழிபாட்டிற்குத் தயாராகின்றனர். இதனையடுத்துச் சில அடித்தொலைவில் 'சிம்மதுவாரம்' உள்ளது. இதைச் சேவித்த பின்னர்த் தான் திருக்கோயிலுக்குப் போக வேண்டும். பதரி என்பது வட மொழியில் இலந்தை மரத்தின் பெயராகும். அம்மரங்கள் அடர்ந்து கிடக்கும் இடம் பதரி. பதரிநாதன் எழுந்தருளியிருக்கும் திருமலை முழுவதும் பதரி எனப்படும். இலந்தைப் பழம் பெரிய பிராட்டியாருக்கு (இலக்குமி) திருவுவப்புக்குரியது. திருக்கோயில் முழுவதையும் சூழ்ந்த நிலையில் ஒரு பெரிய இலந்தை மரம் உள்ளதென்றும், கலியுகத்தில் அது மக்கள் கண்கட்குப் புலனாகாது என்றும் சொல்லப்படுகின்றது.

பதரி நாராயணனின் திருக்கோயிலின் சுற்று 100 அடி நீளமும் 60 அடி அகலமும் உள்ளது. திருக்கோயில் கண்ணுக்குப் பெருமிதமாகத் தோன்றாவிடினும், அது பெருங்கற்களாலும் மரத்தினாலும் துத்த நாகத் தகட்டாலும் கட்டப்பெற்றுள்ளது. ஆகவே, இதன் பராமரிப்புச் செலவு மிகச் சிக்கனமாகவே உள்ளது. திருக்கோயிலின் முன்புறமுள்ள தூண்களிற் பல்வகை மலர் உருவங்களுடன் திருமாலின் பத்து அவதாரங்களும் பொறிக்கப் பெற்றுள்ளன. உள்வாயிலின் முன்பாகப் பெரிய திருவடியின் (கருடன்) உருவம் உள்ளது. திருக்கோயிலின் திருச்சுற்றில் இலக்குமிதேவி, ஆதிசங்கரர் ஆகியோர்கட்குத் தனித்தனிச் சிறு கோயில்களும், சிறிய திருவடி (அநுமன்), கணபதி ஆகியோர் சிலைகளும் இடம் பெற்றுள்ளன.

**கருவறை:** கருவறையிச் சுவரை ஒட்டியுள்ள அமைப்பில் காணிக்கைகள் செலுத்தப்படுகின்றன. கருவறையின் வெளிப்புறத்தில் பாதுகாப்பான இடத்தில் தியாகத் தீ மூட்டப்பெறுகின்றது. திருக்கோயிலில் நுழையும்போதே இடைவிடாது எக்காலமும் எரிந்து கொண்டிருக்கும் விளக்கின் ஒளிக்கற்றை பக்தர்களின் கவனத்தை ஈர்ப்பதைக் காணலாம். கருவறையின் நடுநாயகமாக ஊர்வசி படத்தில் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் சேவை சாதிப்பவர்தாம் பதரி நாராயணர். அவர் சித்தாசனத்தில் யோகநிலையில் அமர்ந்திருக்கின்றார். இந்தச் சிலை உளியினால் வடிக்கப்பெற்றதுமன்று; முடமான கல்லும் அன்று. அது கிடைத்தற்கரிய சாளக்கிராமம். இதனை ஆதிசங்கரர் நாரதகுண்டத்திலுள்ள மிகப் பெரிய சாளக்கிராமத்தினின்றும் பெயர்த்தெடுத்து அதனைக் கருடசீலத்தின் கீழ்ப் பிரதிட்டைச் செய்தார் என்றும், கி.பி. 15ஆம் நூற்றாண்டில் இத்திருக்கோயில் கட்டப்பெற்றப்போது இதனுள் கொணர்ந்து பிரதிட்டை செய்யப் பெற்றது என்றும் வரலாறு கூறுகின்றது. விலையுயர்ந்த ஆடையாலும், ஆபரணங்களாலும் அன்றலர்ந்த மலர்களாலும் கிரீடத்தாலும் அலங்கரிக்கப் பெற்று நெற்றியில் வயிரத்தாலான பொட்டுடன் காட்சி தருகின்றார். இவரது இடப்புறத்தில் நர-நாராயணர்கள் உள்ளனர். நாராயணர் சடைமுடி கொண்ட தவசி வடிவில், மேலுள்ள இருகைகளில் திருவாழி, திருச்சங்கு தாங்கிய நிலையுடனும் கீழுள்ள இருகைகளில் அபய முத்திரையுடனும் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடனும் பதுமாசனத்தில் அமர்ந்துள்ளார்; நரன் தநுராசன நிலையில் நின்ற நிலையில் உள்ளார்.

**பதரியின் சிறப்பு:** இமயத்தில் பதரியே ஈடெடுப்பற்ற திருக்கோயில் என்று புராணங்கள் பேசுகின்றன. முனிவர்கள் பலர் தவம் புரிந்த இடம் என்றும் இந்த தெய்வீக இடத்தில்தான் தத்துவஞானிகள் ஞானத்தை அடைந்தார்கள் என்றும், வராக மூர்த்தியும், நரசிம்ம மூர்த்தியும் இங்கு வந்து தான் சினம் தணிந்து அமைதிப் பெற்றார்கள் என்றும், சிவனுடைய சாபம் இங்குதான் அகன்றது என்றும்.வியாசர் இங்குதான் வேதங்களைத் தொகுத்தார் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாபாரதத்தை வரைந்தார் என்றும் சொல்லப் பெறுகின்றது.பதரி நாராயணன் உகந்தருளிய திருவதரித் திருமலையை ஒரு திருமொழியாலும் (பெரி.திரு.1.3) வதரி நாராயணன் தவம் புரிந்த இடமாயும், தானே சீடனாயும், ஆசாரியனாயும் நின்று திருமந்திரத்தை வெளியிட்டருளின இடமாயும் அமைந்த பதரிகாச்சிரமத்தை ஒரு திருமொழியாலும் (பெரி.திரு.1.4) மங்களாசாசனம் செய்துள்ளார் திருமங்கையாழ்வார். (ந.க.ம.)

## பதவியா

இலங்கையிலே, பொலன்னறுவைக் காலத்திற் சிறப்புற்று விளங்கிய பிரதான நகரங்களுட் பதவியாவும் ஒன்றாகும். இராசதானி என்னும் வகையில் அடங்காத நகரங்களுள் அதுவே முதன்மையானது என்றுங் கருதலாம். வடமாகாணம், வடமத்திய மாகாணம், கிழக்குமாகாணம் ஆகியவற்றின் எல்லைகளின் சங்கமத்திலே பதவியா என்னும் பெருங்குளம் அமைந்துள்ளது. அதன் சுற்றுப்புறங்களில் ஏற்பட்ட விவசாய அபிவிருத்திகள், சனப்பெருக்கம், வாணிப முயற்சிகள் என்பவற்றின் காரணமாகப் பதவியா நகரம் வளர்ச்சியுற்றது. அது பரந்தவொரு நிலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை எடுத்துச் சென்று விற்பனை செய்யும் மத்திய நிலையமாக அமைந்திருந்தது.

அங்கு உருவாகிய கோயில்களும் பௌத்தப் பெரும்பள்ளிகளும் நகரம் மேலும் விருத்தி பெறுவதற்கு ஏதுவாயிருந்தன. சங்கத்தவரும் குடியானவர்களும் வழிபாடு செய்வதற்கும் கலாசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் தூரத்திலுள்ள ஊர்களிலிருந்து அங்கு சென்றனர். கோயில்கள், பள்ளிகள் ஆகியவற்றுக்கும் யாத்திரை செல்வோருக்கும் தேவையான பொருட்களை வழங்குவதற்கான வசதிகளை அமைத்துக்கொள்ள வேண்டியிருந்தது. அதனால் வணிகர் குடியிருப்புகளும் விற்பனை நிலையங்களும் பெருகின. தூரதேசங்களில் உற்பத்தியான கற்பூரம், சந்தனம், பட்டு முதலியனவற்றின் புழக்கம் ஏற்பட்டது. அத்தகைய காலகட்டத்திலே சர்வதேச வாணிபத்திலே ஈடுபட்டிருந்த நானாதேசி வணிகர் பதவியாவிற்குச் சென்று தங்கள் விற்பனை நிலையங்களை அமைத்தனர். சோழராட்சிக் காலத்திற் பதவியாவிலே நானாதேசி வணிகர் தங்கியிருந்தனர். இரவிகுலமாணிக்க ஈஸ்வரம் என்னுங் கோயிலை உருவாக்குவதிலும், அதற்குத் தானங்கள் கொடுப்பதிலும் அவர்கள் ஈடுபாடு கொண்டிருந்தனர்.

### பதவியாவில் வணிக கணங்கள்

நானாதேசி வணிகர் பதவியாவில் அமைத்திருந்த விற்பனை நிலையங்களும் குடியிருப்புகளுங் காலப்போக்கில் ஒரு வணிக நகரமாக வளர்ச்சி பெற்றன. அங்கு போர் வீரரும் கம்மாளர் முதலான உற்பத்தியாளரும் வணிகரோடு கூடியிருந்தனர். அவர்களின் வழிபாட்டுத் தேவைகளுக்கெனப் பல கோயில்கள் அமைக்கப்பட்டன. வணிகர் நிறுவிய சாசனங்கள் சிலவற்றிலே கோயில்களைப் பற்றியும் சமயந் தொடர்பான சில விடயங்கள் பற்றியுங் குறிப்புகள் உள்ளன. பதவியாவில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளின் விளைவாக அங்கிருந்த ஐந்து சிவாலயங்களின் இடிபாடுகள் அடையாளங் காணப்பட்டுள்ளன. அவற்றிடையே சாசனங்களும் வெண்கலப் படிமங்களும் கற்சிற்பங்களும் கிடைத்துள்ளன. அவை யாவும் 11 ஆம், 12ஆம், 13ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை. இக்காலத்தைப் பொறுத்தவரையிற் பொலன்னறுவை தவிர்ந்த வேறெந்த நகரத்திலும் பதவியாவிற் காணப்பட்டவற்றைப் போன்று அதிகமான இந்து கலாசார சின்னங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

### பழைய நகரின் அழிபாடுகள்

பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட அரசியல் நிகழ்ச்சிகளின் விளைவாகவும் சமுதாயச் சீர்குலைவின் காரணமாகவும் பதவியா நகரம் சீரழிந்தது. காலப்போக்கில் அங்கு காடு படர்ந்து, சனசஞ்சாரம் ஒழிந்து, வனவிலங்குகள் வசிக்கத் தொடங்கின. கோயில்களும் பள்ளிகளும் இடிந்து வீழ்ந்துவிட்டன. இடிபாடுகள் மண்மேடுகளாகின. ஏறக்குறைய ஆறு நூற்றாண்டுக்கால இடைவெளியின் பின், 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், அங்கு சென்ற பிரித்தானிய அதிகாரிகள் பழையதொரு நகரின் அழிபாடுகள் இருப்பதை உணர்ந்தனர். பின்பு, கடந்த 100 வருட காலத்தில் இடையிடையே தொல்பொருட் திணைக்களத்தினரால் அங்கு அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. குளத்தின் ஓரமாக, அதன் கிழக்குக் கட்டின் அண்மையிலுள்ள மொறகொட என்னும் இடத்திலும், அதற்கு நாலரை மைல் தூரத்திலுள்ள புத்தனேஹெல என்னுந் தானத்திலும் பழைய கட்டடங்களின் அழிபாடுகள் உள்ளன.

மொறகொடவிற் பரந்த அளவில் அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. அங்கு அமைந்திருந்த நகரத்தின் மத்திய நிலையம் 8 ஏக்கர் விசாலமுடைய பகுதியாகும். அதனை அரணும் அகழியுஞ் சூழ்ந்திருந்தன. அதிற் சிறிய கட்டடங்களின் இடிபாடுகளும், ஓடுகளுங் கலவோடுகளும் மிகுந்து காணப் படுகின்றன. குடியிருப்புகளும், விற்பனை நிலையங்களும் அதன் சுற்றுப்புறங்களில் அமைந்திருந்தன.

### 1891 இல் அகழ்வுகள்

பதவியாவில் அகழ்வாராய்ச்சிகள் முதன்முதலாக 1891 இல் மேற்கொள்ளப்பட்டன. அப்பொழுது சிவாலயங்களின் அழிபாடுகள் அடையாளங் காணப்பட்டன. அவ்வாண்டிற்குரிய தொல்பொருட் திணைக்களத்தின் அறிக்கையில் மேல்வருமாறு எழுதப் பட்டுள்ளது.

பதவியாக் குளத்திற்கு வடகிழக்கிலே, ஒரு மைல் தூரத்திலுள்ள மொறகொட அழிபாடுகளைச் சுற்றியுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுகளைத் திருவாளர் விக்கிரமசிங்க வெட்டுவித்து வெளியாக்கினார். பத்திருப்பு (சிவன் கோயில்) அகழ்வுகளின் பயனாக அடையாளங் காணப்பெற்றது. அதன் அமைப்பிலும் வேலைப்பாட்டிலும் அது மூன்று கோறளையிலுள்ள வெறெண்டி கோவிலை ஒத்துள்ளது. அதிலே தமிழ் எழுத்துகளைக் கொண்ட இரண்டு வரிகள் உள்ளன. மண்மேட்டினை மேலும் அகழ்ந்து வெட்டிய போது தமிழில் எழுதிய வேறு சாசனத் தொடர்களும் தென்பட்டன. அவை தெளிவற்றிருந்தன. மூலஸ்தானத்தைச் சுற்றிய பகுதிகளை வெட்டிய பின் அதனுள்ளே இலிங்கமும் ஆவுடையாரும் காணப்பெற்றன. அவை செப்பமான நிலையிற் காணப்பட்டன.

சிரிசங்கபோதியின் தூண் சாசனம் (சிங்களம்), பத்திருப்பின் சமீபமாகவுள்ள கற்பாறைச் சாசனங்கள் (தமிழ்), கோயிலின் அதிஷ்டானம், சிற்ப வேலைப்பாடுகள் பொருந்திய தூண், கல்லிலமைந்த நந்தி, ஆசனக் கோலத்துப் புத்தரின் படிமம், தாதுகர்ப்பம், பூ வேலைப்பாடுகள் அமைந்த ஜன்னல், வீழ்ந்து கிடந்த சிங்கத்தின் உருவம், பழங்காலத்துக் கிணறுகளில் ஒன்று ஆகியவற்றின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. மொறகொடவின் புராதன காலத்துச் (தொல்பொருட்) சின்னங்கள், பதவியாக் குளத்தின் (அணைக்கட்டின்) கீழே, அரைமைல் தூரமளவிற்குப் பரந்து காணப்பட்டன.

இப்பகுதியிலுள்ள அழிபாடுகளை மேல்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. மூன்று அல்லது நான்கு கட்டடத் தொகுதிகளையும் பத்துக் கிணறுகளையும் உள்ளடக்கிய, மதில்களாற் சூழப்பட்ட வளாகம்.
2. பிராகாரத்தினுள் அமைந்த சிவாலயம்.
3. பௌத்தப் பெரும் பள்ளியின் வளாகம், பெரிதும் சிதைவுற்ற, கல்லிலமைந்த சிங்கத்தின் சமீபமாகவுள்ள, பிராகாரத்தினுள் அமைந்துள்ள கோயில்(கள்)

### 1961-2 இன் அகழ்வுகள்

பிற்காலத்திலே நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளின் பயனாகப் பதவியாவில் அமைந்த வேறு சிவாலயங்களின் அழிபாடுகள் அடையாளங் காணப்பட்டன. 1961-2 ஆகிய ஆண்டுகளுக்குரிய தொல்பொருட் திணைக்களத்து ஆண்டறிக்கையில் மேல்வருமாறு கூறப்பெற்றுள்ளது.

கோட்டையின் வாசலிலும் அதனுள்ளுங் காணப்பட்ட மண்மேடுகள் அகழ்ந்து ஆராயப்பட்டன. சுடுமண்ணில் உருவாக்கப்பட்ட கணேசரின் படிமமொன்று காணப்பட்டது. மேற்கில் அகழிக்கு வெளிப்புறமாகச் சிவாலயமென்று கொள்ளத்தக்க கட்டடத்தின் இடிபாடுகள் இருந்தன. சில கற்றூண்கள் காணப்பட்டன. அவற்றிலொன்றிலே சாசனம் எழுதப்பட்டிருந்தது. தூண்கள் நாட்டப்பெற்ற நிலையில் உள்ளன. இத்தலத்திற் சிவலிங்கமொன்று சிதைந்த நிலையில் இருந்தது. அகழிக்குக் கிழக்கே, முன்னர் அடையாளங் காணப்பட்ட சிவாலயம் அமைந்துள்ள பகுதி அகழ்வு செய்யப்பட்டது. அதன் வாசலிற் சிற்ப வேலைப்பாடுகள் அமைந்தவொரு தூணும் ஜன்னலுங் காணப்படுகின்றன. தாமரைப் பூவினைப் போன்ற மலர் வடிவங்கள் ஜன்னலிற் செதுக்கப்பட்டுள்ளன.

பல சிவாலயங்களின் அழிபாடுகள் பதவியாவிற் காணப்படுகின்றன என்பது இதுவரை கவனித்தவற்றின் மூலம் தெரியவருகின்றது. கட்டட அழிபாடுகள், சிற்பங்கள், தமிழ்ச் சாசனங்கள் என்ற மூன்று வகையான தொல்பொருட் சின்னங்கள் சைவக் கோயில்கள் சம்பந்தமாக அங்கு காணப்படுகின்றன என்பதுங் குறிப்பிடத் தகுந்தது. இவை பூரணமாகவுந் தெளிவாகவும் இன்னும் ஆராயப்படவில்லை. இதுவரை அகழ்வாராய்ச்சிகளின் மூலமாகத் தொல்பொருட் திணைக்களத்தினர் ஐந்து சிவன் கோயில்களை அடையாளங் கண்டுள்ளனர். அவற்றை முதலாஞ் சிவாலயம், இரண்டாஞ் சிவாலயம் என்றவாறு பெயரிட்டுள்ளனர். அழிபாடுகள் காட்டினுள் இருப்பதால் இந்நாட்களில் அவற்றை நேரிலே பார்ப்பதற்கான வாய்ப்பில்லை.

### முதலாம் சிவாலயம்

பதவியாவிலுள்ள சிவாலயங்களில் இரவிகுலமாணிக்க-ஈஸ்வரம் என்னும் பெயரால் வழங்கிய முதலாஞ் சிவாலயமே முதன்மையானது. அதன் அழிபாடுகளிடையே பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சாசனங்களுங் கிடைத்துள்ளன. அது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி 166 அடி நீளமும், தெற்கிலிருந்து வடக்கு நோக்கி 100 அடி அகலமுங் கொண்ட சுற்றுப் பிராகாரத்தினுள் அமைந்திருந்தது. அதற்கு இரண்டு கோபுரவாசல்கள் கிழக்கிலும் மேற்கிலுமாக அமைந்திருந்தன. கிழக்கிலுள்ள கோபுரவாசலின் முன்பாக முகமண்டபமொன்று காணப்பட்டது. ஆலயம் மூலஸ்தானம், அந்தராளம், மண்டபம் என்னும் பிரதான பகுதிகளைக் கொண்டிருந்தது. அவை யாவும் பொதுவான, உயரிய பீடமொன்றிலே அமைக்கப்பட்டிருந்தன. அப்பீடத்திலே உபபீடம், அதிஷ்டானம் என்னும் பகுதிகள் இருந்தன. அதிஷ்டானம் கருங்கற்றிருப்பணியாகும். அதன் மேல் அமைந்த பகுதிகளும் பிராகாரச் சுவர்களும் செங்கல் வேலைப்பாட்டில் அமைந்தவை. இவ்வாலயத்தின் அழிபாடுகளைச் செப்பனிடும் பணிகள் 1965 இல் நடைபெற்றன. செங்கற்களாற் கட்டப்பெற்ற பகுதிகளை உள்ளவாறு பேணுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கருங்கற்கள் யாவும் இலக்கமிடப்பெற்ற பின் நீக்கப்பட்டன. அத்திபாரங் கிளறப்பட்டு, அடியிலே சீமெந்து போடப்பட்ட பின் கற்கள் அடுக்கப்பட்டன. இப்பணிகள் நடைபெற்ற சமயத்திலே நான்கு கரங்கள் பொருந்திய தெய்வப்படிமம் அமைக்கப்பெற்ற செங்கலொன்று காணப்பட்டது. இக்கோயில் வளாகத்தில் மேலும் அகழ்வாய்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1968 இல் நடைபெற்ற பொழுது ஸ்தானக நிலையிலுள்ள உமாதேவியாரின் வெண்கலப் படிமமொன்று கிடைத்தது. அது 26.3 அங்குலம் உயரங் கொண்டது. அதன் பீடத்தின் சுற்றளவு 27.5 அங்குலமாகும். உருவம் சாஸ்திரப் பிரமாணங்களுக்கு அமையத் திரிபங்கமானது. இரண்டு கரங்கள் பொருந்தியது. வலக்கரம் மடித்து உயர்த்திய கோலத்தில் மலர்மொட்டினை ஏந்திய வண்ணமாய் உள்ளது. இடக்கரம் லோலஹஸ்தமானது. வதனம் குமுண்சிரிப்பு இல்லாத வடிவங் கொண்டது. மகுடம் கரண்டமகுடமாகும். பொலன்னறுவைப் படிமங்களோடு ஒப்பிடுமிடத்து வேலைப்பாட்டில் இது தரங் குறைந்தது.

### வணிகரின் சாசனங்கள்

இரவிகுலமாணிக்க ஈஸ்வரம் பதவியாவிலிருந்த ஐந்நூற்றுவரின் அதிகாரத்தின் கீழமைந்த வணிக நகரத்தின் ஆதரவைப் பெற்றிருந்தது. வணிக நகரத்தைப் பற்றிய சாசனங்கள் அதன் இடுபாடுகளிடையிற் காணப்பெற்றன. பொதுவாக வணிகரைக் குறிப்பிடுஞ் சாசனங்கள் பல அங்கு கிடைத்தன. அவற்றுள் இரண்டு மட்டுமே சோழராட்சிக்குப் பிந்திய காலத்துக்கு உரியனவாகும். அவை வணிகரமைந்த நகரத்தைப் பற்றியவை. அவற்றுளொன்றில் ஐந்நூற்றுவரின் மெய்க்கீர்த்தி சற்று விரிவான வடிவத்திலே சேர்க்கப்பட்டுள்ளது. அதன் முடிவிலே வணிகரதும், அவர்களோடு கூடியவர்களதும் பெயர்களும் விருதுப் பெயர்களுங் குறிப்பிடப்படுகின்றன. (1) காறநாட்டுச் செட்டி அனந்தன் அரங்கன், (2) கொற்றிக் காளிகண வலங்கைப் பெரும்படை பிள்ளைநாட்டுச் செட்டியான விருத்தியாபரண வலங்கைமார், (4) ....... சிவசரணசேகர நாட்டுச் செட்டி, (5) (ஆதிபயிரன்) நிறையான முரகன் சொறுடைநாட்டு(ச்) செட்டி, (6) சங்கரமனுதன் தேசியான தேசிச்சக்கரமான மதவாரணம், (7) நக்கன் பெருமாள், (8) தேசி அங்கக்காறன்.

### வணிக நகரம்

இச்சாசனம் அமைப்பிலே தனித்துவமானது. அது முற்றுப்பெறாத வசனம் போல் அமைந்துள்ளது. அதிலே செயப்படுபொருளும் வினைமுற்றுங் காணப்படவில்லை. வணிகரின் மெய்க்கீர்த்தியோடு எண்மரின் பெயர்களும் அவர்களுட் சிலரைப் பற்றிய அடைமொழிகளுமே உள்ளன. அவர்களுட் சிலர் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த செட்டிகளாவர். சங்கரமனுதன் என்று சொல்லப்படும் தேசிச் சக்கரமான மதவாரணம் எண்ணெய் வாணிபரான சங்கரபாடியர் வகுப்பைச் சேர்ந்தவனாதல் கூடும். நக்கன் பெருமாளைப் பற்றிய விவரங்கள் குறிக்கப்படவில்லை. தேசி அங்கங்காறன் என்பவன் நானாதேசி வணிகருக்கு இராணுவசேவை புரிந்த குழுவொன்றைச் சேர்ந்தவனாவான். வணிக நகரத்து வாசிகளுக்கு இவ்வெண்மரின் பெயர்களையும் பிரகடனப்படுத்தும் வண்ணமாக இச்சாசனம் நிறுவப்பெற்றதென்று கருதலாம். இவ்வெண்மரும் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திலே பதவியாவிலமைந்த வணிக நகரின் ஆளுங்கணமாய் அமைந்திருந்தனர் எனக் கொள்ளலாம்.

இச்சாசனத்திலுள்ள வடதளி நங்கைமார், தென்தளி நங்கைமார் என்னுந் தொடர்கள் கவனித்தற்குரியவை. தளி என்பது கோயிலைக் குறிக்குஞ் சொல்லாகும். வடதளி, தென்தளி என்பன முறையே வடக்கிலும் தெற்கிலும் அமைந்துள்ள கோயில்களாகும். எனவே இக்கோயில்கள் வணிக நகரத்தின் எல்லைகளுக்குள் அமைந்திருந்தவை என்பதும் உணரப்படுகின்றது. தளிநங்கைமார் என்ற மொழித்தொடர் வேறு சாசனங்களிற் காணப்படாத ஒன்றாகும். அது தளிப்பெண்டுகள், பதியிலார் என்ற சொற்கள் குறிக்கும் கருத்தினைக் கொண்ட தொடராகக் கொள்ளத்தக்கது. ஆலயங்களில் ஆடல், பாடல் முதலிய உபசாரங்களைச் செய்கின்ற கணிகையரான தேவரடியாரைத் தளிநங்கைமார் என்று சாசனத்தை எழுதியோர் குறிப்பிட்டனர் எனக் கொள்ள முடிகின்றது. வணிக கணத்தவர் தங்கள் கண்காணிப்பிலுள்ள கோயில்களிலே தேவரடியார் உபசாரங்கள் செய்யும் வண்ணமாக ஏற்பாடுகள் செய்திருத்தல் வேண்டும்.

### ஐயம்பொழில் பட்டினம்

இரண்டாவது சாசனத்தின் மூலமாகப் பதவியாவிலிருந்த வணிக நகரமானது ஐயம்பொழில் பட்டினம் என்னும் பெயருடன் விளங்கியது என்பதை அறிய முடிகின்றது. வணிக நகரத்தாரின் கட்டுப்பாட்டிலிருந்த விக்கிரமகடிகைத் தாவளம் என்னும் நிலையம் பற்றியும் இச்சாசனங் குறிப்பிடுகின்றது. இப்பட்டினத்து வீரக்கொடி என்னும் படைப்பிரிவினரே இச்சாசனத்தை நிறுவியிருந்தனர். அவர்கள் கோயிலொன்றைத் தாபனஞ் செய்து வழிபாடு ஆற்றுவதற்கு விக்கிரகஞ் செய்து கொடுத்தனர். அக்கோயிலின் பெயர் சாசனத்திற் குறிப்பிடப்படவில்லை.

### மூன்றாஞ் சிவாலயம் - சாசனச் செய்யுள்

பதவியாவிலுள்ள மூன்றாஞ் சிவாலயத்தின் அழிபாடுகளிடையே 16 வரிகளில் எழுதப்பெற்ற தமிழ்ச் சாசனமொன்று கிடைத்தது. அது தூணொன்றிலே எழுதப்பட்டுள்ளது. சாசனம் அமைந்துள்ள பகுதிக்கு மேலே சாமரை, தூபி ஆகியவற்றின் உருவங்கள் உள்ளன. தூணின் அடியிலே, இரு ஓரங்களிலும் ஒவ்வொரு குத்துவிளக்கின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு நடுவிலே தூண்டாமணி விளக்கினைப் போன்ற வடிவங் காணப்படுகின்றது. செய்யுளாகவுள்ள இச்சாசனத்தின் வாசகம் மேல்வருமாறு உள்ளது:

*ஸ்வஸ்தி ஸ்ரீ:*
*உத்தமர் தங்கோயில் வலகழி எனலும்*
*நித்த நியமம் நெறிவளர் சித்தமுடன்*
*சீரிளமை சேர்ந்த பதியில் விசைய*
*ராமப் பேரிளமையார் தங்கள் பேர்*
*நாவாயிரங் கொண்டுரைப்பின்*
*திக்கந்தாமாக முயன்றான் முயன்ற திரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுள் வடிவான இச்சாசனத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்வதானால் அதன் சொற்றொடர்களை மேல்வருமாறு மாற்றியமைத்தல் வேண்டும்:

*உத்தமர்தங் கோயில் வலகழி எனலும்.*
*சீரிளமை சேர்ந்த பதியில், நித்தநியமம்*
*நெறிவளர் சித்தமுடன் விசையராமப்*
*பேரிளமையார் தங்கள் பேர் நாவாயிரங்*
*கொண்டுரைப்பின் திக்கந்தமாக முயன்றான்*
*முயன்ற திரு.*

இதன்பொருள் மேல்வருமாறு அமையும். உத்தமனாகிய (எம்) பெருமானுடைய கோயிலாகிய வலகழி என்னுஞ் சீரான புதிய திருத்தலத்திலே, தினந்தோறும் ஆலய தருமங்களை விதிப்படியே நடத்தும் உணர்வோடு, விசையராமப் பேரிளமையாரின் நாமத்தை ஆயிரம் தடவை நாவினாலே போற்றினால் தேடுவதற்கென்று திசையனைத்துஞ் சென்று மேற்கொள்ளும் முயற்சிகளின் பயனாகச் செல்வம் பெருகும்.

இச்செய்யுளின் பொருளை மேல்வருமாறும் விளக்கலாம்: மங்கலம் பொலிக. உத்தமனாகிய (எம்) பெருமான் (பள்ளிகொண்டுள்ள இக்) கோயிலை வலகழி என்று சொல்வீர்களாக. என்றும் பொலிவுடன் விளங்கும் (இப்) பதி நகரினிலே, தினமும் விதிப்படியே ஆலய தருமங்களை நடத்தும் எண்ணத்தோடு வாழும் விசையராமப் பேரிளமையாருடைய நாமத்தை ஆயிரந் தடவையாக நாவினாலே போற்றுகின்றவன் பெறக் கூடிய செல்வமானது திசையனைத்துஞ் சென்று தேடுகின்றவனுடைய செல்வத்துக்கு நிகரானதாகும்.

இச்சாசனத்திலே பல முக்கியமான அம்சங்கள் உள்ளன. அது கோயிலொன்றின் பெயரைக் குறிப்பிடுகின்றது. பதி என்னும் தானம் பற்றி வர்ணிக்கின்றது. விசையராமப் பேரிளமையார் என்னுமொருவரை அது புகழ்ந்துரைக்கின்றது. உண்மையில் இச்சாசனச் செய்யுள் விசையராமப்பேரிளமையார் பற்றிய மெய்க் கீர்த்தியாகவே அமைந்துள்ளது. சாசனத்தின் முடிவிலே வாணிபத்தொழிலைப் பற்றிய குறிப்புண்டு. கோயிலின் பெயர் வலகழி என்பதாகும். அப்பெயர் இச்சாசனத்தின் மூலமாகவே அறியப்படுகின்றது. கோயில் உத்தமர்தங் கோயிலென்றுஞ் சொல்லப்படுகின்றது. உத்தமர் என்னும் பெயர் சிவபெருமான், திருமால், புத்தர்பிரான் ஆகியோருக்குப் பொதுவானது. ஆயினும், சாசனம் சிவாலயமொன்றின் அழிபாடுகளிற் காணப்பெற்றதால் உத்தமர் என்பது இங்கு சிவபெருமானையே குறிக்கின்றதென்பது உறுதி.

இச்சாசனத்தில் வரும் பதி என்ற சொல் வழிபாட்டுத் தலமொன்றைக் குறிக்குமாயின் சீரிளமை சேர்ந்த பதியில் என்ற சாசனத்தொடரினை வலகழி என்பதற்குரிய அடைமொழியாகக் கொள்ளலாம். எனவே இச்சாசனம் சிறப்புகள் பலவற்றைக் கொண்டுள்ள ஒரு புதிய சிவாலயம் பற்றிக் குறிப்பிடுகின்றது என்று கருதலாம்.

ஆலயந் தொடர்பாகவே விசையராமப் பேரிளமையாரைப் பற்றிய குறிப்பு வருகின்றது. அவன் பதவியாவிலே புதியதொரு சிவாலயத்தைக் கட்டுவித்து, அதற்கு வலகழி எனப் பெயரிட்டு, அதன் நாள்வழிபாடுகளுக்கு நிவந்தங்கள் வழங்கியிருந்தான் என்று கொள்வதற்குச் சாசனக்குறிப்பு ஆதாரமாகின்றது. இச்சாசனத்தின் வாசகம் ஆலய ஸ்தாபனப் பிரகடனம் போல அமைந்துள்ளமையுங் குறிப்பிடற்குரியது.

பேரிளமையார் என்னுஞ் சமூகத்தவர் பற்றிய சாசனக் குறிப்புகள் மிக அரிதாகவே உள்ளன. உத்தரமேரூரிலும் மாமல்லபுரத்திலும் முதலாம் இராஜராஜன் காலத்தில் எழுதப்பெற்ற சாசனங்கள் சிலவற்றிலே பேரிளமையார் பற்றிய குறிப்புகள் உண்டு. உத்தரமேரூரிற் பெருமாள் கோயிலொன்றிலே விளக்கெரிப்பதற்கான நன்கொடைகளுக்குப் பேரிளமையார் பொறுப்பேற்றனர். மாமல்லபுரத்துப் பேரிளமையார் சமுதாயத்தில் உயர்நிலையில் இருந்தனரென்று கருதுவதற்கான காரணமுண்டு. அங்கு நகரம் மாமல்லபுரத்துப் பெருமக்களும் பேரிளமையாரும் ஓரளவு சமமான நிலையில் இருந்தனரென்று கொள்ள முடிகின்றது.

பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளிற் பேரிளமையார் ஏதோவிதமாகப் பதவியா நகரையடைந்து, அங்கு குடியிருந்தனர். சோழராட்சிக் காலத்தில் அவர்களின் குடியேற்றம் அங்கு ஏற்பட்டிருத்தல் வேண்டும். திசையாயிரவர் ஐந்நூற்றுவர் போன்ற வணிக கணத்தவரோடு அவர்கள் பதவியாவிற்குச் சென்றிருக்க வேண்டும். விசையராமப் பேரிளமையாரைத் திருத்தலத்திலே புகழ்ந்து போற்றுவதன் பயனாக வணிகரின் முயற்சிகள் சித்திக்கும் என்று சொல்லப்படுவதால் அவன் பதவியாவிலே செல்வாக்குடன் வாழ்ந்த பெருவணிகேசன் என்பதும், வலகழி என்னுந் தானம் வணிகர் தொடர்புடையது என்பதும் உணரப்படும்.

## வெண்கல முத்திரை - சிவசின்னங்கள்

இலங்கையிலுள்ள இந்து கலாசாரந் தொடர்பான சின்னங்களுட் பதவியாவிற் கிடைத்துள்ள வெண்கல முத்திரை வரலாற்று முக்கியத்துவங்கொண்டது. முத்திரை வட்டவடிவமானது. அது வெண்கலத்தின் கீழ்ப்புறத்திலுள்ளது. வெண்கலமானது கவிழ்ந்த மலர் போலக் காட்சியளிக்கும் வகையில் வார்க்கப்பட்டுள்ளது. முத்திரையின் நடுப்பகுதியில் வலப்புறமாக நோக்கி அமர்ந்திருக்கும் வகையில் நந்தியின் உருவம் உள்ளது. அதன் உறுப்புகள் மெலிந்த தோற்றமுடையவை. நந்தியின் வடிவம் பீடமொன்றில் அமைந்துள்ளது. அது இருதள பீடமாகும். அடித்தளமானது கவிழ்ந்த தாமரை மலரின் வடிவம் போன்றது. மேற்றளம் மலர்ந்த தாமரை போன்ற பத்மபீடமாகும். இரண்டிற்கும் இடையிலே வளையம் போன்ற அமைப்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தியின் இருமருங்கிலும் குத்துவிளக்கு ஒவ்வொன்று காணப்படுகின்றன. நந்தியின்மேலே, அதன் கொம்புகளுக்குப் பின்னாலே சற்றுத் தூரத்திலே, பிறையின் வடிவம் உண்டு. அதற்கு மேலே கொற்றக்குடை, இரு சாமரைகள் என்பனவற்றின் வடிவங்கள் அமைந்துள்ளன. இவ்வுருவங்கள் யாவுஞ் சங்கிலி வளையம் போன்ற அமைப்பிலும் கிரந்த எழுத்துகளிலும் அமைந்துள்ள சாசனம் ஒன்றின் மத்தியில் உள்ளன. சாசனம் சமஸ்கிருத மொழியிலுள்ளது. அதன் வரிவடிங்கள் 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரியவை. பிறையோடு கூடிய நந்தி சிவசின்னம் என்பதால் இம்முத்திரை சைவசமயச் சார்புடையதாகும். குத்துவிளக்கு இந்துசமய மரபிலுள்ள பிரதான சின்னங்களுள் ஒன்றாகும். அது ஒளி, அறிவு, செல்வம், பரம்பொருள் முதலியவற்றைக் குறிக்குஞ் சின்னமாகும். ஒளிவளர் விளக்கே, உலப்பிலா ஒன்றே என்று சிவபெருமானைப் போற்றுவர். எனவே சைவத்திலே விளக்குச் சிவபெருமானைக் குறிக்குஞ் சின்னமாகவும் அமைகின்றது. வெண்கொற்றக் குடை, சாமரம் என்பன இறைமையைக் குறிக்குஞ் சின்னங்களாகும். அவை அரசரின் சின்னங்களாகக் கொள்ளப்படுவதும் வழமை. இந்தியப் பண்பாட்டு மரபிலே அரசியல் வழமைகளுக்கும் சமய சிந்தனைகளுக்கும் இடையிலே நெருங்கிய தொடர்புகள் உண்டு. கோயில் என்பது அரசன் வாழும் அரண்மனையினையும் வழிபாட்டு நிலையமான ஆலயத்தையுங் குறிக்கும். அரசனையுங் கடவுளையும் இறை என்று சொல்வது தமிழ் வழக்காகும். அதுபோலவே சில அரச சின்னங்களும் சமய சின்னங்களும் பொதுவானவையாகும். கோயில்களில், உற்சவ காலத்திலே கடவுட் படிமங்களை வீதிவழியே எடுத்துச் செல்லும் போது குடைபிடித்துச் சாமரை வீசுவது வழமை. அரசர் அரியணையில் இருக்கும் போதும் உலாப் போகும் போதும் குடைபிடித்துச் சாமரை வீசுவது நியதி. இந்த முத்திரையிற் காணப்படுஞ் சின்னங்களைப் பொறுத்தவரையில் அவை சைவ சமய சின்னங்கள் என்பது அதிலுள்ள சாசனத்தின் மூலம் உறுதியாகின்றது. அச்சாசனத்தின் வாசகம் மேல்வருமாறுள்ளது:

*ஸ்வஸ்தி ஶ்ரீமத் த்விஜாவாஸ*
*ஶ்ரீபதி க்ராமவாஸினா மகேஸஸ்ய*
*ததிந்திராதி மௌலி, ராஜித சாஸனம்.*

மங்கலம்! இருபிறப்பாளர் வாழும் ஶ்ரீபதியில் வீற்றிருப்பவரும் இந்திரன் முதலிய (தேவர்களின்) முடிகளால் அழுத்தப்படும் திருப்பாதங்களை உடையவருமான மகேசனின் சாசனம்.

### கோயில் முத்திரை

மகேசன் என்பது ஈசனாகிய சிவனின் நாமங்களில் ஒன்றாகும். இச்சாசனம் ஶ்ரீபதி கிராமத்தில் வீற்றிருக்கும் மகேசனின் சாசனமென்று சொல்லப்படுவதால் அது பதவியாவிலுள்ள சிவாலயம் ஒன்றினுக்குரிய சாசனம் என்பதும், அதனைக் கொண்டுள்ள முத்திரையானது சிவாலயத்திற்கு உரியதென்பதும் உணரப்படுகின்றன. எனவே இது கோயிலார் பயன்படுத்திய முத்திரையாகும். அச்சிவாலயம் பதவியாவிலுள்ள அந்தணர் வாழும் பகுதியொன்றில் இருந்தது என்பதுஞ் சாசனத்தின் மூலம் அறியப்படுகின்றது. கோயிலுக்குரிய பற்று வரவுகள் தொடர்பாக அதன் நிர்வாகத்தினர் இம்முத்திரையினைப் பயன்படுத்தியிருத்தல் வேண்டும்.

### குகைக் கோயில்

புத்தனேஹெல என்னுமிடத்திற் காணப்படும் ஐந்து மலைக்குகைகளில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருட் சின்னங்கள் பல உள்ளன. அவற்றுளொன்று சைவர்களின் வழிபாட்டு நிலையமாக அமைந்திருந்தது என்று கொள்வதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. அதில் இலிங்கம் ஒன்றும் உடைந்த நிலையிலுள்ள விநாயகர் படிமமுங் காணப்பட்டன. புராதன காலத்திற் பௌத்த சங்கத்தவர் வாழ்ந்ததும், பின்பு அவர்களாற் கைவிடப்பட்டதுமான குகையொன்றினைப் 11 ஆம், 12 ஆம் நூற்றாண்டுகளிலே சைவர்கள் தங்கள் வழிபாட்டு நிலையமாக அமைத்துக் கொண்டனர் என்று கருதலாம்.

பொலன்னறுவைக் காலத்திற் பதவியா ஒரு பெரு நகரமாக அமைந்திருந்தது என்பது அங்குள்ள தொல்பொருட் சின்னங்களால் அறியப்படுகின்றது. அங்கு பௌத்தம், சைவம் ஆகிய சமயங்களைச் சேர்ந்த கோயில்களும் பண்பாட்டு நிலையங்களும் விருத்தி பெற்றிருந்தன. அந்நகரிலிருந்த ஐந்து சைவக் கோயில்களைச் சேர்ந்த தொல்பொருட் சின்னங்கள் அகழ்வாராய்ச்சிகளின் மூலங் கிடைத்துள்ளன. கட்டட இடிபாடுகளுக்குள் நந்தி, இலிங்கம் முதலிய சிற்ப வடிவிலமைந்த சமய சின்னங்களும், கடவுட் படிமங்களும், வெண்கல உருவங்களுஞ் சாசனங்களும் அங்கு கிடைத்துள்ளன.

நகரவாசிகளிற் குறிப்பிடத்தக்க அளவினர் சைவராயிருந்தனர். அவர்களுள் வணிகர் முதன்மை பெற்றிருந்தனர். பெரு வணிகரதும் அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்த கம்மாளர் முதலான உற்பத்தியாளர், படையினர் முதலியோரினதும் வழிபாட்டுத் தேவைகளுக்கு இக்கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. பதவியாவிலிருந்த சைவக் கோவில்களிற் பிரதானமாக இருந்த இரவிகுலமாணிக்க ஈஸ்வரம் ஐந்நூற்றுவரின் ஆதரவினைப் பெற்றிருந்தது. பதவியாவிலுள்ள வலகழி என்னும் 3 ஆம் சிவாலயம் பேரிளமையார் என்னுங் கணத்தவரின் கோயிலாக அமைந்திருந்தது. (சி. ப.)

## பதார்த்தங்கள்

பதார்த்தங்கள் என்பது இறுதியானதன்றி அடிப்படையான பகுப்பு அல்லது இனம் என்று பொருள்படும். இறுதியானது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையானது என்ற காரணத்தினால் இது தரம் (Class) என்பதினின்றும் வேறுபடுகின்றது. புதிய மேனாட்டுத் தத்துவத்தில், பதார்த்தம் என்பது ஒரு தத்துவத்தின் ஓர் அடிப்படையான எண்ணத்தையோ கருத்தையோ கொள்கையையோ குறிப்பிடுகிறது. உண்மையின் தோற்றம், அறிவு ஆகியவற்றிற்குள்ள முக்கிய குணங்கள், பக்கங்கள் (Sides), தொடர்பு (Relation) ஆகியவற்றை விளக்கும் முக்கிய கருத்துகளைப் பதார்த்தங்கள் எனக் கூறுகின்றனர். அக்கருத்துகள் மனிதன் தன்னைச் சூழ்ந்த உலகை அறிய மிகவும் உதவுகின்றன. ஒரு பொருளை அறிவது என்பது ஒரு எளிய எந்திர முறை போன்று (Mechanical) மனத்தில் எண்ணுவது அன்று. அது, புலன்களளிக்கும் செய்திகளைக் கருத்துகளாய் மாற்றும் ஒரு சிக்கலான மாற்றமாகும். புதிய கருத்து எண்ணக் கொள்கை பெற்றவர், பதார்த்தம் என்பதை மறுக்கின்றனர் அல்லது, அனுபவங்களை முறைப்படுத்துவதில் தனி ஒரு மனிதன் ஏற்கும் ஒரு முறையாக அல்லது வசதியான ஒரு முறையாகக் கருதுகின்றனர்.

இந்தியத் தத்துவத்தில் வைசேடிகர், பதார்த்தம் என்பது அறியக் கூடியது, ஏற்புடையதாக அறிந்தது, பெயரிட்டது, குறிக்கப்படுவது எனக் கூறுகின்றனர். பதார்த்தம் என்பது பதத்தின் அருத்தம் (பொருள்) என்றும், அது ஒரு பெயரிடக் கூடியது, குறிப்பிடக் கூடியது என்றும் விளக்கியுள்ளனர்.

அரிஸ்டாட்டில், பொருள், குணம், அளவு, தொடர்புகள், இடம், காலம், நிலை (Posture), நிலைமை (State), செயல், உணர்வு (Passion) என்னும் பத்துப் பதார்த்தங்களைக் குறித்துள்ளார்.

காண்டாட்டு நான்கு முக்கிய பகுதிகளில், ஒவ்வொன்றும் மூவகையிலமைந்த, 12 முறைகளில் தீர்மானங்களைப் பெறத் தேவையான ஆய்வு பெறும் செயல்களை விளக்கி, அவை பன்னிரு பதார்த்தங்களை அளிப்பவை எனக்கூறியுள்ளார். அப்பன்னிரு முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. அளவு - ஒவ்வொரு கூற்றும் பொதுவானது அல்லது சிறப்பானது அல்லது ஒருமையானது
(Universal, Particular, Singular)

2. குணம் - உடன்பாடு, எதிரிடை, அகண்ட
(Affirmative, Negative, Infinite)

3. தொடர்பு - திட்டமான, உத்தேசமான, பிரிக்கும்
(Categorical, Hypothetical, Disjunctive)

4. துறை வேறுபாடு - ஐயப்பாடான, உறுதியான, 'அவசியம். (Modality) வேண்டும்' என்னுங் கூற்று. (Problematic Assertoric, Apodictic)

இந்தியத் தத்துவத்தில் சமணர், திரவியம் என்பதைச் சீவ, அசீவ என இரு முக்கிய பதார்த்தங்களாக்கினர். சீவ என்பது உணர்வு, உயிர் பெற்றது. அசீவ, என்பது, காலம், ஆகாயம், தருமம், அதருமம், புத்கலம் (சடப்பொருள்) எனும் ஐந்து பதார்த்தங்கள் பெற்றது. தர்மம் என்பது, நகராத, ஆயினும், உயிர் சடப்பொருள் ஆகியவற்றை நகரச் செய்யும் ஊடகம். அதருமம் இவற்றை நகராமற் செய்வது. தருமம் அதருமம் இரண்டும் அண்டத்தில் பரவியுள்ளன. புத்கலம் என்பது பிரிக்கமுடியாத அணுவைப் பெற்றது. ஒவ்வோர் அணுவும் தொடு உணர்ச்சி, உருசி, வாசனை, நிறம் எனுங் குணங்கள் பெற்றது என்பர்.

மாத்யமிக பௌத்தர்கள், சதுசிட்ட கோடிவினிர் முக்த எனும் முரண்நிலை ஆய்வு முறையைப் பயன்படுத்திப் பதார்த்தம் என்பதை மறுக்கின்றனர்.

அறியும் முறை, அறியப்படுவது, ஐயம், பயன்பாடு, உதோரணம், சித்தாந்தம், (அனுமானத்தின்), அவயவங்கள், தருக்கம், நிருணயம், வாதம், வெற்றிக்காக வாதிடுவது, விதண்டா வாதம், போலியான காரணம், சொற்புரட்டு, சாத, நிக்கிரக, சுதானம் என்னும் பதினாறு பதார்த்தங்கள் நியாய மதத்திற்குரியன. இதில், அறியப்படுவதைத் தவிர மற்ற ஒன்பதும் தருக்கத்திற்குத் தொடர்புடையவை.

சாங்கியர்களின் அடிப்படையான பதார்த்தங்கள் புருடன், பிரகிருதி எனும் இரண்டே எனினும், பிரகிருதியின் 24 தத்துவங்களையும் சேர்த்து மொத்தம் 25 பதார்த்தங்கள் உள்ளன எனக் கூறுகின்றனர். பூர்வமீமாம்சத்தில், பிரபாகரர், திரவியம், குணம், கருமம், பொதுக்குணம், இயல்பு, சக்தி, உவமை, எண்ணிக்கை என்னும் எட்டுப் பதார்த்தங்களையும், பாட்டர் முதன் நான்குடன் பேதாபேதம் என்பதையும் சேர்த்து ஐந்து பதார்த்தங்களையும் விளக்கியுள்ளனர்.

விசிட்டாத்துவைதத்தில், திரவியம், அதிரவியம் என்பவையே அடிப்படையானவை. திரவியத்தில் சிறந்தது கடவுள், மற்றவை, பிரகிருதி, காலம், சுத்த சத்துவம் (சடப்பொருள்), தரும பூதஞானம் சீவன் என்பவை. ஒலி, தொடு உணர்சி, நிறம், சுவை, மணம், சத்துவம், இராகதம், தாமதம் எனும் பிரகிருதியின் குணங்கள், சக்தி, இணைவு (சம்யோகம்) எனும் பத்தும் அதிரவிய பதார்த்தங்கள்.

மாத்துவர், திரவியம், குணம், கருமம், பொதுக்குணம், விசேடம், வசிட்டம், முழுமை,சக்தி, உவமை, அபாவம் என்னும் பத்துப் பதார்த்தங்கள் உள்ளனவாகக் கூறுகிறார். ஒவ்வொரு பொருளும் கணக்கற்ற ஒருமையைப் பெற்றுள்ளது. பொருளின் ஒவ்வொரு குணத்திற்கும் ஒரு சிறப்பு உண்டு. விசேடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவற்றிற்கு அவை அடைமொழியாகின்றனவோ அவற்றைத் தனித்துக் கூறப் பயன்படுகின்றன.

சைவ சித்தாந்தம் பதி, பசு பாசம் (சடப்பொருள்) என்ற மூன்று முக்கிய பதார்த்தங்களை விளக்குகின்றது. சார்வாகம் மண், நீர், நெருப்பு, காற்று என்பவற்றைச் சடப்பொருளின் நான்கு வகைகளாகக் கூறுகிறது. அத்துவைதமோ, இரண்டற்ற உண்மையான பிரமத்தை எந்த ஒரு பதார்த்தத்தைப் பயன்படுத்தியும் விளக்க இயலாது எனக் கூறுகிறது.

(க. இர.)

## பதி

சைவ சித்தாந்தம் என்பது மெய்ஞான அனுபவத்தின் சாரம். அது வேத ஆகமக் கருத்துக்களில் இருந்து தெளிவு பெற்றது. இதை "பல கலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப் பதி பசு பாசம் தெரிதல்" என்று சிவப்பிரகாசம் கூற, முப்பொருள்களின் இயல்புகளை "பதி, பசு பாசம் எனப்பகர் மூன்றில் பதியினைப் போல் பசு பாசம் அநாதி" என்று திருமூலர் கூறுகின்றார். இவற்றுள் உயர்வாகப் பேசப்படும் முதன்மைத் தத்துவம் பதியென்பதாகும்.

**கடவுள் என்பதன் விளக்கம்:** சைவ சித்தாந்திகள் இறைவனை பதி, கடவுள், முதல்வன், சிவன், சங்கரன், ஈசன், ஆண்டவன், உடையவன், பசுபதி, எனப் பல பெயர்களால் குறிப்பிடுகின்றனர். கடவுள் = கட+ உள் ; கட என்றால் கடத்தல் காலம்; இடம் என எல்லாவற்றையும் கடத்தல்; உள் என்றால் உள் நின்று கலந்து நிற்பவன்; அதாவது கடந்தும் கலந்தும் நிற்கும் தன்மையானவர் கடவுள் என்பதாகும். எது ஒன்றாயும் வேறாயும், உடனாயும் இருந்து செலுத்தி இயக்குகிறதோ அதுவே கடவுள். முதல்வன் என்பவன் தோற்றம் கொண்ட எல்லாவற்றுக்கும் முதலாய் இருப்பவன். "மூலநோய் தீர்க்கும் முதல்வன் கண்டாய்" "மூவருமாகி இருவருமாகி முதல்வனுமாய் நின்ற மூர்த்தி" என்ற பாடலடிகளும் உணரத்தக்கன. கூறுகின்றன. ஆள்பவன், ஆளும் தன்மை உடையவன், ஆண்டவன் என்றும் இறையவன் எல்லாப் பொருள்களும் வணங்கத்தக்க தலைமை உடையவன். எங்கும் எதிலும் நிறைந்து இருக்கும் தன்மை உடையவன் இறைவன். திருமூலர் சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை, அவனோ டொப்பர் இங்கு யாவரும் இல்லை, அன்பே சிவம் என்று கூறியதையே சிவப்பிரகாச ஆசிரியரும் பதிபரமேயதுதான் என அடியெடுத்துப் பதியே சிவன் என்று முடித்துக் காட்டுகின்றார். வேதம், ஆகமம், புராணங்கள் என்னும் மூன்று வகை நூல்களும் சிவபெருமான் ஒருவரே பரம்பொருள் என்பதை நிறுவுகின்றன. அதர்வ சிர உபநிடதம், சுவேதாஸ்வதர உபநிடதம், லிங்கபுராணம், சிவாகமம் அனைத்தும் சிவனே ஒப்பாரும் மிக்காரும் இன்றி உயர்ந்த பரம்பொருள் என்பதை நிலை நிறுத்திக் காட்டுகின்றன.

**கடவுளிருப்பு முறைகள்:** சிந்தாந்திகள், காண்டல், கருதல், உரை ஆகிய பிரமாணங்களின் அடிப்படையில் கடவுள் ஒருவர் உளர் என்பதைத் துணிகின்றனர். கண்ணால் காண்பதுவும், காதால் கேட்பதும் காண்டலே. இவற்றிலே பல பிரிவுகளைச் சைவ சித்தாந்தம் கூறுகின்றது. அப்பிரிவு முறைகள் ஒவ்வொன்றும் இறையிருப்பை ஆதாரப்படுத்துகின்றன. கருதல் என்பது இருப்பதைக் கொண்டு இல்லாதவொன்றை ஊகத்தின் மூலம் கண்டறிவதைக் குறிக்கும். பானையையும் குயவனையும் உவமைப்படுத்தி இறையிருப்பை நிரூபிக்கின்றது. பானை என்பது தன்னைத்தானே உருவாக்கிக் கொள்ளாது. அத்துடன் அது முன்னே உருவாக்கப்பட்டிருந்த பொருளுமல்ல. அது போலவே இவ் உலகமும் தன்னைத்தானே படைத்துக் கொண்டதுமல்ல. அது முன்னே படைக்கப்பட்டிருந்த பொருளுமல்ல. எனவே, பானையை வனைவதற்குக் குயவன் ஒருவன் இருந்தே ஆக வேண்டும். அது போல இவ்வுலகைப் படைக்க இறைவன் ஓர் காரணனாக உளன் என காரண காரிய, சத்காரியவாதப்படி இறையிருப்பைத் துணிகின்றனர். அதே போல் எல்லா ஆன்மாக்களும் வினைகளைப் புரிகின்றன. ஆனால் அவ்வினைக் கேற்ற பலன்களைத்தானே பெற்று அனுபவிக்கின்ற வல்லமை ஒரு ஆன்மாவுக்கேனும் கிடையாது. எனவே ஆன்மாவின் வினைக்கேற்ப தனு, கரண, புவன போகங்களை வழங்க ஒருவன் தேவை. அவனே இறைவன். அவன் உளன் - உரை என்பது ஆப்த வாக்கியம், வேதாகமப் பிரமாணம் என்று சொல்லப்படும். இவை இறைவனை அனுபவ ரீதியாக உணர்ந்த மகான்களின் வாய் மொழிகள் ஆகும். இவை இறையிருப்பை உணர்வதற்கு ஆதாரமானவை.

நாயன்மார்கள் பாடிய தேவார திருவாசகப் பாடல்களும் இறையிருப்புக்கு ஆதாரமானவை. "அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின், தோன்றிய திதியே ஒடுங்கி மலத்துள தாம், அந்தம் ஆதி என்மனார் புலவர்" என்ற சிவஞானபோத முதலாம் சூத்திரப் பாடல் அளவைப் பிரமாணம் கொண்டு இறையிருப்பை நிறுவ, சிவஞானசித்தியார் சுபக்கப்பாடலான "ஒருவனோடு ஒருத்தியொன்றை யென்றுரைத்திடு, முலகமெல்லாம் வருமுறை வந்து நின்று போவது மாதலாலே தருபவனொருவன் வேண்டும்" என இறைவனை உண்மைப்படுத்துகின்றது.

**கடவுளிலக்கணங்கள்:** வேதங்கள் இறைவனுக்கு இரண்டு குணங்களைக் கற்பிக்கின்றன. அதில் ஒன்று பொது நிலைக்குணம். இந் நிலையில் இறைவன் எண்குணத்தவனாய்த் திகழ்கின்றான். மற்றையது சிறப்பு நிலைக் குணம். இந் நிலையில் இறைவன் நிர்க்குணனாகவே விளங்குகின்றான். இவற்றையே சைவசித்தாந்திகள் குணம் குறியற்ற சொரூபநிலை என்றும், குணம்குறியுள்ள தடத்தநிலை என்றும் குறிப்பிடுகின்றனர்.

**(அ) சொரூபலக்கணம்:** அருவம், அருவுருவம், உருவம் என்னும் முத்திறத் திருமேனிகளைக் கடந்தோராய், ஓரடையாளமும் இல்லாதவராய், மனம் வாக்குக்கு அதீதராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணங்களுக்கு மேற்பட்டவராய், ஆனந்தக் குறியாய், மலரகிதராய் ஓராதாரமுமில்லாதவராய், ஒரு காலத்தும் சலிப்பற்றவராய், சுகவடிவினராய், பசு, பாச ஞானங்களால் அறிதற்கரியவராய், உவமையில்லாதவராய், ஞானமாய், அதி சூக்குமராய், விருப்பு, வெறுப்பு இல்லாதவராய், பரஞ்சோதியாய், மூவகை ஆன்மாக்களுக்கும் முத்தித்தானமாய் நிற்பவர் சிவப்பொருளே என்று சிவாகமங்கள் இயம்புகின்றன. இதற்கேற்றாற்போல் கந்தபுராண பாடலொன்றும் அமைந்துள்ளது.

*ஊரிலான் குணங் குறியிலான் செயலிலா னுரைக்கும்*
*பேரிலானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்*
*சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு*
*நேரிலா னுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான்*

சித்தாந்திகள் சொரூபலட்சணத்திற்குக் கூறும் வரையறைகளைத் திருக்களிற்றுப்படியார் (10) பாடலொன்று இரத்தினச் சுருக்கமாகத் தந்துள்ளது.

*ஒன்றும் குறியே குறியாதலால் அதனுக்கு*
*ஒன்றுங் குறியொன்று இல்லாமையினால் ஒன்றோடு*
*உவமிக்க லாவதுவும் தானில்லை ஓவாத்*
*தவமிக்காரே இதற்குச் சான்று*

இதே போல் இறைவன் யாவற்றிலும் மேலான பொருள், அவனுக்கு அருவம், உருவம் இல்லை, குணம் குறியுமில்லை, அவன் அழுக்கற்றவன், அவன் ஏகமானவன், அவன் அழிவற்றவன், உயிர்களின் அறிவுக்கு அறிவானவன், சலனம் அற்றவன், எல்லை அற்றவன், ஆனந்தமே உருவானவன், மாறுபட்டவர்களுக்கு அரியவன், வழிபடுவோருக்கு எளியவன், சிறியவற்றுள் சிறியவன், பெரியவற்றுள் பெரியவன், அவனையே அறிவுடையோர் சிவன் என்பர் என்பதை பதிபரமே அதுதான், நிலவும் அரு-உருஇன்றிக் குணங்குறிகள் இன்றி நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி.......... சிவப்பிரகாச நூலாசிரியர் சிறப்பாக வரையறுத்துள்ளார்.

திருவருட்பயன் கூறுமாப் போல் அகர உயிர்போல் அறிவாகி எங்கும், நிகரில் இறை நிற்கும் நிறைந்து, இறைவன் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் இருந்து உயிர்களுக்கு உபகரிக்கின்றான், ஒன்றாய் நிற்றலால், நிலைக்கவும், வேறாய் நின்று அறிவித்தலால் அறியவும், உடனாய் நின்று செலுத்துவதாலும் உயிர்களுக்கு உபகாரம் செய்கின்றான் என்று "வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம் மிழலையே" "உள்குவர் உள்கிற்றெல்லாம் உடனிருந்து அறிதி" என்ற பாடலடிகள் உணர்த்திக் காட்டுகின்றன. ஆதியும் அந்தமும் இல்லாச் சோதியாக எங்கும் பரந்துள்ள இறைவன் எள்ளினுள் எண்ணெய் போலவும், மணிக்குள் நாதம் போலவும், பூவுக்குள் மணம் போலவும் தீயிலிருந்து ஒளிவிடும் அரிய சோதி போன்றும் உலகமெங்கும் உள்ளும், வெளியுமாக இறைவன் தனது இயல்புகளை நிறைத்துள்ளான் என்பதை "விறகில் தீயினன் பாலில் படு நெய் போல், மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" என்ற பாடல் சான்று பகருகின்றது.

**(ஆ) தடத்தலக்கணம்:** பதியானவன் உயிர்கள் மீது கொண்ட பெருங் கருணையின் காரணமாக கண்ணுக்குப் புலப்படாத, யாரும் அறிய முடியாத, குணம் குறியற்ற உயர்வான அகல நிலையில் இருந்து எண்குணங்களையும், மூவுடல்களையும், ஐந்தொழில்களையும் புரிகின்ற சகள நிலையான தடத்த நிலைக்கு வருகின்றார். தடத்தம் என்பது குணங்குறிகளினூடாக ஆன்மாக்களைத் தடுத்தாட் கொள்ளுகின்ற நிலை என திருவுந்தியார் பாடல் மேல்வருமாறு கூறுகின்றது.

*அகளமாய் யாரும் அறிவு அரிது. அப்பொருள்*
*சகளமாய் வந்தது என்று உந்தீபற*
*தானாகத் தந்தது என்று உந்தீபற*

**எண்குணத்தான்:** தடத்த நிலையில் குணாதீதனாக இருக்கும் இறைவனை, சத், சித், ஆனந்தம் என்ற மூன்று சொற்களின் விரிவாக எண்குணத்தீசனின் இயல்புகளை சித்தாந்திகள் விரிவுசெய்கின்றனர். ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசையேகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், அறவாழியந்தணன் என முதல் எட்டுக் குறள்களிலும் எட்டுக் குணங்களையும் கூறி ஒன்பதாவது குறளில் எண்குணத்தான் என்று வள்ளுவர் மேல்வரும் குறளில் தந்துள்ளார்.

*கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை*

இக் குணங்களை சைவசித்தாந்திகள்
தன்வயத்தனாதல் (சுவதந்திரத்துவம்)
தூயவுடம்பினனாதல் (விசுத்த தேகம்)
இயற்கையுணர்வினனாதல் (அநாதி போதம்)
முற்றுமுணர்தல் (சருவஞ்ஞத்துவம்)
இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் (நிராமயம்)
பேரருளுடைமை (அலுப்த சக்தி)
முடிவிலாற்றலுடைமை (அநந்த சக்தி)
வரம்பிலின்ப முடைமை (திருப்தி)

என்று குறிப்பிட, இக்குணங்களை கச்சியப்ப சிவாசாரியர்
*நற்குணமுடைய நல்லொரு நாடொணாச்*
*சிற்குண னாகுமச் சிவன் பராபரன்*
*சொற் குண மூவகைத் தொடர்பு மில்லதோர்*
*நிர்க்குண னவன் செய னிகழ்த்தற் பாலதோ*

என்று பாட, மேல்வரும் தேவாரப் பாடல்களிலும், தேவார ஆசிரியர்கள் எண்குணங்களைச் சுட்டியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏழிசையும் எண்குணங்களும்........" (சம்பந்தர் 1405)

"எட்டுக்கொ லாமவ ரீறில் பெருங்குணம்......"(அப்பர் 4342)

"எண்குணவன் காண்......." (அப்பர் 5861)

"எட்டுவான் குணத்து ஈசன்......." (அப்பர் 6109)

"இறையவனை மறையவனை எண் குணத்தினானை.........."

(சுந்தரர் 7630)

**மூவகைத் திருமேனிகள்:** இறைவன் உயிர்களுக்கு அருள்புரியும் நோக்கில் அருவம், உருவம், அருவுருவம் என்பதாகிய மூவகைத் திருமேனிகளைத் தாங்குகின்றார். அருவமேனி என்பது கண்ணுக்குப் புலப்படாது இருக்கின்ற சிவம், சக்தி, நாதம், விந்து ஆகிய நான்குமாகும். இந் நான்கும் இறைவனது நிஷ்களங்களாகும். உருவமேனியென்பது அநாதிமலமுத்த சித்துருவாகிய இறைவன் உயிர்கள்மேல் வைத்துள்ள கருணையினால் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன் எனும் நான்கு மேனிகளைத் தரிக்கின்றான். இதனை சிவஞான சித்தியார் பாடல் "ஈசன் உவந்து அருள் உருத்திரன் தான் மால் அயன் ஒன்றின் ஒன்றாய்ப் பவம் தரும்.......... உருவம் நால்.........." என்றவாறு குறிப்பிடுகின்றது. இந் நான்கும் இறைவனது சகளங்கள் என்று கூறுவர். சிவன் ஆன்மாக்களுடைய தியான பூசையின் நோக்கமாக அருவுருவத் திருமேனியாகிய சதாசிவம் இலிங்கத்தைக் கொண்டதாகும். இதனைக் கந்தபுராணம், சிந்தனை யருச்சனை செய்தி "யாவருமுய்ந்திடச் சதாசிவ வுருவைந் துற்றதும்" எனக் குறிப்பிடுகின்றது. இவ்வாறு இவற்றின் இயல்புகளின் இரத்தினச் சுருக்கத்தை திருவருட்பயன் ஆசிரியர் மேல்வரும் குறளொன்றில் தந்துள்ளார். "அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம், உருவும் உடையான் உளன்"

**ஐந்தொழில்கள்:** சிவபெருமானே சத்தனாய் சுத்த மாயா புவனங்களில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்கின்றான். சர்வ சங்காரகாரணனே முதற்பொருள். அவனே சர்வ சிருஷ்டியும் சர்வசங்காரமும் செய்கின்றான். இதனை காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதியில்

*இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான் போற்றி*
*இறைவனே ஈண்டிறக்கம் செய்வான்*

என அற்புதமாகப் பாடியுள்ளார்.

படைத்தல் - உயிர்களை ஈடேற்றம் செய்யும் பொருட்டு அவை முன் செய்த வினைக்கேற்ப பிரம்மாவை அதிட்டித்துத் தனு, கரண, புவன, போகங்களை வழங்குதல்.

காத்தல் - முன் செய்த கன்மப் பயனை, கன்ம மலத்தை அனுபவித்து அதனை வலி கெடச் செய்வ தற்காக திருமாலை அதிட்டித்துக் காத்தல் தொழிலைப் புரிகின்றான்.

அழித்தல் - கன்ம பலனை நுகர வந்த உயிர்கள், மேலதி கமான வினைகளைப் புரிவதனால் எடுத்திருக்கும் உடல் அளவால் அவ் வினைகளை அனுபவிக்க முடியாமல் போகும்போது, உயிர்களை இளைப்பாற்ற உருத்திரரை அதிட்டித்து அழித்தல் தொழிலைப் புரிகின்றார்.

மறைத்தல் - உயிர்களை நுகர்ச்சியில் நிலை நிறுத்தவும் உயிர்களுக்கு அருள் புரியும் பொருட்டும் மகேசுவரரை அதிட்டித்து மறைத்தல் தொழில் புரிகின்றார்.

அருளல் - இறைவன் உயிர்களை தனது திருவடிகளிற் சேர்த்துக் கொள்வதற்காக குருமேனி தரித்து சதாசிவராக இருந்து அருள் புரிகிறார்.

இவற்றை உண்மை விளக்கப்பாடலொன்று மேல்வருமாறு தருகின்றது.

*படைப்பான் அயன் அளிப்பவன் பங்கயக்கண் பாயன்*
*துடைப்பன் உருத்திரனும் சொல்லில் - திடப்பெறவே*
*என்றும் திரோபவிப்பர் ஈசர் சதாசிவரும்*
*அன்றே அநுக்கிரகர் ஆம்*

இத்துடன் நாயன்மார்களும் இத் தொழில்களை

*"படைத்தளித் தழிப்ப மூம்மூர்த்திகளாயின்* - சம்பந்தர்
*படைப்புத் நிலையிறுதிப் பயன்பருமை* - சம்பந்தர்

*"மூத்தவனாய் உலகுக்கு முந்தினானே*
*முறைமையால் எல்லாம் படைக்கின்றானே*

*ஏத்தவனாய் ஏழுலகு மாயினானே*
*இன்பனாய்த் துன்பங் களைகின்றானே*

*காத்தவனாய் எல்லாந்தான் காண்கின்றானே*
*கடுவினையேன் தீவினையைக் கண்டு போகத்*
*தீர்த்தவனே................................"*

அப்பர்

*"ஆக்குவாய்! காப்பாய்! அழிப்பாய்! அருள்தருவாய்*

- மாணிக்கவாசகர் எனப் பாடியுள்ளனர்.

ஐந்தொழில்களின் அருட்செயல்களை சிவஞான சித்தியார் சுபக்கப் பாடலொன்று தந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அழிப்பு இளைப்பு ஆற்றல் ஆக்கம் அவ்வவர் கன்மம் எல்லாம்*
*கழித்திடல் நுகரச் செய்தல் காப்பது கன்ம ஒப்பில்*
*தெழித்திடல் மலங்கள் எல்லாம் மறைப்பு அருள் செய்தி தானும்*
*பழிப்பு ஒழி பந்தம் வீடு பார்த்திடின் அருளே எல்லாம்*

**பதி உயிர்களுக்கு உபகரித்தல்:** பதியானவர் உயிர்களுக்கு உபகரிப்பதற்குக் காரணம் கன்மத்துக்கீடாக ஆன்மாக்களுக்கு மாயா காரியங்களைக் கொண்டு உணர்த்துபவர். உலகு உயிர்கள் யாவற்றையும் அறியவல்ல முதல்வன் உயிர்க்குயிராய் நின்று உயிர்களுக்கு உணர்துகின்றான். இதனால் உயிர்களுக்கு ஏகதேச அறிவும் அதனால் விடய போகமும் கன்மவொப்பில் வியாபக அறிவும் அதனால் பரபோகப் பயனும் உண்டாகும்.

பாசமாம் பற்றறுத்து பாரிக்கும் ஆரியன் என மாணிக்கவாசகர் பாட, அருணந்திசிவாசாரியார் "துன்னிய ஐம்புலவேடர் சுழலிற்பட்டுத் துயருறுந் தொல்லுயிரை மன்னுமருட் குருவாகி வந்து மலமகற்றி வைப்பன்" எனப் பாடியிருப்பதன் பொருள் யாதெனில் பதியானவன் ஆன்மாக்களை ஆட்கொண்டு அருள் வழங்கப் பூமியில் குருவேடம் தாங்கி வந்து ஆன்மாக்களின் பாசங்களை நீக்கி மெய்ஞானத்தை ஊட்டுகின்றார். இதன் மூலம் ஆன்மாக்களின் செய்த வினைகளிலிருந்து நீக்குவதற்காக தீட்சை புரிந்து அருளுகின்றார். இந்நிலைப்பாட்டை மாணிக்கவாசகர் "மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே, அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே" என்று பாட, திருவருட்பயன் ஆசிரியர் "அருளா வகையிலால் அருள் புரிய வந்த, பொருள் ஆர் அறிவார் புவி" என்ற குறளிலிலும், "அகலத் தரும் அருளை ஆக்கும் வினை நீக்கும், சகலர்க்கு வந்து அருளும் தான்" என்ற குறளிலும் நயமாகத் தந்திருப்பது கருதத்தக்கது.

குருவருளின்றி இறைவனது திருவருளில்லை என்பார் சித்தாந்த அறிஞர். விறகை அக்கினி சாம்பலாக்குவதுபோல், இரும்பைக் காந்தம் கவர்வது போல், இரும்பை அக்கினி பழுத்துக் காச்சுவது போல் ஆன்மாக்களையும் திருவருளால் ஆட்கொண்டு அத்துவிதமாய் ஆனந்தமாய் உயிர்களோடு ஒன்றாகாமல் இரண்டாகாமல் கலந்து நின்று முத்தியின்பம் அருளுகின்றான் இறைவன். இவ்விளக்கத்தைச் சிவஞான சித்தியார் மேல்வருமாறு காட்டி நிற்கின்றது.

*ஒன்று எனும் அதனால் ஒன்று என்று உரைப்பது உண்டு ஆகையாலே*
*நின்றனன் வேறாய்த் தன்னின் நீங்கிடா நிலைமையாலே*
*பின்றிய உணர்வுக்கு எட்டாப் பெருமையன் அறிவின் உள்ளே*
*என்றும் நின்றிடுத லாலே இவன் அவன் என்னல் ஆமே.*

(சு. து.)

# பதினான்கு சாத்திரங்கள்

சைவசமயத்தின் கொள்கையாம் சைவசித்தாந்தத்தின் பிரமாண இலக்கியங்களாக விளங்குபவை பதினான்கு சாத்திர நூல்களேயாம். சந்தான குரவர்கள் மரபில் தோன்றி வளர்ந்தமையால் மெய்கண்ட சாத்திரங்கள் என்றும் அவற்றைப் போற்றுவர்.

இவை சைவசித்தாந்த மரபு செழுமை பெறுவதற்கு காரணமாய் அமையும் தமிழ் நூல்களாகும். சைவசித்தாந்த சிந்தனைகளை ஆழமாகவும், அகலமாகவும், நுட்பமாகவும் விளக்கும் செந்தமிழ் நூல்களாகும்.

இத்தகைய நூல்கள் காலவரிசையின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டு இருக்கின்றன. அவைகள் முறையே திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பனவாகும். இந்நூல்களை இரத்தினச் சுருக்கமாக மேல்வரும் பாடலொன்று குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

*உந்தி களிறு உயர் போதம் சித்தியார்*
*பிந்து இருபா உண்மை பிரகாசம் - வந்த அருள்*
*பண்பு வினா போற்றிகொடி பாசம் இலா நெஞ்சுவிடு*
*உண்மை நெறி சங்கற்பம் உற்று*

1. **திருவுந்தியார்:** இந்நூலின் ஆசிரியர் திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார். கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நூலாகும். 45 பாடல்கள் இந்நூலில் உள்ளன. இந்நூல் பதினான்கினுள் காலத்தால் முந்தியது. ஒவ்வொரு பாடல் முடிவிலும் "உந்தீ பற" "உந்தீ பற" என்று முடிவதனால் திருவுந்தியார் என்ற பெயர் பெற்றது. சைவசித்தாந்த நுண்பொருள்களை கருத்தாழமிக்க பாடல்களால், வெளிப்படுத்தி நிற்கும் ஓர் நூலாகும்.

2. **திருக்களிற்றுப்படியார்:** மெய்கண்ட சாஸ்திர வரிசையில் அடுத்து வைக்கப்பட்ட நூல் இதுவாகும். இந்நூலைத் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் பாடினார். கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நூலாகும். இந்நூல் 100 பாடல்களைக் கொண்டுள்ளது. சிதம்பரத்து திருக்களிற்றுப் படியிலே இந் நூலை வைத்தபோது அப்படியில் உள்ள களிற்றின் கை நிமிர்ந்து நூலை எடுத்துச் சிதம்பரப் பெருமானின் தாளில் வைத்தமையால் இந் நூல் திருக்களிற்றுப் படியார் எனும் பெயர் பெற்றது என்பர். இந்நூல் நாயன்மார்களின் சிறப்புக்களைச் சிறப்புற எடுத்துக் கூறுவதுடன் சைவ சித்தாந்த நெறியின் சிறப்புக்களையும் முப்பொருள் பற்றிய விளக்கங்களையும் சித்தாந்த மரபுக்கு ஏற்ற முறையில் நயமுற விளக்கும் பெருமை பெற்ற நூலாகும்.

3. **சிவஞானபோதம்:** மெய்கண்ட தேவரால் அருளப்பட்டது. கி.பி. 13 ஆம் நூற்றாண்டுக்குரிய நூலாகும். நான்கு இயல்களையும், பன்னிரண்டு சூத்திரங்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பத்தொரு வெண்பாக்களையும் அடக்கிய நூலாகும். ஒவ்வொரு இயல்களுக்கும் மூம்மூன்று சூத்திரங்கள் வகுக்கப்பட்டு சைவசித்தாந்தக் கருத்துக்களை முறைப்படுத்தித் தந்திருக்கும் தனி முதன்மையும், சிறப்பும் வாய்ந்த நூலாகும். இந்நூலில் உள்ள முதலாறு சூத்திரங்களும் முப்பொருளின் பொது இலக்கணத்தைக் கூற, அடுத்த ஆறு சூத்திரங்களும் முப்பொருளின் சிறப்பு இலக்கணத்தைக் கூறுகின்றன. பொதுவாக நோக்கும்போது முப்பொருளின் உண்மை, அவற்றின் இலக்கணங்கள், சாதனம், சாதிக்கும்முறை என்ற ஒழுங்கு இந்நூலில் காணப்படுகின்றது. சைவ சித்தாந்தக் கோட்பாட்டை விளங்கிக் கொள்ள வேண்டுமானால் சிவஞானபோதத்தின் உட்கிடைகளை விளங்கிக் கொண்டால் போதுமானது என்பது சைவசித்தாந்திகளின் துணிவு. இந்நூலிற்குப் பலர் சிற்றுரைகளையும், பேருரைகளையும் எழுதியுள்ளனர். அவர்களில் சிவஞான யோகிகள் முக்கியத்துவம் பெற்றவர்.

4. **சிவஞானசித்தியார்:** இந்நூல் மெய்கண்டாரின் மாணவரான அருணந்தி சிவாசாரியாரால் இயற்றப்பட்டது. கி.பி. 13 ஆம் நூற்றாண்டுக்குரிய நூலாகும். பரபக்கம், சுபக்கம் எனும் இரு பகுதிகளையுடையது. பரபக்கம் 301 பாடல்களையும் சுபக்கம் 328 பாடல்களையும் கொண்டுள்ளது. முதற்பகுதியில் சிவாகமப் பிரமாணங்களை மறுக்கும் பதினான்கு புறச்சமயங்கள் கூறும் தத்துவங்களை எடுத்துரைத்து அவற்றைத் தருக்கமுறையோடு மறுத்துரைப்பதும், சைவ தத்துவ உண்மைகளை வெளியிடுவதுமாகக் கருத்துக்கள் அமைந்துள்ளன. இரண்டாம் பகுதி சிவஞான போதத்தில் உள்ள பன்னிரண்டு நூற்பாக்களின் கருத்துக்களைப் பன்னிரண்டு அத்தியாயங்களில் விரித்துக் கூறுவதாக அமைந்துள்ளது. சிவஞான போதப் பொருளை விளக்கும் வகையில் இந்நூலை எழுதியமையால் சிவஞான போதத்திற்கு வழி நூல் என்ற சிறப்பையும் அது பெறுகின்றது. "பார் விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப்பாதி போதும்" என்றும் "பாதி விருத்தத்தால் இப் பார் விருத்தமாகவுண்மை சாதித்தார் பொன்னடியைத் தான் பணிவ தெந்நாளோ?" என்று வரும் பாடல் பகுதியில் இருந்தும் இந் நூலின் புகழ் நன்கு தெளிவாவது கண்கூடு. நிரம்பவழகியர், மறைஞான தேசிகர், சிவாக்கிர யோகிகள், ஞானப் பிரகாசர், சிவஞான முனிவர், சுப்பிரமணிய தேசிகர் என்னும் அறுவரும் சிவஞான சித்தியாரின் சுபக்கப் பகுதிக்கு உரை செய்துள்ளனர்.

5. **இருபா இருபஃது:** அருணந்தி சிவாசாரியார் எழுதிய மற்றுமொரு நூல் இதுவாகும். இதுவும் கி.பி. 13 ஆம் நூற்றாண்டுக்குரியவை. வெண்பா, ஆசிரியப்பா எனும் இருவகைப் பாக்களால் 20 பாடல்களிற் சித்தாந்த நுணுக்கங்களை நயமாக விரித்து விளக்குகின்ற நூலாகும். மெய்கண்டதேவரை குரு முதல்வராக வைத்து, அவர் விடை கூறும் பாங்கிலும் தான் வினவும் பாங்கிலும் அமைந்த நூலாகும். இந் நூலில் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களின் நுணுக்கங்கள் நுணுகி ஆராயப்பட்டுள்ளன. சீர்காழித் தத்துவ நாதர் இந்நூலிற் உரை செய்துள்ளார்.

6. **உண்மை விளக்கம்:** மெய்கண்டதேவரின் மற்றொரு மாணவரான திருவதிகை மனவாசகங்கடந்த தேவரால் பாடப்பட்ட நூலாகும். இந் நூலின் காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டு. இந் நூலில் 55 வெண்பாக்கள் காணப்படுகின்றன. ஆறாறு தத்துவமாம் 36 தத்துவங்கள், ஆன்ம சொரூபம், ஆணவம், வினை, பதியின் சொரூபம், திருவைந்தெழுத்து போன்ற விடயங்கள் தொடர்பான ஐயங்களுக்கு விளக்கமான விடை கூறும் பாங்கில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலைச் சித்தாந்த அனுபவத் திரட்டு என்றும் சிறப்பிப்பர். இந்நூலிற்கும் பழையவுரை ஒன்றுண்டு.

7. **சிவப்பிரகாசம்:** இந்நூல் தொடக்கம் சங்கற்ப நிராகரணம் ஈறாகவுள்ள எட்டு நூல்களையும் உமாபதி சிவாசாரியர் இயற்றினார். அந்நூல்கள் அனைத்தும் கி.பி. 14 ஆம் நூற்றாண்டுக்குரியவை.

இந்நூல் சிவஞான போதத்தின் சார்பு நூலாகும். இந் நூல் 100 விருத்தங்களைக் கொண்டுள்ளதோடு, பொது, சிறப்பு என்னும் இரு பகுதிகளை உடையதாகவும் அமைந்துள்ளது. பொதுவியலிற் சிவஞான போதத்தின் முதல் இரு சூத்திரங்களின் விளக்கம் விரிவு பெறச் சிறப்பியலில் மூன்றாம் சூத்திரம் முதல் பன்னிரண்டாம் சூத்திரம் வரையிலானவற்றின் கருத்துக்களை விளக்கும் வகையில் அமைந்துள்ளன. இந் நூலிற்கு மதுரைச் சிவப்பிரகாசர் என்பவர் உரை எழுதியுள்ளார்.

8. **திருவருட்பயன்:** சைவசித்தாந்தக் கருத்துக்களை குறட்பாக்களிற் கூறுவது இந்நூல். பதிமுதுநிலை, உயிரவை நிலை, இருண்மல நிலை, அருளுறு நிலை, அறியுநெறி, உயிர்விளக்கம், இன்புறு நிலை, ஐந்தெழுத்து அருள் நிலை, அணைந்தோர் தன்மை என பத்து அதிகாரங்களையும் ஒவ்வொரு அதிகாரங்களுக்கும் பத்துப் பத்து குறள்கள் வீதம் 100 குறள்கள் கொண்டதாக அமைந்துள்ளது. இவற்றில் முதல் ஐந்து அதிகாரங்களும் திருவருள் பற்றியும் அடுத்த ஐந்து அதிகாரங்களும் திருவருளினால் ஏற்படும் பயன் பற்றியும் விளக்குகின்றன. திருமுறைகள், ஆகமங்கள், சிவஞான போதம் முதலான நூல்களில் கூறப்படும் சித்தாந்த கருத்துக்களை திட்பநுட்பமாய், தெளிந்த, செறிந்த விளக்கமாய்க் கூறும் நூலாகும். இந் நூலிற்குச் சிந்தனை உரை எனும் பழையவுரை ஒன்று உளது.

9. **வினாவெண்பா:** பதின்மூன்று பாடல்களைக் கொண்டது. உமாபதி சிவாசாரியார் தனது குருவான மறைஞான சம்பந்தரிடம் சித்தாந்த உண்மைகளை வினாவுகின்ற பாங்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை ஆக்கியுள்ளார். அருணந்தி சிவாசாரியாரின் இருபா இருபஃது நூலைப் போன்றே இந்நூலும் அமைந்து சித்தாந்த நுணுக்கங்களுக்கு விடைகாண முற்படுகின்றது. திருவாவடுதுறை ஆதீனம் நமச்சிவாயத் தம்பிரான் இந் நூலிற்கு உரையொன்று எழுதியுள்ளார்.

10. **போற்றிப் பஃறொடை:** இந்நூல் சாத்திர நூலாக மட்டுமன்றி தோத்திர நூலாகவும் அமைந்துள்ளது. கலிவெண்பாவினால் அமைந்தது. இறைவனைப் போற்றித் துதிப்பது போல் அமைவதனால் போற்றிப் பஃறொடை எனும் பெயர் பெற்றது. குருவின் திருமேனியை சிவனின் திருமேனியாகக் கொண்டு குருவே சிவம் எனப் போற்றும் இந் நூலில் சித்தாந்த உண்மைகளை விளக்கும் பதின்னான்கு போற்றிகள் அமைந்துள்ளன. இந் நூலிற் கூறப்படும் கருத்துக்கள் பயின்று மகிழத்தக்கவை. இந் நூலிற்கு பழைய உரை ஒன்றும் உளது.

11. **கொடிக்கவி:** கட்டளைக் கலித்துறை ஒன்றும், வெண்பாக்கள் மூன்றுமாக நான்கு பாடல்கள் இந்நூலில் உள்ளன. உமாபதி சிவாசாரியார் தில்லைத் திருவிழாவில் ஏறாது நின்ற கொடியை அநுபூதியால் இந் நூல் பாடி ஏறச் செய்தார். இந் நூல் ஆலயக் கிரியைகளுக்கும் சைவ சித்தாந்தத்திற்கும் ஓர் தொடர்பு இருப்பதை எடுத்துக் காட்டுகின்றது. இந் நூலிற்கும் பழையவுரை ஒன்று உளது.

12. **நெஞ்சுவிடுதூது:** உமாபதி சிவாசாரியார் தனக்கு ஞானம் உபதேசித்த மறைஞானசம்பந்தரிடம் திருக்கொன்றை மாலை வாங்கி வருமாறு தன்நெஞ்சை தூது விடுக்கும் பாங்கில் நூற்றியிருபத்தொன்பது பாடல்களால் சித்தாந்த கோட்பாடுகளை விளக்கும் வகையில் பாடிய நூலாகும். உமாபதி சிவாசாரியார் தன்குருவையே சிவமெனக் கருதி துதிக்கும் பாங்கில் பாடல்கள் அமைந்துள்ளன.

13. **உண்மை நெறி விளக்கம்:** ஆறு பாடல்களில் சித்தாந்த உண்மைகளை நெறிப்படுத்தும் நூலாகும். ஆன்மா ஞான சாதனையில் முன்னேறும்போது ஆன்மா தசகாரியங்களில் நிற்க வேண்டும் என்பது சைவசித்தாந்தக் கோட்பாடாகும். இந் நூலிற்கும் பழையவுரை உளது.

14. **சங்கற்ப நிராகரணம்:** இந் நூலில் இருபத்தியொரு பாடல்கள் உள்ளன. மாயாவாதம், ஐக்கியவாதம், பாடாண வாதம், பேதவாதம், சிவசமவாதம், ஈசுவர அவிகாரவாதம், நிமித்த காரண பரிணாம வாதம், சைவவாதம் ஆகிய ஒன்பது அகச் சமயங்கள் கூறும் கொள்கைகளை எடுத்துக் கூறி அவற்றைச் சித்தாந்த நோக்கம் கொண்டு நிராகரிக்கும் முறையில் வரையப்பட்டுள்ளது. இந் நூலிற்கு ஞானப்பிரகாச தேசிகர் என்பாரின் பழைய உரை ஒன்றும் உளது.

(சு. து.)

# பதினெட்டாம் பெருக்கு

காவிரி நதி பங்குனி, சித்திரை வைகாசி மாதங்களில் நீர் வற்றி மணற்பரப்பே காணப்படும். ஆடிமாதம் காற்றுக்காலம் துவங்கியவுடன் காவிரியில் புது நீர் பாயும். ஆடி மாதம் 18ஆம் நாளன்று 18ஆம் படிகள் மறையும் அளவிற்கு நீர்ப் பெருக்குக் காணப்படும்.

காவிரி நதியை **காவிரித் தாய்** எனத் தெய்வமாக வணங்கும் வழக்கம் தமிழ் மக்களிடையே உண்டு. காவிரி பாய்ந்து வளப்படுத்துவதாலேயே சோழநாடு வயல்களால் செழித்து ''சோழவளநாடு சோறுடைத்தும்'' என்ற பெருமையை தனதாக்கிக் கொண்டது. நன்றி மறவாத சோழநாட்டு மக்கள் காவிரித் தாயை வணங்கி வழிபடுமுகமாக ஆடிமாதத்தில் காவிரியின் வரவை வணங்கி மகிழ்ந்து ஏத்தி மங்கலப் பெண்டிர்கள் காவிரியில் நீராடி, தேங்காய் உடைத்து, கற்பூரமேற்றி காதோலை, கருகமணி குங்குமம், மஞ்சள், மலர்கள் முதலியவற்றைக் காவிரி நீரிலிட்டு வணங்குவார்கள்.

புதிதாகத் திருமணம் முடித்த பெண்களைக் காவிரிக் கரைக்கு அழைத்து வந்து நீராடச் செய்து குங்குமம், சந்தனம், மலர்களை அணியச் செய்து, புதிய தலைக்கயிற்றைப் பெருக்கி அணிவிப்பார்கள். இதனை குடும்பத்திலுள்ள மூத்த சுமங்கலிப் பெண்டிர் நிகழ்த்துவர். காவிரி ஆறு விரிந்து பெருகுவது போல புதுமணப் பெண்ணின் இல்லற வாழ்வும் மங்கலங்கள் அமைந்து பெருகி சிறக்க வேண்டும் என்பதே இதன் உட்பொருளாகும்.

அந்தணப் பெண்மணிகள் ஆடிப் பதினெட்டன்று காவிரித் தாய் கருவுற்றிருப்பதாகப் பாவனை கொண்டு கருவுற்றிருக்கும் பெண்களுக்கு உணவு வகைகளில் இயற்கையாகவே ஏற்படும் ஆசைகளை அடிப்படையாகக் கொண்டு, மயற்கைப் (மசக்கை) பெண்ணை பிறந்த வீட்டிற்கு அழைத்து வகைவகையான உணவுகளைச் சமைத்து ஊட்டும் உற்சாகத்தோடு மாலை நேரம் காவிரியாற்றங் கரைக்கு குடும்பம் குடும்பமாகச் சென்று விதம் விதமான சித்ரான்னங்களைக் காவிரித் தாய்க்குப் படைத்து அனைவரும் உண்டு மகிழ்வார்கள்.

அனைத்து மக்களையும் தனது அலைக்கரங்களினால் தழுவி உணவு ஊட்டும் காவிரித் தாய்க்கு அவளது மக்கள் காட்டும் நன்றி உணர்வின் வெளிப்பாடே பதினெட்டாம் பெருக்கு என்னும் அர்த்தமுள்ள சடங்காகும். (வ. வை.)

# பதினெண் கணத்தவர்

**பதினெண் கணத்தவர்** அமரர், சித்தர், அசுரர், வைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசியர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகபூமியர் என்போராவர் எனப் பிங்கல நிகண்டு கூறுகின்றது. இவர்களைத் தேவகணம், மானிடகணம், இராக்கத கணம், பூதகணம் எனப் பாகுபடுத்தலாம்.

புராண நூல்களில் இவர்களைப் பற்றிய தோற்றம் பின்வருமாறு கூறப்படுகிறது. காசிபர் என்ற முனிவர் தட்சப் பிரசாபதியின் புதல்வியர் பதின்மூவரை மணந்தார். அவர்களுள் அதிதி என்பவளிடம் ஆதித்தர் பிறந்தனர்; திதியிடம் தைத்தியர் பிறந்தனர்; தநுவிடம் தானவர் எனப்படும் அசுரர் பிறந்தனர். அநாயுவிடம் சித்தரையும் பிரதையிடம் காந்தருவரையும், சுரசையிடத்து இயக்கரையும், கத்துருவிடம் உரகரையும் காசிபர் பெற்றார்.

இப்பதினெண்வகையினருள் பலர் தேவகணத்தவராவர். இவர்கள் தனித்தனி உலகங்களில் வாழ்கின்றனர். தேவலோகமாகிய சுவர்க்கலோகத்தில் வாழ்பவர் அமரர். பாதாள உலகில் வாழ்பவர் உரகர். வித்தியாதர உலகில் வாழ்பவர் விஞ்சையர். இன்னிசை பாடிய வண்ணம் வானில் பறந்து செல்வோர் கின்னரர். கிம்புருடர் யமபுரிக்குச் செல்லும் வழியிலுள்ள கந்தர்வ நகரில் வாழ்பவர் கந்தர்வர். மனம் கலந்த தலைவனும் தலைவியும் தம்மிற் கூடும் கந்தர்வ மணம் எண்வகை மணங்களுள் ஒன்றாக மதிக்கப்படுகிறது. சித்தர், முனிவர் போன்றோர் பூவுலகில் வாழ்வோராவர். சூரபன்மன், இரணியன், கயமுகன் போன்ற அரசு வேந்தர்கள் தனித்தனி அரசுகளை நிறுவி ஆட்சி செலுத்திய வரலாறுகள் புராணங்களில் கூறப்படுகின்றன. (இரா.சா.)

# பதினெண் சித்தர்கள்

சித்தர் என்ற சொல்வழக்கிற்கு பல பொருள்கள் பல இலக்கியங்களிலும் சித்தர் பாடல்களிலும் இழையோடுகிறது. சித்தர் பற்றி ஒருமித்த கருத்துக் காணப்படவில்லை. சித்தர் என்போர் சிவனின் திருவருட் கடாட்சத்தைப் பெற்றவர்கள்; உலகியலைத் துறந்தவர்கள்; உலகியல் போக்குகளுக்கு மாறுபட்டவர்கள்; சித்தாடுவதில் வல்லவர்கள்; அலைபாயும் சித்தத்தை அடக்கியவர்கள்; சித்தி பெற்றவர்கள்; பூரணத்துவமான அறிவைப் பெற்றவர்கள் என்று கூறுவர்.

சித்தர்களின் வரலாற்றை நோக்கும் போது தமிழ்நாட்டுச் சித்தர்களை மூலமரபு, பாலமரபு, கைலாய மரபு என்று சிலர் பாகுபாடு செய்கின்றனர். தமிழ் நாட்டுச் சித்தர்களைப் பதிணெண்மவர் என்று கூறுவது மரபாக வருகின்றது. **பதினெண்சித்தர்** என்ற தொடரைக் கொண்டு தமிழகத்துச் சித்தர்களை பதினெட்டுப் பேர்கள் என்று கூறுவதிலும் பல இடர்கள் இலக்கியங்களிற் காணப்பட்டு வருவதும் கண்கூடு. இதற்குக் காரணம் இச்சித்தர் தொகையைக் கணக்கிட்டவர் தம்முடைய காலத்திற் பிறராற் சிறப்புற அறியப்பட்ட சித்தர்களைப் பதினெட்டாக வகுத்திருக்கக் கூடும். அவ்வகுத்தலின் பின்பும் சில சித்தர்கள் வாழ்ந்திருக்கக் கூடும் அவர்களையும் பின் வகுத்தோர் சித்தர் தொகையில் சேர்த்திருக்கக் கூடும். எனவே தமிழகப் பதினெண் சித்தர் என்ற தொடர் ஒரு மரபுத்தொடரேயன்றி தமிழகத்துச் சித்தர்களையெல்லாம் கணக்கிட்டு முழுமைப்படுத்தும் தொடராக அதனைக் கருத முடியவில்லை.

கருவூரார் எழுதிய **அட்டமா சித்து** என்ற நூல் கூறும் பதினெட்டுச் சித்தர்கள் பற்றிய விபரம் மேல்வருமாறு அமைகின்றது.

| | |
|---|---|
| 1. கும்பமுனி | 2. நந்திமுனி |
| 3. கோரக்கர் | 4. புலிப்பாணி |
| 5. புசுண்டரிஷி | 6. திருமூலர் |
| 7. தேரையர் | 8. யூகிமுனி |
| 9. மச்சமுனி | 10. புண்ணாக்கீசர் |
| 11. இடைக்காடர் | 12. பூனைக் கண்ணர் |
| 13. சிவவாக்யர் | 14. சண்டிகேசர் |
| 15. உரோமரிஷி | 16. சட்ட நாதர் |
| 17. காலாங்கி | 18. போகர் |

அருணாசல குரு எழுதிய **நிஜானந்த போதம்** என்ற நூலில் கூறிப்பிடப்பட்ட சித்தர்களின் பெயர்பட்டியல் மேல்வருமாறு உள்ளது.

| | |
|---|---|
| 1. அகத்தியர் | 2. போகர் |
| 3. நந்தீசர் | 4. புண்ணாக்கீசர் |
| 5. கருவூரார் | 6. சுந்தரானந்தர் |
| 7. ஆனந்தர் | 8. கொங்கணர் |
| 9. பிரம்ம முனி | 10. உரோமமுனி |
| 11. வாசமுனி | 12. அமலமுனி |
| 13. கமலமுனி | 14. கோரகர் |
| 15. சட்டைமுனி | 16. மச்சமுனி |
| 17. இடைக்காடர் | 18. தேரையர் |

அபிதான சிந்தாமணி, தமிழ்க்கலைக் களஞ்சியம் போன்றவற்றில் மேல் வருமாறு பதினெண் சித்தர் பட்டியல் அமைந்துள்ளது:

| | |
|---|---|
| 1. அகத்தியர் | 2. போகர் |
| 3. கோரக்கர் | 4. கைலாசநாதர் |
| 5. சட்டை முனி | 6. திருமூலர் |
| 7. நந்தி | 8. கூன் கண்ணன் |
| 9. கொங்கணர் | 10. மச்சமுனி |
| 11. வாசமுனி | 12. கூர்மமுனி |
| 13. கமலமுனி | 14. இடைக்காடர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. புண்ணாக்கீசர் 16. சுந்தரனாநந்தர்

17. உரோமரிஷி 18. பிரம்மமுனி

பிற்காலத்தில் இணைக்கப்பட்ட இன்னுமொரு சித்தர் கணக்கு மேல்வருமாறு அமைகின்றது:

1. அகப்பேய்ச்சித்தர் 2. அழுகுணிச்சித்தர்
3. இடைக்காடர் 4. கடுவெளிச்சித்தர்
5. கஞ்சமலைச்சித்தர் 6. கல்லுளிச்சித்தர்
7. காலாட்டிச்சித்தர் 8. குதம்பைச்சித்தர்
9. கவுபாலச்சித்தர் 10. சங்கிலிச்சித்தர்
11. ஞானசித்தர் 12. திரிகோணமலைச்சித்தர்
13. தொழுகண்ணிச்சித்தர் 14. நாதாந்தச்சித்தர்
15. நொண்டிச்சித்தர் 16. பாம்பாட்டிச்சித்தர்
17. விளையாட்டுச்சித்தர் 18. மௌனச்சித்தர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பதிப்புச் செய்யப்பட்ட **பதினெண் சித்தர் ஞானக் கோவை** எனும் நூலில் சிவவாக்கியரை முதலாகவும், புசுண்டரை இறுதியாகவும் கொண்ட பட்டியலொன்றும் காணப்படுகின்றது. திருமூலரை முதலாகவும் கோரக்கரை இறுதியாகவும் கொண்ட பட்டியலொன்றை சென்னைப் பல்கலைக்கழக அகராதி தருகின்றது. இதில் பல புதிய பெயர்களும் காணப்படுகின்றன. பதினென் சித்தர் பற்றிய இன்னுமொரு பெயர்ப்பட்டியலை சாம்பசிவம் பிள்ளை அகராதியும் தந்துள்ளது. மணிவாசகர் பதிப்பகம் வெளியிட்டுள்ள சித்தர் பாடல்கள் என்னும் நூலிலும் பதினெட்டுச் சித்தர்களின் பெயர்கள் இடம் பெறுகின்றன. இவ்வாறான பட்டியல்கள் எதுவும் எந்தவொரு அடிப்படைச் சான்றுகளையும் முன்வைத்து தொகுக்கப்பட்டவை அல்ல என்பதும் குறிப்பிடற்பாலது. மேலும் இவர்களுடன் அத்திரி, பிருகு, மிருகண்டர், வசிட்டர், கவுதமர், அசுவினிதேவர், கபிலர், பராசரர், துருவாசர், வான்மீகி, சமதக்கினி, காசிபர் முதலிய முனிவர்களும் சித்தர்களாகக் கொள்ளப்படுகின்றனர்.

### பதினெண் சித்தர்களின் வாழ்வும் பணியும்

### 1. அகத்தியர்

சித்தர்களுள் முதல்வராக வைத்து எண்ணப்படுபவர். வேதம், புராணம், இதிகாசம் உட்பட பல இலக்கியங்களிலும் இவரைப் பற்றிப் பல கதைகள் காணப்படுகின்றன. இமயமலையில் சிவனின் திருமணக் காட்சியைக் காண தேவர்களும், ரிஷிகளும், மானிடர்களும் கோடிக்கணக்கில் செல்ல, தென்கோடி உயர வடகோடி தாழ்ந்த போது, பூமி சமநிலை காண தென்திசைக்கு செல்லுமாறு சிவனால் பணிக்கப்பட்டவர் அகத்தியர் என்பது புராண மரபாகும். பொதிகை மலைச் சாரலில் வாசம் செய்தமையால் **பொதிகைமுனி, பொதியின்முனி** என்று சிறப்பிக்கப்படுகின்றார். உருவத்தால் குறுகியவர் என்பதால் **குறுமுனி** என்றும், பேரகத்தியம், சிற்றகத்தியம் போன்ற நூல்கள் வழியே முத்தமிழ் பரப்பியதால் **தமிழ்முனி** என்றும் அழைக்கப்படுகின்றார்.

அகத்தியரின் சித்தாடல் பணிகள் ஏராளம் உள்ளன. மதிய நந்தை என்பவள் தவத்திற்கு இடையூறு செய்ய அவளை மனிதப் பிறவியடையச் சபித்தவர். நீரின்மேற் பன்னிரு வருடங்கள் படுத்துத் தவம் புரிந்தவர். இராமபிரானுக்கு திவ்விய பாணங்கள் கொடுத்து அப்பாணங்களின் வரலாற்றையும் மந்திரத்தையும் அருளியவர். இருடிகளின் துன்பத்தைப் போக்கவும் அவர்களைச் சுவர்க்க மடையச் செய்யவும், விதர்ப்ப நாட்டையடைந்து அந்நாட்டு அரசன் யாகத்தில் பிறந்த உலோபாமுத்திரையை மணந்தவர். சுவேதனுக்குப் பிணந்தின்னும் சாபம் போக்கியவர். தாடகை தன் கணவன் சுந்தன் அகத்தியரால் இறந்ததனால் அவரை வருத்த, அவளை அரக்கியாகச் சபித்தவள். திருக்குற்றாலமடைந்து அங்கிருந்த விஷ்ணு ஆலயத்தை வைணவ வேடம் பூண்டு விஷ்ணு மூர்த்தியைத் தொட்டு சிவலிங்கமாக்கினார். இந்திரத்துயம்மனை யானையாகச் சபித்தவர். துட்பண்ணியனுக்கு யானையாயிருந்து சாபம் போக்கியவர். காவேரியாற்றினைக் கமண்டலத்தில் அடக்கியவர். இவ்வாறாக இவரைப்பற்றிய பௌராணிகச் செய்திகள் பலவுள்ளன.

அகத்தியர் பெயரில் இலக்கணம், மருத்துவம், சோதிடம், தத்துவம் சார்ந்த ஏராளமான நூல்கள் உள்ளன. ஐந்திலக்கணமும் அடங்கிய **அகத்தியம், வைத்திய சிந்தாமணி, வைத்தியக் கண்ணாடி, வைத்தியரத்நாகரம், ஆயுள்வேத பாஷ்யம், ஞானசௌமிய சாகரம், அமுத கலைஞானம், மாந்ரீக காவியம், ஜால சூத்திரத் திரட்டு, தர்க்க சாஸ்திரம், விதி நுன் மூவகைக் காண்டம், சிவசாலம், சக்திசாலம், சண்முகசாலம், கர்மவியாபகம், சகல கலைஞானம்** போன்ற நூல்கள் கூறத்தக்கவை. அவற்றோடு **வாதச்சுருக்கம், முப்பூ சூத்திரம், சோதிமணி சூத்திரம், செந்தூர சூத்திரம், பாலவாகடம், வழலைச் சுருக்கம்** போன்ற மருத்துவ நூல்களையும் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

### 2. போகர்:-

இவர் அகத்தியரின் சீடர்களுள் ஒருவர். சதுரகிரி, சிவகிரி முதலிய இடங்களில் வாழ்ந்தவராகச் சொல்லப்படுகின்றார். சகல சாஸ்திர ஞானங்களையும் துறைபோகக் கற்றவராகையால் போகர் என்ற காரணப் பெயரால் அழைக்கப்பட்டார். இவர் முருகப் பெருமானால் சித்தி பெற்றவர்.

மூலிகைகளைக் கண்டு பிடித்து சித்த மருத்துவம் புரிந்தவர். புலி, சிங்கம், பூனை போன்ற மிருகங்களுக்கு ஞானோபதேசஞ் செய்தவர். **ஞானசூத்திரம், அட்டாங்க யோகம், ஞான சாராம்சம்** போன்ற யோக, ஞான நூல்களையும், போகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7000, நிகண்டு 170000 **சூத்திரம், துவாத காண்டம், சப்ப காண்டம், வைத்திய சூத்திரம்** போன்ற மருத்துவ நூல்களையும் இயற்றியவர். இந்திய வைத்திய முறைகளைப் பல நாடுகளுக்குச் சென்று பரப்பியவர். இவருக்கு கருவூரார், சுந்தராநந்தர், மச்சமுனி, நந்தீசர், இடைக்காடர், புலிப்பாணியார், கொங்கணர் போன்றோர்கள் சீடராக விளங்கினர்

### 3. நந்தீசர்

சிலாத முனிவருக்கு மகனாகப் பிறந்தவர். முன்பு கணநாதர் என்ற பெயரிற் கயிலையங் கிரியில் வாழ்ந்தவர். சிவனருளாற் பிறந்து நந்தீசர் என்ற பெயரைப் பெற்றவர். இவர் பல நூல்களை இயற்றியுள்ளார். அவற்றில் **வைத்திய காவியம், கலைஞானம், கலைஞான சூத்திரம், நிகண்டு, ஞானசூத்திரம்** போன்றவை சிலவாகும். சோதிட, யாக, ஞானக்கலைகளிலும் பேரறிவு கொண்டவர்.

### 4. கொங்கணர்

இவர் கொங்கு நாட்டைச் சேர்ந்தவர். வேடர் குலத்திற் பிறந்தவர். அகத்தியர், போகர் என்போரின் சீடராவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கருதப்படுகின்றது. இவர் தவத்திலிருக்கும்போது கொக்கொன்று இவர்மீது எச்சமிட, கோபமடைந்த அவர் கொக்கைப் பார்க்க அது எரிந்து சாம்பலாகியது. தவத்திலிருந்து நீக்கிய கொங்கணர் திருவள்ளுவரின் இல்லிடத்திற்கு வந்து உணவு கேட்டபோது திருவள்ளுவரின் மனைவி தன் கணவனின் கடமைகளில் ஈடுபட்டிருந்தமையால் காலம் தாழ்த்தி அன்னமளிக்க, அம்மையாரைச் சினந்தார். அப்போது ``கொக்கென் 'றெண்ணினையோ கொங்கணவா'' என அம்மையார் பதிலளிக்க அவள் கற்பின் மகாவிரதையென்று மெச்சி தனது சினத்தை நினைத்து வெட்கினார்.

இவர் இருபத்துநான்கு நூல்களை இயற்றியுள்ளார் என அறிய முடிகின்றது. அவற்றில் முதற்காண்டம், நடுக்காண்டம், கடைக்காண்டம், ஆகிய திரிகாண்டங்களையும் அடங்கிய **வாதகாவியம், வாதசூத்திரம்** போன்ற மருத்துவ நூல்களும், **ஞானவெண்பா, கற்பசூத்திரம்** போன்ற நூல்களும் அடங்குகின்றன.

### 5. கருவூரார்

இவர் கருவூரிற் பிறந்தமையாற் கருவூரார் எனக் கூறப்படுகின்றார். இவரும் போகரிஷியின் சீடராவார். சைவ சமயத்தில் ஈடுபாடு கொண்டு சிவயோக சித்தி பெற்றவர். பல தலங்களுக்குத் தல யாத்திரை சென்று, திருக்குற்றாலத்தில் பல காலம் தங்கி வாழ்ந்தவர். அங்கு சிவதரிசனம் செய்து திருவிசைப்பா பாடிப் பொதிகை மலைக்குச் சென்றவர்.

பதினொரு தலங்கள் மீது திருவிசைப்பா பதிகம் பாடிச் சிவனருள் பெற்றவர். தஞ்சையிலே மூலமூர்த்தியான சிவலிங்கத்தைத் திருவிசைப்பாப் பாடி ஆவுடையாரில் அசையாது பொருந்தி அற்புதம் புரிந்தவர். இவர் பிராமண குலத்திற் பிறந்தவர். இவரிடம் பொறாமை கொண்ட பல வேதியர்கள், இவர் மது, மாமிசப் பிரியர் என்று குற்றம் சாட்டினர். அவ்வேதியர்களுக்கு அறிவு புகட்ட மழை வரச் செய்து வெள்ளம் பெருக்கெடுக்கச் செய்தார். பூட்டியிருந்த கோயிற் திருக்கதவை திறக்கச் செய்தார், தனக்குப் பூதங்கள் குடைபிடித்துவரச் செய்தார். இவ்வாறு பல அற்புதங்களைப் புரிந்தார்.

இவர் பல வைத்திய நூல்களையும் எழுதியுள்ளார். இவருடைய நூல்களில் **வாதகாவியம், பல திரட்டு வைத்தியம், குருநூற் சூத்திரம்** போன்றவை குறிப்பிடத்தக்கவை.

### 6. சட்டை முனி

இவர் தமிழ்நாட்டுச் சேணியர் வகுப்பைச் சேர்ந்த சித்தர். அகத்தியர் காலத்தைச் சேர்ந்தவர். போகரிஷியின் சீடர். உடலில் எப்போதும் கம்பளி மேலாடை அணிந்தவர் என்பதால் சட்டை முனி என அழைக்கப்பட்டார்.

இவர் பதினான்கு நூல்களை இயற்றியுள்ளார் என அறியமுடிகின்றது. அவற்றில் **நவரத்தின வைப்பு, திரிகாண்டம், சடைமுனி ஞானம் 200, சரக்கு வைப்பு, வகாரம், ஞான விளக்கம், தீட்சை** போன்ற நூல்களைக் குறிப்பிடலாம். இவரும் சித்தவைத்தியராகப் போற்றப்படுகின்றார்.

### 7. மச்சமுனி

இவர் போகரின் சீடர். இவரைக் குலால புராணம் செம்படவர் என்று கூறுகின்றது. இவர் திராவக முறையில் சிறந்தவர். மருத்துவ ஞானம் கைவரப் பெற்றவர். **பெரு நூல் காவியம், திராவகம், வேதாந்தம்** போன்ற நூல்களை இயற்றியவர்.

### 8. கோரக்கர்

இவர் மச்ச முனியின் சீடராவார். இவர் கஞ்சாவை முதற் சரக்காகக் கொண்டமையால் கோரக்கர் மூலிகை என்றும் அதனைக் கூறுவர். காயகற்பகஞ் செய்து கொண்டு வச்சிர காயமாக்கி மகிழ்ந்தவர். கோரக்கர் மச்சேந்திர நாதருடன் கூடி வாழ்ந்த காலங்களிற் பல அற்புதங்களைப் புரிந்தவர். கூடு விட்டு கூடு பாயும் வித்தை புரிவதில் வல்லவராகவும் விளங்கினார். **கோரக்கர் வைப்பு,** போன்ற வைத்திய நூல்களையும் **முக்தி நெறி, கற்பம், அட்ட கர்மம்** போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

### 9. காக புசுண்டர்

இவரை ஒரு முனிவர் என்றும் கூறுவர். உரோமரிஷிக்கு குருவாக இருந்தவர். பிரளய கால கட்டத்தில் அவிட்ட நட்சத்திரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவியில் காகவடிவில் வாழ்ந்தவர். அவர் பாடிய பாடல்களிலே காகம் என்ற வடிவம் பெற்றுக் காணாத காட்சிகளையெல்லாம் தரிசித்தேன். காரணங்கள் அனைத்தையும் கருவாய்ப் பெற்றேன் என்று பாடியுள்ளார். இவர் காக வடிவம் பெற்றமைக்குப் பல கதைகள் கூறப்படுகின்றன. அவற்றுள் ஒன்று இரண்டு அன்னங்கள் தம்முட் புணர்ந்து களிக்கும் காட்சியை சிவன் கண்ணுற, அவ் வன்னங்களிடம் சிவ கலைக்காக உருவத்துடன் புதிய அன்னம் இருபது முட்டைகளையும் பொரித்து இருபத்தோராவது ஒரு காகத்தையும் பொரித்தது. அதுவே புசுண்டர் எனப் பெயர் பெற்றது. இவர் பின்பு வசிட்டரைக் கண்டு பூர்வீக வரலாறுகளைக் கூறி, உம்மைப் போல எட்டு வசிட்டரைக் கண்டதாகவும் கூறினார்.

இவர் பெயரால் பல வைத்திய நூல்களும் வழங்குகின்றன. **'வைத்திய வாத யோக ஞானம்'** அத்தகைய நூல்களில் ஒன்றாகும் **'புசுண்டர் நாடி'** என்ற சோதிட நூலொன்றும் இவர் பெயரில் எழுதப்பட்டுள்ளது. பல ஞானப் பாடல்களையும் பாடியுள்ளார்.

## 10. உரோமரிஷி

இவர் காக புசுண்டரின் மகன் என்னும் அவரின் சீடர் எனக் கூறப்படுகின்றது. இவர் சதா நிட்டையில் கூடி நிற்பவர். இவரைப்பற்றி 'இவர் காகபுசுண்டரின் மகன்', இவர் செய்த நூலைச் சட்டை முனி கிழிக்காதபடி, புசுண்டர் தம் சடையில் மறைத்து வைத்து, அகத்தியருக்குக் காட்ட, அவர் நீண்ட நாள் கழித்து மீண்டும் அந்நூலைக் கொடுத்தார். இவருக்கு உடம்பெல்லாம் உரோமம் என்றவாறாக சில செய்திகள் கூறப்படுகின்றன.

## 11. இடைக்காடர்

இடைக்காடர் என்னும் ஊரில் இடையர் குலத்தில் பிறந்தவர். இதனால் இடைக்காட்டுச் சித்தர் எனப் பெயர் பெற்றார். இவர் கொங்கணரின் சீடராவார். இவர் சித்தரானமைப் பற்றி ஒரு கதை கூறப்படுகின்றது. ஆடுமாடுகள் மேய்த்துக் கொண்டிருந்த இடைக்காடரிடம் ஒரு சித்தர் தனக்குத் தாகம் தீர்க்கப் பால் கேட்ட போது, இவர் பால் கறந்து கொடுத்தார். மனமகிழ்ந்த சித்தர், அவரையும் அனைத்துச் சித்துக்களையும் அடையும்படி செய்தார். அதனால் இவரும் ஒரு சித்தரானார்.

இவர் ஏராளமான தத்துவப்பாடல்களைப் பாடியுள்ளார் என அறியமுடிகின்றது. திருவிளையாடற் புராணத்திலே இவரைப் பற்றிய குறிப்புண்டு. **ஊசிமுறி** என்றவொரு நூலை இவர் இயற்றினார் எனவும் அறிய முடிகின்றது. ஒருமுறை நாட்டிலே கொடிய பஞ்சம் ஏற்பட்டபோது மழையைத் தருவித்துப், பஞ்சத்தைப் போக்கினார் என இவருடைய சித்தாடல் கதையொன்று கூறுவதிலிருந்து அறிய முடிகின்றது.

இச்சித்தரின் **தாண்டவக் கோனே** என்னும் பாடல்கள் இன்றும் புகழ் பூத்து நிற்கின்றன. அப்பாடல்களில் ஒன்று மேல்வருவது.

*மனமெனும் மாடு அடங்கில் தாண்டவக் கோனே முக்தி*
*வாய்ந்த தென்று எண்ணேடா தாண்டவக் கோனே*
*சினமெனும் பாம்பு இறந்தால் தாண்டவக் கோனே யாவும்*
*சித்தி என்றே நினையேடா தாண்டவக் கோனே*

இவ்வாறான பாடல்கள் முழுவதும் இடையர்களையும், அவர்கள் மேய்க்கும் ஆடு, மாடுகளையும் முன்வைத்துப் பாடியதாகவே அமைகின்றன. இவர் சமாதியடைந்த இடம் திருவண்ணாமலைக் கோயிலாகும்.

## 12. திருமூலர்

திருமூலர் திருக்கைலாச மரபில் வந்தவர். திருக்கைலாய மரபிலே திருநந்தி தேவரிடம் சிவாகமங்களைக் கற்றுணர்ந்தவர். இவரது இளமை நாமம் சுந்தர நாதன். பொதிகை மலையில் உள்ள அகத்தியரைக் காண தென்னாடு வந்தவர். ஆடு மேய்க்கும் இறந்த இடையன் மூலன் என்பவனின் உடம்பில் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து தம் உயிரைப் புகுத்தி எழுந்தமையினால் மூலன் ஆனார். திருவாவடு துறையில் யோக நிட்டையில் ஆழ்ந்தார். மூலத்தை முழு தலை, நாடி உணர்ந்து திருமூலன் ஆனார். சித்தத்தை சிவன்பால் வைத்த சித்தர் ஆன திருமூலர் தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரையின் தலைமைச் சித்தராக விளங்கினார்.

திருமூலர் மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமந்திரம் எனும் நூலொன்றும், முன்னூறு பாடல்களைக் கொண்ட நூலொன்றும் முப்பது பாடல்களைக் கொண்ட நூலொன்றுமாக மூன்று செந்தமிழ் இலக்கியங்களை அருளினார் என அவரின் திருமந்திரப் பாடலால் தெரியமுடிகின்றது.

*"மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்*
*மூலன் உரை செய்த முன்னூறு மந்திரம்*
*மூலன் உரை செய்த முப்பது உபதேசம்*
*மூலன் உரை செய்த மூன்றும் ஒன்றாமே"*

இவற்றிலே திருமந்திரத்தைத் தவிர ஏனைய இரண்டு நூல்களும் கிடைத்தில. உலக நன்மைக்காக, ஆன்மாக்களை ஈடேற்றம் செய்வதற்காக திருமந்திரம் எனும் நூலை அருளினார். இந்நூலில் மருத்துவம், எண்வகைச் சித்திகள், யோகம், மாந்திரீகம், ஜோதிடம், தத்துவம், பக்தி, சமூக நலன் பற்றிய சிந்தனைகளை ஆழ அகலமாக அனுபவக்கிரமமாக வெளிப்படுத்தினார்.

திருமூலர் கயிலை மலையில் தவம் புரிந்து சித்தீஸ்வரனது திருவருளால் எண்ணற்ற சித்திகளோடு அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர். மூலன் உடலில் புகுந்து வாழ்ந்து, மும்மலமும் போக்கிச் சிவலோகம் சேர்ந்தவர். நெடுந்தூரத்தில் நடக்கும் நிகழ்வுகளை அறியும் ஆற்றல் பெற்றவர். மரணமில்லாமல் ஜீவன் முக்தராக வாழ்ந்தவர். இவர் வாழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் கி.மு. 6000 என்று கூறுகின்றனர். இவருடைய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும் தொகுக்கப்பட்டுள்ளது.

### 13. சிவவாக்கியர்

கருவூரார் எழுதிய **அட்டமாசித்து** என்ற நூல் தரும் பதினென் சித்தர் பட்டியலைத் தவிர வேறெந்தப் பட்டியலிலும் இவரின் பெயரைக் காண முடிவதில்லை. இவர் பதினான்காம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்தவராக அறிய முடிகின்றது. இவர் இப்பூமியில் பிறக்கும் போது **'சிவ'** என்று சொல்லிக் கொண்டு விழித்தப்படியால் **சிவவாக்கியர்** என்ற காரணப் பெயர் இடப்பட்டது. இவர் வேதியர் குலத்திலே தோன்றியவர். காசி யாத்திரை சென்று இல்லறத்தில் ஆசை கொண்டு குறப்பெண்ணை மணந்தவர். கொங்கண முனிவரால் திருத்தம் பெற்றவர். இவர் பாடிய பாடல்களின் தொகுப்பை **சிவாக்கியம்** என்று அழைப்பர். இவருடைய பாடல்கள் தனியாகவும், பதினெண் சித்தர் ஞானக் கோவையில் வெளிவந்திருப்பதும் குறிப்பிடற்பாலது. இவருடைய பாடல்கள் சமய ஒருமைப்பாடு, சமூக உணர்வு, யோக நிலையும் ஜீவன் முக்தியும், அக புற வழிபாடு, மந்திரம் போன்ற சிந்தனைகளை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

### 14. தேரையர்

அகத்தியரின் சீடர்களுள் ஒருவர். சிறந்தவொரு சித்த வைத்தியர். நோய்க்குறிகளை அறிவதிலும் சிகிச்சை முறைகள் செய்வதிலும் புதிய முறைகளைக் கண்டுபிடித்தவர். ஏறக்குறைய பதினாறு நூல்களை இயற்றியுள்ளார். **வைத்திய காவியம், இரசவர்க்கம், வைத்திய சிந்தாமணி, மருத்துவ பாரதம், கருக்கிடை** என்பவைகள் அவரின் நூல்கள்.

### 15. யூகிமுனிவர்

இவர் தேரையரின் சீடராவார். இவருக்கு **'யூகி'** என்று பெயர் சூட்டியவர் அகத்தியர். இவர் வீரசுண்ணம் என்னும் மருந்துப் பொருளைத் தயாரித்து அகத்தியரிடம் பரிசீலித்தும் காட்டியவர். சித்த மருத்துவர்களுக்குரிய அரிய நூலைத் தந்தவரும் இவரேயென்று கூறலாம். அவர் இயற்றிய நூல்களில் **பன்னிரு காண்டம், வைத்திய சிந்தாமணி, தத்துவ ஞானம், வகாரம், கற்பம்** போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

### 16. புண்ணாக்கீசர்

சமஸ்கிருதம் தமிழ் ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர். பல சித்துக்களைப் புரிந்தவர். பரமஞானம் உடையவர். வடமொழி உபாசனையாளர். **முப்புசுண்ண செய்நீர், யோகப்பாடல், மெய்ஞானம், ஞானப்பால்** போன்ற நூல்களை எழுதியவர்.

### 17. புலிப்பாணி

போகரின் சீடர், வணிக குலத்தைச் சேர்ந்தவர். சிவனருளால் புலி நகமுடைய கால் வாய்க்கப் பெற்றவர். சிவனுக்கு நீண்ட காலம் தொண்டு புரிந்தவர். இவரும் பல வைத்திய நூல்களை எழுதியுள்ளார்.

### 18. புலத்தியர்

அகத்தியரின் சீடர். அறிவிலே தலைசிறந்தவர் இதனாற் புலத்தியர் என அழைக்கப்பட்டார். இவர் ஒன்பது நூல்கள் இயற்றியதாக அறிய முடிகின்றது. **வைத்திய வாதம், வாத சூத்திரம்** என்பன அவர் இயற்றிய நூல்களுட் குறிப்பிடத்தக்கவை.

(சு. து)

### சித்தர்களின் பிரிவுகள்

தமிழ்ச் சித்தர்கள் வரலாற்றைக் கூர்ந்து ஆராயின் அவர்களை கீழ்க் காணும் பிரிவினராக வகுக்கலாம்.

1. **முதல் சித்தர் (மூலமரபு)**
2. **இடைச்சித்தர் (பாலமரபு)**
3. **கடைச்சித்தர் (கைலாயமரபு)**

இதைவிட வேறு பல பிரிவுகளும் உண்டு அவையாவன:-

**நவநாத சித்தர் (வடநாட்டில்)**

**நவகோடி சித்தர்**

**நவ சித்தர்**

**சித்தர் கணம்**

இவர்களுள் **நவநாத சித்தர்** என்போர் வருமாறு:

1. சத்திய நாதர்
2. சதோத நாதர்
3. ஆதி நாதர்
4. அனாதி நாதர்
5. வெகுளி நாதர்
6. மதாங்கநாதர்
7. மச்சேந்திர நாதர்
8. கடேந்திர நாதர்
9. கோரக்க நாதர்

சித்தர் கணம் என்பது ஒரு கூட்டத்தை குறிப்பதாகும். இதனைத் தாயுமானவர் குறிப்பிடும் போது "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணமே" என்கிறார். சித்தர் கணக்கில் ஒரு கூட்டமே பதினெண் சித்தராகும்.

### பதினெண் சித்தர்கள்

சித்தர்கள் பொதுவாக பதினெட்டுப் பேர் எனக் கூறும் மரபு தொன்று தொட்டு வழக்கிலுள்ளது. ஆனால் பதினெண் சித்தர்கள் என்பதனைப் பதினெண்-அனேகம் அல்லது எண்ணில் அடங்காததென்ற (Numerous) கருத்தும் உண்டென பேராசிரியர் அம்பை அருணாசலம் கூறுகின்றார்.

மேலும் சித்தர் தொகையில் காணப்படும் சித்தர்கள் அனைவரும் மருத்துவம் தெரிந்தவரா என்பது ஐயத்திற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் அகப்பேய்ச்சித்தர், கடுவெளிச் சித்தர் போன்றோர் பெயரில் மருத்துவ நூல்கள் ஏதும் காணப் படவில்லை. ஆகையால் சித்தர்களுள் ஒரு சாரார் மட்டுமே மருத்துவம் பற்றிக் கூறியுள்ளார்கள் என்பது புலனாகின்றது. சில சமயம் இவர்கள் மருத்துவம் பற்றி எழுதிய நூல்கள் தற்காலத்தில் கிடைக்காமலும் போயிருக்கலாம்.

பதினெண் சித்தர்கள் (பதினெட்டு) யார் யார் என்பது ஒவ்வொரு நூல்களிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இது ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மத்தியில் ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்துகின்றது.

பதினெட்டுச் சித்தர்கள் என்ற மரபை நிலைநாட்டும் சான்றுகளைக் கவனிக்கலாம்.

*"வாதறூ லத்தம் **பதினெண்பேர்** சித்தர் வசனித்த நூல்களும் பலிதம்"*

(புலஸ்தியர் கற்பம் 300)

*"பொன்னான திராவகமங் குருமுறைக்குப் புகவில்லை **பதினெண்பேர்** சித்தரெல்லாம்"*

(அகஸ்தியர் வழலை 16)

*"சித்தர் **பதினெண்மர்** செய்கையிற் றோன்றாத அத்தனரு ளும்புகண்டர் யான்"*

(சித்தர் ஞானக்கோவை, வால்மீகி 11)

*"திட்டாய் பாணம் வைத்துத் தேவிபூசை சீர் பெற்றோர்*
***பதினெட்டுச்** சித்தர் தாமே"*

(சித்தர் ஞானக்கோவை, கருவூரார் பாடல் 23)

*"மகத்தான **பதினெண்பேர்** வைப்புஞ்சொன்னோம்"*

-அகத்தியர் சௌமிய சாகரம் 1200

*"வானென்ற ஒருவனெட்டில் சிக்காதப்பா மைந்தனே*
***பதினெண்பேர்** எட்டும் பாரே"*

(திருமூலம் 8)

*"உன்னியதோர் வேதாந்தப் பெருநூல் எண்ணூறு உற்பணமாய் **பதினெட்டுச்** சித்தர் பாடல்"*

(மச்சமுனி பெரு நூல் 800)

மேல்வரும் குறிப்புகளால் பதினெட்டுச் சித்தர் மரபை நிலை நாட்டலாமே தவிர யார் யார் அவற்றில் அடங்குவரென்பது தெளிவாகத் தெரியவில்லை.

மிகப்பலர் மறைந்து வாழப் பலர் பல நூல்களை எழுதியிருக்க, அவர்கள் அனைவரையும் குறிக்காது பதினெட்டுப்பேர் எனச் சிலரையே குறித்ததன் நோக்கம்.

1. ஒருவேளை சித்தர் கூட்டம் எனக் கணிக்கப்பட்ட காலத்தில் குறிக்கப்பட்ட பதினெட்டுப்பேர் இருந்திருக்கலாம். அதுவே மரபாகியிருக்கும்.
2. சித்தர் கூட்டத்தில் பதினெட்டு பேர் சிறப்பாக விளங்கியிருக் கலாம் அல்லது பதினெட்டுப் என்னும் சித்தர் எண்ணிக்கை ஏதேனும் தத்துவார்த்தமாகவும் மறைபொருள் கொண்டதாக வும் இருக்கலாம்.

சித்த மருத்துவத்துடன் இவ்வெண்ணைத் தொடர்பு படுத்திப் பார்க்கும் போது இங்கு பலவற்றைக் காணலாம்.

*"சூலை **பதினெட்டும்** குன்ம மெட்டும் பறந்தோடும்"*

ஞானவெட்டியான் 1500

யாகோபுவைத்திய சிந்தாமணி 700

*"குட்டம் **பதினெட்டு**மது குடி போங் கண்டாய்"*

ஞான வெட்டியான் 1500

*"ஓடுமே **பதினெட்டு** எலிகடி"*

தேரையர் வைத்தியம்

புலிப்பாணி வைத்தியம்

*"அண்டக் கொம்பினீர் கடுவுள்ளி நீர் முருங்கப்பட்டை*
*நீரினிவிட **பதினெண்** தோடம் போம்"*

அகத்தியர் கரிசல் 300

"சாத்தினார் தன்வந்திரி முனிவரிந்த
தாரணியில் கிரிகை **பதினெட்டுந்**தீர்
நேர்த்தியார் கிரிகை பதினெட்டுக்கும்
நேரான குணம் சாந்தி யந்தான்"

-தன்வந்தரி ஓமக்கிரிகை விதி

*"கூண்டு குஷ்டம் குறை **பதினெட்டும்**"*

தேரையர் வைத்தியம் 1500

*"குழந்தை மாந்தம் **பதினெட்டும்**"*

அகஸ்தியர் குருநாடி 235

*"கூறினோ மரையாப்பு **பதினெண்** நோய்க்கும்"*

அகத்தியர் கௌமதி நூல் 400

*"சன்னியும் **பதினெட்டாகும்**"*

அகஸ்தியர் குருநாடி 235

*"ஆரப்பா **பதினெட்டு** மேகம் தீரும்"*

சுப்பிரமணியம் ஞானம் 500

*"நாயினுங் கேடாக்கு மந்திர கிரந்தி **பதினெட்டும்**"*

அகஸ்தியர் வழலை 16

*"மாயமென வந்தெடுக்கும் சன்னி பதினெட்டும்*
*முசலான் பதினெட்டு மேகும்"*

நந்தி பாடல் 49



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பதினெட்டோடு தொடர்புடையன

பதினெண் புராணம் (பிங்கலம் 3444)

பதினெண் கீழ்க்கணக்கு

பதினெட்டு சிவாகமங்கள்

சபரிமலை கோயில் படி பதினெட்டு

இராமயணப் போர் பதினெட்டு மாதங்கள்

பாரதப்போர் பதினெட்டு நாட்கள்

என பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

சித்தர்களின் எண்ணிக்கை பற்றிக் குறிப்பிடும்போது ஆரம்பத்தில் பதினெண் சித்தர்களே இருந்திருக்கலாமென்றும் பின்னர் அவர்களோடு பின் வந்தவர்களின் பெயர்களும் சேர்க்கப் பெற்ற நிலையில் அப்பதினெண்மர் யார் என்பதில் குழப்பம் ஏற்பட்டிருக்கக் கூடும் என்றும் ஒரு சாரார் கருதுகின்றனர். அதற்கேற்ப சித்தர் நூல்கள் பதினெண்மர் பெயர்களைப் பட்டியலிட்டுத் தரும்போது பதினெண்மரில் குழப்பநிலை ஏற்படுகின்றது.

பதினெண்வகை குணங்கள் உடைய மனித உடலுக்கு மருத்துவம் செய்த சித்தர் என்ற தொடரே நாளடைவில் மருவி **"பதினெண் சித்தர்"** என்று வழங்கப் பெற்றதாக மற்றுமொரு கருத்தைச் சீத்தாராம் சுப்பிரமணியம் குறிப்பிடுகின்றார்.

## பதினெண் சித்தர்களின் பட்டியல்

மருத்துவ வாதயோக ஞான சாத்திரம் என்னும் நூலின் நான்காம் தந்திரத்தில் உள்ள பாடல் மூலம் பதினெண் சித்தர்களும் அவர்கள் சமாதியடைந்த இடங்களும் கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கலாம்.

1. திருமூலர் - சிதம்பரம்
2. இராமதேவர் - அழகர்மலை
3. அகத்தியர் - அனந்தசயனம்
4. கொங்கணவர் - திருப்பதி
5. கமலமுனி - திருவாரூர்
6. சட்டமுனி - திருவரங்கம்
7. கருவூர் - திருவாரூர்
8. சுந்தரானந்தர் - கூடல் (மதுரை)
9. வான்மீகி - திருவையாறு (எட்டுக்குடி)
10. நந்திதேவர் - காசி
11. பாம்பாட்டி - சங்கரன் கோயில்
12. போகர் - பழனி மலை
13. மச்சமுனி - திருப்பரங்குன்றம்
14. கோரக்கர் - பேரூர் (கோவை)
15. பதஞ்சலி - இராமேஸ்வரம்
16. தன்வந்திரி - வைத்தீஸ்வரன் கோயில்
17. குதம்பைச்சித்தர் - மாயூரம்
18. இடைக்காடர் - சித்தருணை (திருவண்ணாமலை)

இதைப்போலவே தமிழ் மருத்துவ நூல் எதனை எடுத்தாலும் மகாமருத்துவம் பொருந்திய பதினெண் சித்தர்களில் ஒருவராகிய என்று தலைப்பிட்டு பதிப்பித்துள்ளனர். பதினெண் சித்தர் பாடிசாஸ்திரம், பதினெண் சித்தர் வாதக்கோவை, பதினெண் சித்தர் ஞானக்கோவை, பதினெண் சித்தர் சில்லறைக்கோவை, பதினெண் சித்தர் மூலிகை அகராதி முதலிய தொகை நூல்களைத் தொகுத்து வெளியிட்டவர்களும் ஒரே பதியெட்டைக் கூறவில்லை. பதினெண் சித்தர்கள் என்பது சாதாரண வழக்கத்தில் வந்து விட்டது. ஆனால் அப்பதினெண் சித்தர்களிலொருவர் இயற்றியதென்று கூறப்படும் ஒவ்வொரு நூலிலும் வேறுவேறு பதினெண் சித்தர்களைப் பற்றியும் கூறப்பெற்றிருப்பதால் அந்நூலை எழுதியதாகக் கூறப்படும் சித்தர் அப்பதினென்மரில் ஒருவரல்லர் என்று தெரியவரும். இப்படியாக எதற்கெடுத்தாலும் எல்லாப் பொருளிலும் பதினெண் சித்தர்களின் பெயர்கள் பொறிக்கப்படலாயின. ஆகவே உண்மையாகப் பதினெண் சித்தர்கள் யாவரென அறுதியிட்டுக் கூற முடியாது.

கருவூரார் பல திரட்டு என்னும் நூலில் வரும் பாடல் வாயிலாகப் பதினெண் சித்தர்கள் பெயர்ப் பட்டியல் ஒன்று கிடைக்கின்றது.

| | |
|---|---|
| நந்தீசர் | கண்ணர் |
| மூலத்தீசர் (திருமூலர்) | கோரக்கர் |
| அகத்தியர் | கமலமுனி |
| சட்டைநாதர் | சண்டிகேசர் |
| பதஞ்சலி | இடைக்காடர் |
| ஊனர் | சிவாய சித்தர் |
| கொங்கணர் | மச்சமுனி |
| போகநாதர் | பிண்ணக்கீசர் |
| காலாங்கி | சுந்தரர் |

அண்மையில் தொகுக்கப்பெற்ற சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் பதினெண் சித்தர்கள் பற்றிய குறிப்புக்கள் உண்டு அவையாவன:

| | |
|---|---|
| திருமூலர் | கமலமுனி |
| இராமதேவர் | போகநாதர் |
| கும்பமுனி (அகத்தியர்) | மச்சமுனி |
| இடைக்காடர் | கொங்கணர் |
| தன்வந்திரி | பதஞ்சலி |
| வால்மீகி | நந்திதேவர் |
| போதகுரு | பாம்பாட்டி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சட்டைநாதர் | சுந்தரானந்த தேவர் |
| குதம்பைச் சித்தர் | கோரக்கர் |

சித்தர் ஞானக் கோவை நிஜானந்த போதம் I என்ற நூலில்

| | |
|---|---|
| அகத்தியர் | ஆனந்தர் |
| போகர் | கொங்கணர் |
| நந்தீசர் | பிரம்பமுனி |
| புண்ணாக்கீசர் | ரோகமுனி |
| கருவூரார் | வாசமுனி |
| சுந்தரானந்தர் | அமலமுனி |
| கமலமுனி | கோரக்கர் |
| சட்டைமுனி | மச்சமுனி |
| இடைக்காடர் | பிரமமுனி |

எனும் பட்டியலும் சித்தர் பாடல்கள் என்ற நூலில் பதினெண் சித்தர்கள் பற்றிக் குறிப்பிடுகையில்

| | |
|---|---|
| நந்தி | இடைக்காடர் |
| அகத்தியர் | போகர் |
| மூலர் | புலிக்கையீசர் |
| புண்ணாக்கீசர் | கருவூரார் |
| புலத்தியர் | கொங்கணன் |
| பூனைக்கண்ணர் | காலாங்கி |
| ஏழுகண்ணர் | அகப்பேய் |
| பாம்பாட்டி | தேரையார் |
| குதம்பை | சட்டைநாதர் |

எனும் பட்டியலும் கருவூரார் மாந்திரிக அட்டமாசித்து என்னும் நூலில் பதினென் சித்தர்கள் பற்றிக் குறிப்பிடுகையில்

| | |
|---|---|
| கும்பமுனி | தேரையர் |
| நந்திமுனி | யூகிமுனி |
| கோரக்கர் | மச்சமுனி |
| புலிப்பாணி | புண்ணாக்கீசர் |
| புசுண்டரிஷி | இடைக்காடர் |
| திருமூலர் | பூனைக்கண்ணர் |
| சிவவாக்கியர் | சண்டிகேசர் |
| ரோமரிஷி | சட்டநாதர் |
| கலாங்கி | போகர் |

என்னும் பட்டியலும் கலைக்களஞ்சியம், அபிதான சிந்தாமணி ஆகியவற்றில்

| | |
|---|---|
| அகத்தியர் | நந்தி |
| போகர் | கூன்கணர் |
| கோரக்கர் | கொங்கணர் |
| கைலாசநாதர் | மச்சமுனி |
| சட்டைமுனி | வாசமுனி |
| திருமூலர் | கூர்மமுனி |
| கமலமுனி | இடைக்காடர் |
| புண்ணாக்கீசர் | சுந்தரானந்தர் |
| ரோமரிஷி | பிரம்பமுனி |

என்னும் பட்டியலும் டாக்டர் அ. சண்முகவேலவன் எழுதிய மருத்துவ நூலில் பதினெண் சித்தர்கள் பற்றிக் குறிப்பிடுகையில்

| | |
|---|---|
| திருமூலர் | பாம்பாட்டி |
| இராமதேவர் | குதம்பை |
| கும்பமுனி | கமலமுனி |
| இடைக்காடர் | போகர் |
| தன்வந்திரி | மச்சமுனி |
| வால்மீகர் | கொங்கணவர் |
| பதஞ்சலி | நந்தி |
| கனகயர் | கோரக்கர் |
| சட்டமுனி | சுந்தரநாதர் |

என்னும் பட்டியலும் A.V. சுப்பிரமணியம் எழுதிய சித்தர் தத்துவ நூலின்படி

| | |
|---|---|
| அகத்தியர் | கொங்கணவர் |
| திருமூலர் | கமலமுனி |
| போகர் | இடைக்காடர் |
| கோரக்கர் | சுந்தரனாதர் |
| சட்டைமுனி | ரோமமுனி |
| நந்தி | பிரமமுனி |
| மச்சமுனி | வராஹமுனி |
| கூர்மமுனி | புண்ணாக்கீசர் |
| கைலாசநாதர் | கூன்கண்ணர் |

என்னும் பட்டியலும் M.S. பூரணலிங்கம் எழுதிய தமிழ் இலக்கிய நூலின்படி

| | |
|---|---|
| நந்தி | பதஞ்சலி |
| கனகர் | அகத்தியர் |
| சனாதனர் | புலத்தியர் |
| சனந்தனர் | புசுண்டர் |
| சனற்குமாரர் | காலாங்கி |
| திருமூலர் | போகர் |
| கொங்கணர் | கருவூரார் |
| தன்வந்திரி | சட்டைமுனி |
| தேரையர் | யூகிமுனி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பட்டியலும் தமிழ் இலக்கிய வரலாறு என்னும் நூலின்படி

| | |
|---|---|
| அகத்தியர் | போகர் |
| புலத்தியர் | கொங்கணர் |
| புசுண்டர் | உரோமமுனி |
| நந்தி | சட்டைமுனி |
| திருமூலர் | மச்சமுனி |
| காலாங்கிநாதர் | கருவூரார் |
| தன்வந்திரி | தேரையார் |
| புண்ணாக்கீசர் | கோரக்கர் |
| யூகிமுனி | இடைக்காடர் |

என்னும் பட்டியலும் காணப்படுகின்றன.

தமிழகத்திலுள்ள பழநி முருகன் ஆலயத்தில் தெற்கு வீதி மண்டபத்தில் எழுதப்பட்ட பதினெண்மர் பட்டியலையும் அவர்கள் பற்றிய விவரங்களையும் கீழே காணலாம்.

1. பிறந்த மாதம்
2. விண்மீன் (நட்சத்திரம்)
3. ஜீவ சமாதி

மச்சமுனி
1. ஆடி
2. ரோகிணி
3. திருப்பெருங்குன்றம்

பாம்பாட்டிச் சித்தர்
1. கார்த்திகை
2. மிருகசீரிடம்
3. சங்கரன் கோயில் (மருதமலை)

பதஞ்சலி
1. வைகாசி
2. சதயம்
3. எட்டுக்குடி

நந்தீஸ்வரர்
1. வைகாசி
2. விசாகம்
3. காசி (திருக்காளத்தியில் வாழ்ந்தவர்)

தன்வந்திரி
1. ஐப்பசி
2. புனர்பூசம்
3. வைத்தீஸ்வரன் கோவில்

சுந்தரானந்தர்
1. ஆவணி
2. ரேவதி
3. மதுரை

(மைசூரில் வாழ்ந்தவர், சட்டைமுனியின் மாணாக்கர், பழனியிலும் வாழ்ந்தவர்.)

சட்டைமுனி
1. ஆவணி
2. மிருகசீரிடம்
3. திருவரங்கம்

கோரக்கர்
1. கார்த்திகை
2. அவிட்டம்
3. வடக்குப் பொய்கை நல்லூர்

குதம்பைச் சித்தர்
1. ஆடி
2. விசாகம்
3. மயிலாடுதுறை

கருவூரார்
1. சித்திரை
2. அத்தம்
3. கரூர் (போகரின் சீடர்)

கமலமுனி
1. வைகாசி
2. பூசம்
3. திருவாரூர்

இராமதேவர்
1. மாசி
2. புனர் பூசம்
3. அழகர் மலை

இடைக்காடர்
1. புரட்டாசி
2. திருவாதிரை
3. திருவண்ணாமலை

திருமூலர்
1. புரட்டாசி
2. அவிட்டம்
3. சிதம்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிப்பாணி

1. புரட்டாதி
2. சுவாதி
3. பழனி

(போகரின் முதல் மாணாக்கர்)

போகர்

1. வைகாசி
2. பரணி
3. பழனி

(காலாங்கி நாதரின் முதல் மாணாக்கர்)

அகத்தியர்

1. மார்கழி
2. ஆயிலியம்
3. ஆனந்த சயனம்

(வேறு பெயர் தட்சிணாமூர்த்தி)

மேலே கொடுக்கப்பட்ட பதினெண் சித்தர்களின் பட்டியல்களை கவனிக்கும்போது வேறுபாடுகளைக் காணலாம். இவற்றிலிருந்து சித்தர்கள் பதினெண்மர் என்பது மரபு என்றும் அவர்களில் அனேகம்பேர் உள்ளனர் என்றும் திடமாக எண்ணத் தோன்றுகின்றது.

முன்காட்டிய அட்டவணையிலிருந்த சித்தர்கள் யாவரும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் எனலாம். ஆனால் சில சித்தர்களின் வாழ்க்கை வரலாறுகள் அண்டைய நாட்டுத் தொடர்பையும் காட்டுகின்றன. எடுத்துக் காட்டாக அழுகுண்ணி, காலாங்கி, போகர் என்று மூன்று சித்தர்கள் சீனதேசத்துடனும், பூனைக்கண்ணர் எகிப்து தேசத்துடனும் நெருங்கிய தொடர்பு உடையவர்கள் என க.சு உத்தம ராயன் கூறுகின்றார். ஆனால் தக்க ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

### சித்தர்களின் காலம்

கிடைக்கின்ற பல ஆதாரங்களைக் கொண்டு ஆராயின் திருமூலரே மிகப்பழைமையான சித்தராகக் காணப்படுகின்றார். அகத்தியர் பற்றிய தெளிவான கருத்துக்கள் புலனாகும் வரை இக்கருத்தை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. திருமூலர் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். எனவே சித்தர்கள் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் தொடங்குகிறது. சித்தர் என்ற சொல் கி.பி. 5ஆம் நூற்றாண்டளவில் சமண நூல்களிலும் காணப்பட்டுள்ளது.

மேற்கு நாடுகளுக்குச் சித்தர் என்ற சொல் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் அறிமுகம் செய்யப்பட்டது என்கிறார் டி. ஓ. ரன்ஸ் (D.O.Runes).

அறிஞர் பலர் சித்தர் காலம் பற்றி வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர். நாயன்மார்களின் பட்டியலில் சித்தர்களும் அடங்குகின்றனர்.

பழம் பெரும் இலக்கணமாகிய தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் திருக்குறளிலும் சித்தர் என்ற சொல் இல்லையெனினும் குறிப்புப் பெயராக நிறை மொழி மாந்தர் எனக் குறிக்கப் படுகிறது. குறுந்தொகைப்பாடல் ஒன்றில் சித்தரைப்பற்றிய குறிப்பு உண்டு.

சிவனைச் சித்தனென்று சம்பந்தர் தேவாரம் குறிக்கின்றது. அதேபோல் சிவனைச் சித்தனென்று நாவுக்கரசர் தேவாரமும், திருவாசகமும் குறிக்கின்றன. சிவபெருமானைச் சித்தர்கள் போற்றிப் பரவுவதாக திருவிளையாடற் புராணம் கூறுகின்றது. சித்தர்களின் முதல்வர் சிவனே என்று திருமூலர் கீழ்க்கண்டவாறு குறிக்கின்றார்.

*"சித்தர் சிவத்தைக் கண்டவர் சீடன்*
*சுத்தா சுத்தத்துடன் தோய்ந்தும் தோயாதவர்*
*முத்தரம் முத்திக்கு மூலத்தர் மூலத்துச்*
*சுத்தர் சதாசிவத் தன்மையராமே"* (க. இரா.)

## பதினெண் மடங்கள்

சைவசமய வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிக்கும் நிறுவனங்கள் மடங்கள் எனப்படும். மடம் என்பது இருக்கை எனப் பொருள்படும். அது துறவிகள் தங்கியிருந்து அறிவொழுக்கத்தையும், சமயத்தையும் வளர்க்கும் இடமென்பர். இஸ்லாமியர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில் சைவசமய உணர்வு குன்றிய சூழ்நிலையில் சைவத் திருமடங்கள் சைவசமயத்தைப் பாதுகாத்தன. இவற்றைச் சைவ ஆதீனங்கள், மடங்கள் என அழைப்பர். அவை தொகையால் பதினெட்டு என்பர்.

காளமேகப் புலவர் பாடிய திருவானைக்கா உலா, சேறைக் கவிராயர் பாடிய திருக்காளத்திநாதர் உலா, திருப்பூவணம் கந்தசாமிக் கவிராயர் பாடிய திருப்பூவணநாதர் உலா முதலிய மூன்று உலா நூல்களிலும் பதினெண் மடங்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவை மேல் வருமாறு காட்டப்பட்டுள்ளன.

*"பதினெண் மடத்திற் பயிலு முதலிகளும்"*
- திருவானைக்கா உலா

*"வெண்ணீற்று வண்டற் பதினெண்மடத்தாரும்"*
- திருக்காளத்தி உலா

*"சைவமார்க்கப் பதினெண் மடத்தாரும்"*
- திருப்பூவணநாதர் உலா

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை ச.சோமசுந்தர தேசிகர் எழுதிய **தமிழ்புலவர்கள் வரலாறு - பதினேழாம் நூற்றாண்டு** என்ற நூலிற் பதினெட்டு மடங்களின் பட்டியலொன்று மேல் வருமாறு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. திருவாவடுதுறை ஆதீனம்
2. காஞ்சிபுர ஆதீனம்
3. தருமபுர ஆதீனம்
4. சூரிய தேவனார் ஆதீனம்
5. ஆகம சிவப்பிரகாச ஆதீனம் - சிதம்பரம்
6. செங்கோலாதீனம் - பெருங்குளம்
7. திருநாவுக்கரசர் ஆதீனம்
8. இராமச்சுர ஆதீனம்
9. திருவண்ணாமலை ஆதீனம் - குன்றக்குடி
10. நிலப்பாடி ஆதீனம்
11. தாயுமானவர் ஆதீனம் - அன்னப்பன் பேட்டை
12. சாரமாமுனிவர் ஆதீனம்
13. சொர்க்கப்புர ஆதீனம்
14. வேளாக்குறிச்சி ஆதீனம்
15. வள்ளலார் ஆதீனம் - சீகாழி
16. வரணியாதீனம்
17. நாச்சியார் ஆதீனம்
18. துழாவூரார் ஆதீனம்

அபிதான சிந்தாமணியில் **"சுத்த சைவ பதினெண் ஆதீனங்கள்"** என்ற தலைப்பில் பட்டியலொன்று மேல்வருமாறு காணப்படுகின்றது.

1. திருவாவடுதுறை
2. காஞ்சிபுரம்
3. தருமபுரம்
4. சூரனார் கோயில் (ஆடு துறை)
5. ஆகம சிவப்பிரகாச ஆதீனம் - (சிதம்பரம்)
6. செங்கோலாதீனம் - (பெருங்குளம் - திருநெல்வேலி)
7. திருஞான சம்பந்தர் ஆதீனம் - (மதுரை)
8. திருவண்ணாமலை ஆதீனம் - (குன்றக்குடி)
9. இராமச்சுர ஆதீனம்
10. நிலப்பாடி (தஞ்சாவூர்)
11. தாயுமானவர் சுவாமிகள் ஆதீனம்
12. சாரமாமுனி ஆதீனம் (திருச்சிராப்பள்ளி)
13. சொர்க்கப்புர ஆதீனம் (அம்பர் திருமகாளம்)
14. வேளாக்குறிச்சி ஆதீனம் (திருவாரூர்)
15. வள்ளலார் ஆதீனம்
16. வருணை ஆதீனம் (வேதாரண்யம்)
17. நாய்ச்சியார் கோவில் ஆதீனம் (கும்பகோணம்)
18. நிரம்ப அழகிய தேசிகர் ஆதீனம் (மதுரை - துழாவூர்)

## திருவாவடுதுறை ஆதீனம்

சைவசமய ஆதீனங்களுள் புராதனமும் முதன்மையும் வாய்ந்தது இவ் ஆதீனமாகும். குரு நமச்சிவாய தேசிகரால் கி.பி. 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவ்வாதீனம் ஸ்தாபிக்கப்பட்டு 16ஆம் நூற்றாண்டில் சிறந்த வளர்ச்சி எய்தியது. இவ்வாதீனத்து குருபரம்பரையைத் திருக்கைலாய பரம்பரை மரபு - நந்திமரபு என்று அழைப்பர். இது நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடு துறை கும்பகோணம் சாலையில் அமைந்துள்ளது. குடந்தை சிவப்பிரகாசர், மறைஞான தேசிகர், அம்பலவாண தேசிகர், மூர்த்தி தேசிகர் போன்றோர் நமச்சிவாய தேசிகரின் சீடர்களாவர். இவர்களுடன் 22 மகாசந்நி தானங்களும் அமர்ந்து தொண்டாற்றின.

மூன்றாம் குருவான அம்பலவாண தேசிகர் 'பண்டார சாத்திரம்' என்றழைக்கப்படும் தசகாரியம், சன்மார்க்க சித்தியார், சிவாச்சிரமத் தெளிவு, சித்தாந்தப் ப∴றொடை, சித்தாந்த சிகாமணி, உபயநிட்டை வெண்பா, நிட்டை விளக்கம், அதிசயமாலை, நமச்சிவாய மாலை, உபதேச வெண்பா போன்ற நூல்களை அருளினார். இந்நூல்களின் திறத்தால் இவ்வாதீனத்தின் மேன்மை உயர்ந்தது என்று கூறினால் மிகையாகாது. ஐந்தாம் குரு வேலப்ப தேசிகர் திருவருட்பயன், வினாவெண்பா ஆகிய இரு சாத்திரங்களுக்கும் உரை எழுதினார். பத்தாம் குருவினுடைய காலத்தில் சாமிநாத முனிவர் திருவாவடுதுறைப் புராணம், திருப் பெருந்துறைப் புராணம் ஆகிய இரண்டையும் எழுதினார்.

இவ் ஆதீனம் ஆறுமுக நாவலர் (நாவலர்), திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையர் (ஆதீன வித்துவான்) அம்பலவாண தேசிகர் (மகா வித்துவான்) போன்றோர் உட்பட இலக்கணம் முத்துக்குமாரத்தம்பிரான், அருணாசலக்கவிராயர் போன்றோருக் கும் பட்டம் கொடுத்து கௌரவித்து. மேலகரம் சுப்பிரமணிய தேசிகரின் காலம் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஒரு பொற்காலம் என்று கூறுவர். உ.வே. சாமிநாதையர் இவ் ஆதீனத்துடன் கொண்ட ஐக்கியம் அதற்குச் சான்று பகிர்கின்றது. இவரின் காலத்தில் சிவஞான சுவாமிகள் எழுதிய சிவஞான சித்தியார் பொழிப்புரைக்குத் தக்கவாறு பதவுரை ஒன்றை சுப்பிரமணிய தேசிகர் எழுதினார். இவர் பல புலவரைப் பாராட்டியதோடு இசைப்புலவரையும் ஆதரித்தவர். இருபத்தோராம் குருவான இவரின் காலத்தில் 'நமச்சிவாய மூர்த்தி அச்சகம் நிறுவப்பட்டு பதிப்புப்பணி, உரைப்பணி செய்யப்பட்டது. சித்தாந்த சைவ மாநாடு, பாவைவிழா நாடு, திருமந்திர மாநாடு, திருவாசக மாநாடு போன்ற சைவ மாநாடுகள் நடாத்தப்பட்டு சைவ விளக்கம் செய்யப்பட்டது.

இவ் ஆதீனத்தால் மழலையார் பள்ளி, தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, மேனிலைப்பள்ளி ஈறாக 8 பாடசாலைகள், 4 நூல் நிலையங்கள், 3 இலவசத் தட்டச்சுப் பயிற்சி நிலையங்கள், 3 இலவசத் தையல் பயிற்சி நிலையங்கள் நடாத்தப்பட்டது. வள்ளலார் குருகுலம், கன்யாகுருகுலம், கருணை இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவற்றை நடாத்துதல். மருத்துவமனைகள் அமைத்து உதவி செய்தல். இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொதுப்பணிகள், நிதி உதவி, தானிய உதவி, ஔடததானம் ஆகியவற்றையும் செய்தது.

இவ் ஆதீனம் 20 கோயில்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் தேவாரத் தலங்கள்: 9, திருவாசகத் தலம்: 1 சிறுகோயில்கள்: 10 ஆகும். காசி முதல் கன்னியாகுமாரி வரை நாடெங்கும் நூற்றிமுப்பதிற்கும் மேற்பட்ட கிளை மடங்கள் நிறுவப்பட்டிருக்கின்றது. அவற்றுள் 69 கிளை மடங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

## தருமபுர ஆதீனம்

தமிழ் நாட்டிலுள்ள பெரிய ஆதீனங்களுள் இதுவும் ஒன்று. கி.பி 1560இல் ஸ்ரீ குருஞானசம்பந்தரால் உருவாக்கப்பட்டது. இவர் முதல் இருபத்தாறாம் குரு மூர்த்தி வரை இயங்கிக் கொண்டு சைவத்திற்கும், தமிழிற்கும் அரிய தொண்டுகளை ஆற்றிவரும் ஆதீனம் இதுவாகும்.

தமிழிற்கும் சைவத்திற்கும் பெருமை சேர்க்கும் எட்டு நூல்களை குருஞானசம்பந்தர் இயற்றியுள்ளார். அவை மேல்வருமாறு சொக்க நாதக் கலித்துறை, சொக்கநாத வெண்பா, சிவபோகசாரம், பண்டாரக்கலித்துறை, நவரத்தின மாலை, பிரசாத யோகம், திரிபதார்த்தரூபாதி தசகாரிய அகவல், முக்தி நிச்சயம் என்பனவாகும். ஏழாம் குருமூர்த்தியான திருவம்பல தேசிகர் வட மொழியில் வருணாசிரம சந்திரிகை என்ற நூலையும், ஒன்பதாம் குருமூர்த்தி சித்தாந்த நிச்சயம் என்ற நூலையும், பத்தாம்குரு மூர்த்தி சிவஞானதேசிகர் 'திருவருட்பாத் திரட்டு' என்ற தோத்திர நூலையும் இருபத்துநான்காம் குருவான சண்முக தேசிகர் 'ஞானசம்மந்தம்' எனும் இதழையும் அருளினார்கள்.

இவற்றோடு திருமுறைகளுக்கு உரை, திருக்குறளுக்கு உரை, அப்பர்சுவாமிகள் புராண உரை போன்ற உரை நூல்களும், ஸ்ரீ காசியாத்திரை, திருக்கைலாய யாத்திரை முதலிய யாத்திரை நூல்களும், ஆங்கிலத்திலும், ஆங்கில மொழி பெயர்ப்புகளுடனும் பல நூல்கள் வெளியிடப்பட்டன.வட மொழியிலிருந்து தமிழுக்கு 10ற்கும் மேற்பட்ட நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன. ஏறத்தாழ 1000ற்கும் மேற்பட்ட நூல்கள் இவ் ஆதீனத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

இவ் ஆதீனத்தால் 27 கோயில்கள் பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றன. பல கோயில்களுக்கு குடமுழுக்கு விழாக்களையும் செய்தது. தமிழில் அருச்சனை, தேவார, திருவாசகப் பாடல்கள் ஓதி வழிபாடு ஆற்றுவது, சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதும் இவ் ஆதீனத்தின் சமயப் பணிகளாகும்.

தமிழோடு வடமொழியையும் வளர்க்கும் முகமாக வேதசிவாகமப் பாடசாலை நிறுவப்பட்டது. குரு ஞானசம்பந்தரின் பெயரில் ஆரம்பப் பாடசாலை, உயர்தரப் பாடசாலை நிறுவப்பட்டன. இவ் ஆதீனத்தால் கல்லூரி ஒன்றும் நிறுவப்பட்டது. இதை 1946இல் இருபத்தைந்தாம் குரு திருகயிலைக் குருமணி அவர்கள் நிறுவினார்.

## திருப்பனந்தாள் ஆதீனம்

திருச்செந்தூர் முருகன் அருள் பெற்ற குமரகுருபரால் ஸ்தாபிக்கப்பட்டது. இவ் ஆதீனத்தின் காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டு எனக் கூறப்படுகின்றது. இவ் ஆதீனத்தின் குரு பரம்பரையில் தோன்றியவர்கள் இருபத்தொரு பேர்களாவர்.

குமர குருபரர் சிவன், அம்மன், முருகன் மீது பல பக்திப் பாடல்களைப் பாடியருளினார். கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் தஞ்சைப் பெருவுடையார் உலா, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, திருபெருமண நல்லூர்ப் புராணம், திருவிடை மருநூர்ப் புராணம் என்பனவற்றை இயற்றினார். சிவஞானபோதம் மூலமும் சிவஞான சுவாமிகள் சிற்றுரையும் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (1953), ஞானாமிர்தம் மூலமும் பழைய உரையும் (1954), பன்னிரு திருமுறை வரலாறு முதற்பகுதி, திருவாசக மூலம் போன்ற நூல்கள் இவ் ஆதீனத்தால் வெளியிடப்பட்டன. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகளால் 526 அறக்கட்டளைகள் நிறுவப்பட்டன. காசி முதல் கன்னியா குமரி வரையான தலங்களுக்கு அன்னதானம் புரியவும் காசி, கல்கத்தா, டில்லி, அலகாபாத், பல்கலைக்கழகங்களுக்கு உதவி புரியவும், பல கோயில்களுக்கு ஓதுவார்களை நியமிக்கவும், திருமுறை, கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், திருக்குறள், நீதி நூல்கள் போன்றவற்றைப் பதிப்பிக்கவும் அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டன. 1945இல் தமிழ்க்கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டது. ஸ்ரீவைகுண்டத்தில் குமர குருபரர் சங்கம், கலைக்கல்லூரி (1960), திருப்பனந்தாளில் உயர்நிலைப் பள்ளி (1961) போன்றவையும் ஆரம்பிக்கப்பட்டன.

இருபத்தோராம் அதிபதியான ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமி அவர்கள் 1978இல் குமரகுருபரர் பெயரில் இதழ் ஒன்றைத் தொடர்ந்து வெளியிட்டார். 1999இல் குமர குருபரர் ஆய்வு மாநாடு, 2000இல் பெரிய புராண ஆய்வு மாநாடு, திருமுறை மாநாடு, தமிழ் பக்தி மாநாடு போன்ற மாநாடுகளையும் நடாத்தினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தஞ்சை இராஜராஜ அபயகுலசேகரன் நினைவு சித்தாந்தப் பரிசுகள், இலக்கண நூற் பரிசுகள், திருமுறைப் பரிசுகள் அளிப்பதற்கு இவ் ஆதீனம் நிதிகளை வழங்கியுள்ளது. அப்பல்கலைக் கழகத்திற்கு 120 ஏக்கர் நிலம் பெரும் நிதியாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## சூரியனார் கோயில் ஆதீனம்

சூரியனார் கோயில் என்ற ஊரில் அமைந்துள்ளதால் இப்பெயர் பெற்றது. சதாசிவ சிவாச்சாரியாரிடம் தீட்சை பெற்ற சிவாக்கிர யோகிகளால் நிறுவப்பட்ட ஆதீனமே சூரியனார் கோயில் ஆதீனமாகும். இவ் ஆதீனம் கந்தபரம்பரையினரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தமையால் கந்தபரம்பரை என்றும், வாமதேவமுனி மரபு என்றும் கூறுவது வழக்காகும். அப்பரம்பரையைச் சார்ந்தோர் மேல்வருவோர்: ஸ்ரீ கந்தசுவாமி, ஸ்ரீவாமதேவ மகரிஷி, நீலகண்ட சிவாச்சாரியார், விசுவேசுவர சிவாச்சாரியார், சதாசிவ சிவாசாரியார், சிவமார்க்கப் பிரகாச சிவாசாரியார், சிவாக்கிரக யோகிகள் ஆவர்.

சிவாக்கிரக யோகிகள் காலத்தில் இவ் ஆதீனம் பல சிறப்புக் களைப் பெற்றுத் திகழ்ந்தது. இவரால் பல வடமொழி நூல்கள் ஆக்கப்பட்டது. கிரியா தீபிகை, சைவ சந்நியாச பத்ததி, சிவஞான போத சிவாக்கிர பாஷ்யம், சைவ பரிபாஷை போன்ற நூல்களையும், சர்வஞ்ஞானோத்திரம் தமிழ் உரை, தேவிகாலோத்தரம் தமிழ் உரை, சுருதி சூக்திமாலை போன்ற உரை நூல்களையும், சிவ நெறிப் பிரகாசம், தமிழ் நூல் உரையாக சிவஞான சித்தியாரின் சுபக்க உரை, பரபக்க உரை போன்ற நூல்களையும் ஆக்கினார்.

சிவாக்கிரக யோகிகள் வாழ்ந்த காலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டு ஆதலால் இவ் ஆதீனமும் அக்காலத்திற்குரியது எனக் கணிக்கப்படுகின்றது. சிவாக்கிரயோகிகளிடம் தஞ்சையை ஆட்சிபுரிந்த சரபோசி மன்னன் மிகவும் ஈடுபாடு கொண்டிருந் தாரென்றும் அவரே இவ் ஆதீனத்திற்கு பல நிவந்தங்களை வழங்கினார் என்றும் கூறப்படுகின்றது.

14ஆம் அதிபதியான ஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிகர் இறைஞான போதம், ஆன்மார்த்த பூஜை விளக்கம், ஆன்ம லாப தீபிகை என்ற மூன்று நூல்களை இயற்றினார். 20ஆம் அதிபதியால் சிவ சிவ என்ற இதழும் வெளியிடப்பட்டது. சிவாக்கிரமாலை என்னும் பதினொரு பாடல்களைக் கொண்ட நூல் நாடோறும் சந்நிதியில் வழிபாட்டு நூலாகப் பயன்பட்டு வருகின்றது. இது தனிப்பட்ட ஆதீனமாயினும் தற்போது திருவாவடுதுறை ஆதீனத்துள் இயங்கி வருகின்றது.

## ஆகம சிவப்பிரகாசர் ஆதீனம்

ஆகமப் புலமையில் சிறந்து விளங்கிய ஆகம சிவப்பிரகாசர் என்பவரால் நிறுவப்பட்டது. இது சிதம்பரத்தில் நிறுவப்பட்டதாக அறிய முடிகின்றது. இது பற்றி முழுமையான விவரங்கள் இன்னும் கிடைத்தில.

## செங்கோல் ஆதீனம்

அகச்சந்தான குரவர்களுள் ஒருவரான சத்திய ஞானதரிசிகள் சிதம்பர நாயகனை வழிபட்டு - அவனருளால் ஒரு சிவலிங்கத்தை எழுந்தருளச் செய்தார். அவ் இலிங்கத்தை சிதம்பரத்திலேயே ஒரு மடத்தை அமைத்து வழிபட்டுவந்தார். அவருக்குப்பின் ஒருவராக பதினேழு மடாதிபதிகள் இவ் ஆதீனத்தில் தங்கியிருந்து லிங்க வழிபாடும், சைவத் தொண்டும், தமிழ்த்தொண்டும் புரிந்து வந்தனர்.

பாண்டிய அரசன் சிதம்பர நாயகனைத் தரிசித்து விட்டு, திகம்பர சித்தர் எனும் பதினெட்டாம் அதிபதியை வணங்கி தன்னுடன் அழைத்துச் சென்று, கல்லூர் எனுமிடத்தில் திருமடம் அமைத்து சைவப் பணி புரிந்து வந்தார். சில காலங்களின் பின் சோழ அரசன் பாண்டி நாட்டின் மீது படையெடுத்த போது, பாண்டிய அரசன் திகம்பர சித்தரிடம் அடைக்கலமானான். சித்தர் அவருக்கு செங்கற்களை பொன்கட்டிகளாக்கி கொடுக்க அதைக் கொண்டு பாண்டிய மன்னன் படைக்கலத்தைப் பெருக்கி, சோழ அரசனை வென்று, சித்தரின் கரங்களால் செங்கோலைப் பெற்று ஆட்சி புரிந்தான். அன்று தொட்டு பாண்டியர்கள் முடிசூடும் போது செங்கோலை மடாதிபதிகளிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் மரபு உண்டாயிற்று. இதனால் இவ் ஆதீனம் **"செங்கோல் ஆதீனம்"** என்று அழைக்கப்படலாயிற்று.

## திருஞான சம்பந்தர் ஆதீனம்

எல்லா ஆதீனங்களும் சந்தான பரப்பரையினர்களுடன் தோன்ற இவ் ஆதீனம் மட்டும் சமய குரவரான திருஞான சம்பந்தரின் பெயரில் தோற்றம் பெற்றுள்ளது.

பாண்டிய அரசனான நின்றசீர் நெடுமாறனை சமண சமயத்திலிருந்து சைவசமயத்திற்குட்படுத்த அவனது மனைவி மங்கையர்க்கரசியார் திருஞானசம்பந்தரை மதுரைக்கு எழுந்தருளுமாறு பணிய, சம்பந்தரும் ஆவணிமூல வீதியில் இருந்த ஒரு சைவமடத்தில் தங்கியிருந்தார். அன்றிலிருந்தே அம்மடம் திருஞான சம்பந்தர் மடம் எனப் பெயர் பெறலாயிற்று.

அம்மடத்தில் ஏலவே சிவமுனிவர் சைவத்தொண்டுகள் புரிந்தார். திருஞான சம்பந்தரின் அருளால் ஸ்ரீலஸ்ரீ சிவானந்த யோகீந்திர ஸ்ரீ சிவஞான தேசிக பரமாசாரிய சுவாமி என்ற பெயருடன் மடாதிபதியானார். அவர் முதல் இன்று வரை, 291 அதிபதிகள் இப் பீடத்தில் பணி புரிந்துள்ளனர்.

## திருவண்ணாமலை ஆதீனம்

திருவண்ணாமலையில் தோன்றிய ஆதீனமாகும். பின்பு அங்கிருந்து பிரான் மலைக்குச் சென்று மீண்டும் குன்றக்குடி வந்து தங்கினமையால் குன்றக்குடி ஆதீனம் என்றும் கூறுவர்.

புறச் சந்தான குரவரான அருணந்தி சிவாச்சாரியாரின் சீடரான ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி தேசிகர் என்பவரால் கி.பி. 14ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இவ் ஆதீனத்தில் நாகலிங்க தேசிகர், பெரிய ஆறுமுக தேசிகர், ஆறுமுக தேசிகர், தாண்டவராய தேசிகர், பொன்னம்பல தேசிகர், ஞானப்பிரகாசர் போன்றோர் மடாதிபதிகளாகவும், வெண்பாப்புலிக் கவிராயர், வீரபத்திரக் கவிராயர், கணேசபண்டிதர் முதலானோர் இவ் ஆதீனப் புலவர் களாகவும் இருந்தனர். இவ் ஆதீனத்தால் சாந்துப்புலவர், யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர், மகா வித்துவான் வேம்பத்தூர் பிச்சு ஐயர் முதலியவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இவ் ஆதீனத்தில் சைவமும், தமிழும் இரு கண்களென போற்றி வளர்க்கப்பட்டன. சைவ சித்தாந்தமே முடிந்த முடிவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் எனக் கொண்டொழுகியதோடு பல நூல்களுக்கு உரை எழுதியும், வடமொழி, தமிழ்மொழி நூல்களை இயற்றியும் உள்ளது. சங்கரலிங்க முனிவர் சாந்துப் புலவரைக் கொண்டு **மயூரகிரிக்கோவை** என்ற நூலை இயற்றுவித்தார். ஆறுமுகத் தம்பிரான் பெரியபுராணம் முழுவதிற்கும் மிகச்சிறந்த உரை எழுதினார். குமாரசுவாமி முனிவர் தெய்வ சிகாமணி நாண்மணி மாலை போன்ற நூல்களும் இவ் ஆதீனத்தால் வெளியிடப்பட்டன.

திருக்கோயில்களில் தமிழ் மொழியில் அருச்சனை நடைபெற்றது. 1955இல் அருள்நெறி திருப்பணி மன்றம், திருப்புத்தூர்த் தமிழ்ச்சங்கம் (1967), திருக்குறட் பேரவை (1973), திருவருட் பேரவை (1982) போன்ற அமைப்புக்கள் தொடங்கப்பட்டு பல பணிகளைப் புரிந்தன. அருள்நெறி திருப்பணி மன்றம் மூலம் ஆரம்பபள்ளி 3, இடைப்பள்ளி 4, உயர்நிலைப்பள்ளி 3, மேல்நிலைப்பள்ளி 3, ஆக மொத்தம் 13 பள்ளிகளும், பாவநாசம் நெல்லை மாவட்டத்தில் திருவள்ளுவர் கல்லூரி ஒன்றும் நிறுவப்பட்டது.

இவ் ஆதீனம் வறுமை நீக்கும் பணிகள், பெண்கள் முன்னேற்றம், ஒழுக்கம், ஒற்றுமை, சமய இணக்கம், மனித குல ஒருமைப்பாடு, ஆலயத்தூய்மை, தீண்டாமை ஒழிப்பு போன்ற பணிகளையும் புரிந்தது.

### துலாவூர் ஆதீனம்

துலாவூரில் குன்றக்குடிக்கு அருகாமையில் இவ் ஆதீனம் நிரம்ப அழகிய தேசிகரால் நிறுவப்பட்டது. கி.பி 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இவ் ஆதீனத்தில் இதுவரை 28 தேசிகர்கள் பட்டத்தில் அமர்ந்திருக்கின்றனர். 29ஆம் பட்டராக ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய ஞானப்பிரகாச தேசிகர் இருந்து வருகின்றார்.

இவ் ஆதீனத்தை இல்லறத்தார் ஆதீனம் என்று அழைப்பதுமுண்டு. காவிரிப் பூம்பட்டினத்தில் இருந்த சோழ அரசனுக்கும், நகரத்தார்களுக்கும் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டபோது நகரத்தார் உட்பட பெண்களும் உயிர் துறந்தனர். சில சிறுவர்கள் மட்டுமே உயிர் தப்பினர். இவர்கள் மணம் புரியும் காலத்தில் நகரத்துப் பெண்கள் கிடைக்காமையால் வேளாளப் பெண்களை மணக்க நேரிட்டது. "திருமணத்திற்குப் பின்பும் எங்கள் குலகுருவே குருஸ்தானமாக இருக்க வேண்டும்" என்ற நிபந்தனையின்படி இன்றும் நகரத்தாரில் பெண்களுக்கு இவ் ஆதீனம் குருபீடமாகத் திகழ்ந்து வருகின்றது.

இவ் ஆதீனத்தால் குருபூசை, மகேஸ்வரபூசை, சைவசிந்தாந்த வகுப்பு போன்றவை நடைபெற்று வருகின்றன.

### வரணி ஆதீனம்

தமிழ் நாட்டிலே வேதாரண்யம் கோயிலுக்கு அருகாமையில் அமைந்த ஒரு ஆதீனமாகும். இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும் வரணி ஆதீனத்தார் வேதாரண்யக் கோயிலுக்குப் பரம்பரை பரம்பரையான அறங்காவலர்களாக இருந்து வந்திருக்கின்றனர்.

16ஆம் நூற்றாண்டின் இறுதியில் போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சைவ மக்களுக்கு இழைத்த கொடுமைகளைப் பொறுக்க முடியாமல் வரணியில் வாழ்ந்த தில்லைநாதத்தம்பிரான் என்பவர் கோடிக்கரை வந்தடைந்து வேதரண்யப் பெருமானை வழிபட்டு அவ் ஆலயத்தின் அருகே வாழ்ந்தார். தஞ்சையை ஆண்ட அரசனொருவன் தில்லைநாதத் தம்பிரானின் பக்திப் பெருமையை அறிந்து 16 கிராமங்களையும், அவற்றில் அடங்கிய 2500 ஏக்கர் நிலத்தையும் மானியமாக்கி அக்கோவிலையும் பரிபாலிக்கும்படி பணிந்தான். அதன் பின்பு தில்லைநாதத்தம்பிரான் வரணி ஆதீனத்தை நிறுவி பரிபாலனம் செய்து வந்தார். அவரைத் தொடர்ந்து அவரது குடும்பத்தார் இவ் ஆதீனத்தைப் பரிபாலனம் செய்து வரலாயினர்.

இவ் ஆதீனமும் பல சமயத்தொண்டுகளைப் புரிந்தது. 3000 வேலி நிலங்களையும், 27 கோயில்களையும் பரிபாலித்து வந்தது. கோயில்களுக்கு கும்பாபிஷேகத்தை முன் நின்று நடாத்தியது. திருவிழா, வழிபாட்டு ஆராதனைகள் செய்வதற்கான ஒழுங்குகளைப் புரிந்தது. நாயன்மார்களின் குருபூசைகள் உட்பட ஆகம, தேவாரப் பாடசாலைகளை நடாத்தியும் வந்தது. புராணச் சொற்பொழிவுகளும் ஆற்றியது. பல இடங்களில் கிளை மடங்களையும் உருவாக்கிப் பணிகள் புரிந்தது.

### நாச்சியார் கோயில் ஆதீனம்

கும்பகோணம் திருவாரூரில் நாச்சியார் கோயில் உள்ளது. அங்கு இருப்பதே நாச்சியார் ஆதீனமாகும். இதற்கு வள்ளல் சந்தான மடம் என்றும் மருதவாண சுவாமிகள் மடம் என்றும் மறுபெயர்கள் உண்டு. இதன் ஆதீன கர்த்தாக்கள் இல்லத்தார்கள் ஆவர். இவ் ஆதீனத்தின் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ மருதப்ப தேசிகராவார்.

### வேளாக் குறிச்சி ஆதீனம்

திருநெல்வேலியில் கல்லிடைக் குறிச்சியில் ஒரு பகுதியாக அமைந்துள்ளதே வேளாக் குறிச்சி ஆதீனமாகும். இவ் ஆதீனத்தை தோற்றுவித்தவர் சத்திய ஞான தேசிக தீர்த்த தரிசிகள் ஆவார். இவர் திருக்கைலாசத்தில் ஸ்ரீ கண்டபரம சிவத்திடம் உபதேசம் பெற்றவராவார். இரண்டாம் குரு ஸ்ரீலஸ்ரீ மகாதேவ பண்டார சந்நிதி. இவரின் பின் பதினேழு குரு மகா சந்நிதானங்கள் தலைமை வகித்து வந்துள்ளனர்.

இவ் ஆதீனத்திற்கு பாபநாசம், திருக்குற்றாலம், சுசீந்திரம், திருச்சிராப்பள்ளி, திருவாரூர், திருப்புகலூர் ஆகிய இடங்களில் கிளை மடங்களும் உள்ளன. திருச்செங்காட்டங்குடி, திருப்புகலூர், திருமியச்சூர் போன்ற கோயில்கள் இவ் ஆதீனத்தின் பரிபாலனத்தின் கீழ் இயங்கின. திருவாரூர் வழிபாட்டுக் கட்டளைக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னதானக் கட்டளைக்கும் இவர்களே பொறுப்பாக இருந்தார்கள். இக் கோயில்களுக்குக் குடமுழுக்குக் கிரியைகளும் இவ் ஆதீனப் பொறுப்பிலேயே நடைபெற்றன.

### வள்ளலார் ஆதீனம்

இந்த ஆதீனம் சீர்காழியில் அமைந்துள்ளது. இதை வெள்ளை வேட்டி ஆதீனம் என்றும், இல்லறத்தார் ஆதீனம் என்றும் கூறுவர். கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. காழி கண்ணுடைய வள்ளல் என்பவரே இவ் ஆதீனத்தை நிறுவினார். தற்போது இவ் ஆதீனம் அழிந்து போயுள்ளது. இவர் **ஒழிவிலொடுக்கம்** என்ற நூலையும் சில செய்யுள்களுக்கு உரைகளையும் செய்தவர். மூன்றாவதாக பொறுப்பேற்ற குரு மூர்த்தியான சிவஞான வள்ளல் 20 சிறுநூல்களை எழுதியுள்ளார். அவற்றை **வள்ளலார் சாத்திரம்** என்று வழங்குவர்.

### சொர்க்கபுர ஆதீனம்

தருமபுர ஆதீனத்தில் எட்டாம் குருவாக இருந்த அழகிய திருசிற்றம்பல தேசிகர் காலத்தில் இருந்த தம்பிரான் சுவாமிகள் ஒருவர் தனியே பிரிந்து சென்று அம்பர் மாகாளத்தில் சொர்க்கபுர ஆதீனத்தை நிறுவித் தனது பெயரை அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் என வைத்துக் கொண்டார். தஞ்சை மன்னன் இரண்டாம் சரபோசியும், அரசி கஸானாபாயும் ஏராளமான நிலங்களை இவ் ஆதீனத்திற்கு நன்கொடையாக வழங்கினர்.

இவ் ஆதீனத்தரால் கிளிவிடு தூது, அறிவானந்த சமுத்திரம், அருட்பா மாலை, திரு உசாத்தானத் தோத்திரம், வினாவுரை, திரிபதார்த்த தீபம், சித்தாந்த நிச்சயம், அனுட்டான விதி ஆகிய நூல்கள் இயற்றப்பட்டன.

### தாயுமான சுவாமிகள் ஆதீனம்

தாயுமானவரின் பரம்பரையில் வந்தோரால் அன்னப்பன் பேட்டையில் மடம் அமைத்துத் தொண்டு புரிந்து வந்த ஆதீனமே தாயுமானசுவாமிகள் ஆதீனமாகும். சூரியனார் கோயில் ஆதீனத்திலிருந்து வெளியேறிய ஸ்ரீலஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் இவ் ஆதீனத்தில் பத்தயம் குரு ஸ்தானத்தில் சில காலம் தங்கியிருந்து தொண்டாற்றினார்.

### நீலப்பாடி ஆதீனம்

திருவாரூரில் அமைந்துள்ள ஆதீனமாகும். ஸ்ரீ நமச்சிவாய சுவாமிகள் என்பவர் 1820இல் நிறுவித் தொண்டு புரிந்து வந்த ஆதீனமாகும். இவருக்குப் பின் நடராச முதலியார் தொண்டு புரிந்து வந்தார்.

### காஞ்சிபுர ஆதீனம்

சைவ வேளாளர்களில் ஒரு பிரிவினரான தொண்டை மண்டல வேளாளர் அனைவருக்கும் உரிய பீடமாகும். சீகாழிச் கச்சி ஞானப் பிரகாசர் என்பவரே காஞ்சிபுரத்தில் இவ் ஆதீனத்தை உருவாக்கினார். இதன் காலம் கி.பி. 14ஆம் நூற்றாண்டு எனக் கூறப்படுகின்றது. இதன் குருவாக சிற்றம்பல நாடிகளே விளங்கினார்.

இவ் ஆதீனம் முன்பு சிறப்பாக விளங்கியபோது 24 கிளை மடங்கள் இருந்தன எனக் கூறப்படுகின்றது. இதில் பணி புரிந்த குரு மூர்த்திகள் 232 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

### இராமேச்வர ஆதீனம்

இவ்வாதீனம் பற்றிய விபரங்கள் இருக்குமிடம் அறியக் கூடியதாக இல்லை. (சு. து.)

## பதுமகோமளை

இவள் தேவமகளாவாள்; கந்த புராணத்தில் இடம்பெறும் பெண் பாத்திரம்; சூரபதுமன் பட்டத்தரசி. சூரன் முடிசூட்டு விழா நடந்தபின் திருமணம் செய்து கொள்ள விரும்பியபோது அசுரகுரு சுக்கிராச்சாரியர் தேவதச்சன் புதல்வியாகிய பதுமகோமளையை முறைப்படி திருமணம் செய்து வைக்கிறார். பதுமகோமளை மிகுந்த கற்புடையவள் - அழகு மிக்கவள் - அறிவு நிரம்பியவள். இராவணன், இராமனுடன் போருக்குச் சென்றதைத் தடுத்த அவன் மனைவி மண்டோதரியைப் போல் சூரபதுமன் முருகனுடன் போருக்குச் செல்வதைத் தடுத்தாள் பதுமகோமளை என்பதனைப் பானுகோபன் இறந்த போது இவள் புலம்புகின்ற வார்த்தைகள் தெரிவிக்கின்றன. இவள் நைந்து கிடக்கின்ற தேவர்களுக்குத் துன்பம் எனத் தடுக்கின்றாள். சூரன் இறந்த செய்திகேட்டு இடியோசைக் கேட்ட நாகம் போன்று துடித்து, விழுந்து இறந்த, தலையாய கற்புடையவள். இலக்குமி என்பவள் இவளது மகளாவாள்.

விஸ்வகர்மன் என்னும் தேவதச்சனுடைய மகள், விஸ்வகர்மன் மயனின் தந்தையாவார். மயனின் உடன்பிறந்தவளே பதுமகோமளை. மயனின் மகள் மண்டோதரி இராவணனின் தேவி. பதுமகோமளை சூரபன்மனின் தேவியாவார். இவளது மகன் பாநுகோபன் மிகச் சிறந்த வீரன். இவன் குழந்தையாகத் தொட்டிலில் உறங்கும் பொழுது சூரிய கிரணங்கள் முகத்திற்பட, அதனால் சூரியஉலகம் சென்று சூரியனைப் பிடித்துக் கட்டிப் பின்பு பிரமனின் வேண்டு கோளுக்கிணங்கி அவனை விட்டான். பாநுவை கோபித்ததனால் பாநுகோபன் என்ற பெயர் பெற்றான்.

ஒரு காலத்தில் தனது தாயாகிய பதுமகோமளை, இலக்குமியின் பொற்கிளிக்கு ஆசைப்பட அவளது ஆசையை நிறைவேற்ற வைகுந்தம் சென்று பொற்கிளியை வலியப் பிடுங்கிக் கொண்டுவந்து தாயிடம் கொடுத்தான்.

பதுமகோமளையின் மற்றுமொரு புதல்வன் இரணியன் நீதி உணர்ந்தவன். தந்தையாகிய சூரபன்மனிடம் குமரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளுடன் போர் செய்ய வேண்டாம் எனப் பலவழியிலும் நீதியுரைக்க சூரன் கோபித்தான். அதனால் வீரவாகு தேவருடன் போரிட, அவர் ஏவிய படைக்கஞ்சிக் கடலில் ஒழிந்தான். தந்தை இறந்தால் அவனுக்குத் தல தர்ப்பணம் செய்ய வேண்டும் என்பதற்காக மீனுருக்கொண்டு கடலில் ஒழிந்திருந்தான்.

மேலும் அக்னிமுகனும், வச்சிரவாகுவும் இவளது புதல்வர்கள்.

முருகப் பெருமானது வேலாயுதத்தால் சூரன் மாண்டான் என்பதைக் கேட்டவுடனேயே பதுமகோமளை ஆவி நீங்கினள்.

(வ. வை.)

## பதுமப் பிரமர்

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் களைச் செய்வோர் முறையே பிரமன், திருமால், சிவன் என்னும் முப்பெருங்கடவுளராவர். அவர்களில் படைத்தல் தொழில் புரியம் பிரமன். தாமரை மலரில் தோன்றியவனானதால் பதுமப் பிரமன் எனக் கூறப்பெறுகிறான்.

'தாமரைப்பூவினுட் பிறந்தோன்', 'மலர் இருந்த அந்தணன்' என்பன போன்ற இலக்கியச் சொற்றொடர்களால் இதனை அறியலாம். பிரமன் நான்கு முகங்களை உடையவன்; பொன்னிறம் பெற்றவன்; மேல் வலக்கையில் செபமாலை, இடக்கையில் தண்டாயுதம், கீழ் இடக்கையில் சுருக்கு, சுருவம், வலக்கையில் கமண்டலம் ஆகியவற்றைப் பெற்றிருப்பவன்; உலக உற்பத்திக்கு காரண மானவன். திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றியவன் ஆதலின் பிரமன் இவன் மகன் எனப்படுவான். இவன் மனைவியர் சரசுவதி, சாவித்திரி, காயத்திரி என்னும் மூவர்.

திருமாலும் பிரமனும் சிவபிரானது அடிமுடியைத் தேடிச் சென்ற காலத்து முடியைக் கண்டேன் எனப் பிரமன் பொய் கூறியதால், 'உனக்கு நிலவுலகில் கோயில்கள் இரா' எனச் சிவனிடம் சாபம் பெற்றான். முருகப் பெருமான் ஒருமுறை இவனிடம் பிரணவத்திற்குப் பொருள் கூறுமாறு கேட்க, கூற இயலாது நின்றமையினால் சிறையில் அடைக்கப்பட்டான். இவ்வாறு பிரம்மனைப் பற்றிய பல செய்திகளைப் புராண நூல்கள் கூறுகின்றன. நான்கு வேதங்களுக்கு அதிபதி ஆதலின் இவனை வேதமுதல்வன் என இலக்கியங்கள் சுட்டுகின்றன. இவன் வீற்றிருக்குமிடம் பிரமலோகம்; ஊர்தி அன்னம்; கொடியும் அன்னம். பிரமர்கள் பதினொருவர் என்பது புராண வழக்கு. பிரமன் முதலில் ஐந்து முகங்களைப் பெற்றிருந்தான் எனவும், அவற்றுள் அதோ முகம் சிவபெருமானால் கிள்ளி எறியப்பட்டதெனவும் புராணங்கள் கூறுகின்றன.

(இராசஅ.)

## பரசுராமர்

திருமாலின் ஆறாவது அவதாரமான பரசுராமர். பிருகு வம்சத்தவரான சமதக்னி முனிவருக்கும் அவர் மனைவி இரேணுகைக்கும் மகனாக அவதரித்தவர். ஒரு நாள் தன் கணவனின் ஓமத்திற்கு நீர் கொண்டு வருவதற்கு றேணுகாதேவி கங்கைக் கரைக்குச் சென்றிருந்தாள். அங்கு தேவமாதருடன் கந்தர்வ மன்னன் ஒருவன் ஜலக்கிரீடை செய்து கொண்டிருந்தான். கந்தர்வன் அழகில் மயங்கிய றேணுகாதேவி நீர் கொண்டு செல்லத் தாமதித்து விட்டாள். ஆசிரமத்தில் ஓமம் செய்யும் நேரம் கடந்துவிட்டது. தன் தவற்றை உணர்ந்து ஆசிரமத்திற்கு விரைந்து வந்தாள். முனிவர் ஞான திருஷ்டியால் நடந்தவற்றை உணர்ந்தார்.

மனதால் தவறிழைப்பதும் குற்றம் என்று எண்ணிய முனிவர் றேணுகாதேவியைக் கொன்று விடுமாறு தன் புத்திரர்களுக்குக் கட்டளை இட்டார். தாயைக் கொல்வது பாபம் என்று கருதி அவர்கள் தந்தையின் கட்டளைப்படி நடக்க மறுத்துவிட்டனர். தாயைக் கொல்லும்படி தந்தையார் இட்ட கட்டளையை இவரின் சகோதரர்கள் நிறைவேற்றாது சாபம் பெற்றனரென்றும், இவர் நிறைவேற்றி, அதனால் தந்தையாரிடம் வேண்டிப்பெற்ற வரம் மூலம் தாய் உயிர்த்தெழவும், தமையன்மார் தபோதனர்களாகவும் வழிசமைத்தார் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

இவராலே கொல்லப்பட்ட கார்த்தவீரியன் என்பானுடைய புதல்வர். இவரில்லாத போது தந்தையாரான சமதக்னி முனிவரைக் கொன்று தாயாரான இரேணுகையை இருபத்தொரு முறை அடித்துச் சென்றனர். இவர் வருமளவும் உயிர்தரித்திருந்த இரேணுகை, இருபத்தொருமுறை மார்பில் அறைந்து இவருக்கு நடந்தவற்றை உரைத்தனள். இதனாலே கோபமுற்ற இவர் இருபத்தொரு தலைமுறை அரசர்களை அழிப்பதாகச் சபதம் பூண்டு நிறைவேற்றினார். அரசரை அழிக்கவெனச் சிவனை எண்ணித் தவம் செய்தார் என்றும், அப்பொழுது புலையர் உருவில் வந்தவர் சிவனேயென உணராமல், இவர் சண்டையிட்டார் எனவும், பின் துதி செய்த இவருக்குச் சிவன் பரசு எனும் ஆயுதங் கொடுத்தார் எனவும், இதனால் பரசுராமர் எனப் பெயர்பெற்றார் எனவும் கூறுவர். கார்த்தவீரியனைக் கொன்ற தோஷம் நீங்க ஒரு வருடம் தீர்த்தயாத்திரை செய்த இவர், அரசர்களைக் கொன்று பெற்ற நிலத்தை காசியப முனிவருக்குத் தானம் செய்தார். அரச குலத்தைக் காப்பதற்காகத் தனக்குத் தானம் தந்த இடத்தில் இருக்கலாகாது என இவரைக் காசியபர் பணிக்க, இவருக்கென சமுத்திரராஜன் சூர்ப்பாகார தேசத்தை அமைத்துக் கொடுத்தான் என்பர். சிலர், இவர் பின் மகேந்திர மலையிலே தங்கினர் என்பர்.

திரேதாயுகத்தில் அவதரித்த இவர் சிரஞ்சீவிகளுள் ஒருவராகக் கொள்ளப்படுகிறார். இதனால் இராமாயண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திரத்தும், மகாபாரத சரித்திரத்தும் இவர் குறித்த குறிப்புகள் உள. சீதையைத் திருமணம் முடித்து இராமன் அயோத்தி மீளும் வழியில் எதிர்ப்பட்ட பரசுராமர், ஏலவே சனகன் சபையில் சிவதனுசுவை முறித்த இராமரிடம், தன்வசமுள்ள விஷ்ணு தனுசுவை இயலுமாயின் வளைக்கும்படியும், வலிநிரூபித்துத் தம்முடன் போரிட வரும்படியும் கூறினார்.

இராமன் சிறுவன் எனத் தசரதன் கூறி இரந்தமையையும் நோக்காது, இவர் வழங்கிய விஷ்ணு தனுசுவை வளைத்த இராமர், வில்லிலே தொடுத்த அம்புக்கு இலக்கு யாது எனக் கேட்க, இவர் தமது தவப்பயன் முழுவதையும் இலக்காகக் காட்டி இழந்தார். பின் விஷ்ணு தனுசுவை இராமருக்கே வழங்கி ஆசியுரைத்தார். பல மொழி இராமாயணங்களிலும், இராமர் அயோத்தி திரும்புகையிலேயே பரசுராமர் எதிர்ப்பட்டதாகக் கூறப்பட, துளசி இராமாயணம் மட்டும் சுயம்வர மண்டபத்திலேயே இச்சம்பவம் நடந்ததாகக் காட்டுகிறது. மேலும், கன்னட தொரவே இராமாயணம், தனுசு வளைக்கும் கோரிக்கையைக் கூறாது, பரசுராமர் கோடரி எறிந்து போர் புரிந்ததாகவும், இராமர் போரில் வென்றதாகவும் குறிப்பிடுகின்றது.

பீஷ்மர், கர்ணன் முதலியோருக்குக் குருவாகப் பரசுராமர் மகாபாரதத்திலே காட்டப்பெறுகிறார். அம்பையின் பொருட்டு நிகழ்ந்த போரில் தமது மாணவரான பீஷ்மரிடம் இவர் தோற்றார் எனவும், அந்தணன் எனப் பொய்கூறி வில்வித்தை கற்ற கர்ணனுக்கு, இவர், தக்க சமயத்திலே அவ்வித்தை பலியாதிருக்கச் சபித்தார் எனவும் மகாபாரதம் குறிப்பிடுகின்றது. (ஸ்ரீ. பி.)

## பரஞ்சோதி அடிகள்

இவர் தஞ்சை மாவட்டம், வேதாரணியம் வட்டத்தைச் சார்ந்த ஆயக்காரன் புலம் என்னும் பேரூர் அருகேயுள்ள மலையன் குத்தகை என்னும் சிற்றூரில் கி.பி. 1887ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தையார் சிதம்பரத்தேவர், தாயார் அஞ்சலையம்மாள். இவர் முறையாகப் பள்ளியில் சேர்ந்து பயிலும் வாய்ப்பின்றித் தாமே அரிதின் முயன்று படித்த புலமையாளர். இவர்தம் ஊருக்கு வந்திருந்த ஒரு துறவியுடன் சேர்ந்து தில்லையைச் சென்றடைந்து, அங்குள்ள பொன்னம்பல சுவாமிகள் மடத்தில் காசிவாசி சிதம்பர அடிகள் என்னும் பெரியாரை அறிவாசிரியராகக் கொண்டு பல நூல்களையும் கற்றுணர்ந்தார். ஆங்கிலத்திலும் வடமொழியிலும் போதுமான அளவு புலமையடைந்தார். அடிகளார் இவரிடம் சிறந்த பற்றும் மதிப்பும் கொண்டு பெரிதும் பாராட்டி மடத்தின் பணிகள் பலவற்றை இவருடைய மேற்பார்வையில் நடைபெறுமாறு செய்தார். இவருடைய திருப்பணிகளில் பொன்னம்பல அடிகளார் மடம் சிறப்புற்றுப் பலரும் போற்றுமாறு வளர்ந்தது.

இவர் ஆன்மிகப் பணிகளோடு, அக்காலத்தில் சிறப்பாக இலங்கிவந்த கதர் இயக்கத்திலும் ஈடுபட்டார்; பாரதமாதா கதர்த் தொழிற்சாலை ஒன்றையும் ஏற்படுத்தி நடத்தி வந்தார்; காந்தியடிகள் தில்லைக்கு வந்தபோது அவரை வரவேற்று மடத்தில் தங்கவைத்துப் போற்றினார். அண்ணாமலை அரசர் ஏற்படுத்திய மீனாட்சி தமிழ்க் கல்லூரியில் படித்த மாணவர்களுக்கு இவர் பல்வேறு உதவிகளைச் செய்தும், பல செல்வர்களைக் கொண்டு செய்வித்தும் தொண்டாற்றினார். சாமி சகசானந்தர் ஏற்படுத்திய நந்தனார் கல்விக் கழகம் வளர அவருடன் இணைந்து இவரும் பெரிதும் பாடுபட்டார்.

இவர் சிறந்த பதிப்பாசிரியராகவும் விளங்கினார். பொன்னம்பல அடிகள் பகவத்கீதை, கைவல்லிய நவநீதம் முதலிய நூல்களுக்கு எழுதிய உரையை இவர் பதிப்பித்து வெளியிட்டார். தத்துவராய அடிகள் இயற்றிய அடங்கன் முறை என்னும் நூலும் இவரால் பதிப்பிக்கப் பெற்றது. இவர் பொன்னம்பல அடிகள் வரலாற்றை உயர்ந்த நடையழகுடன் உரைநடையில் எழுதி வெளியீட்டுள்ளார். இவர் பல தனிப்பாடல்களும் இயற்றியுள்ளார். ஏழை எளியவர்களுக்குத் தொண்டு புரிவதையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்த இவர் 1928ஆம் ஆண்டுக் காலமானார். இளமையிலே மறைந்தது தில்லைப் பகுதி மக்களுக்கு பேரிழப்பு என்பர். (இ.ச.)

## பரஞ்சோதி முனிவர்

இவர் சோழநாட்டுத் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருமறைக்காட்டில் (வேதாரணியம்) சைவ வேளார் மரபில் மீனாட்சி சுந்தர தேசிகரின் மகனாகப் பிறந்தார். தந்தையிடமே கல்விக்கற்று, தீட்சையும் பெற்றுத் துறவு பூண்டு, மதுரையில் தங்கி இறைவன் திருவிளையாடல்களைத் திருவிளையாடற் புராணம் என்ற நூலாகத் தமிழில் தந்துள்ளார்.

தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டியாரிக்கு அருகிலுள்ள 'குறுக்கை' போன்ற ஊர்களில் பரஞ்சோதியின் பரம்பரையினர் வாழ்கின்றனர். திருமறைக் காட்டின் மேற்கே உள்ள 'பரஞ்சோதிபுரம்' என்னும் ஊரில் உள்ள இறைவனின் பெயர் 'பரஞ்சோதிலிங்கம்' என்று வழங்கப்பெறுகிறது. அங்கு, பரஞ்சோதி முனிவரின் உருவச்சிலையும் இருக்கிறது. அனைத்தும் முனிவரின் நினைவாக உருவானவை. அதுவே முனிவர் பிறந்த ஊர் என்பர்.

பல சைவத் திருத்தலங்களை வழிபட்டு இறுதியில் மதுரையை அடைந்து இவர் தம் தந்தையாரின் பெயரை நினைவூட்டும் மதுரைமீனாட்சி சுந்தரரை வழிபடுவதில் நீங்கா அன்புடையவராகி, அங்கேயே தங்கினார். வடமொழியிலும் வல்லவரான பரஞ்சோதியாரின் சொல்வன்மை, கவித்திறம், நூலறிவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கநெறி ஆகியவற்றை உணர்ந்த மதுரைச் சான்றோர். பரஞ்சோதி முனிவர் என்றே அழைக்கலாயினர். மேலும். எம்பெருமானின் திருவிளையாடல்களைத் தமிழில் பாடியருளு மாறும் வேண்டினர். அவ்வாறே செய்ய. வடமொழி நூல்களை ஆய்ந்து வருங்கால் மீனாட்சியம்மை இவர் கனவில் தோன்றி 'எம் பெருமான் திருவிளையாடலைப் பாடுக' என்று ஆணையிட்டார். உடனே. '*சத்தியாய்*' என்னும் மங்கல மொழியால் தொடங்கி 3363 பாடல்களை மூன்று காண்டங்களாகப் பாடி முடித்தார் என்பர். திருநகர். தீர்த்தம். மூர்த்திகள் ஆகிய மூன்று சிறப்புக்கள். அறுபான் நான்கு திருவிளையாடல். அருச்சனை என்ற அறுபத்தெட்டுப் படங்கள் கொண்ட அந்நூல் விருத்தப்பாக்களால் ஆனது.

பதினெண் புராணங்களுள் ஒன்றான காந்த புராணத்து ஈசசங்கிதையின் சிரீ ஆலாசிய மகாத்மியம் என்னும் வடமொழி நூலினை ஆய்ந்து. தமிழில் அந்நூலைச் செய்த இவர் சொக்கேசர் ஆலயத்துள் அறுகால் இருக்கையில் இருந்து அதனை அரங்கேற்றமும் செய்தார்.

பரஞ்சோதியார் இயற்றிய திருவிளையாடற் புராணத்துக்கு முன்பே தமிழில் வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணம் என்னும் நூல் இருந்தது. ஆயினும். அது வடமொழி நூலை ஒட்டிச் செய்யப் பெறவில்லை. சொக்கன் என்ற சொல்லையே இறைவன் பெயராகப் பயன்படுத்தும் அந்நூல் இறைவனைப் போற்றுவதாக அமையவில்லை என்று குறை கூறுவாரிருந்தனர்.

தமிழ்நாட்டில் தமிழ்மொழிக்குச் சிறப்பில்லை என்றால் கடவுளும் அங்குத் தங்கமாட்டார் என்று கொள்கையுடைய முனிவர். இமயப் பாவையைச் சொல்லாகவும். சொக்கநாதரை அச்சொல்லின் பொருளாகவும் மதித்துச் சைவசித்தாந்த உணர்ச்சியோடு வாழ்ந்தவர். சித்தர் செயல்கள். சாமுத்திரிகா இலட்சணம். அசுவ இலட்சணம். பரதம். இசை முதலிய கலையுணர்வோடு நவமணிகள் போன்ற பொருள்களில் சிறந்த அனுபவமும் முனிவர் பெற்றிருந்தார்.

முனிவர் நிரம்ப அழகிய தேசிகரிடம் கல்வி பயின்றவர். முனிவரிடம் பயின்ற மாணாக்கருள் சிறந்து விளங்கியவர் விறலிவிடு தூது. கூளப்ப நாயக்கன் காதல் ஆகியவற்றை இயற்றியவரும். வீரமாமுனிவரின் தமிழாசிரியருமான சுப்பிரதீபக் கவிராயர். முனிவர் அறுபத்து நான்கு திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா. மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி. வேதாரணிய புராணம் ஆகிய நூல்களையும் செய்துள்ளார்.

சிதம்பர புராணம் இயற்றிய திருமலைநாதரின் மகனும். சிதம்பரப்பாட்டியலின் ஆசிரியருமான பரஞ்சோதியார். பரஞ்சோதி முனிவரினும் வேறானவர். பரஞ்சோதி முனிவரின் காலம் கிபி. 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். (இ.ச.)

## பரத்துவாசர்

சமஸ்கிருத மொழியிலே பரத்துவாஜர் எனப்படுவர். தமிழிலே பரத்துவாசர் என அழைக்கப்படுகிறார். இப்பெயரிலே பலர் இருந்துள்ளனர். தீர்க்கதமஸ் என்னும் முனிவர் இப்பெயராலும் அழைக்கப்பட்டார். கம்ப இராமாயணத்தின்படி இவர் அத்ரி மஹாரிஷியின் மகன். இவர் பல ஆயிரம் வருடங்கள் வாழ்ந்தாகக் கூறப்படுகின்றது. வடமொழி இராமயண ஆசிரியரான வால்மீகியுடன் இவர் தொடர்புப் படுத்தப்பட்டுள்ளார். வால்மீகியின் மாணவனாக இவர் பல ஆயிரமாண்டுகள் வாழ்ந்தார். இருவரும் தாமஸ நதிக்கரைக்குச் சென்றபோது வால்மீகி அந்த ஆற்றினதும் அப்பிரதேசத்திலுள்ள இயற்கை அழகையும் நன்கு ரசித்தார். அப்போது இரண்டு இரவுஞ்சப் பறவைகள் காதலிலே நன்கு ஈடுபட்டுக்கொண்டிருந்த போது வேடன் ஒருவனின் அம்பினால் ஆண்பறவை கொல்லப் பட்டது. பெண் பறவை சோகமயமாகக் காணப்பட்டது. இதைப் பார்த்த வால்மீகியின் உள்ளம் நன்கு உருகிற்று. அந்த சோக உணர்விலிருந்து ராமாயணத்திலுள்ள 'மாரிஷாத' எனும் சுலோகம் உருவாகிற்று. பரத்துவாஜர் இதனைப் பார்த்தார்.

பரத்துவாசர் வேதங்களை நன்கு கற்றுக் கரை காண விரும்பினார். இதற்காக தாம் பல ஆயிரம் ஆண்டுகள் வாழ வேண்டும் என இந்திரனைப் பிரார்த்தித்துப் பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து வேதங்களை நன்கு கற்றார். ஆனால் வேதங்களை முற்றாகக் கற்க முடியவில்லை. எனவே மீண்டும் இந்திரனைப் பிரார்த்தித்து மேலும் பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்வதற்கான வரத்தைக் கேட்டார். இந்திரன் அவருடைய கோரிக்கை மிகக் கடினமானதென்பதை விளக்குகையில் அவர் கற்றது கை மண்ணளவு கல்லாதவை மூன்று பெரும் மலைகள் போன்றவை என அறிவுறுத்தினார். ஆனால் பரத்துவாசர் மனத்தளர்ச்சியின்றித் தொடர்ந்து கற்றார் எனப் பாகவதம் கூறுகின்றது.

பரத்துவாசர் என்ற பெயருடைய ஒரு மகரிஷி பெரிய மந்திரவாதியாகவும் விளங்கினார். இவருடைய ஆச்சிரமம் சித்திரக் கூட மலையில் இருந்ததாகவும் ராமர் அயோத்தியை விட்டு வெளியேறி வனவாசம் செய்யும் முகமாகச் செல்லும் வழியில் இவ்வாச்சிரமத்திற்குச் சென்று அவருடைய ஆசிர்வாதத்தைப் பெற்றதாகக் கூறப்படுகின்றது. பின்னர் சகோதரனாகிய பரதன் பரிவாரங்களுடன் தமையனைத் தேடிவரும் வழியில் இவ்வாச்சிரமத்திற்குச் சென்று வரவேற்கப்பட்டார். அன்றிரவு அவர் அவர்களுக்கு நல்ல விருந்தினையும். களியாட்டத்தையும் பெரிய அளவிலே மிகக் குறுகிய காலத்திலே செய்து முடித்தார். இரவு விடிய அனைத்தும் திடீரென மறைந்தன என ராமாயணம் கூறுகின்றது.

பரத்துவாசருக்கும் கிருதாசி எனும் விண்ணுலக நடன அழகிக்கும் பிறந்தவராகத் துரோணர் கூறப்படுகிறார். பரத்துவாசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிக் கூறும் ஒரு வடமொழிச் செய்யுள்

*"பரேசுதான் பரே சிஷ்யான்*
*பரே தேவான் பரே திவ்யான்*
*பரேச பார்யாம் அவ்யாஜாத்*
*பரத்து வாஜோரஸ்மி சோபனே"*

(என் பிள்ளைகள் அல்லாதவர்களைக் காப்பாற்றுகிறேன்; மாணவர்களைக் காப்பாற்றுகிறேன்; தேவர்களையும் பிராமணர்களையும் காப்பாற்றுகிறேன்; மனைவியைக் காப்பாற்றுகிறேன்; இவையனைத்தையும் பரத்துவாசர் எனும் பெயரில் எளிதாகச் செய்கிறேன்) என அமைந்துள்ளது.

கலிங்க அரசனுடைய மகளான மனோரமாவுக்கும், மகனுக்கும் பரத்துவாசர் தனது ஆச்சிரமத்திலே புகலிடமளித்தார்.

பரத்துவாசர் எனும் ரிஷியின் சூக்தங்கள் (பாடல்கள்) இருக்கு வேதத்திலுமுள்ள ஆறாவது மண்டலத்தில் உள்ளன.

பரத்துவாசரின் மகளான தேவவர்ணினியை விஸ்ரவஸ்தி திருமணம் செய்தான். இவர்களுக்கு குபேரன் எனும் மகன் பிறந்தான்.

பரத்துவாசர் அர்ஜுனின் பிறந்த நாள் கொண்டாட்டத்திலே பங்குபற்றியதாக மகாபாரதம் கூறும். இவர் ஆகேன்ய எனும் படைக்கலம் பற்றிய இரகசியத்தை அக்கினி வேஷவுக்குக் கற்பித்தார்.

மகாபாரதத்திலே வேறு சில இடங்களிலே பரத்துவாசர் பற்றிய குறிப்புகள் உள்ளன. மகாபாரதப் போர் நடைபெற்ற போது இவர் அங்கு வந்து துரோணர் படைக் கலத்தினை கீழே வைக்குமாறு கூறினார். பிருகு மஹரிஷி பிரபஞ்சத் தோற்றம் பற்றி இவரிடம் சில வினாக்களைக் கேட்டார். அவ்வினாக்களுக்கு இவர் திருப்திகரமான பதில்களைக் கூறினார். இவர் புத்ரகா மேஷ்டியாகம் செய்து திவோதாசருக்கு ஒரு மகனைக் கொடுத்தார்.

மத்ஸ்ய, வாயு புராணங்களின் படி, புரு வமிசத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற பரத முனிவர் ஆண்பிள்ளை இல்லாத படியால் மிகுந்த கவலையுடன் காலம் கழித்த போது மருத்த என்பவர் பரத்துவாசரை அவருக்கு மகனாகக் கையளித்தார். அந்தணராயிருந்த பரத்துவாசர் பின்னர் க்ஷத்திரிய (அரச)ர் ஆனார்.

மகாபாரதத்தின் பிறிதொரு பகுதியில் இவர் அங்கிரஸ் குடும்பத்தைச் சேர்ந்த மஹரிஷி (பெரியமுனிவர்) எனவும் கங்கை ஆற்றங்கரையிலே கடுந்தவம் புரிந்தார் எனவும் கூறப்படுகிறது.

மேலும் பரத்துவாசர் சாஸ்திரங்களனைத்தையும் நன்கு கற்ற பெரிய புலமையாளர் எனவும் தரடமசூத்திரம், திரௌத சூத்திரமாகியவற்றினை இயற்றினார் எனவும் அறியப்படுகின்றது.

இவ்வாறு வேத, இதிஹாஷ பௌராணிக மரபுகளிலே பரத்துவாசர் ஒரு பெரிய ரிஷியாகவும், புலமையாளராகவும் கூறப்படுகின்றார். இப்பெயரிலே ஒன்றுக்கு மேற்பட்டோர் இருந்தனர் எனப் பொதுவாகக் கொள்ளலாம். (வி. சி.)

## பரதசேனாபதியம்

இது சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையினால் அறியப் பெற்று, இக்காலத்தில் இறந்துபட்டதாகக் கருதப் பெறும் நூல்களுள் ஒன்று. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரை எழுதுவதற்கு அடிப்படையாகக் கொண்ட, இசை நாடகத் துறை தொடர்பான நூல்களுள் ஐந்தினைத் தம் உரைப்பாயிரத்துள் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் ஒன்று பரதசேனாபதியம் என்னும் இந்நூலாகும். இதன் ஆசிரியர் பரதசேனாபதியார் என்பதும், இதில் நாடகத் தமிழ் இலக்கணம் பேசப்பட்டது என்பதும் அடியார்க்கு நல்லார் உரையினின்றும் புலப்படுகின்றன. இந்த நூல் இக்காலத்தில் கிடைக்கவில்லை.

தம் உரைக்கு அடிப்படையாகக் கொண்ட நூல்களைக் கூறும்போது, ஐந்து நூல்களைக் குறிப்பிட்டு, 'இவ்வைந்தும் இந்நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்களன்றேனும் ஒரு புடை ஒப்புமை கொண்டு முடித்தலைக் கருத்திற்று இவ்வுரையெக் கொள்க' எனக் கூறியுள்ளார். அதனால், அவ்வைந்து நூல்களும் சிலப்பதிகாரத்திற்குப் பிற்பட்டன என்பதும், அவைகூறும் இலக்கணத்தினை அடியொற்றி இளங்கோவடிகள் தம் காப்பியத்தைச் செய்திருக்க இயலாது என்பதும், அந்நூல்கள் கூறும் இலக்கணங்களுள் ஒருசிலவே சிலப்பதிகாரத்திற்கு ஏற்புடையனவாகும் என்பதும் அடியார்க்கு நல்லார் கருத்துகளாகும் என்பது தெரிகிறது. அந்நூல்களில் ஏற்புடைய கருத்துகளின் துணையொடு அடியார்க்கு நல்லார் தம் உரையினை இயற்றியுள்ளார். அதனை உளங்கொண்டு, இந்நூலின் ஆசிரியர் காலம், சிலப்பதிகார காலத்திற்கும் அடியார்க்கு நல்லார் காலத்திற்கும் இடைப்பட்டது என்று உறுதியாகக் கூறலாம். அதனை ஆராய்ந்த அறிஞர்கள் அக்காலம், கி.பி. 12 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

பரதசேனாபதியார் என்பவரால் இயற்றப்பட்ட நூல் என்னும் பொருளினால் நூல் குறிப்பிடப்பட்டமையால், இது ஆக்கியோன் பெயரால் அமைந்த நூற்பெயராகும். இந்நூலிலிருந்து ஐந்து வெண்பாக்களையும், வேறு இரு வெண்பாவின் பகுதிகளையும் அடியார்க்கு நல்லார், அரங்கேற்றுகாதைக்கெழுதிய உரை விளக்கப்பகுதியின் நான்கு இடங்களில் மேற்கோளாகக் காட்டியுள்ளார். அந்நான்கு இடங்களில் நூற்பெயரைச் சுட்டாது, 'பரதசேனாபதியார்' என்று ஆசிரியர் பெயர் சுட்டியே கூறியுள்ளார்.

ஆடல் திறன், பாடல் தகுதி, அழகு ஆகியன சிறந்து விளங்கும் பெண்ணை ஐந்தாம் ஆண்டில் ஆடற்கலை பயிலத் தொடங்குவித்துப் பன்னிரண்டாம் ஆண்டில் அக்கலை ஞானம் நிரம்பியவுடன் அப்பெண்ணிற்கு அரங்கேற்றம் செய்விக்கப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்னும் செய்தியினை மூன்று வெண்பாக்கள் கூறுகின்றன. நாடக அரங்கம் அமைக்கின்றபோது அது எத்தகைய மண்ணால் அமைக்கப்பட வேண்டும் என்பதனையும், அதன் சுவைக்கேற்ப அதில் பங்குகொள்வோர்பால் உணர்வுகள் மாறும் என்பதையும் பிறிதொரு வெண்பா கூறுகிறது. நாடக அரங்கில் எழினி (திரை) அமைக்கும் முறை பற்றி மற்றொரு வெண்பா கூறுகின்றது. நாடகத் தமிழின் நுணுக்கம் கூறும் இந்த அரிய நூல் அழிந்துபட்டது தமிழுக்குப் பேரிழப்பாகும்.

பரதசேனாபதியம் என்ற இப்பெயரில், டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலைய வெளியீடாக ஒரு நூல் 1944ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அதனை ஆராய்ந்த அறிஞர்கள், அது, சிலப்பதிகார உரையில் குறிப்பிடப் பெற்று, மறைந்ததாகக் கருதப்படும் நூல் அன்று என்று காட்டியுள்ளார்கள்.

(அ.மா.ப.)

## பரதநாட்டிய சாஸ்திரம்

கலாதத்துவம் பற்றிய இந்திய நூல்களில் முதன்மையானது நாட்டிய சாஸ்திரம். அதனைப் பரதர் என்பவர் எழுதினார் என்பது ஐதிகம். அது நாடகம், நாட்டியம், நடனம், கவிதை, இசை என்பன பற்றிய இலக்கண நூலாகும். அதனை மூலமாகக் கொண்டு ஒரு இலக்கிய மரபு வளர்ச்சி பெற்றது. அதற்கு இணையான நூலொன்று வேறெந்த மொழியிலும் தோன்றவில்லை.

நாட்டிய சாஸ்திரத்தைப் பரதர் எழுதினார் என்று சொல்லப்படுகின்ற பொழுதிலும் அது ஒரு தொகுப்பு நூல் என்ற கருத்து அறிஞர் சிலரால் முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் காலம் பற்றியும் ஒருமிதமான கருத்தில்லை. எனினும் அது கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டது என்பதில் அறிஞரிடையே கருத்து வேறுபாடில்லை. நாடகம், நடனம் என்பன பெருவளர்ச்சி அடைந்த ஒரு காலத்திலும் அவற்றைப் பற்றிய கலாரசனை மேலோங்கிய ஒரு காலத்திலும் நாட்டிய சாஸ்திரம் உருவாக்கம் பெற்றது என்பதில் ஐயமில்லை. எனவே கி.பி. முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் அது உருவாக்கப்பட்டது என்று கொள்வது சாலவும் பொருத்தமானது.

நாட்டிய சாஸ்த்திரத்திலே கையாளப்படும் பிராகிருத மொழி வழக்கும் இக்கருத்தினை வலியுறுத்துவதாகும். அதிலே ஒப்புக் கொள்ளப்படும் பிராகிருதம் அஸ்வகோஷருக்குப் பிற்பட்டது, காளிதாசர் முதலியோருக்கு முற்பட்டது. அது அர்த்தமாகதியினைப் பொதுவழக்காக ஒப்புக்கொள்கின்றது. ஆனால் மஹாராஷ்டிரிப் பிராகிருதம் பற்றிய குறிப்பெதுவுங் காணப்படவில்லை. காளிதாசர் முதலிய பிரபலமான



நாடகாசிரியர்கள் அதனையே பொதுவாகப் பயன்படுத்துகின்றனர். நாட்டிய சாஸ்திரம் குப்தர் காலத்துக்கு முற்பட்டது என்பதை ஓர் உறுதியான முடிவாகக் கொள்ளலாம்.

பாரத தேசத்துப் புராதன கலைக் கோட்பாடுகளின் களஞ்சியமான நாட்டிய சாஸ்திரம் 37 அத்தியாயங்களைக் கொண்டது. முதல் 27 அத்தியாயங்களில் நாடகம், நடனம் என்பன பற்றிய விளக்கங்கள் உள்ளன. அவற்றைத் தொடர்ந்து வரும் 28 முதல் 33 வரையுள்ள அத்தியாயங்கள் இசை பற்றியவை. 34 முதல் 36 வரையான அத்தியாயங்கள் நடனம், நாடகம் என்பன பற்றியவை. நூலில் ஏறக்குறைய 6000 சுலோகங்களும் இடையிடையே அரிதாக வசனப் பகுதிகளும் அடங்கியுள்ளன.

நாடகம், நடனம் என்பன பற்றிய பகுதிகளில் நாட்டிய உற்பத்தி, ரங்கதேவதா பூசை, 108 தாண்டவ கரணங்கள், பூர்வரங்கம், பிரசங்கள், பாவங்கள், உபாங்க விதிகள், ஹஸ்தாபிநயங்கள், ஸ்ராபிநயங்கள், ஸாரீ மண்டலம், கதீ, பிராந்திய நாட்டிய மரபுகள், வாசிகாபிநயம், யாப்புகள், நாடக மொழிகள், நாடகப் பேச்சுவகை, நாடக வகைகள், நாடக சந்திகள், நால்வகை விருத்திகள், ஆஹார்யாபிநயம், பாத்திரங்களை வகைப்படுத்தல் முதலிய அம்சங்கள் விளக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை பற்றிய பகுதிகளில் இசை தொடர்பான பொதுக்கோட்பாடுகள், நரம்பு வாத்தியங்கள், ஸ்வரங்கள், ஜதிகள், வாத்தியம், துணைக்கருவிகள், தாளம் முதலியன பற்றிக் கூறப்படுகின்றது. சங்கீதம், நால்வகை வாத்திய இசை முதலியன பற்றியும் விளக்கப்படுகின்றது. நாடகம், நடனம் என்பவற்றின் அம்சங்களை விளக்கும் நூல்களில் நாட்டிய சாஸ்திரமே மிகவும் புராதனமானது. பாரத தேசத்து அரங்கேற்று கலை பற்றிய முதலாவது நூலும் அதுவேயாகும்.

பரதநாட்டிய சாஸ்திரம் பாரத தேசம் முழுவதற்கும் உரிய பொது நூலாகும். நூலாசிரியரின் காலத்திலும் அதற்கு முன்பும் பரதகண்டம் முழுவதிலும் நிலவிய அரங்கேற்றுக் கலைகளைப் பற்றிய விவரங்களையும் கோட்பாடுகளையும் சிந்தனைகளையும் அந்நூல் பிரதிபலிக்கின்றது. ஆசிரியரின் பொது நோக்கமும் மேதாவிலாசமும் புலமையும் கலைஞானமும் உன்னதமானவை. இந்தியக் கலைகளின் பொதுப் பண்புகளை அவற்றின் பிராந்திய வெளிப்பாடுகளின் அடிப்படையில் ஒப்பியல் நோக்கிலே விளக்கும் நூல் என்ற வகையில் அது இந்தியப் பண்பாட்டு வரலாற்றில் ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளது.

இரசக்கோட்பாடு இந்தியப் பண்பாட்டு மரபிற்குத் தனியானது. அது காவியம், நாடகம், நாட்டியம், நடனம், ஓவியம், சிற்பம் முதலிய எல்லாக் கலைகளுக்கும் பொதுவானது. இலக்கியங்களும் கலைகளும் நயந்து சுவைத்தற்குரியவை என்பது புராதன காலம் முதலாக நிலவிய சிந்தனையாகும். சுவைநயத்தால் இன்ப உணர்ச்சி மேலோங்குகின்றது. அந்த உணர்ச்சி பேரின்ப உணர்வாகிய பிரம்மானந்தத்திற்கு நிகரானது. அது தற்காலிகமானது எனினும் மனத்தை ஒருமுகப்படுத்தி உள்ளத்தைப் பண்படுத்துகின்றது. கலைகளின் பண்பும் பயனும் அதுவேயாகும்.

**எண்வகை ரஸங்கள்:** இலக்கியங்களையும் கலைகளையும் ரசிப்பதற்கு ரஸபாவங்களைப் பற்றிய தெளிவான அறிவு அத்தியாவசியமானது. ரஸபாவங்கள் சுவைநயம் சம்பந்தமானவை. ரஸானுபவம் என்னும் ரஸஸ்வாதம் - ரஸத்தைச் சுவைத்தல் - கலைகள் எல்லாவற்றினதும் இறுதிப் பயன் என்று கொள்ளப்படும்.

பாவங்கள் விபாவம், அனுபாவம், சாத்விக பாவம், வியபிசாரி பாவம் என நான்கு வகைப்படும். பாவங்களின் வெளிப்பாட்டினால் ரஸம் உண்டாகும். சிருங்காரம், ஹாஸ்யம், கருணை, ரௌத்திரம், வீரம், ப₂யானகம், பீ₂பத்ஸ்ம், அற்புதம் என்னும் எண்வகை ரஸங்களை நாட்டிய சாஸ்திரம் விளக்குகின்றது. அவற்றுக்கு முறையே ரதி, பாசம், சோகம், குரோதம், உற்சாகம், பயம், ஜீகுப்ஸா (வெறுப்பு) விஸ்மயம் (அதிசயம்) ஆகிய ஸ்தாயி பாவங்கள் உள்ளன.

பரதர் எண்வகை ரசங்களைப் பற்றிச் சொல்லுகின்ற பொழுதிலும் நவரசங்களைப் பற்றிய பேச்சு பிற்காலத்தில் வழமையாகி விட்டது. அவருக்கு பிந்திய காலத்து



இலக்கியவாதிகள் சாந்த ரஸம் என்பதை ஒன்பதாவது ரஸமாகக் கொண்டனர். அதற்குச் சம என்னும் ஸ்தாயிபாவம் உண்டு. சாந்தம் நிலவும் சமயத்தில் ஏனைய ரஸங்கள் தோன்றுவதில்லை என்பதால் முற்காலத்தில் அதனை ஒரு வகை ரஸமாகக் கொள்ளாது விட்டனர். காலப்போக்கிலே பக்தி ரஸம் பற்றிய பேச்சும் தோன்றிவிட்டது.

**பாவம்:** பாவம் என்பது ஒரு பொருளைக் காணுமிடத்து அதன் மேல் உண்டாகும் உணர்வாகும். அதனால் ஏற்படும் ஸ்தாயி பாவத்தினைத் தூண்டுவது விபாவம். அது ஆலம்பனம், உத்தீபனம் என இரு வகைப்படும். நாயகன் அல்லது நாயகி தொடர்பாக ஏற்படும் ரஸத்திற்கு ஆதாரமாயிருப்பது ஆலம்பனம். ரஸம் ஏற்படுவதைத் தூண்டுவது உத்தீபனம். உதாரணமாகச் சிருங்கார ரஸத்தைப் பொறுத்தவரையில் நிலவு, வசந்த காலக் காட்சிகள் என்பன உத்தீபனமாகின்றன. உள்ளத்து உணர்வுகளைக் கண், முகம் முதலானவற்றால் வெளிப்படுத்துவது அனுபாவமாகும். சாத்விக பாவங்கள் அனுபாவத்தின் ஒரு பிரிவினைச் சேர்ந்தனவாகும். ஸ்தம்ப - அசைவற்ற நிலை, பிரலய - மயங்குதல், கோமஞ்ச - மயிர் சிலிர்த்தல், சுவேத - வியர்வை, வைவர்ஷிக - நிறம் மாறுதல், வேபது - நடுக்கம், அஸ்ரூ - கண்ணீர், ஸ்வரபங்கம் - குரல் மாற்றம் என்னும் எட்டும் சாத்விக பாவங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வியபிஸாரி பாவங்கள்:** ரஸபேதங்களுக்கு உட்படுவதில்லை. அவை அவற்றுக்குப் பொதுவானவை. அவை கடலலைகள் போலத் தோன்றி மறைவன. அவை பிரதான ரஸத்தை முனைப்புப் பெறச் செய்யும் ஆற்றல் கொண்டவை. சிருங்கார ரஸம் ரஸங்களில் மிகச் சிறப்பானது. அதில் நாயகன் - நாயகி பாவம் சிறப்பிடம் பெறுகின்றது. இந்திய சிந்தனை மரபில் உலகியலுக்கும் ஆன்மீகத்திற்கும் பந்தமாக அமைவது நாயகன்-நாயகி பாவம். அதன் அடிப்படையில் இரண்டிற்கும் பொதுவான பிரதானமான விடயங்கள் விளக்கப்படுகின்றன என்பது குறிப்பிடற்குரியது. அது காதலால் ஏற்படும் பந்தத்தையும் இறைவன் மீது உயிர்கள் கொண்ட அளவிலாக் காதலின் பயனாகிய சங்கமத்தையும் விளக்குவதற்குப் பயன்படுகின்றது.

தொல்காப்பியனாரும் ரஸக் கோட்பாட்டினைப் பற்றி அறிந்திருந்தார். அவர் ரஸங்களை நகை அழுகை இளிவரல், மருக்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை எனக் குறிப்பிடுகின்றார்.

**வழிநூல்கள்:** பரதரின் பெயரால் வழங்கும் நாட்டிய சாஸ்திரம் இன்றுவரை நிலைபெறும் மரபுவழியான, இந்திய அரங்கேற்று கலைகளுக்கெல்லாம் மூலமான பொதுநூலாகக் கொள்ளப்படுகின்றது. நாடகம், நாட்டியம், நடனம் என்பவற்றைப் பொறுத்தவரையிலே சமஸ்கிருதத்திலும் வேறு இந்திய மொழிகளிலும் எழுதப்பட்ட நூல்கள் பலவும் பரதரின் நாட்டிய சாஸ்திரத்தை ஆதார நூலாகக் கொள்வதோடு அதிலுள்ள கருத்துகளையும் விவரங்களையும் குறிப்பிடத்தக்க அளவிலே கையாளுகின்றன.



நாட்டிய சாஸ்திரத்தைப் பின்பற்றி எழுந்த நூல்களிற் சில நாட்டியம் பற்றிய பொதுவான எல்லா அம்சங்களையும் விளக்கும் நூல்களாகும். வேறு சில நூல்கள் நாட்டியத்தின் சில பிரதான அம்சங்களான அபிநயம் போன்றன பற்றியவை. நந்திகேஸ்வரர் எழுதிய அபிநயதர்ப்பணம் அத்தகைய நூலாகும். நாட்டியக்கலை போதிக்கும் ஆசிரியருக்கும் அதனைப் பயிலும் மாணவருக்கும் எழுதப்பட்டது அந்நூல். மத்திய காலத்திலே மதங்கர் எழுதிய பிருகத்தேசீ மிகவும் பிரசித்தமானது. அதில் தேசி என்ற வகைக்குரிய கூத்துகள் பலவும் விவரமாக வர்ணிக்கப்படுகின்றன. இசை, இசைக் கருவிகள் என்பனவும் அதில் வர்ணிக்கப்படு கின்றன. மதங்கர் எழுதிய நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. தனஞ்ஜயர் எழுதிய தசரூபகம் நாடக இலக்கணங்களை விளக்கும் நூலாகும்.

நந்திகேஸ்வரர் எழுதிய அபிநய தர்ப்பணம் பரதார்ணவம் என்னும் நூல்கள் பரதக்கலை வரலாற்றிலே சிறப்பிடம் பெறுகின்றன. அபிநயதர்ப்பணம் நடன ஆசிரியர்களாலும் நடனம் பயிலுவோராலும் நெடுங்காலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நடனக் கலையின் பிரதானமான அம்சமான அபிநயம் பற்றி அது தெளிவாகவும் விரிவாகவும் விளக்குவதால் நடனங்களிலும் நாட்டியக்கலையிலும் ஈடுபாடு கொண்டவர்கள் அதனை விரும்பிக் கற்றனர். அதிலுள்ள, சிவபெருமானைப் பற்றிய தியான சுலோகம் நடன நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் இன்றும் ஓதப்படுகின்றது.

**அபிநய தர்ப்பணம்:** 324 சுலோகங்களைக் கொண்டுள்ளது. அது அளவிலே சிறிய நூல் என்பதனால் அதனை ஈடுபாடு கொண்டவர்கள் சிரமமின்றிப் படிக்க முடிந்தது. அதில் நாட்டியங்களும் அவற்றுக்குச் சிறப்பான அபிநயங்களும் விளக்கப்படுகின்றன. முகாபிநயங்களும் ஹஸ்தாபிநயங்களும் பாதசாரிகளும் பேதங்களும் அதில் விவரமாக வர்ணிக்க ப்பட்டுள்ளன. ஒன்பது வகையான சிரோபேதங்களையும் எட்டு வகையான சிருஷ்டி பேதங்களையும் நான்கு விதமான கிரீவோ பேதங்களையும் அவற்றின் விநியோகங்களையும் அபிநயதர்ப்பணம் விளக்குகின்றது.

ஹஸ்தாபிநயம் பலவகைப்படும். 28 அசம்யுத ஹஸ்தங்கள், 23 சம்யுத ஹஸ்தங்கள், 14 தேவஹஸ்தங்கள், தசாவதார ஹஸ்தங்கள், 4 ஜாதி ஹஸ்தங்கள், 11 பாந்தவ ஹஸ்தங்கள், நவக்கிரக ஹஸ்தங்கள், 13 நிருத்த ஹஸ்தங்கள் ஆகியவற்றை நந்திகேஸ்வரர் விளக்குகின்றார். அவற்றைத் தொடர்ந்து பாதபேதங்கள் விளக்கப்படுகின்றன.

பத்து (10) மண்டலங்களும் ஆறு (6) ஸ்தானங்களும் ஐந்து (5) உத்பிளவனம் என்பனவும் ஏழு (7) பிரமரிகளும் எட்டுச் (8) சாரிகளும் பத்து (10) கதிகளும் அபிநய தர்ப்பணத்தில் விளக்கப்படுகின்றன. நடனக்கலை சாஸ்திரப் பிரமாணங்கள், தேசவழக்கு, நல்லாசிரியர்க்கு உடன்பாடான செயல்முறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்திகேஸ்வரரின் கோட்பாடாகும். முற்கால நூல்கள் பற்றியும் குறிப்பாகப் பரத நாட்டிய சாஸ்திரம் பற்றியும் அபிநய தர்ப்பணத்திற் குறிப்புகள் காணப்படுகின்றன. அது பத்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது எனக் கொள்ளப்படுகின்றது. நூல் எழுதப்பட்ட காலம் பரதக்கலை ஒரு சாஸ்திரீயமான கலையாகப் பெருவளர்ச்சி அடைந்திருந்த காலம். அது நாகரிகத்தின் அடையாளங்களிற் பரதக்கலை முதன்மையானது என்று கருதப்பட்ட காலம். அந்தக் காலமளவிற் கவிவாணரும் இலக்கிய கர்த்தாக்களும் பிறரும் தத்தம் நூல்களில் நடனக் கோலங்களையும் நர்த்தகரின் அபிநயங்களையும் அபிமான உணர்வுடன் வர்ணிப்பது வழக்கமாகிவிட்டது. இந்திய நடனக் கலையின் பிரதான அம்சங்களையும் சிறப்புகளையும் அறிந்து கொள்வதற்கு அந்நூலைப் பற்றிய அறிவு அவசியம் என்பதாற் சென்ற நூற்றாண்டில் ஆநந்த குமாரஸ்வாமி அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விளக்கக் குறிப்புகளோடு வெளியிட்டார்.

தலைசிறந்த இலக்கியவாதிகளையும் கவிவாணரையும் சைவதரிசனங்களின் ஆற்றல் மிகுந்த போதனாசிரியர்களையும் கலாவிமர்சகர்களையும் படைத்த காஷ்மீர தேசத்தில் நடனக்கலை பற்றிய அறிவுணர்ச்சி சிறப்புற்று விளங்கியது. அங்கே, அக்கலை பற்றிய பல சிறந்த நூல்களும் உரைநூல்களும் வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்டன. புராதன காலத்தவரான மாத்ருகுப்தர் நாட்டியக் கலை பற்றிய நூலொன்றை எழுதினார். ஸ்ரீ ஹர்ஷர் அதற்கு எழுதிய உரைநூல் வார்த்திகம் என்னும் பெயரால் விளங்கியது.

பரத நாட்டிய சாஸ்திரத்திற்குக் காஷ்மீர தேசத்தவர் பலர் உரை எழுதியுள்ளனர். உத்படர், லொல்லடர், சங்குநர் என்போர் அவர்களிற் சிலர். பதினோராம் நூற்றாண்டிலே பரதகண்டத்தில் வித்யா ஜோதியாக விளங்கிய ஆற்றல் மிக்கவரான அபிநவகுப்தர் எழுதிய அபிநவபாரதீ நாட்டிய சாஸ்திரத்திற்கு எழுதிய உரை நூல்களில் முதன்மையானது. நடனக் கலை வரலாற்றிலே காலக்கிரமத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகளையும் மாற்றங்களையும் சிந்தனைகளையும் சமகால மரபுகளையும் அபிநவகுப்தர் போன்றோர் எழுதிய உரைநூல்கள் பிரதிபலிப்பதால் அவை மூல நூல்களைப் போன்ற சிறப்புடையனவாகவும் ஆதார நூல்களாகவும் கொள்ளப்படும்.

அபிநவகுப்தரின் காலத்திற்குப் பின்பு எழுதப்பட்ட நூல்கள் பல இசை, நடனம் ஆகிய இரண்டினைப் பற்றியும் விளக்குகின்றன. மாளவ தேசத்து அரசனாகிய போஜனும் கல்யாணிச் சாளுக்கிய வேந்தனாகிய சோமேஸ்வரனும் வேறு ஆசிரியர் பலரும் இசை, நடனம், நாட்டியம் என்பன பற்றிய நூல்கள் பலவற்றை எழுதியுள்ளனர். சாரங்கதேவர் எழுதிய சங்கீதரத்நாகரம் சங்கீதம் பற்றிய பெருங் களஞ்சியமாகும். அவர் மகாராஷ்டிரத்திற் பிறந்து வாழ்ந்தவர். யாதவகுல அரசரின் ஆட்சியில் உயர்பதவி பெற்றிருந்தவர். கீதம், வாத்தியம், நிருத்தியம் என்னும் மூன்றுங் கூடியதே சங்கீதம் என்பது சாரங்கதேவரின் நிலைப்பாடாகும்.

பூர்வகாலத்து முறைகளையும் சமகாலத்து நிலைகளையும் சித்திரிக்கும் சால்புடையது சங்கீதரத்நாகரம். சாரங்கதேவர் மார்க்கம், தேசீ என்னும் இருவகை இசை மரபுகளையும் தன்னால் இயன்ற வரையில் விவரமாக வர்ணித்துள்ளார். தமிழகத்துப் பண்ணிசை பற்றியும் சங்கீதரத்நாகரம் குறிப்பிடுகின்றது. அதில் ஏழு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. அவற்றுள் ஆறாவதன் முடிவு வரையான பகுதிகள் கீதம், வாத்தியம் என்பன பற்றியனவாகும். அவை ஸ்வரம், ராகம், பிரகீர்ணம், பிரபந்தம், தாளம், வாத்தியம் என்னும் வகைகளாக விளக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றிய பகுதிகள் ஏறக்குறைய 3000 செய்யுள்களைக் கொண்டவை. இறுதிப் பகுதியான ஏழாம் பகுதி நடனம் பற்றியதாகும். அது ஏறக்குறைய 1700 செய்யுள்களைக் கொண்டது. அது பரதநாட்டிய சாஸ்திரத்தை ஆதாரமாகக் கொண்டது. அங்கம், பிரதியங்கம், உபாங்கம், கரணம் சாரி, ஹஸ்தம், ஸ்தானம், மண்டலம், அலங்காரம் முதலிய பல விடயங்கள் அதில் விளக்கப்படுகின்றன.

நடனக் கலை பற்றிய நூல்களில் நிருத்தரத்நாவளி என்பதும் ஒன்று. அதன் ஆசிரியரான ஐயப்பா தெலுங்கு தேசத்தவர், 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் காகதீய வம்சத்து அரசனாகிய கணபதியின் சேனாதிபதியாகப் பதவி பெற்றிருந்தவர். நிருத்தரத்நாவளியின் முதல் நான்கு அத்தியாயங்களும் மார்க்கம் என்னும் வகையிலுள்ள நடனங்களைப் பற்றியவை. ஏனையவை தேசீ நடனங்களைப் பற்றியவை. பிற நூல்கள் குறிப்பிடாத தேசீ நடனங்கள் பலவற்றை இந்நூல் அறிமுகஞ் செய்கின்றது. தஞ்சாவூர் சமஸ்தானத்து மராட்டிய மன்னர் துளஜா எழுதிய சங்கீதரத்நாமிர்தம் என்னும் நூலில் நாட்டியம் பற்றிய அத்தியாயம் ஒன்றுண்டு. தஞ்சாவூரினரான கோவிந்தாச்சாரியின் நாட்டிய சாஸ்திர சங்கிரகம் பழைய நூல்களை ஆதாரமாகக் கொண்டு எழுதிய தொகுப்பு நூலாகும்.

நடனம் பற்றிய புராதனமான தமிழ் நூல்களைப் பற்றிய குறிப்புகள் இலக்கியங்களில் வருகின்றன. தமிழர் ஆதிகாலம் முதலாக நடனக் கலையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். மிகவும் பழைய நூல்கள் நடனத்தைக் கூத்து என்று குறிப்பிடுகின்றன. நடனம் பயின்று அரங்குகளிலும் பொது மன்றங்களிலும் ஆடியவர்களைக் கூத்தர் என்றும் விறலியர் என்றும் குறிப்பிட்டனர். நடனம் பயிலுவோருக்குரிய தாளக்கிரம வரிசை பண்டைக் காலத்துச் சாசனமொன்றிலே அமைக்கப்பட்டுள்ளது. நாட்டியக் கலை பற்றிப் பரதகண்டம் முழுவதிலுங் காணப்படும் சாசனக் குறிப்புகளில் அதுவே மிகப் பழைமையானது.

தக்ஷிணாத்ய மரபிலுள்ள நடனங்களில் இடம்பெறும் தாள வகைகளும் அபிநயங்களும் வஸ்திராலங்காரங்களும் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ச்சியானவை என்று நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடுகின்றது. அப்பெருநூல் எழுதப்பெற்ற காலத்திலே திராவிட மொழிகள் வழங்கிய தேசங்களில் வழங்கிய நடன, நாட்டிய வகைகள் பரதகண்டம் முழுவதிலும் பிரசித்தமாய் இருந்தன என்பது இதனால் உணரப்படும்.

பொது வழக்கான கூத்தும் சாஸ்திரீயமான நடனங்களும் பண்டைக்காலம் முதலாகத் தமிழகத்தில் நிலவி வந்துள்ளன. அத்துடன் அவற்றிடையே பரஸ்பரத் தொடர்புகளும் செல்வாக்கும் ஏற்பட்டுள்ளன. தக்ஷிணாபதத்திற் போலத் தமிழகத்திலும் நடனங்களைப் பொறுத்த வரையில் மார்க்கம், தேசீ என்ற வேறுபாடு நெடுங்காலமாக நிலவிவந்துள்ளது. அந்த இருவகை நடனங்களிலுங் கணிகையர் திறமை பெற்றிருந்தமையினைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. பாண்டுரங்கம், கொடுகொட்டி போன்ற பலவகையான நடனங்களை அந்நூல் அறிமுகஞ் செய்கின்றது. பரத நாட்டிய சாஸ்திரத்தின் செல்வாக்கைச் சிலப்பதிகாரம் பிரதிபலிக்கின்றது.

மாதவி காவிரிப்பூம்பட்டினத்து அரங்கில் ஆடியதாகச் சொல்லப்படும் நடனங்கள் சில சாஸ்திரீயமானவை. அவள் நாட்டிய நன்னூல் கடைப்பிடித்து அற்புதக் கோலமாக ஆடிய சிறப்பினை இளங்கோவடிகள் நயம்பட வர்ணிக்கின்றார்.

சிலப்பதிகார உரைகாரரான அரும்பத உரையின் ஆசிரியரும் அடியார்க்கு நல்லாரும் நடனக்கலை பற்றிய பல விவரங்களைக் குறிப்பிட்டுள்ளனர். பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், இசை நுணுக்கம், இந்திர காளியம், பஞ்சமரபு, பரத சோனாபதியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், கூத்துநூல் ஆகியன பற்றி அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார் இவற்றுட் சில அவரது காலத்திலேயே வழக்கொழிந்து விட்டன. தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர் அகத்தியம், செயிற்றியம் ஆகியவற்றிலுள்ள செய்யுள்கள் சிலவற்றை மேற்கோள்களாகக் காட்டியுள்ளார். யாப்பருங்கல விருத்தி ஆசிரியரான குணசேகர முனிவரும் தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியரும் சயந்தம், செயிற்றியம் என்பவற்றின் செய்யுள்கள் சிலவற்றைக் கையாண்டுள்ளனர்.

அடியார்க்கு நல்லாரும் உரையாசிரியர் பிறரும் குறிப்பிடும் நாட்டியம் தொடர்பான நூல்களிற் சேந்தனார் இயற்றிய கூத்தநூல், பரத சேனாபதியம், பஞ்ச மரபு ஆகியவற்றின் பகுதிகளே அச்சிற் பதிவாகி வெளிவந்துள்ளன. கூத்தநூலின் கவடிகளிற் சிதைவுகள் ஏற்பட்டுள்ளதால் அதன் சில பகுதிகளை மட்டுமே வாசித்து அவற்றைப் பதிப்பிக்க முடிந்தது. முதலாம் பதிப்பு 1968 இல் வெளிவந்தது. கூத்த நூலின் எட்டு அத்தியாயங்களில் முதலாவது அத்தியாயம் இசை, நாடகம், நாட்டியம் என்பவற்றின் உற்பத்திகளைப் பௌராணிகமான பாங்கில் விளக்குவதோடு, ஒலிகளின் உற்பத்தி, ஸ்தானம், உணர்ச்சி ஆகியவற்றின் அம்சங்களையும் விளக்குகின்றது. இரண்டாவது அத்தியாயம் நாட்டிய வடிவங்களைப் பற்றியது. அதில் 108 கரணங்கள் முதலான நடனங்கள் பற்றிய விவரங்கள் அடங்கியுள்ளன. வரி என்னும் வகைக்குரிய கிராமியக் கூத்துகள் மூன்றாம் அத்தியாயத்தில் விளக்கப்படுகின்றன.

கலைநூல் என்ற நான்காவது அத்தியாயத்தில் ஆங்கிக அபிநயங்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட செய்யுள்களில் விவரிக்கப்படுகின்றன. ஐந்தாவது பிரிவான கரண நூலில் 120 கரணங்கள், முத்திரைகள், ஸ்தானங்கள், சாரிகள், ஹாஸ்யங்கள் என்பன பற்றிய விவரங்கள் அடங்கியுள்ளன. ஆறாவது பகுதியான தாளசமுத்திரம் தாளங்களைப் பற்றியது. ஏழாம் பகுதியான இசைநூல் 30 பண்களின் ஆரோக அவரோகணங்களை வர்ணிக்கின்றது. எட்டாம் பகுதியான சுவைநூல் அரங்கம் பற்றிய விவரங்களைக் கொண்டது. இறுதியான ஒன்பதாம் பகுதியில் நாட்டியம் பற்றிய பொதுப் பண்புகளும் கோட்பாடுகளும் விளக்கப்படுகின்றன. சாத்தனாரின் கூத்த நூல் சில அம்சங்களில் மதங்கரின் பிருகத்தேசிக்கு ஒப்பானது. தமிழகத்தில் நெடுங்காலமாக வழங்கிய நாட்டியம் பற்றிய இலக்கிய மரபினையும் அரங்கேற்றப்பட்ட நாட்டிய வகைகளையும் நாட்டியம் தொடர்பான இசைமரபினையும் அறிந்து கொள்வதற்கு ஏதுவான கருவூலமாக அது விளங்குகின்றது. நுண்கலை அறிவுணர்ச்சியும் சமய பண்பாட்டு வரலாறுகள் பற்றிய தெளிந்த ஞானமும் கொண்டவர்களாற் கூத்தநூல் விரிவாகவும் ஆழமாகவும் ஆராயப்பட வேண்டியது.

ஆதிவாயிலார் எழுதியதாகக் கொள்ளப்படும் பரதசேனாபதியம் 66 செய்யுள்களை மட்டுங் கொண்டுள்ள சிறு நூலாகும். பெருமளவில் மறைந்துவிட்ட, மிகவும் விரிவான நூலொன்றின் ஒரு சிறு பகுதியே பரதசேனாபதியம் என்று அறிஞர் கருதுவர். அடியார்க்கு நல்லாரும் நச்சினார்க்கினியரும் மேற்கோளாகக் காட்டும் பரதசேனாபதியச் செய்யுள்களில் எதுவும் இன்று அப்பெயரால் வழங்கும் நூலிற் காணப்படவில்லை. சிவபெருமானின் பஞ்சகிருத்தியங்கள், ஆனந்த தாண்டவம், பன்னிரு வகைத் தாண்டவங்கள், லயம், லாஸ்யம், அபிநயம், இராகதாள பாவங்கள், ஆசிரியர் லக்ஷணம், மூலாதாரமான நூல்கள் முதலிய விடயங்கள் அதில் விளக்கப்படுகின்றன.

நாட்டியக்கலை பற்றிய, மறைந்துபோன நூல்களான கீதப்பிரபந்தம், கௌரீகடகம், மகாபரத சூடாமணி போன்றவற்றைப் பற்றியும் பரதசேனாபதியம் குறிப்பிடுகின்றது. அதன் மொழிநடை தெளிவானது. இலகுவிற் புரிந்து கொள்ளக் கூடியது. பாவம், அபிநயம் என்பவற்றை விளக்கும் மேல்வரும் செய்யுள் இதற்குத் தக்கவோர் உதாரணமாகும்.

*"பாவப் பகுதி பகருங்காலை*

*அகத்தின் நினைத்ததுவாய் இதனை*

*முகத்தாற் கரத்தால் அசைத்து முதற்காட்ட அஃது*

*அபிநயமென்று இங்கு அறைப்படுமே."* (சி.ப.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதம்

பரதம் என்ற சொல் பல பொருட்படுமாயினும், பொதுவாக இந்திய நாடகம், நடனம் முதலியன வற்றையும், சிறப்பாகத் தமிழகச் சாஸ்திரீய நடனத்தையும் குறிக்கும். பரத எனும் சொல் சிறப்புப் பெயராக நாட்டிய சாஸ்திர ஆசிரியர், துஷ்யந்தன் (சகுந்தலை யின் மகனாகப் புராதன இந்தியாவை ஒரு குடைக்கீழ் ஆண்டு தன் பெயராலே இந்நாடு பாரதம் என அழைக்கப்படுதற்குக் காரணமாய் இருந்தவன்) முதலியோரைக் குறிக்கும். பொதுப் பெயராக இது நடிகன், ஆடுபவன், நாடகக்குழு, நாடகத்தைத் தொழிலாகக் கொண்டவன், ஒரு குறிப்பிட்ட ஜனக்குழு, புரோஹிதர், அக்கினி, ருத்திரன் (சிவன்), மிலேச்சன், வணிகன் முதலியோரைக் குறிக்கும். பல பாத்திரங்களாக நடித்தும், இசை வாத்தியங்களை இசைத்தும் (நாடகத்திற்கான) பலவற்றை ஏற்படுத்தி நாடகத்தின் தலைவனாக நின்று நடத்துபவனைப் பரத(ன்) என நாட்டிய சாஸ்திரம் கூறும் (35.8). நாட்டியம் என்ற சொல்லிற்கு இன்று பலர் நடனம் எனப்பொருள் கொள்வர். ஆனால் இச்சொல் நெடுங்காலமாக நாடகத்தினையும் கருதிற்று. இங்கு நாடகத்தினை ஆங்கிலத்தில் டிராமா எனுங் கருத்திற் கொள்ளுதல் தவறாகும். ஏனெனில் இந்திய நாடகத்தின் இயல்புகளும் நோக்கங்களும் ஆங்கில நாடகத்திலிருந்து வேறுபட்டவை. இந்திய நாடகத்திலே நடிப்பு, பேச்சு முதலியன மட்டுமன்றி இசை (வாய்ப்பாட்டிசை, வாத்திய இசை), நடனம் முதலியனவும் இடம்பெற்றுவந்தன. நாடகம் ஆடப்பட்டும் வந்தது. நாட்டியம் பற்றி இன்று கிடைத்துள்ள காலத்தால் முந்திய நூல் பரதரின் நாட்டிய சாஸ்திரமாகும். இந்நூலினை நன்கு ஆய்வு செய்த ஆய்வாளர் பலர் இது நாடகம், நடனம் கற்போர், தயாரிப்பவர், பயன்படுத்தற்கான கைந்நூலாகத் தொகுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுகின்றனர். எனினும் தமிழகத்தின் சாஸ்திரீய நடனமாகிய பரதநாட்டியம் நாட்டிய சாஸ்திரத்தினை நன்கு பின்பற்றுவதால் இப்பெயரால் அழைக்கப்படுகிறதெனக் கூறப்படுகின்றது. பாவம், ராகம், தாளம் ஆகியவற்றை உள்ளடக்கியிருப்பதால் இது பரதமென அழைக்கப்படுகிறது என ஒரு சாரார் கருதுவர்.

பன்னிரண்டு தாண்டவங்களிலே கௌரீ தாண்டவத்தில் பாவத்திலிருந்து பகரமும், சந்தியா தாண்டவத்தில் ராகத்திலிருந்து ரகரமும், ஆனந்த தாண்டவத்தில் தாளத்தில் இருந்து தகரமும், சேர்ந்து பரதம் என்ற பெயர் உண்டாயிற்று எனப் பரத சேனாபதீயம் எனும் நூலின் உரை கூறும். ஆனால் இந் நூலினதோ உரையினதோ காலம்பற்றித் தெளிவாகக் கூற முடியாதுள்ளது. மேலும் இதே நூலிலே பாவ, ராக, தாளங்கள் திரிமூர்த்தியின் (பிரமா, விஷ்ணு, ருத்திரன் ஆகியோரின்) சொரூபம் எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் பகாரம் பாவமாகும், ரகாரம் ராகமாகும், தகாரம் தாளமாகும், மகாரம் சுருதியாகும். இவை நான்கும் கூடியது பரதமாகும். என மகாபரத சூடாமணி கூறும்.

இந்திய நடனங்களிலும், பிற நாட்டு நடனங்களிலும் பாவ, ராக, தாளங்கள் காணப்படுவதால் இவ் விளக்கத்தினை ஒரு சாரார் ஏற்றிலர். அல்லது ஏற்கத்தயங்குகின்றனர். மேலும் ஏனைய இந்திய சாஸ்திரீய நடனங்களுக்கும் நாட்டிய சாஸ்திரமே முதல்நூல் என்பதும் குறிப்பிடற்பாலது. பரத நாட்டியம் பற்றிச் சமீபகாலத்திலே மறைந்த நாட்டிய மேதை ஸ்ரீமதி ருக்மிணிதேவி அம்மையார், தென் இந்தியாவிலுள்ள நடனவடிவங்களில் ஒன்றே பரதநாட்டியம். இதன் மிகத் தூய்மையான பாணி தமிழ் மாவட்டங்களிலே நிலவுகின்றது. உண்மையில் பரதமுனிவர் வகுத்துள்ள சாஸ்திர விதிகளின்படி அமைக்கப்பட்ட நடனம், நாட்டிய - நாடக வடிவங்கள் அனைத்தும் பரத நாட்டியத்தில் அடங்குவன எனக் கூறியுள்ளமை ஈண்டு கவனித்தற்குரியது. தமிழ் நாட்டிற்குரிய சதிர், கேரளத்திற்குரிய கதக்களி, ஆந்திரத்திற்குரிய குச்சுப்புடி, கர்நாடகத்திற்கு (மைசூருக்கு) உரிய யக்ஷகானம், ஒரிசாவுக்குரிய ஒடிசி, வட இந்தியாவின் மேற்கு, மத்திய பகுதிகளுக்குரிய கதக், மணிப்பூரிக்குரிய மணிப்பூரி முதலிய சாஸ்திரீய நடனங்களும், நாட்டிய நாடகங்களும் பரத நாட்டிய சாஸ்திரத்தினையே அடிப்படை நூலாகக் கொள்ளுவன. ஆகவே இவற்றைச் சதிர் பாணியிலான பரதநாட்டியம், யக்ஷகான பாணியிலான பரதநாட்டியம், குச்சுப்புடி பாணியிலான பரதநாட்டியம் கதக் பாணியிலான பரதநாட்டியம், மணிப்பூரிபாணியிலான பரத நாட்டியம் என அழைத்தல் பொருத்தமானதெனக் கலாநிதி பத்மா சுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார். மேலும் த. பாலசரஸ்வதியும், டாக்டர் வே. ராகவனும் பரதர் தம் முதல்நூலிலே தனித்தனியேயுள்ளதும், காதலை விஷயமாகக் கொண்டதுமான பத்துப்பன்னிரண்டு உணர்ச்சிப் பொலிவுகளுள்ள சாஹித்தியத் துணுக்குகளைக் கொண்டு அமைக்கப் பெற்றதும், அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக ஒரே நடிகை ஆடிக் காட்டுவதுமான நாட்டிய வகையொன்றை லாஸ்யம் என்ற பெயரைக் கொடுத்து விரிவாய் இரண்டிடங்களில் வர்ணித்திருக்கிறார். அந்த லாஸ்ய வழியில் வந்ததே இன்று நாம் தென்னாட்டில் காப்பற்றி வருவதும், சிருங்கார பாவங்களைக் கொண்ட உருப்படிகளைப் பெண்மணியொருத்தி நடித்துக் காட்டுவதுமான சதிர், பரத நாட்டியம் என்று சொல்லப்படும் ஆட்டம். இலக்கியமும் சரித்திரமும் தரும் சான்றுகள் மூலம் பார்த்தால், இந்த நடிகை ஆட்டம் நம்நாட்டில் மிகப் பண்டைக் காலங்களிலிருந்தே வந்துகொண்டிருப்பதையும் நாட்டின் ஒவ்வொரு பிராந்தியத்திலும், வாழ்க்கையிலும், வழிபாட்டிலும், மன்னரிடமும், மக்களிடையேயும் இது வழங்கிவந்த தொடர்பையும், பரப்பையும் நாம் நன்குணரலாம் என இந் நடனத்தின் தன்மை, வரலாறு, பற்றிக் கூறியிருப்பவை உற்று நோக்கற்பாலன.

தமிழகச் சாஸ்திரீய நடனம் சதிர் எனச் சில நூற்றாண்டு காளக அழைக்கப்பட்டு வந்தது. சதிர் எனும் பதத்தைவிட சின்ன மேளம், தாசியாட்டம், தேவதாசி நடனம் என வேறு பெயர்களாலும் அழைக்கப்பட்டு வந்தது. சதிர் எனும் சொல் தமிழிலே பெருமை, அதிர்ஷ்டம், அழகு, நிலைமை, எல்லை, நாட்டியம், எனப் பல பொருட்படும். ஓர் அழகு மிக்க கலை (சதிர்-அழகு) என்ற கருத்திலும் இதனைக் கொள்ளுதல் தவறாகாது. அவ்வாறாயின் இதனைத் தமிழ்ச் சொல் எனக் கொள்ளலாம். மேலும்,

*"விதிவழி மறையவர் மிழலையுளீர் நடம்*
*சதிவழி வருவதோர் சதிரே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சதிவழி வருவதோர் சதிருடையீருமை*
*அதிகுணர் புகழ்வதும் அழகே*''

என திருஞானசம்பந்த சுவாமிகளின் தேவாரத்திலே வரும் இச்சொல் நன்கு கவனித்தற்குரியது. இதிலே சதிர் எனும் சொல்லும், நடனத்திலே வரும் ஜதி (இங்கு சதி) யும் வந்துள்ளமை நன்கு ஆராய்தற்குரியன.

ஆனால் சதிர் எனும் சொல்லினைத் தமிழ்ச்சொல் எனப் பலர் கருதிலர். உர்து மொழியிலுள்ளள சதிர் எனும் சொல் நாட்டியம் எனும் பொருளில் வரும். சதிர் எனும் பதம் மராத்தியத் தொடர்பாலே தமிழகத்திற்கு வந்த சொல்லென ஒரு சாரார் கருதுவர். கலாநிதி சுனில் கோத்தாரி மராத்திய மொழியில் சதிர் எனில் அறிமுகஞ் செய்தல், வழங்குதல் எனப் பொருள்படும் என்பர். அதாவது அரசவையில் நாட்டியக் கலைஞரை அறிமுகஞ் செய்தலில் இருந்து இச்சொல் வழக்கிலேற்பட்டிருக்கலாம் என அவர் கருதுகிறார். இப் பாணியிலான நடனம் மராத்தியரின் தலைநகராகிய சதராவில் ஆடப்பட்டதினால் இப்பெயர் பெற்றிருக்கலாம் எனக் கலாநிதி பத்மா சுப்பிரமணியம் கூறியுள்ளார். குச்சுப்புடி, மணிப்புரி நடனங்களைப் போல இதுவும் இடப்பெயரால் அழைக்கப்பட்டிருக்கலாம் என்பர். ஆனால், இது வடக்கேயிருந்து தெற்கே பரவிய கலை என்பதற்குத் தக்க சான்றுகள் இல்லை. மேலுமவர், இச்சொல் சதிர்சிகா அல்ல சதிர்ஸ்ய (போல இருத்தல், காட்சி) போன்ற வடசொற்களிலிருந்து வந்திருக்கலாம் எனவும் கருதுகிறார். ஹிந்தி, உர்து மராத்தி வங்காளி முதலிய வட இந்திய மொழிகளில் இது மிகப் பெரிய நீதிமன்றத்தினைக் குறிக்கும் எனக் கருதப்படுகின்றது. சதுரு எனும் பதம் தெலுங்கு மொழியில் சபை, திருமணம் போன்ற வைபவங்களில் இடம் பெறும் நடனம் முதலியவற்றைக் குறிக்கும். இச்சொல் (தெலுங்கர் ஆகிய) நாயக்கர் ஆட்சிக்காலத்தில் மருவி இவ்வாறு சதிர் என வழக்கிலேற்பட்டிருக்கலாமெனத் திரு. ரி. எஸ். பார்த்தசாரதி கருதுகிறார். சிறந்த தெலுங்குப் பதங்களை இயற்றிய க்ஷேத்திரஜ்ஞர் எனும் கலைஞர் வெதுகதோ எனத் தொடங்கும் பதத்திலே சதுரு எனும் சொல்லினைச் சபை அல்லது திருமலைநாயக்கனின் சபையினைக் குறிப்பதற்குப் பயன்படுத்தியுள்ளார் எனவும் அவர் கருதுகிறார். இச் சொல் எம்மொழியில் இருந்து வந்தாலும், இது தமிழகத்தின் சாஸ்திரீய நடனத்தினைச் சில நூற்றாண்டுகளாகக் குறித்து வந்துள்ளது. இந்நடனம் கோயில்களில் மட்டுமன்றி அரச சபைகளிலும் நன்கு இடம்பெற்று வந்துள்ளமை குறிப்பிடற்பாலது.

இருபதாம் நூற்றாண்டின் முப்பதுகளிலேற்பட்ட பரதக்கலை மறுமலர்ச்சிக்கு வழிகோலிய திரு. இ. கிருஷ்ண ஐயர், ஸ்ரீமதி ருக்மிணிதேவி அருண்டேல் முதலியோரே இதனைப் பரதநாட்டியம் என அழைத்தனர். எனவே, கடந்த சுமார் 70 ஆண்டுகளாகத்தான் தமிழக நடனம் இவ்வாறு பரதநாட்டியம் என அழைக்கப்படுகிறதெனக் கூறப்படுகிறது. ஆனால் கர்நாடக இசையின் பிதாமகரெனப் போற்றப்படும் புரந்தரதாசரின் அதிதனோதரங்க எனத் தொடங்கும் ஆரபி ராகக் கன்னடக் கீர்த்தனையிலே ஊர்வசி, ரம்பா முதலிய அழகிய தேவருலக நர்த்தகிகள் பாலகிருஷ்ணன் காளியன் எனும் பாம்பின் தலை மீது ஆடிய வெற்றியைக் குறித்துப் பரதநாட்டியம் ஆடினர் எனக் கூறப்படுவதாகச் சமகால பிரபல பரதக் கலைஞரான ஸ்ரீமதி சுதாராணி ரகுபதி குறிப்பிட்டுள்ளார். ஆனால் இங்கு இப்பதம் மேற்குறிப்பிட்ட தேவலோக நடனமாதர் ஆடிய நடனங்களைப் பன்மையிலே குறிப்பிடுவதால் தமிழகப் பரதநாட்டியம் இங்கு குறிப்பிடப்பட்டிருக்க முடியாதெனப் பிரபல இசை நடன ஆய்வாளரும், சென்னை சங்கீத வித்வத் சபையின் சஞ்சிகை ஆசிரியருமான தி. ரி. எஸ். பார்த்தசாரதி கருதுகிறார். எவ்வாறாயினும் சுமார் 400 வருடங்களுக்கு முன்பே இப்பெயர் (பரதநாட்டியம்) வழக்கிலிருந்தமை தெளிவு. மேலும் கி. பி. 17ஆம் நூற்றாண்டிலே தமிழகத்திலே வாழ்ந்த குமரகுருபர சுவாமிகள் சகலகலாவல்லி மாலையில் தமக்குப் பண்ணும் பரதமும் தீஞ்சொற் பனுவலும் தருமாறு சரஸ்வதியைப் பரிந்து கேட்கிறார். மேலும் கி.பி. 16ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்த நிரம்பவழகிய தேசிகர் தமது திருப்பரங்கிரிப் புராணம் எனும் நூலிலே பரத நாடகம் ஆடும் ஓர் பொம்மை எனக் குறிப்பிடுகிறார். இங்கு நாடகம் எனும் பதம் நடனம் எனும் பொருளிலே வந்துள்ளது. இவருக்குச் சில நூற்றாண்டுகளின் முன் சோழநாட்டில் ஆட்சி செய்த கோப்பெருஞ் சிங்கன் (கி.பி. 13ஆம் நூற்றாண்டு) சிதம்பரம் கோயிலிலுள்ள கிழக்கு மேற்குக் கோபுரங்களிலுள்ள 108 கரணச் சிற்பங்களையும் அமைப்பித்தான். பரதக்கலையில் மிக்க ஈடுபாடுள்ளவனாக பரதவ (ம) ல்லன், பரதார்ணவகரணதுரீனன் முதலிய விருதுப் பெயர்களைத் தரித்தான்.

மேலும் தமிழிலுள்ள பரதசேனாபதீயம் எனும் நூலின் உரையிலே ஆங்கிகம், வாசிகம், ஆஹார்யம், சாத்விகம் ஆகியவ்றைக் கொண்டதே பரத நாட்டியம் எனக் கூறப்பட்டிருப்பது நன்கு உற்று நோக்கற்பாலது. இந்நூலின் காலமோ, உரையின் காலமோ நன்கு தெளிவில்லை. எனினும் பரதரின் நாட்டிய சாஸ்திரம், நந்திகேசுவரரின் அபிநய தர்ப்பணம் முதலிய வடமொழியிலுள்ள பரத சாஸ்திர நூல்கள் பரதம் பற்றிக் கூறியுள்ள கருத்துக்களையே மேற்குறிப்பிட்ட உரையும் கூறியிருப்பது ஒப்பிடற்பாலதாகும்.

மேலும் பரதரின் நாட்டிய சாஸ்திரத்தினை இந்நடனம் முதல் நூலாகக் கொண்டிருப்பதாலும் இப்பெயரால் அழைக்கப்படு கிறதெனக் கூறப்படுகிறது. எனவே பரத நாட்டியம் எனும் பதம் பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்திலே நிலவி வந்த பதமேயாகும்.

இன்னோரென்ன காரணங்களினாலேதான் இதற்கு இந் நூற்றாண்டிலே புத்துயிர் அளித்து, இதனை உலகக் கலையரங்கிலே மிளிரச் செய்த இ. கிருஷ்ண ஐயர், ஸ்ரீமதி ருக்மிணிதேவி அருண்டேல் போன்றோர் இதனை இவ்வாறு (பரதநாட்டியமென) அழைத்தனர்.

**பரதத்தின் பிரதான அம்சங்கள்:** பரத நாட்டியத்தின் பிரதான அம்சங்களைக் குறிப்பிடுதல் அவசியமாகின்றது. இது ஒரு தனிக்கலைஞரின் ஆட்டமாகும். அபிநயம், நடிப்பு, வாய்ப்பாட்டிசை, வாத்திய இசை, நிருத்தம் முதலிய பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிசங்கள் கொண்ட கூட்டுக் கலையாகும். இந்தியாவைப் பொறுத்தளவில் நடனம், நாடகம், சங்கீதம் என்பன கூட்டுக் கலைகளே என்பதும் மனங் கொளற்பாலது. இந்தியாவிலே சிற்பம், ஓவியம், நடனம், தாளவாத்தியக்கலை வாய்ப்பாட்டிசைக் கலை, ஆகியன ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதும், ஒன்றன் அறிவு மற்றயதை விளங்கிக் கொள்ள உதவும் என்பதும், மேற் குறிப்பிட்டவற்றிலே வாய்ப் பாட்டிசைக் கலை ஏனையவற்றிற்கு அடிப்படையான தென்பதும் விஷ்ணு தர்மோத்தர புராணம் எனும் நூலிலே (62.1-9) வரும் வஜ்ர என்ற அரசனுக்கும் மார்க்கண்டேய முனிவருக்கும் இடையில் நடைபெற்ற சம்பாஷணை மூலமும் அறியப்படுகின்றது. இக் கதையிலுள்ள கருத்தினை ஒருவர் ஏற்றாலென்ன, ஏற்காவிட்டாலென்ன இக்கலைகளுக்கிடையிலுள்ள பரஸ்பரத் தொடர்புகளும் அடிப்படை அமிசங்களும் தெளிவு.

நடனத்தில் அபிநயம் இன்றியமையாததாகும். பார்வையாளருக்கு ஆடற் கலைஞன் சாஹித்தியத்தின் பொருளை ஹஸ்தங்கள், புருவங்கள், முகம் முதலிய அங்கங்கள் மூலம் வெளிப்படுத்தி ரசாநுபவத்தினை உண்டாக்குவான். இவ் அபிநயம், ஆங்கிகம், வாசிகம், ஆஹார்யம், சாத்துவிகம், என நான்கு வகைப்படும். அபிநயம் இன்றேல் ஆடல் இல்லை. நடனத்திலே சஞ்சாரி பாவங்கள் குறிப்பிடத்தக்கவை. ஒரு பாடலுக்குப் பல வகையான பாவங்களைக் கலைஞர் தனது அறிவு, கற்பனை, அநுபவம் முதலியனவற்றிற்கு ஏற்பச் செய்து காட்டுவர். இவ்வகையிலே பரத நாட்டியம் மிக வளமுள்ளது. பாடல்களைப் பல நாட்களுக்குத் தொடர்ந்து அபிநயித்துக் காட்டக் கூடிய வளம் கொண்டது. இச்சிறப்பு அம்சத்தினை மேனாட்டுக் கலை விமர்சகர்கள் அவதானித்து மிகவும் வியப்புக் கொண்டுள்ளனர். மேலும், இந்திய நாடகம், நடனம் ஆகியவற்றிலே பாரதீ (பேச்சு, பாடல்), கைசிகீ (இசை, ஆடல்) ஆரபதீ (செயல் மேலோங்குதல்), சாத்வதீ (உணர்வு) முதலிய நான்கு விருத்திகளும், லோகதர்மீ (உள்ளதை உள்ளவாறு காட்டுதல்), நாட்டிய தர்மீ என இரு வழக்குகளும் கூறப்படுகின்றன. நடனம் உத்வேகமுள்ள தாண்டவம், மென்மையான லாஸ்யம் என இருவகைப்படும். தாண்டவம் பொதுவாகத் தெய்வங்களை வழிபடுவதற்காகப் பயன்படுத்தப்படும். இதன் மென்மையான செயற்பாடு (லாஸ்யம்) சிருங்காரம் (காதல்) சம்பந்தமானதாகும். (நா.சா.2.77) நந்திகேஸ்வரரின் அபிநய தர்ப்பணத்திலே (கி.பி. 10ஆம் நூற்றாண்டு) நாட்டியம் (நாடகம்) பழைய கதைகளை அடிப்படையாகக் கொண்டது. நிருத்தம் (பாவரஸங்களைப் புலப்படுத்தும் ஆடல்) என நடனம் மூவகையாகக் கூறப்படுகின்றது. ஆனால் பரதரின் நாட்டிய சாஸ்திரத்திலே நிருத்தம், நிருத்தியம், என்ற கருத்திலும் வந்துள்ளது. மேலும் இன்று பரதநாட்டியத்திலே வலியுறுத்தப்படும் அங்கசுத்தம் நாட்டிய சாஸ்திரத்திலே சௌஷ்டவம் எனப்படும். முதுகு நேராக நிமிர்ந்து நிற்கவேண்டும். கலைஞர் சீராக எப்படி நிற்க வேண்டுமோ, அந்த நிலையைச் சாஸ்திர நூல்கள் ரேகா (ரேகை) கை, கால், முகம் இருக்கவேண்டிய நேர்மையுடன் நிற்பது எனக் கூறியுள்ளன. அரைமண்டிநிலை பரதநாட்டியத்திற்குரிய ஒரு சிறப்பு அமிசமாகும்.

**நாட்டியமும், சமயமும் உலகியலும்:** உலகியல் நோக்கம் இருப்பினும், இந்திய நடனத்திலே சமய நோக்கம் வலியுறுத்தப்படுகின்றது. அறம், பொருள், இன்பம், வீடு இதன் நோக்கம் எனக் கூறப்படுகின்றது. இருக்கு, யசுர், சாம, அதர்வ வேதங்களின் சாரமாக நாட்டியம் ஐந்தாவது வேதமாகவும், யாவருக்கும் பொதுவான வேதம் எனவும் நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடுகின்றது. எனினும் இதன் உலகியல் நோக்கங்கள் கூறப்படாமல் இல்லை. நிருத்தம் ஒரு குறிப்பிட்ட தேவைக்காகத் தோன்றவில்லை. இது சோபையினை (அழகினை) உண்டாக்குவதால் வழக்கில் வந்துள்ளது. ஏறக்குறைய எல்லா மக்களும் விரும்புவதால் நிருத்தம் மங்களகரமானதெனப் போற்றப்படுகின்றது. மேலும் திருமணம், பிள்ளைப் பிறப்பு, மருமகனை வரவேற்றல், பொதுவான கேளிக்கை, செழிப்பு ஏற்படுதல், ஆகியவற்றின்போது மகிழ்ச்சியூட்டும் சாதனமாக இது போற்றப்படுகின்றது. (நா. சா. 4. 267 - 269) என வரும்பகுதி குறிப்பிடற்பாலது.

இந்திய நடனத்தின் உருவாக்கத்திலே, சமய, உலகியல் அமிசங்கள் இடம் பெற்றிருந்தன என்பதில் ஐயமில்லை. அழகியல் அமிசங்களும் வலியுறுத்தப்பட்டன என்பது மேற்குறிப்பிட்ட பந்தியால் தெளிவாகும். சமய ரீதியிலே, இந்து சமயத் தெய்வங்களிலே சிவபெருமான், சக்தி, திருமால், பிரமா முதலியோர் நடனத்துடன் நன்கு தொடர்புபடுத்தப்படுகின்றனர். இவர்களிலே சிவன் சக்தி ஆகியோர் முறையே தாண்டவம், லாஸ்யம் ஆகிய இருவகை நடனங்களை உண்டாக்கினர் எனக் கூறப்படுகின்றது. திருமால் நால்வகை விருத்திகளுடன் தொடர்புபடுத்தப்படுகிறார். பிரமா நாட்டிய வேதத்தினையே உருவாக்கினார் எனக் கூறப்படுகின்றார். எனவே மும்மூர்த்திகளும் நாட்டியத் தொடர்புள்ளவர்களாக விளங்குகின்றனர். மேலும், பரத எனும் சொல் ருத்திரனை (சிவனை) யும் குறிக்குமாகையால், பரதக் கலைக்கும் சிவனுக்கும் இடையில் உள்ள தொடர்பு மிக அடிப்படையானதாகும். எனினும் சிவபிரானே ஆடலின் வடிவமாகவும், ஆசானாகவும் அரசனாகவும் நடராஜன், கூத்தபிரான் எனப் போற்றப்படுகின்றார். வரலாற்று ரீதியிலே சிவபிரானின் நடனத் தொடர்பு மிகப் பழமையானது. 64 கலைகளின் வடிவமாக சக்தி விளங்குகிறாள். (சதுஸ்ஷஷ்டிகலாமயி). இந்திய மரபிலே எல்லா அறிவியல்களுக்கும் தெய்வீகத் தோற்றம் அளிப்பது பொதுவான அமிசமே.

**பரதநாட்டியமும் சைவசித்தாந்தமும் :** பரதநாட்டியம் தென்னாடு, குறிப்பாக தமிழ்நாட்டிற்குரிய, சிறப்பாகச் சைவசமய தத்துவமான சைவசித்தாந்தத்தின் விளக்கமாகவும் திகழ்கின்றது. நாட்டிய சாஸ்திரம் கூறும் விதிகளுக்கு ஏற்ற நடன அமைப்புக் கொண்டதாயினும், பரத நாட்டியத்தினை அது சிறப்பாக நிலவும் தமிழக மெய்யியல் சமயக் கருத்துக்களின் ரீதியிலும் நோக்குவது அவசியமாகின்றது. ஏற்கனவே, நாட்டிய சாஸ்திர மரபிலே சிவனின் தொடர்பு மிக நெருங்கியது என்பது கூறப்பட்டுள்ளது. பரத எனும் சொல் சிவனையும் குறிக்கும். எனவே நடனக்கலை குறிப்பாகச் சிவனைப் போற்றும் கலையென்பதும் புலனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகர், தென்னாடுடைய சிவனே போற்றி எனச் சிவபுராணத்திலே கூறியிருப்பது அவரின் மிகுந்த சமயப்பற்று தேசப்பற்றுகளினால் ஏற்பட்ட புகழுரை அன்று. இது வரலாற்று ரீதியிலும் ஓரளவாவது பொருத்தமான கூற்றாகவும் உள்ளது. தென்னாட்டுக்கே உரிய சிறப்பாக சைவசமயமும், அதன் தத்துவமாகிய சைவ சித்தாந்தமும் மிளிர்கின்றன. ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்திற்குரிய கலை, அது எழுந்த மக்களின் சமூக, சமய நம்பிக்கைகளையும், அபிலாசைகளையும் பொதுவாகப் பிரதிபலிக்கும். அவ்வாறு நோக்கும் போதும் பரத நாட்டியம் சைவ சித்தாந்தத்திற்கு ஒரு விளக்கமாக பாவங்கள், அங்கவசைவுகள், மூலம் அதன் கருத்துக்களை வெளிப்படுத்துவதாக அமைகின்றதில் வியப்பில்லை. பரத நாட்டியம் சைவ சித்தாந்தத்தின் உட்பொருளை விளங்குகின்றது என்ற கருத்தினைப்பற்றி அரிடரோம் எனும் அமெரிக்க நடனக் கலைஞர் ஆராய்ந்துள்ளார். மேலும், சைவத்திற்கும் நாட்டியத்திற்கும் இடையிலுள்ள பிரிக்க முடியாத தொடர்பினைப் பேராசிரியர் வே. ராகவன் மேல்வருமாறு குறிப்பிட்டுள்ளார். நாட்டியக் கலையும் சைவமும் சேர்ந்தே வளர்ந்து வந்தன. வழிபாட்டில் ஆடலைச் சாதனமாகக் காணலாம் என்று பாசுபதஸூத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. 108 கரணங்களினாலான தாண்டவம் சிவன் தந்தருளியது எனப் பரதரும் சொல்லுகிறார். பரதருடைய முதல்நூல்களில் ஒன்று சதாசிவன் அருளிய நூலாகக் குறிக்கப்படுகிறது என்பதாகும்.

**கர்நாடக இசையும் பரதநாட்டியமும் :** தென்னிந்தியாவுக்குரிய (இன்றைய தமிழ்நாடு, கேரளம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடக மாநிலங்களுக்குரிய) சிறப்பான சாஸ்தீரிய இசை கர்நாடக இசை ஆகும். இதன் உயிர்நாடியாக விளங்குவது கமகம். பரதத்தின் உயிர்நாடி அடவு. கமகபூர்வமானது. தூய இசையாகும். அடவுகள் செவ்வனே இடம் பெறாதது தூய பரதமன்று. கமகம், அடவு, அடைவு. (தெலுங்கில்) அடு என்பன குறிப்பிட்ட அசைவு எனும் ஒரே பொருளைக் கொண்டவை. ஆகவே பரத நாட்டியமும், கர்நாடக இசையும் பொதுவாகத் தென்னிந்தியாவுக்கும், குறிப்பாகத் தமிழ் நாட்டிற்கும் உரியன என்பதில் ஐயமில்லை. நாயக்கர் காலத் தெலுங்கு நூல்களில் இசை மட்டுமன்றி நடனமுமே கர்நாடகம் என அழைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது. கர்நாடக இசைக்கு உருவமளிப்பது பரத நாட்டியமாகும். ஆனால் இன்று ஹிந்துஸ்தானி இசைக்கும் வேறு சில இசை வடிவங்களுக்கும் ஏற்ப பரதம் ஆடுவதற்குச் சிலர் முயற்சித்து வருகின்றனர்.

**அடவுகள்:** பரதநாட்டியத்தின் அடிப்படை அலகு அடவு ஆகும். இன்றைய பரத நாட்டியத்தில் சுமார் 120 அடவுகள் உள்ளன. இவற்றைத் தஞ்சைச் சகோதரர் ஒழுங்குபடுத்தினர் எனக் கூறப்படுகின்றது. மேற் குறிப்பிட்ட 120 அடவுகளில் நடைமுறையிலே சுமார் 70 உள்ளன எனக் கூறப்படுகின்றது. ஆடும்போது பாதம் பூமியில் சேர்வது தட்டு அடவு, நெட்டு அடவு, மெட்டு அடவு என மூவகைப்படும் இவ் அடவு பரதர் கூறும் கரணம் என்பதற்குச் சமமான தமிழ் நடனத்தின் அமிசமாகும் எனப் பத்மா சுப்பிரமணியம் கருதுகிறார். அடவு பற்றிய காலத்தால் முந்திய குறிப்பு மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி 1178 - 1233) காலத்திய குளத்தூர் சிவாலயத்திலுள்ள கல்வெட்டில் உள்ளது.

**அடவுகளும் நிகழ்ச்சிக் கிரமங்களும் :** பரதக் கலையின் சுத்த வடிவமான நிருத்தம் தாள லயத்தினையும் இனிய ஒலிகளையும் உடலுறுப்புகளின் பல வகையான வளைவுகள், கோணங்கள், பக்கங்கள் நோக்கிய அசைவுகள் என்பவற்றால் விளக்கும். கிரமமான ஹஸ்தாபிநயங்களும் பாதசாரிகளும் நடனத்துக்கு அடிப்படையானவை. நிருத்தியத்தில் மெட்டொலிகளும் உணர்ச்சிகளும் அழகுற இணைந்து விடுகின்றன. தாள வரிசைகள், ஸ்தானங்கள் என்பன சகிதமான அபிநயங்கள், முக பாவங்கள் ஆகியன மூலம் பாடல்களின் பொருள் நிருத்தியத்தில் விளக்கப்படும்.

தென்னிந்தியக் கோயில்களிலும் அரண்மனைகளிலும் நிலைபெற்ற ஒரு புராதனமான பாரம்பரியத்திலுள்ள மரபைச் சேர்ந்த நடனக்கலை விற்பனர்கள் தலைமுறை தலைமுறையாக உருவாக்கிய சொற்பிரயோகங்களும், அபிநயம், பாதசாரிகள், அசைவுகள் என்பன பற்றிய பயிற்சி நெறியும் பரத நாட்டியத்திற்கு அடிப்படையானவை.

**அடவுகள் :** அடவுகள் நாட்டியப் பிரவிருத்திகளின் அடிப்படையான அம்சங்களாகும். காலை அடித்தல் என்பதைக் குறிக்கும் அடு என்னும் சொல்லடியாக வந்ததே **அடவு** என்னும் தெலுங்குச் சொல். பாதசாரிகளுக்கு இசைவான ஹஸ்தாபிநயத்தையும் அவற்றுக்குப் பொருத்தமான உடல் வளைவுகளையும் சீராக அமைத்துக் கொள்வது அடவு எனப்படும். அடவு இன்ன தென்பதை தாளக்கட்டுகள் மூலம் அறியலாம். த தை தம்-தித் தை தம் என்ற வரிசை அதற்கோர் உதாரணமாகும், நாட்டியத்துக்கு அடவுகள் அடிப்படையானவை என்பதால் நடனம் பயில விரும்பும் மாணவர்கள் முதலாவதாக அடவுகளைக் கற்றுக் கொள்ள வேண்டும். பத்து வகையான அடவுகள் உண்டு. அவை ஒவ்வொன்றிலும் 12 விதமான பிரிவுகள் உண்டு. எல்லாமாக 120 வகையான நடனப் பிரவிருத்திகள் உண்டு. விரும்பியவாறு அவற்றில் வேறபாடுகளை ஏற்படுத்துமிடத்து அவற்றின் தொகை பெருமளவிற் பெருகும்.

தாள ஆவர்த்தனமாக இணைந்த பல அடவுகள் அடவு-ஜாதி ஆகின்றன. கால்கள் தாளத்தை ஒலிக்கும் வேளை கிரமமான முறையில் அமைந்த ஹஸ்தாபிநயங்களாகும் அவற்றுக்குப் பொருத்தமான, செம்மையான உடல் அசைவுகளும் அரங்கிலே பிரகாசமான கோலத்தை உருவாக்குகின்றன.

**நிருத்த ஹஸ்தங்கள் :** கிரமமான அசைவுகளும் கை முத்திரைகளும் தொடர்ச்சியாக ஆடப்படும் நடனம் ஒவ்வொன்றுக்கும் ஆதாரமானவை. வெளிப்புறமாக நீண்ட பதாக ஹஸ்தமும் அதனை அடுத்து வரும் ஆலபத்ம, ஹம்ஸஸ்ய முத்திரைகளும் திரிபதாக, சிகர ஹஸ்தங்களும் சுத்த நிருத்தத்திற்கு பிரதானமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்தானகம் :** காலை முழந்தாள் மட்டத்தில் நன்றாக வளைத்து ஊன்றிய கோலம் பரதநாட்டியத்தின் சிறப்பம்சமாகும். மடக்கிய (கர்வதக் கோலத்தில்) முழந்தாள்களுக்கு இடையிலான இடைவெளியின் அளவு மூக்கிலிருந்து தொப்பூழ் வரையான நீளத்துக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும். முழந்தாள்களின் அசைவு நடனத்தின் ஒரு பிரதானமான அம்சமாகும்.

நேராக நிமிர்ந்து நிற்கும் சமபதக் கோலத்தில் நடனம் தொடங்கும் பொழுது, மணிக்கட்டு இடையின் பக்கங்களிற் தொடும் வண்ணமாகக் கைகள் இடையின் பின்புறமாகப் படிந்திருக்கும். அல்லாவிடின் கைகள் இரண்டும் பக்கங்களை நோக்கி நீண்டிருக்கும். தோள், முழங்கை, மணிக்கட்டு என்பன ஒரே மட்டத்தில் அமைந்திருக்கும். உள்ளங்கை கீணோக்கிய கோலமாய்ப் பின்புறமாக வளைந்திருக்கும். அது சௌஸ்தவமான அழகின் வடிவமாகும். பாதங்கள் வரையான உடல் முழுவதும் சற்று முன்னோக்கிய வளைவு பெறும். முழந்தாள்கள் வளைந்த கோலத்தில், குதிகள் இரண்டு முட்டும் விதத்தில் பாதங்கள் நேர்கோணம் ஏற்படும் வகையிலே திருப்பியிருக்கும். கால்விரல்கள் முன்னோக்கி நீண்ட வண்ணமாய் இருக்கும்.

காலை நிலத்திலே பதித்தல், உள்ளங்காலை முன்னோக்கிய அல்லது பக்கமாக அகட்டுதல், அடிமேல் அடிவைத்தல், உள்ளங்காலை உயர்த்தி மீண்டும் மீண்டும் மிக வேகமாக நிலத்தில் அடித்தல் என்பன நடனத்துக்குச் சிறப்பாகவுள்ள பூமி ஸ்பர்ஸங்களாகும்.

**தாளம் :** நடனத்திலே தாளத்துக்கு அடிப்படையானது ஜதி. அது சுருக்கமாக அல்லது நீளமாக அமைந்த ஒலிக்கட்டுகளை உடையதாய் இருக்கும். நடனத்தில் வழங்கும் ஒலிக்கட்டுகள் ஜதி அடவுகள் என்று சொல்லப்படும். ஜதிகள் ஐந்து வகையானவை:

திஸ்ர : த-கி-த (மூன்று முறை அடித்தல்)

சதுஸ்ர : த-க-தி-மி (நான்கு அடிகள்)

கண்ட : த-க-த-கி-த (ஐந்து அடிகள்)

மிஸ்ர : த-க-தி-மி-த-கி-த (ஏழு அடிகள்)

சங்கீரண: த-க-தி-மி-த-க-த-கி-த (ஒன்பது அடிகள்)

இந்த ஐந்து அடிகளும் சிவபெருமானின் ஐந்து முகங் களிலிருந்தும் தோன்றியவை என்று கொள்ளப்படும். நடனத்துக்கு த-தி-தோம்-தம்-நம் என்னும் ஆதாரமான சொல்லடைவுகள் சிவன் நடனமாடிய பொழுது அவனுடைய பாதங்களிலிருந்தும் எழுந்தவை என்று சொல்வர்.

**காலம் (தாளத்தின் நேர அளவுகள்) :** விலம்பித (மெதுவான), மத்ய (நடுத்தரமான), துரித (வேகமான) என்ற மூன்று நேர அளவுகள் தாளத்தில் உண்டு. மெதுவான தாள அடியினை இரட்டிக்கும் பொழுது அது மத்யம தாளமாகும். விலம்பிதத்தின் வேகத்தை நான்கு மடங்காகக் கூட்டுமிடத்து அது துரித தாளமாகின்றது. நடனங்களில் மாறுபாடுகளையும் தாளலய வேறுபாடுகளையும் உணர்த்துவதற்கு இம் மூன்று வகையான தாள அடைவுகளைப் பயன்படுத்துவது அவசியமாகும்.

**சமத்காரம் :** நடனங்களுக்கு அழகூட்டும் பெண்களின் அபிநயங்கள் சமத்காரங்கள். கழுத்தின் அசைவுகளுக்கு (சுந்தரீ கிரீவம்) ஏற்பக் கண்களும் புருவங்களும் தாளப் பிரமாணங்களுக்கு அமைவாக அசையும். கழுத்தின் அசைவுகளுக்கு ஏற்பத் தலை அசையும், கண்கள் தோள்களை நோக்கும். தாள வாத்தியத்தின் வேகத்தோடு தனங்கள் பக்கம் நோக்கிய வண்ணமாகத் திரும்பும். நடனத்தை அலங்கரிக்கும் இந்நுட்பமான லலிதமான அசைவுகள் தாமரை இலைகளிலே புரண்டொடும் நீர்த்துளிக்கு ஒப்பானவை என்பர்.

**வந்தனம் :** நடனப் பயிற்சி ஆரம்பமாவதற்கு முன்பு மாணவர் தேவர்களையும், பூமாதேவியையும் நடனாசிரியரையும் வணங்குவார். ஒவ்வொரு காலையும் நிலத்தில் ஊன்றிய கோலத்தில், சிகர கரங்களைக் கவிழ்த்து, அவற்றினாலே தோள்களைத் தொட்டு, பின் அவற்றை முன்புறமாக நீட்டிச் செம்மையாக வளைத்துக் கொள்ள வேண்டும். முழந்தாளை நேராக வைத்துக் கொண்டு, கீணோக்கி வளைந்து கைகளால் நிலத்தை தொட்டு அதன் பின் அவற்றை நெற்றியிலே படியும் வண்ணமாக உயர்த்தி, அஞ்சலிக் கோலத்தில் வழிபடல் வேண்டும்.

**நிகழ்ச்சிக் கிரமங்கள் :** இந்நாட்களில் வழங்கும் பரத நாட்டிய நிகழ்ச்சிக் கிரமங்கள் ஏறக்குறைய 150 வருடங்களுக்கு முன் நடனக்கலையிலும் சங்கீத கலையிலும் அதிக பிரசித்தி பெற்ற தஞ்சாவூர் சகோதரர் நால்வரால் வரையறை செய்யப்பட்டன. அவர்களில் பொன்னையா, சிவானந்தம் ஆகியோர் தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலும் தஞ்சை அரசரின் சமஸ்தானத்திலும் நாட்டியக் கலை ஆசான்களாக விளங்கியவர்கள். சின்னையா வடிவேலு என்னும் இருவரும் சமஸ்தான சங்கீத வித்துவான்கள். ஒரு மாலை வேளையில் எல்லா நாட்டிய கிரமங்களையும் அரசர் பார்த்து ரசிக்கக் கூடிய முறையில் நாட்டிய நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

**நட்டுவாங்கம் :** நடனத்துக்குரிய இசைப்பாடல்களைப் பாடுவோரில் நட்டுவனாரே பிரதானமானவர். அத்துடன் நடன நிகழ்ச்சிகளையும் அவரே நெறிப்படுத்துவார். மெட்டொலிகளையும் தாளலயமான சொல்லடைவுகளையும் பாடுவதோடு மிருதங்க வாத்தியத்திற்கு இசைவாக அவரே தாளப்பிரநாதஞ் செய்வார். இனிய பாடல்களோடு புல்லாங்குழலும் வீணையும் இன்னிசை பரப்பும்.

நடனத்தை உன்னதமான கோலத்தில் ஆடுவதே நர்த்தகரின் நோக்கமாயிருக்கும். ஒரு இசையாசிரியனின் கிருதிகளை மேனாட்டுப் பாடகர் ஒருவர் எதுவித மாற்றமுமின்றி எவ்வாறு பாடுவாரோ அதேபோல நர்த்தகர் ஒருவர் நட்டுவனார் உருவாக்கும் நடன வரையறைகளில் எதுவித மாற்றமுமின்றி ஆடல் புரிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அலாரிப்பு :** நடனத்தின் பூர்வாங்கமான நிகழ்ச்சி அலாரிப்பு. அது கிரியா பூர்வமானது. அது மிருதங்க வாத்தியம் சகிதமாக நட்டுவனார் தாள அடவுகளைக் கவர்ச்சியான கழுத்தசைவுகள், கண்கள், தனங்கள் ஆகியவற்றின் அலங்காரமான அசைவுகள், குமிண் சிரிப்பு என்பன இந்நடனக் கோலத்தின் பண்புகளாகும். கடவுள் வணக்கமாக அமையும் இந்நடனக் கோலத்துக்குச் சிறப்பானவையாகச் சில ஹஸ்தாபிநயங்களும் கைவளைவின் வடிவங்களும் வரையறை செய்யப்பட்டுள்ளன. மாணவர்கள் அடவுகளைக் கற்றபின்பே அலாரிப்பு நடனத்தை ஆடுவதற்குப் பயிற்சி பெறுவது வழமை. **சேர்வை** என்னும் சமயாசாரமான சடங்குடன் அலாரிப்பு நடனத்துக்குரிய பயிற்சி தொடங்கும். இந்நாட்களில் இச்சடங்கு நடைபெறுவதில்லை. **அலாரிப்பு** அடவுகள் என்பவற்றில் ஒரே காலத்திலேயே மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

**ஜதீஸ்வரம் :** பரதநாட்டியத்தில் ஜதீஸ்வரம் இரண்டாவது நிகழ்ச்சியாக வரும். அதிற் பல வகையான இன்னிசைப் பாடல்கள். ஒன்றன் பின் ஒன்றாக நிகழும் நடனங்களிற் காட்சிக்குரிய கோலங்களாகும். இன்னிசை வாத்தியங்கள் சகிதமாக மெட்டொலிப் பாடல்கள் இராக தாள முறையிற் படிக்கப்படும் தாளத்திற்கேற்ற கழுத்தசைவுடன் நடனம் தொடங்கும். அசைவின் வேகம் ஆரம்பத்தில் மெதுவானதாய் இருக்கும். மெல்ல மெல்ல மத்தியமாகி அது துரிதமாகும். முதலாவது அங்க அசைவுகளின் மேற்பாகம் இரு பக்கங்களிலும் அசைந்து பின்னோக்கிய வளைவினைப் பெறும். அதன் பின் அது முன்னோக்கி வளையும்.

இந்தப் பிரமாணமாக மெதுவான மத்திம துரித வேக தாளங்களுக்கு ஏற்ப ஆட்டம் வேகங்கொள்ளும். ஜதீஸ்வரமும், மெல்லிசையும் தாள வாத்தியமும் அழகு பொங்கும் வண்ணமாக இணைத்தவொரு நடனக் கோலம். அதில் இசையின் இயல்பிற் கேற்ப, இடையிடையே மாறும் கவர்ச்சி மிக்க ஆட்டங்களின் வழியாக நடனம் உன்னதக் கோலம் பெறுகின்றது. மிகவும் பவ்வியமான பக்க அசைவுகள், மெதுவாகவும் கம்பீரமான கோலத்திலும் பின்னோக்கி அசைதல். வேகமான பாதசாரிகளோடு தாளத்துகட்கு ஏற்ப முன்னோக்கியும் பின்னோக்கியும் போதல் என்பன ஜதீஸ்வரத்திற்கு குரிய அம்சமாகும்.

**சப்தம் :** தேவர் ஒருவரை அல்லது அரசனைப் போற்றிப் பாடுவது சப்தம் என்று சொல்லப்படும் இசைப்பாடல் பக்திப் பாடலாகவோ காதலைப் பற்றியதாகவோ தேவர்களின் வாழ்க்கை தொடர்பான ஒரு கதை பற்றியதாகவோ அமையக்கூடும்.

அது பொருத்தமான அபிநயங்களினாலும் முகபாவனை களினாலும் லலிதமான உடலசைவுகளினாலும் கோலங்களினாலும் விளக்கப்படும். முதலாவது பல்லவி இனிமையான சப்தங்களோடு பாடப்படும். இது இடையிலும் முடிவிலும் இடம் பெறும்.

**வர்ணம் :** வர்ணம் பரதநாட்டியத்தின் மிக விரிந்த பிரவிருத்தியாகும். நர்த்தகர் சுத்த நிருத்தியத்திலும் மௌனமான நடிப்பிலும் மிகுந்த ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். இராகத்தினுடைய உன்னதமான இசைப் பாங்கினை முழுமையாக வெளிப்படுத்த வல்லதானதரத்தில் இசை அமைதல் வேண்டும். வர்ணம் சுத்த நிருத்தத்திற்கும் இசைப்பாடல்களின் விளக்கமான நாட்டியத்திற்கும் இடைப்பட்டது. அதன் இறுதி நிகழ்ச்சியான சரணத்தில் அந்த இரண்டு முறைகளின் அம்சங்களும் கலந்து விடுகின்றன. ஒவ்வொரு பாடலின் முடிவிலும் ஒரு உன்னதக் கோலமான சுத்தநிருத்தம் இடம்பெறும்.

காதலில் ஏற்படும் சஞ்சாரி பாவங்களை மௌனமான நிருத்தத்தின் மூலம் வெளிப்படுத்துவது வர்ணத்தின் மிகவுங் கவர்ச்சியான அம்சமாகும். பாடலின் பொருளை விரிவாக விளக்கும் வகையில் வர்ணத்தில் நர்த்தகர் ஒரு விநோதமான அபிநயக் கோலத்தை உருவாக்கி விடுவார். தாளத்தோடு ஒலிக்கப்படும் மெட்டொலிக்கேற்ப, ஆடப்படும் பலவகையான நடனங்கள் வழியாக வர்ணம் உச்சக் கட்டத்தையடையும். வர்ணத்தை முழுமையாக ஆடுவதற்கு ஒன்றரை மணித்தியாலயம் தேவை. ஆனால், இந்நாட்களில் பாடல்களின் எண்ணிக்கையைக் குறைத்து நடனத்தை அதற்குரிய காலத்தின் அரைவாசி நேரத்தில் முடித்து விடுகின்றனர்.

**அபிநயப்பாடல்கள் :** வர்ணத்தின் பின்பு அபிநயப்பாடல்கள் இடம் பெறும். நர்த்தகர் பக்தர் ஒருவராகவோ தெய்வீகமான கதாநாயகியாகவோ மாறிவிடுவதுண்டு. பதம் அல்லது ஜாவளி என்னும் காதல் பாடல்கள் காதல் உணர்ச்சிகளையும் கவிதையின் பாங்கினையும் பிரதிபலிக்கும் அபிநயங்களையும் முகபாவங்களையும் வெளிப்படுத்தும். காதலரைப் பற்றிய கனவினால் ஏற்படும் நினைவுகள் தொடர்பான இனிய உணர்வுகள், விரகதாபம், சிவன், பார்வதி ஆகியோரிடையில் ஏற்படும் ஊடல், கிருஷ்ணர், ராதை ஆகியோரின் காதல் உணர்வுகள் போன்றவை பற்றியனவாகப் பாடல் அமைந்திருக்கும். பரம பக்தர்கள் எழுதிய பக்திப் பாடல்கள் பக்தி பூர்வமான பாவங்களையும் வழிபாட்டுணர்வு களையும் ஏற்படுத்தும்.

**தில்லானா :** பரத நாட்டியத்திலுள்ள நடனங்களிலே தில்லானா இன்பமயமான ஒரு சுத்த நடனமாகும். அவற்றுள் அதுவே மிகவும் லாவண்யமானதும் இனிமையானதும் ஆகும். அதிலே பாட்டில் வரும் சொற்கள் பாடகர் மீண்டும் மீண்டும் ஒலிக்கும் எளிமையான சொல்லடைவுகள் மட்டுமேயாகும். அடிப்படையான தாள ஒலிகள் பாதசாரிகளினாலும் உடல் வளைவுகளினாலும் விளக்கமாகும் அழகுமயமான கழுத்து, மார்பக, இடை அசைவுகளும் கவர்ச்சிகரமான பார்வைகளும் மெதுவான அல்லது துரிதமான அசைவுகளுக்கும் அபிநயக் காட்சிகளுக்கும் இடையிலான முரண்பாட்டுக் கோலங்களும் நடனத்தின் முடிவில் அதன் அருமையான கலைத்திற நுட்பத்தைப் பற்றிய உணர்வினை ஏற்படுத்தும்.

**கிரியா நடனங்களின் மறுமலர்ச்சி :** பழைய தலை முறையினரான நட்டுவனார்கள் முன்பு கோயில்களிலே தேவதாசிகள் ஆடிய கிரியா பூர்வமான நடனங்களைப் பரத நாட்டிய நிகழ்ச்சிக் கிரமங்களில் சேர்த்துக் கொள்கின்றனர். அந்த நடனங்கள் கோயில்களிற் பிரசன்னமாயுள்ள தெய்வங்களுக்கு மட்டும் உரியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌஸ்துபம் கடவுள் வழிபாடாகவே அமையும். தெய்வத்தின் தோற்றம், குணநலன்கள், அருளாட்சி என்பவை அபிநயங்களால் விளக்கப்படும். ஒவ்வொரு பாடலுக்கும் பின்பு சுத்த நடனம் இடம்பெறும். அது எழுப்பப்படும் தாள ஒலிகளுக்கு அமைய ஆடப்படும்.

ஒரு தெய்வம் பற்றி அபிநயம், சுத்த நிருத்தம் என்பவற்றால் விளக்கப்படும் பக்திப் பாடல் கீதம் எனப்படும். அதில் நிருத்தமும் மௌனமான நடிப்பும் கலந்திருக்கும்.

சிவாலயங்களின் ஒன்பது சந்நிதானங்களில், வருடாந்த உற்சவத்தின் முதலாம் நாளில் பிரம்ம தேவனுக்கும் திக்குப் பாலகர் எண்மருக்கும் உபசாரமாக வழங்கப்படுவது நவசந்தி நிருத்தியம் என்பதாகும். ஒவ்வொரு தெய்வத்திற்கும் உரிய உப சாரத்திற்கும் தனித்தனியான இராக தாளங்களும் ஆடல் வகையும் உண்டு.

**வஸ்திரங்களும் ஆபரணங்களும் :** சோலி என்னும் இறுக்கமான சட்டையும் ஒன்பது யார் நீளமான, சுற்றிக் கட்டும் பொற்சருகை வேலைப்பாடு கொண்ட, பட்டுச் சேலையும் தேவதாசிகளின் மரபு வழியான வஸ்திரங்கள். அவை ஒளிவீசும் வண்ணச் சேலைகள். அவற்றின் கரை மாறு பட்ட நிறத்தில் அமைந்திருக்கும். சேலை முற்பக்கத்தில் சீரான மடிப்புகளைக் கொண்டதாயிருக்கும். அது இடது தோளின் மேற்புறமாக மூடி அணியப்படும். வேலைப்பாடுகள் பொருந்திய தலைப்பு முன்புறமாகத் தொங்கும் வண்ணம், இடையினைச் சுற்றிய கோலத்திற் சேலையைக் கட்டுவார்கள்.

மகரதம், வைதூர்யம், முத்துக்கள் ஆகியன பதித்த தங்க நகைகளை நர்த்தகிகள் ஆபரணங்களாக அணிந்து கொள்வர். நெற்றியிலே தொங்கும் பதக்கம் உச்சிப்பட்டத்திலே கொழுவியிருக்கும். தலைமயிரை இரு பக்கங்களிலும் பிரிக்கும் உச்சிக் கோட்டிலே அணியாக அமைந்திருப்பது உச்சிப்பட்டம். அதில் இரத்தினங்களும் முத்துக்களும் பதிக்கப்பட்டிருக்கும். சூரிய சந்திர வடிவங்கள் போன்ற ஆபரணங்களைத் தலையின் இரு பக்கங்களிலும் வழமையாக அணிந்து கொள்வர். பொன்னாலான வட்ட வடிவமான ஆபரணம் ஒன்றை உச்சியில் அணிந்து கொள்வர். அதனைச் சுற்றி மல்லிகைப் பூக்களைச் சூடிக்கொள்வது வழமை. கொண்டையினைச் சுற்றியும் மல்லிகை மலர்களை சூடிக்கொள்வர். அமைதி, எல்லையற்ற காலம் என்பவற்றின் சின்னமாகிய சடை நாகத்தை பின்னமாகிய நெடிய கூந்தலை மூடும் வண்ணமாக அணிந்து கொள்வர். வழமையாக அதில் இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டிருக்கும். அதன் முடிவில் மூன்று வரிகள் அமைந்த ஆபரணமொன்று காணப்படும். காதணிகள் கிண்ணம் போன்ற வடிவம் கொண்டவை. மூக்கின் நுனியில் இரத்தினம் பதித்த மூக்குத்தி ஒன்றினையும் மூக்கின் ஒரு பக்கத்தில் அரைவட்டம் போன்ற சிறிய ஆபரணம் ஒன்றையும் அணிவர். இடையில் மேகலையும் கைகளில் வளையல்களும் கேயூரங்களும் ஆபரணங்களாகும். மணிகள் பதித்த மாலையும் அதிலே தொங்கும் பதக்கமும் கழுத்தணிகளாகும்.

**நவீனகாலத்து ஆடைகள் :** தேவதாசி நடனம் பரத நாட்டியமாக மாற்றம் அடைந்ததும் வஸ்திரங்கள் ஒரு புதிய முறையில் அமைக்கப்பட்டன. சேலையினை வெட்டிக் கால்சட்டை போன்ற கோலத்தில் உருவாக்கி அணியும் வழக்கம் ஏற்பட்டுள்ளது. அதன் ஒரு பாகம் முன்புறத்தில் நுண்ணிய மடிப்புகளோடு சுருள் விசிறி போலத் தொங்கும். இடுப்பைச் சுற்றி வெறொரு துணி கட்டப்படும்.

இந்த வஸ்திரங்களை நாட்டிய நிகழ்ச்சி நிரலில் ஆடும் பொழுது, இடைவேளைகளிலே பலமுறை மாற்றிக் கொள்ள முடிவதனால் அவற்றை அணியும் முறை வழமையாகி விட்டது. அது உடலின் கீழ்ப்பாகத்தை முற்றாக மறைத்து விடுவதால் ஆபாசமற்றது என்றும் கருதப்படுகிறது. ஆயினும் சில பிரபலமான நர்த்தகிகள் கலை அம்சங்களில் கூடிய கவர்ச்சியுள்ள மரபு வழியான சேலைகளை புதிய முறையில், அணிந்து கொள்வதையே விரும்புகின்றனர். (வி. சி. & சி. ப.)

# பரத முனிவர்

நாட்டிய சாத்திரம் என்னும் நூலை வடமொழியில் இயற்றியவர் பரதமுனிவர். இவர் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரென ஒரு சாராரும், கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவரென மற்றொரு சாராரும் கருதுவர். எவ்வாறாயினும் இதுவரை கிடைத்துள்ள நாட்டிய இலக்கணம் பற்றிய நூல்களில், பரத முனிவரின் நாட்டிய சாத்திரமே மிகத் தொன்மையானதும் முதன்மையானதுமாக விளங்கக் காணலாம்.

இந்தியாவில் பல்வேறு ஆடல் வகைகள் உள்ளன. தென்னிந்தியாவில் தெருக்கூத்து, பாகவதமேளா மற்றும் பரத நாட்டியம் ஆகியவை தமிழ்நாட்டிலும், கூடியாட்டம், சாக்கையர் கூத்து முதலியவை கேரள நாட்டிலும், குச்சுபுடி முதலிய கிராமங்களுக்குரிய பாகவத ஆட்டங்கள் ஆந்திர நாட்டிலும், யட்சகானம் கருநாடக மாநிலத்திலும் வழக்கிலுள்ள ஆடல் வகைகளாகும். இவை மொழி நிலையில் வேறுபட்டிருப்பினும் அடிப்படை ஆடல் அமைதியில் பரத முனிவரது நாட்டிய சாத்திரத்தை அடியொற்றியே அமைந்திருக்கின்றன. அதனால் பரத முனிவரது நாட்டிய சாத்திரம் இந்திய நாட்டியக் கலையின் முதல் நூலாக இன்று எல்லோராலும் மதிக்கப்படுகிறது.

பரத முனிவரது நூலில் முப்பத்தாறு அத்தியாயங்கள் உள்ளன. நாட்டியத்தின் தோற்றம், நாட்டிய இலக்கணம், நூற்றெட்டுக் கரணங்கள், முப்பத்திரண்டு அங்ககாரங்கள், தாண்டவ நிலைகள், ஒன்பது வகைச் சுவைகள், பாவங்கள், முக அபிநயங்கள், கை முத்திரைகள், நடை வகைகள், நாட்டியத்திற்கேற்ற ஆடை அணிகலன்கள், நாட்டிய அரங்க அமைப்பு, நாடக வகைகள், நாடகக் கதை அமைப்பு, கதாபாத்திரங்களின் தன்மைகள், நாட்டியம் பார்ப்போர், சீர்தூக்குவோர் மற்றும் பரிசளிப்போர் தகைமைகள், நாட்டிய இசை, இசைக் கருவிகளின் தன்மை, அவற்றின் பயன்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாக நாட்டியம் தொடர்பான அனைத்துச் செய்திகளையும் பரதமுனிவர் தமது நூலில் விரிவாக விளக்கியுள்ளார்.

பரத முனிவர் தரும் சில மேற்கோள்களிலிருந்து, 'சதாசிவ பரதம், பிரம பரதம்' ஆகிய இரு நூல்கள் அவரது நூலிற்கு அடிப்படை நூல்களாக இருந்தனவெனத் தெரிகிறது. ஆயினும் அவ்விரு நூல்களும் இன்று கிடைத்தில.

பரத முனிவரைப் பின்பற்றிப் பல நாடக இலக்கண நூல்களை நாடகவியலாசிரியர்கள் எழுதியுள்ளனர். அவர்களுள் பிருகத்தேசி எழுதிய மதங்க முனிவரும், அபிநய தர்ப்பணம் ஆக்கிய நந்திகேசுரவரும், நிருத்தரத்னாவளி இயற்றிய சாயசேனாபதியும் குறிப்பிடத்தக்கவர்கள்.

பரத முனிவரின் நாட்டிய சாத்திரத்திற்குப் பல உரை நூல்களும் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றில் அபிநவபாரதி என்ற அபிநவகுப்தர் எழுதிய உரை மட்டுமே இன்று கிடைக்கப் பெற்றுள்ளது. அபிநவகுப்தர் கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 11 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர். பரத முனிவரது நாட்டிய சாத்திரம் ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (ஞானா.கு.)

## பரதர்

இவர் இடபர் என்னும் முனிவருக்கும் சயந்திக்கும் மகனாகப் பிறந்தவர். பஞ்சசேநி என்பவளை மணந்து இந்திய நாட்டைக் கோடியாண்டுகள் வரை ஆட்சி புரிந்தார் என்பர். இவர் ஆட்சிபுரிந்ததால் இந்தியா பரத கண்டம் எனப் பெயர் பெற்றது. இவர் தம் ஆட்சி முடிந்த பிறகு முனிவருடைய ஆசிரமத்தை அடைந்து தவம் புரியத் தொடங்கினார். அவ்வாறிருக்குங் காலத்தில் ஒரு நாள் கண்டகி ஆற்றுக்கு நீராடச் சென்றார். அப்பொழுது கருவுற்றிருந்த பெண்மான் ஒன்று சிங்கத்தின் முழக்கத்தைக் கேட்டஞ்சி உடனே குட்டியை ஈன்றுவிட்டு மாண்டு போயிற்று. அதனைக் கண்டதும் அரச முனிவராகிய பரதர், அம் மான்குட்டியிடம் இரக்கங் கொண்டார். அதனைத் தம்முடைய இருப்பிடத்திற்கு எடுத்துக்கொண்டுபோய் வளர்த்தார். எப்பொழுதும் முனிவருக்கு அம்மான்குட்டியின் நினைவு இருந்து கொண்டிருந்தது. இறுதிக் காலத்தில் அம்மானை எண்ணிக் கொண்டே உயிர்விட்டார். அதனால் மறுபிறப்பில் மானாகப் பிறந்தார். மறுபடியும் ஓர் அந்தணனுக்கு மகனாகப் பிறந்தார். அப்பிறப்பில் பித்தனைப் போல் திரிந்து கொண்டிருந்ததனால் சடபரதர் எனப் பெயர் பெற்றார். ஒருநாள் இவர் காட்டில் திரிந்து கொண்டிருந்தபோது, பிள்ளைப் பேற்றின் பொருட்டு நரபலி கொடுக்க எண்ணிய ஒருவன் இவரைக் காளி கோயிலுக்குப் பிடித்துகொண்டு சென்றான். இவர் மீது இரக்கங் கொண்ட காளி, பலி கொடுக்க வந்தவனைக் கொன்று இவரைக் காத்தாள். மேலும் இவர் வழக்கம்போல் திரிந்து கொண்டிருக்கையில் சவ்வீர நாட்டு மன்னன் இரகுகுணனுடைய பல்லக்குச் சுமப்போர் இவரையும் பிடித்துப் பல்லக்குச் சுமக்கச் செய்தனர். இவர் மெதுவாகச் செல்வதைக் கண்ட அரசன் இவர்மீது சினங் கொண்டான். அவன் வினவிய சிலவற்றிற்கு இவர் விடை கூறினார். இவர் ஒரு மெய்யறிவாளர் என்பதை உணர்ந்த மன்னன் இவரிடம் அருளுரை பெற்றான். (சி.கே.சி.)

## பரதன் - I

கோசல நாட்டுச் சக்கரவர்த்தியாக விளங்கிய தசரதனுக்கும், அவனது முப்பெரும் தேவியருள் ஒருவளான கைகேயிக்கும் புத்திர காமேஷ்டி யாகத்தின் பயனாய்ப் பிறந்த மகன். திருமாலின் சுதர்ஷ சக்கராயுதத்தின் அம்சமாக பூச நட்சத்திரத்தில் மீனராசியில் அவதரித்த இவனுக்கு குலகுருவாகிய வசிட்டர், பரதன் என நாமம் சூட்டினார். பங்குனி உத்தரத்தன்று இடம்பெற்ற சீதாராம திருமணத்தைத் தொடர்ந்து பரதன், மாண்டவி என்பவளை மணம் செய்து கொண்டனன்.

தம் தாயாரது தேசமான கேகய நாட்டுக்கு இவன் சென்றிருந்த சமயம், கைகேயி வேண்டிப் பெற்ற வரங்கள் மூலம் இராமன் காடேகியமையையும் இதனால் வருந்தித் தந்தை விண்ணுலகு அடைந்தமையையும் மீளவந்து அறிந்த இவன், இது தொடர்பில் தாயை நிந்தித்தவன். கோசலையின் அடிதொழுது அரற்றியவன். அவளால் புகழப்பட்டவன். தசரதன் கூறியதன் பெயரில் அவனுக்கு இறுதிக் கிரியைகள் செய்ய முடியாமல் வசிட்டரால் விலக்கப்பட்டவன். இராமனை மீளவும் அழைத்து வந்து அரியணை ஏற்றுதற்காய் ஏனையவரோடும் செல்லும் வழியில் குகனாலேயே சந்தேகிக்கப்பட்டு, பின் அவனாலே மிகவும் போற்றப்பட்டவன். இராமனிடம் சென்றும் அரசாள வருமாறு விண்ணப்பித்தவன். இராமன் மறுக்கவே, அவன் திருப் பாதுகைகளை வேண்டிப் பெற்றுவந்து நந்திக் கிராமத்தில் அவற்றைச் சிம்மாசனத்தில் வைத்து தானோர் சேவகனாக நாட்டைப் பரிபாலித்தவன். பதின்நான்கு ஆண்டுகள் நிறைவில் குறித்த தினத்திற்கிடையில் இராமன் நாடு மீளாமை கண்டு தீப்புகப் போனவன். பின் அனுமனின் வரவால் அது தவிர்த்து, இராமனைத் தரிசித்து, தானே வெண்குடை கவித்துநிற்க அவனை அரியணையேற்றிப் பட்டாபிஷேகம் செய்வித்தவன்.

குணத்தாலும், நிறத்தாலும் இராமனை ஒத்தவனாகவும், சில இடங்களில் இராமனை விட உயர்ந்த குணத்தினனாகவும் இராமாயணத்தில் பரதன் பாராட்டப்பட்டிருக்கிறான். நீதிமானாகிய இவன் பரதாழ்வார் என வைணவ மரபிற் சிறப்பிக்கப்படுகிறான்.

இவன், காந்தருவ நகரத்தைப் போரில் வென்று தனது பிள்ளைகளுக்கு வழங்கியவன் என்றும் கூறுவர். (ஸ்ரீ.பி.)

## பரதன் - II

துஷ்யந்தனுக்கும், சகுந்தலைக்கும் மகனாகப் பிறந்த இவன், சம்ராட் பட்டம் பெற்றவன். சுந்தை என்பாளை மணந்து பௌமனுக்குத் தந்தையானவன். அக்கினி சயன யாகம் செய்தவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரத்துவாசர் அருளினால் புமன்யன், உதமன்யன் ஆகியோரைப் பெற்றவன். இவன், தேவயாகம் செய்து பரத்துவாசன் எனும் புதல்வனைப் பெற்றதாக பாகவதம் கூறுகிறது. தனது குருமாருக்கு பலகோடி வெள்ளி யானைகளை இவன் தானம் அளித்தான் என்பர். (ஸ்ரீ.பி.)

# பரம்பொருள்

பரம்பொருள் என்பது, ஒன்றானதாயினும், அது பலவற்றின் மூலமாகும். முழுமையான தூயதாயினும், பகுதியான, ஒழுங்கற்ற உலகினின்றும் வேறுபட்டதன்று. காண்ட்டு எனும் மேலைநாட்டுத் தத்துவ ஞானி, அறிவு, எல்லையற்றதின் முழுமையான அறிவைப் பெறும் நோக்கமுள்ளது எனக் கூறியுள்ளார். சிறிய ஒன்றுடன் ஒப்பிட்டுப் பெரிது எனக் கருதுவதின்றும், முழுமையாகப் பெரிது, எல்லாவற்றிலும் பெரிது என்பதை அவர் வேறுபடுத்துகிறார். முன்னது புலன்சார் அறிவு, பின்னது, அறிவின் எண்ணக் கருத்து. இது, சடப் பொருள், மனித அறிவு ஆகிய இரண்டிற்கும் அடிப்படையானது.

எகல், பரம்பொருளைத் தோற்றங்கள், சுதந்திரமற்றவை ஆகியவற்றினின்றும் வேறுபடுத்துகிறார். மேலும், சுதந்திரமானவை எனக் கருதப்பட்ட தோற்றங்கள், பரம்பொருளுடன் சார்ந்தனவான தோற்றங்களினின்றும் வேறுபடுத்தப்பட்டுள்ளன. தத்துவம், அடிப்படையான கொள்கைகளைப் பற்றியதால், அது ஒரு முடிவான அறிவாக (Absolute Science) இருக்க வேண்டும் என்று செல்லி கூறுகிறார். எல்லாப் பொருள்களும் வரையறுக்கப் பட்டுள்ளதால் தத்துவம் பொருள்களைப் பற்றியதாக அல்லாமல் அறிதல் பற்றியதாயிருக்க வேண்டும். அது பரம்பொருள் (முழுமை) இயலாகும். முழுமை என்பது, அறிதல் அறிவு என்பதன் ஐக்கியமே. அறிவு, தீர்மானத்தினின்றும் (Will) பிரிக்க முடியாதது. இதனால், இறுதியான முழுமை இயங்குவது, சுதந்திரமானது. இம் முழுமை (Absolute) இயற்கையிலும் மனித வரலாற்றிலும் தோற்றமளிக்கிறது. இது தன்னுணர்வு பெறுதற்கு முன்னேறுவது.

எகல், பரம்பொருள் என்பது மனம் என விளக்கியுள்ளார். மேலுமவர் மனம், சமூகம் சுதந்திரத்தின் மேனிலை நோக்கி நகரும்போது, எவ்வாறு வளர்கின்றது, எவ்வாறு தத்துவ ஞானியின் தன்னுணர்வு (Self consciousness) தன்னுடைய முழுமையான தோற்றத்தை அடைகிறது என்றும் விளக்கியுள்ளார். இவ்வாறு எகல், பரம்பொருளைப் பிண்டங்களைத் தன்னுள்ளடக்கிய அண்டமாக, தோற்றத்தைத் தன்னுள்ளடக்கிய உண்மையாக விளக்க முயன்றுள்ளார். எகலின் முடிவு பல்வேறு வகையில் விளக்கப்பட்டுள்ளது. பலர் அதைக் கடவுளாகக் கருதினர். சிலர் அதை முன்னேறும் வரலாற்று மனிதனாகக் கருதினர்.

பிராட்லி தன் தோற்றமும், உண்மையும் (Appearance and Reality) என்னும் நூலில், தோற்றங்கள் முரண்பாடு, தற்பிரதிகூலம் (Self - Contradiction) உள்ளவை. ஆதலின் உண்மை அல்லது பரம்பொருள் சீரானது (Consistent); தோற்றங்களின் தற்பிரதிகூலம் அவற்றின் சம்பந்தத்தினால் உண்டாவதால், பரம்பொருள் சம்பந்தம் பெற்றதாயிருத்தல் கூடாது என எழுதியுள்ளார். சீரான, சம்பந்தமற்ற முழுமையை அனுபவத்தினின்றும் புரிந்து கொள்ள முடிகின்றது. சிந்திப்பதற்கு முன்னுள்ள அனுபவத்தினின்றும் பேசி நிருணயிக்கும்போது, சம்பந்தம் பெற்ற பொருள்கள் தோன்றுகின்றன. இந்தச் சிந்திப்பின் - முன் - அனுபவத்தில் தன்னிலை, படர்க்கை என்பன பிரிவு பெறாமல், எண்ணிக்கையில் பன்மையில்லா வேற்றுமை உள்ளது. இவ் வேற்றுமையின் அனுபவத்திலிருந்து அவற்றிற்கு மேலான உயர்நிலை, ஒன்று எனுங் கருத்தைப் பெறமுடிகிறது. பரம்பொருள் என்பது சம்பந்தத்திற்கு அப்பாற்பட்ட (Supra relational), வேறுபடுத்தப்பட்ட ஐக்கியம். அது ஆன்மாவோ கடவுளோ அன்று. முழுமை பெறாமல் கடவுளிருக்க முடியாது. அதை அடைந்தால் அவன் சமயத்துடன் மறைகிறான்.

உபநிடதங்களில் பரம்பொருளைக் குறிக்கப் பிரமம், ஆத்மா என்ற இரு பதங்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. இவை பரம்பொருளும், ஆன்மாவும் ஒன்றே என்று குறிக்கின்றன. பிரமம் என்பது உயர்ந்தது. அதைவிட வேறு ஒன்றும் சிறந்ததில்லை எனலாம். இப்பதம் மற்றச் சிறிய பரம்பொருள்கள் இருப்பதைக் குறிக்கவில்லை. பிரமத்தைத் தவிர வேறு ஒரு பரம்பொருளில்லை என விளக்குகிறது. அதுவே இரண்டற்றது. அதைவிட உயர்ந்தது இல்லை. அது ஆகாயம், நேரம், போன்றவற்றால் எல்லைக்குட்பட்டதன்று. அது பூமன் (அண்டம் infinite) என்பதே சாத்தியமானது. "எங்கு ஒருவர் ஒன்றையும் பார்க்காமலிருக்கிறாரோ, ஒன்றையும் கேட்காமலிருக்கிறாரோ, ஒன்றையும் அறியாமலிருக்கிறாரோ அதுவே பூமன். அதுவே அழிவற்றது".

பிரமத்தின் தன்மை, பிறிதொன்றின் மூலம் விளக்க முடியாது. எதிர்மறையில் இது அன்று இது அன்று என்றே அதைக் குறிக்க இயலும். இதுவே சத்தியம், ஞானம், ஆனந்தம் என்று நேரிடையாக விளக்கப்பட்ட போதிலும், பிரமம் என்பது இல்லாதது அன்று, சடமன்று, துன்பமானதன்று என்று எதிர்மறையில் குறிக்கப்படும்.

விளக்குவது என்பது வரையறுப்பதாதலால், பிரமம் நிர்க்குணமானது ஒன்று என்றும் கூறமுடியாதது. ஏனெனில் அது எண்ணுதல் எனுஞ்செயல் செய்ய முடியாதது.

உபநிடதங்களில், பிரமம் உலகின் காரணம் என்றும் கூறப்பட்டுள்ளது. குணமற்றது, உலகின் மூலம் என்னும் குணம் பெற்றது என்னும் இம் முரண்பாட்டை நீக்கச் சங்கரர் பாரமார்த்திக, வியவகாரிக என்ற இரு நிலைகளை விளக்கியுள்ளார். இறுதியான உண்மைப்பரம்பொருள் (பிரமம்) என்பது, இரண்டற்றது, சம்பந்தமற்றது என்பதே. மனித விவகார நிலையில், பிரமம், உலகின் காரணமாகிய கடவுளாகத் தோன்றுகின்றது.

பாம்பு கயிற்றில் தோன்றுவது போன்று, உலகம், பரம்பொருளான பிரமத்தில் தோன்றிய ஒரு மாயையான தோற்றம் எனச் சங்கரர் விளக்கியுள்ளார். (ஜி.வி.ச.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரமனையே பாடுவார்

திருத்தொண்டர்களாகிய சிவனடியார்களைப் பற்றி விளக்கமாகக் கூறும் நூல் சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணமாகும். இதைப் பெரியபுராணம் எனவுங்கூறுவர். சேக்கிழார், சுந்தரர் அருளிய *திருத்தொண்டத்தொகையை* முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பிகள் இயற்றிய *திருத்தொண்டர் திருவந்தாதியை* வழிநூலாகவுங் கொண்டு சிவனடியார்கள் வரலாற்றை விரித்துரைக்கின்றார்.

சிவனடியார்களாகிய - நாயன்மார்களைத் தனியடியார்களெனவும், தொகையடியார்களெனவும் இருவகைப்படுத்துவர். தனியடியார்கள் அறுபத்து மூவரெனவும், தொகையடியார்கள் ஒன்பதின்மர் எனவுஞ் சுட்டப்பெறுகின்றனர்.

தனியடியார்களின் பிறப்பு, குலம், ஊர், தொழில், வழிபாடு, ஆகியன பெரியபுராணத்தில் விளங்கவுரைக்கப்பட்டுள்ளன.

தில்லை வாழந்தணர், பொய்யடிமையில்லாத புலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலேவைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலுமடிச் சார்ந்தார் எனத் தொகையடியார் ஒன்பதின்மராவர். இவருள் தில்லை வாழந்தணரும், முப்போதும் திருமேனி தீண்டுவாரும் நீங்கிய ஏழு தொகையடியார்களின் வரலாற்றுக் குறிப்புகள் தெளிவாக இல்லை.

தொகையடியாருள், பரமனையே பாடுவார் என்பார், நான்காம் எண்ணுமுறைக்கண் குறிக்கப்படுகின்றனர். தில்லைக் கூத்தப் பெருமானாகிய பரமனை, உருத்தமனத்தோடே பாடுவாரே இத் தொகையடியாரெனத் *திருத்தொண்டர் திருவந்தாதி* குறிக்கின்றது. சிவபெருமானாகிய பரமனையே பாடுவார் எனத் *திருத்தொண்டத் தொகை* சுட்டுகின்றது. இத்தொடரையே சேக்கிழாரும் எடுத்தாளுகின்றார். மன்றினிடை நடம்புரியும் கூத்தப் பெருமானை உள்ளுருகிப் பாடுவாரே, இப்பரமனையே பாடுவார் ஆவார் எனப் பெரிய புராணம் கூறுகின்றது. ஊருங் குலனும் பிறவுந் தெரிந்திலவேனும் பரமனின் புகழ்பாடுதலையே தம்பணியாகக் கொண்டு வாழ்ந்தவர் இத்தொகையடியார் என்பதில் ஐயமில்லை.

(க.இர.)

## பரமாநந்தி

பரமாநந்தி (கி.பி.1791-1879) காசுமீரக் கவிஞர். இவர் பரமானந்தர் (Paramanad) என்றும் கூறப்படுவார். அந்தணர் வகுப்பைச் சார்ந்தவர். இவருடைய முழுப் பெயர், பண்டிதர் நந்தாராம் என்கின்ற பரமானந்தர் என்பதாகும்.

இவர்தம் வாழ்வின் பெரும்பகுதி மத்தன் என்னும் சிற்றூரில் கழிந்தது. இவரது பரம்பரைத் தொழில் கணக்குப்பிள்ளை எனப்படும் கணக்கெழுதும் தொழிலாகும். அமர்நாத்து என்னும் திருத்தலத்திற்குப் பயணம் செய்யும் சாதுக்கள், முனிவர்கள், சமய குருக்கள் ஆகியோரின் தொடர்பு இவருக்குக் கிடைத்தது. எனவே, இவர்தம் பாடல்களில் இந்து சமயக் கொள்கைகளும் ஆழ்ந்த பக்தி உணர்வும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். அடிப்படையில் இவர் காஷ்மீர சைவம் எனும் பிரிவைப் பின்பற்றியவர் எனலாம். இவர் கிருட்டிணபக்தரும் ஆவார். இவர், சூபிகள், சீக்கியர்கள் ஆகியோரிடமும் தொடர்பு கொண்டிருந்தார். பரமானந்தர், பல்வேறு கருத்து நலன்களைக் கொண்ட எண்ணற்ற கவிதைகளை இயற்றியுள்ளார். அவற்றில் வேதாந்தக் கொள்கையான அத்துவைதக் கருத்து முதன்மை பெற்றுள்ளது. பரமானந்தர், தாம் வாழ்ந்த காலத்தில் காஷ்மீரின் மிகச் சிறந்த இந்துக் கவிஞர் என்னும் சிறப்பினைப் பெற்றிருந்தார்.

பக்தி மற்றும் மறைமெய்ம்மைக், (Mystic) கூறுகள் அடங்கிய இவரது கவிதை இயல்பு கருதிக் காஷகமீர முகலிம் படைப்பாளிகள், இவரைப் புகழ்பெற்ற பாரசீகக் கவிஞரான சனாய் என்பவருடன் ஒப்பிட்டுக் 'காஷ்மீரின் சனாய்' என்று வழங்கினர். காரிபு (Gharib) என்ற புனைபெயரில் பாரசீக மொழியில் சில கசல் களைப் (Gazels) புனைந்துள்ளார். எனினும், இவர் புகழுக்குப் பெரிதும் அடிப்படையாக அமைந்தன இலீலா எனும் வகைமையில் இவர் எழுதிய முப்பெரும் பாடல்களாகும்.

இலீலா என்கின்ற இலக்கிய வகை (Genre) இராமன், கண்ணன், சிவன் ஆகியோருடைய திருவிளையாடல்களைப் (லீலை) பாடு பொருளாகக் கொண்டது. ஒவ்வொரு செய்யுளின் மூன்றாம் அடியும் பல்லவியுடன் சந்த ஒழுங்கு உடையதாக அமைக்கப்பட்டிருக்கும். இலீலா எனும் இவ்வடிவம் வத்சுன் என்னும் வகைமையின் விரிவே என்பர்.

பரமானந்தர் இந்த வடிவத்தை மிகத் திறமையாகக் கையாண்டுள்ளார். இவருடைய மாபெரும் படைப்புகளாகக் கருதப்படுவன: 1) இராதா - சுயம்வரம் (இராதையின் திருமணத் தெரிவு), 2) சிவ - லகன் (சிவபெருமானின் திருமணம்), 3) சுதாம-சரிதம் (சுதாமரின் கதை) என்பனவாகும்.

இராதா - சுயம்வரம் எங்கும் நிறை பரம்பொருளின் தெய்விகத் திருநடனத்தினை உலகியலோடும் ஆன்மிகத்தோடும் இணைத்துக் குறியீட்டு நிலையில் வெளிப்படுத்துகிறது. சிவ-லகன், சிவ-சக்தி இணைப்பை உலகியல் நிலையிலும், தெய்விக நிலையிலும் பேசுகின்றது. சுதாம-சரிதம், உயிர் ஆண்டவனிடம் கொண்ட அசைவிலாப் பிணைப்பைச் சுதாமர் (குசேலர்) கண்ணன் ஆகியோரிடையே இருந்த தெய்விக நட்பைச் சுட்டுகின்றது. இம்மூன்றும் காஷ்மீர இலக்கியத்தின் தன்னிகரற்ற படைப்பாளர் இலால்தே வின் படைப்புகளுக்குப் பின்வந்த மிகச் சிறந்த படைப்புகளாகக் கருதப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலல்லா, மற்றும் நூருதீன் ஆகியோரின் தாக்கம் இவர் கவிதைகளில் உண்டு. மோகினி ரூப் (மோகினி எழில் வடிவம்) எனும் காதற் கவிதையினை எழுதிய புல்புல் நாகமி எனும் புகழ் பெற்ற கவிஞர் இவருடைய சீடர் ஆவார். (நி.நி.)

## பரமாற வம்சம்

**போஜன்:-** பத்தாம் நூற்றாண்டிலே வட இந்தியாவில் ஆட்சி புரிந்த அரசரிற் பரமாற வம்சத்தவர் படைபலத்தில் முதன்மையானவர்கள். மாளவ தேசம் அவர்களின் இராச்சியமாகும். இராஜஸ்தானிலுள்ள அபூ மலைப் பகுதி, வாகட, ஜாவாலிபுர(ம்) பி்ன்மால் ஆகிய பகுதிகளிலும் பரமாற வம்சத்தைச் சேர்ந்தவர்கள் சிறிய இராச்சியங்களை அமைத்திருந்தனர்.

முன்ஜராஜன், சிந்துராஜன் என்போரின் ஆட்சியிலே தங்கள் ஆதிக்கத்தை உறுதிப்படுத்திய பரமாறர் போஜனுடைய காலத்திலே பேரரசர் ஆயினர். கி.பி. 1000 ஆம் ஆண்டளவிலே போஜன் அரசபதவி பெற்றான். இதுவரை கிடைத்துள்ள அவனது சாசனங்கள் கி.பி. 1020 - 1047 ஆகிய காலப்பகுதியைச் சேர்ந்தனவாகும். அவனது ஆதிக்கம் சித்தோர், பு்ான்ஸ்வார, துனகர்பூர், பி்ல்ஸா, காந்தேஷ், கொங்கணம் ஆகிய இடங்கள் வரை பரவியிருந்தது. போஜன் தனது ஆட்சியின் ஆரம்பத்திலே கலச்சூரி காங்கேயதேவன், இராஜேந்திர சோழன் ஆகியோருடன் கூடி ஒரு முன்னணியை ஏற்படுத்திக் கொண்டு சாளுக்கிய மன்னனாகிய ஜயசிங்கனோடு போர் புரிந்தான். போஜனும் அவனது ஆதரவாளரும் ஆரம்பத்திலே சில வெற்றிகளைப் பெற்றனர். ஆயினும், இறுதியிற் சாளுக்கிய மன்னன் அவர்களைத் தோற்கடித்துவிட்டான். பின்பு கி.பி. 1042 இலே சாளுக்கிய அரசனாகப் பதவிபெற்ற சோமேஸ்வரன் வடக்கு நோக்கிப் படையெடுத்துச் சென்று தாரா, உஜ்ஜயினி, மாண்டு ஆகிய பரமாறரின் நகரங்களைச் சூறையாடினான். பரமாற போஜன் தனது இராசதானியிலிருந்து வெளியேற நேர்ந்தது.

போ்ஜன் தென்திசை நோக்கிப் படையெடுத்த காலத்தில் கலிங்க தேசத்துக் கஞ்ஜாம் மாவட்டத்து முகலிங்கம் என்னும் ஆதிநகர் அரசனாகிய இந்திரரதனைத் தோற்கடித்தான். அவனைச் சோழவரசன் தோற்கடித்தான். அவனைச் சோழவரசன் தோற்கடித்தானென்று இராஜேந்திர சோழனுடைய மெய்க்கீர்த்தியிற் சொல்லப்படுகின்றது. சிலாஹார வம்சத்துக் கேசிதேவனை வென்றதும், பே்ாஜன் கொங்கணத்தைக் கைப்பற்றித் தனது இராச்சியத்தோடு இணைத்துக் கொண்டான். குஜராத்தின் தென்பகுதியான லாட்ட இராச்சியத்திலே சௌளுக்கிய வம்சத்துக் கீர்த்திவர்மன் அரசனாகவிருந்தான். கொங்கணத்தின் வடபாலான அந்த இராச்சியத்தின் மீதும் பரமாற போஜன் படையெடுத்தான். புண்டெல்காந்தைக் கைப்பற்றுவதற்கு பே்ாஜன் மேற்கொண்ட முயற்சிகளைச் சந்தெல்லா வம்சத்து வித்தியாதரன் தடுத்து விட்டான்.

அதன் பின்பு கச்சப்பகூாத அரசனாகிய அபி்மன்யுவுடன் உடன்படிக்கை செய்து கொண்டு பே்ாஜன் வடக்கு நோக்கிப் படையெடுத்தான். குவாலியரைக் கைப்பற்றும் முயற்சிகள் பலனளிக்கவில்லை. கன்னோசியில் அரசு புரிந்த இராஷ்டிரகூடர் மீதான போரினால் எதுவித பயனுங் கிடைக்கவில்லை. அவன் சாகாம்பரி மீது படையெடுத்துச் சென்றபொழுது அங்கு சாஹமான வீர்யராமன் பே்ாஜனுக்குப் பணிந்து விட்டான். தென் மார்வாரிலுள்ள நாடோலைக் கைப்பற்றும் முயற்சி பெருந்தோல்வியில் முடிந்தது. சாகமான அணஹில்லன் அங்கு படையெடுத்துச் சென்ற சேனாதிபதியைப் போரிலே கொன்று பரமாறரின் படைகளை அழித்துவிட்டான். ஆயினும், சூராதித்யன் என்னும் சேனாதிபதி, சாஹவாகன(ன்) என்பனைப் போரிலே கொன்று பே்ாஜனின் ஆதிபத்தியத்தைக் காப்பாற்றியதாக உரிமை பாராட்டினான்.

கஸினி முகம்மதுவின் படையெடுப்புகளை எதிர்நோக்கிய ஷாஹி ஆநந்தபாலனுக்கு ஆதரவாக 1008 இல் படையொன்றை பே்ாஜன் அனுப்பியிருந்தான். ஷாஹி அரசரின் இராச்சியத்தைத் துருக்கியர் கைப்பற்றியதும் அவர்களிடமிருந்து தப்பியோடிய ஆநந்தபாலனுக்கு பே்ாஜன் புகலிடம் வழங்கினான். பே்ாஜன் 1043 இலே துருக்கியருக்கு எதிராக இந்து மன்னர்கள் ஏற்படுத்திய முன்னணியில் இணைந்து, ஹான்ஸி, தனேஸர், நாகர்கோட் முதலான இடங்களைத் துருக்கியரின் பிடியிலிருந்து மீட்டான். ஏழு மாதங்களாக லாகூர் கோட்டையும் முற்றுகையிடப்பட்டது. வட இந்தியாவைத் துருக்கியரின் படையெடுப்புகளிலிருந்து பாதுகாப்பதற்குப் பே்ாஜன் ஈடுபட்டதால் அவனைப் பற்றிய அபிமான உணர்வுகள் வட இந்தியாவில் நெடுங்காலம் நிலைபெற்றன.

பே்ாஜனுக்கும் மேற்கிலுள்ள சௌளுக்கியருக்கும் இடையிலே தீராத பகை ஏற்பட்டிருந்தது. பே்ாஜன் தனது ஆட்சியின் ஆரம்பத்திலே சௌளுக்கிய சாமுண்டராஜனை அவமானப்படுத்தி விட்டான். சாமுண்டராஜன் மாளவத்தினூடாகக் காசியாத்திரை சென்ற பொழுது அரசனுக்குரிய வஸ்திரங்களைக் களைந்து விடுமாறு வற்புறுத்தப்பட்டான். அதனாற் சாமுண்டராஜனின் புதல்வர்களான வல்லவராஜனும் துர்லவராஜனும் பரமாறர் மீது இயல்பாகவே பகைமை கொண்டிருந்தனர். துர்லவராஜனின் மகனாகிய முதலாம் வீமனின் ஆட்சிக் காலத்தில் பே்ாஜன் பரமாற தந்துகனின் வசமான அபூமலையைக் கைப்பற்றிக் கொண்டான். தந்துகன் வீமனின் சாமந்தரில் ஒருவன். வீமன் பே்ாஜனுக்கு எதிராகக் கலச்சூரி காங்கேயதேவனின் ஆதரவைப் பெற்றான். மேற்கிலும் கிழக்கிலும் பகைவரோடு போரில் ஈடுபட்ட காலத்தில் பே்ாஜன் நோயுற்று இறந்தான். கி.பி. 1055 இல் மாளவதேசத்தைப் பகைவர்கள் கைப்பற்றினார்கள். பே்ாஜனுக்குப் பின்பு ஜயசிங்கன் அரசபதவி பெற்றான்.

நெடுங்காலம் ஆட்சி புரிந்த பே்ாஜன் பதினோராம் நூற்றாண்டில் வட இந்தியாவில் ஆட்சி புரிந்த மன்னர்களிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரு வீரனாக விளங்கியவன். ஆயினும், போர்களின் மூலம் கொங்கணம் தவிர வேறெந்தப் பிரதேசத்தையும் மாளவ இராச்சியத்தின் பகுதியாக அவனால் இணைத்துக் கொள்ள முடியவில்லை. அவன் தேசப்பற்றுள்ள அரசனாக விளங்கினான் என்பதில் ஐயமில்லை. அயலரசர்களை இடையறாது பகைத்துக் கொண்டமையே அவனது இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு ஏதுவாயிருந்தது.

போராற்றல் மிக்கவனான போஜன் மகாபண்டிதனாகவும் கலாரசிகனாகவும் விளங்கினான். பல்வேறு துறைகளைச் சார்ந்த இருபத்து மூன்றுக்கும் மேலான நூல்கள் அவன் பெயரால் விளங்குகின்றன. அவன் குடியானவர்களுக்குப் பாடசாலைகள் பலவற்றை அமைத்தான். தனபால, உவட்ட முதலான பெரும்புலவர் பலர் அவனது அரண்மனையில் இருந்தனர். போஜபுரி என்னும் புதிய நகரத்தை அவன் அமைத்தான். அங்கு சிவாலயங்கள் பல நிர்மாணிக்கப்பட்டன.

**ஜயசிங்கன்:-** போஜன் இறந்த பின்பு, சாளுக்கி ஆறாம் விக்கிரமாதித்தனின் ஆதரவோடு ஜயசிங்கன் மாளவத்தில் அரசபதவி பெற்றான். சாளுக்கிய இளவரசன் சௌளுக்கியரதும் கலச்சூரிகளினதும் படைகளை மாளவத்திலிருந்து வெளியேற்றினான். அதனால் ஜயசிங்கன் விக்கிரமாதித்தனின் பேராதரவாளனாகி, அவனுடைய போர்களிற் பங்குபற்றினான். இருவரும் ஆந்திர தேசத்தின் மீது படையெடுத்துச் சென்று வேங்கியைக் கைப்பற்றினார்கள். எனினும், காலப்போக்கிலே, கீழைச் சாளுக்கிய வேந்தனாகிய ஏழாம் விஜயாதித்தன் வீரராஜேந்திர சோழனது உதவியோடு அவர்களை ஆந்திர நாட்டிலிருந்து அகற்றினான்.

இளவரசனாகிய விக்கிரமாதித்தனுக்கும் ஜயசிங்கனுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த மிக நெருக்கமான உறவினையுற்று சாளுக்கிய வேந்தனான இரண்டாம் சோமேஸ்வரன் ஐயுறவு கொண்டான். இளவலான விக்கிரமாதித்தன் தனக்கெதிராக சதி செய்வதாக அவன் கருதினான். மாளவ அரசனாகிய ஜயசிங்கன் மீது பழிவாங்கும் நோக்குடன் சௌளுக்கிய கர்ணனோடு உடன்படிக்கை செய்து கொண்டு மாளவத்தின் மீது படையெடுத்தான். ஜயசிங்கன் போரில் மடிந்ததும் சாளுக்கியரும் சௌக்கியரும் மாளவ தேசத்தைக் கைப்பற்றி விட்டனர். அச்சமயத்திலே போஜனின் உறவினனாகிய உதயாதித்தன், சாகமானரின் உதவியோடு, படையெடுப்பாளரைத் தோற்கடித்து மாளவத்தை மீட்டான். அவனுக்கு உதவியாக சாகமான அரசன் மூன்றாம் விக்கிரராஜன் குதிரைப் படையொன்றை அனுப்பியிருந்தான்.

**உதயாதித்தன்:-** உதயாதித்தனின் கல்வெட்டுகள் கி.பி. 1080-1086 ஆகிய காலத்திற்குரியவை. அவனுடைய ஆதிக்கம் தெற்கிலும் வடக்கிலும் கிழக்கிலும் முறையே நிமார் மாவட்டம், ஜாலவார் இராச்சியம், பில்ஸா என்பன வரை பரந்திருந்தது. பில்ஸாவில் அடங்கிய உதேப்பூரில் நீலகண்டேஸ்வரம் என்னும் பிரபல்லியமான ஆலயத்தை அவன் கட்டுவித்தான்.

உதயாதித்தனுக்கு பல ஆண்மக்கள் இருந்தனர். அவனுக்குப் பின் லக்ஷ்மதேவன், நரவர்மன் என்போர் ஆட்சி புரிந்தனர் என்பதை கி.பி. 1104 ஆம் ஆண்டுக்குரிய சாசனம் ஒன்றின் மூலமாக அறியமுடிகின்றது. லக்ஷ்மதேவன் கௌட தேசம், அங்கதேசம், கலிங்கம் என்பவற்றின் மீது படையெடுப்புகளை நடத்தினான். கௌடதேசத்திலே கைவர்த்தகரின் மேலாதிக்கம் நிலவியது. அங்க தேசத்தில் இராஷ்டிர கூடனாகிய மதனதேவன் ஆட்சி புரிந்தான். கலிங்கம் அநந்தவர்மன் சோடகங்களின் ஆட்சியில் அமைந்திருந்தது. ஆந்திர தேசத்திலே முதலாம் குலோத்துங்க சோழனோடு போரிட நேர்ந்தது. ஒரு சமயத்திலே கலச்சூரி கர்ணனைத் தோற்கடித்ததோடு அவனாற் பஞ்சாபின் அதிபனாகிய முகம்மதுவின் படையெடுப்பினையும் முறியடிக்க முடிந்தது. வடக்கிலே பஞ்சாப்பிலுள்ள காங்ரா பள்ளத்தாக்கு வரை அவன் படையெடுத்துச் சென்றான் என்ற ஐதிகமுண்டு.

**ஜகத்தேவன்:-** உதயாதித்தனின் மகனாகிய ஜகத்தேவனை மாளவச் சக்கரவர்த்தி என்று ஹோய்சளரின் சாசனங்கள் வர்ணிக்கின்றன. அவன் சாளுக்கி ஆறாம் விக்கிரமாதித்தனோடு இணைந்து கொண்டு தோரசமுத்திரம் மீது படையெடுத்தான். ஆயினும், ஹோய்சள ஏரெயங்கனின் புதல்வர்கள் அதனைத் தடுத்து நிறுத்திவிட்டனர். அவன் பஸ்தார் இராச்சியத்திலுள்ள சக்ரதுர்க்கத்தைக் கைப்பற்றியதோடு மலஹர, ஆந்திர தேசம் ஆகியவற்றின் அரசரையும் தோற்கடித்தான். குர்ஜர அரசனையும் அபூமலைக்குச் சமீபத்திலே தோற்கடித்தான்.

உதயாதித்தன் சில வருடங்கள் ஆட்சி செய்தபின் நரவர்மனின் சார்பாகப் பதவி துறந்தான். சாளுக்கிய அரசனின் அழைப்பினை ஏற்றுக் கொண்டு விக்கிரமாதித்தனின் அரண்மனையிற் சில காலம் தங்கியிருந்தான். அரச பதவினைத் துறந்த பின்பும் ஜகத்தேவன் கி.பி. 1112 வரை மாளவ இராச்சியத்தின் தென்பகுதியில் அதிபனாயிருந்தான். ஆறாம் விக்கிரமாதித்தன் ஒரு மாகாணத்தை ஆட்சிப்புலமாக அவனுக்கு வழங்கியமை பற்றிப் பிரபந்த சிந்தாமணி என்னும் நூல் குறிப்பிடுகின்றது. நாட்டார் வழக்கிலே ஜகத்தேவனது வீரம் பற்றிய பல கதைகள் உருவாகி நெடுங்காலம் நிலைபெற்றன.

**நரவர்மன்:-** கி.பி. 1094 ஆம் ஆண்டிற்கு முன் அரசனாகிய நரவர்மன் நிர்வாண நாராயணன் என்னும் பட்டத்தைச் சூடிக்கொண்டான். வடக்கிலே பூண்டி இராச்சியத்தின் பகுதிகளும் தெற்கிலே மத்தியப் பிரதேசத்து சாந்தா மாவட்டமும் நரவர்மனின் ஆதிபத்தியத்தின் எல்லைகளாகும். நாக்பூர்பிரதேசம் 1087 ஆம் ஆண்டளவிலே சாளுக்கியரிடமிருந்து பரமாரர்வசம் கைமாறியது. எனினும் நரவர்மன் சந்தெலா அரசன் சல்லக்ஷணவர்மனிடமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகமானராசன் அஜயதேவனிடமும் தோல்வியடைய நேர்ந்தது. விக்கிரமசோழனின் சேனாதிபதியும் பல்லவ வம்சத்தவரில் ஒருவனுமாகிய படைத்தலைவன் மாளவ அரசனைத் தோற்கடித்தமை பற்றிய குறிப்புண்டு. நரவர்மனோடு பன்னிரண்டு வருடங்கள் புரிந்த போரின் விளைவாகச் சௌளுக்கிய வேந்தனான ஜயசிங்க சித்தராஜன் நரவர்வனைச் சிறைப்படுத்தி விட்டான். அவன் சிறையிலிருந்து விமோசனம் பெற்ற பொழுதிலும் பரமாறரின் மேலாதிக்கம் சீர்குலைந்தது. காஷ்மீரத்து அரண்மனையிலிருந்து வெளியேறிய பிக்ஷாசார என்பவனுக்கு கி.பி. 1128 ஆம் ஆண்டளவில் நரவர்மன் புகலிடம் வழங்கினான்.

**யஸோவர்மன்:-** நரவர்மனின் மகனாகிய யஸோவர்மனின் ஆட்சிக் காலத்தில் மாளவ இராச்சியம் சிதைவுற்றது. மாளவத்தின் நடுப்பகுதியில் விஜயபால என்னும் ஒருவன் சுதந்திரமான அரசொன்றை உருவாக்கினான். சந்தெலா அரசனாகிய மதனவர்மன் பில்ஸாப் பிரதேசத்தைக் கைப்பற்றினான். சௌளுக்கிய ஜயசிங்க சித்தராஜனும் நாடோல் அரசனாகிய சாஹமான ஆஸராஜனும் ஒன்றிணைந்து மாளவத்தைத் தாக்கி நரவர்மனைக் கைப்பற்றிவிட்டனர். ஜயசிங்கன் மாளவம் முழுவதையும் கைப்பற்றிக் கொண்டு அவந்திநாதன் என்னும் பட்டத்தையுஞ் சூடிக்கொண்டான். மாளவ தேசம் கி.பி. 1138 வரை ஜயசிங்கன் வசமிருந்தது.

ஜயசிங்கனின் ஆட்சியின் முடிவில் யஸோவர்மனின் மகனாகிய ஜயவர்மன் மாளவத்தில் அதிகாரம் பெற்றான். அவன் வர்த்தமானபுரத்திலிருந்து வெளியிட்ட சாசனமொன்று கிடைத்துள்ளது. ஆயினும், கல்யாணபுரத்துச் சாளுக்கிய ஜகதேசமல்லனும் ஹோய்சள மன்னனாகிய முதலாம் நரசிங்கனும் ஒன்று சேர்ந்து மாளவத்தைக் கைப்பற்றிவிட்டு, பல்லாள என்னுமொருவனை அரசனாக நியமித்தனர். எனினும் சௌளுக்கிய குமாரபாலன் கி.பி. 1143 ஆம் வருடத்திற்குச் சற்றுப் பின்பு பல்லாளனைத் துரத்திவிட்டு பில்ஸா வரையான மாளவப் பகுதிகளைத் தனது இராச்சியத்தோடு இணைத்துக் கொண்டான். இருபது வருடங்களாக மாளவம் சௌளுக்கியர் வசமாயிருந்தது. அந்நாட்களிற் பரமாற வம்சத்தைச் சேர்ந்த இளவரவர்கள் மகாகுடார என்ற பட்டம் பெற்று பேபால், நிமார், ஹேஷன்காத், காந்தேஷ் ஆகிய பகுதிகளிற் சிற்றரசராக விளங்கினர்.

**விந்தியவர்மன்:-** பரமாற ஜயவர்மனின் மகனாகிய விந்தியவர்மன் 12 ஆம் நூற்றாண்டின் ஏழாம் தசாப்தத்திலே மாளவ இராச்சியத்தைப் பகைவரிடமிருந்து மீட்டு அதனைப் புனரமைத்தான். அவனுடைய காலத்திலே பரமாறரின் பெரும்பகைவராகிய சௌளுக்கியரின் ஆதிக்கம் மேற்கிலே சரிவுற்றது. ஆயினும் தக்கணத்திலே சாளுக்கியப் பேரரசின் சீர்குலைவினால் எழுச்சிபெற்ற யாதவரும் ஹோய்சளரும் மாளவத்தின் மீது மீண்டும் மீண்டும் படையெடுத்தனர். ஹோய்சலரை அடக்கும் நோக்குடன், சோழரின் ஆதரவோடு விந்தியவர்மன் கர்நாடகம் மீது படையெடுத்தான். ஆயினும், இரண்டாம் வல்லான தேவன் பரமாறரின் படையெடுப்பினை தடுத்து நிறுத்திவிட்டான். கி.பி. 1189 இற்கு முன் யாதவ வில்லமன் மாளவத்தைச் சூறையாடினான். விந்தியவர்மன் பகைவர்களை வெற்றிகொண்டு பரமாறரின் இராச்சியத்தை வலுப்படுத்தினான்.

விந்தியவர்மனின் மகனாகிய சுபடவர்மனின் ஆட்சியில் பரமாறரின் கவனம் குஜராத் பக்கம் திரும்பியது. அஜயபாலன் இறந்த பின்பு சௌளுக்கிய இராச்சியம் பலவீனமுற்றது. அதன் ஒரு பகுதியான லாட்டவிற் பரமாறர் தங்கள் மேலாதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். சுபடவர்மன் அணஹில்லபாடக என்னும் இராசதானியிற் புகுந்து தபோய், கம்பே ஆகியவற்றிலுள்ள சமணர் கோயில்களைச் சூறையாடிவிட்டு சோமநாதபுரத்தை அடைந்தான். அங்கு பிரதேச அதிபனாக இருந்த ஸ்ரீதரன் படையெடுப்பாளரை எதிர்த்தான். பின்பு, இரண்டாம் வீமனின் அமைச்சனாகிய லவணபிரசாதன் பரமாறரின் படைகளைக் குஜராத்திலிருந்து வெளியேற்றினான்.

**அர்ஜுனவர்மன்:-** சுபட்டவர்மனின் பின்பு அவனது மகனாகிய அர்ஜுனவர்மன் கி.பி. 1210 ஆம் ஆண்டுக்குச் சிறிது முன்பாக அரசபதவினைப் பெற்றான். குஜராத்தில் இரண்டாம் வீமனிடமிருந்து அரசினை அபகரித்துக் கொண்ட ஜயசிங்கனோடு போர்புரிந்து வெற்றி பெற்றான். இருவருக்கு இடையிலே சமாதானம் ஏற்பட்டபொழுது சௌளுக்கிய அரசனின் மகளை அர்ஜுனவர்மனுக்கு மணம்முடித்து வைத்தனர். அவர்களின் கலியாணம் பற்றிய கதையினை அடிப்படையாகக் கொண்டது பாரிஜாத மஞ்சரி என்னும் நாடக நூல். அதனை அர்ஜுனவர்மனின் இராசகுருவான மதனர் எழுதினார்.

யாதவர்களுடன் நடைபெற்ற போரிற் பரமாற மன்னன் தோல்வியுற்றான். யாதவ அரசனாகிய சிங்கனன், லாட்ட அரசனின் சகோதரனும் அர்ஜுனவர்மனின் சாமந்தனுமாகிய சிந்துராசனைப் போரிலே கொன்றுவிட்டான். அர்ஜுனவர்மன் பல நூல்களை எழுதியவன். மதன், ஆஸதர போன்ற புலவர் பலர் அவனது இராசதானியில் இருந்தனர். கி.பி. 1215 - 1218 ஆகிய வருடங்களுக்கிடையில் மகாகுமார ஹரிச்சந்திரனின் மகனாகிய தேவபாலன் அரசபதவி பெற்றான்.

**தேவபாலன்:-** தேவபாலனின் இராச்சியம் பாருகச்சம் முதல் பிடில்ஸா வரை பரந்திருந்தது. யாதவனாகிய சிங்கணன் லாட்டவின் மேற் படையெடுத்துச் சென்று தேவபாலனின் சாமந்தனாகிய சங்கிரம சிங்கனைக் கைப்பற்றிவிட்டான். தேவ பாலனுக்கும் சிங்கணனுக்கும் இடையிலே சமாதானம் ஏற்பட்ட சமயத்தில் லாட்டராசன் விடுதலை பெற்றான்.

சௌளுக்கிய அமைச்சனாகிய வீரதவளன் முஸ்லிம்களின் படையெடுப்பொன்றினை எதிர்கொள்வதற்கு வடக்கே சென்றிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திலே தேவபாலன், சங்கிராம சிங்கன், யாதவ சிங்கணன் ஆகிய மூவரும் தென் குஜராத்தின் மீது படையெடுத்தனர். கம்பேயின் அதிபனாகிய வாஸ்துபாலன் ஒற்றர்கள் மூலமாகச் சிங்கணனுக்கும் தேவபாலனுக்கும் இடையிலே பகைமையினை உண்டுபண்ணினான். அதன் விளைவாக பாருகச்சத்தைச் வீரதவளன் சங்கனிடமிருந்து கைப்பற்றிக் கொண்டான். தேவபாலனின் காலத்தில் முஸ்லிம்கள் மாளவத்தின் மீது படையெடுத்தனர். கி.பி. 1233 இல் இலருட்மிஷ் பி்ல்ஸாவைக் கைப்பற்றிவிட்டு உஜ்ஜயின் நகரத்தைச் சூறையாடினான். ஆயினும் முஸ்லிம்களால் மாளவத்தில் நிலைகொள்ள முடியவில்லை. பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை பரமாற வம்சத்தவரின் ஆட்சி நிலைபெற்றது. கி.பி. 1305 இல் தில்லி சுல்தானியப் படைகள் பரமாற மகாலக தேவனை மாண்டுக் கோட்டையிற் கொன்றுவிட்டு மாளவத்தைக் கைப்பற்றிவிட்டன. அங்கு இராசபுத்திரரின் ஆதிக்கம் முடிவடைந்தது. (சி.ப.)

## பரார்த்த பூசை

திருக்கோயிலில் நடைபெறும் பூசை பரார்த்த பூசையாகும். இந்துக்கள் பூசையினை ஆன்மார்த்தம், பரார்த்தம் எனப்பாகுபடுத்துவர். இந்துக்களின் பொதுவான இப்பாகுபாடு சைவத்துறையினருக்கும் உண்டு.

தன் குருவினால் தனக்களிக்கப்பட்ட லிங்கத்தை தான் இறக்கும் வரை சீடன் பூசித்து வருவது ஆன்மார்த்தமாகும். அதாவது தான் ஆன்ம ஈடேற்றத்துக்காகச் செய்யும் பூசைவழிபாடு.

உலகில் வாழும் அனைத்து உயிர்களின் நலனிற்காக மேற்கொள்ளப்படும் பூசை பரார்த்தபூசை எனப்படும். அனைத்துயிர்க்கும் அருள்புரிய வேண்டி இறை உருவங்களைத் திருக்கோயிலில் பிரதிட்டை செய்து பூசித்தல் பரார்த்த பூசை. சிவாச்சாரியார்களும், ஆசாரிய அபிஷேகம் செய்யப்பெற்றவர்களுமே இப்பூசை செய்வதற்கு தகுதியுடையவர்கள். கோயிலிற் பூசை செய்பவர்களும் முதலில் ஆன்மார்த்த பூசை செய்து அதன் பிறகே பரார்த்த பூசையினைத் தொடங்க வேண்டும் என்பது விதி.

பரார்த்த பூசையில் நித்திய, நைமித்திய, காமிய கிரியைகள் அடங்கும். நித்திய பூசை ஒவ்வொரு நாளும் கோயிலில் நடைபெறும் பூசை வழிபாடாகும். இவை அவ்வவ் கோயில் வசதிகளுக்கும், மரபுகளுக்கும் அமைய இடம்பெறும். திருச்செந்தூர் முதலிய கோயில்களில் பன்னிருவேளை பூசை நிகழ்கிறது. ஆயினும் பெரும்பாலான கோயில்களில் ஆறுகாலப் பூசையே இடம்பெறுகின்றது. இவ்வாறு ஆறுகாலப் பூசை நிகழ்த்த வசதியற்ற இடங்களில் காலை, உச்சி, மாலை நேரப் பூசைகளும் காலை, மாலைப் பூசைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

நைமித்தியக் கிரியை எனினும் விசேஷ கிரியை எனினும் ஒன்றே. இவை குறிப்பிட்ட விசேட தினங்களில் மட்டும் நிகழ்வன. இவ்விசேட வழிபாடுகள் வாரத்துக்கொரு முறை, இல்லது இரு வாரங்களுக்கொரு முறை நிகழலாம். மாதமொரு முறையும், வருடமொரு முறையும், பல வருடங்களுக்கு ஒரு முறை நிகழும் நைமித்தியக் கிரியைகளும் உண்டு. பிரதோஷம், நவராத்திரி, கிருத்திகை ஆருத்திரா பூசை, சிவராத்திரி கிரகண பூசை என்பன இதனுள் அடங்கும்.

பலனை அவாவிச் செய்யும் கிரியைகளே காமியக் கிரியைகள் ஆகும். வழிபாடு பலன் கருதாது மேற்கொள்வதே சிறந்தது. எனினும் பலனை அவாவியே ஒவ்வொரு நிகழ்ச்சியையும் மேற்கொள்வது மானிட இயல்பு. எனவே பலன் கருதிக் கிரியைகள் நிகழ்த்தும் பெரும்பாலோர்க்கு உரியவாறும் கிரியைகளை ஆகமங்கள் விதித்துள்ளன. நித்திய கிரியைகளும், நைமித்தியக் கிரியைகளும் இவ்வாறு பலனை அவாவிச் செய்யும் போது காமியக்கிரியைகளாக அமையும். அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், தீபாராதனை, உற்சவம், ஸ்நபனாபிஷேகம், உருத்திராபிஷேகம், சங்காபிஷேகம் முதலிய அபிஷேகங்களும், விசேட திருவிழாக்களும் காமியக்கிரியைகள் பால் அடங்கும்.

(நி. நி.)

## பரிபாடல்

எட்டுத் தொகை நூல்களில் ஒன்றாகிய இந்நூல் "ஓங்கு பரிபாடல்" எனப் பாராட்டப்படுவது. *பரிபாடல்* என்பது பாட்டு வகைகளுள் ஒன்று. உறுதிப்பொருள் நான்கினுள் இன்பத்தையே பொருளாகக் கொண்டு, மலை விளையாட்டு, புனல் விளையாட்டு முதலியன பற்றி வரும் இசைப்பா ஆகும். இதன் அடிச்சிற்றெல்லை 25 பேரெல்லை 400.

தொகுக்கப்பட்ட பரிபாடலில் ஆரம்பத்தில் சங்ககாலத்துப் பாக்கள் 70 இருந்ததாக அறியமுடிகிறது. அவற்றுள் இப்போது 22 பாடல்களே கிடைக்கின்றன. பழைய உரை, புறத்திரட்டு ஆகிய நூல்களிலிருந்து கிடைக்கும் 2 முழுப் பாடல்களையும் சேர்த்தால் 24 பாடல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் கருதலாம். சிலர் 3 முழுப் பாடல்கள் கிடைத்துள்ளது என்பர். பரிபாடலில் திருமால் குறித்த பாடல்கள் 8, முருகன் குறித்தவை 31, காடுகிழாள் குறித்தது 1, வையை குறித்தன 26, மதுரை குறித்தன 4. இன்று கிடைக்கும் பாடல்களுள் 7 திருமால் குறித்தன, 8 முருகன் குறித்தன, 9 வையை குறித்தன, 1 மதுரை குறித்தது.

பரிபாடலில் கீரைந்தையார், கடுவன் இளவெயினனார், ஆசிரியன் நல்லந்துவனார், மையோடக் கோவனார், மருத்துவன் நல்லச்சுதனார், கரும்பிள்ளைப் பூதனார், நல்வழுதியார், நல் எழுநியார், கேசவனார், இளம்பெரு வழுதியார், நல்லழுசியார், குன்றம் பூதனார், நப்பண்ணார் ஆகிய பதின்மூவர் பாடியுள்ள பாடல்களே இன்று கிடைக்கின்றன. இதனைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் விவரங்கள் தெரியவில்லை. பாடலின் துறை, பாடல் அமைந்துள்ளன, பண் ஆகியன குறித்த சில விவரங்கள் உள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பாடலுக்கும் நிறைவு பாடலுக்கும் பண் விவரம் தரப்படவில்லை. இரண்டாம் பாடல் தொடக்கம் 12ஆம் பாடல் வரையானவற்றுக்கான பண் பாலையாழ். தொடர்ந்த 5 பாடல்களின் பண் நோதிறம். ஏனைய நான்கு பாடல்களின் பண் காந்தாரமாகும். பரிபாடலுக்கு இவ்வாறு பண் வகுத்தோர் நன்னாகனார். பெட்டகனார். கண்ணனாகனார். மருத்துவன் தாமோதரனார். பித்தாமத்தர். மருத்துவன் நல்லச்சுதனார். நாகனார். கேசவனார். ஆசிரியர் நல்லச்சுதனார் ஆகிய பதினன்மர் என்பர்.

பரிபாடலில் தொகுக்கப்பட்டுள்ள பாடல்கள் தோற்றம் பெற்ற காலம் கடைச்சங்க காலத்திற்குப் பிற்பட்டதெனப் பலருங்கூறுவர். மா. இராசமாணிக்கனார் கி.பி. 3ஆம் நூற்றாண்டுக் காலம் எனக் கொள்வர். 11ஆம் பாடலில் வரும் வானிலைக் குறிப்புகளைக் கொண்டு இப்பாடல்களின் காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டெனக் கூறுவோரும் உளர்.

ஆரிய வழிபாட்டு முறைகள் மற்றும் வடமொழிப் புராணக் கதைகள் ஆகியவற்றைப் பரிபாடல் ஏனைய சங்கப் பாடல்களை விடவும் அதிகமாகவே கூறுகின்றது. 'அந்தணர் அருமறைப் பொருளே' (2:57). 'வேதத்து மறை நீ' (3:66) என்றெல்லாம் இறைவன் போற்றப்படுவதிலிருந்து. அந்தணர் வருகையும் வேதச் செல்வாக்கும் மிகுந்த பின்னர் தோற்றம் பெற்ற பாடல்களே என்பதை அறியலாம். வேள்வி மற்றும் பலியிடல் வழக்குகளும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. (2:61-68)

பரிபாடலில் கடவுள் வாழ்த்து என்னும் தலைப்பின் கீழே காணப்படுகின்ற பாடல்கள். இந்த நூலுக்கு வாழ்த்தாக அமைக்கப்பட்டவை அல்ல. அவை திருமால். முருகன் ஆகிய கடவுளர்களைக் குறித்துப் பாடப்பட்டவை. பல்லவர் காலப் பக்தி இலக்கியத்துக்கு வழிகாட்டியவையாக இப் பாடல்களைக் கொள்வர்.

### பரிபாடலில் திருமால்:

இன்று கிடைக்கும் பரிபாடற் பாடல்களில் 1. 2. 3. 4. 13. 15 ஆம் பாடல்களும் உரைகளிலிருந்து கிடைக்கும் 23ஆம் பாடலும் திருமால் குறித்தவை. இவற்றுள். 'கோவல. காவல. மாயா மன்ன: என்று திருமால் பல பெயரிட்டு அழைக்கப்பட்டுள்ளார் (3:83-90) அறன். அளி. மறன். கனலி முதலியவைகள் அனைத்தும் திருமாலாகச் சுட்டப்பட்டுள்ளன. (1:40-50. 3:21-27) அவதாரச் சிறப்புப் போற்றப்பட்டுள்ளது. (2:20-25. 4:10-21. 4:22-24) ஆதிசேடன் (4:36-40) சக்கரப் படை (2:36-49) கருடக் கொடி (4:36-48 ஆகியவற்றின் சிறப்புகளும் போற்றப்பட்டுள்ளன. அருளல் வேண்டுமெனப் பக்தர்கள் விண்ணப்பஞ் செய்வதும் (1:36-39) 'பரவுதும். தொழுது பேணுதும்' எனச் சரணடைவதும் (1:62-65.2:1-19) பயன் சொல்லி வேண்டுவதும் (2:75-76) வணங்கும் படி பிறருக்கு அறிவுறுத்துவதும் (15:46-54) காட்டப்பட்டுள்ளது.

மேலும். பரிபாடலில் திருமாலிருஞ் சோலை முதலான திருமாலின் பதிகளும் இயற்கை வளத்தோடு போற்றப்பட்டுள்ளன (15:30-45) இவை போன்ற பாடல்களே திருத்தலச் சிறப்புரைக்கும் திருமுறை மற்றும் பிரபந்தப் பாக்களுக்கும் தல புராணங்களுக்கும் முன்னோடியானவை.

### பரிபாடலில் முருகன்:

இன்று கிடைக்கும் பாடல்களுள் 5. 8. 9. 14. 17. 18. 19. 21 ஆம் பாடல்கள் முருகன் குறித்தவை. இவற்றுள். முருகன் தாமரையிற் பிறந்தமை (5:12) சிவனிடமிருந்து கருவைத் தாங்கிக் கார்த்திகைப் பெண்கள் பெற்றமை (5:36-49) சூரனைக் கொன்றமை (14:16-18. 17:20-21) போன்ற முருக வரலாற்றோடு தொடர்புடைய செய்திகள் பலவும் பாடப்பட்டுள்ளன. திருவடிப் பெருமை பலவாறாகக் கூறப்பட்டுள்ளது (17:5-8) வேலின் சிறப்பும் (5:1-8) ஏனைய திருக்கரங்களிலே தாங்கியுள்ள படைகளின் விவரமும் (5:63-70) தரப்பட்டுள்ளன. அக்கினியின் கூறு வேலானதும் இந்திரனின் கூறு மயிலானதும் யமனின் கூறு ஆடானதும் கூறப்பட்டுள்ளது (5:56-61) முப்புரம் எரித்தமை முதலியவற்றைப் புரிந்த சிவனாரின் புதல்வன் எனவும் பலவிடங்களிலும் முருகன் போற்றப்பட்டுள்ளான் (5:22-27. 9:1-5)

அடியார்கள் மலரிட்டும் பலியிட்டும் வணங்குவதும் (8:80-82) சாந்து. விளக்கு முதலிய காணிக்கைகள் ஏந்தி வருவதும் (8:90-120) சித்திரிக்கப்பட்டுள்ளன. அவர்கள் பிறவற்றையன்றி அருள். அன்பு. அறன் மூன்றையும் கோரி வழிபடுவதையும் (5:78-81) வெறியாட்டு இடம் பெறுவதையும் (5:14-15) பரிபாடல் காட்டுகின்றது. மேலும் திருப்பரங்குன்றம் முதலிய முருக தலங்களின் சிறப்புகளும் பாராட்டப்பட்டுள்ளன. (8:1-11. 17:10-21) மானுடர்தம் காதலைப் பெரிதும் கூறும் இப்பாக்கள். இவர்களால் வழிபடப்படுகின்ற முருகன் எனக் கூறி இறைப் பெருமையையும் கூறுகின்றன (8:120-130). (ஸ்ரீ. பி.)

## பரிவார தேவதைகள்

கோயிற் கருவறையைச் சுற்றியுள்ள திருச்சுற்றில் நிலை கொண்டுள்ளவை துணைத் தெய்வங்களாகும். இவற்றிற்கென்று தனித்த சிறு கோயில்கள் உள்ளன. மூலவர் திசை நோக்கி இருக்கும்படி இக்கோயில்கள் அமைக்கப்படும். இந்தியாவில் இத்தேவதைகளை நிறுவும் வழக்கம் ஏறக்குறைய கி.பி. 6-ஆம் நூற்றாண்டளவிலே தோன்றியது. பஞ்சாயதன (Pachayatna) என்னும் ஐந்தரங்க வடிவக் கோயில் அமைப்பு முறையை ஒட்டிப் பரிவார தேவதைகளை நிறுவும் வழக்கம் இருந்துள்ளது. தக்கணத்திலும். தென்னிந்தியாவிலும் சற்றேறக்குறைய கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் பரிவார தேவதைகள். கோயில்களில் அமைக்கப்பட்டிருக்குமாற்றைக் காணலாம். காஞ்சிபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலாசநாதர் கோயிலில் திருச்சுற்றுச் சுவரை ஒட்டியுள்ள பல சிறு மாடங்களில் பரிவார தேவதைகளை நிறுவியுள்ளனர். கணேசர், துர்க்கை, சுப்பிரமணியர், திருமாலின் சில அவதாரங்கள், பிரமன், சப்தமாதர்கள், அகத்தியர், சண்டிகேசுவரர் ஆகியோரின் கோயில்கள், கருவறையைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தவிர அக்கினி, எமன், ஈசானன், ஏகாதச ருத்திரர்கள், துவாதசருத்திரர்கள் ஆகிய பரிவார தேவதைகளும் நிறுவப்பட்டுள்ளன. இம்முறையைப் பின்பற்றி முத்தரையர் கோயில்களிலும், பின்னர் சோழர் கோயில்களிலும் பரிவார தேவதைகள் அமைக்கப்பட்டுள்ளன. சோழர் காலத்தில் பரிவார தேவதைகளின் உருவங்களை எவ்விடத்தில் அமைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு அவற்றுக்கெனத் தனிக் கோயில்கள் கட்டப்பட்டன. அதன்படி தென்கிழக்கில் சூரியனும், தெற்கில் சப்தமாதர்களும், தென்மேற்கில் கணேசரும், மேற்கில் சுப்பிரமணியரும், வடமேற்கில் ஜேஷ்டா தேவியும், வடக்கிற் சண்டிகேசுவரரும் வடகிழக்கில் சந்திரனும், கிழக்கில் நந்தியும் என்ற முறை நிர்ணயமாயிற்று. இம்முறை சோழர் கோயில்களிற் பின்பற்றப்பட்டது. நங்கவரம், திருக்கட்டளை, நார்த்தாமலை ஆகிய கோயில்களில் இம்முறை காணப்பட்டுள்ளது.

பரிவார தேவதைகளுக்குக் கோயில்கள் எடுப்பிப்பது பற்றிச் சில நூல்கள் குறிக்கின்றன. *மானசாரம்* என்னும் நூல், சிவன் கோயிலைச் சுற்றி எட்டுத் திசைகளிலும் எட்டுத்துணைத் தெய்வங்களை அமைக்கவேண்டும் என்று குறிக்கும். மேலும், இரண்டாம் மூன்றாம் சுற்றுகளில் முறையே 16, 32 துணைக் கடவுள்களை அமைக்க வேண்டும் என்றும் அது கூறுகிறது.

சிவன் கோயில்களிலேயன்றித் திருமால் கோயில்களிலும் பரிவார தேவதைகள் அமைப்பதுண்டு. திருமால் கோயில்களில் பின்பற்றப்படும் ஆகமங்களின்படி பரிவாரதேவதைகளை அமைக்க வேண்டுமென்றாலும், பெரும்பாலான கோயில்களில் அவை அமைக்கப்படவில்லை. சில கோயில்களில், வாமன அவதாரம், ஆஞ்சநேயர், நரசிம்மர், நிருதி, அயக்கிரீவர், அம்பிகை, சூரியன், பிரமன், சிவன் ஆகிய பரிவார தேவதைகளைக் காணலாம்.

( தே.ஹ.)

## பல்லவர்

பல்லவர் காலம் தமிழக வரலாற்றில் மிகவும் நீண்டவொரு காலப்பகுதியாகும். அது சமுதாய அமைப்பிலும் பண்பாட்டு வளர்ச்சிகளிலும் பல பிரதானமான மாற்றங்கள் ஏற்பட்ட காலப் பகுதியாகும்.

இலக்கிய வரலாற்றாசிரியர்கள் கி.பி. 600-900 ஆகிய காலப் பகுதியைப் பல்லவர் காலம் எனக் கொள்வர். ஆயினும், பல்லவரின் ஆட்சி தொண்டை நாட்டில் ஆறாம் நூற்றாண்டுக்கு நெடுங்காலத்திற்கு முன் ஏற்பட்டுவிட்டது. குப்தப் பேரரசனாகிய சமுத்திரகுப்தன் நான்காம் நூற்றாண்டின் முற்பகுதியிலே தக்ஷிணா பதத்தின் மீது படையெடுத்துச் சென்றபொழுது காஞ்சியிற் பல்லவனாகிய விஷ்ணுகோபன் அரசனாகவிருந்தான். அவனுக்கு முற்பட்ட பல்லவ மன்னர் பலரின் பெயர்கள் பல்லவர்களின் பட்டயங்களிற் காணப்படுகின்றன. எனவே, மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிற் காஞ்சியிலே பல்லவரின் ஆட்சி ஆரம்பமாகி விட்டதென்று கருதலாம். இதன் அடிப்படையிலே தென்னிந்திய வரலாறு பற்றிய காலவரையறையை மீள்பரிசீலனை செய்வது அவசியமாகின்றது.

பல்லவரின் ஆட்சிக் காலம் ஏறக்குறைய ஆறு நூற்றாண்டுகளை உள்ளடக்கியதாகும். அதனை முதலாம் மகேந்திரவர்மனுக்கு முற்பட்ட காலப்பகுதி, அதற்குப் பிற்பட்ட காலப் பகுதி என இரு பிரிவுகளாக வகுத்து நோக்குவது பொருத்தமானது. முதலாவது காலப் பகுதியிலே பல்லவர்கள் தொண்டை நாட்டையும் கிருஷ்ணாநதி வரை பரந்துள்ள ஆந்திரர் பிரதேசங்களையும் ஆட்சி புரிந்தனர். அக்காலத்தில் அவர்கள் வழங்கிய நன்கொடைகள் பற்றிய பட்டயங்கள் ஆந்திரப் பிரதேசத்திலிருந்து கிடைத்துள்ளன. அவை பிரம்மதேயங்கள், தேவகுலம் என்று சொல்லப்படும் கோயில்கள் என்பன பற்றி யனவாகும். காலத்தால் மிக முற்பட்ட சாசனங்கள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டன. அதற்குப் பின்னுள்ள காலகட்டத்திலே பட்டயங்களைச் சமஸ்கிருதமொழியில் எழுதினார்கள். தமிழ்மொழி வழங்காத நிலப்பகுதிகளிலுள்ள நிறுவனங்களைப் பற்றியன என்பதால் அப்பட்டயங்கள் அம்மொழிகளில் எழுதப்பட்டன. சாசன வழக்கினைப் பொறுத்த வரையிலும் சமகாலத்திலே தக்கிணத்தில் அதுவே வழமையாகும். இதனைப் புரிந்து கொள்ளாத முற்காலத்து வரலாற்றாசிரியர் சிலர் பல்லவர் வடதேசத்து உற்பத்தி உடையவர்கள் என்றும் அங்கிருந்து தென்னாட்டிற்கு வந்தவர்கள் என்றுங் கருதினார்கள். பல்லவர்களை அன்னியர்களாகத் தமிழ்நாட்டவர்கள் கருதியமைக்கான சான்றுகள் கிடைக்க வில்லை. **காடவர்கோன்** என்றும் **தொண்டையர் கோன்** என்றும் அவர்களைக் குறிப்பிடுவது நெடுங்கால வழமையாகும்.

பல்லவர் காலத்தின் முதலாவது கட்டமாகிய மூன்று நூற்றாண்டுகளிலும் தமிழக அரசியல் நிலையிற் பெருமாற்றங்கள் ஏற்பட்டன. சோழநாட்டிற் சோழரின் ஆட்சி மறைந்தது. அதேபோலத் தென்தமிழ் நாட்டிலும் பாண்டியர் அதிகாரம் இழந்தான். அந்நாடுகளிற் களப்பிரரின் ஆதிக்கம் ஏற்பட்டது. அவர்களின் வம்சவரலாறு பற்றிய விவரங்கள் தெளிவாகத் தெரிய வில்லை. சாளுக்கியர், பல்லவர், பாண்டியர் ஆகியோரின் சாசனங்களிற் களப்பிரரை வெற்றி கொண்டமை சிறப்புமிகு சாதனையாகச் சொல்லப்படுவதால் களப்பிரர் ஒரு காலகட்டத்தில் மிகுந்த வலிமை பெற்றிருந்தனர் என்பதில் ஐயமில்லை. ஏழாம் நூற்றாண்டில் அவர்களின் ஆதிக்கம் ஒழிந்தது. பாண்டிய வம்சம் கடுங்கோனின் காலத்தில் மீண்டும் அதிகாரம் பெற்றது. சோழ நாட்டிற் சிம்மவிஷ்ணுவின் காலத்திலே (576-600) பல்லவரின் ஆதிக்கம் பரவத் தொடங்கியது. மகேந்திரவர்மனின் காலத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காவிரிக் கரைவரை பல்லவரின் மேலாதிக்கம் ஏற்பட்டிருந்தது. அதேகாலத்திலே பல்லவர் வசமிருந்த வேங்கி மண்டலத்தை சாளுக்கிய மன்னனாகிய புலிகேசி கைப்பற்றிக் கொண்டான்.

பல்லவர் ஆட்சிக் காலத்துப் பிற்பகுதியான மூன்று நூற்றாண்டுகளிலும் தெற்கிலே பாண்டியரின் ஆதிக்கம் ஏற்பட்டிருந்தது. பாண்டிய மன்னர் கொங்கு தேசம், வேணாடு, ஆய்குலத்தவர் வசமான ஓய்மாநாடு என்பவற்றின் மேலும் மேலாதிக்கம் பெற்றிருந்தனர். காவிரியின் தென்கரை வரையான சோழநாடும் பாண்டியர் வசமாகியது. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை முதலிய மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகளை ஆட்சி புரிந்த முத்தரையர் ஆரம்பத்திலே பல்லவரின் மேலாதிக்கத்தினுள் அடங்கியிருந்தனர். பின்னொரு காலகட்டத்தில் வரகுண பாண்டியன், மாறன் சடையன் என்போரின் காலங்களில் முத்தரையர் பாண்டியர் பக்கஞ் சார்ந்திருக்க நேர்ந்தது.

பல்லவர் காலத்துத் தமிழகத்தின் சமூக - பண்பாட்டு நிலைகளைப் பற்றிப் பேசுமிடத்து பாண்டியரைப் பற்றியும் அவர்களின் ஆட்சியில் அடங்கிய பகுதிகளைப் பற்றியுங் கவனித்தல் வேண்டும்.

அந்த ஆறு நூற்றாண்டுகளிலும் தமிழகச் சமுதாயத்திலே பெருமாற்றங்கள் ஏற்பட்டன. விவசாயம், குடிசைக் கைத்தொழில்கள், வாணிபம் ஆகியவற்றிலே அதிக முன்னேற்றங்கள் ஏற்பட்டன. குளங்களைப் பற்றியும் கால்வாய்களைப் பற்றியும் சாசனக் குறிப்புகள் கிடைக்கின்றன. விளைநிலங்களும் குடிகளும் பெருகி வந்தமைக்கு அது ஒரு அறிகுறியாகலாம். முல்லைநிலப்பகுதிகளிலே காடுகள் பல அழிக்கப் பெற்று அவற்றிலே வயல் நிலங்களும் தோப்புகளும் குடியிருப்புகளும் மேலதிகமாக உருவாக்கப்பட்டன. அருவா நாடு, அருவா வடதலை என்று முற்காலங்களில் வர்ணிக்கப் பெற்ற பகுதிகளில் உற்பத்தியும் சனப்பெருக்கமும் குறிப்பிடத்தக்க அளவிலே விருத்தி பெற்றன. தமிழகத்திலே தொண்டைநாடு, நடு நாடு என்பன அத்தகைய மாற்றங்களினால் முதன்மை பெற்றன.

தொண்டைமான் இளந்திரையனது காலத்திலே சிறப்புற்றிருந்த காஞ்சி நகரம் அதற்குப் பின் பெருநகரமாகியது. பருத்தி, பட்டாடைகள், எண்ணெய், தானியம், வெல்லம் முதலிய பொருட்களின் பரிவர்த்தனை நிலையமாக அது பெருவளர்ச்சி கண்டது. அங்கே மாநகரம் என்னும் பெருவணிக நகரம் உருவாகியது. மாநகரமான காஞ்சிபுரத்து வணிகர் தமிழகத்தின் பல பகுதிகளோடும் அதற்கப்பால் அமைந்துள்ள தேசங்களோடும் வாணிபத்தின் காரணமாகத் தொடர்பு கொண்டிருந்தனர். காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பலம் மிகுந்த இராச்சிய மொன்றைப் பல்லவரால் அமைத்துக் கொள்ள முடிந்தது.

தமிழகத்தின் பிரதான துறைமுகப் பட்டினம் என்ற நிலையைக் காவிரிப்பூம்பட்டினம் இழந்துவிட்டது. அதனிடத்தை மாமல்லபுரம் பெற்றது. காஞ்சிபுரத்தைப் போன்று மாமல்லப்புரமும் பெருவணிக நகரமாகி மாநகரமாகியது. சொர்ணபூமி, சீனம் ஆகியவற்றிலிருந்து சந்தனம், அகில், கற்பூரம் முதலிய வாசனைப் பொருட்களையும் பட்டு வகைகளையும் உலோகப் பொருட்களையும் வணிகர் கப்பல்களில் ஏற்றி வந்தனர். வங்கம், கலிங்கம், மலையாளம், ஈழம் ஆகிய தேசங்களிலிருந்தும் வணிகக் கப்பல்கள் அங்கு சென்றன. சோழநாட்டுத் துறைமுகங்களில் நாகப்பட்டினம் முதன்மை பெற்றது.

கல்வி முறை, சிந்தனை, வழிபாடு போன்றவற்றைப் பொறுத்தவரையில் பெருமாற்றங்கள் ஏற்பட்டன. இக்காலப் பகுதியிலே தமிழகம் இந்திய துணைக் கண்டத்தின் பொதுமையான கலாசார நீரோட்டத்தில் இணைந்து விட்டது. கிறிஸ்து சகாப்தத்தின் முற்பட்ட காலம் முதலாகச் சமணமும் வைதீகச் சமயநெறிகளும் காலூன்றிவிட்டன. காலப்போக்கில் அவற்றின் செல்வாக்கு மேலோங்கியது. மன்னரும் பெரு வணிகர்களும் வைதீகச் சடங்குகளிலும் வேள்விகளிலும் விருப்புக் கொண்டனர். முடியாட்சியை நிலைப்படுத்துவதற்கு மன்னர்கள் வேதியரையும் வைதீக கருமங்களையும் பயன்படுத்தினார்கள். ஆதிகாலப் பாண்டியரில் ஒருவனான முதுகுடுமிப் பெருவழுதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகசாலைகளை அமைப்பித்தான். அவன் வேதம் வல்ல பிராமணருக்கு வேள்விக்குடி என்னும் ஊரைப் பிரமதேயமாக வழங்கினான். இராஜசூயம் என்னும் வேள்வியினைச் செய்தமையால் பெருநற்கிள்ளி என்னுஞ் சோழனை இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்று குறிப்பிட்டனர். பல்லவரின் ஆட்சி காஞ்சிபுரத்தில் ஏற்பட்ட காலம் முதலாக மன்னர்கள் பொதுவாக வைதீகச் சடங்குகளைச் செய்வித்தனர். அரண்மனைக் கலாசாரம் வைதீக கலாசாரமாகியது. அரசரின் வழமைகளை வேளிர் குலத்தவரும் பெருவணிகரும் பின்பற்றினர். சமஸ்கிருத மொழிநூல்களிலே சொல்லப்படும் வாழ்க்கை நெறியினையும் சடங்குகளையும் பின்பற்றுவது தமிழகத்து மேலோர் குழாம்களிற் பொதுவழக்காகியது.

வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் வல்ல வேதியருக்கும் மன்னருக்கும் இடையிலே நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டன. மன்னரின் ஆதரவிற் பிரம்மதேயங்கள் பலவாகிப் பெருகின. அவற்றிலே வேதங்களையும் சாஸ்திரங்களையும் இலக்கண இலக்கிய நூல்களையும் போதிக்கும் சாலைகளும் கல்லூரிகளும் ஏற்படுத்தப்பட்டன. சமஸ்கிருத மொழி, இலக்கியம் ஆகியவற்றின் செல்வாக்கு மிகுந்தளவில் ஏற்பட்டது. வைதீகப் பிராமணர் சமஸ்கிருதம், தமிழ் ஆகிய இரண்டிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தனர். ஆனாற் சமண, பௌத்த முனிவர்களிற் பலர் அவற்றோடு மேலதிகமாகப் பிராகிருத மொழியிலுந் தேர்ச்சி பெற்றிருந்தனர். சமஸ்கிருதம், பிராகிருதம் ஆகியவற்றின் செல்வாக்கின் காரணமாகத் தமிழ் வளம் பெற்று விருத்தியடைந்தது. சமய சிந்தனை, உலகியல், கலைகள், ஆட்சிமுறை முதலியன தொடர்பான நுட்பமான விடயங்களை விளக்கவல்ல ஆற்றல் பொருந்திய சொல்வளங் கொண்ட மொழியாக அது விருத்தி பெற்றது. பரதகண்டத்திலுள்ள பிறதேசங்களோடும், கடல் கடந்த தேசங்களோடும் தொடர்பு கொள்வதற்குச் சமஸ்கிருத மொழி பயன்பட்டது. அம் மொழியினை எழுதுவதற்குத் தொண்டை நாட்டில் ஒரு புதிய எழுத்து முறையை உருவாக்கினார்கள். அது பல்லவகிரந்தம் எனப்படும். தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்கள் அதனைத் தென்கிழக்காசிய நாடுகளில் அறிமுகஞ் செய்தனர். அது அங்கு பல நூற்றாண்டுகளாக வழங்கி வந்தது. மாமல்லபுரம் போன்ற துறைமுகப் பட்டினங்கள் மூலமாகப் பல்லவர் காலத்திலே தமிழகத்தில் விருத்தி பெற்ற கலாசாரத்தின் அம்சங்கள் தென்கிழக்காசிய நாடுகளை அடைந்தன. கட்டடக்கலை, சிற்பக்கலை, வழிபாட்டு முறைகள், இலக்கிய மரபுகள் என்பவை அவற்றிற் குறிப்பிடத்தக்கவை. காம்போஜம், சம்பா, சாவகம் ஆகியவற்றிலுள்ள இராச்சியங்களிற் பல்லவர்களதும் பாண்டியர் களதும் அரசியல் மரபுகள் ஓரளவிற்குப் பின்பற்றப்பட்டன.

## முடியாட்சியும் நிர்வாக முறையும்

தமிழகத்தில் ஒரு ஒழுங்கான நிர்வாக முறை பல்லவர்களால் முதல் முதலாக உருவாக்கப்பட்டது. அரசின் தோற்றமும் நகரங்களின் வளர்ச்சியும் தென்னிந்தியாவிலே பெருங்கற் பண்பாட்டின் அம்சங்களாகும். பத்துப்பாட்டு நூல்களிலும் தொகை நூல்களிலும் அவற்றின் பரிணாம வளர்ச்சியினைக் கண்டுகொள்ளலாம். பண்டைய தமிழகத்திலே பல சிற்றரசுகள் உருவாகியிருந்தன. அவை பாலை தவிர்ந்த நால்வகை நிலங்களிலும் பரந்து காணப்பட்டன. கோ, கோன், வேள் என்னும் பட்டங்கள் அவற்றின் தலைவர்களுக்கு உரியனவாகும். அவர்களின் பதவிகளும் பரம்பரை உரிமையின் வழிப்பட்டனவாகும். அவர்களிற் சோழர், பாண்டியர், சேரர் ஆகிய குலங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அரசருக்குரிய சின்னங்களையும் இலச்சினைகளையும் கொண்டிருந்தனர். அவர்களை முடியுடை வேந்தர் என்று சொல்வது மரபு. அந்த மரபும் எப்பொழுது ஆரம்பமாகியது என்பது தெளிவாகத் தெரியவில்லை. தொல்காப்பியம் அவர்களைப் பற்றியும் குறுநில மன்னரைப் பற்றியுங் கூறும். கொடி, குடை, கடிமரம், முரசம், குலச் சின்னம் ஆகியன அரச சின்னங்களாக அமைந்திருந்தன. பல்லவர் காலத்திற்கு முன்பு மூவேந்தர்கள் மட்டுமன்றி மலையமான்களும் அதிகமான்களும் நாணயங்களை வெளியிட்டனர். ஆயினும், மூவேந்தரின் ஆள்புலங்கள் எவ்வாறு அமைந்திருந்தன ? அவர்கள் குடிகள் மீது எத்தகைய அதிகாரஞ் செலுத்தினார்கள்? குடிகளுக்கும் அவர்களுக்கும் இடையே எத்தகைய உறவுகள் ஏற்பட்டிருந்தன? இவ்வாறான வினாக்களுக்குத் தெளிவான விளக்கஞ் சொல்ல முடியாது. இலக்கியக் குறிப்புகளின் அடிப்படையில் அவர்கள் இராசதானிகளை அமைத்திருந்தார்கள் என்பதையும், சுங்க வரிகளையும் வாணிப வரிகளையும் சேர்ப்பதில் ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதையும் அறிய முடிகின்றது. அவர்களாற் படைகளை வைத்திருக்க முடிந்தது. அவர்கள் புரிந்த போர்கள் எல்லாம் உள்நாட்டுப் போர்களாகவே காணப்பட்டன. வேளிர்களோடும் குறுநில மன்னர்களோடும் இடையறாத போர்களை மேற்கொண்டனர். அயலிலுள்ள நாடுகளைத் தாக்கி மந்தைகளையும் வேறு செல்வங்ளையுங் கவர்ந்து கொள்வதிற் காலத்தைக் கழித்தனர். இராச்சியங்களை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குவதில் அவர்கள் பல பிரயத்தனங்களை மேற்கொண்ட பொழுதும் அவர்களின் வீரப் பிரதாபங்களினால் இராச்சியங்களின் அபிவிருத்தி முன்னேற்றங் கண்டிருக்கக் கூடுமெனினும் அது பூரணமாகவில்லை. தமிழகத்துச் சமுதாயப் பிரிவுகளிடையே வேற்றுமைகள் வலுப்பெற்றிருந்தன. அவை பிராந்திய அடிப்படையில் அமைந்திருந்தன. அந்தக் காலகட்டத்திலே சமுதாயச் சேர்க்கையானது அடிமட்டத்தில் ஏற்பட்டு வந்தது. அது உற்பத்தி முறை, பண்டமாற்று முறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இனவுறவுகளும் குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவம் பெற்றிருந்தன. அவ்வாறான சூழ்நிலையில் நாடு என்ற உணர்வே ஏற்படக்கூடியதாக இருந்தது. நாடுகள் நூற்றுக்கணக்கானவை. நாட்டுத் தலைவனாகிய கோன் குடிகளின் உணர்ச்சி பூர்வமான ஆதரவைப் பெற்றிருந்தான். முடிமன்னரின் இராசதானி நாடுகளிலுள்ள குடிகளைப் பொறுத்தவரையில் மிகத் தூரத்திலுள்ள ஒன்று. அன்னியமானதென்றும் கொள்ளப்படக் கூடியது. வேளிர்களிற் சிலர் நாடுகளிற் சிலவற்றை வசப்படுத்தி அவற்றின்மேல் ஆதிக்கம் பெற்றிருந்தனர்.

முடிமன்னராலும் வரையறையான நிர்வாக ஒழுங்குகளையும் எல்லைகளையுங் கொண்ட இராச்சியங்களை உருவாக்கிக் கொள்ள முடியவில்லை. பல்லவரின் ஆட்சி ஏற்பட்டதோடு இந்நிலை மாறிவிடுகின்றது.

புதிய சிந்தனைகளின் மூலமாக முடியாட்சி தொடர்பான கோட்பாடுகள் அழுத்தம் பெற்றன. அரசனுக்கும் குடிகளுக்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்புகள், கடமைகள் என்பன அவற்றில் வலியுறுத்தப்பட்டன. அர்த்தசாஸ்திரம், தர்மசாஸ்திரம் ஆகியவற்றிலுள்ள சிந்தனைகளின் சாயல்கள் அவற்றிலே படிந்துள்ளன. இராச்சியம் முழுவதற்கும் உரியதும் மன்னனை நாயகனாகக் கொண்டதுமான பரிபாலன முறையொன்றினைப் பல்லவரின் சாசனங்கள் பிரதிபலிக்கின்றன. நீதி, நீதி பரிபாலனம் என்பவற்றை நிலைப்படுத்துவது மன்னனின் தலையாய கடன் என்பது வலியுறுத்தப்பட்டது. சிலப்பதிகாரம் மூலமாக இதனைத் தெட்டத்தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. சமகாலத் தமிழகத்திலே ஏற்பட்டிருந்த அரசியல் வழக்கத்தினையும் சிந்தனைகளையும் திருக்குறள் பிரதிபலிக்கின்றது என்று கொள்ளலாம்.

இயற்கை எல்லைகளைக் கொண்ட நாடுகளை இராச்சியமாக இணைத்துக் கொள்வதற்குப் புதிய சிந்தனைகளும் கோட்பாடுகளும் ஏதுவாயிருந்தன. நாட்டுத் தலைவனாகிய கோன் முடிமன்னனுக்குப் பணிந்து, அவனோடு இணைந்து, தனது நலன்களைக் காத்துச் செயற்படுவதற்கு ஏதுவான சூழ்நிலை உருவாகியது. பல்லவர்கள் புரிந்த போர்கள் பெரும்பான்மையும் அயல்நாட்டு மன்னர்களுக்கு எதிரானவை. அவை சாளுக்கியர், இராஷ்டிரகூடர், பாண்டியர்கள் முதலியோருக்கு எதிரானவை.



அவர்களும் பெரு வலி படைத்தவர்கள். ஆயினும், பல்லவர் ஆறு நூற்றாண்டுகளாக அதிகாரஞ் செலுத்த முடிந்தது. இராச்சிய எல்லைகளுக்குள்ளே வேளிர், கோன் போன்ற குறுநில மன்னர்கள் பல தடவைகளாகக் கிளர்ச்சிகள் புரிந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் இராச்சிய பரிபாலனத்தில் உயர்பதவிகளைப் பெற்றுச் சாமத்தராகி விடுகின்றனர். இத்தகைய நிலை முதலாம் பாண்டியப் பேரரசிலும் ஏற்பட்டிருந்தது.

சமய, பண்பாட்டு நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களும் முடியாட்சியும் இராச்சியமும் விருத்தி பெறுவதற்கு ஏதுவாயிருந்தன. பிரம்மதேயம், தேவதானம், பள்ளிச்சந்தம், நகரம் என்னும் அமைப்புகள் இக்காலத்திலே உருவாக்கப்பட்டன. அவை மன்னரின் ஆதரவுடன் உருவாக்கப்பட்டவை, சுதந்திரமாக இயங்கியவை. செல்வமுஞ், செல்வாக்கும் பலமுங் கொண்ட அவ்வமைப்புகள் மன்னரின் செல்வாக்கும், அதிகாரமும் மேலோங்குவதற்கு ஏதுவாயிருந்தன. அதனை நன்குணர்ந்த மன்னர்கள் அவற்றை அமைத்துக் கொள்வதில் ஆர்வங் கொண்டனர்.

*எண்ணிறந்த பிரமதேயமும் எண்ணிறந்த தேவதானமும்*
*எண்ணிறந்த பள்ளிச் சந்தமும் எத்திசையு மினிதியற்றி*

என்னும் தொடர்கள் சின்னமனூர் சாசனத்திலே காணப்படுகின்றன.

பிரம்மதேயம், தேவதானம், நகரம், பள்ளிச்சந்தம் என்பன பலவாகிப் பெருகி விருத்தி பெற்றதால் இனவுறவுகளை அடிப்படையாகக் கொண்ட புராதனமான சமுதாயக் கட்டமைப்புகள் சீர்குலைந்தன. கோயில், சமணப்பள்ளி, பிரமதேயம், நகரம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு சேவைகள் மறுசீராக்கம் பெற்றன. இவை அனைத்துடனும் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்த வணிக கணங்கள் செல்வமும் படைபலமுங் கொண்டிருந்தமையால் நாடுகளில் அவர்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்றனர். இராசதானிகளின் அதிகாரம் மேலோங்குவதற்கு ஏதுவான சூழ்நிலை உருவாகியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னரும் வைதீகச் சடங்குகளும்

பல்லவர்களதும் பாண்டியர்களதும் அரசியற் கோட்பாடுகளையும் இலட்சியங்களையும் அவர்களின் பட்டயங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். பல்லவர்களின் செப்பேடுகளிற் சமஸ்கிருத மொழியிலும் தமிழிலும் எழுதப்பட்டுள்ள பகுதிகள் உள்ளன. தமிழ்ப் பகுதியானது மன்னனால் வழங்கப் பெற்ற தானம் பற்றியதாயிருக்கும். சமஸ்கிருதப் பகுதி வம்சோற்பத்தி, வம்சாவளி என்பன பற்றியதாகும். அது பிரசஸ்தி போல் அமைந்திருக்கும். வித்துவப் புலமை கொண்ட கவிஞரால் இலக்கிய நடையில் எழுதப்பட்டிருக்கும். பிரசஸ்தியிலுள்ள வம்சோற்பத்தி பற்றிய விவரங்கள் பௌராணிகமானவை. பல்லவர்கள் அஸ்வத்தாமனின் வழிவந்த பிரம்மக்ஷத்திரியர்களென்று சொலலப்படுகின்றது. இக்கதை புராணங்களிலுள்ள வம்சாவளிப் பகுதிகளை முன்மாதிரியாகக் கொண்டு புனையப்பட்டது. வேந்தர் குலத்தவரைச் க்ஷத்திரியர் என்று கொள்ள முடிவதாற் பல்லவரும் க்ஷத்திரியர் என்று கருதப்பட்டனர். தொண்டை நாட்டில் அதிகாரஞ் செலுத்திய அரசர் குலமொன்றைச் சேர்ந்தவர்கள் பிரமாண குலமொன்றுடன் கலப்புற்றிருத்தல் கூடும். அவர்கள் பிரம்ம க்ஷத்திரியர் என்ற கருத்து அதனால் ஏற்பட்ட ஒன்றாகலாம்.

ஆரம்ப காலப் பல்லவர்கள் வைதீக நூல்களிலே கூறப்படும் சடங்குகளையும் வேள்விகளையும் விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

பல்லவரைப் பொறுத்தவரையில் ஆட்சியுரிமை பரம்பரை வழியானது. தந்தைக்குப் பின் அரசுரிமை மூத்த மகனுக்குரியதாகும். இரண்டாம் பரமேஸ்வரவர்மன் இறந்த பின் நாட்டிலே அரசியல் நெருக்கடி ஒன்று உருவாகியது. அத்தருணத்திலே காஞ்சிபுரத்துக் கடிகையாரும் நகரத்தாரும் உயரதிகாரிகளும் பல்லவ வம்சத்துக் கிளைமரபினைச் சேர்ந்த ஹிரணியவர்மனிடஞ் சென்று முறைப்பாடு செய்து, அவனுடைய இளைய மகனை அழைத்துச் சென்று அரசனாக முடிசூட்டினார்கள். வேதவிதிப்படி அபிஷேகஞ் செய்யப்பட்ட ஒருவனே அரசனாகி அவனியை ஆளமுடியுமென்று மனுதர்ம சாஸ்திரம் போன்ற நூல்கள் கூறும். அதற்கிணங்கப் பல்லவர்கள் பட்டாபிஷேகம் செய்துகொண்ட பின்பு அரசனுக்குரிய அதிகாரங்களைப் பெற்றார்கள். இளவரசன் ஒருவனை அபிஷேகஞ் செய்யுமிடத்து அவனுக்கு அபிஷேகநாமம் என்னும் பட்டப்பெயரைச் சூட்டுவது வழமை. பெருங்கோயில்களின் நிர்மாணகாரனாகிய ராஜசிங்கன் நரசிம்மவர்மன் என்னும் பட்டப்பெயரைக் கொண்டிருந்தான். பின்பு, ஹிரண்யவர்மனின் மகனாகிய இளைஞனைக் காஞ்சிபுரத்திலே அரசனாக்கிய பொழுது அவனுக்கு நந்திவர்மன் என்னும் பட்டப்பெரைச் சூட்டினார்கள். நந்திவர்மன் என்று அபிஷேகஞ் செய்து என அவனைப் பற்றி வரும் சாசனத் தொடரால் இதனை அறிய முடிகின்றது.

பல்லவ மன்னர்கள் தங்களைச் சக்கரவர்த்திகளாகவே கருதினார்கள். அதியரையர்குரியனவான **மகாராஜாதிராஜ, தர்மமகாராஜ, தர்மமகாராஜாதிராஜ** என்னும் பட்டங்களை அவர்கள் கொண்டிருந்தனர். மன்னர்கள் விருதுப் பெயர்களைச் சூடிக் கொள்வது மகேந்திரவர்மன் காலம் முதல் வழமையாகியது. அரசனொருவனின் தகைமைகள், குணநலன்கள், ஆற்றல், வீரம், சாதனைகள் என்பவற்றைப் புலப்படுத்தும் வகையில் அவனுடைய விருதுப் பெயர்கள் அமைந்திருக்கும். *குணபரன், சத்துருமல்லன், சைத்யாகாரி, லக்ஷிதன், சித்திரகாரப்புலி, மத்தவிலாசன், சங்கீர்ண ஜாதி, லலிதாங்குரன்* என்பன முதலாம் மகேந்திரவர்மனின் விருதுப் பெயர்களாகும். ராஜசிம்மனின் 150 விருதுப் பெயர்கள் காஞ்சிபுரத்துக் கைலாசநாதர் கோயிலில் எழுதப்பட்டுள்ளன. பாண்டிய மன்னர்களும் விருதுப் பெயர்களைக் கொண்டிருந்தனர். *பராந்தகன் நெடுஞ்சடையன் மநூபமன், கீதகின்னரன்* என்னும் விருதுப் பெயர்களுக்கு உரியவன் என்பதை வேள்விக்குடி செப்பேடுகள் மூலம் அறியமுடிகின்றது.

காளையின் உருவத்தைப் பல்லவர்கள் தங்கள் அரச சின்னமாகக் கொண்டிருந்தனர். வலது பக்கம் நோக்கி, அமர்ந்த காளையின் வடிவம் அவர்களின் ஆவணங்களிலும் நாணயங்களிலும் கொடிகளிலும் பொறிக்கப்பட்டிருக்கும். பல்லவரின் சாசனங்கள் சில அவர்களின் விருஷப லாஞ்சனத்தைக் குறிப்பிடுகின்றன. அரசனின் ஆவணத்தை விடைமண் பொறி ஓலை என ``நந்திக்கலம்பகம்`` குறிப்பிடுகின்றது. படைத்தளங்களிலே தங்கியிருந்த காலங்களிற் பல்லவர் வழங்கிய பட்டயங்களிற் சிம்ம உருவம் பொறிக்கப்பட்டுள்ளமை கவனித்தற்குரியதாகும். மன்னர்கள் உலாப் போன சமயங்களிலும் படைகள் போருக்குச் சென்ற நேரத்திலும் விடைக்கொடியை ஏந்திச் சென்றனர். விடை வேற்கொடி வேற்படை முன் உயர்த்த தானை பற்றியும் நந்திக் கலம்பகம் குறிப்பிடுகின்றது.

பல்லவர் செம்பு, வெள்ளி, பொன் ஆகிய உலோகங்களில் நாணயங்களை வெளியிட்டுள்ளனர். பொற்காசுகள் மிக அரிதாகவே கிடைத்துள்ளன. பெரும்பாலான காசுகளிற் காளையின் உருவமும் ஸ்ரீபர அல்லது ஸ்ரீநிதி என்னும் சொல்லுங் காணப்படும். சில சமயங்களிலே காளையின் இடத்திற் சிம்ம உருவங் காணப்படும். யானை, குதிரை, மீன், சுவஸ்திகம், சங்கு, சக்கரம் போன்றவற்றின் உருவங்களும் காசுகள் சிலவற்றிலே காணப்படும். பல்லவரின் காசுகள் பல இலங்கையின் வடபகுதியிற் கணிசமான அளவிலே கிடைத்துள்ளன. பல்லவரின் இராச்சியத்தோடு நெருங்கிய வாணிபத் தொடர்புகளை இலங்கை கொண்டிருந்தமைக்கு அவை சான்றுகளாய் உள்ளன.

கட்வாங்கமும் பல்லவரின் அரச சின்னங்களில் ஒன்றாகும். காளையைப் போலக் கட்வாங்கமும் சைவசமய சின்னமாகும். மகேந்திரவர்மன் காலம் முதலாகப் பல்லவரிற் பலர் சைவசமயத்தில் மிகுந்த அபிமானங்கொண்டிருந்தனர். கட்வாங்கம் எனப்படுவது கபாலவடிவம் அமைந்த தலையுடைய தண்டமாகும். கட்வாங்கத்தை ஏந்தியிருப்பதாற் சிவபெருமானைக் *கட்வாங்கின்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் *கட்வாங்கதர* என்றும் வர்ணிப்பர். நந்திவர்மனை அரசனாக முடிசூட்டிய பொழுது அவனுக்குக் *கட்வாங்கம்* முதலான அரச சின்னங்களை அமைச்சர்களும் நகரத்தாரும் கடிகையாரும் வழங்கினார்கள். *கடுமுகவாத்தியம்* என்னும் இசைக்கருவியும் *சமுத்திரகோஷம்* என்னும் பேரிகையும் பல்லவரின் சேனைகள் பவனி சென்றபொழுது இசைக்கப்பட்டன.

வேதமார்க்கத்தையும் வடமொழி நூல்களையும் போற்றுவதிற் பாண்டியர்கள் பல்லவருக்கு நிகரானவர்கள். மேலதிகமாக அவர்கள் தமிழ் மொழியினையும் தமிழ்ப் புலவர்களையும் போற்றினார்களென்றும் அவர்களின் சாசனங்கள் புகழ்ந்துரைக்கின்றன. பாண்டி நாட்டிலே சைவம், வைணவம், சமணம் ஆகிய முச்சமயங்களும் மன்னரின் ஆதரவினைப் பெற்றிருந்தன. பாண்டியரிற் சிலர் சைவராயிருந்தனர். வேறு சிலர் வைணவராயிருந்தனர். திருச்செந்தூர்ச் சாசனம் வரகுணவர்மனைச் சுப்பிரமணிய பட்டாரகர் உடையாரின் அடியார் என வர்ணிக்கின்றது. அவன் சோழநாட்டிலும் தொண்டை நாட்டிலுந் தங்கியிருந்த காலத்திலே பாண்டிநாட்டிலும் சோழநாட்டிலும் அமைந்திருந்த சைவ, வைணவக் கோயில்களுக்கு மிகுந்தளவிலே தானங்களை வழங்கினான்.

பாண்டியரின் பட்டயங்களிற் சமஸ்கிருத மொழியிலும் தமிழ்மொழியிலும் எழுதப்பட்ட வாசகங்கள் இணைந்திருக்கும். இவை இரண்டும் பிரசஸ்தி போல அமைந்தவை. சமஸ்கிருத வாசகத்தின் ஆரம்பப் பகுதியில் பிரமன், திருமால், சிவன் ஆகியோரைப் பற்றிய துதிப் பாடல்கள் அமைந்திருக்கும். பல்லவ அரசன் முதலாம் மகேந்திரவர்மனால் அமைக்கப்பட்ட குடை வரைக் கோயில்களில் மும்மூர்த்திகளின் பிரதிமைகளைத் தாபனஞ் செய்வதற்கான வகையிலே கருவறைகள் அமைக்கப்பட்டிருந்தமை இங்குக் குறிப்பிடற்குரியதாகும்.

பாண்டியரின் பட்டயங்களிலுள்ள மெய்கீர்த்திகளில் ஆதிகாலம் முதலாக ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்களின் பெயர்கள் அனைத்தும் இடம்பெறவில்லை. காலக்கிரம வரிசையிலும் அவை சொல்லப்படவில்லை. பிரபலமான மன்னர் பலரின் பெயர்கள் சொல்லப்படுகின்றன. அவர்களைப் பற்றிய விவரங்களும் பௌராணிகமானவை. புராதன காலத்து மன்னர்களின் சாதனைகளென்று மேல்வருவன சொல்லப்படுகின்றன.

1. கடலைக் கடைந்து அமிர்தம் கொண்டமை.
2. இமயத்தில் இணைக்கயல் வடிவத்தை எழுதியமை.
3. இந்திரனின் மாலையைக் கவர்ந்து பட்டமாலையாக அணிந்து கொண்டமை.
4. இந்திரனின் முடியோடு வளையை உடைத்தமை.
5. பாரதப் போரிலே கௌரவரை வெற்றி கொண்டமை. பாண்டிய மன்னர்களைப் பற்றிய மரபுவழியான ஐதீகங்கள் சிலவற்றைத் தளவாய்புரச் சாசனம் மேல்வருமாறு வர்ணிக் கின்றது:

ஒருங்கு முன்னாள் மடிவித்த
சிறுமேனி உயர்தவத்தோன்
மடலவிழ் பூ மலயத்து
மாமுனி புரோகிதனாகக்
கடல்கடந்து அமிர்து கொண்டும்
கயலிணை வடவரை பொறித்தும்
ஹரிஹயன தாரம் பூண்டு
மவன்முடியொடு வளையுடைத்தும்
விரிகடலை வேலின் மீட்டும்
தேவாசுரஞ் செருவென்றும்
அகத்தியனொடு தமிழாய்ந்தும்.....
கயல்பாய் கடல்போலக்
குளம்பலவின் கரையுயரியும்
...................................
மன்னெதிரா வகைவென்று
தென்மதுரா புரஞ்செய்தும்
அங்கதனி லருந்தமிழ் நற்சங்கம்
இரீஇத் தமிழ் வளர்த்தும்
...........................................
ஆறுபல தலைகண்டும்
அமரராலயம் பல செய்தும்
...........................................
எண்ணிறந்த பிரமதேயமும்
எண்ணிறந்த தேவதானமும்
எண்ணிறந்த தடாகங்களும்
இருநிலத் தியற்றுவித்தும்
நின்றபெரும் புகழாலும்
நிதிவழங்கு கொடையாலும்
வென்றிபோர்த் திருவாலும்
வேல்வேந்தரில் மேம்பட்ட
கதிரார்கடுஞ் சுடரிலைவேல்
கலிப்பகை கண்டருள் கண்டன்
மதுராபுர பரமேஸ்வரன்.........

பாண்டிய மன்னர்கள் வரைவிலாத சிறப்புடையவர்கள். பராக்கிரமத்தினால் வெற்றித் திருமகளைத் தம்வசமாக்கியவர்கள். புஜபல பராக்கிரமத்தினால் நிலவுலகிலும் வானுலகிலும் புகழ் படைத்தவர்கள். இமயத்தில் இணைக்கயல் எழுதியவர்கள். இந்திரனது மாலையை தம் பட்டமாலையாக அணிந்தவர்கள். மலயத்து மாமுனி அகத்தியனைப் புரோகிதனாகக் கொண்டவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரை மாநகரை நிர்மாணித்து அகத்தியனோடு அங்கிருந்து தமிழ் ஆய்ந்தவர்கள். மதுரையிலே சங்கம் நிறுவியவர்கள். ஆற்றங்கரைகளிலே ஆலயங்கள் பல அமைத்தவர்கள். அளவிலாத பிரம்மதேயங்களையும், தேவதானங்களையும், பள்ளிச் சந்தங்களையும் உருவாக்கியவர்கள். விசாலமான தடாகங்களை நாட்டிலே நிர்மாணித்தவர்கள். என்றவாறு அவர்களைப் பற்றிய ஐதிகங்களும் விவரங்களும் பிரசஸ்தி வடிவிலான அவர்களின் பட்டயங்களில் வர்ணிக்கப்படுகின்றன.

களப்பிரரிடமிருந்து ஆட்சியுரிமையினைக் கைப்பற்றிக் கொண்ட பாண்டிய மன்னர்கள் அர்த்தசாஸ்திரம், மனுதர்ம சாஸ்திரம் போன்ற நூல்கள் விளக்கும் முறைகளைத் தமது அரசியல் நெறியாகக் கொண்டனர். ஜடிலவர்மனாகிய பராந்தகனின் ஸ்ரீவரமங்கலச் செப்பேட்டு வாசகத்திலுள்ள மேல்வரும் தொடர்கள் குறிப்பிடத்தக்கவை:

மணிமாடக் கூடல்புக்கு
மலர்மகளொடு வீற்றிருந்து
மநுதர்சித மார்க்கத்தினால்
குருசரிதம் கொண்டாடிக்
கண்டகசோதனை தான்செய்து
கடன்ஞாலம் முழுதளிக்கும்
பாண்டியநாதன் பண்டிதவத்ஸலன்
வீரபுரோகன் விக்கிரமபாகரன்
பராந்தகன் பரமவைஷ்ணவன் தானாகி
நின்றிலங்கும் மணிநீள்முடி
நிலமன்னன் நெடுஞ்சடையற்கு

மனுநெறி அரசர்க்குரிய நெறியாகப் பாண்டிய மன்னர்களாலும் அவர்களின் அவைக்களப் புலவர்களினாலும் போற்றப்பட்டது என்பதற்கு ஆதாரமாக இது போன்ற சாசனக் குறிப்புகள் பல உள்ளன. *கண்டக சோதனை* தான் செய்து எனச் செப்பேட்டில் வரும் தொடர் மிக முக்கியத்துவங் கொண்டதாகும். அது கௌடில்ய அர்த்தசாஸ்திரத்தின் செல்வாக்கினை உணர்த்துவதாகும். *கண்டகசோதனா* என்பது அதியுயர் நீதிமன்றங்களில் ஒரு வகையானதென்று அர்த்தசாஸ்திரங் கூறும். அது மன்னனால் நிறுவப்படுவது. அவனால் நியமிக்கப்படும் அதிகாரிகளை உறுப்பினர்களாகக் கொண்டது. மன்னனுடைய அதிகாரத்தை இராச்சியத்திலே நிலைநாட்டுவதற்கு ஏதுவான சாதனமாக அமையக் கூடியது. பாண்டியன் *கண்டக சோதனை* செய்தானென்று சாசனங் குறிப்பிடுவதனால் நீதிபரிபாலனத்தைப் பொறுத்தவரையிலே பாண்டியரின் நிர்வாக முறையில் அர்த்தசாஸ்திரத்தின் செல்வாக்கு ஏற்பட்டிருந்ததென்று கொள்ளலாம்.

மணிமுடியும் பட்டமாலையும் பாண்டிய மன்னரின் பிரதானமான அணிகலன்களாகும். பாண்டியரின் வழமைப்படி இளவரசன் ஒருவன் முடிசூடிக் கொள்வதன் மூலம் அரச பதவி பெற்றான். அது தொன்மைக் காலம் முதலாக நிலவிவந்த வழமையாகும். பாண்டிய மன்னர்கள் அணிந்த பட்டமாலை இந்திரனிடமிருந்து கிடைத்தது என்ற ஐதீகம் நெடுங்காலமாக நிலை பெற்றது. மணிமுடியும், பட்டமாலையும் குலதானமாகக் கொள்ளப்பட்டன. தம் முன்னோர்களிடமிருந்து பெற்ற அவ்வித அணிகலன்களையும் தலைமுறையாகப் பாண்டிய மன்னர். பாதுகாத்து வந்தனர். பாண்டிநாட்டில், மதுரையிலே, அரச பதவி பெறுவதற்கு வேண்டிய இன்றியமையாத சின்னங்களாகப் பிற்காலத்திலே அவை கருதப்பட்டன.

இணைக்கயல் வடிவம் பாண்டியரின் குலச் சின்னமாகும். அதனால், தென்னவனை மீனவன் எனவும் குறிப்பிடுவது வழமை. சில சாசனங்கள் அவனை மீனகேதனன் என வர்ணிக்கின்றன. பாண்டியரின் கொடிகளில் மீனுருவம் வரையப்பட்டிருக்கும். அரச முத்திரைகளிலும் நாணயங்களிலும் இணைக்கயல்களின் வடிவம் அமைந்திருக்கும். காளை, குதிரை, சுவஸ்திகம் முதலியவற்றின் உருவங்களும் சில சமயங்களிற் பாண்டியரின் நாணயங்களிற் காணப்படும்.

## நிர்வாகப் பிரிவுகள்

### கோட்டம்

பிற்காலப் பல்லவரின் சாசனங்களிற் கோட்டம், நாடு, ஊர் என்னும் பிரிவுகள் குறிப்பிடப்படுகின்றன. கோட்டம் என்னும் பிரிவு தொண்டை நாட்டுக்குச் சிறப்பானதாகும். கோட்டம் என்பதன் உற்பத்தி மிகவும் புராதனமானது. அது பல்லவரின் ஆட்சிக்கும் முற்பட்டதென்று சிலர் கொள்வர். எயிற் கோட்டம், பல்குன்றக் கோட்டம், ஊற்றுக்காட்டுக் கோட்டம், புலியூர்க்கோட்டம், வெண்குன்ற கோட்டம், மணவிற் கோட்டம் முதலிய கோட்டங்கள் தொண்டை நாட்டில் இருந்தன. அதற்கு நிகரான பிரிவைச் சோழ, பாண்டிய நாடுகளிற் கூற்றம் என்றனர். கோட்டம் ஒவ்வொன்றிலும் நாடு என்னும் பிரிவுகள் சில அடங்கியிருந்தன. கோட்டம், நாடு என்பவற்றுக்கு நிகரான ஆந்திர தேசத்திலுள்ள பிரிவுகளை முற்காலப் பல்லவரின் சாசனங்கள் முறையே விஷய, ராஷ்ட்ர என்னும் பெயர்களாற் குறிப்பிடுகின்றன.

### நாடு

நாடு என்ற பிரிவுகள் தமிழகம் முழுவதிலும் அமைந்திருந்தன. அவை மிகவும் பழமையானவை. இராச்சியங்கள் தோன்றுவதற்கு முற்பட்ட காலங்களில் உருவானவை. பல நூற்றுக் கணக்கான நாடுகள் மத்திய காலத் தமிழகத்திலே காணப்பட்டன. நாடுகளின் எல்லைகள் ஆறு, சிற்றாறு, ஓடை, குளம், கால்வாய், வனம், மலையடிவாரம் முதலியவற்றை அடிப்படையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வரையறை செய்யப்பட்டிருந்தன. அவற்றின் சமூக வாழ்க்கையிற் பந்தங்கள், இன உறவுகளையும் உற்பத்தி முறைகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன. நாடுகளில் வயல்களும், புனங்களும், வனங்களும், மேய்ச்சல் நிலங்களும் குடியிருப்புகளைச் சூழ்ந்திருந்தன. நாட்டுத் தலைவன் கோ எனவும் கோன் எனவும் அழைக்கப்பட்டான். வேளாண்மை விருத்தியடைந்திருந்த நாடுகளில் உழவர்களை உறுப்பினராகக் கொண்ட மன்றங்கள் அமைந்திருந்தன. நாட்டின் பரிபாலனம் தொடர்பான பொதுவிடயங்களை அவை கவனித்தன. அவற்றின் ஆளுங்கணத்தாரை நாட்டார் என்றனர். முடியாட்சி முறையும் இராச்சியங்களும் அபிவிருத்தியடைந்த காலத்தில் நாடுகளின் மரபுவழியான பரிபாலன முறையிலே மாற்றங்கள் ஏற்பட்டன. பரம்பரை அடிப்படையில் அதிகாரஞ் செலுத்திய **கோன்** என்னும் நாட்டுத் தலைவர்கள் இராச்சிய பரிபாலனத்திலே பதவிகளைப் பெற்று அரசருக்கு அனுசரணையான அதிகாரிகளாயினர். அவர்களுக்கு நிலமானியங்கள் கிடைத்தன. அதே சமயம் நாடுகளில் அவர்களுக்கு மரபு வழியாக இருந்து வந்த அதிகாரங்கள் முடிமன்னர் வசமாகிவிட்டன. நாட்டிலுள்ள ஆளுங்கணமான நாட்டாருடன் நெருங்கிய தொடர்புகளை மன்னர்கள் ஏற்படுத்திக்கொண்டனர். நில மானியங்களைப் பற்றிய ஏற்பாடுகளில் நாட்டாரும் பங்குகொள்ளும் வழக்கம் ஏற்பட்டிருந்தது. நாட்டு வழமைகளை அனுசரிப்பதன் மூலமாக நாட்டாரின் சம்மதத்துடன் மன்னர்கள் தங்கள் அதிகாரங்களை நிலைநாட்டிக் கொள்ள முடிந்தது. அரசரின் ஆணைகளை நிறைவேற்றுவதில் நாட்டார் ஈடுபாடு கொண்டனர். ஆளுவ அரசர் விண்ணப்பத்தால் சாளுக்கிய அரசர் ஆணத்தியாகப் பணித்தோம் நாட்டாரும் ஊராரும் ஆள்வாரும் என்னும் குறிப்பு நெல்லூர் மாவட்டத்திலுள்ள சாசனமொன்றிலே காணப்படுகின்றது. சாளுக்கிய அரசரின் கட்டளைப் பிரகாரமாக நாட்டாரும் ஊராரும் ஆள்வாரும் கூட்டமாகக் கூடிச் சுப்பிரமணிய பட்டாரகர் கோயிலுக்கு கழஞ்சு பொன் தானமாகக் கொடுக்க முடிபு செய்தனர். பிரம்மதேயம் உருவாக்குவதைப் பற்றிக் கோனோலை நாட்டாருக்கு அனுப்பப்பட்டதாகக் காசாக்குடி பட்டயம் கூறும். ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நாட்டாருங் காண்க என்னுந் தொடர் அதிலுள்ளமை கவனித்தற்குரியது. கொடுகொள்ளி என்னும் ஊரைப் பிராமணன் ஒருவனுக்குப் பிரம்மதேயமாகக் கொடுக்குமாறு நாட்டாருக்கு மன்னன் கட்டளை வழங்கினான். அரசனுடைய கோனோலை கிடைத்த பின்பு நாட்டார் முன்புள்ள காணியாளரையும் உடைமைக்காரரையும் நீக்கி, எல்லைகளிற் பிடி சூழ்ந்து கள்ளியுங் கல்லும் நாட்டிப் பிரம்மதேயமாக வகை செய்து கொடுத்தனர். திருமுகம் கண்டு நாட்டோம் நாட்டு வியவன் சொல்லிய எல்லை போய் படாகை வலம் செய்து கல்லும் கள்ளியும் நாட்டிக் கொடுத்தது என்ற குறிப்புச் சாசனத்திற் காணப்படுகின்றது. சோழநாட்டு தென்கரையூர் நாட்டு நாட்டார் காண்க என்னும் வாசகம் தண்டன் தோட்டம் சாசனத்திற் காணப்படுகின்றது. நிலதானங்கள் பற்றிய ஏற்பாடுகள் இரு மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன. அரண்மனையிலிருந்து மன்னனது கட்டளை திருமுகமாக நாட்டாருக்கு அனுப்பப்பட்டது. அதனை ஒப்புக்கொண்டதும், நாட்டார் திருமுக ஓலைப்படி தானமாகக் கொடுக்க வேண்டிய நிலத்தை வரையறை செய்து, எல்லையிட்டு, அதனைப் பற்றிய விவரங்களைத் தங்கள் வசமான புத்தகங்களில் எழுதியபின் அதன் பிரதியை மன்னனின் அதிகாரிகளிடம் வழங்குவார்கள். அது அறவோலை என்று சொல்லப்படும். பூமிதானம் பற்றிய வாசகம் சாசனமாக எழுதப்படுமிடத்து அதில் அரசனது கோனோலையும் நாட்டார் எழுதிய அறவோலையும் சேர்ந்திருக்கும். இது பிற்காலத்திலே ஆனைமங்கலச் செப்பேடுகள் போன்ற ஆவணங்கள் வாயிலாகத் தெளிவாகின்றது. நாட்டார்க்கு விட்ட திருமுகம் நாட்டார் தொழுது தலைக்கு மேல் வைத்தெல்லை போய்க் கல்லும் கள்ளியும் நாட்டி படாகை வலஞ் செய்து நாட்டார் விடுத்த அறையோலைப்படி..... என்னுஞ் சொற்றொடர் பல்லவமன்னனின் பட்டத்தாள் மங்கலம் பட்டயத்திற் காணப்படுகின்றது.

பாண்டி நாட்டிலும் நில தானங்கள் தொடர்பான ஏற்பாடுகளில் நாட்டார் தொடர்பு கொண்டிருந்தனர். மதுரதர நல்லூரை அந்தணர்க்குரிய பிரமதேயமாகப் புனரமைத்த பொழுது ஆசிநாட்டு நாட்டாரும் நெச்சுரநாட்டு நாட்டாரும் உடனாகி நின்று எல்லை காட்டப் பிடி சூழ்ந்தது என்று தளவாய்புரச் சாசனங் குறிப்பிடுகின்றது. நாட்டார் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குக் குடிகளிடமிருந்து வரிகளையும் சேவைகளையும் பெற்றனர். நாடாள்வான் என்னுந் நாட்டுத் தலைவர்களைப் பற்றிய சாசனக் குறிப்புகள் உண்டு. நாட்டுக் கணக்கு, நாட்டு வியவன் என்போரைப் பற்றிச் சில சமயங்களிற் சொல்லப்படுகின்றது.

### ஊர், பிரமதேயம், நகரம்

அண்மைக்காலம் வரையும் வரலாற்றாசிரியர்கள் புராதன கால வரலாற்றை நோக்கும்பொழுது, அரசியலமைப்புகளையும் சமுதாய அமைப்புகளையும் ஒரு மத்தியமயமான ஆட்சி முறையினை அடிப்படையாகக் கொண்டு அவை இயங்கின என்ற கோட்பாட்டின் வரையறைக்குள் நின்று பார்த்தனர். தேசியவாதிகளுக்கும் சீர்திருத்தவாதிகளுக்கும் பழமை வாதிகளுக்கும் அது இதமானவொன்றாகக் காணப்பட்டது. சமூக விஞ்ஞானத்தின் பரிமாணங்கள் வித்துவப் புலமையால் விரிவடைந்தமையாலும், அன்னிய தேசத்தவர்கள் தென்னிந்திய சமுதாய அமைப்பினைப் பற்றிப் பெருமளவில் ஆராயத்தொடங்கியதனாலும், புதிய சிந்தனைகளின் அடிப்படையில் வரலாற்றை ஆராய்கின்ற இளந்தலைமுறையினர் தமிழகத்திலே உருவாகியதன் விளைவாகவும் வரலாறு தொடர்பான ஆராய்ச்சிகளிற் படிப்படியாக மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

முடிமன்னர்களை வரலாற்றிலிருந்து ஓரங்கட்டிவிட முடியாதெனினும், சமூக பண்பாட்டு வளர்ச்சிகளையும் வரலாற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்திகளையும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் அடிமட்டத்திலுள்ள சமூகப்பிரிவுகள், நிறுவனங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேல்நோக்கிச் செல்வதே பொருத்தமான அணுகுமுறையாகும். புராதன காலத்தில் மிகப் பெரும்பாலான மக்கள் இராசதானிகளிலும் நகரங்களிலுமன்றிக் கிராமங்களிலேயே வாழ்ந்தனர். பல்லவர் காலத்து இலக்கியமும் பெரும்பாலான சாசனங்களும் தொல்பொருட் சின்னங்களும் பிரதிபலிக்கும் சிந்தனைகளும் பண்பாட்டுக் கோலங்களும் நாட்டார் வழக்குடன் தொடர்புகொண்டனவாகும்.

முடிமன்னர்களின் அதிகாரங்களும் ஆதிக்கமும் நாட்டு வழமைகளுக்கு ஏற்ப அமைந்தனவாகும். தமிழகத்திலே ஆதிகாலம் முதலாக மக்கள்மன்று கூடித் தங்கள் விவகாரங்களை ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வழமை ஏற்பட்டிருந்தது. காலப்போக்கிலே ஊர்கள் தோறும் பொது விவகாரங்கள் பற்றி ஆராய்ந்து பரிபாலனம் புரிகின்ற சபைகள் உருவாகின. அவற்றை ஊர் என்றும் ஊரார் குறிப்பிடுவது வழக்கம். ஊர்கள் சமூக அமைப்பின் தன்மைகளுக்கு ஏற்ப வேறுபட்டிருந்தன. மத்திய காலத்தில் அவற்றை ஊர், பிரம்மதேயம், நகரம் என மூன்று வகையினவாகப் பாகுபாடு செய்தனர். நிர்வாகந் தொடர்பான ஆவணங்களில் அந்தப் பாகுபாடு ஒழுங்காகப் பின்பற்றப்பட்டது. மத்திய காலத்தில் ஒவ்வொரு நாட்டுப் பிரிவிலும் இம் மூன்று வகையான ஊர்கள் காணப்பட்டன. வேளாண் வகைக்குரிய நிலங்கள் கூடுதலாக அமைந்திருந்த ஊர்கள் ஊர் எனப்பட்டன. அங்குள்ள நிலக்கிழார்கள் ஊர்ச் சபையின் ஆளுங் கணத்திலே உறுப்பினராய் இருந்தனர்.

பிராமணர்கள் மானியமாகப் பெற்றிருந்த நிலப் பங்குகள் கூடுதலாகவிருந்த ஊர்கள் பிரம்மதேயங்களாகும். அவை அரசரால் உருவாக்கப்பட்டவை. வேதங்களிலும், சாஸ்திரங்களிலும் கிரியைகளிலும் வல்ல பிராமணருக்குப் பிரம்மதேயங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. அரசனின் அதிகாரிகளும் சேவகர்களும் அவற்றுட் பிரவேசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது. அங்குள்ள குடியானவர்களிடமிருந்தும் நிலங்களிலிருந்தும் அரசனுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளும் கடமைகளும் பிரம்மதேயக் கிழவருக்கு ஒப்படைக்கப்பட்டன. பிரம்மதேயச் சபைகளிலும் அவற்றால் உருவாக்கப்படும் நிறைவேற்றுக் குழுக்களான வாரியங்களிலும் தகுதி வாய்ந்த பிராமணரே அங்கத்தவராயிருந்தனர். வணிகர் கணங்கள் அதிகாரம் பெற்றிருந்த ஊர்கள் நகரம் என்னும் பொதுப்பெயரால் வழங்கி வந்தன. அவர்கள் அரசரிடமிருந்து குறிப்பிட்ட ஒரு தலத்தினையும் அங்குள்ள மக்களையும் ஆட்சி புரிவதற்கு அதிகாரம் பெற்றிருந்தனர். பிரம்மதேயங்களைப் போலன்றி நகரங்கள் குடியானவர்களிடமிருந்து இறைகடமைகளைப் பெற்று, அவற்றை அரசனுக்கு ஒப்படைக்க வேண்டும்.

இதுவரை கிடைத்துள்ள ஆவணங்கள் குறிப்பிடும் தமிழகத்துப் பிரம்மதேயங்களில் வேள்விக்குடி என்பதே மிகவும் புராதனமானதாகும்.

## நாயன்மார்களும் ஆழ்வார்களும்

புராதன காலம் முதலாகத் தமிழகத்தில் நிலைபெற்று வந்த சைவமும் வைணவமும் பல்லவர் காலத்தில் மக்கள் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய பெருநெறிகளாக வளர்ச்சியடைந்தன. பல்லவர் காலத்திற் பக்தி மார்க்கத்தை ஆதாரமாகக் கொண்டு அவை வளர்ச்சி பெற்றன. அவற்றின் மூலமாகப் பரத கண்டத்துக் கலாசார நீரோட்டத்திற் தமிழகம் இணைந்து விட்டது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் வேதங்களை மூலமாகக் கொண்டனர். அதனால் அவர்கள் உருவாக்கிய சமயநெறிகள் வைதீக சமயங்களாகக் கொள்ளப்பட்டன. சைவசமயம் வேதசாரமானது. அது ஆகம நெறிப்பட்டது என்ற கருத்து தேவாரப் பதிகங்களில் வலியுறுத்தப்படுகின்றது. சைவம் சார்ந்த மகாபுரணங்களின் செல்வாக்கையும் தேவார திருவாசகங்கள் பிரதிபலிக்கின்றன. வடஇந்தியாவில் வளர்ச்சி பெற்ற பாகவத சமயத்தின் செல்வாக்கினை ஆழ்வார் பாசுரங்களில் அவதானிக்க முடிகின்றது. பாகவத புராணம், ஹரிவம்சம், மகாபாரதம் போன்றவற்றிலே இடம்பெறும் கதைகளும் கருத்துக்களும் ஆழ்வார் பாசுரங்களில் மிகுந்தளவிலே காணப்படுகின்றன. அக்கதைகளும் பாமரர் மத்தியிலும் பரவிப் பொதுவழக்காகி விட்டதாற் பக்திப் பாடல்கள் பொதுமக்களைப் பெரிதுங் கவர்ந்தன. ஒப்புநோக்கில் அவதானிக்குமிடத்து இந்திய துணைக் கண்டத்தில் ஏற்பட்ட சமயபண்பாட்டு மறுமலர்ச்சியொன்றின் பிரதிபலிப்பாகவே தமிழ்நாட்டுப் பக்தி இயக்கம் தென்படுகின்றது. அது பல்லவர் செல்வாக்குப் பரவியிருந்த தொண்டை நாட்டிலும் சோழநாட்டிலும் ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது.

சைவமரபிலுள்ள பக்தி இயக்கத்தின் முதல்வரான காரைக்காலம்மையார் காவிரிப்பூம்பட்டினத்தவர் என்பது ஐதீகம். அப்பட்டினத்திலுள்ள பல்லவனீச்சரம் என்னும் தலம் பற்றிய தேவாரப் பதிகமுண்டு. முதலாழ்வார்கள் நால்வரும் தொண்டை நாட்டவர். அவர்கள் காஞ்சிபுரம், மாமல்லபுரம் ஆகிய நகரங்களிலுள்ள வைணவத் தலங்களோடு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தனர். ஏழாம் நூற்றாண்டிலே பக்திநெறி தமிழகத்தில் உச்சகட்டத்தை அடைந்தது. ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்தரும் நாவுக்கரசரான அப்பரும் செய்த பணிகளின் மூலமாகச் சைவசமயம் தமிழகத்திலே பேரெழுச்சி பெற்றது. அது தமிழோடும் தமிழகத்தோடும் இணை பிரியாத அம்சமாகிவிட்டது. வைதீக மரபினையும் ஆகம நெறியினையும் ஆதாரமாகக் கொண்ட நாயன்மார் சமயஞானமும் ஆன்மீக அனுபவமும் சமூக வேறுபாடுகளுக்கு அப்பாலானவை. சாதிபேதங் கடந்தவை. எல்லோருக்கும் பொதுவானவை என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையை வளர்த்தனர். சித்தத்தைச் சிவன்பால் வைத்தோரான சிவனடியார்களே எல்லோரிலும் மேலானவர்கள் என்பது அவர்களின் சிந்தனையாகும். பக்தி நெறியில் மன்னுயிர்கள் எல்லாம் ஒன்றாகி விடுகின்றன. சீவராசிகள் அனைத்துமே ஒன்றுகூடிவிடுகின்றன. மண்ணுலகமே வானவர் உலகமாகிவிடுகின்றது. பெறற்கரிதான பேரின்பநிலை பக்தியின் மூலம் இவ்வுலகிலே அடையக்கூடிய ஒன்றாகி விடுகின்றது.

வேதங்களையும் உபநிடதங்களையும் வைதீகக் கல்வி பயின்ற வித்தியாவிருத்தர்களே புரிந்து கொள்ளமுடியும். அவற்றிலுள்ள நுட்பமான கருத்துக்களையும் தத்துவங்களையும் தெளிவாகவும் எல்லோரும் புரிந்து கொள்ளும் வண்ணமாகவும் தமிழில் விளக்கிய சிறப்பு நாயன்மாருக்கு உரியதாகும். அவர்களின் பாடல்களிற் காணப்படும் முப்பொருள் விளக்கம் கல்வி ஞானத்தையும் ஆன்மீக அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டது. தமிழுக்கு அமுதென்று பேர். அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்றான் நவீன காலத்துப் புலவனொருவன். தேவாரப் பாசுரங்கள் மூலம் தமிழ் அமுதினும் இனிதாகியது. தமிழாகரனாகிய சம்பந்தப் பிள்ளையார் பதிகம் பாடும் சமயங்களில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் அவரோடு கூடியிருந்து யாழ் வாசித்தார் என்பது ஐதீகம். திருஞான சம்பந்தருடைய பாடல்களைக் கேட்டவர்கள் அவற்றைத் தேவகானமாகக் கொண்டனர். அவற்றாற் கவரப்பெற்ற திராவிட தேசத்தவர் சைவசமயத்துடன் உணர்ச்சிபூர்வமாக இணைந்து விட்டனர்.

தமிழிசைப் பண்களுக்குத் தேவாரப் பாடல்கள் மூலமானவை. அவற்றுள்ளும் திருஞானசம்பந்தரின் பாடல்கள் தனிச்சிறப்புடையவை. தமிழிலக்கிய நடையினைப் பொது மக்களுக்குரிய நடையாக்கிய சிறப்பும் நாயன்மார்களுக்கு உரியதாகும். பத்துப்பாட்டு நூல்களையும் தொகை நூல்களையும் பாண்டித்தியம் பெற்றவர்களே புரிந்து கொள்ள முடியும். அதுவும் உரைநூல்களின் உதவியுடன் மட்டும் அவற்றை அவர்களாற் புரிந்து கொள்ள முடியும். அதனால் தமிழிலக்கிய நடை வழக்கற்று போகும் நிலையொன்று பல்லவர் காலத்தில் உருவாகிவிட்டது. அவ்வாறான ஒரு சூழ்நிலையிலே தோன்றிய நாயன்மார்கள் இலக்கியத்திற்குப் புதிய வடிவங் கொடுத்தனர். அவர்களின் நடை பேச்சவழக்கோடு தொடர்புடையது. இலகுவில் எல்லோராலும் பொருள் உணர்ந்து கொள்ளக்கூடியது. மிகுந்த கவர்ச்சி பொருந்தியது. பெரும்பாலும் விருத்தப்பாவில் அமைந்தது. திருஞானசம்பந்தர் இருபத்திரண்டு வகைப் பண்களிற் புதுப்புது விருத்த வகைகளை உண்டாக்கினார். அவற்றுட் பல இன்றும் வழக்கிலுள்ள நாலடிமேல் வைப்பு, ஈரடிமேல் வைப்பு முதலிய பாடல் வகைகளையும், மாலைமாற்று, மொழிமாற்று, ஏகபாதம், எழு கூற்றிருக்கை, சக்கரமாற்று, கோமூத்திரி, யமகம் முதலிய சொல்லணிச் சித்திரக் கவிகளையும் அவர் கையாண்டுள்ளார். அவரை விருத்தப்பாப் புரவலர் என்றும் சித்திரக் கவிகளின் தந்தையென்றும் குறிப்பிடலாம்.

தேவாரப் பதிகங்களும் திவ்வியப் பிரபந்தங்களும் தலங்கள் மீது பாடப்பட்டவை. தலச்சிறப்பு, அதன் இயற்கை வளங்களாகிய பழனம், வயல், ஆறு, குளம், வனம், புனம், புள்ளினம், விலங்குகள், விருட்சங்கள், தோப்புகள் என்பன பற்றிய வர்ணனைகள் அவற்றிலுண்டு. தலங்கள் பற்றி வழங்கிய புராணக் கதைகள் சுருக்கமாக அவற்றிலே குறிப்பிடப்படுகின்றன. கோயிலிற் பள்ளி கொண்டுள்ள உடையாரைப் பற்றிய வர்ணனைகள் குறிப்பிடத்தக்கவை. படிமக்கலை வரலாற்றை ஆராய்வதற்கான கருவூலங்களாக அவை அமைகின்றன. கோயில் வழிபாட்டு முறைகள், வழிபாட்டில் இடம்பெறும் உபசாரங்கள், ஆலயத் தொழும்புகள், சுற்றாடல்களிலுள்ள குடியிருப்புகள் போன்றனவும் அவற்றிலே சில சமயங்களிற் குறிப்பிடப்படுகின்றன.

பக்தி நெறியானது உலக வாழ்க்கையோடு ஒட்டிய நெறியாக, இயற்கை நெறியாகத் திருப்பதிகங்களிலே காணப்படுகின்றது. அதனால் அது வலுப்பெற்று மேலோங்கித் திராவிட தேசத்தவரின் பொதுநெறியாகியது.

## கோயில்களும் வழிபாடும்

பல்லவர் காலத்துக் கோயில்களைப் பற்றியும் அவற்றிலே நடைபெற்ற வழிபாடுகளைப் பற்றியும் சாசனங்கள் மூலமாகவும் திருப்பதிகங்கள் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம். சாசனக் குறிப்புகளை வரலாற்றாசிரியர்கள் சிலர் ஆராய்ந்து அவற்றிலுள்ள சில விவரங்களை வெளியிட்டுள்ளனர். ஆயினும், திருமுறைகளிலும் திவ்விய பிரபந்தங்களிலும் அடங்கியுள்ள பாடல்கள் இவ்விடயந் தொடர்பாக விவரமாக ஆராயப்படவில்லை. பாடல்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. அவற்றை ஆராய்வதற்குப் பொறுமையும் மனோபக்குவமும் தேவைப்படுகின்றன. இந்நாட்களில் அந்தப் பண்புகள் அரிதாகிவிட்டன.

பல்லவர் காலத்திலே பல நூற்றுக்கணக்கான கோயில்கள் அமைந்திருந்தன. ஏறக்குறைய நானூறு ஈஸ்வரங்கள் நாயன்மார்களின் பாடல்களைப் பெற்றுள்ளன. அவை பெரும்பாலும் தொண்டை நாடு, சோழ நாடு, நடுநாடு என்பவற்றிலுள்ள தலங்களாகும். ஆழ்வார்கள் நூறு விண்ணகரங்களைப் போற்றிப் பாடியுள்ளனர். அவை பாண்டிநாடு, சோழநாடு, தொண்டைநாடு ஆகியவற்றிலே பரந்து காணப்பட்டன.

பாடல்பெற்ற திருத்தலங்கள் புராதனமானவை. அவை பெரும்பாலும் செங்கல்லினால் அமைக்கப்பட்ட தளிகளாகும். அவை பிற்காலத்திலே கற்றளிகளாகப் புனரமைக்கப்பட்ட பொழுது அவற்றில் இருந்திருக்கக் கூடிய சிலாசாசனங்கள் பல மறைந்து விட்டன. கோயில்கள் சிலவற்றின் சுற்றுப் புறங்களில் வணிக நகரங்களும் பிரம்மதேயங்களும் வித்தியாபீடங்களும் அமைந்திருந்தமை பற்றித் திருப்பதிகங்கள் மூலமாக அறியமுடிகின்றது. ஆகம முறையிலான வழிபாடு பொதுவழமை யாகிவிட்டதென்பதைத் திருப்பதிகங்கள் தெளிவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்துகின்றன. சைவக் கோயில்களிலும் வைணவக் கோயில்களிலும் மூலஸ்தானத்தில் வைதீகப் பிராமணர் ஆராதனைகளைச் செய்தனர். பெருந்தொகையான அடியார்கள் கோயில்களுக்குச் சென்று இறைவரை வழிபட்டனர். அவர்கள் அங்கு நாட்டார் வழமைப்படியும் வழிபாடுகளைச் செய்தனர். கோயில்களில் வழிபாட்டு நேரங்களிலும் விழாக் காலங்களிலும் ஆடல், பாடல் போன்ற உபசாரங்கள் நடைபெற்றன.

சில விடயங்களிலே கோயில்களோடு பந்தமாகியிருந்த கணிகையர் அப்பணிகளைச் செய்தனர். யாழ், குழல், வீணை, முழவு, மொந்தை, தாளம், சச்சரி முதலான இசைக்கருவிகள் ஆலயங்களில் இசைக்கப்பட்டன. அவற்றைப் பற்றிய குறிப்புகள் திருப்பதிகங்களிற் காணப்படுவதோடு அவற்றின் உருவங்களும் வாத்தியகாரரின் பிரதிமைகளும் சிற்பக் கோலத்திலே ஆலயங்கள் பலவற்றில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அரசரும், பிரதானிகளும், செல்வர்களும் பிறரும் வழங்கிய தானங்களை ஆதாரமாகக் கொண்டே ஆலயங்கள் இயங்கி வந்தன. தானங்களும் பலவகைப்படும். ஊர்கள், விளைநிலங்கள், தோப்புகள் முதலானவற்றை அரசர்கள் பூமிதானமாகக் கோயில்களுக்குக் கொடுத்தார்கள். சில சமயங்களிலே குறிப்பிட்ட சில ஊர்களிலோ நிலங்களிலோ, அரசருக்குக் கிடைக்க வேண்டிய இறை கடமைகள் ஆலயங்களுக்கு உரியனவாக எழுதிக் கொடுக்கப்பட்டன. ஆபரணங்கள், பொன், வெள்ளி, காசு முதலியனவும் சில சமயங்களில் ஆலயங்களுக்கு நன்கொடையாக வழங்கப்படுவதுண்டு. குடியானவர்களும் அரசர், பிரதானிகள் போன்றோரும் மூலஸ்தானத்திலே குறிப்பிட்ட தினங்களிலே ஆராதனை செய்வதற்கும், சந்நிதானத்திலே விளக்கெரிப்பதற்கும், சிவயோகிகளுக்கும் அடியார்களுக்கும் அன்னதானமிடுவதற்கும் அறக் கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. சொத்து டைமைகளைப் பராமரிப்பதற்கென்று சில நிர்வாக ஒழுங்குகளை அமைத்துக் கொள்ளவேண்டியிருந்தது.

கோயிலிற் கடமை புரியும் எல்லோரையும் கோயிற் பரிவாரம் என்றும் தளிப்பரிவாரம் என்றுஞ் சொல்வது வழக்கம். அர்ச்சகர் முதலாகப் பூமாலை கட்டுவோர் வரையுள்ள எல்லோரும் அதில் அடங்குவர். தளிப் பரிவாரத்தாரின் எண்ணிக்கை ஆலயத்தின் சொத்துடைமைகள், வருமானங்கள், கோயிற் கருமங்கள் என்பவற்றைப் பொறுத்திருக்கும். அரசர், அரசமாதேவிகள், சாமந்தர் முதலியோர் கட்டுவித்த கோயில்கள் பெருமளவிலான தானங்களைப் பெற்றிருந்தன. ஆந்திர தேசத்திலே, குண்டூர் மாவட்டத்தில் முதலாம் மகேந்திரவர்மன் கட்டுவித்த கபோதீஸ்வரம் அத்தகையவொரு கோயிலாகும். அங்கு ஆலயப் பணிகள் புரிந்த கன்னியர்களைக் கண்காணிப்பதற்கு 12 அத்யக்ஷர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

மூலஸ்தானத்திலே மூலவருக்குப் பிராமணர் ஆராதனை செய்தனர். அர்ச்சகரை ஆச்சாரியார், சிவப்பிராமணர், சிவாச்சாரியார் எனப் பலவாறு சொல்வது வழக்கம். வைணவக் கோயில்களிற் பூசை செய்வோரைப் பட்டர் என்று சொல்வதுண்டு. உத்தரமேரூரிலுள்ள ஸ்ரீகோவர்த்தன சுவாமி கோயிலில் ஆராதனை பண்ணும் ஸ்ரீதர பட்டரைப் பற்றிக் கம்பவர்மன் காலத்துக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. சைவக் கோயில்களில் ஆராதனை செய்த பிராமணரைச் சில சமயங்களிற் குலங்கிழார் என்றனர். தேவகுலம் என்று சொல்லப்படும் ஆலயத்திலே ஆராதனை செய்வோரை மரியாதையின் நிமித்தம் அவ்வாறு சொல்வதுண்டு. சில கோயில்களில் அர்ச்சகர் பலர் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய முறைக்காலத்தில் ஆராதனை செய்வர். ஆலயத்தில் ஆராதனை பண்ணும் உரிமை சில கோயில்களைப் பொறுத்தவரையிற் பாரம்பரியமான உரிமையாகவிருந்தது. சகோதரர் பலர் ஒரு கோயிலிற் கடமை புரிந்தமை பற்றியுஞ் சாசனக் குறிப்புண்டு. முக்தேஸ்வரத்திலே பிராமணர் மூவர் இருந்தனர். அவர்களைப் பற்றிய சாசனக் குறிப்பு மேல்வருமாறுள்ளது:

> இந்நிலத்தால் தன் நகரம் ஊர் வரிந்ததெல்லாம் தத்தசிவனுக்கும் தர்மகண்ணருக்கும் ஆனந்த சிவனுக்கும். இவர்கள் மக்கள் மக்களே அர்ச்சனை செய்து உண்ணப் பணித்துக் கொடுத்தேன்.

அர்ச்சகர் நியமனம் பற்றிய இக்குறிப்பினால் அந்த நியமனமானது குறிப்பிட்ட பிராமணர் மூவருக்குமன்றி அவர்களின் சந்தானத்தில் உள்ளவர்களுக்கும் உரிமையானது என்பது தெளிவாகின்றது. அர்ச்சகர்களுக்குச் சீவிதமாக அர்ச்சனாபோகம் என்னும் நன்கொடை வழங்கப் பெற்றது. உத்தரமேரூர் சாசனமொன்றிலே நந்திவர்மன் காலத்து அர்ச்சனாபோகம் ஒன்றினைப் பற்றிச் சபையார் அமைத்த விதிகள் பற்றிச் சொல்லப்படுகின்றது. வேதபாராயணம் செய்யத்தக்க ஆசாரசீலரான பிராமணரையே அர்ச்சகராக நியமித்தனர்.

பிராமணர், கோயில்களில் அர்ச்சனை செய்வதோடு வேறு கடமைகளிலும் ஈடுபட்டனர். மண்டபத்துக்கு நீர்வார்த்து விளக்கேற்றுதல், நந்தவனம் அமைத்தல், கோயில் மண்டபத்தில் வேதம் ஓதுதல், மகாபாரதம் படித்தல் முதலிய பணிகளிலும் அவர்கள் ஈடுபட்டனர். கூரம் செப்பேடுகள், தண்டன் தோட்டம் செப்பேடுகள் ஆகியவற்றில் இவற்றைப் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன. அவற்றுக்குத் தனித்தனியாக நிலப் பங்குகள் வழங்கப்பட்டன. முதலாம் பரமேஸ்வரவர்மனின் காலத்திற் கூரம் கோயிலிற் பிராமணர் இருவர் அர்ச்சகராக இருந்தனர். அவர்களே கோயிலை நிர்வாகஞ் செய்தனர். கோயிலுக்கு மானியமாக வழங்கப்பட்ட நிலம் 25 பங்குகளைக் கொண்டிருந்தது. அவற்றில் மூன்று பங்குகள் அர்ச்சனைக்குரியவை. மண்டபத்தில் நீர் வார்த்து விளக்கெரிப்பதற்கு ஒரு பங்கு வழங்கப்பட்டது. மகாபாரதம் ஓதுவானுக்கு ஒரு பங்கு கொடுக்கப்பட்டது. தண்டன் தோட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பேடுகளிலுள்ள சாசனத்திலும் மகாபாரதம் படிப்பவனுக்கு வழங்கப்பட்ட நிலப்பங்கு பற்றிக் கூறப்படுகின்றது.

காஞ்சிபுரத்திலுள்ள முக்தேஸ்வரத்துக் கோயிற் பரிவாரத்திலே அர்ச்சகர், தட்டளி கொட்டுவார், உருத்திர கணிகையர், மந்திராச்சாரியார், விளக்கும் தவசிகள் என ஐந்து வகையினரைப் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. கர்ப்பகிருகத்தில் நிவேதனஞ் செய்து ஆராதனை பண்ணும் வேளைகளில் உலோகத் தகடுகளில் உருவாக்கப்பட்ட கருவிகளை ஒலிப்பவர்கள் தட்டளி கொட்டுவார் எனப்பட்டனர். திருப்பலி கொட்டுவார் என்றும் ஸ்ரீ பலி கொட்டுவார் என்றும் அவர்களைக் குறிப்பிடுவதுண்டு. முக்தேஸ்வரத்தில் 32 உருத்திர கணிகையர் சேவை புரிந்தனர். அவர்களை அடிகள்மார் என்றும் கணிகையர் என்றுஞ் சொல்வதுண்டு. அர்ச்சகர்களை விட மந்திராச்சாரியார் என்றவொரு வகைப் பிராமணர் கோயில்களிலே கடமை புரிந்தனர். வேதமந்திரங்களை ஓதுவது அவர்களின் கடமையாகும். அத்தகைய பிராமணர் ஐந்து பேர் காஞ்சியிலுள்ள முக்தேஸ்வரத்திலே கடமை புரிந்தனர். ஆலயம், அதன் சுற்றாடல், பாத்திரங்கள், விளக்குகள் முதலியவற்றைச் சுத்தம் பண்ணுவது விளக்கும் தவசிகள் என்போரின் கடமையாகும். ஆலய தர்மங்களைக் கவனிப்பதற்கென்று அமிர்தகணம் என்னும் வாரியத்தை ஊர்ச்சபையார் நியமித்திருந்தனர்.

## பல்லவர் கலைப்பாணி:

**கோயில்களும் சிற்பங்களும்**

**கோயில்களும் கட்டுமான முறைகளும்**

கோயிற் கட்டுமான முறைகளும் சிற்பங்களும் சாஸ்திர விதிகளை ஆதாரமாகக் கொண்டவை. சிற்ப சாஸ்திரம், ஆகமம் என்னும் வகைகளைச் சேர்ந்த நூல்களிற் சொல்லப்படும் விதிகளுக்கமையக் கோயில்களும் அவற்றிலுள்ள சிற்பங்களும் அமைக்கப்படும். **நாகரம், வேஸரம், திராவிடம்** என்னும் மூன்று வகையான கோயிற் கட்டுமான முறைகளைப் பற்றிச் சிற்ப நூல்கள் கூறும். அவற்றின் சிகரம் முறையே நாற்கோணமாகவும், வட்டமாகவும், எண்கோணமாகவும் அமைந்திருக்குமென்று அந்நூல்கள் கூறும்!

நாகரம், வேஸரம், திராவிடம் ஆகிய மூன்று வகைகளும் பிராந்திய மரபுகளை மூலமாகக் கொண்டு விருத்தி பெற்றவை என்ற கருத்தும் சில சிற்பசாஸ்திர நூல்களிற் காணப்படுகின்றது. இமயம் முதல் விந்தியம் வரையான பரந்த நிலப்பகுதியில் அமைந்துள்ள கோயில்கள் நாகரம் எனப்படும்.

தக்கிணத்துக் கோயில்கள் வேஸரம் என்னும் வகைக்குரியன. அவை கதம்ப நாகர கட்டடக் கலை முறையினையும் மூலமாகக் கொண்டு வளர்ச்சி பெற்றவை. அவற்றிலே நாகரம், திராவிடம் ஆகியவற்றின் அம்சங்கள் கலப்புற்றுள்ளன. ஐகொளே, பட்டதகல் எல்லோரா ஆகிய தலங்களில் அமைந்துள்ள கோயில்கள் இதற்குச் சிறந்த உதாரணங்களாகும்.

கிருஷ்ணா நதிக்குத் தெற்கிலுள்ள பகுதிகளில் அமைந்துள்ள கோயில்கள் திராவிட கலைப்பாணியில் அமைந்தனவாகும். கலிங்கத்துக் கலைப்பாணி என்னும் வகையொன்றினைப் பற்றிய மத்திய காலத்துச் சாசனங்களிற் குறிப்புண்டு. அது நாகரத்தின் ஒரு பிரிவாகும். திராவிட கலைப்பாணியில் நான்கு வகையான கோயிலமைப்புகள் உள்ளன. அவை **மண்டளி, குடபோகம், மலைதளி, கற்றளி** என்பனவாகும். தமிழகத்துக் கோயில்களில் மண்டளிகள் மிக புராதனமானவை. களிமண், செங்கல் என்பனவற்றால் அமைக்கப்படும் கோயில்கள் மண்டளி எனப்படும். பத்தாம் நூற்றாண்டு வரை மிகப் பெரும்பாலான சைவ வைணவக் கோயில்கள் மண்டளிகளாகவே அமைந்திருந்தன.

ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளிற் சைவசமய குரவர்களின் பாடல் பெற்ற கோயில்களிற் பெரும்பாலானவை செங்கற் கோயில்களாகும்.

## குடபோகங்கள்

குகைகளைக் குடைந்து அமைக்கப்படும் கோயில்கள் குடபோகம் என்றும் குடைவரை என்றுஞ் சொல்லப்படும். குடபோக முறை தக்கிணப் பிரதேசத்தில் நீண்டகால வரலாற்றைக் கொண்டதாகும். குடபோகங்களான சமண, பௌத்தக் கோயில்களும் சைவ, வைணவக் கோயில்களும் அஜந்தா, பாஜா, எல்லோரா, வாதாபி முதவலிய இடங்களில் உள்ளன. அவற்றிலே சில அளவில் மிகப் பெரியனவாகும். வரலாற்றுச் சிறப்புடைய வனப்பு மிக்க ஓவியங்களும் அவற்றிலுள்ளன.

தமிழகத்திலே குடபோக முறையின் வளர்ச்சி தொண்டைநாடு, பாண்டிநாடு ஆகியவற்றில் ஏககாலத்தில் ஏற்பட்டது. பாண்டிய நாட்டிலே பிள்ளையார் பட்டியில் அமைந்திருக்கும் குடபோகம் தமிழ்நாட்டுக் குடபோகங்கள் எல்லாவற்றிலும் மிகப் புராதனமானது. அது ஆறாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது என்பது அண்மைக்கால ஆராய்ச்சிகள் மூலம் தெளிவாகியுள்ளது.

கோயிற் கட்டடக்கலை பற்றி ஆராய்ந்த ஆரம்பகால ஆராய்ச்சியாளர்கள் தென்தமிழ்நாட்டுக் குடபோகங்களைப் பற்றி அறிந்திருக்கவில்லை. பல்லவர்களின் ஆதிக்கத்தின் கீழமைந்த பகுதிகளிலுள்ள குடபோகங்களையே அவர்கள் அறிந்திருந்தனர். அவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் கூறிய கருத்துகள் நிலைபெற்று விட்டன. பல்லவ மன்னனாகிய மகேந்திர வர்மனின் காலத்துக்கு முன்பே தமிழகத்திற் குடபோகங்களை அமைக்கும் முறை ஆரம்பமாகி விட்டது. ஆயினும், திராவிட கலைப்பாணியின் வளர்ச்சியிற் பல்லவரின் குடபோகங்கள் சிறப்பிடம் பெற்றுள்ளன என்பது மறுக்கமுடியாதவொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடபோகம், மலைதளி, கற்றளி என்னும் மூன்றுவகையான கோயில்கள் பல்லவ மன்னர்களால் அமைக்கப்பட்டன. பல்லவர் தொடக்கத்திலே குடபோகங்களை அமைத்தனர். பெரும்பாலான குடபோகங்கள் முதலாம் மகேந்திரவர்மன் (600-630) மாமல்லனாகிய முதலாம் நரசிம்மவர்மன் (630-668) ஆகியோரின் காலங்களுக்குரியவை. பல்லவர்கள் நான்காம் நூற்றாண்டு முதலாகக் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். தொண்டைநாடும் தெலுங்கு தேசத்தின் பகுதியான வேங்கிநாடும் அவர்களின் இராச்சியத்தில் இணைந்திருந்தன. பல்லவரிற் சிலர் தெலுங்கு தேசத்திற் கோயில்களை அமைத்தமை பற்றி அவர்களின் பட்டயங்கள் குறிப்பிடுகின்றன. தக்கணத்திலிருந்தும், குறிப்பாகத் தெலுங்கு தேசத்திலிருந்தும் ஏற்பட்ட செல்வாக்கின் பயனாகப் பல்லவரின் ஆட்சியிற் குடபோகங்களை அமைக்கும் முறை தொண்டை நாட்டில் ஏற்பட்டதென்று கருதலாம்.

## குடைவரைக் கோயில்கள்

தொண்டை நாட்டில் முதன்முதலாக மகேந்திரவர்மனே குடைவரைக் கோயில்களை அமைப்பித்தான். மண்டகபட்டு என்னுமூரிலுள்ள கோயிலே அவனால் அமைக்கப்பட்ட முதலாவது குடைவரைக் கோயிலாகும். அதிலே மேல்வரும் சமஸ்கிருத மொழியிலமைந்த சாசனங்கள் காணப்படுகின்றது.

1. ஏதத் அநிஷ்டகம் அத்ருமம் - அலோ
2. கம் - அசுதம் விசித்ர சித்தேந
3. நிர்மாபிதந் - ந்ருபேண பிரமே
4. ஸ்வர விஷ்ணு - லக்ஷிதாயதனம்.

'பிரமா, ஈஸ்வரன், விஷ்ணு என்போருக்கு உரியதான லக்ஷிதாய தனம் என்னும் இந்தக் கோயில் செங்கல், மரம், உலோகம், சுதை என்பன இல்லாது விசித்திரசித்தன் என்னும் அரசனால் அமைக்கப்பட்டுள்ளது.'

மண்டகப்பட்டுக் கோயில் **லக்ஷிதாயதனம்** என்னும் பெயர் கொண்டது; அது **விசித்திரசித்தன்** என்னும் அரசனின் திருப்பணியானது; அது குடைவரையாக அமைக்கப்பட்டமையாற் புதுமையான கட்டட அமைப்பாகும் என்ற விவரங்கள் சாசனத்தில் அடங்கியுள்ளன. மேலும், செங்கல், மரம், உலோகம், சுதை என்பவற்றைக் கொண்டு கலப்புக் கட்டிடங்களாக ஆலயங்களை அமைத்துக் கொள்வது முன்னைய நாட்டு வழமை என்பதையும் அதனால் உணர்ந்து கொள்ள முடிகின்றது. மகேந்திரவர்மன் வேறும் பல குடைவரைகளை அமைத்தான். தமிழகத்தில் மட்டுமன்றிப் பரத கண்டம் முழுவதிலும் மிகக் கூடிய அளவிலான குடைவரைகளை அமைத்த அரசன் என்ற வகையிலே இந்தியக் கட்டடக்கலை வரலாற்றில் அவனுக்குச் சிறப்பிடம் உண்டு.

## குடபோகங்களின் பொதுப் பண்புகள்

மகேந்திரவர்மன் காலத்துக் குடபோகங்கள் அளவிற் சிறியவை. கட்டிடம் சதுரமாகவோ நீள்சதுரமாகவோ காணப்படும். பொதுவாக, அவற்றில் இரண்டு தூண் வரிசைகள் அமைந்திருக்கும் முதலாவது தூண் வரிசை கட்டடத்தின் முகப்பில் அமைந்திருக்கும். அதன் நடுவில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தூண்கள் காணப்படும். ஓரங்களிற் சுவர்களை ஒட்டிய வண்ணமாக ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு அரைத்தூண் இடம்பெறும். தூண்களும் அரைத்தூண்களும் ஒரே விதமான அமைப்புக் கொண்டவை. முன்புறத்திலுள்ள தூண்வரிசைக்கு நேராக இன்னொரு தூண்வரிசை மண்டபத்தின் நடுவில் அமைந்திருக்கும். கட்டடத்தினை முகப்பு மண்டபம், அர்த்த மண்டபம் என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கும் விதத்திலே அத்தூண் வரிசை அமைந்திருக்கும்.

மகேந்திரவர்மனின் காலத்துக் கோயில்களிலுள்ள தூண்கள் சராசரி 7அடி உயரங்கொண்டவை. தூண்களின் மேற்பகுதியும் அடிப்பகுதியும் இரண்டு அடி நீளமான சதுரங்களாயிருக்கும் தூண்களின் நடுப்பகுதி எண்கோணமாயிருக்கும். சதுரமான பகுதிகளிலே தாமரைமலர் வடிவங்கள் அமைந்திருக்கும். காலப் போக்கிலே தூண்களின் மேற்பாகத்தில் போதிகை, உத்திரம் என்னும் அம்சங்கள் இடம்பெற்றன. போதிகை தரங்கமற்றதாய் அமைந்திருக்கும்.

ஆரம்பகாலக் குடைவரைகளிற் கருவறைகள் பின்சுவரிற் குடையப்பட்டிருக்கும். மண்டகபட்டு, குரங்கணில் முட்டம், மாமண்டூர் ஆகியவிடங்களில் மூன்று கருவறைகள் அமைந்திருக்கின்றன. பல்லாவரத்திலே ஐந்து கருவறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அக்காரணத்தால் அங்குள்ள கோயில் இந்நாட்களிற் பஞ்சபாண்டவர் கோயில் என்றுஞ் சொல்லப்படுகின்றது. மூன்று கருவறைகள் அமைந்த கோயில்களில் மண்டகபட்டு ஆலயத்தைப் போல சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளையும் வழிபடுவதற்குரிய கோயில்களாகும். பல்லாவரம், மாமண்டூர் ஆகியவற்றிலுள்ள குடபோகங்களிற் கருவறையின் அடியில் அதிஷ்டானப் பகுதிகளாக ஜகதி, குமுதம், கண்டம், கம்பம் என்பன அமைந்திருக்கின்றன.

குடைவரையின் முகப்பிலும் சில சமயங்களிற் கருவறையின் வாயிற்புறங்களிலும் துவார பாலகரின் உருவங்கள் காணப்படும். மாமண்டூரிலுள்ள உருத்திரவாலீஸ்வரம் அத்தகைய குட போகங்களில் ஒன்றாகும். அங்குள்ள மூன்று கருவறை வாயில்களிலும் வாயிற்காவலர்களின் சிற்பங்கள் உள்ளன. தெற்குக் கரு வறையின் வாயிற் காவலரின் உருவங்கள் முனிவர்களின் கோலத்திலே சடையுந் தாடியும் அமைந்து காணப்படுகின்றன. அவர்கள் வஸ்திரம் அணிந்த கோலத்திலும் கைகளில் தாமரை மலர்களை ஏந்திய நிலையிலுங் காணப்படுகின்றனர். உருவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிபங்கமானவை. பத்திர குண்டலங்களும் முப்புரிநூலும் அவற்றிலே தெரிகின்றன. துவாரபாலகரின் தோற்றத்தின் அடிப் படையில் அவை அமைந்துள்ள கருவறை பிரமதேவனின் பள்ளியாக அமைக்கப்பட்டது என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது. வடக்கிலுள்ள வாயிற்காவலரின் உருவங்கள் சற்று வேறுபட்ட கோலத்தில் அமைந்துள்ளன. உருவங்கள் ஸ்தானகக் கோலத்திலே திரிபங்கமாக அமைந்துள்ளன. அவற்றிலே பத்திர குண்டலங்களும் முப்புரிநூலுங் காணப்படுகின்றன. அவற்றின் தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டு, அவை அமைந்துள்ள கருவறை விஷ்ணுவின் திருப்பள்ளியாக அமைக்கப்பட்டதென்று கருதலாம்.

## சில புதிய அம்சங்கள்

மகேந்திரவர்மன் காலத்துக் குடபோகங்களில் வல்லம், தளவானூர் சீயமங்கலம், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களி லுள்ளவை வளர்ச்சி பொருந்திய நிலையிற் காணப்படுகின்றன. கடவுட் படிமங்கள் அமைந்திருப்பது அவற்றின் சிறப்பம்சமாகும். காஞ்சிபுரம் மாவட்டத்துச் செங்கற்பட்டுக் கோட்டத்திலே வல்லம் என்னும் ஊரிலே தாழ்வான மலைப்பகுதி ஒன்றில் மகேந்திர வர்மன் காலத்துக் குரிய மூன்று சிறிய குடபோகங்கள் உள்ளன. அவற்றிலே பெரியதான வசந்தீஸ்வரம் என்னும் ஆலயம் மகேந்திரவர்மன் காலத்துச் சிற்றரசனாகிய வசந்தப்பிரியன் என்பவனின் மகனாகிய கந்தசேனனின் திருப்பணியாகும். அதிலுள்ள சாசனத்தில் மகேந்திர வர்மனின் விருதுப் பெயர்களான *சத்துருமல்லன், குணபரன்* என்பவை குறிப்பிடப்படுகின்றன.

வசந்தீஸ்வரத்திலுள்ள வாயிற்காவலரின் உருவங்கள் முன்னைய காலத்துக் கோயில்களில் உள்ளவற்றைக் காட்டிலும் சிறிது வேறுபட்டனவாகும். வாயிற்காவலரின் ஆடை அலங்காரங்கள் ஒரே மாதிரியானவை. இருவரது வாய்களின் இரு புறங்களிலும் கொம்பு போன்ற கோரைப்பற்கள் காணப்படுகின்றன. தென்புறத்துத் துவார பாலகரின் வலக்கை இடுப்பில் ஊன்றிய கோலத்திலும், இடக்கை கதாயுதத்திலே படிந்துள்ள கோலத்திலும் அமைந்துள்ளன. அவர்கள் தங்கள் கால்களில் ஒன்றைக் குறுக்காக வைத்து நின்று கொண்டு கருவறையின் வாயிற்படிகளை நோக்கிய வண்ணமாக உள்ளனர். சடை, கிரீடம், மகுடம், பத்திர குண்டலம் என்பன அணிகலன்களாக அமைந்துள்ளன.

கோயிலின் வெளியே, பாறையிற் சில கோட்டங்கள் குடையப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றிலே சிம்மாசனத்தில் அமர்ந்துள்ள சதுர்புஜ விநாயகரின் வடிவம் வனப்பு மிகுந்த கோலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் வடபுறக் கோட்டமொன்றில் ஜேஷ்டா தேவியின் உருவம், சிதைவுற்ற நிலையிற் காணப்படுகின்றது.

வல்லத்தில் இரண்டாவது குடபோகம் வசந்தீஸ்வரத்தின் அருகிலே அதற்குச் சற்றுக் கீழே, அமைந்திருக்கின்றது. அது அளவில் மிகவுஞ் சிறியது. முகப்பிலே, சுவர்களையொட்டி இரு அரைத்தூண்கள் மட்டுமே காணப்படுகின்றன. கருவறையின் வெளியே வாயிற்படியின் இரு பக்கங்களிலுந் துவாரபாலகர் உருவங்கள் அமைந்துள்ளன. கருவறையில் வள்ளிநாயகி, தேவயானை சமேதராகிய சுப்பிரமணிய தேவரின் படிமம் அமைந்தி ருக்கின்றது. குடபோகத்திலுள்ள மகேந்திரவர்மன் காலத்துக் கல்வெட்டு அதனைத் தேவகுலம் எனக் குறிப்பிடுகின்றது.

வல்லத்திலுள்ள மூன்றாவது குடபோகம் திருமால் கோட்ட மாகும். *பேரரைசருமகள் கொம்மை தேவகுலம்* என்னும் மொழித்தொடர் அதன் முகப்பிலுள்ள சாசனத்திற் காணப்படு கின்றது. அக்குடபோகமும் சுப்பிரமணியர் கோட்டத்தைப் போல அளவிற் சிறந்ததாகும். இரண்டு அரைத்தூண்கள் மட்டுமே அதன் முகப்பில் அமைந்திருக்கின்றன. கருவறை வாயிலின் இரு பக்கங்களிலும் துவாரபாலகர் சிறப்பம்சங்கள் உள்ளன. அவை கருவறையின் வாயிலை நோக்காது நேரே பார்க்கும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளன. துவாரபாலகரின் ஸ்தானகக் கோலம் வளைவிலாத நேராக நிமிர்ந்த வடிவமாகும். முப்புரி நூலினை மார்பினில் அணிந்து, கையினை இடுப்பினில் ஊன்றிய கோலத்தில் இருவருங் காணப்படுகின்றனர்.

கருவறையிலே ஸ்ரீதேவி, பூதேவி சமேதரான விஷ்ணுவின் படிமக்கோலம் அமைந்திருக்கின்றது. முன் மண்டபத்தின் வடக்குச் சுவரிலே ஸ்தானகக் கோலமான துர்க்கையின் உருவம் உள்ளது. அதில் நான்கு கரங்கள் காணப்படுகின்றன. மார்பினிற் கச்சவடமும் காதுகளிற் பத்திர குண்டலங்களுங் காணப் படுகின்றன.

## மகேந்திரவாடி

வேலூர் மாவட்டம் அரக்கோணம் வட்டத்திலுள்ள மகேந்திர வாடியில் அமைந்துள்ள குடபோகம் மகேந்திரவர்மன் காலத் திருப்பணியாகும். அது நிலமட்டத்தில் அமைந்துள்ளது. அங்குள்ள சாசனத்தில் அது *மகேந்திர விஷ்ணு கிருஹம்* எனக் குறிப்பிடப்படுகின்றது. ஆரம்பகாலத்துக் குடபோகங்களிலுள்ள அம்சங்கள் எல்லாம் இதிற் காணப்படுகின்றன. மகேந்திரவர்மனின் காலத்துச் சாசனம் கோயிலிற் காணப்படுகின்றது. முராரி கோயிலான மகேந்திரவிஷ்ணுகிருஹம் மகேந்திரபுரத்திலே, மகேந்திர தடாகத்தின் கரையிலே, மக்கள் கண்டுகளிப்பதற்காகக் குணபரனால் அமைக்கப்பட்டதென்று அச்சாசனங்களிற் குறிப்பிடப்படுகின்றது. கருவறையின் முன்புறத்தில் அதிஷ்டானமும், அரை வட்டப்படிகளும் அமைக்கப்பட்டுள்ளன. உபானம், கண்டம், பட்டிகை என்னும் படைகள் அதிஷ்டானத்தில் உள்ளன. கருவறை வாயிலின் இரு பக்கங்களிலும் துவாரபாலகர் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சத்துருமல்லேஸ்வரம் என்னுங் குடபோகம் விழுப்புரம் மாவட்டத்துச் செஞ்சி வட்டத்திலுள்ள தளவானூரில் அமைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கின்றது. அங்கே மூன்று சாசனங்கள் காணப்படுகின்றன. அவற்றிலே கோயிலின் பெயரும் அதனை உருவாக்கிய அரசனாகிய சத்துரு மல்லனின் பெயருங் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆலயத்தின் முன் பகுதியில் வேலைப்பாடுகள் அமைந்த அதிஷ்டானமும் கபோத நுழைவாயிலும் உள்ளன. கபோத நுழைவாயிலிற் காணப்படும் மகர தோரணம், பிரஸ்தரம் ஆகியவற்றின் காரணமாக ஆலயம் வனப்புமிக்க கோலத்துடன் விளங்குகின்றது.

## லலிதாங்குர பல்லவவேஸ்வரம்

சிராமலையில் அமைந்துள்ள லலிதாங்குர பல்லவேஸ்வரம் மகேந்திரவர்மனால் அமைக்கப்பட்ட குடபோகங்களில் மிக முக்கியமானதாகும். அதன் வேலைப்பாடுகள் சில குடபோக அமைப்பில் ஏற்பட்ட சில புதிய மாற்றங்களைப் பிரதிபலிக்கின்றன. மண்டபத்தின் முகப்பில் நான்கு தூண்களும் அமைக்கப் பட்டுள்ளன. வாயிற்புறத்திலே துவாரபாலகரின் உருவங்கள் காணப்படுகின்றன.

தூண்களிலும் வேறிடங்களிலும் மீனுருவங்களும் யானையின் வடிவங்களும் அமைந்துள்ளமை சிராமலைக் கோயிலின் சிறப்பம்சமாகும்.கருவறைக்கு நேரெதிராக மண்டபத்தின் மேற்குப் புறத்திலுள்ள அரைத்தூண்களுக்கு நடுவிலுள்ள சுவரில் வனப்பு மிக்க கோலத்திற் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. போதிகையில் வட்டங்களுக்குள்ளே தாமரை மலர்களைக் கொண்ட அதிஷ்டானம் அமைந்துள்ளது. அதன் மேலமைந்துள்ள பகுதியிற் பூதகணங்கள் சமேதரான கங்காதரரின் வடிவம் அமைந்திருக்கின்றது. கங்கை, முனிவர், வித்யாதரர், தேவதைகள் ஆகியோரின் சிற்பங்கள் வனப்பு மிக்க கோலத்துடன் விளங்குகின்றன. ஆலயத்திலுள்ள கல்வெட்டுகள் கோயிலைப் பற்றிய சில விவரங்களைக் கவிநயத்துடன் வர்ணிக்கின்றன. அவற்றிலே *சங்கீர்ணஜாதி, அவனிபாஜனன், சித்திரகாரப்புலி, லலிதாங்குரன், குணபரன், லக்ஷிதன், மத்தவிலாசன்* முதலிய விருதுப் பெயர்கள் காணப்படுகின்றன. அவை அனைத்தும் மகேந்திரவர்மனுக்குரியவை.

## மாமல்லபுரத்துக் குடபோகங்கள்

மாமல்லன் என்னும் நரசிம்மவர்மனாலும் அவனுக்குப் பின் வந்த அரசர் காலங்களிலும் மாமல்லப்புரத்திலும் வேறு சில ஊர்களிலுங் குடபோகங்கள் அமைக்கப்பட்டமை. மாமல்லபுரத்தில் மட்டும் எல்லாமாகப் பத்துக் குடபோகங்கள் உள்ளன. கோனேரி மண்டபம், மகாவராக விஷ்ணுகிருகம், வராக மண்டபம், மகிஷாசுரமர்த்தினி மண்டபம், மும்மூர்த்தி மண்டபம், பஞ்சபாண்டவர் மண்டபம், இராமானுஜ மண்டபம், யாளி மண்டபம் முதலானவை அங்குள்ளன. மாமல்லபுரத்துக் குட போகங்களிற் சில அளவிற் பெரியனவாகும். அங்குள்ள குட போகங்கள் சிலவற்றின் வேலைப்பாடுகள் முற்றுப்பெறாத நிலையிற் காணப்படுகின்றன.

வேலைப்பாட்டில் மாமல்லபுரத்துக் குடபோகங்கள் மகேந்திர வர்மனின் காலத்துக் கோயில்களைக் காட்டிலும் முன்னேற்றமானவை. அளவுப்பிரமாணங்களிலும் அவற்றுட் சில சற்றுப் பெரியனவாகக் காணப்படுகின்றன. பொதுவாக அவை 25 அடி நீளமும் 25 அடி அகலம் 15-20 அடி உயரமுங் கொண்டவை. அவற்றின் தூண்கள் சராசரி 9 அடி உயரமானவை. மாமல்லன் அமைப்பித்த குடை வரைகயில் முகப்பின் மேற்பகுதியிற் கபோத வரிசை காணப்படும். அதன்மேலே சாலை, கூடு என்பனவும் அமைந்திருக்கும். கபோத வரிசையின் மேல் பூதகண வரிசையோ வியாள வரிசையோ அமைக்கப்படவில்லை. கற்றளி விமானங் களுக்கு முன்னோடியான அமைப்பினை உருவாக்கும் முறையின் ஆரம்ப நிலையினையும் மாமல்லன் பாணியிலமைந்த குடபோகங்களிற் காண முடிகின்றது. திரிமூர்த்தி குடைவரை அதற்குச் சிறந்தவொரு உதாரணமாகும்.

தூண்களின் அமைப்பினைப் பொறுத்தவரையில் மாமல்லன் பாணியிற் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. அவனது காலம் முதலாகக் கட்டிடங்களில் அமைந்திருக்கும் தூண்கள் யாளித்தூண்களாகி விடுகின்றன. அவற்றின் அடிப்பாகத்திலே பின்னங்கால்களை மடித்தும் முன்னங்கால்களை நேராக நிலத்தில் ஊன்றிய கம்பீரமான கோலத்திலும் அமைந்திருக்கும் சிங்க உருவங்கள் காணப்படும். யாளித்தூண் மாமல்லன் காலம் முதலாகப் பல்லவர் கலைப்பாணியின் சிறப்பம்சமாகி விடுகின்றது. அவற்றிலே **கலசம், தாடி, கண்டம், கும்பம், பத்மம்** ஆகிய அம்சங்கள் அமைக்கப்பட்டிருப்பதாற் தூண்கள் மிகுந்த வனப்புடன் அமைந்துள்ளன.

மாமல்லபுரத்துக்கு குடபோகங்களில் அருங்கலை விநோதமான சிற்பங்களும் அமைக்கப்பட்டுள்ளன. வராகவதாரம், வாமன அவதாரம், சூரியன், துர்க்கை, கஜலக்ஷ்மி என்போரின் படிமங்கள் மிகுந்த வனப்புக் கொண்டவை. மகிஷாசுர மண்டபம் என்னுங் கோயிலிற் காணப்படும் மகிஷமர்த்தினியின் சிற்பமும் மகாவிஷ்ணு அனந்தசயனமாக அமைந்திருக்கும் வண்ணமும் அற்புதக் கோலமானவை.

### கோனேரி மண்டபம்

மாமல்லப்புரத்திலுள்ள பிரதானமான குடபோகங்களின் பொது வம்சங்களையும் அவை ஒவ்வொன்றுக்குமுரிய சிறப்புகளையும் அறிந்து கொள்வதற்கு அவற்றைப் பற்றிய விவரங்களைச் சுருக்கமாக இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். கோனோரி மண்டபம் என்னுங் குடபோகம் மல்லையின் மேற்குச் சரிவிலே கோனேரி என்னும் ஏரிக்கு எதிரில் அமைந்துள்ளது. அதில் ஐந்து கருவறைகள் அமைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்குடவரையின் முகப்பின் மேலே கபோதம், பிரஸ்தரம், சாலைவரி, சாலாசிகரம், அல்பநாசிகம் முதலிய அம்சங்கள் தோரண வளைவு போன்ற கோலத்தில் அமைந்திருக்கின்றன.

முகப்பில் நான்கு தூண்களும் இருபக்கச் சுவர்களை ஒட்டி இரு அரைத்தூண்களும் காணப்படுகின்றன. தூண்களின் அமைப்பு வழமையானது. அரைத்தூண்கள் சதுரமானவை. முகப்பு மண்டபத்திற்கப்பால் வரிசையாகஅமைந்துள்ள தூண்களும் அவ்வண்ணமானவை. ஆயினும், இரண்டாவது வரிசையிலுள்ள தூண்கள் வட்டவடிவில் அமைந்துள்ளன. அவற்றின் மேற்பாகத்திற் கலசம், கும்பம் ஆகியன பொருந்திய பத்மபந்தம் பதினாறு பக்கங்களை உடையதாகச் செதுக்கப் பட்டுள்ளது. இவ்வமைப்புகள் மகேந்திரன் கலைப் பாணியிலிருந்து சிறிது சிறிதாக மாமல்லன் கலைப்பாணிக்கு மாறிவரும் நிலையைக் காட்டுகின்றன.

அர்த்த மண்டபப்பகுதியின் பின்புறச் சுவரில் வரிசையாக ஐந்து கருவறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றிலும் அதிஷ்டானமும் வேலைப்பாடுகளும் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கருவறையின் வாயில் அமைப்பும் விமானம் போல் விளங்குகின்றது. கால்கள், கூடுகள் என்பனவற்றைத் தாங்கி நிற்கும் யாளி வடிவங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. கருவறைகளின் வாயிற் புறங்களிலே துவாரபாலகரின் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நடுவிலுள்ள கருவறையின் முன்பமைந்த வாயிற் காவலரின் தோற்றம் அரசரின் கோலம் போன்றது.

## வராக மண்டபம்

கணேசரதத்திற்குப் போகும் வழியிலுள்ள வராக மண்டபம் நுட்பமான வேலைப்பாடுகள் அமைந்த குடபோகமாகும். அதன் முன்புறத்தில் அதிஷ்டானமும் அதன் நடுவே கைப்பிடிகளோடு கூடிய மூன்று படிகளும் உள்ளன. கைப்பிடி யாளியின் வாயிலிருந்து வளைவாக வரும் சுருள் அல்லது துதிக்கை போன்ற அமைப்பில் உள்ளது. சுவர்களை ஒட்டியுள்ள அரைத்தூண்களும் அத்தகை யனவாகும். அவற்றின் மேலே அகன்ற போதிகை, உத்திரம் என்பன காணப்படுகின்றன. கருவறையின் முன்பாக உத்திரப் பகுதியிற் பூதகண வரிசை காணப்படுகின்றது.

வடக்குச் சுவரிலே வராக அவதாரம் பற்றிய புராணக் கதை சிற்பக் கோலத்தில் வடிக்கப்பட்டுள்ளது. பூலோகமானது பேரூழியில் ஆழ்கடலில் அமிழ்ந்த வேளையில், திருமால் வராகமாகி அதனை மீட்ட செயலை அற்புதக் கோலமான சிற்பமாக அங்கு அமைந்துள்ளனர். பூவராகமூர்த்தியின் வடிவத்திலமைந்த நான்கு கரங்களில் இரண்டு சங்கு, சக்கரம் என்பனவற்றைத் தாங்கியுள்ளன. கீழிரு கரங்களும் நிலமகளைத் தூக்கி வலப்பக்கத்திலே தாங்கும் கோலத்தில் அமைக்கப் பட்டுள்ளன. வராக மூர்த்தியின் வலது கால் ஆதிசேஷனை மிதிக்கும் கோலத்தில் அமைந்துள்ளது. ஒரு புறத்தில் ஆதிசேஷனின் மனைவி திருமாலை வணங்கும் கோலம் தெரிகின்றது. இந்த அதிசயமான சாதனையைக் கண்டு பேருவகையுடன் தோன்றும் கோலத்திற் சிவபெருமானின் வடிவம் செதுக்கப்பெற்றுள்ளது. சிவனின் முன்பு யாழின் உருவந் தெரிகின்றது. சூரியன், பிரமன், நாரதர் ஆகியோரும் பூவராகரின் சாதனைகளைத் தரிசிக்கின்றனர்.

உலகளந்த பெருமாள், திரிவிக்கிரமர் ஆகியோரின் வடிவங்கள் தென்புறச் சுவரில் அமைந்துள்ளன. பெருமாளின் காலடியிற் சுக்கிராச்சாரியார், மாவலிச்சக்கரவர்த்தி முதலானோர் காணப் படுகின்றனர். திருவிக்கிரமனின் இரு பக்கங்களிலும் சூரிய - சந்திரர் காணப்படுகின்றனர். பின்புறச் சுவரின் வடப்பக்கத்துக் கோட்டத்தில் யானைகள் அபிஷேகம் செய்கின்ற கஜலக்ஷ்மியின் உருவமும் தென்பக்கத்துக் கோட்டத்தில் துர்க்கையின் வடிவமுங் காணப்படுகின்றன. துர்க்கையின் மேலே சிங்கமும் கலைமானுந் தெரிகின்றன. எருமைத்தலை மீது நிற்கும் துர்க்கையின் இரு மருங்கிலும் மறவர் இருவர் வாளேந்தி நிற்கின்றனர். அவர்களில் ஒருவர் தனது தலையை வாளால் அரிந்து தேவியின் காலடியில் பலியாகத் தருகின்றார்.

## மகிஷாசுரமர்த்தினி மண்டபம்

அதிற் காணப்படும் உன்னதமான சிற்பங்களின் காரணமாக மகிஷாசுரமர்த்தினி மண்டபம் மாமல்லபுரத்துக் குடபோகங்களில் மிகுந்த சிறப்புடையதாக விளங்குகின்றது. அதன் முகப்பில் நான்கு தூண்களும் சுவர்களை ஒட்டி இரண்டு அரைத்தூண்களும் உள்ளன. அரைத்தூண்கள் நாற்கோண வடிவில் அமைந்துள்ளன. அவற்றின் மேற்பகுதியிலே தாமரை, கும்பம், பத்மம் ஆகியன அமைந்துள்ளன.

இக்குடைவரைக் கோயிலில் மூன்று கருவறைகள் உள்ளன. நடுவிலுள்ள கருவறையின் முன்பு, தளவானூர் கோயிலிற் காணப்படுவது போற், சிறிய அர்த்த மண்டபம் அமைந்துள்ளது. அக்கருவறையின் பின்புறச் சுவரிற் சோமஸ்கந்த வடிவம் காணப் படுகின்றது.

பிரமன் திருமால் ஆகியோரின் உருவங்கள் அதன் இரு பக்கங்களிலும் அமைந்துள்ளன. வலப்பக்கத்திலே சண்டேசனுக்கிரக மூர்த்தியின் வடிவங் காணப்படுகின்றது. கருவறைகளின் முன்புறத்திலே துவாரபாலகரின் உருவங்கள் காணப்படுகின்றன.

மண்டபத்தின் வடக்குச் சுவரில் மகிஷமர்த்தினியின் வடிவம் மிகுந்த வனப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. வில், வாள், கேடயம், சங்கு, சக்கரம் முதலியவற்றை ஏந்திய கோலத்தில் எட்டுக் கரங்களுடன் துர்க்கையின் வடிவம் அமைந்துள்ளது. அருகிலே வாள், கேடயம் என்பனவற்றை ஏந்திய கோலத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத கணங்களின் உருவங்கள் தெரிகின்றன. துர்க்கையின் வடிவத்துக்கு மேலே. பின்புறத்தில் வாள். கேடயம் என்பனவற்றை ஏந்திய இருவரின் உருவங்களும் சாமரை வீசும் இருவரின் உருவங்களும் காணப்படுகின்றன. எதிரிலே கதையினை ஓங்கிய கோலத்தில் மகிஷாசுரனது வடிவம் காணப்படுகின்றது. உக்கிரமான போரிலே மகிஷாசுரன் பட்டு மடிவது நுட்பமான முறையிலே இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

மண்டபத்தின் தென்புறச் சுவரிலே திருமாலின் அனந்தசயனக் கோலம் அழகுற அமைந்துள்ளது. பாம்பணை பள்ளியிற் சயனக் கோலமாக அமைந்திருக்கும் பெருமாளின் பாதத்தின் அருகே அஞ்சலிக் கோலத்திலே பூதேவியின் வடிவம் அமைந்துள்ளது. அத்துடன் அங்கே தேவர்களின் உருவங்களும் அசுரர் இருவரின் உருவங்களுந் தெரிகின்றன. மகுடம். குண்டலம். உபவீதம் என்பன திருமாலின் அணிகலன்களாக அமைந்துள்ளன. திருமாலின் வலது கரம் தலையைத் தாங்கிய கோலத்திலும் இடதுகரம் முழந்தாளிற் படிந்துள்ள நிலையிலுங் காணப்படுகின்றன. திருமாலின் வடிவம் சாந்த சொரூபமானது.

## மும்மூர்த்தி குடைவரைக் கோயில்

மும்மூர்த்தி குடைவரை என்று சொல்லப்படும் குடபோகம் மாமல்லப்புரத்தின் வடக்கிலே மலையின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. அதில் மூன்று கருவறைகள் மட்டுமே அமைந் துள்ளன. வழக்கமாக அமைக்கப்படும் முக மண்டபம். அர்த்த மண்டபம் ஆகியன அங்கு உருவாக்கப்படவில்லை. கருவறை யின் அதிஷ்டானப் படிக்கட்டுகளும் அமைந்திருக்கின்றன. அதன் முன்புற முகட்டில் ஒரு தள விமானம் போன்ற அமைப்புக் காணப் படுகின்றது. நடுவிலுள்ள கருவறையிலே ஸ்தானகக் கோலத்திலும் சமபங்க நிலையிலும் அமைந்துள்ள சிவபெருமானின் உருவம் அமைந்துள்ளது. அதிலுள்ள நான்கு கரங்களில் மேலே அமைந் துள்ளவை மழு. அக்கமாலை என்பனவற்றை ஏந்திய வண்ணமாய் உள்ளன. கீழேயுள்ள கரங்கள் அபயம். கடி என்னும் முத்திரைகளிற் காணப்படுகின்றன. தெற்கிலுள்ள கருவறையின் பின்புறச் சுவரிலே திருமாலின் வடிவம் காணப்படுகின்றது. நடுவிலுள்ள கருவறையிலே ஸ்தானகக் கோலத்திலும் சமபங்க நிலையிலும் ஸ்தானகக் கோலமாயுள்ளது. மேலுள்ள இரு கரங்களும் சங்கு. சக்கரம் என்பவற்றை ஏந்திய கோலமானவை. கீழ் வலக்கரம் அபயகரமாய் உள்ளது. நான்காவது கரம் தொடையிற் படிந்த கோலமானது. உருவத்தின் இரு பக்கங்களிலும் மேலே பறக்குங் கணங்களின் வடிவங்கள் தெரிகின்றன. கீழே. இருபுறமும் அடியார்கள் இருவர் இருக்கும் காட்சி தெரிகின்றது.

வடபுறத்துக் கருவறையில் அமைந்துள்ள கடவுட் படிமம் ஸ்தானகக் கோலமானது. அது நான்கு கரங்கள் பொருந்தியது. அக்கமாலை. உபவீதம். சன்னவீரம் என்னும் அணிகலன்கள் உருவத்தில் அமைந்துள்ளன. மேலுள்ள கரங்களில் அக்கமாலை. தாமரைமலர் என்பனவற்றின் உருவங்கள் தெரிகின்றன. கீழ்க்கரங்களில் ஒன்று அபயகரமாகும். மற்றைய கரம் தொடையிற் படிந்த கோலமாய் அமைந்துள்ளது. சன்னவீரம் அமைந் திருப்பதால் இதனைச் சுப்பிரமணிய தேவரின் படிமமென்று சிலர் கருதுவர். ஆயினும். அதனைப் பிரமதேவனின் வடிவமென்றுங் கொள்ளலாம். அவ்வாறாயின் மும்மூர்த்தி குடபோகம் என்னும் பெயர் அதற்கு இயல்பாகவே உரியதான காரணப்பெயராகலாம். சிவன். திருமால். பிரமன் ஆகிய மும்மூர்த்திகளை வழிபடுவ தற்கென்று குடைவரைகளை அமைப்பது பல்லவர்கால வழமை என்பதும் இங்கு கவனித்தற்குரியதாகும்.

## பஞ்சபாண்டவர் மண்டபம்

மாமல்லபுரத்துப் பெரும் பாறைச் சிற்பத்திற்கு தெற்கில் அமைந்துள்ள குடைவரை பஞ்சபாண்டவர் மண்டம் என்னும் பெயரால் வழங்கும். அதனைக் கிருஷ்ண மண்டபம் என்றுஞ் சொல்வர். முற்றுப் பெறாத அக்குடைவரை பெரிய கோயிலாக அமைவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தென் முகப்பில் ஆறு தூண்களும் ஓரங்களில் அவற்றைப் போன்ற இரண்டு அரைத் தூண்களும் ஓரங்களில் அவற்றைப் போன்ற இரண்டு அரைத் தூண்களும் உள்ளன. அவை யாவும் யாளித் தூண்கள். அவற்றின் மேலே போதிகை. குதிரை வீரரின் சிற்பங்கள். உத்திரம் போன்ற அம்சங்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடற்குரியது. மண்டப முகப்பின் மேல் சாலைகள். கூடுகள் போன்ற அமைப்புகள் செதுக்கப்பட்டுள்ளன. மண்டபத்தின் நடுவில் மற்றுமொரு வரிசைத் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. அடியிலே சிம்ம வடிவங்களைப் பெறாத அத்தூண்கள் எண்முகத்தூண்களாக அமைந்துள்ளன. இக்குடைவரையிற் காணப்படும் ஆயர்பாடிக் காட்சிகளாக அமைந்த சிற்பங்கள் அற்புதக் கோலமானவை. கிருஷ்ணாவதாரம் பற்றிய புராணக் கதைகளை விளக்குமாப்போல் அமைந்த சிற்பங்கள் சமகாலத்துத் தென்னாட்டு ஆயர்களின் தோற்றங்களையும் ஆனிரைகளின் அங்கலக்ஷணங்களையும் உயிரோட்டமுள்ள வகையிலும் ஒப்புயர்வற்ற முறையிலுஞ் சித்தரிக்கின்றன.

## பரமேஸ்வர விஷ்னு கிருஹம்

மகாவராக மண்டபம் என்று சொல்லப்படும் பரமேஸ்வர விஷ்ணு கிருஹம் மாமல்லப்புரத்து மலைப்பகுதியின் வடக்கு மூலையில் அமைந்திருக்கின்றது. அதனை ஆதிவராகக் குடைவரை என்றுஞ் சொல்வர். வனப்பு மிக்க சிற்பங்கள் பலவற்றைக் கொண்ட இக்குடைவரையின் அமைப்பில் முன்னேற்றமான அம்சங்கள் சில காணப்படுகின்றன. சிறுகோயில் போன்ற அமைப்பொன்று மண்டபத்தின் மேலே வனப்பு மிக்க கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தின் முகப்பிலே சிற்ப வேலைப்பாடுகள் அழகு மிக்க கோலத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. கபோதம், நாசிகை, கூடு, சாலை முதலியவற்றோடு கோபுர வடிவங்களும் செதுக்கப் பட்டுள்ளன. முகப்பில் தெற்கு நோக்கிய நான்கு யாளித்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுவரோடு பொருந்திய இரு அணைவுத் தூண்களும் யாளித்தூண்களாகும். அவற்றிலொன்று தெற்கு நோக்கியது; மற்றையது வடக்கு நோக்கியது. மண்டபத்தின் நடுவில் வழமைக்கு மாறாக இரு வட்டத்தூண்கள் மட்டுமே உள்ளன. அவற்றுக்கு நேராகச் சுவரோடு பொருந்திய அரைத் தூண்கள் பக்கத்துக்கு ஒன்றாக அமைந்துள்ளன.

அதிஷ்டானம் போன்ற அமைப்பின் மேலே கருவறை உருவாக்கப்பட்டுள்ளது. அரைத் தூண்களை ஒத்த கால்களும் உத்திரம் போன்ற அமைப்புகளுங் காணப்படுகின்றன. கருவறையின் முன்பு, இரு பக்கங்களிலும், வாயிற் காவலர் வடிவங்கள் காணப்படுகின்றன. கருவறையில் வராகமூர்த்தியின் சுதைச்சிற்பம் உள்ளது.

வடக்குச் சுவரில் மூன்று கோட்டங்கள் அமைந்துள்ளன. நான்கு கரங்கள் பொருந்திய மகாவிஷ்ணுவின் ஸ்தானகக் கோலம் நடுக்கோட்டத்தில் அமைந்திருக்கின்றது. அதன் கீழே ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொருவராக அடியார்கள் இருவர் முழங்காலை நிலத்தில் ஊன்றிய நிலையிற் காணப்படுகின்றனர். அதன் வடக்குப் புறத்தில் ஆதிசேஷனின் உருவம் நாகக் குடையோடும் மலர் ஏந்திய கோலத்திலுங் காணப்படுகின்றது. தென்புறச் சுவரின் நடுக் கோட்டத்தில் ஹரிஹரனின் ஸ்தானகக் கோலம் அமைந்துள்ளது. அதன் இடப்பக்கம் ஈஸ்வரனின் அம்சமானது; வலப் பக்கம் பெருமாளின் அம்சமானது. இறைவனை அடியார்கள் இருவர் அருகில் நின்று வணங்கும் கோலம் தெரிகின்றது.

இவற்றையடுத்து இரு பக்கங்களிலுள்ள சுவர்களிலும் அளவிற் பெரியனவான சிற்பங்கள் காணப்படுகின்றன. வடக்குப் புறத்தில், வராக மண்டபத்தில் உள்ளதைப் போன்று, கஜலக்ஷ்மியின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. திருமகளின் பாதங்கள் தாமரை மலர் மேல் ஊன்றிய கோலத்தில் உள்ளன. தேவர்களும் யானைகளும் இருபுறத்திலும் நின்ற வண்ணம் திருமகளை அபிஷேகம் பண்ணும் காட்சி மிகுந்த வனப்புடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதன் எதிர்புறத்திலே, தெற்குச் சுவரிலே, மகிஷமர்த்தனியின் போர்க்கோலம் வடிக்கப்பட்டுள்ளது. அம்மனின் கோலம் ரௌத்திர பாவமானது; எட்டுக் கரங்கள் பொருந்தியது; கரங்கள் படைக்கலங்கள் ஏந்திய கோலமானவை. அம்மனின் வடிவம் மகிஷாசுரனின் தலைமேலே காலூன்றிய நிலையிற் காணப்படுகின்றது. மேலே வலப்பக்கத்திற் சிங்க உருவமும் இடப்பக்கத்தில் மானின் தலையுந் தெரிகின்றன. அடியார்கள் இருவர் முழங்காலைத் தரையில் ஊன்றிய கோலத்தில் இறைவியை வணங்கும் காட்சியுந் தெரிகின்றது.

ஆசனத்தில் அமர்ந்திருக்கும் அரசன் ஒருவனின் உருவம் வடக்குச் சுவரிலே உருவாக்கப்பட்டுள்ளது. இரு புறத்திலும் வஸ்திராபரணதாரிகளான தேவியர் இருவரின் வடிவங்கள் உள்ளன. மேலே, உத்திரத்திலுள்ள சாசனத்திற் **சிம்மவிஷ்ணு** என்னும் பெயர் எழுதப்பட்டுள்ளது. அதன் எதிர்ப்புறத்திலே, தெற்குச் சுவரிலே வேறொரு அரசனின் உருவம் நின்ற கோலத்தில் உருவாக்கப் பட்டுள்ளது. நின்ற நிலையில் வலது கையினாற் கருவறையைச் சுட்டிக் காட்டும் பாவனையில் உருவம் அமைந்துள்ளது. அரசனின் கையைப் பிடித்த கோலத்தில் இடப்பக்கத்திலே தேவி ஒருத்தியின் வடிவங் காணப்படுகின்றது. அவளுக்கு அருகிலே அமைந்துள்ள பெண்ணின் வடிவம் மற்றொரு தேவியினைக் குறிப்பதாகலாம். அச்சிற்பங்களுக்கு மேலே எழுதப்பட்டுள்ள சாசனத்தில் மகேந்திர வர்மன் என்னும் பெயர் காணப்படுகின்றது.

மகாமண்டபத்தின் வடக்குச் சுவரிலே கங்காதரரின் வடிவம் நான்கு கரங்கள் பொருந்திய வண்ணமாக அமைக்கப்பட்டுள்ளது. தெற்குச் சுவரில் ஸ்தானகக் கோலத்திலும் சமபங்க நிலையிலும் தாமரை மலர் மேல் அமைந்த பிரமனின் உருவம் காணப் படுகின்றது. நான்முகனின் முகங்களில் மூன்று மட்டும் தெரியக் கூடிய விதத்தில் உருவம் செதுக்கப்பட்டுள்ளது.

## இராமானுஜ மண்டபம்

பரமேஸ்வரனின் காலத்துக்குரியதான இராமானுஜ மண்டபம் மகிஷாசுரமர்த்தினி குடபோகத்திற்கு அப்பால், மலைப்பாறையின் கிழக்குப் பக்கத்தில் அமைந்திருக்கின்றது. நீள் சதுரமான அம்மண்டபத்தின் முன்புறத்தில் இரண்டு தூண்களும் ஓரத்தில் இரண்டு அணைவுத் தூண்களும் உள்ளன. மூன்று கருவறைகள் பின்புறச் சுவரில் உருவாக்கப்பட்டுள்ளன. அதன் முன்புறத்தில் அதிஷ்டானம், போதிகை, உத்திரம் போன்ற அம்சங்கள் காணப்படுகின்றன. யானை முகம் கொண்ட பூதகணமொன்றும் நந்தி முகங்கொண்ட பூதகணமொன்றும் உத்திரங்களிடையில் அமைந்துள்ள வடிவங்களிலே காணப்படுகின்றன.

சோமாஸ்கந்தரின் வடிவம் கருவறையின் உட்புறச் சுவரில் உருவாக்கப்பட்டுள்ளது. குடைகள் பெற்ற முருகனுடன் அம்மையும் அப்பரும் வீற்றிருக்கும் கோலம் தெரிகின்றது. ஆதியில் இம்மண்டபம் சிவன் கோயிலாக அமைக்கப் பட்டிருந்தது. அதில் உருத்திரனைப் புகழ்ந்துரைக்கும் பல்லவர் காலச் சாசனமொன்று காணப்பட்டுள்ளது. இம்மண்டபத்திலுள்ள பெரும்பாலான சிற்பங்கள் சிதைந்து விட்டன.

## மலைதளிகள்

பல்லவர் காலக் கட்டிடக்கலை வளர்ச்சியின் இரண்டாவது கட்டத்தை மலைதளிகளிற் காணலாம். மலைகளை மேலிருந்து கீழாக வெட்டியும் செதுக்கியும் அமைக்கப்படுபவை மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளிகளாகும். மாமல்லப்புரத்தில் இரதம் என்று சொல்லப்படும் ஒன்பது மலைதளிகள் உள்ளன. அவை மாமல்லன் காலம் முதலாகப் பரமேஸ்வரவர்மனின் ஆட்சி முடியும் வரையுள்ள காலத்தில் அமைக்கப் பெற்றவை. திரௌபதி (பிடாரி). அருச்சுனன். வீமன். தர்மராசர். (நகுல) சகாதேவர் என்போரின் பெயர்களால் வழங்குந் தளிகள் தெற்கிலும். கணேசரதம். வடக்குப் பிடாரித்தளி. வலையான் குட்டை என்னுந் தளிகள் அவற்றுக்கு வடக்கிலும் இரு தொகுதிகளாக அமைந்துள்ளன.

மாமல்லபுரத்து மலைதளிகள் அளவுப் பிரமாணங்களிலும் கட்டுமானத்திலும் வேறுபாடுகளுடன் காணப்படுகின்றன. அவற்றுள் மிகப் பெரிய தளியான அவனிபாஜன பல்லவேஸ்வரம் என்னும் தருமராசர் தளி 42 அடி நீளமும் 32 அடி அகலமும் 40 அடி உயரமும் கொண்ட மிதமான அளவுடைய விமானமாகும். மிகச் சிறியதான திரௌபதி ரதம் என்னும் பிடாரித்தளி ஒரு சிறிய கோட்டம் போல அமைக்கப்பட்டுள்ளது. தருமராசர் தளி முத்தள விமானமாகும். கொற்றவைத் தளியும் வீமளித் தளியும் ஒருதள விமானங்கள். ஏனையவை இருதள விமானங்களாய் அமைந்துள்ளன. வலையான் குட்டைத் தளியும் வடக்கு பிடாரித் தளியும் நாகர விமானங்கள். அருச்சுனத் தளி. தருமராசர் தளி. தெற்குப் பிடாரித்தளி என்பவை கலப்புத் திராவிட விமானங்கள்: வீமத்தளியும் கணேசர் தளியும் தூய சாலை விமானங்கள்: நகுல சகாதேவர் தளி தூங்கானைமாட விமானமாகும்.

மாமல்லப்புரத்து மலைதளிகள் பலவற்றில் அதிஷ்டானம் அமைக்கப்படவில்லை. அங்குள்ள ஆறு விமானங்கள் அத்தகையனவாகும். அருச்சுனத்தளி. கொற்றவைத்தளி ஆகிய இரண்டும் ஒரே துணைத்தளத்தின் மேலும். ஒரே விதமான தாங்கு தளத்துடனும் அமைக்கப்பட்டுள்ளன. தருமராசர் தளி கபோதபந்த தாங்கு தளத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. கணேசர்தளி. அருச்சுனத் தளி. வலையான்குட்டைத் தளி. பிடாரித்தளிகள் ஆகியவற்றில் முகமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. தருமராசர் தளி. நகுல சகாதேவர் தளி ஆகியவற்றில் முன்றில்கள் உருவாகியுள்ளன.

ஏழு மலைத்தளிகளில் அரைத்தூண்கள் பொருந்திய சுவரமைப்புகள் காணப்படுகின்றன. தருமராசர் தளி. வீமத்தளி ஆகியவற்றில் அவை காணப்பட வில்லை. கொற்றவைத் தளியிலும் வடக்குப் பிடாரித் தளியிலும் மகர தோரணங்கள் அமைந்துள்ள கோட்டங்கள் சுவர்களிற் குடையப்பட்டுள்ளன. கொற்றவைத் தளிக் கோட்டங்களில் மகிஷாசுரமர்த்தினியின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பிடாரித்தளிக் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. அருச்சுனத் தளியின் சுவர் பக்கத்திற்கு மூன்று பிதுக்கங்களைப் பெற்றுள்ளது. பிதுக்கம். ஒடுக்கம் ஆகிய இரண்டிலும் கோட்டங்கள் குடையப்பட்டுள்ளன. கணேசரதத்திலும் இதே போன்ற அமைப்புகள் காணப்படுகின்றன.

தருமராசர்தளி. வீமத்தளி ஆகியவற்றின் பின்னாற் கருவறையை வலம் வருவதற்கான சுற்றுப்பாதைகள் வெட்டப்பட்டு. வேலைப்பாடுகள் நிறைவு பெறாத நிலையில் உள்ளன. எல்லாத் தளிகளினதும் கூரை உறுப்புக்கள் ஒரே மாதிரியானவை. ஆயினும். அலங்கார வேலைப்பாடுகளில் அவற்றிடையே வேற்றுமைகள் காணப்படுகின்றன. அர்ச்சுனத் தளி கொற்றவைத்தளி ஆகியவற்றின். வலபியிற் பூதமாலை அமைந்துள்ளது. கணேசர் தளியில் முன் மண்டத்து வலபியில் மட்டுமே பூதமாலை தெரிகின்றது. தருமராசர் தளியிற் கணதோரணமும் வலையான் குட்டைத் தளியில் அம்சமாலையும் உள்ளன.

அர்ச்சுனத்தளி. கொற்றவைத்தளி. நகுல சகாதேவர்தளி. கணேசத்தளி ஆகியவற்றில் மட்டுமே ஆதிதளக் கருவறை அமைந்துள்ளது. அம்மனதும் அடியார்களதும் கணங்களினதும் உருவங்கள் கொற்றவைத்தளிக் கருவறையிற் காணப்படுகின்றன. தளிகளின் ஆதிதள அமைப்புகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. வீமத்தளியின் ஆரச்சுவர்ப் பகுதி ஒவ்வொன்றிலும் இவ்விரு பஞ்சரங்கள் அமைந்துள்ளன. தர்மராசர் தளியின் முகமண்டப ஆரத்திற் பஞ்சரங்களும் கர்ணசாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. எல்லாத் தளிகளிலும் முக மண்டப ஆரம் ஆதிதள ஆரத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. கணேசர் தளியில் ஆதிதள மேற்கு ஆரம் சாலைகளின்றிக் காட்டப்பட்டுள்ளது.

தருமராசர் தளயிலும் கணேசர் தளியிலும் இரண்டாந்தள அரமியச் சுவர்கள் பிதுக்கங்களுடன் செதுக்கப்பட்டுள்ளன. தருமராசர் தளியின் பிதுக்க ஒடுக்கங்களிற் சிற்பங்களோடு கூடிய கோட்டங்கள் உள்ளன. பிடாரித் தளிகளின் சுவர்களிலுள்ள கர்ணபத்திகளிற் சிற்பங்கள் அடங்கிய கோட்டங்கள் உள்ளன. அவற்றின் சாலைப்பத்திக் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. அருச்சுனத் தளியும் இவ்வண்ணமானது. நகுல சகாதேவ தளியின் கீழ்த்தளச் சுவர்களிலும் அரமியச் சுவர்களிலும் நான்முக அரைத்தூண்கள் கோட்டங்களின்றி அமைக்கப்பட்டுள்ளன. வலையான் குட்டைத் தளி நீங்கலான எல்லாத் தளிகளிலும் வலபி அமைந்துள்ளது. வலபிகளிற் சில அம்சமாலையும் வேறு சில பூதமாலையுங் கொண்டுள்ளன: இன்னுஞ் சில வெறுமையாக உள்ளன.

இரண்டாம் தள ஆரம் வடக்குப் பிடாரித் தளி தவிர ஏனைய இருதளத் தளிகளில் இடம் பெற்றுள்ளது. வலையான் குட்டைத்தளி. தருமராசர் தளி போன்றவற்றில் இது நான்கு அங்க ஆரமாகவும். தெற்குப் பிடாரித்தளி. அர்ச்சுனத் தளி. நகுல சகாதேவர் தளி. கணேசர் தளி ஆகியவற்றில் மூன்றங்க ஆரமாகவும் அமைந்துள்ளது. நகுல சகாதேவர் தளியில் இவ்வாரத்தின் தென் பகுதியிற் கர்ண கூடங்களுக்கு இடைப்பட்ட நிலையிற்சாலைகளுக்கு மாற்றாகப் பஞ்சரங்கள் சேர்க்கப் பட்டுள்ளன. இப்பஞ்சரங்களும் கூடங்கள் போலவே வேதிகையிலுள்ளன. கணேசர் தளியின் தென். வடப் பக்கங்களில் இரண்டாம் தள ஆரம் இடைச்சாலைகளின்றிக் கூடங்கள் மட்டுமே பெற்றமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொற்றவைத்தளி நீங்கலாகவுள்ள மலைதளிகள் எல்லாவற்றிலும் கிரீவம் அமைக்கப்பட்டுள்ளது. மிக உயர்ந்த கிரீவம் வீமத்தளியிலும் கணேசர் தளியிலுங் காணப்படுகின்றன. கழுத்துப் பகுதியான கிரீவம் நாகரத் தளிகளில் நான்முகமாகவும் திராவிடத் தளிகளில் எண்முகமாகவும் ஒரே அளவுகளில் அமைந்திருக்கும். சாலைத் தளிகளில் கிரீவத்தின் முகங்கள் இருவேறு அளவுகளில் அமைந்திருக்கும். வேதிகை ஓரங்களில் நான்முக அரைத் தூண்கள் ஒட்டிய சுவர்ப்பகுதி, வாஜனம், வலபி என்பனவற்றைக் கொண்டிருக்கும். கிரீவத்தின் வலபியில் நகுல சகாதேவர் தளியில் மட்டுமே அம்சமாலை காணப்படுகின்றது. தருமதாசர் தளி, பிடாரித் தளிகள் என்பவற்றிலே பூதமாலை அமைக்கப்பட்டுள்ளது.

**சிகரம்**

நாகரம், திராவிடம், சாலை, தூங்கானை என்னும் வடிவங்களிற் பல்லவர்களின் மலை தளிச் சிகரங்கள் அமைந்திருக்கின்றன. தருமராசர் தளி, அர்ச்சுனத் தளி, தெற்குப் பிடாரித் தளி என்பவற்றின் சிகரம் திராவிடமாகும். வீமத்தளி, கணேசர் தளி என்பவை சாலைச் சிகரத்துடன் காணப்படுகின்றன. நகுல சகாதேவ தளியில் சிகரம் தூங்கானை மாடமாக விளங்குகின்றது. சிகரம், கிரீவம் ஆகிய இரண்டையும் உட்படுத்தி நாசிகைகள் உருவாக்கப்பட்டுள்ளன. நாகர, திராவிட சிகரங்களின் நாசிகைகள் ஒரே விதமானவை. அவற்றிலே செவ்வக கீழ்ப்பட்டி, தலைப்போடு கூடிய வளைவான மேற்கூரை என்பன அமைந்துள்ளன. நாசிகைகளின் தலைப்பும் வளைவதான மேற்கூரையும் கொடிக் கருக்கள் பூப்பதக்கங்கள், இலைப் பின்னல் போன்ற பலவகையான அலங்காரங்களைப் பெற்றுள்ளன.

சாலை தூங்கானை மாடத்தளி நாசிகைகள் முற்றிலும் மாறுபட்டுள்ளன. தூங்கானை மாடத்திற் பின்புறம் ஒரு பெரு நாசிகையும் பக்கப்பகுதிகளிற் கிழக்கிலும் மேற்கிலும் இரு நாசிகைகளும் கட்டப்பட்டுள்ளன. கிழக்கு மேற்குப் பெரு நாசிகைகளின் இருபுறத்தும் இரு சிறு நாசிகைகள், சற்றுத் தள்ளிய நிலையில் வெட்டப்பட்டுள்ளன. இந்நாசிகைகள் அனைத்துமே கீழுள்ள செவ்வகப் பகுதியில் அணைவு அரைத் தூண்களையும் இடைப்பட்ட சுவர்ப் பகுதியையும் பெற்றுள்ளன. கணேசத் தளியின் சிறு நாசிகைகள் இதே அமைப்புடன் வேதிகைப் பகுதியும் கொண்டுள்ளன. இத்தளியின் பெரு நாசிகை பஞ்சரம் கபோதமும் கிரீவமும் பெற்று அமைந்துள்ளது. கணேசத் தளி, நாசிகைத் தலைப்புகள் பிற நாசிகைகளில் இருப்பது போலல்லாது சூலத் தலை கொண்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். வீமத்தளியின் அனைத்து நாசிகளையும் கீழ்ப்பகுதியில் அரைத் தூண்கள் அணைந்த சுவரும் சுவரில் கோட்டமும் கொண்டுள்ளன. கோட்டங்கள் பலவற்றிலே சிற்பங்கள் அமைந்துள்ளன. கிரீவ நாசிகைகளைப் பொறுத்த வரையில், பல்லவர் காலத்தில் அவை முதன் முதலாக வீமத்தளியில் இடம் பெற்றன. அதன் பெரு நாசிகள் கபோதம், பூமிதேசம், கிரீவம் என்பவற்றுடன் பஞ்சரங்கள் போல விளங்குகின்றன.

தூங்கானை விமானமாகிய நகுல - சகாதேவர் தளி தமிழகத்தின் முதலாவது தூய திராவிட விமானம் என்ற வகையிற் சிறப்பிடம் பெறுகின்றது. அதன் கிரீவத்திலும் சிகரத்தின் எல்லாப் பகுதிகளிலும் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வேசர விமானம் போலமைந்த கணேசத் தளியின் வடக்கு, தெற்கு முகங்கள் அலங்கரிக்கப்பட்ட முகப்பட்டியோடு கூடிய நீள்வட்டக் குழிவு கொண்டுள்ளன. அக்குழிவின் மேற்பகுதியிலே தாவு யாளிகளோடு கூடிய மதலைத் தோரணங்கள் அமைந்துள்ளன. நடுவிலே வேசரமான சிறிய விமானமொன்று வடிவமைக்கப்பெற்றுள்ளது. வீமத்தளிச் சிகரத்தின் வட, தென் குழிவுகளும் முகப்பட்டி மதலைத் தோரணங் கொண்டுள்ளன. குழிகளின் நடுவில் நாகர தளமும் வேசர சிகரமும் கொண்ட கலப்பு விமானங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

## கற்றளிகள்

கற்றளிகளோடு திராவிட விமான கட்டுமானத்தில் ஒரு புதிய சகாப்தம் தோன்றியது. திராவிடகலைப்பாணியின் வரலாற்றின் உன்னதமான வளர்ச்சிக் கட்டம் அவற்றோடு ஆரம்பமாகியதென்று கருதலாம். மிக உயர்ந்த விமானங்கள், அலங்கார வேலைப்பாடுகள் கொண்ட மண்டபங்கள், மிக விசாலமான சுற்றுப் பிரகாரங்கள் முதலிய அம்சங்களோடு கூடிய மிகப்பெருங் கோயில்களை அமைத்துக் கொள்ள முடிந்தது. ராஜசிம்மனின் காலத்திலே (695-722) கற்றளிகளைக் கட்டும் வழக்கம் தொடங்கியது. அவனது காலத்துக் கட்டடங்கள் மாமல்லபுரம், மனைமலை, காஞ்சிபுரம் ஆகிய ஊர்களிற் காணப்படுகின்றன. அவற்றிலே சில சிறு தளிகள்: வேறு சில பெருங்கோயில்கள்.

## உலக்ணேஸ்வரம், முகுந்த நாயனார் கோயில்

மாமல்லபுரத்து உலக்ணேஸ்வரம், முகுந்த நாயனார் கோயில் என்பனவும் காஞ்சிபுரத்து இறவாதான் ஈஸ்வரம், மகேந்திர வர்மேஸ்வரம் ஆகியனவும் திருக்கழுக்குன்றத்து வேதகிரீஸ்வரம் என்னுங் கோயிலும் ராஜசிம்மன் காலத்துச் சிறு தளிகளாகும் மாமல்லப்புரத்து கடற்கரை கோயில்களும் பனைமலைக் கோயிலும் காஞ்சியிலுள்ள ராஜசிம்மேஸ்வரமும் அவனது காலத்துப் பெருங் கோயில்களாகும்.

சிறு தளிகளில் உலக்ணேஸ்வரம் ஒரு தள விமானமும் சிறு முக மண்டபமுங் கொண்ட கோயிலாகும். அதன் கீழ்ப் பாகத்தில் உபானம், அதிஷ்டானம் என்னும் பகுதிகள் அமைந்துள்ளன. இறையகத்தின் ஒவ்வொரு பக்கச் சுவரிலும் சிற்பங்கள் அமைந்துள்ள ஆழமான கோட்டங்கள் அமைந்திருக்கின்றன சுவர்த் திருப்பம் ஒவ்வொன்றிலும் தாவுசிம்மத்தூண் அமைந்திருக்கின்றது தாவுசிம்மத்தூண்களுக்குச் சுவரின் நடுவிலமைந்த கோட்டத்துக்கும் இடைப்பட்ட பகுதிகளில் பஞ்சரங்கள் காணப்படுகின்றன. கோட்டத்தின் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்திலும் ஒவ்வொரு பஞ்சரம் உள்ளது. பஞ்சரங்களுக்கேற்ப அதிஷ்டானம் பிதுக்கம் பெற்றுள்ளது. அதிஷ்டானத்திலிருந்து கபோதம் வரை அமைந்துள்ள பஞ்சரங்கள் நிஷ்க்ராந்த பஞ்சரங்கள் எனப்படும். பஞ்சரங்கள் ஒவ்வொன்றிலும் சிற்பங்கள் அமைந்துள்ளன. இவ்வகையான பஞ்சரங்கள் முகமண்டபத்து தெற்குச் சுவரிலுங் காணப்படுகின்றன. பல்லவர் காலத் தளிகளில் உலக்ணேஸ்வரம், காஞ்சிபுரத்து மகேந்திரவர்மேஸ்வரம் ஆகியவற்றில் மட்டும் திஷ்க்ராத்த பஞ்சரங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இருதள திராவிட விமானமாகிய முகுந்த நாயனார் கோயிலின் கட்டுமானம் உலக்ணேஸ்வரத்தைப் போன்றதாகும். அதன் கர்ப்பகிருகச் சுவரிலே சோமாஸ்கந்த வடிவம் செதுக்கப் பெற்றுள்ளது. வீமத்தளியிற் போல, அதன் ஆரச்சுவரில் இரட்டை நாசிக் கோட்டங்கள் காணப்படுகின்றன. இரண்டாம் தளத்து அரமியச் சுவர்களின் நடுவிற் கோட்டமும் அதனிரு பக்கங்களிலும் பஞ்சரங்களும் அமைந்துள்ளன.

### இறவாதான் ஈஸ்வரம்

ஒருதள விமானமாகிய இறவாதான் ஈஸ்வரம் பாதபந்த அதிஷ்டானம் பெற்றுள்ளது. அதன் ஆதிதளச் சுவர்களின் ஓரங்களிலே தாவுயாளித் தூண்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு சுவரும் இரண்டு சதுர வடிவமான தூண்களால் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஓரத்தூண்களுக்கும் சதுரத் தூண்களுக்கும் இடையிலுள்ள கர்ணபத்திகளிற் கோட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை வாயிற்காவலர் சிற்பங்களுடன் விளங்குகின்றன. 'வாயிற் காவலர் சிற்பங்களுக்கு மேல் இக்கோட்டம் தடுக்கப்பட்டு மேலும் ஒருசிற்பம் பெற்றுள்ளமை செதுக்குத் தளிகளிற் காணப்படாத புதிய உத்தியாகும். நான்முகத் தூண்களுக்கு இடைப்பட்ட சுவர்ப் பகுதி, சாலைப் பத்தியில் கோட்டம் பெற்று அணைவுத் தூண்களால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. இதன் இரு புறத்தும் உள்ள சுவர்ப் பகுதிகளும் புறத்திற்கொரு கோட்டம் பெற்றுச் சிற்பங்களைக் கொண்டுள்ளன''.

இறவாதான் ஈஸ்வரத்தில் மகர தோரணங்கள் சிறப்புற்று விளங்குகின்றன. அவை விரிவாகவும் மிகுந்த வனப்புடனும் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றின் நெற்றிக் குழிவுச் சிற்பங்கள் செம்மையாக அமைக்கப்பட்டுள்ளன. ஆதிதள உறுப்புகளான கூடம், சாலை என்பன ஆறங்க அமைப்புகளாக உருவாக்கப் பட்டுள்ளன. இரண்டாந்தள அரமியக் கபோதம் வரை நீளும் ஆறங்க ஆரமானது ராஜசிம்மன் காலத்திலே கோயிற் கட்டுமானங்களில் ஏற்பட்ட புதுமையாகும். இரண்டாந்தள அரமியத்திற் சுவர்ப்பஞ்சங்கள் அமைந்துள்ளன. பெரு நாசிகைகளிற் சிற்பங்கள் அமைந்துள்ளமையும் குறிப்பிடத் தக்கவொரு அம்சமாகும்.

### மாமல்லபுரத்துக் கற்றளிகள்

மாமல்லப்புரத்திலே, கடற்கரையிலுள்ள கோயில் வளாகத்திலே மூன்று கோயில்கள் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன என்பது மிக அண்மைக் காலத்தில் நடைபெற்ற ஆராய்ச்சிகளினாலே தெளிவாகியுள்ளது. அவற்றுள் ஆதியான கோயில் நடுவில் அமைந்திருக்கும் நரபதிசிம்மவிஷ்ணுகிருகம் என்பதாகும். அது கருவறையும் முகமண்டபமும் கொண்ட மண்டபத்தளியாக அமைந்துள்ளது. அதன் ஒரு பகுதி குடைவரையாகும். மற்றப் பகுதி கட்டுமானமாகும். பாதபந்த அதிஷ்டானத்துடன் அமைந்துள்ள அதன் இறையகத்தில் மகாவிஷ்ணுவின் சயனக் கோலம் அமைந்திருக்கின்றது. அதனால் இக்கோயில் ஜல சயனம் என்னும் பெயரால் வழங்கியது.

நரசிம்ம விஷ்ணு கிருகத்தின் கிழக்கில் அமைந்திருப்பது நான்குதள விமானமாகிய க்ஷத்திரிய சிம்மேஸ்வரம். முத்தள விமானமான ராஜசிம்மேஸ்வரம் மேற்கில் அமைந்துள்ளது. இம் மூன்று தளிகளும் பிரகாரம் ஒன்றின் நடுவில் அமைந்திருந்தன. பிரகாரச் சுவர்கள் சிதைவுற்ற நிலையிற் காணப்படுகின்றன. மேற்கில் அமைந்திருந்த கோபுர வாசலின் அழிபாடுகள் இன்றுங் காணப்படுகின்றன. ராஜசிம்மேஸ்வரத்தின் முன்புறத்திலே அமைந்திருந்த மண்டபங்களின் அடித்தளங்கள் தெரிகின்றன.

ராஜசிம்மேஸ்வரம், க்ஷத்திரிய சிம்மேஸ்வரம் ஆகிய இரண்டும் பத்மபந்தத் தளத்தின் மேல் அமைந்த திராவிட விமானங்களாகும். கட்டுமானத்தில் இருதளிகளும் ஒரே மாதிரியானவை. இரண்டும் முதலாவது தளத்திலும் மேற்றளத் திலும் ஆரமின்றி அமைக்கப்பட்டவை. ராஜசிம்மேஸ்வரத்தின் கிழக்குச்சுவர் நரபதிசிம்ம விஷ்ணுகிருகத்தின் மேற்குச் சுவராகும். க்ஷத்திரிய சிம்மேஸ்வரத்தின் ஆதிதளக் கூரைமேல் நான்கு மூலைகளிலும் அமர்ந்திருக்கும் நிலையிற் சிங்க வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டு சிம்மேஸ்வரங்களினதும் மேற்றளக் கூரையின் மேற் சங்கூடும் கணங்கள் உள்ளன. க்ஷத்திரிய சிம்மேஸ்வரத்தின் இரண்டாம் தள ஆரத்திலுள்ள வளைவுக் கூடுகளிற் சிற்பங்கள் காணப்படுகின்றன. அதே போல, ஆரச் சாலைகளின் அல்பநாசிகைகளிலும் சிற்பங்கள் அமைந் துள்ளன. ஆரநாசிகைக் கூடுகளிலே காளைத்தலை களுக்குப் பதிலாக கந்தருவத் தலைகளும் வேறு வடிவங்களும் இடம் பெற்றுள்ளன.

மாமல்லப்புரத்துச் சிம்மேஸ்வரங்கள் ஒவ்வொன்றினதும் பிற்சுவரிலே சோமாஸ்கந்தரின் வடிவம் வனப்பு மிகுந்த கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தாராலிங்கம் ஒன்றும் க்ஷத்திரிய சிம்மேஸ் வரத்திற் கூடுதலாகக் காணப்படுகின்றது. க்ஷத்திரிய சிம்மேஸ் வரத்தைச் சுற்றிப் பிரகாரம் ஒன்றுள்ளது. அதன் சுவரில் உட்புறத்திலே அலங்கார வேலைப்பாடான சிற்பங்கள் அமைக்கப் பட்டிருந்தன. சுற்றுமதிலின் வெளியே வெறுமையான கோட்டங்கள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமல்லப்புரத்து விமானங்கள் இரண்டும் மிகுந்த வனப்புடன் அமைந்துள்ளன. சில அம்சங்களில் அவற்றின் சிறப்பினை வேறு விமானங்களிற் காண முடியவில்லை. மேற்றளங்கள் ஆரமின்றி, அகலங்குறைந்தும், போதிய உயரங் கொண்டும் பொருத்தமான அளவுடைய இடைவெளிகளோடும் அமைந்துள்ளன. கிரீவம் குறைந்த சுற்றளவும், கூடிய உயரமுங் கொண்டுள்ளமையால் விமானம் கூம்பிய வடிவத்தோடும் வனப்புமிக்க கோலத்துடனும் விளங்குகின்றது.

### பனைமலைக் கோயில்

கலப்புத் திராவிட விமானமான பனைமலைக் கோயில் ராஜசிம்ம பல்லவன் காலத்தில் அமைக்கப்பெற்ற தளிகளில் ஒன்றாகும். அது நாகர தளங்களையும் திராவிட கீரிவ சிகரத்தையுங் கொண்டுள்ளது. இக்கோயிலின் கட்டுமானம் முன்னைய கோயில் அமைப்புக்களிலிருந்து வேறுபட்டதாகும். அதன் ஆதி தளச்சாலைப் பகுதிகள் கர்ணபகுதிகளிலிருந்து விடுபட்டு நாற்புறத்தும் பிதுக்கமாகியுள்ளன. தெற்கிலும் மேற்கிலும் வடக்கிலும் அவை தனித் திருமுன்களாய் அமைந்துள்ளன. இச்சாலைப் பகுதி கிழக்கிலே கர்ப்பக் கிருகத்துக்கு முன் சிறு மண்டபம் போல் அமைந்துள்ளது. அதன் சுவர்களில் பிரம்மா, விஷ்ணு ஆகியோரின் சிற்பங்கள் அமைந்திருக்கின்றன. அந்தப் பகுதி ஓர் அர்த்த மண்டபம் போல காட்சியளிக்கின்றது. ஆலயத்தின் அதிஷ்டானத்திலுள்ள ஜகதி மாமல்லபுரத்துச் சிம்மேஸ்வரங்களிற் போலப் பெருந்தாமரையாக விளங்குகின்றது. கண்டப் பகுதியின் திருப்பு முனைகளில் யானைத்தலை வடிவங்கள் காணப்படுகின்றன.

பனைமலைக் கோயிலின் சாலைக் திருமுன்களின் சுவர்களில் மகரதோரணங்கள் பொருந்திய வெற்றுக் கோட்டங்கள் அமைந்திருக்கின்றன. திருமுன்களின் கூரைகளின் மேல் ஆர உறுப்புகளாக ஆறங்கச் சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. விமானத்தின் இரண்டாம் தளத்திலுள்ள அரமியத்துச் சாலைப்பகுதிகள் பிதுக்கம் பெற்றுள்ளன. அவற்றின் மேல் வேதிகையற்ற ஆரம் அமைந்துள்ளது. இறையகத்தில் மூலவரான இலிங்கம் அமைந்துள்ளது. சோமாஸ்கந்தரின் வடிவம் பின் சுவரில் அமைக்கப்பட்டுள்ளது.

### காஞ்சிபுரத்துப் பெரிய கற்றளி

பல்லவர் காலக் கலையின் உன்னதமான கோலத்தைக் காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோயிலிற் காணலாம். அது ராஜசிம்மேஸ்வரம் என்னும் பெயரால் வழங்கியது. சாசனங்கள் சில அதனைப் பெரிய கற்றளி என்றும் குறிப்பிடுகின்றன. பனைமலைக் கோயிலின் விரிவாக்கமான காஞ்சிபுரத்துப் பெரியகோயில் மாமல்லபுரத்துச் சிம்மேஸ்வரங்களைக் காட்டிலும் அளவிற்பெரியது; வனப்பில் மிகவும் முன்னேற்றமானது. அதன் சிறப்புகளை இரா. கலைக்கோவன் மேல்வருமாறு வர்ணிக்கின்றார்:

காஞ்சிபுரம் ராஜசிம்மேஸ்வரம் பல்லவர் காலத்தெழுந்த முதற் சாந்தார விமானம். தமிழ் நாட்டின் இரண்டு அங்கலாயங்களுள் முதலாவது; முதன்மையானது. திருச்சுற்று முழுவதும் இருதள விமானங்களாற் சூழப்பெற்ற ஒரே விமானம். பல்லவர்காலத் தெழுந்த இரண்டு நாற்றள விமானங்களுள் முதலாவது, முதன்மையானது. பல்லவர் தளிகளிலே அதிக அளவிற் சிற்பங்களைக் கொண்டமைந்த ஒரே கோயில். பல சைவ இறைக்கோலங்கள் முதன்முதலாக இராஜ சிம்மேஸ்வரத்தில் தான் முகம் காட்டுகின்றன. சுவர்ப்பிரிப்பு, சுவரிற் கோட்ட அமைப்பு, கோட்டங்களின் உட்பகுப்பு, அலங்கரிப்பு, தோரணங்கள் எனப் பல்லவர் காலத்திறம் உச்சத்தில் மிளிரும் இடம் ராஜசிம்மேஸ்வரம். கற்றளியின் முன், கற்றளியுடன் இணைக்கப்படாமல்முழுமையான அளவில் மண்டபமொன்று காணப்படுவதும் ராஜசிம்மேஸ்வரத்திலே தான். பல்வேறு வடிவங்களிற் கிரந்த எழுத்துக்களிற் கல்வெட்டுகள் காணப்படும் ஒரே கோயில் இதுதான்.... வரலாற்றுப் பின்னணியோடு கூடிய கட்டிட, சிற்ப, ஓவிய, இலக்கியஞ் சார்ந்த விரிவான கள ஆய்வுகள் தமிழ் நாட்டுக் கலை வரலாற்றில் இத்தளியின் சரியான இருப்பிடத்தை நிர்ணயிக்க உதவும்.

கட்டுமானத்தில் அங்காலயமான ராஜசிம்மேஸ்வரத்தின் சாலைப்பகுதிகளும் கர்ண பத்திகளும் பிதுக்கமாகி, விமானத்தின் துணைத்திருமுன்களாய் அமைந்துள்ளன. நடுவிலமைந்த விமானத்தைச் சுற்றி, அதனை ஒட்டி அரவணைத்த கோலத்தில் ஏழு ஏகதள விமானங்கள் உருவாகியுள்ளன. கிழக்குச் சாலைப் பத்தி கருவறையின் முன் மண்டபம் போல அமைந்துள்ளது. நடுவிலுள்ள விமானத்தின் அதிஷ்டானமும் கூரையுறுப்புகளும் தொடர்புறாது துணைவிமானங்களை அரவணைத்துக் கொள்வதால் ஆலயத்தின் புறத் தோற்றம் வனப்பு மிகுந்த கோலத்துடன் விளங்குகின்றது.

விமானத்தின் அதிஷ்டானமும் அதன் துணைத் தளமான உபானமும் கருங்கல்லால் அமைந்தவை. கோயிலின் ஏனைய பாகங்கள் மணற்கல்லால் ஆனவை. அதிஷ்டானத்தின் ஜகதி சிறப்பான அம்சங்களைப் பெற்றுள்ளது. அதன் நடுப்பகுதியிலே கண வடிவங்கள் காணப்படுகின்றன. முகப்பிலும் மேற்பகுதியிலும் கீழ்ப் பகுதியிலும் விளிம்புகள் உள்ளன.ள அதன் திருப்பு முனைகளில் யானை முகங்களும் கண்ட பாதங்களில் யானை முகங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

விமானங்களின் சுவர்ப்பகுதிகள் எண்கோணத் தாவுயாளித் தூண்களால் அணைக்கப்பட்டுள்ளன. அவற்றிலுள்ள கோட்டங்கள் சதுரத் தூண்களால் அரவணைக்கப்பட்டுள்ளன. கோட்டங்கள் எல்லாவற்றிலும் வனப்பு மிக்க சிற்பங்கள் அமைந்துள்ளன. ஏகதள விமானங்கள் யாவும் ஆறங்க ஆர உறுப்புகளைக் கொண்டுள்ளன. நடுவிலமைந்த விமானத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறையைச் சுற்றி இரு சுவர்களும், அவற்றிற்கிடையே சுற்றுவழியுங் காணப்படுகின்றன. சுவர்களுக்கு இடைப்பட்ட சுற்றுவழியின் கூரைப்பகுதி பலகைக் கற்களால் மூடப்பட்டுள்ளது. கருவறையில் லிங்கமும் அதன் பின் சுவரிலே சோமாஸ்கந்த வடிவமுங் காணப்படுகின்றன. ஏகதள விமான ஆர கூறப்புக்கள் பெரு விமானத்தின் ஆரத்தோடு இணைந்து கொள்ளும் வண்ணமாக இடைப்பட்ட பகுதிகளிற் சாரல்கள் நிறுவப் பட்டுள்ளன.

நான்கு தளங்கள் கொண்ட நடுவிலுள்ள விமானத்தின் இரண்டாம் தள ஆரத்திற் பஞ்சரங்கள் காணப்படுகின்றன. கோயிற் கட்டுமானங்களைப் பொறுத்த வரையில் அது ஒரு புதுமையாகும். நான்காம் தளத்தின் மேல் நந்தி உருவங்கள் அமைந்துள்ளன. கிரீவமும் சிகரமும் திராவிடமாய் அமைந்துள்ளன. பெருநாசிகைகளிற் கிழக்கிலே சிவபெருமான், தெற்கிலே தக்ஷிணா மூர்த்தி, மேற்கிலே விஷ்ணு, வடக்கிற் பிரமன் என்ற வண்ணமாகக் கடவுட் படிமங்கள் அமைந்துள்ளன. துணைவிமானங்கள் அனைத்திலும் அளவிற் பெரிய, வனப்புமிக்க படிமங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

விமானத்தின் முன்னால் அமைந்துள்ள ராஜசிம்ம மண்டபத்திலே, மேற்கிலுள்ளதைத் தவிர்ந்த அதன் பக்கங்களிலே, முகப்புகள் அமைந்துள்ளன. அம்முகப்புகளின் ஒவ்வொரு திசையிலும் இவ்விரு சதுரத்தூண்கள் காணப்படுகின்றன. அவற்றிலே சுவர்களை ஒட்டிய இவ்விரு அரைத்தூண்களும் இடம் பெற்றுள்ளன. அரைத்தூண்கள் அணைந்த கோட்டங்களிலே கடவுட் படிமங்கபளும் வாயிற்காவலர் வடி வங்களும் உள்ளன.

சாந்தார விமானம், மண்டபம், சுற்றாலை, பரிவாரதேவர் கோட்டங்கள், நந்திபீடம், கொடித்தம்பம், கோபுரம், பிரகாரம் ஆகிய தென்னிந்தியக் கோயிலமைப்பின் பிரதான அம்சங்கள் யாவும் பெரிய கற்றளியில் உள்ளமை குறிப்பிடற்குரியது. ராஜசிம்மேஸ்வரத்தின் கோபுர வாசலோடு பொருந்தியுள்ள கட்டிடம் மகேந்திரவர்ம ஈஸ்வரம் என்பதாகும். அது மூன்றாம் மகேந்திர வர்மனால் அமைக்கப்பெற்றது. ராஜசிம்மேஸ்வரத்தின் திருச்சுற்றாலையிலே பிரகாரச் சுவரோடு அணைந்த வண்ணமாக 58 சிறுவிமானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றிலே சில திராவிட விமானங்களாக அமைந்தவை; வேறு சில சாலை விமானங்கள். அவற்றில் வனப்புமிக்க சிற்பங்களும் ஓவியங்களும் அமைக்கப்பட்டிருந்தன. அவை அனைத்தும் சைவபுராணங்களிலே சொல்லப்படும் கதைகளையும் சமய தத்துவங்களையும் விளக்கும் பான்மையில் அமைந்தவை. இந்து கலாசாரத்தின் அம்சங்களை அடையாள பூர்வமாகவும் கலைவனப்புடனும் பிரதிபலிக்கும் நிறுவனமாக ராஜசிம்மேஜ்வரம் அதன் நிர்மாணகாரனால் வடிவமைக்கப் பட்டுள்ளது.

காஞ்சி மீது படையெடுத்துச் சென்ற சாளுக்கிய வேந்தன் இரண்டாம் விக்கிரமாதித்தனைக் கைலாசநாதர் கோயில் பெரிதுங் கவர்ந்தது. அதன் மண்டபத்திலுள்ள கன்னட மொழிக் கல்வெட்டு வாதாபி வேந்தன் கோயிலுக்குச் செய்த சிறப்புகளை வர்ணிக் கின்றது. சாளுக்கியரின் பிரதானமான நகரங்களில் ஒன்றான பட்டதகல்லில் அமைந்த விரூபாக்ஷர் ஆலயம் அமைப்பிலும் வேலைப்பாட்டிலும் காஞ்சிபுரத்துப் பெரிய கற்றளியினை ஒத்திருக்கின்றது. சிற்ப சாஸ்திரம், நாட்டிய சாஸ்திரம், சங்கீதம் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த பல்லவர் அவற்றின் வளர்ச்சிக்குப் பல வழிகளில் ஆதரவு புரிந்தனர். பல்லவர் காலத்து நுண்கலைகளின் உன்னதமான வளர்ச்சிக் கோலத்தைப் பிரதிபலிக்கும் ஆலயமாகப் பெரிய கற்றளி விளங்குகின்றது. அதன் முதன்மை விமானத்திலும் துணை விமானங்களிலும் சுற்றாலை விமானங்களிலும் கவர்ச்சி மிக்க சிற்பங்களும் ஓவியங்களும் வடிவமைக்கப்பட்டன.

'பல்வேறு அளவிலான சிற்பங்கள் ராஜசிம்மேஸ்வரத்தில் இடம் பெற்றுள்ளன. ஜகதியில் காணப்படும் பூதவரி, கோட்டங்களை யொட்டிச் சுவர்ப் பிரிப்புக்களுக்குள் செதுக்கப் பட்டிருக்கும் தொடர்புடைய சிற்றுருவச் சிற்பங்கள் ஒருவகை. பல்லவத் தளிகளுள் ராஜசிம்மேசுவர ஜகதியில் காணப்படுவது போல் தெளிவான தீர்க்கமான பூதகணங்களை வேறெங்கும் காண முடிவ தில்லை. இங்குள்ள கணங்கள் அனைத்தும் பல்வேறு செயற் 'பாடுகளில் சித்தரிக்கப்பட்டுள்ளன. அக்காலத்து வழக்கிலிருந்த போர்க் கருவிகளையும், ஆடற் கோலங்களையும் பல்வேறு விதமான மெய்ப்பாடுகளையும் இச்சிற்ப வரியிற் காண முடிகிறது.

சைவ சமயம் சார்ந்த சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் திருவுருவங்கள் பல முதன் முதலாகப் பெரிய கற்றளியிலே தோன்றுகின்றன. கஜசம்கார மூர்த்தி, கிராதார்ச்சுனர், பிரம்ம சிரச்சேத மூர்த்தி, கலியாண சுந்தரர், கௌரி பிரசாதர், உமாமகேஸ்வரர், வைரவர், பிரம்ம - இந்திர - காம அனுக்கிரக மூர்த்திகள் முதலானோரின் வடிவங்கள் குறிப்பிடத்தக்கவை. கணேசரின் வடிவம் கோட்டச்சிற்பமாக அமைந்துள்ளது. அதனருகே மலரேந்திய கோலத்திற் போற்றுகின்ற அடியார்களின் உருவங்கள் தெரிகின்றன. ஜேஷ்டா தேவியின் உருவமும் முதன்முதலாக இங்குதான் காணப்படுகின்றது.

ராஜசிம்மேஸ்வரத்தில் இசைவாணரின் உருவங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடற்குரிய ஒன்றாகும். கின்னரர், இசைப்பாணர், குழல், முழவு, வீணை முதலியவற்றைக் கைகளில் ஏந்தியுள்ள கலைஞர் போன்றோரின் உருவங்கள் அமைக்கப் பட்டுள்ளன. குழல், முழவு முதலிய கருவிகளின் வடிவங்கள் தமிழகத்துச் சிற்பக்கலை வரலாற்றில் முதன்முதலாகப் பெரிய கற்றளியிலேதான் காணப்படுகின்றன. ஒரு முக முழவுகள் சிற்பக் கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் பல வகையான வீணைகளின் வடிவங்களும் ராஜசிம்மேஸ்வரத்தில் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயன்மார்களின் பாடல்களில் வர்ணிக்கப்படும் கடவுளின் பலவகையான கோலங்கள் பெரிய கற்றளிகளில் வனப்பு மிகுந்த சிற்பங்களாக வடிவமைக்கப் பட்டுள்ளன. அங்கு சிவனது நடனக் கோலங்களான விருச்சிகம். ஊர்த்வஜானு. குஞ்சிதம். அர்த்த ஸ்வஸ்திகம் முதலிய கரணங்களில் அமைந்த நடனக்கோலங்கள் பலவற்றைக் காணலாம். ஊர்த்துவ தாணட்வக்கோலம் ஆலயத்தின் தென் புறத்திலுள்ள துணை விமானம் ஒன்றிலே மிகச்சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. பல்லவர் காலக் கோயில்களிற் காணப்படும் ஊர்த்துவ தாண்டவக் கோலங்களில் இதுவே மிகச் சிறப்பானது. ஆடலுக்கு ஒத்திசைவாகக் கணங்கள் குடமுழவு. சிரட்டை. கின்னரி ஆகியவற்றை ஒலிக்கின்றனர். ஆனந்த நடனம் புரியும் சிவனின் இடப்பக்கத்திலே. அந்தக் காட்சியைக் கண்டு வியப்புடன் கழிக்கும் உமாதேவியாரின் வடிவம் அமைந்துள்ளது. "ஆடலின் உத்வேகத்தில் இறைவனின் அத்தனை கைகளும் இயக்கத்தில் உள்ளன. இடைக்கட்டும் அதன் முடிச்சுத் தொங்கல்களும் அலைபாய்கின்றன. சில கைகள் கருவிகளேந்தியும். சில கைகள் முத்திரைகள் காட்டியும் ஆடற் பொருளுணர்த்த. வலக்கால் மார்பின் முன்னாக நெடிதுயர்ந்து பாதத்தை வலப்புறமாகத் திருப்பியுள்ளது".

சிவபெருமானின் குஞ்சித நடனக் கோலத்தை விளக்கும் நான்கு சிற்பங்கள் கர்ப்பக் கிருகத்துச் சுவர்களில் உள்ளன. குஞ்சித நடனக் கோலத்தில் வலக்கரமும் காலும் வளைந்து குஞ்சித மாயிருக்கும். இடக்கரமும் காலும் உத்தானமாய் உயர்த்திய கோலத்தில் இருக்கும். இந்த வடிவத்தில் சிவனுக்கு எட்டுக் கரங்கள் உள்ளன. வலப்பக்கத்து மேற்கரம் அரவின் வாலைப் பிடித்த வண்ணமானது. இரண்டாவது கரம் டமருகம் ஏந்தியுள்ளது. மூன்றாவது கரம் அபிநயஹஸ்தமாக அக்கினி குண்டத்தை ஏந்தியுள்ளது: இரண்டாவது கரம் பற்றியுள்ள உருவத்தை அடையாளங் காண முடியவில்லை: மூன்றாவது கரம் திரிபதாகமானது: நான்காவது கரம் நேராக உயர்ந்து ஜடாம குடத்தின் முடியைத் தொடுகின்றது. திரிசூலம். பரசு ஆகிய சின்னங்கள் தனியாக அமைக்கப்பட்டுள்ளன.

சிவனுடைய தாண்டவக் கோலம் பதுமபீடத்தில் அமைந்துள்ளது. சிவனுக்குக் கீழே மூன்று கணங்கள் ஆர்ப்பரித்து ஆடும் காட்சி தெரிகின்றது. இடப்பக்கத்திலுள்ள மாடத்திற் பார்வதியின் ஆசனக் கோலம் அமைந்துள்ளது. மாடத்தின் கீழ் நந்தியின் வடிவமுண்டு. வலப்புறத்து மாடத்தில் நடனக்கோலம் ஒன்று காணப்படுகின்றது. அதன் கீழே குழல். புல்லாங்குழல் ஆகியவற்றை வாசிக்கின்ற கோலத்திலுள்ள கணங்கள் இரண்டின் உருவங்கள் உள்ளன. மகேந்திரவர்மனால் அமைக்கப்பட்ட மகேந்திரவர்மேஸ்வரத்தில். அந்தராளத்தின் தெற்குச் சுவரிற் சிவனின் குஞ்சித நடனக்கோலம் மிகுந்த வனப்புடன் அமைந்துள்ளது. இப்படிமங்களில் அசைந்தாடும் ஆடையும் ஆரம். வளையல். தோள்வலயம் போன்ற ஆபரணங்களும் உருவங்களுக்கு அழகூட்டும் வண்ணமாக அமைக்கப்பட்டுள்ளன.

பெரிய கற்றளியின் கர்ப்பகிருகத்தின் பின்புறச் சுவரிற் சிவனின் உருவம் லலாடதிலகம் என்னும் நடனத்தை ஆடும் கோலத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அது காலொன்றைத் தூக்கி விருச்சிக வடிவில் வளைத்து. விரல் நெற்றியிலே திலகம் இடுமாப்போல் முட்டும் வகையில் ஆடப்படும் கடினமான நடனமாகும். இந்தக் கோலத்திற் சிவனுடைய இடதுகால் வளைவு பெறாது. நிலத்தில் ஊன்றிய நிலையில் உள்ளது. உருவத்தில் எட்டுக் கரங்கள் உள்ளன. வலப்புறத்து மேற்கரத்தில் அக்ஷமாலை உண்டு. இருகரங்கள் பதாகை போல அமைந்துள்ளன. நான்காவது கரம் வாளைப்பிடித்த வண்ணமாய் உள்ளது. இடது பக்கத்து மேற்கரம் வலயத்தை ஏந்தியுள்ளது. இரண்டாவது கரத்தில் அக்கினி குண்டந் தெரிகின்றது. மூன்றாவது கரம் பாசம் ஏந்திய கோலமானது. நான்காவது கரம் அருகினிலே நின்றாடும் நந்தியின் தலைமேல் ஊன்றிய வண்ணமானது.

## மாதங்கேஸ்வரம், முக்தேஸ்வரம்

கட்டுமானத்தைப் பொறுத்தவரையிற் காஞ்சிபுரத்து மாதங் கேஸ்வரம். முக்தேஸ்வரம் என்பவற்றிடையே பிரதானமான அம்சங் களில் பொதுப்பண்புகள் காணப்படுகின்றன. மாதங்கேஸ்வரம் ராஜசிம்மனின் காலத்துத் திருப்பணியாகும். முக்தேஸ்வரம் காலத்தாற் பிற்பட்டது. அது இரண்டாம் நந்திவர்மனின் காலத்தில் அமைக்கப்பட்டது. அவை இரண்டும் மேற்கு நோக்கிய கோயில்கள் முத்தள விமானங்களோடு கூடியவை. அவை இரண்டும் முகப்புடன் கூடிய முகமண்டபமும் கலப்பான வேசர விமானமுங் கொண்டவை. இரண்டும் உபானம். அதிஷ்டானம் என்பவற்றோடு அமைக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றின் விமானத்திலும் மண்டபத்திலும் சிற்பங்கள் மிகுந்து காணப்படுகின்றன. முக மண்டபத்தின் உட்சுவர்களிலுஞ் சிற்பங்கள் பல காணப்படுகின்றன. இக்கோயில்களின் ஆதிதள இரண்டாந்தள ஆரங்களிற் பஞ்சரங்கள் அமைக்கப்படவில்லை.

மாமல்லபுரத்துக் கணேசர் ரதத்தில் உள்ளவாறு போல முக்தேஸ்வரத்து முகமண்டபத்திற் செவ்வக ஸ்படிதங்கள் அமைந்துள்ளன. விமானத்தின் இரண்டாந்தள ஆரச்சுவரிலும் இவ்வாறான ஸ்படிதங்கள் உள்ளன. இரண்டாந்தள அரமியத்திற் சுவர்ப்பஞ்சரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மாதங்கேஸ்வரத்தில் இவ்விதமான அமைப்புகள் காணப்படவில்லை. கிரீவ வேதிகையின் நான்கு மூலைகளிலும் நந்தி உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இரு கோயில்களின் விமானங்களிலுள்ள பெரு நாசிகைகளிற் கடவுட் படிமங்கள் அமைந்துள்ளன.

## பரமேஸ்வர விண்ணகரம்

பல்லவர் கலைப்பாணியின் வளர்ச்சியின் இறுதியான கட்டத்தைப் பரமேஸ்வர விண்ணகரம் என்னுங் காஞ்சிசுரத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகுந்தப் பெருமாள் கோயிலிற் காணலாம். பல்லவர் காலத்துக் கோயில்களில் அதுவே மிகப் பெரியதாகும். அது 90 அடி நீளமும் அகலமுங் கொண்ட சதுரமான அமைப்பாகும். அதன் விமானதளம் 47 அடிச்சதுரமாகும். அது 60 அடி உயரமானது. இரண்டாம் நந்திவர்மன் காலத்துக் கோயிலான பரமேஸ்வர விண்ணகரத்தின் பிரதான பாகங்கள் பொருத்தமான வகையிலும் கலைவனப்புப் பொலிந்த வண்ணமாகவும் இணைக்கப்பட்டுள்ளன.

இக்கோயில் விமானம், முக மண்டபம், பிரதக்ஷிண பாதை, திருச்சுற்று மாளிகை, சுற்று மதில், கோபுரம் முதலிய பதிகளோடு அமைந்த பேரமைப்பாகும். இக்கோயில் விமானம் நான்கு தளங்களோடு அமைந்துள்ளது. விமான தளம் ஒவ்வொன்றின் நடுவிலே தேவகோட்டங்களும் அவற்றைச் சுற்றி வலம் வரும் பாதைகளும் உள்ளன. முதல் மூன்று தளங்களில் முறையே விஷ்ணுவின் ஸ்தானக, ஆசன, சயனக் கோலங்கள் வடிவமைக்கப் பட்டுள்ளன. நான்காவது வெற்றுத் தளமாகும். அதன் மேல் திராவிடமான கிரீவமும் சிகரமும் அமைந்துள்ளன.

ஆதிதளமான கருவறையைச் சுற்றி மூன்று சுவர்கள் அமைந்துள்ளன. வெளிச்சுவர் ஆதிதளத்துடன் முடிகின்றது. இடைச்சுவர் இரண்டாந் தளத்து வெளிச்சுவராக வளர்ந்து அடித் தளத்துடன் முடிகின்றது. உட்சுவர் மூன்றாந் தளக் கருவறையின் புறச்சுவராக உயர்ந்து அடித்தளத்துடன் நிறைவு பெறுகின்றது. முதலாந் தள ஆரம் வெளிசுவர்க் கூரை மேல் அமர, இரண்டாந் தள ஆரம் இடைச்சுவர்க் கூரை மேல் அமைந்துள்ளது. மூன்றாந் தள ஆரம் உட்சுவர்க் கூரை மேல் அமைந்துள்ளது.

ஆதிதளம் அதிஷ்டானத்திலிருந்து கூரை வரை பிதுக்கங் களைக் கொண்டுள்ளது. நடுவிலுள்ள அகலமான பிதுக்கம் பத்ரசாலைப் பிதுக்கமாகி ஆறங்க சாலையை ஆர உறுப்பாகக் கொண்டுள்ளது. பத்ரசாலை பத்திக்கும் கர்ண பத்திக்கும் இடைப் பட்ட சுவர்ப் பகுதியில் சுவர்பஞ்சரங்கள் பக்கத்திற்கு இரண்டாக அமைந்துள்ளன. அவற்றின் நடுவிலே கோட்டம் காணப் படுகின்றது. முதலாவது தள ஆரம் பத்ரசாலை, பக்கச்சாலைகள், கர்ண கூடங்கள் என்பவற்றோடு அமைந்துள்ளது. இரண்டாம் தளத்திலுள்ள இரண்டு பிதுக்கங்களும் அரைத்தூண்களால் அணைக்கப் பட்டுள்ளன. நான்கு பிதுக்கங்களிலும் சிற்பங்களோடு கூடிய கோட்டங்கள் உள்ளன. அவற்றின் ஆரமாக இரண்டு சாலைகளும் கர்ண கூடங்களும் அமைந்துள்ளன. மூன்றாம் தளம் அரைத்தூண்கள் அணைந்துள்ள மூன்று வெற்றுப் பிதுக்கங்களைக் கொண்டுள்ளது. அதன் ஆரம் கூடங்களும் சாலையுமாக அமைந்துள்ளது. நான்காவது தளத்தில் நடுக்கோட்டமும் சுவர்ப்பஞ்சரங்களும் அமைந்துள்ளன. கிரீவ வேதிகையிற் சிம்மங்கள் அமர்ந்த கோலத்தில் உள்ளன.

திருச்சுற்று மாளிகையின் முகப்பில் நான்கு திசைகளிலும் சிம்மத்தூண்கள் அமைந்துள்ளன. அதன் சுவரின் உட்புறத்தில் பல்லவர் வரலாறு தொடர்பான ஐதீகங்கள் சிற்பக் கோலத்தில் காட்சிகளாக உருவாக்கப்பட்டுள்ளன. தமக்கு வேண்டியவாறு பத்திகள் பிரித்துச் சுவர்ப்பகுதியைச் சதுரங்களாகவும் செவ்வகங்களாகவும் வரையறை செய்து பல்லவரின் வம்சா வளியினையும் சமகாலத்துச் சம்பவங்களையும் சிற்பக் கோலத்தில் வடிவமைத்துள்ளனர். சிற்பக் காட்சிகளை விளக்கும் வகையிற் சுருக்கமான வாசகங்கள் சாசனங்களாக எழுதப்பட்டுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும். அரச மரபொன்றின் வரலாற்றம்சங்களை ஒரு தொடர் கதையாகச் சிற்பக் கோலத்தில் பரதகண்டம் முழுவதிலும் வேறெங்குமே காண முடியாது.

தென்னிந்தியக் கலைவரலாற்றைப் பொறுத்த வரையிற் பரமேஸ்வர விண்ணகரம் பல சிறப்பம்சங்களின் நிலைக்களமாக விளங்குகின்றது. பிற்காலத் தென்னிந்திய கோயில்களிற் சிறப்பம்சமாக விளங்கும் திருச்சுற்று மாளிகை அதிலே தான் முதன்முதலாக இடம்பெறுகின்றது. முத்தளக் கருவறையும் முதன்முதலாக அதிலே அமைக்கப்பட்டுள்ளது. திருமாலின் பல வகையான திருக்கோலங்களும் முதன் முதலாக அதிலே சிற்பக் கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்திலே காணப்படும் மிகப் பழமையான மானிட குஞ்சிதக் கரணம் இவ்வாலயத்திற் காணப்படுகின்றது. அர்த்த மண்டபத் தூணொன்றின் மாலைத் தொங்கலிற் பெண்ணொருவர் ஆடும் குஞ்சிதக் கரணம் சிற்பக் கோலத்தில் அமைந்துள்ளது.

## உத்தரமேரூர் சுந்தரவரதப் பெருமாள் கோயில்

புராதன காலத்துப் பிரம்மதேயங்களில் சிறப்பு மிக்கதான உத்தர மேரூரில் அமைந்துள்ள சுந்தரவரதப் பெருமாள் கோயில் நந்திவர்மன் கலைப்பாணியிலுள்ள கோயில்களிற் குறிப்பிடத் தக்க வொன்றாகும். அது காஞ்சிபுரத்து வைகுந்தப் பெருமாள் கோயிலைப்போன்ற முத்தளக் கருவறை கொண்ட கட்டு மானமாகும். ராஜசிம்மன் காலத்துப் பனைமலைக் கோயிலிற் போலத் தெற்கிலும் வடக்கிலும் மேற்கிலுமுள்ள அதன் பத்ர சாலைப் பகுதிகளிலே துணை விமானங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

பரமேஸ்வரப் பெருந்தச்சனால் நிர்மாணஞ் செய்யப்பட்ட சுந்தரவரதப் பெருமாள் கோயில் கருங்கல், செங்கல், சுதை என்பன கொண்டு உருவாக்கப்பட்ட கலப்புக் கட்டுமானமாகும். அதன் உபான, அதிஷ்டானப் பகுதிகள் கருங்கல் வேலைப்பாடாகும். துணைத்தளத் திருப்பங்களில் அமர்ந்த வண்ணம் ஒரு காலை உயர்த்திய கோலத்திற் காணப்படும் சிம்ம வடிவங்கள் இடம் பெற்றுள்ளன. திருப்பங்களிலுள்ள ஜகதி மகாபத்மமாகிய முனைப்பு களிற் சக்கரவாகப் பறவைகளின் தோற்றத்தைக் கொண்டுள்ளது. குமுதம் இப்பகுதியிலே தாமரை இதழ்களால் அரவணைக்கப்பட்ட கடகாவிருத்தமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆலயச் சுவர்களின் அணைவுத் தூண்கள் நான்முகமானவை. ஆறங்கமான ஆரத்துக்கும் இரண்டாந்தள அரமியத்திற்கும் இடையில் வலம் வரும் வழி காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி தளம் போல் இரண்டாந்தள அரமியம் வடக்கு, மேற்கு, தெற்குப் பகுதிகளிற் பிதுக்கமும், கிழக்கிலே முகமண்டபமுங் கொண்டுள்ளது. மூன்றாந் தளத்திலே திருமாலின் சயனக் கோலம் அமைந்துள்ளது. அத்தளத்தின் மேல் வேசர கிரீவமும் சிகரமும் அமைக்கப்பட்டுள்ளன.

## திருப்பட்டூர்க் கைலாசநாதர் கோயில்

திருப்பட்டூர்க் கைலாசநாதர் கோயில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பல்லவர் காலச் சாந்தார விமானமாகும். விமானத்தின் பிரதக்ஷிண பாதையைச் சுற்றி சுவர் அமைந் திருக்கின்றது. சாந்தார விமானத்தின் ஆதி தளமான கர்ப்பக் கிருகமும் அதன் மேலமைந்த மூன்று தளங்களும் நாகரமாயுள்ளன. கிரீவமும் சிகரமும் திராவிடமானவை. ஆதித்தளச் சுவர்களில் ஒவ்வொன்றும் ஐந்து பிதுக்கங்களைக் கொண்டுள்ளது. ஓரங்களிலுள்ள கர்ணபத்திகளும் நடுவிலுள்ள பெருஞ்சாலை பத்திகளும் கோட்டங்களைக் கொண்டுள்ளன. சதுர வடி விலமைந்த தூண்கள் அவற்றை அரவணைத்த வண்ணமாயுள்ளன. முதலாந் தளத்து ஆறங்க ஆரமானது இடைவழி ஏற்படக் கூடிய வகையில் இரண்டாந் தள அரமியத் திலிருந்து விலகி அமைந்திருக்கின்றது.

கோயிலைப்போல தாமரைவரி அணைவு கொண்ட கடகாவிருத்தமான குமுதம் கொண்டுள்ளது. ஆலயச் சுவர்களில் அழகிய சிற்பங்கள் அடங்கிய கோட்டங்கள் உள்ளன. அவற்றின் ஓரங்களில் வேலைப்பாடுகள் பொருந்திய சதுரமான அணைவுத் தூண்கள் இடம்பெற்றுள்ளன. கூரையில் வலபியிற் பூதகணவரி அமைந்துள்ளது. அர்த்த மண்டபத்தின் தென் கோட்டத்திற் கணேசரின் படிமமும் வடகோட்டத்திலே துர்க்கையின் படிமமும் காணப்படுகின்றன.

திருத்தணி வீரட்டானேஸ்வரம் பிற்பட்ட பல்லவர் காலக் கோயில்களிற் தலை சிறந்ததாகும். அது நம்பியப்பி என்பவரால் நிர்மாணிக்கப்பட்டது. அதன் நடுவிலமைந்த சாந்தார விமானத்தின் மூன்று பக்கங்களிற் துணை விமானங்கள் உள்ளன. கோயில் விமானம் தூங்கானை மாடம் போன்றது. கருவறையும் அர்த்த மண்டபமும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. அவற்றின் வெளிப்புறக் கோட்டங்களிற் கணபதி, தக்ஷிணாமூர்த்தி, விஷ்ணு, பிரமன், துர்க்கை ஆகியோரின் படிமங்கள் உள்ளன. அங்குள்ள மண்டபமொன்றில் வைக்கப்பட்டுள்ள தொல்பொருட்சின்னங் களான சப்தமாதரின் சிலைகள் ஆதியான கோயிலமைப்பிற் பரிவார தேவர் கோட்டங்கள் இருந்தமைக்கான அடையாளங்களாகும். பல்லவர் காலக் கலைப்பணிக்கும் சோழர்காலக் கலைப்பணிக்கும் இடையிலமைந்த நெருங்கிய தொடர்பினை திருத்தணி வீரட்டானேஸ்வரம் மூலம் ஓரளவிற்குப் புரிந்து கொள்ளலாம். ஆதித்த சோழன் காலத்துத் திருப்பணியான திருக்கழுக் குன்றத்துத் திருமூலட்டானம் உடையார் கோயில் திருத்தணிக் கோயிலைப் போல அமைந்துள்ளமை குறிப்பிடற்குரியது.

### கங்காவதரணம்

இச்சிற்பங்கள் நிகரற்றனவாகும். அவற்றுக்கு நிகரான வேறு சிற்பங்களைப் பரத கண்டத்திலே காணமுடியவில்லை. விசாலமான பாறையொன்றிலே, விரிவான கதையொன்றினை, அற்புதமான கோலத்திலே வடிவமைக்கும் முயற்சி வேறெங்காவது மேற் கொள்ளப்பட்ட வரலாறில்லை. அதனாலே மாமல்லபுரத்துச் சிற்பங்கள் உலகளாவிய ரீதியில் கலா விமர்சகர்களாற் போற்றிப் புகழப்படுகின்றன. கங்காவதரணம் பற்றிய சிற்பத்தை உலக சின்னமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

மாமல்லபுரத்திலே, கடற்கரைக்குச் சமீபத்திலே மலைதளிகளான இரதங்கள் அமைந்திருக்கும் தலத்தின் எதிர்ப்புறத்திலே கால்மைல் நீளமும் 100 அடி உயரமுங் கொண்ட கற் பாறை உண்டு. அதன் நடுவிலே இயற்கையாக ஏற்பட்ட பிளவொன்று காணப்படுகின்றது. பாறையின் தோற்றத்தை அவதானித்த கலைஞர்கள் மகத்தான தத்துவமொன்றை அடிப்படையாகக் கொண்ட புராணக்கதை யொன்றினைச் சிற்பக் கோலமாக வடிவமைத்துள்ளனர். அவர்களின் கற்பனா சக்தியினாலும் கலைத்திறனாலும் புராதனமான கதையொன்று சிற்பக் கோலத்திலே தத்துவ விளக்கம் பெற்றது. அவர்கள் பழமையிற் புதுமை செய்தனர். சமகாலத் தேசவழக்கான பண்பாட்டுக் கோலங்களும் இச்சிற்பங்களிலே தரிசனமாகின. பேசப்பெரிதும் இனியானைப் பற்றித் தமிழாகரனாகிய நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தனும் செஞ்சொற் கவிதை கோமான் நாவுக்கரையனும் தமிழ் வேதம் அருளிய ஆழ்வார்களும் பாடிய தேமதுரமான தமிழிசைப் பாடல்களைக் கேட்ட திராவிட தேசத்தவர் பரவசமானார்கள். பக்திப் பிரவாகம் பெருவெள்ளமாகித் தமிழகத்திலும் அதற்கப் பாலும் பரவியது. மாமல்லப்புரத்துச் சிற்பங்கள் அக்காலத்தில் உருவாக்கப்பட்டவை. அவற்றிலே பக்தி நெறியின் அடையாளங் கள் ஆழமாகப் பதிந்துள்ளன.

அச்சிற்பங்கள் கிராதார்ஜுனியம் என்னும் காவியத்தில் விளக்கப்படும் அர்ச்சுனனின் தவம் என்பதன் விளக்கமானவை என்று அறிஞர் சிலர் கொண்டனர். வேறு சிலர் அது புராணங்களிலும் மகாபாரதத்திலும் வர்ணிக்கப்படும் கங்காவ தரணத்தின் காட்சியானது என்று கொள்வர். மாமல்லபுரத்துச் சிற்பங்கள் இரண்டு கதைகளையும் விளக்கும் பான்மையில் அமைந்துள்ளவை என்ற கருத்தும் உண்டு. கு.சேதுராமன் மேல்வருமாறு எழுதுகின்றார்:

> இப்பிளவுக்குப் பக்கத்தில், அதன் வலது பக்கத்தில், ஒருவர் தன் ஒரு காலில் நின்று கொண்டு மற்றொரு காலை மடக்கி, இரு கைகளை மேலே தூக்கியவாறு தவமிருக்கின்றார். அவரது தவத்தின் ஆழத்தை அவரது நீண்ட தாடியே காட்டிக் கொண்டிருப்பதைக் காணலாம். அவருக்கு வலது பக்கம் சிவபெருமான் ஆயுதம் தாங்கியுள்ளார். அர்ச்சுனனுக்குக் கொடுக்கப்படக் கூடிய பாசுபதாஸ்திரம் தாங்கியுள்ளார் என்பது சரியெனில், இது அர்ச்சுனன் தபசு, தவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துக் கொண்டிருப்பவரின் இடது பக்கத்தில் பிளவில், கங்கை இறங்கி வருகின்றதெனில் அது பகீரதர் தவம். ஆனால் இங்கு இரண்டுமே பிணைந்திருக்கின்ற காரணத்தால் இங்கு இருபொருளும் ஒன்றிலேயே காட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.'

கங்காவதரணம் பகீரதப் பிரயத்தனத்தின் விளைவானது என்பது புராணக் கதை. முன்னொரு காலத்தில் நிலவுலகில் மழை வீழ்ச்சி இல்லாதமையால் வரட்சி ஏற்பட்டது. அது நெடுங்காலம் நிலைபெற்றதால் உயிர்கள் துன்பசாகரத்திலே தவித்தன. அவர்களின் துன்பத்தைப் போக்கும் நோக்கத்தோடு பகீரதன் சிவபெருமானை வேண்டித் தவம் புரிந்தான். கடவுளின் கருணையால் இறைவரின் நிலாவேணியிலிருந்தும் கங்கை பூலோகத்தை நோக்கிப் பாய்ந்தது. கற்பாறையில் அமைந்துள்ள நீருலக மகளிரான நாகினிகளின் உருவங்கள் ஆகாயத்திலிருந்தும் இறங்கி, கங்கை நிலவுலகிலே பாய்கின்றமையைக் குறிப்பனவாகும்.

மாமல்லபுரத்து கற்பாறையின் நடுவிலே ஒரு பிளவு காணப்படுகின்றது. அதனை ஆற்றுப்படுக்கையாகக் கலைஞர் கொண்டனர். இப்பிளவின் இரு பக்கங்களிலும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவையாவும் பிளவை நோக்கிய கோலத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன. சிற்பங்களில் வானவர் உலகமும் பூலோகமும், பாதாளமும் இணைந்துவிடுகின்றன. அவை கங்கை மூலமாக இணைந்துவிடுகின்றன. அங்கே கடவுட் படிமங்களும் தேவரின் உருவங்களும் அமைந்துள்ளன. மனிதர், முனிவர், அடியார்கள் முதலியோரின் உருவங்கள் உள்ளன. நாகர், கின்னரர் போன்றோரின் வடிவங்களுந் தெரிகின்றன. யானை, மான், குரங்கு, மாடு முதலியனவுங் காணப்படுகின்றன. மூவுலகத்தவரும் உணர்வுகளால் இணைந்த நிலையிலே அமைந்திருக்குமாப் போற் காணப்படுகின்றனர்.

இப்பாறையின் மேற்பகுதி விண்ணுலகம் போலச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இங்கு சிவபெருமான், சூரிய - சந்திரர், தேவர்கள் ஆகியோரின் கோலங்கள் தெரிகின்றன. அதன் கீழ்ப் பகுதியில் பூவுலகக் காட்சி தெரிகின்றது. திராவிட விமானமான கோயிலின் உருவங் காணப்படுகின்றது. அதில் விஷ்ணுவின் வடிவம் தெரிகின்றது. அதன் அருகில் ஆச்சிரம் ஒன்றும் தவம் புரியும் ஒருவரின் உருவமுந் தெரிகின்றன. ஆற்றோரத்தில் நடந்து செல்லும் முனிவர்களும் நீரினைக் குடங்களில் எடுத்துச் செல்வோரின் கோலங்களும் தெரிகின்றன.

விலங்குகளின் வடிவங்கள் மிகுந்த கலைவனப்புடனும் உயிரோட்டத்துடனும் விளங்குகின்றன. ஆற்றுப்படுக்கையினை நோக்கி யானைக் கூட்டமொன்று செல்லுங் காட்சி தெரிகின்றது. முன்னாற் பெரு வேழமொன்று செல்லும் வடிவம் தெரிகின்றது. அதன் தோற்றம் கம்பீரமானது. அழகு பொலிந்தது. அதன் பின்னே பிடிகளும் குட்டியானைகளுஞ் செல்கின்றன. மான்களில் ஒன்று தனது பின்னங்காற் குழம்பினால் முகத்தைத் தடவுங் காட்சி மிக நுட்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. குரங்குகளின் இயல்புகளும் மிகவுஞ் சிறப்பான வகையிற் சித்திரிக்கப்பட்டுள்ளன. அவற்றிலொன்று மற்றொன்றின் தலை மயிரை வாரிப் பேனை எடுத்து வாயிற் போடுங் காட்சி மிகவுஞ் சிறப்பாக வடிவமைக்கப் பட்டுள்ளது.

இந்து சமய மரபிலுள்ள பௌராணிகமான தத்து வமொன்று மாமல்லபுரத்திலே சிற்பக் கோலத்தில் விளங்குகின்றது. பிரபஞ்சம் அனைத்தும் ஒன்றானது என்னும் தத்துவமும் அது கருணைக் கடவுளாகிய பரமசிவத்தை ஆதாரமாகக் கொண்டு இயங்குவது என்னும் கருத்தும் இச்சிற்பக் கோலத்தில் அடங்கியுள்ளன. அதிலே பக்திப் பிரவாகத்தில் வயப்பட்டு உயிர்கள் எல்லாம் இயற்பகை மறந்து, அமைதி கொண்டு, பரமானந்த நிலையை எய்திவிடுகின்றன. உலகியல் நோக்கில் நீரின்றி அமையாது உலகு என்னும் கருத்தும் அவற்றினால் வலியுறுத்தப் படுகின்றதெனக் கருதலாம்.

### பல்லவரும் இலங்கையும்

பல்லவர் ஆட்சிக்காலத்திலே தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலே நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டிருந்தன. வாணிபம், மொழி, எழுத்து முறை, சமய வழிபாடுகள், கட்டடம், சிற்பம் என்னுந் துறைகளிலே குறிப்பிடத்தக்க அளவிலே பல்லவரின் செல்வாக்கு ஏற்பட்டிருந்தது. தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் இடையிலான மரபு வழியான வாணிபத் தொடர்புகள் அக்காலத்திலே மேலும் விருத்தி பெற்றன. இலங்கையின் கரையோரப் பட்டினங்களிலும் தலைநகரான அநுராதபுரத்திலும் பிற உள்ளூர்ப் பட்டினங்களிலும் தமிழகத்தில் இருந்து வந்த வணிகரும் வணிக கணத்தவரும் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர். மணிக்கிராமம், நான்கு நாடு என்னும் வணிக கணங்களைப் பற்றிய விவரங்கள் இலங்கைச் சாசனங்களிலே காணப்படுகின்றன. நான்கு நாட்டாரும் செட்டிகள் பலரும் அநுராதபுரத்திலே நிலை கொண்டிருந்தனர் பதுளை மாவட்டத்திலுள்ள ஹோப்பிட்டிகம என்னும் இடத்திலே மணிக்கிராமத்தாரின் குடியிருப்புகள் அமைந்திருந்தமையுங் கவனித்தற்குரியதாகும்.

வாணிபத்தின் மூலமாகவே பல்லவ கலாசாரத்தின் அம்சங்கள் பெரும்பாலும் இலங்கையை அடைந்தன. வணிகர் தங்களது குடியிருப்புகளிலும் விற்பனை நிலையங்களுக்குச் சமீபத்திலும் கோயில்களை அமைத்தனர். அவர்களாற் சைவக் கோயில்களும் பௌத்தக் கோயில்களும் இலங்கையில் ஆதரிக்கப் பெற்றன. பல்லவரின் ஆட்சியின் கீழ் அமைந்த தொண்டைமண்டலம், சோழமண்டலம் ஆகியவற்றிலே பல்லவர் கலைப் பாணியிற் கோயில்கள் அமைக்கப்பட்டன. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளிற் தென்னிந்தியக் கட்டடக் கலைப்பாணியாகிய திராவிட கலைப்பாணி அதற்கெனச் சிறப்பாகவுரிய அம்சங்களோடு வளர்ச்சி அடைந்திருந்தது. அதன் அம்சங்களைக் கொண்ட கோயில்கள் இலங்கையிலே அமைக்கப்பட்டன. அதன் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாட்டில் முதன் முதலாகக் கற்றளியான கோயில்கள் தோன்றலாயின. மண்டளியான கோயில்களிலும் பல்லவர் கலைப்பாணியின் சில அம்சங்கள் இடம் பெற்றன. தமிழகத்தில் இருந்துஞ் சென்று இலங்கையின் பல்வேறு பகுதிகளிலே தங்கியிருந்த வணிகர் அங்கே கோயில்களை அமைப்பதற்குக் கட்டடக் கலைஞர்களையுஞ் சிற்பக் கலைஞர்களையும் அழைத்துச் சென்றனர். அவர்கள் மூலமாகப் பல்லவரின் கலாசார அம்சங்கள் பல இலங்கையிலே பிரதிபலித்தன. சைவ, வைணவ சமயங்களின் மறுமலர்ச்சியின் செல்வாக்கு இலங்கையிலும் ஏற்பட்டது. அதே போல காஞ்சிபுரம் முதலிய நகரங்களில் அமைந்திருந்த பௌத்த சமய நிறுவனங்களும் இலங்கையிலுள்ள நிறுவனங்கள் சிலவற்றோடு தொடர்புகளை ஏற்படுத்தி இருந்தன.

ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளிலே பல்லவர்களுக்கும் இலங்கை அரசர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டிருந்தன. அநுராதபுரத்திலே தமிழ்ப் படைகளின் தலைவனான பொத்தகுட்டனின் செல்வாக்கு மேலோங்கியிருந்த காலத்தில் அரசனின் பகைமையைத் தேடிக் கொண்ட மானவர்மன் என்னும் பிரதானி காஞ்சிபுரத்துக்குப் போய்ப் பல்லவரிடம் புகலிடம் பெற்றான். மாமல்லனாகிய நரசிம்மவர்மனின் ஆதரவுடன் அங்கு வாழ்ந்த காலத்தில் அவன் பல்லவரின் படையிலே சேர்ந்து அதில் உயர் பதவியும் பெற்றிருந்தான். வாதாபிச் சாளுக்கியர் படையெடுத்து வந்த சமயத்திலே பல்லவ அரசனுக்குப் போரிலே உதவி புரிந்தான். அப்போரிலே பல்லவ மன்னன் வெற்றி பெற முடிந்தது. அதன் பயனாகத் தனது இராசதானியிலே வெற்றி விழா கொண்டாடிய பொழுது மானவர்மனைப் பாராட்டிக் கௌரவித்தான்.

காஞ்சிபுரத்திலே பல்லவ அரசனோடு வாழ்ந்து, அவனது நல்லெண்ணத்தைப் பெற்றுவிட்டதால், மானவர்மன் தனது இலட்சியங்களை நிறைவேற்றிக் கொள்ள முடிந்தது. அவன் அரசபதவியைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியாக மாமல்லன் ஒரு பெரும்படையை அவனோடு அனுப்பி வைத்தான். பல்லவ சைனியம் கடல் கடந்து சென்று இலங்கையை அடைந்தது. அங்கு அது தலைநகரை நோக்கிச் சென்றதும் அங்கிருந்து அரசன் ஓடிவிட்டான். மானவர்மன் அநுராதபுரத்தைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக அரசனைப் பின் தொடர்ந்தான். அத்தருணத்திலே மாமல்லன் நோயினாற் பீடிக்கப்பட்டிருக்கிறான் என்ற செய்தி கிடைத்ததும் பல்லவரின் சேனை இலங்கையினின்றுந் திரும்பிச் சென்றது. அரசன் பொட்டகுத்தனுடைய ஆதரவுடன் மீண்டும் அதிகாரம் பெற்றான். எனவே, மானவர்மன் நாட்டைவிட்டு ஓடநேர்ந்தது.

மானவர்மன் மீண்டும் காஞ்சிபுரத்திலே நெடுங்காலந் தங்கியிருந்தான். இறுதியில் மாமல்லன் வழங்கிய படைத்துணையோடு மானவர்மன் அநுராதபுரத்தில் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டான். அவன் ஆட்சி பெற்றதால் இலங்கைக்கும் பல்லவ அரசருக்கும் இடையில் அமைந்த தொடர்புகள் மேலும் வலுவடைந்தன. இலங்கையில் ஏற்பட்ட பல்லவரின் செல்வாக்கைப் பொறுத்த வரையிற் கிரந்த எழுத்துகள் சாசன வழக்கிலே இடம்பெற்றமை ஒரு பிரதான அம்சமாகும். ஆறாம் நூற்றாண்டு முதலாகப் பல சாசனங்கள் கிரந்த எழுத்துகளில் எழுதப்பட்டன. பெரும்பாலும் சமஸ்கிருதச் சாசனங்களே கிரந்த எழுத்துக்களில் அமைந்துள்ளன. கிரந்த எழுத்து முறை பல்லவர் காலத்திலே தொண்டை மண்டலத்திற் சமஸ்கிருத மொழியை எழுத உருவாக்கப்பட்டதாகும். அது இலங்கையில் மட்டுமன்றி சுவர்ணபூமி என்று சொல்லப்படுந் தென்கிழக்காசிய நாடுகளிலும் பரவியிருந்தது. இலங்கையிலே மிகிந்தலை, திரியாய், குச்சவேலி, சீகிரியா முதலான இடங்களிலே கிரந்த எழுத்துகளில் அமைந்த சாசனங்கள் காணப்படுகின்றன. மிகிந்தலையிலே அம்பத்தல சேதியத்திற்கு அண்மையிலே கிரந்த எழுத்துகளில் அமைந்த சாசனம் ஒன்று காணப்படுகின்றது. அதன் முடிவிலே திரிகாய ஸ்தோத்திரம் காணப்படுகின்றது. அது மகாயான மரபிற் புத்தர் பெருமானுக்கு உரியவை என்று கொள்ளப்படும் நிர்மாணகாயம், தர்மகாயம், சம்போககாயம் என்பவற்றைப் போற்றிப் புகழுகின்றது.

திரியாய்க் கல்வெட்டு கிரிகண்ட சேதியம் திரபுஸக, வல்லிக என்னும் வணிகர் குலத்தலைவர்களினால் அமைக்கப்பட்டமை பற்றி வர்ணிக்கின்றது. அதிலே காணப்படும் எழுத்துகள் முதலாம் பரமேஸ்வரவர்மனின் (660-680) கூரம் செப்பேடுகளில் உள்ளவற்றைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. இரண்டு சாசனங்களிலும் க,த,ப,ய,ர,வ முதலிய எழுத்துக்கள் ஒரே விதமாகவே அமைந்திருக்கின்றன. குச்சவேலிக் கல்வெட்டிலும் இவ்வாறான அம்சங்கள் உள்ளன. அதுவும் மகாயானச் சார்புடைய சமஸ்கிருதச் சாசனமாகும். சீகிரியாவிலே சுவரோவியங்களுக்குக் கீழே பல சாசனங்கள் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. அவற்றிலொன்று சமஸ்கிருத மொழி வாசகமாகும். ஏனையவை சிங்கள மொழிச் சாசனங்களாகும். சிங்கள வரிவடிவங்கள் குறிப்பிடத்தக்க அளவிலே கிரந்த மொழியின் செல்வாக்கைப் பிரதிபலிக்கின்றன. அவற்றிற் பல கிரந்த எழுத்துகளை மூலமாகக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. சமஸ்கிருத மொழியிலே வரும் அக்ஷரங்கள் குறிக்கும் ஒலி அமைப்புகளை எல்லாம் பிரதிபலிக்கும் வரிவடிவங்கள் சிங்கள மொழிவழக்கிலும் எட்டாம் நூற்றாண்டு முதலாக வழங்கி வந்தன. முற்காலத்துச் சாசனங்களிற் காணப்படாத பல எழுத்துகள் உருவாக்கப்பட்டன. சமஸ்கிருத மொழியின் செல்வாக்கின் விளைவாகச் சிங்கள மொழி வழக்கிற் சமஸ்கிருதச் சொற்கள் கூடுதலாக இடம்பெற்றன.

## திராவிடக் கலைப்பாணியின் செல்வாக்கு

இலங்கையிலுள்ள இந்துக் கோயில்களின் கட்டட அமைப்பு முறைகளைப் பற்றிய விரிவான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வில்லை. அநுராதபுர காலத்துக் கோயில்களைப் பற்றிய விவரங்களும் அரிதாகவே கிடைத்துள்ளன. அக்காலத்துக் கோயில்கள் பெரும்பாலும் மண்டளிகளாகவே அமைந்திருந்தன. அதனால் அவை காலப்போக்கில் அழிந்து விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற தலங்களில் அமைந்திருந்த கற்றளிகளும் பறங்கியரின் ஆட்சிக்காலத்தில் இடித்து அழிக்கப்பட்டுவிட்டன.

அநுராதபுரத்தின் வடபகுதியிலே, தமிழர் வாழ்ந்த சில பகுதிகளில் மட்டுமே புராதனமான சைவக் கோயில்களின் அழிபாடுகள் தொல்பொருள் அகழ்வுகளின் போது காணப்பட்டன. அமைப்பில் அவை எல்லாம் ஒரே விதமானவை. அளவிற் சிறியவை. கா்ப்பக்கிருகம், அந்தராளம், அா்த்த மண்டபம் என்னும் பகுதிகள் அவற்றிலே காணப்பட்டன.

அக்கோயில்கள் யாவும் செங்கல்லினால் அமைக்கப்பட்டவை. அவற்றின் அத்திபாரங்களும் செங்கல்லினாற் கட்டப்பெற்றிருந்தன. சுவா்களுக்கு ஆதாரமாகக் கற்றூண்கள் பயன்படுத்தப்பட்டன. கூரைப் பகுதிகள் மரத்தால் அமைக்கப் பட்டவை. அவை முற்றாக அழிந்துவிட்டன. கோயில்களின் சமீபத்திலே அமைந்திருந்த வீடுகள் விசாலமானவையாகவும் பல அறைகள் பொருந்தியனவாகவுங் காணப்பட்டன. அவை கல்லினாலமைந்த இரு படைகளைக் கொண்ட, உயரமான அடித்தளங்களின் மேல் அமைக்கப்பட்டிருந்தன.

தென்னிந்திய கலைப்பாணியின் செல்வாக்கு பௌத்த சமயம் தொடா்பான கோயில்களிற் கணிசமான அளவிலே ஏற்பட்டிருந்தது. சிங்கள மரபிலே கோயில்களையுஞ் சமயச் சாா்புடைய பிற கட்டடங்களையும் அமைப்பதற்கு மூன்று வகையான கட்டடப் பொருட்களைப் பயன்படுத்தினாா்கள். பொதுவாக அடித்தளங்களையும் அத்திபாரங்களையும் கல்லினால் அமைத்தனா். அவற்றின் மேலமைந்த சுவா்ப்பாகங்கள் செங்கல்லினால் அமைக்கப்படும். மரம், ஓடு என்பவற்றினாற் கூரைகள் அமைக்கப்படும். அத்தகைய கட்டடங்கள் சிலவற்றின் வடிவமைப்பிலே இந்துக் கோயில்களின் அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. எனவே கலப்புப் பொருட்களால் அமைக்கப் பெற்ற கட்டடங்களில் ஒரு சில அம்சங்களில் மட்டுமே தென்னிந்தியக் கட்டடக்கலையின் செல்வாக்கினை அவதானிக்க முடிகின்றது. இவ்விடயந் தொடா்பாக சேனக பண்டாரநாயக்க மேல் வருமாறு கூறுகிறாா்:

ஓடுகளினால் வேயப்பட்ட வட்ட வடிவமான கூரைகள் பொருந்திய கட்டடங்கள் உண்மையில் இலங்கையிலோ வேறு தேசத்திலோ காணப்படவில்லை. நான்கு பக்கங்களைக் கொண்ட, சரிவான கூரையமைப்பு அநுராதபுர காலத்துக் கட்டடங்களின் பொதுவான அம்சமாயிருந்தது என்று கொள்வதற்கான குறிப்பிடத்தக்களவு சான்றுகள் உள்ளன. இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள கட்டட அமைப்புகளுக்கிடையிலான பொதுப் பண்புகளைப் பொறுத்த வரையில், அவற்றின் மூலங்களை இந்தியாவிலுள்ள புராதனமான பௌத்த கோயில் வடிவங்களிலன்றிக் கேரளத்திலுள்ள வட்ட வடிவமான, கூம்பிய கூரைகள் பொருந்திய ஸ்ரீகோயில் அமைப்பிலே கண்டு கொள்ளலாம். அது பொதுவான இந்தியக் கட்டடக் கலை மரபில் அடங்காத ஒன்றாகும். ஆனாலும் ஸ்ரீகோயில் வடிவத்திலே இந்தியாவின் புரதானமான கட்டுமான முறைகள் இன்று வரை பேணப்பட்டு வந்துள்ளன. ஸ்ரீகோயிலின் கூரை வட்டமான வடிவமுங் கூம்பிய தோற்றமும் கொண்டதாகும். சில சமயங்களில் அதன் கூரை இரு தளங்களைக் கொண்டிருக்கும். ஸ்ரீகோயிலின் வடிவமைப்பு வட்டதாகே என்னும் வகைக்குரிய சிங்கள மரபிலுள்ள கட்டடத்திற்குப் பொருத்தமானதாகும்.

அநுராதபுர காலத்து வட்ட வடிவில் அமைந்த கோயில்கள் கேரளத்து ஸ்ரீகோயில்களை முன்மாதிரியாகக் கொண்டவை என்பதைச் சேனக பண்டாரநாயக்க குறிப்பிடுகின்றாா். மற்றுமொரு அம்சத்திலும் கேரளத்து ஸ்ரீகோயில் அமைப்பிற்கும் இலங்கையிற் காணப்பட்ட கட்டட வகையொன்றுக்கும் இடையிலே ஒற்றுமை காணப்படுகின்றது. செங்கல், மரம், ஆகியன கொண்டு ஒரு காலத்தில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் காலப் போக்கில் இரு தேசங்களிலும் முழுமையாகச் செங்கலினால் அமைக்கப்பட்டன. இலங்கையிலே பொத்கல் விஹாரை முதலான சேதியகரங்கள் அத்தகையனவாகும். அதே போன்றவொரு மாற்றம் கேரளத்துச் ஸ்ரீகோயில்களிலும் ஏற்பட்டுள்ளது. புராதனமான ஸ்ரீகோயில்கள் பொதுவாகக் கலப்புப் பொருட்களாற் கட்டப் பெற்றவை. ஆயினும் வல்யந்தியாதிச்சபுரத்திலுள்ள ஸ்ரீகோயில் முற்றிலும் செங்கல் வேலைப்பாடாகும். இலங்கையில் கந்தகுடி, கெடிகே என்னும் வகைகளைச் சோ்ந்த படிமாகரங்களிலும் இத்தகைய வேறுபாடுகளைக் காணலாம். கந்தகுடி என்பது கலப்புப் பொருட்களால் அமைந்தது. கெடிகே முழுமையும் செங்கல்லினாலானது. முற்றாகச் செங்கல்லினால் அமைக்கப்பட்ட கட்டடங்களிலே திராவிட கலைப்பாணியின் சாயல்கள் படிந்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கவோா் அம்சமாகும்.

## நாலந்தா கெடிகே

முற்றிலும் கல்லால் அமைக்கப் பெற்ற கட்டடங்களிலே திராவிட கலைப்பாணியின் செல்வாக்குத் தெளிவாகத் தெரிகின்றது. கோயில்களைக் கற்றளிகளாக அமைக்கும் முறை சிங்கள கட்டடக்கலை மரபிற்கு அன்னியமானது என்பதால் அது திராவிடக் கலைப்பாணியின் செல்வாக்கினால் ஏற்பட்டதாகும் என்று பொதுவாகக் கருதப்படுகின்றது. அநுராதபுர காலத்துப் பௌத்த சமயந் தொடா்பான கட்டடங்களில் நாலந்தா கெடிகே, தெவிநுவரவிலுள்ள உபுல்வன் கோயிலான கல்கே ஆகியன மட்டுமே கற்றளிகளாகும்.

சே. பரணவிதான நாலந்த கெடிகே பற்றி மேல்வருமாறு கூறுவாா்: இலங்கையில் முற்றிலும் கல்லினால் அமைக்கப்பட்ட கட்டடங்களில் நாலந்தாவிலுள்ள கெடிகே காலத்தால் மிகவும் முற்பட்டதாகும். அது பல்லவா் கலைப் பாணியில் அமைந்துள்ளது. எனவே அதன் காலம் எட்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டாகும். அது தாந்திரீகச் சாயல் படிந்த மகாயான வழிபாட்டிற்குரிய கட்டடமாகும். இதன் வரலாறு பற்றி எதுவுந் தெரியவில்லை. அதன் பெயரும் மக்களின் நினைவிலிருந்தும் காலப்போக்கில் மறைந்து விட்டது.

நாலந்தா கெடிகே அதன் கட்டட அமைப்பின் எல்லா அம்சங்களிலும் தென்னிந்தியக் கட்டடக் கலைப்பாணியில் அமைந்துள்ளது என்பது பற்றி நுண்கலை வரலாற்று ஆசிரியர்களிடையிற் கருத்தொற்றுமை உண்டு. அதன் கட்டடம் முழுவதும் கருங்கல் வேலைப்பாடாகும். அதன் கூரையில் அமைந்துள்ள சிகரம் வண்டிக் கூடாரம் போன்ற சாலைச் சிகரமாகும். சிகரத்தின் தென்புறப் பகுதியும், அதன் கவாக்ஷமும், சாலைச் சிகரத்தின் ஒரு சிறிய பகுதியும் மட்டுமே கட்டடத்தில் எஞ்சியுள்ளன. மற்றைய கவாக்ஷத்தின் துண்டங்கள் கட்டடத்தின் சுற்றாடலில் வீழ்ந்து கிடந்தன.

கோயில் பல தடவைகளாகப் புதிப்பிக்கப் பெற்ற பொழுதிலும், அடித்தளங்களைப் பொறுத்தவரையிலே அதன் வடிவம் மாற்றம் பெறாது இருந்துள்ளது. காஞ்சிபுரத்துக் கைலாசநாதர் கோயிலிற் காணப்படும் மகேந்திரவர் மேஸ்வரத்திலுள்ள சாலைச் சிகரத்து கவாக்ஷங்களும் நாலந்தா கெடிகேயிலுள்ள தென்புறத்து கவாக்ஷமும் ஒரே விதமானவை என்பதை எச்.சி.பி.வெல் சுட்டிக் காட்டியுள்ளார்.

கற்றளியான நாலந்தா கெடிகே கர்ப்பக்கிருகம், மண்டபம் என்னும் இரு பிரதான பகுதிகளைக் கொண்டிருந்தது. அவற்றுக்கிடையிலே அந்தராளம் அமைந்திருந்தமைக்கான அறிகுறிகள் காணப்படவில்லை. அக்கோயில் 3' 8'' உயரமான அதிஷ்டானத்தில் அமைந்துள்ளது. அதிஷ்டானத்தில் மூன்று படைகள் உள்ளன. கர்ப்பக்கிருகத்தைச் சுற்றி 7' அகலமான திருச்சுற்று அதிஷ்டானப் பகுதியில் அமைந்திருந்தது. முற்பக்கத்தில் அது மண்டபத்தின் பகுதியாக விளங்கியது. கர்ப்பக்கிருகத்தினுள்ளே அமைந்திருந்த மூலவர் படிமம் மறைந்து விட்டது. இந்நாட்களில் வேறொரு படிமத்தை அங்கு வைத்துள்ளனர்.

கர்ப்பக்கிருகம் தோற்றத்தில் விமானம் போன்றது. அது அமைப்பிற் சதுரமானது. அதன் கூரை பல்லவர் கோயில்களைப் போலத் தளங்களையும் சிகரத்தையும் பெற்றுள்ளது. முதலாவது தளத்தின் அரமியச் சுவர்கள் பத்து அடி உயரமானவை. இரண்டாவது தளம் அதனிலுஞ் சிறியது. அரமியச் சுவர்களில் அரைத் தூண்களும் குதிரை லாடம் போன்ற கோலமான கூடுகளும் தெரிகின்றன. தளங்களுக்கு இடையிலே வெளிப்புறத்திற் கபோத வரிசைகள் அமைந்துள்ளன. கோயிலின் மேற்பகுதியிலுள்ள தளங்களும் அவற்றிலே காணப்படும் சிற்ப வேலைப்பாடுகளும் பல்லவரின் விமான தளங்களில் உள்ளவற்றைப் போன்றனவாகும். சிகரம் சாலாசிகரம் போன்ற அமைப்பாகும். வடிவமைப்பில் அது அநுராதபுர காலத்துப் பௌத்த கட்டடக்கலை மரபிற்கு அன்னியமானது. மாமல்லபுரத்துக் கலைப்பாணியின் செல்வாக்கினைப் பிரதிபலிப்பது. அது காஞ்சிபுரத்துக் கைலாசநாதர் கோயிலைச் சேர்ந்த மகேந்திரவர் மேஸ்வரத்தில் உள்ளதைப் போன்றதெனச் சில கலாவிமர்சகர்கள் முன்பு கூறியுள்ளனர். சிகரத்தின் தெற்கிலும் வடக்கிலும் அமைந்த கட்டுமானங்கள் திராவிட சிகரங்களின் கவாக்ஷத்தைப் போன்றவை. நடுவில் ஆசனக் கோலத்தில் அமைந்த ஒருவரின் உருவமும், அதற்கு மேலாக, இரு பக்கங்களிலும் பறந்து செல்லும் வித்யாதரரின் உருவங்களுந் தெரிகின்றன. கர்ப்பக்கிருகம் அமைந்துள்ள அதிஷ்டானப் பகுதியில் குதிரை லாடம் போலமைந்த கூடுகள் குடையப்பட்டுள்ளன. அவற்றுட் சிலவற்றிலே மனிதத்தலை வடிவங்களும் வேறு சிலவற்றிலே தூபியின் சிற்றுருவங்களுங் காணப்படுகின்றன.

கர்ப்பக்கிருகம், மண்டபம் என்பவற்றுக்கிடையில் அர்த்த மண்டபம் அமைந்திருந்தமைக்கான அறிகுறிகள் காணப்படவில்லை. மண்டபத்தின் நடுவில் இரு தூண் வரிசைகள் காணப்படுகின்றன. தூண்கள் எல்லாம் சிற்பங்கள் பெறாத வெற்றுத் தூண்களாகும். அவை நான்முகத் தூண்கள். தூண்வரிசைகளின் நடுவே மூலஸ்தானத்தை நோக்கிச் செல்லும் வழியுண்டு. மேலும் இரு தூண் வரிசைகள் மண்டபத்தில் உள்ளன. அவை ஓரங்களிலே மண்டபச் சுவர்களை ஒட்டி அமைந்துள்ளன. மண்டபத்தின் கூரை முற்றாகச் சிதைந்து மறைந்துவிட்டது. அது கற்பாளங்களினால் அமைந்த தட்டையான கூரையாக உருவாக்கப்பட்டிருந்ததென்று அனுமானித்துக் கொள்ளலாம்.

கோயிலை வர்ணித்தவர்கள் முகமண்டபம் ஒன்றினைப் பற்றிப் பேசுகின்றார்கள். கட்டடத்தின் வாயிற்புறத்தில் அமைந்திருக்கக் கூடியதும் அளவிற் சிறியதுமான முன்றிலையே அவர்கள் முகப்பு மண்டபம் என்று கருதினார்கள் போலும். ஆலய வாசற்கதவின் மேலமைந்த தோரணத்தின் நடுவிலே கஜலக்ஷ்மியின் சிற்றுருவம் செதுக்கப்பட்டுள்ளது. வழமை போல முகப்பிலே அரைவட்டக் கல் நிலத்திலே பதிக்கப்பட்டுள்ளது. அதனைக் கடந்ததும், மூன்று படிகளைத் தாண்டி உள்ளே செல்ல முடியும். கீழ்ப்படியிலே இணைக் கணங்கள் மூன்றின் சிறிய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

அநுராதபுர காலத்துப் பௌத்த கோயில்களில் நாலந்தா கெடிகே மட்டுமே முற்றிலும் கல்லினால் அமைக்கப்பட்ட கட்டடமாகும். கட்டடத்தின் வடிவமைப்பு, அலங்கார வேலைப்பாடுகள் என்பனவும் தனித்துவமானவை என்பதுங் குறிப்பிடற்குரியதாகும். இலங்கையில் ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட திராவிட கலைப்பாணியின் செல்வாக்கினைப் பிரதிபலிக்கும் கோயிலாக அது விளங்குகின்றது. இன்னொரு வகையில் நோக்குமிடத்து அது தமிழகத்திலும் இலங்கையிலும் நிலவிய பௌத்த நிறுவனங்களுக்கிடையில் ஏற்பட்ட நெருங்கிய தொடர்புகளைப் பிரதிபலிக்கும் வரலாற்றுச் சின்னமாகவும் கொள்ளத்தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிகாலத்திலே மகாவிகாரையில் உண்டான சங்கபேதமும், சங்கத்தாரிடையே பரவிய மகாயானம் தொடர்பான சிந்தனைகளும் அந்தத் தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டவை. காஞ்சிபுரத்திலே, பல்லவர் காலத்திற் பல பௌத்த நிறுவனங்கள் அமைந்திருந்தன. அங்குள்ள சில பௌத்த கோயில்கள் சைவ, வைணவக் கோயில்களைப் போலக் கற்றளிகளாக அமைக்கப்பட்டன என்றும், அவை பல்லவர் கலைப்பாணியில் அமைந்தனவென்றும் கருதுவதற்கு இடமுண்டு. அவ்வாறாகிற் காஞ்சிபுரத்திலுள்ள பௌத்த கோயிலொன்றை முன்மாதிரியாகக் கொண்டு நாலந்தா கெடிகே அமைக்கப்பட்டதென்றும் கருதலாம். அதனால் இரு தேசங்களுக்குமுரிய கலாசார மரபுகள் சேர்க்கை பெறுகின்ற பாரம்பரியமொன்றின் சின்னமாக நாலந்தா கெடிகே கொள்ளத்தக்கதாகும்.

### தேனுவரைக் கோயில்

அநுராதபுர காலத்திலே கற்றளியாக அமைக்கப்பட்ட மற்றொரு பௌத்த சமயச் சார்புடைய கோயில் தெவிநுவரவில் அமைந்திருக்கும் கல்கே என்பதாகும். அது உபுல்வன் கோயிலாகுமென்று பலராலும் நம்பப்படுகின்றது. அதனைப் பற்றி சே. பரணவிதான மேல்வருமாறு கூறுவார்:

அயல் நாடான தமிழ் நாட்டில், ஏழாம் நூற்றாண்டுவரை, இலங்கையிற் போலக் கட்டடங்களை மரத்தினால் அமைப்பதே வழமையாகும். அதன் பின்பு கல்லினாற் கட்டடங்களை அமைக்கத் தொடங்கினார்கள். அதன் விளைவாக இலங்கையிலும் சில கட்டடங்கள் முழுமையுங் கல்லினால் அமைக்கப்பட்டன. இலங்கையின் தென் கரையிலுள்ள தெவுந்தரவிலே உபுல்வனை வழிபடுவதற்கென்று அமைக்கப் பெற்ற கோயிலிலே சிங்கள மரபிலுள்ள மரவேலைப்பாடான கட்டுமானம் கற்றளியாக மாறிவிட்டது.

**கல்கே** மிதமான அளவுடைய கட்டடமாகும். அதிலே கர்ப்பக்கிருகம், மண்டபம் என்னும் பகுதிகள் உள்ளன. அவற்றுக்கிடையில் அந்தராளம் போன்ற அமைப்புக் காணப்படவில்லை. கர்ப்பக்கிருகம் வெளிப்புறத்தில் 16 அடி நீளமும் அகலமுங் கொண்ட சதுரமான அமைப்பாகும். மண்டபம் 14' 9'' நீளமும் 10' 3'' அகலமுங் கொண்டுள்ளது. இரண்டு பகுதிகளும் ஒரே கட்டடம் போல அமைந்துள்ளமை குறிப்பிடற்குரியது. திராவிட கலைப்பாணியில் அமைந்துள்ள கோயில்களிற் காணப்படுவதைப் போன்ற அதிஷ்டானம் அதில் அமைந்திருக்கவில்லை. அதன்பீடம் உயரங் குறைந்த இருதள அமைப்பாகும்.

கல்கேயிலுள்ள சுவர்கள் 7' உயரமானவை. அவற்றிலே மாடக்குழிகளோ சிற்பங்களோ அமைக்கப்படவில்லை. அவற்றில் இடையிடையே அரைத் தூண்கள் காணப்படுகின்றன. கட்டடத்தின் கூரை தட்டையானது. அது கற்பாளங்களால் மூடப்பட்டுள்ளது. செங்கற்களினால் அமைக்கப்பட்ட சிகரமொன்று கர்ப்பக் கிருகத்தின்மேல் அமைந்திருந்ததென்று சிலர் கருதுகின்றனர். ஆனால் அதற்கான ஆதாரங்கள் எதுவுங் கிடைக்கவில்லை.

இரண்டு அம்சங்களில் மட்டுமே கல்கே பல்லவர் காலத்துத் திராவிடக் கலைப்பாணிக்குரிய கோயில்களை ஒத்திருக்கின்றது. அது கற்றளியாக அமைந்திருக்கின்றது. அதில் கர்ப்பக்கிருகம், மண்டபம் என்னும் பகுதிகள் அமைந்திருக்கின்றன. அதன் வடிவமைப்பு, கட்டுமான வேலைப்பாடுகள், அலங்காரங்கள் என்பவற்றைப் பொறுத்த வரையில் கல்கே மரபுவழியான சிங்கள கட்டடக்கலைப் பாரம்பரியத்துடன் எந்த விதமான தொடர்பினையுங் கொண்டிருக்க வில்லை. பரணவிதான கூறுவதைப் போல சிங்கள பாரம்பரியத்திலுள்ள மரத்தினால் அமைந்த கட்டடங்களை முன்மாதிரியாகக் கொண்டு அது அமைக்கப்பட்டதென்றும் கொள்ளமுடியாது. அதற்கு முன் மாதிரியாக அமைந்த உதாரணங்கள் என்று கொள்ளக் கூடிய எந்தவொரு கட்டடமும் இலங்கையிற் காணப்படவில்லை.

இந்துக் கோயிலொன்றுக்குரிய வடிவமைப்பினை அடிப்படையாகக் கொண்டு உபுல்வன் கோயிலைத் தெவிநுவரவில் அமைத்துள்ளனர் என்றே கருத முடிகின்றது. சில அம்சங்களில் அது குப்தர் கலைப்பாணிக்குரிய கோயில்களை ஒத்திருக்கின்றது. தட்டையான கூரையுடன் அமைந்த கர்ப்பக்கிருகம் மண்டபத்தோடு இணைக்கப்பட்டிருத்தல் ஆகிய பிரதான அம்சங்கள் சாஞ்சி முதலான இடங்களிலுள்ள ஆதியான குப்தர் காலக் கோயில்களிலுங் காணப்படுகின்றன. எனவே, சிங்களக் கட்டடக் கலைப் பாரம்பரியத்துக்கு அன்னியமானதென்று கொள்ளப்படும் உபுல்வன் கோயில் இந்து சமயந் தொடர்பான இந்தியக் கட்டடக்கலை மரபிலுள்ள கோயிலமைப்பு ஒன்றினை முன்மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்டதென்று கருதலாம். அதனைப் பின்பற்றி வேறு கோயில்கள் இலங்கையில் அமைக்கப்பட்டிருந்தன என்று கொள்வதற்கான எந்தவிதமான சான்றுகளும் இதுவரை கிடைக்கவில்லை.

தெவிநுவர கடல்வழியான சர்வதேச வாணிபத்தில் ஒரு தரிப்பு நிலையமாக விளங்கியதால், வாணிபத்தின் மூலமாக ஏற்பட்ட கலாசாரச் செல்வாக்கினைப் பிரதிபலிக்கும் ஒரு தொல்பொருட் சின்னமாகவும் உபுல்வன் கோயில் நோக்கற்பாலது. இந்திய வணிகரோடு கூடி வந்த கட்டடக் கலைஞர்கள் அதனை நிர்மாணித்திருத்தல் கூடும். அது பௌத்த சமயச் சார்புடைய வழிபாட்டுக்குரிய கோயில் என்பதால், தமிழகத்திலோ கலிங்கத்திலோ ஆந்திரதேசத்திலோ பௌத்த நிறுவனங்களுக்கிடையே காணப்பட்ட தேவகோட்டம் ஒன்றை முன்மாதிரியாகக் கொண்டு அது அமைந்திருப்பதற்கான சாத்தியங்களும் உண்டு. எனவே கல்கே தொடர்பாக நாம் அறிந்தவை மிகவும் சொற்பமானவை. அறியப்பட வேண்டியவை பெருமளவிலானவை. புராதன சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு, கலாசாரப் பரிவர்த்தனை என்னும் விடயங்களைப் பொறுத்த வரையில் கல்கே மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தொல்பொருட் சின்னமாகும்.

## இசுருமுனியாச் சிற்பங்கள்

இலங்கையிலுள்ள புராதனமான சிற்பங்களில் இசுருமுனியாவிலுள்ளவை கலாவிமர்சகர் பலரின் பாராட்டுக்களைப் பெற்ற சிறப்புடையவை. அங்கே மூன்று பிரதானமான சிற்பங்கள் கற்பாறைகளிற் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றிலொன்று ஆசனக்கோலமான தனிமனித வடிவமாகும். அதன் கலைப்பண்பும் இணையில்லாத அழகும் காண்போரைப் பெரிதும் கவர்ந்து விடுகின்றன. இன்னொன்று, தடாகமொன்றில் இறங்கி நிற்கும் யானைக் கூட்டம் ஒன்றின் காட்சி பற்றியது. அங்குள்ள மூன்றாவது சிற்பம் காதலரின் கோலமானது. அதனை உமா மகேஸ்வரரின் தோற்றம் என்று சிலர் கொள்வர்.

இசுருமுனியாச் சிற்பங்கள் அநுராதபுர காலத்திற்குரியவை. அவை ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் உருவாக்கப் பெற்றவை என்பதில் அறிஞரிடையே கருத்தொற்றுமை உண்டு. அவற்றிலே தமிழகத்துப் பல்லவர் கலைப்பாணியின் செல்வாக்கு அழுத்தம் பெற்றுள்ளது.

## ஐயனாரின் வடிவம்

இசுருமுனியாவிலுள்ள மனித வடிவமான சிற்பத்தை முற்காலங்களிற் பலரும் பலவிதமாக விளக்கியுள்ளார்கள். குதிரையும் மனிதனும் என்று வர்ணிப்பது நெடுங்கால வழக்கமாகும். அது போர் வீரன் ஒருவனின் கோலமாய் அமைந்ததென்று சிலர் சிந்திக்கலாயினர்.

இசுருமுனியாவிலுள்ள சிற்பத்தை ஆனந்த குமாரசுவாமி மேல்வருமாறு வர்ணிக்கின்றார்.

> அநுராதபுரத்திலே இசுருமுனியா விஹாரை என்று இந்நாட்களிலே சொல்லப்படும் இடத்திலே, பெருங்கற் பாறையொன்றின் பகுதி நிலத்தின் மேலே தெரிகின்றது. பிளவுண்ட அப்பாறையின் முன்புறத்திலே செயற்கை முறையில் அமைந்த சிறிய குளமுண்டு. அந்தப்பாறை ஏழாம் நூற்றாண்டில், மாமல்லபுரத்திலுள்ள கங்காவதாரம் போன்று சிறிய அளவிலே செதுக்கப்பட்டுள்ளது. பாறையில் ஆசனக் கோலமான வடிவமொன்று அமைந்துள்ளது. அதன் அருகிலே குதிரையின் உருவம் தெரிகிறது. அது கபில முனிவரின் உருவம் போலத் தெரிகின்றது. அது தூய்மையான பல்லவர் கலைப்பாணியில் அமைந்திருக்கின்றது. இலங்கையிலுள்ள மிகவும் சிறந்த சிற்பங்களில் அதுவும் ஒன்றாகும்.

இசுருமுனியாவிலே, குதிரை சகிதமாகக் காணப்படும் வடிவம் இராமாயணத்திலே, பால காண்டத்தில் வர்ணிக்கப்படும் கபில முனிவரின் வடிவமாக அமைக்கப்பட்டுள்ளது என்பது ஆனந்த குமாரசாமியின் கருத்தாகும்.

இந்தியக் கலைகளின் விமர்சகர்களில் ஒருவரான வின்சென்ற் ஸ்மித் என்பாரும் அக்கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளார். அதன் சிறப்புகளைக் குறித்து அவர் மேல்வருமாறு புகழ்ந்துரைக்கின்றார்:

> இந்தியாவிலும் இலங்கையிலும் உருவாக்கப்பட்ட தலைசிறந்த கலை வடிவங்களில் இதுவும் ஒன்றாகுமெனக் கருதுகின்றேன். அதன் கோலம் சாந்தமானது. தோற்றம் கம்பீரமானது. உருவம் அமைந்துள்ள கோலம் கடினமானதெனினும் அது மிகுந்த திறமையோடும் ஒப்பில்லாத எளிமையுடனும் அமைக்கப் பட்டுள்ளது. அக்கினி, பர்ஜன்ய ஆகிய தேவர்களை அடையாளபூர்வமாக உணர்த்தும் வகையில் இசுருமுனியாச் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது.

என்ற விநோதமான கருத்தைச் சேனரத் பரணவிதான முன்வைத்துள்ளார். ஆனால், இதனைப் பிரபலமான கலாவிமர்சகர் எவரும் ஒப்புக் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. அச்சிற்பத்தின் வடிவமைப்பினை நன்கு ஆராய்ந்த பின்பே அதனை அடையாளங்காண முடியும். அதன் அம்சங்கள் மேல்வருமாறு அமைந்துள்ளன:

உருவம் ஆசனக் கோலத்தில் அமைந்துள்ளது. அந்தக் கோலம் மகாராஜ லீலாசனம் எனப்படும். எதுவிதமான பீடமுமின்றித் தரையிலே அமர்ந்திருக்கும் கோலத்தில் அது செதுக்கப்பட்டுள்ளது. இடக்கால் உண்ணோக்கி மடித்து நிலத்தில் வைக்கப்பட்ட நிலையிலே தெரிகின்றது. வலக்கால் மடித்துப் பாதம் நிலத்தை ஊன்றிய நிலையிலே காணப்படுகின்றது. இடக்கை தரையில் ஊன்றிய கோலத்திலும், வலக்கை முழங்காலிற் படிந்த நிலையில் நீட்டிய கோலத்திலுந் தெரிகின்றன. முகம் சுந்தரக் கோலமானது. கண்கள் தூரநோக்கினைப் பிரதிபலிக்கின்றன. புருவங்கள் வில் போல வளைந்த வடிவமானவை. மூக்கு மெலிந்து நீண்ட அமைப்பினைக் கொண்டுள்ளது. தலைமேல் மகுடம் எதுவுங் காணப்படவில்லை. கேசம் சடாபாரமாக அமைந்திருக்கின்றது. அது தலைக்கு மேலும் கீழும் விரிசடை போன்ற தாழ் சடையாகத் தெரிகின்றது.

இடுப்பைச் சுற்றிக் கட்டிய, மென்மையான சிறிய வஸ்திரத்தின் அடையாளம் தெரிகின்றது. தோள் வலையம், கைவளை, கழுத்து மாலைகள் போன்ற ஆபரணங்கள் உருவத்தில் அமைந்துள்ளன. அவற்றோடு உபவீதம் என்னும் முப்புரி நூலும் தெரிகின்றது. வலப்பக்கத்திலே குதிரையின் முகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாக அமைந்திருக்கின்றது. வலக்கை சவுக்கினைப் பிடித்துள்ள கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றுட் பல பிரதானமான அம்சங்கள் வேறு பல சிற்பங்களிலுங் காணப்படுகின்றன. ஆண்டியகல என்னும் இடத்திலுள்ளதும் கற்பாறையிலே குடையப்பட்டதுமான சிற்பம் இதனைப் போன்றதென்றும். கபில முனிவரின் உருவமாய் அமைந்ததென்றும் முன்பு ஹோகாா்ட் (Hocart) குறிப்பிட்டார். ஆனால் அதன் வேலைப்பாடுகள் முற்றுப் பெறவில்லை. இரு சிற்பங்களும் ஆசனக் கோலத்தில் ஒரே விதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆண்டியகலவிற் காணப்படும் சிற்பத்திலும் பல்லவர் கலைப்பாணியின் சாயல்கள் படிந்திருப்பதாகச் சொல்லப் படுகின்றது.

அம்ஸ்ரர்டாம் பல்கலைக்கழகத்துப் பேராசிரியராக விளங்கியவரும் தென்னாசிய கலைகள் பற்றி நிபுணத்துவம் காரணமாக உலகப் புகழ் பெற்றவருமான லோனாஹுஸன் டீ லியூ அம்மையாரின் முயற்சிகளின் பயனாக இசுருமுனியா சிற்பம் பற்றிப் புதிய சிந்தனைகள் ஏற்படலாயின. இசுருமுனியாவிலுள்ள மனிதவடிவமான சிற்பம் ஐயனாரின் வடிவமென்ற கருத்தை முதன்முதலாக அவர் முன்வைத்தார். அவர் தனது கருத்துக்கு அழுத்தங் கொடுக்கும் வண்ணமாகக் கா்நாடகத்திலும் தமிழகத்திலும் காணப்படும் பல புராதனமான ஐயனாா் வடிவங்களின் பிரதிமாலக்ஷணங்களை உதாரணமாகக் கொண்டார்.

கா்நாடகத்திலே துங்கபத்திரை ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஆலம்பூர் என்னுங் கிராமத்தில் விஸ்வ பிரம்மா கோயில் ஒன்றுள்ளது. அதில் இசுருமுனியாவிலுள்ள சிற்பத்தைப் போன்ற படிமம் ஒன்றுண்டு. இரண்டு வடிவங்களின் பிரதிமாலக்ஷணங்களும் ஒரே விதமானவை. ஆலம்பூர் சிற்பம் ஆசனக் கோலமானது. அதுவும் மகாராஜலீலாசனம் என்ற வகையில் அமைந்துள்ளது. அதன் கால்களின் அமைப்பு இசுருமுனியாச் சிற்பத்தில் உள்ளதைப் போல அமைந்திருக்கின்றது. அதன் சடாபாரமும் விரிசடையான தாழ்சடையாகும். அப்படிமத்தின் இடப்பக்கத்திற் குதிரை முகம் தெரிகின்றது. ஆலம்பூரிலுள்ள சிற்பம் ஐயனாரின் வடிவமாகும். அதனால் இசுருமுனியாவிலுள்ள சிற்பத்தையும் ஐயனாரின் உருவமெனக் கொள்வது மிகவும் பொருத்தமானதாகும்.

தமிழகத்தில் ஐயனாரின் படிமங்கள் பல்லவர் காலம் முதலாகக் கிடைக்கின்றன. வட-ஆற்காடு மாவட்டத்திலுள்ள எசலம் என்னும் ஊரிலே. பல்லவர் காலத்துக்குரிய ஐயனாரின் படிமமொன்று திருப்பத்தூரிலே காணப்படுகின்றது. அதில் ஐயனாா் இளமைக் கோலத்துடனும் சுருண்ட நீளமான கேசங்கள் அமைந்த சடாபாரத்துடனும் விளங்குகின்றார். எசலத்திலுள்ள படிமத்திற் போலவே கால்கள் அமைந்திருக்கின்றன. ஆயினும். அதிலே கைகளில் ஒன்று படைக்கலம் ஏந்திய கோலத்துடன் அமைந்துள்ளது. கண்ணபுரத்திலும் ஐயனாரின் புராதனமான படிமங் காணப்படுகின்றது. அது சோழா் காலத்துக்கு முற்பட்டது. போலத் தெரிகின்றது. அந்தப் படிமத்திலுள்ள கரமொன்றிலே சவுக்கின் உருவந் தெரிகின்றது.

காஞ்சிபுரத்திலுள்ள ஐயனாரின் படிமமொன்றிலே ஒரு கால் மடித்து ஆசனத்தில் வைக்கப்பட்ட நிலையிற் காணப்படுகின்றது. மற்றக்கால் உயா்த்தியும் முழங்கால் மட்டத்திலே கீழ்நோக்கிய வண்ணமாக மடித்துப் பாதம் ஆசனத்தில் ஊன்றிய நிலையிலும் அமைந்திருக்கின்றது. கால்களின் அமைப்பு ஆலம்பூர். எசலம். இசுருமுனியா ஆகிய இடங்களிலுள்ள உருவங்களிற் போலவே காணப்படுகின்றது. அதன் தலையில் உயரமாக மகுடம் அமைந்திருக்கின்றமை ஒரு புதிய அம்சமாகும். ஆசனத்தின் வலப்பக்கத்தில் ஐயனாரின் வாகனமாகிய குதிரையின் உருவம் அமைந்துள்ளது. திருவனந்தபுரம் அருங்காட்சியகத்திலே இசுருமுனியாச் சிற்பத்தின் அம்சங்கள் அமைந்திருக்கின்றமையும் கவனித்தற்குரியதாகும்.

ஐயனார் வழிபாடு மிகவும் புராதனமானது. அது ஆரம்பத்தில் வைதீகத் தொடர்பற்றதாகும். அது தென்னிந்தியாவிலே துங்கபத்திரை நதிக்குத் தெற்கிலுள்ள பகுதிகளில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தது. ஐயனாரை ஐயப்பன். சாத்தன். ஹரிஹரபுத்திரன் என்னும் பெயர்களாற் குறிப்பிடுவது வழக்கம். சாத்தன். ஐயனார் என்னும் பெயர்கள் தமிழர் சமுதாயத்திலே புராதன காலம் முதலாக வழங்கி வந்தமைக்குச் சங்க நூல்களிற் சான்றுகள் காணப்படுகின்றன. இலங்கையிலே பல்லவர் காலமளவில் ஐயனார் வழிபாடு நிலவியமைக்கு இசுருமுனியாச் சிற்பம் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். நுவரகலாவிய பிரதேசத்தில் 20ஆம் நூற்றாண்டு வரை ஐயனார் வழிபாடு சிங்கள மக்களிடையிலே காணப்பட்டது. அவர்கள் ஐயனாரை ஐயனக என்ற பெயராற் குறிப்பிட்டனர். இலங்கையின் வடபகுதிகளிலும் கிழக்குப் பகுதிகளிலும் ஐயனார் வழிபாடு சைவர்களிடையே இன்றுங் காணப்படுகின்றது.

கிராமிய வழிபாட்டிற் சிறப்பிடம் பெற்றிருந்த ஐயனாரை ஐந்தாம். ஆறாம் நூற்றாண்டுகளில் வைதீக வழிபாட்டு மரபுடன் இணைத்து விட்டனர். அதன் பயனாகவே ஐயனாரைச் சிவகுமாரனாகக் கொள்ளலாயினர். ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதான பிராஹ்மண புராணத்தில் ஐயனாரின் உற்பத்தி பற்றிய கதை காணப்படுகின்றது. மகாவிஷ்ணு மோகினி வடிவமாகிச் சிவனோடு கூடியதால் ஐயனார் உற்பவித்தார் என்றும். அதனால் அவருக்கு ஹரிஹரபுத்திரன் என்னும் நாமம் உண்டாகியதென்றும் அதிலே கதை சொல்லப்படுகின்றது. சைவம். வைணவம் ஆகிய சமயநெறிகள் இரண்டிலும் ஐயனார் வழிபாடு இணைந்து விட்டமையினை ஜனரஞ்சகமான முறையில் விளக்கும் கதையாகவே இது கொள்ளத்தக்கதாகும். காலப்போக்கில் ஐயனாரின் படிமங்களை ஆலயங்களிலே தாபனம் பண்ணி வழிபடும் வழக்கம் ஏற்பட்டு விட்டது. ஆகமப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாரமான சிற்பசாஸ்திர நூல்களில் ஐயனார் படிமத்தின் பிரதிமாலக்ஷணங்கள் வர்ணிக்கப்படுகின்றன. முன்பு கவனித்தவாறு காலப்போக்கில் அவற்றிலே புதிய அம்சங்களும் சேர்க்கப்பட்டன.

பொதுவாக ஐயனாரை இளமை பொருந்திய காவற்கடவுளாகக் கொள்வது வழமை. ஐயனாரின் கோயில்கள் குளம், வயல், வனம், மலை ஆகியவற்றின் எல்லைப்புறத்தில் வைக்கப்படும். வயல்களையும், புனம், தோட்டம் போன்றவற்றையும் ஐயனார் காவல்புரிவதாகக் கருதினார்கள். குதிரையும், யானையும் ஐயனாரின் வாகனங்களாகக் கொள்ளப்படும். இசுருமுனியாவிலுள்ள சிற்பத்திற்கு ஐயனார் பற்றிய சிந்தனைகளும் ஐதீகங்களும் சாலப் பொருந்துவனவாகும்.

## தடாகத்தில் நிற்கும் யானைகள்

ஐயனாரின் வடிவம் அமைந்துள்ள கற்பாறையின் ஒரு பக்கத்திலே, இயல்பாக அமைந்துள்ள பாறைப்பிளவின் இரு பக்கங்களிலும் தடாகமொன்றில் நிற்கும் யானைகளின் காட்சி சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பாறைப்பிளவின் இடப்பக்கத்தில் நான்கு யானைகளின் உருவங்கள் உள்ளன. அவற்றில் இரண்டு பெரிய யானைகளின் வடிவங்களாகும். அவ்விரண்டினுள் ஒன்று கொம்மன் யானை மற்றையது பெண் யானையின் வடிவம் போலத் தெரிகின்றது. அவற்றுக்கு முன்னால் யானைக் கன்றுகள் இரண்டின் காட்சி காணப்படுகின்றது. வலப்பக்கத்திலே பெரிய வேழம் ஒன்றின் உருவந் தெரிகின்றது. குளத்து நீரை முகந்து கொள்வதற்கு ஏற்றவாறு அது துதிக்கையினை மேலே உயர்த்திய கோலத்திற் காணப்படுகின்றது. அதன் கால்களின் அடிப்பாகங்கள் நீரில் அமிழ்த்தியுள்ள வகையிலே தெரியுமாறு உருவம் செதுக்கப்பட்டுள்ளது.

மாமல்லபுரத்துச் சிற்பங்களை உதாரணமாகக் கொண்டு இசுருமுனியாச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பது ஆனந்த குமாரசுவாமி, லொஹைஸன் டீ லியூ ஆகிய மேதைகளின் கருத்தாகும். மாமல்லபுரத்துக் கற்பாறை மிகவும் விசாலமானது. அதன் இயல்பான தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு தத்துவ விளக்கமாக, அங்கே கவர்ச்சி மிக்கதான புராணக்கதை ஒன்றினை ஆதாரமாகக் கொண்டு அற்புதக் கோலமான சிற்பமொன்றை வடிவமைத்துள்ளனர். ஒப்பீட்டு அடிப்படையில் நோக்குமிடத்து இசுருமுனியாச் சிற்பம் மிகவும் சிறியது. கங்கையின் உற்பத்தியினையோ பக்திப் பிரவாகத்தினாற் சீவராசிகளின் மனோபாவங்களில் ஏற்படக் கூடிய மாற்றங்களையோ அவை பிரதிபலிக்கவில்லை.

கற்பாறையின் மேலே அமர்ந்திருக்கும் நிலையிற் காணப்படும் ஐயனாரின் கோலத்திற்கும் தடாகத்திலே தங்கி நிற்கும் கோலத்திலுள்ள யானைகளின் காட்சிக்கும் ஏதோவிதமான தொடர்பு இருந்திருக்கலாம். யானையை ஐயனாரின் வாகனமாகக் கொள்வது மரபாகும். தடாகத்திலே இறங்கி நிற்கும் யானைக் கூட்டத்தைக் கவனித்த வண்ணமாக அமர்ந்திருக்கும் கோலத்தில் ஐயனாரின் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது என்று கருதலாம்.

இசுருமுனியாவிலுள்ள யானைகள் இறங்கி நிற்கும் தடாகம் போன்ற காட்சியொன்று திசவாவியின் அணைக்கட்டுக்குச் சமீபத்திலுள்ள சிறு குளமொன்றின் அண்மையிற் காணப்படும் பாறைச் சரிவிலே செதுக்கப் பெற்றுள்ளது. அக்காட்சியிலே தாமரைச் செடிகளும் மீன்களும் நிறைந்துள்ள தடாகத்திலே யானைகள் நிற்கும் கோலம் தெரிகின்றது. இரு சிற்பங்களும் ஒரே கலைப்பாணியின் அம்சங்களைப் பிரதிபலிக்கின்றன. அத்துடன் அவை ஒரே காலத்துக்குரியனவாதல் வேண்டும். வடமத்திய மாகாணத்திலே, கட்டுப்பிலான என்னுமூரிலே, ஆற்றோரத்தில் யானை ஒன்றின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. அது இசுருமுனியாவிலும் திசவாவிக் கரையிலும் காணப்படும் யானைகளைப் போல வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆயினும், அவற்றைக் காட்டிலும் மிகுந்த கலை வனப்புடன் அது விளங்குகின்றது. இலங்கையில் ஏற்பட்டிருந்த மாமல்லபுரக் கலைப்பாணியின் செல்வாக்கிற்கு அதுவும் ஒரு உதாரணமாகும்.

## காதலர் வடிவான சிற்பம்

இசுருமுனியாவிலுள்ள மற்றுமொரு சிற்பம் ஆணும் பெண்ணும் அணைந்து கூடியிருக்கும் உருவமாகும். இதனையொத்த வேறெந்த வடிவமும் இதுவரை இலங்கையிற் காணப்படவில்லை. அதிற் குப்தர் கலைப்பாணியின் சாயல்கள் படிந்துள்ளன என்று பரணவிதான முதலியோர் கருதுவர். அது நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்ததென்றும் பரணவிதான கொள்வார். ஆயினும் ஏழாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதென்று கொள்வதற்கான தகுந்த காரணம் எதுவும் இல்லை. அது சாலியகுமாரன், அசோகமாலா ஆகியோரின் வடிவம் என்பது பரணவிதானவின் கருத்தாகும். அநுராத செனெவிரத்ன முதலிய கலாசார விமர்சகர் சிலர் அச்சிற்பம் சிவன், பார்வதி ஆகியோரின் வடிவங்களைக் குறிக்கும் என்பர். இரு வடிவங்களிலுங் காணப்படும் அங்கலக்ஷணங்கள் கட்டழகு வாய்ந்த மனிதரின் கோலங்களைப் போன்றவை. வடிவங்கள் இரண்டும் ஆசனக் கோலமானவை. ஆசனம் நீள்சதுர வடிவங் கொண்டது. தெய்வப் படிமங்கள் அமைந்திருக்கும் பீடம் போல அவை காணப்படவில்லை. இருவரது கண்களும் மூடிய கோலத்தில் அமைந்துள்ளன. ஆணின் இடக்கரம் பெண்ணை அணைத்த கோலமாய் அமைந்துள்ளது. வலக்கரம் கடக முத்திரையில் அமைந்துள்ளது. பெண்ணுருவத்தின் வலக்கரம் கடகஹஸ்தமாக அமைந்துள்ளது. இடக்கரம் ஆசனத்தில் ஊன்றிய கோலத்தில் அமைந்திருக்கின்றது. சிவ சின்னங்களான சூலம், மான், மழு, உருத்திராக்கம் போன்றவற்றின் உருவங்கள் சிற்பத்திலே காணப்படவில்லை. கங்கை, நிலவு, கபாலம், பாம்பு ஆகியவற்றின் வடிவங்களும் ஆணுருவத்தின் சடை மேலே தெரியவில்லை. எனவே இந்தச் சிற்பத்தை உமா-மகேஸ்வரரின் வடிவமென்று உறுதியாகக் கொள்ள முடியவில்லை. வலக்கரங்கள் முத்திரைக் கோலமாய் அமைந்திருப்பதும், ஆணுருவின் பின்புறத்தே பிரபா மண்டலத்தின் வடிவம் அமைந்திருப்பதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பத்திற் காணப்படும் உருவங்கள் தெய்வாம்சம் கொண்டவர்களின் கோலமானவை என்ற கருத்துக்கு ஏதுவாகின்றன.

இதுவரை கவனித்தவற்றின் அடிப்படையிலே ஆறாம் நூற்றாண்டு முதலாகப் பல்லவரின் செல்வாக்கு கணிசமான அளவில் ஏற்பட்டிருந்ததென்று கருதலாம். பல்லவ-கிரந்த எழுத்துகளிலே பல சாசனங்கள் எழுதப்பட்டுள்ளன. அவை மகாயானச் சார்புடைய சமஸ்கிருத மொழிச் சாசனங்களாக அமைந்துள்ளன. சிங்கள மொழிக் கல்வெட்டுகளிலும் கிரந்த எழுத்துக்கள் பயன்படுததப்பட்டுள்ளன. சமஸ்கிருத மொழியின் செல்வாக்கினை காரணமாகச் சிங்கள மொழியிலே புதிய எழுத்துக்கள் வழக்கில் வந்தன. சமஸ்கிருத மொழியில் உள்ளவற்றைப் போன்ற எல்லா ஒலி வடிவங்களையும் குறிப்பதற் கேற்ற வகையிலே எழுத்துக்கள் சீரமைக்கப்பட்டன. மேலும். சிங்கள மொழிக்குரிய வரிவடிவ வளர்ச்சியிற் கிரந்த எழுத்துக்களின் செல்வாக்கு குறிப்பிடத்தக்களவிலே ஏற்பட்டது.

பௌத்த சமய நிறுவனங்கள் இந்து சமய வழிபாட்டுத் தலங்கள் என்பவற்றின் மூலமாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தொடர்புகள் ஏற்பட்டிருந்தன. அதனால் மகாயான சம்பிரதாயத்திலே அபிவிருத்திகள் ஏற்பட்டன. சைவசமயத்தைப் பொறுத்தவரையிற் பக்தி இயக்கத்தின் செல்வாக்கு இலங்கையில் ஏற்பட்டது. திராவிட கலைப்பாணியின் செல்வாக்கு கட்டட, சிற்பக்கலைகளிற் பிரதிபலித்தது. அநுராதபுரத்து மண்டலிகளான சைவக் கோயில்கள் யாவும் வடிவமைப்பிலே திராவிடக் கலைப்பாணியிலுள்ள கோயில்களை முன்மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தன. அத்துடன் பல்லவர் கலைப்பாணி ஏற்படுத்திய செல்வாக்கின் விளைவாக இலங்கையிலே கற்றளிகளை அமைத்தார்கள். கற்றளியான நாலந்தா கெடிகே காஞ்சிபுரத்திலுள்ள மகேந்திரவர்மேஸ்வரத்தின் அம்சங்கள் சிலவற்றைக் கொண்டுள்ளமை குறிப்பிடற்குரியது. சிற்பக் கலைவளர்ச்சியிற் பல்லவர் கலைப்பாணி ஏற்படுத்தியிருந்த செல்வாக்கிற்கு இசுருமுனியாச் சிற்பங்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும். (சி. ப.)

# பல்லவர்கால பக்தி இயக்கம்

பல்லவர்களின் ஆட்சி கி.பி 300 - 850 வரை தமிழகத்தில் நிலை பெற்றது. இதில் கி.பி 300 முதல் 550 வரையுள்ள காலப்பகுதியை முதற்கட்டம் என்றும். கி.பி 550 முதல் 850 வரையுள்ள காலப்பகுதியை இரண்டாம் கட்டம் என்றும் கூறுவர் இதில் இரண்டாம் கட்டமே பக்திக் காலம் என வர்ணிக்கப்படுகின்றது. புறச்சமயங்களின் செல்வாக்கினை ஒழிக்கவும். வைதீகசமயத்தினை மீட்கவும். நாயன்மார்களும். ஆழ்வார்களும் தோன்றி அன்பு வடிவத்தில் இறைவனைத் தொழுது. அவர் மீது பத்திமை உறவுகளையும் வளர்த்து. தெய்வமணங்கமழுவதும் மக்களின் உள்ளங்களைத் தொடுவதுமான பத்திப் பதிகங்களைத் தமிழில் இசையுடன் பாடி ஒரு நாடு தழுவிய இயக்கமாக மலர்ந்ததே பக்தி இயக்கம் என்று கூறுவர்.

## பக்தி இயக்கம்

தமிழகத்திலே களப்பிரர் காலத்தில் மாறுபட்ட சமயங்கள் இருந்தன. கி.பி ஆறாம் நூற்றாண்டுக்குப் பின் இந்துசமயம் புத்துயிர் பெற்றது. நாயன்மார்களும். ஆழ்வார்களும் சமண பௌத்த துறவிகளை தர்க்கத்திற்கும் போட்டிக்கும் இழுத்தனர். இதனால் இரு சமயத்தார்க்குள்ளும் போட்டியும். பூசல்களும். அடக்கு முறைகளும் படிப்படியாக உச்சக்கட்டத்தினை அடைந்தது. இப்பத்தி இயக்கத்திற்குக் காரைக்காலம்மையார். முதலாழ்வார்கள் ஆகியோர் முதல்வராக விளங்கினார்கள். இவர்களை அடியொற்றியே சைவநாயன்மார்களும். வைணவ ஆழ்வார்களும் தோற்றம் பெற்றார்கள்.

பல்லவர் காலத்திலே தோன்றிய அடியவர்கள் புறச்சமயங்களுக்கு எதிராகப் பல்வேறு உத்திகளைக் கையாண்டு பக்தி இயக்கத்தினைச் செயற்படத் தொடங்கினார். இப்பக்தி இயக்கம் பின்பு அக்காலச் சமய. சமூக. அரசியலில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது.

## பக்தி இயக்க உத்திகள்

1. சாதி. சமயம். குலம். கோத்திரம். பால் வேறுபாடு கடந்த சகலமட்டத்தினரையும் இணைத்த செயற்பாடாக விளங்கியமை.
2. கவர்ச்சிகரமான பிரசார. வாத நடவடிக்கைகள் புரிந்தமை.
3. மொழிப்பற்று. பிரதேசப்பற்று. சமூகநலன் என்பவற்றைக் கருத்தில் கொண்டு செயற்பட்டமை.
4. அற்புதங்கள் புரிந்து அன்பு நெறியினை வளர்த்தமை.
5. ஊர் ஊராகப் பாத யாத்திரை மேற்கொண்டமை.
6. சாதாரண குடும்ப உறவுகளின் அன்பை. பக்திமை உறவுகளாக்கி இறைவனைப் போற்றி நின்றமை.
7. பண்டு தொட்டு நிலவி வந்த இலக்கியங்களின் தெளிவை இரத்தினச் சுருக்கமாகப் பதிகங்களில் புகுத்தியமை.
8. இறைவன் எழுந்தருளியிருக்கின்ற இருப்பிடங்களை இயற்கைச் சுற்றாடல் வனப்புடனும் செழிப்புடனும் புகழ்ந்து பாடியமை.
9. பதிகம் பாடும் முறையிலும். சமய தத்துவக் கருத்துக்களைச் சொல்லும் முறையிலும் புதுமைகள் பின்பற்றப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கலை கலாசார நிகழ்வுகளைப் பேணி இறைவனை வழிபடும் உபசாரமாக அவற்றைக் கொண்டமை.

இறைவனின் பக்திக்கு முன்னால் எதுவுமே இல்லை என்பது உண்மை. பக்தி, சமயம், குலம், கோத்திரம், பால் எல்லாவற்றையும் கடந்தது. சமூகத்தின் சகல மட்டத்தில் உள்ளவர்களும் ஒன்றிணைந்து பக்தி இயக்கச் செயற்பாட்டில் மங்கையற்கரசியார், திலகவதியார் முதலான பெண்கள் செயற்பட்டமை பால் வேறு பாடற்ற பக்தி இயக்கம் நடைப் பெற்றமைக்குச் சான்றாகும். சுந்தரமூர்த்திநாயனார், திருத்தொண்டர் தொகையிலே சமயம், குலம், பால், கோத்திரம் வேறுபாடுள்ள 63 தனி அடியவர்களையும் 9 தொகையடியவர்களையும் ஒன்றாகவே எண்ணி அவர்களுக்கு அடிமைப்பணிபுரியும் அடியவர்களுக்கு தான் அடிமையாகும் நாள் எந்நாளோ என்ற ஏக்கம் நிறைந்த பக்திப் புலம்பல்களைத் தெளிவாகப் பாடல்களில் உணர்த்தியுள்ளார். சுந்தரர் இறைவனைத் தோழமை நிலையில் பாவனை செய்து வழிபட்ட போதிலும் உண்மையில் மீளா அடிமை நிலையில் நின்றே அவனைப் போற்றினார் என்று கொள்ள வேண்டும்.

*"மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே*
*மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிக வாடி*
*ஆளாயிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்*
*வானாங்கிருப்பீர் திருவாரூரில் வாழ்ந்து போதீரே"*

இறையருள் மூளாத் தீப்போல் சுந்தரருடைய உள்ளத்தில் கொழுந்து விட்டு எரிந்ததினால் தம்மை இறைவனின் அடிமையாக அவர் கருதிக் கொண்டமையை இப்பாடல் உணர்த்துகின்றது. மேலும் அவர் ஆடம்பரக் கோலத்தில் வாழ்ந்த போதிலும் உள்ளத் தால் இறைவனதும், அவரது அடியார்களினதும் அடிமையாக அமைவதையே விரும்பியிருந்தார்.

புறச்சமயங்களுக்கு எதிராக பக்தி இயக்கத்தார்கள் வகுத்த உத்திகளில், பிரசார, வாத உத்திகளும் சிறந்த முக்கியத்து வத்தினைப் பெற்றன. சமணத்தின் பாற் சென்ற மக்களை மீண்டும் சைவத்தினுள் மீட்க, பல வாதங்களைக் கையாண்டனர். சம்பந்தர் வாதம் புரிய முற்பட்ட சமணருடன் 'தளரிளவரொளி' என்ற பதிகத்தினையெழுதிய ஏட்டினை தீயிலிட்டுப் பச்சையாய் எடுத்து அனல் வாதமும், 'வாழ்க அந்தணர்' என்ற பதிகம் எழுதிய ஏட்டை ஆற்றிலிட்டு எதிரேறச் செய்து புனல் வாதமும் புரிந்து, சமணரை வென்று, சைவ சமயத்தின் பெருமையை நிலை நாட்டினார்.

பக்தி இயக்கச் செயற்பாட்டில் மொழிப் பற்றினைக் பக்தியாளர்கள் சிறந்த உத்தியாகப் பயன்படுத்தினார்கள். எத்தேசத்தாரையும், எச் சமூகத்தாரையும், காலகாலமாக உணர்ச்சி பூர்வமாகத் தொழிற்பட வைக்கின்ற சக்தி மொழிக்குண்டு என்பதையுணர்ந்த பக்தியாளர்கள். இறைவனைத் தமிழ்ப் பக்திப்பாடல்களால் போற்றி வழிப்பட்டனர். குறிப்பாகத் திருஞான சம்மந்தரை எடுத்து நோக்கும்போது, சிவன் மீது ஞானத்தமிழ் பாடியமையால் அவர் தமிழ் விரகர், முத்தமிழ் விரகர், அருந்தமிழாகரர், வண்டமிழ் நாயகர், சந்தத் தமிழ் விரகர் போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார். கடவுளுக்கு உகந்த மொழி வடமொழி என்ற நிலை மாறி இக்காலத்தில் தமிழ்மொழி, தமிழிசை போன்றவை பக்தி இயக்கத்தில் உகந்ததாக்கப்பட்டது. மாணிக்கவாசகர் ஒரு பாடலிற் சிவனை தமிழ் மொழி பேசும் பிரதேசத்திற்குரியவன் என்பதை 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று பாடுகின்றார். அப்பர் சிவனை நோக்கி 'தமிழோடிசைப்பாடல் மறந்தறியேன்' என்றும் 'தமிழின் துறைவாய் நுழைந்தனையோ' என்றும் பாடுவதிலிருந்து அவர்களின் மொழிப்பற்று எமக்கு நன்கு புலப்படுகின்றது.

மொழிப்பற்றோடு பிரதேசப் பற்றையும் பக்தி இயக்கத்தின் செயற்பாட்டில் புகுத்தினார்கள். இறைவன் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள தமிழ் மக்களின் பிரதேசங்களின் இயற்கை வனப்பையும், பொருளியற் சிறப்பையும், மூர்த்தி, தல, தீர்த்த வழிபாட்டு மகிமையையும் பதிகங்கள் வாயிலாக எடுத்துக் காட்டினார்கள். தமிழ் நாட்டின் சோலை, வனம், வயல், மலை, ஆறு, குளம், கடல் யாவும் இறைவனுக்கு உவப்பானவை அவ்விடங்களிலேயே இறைவன் எழுந்தருளித் திருவருள் பாலிக்கின்றான் என்பதை நாயன்மார்கள் பல பதிகங்களில் எடுத்துக் காட்டியுள்ளனர்.

*'சிலமந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறு'*
*'வண்டுவைகுமண மல்கிய சோலை'*
*'சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனோடு பால்'*
*'குரைகட லோத நித்திலங் கொழிக்கும் கோணமாமலை'*
*'கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த'*
*'குருந் தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ்'*

(சம்பந்தர் பதிகங்கள்)

*'வங்கம்மலி கின்ற கடல் மாதோட்ட நன்னகர்'*
*'மாவின்கனி தூங்கும் பொழில்'*
*'மட்டுண்டுவன் வண் டாலும் பொழில்'*

(சுந்தரர் பதிகங்கள்)

இயற்கை வழிபாட்டோடு இயைவுபட்டு வாழ்ந்த மக்கள், இயற்கை வளங்களின் சிறப்பைக் கேட்டுணர்ந்து இப்பாடல்களால் ஈர்க்கப்பட்டனர். இதனால் பிரதேசப்பற்றால் சைவத்தைக் கடைப்பிடித்து சமணத்தை விட்டு ஒதுங்கினர்.

பக்தி இயக்கத்தின் வெற்றிக்கு நாயன்மார்கள் புரிந்த அற்புதங்கள் இன்றியமையாதவொன்றாக விளங்கியது. இவ்வாறான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதங்கள் இறையிருப்பினை நிறுவின. இறை நம்பிக்கைக்கு வலுவூட்டின. மக்களை இலகுவாகக் கவர்ந்து சமணத்தின் பிடியிலிருந்து சைவத்திற்கு மீட்டன. இவ்வாறான யுக்திகள் அற்புதங்கள் மூலம் பக்தி இயக்கத்தினை முன்னெடுக்க வழி கோலியது எனலாம். சம்பந்தர் இறந்த வணிகனை உயிர் பெறச் செய்தார். திருவீழிமிழலையில் பஞ்சத்தினைத் தீர்க்க இறைவனிடம் படிக்காசு பெற்றமை. திருமறைக்காட்டின் திருக்கதவு வேதங்க ளால் பூட்டப்பட்டிருக்க. அதனைத்திறக்க அப்பர் பதிகம் பாட. சம்பந்தர் அடைக்கப் பாடியமை போன்ற அற்புதங்களையும். அப்பர் சுவாமி. சுண்ணாம்பறையில் ஏழு நாட்கள் வசித்தமை. நஞ்சுண்டு உயிர் பிழைத்தமை. கொல்ல ஏவிய யானை கொல்லாமல் அவரை வலம் வந்தமை. கல்லோடு கட்டி கடலிலே போட்ட போது கல் தெப்பமாகி கரை சேர்ந்தமை போன்ற அற்புதங்களும். சுந்தரர் குண்டையூரில் நெல்லுப் பெற்றமை. பன்னீராயிரம் பொன்களை ஆற்றில் இட்டு குளத்தில் எடுத்தமை போன்ற அற்புதங்களும். சமண. பௌத்த சமயங்களில் இருந்த மக்களை சைவசமயத்தில் நிலைநிறுத்திக் கொள்வதற்குப் பெரிதும் பயன்பட்டது எனலாம்.

உலகியலில் கையாளப்படும் குடும்ப உறவு முறைகளையும். அகத்திணை மரபுகளையும் மறுமையுலகில் இறைவனோடு பத்திமை உறவு காட்டி வாழ்ந்து காட்டியமை பக்தி இயக்கச் செயற்பாட்டில் முக்கியமானதொரு விடயமாகும். பக்தியாளரான மாணிக்கவாசகர் 'அம்மை நீ அப்பன் நீ. அன்புடைய மாமனும் மாமியும் நீ' என்று சாதாரண மனித உறவுகளைக் காட்டி மக்கள் மனதைக் கவர்ந்தார். சமணம் இறுக்கமான துறவுக் கொள்கையினாற் குடும்ப வாழ்க்கை. திருமண உறவு. உலகியல் இன்பம் முதலானவற்றைக் கடுமையாக விமர்சித்தும். கண்டித்தும் வந்தது. ஆனால் சைவப்பக்தியாளர்கள் இறைவனைக் குடும்பத் தலைவனாக பெண் சுமந்த பாகனாகப் பாவித்து 'மாதப் பிறைக் கண்ணியானை மலையான் மகளோடும்' என்றும் பாடியும் துதித்தனர். அப்பர் பெருமான் இறைவனை ஆண்டானாகவும். தன்னைத் தொண்டனாகவும் தாசமார்க்கத்தில் நின்று 'நெஞ்சம் உமக்கேயிடமாக வைத்தேன். நினையாதொருபோதும் இருந்தறியேன்' என்று பாடுவதோடு 'சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்' என்றும் 'நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா' என்ற பதிகங்களில் தொண்டனாகத் தன்னைப் பாவித்துப் பக்தி காட்டுகின்றார். இன்னுமோர் பதிகத்தில் தன்னை நாயகியாகவும். இறைவனை நாயகனாகவும் பாவித்து 'தன்னை மறந்தாள். தன்நாமம் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை' என்று பாடுவதிலிருந்து அவரின் பக்தி மேலும் ஓங்கி நிற்கின்றது. இதே போன்ற ஓர் பக்திச் சோடனை ஆண்டாள் பாடிய நாச்சியார் திருமொழியிலும் வருகின்றது 'தொழுதுமுப் போதும் உன் அடி வணங்கித். தூமலர் தூய்த் தொழுது ஏத்துகின்றேன்' என்று பணி செய்து பாடி 'உன்னித்து எழுந்த என் தட முலைகள் மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழ்கிலேன் கண்டாய்' என்று கோவலனிற் பக்தி மோகம் கொண்டு மதுரபாவம் காட்டி நிற்கின்றாள்.

திருக்கோயில் வழிபாடு பக்தி இயக்கச் செயற்பாட்டில் முக்கிய இடத்தினை வகித்தது. திருக்கோயில் வழிபாடு ஒவ்வொரு ஊருக்கும் அவசியமானது என்பதனை 'திருக்கோயிலில்லாவூர் திருவியலூர்' என்று அப்பர் சுவாமி சொல்லியுள்ளார். பக்தியாளர்கள் நூற்றுக்கு மேற்பட்ட திருக்கோயில்களுக்கு பாதயாத்திரை சென்றார்கள். அங்கு எழுந்தருளியுள்ள இறைவன். இறைவி. தீர்த்தம். விருட்சம் முதலியவற்றைப் பதிகங்களில் புகுத்திப் பாடினார்கள். அவற்றோடு தொண்டு. கிரியை. சடங்கு. மந்திரம். குரு. லிங்க. சங்கம வழிபாட்டு முறைகளையும் இணைத்துப் பாடியமையாலும் பக்தி இயக்கம் செழுமை பெற்றது.

முன்னைய சமய நம்பிக்கைகளை இணைத்துப் பதிகம் பாடும் முறையிலும். சமயத்தத்துவ கருத்துக்களைச் சொல்லும் முறையிலும் புதுமைகள் பின்பற்றப்பட்டன. நாயன்மார்களின் பதிகங்கள் தமிழுக்கு இனிமைச் சேர்த்தவை. 'செந்தமிழோர்கள் பரவி ஏத்தும். 'தமிழ்ஞானம் மிகுபந்தன் குன்றாத் தமிழ்'. 'செந்தமிழர் தெய்வமறை நாவர்'. பண்ணிய நூல் தமிழ் மாலை பாடுவித்து'. ''வன்தொண்டன் சொன்ன செஞ்சொல் தமிழ் மாலைகள்' போன்ற பதிகங்கள் சைவத்திற்கும். தமிழிற்கும் புகழ் பூத்தவை. புராண. இதிகாச கதைகளிற் கூறப்படும் சமய நம்பிக்கைக் கருத்துக் களையும் இரத்தினச் சுருக்கமாகக் கையாண்ட விதம் பக்தி இயக்கத்திற்கு மேலும் வலுவூட்டியது. மூவர் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கருள் செய்தார்' 'கோலமால் வரைமத்தென நாட்டிக் கோளரவு சுற்றிக் கடைந்தெழுந்த ஆலம் நஞ்சு கண்டவர் மிக இரிய அமரர்கட்கு அருள் புரிவது கருதி நீலமார்கடல் விடந்தனை உண்டு கண்டத்தே வைத்த பித்தா நீ'. 'பாங்குடைத் தவத்துப் பகீரதற் கருளிப்பட்டார். சடைக்கரந்த நீர்க்கங்கை தாங்குதல் தவிர்த்துத்தராதலத் திழிந்த தத்துவன்'. 'மகரத்தாடு கொடியோன் உடலம் பொடிசெய்து அவனுடைய நிகர் ஒப்பில்லாத் தேவிகள் செய் நீலக் கண்டனார். போன்ற பதிகங்கள் புராணக் கதைகளைப் பக்தியாளர்கள் கையாண்டமைக்குச் சான்றாகும். அதே போல் இராமாயணக் கதையில் வருகின்ற இராவணனின் சைவபக்தியின் சிறப்பு அறுபது தேவாரப் பாடல்களுக்கு மேற்பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. 'பத்திலங்கு வாயாலும் பாடல் கேட்டு பரிந்தவனுக்கு இராவணன் என்றீந்த நாம தத்துவனை'. 'கருவரை போல் அரக்கன் கயிலை மலைக்கீழ்க் கதற ஒரு விரலால் அடர்த்தின் னருள் செய்த உமாபதி' போன்ற பதிகங்கள் அதற்குச் சான்று பகிர்கின்றன. 'பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபத மீந்துகந்தான்' என்ற பதிகத்தின் மூலம் சிவன் அர்ச்சுனருக்கும் பாசுபதாஸ்திரம் கொடுத்த மாகாபாரதக் கதையினைக் கூறியுள்ளார் ஒரு பக்தியாளர். இவ்வாறு தமிழ் மக்களின் வாழ்வியலோடு பண்டு தொட்டு நிலவி வந்த இலக்கியப் பாரம்பரியம் முழுவதையும் அனுசரித்து. அதன் உள்ளூரத்தைப் பேணித் தமது நோக்கத்தை நிறைவேற்றுவதிலே பக்தி இயக்கத்தினர் அதிக ஈடுபாடு காட்டினர் என்பதைப் பக்திப் பாடல்களின் பொருள் மரபினை நுணுகி. ஆராய்வோருக்கு நன்கு புரியும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி இயக்கத்தினர் தமது நெறியினை வெற்றிகரமாக முன்னெடுக்க கலைகலாசார நிகழ்வுகளிலும் அவற்றைப் பேணி இறைவனோடு தொடர்பு படுத்துவதிலும் அதிக ஈடுபாடு காட்டினர். 'நாடகம் சாராமை நன்று' என்று சமணம் போதிக்க, பக்தியாளர்கள் இறைவனை நாட்டிய வேந்தனாக 'குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாய் குமிண்சிரிப்பும் பனித்த சடையும்' எனப் புகழ்ந்து துதித்தனர். நாயன்மார்களின் பக்திப் பாடல்களில் நடனக் கலை வழிபாட்டுக்குரியதாக்கப்பட்டது. அப்பர் பெருமான் 'தலையாரைக் கும்பிட்டு கூத்துமாடி' எனப்பாடுகின்றார். நாட்டார் இசை, நாட்டார் வழக்காறுகள் பக்திப் பாடல்களிலே இடம் பெற்றன. தூது அம்மானை, ஊஞ்சல் முதலான கிராமியக் கலைகள் உயர் சைவப்பாடல்களுள் பிரவேசித்தமையால் மக்களின் மனதைக் கவர்ந்து இழுக்கக் கூடிய விதத்தில் பக்தி இயக்கம் செழுமை பெற்றிருக்கும் என்பதை அறிய முடிகின்றது. இவ்வாறு பொதுமக்களையும், அவர்களது பாரம்பரியக் கலை உணர்வுகளையும் பக்தியாளர்கள் அங்கீகரித்து உயர் இலக்கிய மாக்கினார்கள்.

## பக்தி இயக்கமும் பொதுமக்கட் சார்பும்

பல்லவர் கால பக்தி இயக்கம் பொதுமக்களிடையே பல மாற்றங்களையும், அபிவிருத்திகளையும் ஏற்படுத்தியது. பல்வேறு வழிகளிலே சமண, பௌத்த மதங்களுக்கு எதிராகத் தோன்றிய பக்தி மார்க்கம் பொதுமக்கட் சார்புடையதாயிற்று. நாயன்மார்களும், ஆழ்வார்களும் முன்னின்று மக்களுக்கு நல்ல செல்நெறி காட்டுவதற்காக, இப்பக்தி இயக்கத்தினை மக்களிடையே பரப்பியதன் காரணமாக சைவம், வைணவம் ஆகிய பெரும் சமய நெறிகள் பேரெழுச்சி பெற்றன. பேராறுகளாக ஓடின.

சமண பௌத்தர்களின் அரசியற் செல்வாக்கும், துறவு மார்க்கமும் பக்தியாளர்களை மூர்க்கமாக எதிர்த்து நின்றது. இதை பொதுமக்கள் ஆதரவுபட்ட பக்தி இயக்கத்தினாலேயே தகர்க்க முடிந்தது. இறைவன் மேற் கொண்ட திடமான பக்தி எவ்வித எதிர்ப்புகளையும் முகங் கொள்ள அடியார்களுக்கு உதவியது. சமணத்தின் மீது சார்ந்திருந்த அப்பர் சுவாமி பின்பு 'நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சேம்' என்று குரல் கொடுப்பதற்கு இறை பக்தியும், மக்களாதரவும் அவருக்கு உரம் ஊட்டியது.

பக்தி இயக்கம் மூலம் வெவ்வேறு சமூகப்பிரிவினரும் பக்தி மார்க்கத்தில் இணைந்து செயற்பட்டனர். தில்லை வாழ் அந்தணரும், திருநீலகண்டத்துக் குயவனாரும் ஏவ்வித வேறுபாடுமின்றி இறைவனடியாரானார்கள்.

சமணம் பௌத்தம் போன்ற சமயங்கள் சார்ந்த பள்ளிகள் நிறைந்திருந்த தமிழ் நாட்டிலே சைவ, வைணவ சமயங்கள் சார்ந்த பக்திநெறி தீவிரமடைந்த பயனால் சைவ, வைணவக் கோயில்கள் ஊர்த்தோறும் எழலாயின. நாயன்மார்களும் ஆழ் வார்களும் தலங்கள் தோறும் சென்று பாசுரங்கள் பாடித்தாமுந் தரிசனஞ் செய்து பொதுமக்களையும் இறைபக்திக்கு இட்டுச் சென்றனர். அதனால் பொதுமக்களிடையே கோயில் வழிபாடு செய்யும் வழக்கமும், பக்தியாளர்கள் பாடிய பதிகங்களையும், பாசுரங்களையும் பாடுகின்ற வழக்கமும் ஏற்பட்டது.

பக்தி இயக்கம் சமண பௌத்த மதங்களிலிருந்த நல்ல பண்புகளைத் தன்னுட் கொள்வதற்குத் தவறவில்லை. சமண சமயத்திலே பல காலமிருந்த திருநாவுக்கரசர் அச்சமயத்தின் நல்ல பண்புகளையும், இழித்துரைக்க வேண்டியனவற்றையும் தன் பதிகங்கள் மூலமாகப் புலப்படுத்துகிறார். 'வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்' என்று சமண பௌத்தம் போதித்த வாழ்க்கை நிலையாமையைப் பக்தியடியார்களும் எண்ணிப் பார்த்துள்ளனர். ஆனால் அவர்கள் இறைபக்தி அத்தகைய தன்மை எல்லாவற்றையும மாற்றியமைக்கும் என்றும் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்' என்றும் மக்களுக்கு நம்பிக்கை யூட்டினர். இவ்வாறு பக்தி இயக்கத்தினாலே பரிணமித்த தென்னாட்டுப் பக்தி மார்க்கம் தொடர்ந்து வளர்ச்சியுறுவதாயிற்று.

## பக்தி இயக்கமும் இலக்கியவளர்ச்சியும்

பக்தி இயக்கத்தின் தோற்றத்திற்கு முன்னோடியான இலங்கியங்களைத் தந்தவர் என்ற பெருமைக்குரியவர் காரைக் காலம்மையார் . அவர் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் எனும் பதிகமே தேவார முதலிகளின் திருப்பதிகங்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டியது எனலாம். இவை தவிர திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி போன்றவைகளும் அம்மையார் பாடிய பக்திப் பிரபந்தங்களாக அமைகின்றன. இவைகளின் செல்வாக்கினைப் பிற்காலப் பக்தி இலக்கியங்களின் வளர்ச்சியிலும் காணமுடிகின்றது. அம்மையார் திருவாலங்காட்டுத் திருப்பதிகத்திற் பாடிய முதற் பதிகத்தினையே திருவாலங்காட்டுத் மூத்த திருப்பதிகம் என்றும் குறிப்பிடுவர் இதை அடியொற்றினால் போல் மாணிக்கவாசகரும் கோயிற்பதிகம், கோயில் மூத்த திருப்பதிகம் ஆகியவற்றை பாடியருளினார்.

சைவ சமயம் தொடர்பான இலக்கியங்களுற் பல பல்லவர் காலத்தைச் சேர்ந்தவை. அவை பெரும்பாலும் திருமுறை இலக்கியங்களுள் அடங்கி விடுகின்றன. தேவாரமுதலிகள் பாடிய முதலேழு தேவாரப் பதிகங்களும், மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம், திருக்கோவையார் போன்றவை எட்டாந் திருமுறையாகவும், திருமூலர் பாடிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும், ஐயடிகள் காடவர் கோன் பாடிய ஷேத்திர வெண்பாவும், சேரமான் பெருமாள் பாடிய பொன்வண்ணத் தந்தாதியும், திருவாரூர் மும்மணிக்கோவையும், திருக்கைலாய ஞான உலாவும் பதினொராம் திருமுறையாகவும் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

பக்தி இலக்கியக்காரர்களின் படைப்புக்களிற் காணப் பெறும் இலக்கிய வகைகள் பல வகையானவை. அவற்றைத் தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து, வகை செய்து ஆராய்வது சாலச்சிறந்ததாகும். யாப்பின் அடிப்படையிலே அகவல், இசைப்பா, கலிவெண்பா, குறுந்தொகை, திருத்தாண்டகம், நேரிசை, திருவிருத்தம், திருவெண்பா, விண்ணப்பம், அந்தாதி போன்ற இலக்கிய வடிவங்களும், பொருள் அடிப்படையிலேயே உலா, தூது, தொகை, பல்லாண்டு, பள்ளி யெழுச்சி, புலம்பல், வினாவுரை போன்ற இலக்கிய வடிவங்களும், நாட்டுப்புறச் சாயல் அடிப்படையில் அம்மனை, உந்தி, ஊசல், கோத்தும்பி, சாழல், சுண்ணப்பாட்டு, தெள்ளேணம், தோணோக்கம், பாவைப்பாட்டு, பூவல்லி போன்ற இலக்கியவடிவங்களும், மாலை இலக்கியங்களின் அடிப்படையிலே, அங்கமாலை, ஆனந்தமாலை, இரட்டை மணிமாலை, திருமந்திர மாலை போன்ற இலக்கிய வடிவங்களும், கோவை இலக்கியங்களான மும்மணிக்கோவை, கோவை போன்ற வடிவங்களும், எண் அடிப்படையிலே பத்து, சதகம், தசாங்கம் போன்ற வடிவங்களும் தொகை, வகை செய்யப்பட்டுள்ளது. இவை பல்லவ காலப் பக்தி இயக்கத்திற்கு அணிசேர்க்கும் இலக்கிய வடிவங்கள் எனக் கொள்ளத்தக்கவை.

பொதுவாக பக்தி இலக்கியங்கள் இறைவனைப்பற்றிப் பாடுவனவாகவும், இறையடியார்களைப் பாடுவனவாகவும், அமைந்திருந்ததோடு, ஆலய வழிபாட்டின் பெருமை, சுற்றாடல் நிலைகள், பொதுமக்களின் நிலை எல்லாவற்றுக்கும் மேலாக இறையுணர்வில் மூழ்கிய ஆனந்தக் களிப்பு, அனுபவம், சைவசித்தாந்தம் பேசும், இறை, ஆன்மா, கன்மமறுபிறப்பு, பக்தி, அருள், முக்தி முதலிய கோட்பாடுகளையும் தெளிவாகச் சொல்லியுள்ளன. பக்தியுணர்வுப் பிரவாகத்தின் விளைவாக முகிழ்ந்த பண் கனிந்த பாசுரங்களிலே கூறப்பட்டனவற்றை ஆதரமாகக் கொண்டு சித்தாந்தமும் வகுக்கப்பட்டது. அவையும் பக்தி மார்க்கமாகக் கொண்டு சித்தாந்தமும் வகுக்கப்பட்டது. அவையும் பக்தி மார்க்கத்தின் வளர்ச்சிக் கட்டத்தின் இன்னொரு பகுதியாக அமைந்தது. பக்திப் பாசுரங்கள் சித்தாந்தங்களாகி அவை பின்னைய பக்தி இலக்கியங்களிலும் வளர்ச்சி பெற்றுச் செல்லும் நோக்கினையும் காணமுடிகின்றது. தாயுமானவர், சிவப்பிரகாசர், சேக்கிழார், குமரகுருபரர் போன்ற பக்தியடியவர்களின் பாடல்களில் சித்தாந்தக் கருத்துக்கள் இழையோடியிருப்பதனை மேற்குறிப்பிட்டமைக்குச் சான்றாகக் கொள்ளலாம்.

## பக்தி இயக்கமும் கலைகளின் வளர்ச்சியும்

பல்லவர் காலப் பக்திநெறியின் பண்பாட்டு அம்சங்களை விவரித்துக் காட்டுகின்றவற்றுள் கோயில்களும் கலைகளும் இன்றியமையாதவை. ஆடல் பாடல் கலைஞர்களினதும் உயிர்ப்பு நிலை பல்லவர் காலத்தில் ஏற்பட்டதெனலாம். சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் ஆடல், பாடல் துறைகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தியிருந்தனர். அத்துறைகள் சார்ந்த கலைஞர்களும் சமுதாய நிலைப்பாட்டில் சங்கமுற்றிருந்தனர் ஆனால் புறச்சமயம் அக்கலைகளையும், அக்கலைஞர்களையும் வெறுத்து சமுதாயத்தின் நிலையிலிருந்து ஓரம் கட்டினர். புறச்சமயத்தாரின் செல்வாக்கினால் மங்கிப்போன இக்கலைகள் பல்லவர் காலத்தில் நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற பக்தியாளர்களின் எழுச்சியினால் மீண்டும் சமுதாயத்தில் முக்கிய இடம் பெற்றன. பக்தி இயக்கம் அழுதல், விழுதல், தொழுதல் என்னும் நிலையில் மட்டுமன்றி கோயில்களில் ஆடுதல், பாடுதல், கூடுதல் மூலமாகவும் பக்தி நெறியின் வளர்ச்சிக்கு வித்திட்டது. பக்தி இயக்கம் ஜனரஞ்சகமான கலைகள் மூலமாகவே விருத்தியடைந்தது. இதற்கு மேல்வரும் பாடல் அடிகள் சான்று பகருகின்றது.

*'இசை பாட விம்மி அழுமாறு வல்லார்...'*
*'கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப் பாதத்தைத் தொழ...'*
*'அருமறை ஒலியினை முறைமுகு பாடல் செய் இன்னிசை..'*
*'குறிகலந்த இசை பாடலினால் நசையால்....'*
*'ஏழிசை ஏழ் நரம்பினோசையை...'*

இவ்வாறு பண்ணிசையுடன் பரவி இறைவழிபாடு இடம் பெற்றாலும், கோயில் வழிபாடுகளின் போது பாடல்கள் இசைக்கும் போது பக்தியாளர்கள், உடுக்கை, கத்தரி, குழல், சல்லரி, சிம்பு, தாளம், தக்கை, தண்டு, வீணை, சங்கு, துத்திரி, பறை, பேரி முரசு, மணி, யாழ், முழவு, துந்துபி போன்ற இசைக்கருவிக ளையும் பயன்படுத்தினார்கள் என மேல்வரும் தேவாரப் பதிகங்களின் மூலம் அறியலாம்.

*'உண்டுடுக்கை யின்றியே..'*
*'முழவினோசை முந் நீரயர்..'*
*'மணியொலி சங்கொலி யோடு மற்றை..'*
*'மொந்தை முழாக்குழல் தாளமோர் வீணை...'*
*'கழலினோசை சிலம்பின்......'*
*'தழங்கு மொந்தை தக்கை மிக்க...'*

கோயில்களிலே திருப்பதிகம் பாடப்பட்டமைக்கு தொல்பொருட் சான்றுகளும் உண்டு.

பல்லவர் காலத்தில் இசையுடன், நடனக்கலையும் வளர்ச்சி அடைந்திருந்தது என்பதற்கு இலக்கியங்களும், சாசனங்களும் சான்று பகர்கின்றன. சிவனுடைய ஆடல் வடிவம், கோயில்களில் பல வடிவங்களில் சிற்பங்களாக வடிக்கப்பட்டது. அத்தோடு வழிபாட்டு ஆராதனைகளின் போது கணிகையரின் அபிநயமும் சித்திரிக்கப்பட்டுள்ளது என்பதற்கு மேல் வரும் பதிகங்களின் அடிகள் சான்று பகர்கின்றன.

*'வலம் வந்த மடவார்கள் நடமாட...'*
*'மாதர் சதிபட மாநடனமாட.....'*
*'நாடகமாடி ஆடி மடவார்கள் ஆடும்...'*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'தலையாரைக் கும்பிட்டு கூத்துமாடி.....'*

*'ஆடியாடி அகங்குழைந்திசை பாடி.....'*

சித்தன்ன வாசல் குகையில் காணப்பட்ட ஆடல் பெண்களின் வடிவங்கள், காஞ்சிபுரத்துக் கோயில்களில் காணப்படும், ஊர்த்துவ ஜானு, குஞ்சிதபாத கரணம், லதா விருச்சியம், லாலாடதிலகம் போன்ற சிவனின் ஆடல் வடிவங்களும் நடனக் கலையின் வளர்ச்சிக்கு குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சான்றுகளாகும்.

பல்லவரின் பக்தி இயக்கத்தால் தமிழகத்தில் பெருக்கெடுத்த உன்னதக் கலையாக விளங்கியது சிற்பமாகும். பக்தியாளர்கள் புராண, இதிகாசக் கதைகளை ஆதாரமாகக் கொண்டு சிவனின், திருமாலின் அருளாற்றல்களை, வீரதீரச் செயல்களைப் பக்திப் பாடல்கள் மூலமாக வர்ணித்தார்கள். இக்கதைகளின் செல்வாக்கு மக்களின் மனதிலே பதியத் தொடங்க, பிற்காலத்தில் அதன் வெளிப்பாடு கல்லிலே சிற்பங்களாக மிளிரத் தொடங்கியது. யமசங்காரம், திரிபுரம், எரித்தமை, மன்மதனை எரித்தமை, அர்ச்சனனுக்கு, பகீரதனுக்கு அருள் வழங்கியமை தொடர்பான கதைகள் காலாரி, திரிபுராரி, காமாரி, போன்ற சிற்ப வடிவங்களாகத் திகழ்ந்தன. மாமல்லபுரத்திற் காணப்படும் பாறைச் சிற்பங்கள் புராண இதிகாசக் கதைகளின் பின்னணியில் சமயவரலாற்றை தெளிவுறுத்தும் பாங்கிலே அமையப்பெற்றுள்ளன. (சு.து.)

## பல்லாவரம் குடைவரை

சென்னை திருச்சிராப்பள்ளிப் பெருவழியில், சென்னையிலிருந்து ஏறத்தாழப் பதினைந்து கிலோமீட்டர் தொலைவிலுள்ளது பல்லாவரம். இங்குள்ள மக்களால் பஞ்சபாண்டவர் மலை என்றழைக்கப்படும் ஊருக்குக் கிழக்கிலுள்ள குன்றின் தென்முகத்தில் மகேந்திரர் குடைவரை வெட்டப்பட்டுள்ளது. நிலமட்டத்திலிருந்து ஏறத்தாழ ஐம்பது படிகள் ஏறிச்சென்றால் குடைவரை உள்ள பகுதியை அடையலாம். தற்போது முகமதியர் வழிபாட்டுத் தலமாக முற்றிலும் உருமாறியுள்ள இக்குடைவரையின் முன்னிருந்த பழந் தரையமைப்பு பாறையில் உருவானதாகும். தென்வடலாக 3.96 மீ. அகலமும், கிழக்கு மேற்காக 9.45 மீ நீளமும் கொண்டமைந்த இப்பாறைத்தரையும் இதையடைய வெட்டப்பட்டிருந்த பாறைப் படிக்கட்டுகளும் அவற்றின் பிடிச்சுவரும் கட்டுமானத்தால் மறைக்கப்பட்டுள்ளன.

### முகப்பு

குடைவரையின் முகப்பு நான்கு முழுத்தூண்களாலும் பாறையோடு ஒன்றிணைந்தவாறு வெட்டப்பட்டுள்ள இரண்டு அணைவுத்தூண்களாலும் ஐந்து அங்கணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அரைத்தூண்கள் நான்முகமாக அமைய, முழுத்தூண்கள் சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பிலுள்ளன. முழுத்தூண்களில் நடுவிலுள்ள இரண்டின் கீழ்ச்சதுரங்கள், பக்கங்களிலுள்ள இரண்டின் கீழ்ச் சதுரங்களினும் சற்று உயரமாக உள்ளன. மேற்சதுரங்கள் நான்கு முழுத்தூண்களிலும் ஒரே அளவினவாக உள்ளன.

தூண்களின் மேல் வெட்டப்பட்டுள்ள கனமான போதிகைகளின் தரங்கமற்ற வளைமுகக் கைகள் உத்திரம் தாங்குகின்றன. உத்திரத்தையடுத்துள்ள வாஜனம் கூரையை யொட்டித் தெற்கிலும் வடக்கிலும் கிழக்கு மேற்காக நெடுக ஓடுகிறது. கூரையின் வெளிநீட்டலாக வடிவமைக்கப்பட்டுள்ள பாறையின் முன்பகுதி செம்மைப்படுத்தப்படாத கபோதமாக அமைந்துள்ளது. கபோதத்திற்கு மேலுள்ள பாறைப்பகுதியில் வெட்டப்பட்டுள்ள பதினொரு செவ்வகப்பட்டிகள் நிறைவடையாப் பூமிதேசத்தை நினைவூட்டுகின்றன.

### மண்டபம்

முகப்பையடுத்துள்ள செவ்வக மண்டபம் இரண்டாம் வரிசைத் தூண்களால் முகமண்டபமென்றும் அர்த்தமண்டப மென்றும் இரண்டு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டாம் வரிசைத் தூண்களும் முகப்புத் தூண்களைப் போலவே, நடுவில் நான்முகத் தூண்களும் பாறையையொட்டி இரண்டு அரைத்தூண்களும் பெற்று முகமண்டபத்தரையினும் சற்று உயரமான தரையமைப்பில் நிற்கின்றன. முகப்புத் தூண்களுக்கு நேரான ஒழுங்கில் வெட்டப்பட்டுள்ள இத்தூண் வரிசையிலுள்ள அணைவுத்தூண்களும் பக்க முழுத்தூண் களும் நான்முகமாக அமைய, நடு முழுத்தூண்கள் மட்டும் சதுரம், கட்டு, சதுரமென வடிவமைக்கப்பட்டுள்ளன. முகப்புத்தூண் வரிசைக்கும் இவ்விரண்டாம் தூண்வரிசைக்கும் சில குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. இரண்டாம் வரிசையிலுள்ள அணைவுத்தூண்களின் மீது முகப்பு அரைத்தூண்களின் மீதமர்ந்துள்ள போதிகைகளோ, அவை தாங்கும் கூரையுறுப்புகளான உத்திரம், வாஜனம் ஆகியவையோ இல்லை. இத்தூண்கள் இரண்டும் நேரடியாகக் கூரையைத் தாங்குகின்றன. பக்க முழுத்தூண்களின் போதிகைகள் கிழக்கு மேற்காகக் கைவீசியிருப்பது போலவே, வடக்கிலும் ஒரு கையை நீட்டியுள்ளன. இந்தக் கை, அர்த்தமண்டபத்தின் இரண்டாம் வரிசைத் தூண்பகுதியிலிருந்து அதன் பின்சுவருக்காய் தென்வடலாக வெட்டப்பட்டுள்ள இரண்டு குறுக்கு உத்திரங்களைத் தாங்குமாறு போல அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக்குறுக்கு உத்திரங்களை, அர்த்தமண்டபப் பின்சுவரில், இப்பக்க முழுத்தூண்களுக்கு நேரிருக்குமாறு வெட்டப்பட்டுள்ள இரண்டு அரைத்தூண்களின் தென்முகப் போதிகைக் கைகள் தாங்கியுள்ளன. இவை போன்ற குறுக்கு உத்திர அமைப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறெந்த மகேந்திரக் குடைவரையிலும் இடம்பெறாதமை குறிப்பிடத்தக்கது. இரண்டாம் வரிசையிலுள்ள நடு முழுத்தூண்கள் இரண்டின் மீதுள்ள போதிகைகள் முகப்பு வரிசையிலுள்ளாற் போலவே கிழக்கிலும் மேற்கிலும் கைகளை வீசி மண்டபத்தின் கிழக்கு மேற்காக அமைந்துள்ள முதன்மை உத்திரத்தைத் தாங்குகின்றன.

குறுக்கு உத்திரங்களால் அர்த்தமண்டபக் கூரை மூன்று பிரிவுகளாக்கப்பட்டுள்ளது. இவற்றுள் நடுப்பிரிவு. பின்சுவரில் வெட்டப்பட்டுள்ள ஐந்து கருவறைகளுள் நடுவிலுள்ள மூன்று கருவறைப் பகுதிகளை உள்ளடக்கி அமைய. பக்கப் பிரிவுகள் கிழக்கு. மேற்குக் கருவறைகளை உள்ளடக்கியுள்ளன.

## கருவறைகள்

அர்த்தமண்டபத்தின் பின்சுவரில் வெட்டப்பட்டுள்ள ஐந்து கருவறைகளுள் நடுக்கருவறை மட்டும் மண்டபத்திற்குள் சற்றுப் பிதுக்கமாக இருக்குமாறு வெட்டப்பட்டுள்ளது. அதன் இருபுறத்துமுள்ள பிற நான்கு கருவறைகளும் ஏறத்தாழ ஒரே நேர்க்கோட்டில் இருக்குமாறு அகழப்பட்டுள்ளன. நடுக் கருவறைக்கு மட்டும் தாங்குதளமும், கருவறை வாயிலுக்கு நேராக மூன்று படிகளும் இருந்தன. தற்போது சந்திரக் கல்லாலான கீழ்ப்படி மட்டுமே அர்த்தமண்டபத் தரையில் காணப்படுகிறது. நடுக் கருவறையின் முன்சுவர்கள் தாங்கும் உத்திரம். வாஜனம் ஆகியவையும் அவற்றிற்கு மேல் நன்கு முன்னிழுக்கப்பட்டுள்ள வளைமுகக் கபோதமும் பழைய கட்டமைப்பில் இருப்பது குறிப்பிடத்தக்கது. கபோதத்தில் கூடுவளைவுகளோ, கொடிக்கருக்குகளோ இல்லை. கபோதம் உட்பட இக்கூரையுறுப்புகள் எவையும் பக்கக் கருவறைகள் எவற்றிற்கும் காட்டப்படாமை. நடுக் கருவறையின் முக்கியத்துவத்தை அழுத்திச் சுட்டுமாறு உள்ளது. கருவறைகளின் பின்சுவரையொட்டி. அவற்றின் கீழ்ப்புறத்தே செவ்வக மேடைகள் வெட்டப்பட்டுள்ளன. இம்மேடைகளின் நடுவில் சதுரக்குழிகள் உள்ளன. இக்குழிகள் இக்கருவறைகளில் வைக்கப்பட்டிருந்த இறைத்திருமேனிகளுக்கான பிடிமானங்கள் ஆகலாம்.

## கல்வெட்டு

குடைவரையின் இருவரிசைத் தூண்களின் மீதுள்ள உத்திரங்களும் முதலாம் மகேந்திரவர்மரின் விருதுப்பெயர்களைக் கல்வெட்டுப் பொறிப்புகளாய்ப் பெற்றுள்ளன. பல்லவ கிரந்தத்தில் வெட்டப்பட்டுள்ள இப்பெயர்கள் வடமொழி. தமிழ். தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (சு. இரா.)

# பலராமர்

மகாவிஷ்ணுவின் அவதாரங்களுள் எட்டாவது அவதாரமாகப் பலராம அவதாரம் கருதப்படுகிறது. வாசுதேவருக்கும் அவரது முதல் மனைவி ரோகிணிக்கும் புதல்வராகத் தோன்றியவர் பலராமர். இவரை ஆதிசேடனின் அம்சம் எனவும் விஷ்ணுவின் வெண்ணிற அம்சம் எனவும் கூறுவர். பராக்கிரமம் மிக்க இவர் பலபத்திரர் எனவும் அழைக்கப்பட்டார்.

பலராமர் கிருஷ்ணனின் தமையனார் ஆயினும் வளர்ந்த நிலையில் இருவரும் வெவ்வேறு குணங்கள் வாய்ந்தவர்களாக விளங்கினர். கிருஷ்ணன் மாயா லீலா விநோதங்களில் தேர்ந்தவனாகத் திகழ்ந்தார். பலராமர் எதையும் நம்பிவிடக் கூடிய இயல்பினராக இருந்தார். இவர் காதில் ஒரு குண்டலத்தை மட்டும் கொண்டவர். இவருடைய ஆயுதம் கலப்பை. கொடி பனை மரம். இவர் அரச குமாரியை மணம் புரிந்தார். இவரது மற்றொரு மனைவி மேற்குத் திக்குதேவி. வாருணி.

பலராமருக்குத் துரியோதனனிடம் பற்று இருந்தது. தம் தங்கை சுபத்திரையை அவனுக்கு மணம் முடிக்க எண்ணி இருந்தார். ஆனால் கிருஷ்ணர் பாண்டவரில் ஒருவரான அர்ச்சுனனுக்கு அவளை இரகசியமாய் மணம் முடித்து வைத்து விட்டார்.

பாரதப் போரிலும் பலராமர் துரியோதனன் பக்கம் சார்ந்து அவனுக்கு உதவி செய்வதாக முடிவெடுத்திருந்தார். கிருஷ்ணனோ பாண்டவர்களிடம் அன்பு கொண்டவர். எனவே பாண்டவர் பக்கம் சார்ந்து அவர்களுக்குத் துணையாக இருந்து வெற்றி தேடித் தர விழைந்தார். அதனால் பலராமரைத் தீர்த்த யாத்திரை அனுப்பி வைத்தார். பலராமர் யாத்திரை முடிந்து திரும்பி வந்தபோது பாரதப் போர் முடியும் தறுவாயில் இருந்தது.

பதினெட்டாம் நாள் போரில் பீமன் போர்முறைக்குப் புறம்பாகச் சென்று தன் கதாயுதத்தால் துரியோதனன் தொடையில் அடித்து அவனை வீழ்த்தினான். இடுப்புக்கு கீழே அடிக்கக் கூடாது என்ற யுத்த தர்மத்தை மீறிவிட்டான் பீமன்.

அதனைக் கண்ட பலராமர் பீமன் மீது வெகுண்டெழுந்தார். அந்நேரத்தில் அவரை அமைதியடையச் செய்தார். கிருஷ்ணர். துரியோதனன் எத்தனையோ அதர்ம வழிகளில் பாண்டவர்களுக்குத் தொல்லை கொடுத்தான். அதர்மத்தை அதர்மத்தால் அழிப்பது பாவமில்லை. அதனால் ஆத்திரப்பட வேண்டாம். எப்படியாயினும் தர்மம் வெல்ல வேண்டும் என பலராமனைச் சமாதானப்படுத்தினார் கிருஷ்ணர்.

கிருஷ்ணனுக்கும் ருக்மினிக்கும் நடைபெற்ற திருமணவிழாவில் ருக்மினியின் சகோதரன் ருக்மியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொக்கட்டான் விளையாடி வெற்றி பெற்றார். ஆயின் அதனை ஏற்றுக் கொள்ளாத ருக்மி தானே வெற்றி பெற்றேன் எனத் தன்னை உயர்வாகவும் பலராமரைத் தாழ்வாகவும் பேசிப் பரிகசித்தான். அதற்காகக் கலப்பையால் அவனைக் கொன்றார்.

நைமிசாரண்யத்தில் முனிவர்கள் யாகம் செய்து கொண்டிருந்தார்கள். அங்கே சூதக முனிவரும் இருந்தார். பலராமர் அங்கு சென்றார். முனிவர்கள் யாவரும் எழுந்து நின்று அவரை வரவேற்றார்கள். சூதக முனிவர் மட்டும் அமர்ந்த நிலையில் அலட்சியமாக இருந்தார். ஆணவத்தோடு அமர்ந்திருந்த முனிவரைக் கண்ட பலராமர் கோபம் கொண்டு தன் கையில் வைத்திருந்த தர்ப்பைப் புல்லை மந்திரித்து அம்முனிவர் மீது அஸ்திரமாக விடுத்தார். அது அவரது தலையைத் துண்டித்து விட்டது. பதைத்துப் போன முனிவர்கள் அவரை மன்னித்தருளும்படி வேண்டினர். பலராமர் அவரது பிழையைப் பொறுத்தருளிப் புத்துயிர் அளித்தார்.

ஒருசமயம் பலராமர் பிருந்தாவனத்தில் இருந்த போது நீரில் விளையாடுவதற்காக ஜமுனா நதியைத் தான் இருக்கும் இடத்திற்கு அழைத்தார். அது வராததால் கோபமுற்றுத் தமது கலப்பையால் அதை இழுத்துத் தன் அருகாலே பாயும்படி செய்தார்.

பிருந்தாவனத்தில் இருந்த மக்களைத் தேனுகாசுரன் என்னும் அசுரன் கழுதை உருவில் இருந்து கொண்டு கொன்று குவித்து வந்தான். அவனையும் பிரலம்பாசுரன் என்பானையும் பலராமர் கொன்றார். மகத நாட்டு மன்னனைக் கலப்பையால் அடித்து அவன் கர்வத்தை அடக்கினார்.

கம்சனால் மல்யுத்தத்திற்காக ஏவப்பட்ட முதிடிகன் என்பவனையும் அவனுடைய துணைவன் கூடன் என்பனையும் கொன்றார் பலராமர்.

கம்சனின் தம்பியர் எட்டுப்பேர் கண்ணபிரானிடம் போருக்கு வந்தனர். அவர்கள் அனைவரையும் கொன்றார். வாசுதேவரின் (பலராமன். கிருஷ்ணன் ஆகியோரின் தந்தை) வேண்டு கோட்படி யாதவத் தலைவன் நந்தகோபன் இருவரையும் ஒன்றாகவே வளர்த்தார். அதனால் கிருஷ்ண அவதார நிகழ்ச்சிகளின் பெரும்பான்மை அவரையும் சார்ந்ததாகவே இருக்கின்றது. (நிதி.)

## பவானி

கொங்கு நாட்டின் பாடல் பெற்ற தலங்கள் ஏழு உள்ளன. அவற்றிலே திருநணா எனச் சம்மந்தப் பெருமானாற் பாடப்பட்ட திருத்தலமே பவானி சங்கமேச்சரர் ஆலயமாகும். அருணகிரிநாதரும் தனது திருப்புகழிற் பவானி எனச் சிறப்பித்துப் பாடியுள்ளார். தரிசித்தோர்க்கு தீமை நண்ணா ஊர் என்பதால் அது திருநண்ணாவூர் என அழைக்கப்படுகின்றது. காலப்போக்கில் திருநணா என மருவி விட்டது. ஆதி காலத்தில் இலந்தைக் காடாக இருந்ததால் பதிரிகாவனம் என அழைக்கப்பட்டது. பவானி ஆறும், காவிரி ஆறும் நிலத்தினடியால் செல்லும் அமுதா நதியும் கூடுவதால் இத்தலம் முக்கூடல் கூடுதுறை, தட்சிணப் பிரயாகை எனவும் சிறப்பிக்கப்படுகிறது.

இயற்கை அழகுகளின் நடுவே பவானி சங்கமேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. வடக்கே ராஜகோபுரத்துடன் கிழக்கு நோக்கிய சந்நிதி அமைந்துள்ளது. கோயிலின் வாசலில் கோட்டைப் பிள்ளையார் சந்நிதி உள்ளது. சங்கமேசுவரர் லிங்கத் திருமேனியுடன் மூலஸ்தானத்தில் வீற்றிருக்கின்றார். அம்பாள் வேதநாயகிக்குத் தனியான கோயில் உளது. இவற்றை விட திருச்சுற்று முழுவதும் தட்சிணாமூர்த்தி, நால்வர், அறுபத்துமூவர், பஞ்சபூத லிங்கங்கள், காசி விசுவநாதர் சமேத விசாலாட்சி, ஆறுமுகன், கணபதி, வைரவர், நவக்கிரகங்கள் ஆகியோரது சந்நிதிகளைக் காணலாம்.

இவ் ஆலயத்தின் முன் மண்டபதூண்களில் எழில்மிகு சிற்பங்கள் காணப்படுகின்றன. இராமாயணக் காட்சிகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இங்கு தல விருட்சமாக இலந்தை மரமும், தீர்த்தமாக காவிரி, பவானி முக்கடல் தீர்த்தமாகவும் விளங்குகின்றது. நாள் தோறும் காலை, மாலை வழிபாட்டுடன் சித்திரா பௌர்ணமியை ஒட்டிப் பெருவிழாவும், ஆடித்திரு விழாவும் நடைபெறுகிறது. இங்கு தீர்த்தத்தில் நீராட வசதியாக சங்கமத்துறையில் படிக்கட்டுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. பிதிர் கடன் முதலியனவும் இங்கு நடைப்பெறுகின்றது. ஆற்றங்கரை அரசமரத்தடியிற் பிள்ளையார் சன்னிதி ஒன்றுள்ளது. இங்கு வரும் புதுமைத்தம்பதிகள் தமது இல்லறம் நல்லறமாக அமைய வேண்டும். என அரச மரக்கிளையில் வெண்ணிற மணிகளைக் கட்டித் தொங்க விடுவது வழமை.

இக்கோயில் புதுமைகள் நிறைந்தது. இப்பகுதியில் வில்லியம் கார்ரோ என்ற ஆங்கிலேயர் கலெக்டராக ஆட்சி புரிந்தார். அன்று பெரு மழை, வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. படுக்கை யறையில் படுத்திருந்த கலெக்டருக்கு ஒரு கனவு. தனது பங்களா வாசலில் நின்று சிறுமி ஒருத்தி தன்னை அழைப்பது போன்று உடனே எழுந்து பார்த்த போது உண்மையாகவே சிறுமி நிற்க சிறுமியை நோக்கி வெளியே சென்றார். அக்கணம் அவரின் படுக்கை அறையுள் மேற்கூரை இடிந்து விழுந்தது. சிறுமியும் நடந்தப்படி ஆலயத்தினுள் சென்று மறைந்தாள். வேதநாயகியே இவ்வாறு வந்தாள் என உணர்ந்த ஆங்கிலேயர் அம்மனை நாளும் வழிபட, கருவறைச் சுவரிற் பலகணி ஒன்றை அமைத்து வழிபட்டதுடன் ஒரு தங்கத் தொட்டிலையும் காணிக்கையாக வழங்கினார். இது போன்ற பல நிகழ்ச்சிகள் இங்கு நடைப் பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை அழகிலே தன்னை மறந்து பாடும் திருஞானசம்பந்தர் பவானியாள் அழகிலே தன்னை மறந்து இயற்கை எழில் சொட்டப் பாடியுள்ளார்.

*"நாட்டம் பொலிந்திலங்கு நெற்றியினான்*
*மற்றொருகை வீணை ஏந்தி*
*ஈட்டும் துயர் அறுக்கும் எம்மான்*
*இடம் போலும் இயை சூழ் கரவினில்*
*ஓட்டம் தரும் அருவி வீழும் விசை காட்ட*
*முந்தூழ் ஓசைக்*
*சேட்டார் மணிகள் அணியும் திரை*
*சேர்க்கும் திருநணாவே"*

எனவும்

*....... அந்தண் சாரல் வந்தார் மடமந்தி*
*கூத்தாட, வளர்பொழியில் வண்டு பாடச்*
*செந்தேன் தெளியொளிரத் தேமாய*
*கனியுதிர்க்கும் திருநணாவே*

எனவும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

(ஹே. கு.)

# பவித்திரம்

பவித்திரம் எனப்படுவது தர்ப்பைப் புல்லினால் மோதிரம் போல் செய்யப்பட்டு அணி விரலில் அணியப்படுவது. இதன் நோக்கம் கிரியை செய்யப்படும் போது மனம், வாக்கு, காயங்களால் வரத்தக்க பாவங்களினின்று காத்தலாகும் என காமிகாகமம் கூறுகிறது.

நுனியுள்ள நீளமான தர்ப்பைகளை வலமாக முறுக்கி மத்தியில் மடித்து அடி நுனிகளை ஒன்றாகச் சேர்த்துப் பிரணவ மந்திரத்தை உச்சரித்து முடிய வேண்டும்.

| | | |
|---|---|---|
| பவித்திரத்தின் நுனி | - | 4 அங்குலம் |
| முடிச்சு | - | 1 அங்குலம் |
| வளையம் | - | 2 அங்குலம் |

இருக்க என்றவாறு வேண்டும். பவித்திரம் வலது கை மோதிர விரலில் அணிய வேண்டும். பவித்திரத்தை அணிந்து பின் அதனைக் கையில் இருந்து கழற்றினால் வலது காதில் தரித்துக் கொள்ள வேண்டும். வேறு எந்த இடத்திலும் வைக்கக் கூடாது.

தேவ காரியங்களுக்கு -2 தர்ப்பையாலான பவித்திரம்
பிதிர் காரியத்திற்கு -3 தர்ப்பையாலான பவித்திரம்
தகனம் முதல் 15
மாசிகம் வரை -1 தர்ப்பையாலான பவித்திரம் தரிக்க வேண்டும்.

(நி. நி.)

# பழநி

முருகனுக்குரிய ஆறு ஆற்றுப்படை வீடுகளில் மூன்றாவதாகக் குறிக்கப்படும் தலம் பழநி. பழநி மலையையும், மலையடிவாரத்தில் உள்ள திருவாவினன்குடி தலத்தையும் உள்ளிட்ட நகரமே இன்று பழநி என்று அழைக்கப்படுகின்றது. இத் திருத்தலம் திண்டுக்கல்லில் இருந்து சுமார் 60 கி. மீ. தூரத்தில் கோவை செல்லும் பாதையில் அமைந்துள்ளது. பண்டைய தமிழ் இலக்கியங்களில் இத்தலம் ஆவினன்குடி என்றும் பொதினி என்றும் கூறப்படுகின்றது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் வராக மலைக்கும், கொடைக்கானல் மலைக்கும் இடையே உள்ள பள்ளத் தாக்கில் பழநி மலையும், இடும்பன் மலையும் அடுத்து அடுத்து அமைந்துள்ளன.

அகத்தியர் ஆணைப்படி கயிலை சென்ற இடும்பன் அங்கு முருகனுக்குரிய கந்தமலையில் காணப்படும் சிவசக்தி சொரூபமான சிவகிரி, சக்திகிரி எனப்படும் இரு சிகரங்களையும் பிரமதண்டத்தின் இரு புறங்களிலும் காவடியாகக் கட்டித் தோள்மீது சுமந்து கொண்டு திரும்பலானான். அவ்வேளையில் இடும்பன் வழி தெரியாமல் தடுமாற முருகப் பெருமான் குதிரை மேல் செல்லும் அரசனாக உருவெடுத்து இடும்பனைத் திருவாவினன் குடிக்கு அழைத்து வந்து சிரமபரிகாரம் செய்து விட்டுப் போகும்படி கூறுகிறார். இடும்பனும் அவ்வாறே செய்கின்றான். பின் மீண்டும் இரு மலை களையும் இடும்பன் தூக்க முயன்றபோது அது முடியாமல் போய்விட்டது. சிவகிரி மலையில் உள்ள மரம் ஒன்றில் பாலகுமரன் நின்று கொண்டிருந்தான். சினம் கொண்ட இடும்பன் முருகனுடன் போரிட்டான். போரில் இடும்பன் இறந்தான். பின் இடும்பனின் மனைவியின் வேண்டுகோளுக்கிணங்கி, அவனை மீண்டும் உயிர்பிழைக்கச் செய்தான். முருகன் இடும்பன் விரும்பியபடி அவனை வாயில் காப்போனாக தன்னிடம் அமர்த்திக் கொண்டான். அந்த இரு மலைகளே இப்போ இடும்பன் மலையாகவும், பழனி மலையாகவும் கருதப்படுகின்றது. முருகன் ஆலயங்களில் காவடி செலுத்தும் வழக்கம் இதனை ஒட்டியே ஏற்பட்டதாகக் கருத இடமுண்டு.

அகத்திய முனிவர் இங்குதான் முருகப்பெருமானிடம் தமிழ் மொழியைக் கற்று இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் சூத்திர வடிவில், 'அகத்தியம்' என்ற நூலாக இயற்றியதாகவும் சொல்லப்படுகின்றது. அகத்தியமே தமிழுக்கு முதன் நூலாக அமைந்து, தலைச்சங்கப் புலவர்களுக்கும், இடைச் சங்கப் புலவர் களுக்கும் பயன்பட்டுக் காலகதியில் அழிந்துவிட்டதென்பர். இச் செய்தி அருணகிரிநாதரின் சேவல் விருத்தத்தில் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழநி மலைப் பாறை மீது அமைக்கப்பட்ட காவடி தூக்கிவரும் இடும்பன், அகஸ்தியர், அவர் வழிபட்ட சிவலிங்கம், முருகன் ஆகியவர்களின் திருவுருவங்கள் இவ்வரலாற்றை விளக்குகின்றன. மலைமீதுள்ள முருகனை வழிபடச் செல்பவர்கள் முதலில் மலைப்பாறையிலுள்ள இடும்பன் சந்நிதியில் வணங்கிச் செல்ல வேண்டும் என்ற ஐதீகமும், இடும்பன் சிறந்த வரப்பிரசா தியாய் விளங்கி அருள் புரிகிறான் என்ற நம்பிக்கையும் நிலவி வருகிறது. இச் சிவகிரியின் உச்சிமீதே ஞானதண்டாயுத பாணி கோயில் அமைக்கப்பட்டுள்ளது.

பழநி மலை அடிவாரத்தில் வையாபுரி ஏரிக் கரையில் திருவாவினன் குடி ஆலயம் அமைந்துள்ளது. இங்கு முருகப் பெருமான் மயில் மீதமர்ந்து குழந்தை வேலாயுத சுவாமி என்னும் நாமத்துடன் விளங்குகின்றார். இவ்வாலயத்தை நக்கீரர் திருமுரு காற்றுப்படையில் மூன்றாவது படை வீடாகக் குறித்திருப்பதுடன் இங்குள்ள முருகனைத் தரிசிக்கும் பொருட்டு முனிவர்கள், மகாவிஷ்ணு, சிவபெருமான், இந்திரன் முதலியவர்களெல்லாம் வந்து கூடியதாக அறிவிக்கின்றார். இவ்வாலயத்தின் வடகிழக்கில் சிறிது தூரத்தில் சரவணப் பொய்கை காணப்படுகிறது. முருகனைத் தரிசனம் செய்ய வருபவர்கள் இப் பொய்கையில் நீராடிச் செல்வது வழக்கம். இப் பொய்கையின் அருகிலிருந்து தான் காவடி எடுப்போரும் தமது பிரார்த்தனைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பது ஐதீகம். இத்தலம் முன்பு நெல்லிவனமாக இருந்தது என்பதற்கு ஆதாரமாக திருவாவினன் குடித் தலவிருட்சமாக நெல்லியே விளங்குகிறது. அருணகிரிநாதர் இங்கு வந்து முருகப் பெருமானைத் தரிசித்து ஜபமாலை பெற்றதாக திருப்புகழில் பாடியுள்ளார்.

*"ஜபமாலை தந்தசற் குருநாதா*

*திருவாவினன் குடிப் பெருமானே"*

என்ற திருப்புகழ் அடிகள் மூலம் இச் செய்தியை அறியக் கூடியதாகவுள்ளது.

பழனிக் குன்றைச் சூழ்ந்திருக்கும் வீதியைக் '*கிரிவீதி*' என்றும் '*மலை வீதி*' என்றும் அழைப்பர். இவ்வீதியின் நாலு பக்கங்களிலும் நாலு மயில் மண்டபங்கள் இருக்கின்றன. இங்கு மயிலின் பெரிய கல்லுருவங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. இம் மண்டபங்கள் தவிர விநாயகக் கடவுளுக்கும், பிற தெய்வங்களுக்கும் உரிய சிறு கோயில்களும் இருக்கின்றன. மேலும் பல நந்தவனங்களும் சமாதிகளும் காணப்படுகின்றன. கிரிப் பிரதட்சிணம் பக்தர்களால் ஒரு புனிதச் செயலாக மதிக்கப்படு கிறது.

பழனி மலைமீது தண்டாயுத பாணியின் கோயில் இரண்டு பெரிய பிராகாரங்களுடன் அமைந்துள்ளது. பழனி மலைக்குச் செல்ல படிக்கட்டுப் பாதை, யானையடிப்பாதை, இழுவை ரயில் பாதை என்று மூன்று வழிகள் உள்ளன. படிக்கட்டுகள் வழிச் சென்றால் வழியில் நிறைய மண்டபங்கள் உள்ளன. பாத விநாயகர் சந்நிதி, மீனாட்சி சுந்தரேசர் சந்நிதி, தெய்வானை திருமணச் சிற்பக்காட்சி, சுப்பிரமணியர், வீரவாகு ஆகியோரின் சிற்பங்களைக் காணலாம். சூரியன், பூமாதேவி, மகாலட்சுமி, அக்கினி, இடும்பன், காமதேனு ஆகியோர்களின் சந்நிதிகளும் உள்ளன. இப் பாதையில் மொத்தம் 697 படிகள் உள்ளன.

யானையடிப் பாதையால் சென்றால் வள்ளியம்மனின் கனை, வேலனாக உள்ள முருகன் சிற்பம், மேலும் ஞானப் பழம் பெற்ற இம் மலையின் வரலாற்றைக் கூறும் சிற்பங்களையும் காணலாம்.

நாரதர் கொடுத்த மாங்கனிக்காக முருகனும், விநாயகரும் போட்டியிட்டனர். அவ்வேளையில் சிவபெருமான் இந்த உலகை யார் வலம் வந்து வெற்றி பெறுகிறார்களோ அவர்களுக்கே மாங்கனி என்று கூற, முருகன் வாயு வேகத்தில் உலகை வலம் வந்து கைலை மலையை அடைந்தார். விநாயகரோ தனது தாய், தந்தையை வலம் வந்து உங்களை வலம் வந்தால் இந்த உலகை வலம் வந்ததிற்குச் சமன் என்று கூறி மாதுளங்கனியை வேண்டினார். சிவபெருமானும் கனியை விநாயகரிடம் கொடுத்து விட்டார். இதனால் சினங் கொண்ட முருகன் ஆடை ஆபரண ங்களைக் களைந்து கோவணாண்டியாக பழநித் தலத்தில் நெல்லிவனமாக இருந்த பகுதியில் தங்கினார். இவ்வரலாற்றை அருணகிரிநாதரும் பாடுகிறார். பழநி மலை மீதுள்ள தண்டாயுதபாணியின் கோல் இரண்டு பெரிய பிரகாரங்களுடன் காணப்படுகின்றது.

இரண்டாம் பிராகாரத்தில் அழகிய சிற்ப வேலைப்பாடு களுடன் மணிக்கட்டு மண்டபம், நாயக்கர் மண்டபம், இரண்டும் உள்ளன. நாயக்கர் மண்டபத்தில் சுப்பிரமணியர், விநாயகர், நக்கீரர், அருணகிரிநாதர் ஆகியோரின் சந்நிதிகள் உள்ளன. இரண்டு மண்டபங்களுக்குமிடையில் வல்லபவிநாயகர் சந்நிதி, கொடிமரம், அக்கினிகுண்டம், தங்கரதண்டம் ஆகியன அமைந்து உள்ளன.

இராச கோபுர வாயிலின் வழியாக முதற் பிராகாரத்திற்குச் செல்லலாம். இராசகோபுரம் அழகிய சிற்பங்களுடைய ஐந்து நிலைக் கோபுரம். முதற் பிராகாரத்தில் பாரவேல் மண்டபம், நவரங்க மண்டபம் என்னும் இரு மண்டபங்கள் அழகிய சிற்ப வேலைப் பாடுகளுடன் அமைந்துள்ளது. முதற் பிராகாரத்தின் வடக்குப் பக்கத்தில் மலைக்கொழுந்தீஸ்வரர், அம்பிகை நவவீரர் ஆகியோரின் சந்நிதிகள் உள்ளன. தெற்குப் பக்கத்தில் சப்த கன்னியர், கைலாச நாதர், சண்டிகேஸ்வரர் ஆகியோரின் சந்நிதிகள் உள்ளன. இப்பிராகாரத்தின் இன்னொரு பகுதியில் சித்தன் வாழ்வு என்று சொல்லப்படும் போகரின் சன்னிதியும் உள்ளது. போக முனிவரின் சந்நிதியில் அவர் வணங்கிய புவனேஸ்வர், மரகதலிங்கம் ஆகிய விக்கிரகங்களும் உள்ளன. இச்சந்நிதியில் உள்ள சுரங்கப் பாதை வழியாகச் சென்று போக முனிவர் பழநி ஆண்டவர் சந்நிதியை அடைந்தார் என்று கூறப்படுகிறது.

நவரங்க மண்டபம் தொடங்கும் இடத்தில் சேவற் கொடி ஒன்று உலோகத்தால் செய்து வைக்கப்பட்டுள்ளது. இச் சேவற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடி மீது அடிக்கடி உயிருள்ள சேவல் ஒன்று வந்தமர்ந்து கூவுகிறது என்று பேசப்படுகிறது. இம் மண்டபத்தினுள் சண்முகன், பாலகுமரன், தட்சிணாமூர்த்தி ஆகியோரின் சந்நிதிகள் இடம் பெற்றுள்ளது.

நவரங்க மண்டபத்தை அடுத்து அர்த்த மண்டபமும், கர்ப்பக்கிருகமும் உள்ளன. கர்ப்பக்கிருகத்தின் மேலே உள்ள விமானம் தங்கத்தால் வேயப்பட்டுள்ளது. கர்ப்பக்கிருகத்தில் தண்டாயுதபாணி கோவணம் மட்டும் தரித்து ஒரு கையை இடுப்பில் ஊன்றி, இன்னொரு கையில் திருத் தண்டைத் தாங்கி மேற்கு நோக்கிய வண்ணம் உள்ளார். மூலவரான தண்டாயுதபாணி சிலை வடிவில் ஏனைய திருக்கோயில் முருகனைப் போல் அமைந்தவர் அல்லர். இவரது உருவம் ஒன்பது வகையான மூலிகைகளினால் (நவபாஷாணம்) உருவாக்கப்பட்டது. இது போகர் என்னும் சித்தரால் என்று அழியாத ஒன்பது பாஷாணங்களை உருக்கி ஒன்று சேர்த்து உருவாக்கப்பட்டது. எப்போதும் அபிஷேகம் நடந்து கொண்டே இருக்கும். முருகப் பெருமானின் திருமேனியில் தோய்ந்த அபிஷேகப் பொருட்கள் தீராத நோய்களைத் தீர்க்கும் மருத்துவக் குணமுடையது என்று கருதப்படுகிறது. அர்த்த சாமத்தில் தண்டாயுத சுவாமியில் சாத்தப்படும் சந்தனமும், கௌபீன தீர்த்தமும் அடுத்த நாள் அதிகாலையில் நிகழும் விசுவரூப பூசைக்குப் பின் பிரசாதமாக வழங்கப்படுகின்றது. தற்போது இவ்வுருவம் சற்றுச் சிதைந்துள்ளதால் அபிஷேகங்கள் உற்சவமூர்த்திக்கு மட்டுமே நடைபெறுகின்றன.

கர்ப்பக்கிருகத்தின் சுவர்களில் உள்ள கல்வெட்டுகள் 13 ஆம் நூற்றாண்டில் ஆட்சிசெய்த வீரபாண்டிய தேவனும், 15 ஆம் நூற்றாண்டில் மைசூர் மகாராஜாவும், விஜயநகர அரசர்களும் இத்திருக்கோயிலுக்குச் செய்த திருப்பணிகளைக் கூறுகின்றன. இக் கோயிலை முதன் முதலில் கட்டியவர் சேரமன்னர்தான் என்று பழநித் தலபுராணமும், கல்வெட்டுகளும் கூறுகின்றன. அதன் காரணமாகவே இங்கு கேரள மக்கள் பெருமளவில் வழிபட வருவதாகவும் கூறப்படுகிறது. மேலும் சபரிமலை ஐயப்ப சுவாமியைத் தரிசிக்க விரதமிருந்து சென்று வருபவர்களும் கடைசியாக பழநி மலைக்கு வந்து பழநி ஆண்டவரைத் தரிசித்து விரதத்தை பூரணமாக்கிக் கொள்வதை மரபாக்கிக் கொண்டுள்ளனர். கர்பக்கிருகத்தின் பின்னே முஸ்லீம்களும் வந்து வணங்குகிறார்கள்.

பங்குனித் திருவிழா இங்கு சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது. பங்குனி உத்தரத்தன்று மலை அடிவாரத்தில் உள்ள மூலவரையும், மலைமீதுள்ள மூலவரையும் தரிசிப்பது மிகவும் சிறப்பானது. இங்கு அலகு குத்தி வருதல், காவடி, முடிப் பிரார்த்தனை, பால்குடம் எடுத்தல் போன்றவை சிறப்பாகும்.

(நி. நி.)

# பள்ளிகொண்டா

## உத்தர ரங்கநாதப் பெருமாள் திருக்கோயில்

*"உடுத்துக் களைத்த பீதக ஆடை உடுத்து கலந்தது உண்டு*
*தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்த சூடும் இத்தொண்டர்களோம்*
*விடுத்த திசைக் கருமம் திருத்தித் திருவோணத் திருவிழாவில்*
*படுத்த பைந்நாகனைப் பள்ளிக் கொண்டானுக்கே பல்லாண்டு*
*கூறுதுமே"*

(பெரியாழ்வார்)

ஆழ்வார்களின் அமுதகானத்தில் பள்ளி கொண்ட பெருமாளைப் போற்றும் பாடல்கள் பல உள்ளபோதிலும், பள்ளி கொண்டானுக்குப் பல்லாண்டு கூறும் பாடல் இது ஒன்றே உள்ளது.

உயிருள்ள ஜீவன்கள் அனைத்தும், குறிப்பாக மனிதர்கள் நின்ற, இருந்த (அமர்ந்த) அல்லது படுத்த, நிலைகளுள் ஏதாவது ஒரு நிலையில் இருந்தாக வேண்டும் எந்த நிலையில் இருந்தாலும் பரந்தாமனின் நினைவு என்றும் நிலைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அப்பரம்பொருளை இந்த மூன்று நிலைகளில் நிறுத்தியே நமது ஆன்றோர்கள் வழிபட்டுள்ளனர். இறைவன் தனது பேரருளால் விக்கிரகத்தில் அவதரித்து நிற்கும் நிலையையே அர்ச்சாவதாரம் என்று கருதுவர். திவ்விய தேசங்களில் அர்ச்சாவதார ரூபத்தில் இம்மூன்று நிலைகளிலுமே திருமால் காட்சியளிக்கிறார். இவற்றுள் சுமார் எழுபது தலங்களில் நின்ற கோலத்திலும், முப்பது தலங்களில் கிடந்த கோலத்திலும் அருள்புரிகிறார். திவ்விய தேசங்கள் தவிர வேறு முப்பதுக்கும் மேற்பட்ட திருத்தலங்களிலும் பள்ளி கொண்ட பெருமாளைக் காணலாம்.

அரங்கன் அரவணையில் துயிலுறும் தத்துவம் மேன்மை மிகுந்தது. அறிதுயில், தூங்காத தூக்கம், நினைவில் சுழுத்தி, யோக நித்திரை என்றெல்லாம் அதனைச் சிறப்பிப்பார்கள். மானிடர்களின் உறக்கத்தினின்று இது வேறுபட்டது. உலகம் பற்றிய உணர்வின்றி உலகின்பத் தொடர்பற்ற நிலையையே உறக்கமாகக் கருதுவர். அரங்கனோ இந்த நிலைக்கு முற்றிலும் மாறுபட்டவன். அரங்கத்தில் அவர் சயனித்துள்ள போதும் எப்போதும் அவர் அரங்கத்தைச் சார்ந்ததில்லை. பேரறிவு வடிவாகிய பரமன் உறங்குவது போல் காட்சியளித்த போதிலும் உலகம் தோன்றுதல், நிலை பெறுதல், நீங்குதல் ஆகியனவற்றை முடிவில்லா விளையாட்டாக நடத்திக் கொண்டிருக்கிறார். நமது உடலும் அவரது அரங்கமாகும். அனைத்திலும் பள்ளி கொண்டுள்ள மாயவன் நமது உடலிலும் பள்ளி கொண்டுள்ளார். அவனை உணர்ந்து அருளை நாடும் பக்தர்களுக்கே அவனருள் கிட்டும். பாற்கடல், ஆலிலை ஆகியவற்றிலும் பள்ளி கொண்டுள்ள திருமாலின் இக்கோலத்தை ஆழ்வார்கள் அதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பியதால் அவர்கள் ராமன், கிருஷ்ணன் ஆகிய அவதாரங்களையும் பள்ளி கொண்ட கோலத்திலேயே கற்பனை செய்து மகிழ்ந்தனர்.

இத்தகைய பெருமைகளையுடைய பள்ளிகொண்ட கோலத்தில் பரந்தாமன் காட்சியளிக்கும் தலங்களுள் பள்ளிகொண்டாவும் ஒன்று. பல தலங்களில் அவர் பள்ளி கொண்டுள்ள போதிலும் இத்தலத்திற்கு மட்டுமே பள்ளி கொண்டா என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்படாத போதிலும் இத்திருத்தலம் புராணச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும் மிக்கது. வேலூரிலிருந்து பெங்களூர் செல்லும் நெடுஞ்சாலையில் சிறிது தூரம் கடந்தவுடன் பிரிந்து செல்லும் கிளைச் சாலையில் 15 கி. மீ. சென்றால் இக்கோயிலையடையலாம்.

## தலவரலாறு

காஞ்சி மகாத்மீயத்தின் இரண்டாம் அத்தியாயத்திலும், அஸ்திகிரி மகாத்மீயத்திலும் உத்தரரங்கத்தின் தலபுராணம் இடம் பெற்றுள்ளது. நாரதரும், பிருகு முனிவரும் இத்தலத்தின் பெருமையைப் போற்றுகின்றனர். திருமகள், கலைமகள் ஆகிய இருவருக்கும் இடையே எவர் பெரியவர் என்ற சர்ச்சை ஏற்பட்டதாம். தங்களது சச்சரவைத் தீர்க்க இருவரும் நான்முகனின் துணையை நாடினர். இருவருடைய வாதங்களையும், கேட்ட பின்னர் நான்முகன் இருவரில் திருமகளே உயர்ந்தவள் என்று தீர்ப்பளித்தார். இத்தீர்ப்பு பாரபட்சமானது என்று கருதிய கலைவாணி அதனை ஏற்க மறுத்தாள். சீற்றம் மிக்கவராய் வானுலகத்தை விடுத்துப் பூவுலகிலுள்ள சிறிய பர்வதமான நந்திமலையில் சிறிது காலம் தங்கினார்.

இக்காலத்தில் சத்தியவிரத க்ஷேத்திரமான காஞ்சியில் நான்முகன் மாபெரும் வேள்வி ஒன்றை நடத்தத் திட்டமிட்டார். யாகத்தில் பங்கேற்குமாறு சரஸ்வதிக்கு அழைப்பு விடப்பட்டது. அதனைக் கலைமகள் ஏற்க மறுத்ததால், சாவித்திரியை அதே ஸ்தானத்தில் இடம் பெறச் செய்து யாகத்தை அழிக்க முயற்சி செய்தார். வெள்ளப் பெருக்கைத் தடுக்கத் திருமாலின் உதவியை (நான்முகன்) நாடினார். இதே தருணத்தில் அம்பரீஷன் என்ற ராஜரிஷி, மகாவிஷ்ணுவின் தரிசனத்தை வேண்டிக் கடும் தவம் புரிந்து வந்தார். நான்முகனின் கோரிக்கையை நிறைவேற்றவும், அம்பரீஷனின் தவத்திற்கு உரிய பலனை அளிக்கவும் திருமால் முடிவு செய்தார். வெள்ளப் பெருக்கெடுத்து வரும் பாலாற்றின் குறுக்கே உரகப்படத்தின் மீது மூன்று இடங்களில் பள்ளி கொண்டார். நான்முகனின் தவம் இனிதே நிறைவுற்றது. இவ்வாறு திருமால் பள்ளி கொண்ட தலங்களுள் முதலாவது தலம் பள்ளிகொண்டா. இரண்டாவது தலம் காவேரிப்பாக்கத்திற்கு அருகேயுள்ள திருப்பாற்கடல். மூன்றாவது திருத்தலம் காஞ்சியிலுள்ள யதோத்தகாரி திருக்கோயில். யாகம் நிறைவுற்றவுடன் மகாவிஷ்ணு காஞ்சி அத்திகிரியில் வரதராஜப் பெருமாளாகக் கோலம் கொண்டார்.

பாலாற்றின் குறுக்கே பள்ளிகொண்ட மகாவிஷ்ணு அம்பரீஷ முனிவருக்கு அருளினார். அம்பரீஷன் விருப்பப்படியே அதே இடத்தில் பள்ளி கொண்ட கோலத்தில் நிரந்தரமாக எழுந்தருளினார். மனநிறைவுடன் தவத்தை முடித்த நான்முகன் அவ்விடத்தில் ஆலயம் ஒன்றை எழுப்பி அங்கு வழிபாடுகளும், விழாக்களும் நடைபெற வழிகோலினான். அங்கு வைகாசி மாதத்தில் பத்து நாட்களுக்குக் கோலாகலமாகப் பிரம்மோற்சவம் நடத்தினார். காஞ்சி யதோத்தகாரி சந்நிதியில் சயனித்துள்ள திருமாலுக்கு அருகே, அவரால் ஆட்கொள்ளப் பெற்ற சரஸ்வதியும் இடம் பெற்றுள்ளார்.

பள்ளிகொண்டாவிலுள்ள கோயில் பாலாற்றின் விரிந்த மணற்பரப்பின் ஓரமாகத் தென்னந் தோப்புகளுக்கு இடையே, சுமார் 85 சென்ட் பரப்பில் அமைந்துள்ளது. கோயிலின் கிழக்கு வாசலில் ஏழு கலசங்களுடன் கூடிய அழகிய ஐந்து நிலைக் கோபுரம் அணி செய்கிறது. மேற்கு வாசலிலுள்ள கோபுரம் உபயோகத்திலில்லை. கோயிலினுள் மகாமண்டபம், உள் மண்டபம் ஆகியனவும், ஒவ்வொரு முக்கிய சந்நிதிக்கும் முன்னர் ஒரு சிறு மண்டபமும் உள்ளன. இராஜ கோபுரத்தைத் கடந்து உள்ளே வலம் வந்தால் தென்கிழக்குப் பகுதியில் தனி சந்நிதியில் மேற்கு நோக்கியவாறு கோலம் கொண்டுள்ள இராமானுஜரைக் காணலாம். வடகிழக்குக் கோடியில் தெற்கு நோக்கியவாறு மணவாள மாமுனிகள் கோலம் கொண்டுள்ளார்.

தெற்குப் பிரகாரம் வழியாக மேற்கு நோக்கிச் சென்றால் அரங்கநாயகித் தாயாரின் தனிச் சந்நிதியை அடையலாம். இந்தச் சந்நிதியில் உற்சவரும் இடம் பெற்றுள்ளார். தென்மேற்குக் கோடியிலுள்ள தனிச் சந்நிதியில் இராமச்சந்திரப் பெருமான், சீதை, இலக்குவன், ஆஞ்சநேயர் ஆகியோர் காட்சி தருகின்றனர். இதே சந்நிதியில் குலசேகராழ்வாரையும் கண்டு களிக்கலாம். மேற்குப் பிரகாரத்தின் மையத்தில் கண்ணன் இரு கரங்களிலும் வெண்ணெய் ஏந்தியவாறு நடனமாடும் கோலத்தில், உற்சவருடன் தோற்றமளிக்கிறார். வடமேற்கு மூலையில் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாளின் தரிசனத்தையும் பெறலாம். இச்சந்நிதிக்குக் கிழக்கிலே திருமாலின் திருப்பாதங்கள் பூமியில் அமைந்துள்ளன.

வடக்குப் பிரகாரத்தின் கிழக்குப் பகுதியில் ஆஞ்சநேயரின் இரு திருவுருவங்கள் இடம் பெற்றுள்ளன. ஆனந்த தீர்த்தர், பத்ரி நோக்கி யாத்திரை மேற்கொண்ட போது இவ்விடத்திற்கருகே எதிரிகளை வாதத்தில் வெற்றி கொண்டாராம். இவ்வெற்றியின் நினைவாகச் சாலிவாகன சகாப்தம் 1046 ஆம் ஆண்டில் ஆஞ்சநேயரின் திருமேனிகளை இங்கு பிரதிஷ்டை செய்ததாகவும், அவ்வெற்றியின் அடையாளமாக அருகே வியாச ஸ்தம்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவப்பட்டதாகவும் கூறுவர். ஆஞ்சநேயரின் ஒரு திருவுருவம் அடக்கத்தை வெளிப்படுத்துவது போலவும், மற்றொன்று வீரத்தைப் புலப்படுத்துவது போலவும் அமைந்துள்ளனவாம்.

பிரகாரத்தை வலம் வந்தவுடன் பலிபீடம், கொடிமரம், ஆகியவற்றை வணங்கியவாறு உட்கோயிலையடையலாம் அருகே யாகசாலையும் மடைப்பள்ளியும் உள்ளன. கூப்பிய கரத்துடன் மூலஸ்தானத்தை நோக்கியவாறு தோன்றும் கருடாழ்வாரைத் தொழுதவாறு முன் சென்றால் மணிக்கதவும் தோன்றும். மூலஸ்தானத்தில் அரங்கநாதர் சயனக் கோலத்தில் அருளாட்சி புரிகிறார். சேடன் மீது தெற்கே தலை முடியை வைத்தவாறும், வடக்குப்புறம் திருவடிகளை நீட்டியவாறும், கிழக்கு நோக்கியவாறு தோன்றுகிறார். இந்த அலங்காரப் பிரியர் சங்கு, சக்கரங்களோடு கௌஸ்துபம், வனமாலை, கிரீடமகுடம் குண்டலங்கள், திருமண்காப்பு, வேட்டி, உத்தரீயம் ஆகியவற்றை அணிந்தவாறு திவ்விய தரிசனம் அளிக்கிறார். திருவுந்தியிலிருந்து நான்முகன் காட்சியளிக்கிறார். வலது புறம் ஸ்ரீதேவி கோலம் கொண்டுள்ளார். திருவடிகளுக்குச் சேவை செய்யும் நிலையில் பூதேவி காட்சி தருகிறார். மூலவருக்கு முன்னர் ஸ்ரீதேவி, பூதேவி ஆகியோருடன் உற்சவர் வடிவில் அரங்கநாதர் இடம் பெற்றுள்ளார்.

கருவறைக்கு வெளியே சிறிய தோற்றமுடைய கஸ்தூரிரங்கப் பெருமாளைக் காணலாம். இப்பெருமான் இங்கு கோயில் கொண்ட வரலாறு சுவையானது. சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் முகமதியப் படைகள் கோயில்களிலுள்ள உற்சவத் திருமேனிகளைக் கொள்ளையடிப் பதுடன், விக்கிரகங்களைச் சேதப்படுத்துவதையே தொழிலாகக் கொண்டிருந்தன பள்ளி கொண்டாவில் முகமதியர்கள் நுழைவதையறிந்த ஆலய நிர்வாகத்தினர் ஒரு சிறந்த யுக்தியைக் கையாண்டனர். கருவறையின் நுழைவாயில் முன்பு சுவரெழுப்பி அதனை மூடினர். பின்னர் அரங்க நாதரின் சிறிய உருவத்தை அவ்விடத்தில் நிறுவினர். கோயிலைச் சூறையாட வந்த முகமதியர்கள் சோட்டா ரங்கர் என்று அழைக்கப்படும் இச்சிறிய உருவத்தைக் கண்டவுடன் அலட்சியமாக அதனைப் பாழ்படுத்தாமல் சென்று விட்டனராம். இவ்வாறு மூலவரை முகமதியர்களிடமிருந்து பாதுகாத்த இச்சிறு உருவினரையே கஸ்தூரி ரங்கர் என அழைக்கின்றனர்.

இங்கு வடக்குப் பிரகாரத்திலமைந்துள்ள பாதிரி மரமே, தலவிருட்சமாகக் கருதப்படுகிறது. அரங்க நாதரின் கருவறையை அணி செய்யும் விமானம் மூன்று கலசங்களுடன் நீள்வட்டமாகக் காட்சியளிக்கிறது. இது பிரணவ வடிவமாக அமைந்துள்ளதால் சைவ, வைணவ ஒற்றுமைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இது போன்ற பிரணவ விமானம் திருவரங்கம், பள்ளி கொண்டா ஆகிய இரு தலங்களில் மட்டுமே காணக்கூடிய அபூர்வமான அமைப்பாகும்.

கோபுரத்திற்குத் தெற்கேயுள்ள நான்கு கால் திருவந்திக் காப்பு மண்டபம் சிற்ப வேலைப்பாடுகளைப் பெற்றுள்ளது. வியாசபுஷ்கர்ணியின் மேற்கரையிலுள்ள கண்ணன் கோயில் தூண்களில் 8 வகையான நரசிம்மரின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றை அஷ்ட நரசிம்மர்கள் என்று சிறப்பிப்பர். கோபுரவாயிலில் மகாவிஷ்ணுவின் பலவகையான சிற்பங்களைக் காணலாம். தாயார் சந்நிதியில் 108 திருப்பதிகள் பற்றிய குறிப்புகள் தெலுங்கு மொழியில் எழுதப்பட்டுள்ளன. இன்று அவை அழிந்துவிட்டதால் அவ்வெழுத்துக்களைப் படிப்பது கடினமாகும்.

இடம் பெற்றுள்ள மூன்று தெய்வத் திருவுருவங்கள் கலா ரசிகர்கள் அவசியம் காண வேண்டியவையாகும். இராமர் சந்நிதியில் காட்சியளிக்கும் இராமர், இலக்ஷ்மணர், சீதை, ஆஞ்சநேயர் ஆகிய திருவுருவங்கள் எழில் மிக்கன. சுமார் ஒரு மீட்டர் உயரமுள்ள இவ்வுருவங்கள் பேரழகுடன் மிளிர்கின்றன. ஆண்டாளின் எழிலுருவமும் கண்கவரும் தன்மையுடையது. ஒரு கையில் தாமரை மலரை ஏந்தியும் மற்றொரு கரத்தைக் கீழே தொங்கவிட்டவாறும் கோலம் கொண்டுள்ள இப்பாவையின் உடலுறுப்புக்களின் அசைவும் ஆடை, அணிகலன்களின் அமைப்பும் துல்லியமாகக் காட்டப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் விஞ்சுமாறு நவநீதக் கிருஷ்ணனின் சிற்பம் அமைந்துள்ளது. கையில் வெண்ணெய் உருண்டையைப் பிடித்தவாறு தாண்டவக் கோலத்தில் தோன்றும் இப்பெருமானின் உயிரோவியத்தை வருணிக்க வார்த்தைகளே இல்லை. அவரது மேனியை அலங்கரிக்கும் மணிமாலை, சதங்கை ஆகியனவும் தத்ரூபமாகச் செதுக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலின் பல பகுதிகளிலிருந்து 13 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவ்வூர் நந்திவர்ம சதுர்வேதி மங்கலம் என்று ஆதியில் வழங்கப்பட்டது. சோழமன்னன் விக்கிரமசோழன் காலத்தில் அவருடைய அலுவல் அதிகாரியாகப் பணியாற்றிய குலசேகர சம்புவராயன் காலத்தில் அளிக்கப்பட்ட நிலதானங்கள் பற்றிய தகவல்களை ஏழு கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. கோயில் நிலங்களிலிருந்து பெறப்படும் வரிப்பணத்தை மேதமிச தேவனார் என்பவருக்கு அளித்தனர். அவ்வரிப்பணத்தைக் கொண்டு கோயிலில் வழிபாடுகள் நடத்துமாறு அவருக்குக் கட்டளை இடப்பட்டது. கிழவிச்சூர் மக்களுக்கு அச்சம்புவராயர் பிறப்பித்த ஆணையின்படி நிலங்களின் வரிகள் சில ரத்து செய்யப்பட்டன. கோயிலில் வழிபாடுகளுக்குச் சிலசலுகைகள் அளிக்கப்பட்டன. விக்கிரம சோழனின் பதினைந்தாம் ஆட்சி ஆண்டில் 10 வேலி நிலம் இறையிலியாகக் கோயிலுக்கு வழங்கப்பட்டது. இக்கோயிலிற் பூசைகள் நடைபெறுவதற்காகச் சில வரிகளைத் தள்ளுபடி செய்வதற்கான ஆணை தகடூர் நாடாழ்வான்பட்டு ஊர் மக்களுக்குப் பிறப்பிக்கப்பட்டது. இக்கோயிலின் தாயத்தாருக்கு இங்கு வழிபாடுகள் நடத்தும் உரிமையும், வாடகையின்றி ஒரு இல்லத்தில் தங்கும் சலுகையும் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவி தாசய்யன் என்பவனின் நன்மையை முன்னிட்டுச் சில வரிகள் ரத்து செய்யப்பட்டன. ஈஸ்வர காளிங்கன் என்பவரின் நன்மையை உத்தேசித்து நிலதானம் அளிக்கப்பட்டது. கோவிஞ்சயன், திருப்போகிபட்டன், நகராழ்வான் என்ற மூவரும் தனித்தனியாக அளித்த கொடைகள் பற்றிய விவரங்கள் உள்ளன. ஒரு தூணில் நகராழ்வானின் திருவுருவமும் இடம் பெற்றுள்ளது போலும். விஜயநகர வேந்தரான புக்கராயரின் ஆட்சியில் இக்கோயிலில் விளக்கு ஏற்றவும், வழிபாடுகள் இயற்றவும் வீரராக்கிய நல்லூரிலுள்ள மூன்று வேலி நிலத்திலிருந்து வரி விதிக்கப்பட்டது. கல்வெட்டுக்களில் இவ்வூர் நந்திவர்ம சதுர்வேதி மங்கலம் என்றும், விச்சூர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்குள்ள இறைவர் விச்சூர் பள்ளி கொண்டருளிய பெருமான் என்றே அழைக்கப்படுகிறார்.

காஞ்சி மகாத்மீயம் கழுகரசனான சம்பாதி, இத்தலத்துடன் தொடர்பு கொண்டிருந்ததாகக் கூறுகிறது. இக்கோயிலுக்கு 1 1/2 கி. மீ. தொலைவிலுள்ள பீஜசலம் (விட்டுமலை அல்லது உச்சிக்காழ்மலை) என்ற மலை மீது சம்பாதி தவமியற்றினாராம். இறையருளால் தாமரை மலரில் ஒரு பெண்மகவு உதித்தது. செங்கமலவல்லி என்று பெயரிட்டு அதனைப் பிரியத்துடன் வளர்த்து, உரிய காலத்தில் அரங்கநாதருக்குச் சம்பாதி மணமுடித்து வைத்தாராம். சம்பாதி தவமியற்றிய இம்மலையைச் சுற்றி ஆண்டுக்கு ஒருமுறை உற்சவர் வலம் வருவதுண்டு.

இராமரும் இத்தலத்தில் பெருமாளை வழிபட்டு ஆசி பெற்றதாக ஒரு ஐதீகம் உள்ளது. இதற்கேற்ப தைப்பூசத்தன்று இராமரின் உற்சவத்திருவுருவம் பீஜசல மலையைச் சுற்றி எடுத்துச் செல்லப்படும். அப்போது அவருக்கு ரூ. 60/- காணிக்கையாக வழங்கப்படுகிறது.

பள்ளிகொண்டா சிறந்த பிரார்த்தனைத் தலமாக விளங்குகிறது. இக்கோயிலிற் பல திருமணங்கள் நடைபெறுகின்றன. இங்கு நாள்தோறும் இரு கால வழிபாடு முறைப்படிப் பட்டர்களால் நடத்தி வைக்கப்படுகிறது. வைகாசித் திங்களில் பிரம்மோற்சவமும், கருடசேவையும் நடைபெறுகின்றன. பங்குனி உத்திரத்தின்போது திருக்கலியாண விழாவும், சித்திரை ஆற்றிற்கு எழுந்தருளும் நிகழ்ச்சியும் நடைபெறும். இவை தவிர ஆடிப்பூரம், நவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, இராமநவமி, கிருஷ்ண ஜெயந்தி ஆகிய விழாக்கள் விமரிசையாக நடைபெறுகின்றன. கிருஷ்ணஜெயந்தியை முன்னிட்டு விசேஷ அபிஷேக, ஆராதனைகளும், உலாவும் நடைபெறுகின்றன. நவராத்திரியின் போது வெள்ளிக்கிழமைகளில் ஆஞ்சநேயருக்கு விசேஷ வழிபாடு நிகழும் இக்கோயில் இந்து அறநிலைய ஆட்சித் துறையின் நிர்வாகத்தில் இயங்கி வருகிறது. ஆலயத்திற்கு உரியனவாகச் சொற்ப சொத்துக்களே (தோப்பு, 12 செண்ட் நன்செய் நிலம்) உள்ளன. சிங்கம், அன்னம், கருடன், நாகம், யானை, குதிரை ஆகிய வாகனங்களும், ஒரு பல்லக்கும் உண்டு.

இப்பதியிற் பாலாறு, கஜேந்திர நதி, கௌடிண்ய நதி ஆகிய மூன்று நதிகளும் சங்கமமாவதால் இதனைத் திருமுக்கூடல் அல்லது திரிவேணி சங்கமம் என அழைப்பர். கோயிலுக் கருகேயுள்ள வியாச புஷ்கர்ணி பிரசித்தி வாய்ந்தது. திரேதாயுகத்தில் இந்திரனும், இந்திராணியும் கானகத்தில் வலம் வரும்போது கிளி வடிவில் சஞ்சரித்து வந்த இரு அசுரர்களை இந்திரன் வதைத்தான் தேவேந்திரனைப் பிரம்மஹத்தி தோஷம் பீடித்தது. காசிப முனிவரின் அறிவுரையின் பேரில் வியாச புஷ்கர்ணியில் நீராடிய இந்திரனுக்குச் சாப விமோசனம் கிடைத்தது.

*தனமாதர் அம்சொற்குதலைப் புதல்வர் தரணி இல்லம்*
*தனமாதரம் செய்யும் வாழ்வு அஞ்சியே தஞ்சம் நீயென போந்*
*தனம் ஆதரங்கிக்க வெற்பு எடுத்தாய் கண் அனந்த சிங்கா*
*தனமா ரங்கம் உள்ளாய அரங்கா முக்தி தந்தருளே*

(திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்,
திரு அரங்கத்துமாலை)

(எம். இரா.)

## பன்றி மலைச் சுவாமிகள்

தமிழ் நாட்டில் வாழ்ந்த யோகிகளில் ஒருவர். அவர் பன்றிமலை என்னும் ஊரில் கி.பி. 1906 ஆம் ஆண்டு ஆறுமுகம் பிள்ளை, அங்கம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் இராமசாமி. அவர் தமது ஆரம்பக் கல்வியைப் பாலா சமுத்திரம் என்னும் ஊரில் உள்ள பாடசாலையில் பெற்றார். மிக இளம் பிராயத்திலேயே அவரிடம் நிரம்பியிருந்த ஆத்ம ஞான வேட்கை சித்தர்களை நாடிச் செல்ல வைத்தது.

செல்வக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த அவரது உள்ளத்தில் பொங்கி எழுந்த சமய உணர்வால், வீட்டை விட்டு வந்து பகலில் கூலி வேலை செய்தும் இரவில் கடவுள் வழிபாடு மேற்கொண்டும் வந்தார். சித்தர்களுடன் இவர் கொண்ட தொடர்பால் சித்து விளையாட்டுக்களையும் மேற்கொண்டார் எனத் தெரிய வருகின்றது. இராமசாமியின் நாடோடி வாழ்க்கையால் துயருற்ற பெற்றோர் திருமண பந்தமே இவரை வழிக்குக் கொணரும் எனக் கருதி பாப்பாத்தி அம்பாள் என்பவரை அவரது 17 ஆம் வயதில் வாழ்க்கைத் துணையாக அமைத்துக் கொடுத்தனர். இல்லற வாழ்வின் பயனாக பேச்சிமுத்துராசா என்னும் மகனும், இரத்தினத்தம்மாள் என்ற மகளும் இவருக்குப் பிறந்தனர். இல்லற இன்பத்திற் சில காலமே அவர் ஈடுபட்டார் என்றும் எஞ்சிய காலத்தில் தன் மனைவியை சீடராகவே கருதி வாழ்ந்தார் என்றும் அறியக் கூடியதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கத்தில் அவர் கன்னிவாடி ஜமீனில் கணக்குப் பிள்ளையாகத் தொழில் பார்த்தார். அவர் தம் தொழிலிற் காட்டிய விவேகம் அவரை வரி வசூல் செய்வோராகப் பதவி உயர்த்தியது. பன்றி மலைப் பஞ்சாயத்துத் தலைவராகவும் அவர் ஆறு ஆண்டுகள் பணி புரிந்தார். கற்பனை வளமும், கலையார்வமும், நகைச் சுவையுணர்வும் அவரிடம் இயல்பாகவே குடி கொண்டிருந்தது.

பன்றிமலைச்சுவாமிகளின் சித்துக்கள் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. அதனால் அவரை நாடிப் பல பக்தர்கள் வந்து அருள் வாக்குப் பெற்றுச் சென்றனர். மக்கள் சுவாமிகளை முருகனாகக் கருதி வழிபாட்டுப் பாடல்கள் பல இயற்றி வழிபடத் தொடங்கினர்.

சுவாமிகள் தம் அருட்சக்தியால் உற்பத்தி செய்து கொடுத்த சிலைகளை அவரது சீடர்கள் வழிபட்டு வருகின்றனர். அவர் காலை, மாலை ஆகிய வேளைகளில் தனியே அமர்ந்து பூசை செய்வார். அவ்வேளைகளில் பொதுமக்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அவரைக் காணவரும் பக்தர்கள் பன்றி மலைக்கு ஏறிவரச் சிரமப்பட்டதால் திண்டுக்கல்லில் மனை அமைத்து தன்னை நாடி வந்த பக்தர்களை நெறிப்படுத்தினார்.

இந்திய நாட்டின் பல்வேறு புனிதத் தலங்களுக்கும் தன் பக்தர்களுடன் சென்றுள்ளார். 1958 ஆம் ஆண்டு மலாயாப் பயணம் ஒன்றை மேற்கொண்டு அங்கு ஆன்மீகப் பணிகள் பல மேற்கொண்டார். 1960 ஆம் ஆண்டு இலங்கைப் பயணமும் மேற்கொண்டார். மக்களின் இதயங்களிற் சித்தராகத் திகழ்ந்த பன்றி மலைச் சுவாமிகள் கி. பி. 1986 ஆம் ஆண்டு இறைபதம் சேர்ந்தார். இவரது சமாதி நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ளது.

(நி. நி.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகவத மேளம்

பாகவத மேளம் பழம் மரபு வழிவந்த ஒரு நாட்டிய நாடகமாகும். இலட்சுமி நரசிம்மருக்கு அவர் பக்தர்கள் வழங்கிய நாட்டிய நாடகம் அது. இந் நாட்டிய நாடகம் ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தஞ்சையை அடுத்துள்ள பல ஊர்களில் நடைமுறையில் இருந்து வந்துள்ளது. கிருஷ்ண பக்தர்களான பாகவதர்கள் இறைவனைப் புகழ்ந்து பாடி, ஆடி, நடித்த நாட்டிய நாடகங்கள் பாகவத நாட்டிய மேளா நாடகங்கள் என்று வழங்கின.

பாகவத மேள நாட்டிய நாடகம் பரதரின் நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடும் இலக்கண மரபுகளுக்கு அமையவே ஆடப்பட்டது. பரதரின் கொள்கைப்படி நாட்டியம் என்பது நாட்டிய நாடகத்தைத் தான் குறிக்கும். வெறும் நடனத்தையோ, நாடகத்தையோ அவர் இச் சொல்லால் குறிக்கவில்லை. புராணங்களில் இருந்து கதைகளைத் தேர்ந்து தக்க நடிகர்களைக் கொண்டு மேடையில் நாட்டிய நாடகமாக நிகழ்த்தும் நிலை அன்று இருந்தது. நடிகர்களுக்குப் பொருத்தமான உடை, ஒப்பனை, இசை, நடனம், அபிநயம், தேவையான இடத்தில் உரையாடல் என்னும் இக் கூறுகளுடன் நாட்டிய நாடகங்கள் நிகழ்த்தப் பெற்றன. இந்த நாட்டிய மரபு கி.பி. நான்காம் நூற்றாண்டு வரை இந்தியா முழுவதும் வழக்கில் இருந்தது.

தென்னிந்தியாவில் 9 ஆம் நூற்றாண்டில் சோபு மன்னர்களின் ஆட்சி ஆரம்பித்த பின்பு கலைகள் உன்னத நிலை அடைந்தது. இம் மன்னர்களாலும் இவர்களுக்குப் பின் ஆண்ட மன்னர்களாலும் நாட்டிய நாடகக் குழுக்கள் ஆதரவுப் பெற்றன. இதனால் நாட்டிய நாடகக் குழுக்கள் நிலையாக முழு அளவிலான சிறந்த நாட்டிய நாடகங்களை வழங்கும் குழுக்களாக வளர்ச்சி பெற்றன.

கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆந்திர தேசத்தில் இருந்து தமிழ் நாட்டில் குடியேறிய நாராயண தீர்த்த யோகி என்பவரால் நாட்டிய நாடக மரபு புதுவளர்ச்சி பெற்றது. சிறந்த கிருஷ்ணபக்தரான இவர் 'கிருஷ்ண லீலாதரங்கணி' என்னும் தனது நூலில் கண்ணனின் பிறப்பு முதல் அவன் உருக்குமணியை மணப்பது வரையிலான பல லீலைகளை வடித்துள்ளார். இவரது பாடல்கள் நடனத்திற்கும், அபிநயத்திற்கும் நிறைய வாய்ப்புத் தருவனவாக உள்ளன. இவரால் தான் பழம்மரபான நாட்டிய நாடக மரபு புத்துயிர் பெற்றது. அவ்வாறு செய்வதற்கு அவர் புதிதாக எதையும் கண்டுபிடிக்கவில்லை. சமஸ்கிருத மொழி அறிந்திருந்த அவர் பரதரின் நாட்டிய சாஸ்திரத்தையும், பல சமஸ்கிருத நாடக இலக்கியங்களையும் கற்றிருந்தார். அவற்றின் அறிவால் அவர் தெலுங்கு மொழியில் சிறந்த நாட்டிய நாடகங்களை எழுதினார். பக்தி இயக்க அடிப்படையில் பாகவத இலக்கியம் சுட்டிய தத்துவங்களையும், வழிமுறைகளையும் அவர் தம் படைப்புகளில் பின்பற்றி உள்ளார். தீர்த்த நாராயணர் தமது படைப்புகளில் தத்துவ உண்மைகளையும், ஆன்மீகக் கருத்துக்களையும் உள்ளடக்கிப் புராணக் கதைகளைப் பரத நாட்டிய சாஸ்திர முறைப்படி படைத்து அளித்தார். அப்போது தான் கடவுள் பக்தி முழுமை பெறுவதாகக் கருதினார்.

பாகவத மேளம் என்ற இந்தக் கலைக்கும் இது போன்ற ஏனைய கலைகளுக்கும் தஞ்சையை ஆண்ட மன்னர்கள் நிறைந்த ஆதரவை வழங்கினர். அச்சுதப்ப நாயக்க மன்னன் தஞ்சையை ஆண்ட போது பாகவத நாட்டிய நாடக மரபை மேம்படுத்துவதற்காக 510 அந்தணர் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு கிணறும் பல ஏக்கர் நிலங்களையும் தானமாகக் கொடுத்தார். இம் மன்னனால் இக்கலைக்காகக் கொடுக்கப்பட்ட இக் கிராமம் முதலில் அச்சுதபுரம் என்றும் பின்னர் உன்னதபுரம் என்றும் பின்னர் மெலட்டூர் என்றும் வழங்கப்பட்டு வருகிறது. மெலட்டூர் என்ற இந்தக் கிராமம் பாகவத மேள நாட்டிய நாடகம் போன்ற செவ்வியல் சார்ந்த நாட்டிய நாடகக்கலை மறுமலர்ச்சிக்கு இருப்பிடமாக இருந்ததுடன் தலை சிறந்த படைப்பாளிகளால் செவ்வியல் சார்ந்த பத-வர்ணங்கள், சப்தங்கள் போன்றவை படைக்கப்படுவதற்கு உரிய தளமாகவும் விளங்கியது.

தஞ்சையில் தீர்த்த நாராயணரில் இருந்து தொடங்கிய பாகவத மேள மரபு அவருக்குப் பின் அவரது சீடர்களால் போற்றி வளர்க்கப்பட்டது. கோபால கிருஷ்ண சாஸ்திரி என்னும் அவரது சீடரால் துருவன், சீதா கலியாணம், உருக்குமணி கலியாணம் போன்ற நாட்டிய நாடக நூல்கள் எழுதப்பட்டன. இவருக்குப் பின் இவரது மகன் வெங்கட்ராம சாஸ்திரியார் காலத்தில் இந் நாட்டிய நாடக மரபு மிக உன்னத நிலையை அடைந்தது. வெங்கட்ராம சாத்திரி அப்போது தஞ்சையின் ஆட்சி மொழியாக இருந்த தெலுங்கில் 12 பாகவதமேளா நாட்டிய நாடகங்களை எழுதினார். இவரது நாட்டிய நாடகங்கள் பலராலும் பாராட்டப்பட்டதால் மெலட்டூரில் மட்டுமன்றித் தஞ்சை மாவட்டத்திலுள்ள சூலமங்கலம், சாலிய மங்கலம் என்ற கிராமங்களிலும் நிகழ்த்தப்பட்டன.

பாகவத மேளா நாட்டியக் கலையின் சிறந்த கலைஞர்களின் மறைவுக்குப் பின் இக் கலைக் குடும்பங்களின் உறுப்பினர்கள் பிழைப்புக்காக வெளியிடங்களுக்குச் செல்ல நேரிட்டது. அத்துடன் தேவதாசிகள் கோயிலில் நடனமாடும் முறை ஒழிப்புச் சட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவரப்பட்ட பின்பு சமுதாயத்தால் நடனக் கலைக்கு இருந்த எதிர்ப்புக் காரணமாக இக் கலை வீழ்ச்சியுறத் தொடங்கியது.

பாகவத மேளா போன்ற நாட்டிய நாடகங்களின் நோக்கம் இருவகைப்பட்டதாகும். ஒன்று இது கடவுளுக்குப் படைக்கப்படும் ஒரு கலைக் கொடையாக விளங்கியது. மற்றையது உயர்ந்த ஆன்மீக தத்துவக் கருத்துக்களை இந் நாட்டிய நாடகம் மக்கள் மனதில் நிலை பெறச் செய்தது. எனவே இவை வெறும் பொழுது போக்குக் கலையாக மட்டும் அமையாது சீரிய முறையில் உயர்ந்த நோக்கங்களை உள்ளடக்கியதாகவும் விளங்கின.

இரவில் 9.30 மணிக்கு தொடங்கும் நாடகம் விடியற்காலை வரை தொடர்ந்து நடைபெற்றது. இம் முறை 1951ஆம் ஆண்டிற்குப் பின் பக்த பிரகலாத நாடகம் ஒன்றுக்கு மட்டுமே பின்பற்றப்பட்டது. ஏனைய நாடகங்கள் நான்கு அல்லது ஐந்து மணித்தியாலங்களுக்குள் நிகழ்த்தப்பட்டன.

இந் நாட்டிய நாடகம் கோணங்கியின் வருகையுடன் தொடங்குகிறது. அவன் சில அடவுகள் போட்டு சிறிது நேரம் அடவுகள் போட்டு ஆடிய பிறகு சென்று விட பின் நாடகத்தால் பங்கேற்கும் இசைக் கலைஞர்களும் பக்கவாத்தியக் கலைஞர்களும் மேடையில் தோன்றி வழிபாட்டுத் தொடக்கப் பாடலைப் பாடுவர். அதனைத் தோடய மங்கலம் எனக் கூறுவர். தொடர்ந்து கணபதி கடவுள் வருகை இடம்பெறும். நாடகம் தடையின்றி நடைபெற விநாயகக் கடவுளின் ஆசிவேண்டி இக் காட்சி அமைக்கப்படுகிறது. அதன் பின் தலைமைப் பாத்திரங்களைப் பொறுப்பேற்பவர்கள் ஒவ்வொன்றாக மேடையில் தோன்றித் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வர். இது பாத்திரப் பிரவேசம் என அழைக்கப்படும்.

பாத்திரப் பிரவேசம் முடிந்த பின் நாடகம் காட்சி. காட்சியாக விரியும். பாத்திர மனநிலைகள் உணர்வுகள் பெரும்பாலும் கருநாடக இசையாலும். பரத நாட்டிய நடனம் மற்றும் அபிநயத்தாலும் வெளிப்படுகின்றன. பாகவத மேளத்தில் பயன்படுத்தப்படும் இசை இராக பாவங்கள் நிரம்பியதாகவும் உணர்ச்சியைத் தூண்டும் ஆற்றல் பெற்ற உயர்ந்த இசையாகவும் விளங்குகிறது.

பாகவத மேளா நாட்டிய நாடகத்தில் இடம்பெறும் பாடல்களுடன் தனி மொழிகளும். உரையாடல்களும். கவிதை மொழியில் அமைந்துள்ளன. அவை நடனம் மற்று அபிநயங்களுடன் கலந்து சிறப்புறுகின்றன. நாடகப் பாடல்கள் மற்றும் உரையாடல்களுக்கான பல விளக்கங்களாக கைமுத்திரைகளும். முகபாவங்களும் தாள இயைபுடன் கூடிய அடவுகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்றன. பல சந்தர்ப்பங்களில் நடனக்காரர் பாடிக் கொண்டே அபிநயம் பிடிப்பார். ஆகவே பாகவத மேளா நாட்டிய நாடக இசை. நடனம். அபிநயம் உரையாடல் ஆகியன ஒருங்கிணைந்து அழகிய உணர்வைத் தூண்டி இரசத்தை அனுபவிக்க வாய்ப்பளிக்கின்றன.

(நி.நி.)

# பாசம்

பதி. பசு. பாசம் என்ற சைவ சித்தாந்த முப்பொருட் கோட்பாடுகளுள் ஒன்று பாசமாகும். பாசம் என்பது பசுவை பந்தித்து நிற்பது எனப் பொருள்படுகின்றது. அதனைத் தளை. கட்டு. மலம். பந்தம் எனவும் அழைப்பர். அவை முறையே ஆணவம். கன்மம். மாயை என்பனவாகும். ஒரு ஆன்மா அடைகின்ற சுக துக்கம். குறைபாடுகள் அனைத்திற்கும் அவற்றை அநாதியாகப் பீடித்திருக்கும் இப்பாசங்களே காரணம் எனச் சைவ சித்தாந்திகள் கூறுகின்றனர்.

## I. ஆணவம்

ஆணவம் என்பது ஆன்மாவின் அறிவு வியாபகத்தை ஒடுக்கி அணுத்தன்மையாக மாற்றுவதாகும். ஆகம நூல்களிலும். சித்தாந்த சாஸ்திர நூல்களிலும் ஆணவத்தைப் பற்றி பல விளக்கமான செய்திகள் கூறப்படுகின்றன. மிருகேந்திர ஆகமத்தில் ஆணவத்திற்குப் பன்னிரு நாமங்களைக் கொடுத்திருப்பது கண்கூடு. அவைகள் மேல்வருவன:

1. பசுத்துவம் - பசுவைப் பாசத்தோடு கூட்டி வைப்பது.
2. பசுநீகாரம் - உயிரின் அறிவை மூடியிருப்பது.
3. ம்ருத்யு - உயிரைச் சீவிக்காது வாட்டுவது.
4. மூர்ச்சா - உயிரை மயக்குறுத்துவது.
5. மலம் - உயிரிடத்தில் அழுக்காந் தன்மையைத் தோற்றுவிப்பது.
6. அஞ்சனம் - இருள் போல் உயிரைச் சூழ்ந்திருப்பது.
7. அவித்யா - உயிருக்கு அறியாமையை ஊட்டுவது.
8. ஆவ்ருதி - உயிருக்கு உண்மைப் பொருளைக் காட்சிப் படுத்தாதது.
9. ருக் - உயிரின் ஞானக்கியா வியாபகத்தைத் தடுப்பது.
10. க்லானீ - உயிருக்குக் களைப்பு, அசதி, சோர்வு முதலியவற்றை உருவாக்குவது.
11. பாவமூலம் - பாவங்களுக்கு மூலமானது.
12. க்ஷயம் - உயிரின் ஞான ஆற்றலைத் தேய்ப்பது.

ஆணவ மலத்தின் இயல்புகளை ஆராயும் போது அதனை மூலமலம். சகசமலம். இருள்மலம் எனப் பலவாறு ஆகமங்களும். சித்தாந்த நூல்களும். வர்ணிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நெல்லிற்குமியும், நிகழ் செம்பினிற் களிம்பும் சொல்லில் புதிதன்று** என்பதற்கிணங்க ஆன்மாக்களை ஆதி தொட்டு அநாதியாகப் படிந்திருக்கும் மலம் ஆணவம் என்பதை அப்பாடல் உவமித்து உணர்த்திக் காட்டுகின்றது. இதனாலேயே அதனை மூலமலம் என்று அழைப்பர் என சிவஞான சித்தியார் - 17ஆம் பாடல் மேல்வருமாறு காட்டி நிற்கின்றது.

*" ஒன்றதாய் அநேக சக்தி*
*உடையதாய் உடனாய் ஆகி*
*அன்றதாய் ஆன்மாவின் தன்*
*அறிவோடு தொழிலை ஆர்த்து*
*நின்று போத் திருத்து வத்தை*
*நிகழ்த்திச் செம்பினில் களிம்பு ஏய்ந்து*
*என்றும் அஞ்ஞானம் காட்டும்*
*ஆணவம் இயைந்து நின்றோ "*

அடுத்து ஆணவத்தை இருள் மலம் என்றும் கூறுவர். கண்ணொளியை விளங்க வெட்டாது மறைக்கும் பூதவிருள் போல, ஆணவ மலம் ஆன்மாவின் ஞானக் கண்ணை மறைக்கும். அதை **அகவிருள்** என்று குறிப்பிடுவர். இதனை வள்ளுவர் **இருள்** என்று கூற சித்தாந்திகள் இருள்மலம் என்கின்றனர். இருள் தன்னைக் காட்டும் தனக்குள் மறைத்து வைத்திருக்கும் பொருளைக் காட்டாது. ஆனால் ஆணவம் தன்னையும் காட்டாது தனக்குள் மறைத்து வைத்திருக்கும் ஆற்றலை உடையது என்பதைத் திருவருட் பயன் நூலாசிரியர் **ஒரு பொருளுங் காட்டாது இருள் உருவங் காட்டும் இரு பொருளுங் காட்டாது இது** என்ற பாடலில் தெளிவு படுத்தத் திருமுறை பாடிய ஆசிரியர்கள் **இருளாய உள்ளத்தின் இருளை நீக்கி இருளற நோக்க மாட்டாக் கொத்தையேன், இன்பம் பெருக்கி இருளகற்றி** என்ற பாடலடிகளாலும், சிவப்பிரகாசத்தின் **இருளொளிர இருண்ட மோகமாய்** என்ற பாடலாலும் **ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றேயிடம் ஒன்று மேலிடின் ஒன்று ஒளிக்கும்** என்ற கொடிக் கவிப் பாடலாலும் உணரத்தக்கதாக உளது.

ஆணவத்தின் காரிய ரூபங்களை பௌஷ்கராகமம் மோகம் முதல் வைசித்திரியம் ஈறாக ஏழு குணங்கள் எனக் கூற, சித்தாந்த நூல்கள் விகற்பம் முதல் நகை ஈறாக எட்டு எனக் குறிப்பிடுகின்றன.

பௌஷ்கராகமம் குறிப்பிடும் ஆணவ குணங்கள்.

1. மோகம் - **மண், பெண், பொன் ஆதிகளிடத்தில் நன்மை தீமை கருதாதெழும் மயக்கம்.**
2. இராகம் - **கிடைக்காதவற்றில் இச்சை கொண்டிருத்தல்**
3. மதம் - **தான் பெற்ற யாதேனும் பேறு பற்றி தன்னை மறந்து தருக்கடைதல்.**
4. **விஷாதம் - தான் பெறனக் கருதிக் கொண்டவை இழக்கப்படுவதால் ஏற்படும் கிலேசம்.**
5. தாபம் - **இழப்பால் ஏற்படும் மனக் கலக்கம்.**
6. சோஷம் - **தாங்க முடியாத துக்கத்தால் மரித்துப் போதல்**
7. **வைசித்திரியம் - தன்னிடம் சேர்ந்துள்ள சொத்துக் களைத் தெய்வத்தால் வந்தது என்று எண்ணாது தன்னால் வந்தது எனக் கொள்ளல்.**

இருபா இருபஃது பாடலொன்றில் ஆணவத்தின் குணங்கள் எட்டு எனக்கூறப்படுகின்றது.

*கூறிய மூன்று மலத்தின் குணக்குறி*
*வேறு கிளக்கில் விகற்பம் கற்பம்*
*குரோதம் மோகம் கொலை அஞர் மதம் நகை*
*விராய் எண் குணனும் ஆணவம் என விளம்பினை*

1. விகற்பம் - **தன்னை விடப் பிறர் ஒவ்வாரெனில்.**
2. கற்பம் - **பிடித்ததை பிடித்திருத்தல்.**
3. குரோதம் - **கோபம் கொண்டு நினைத்தல்.**
4. மோகம் - **ஒன்றற்கு ஆசைப்படல்.**
5. கொலை - **உயிர்களைக் கொல்லுதல்.**
6. அஞர் - **சந்தமும் துக்கப்படுதலும்.**
7. மதம் - **நான் எனது என்ற மமதை மேலிடல்**
8. நகை - **சிரித்தல்**

உலகில் உள்ள சகல ஆன்மாக்கள் மீதும் செம்பில் களிம்பு போலப் பதிந்திருந்த போதிலும் ஒரு ஆன்மாவுக்கேனும் தனது உண்மை நிலையை ஒருபோதும் காட்டிக்கொள்வதில்லை. இதனை, உமாபதி சிவாசாரியார் மேல்வரும் திருவருட்பயன் பாடலிலே குறிப்பிட்டுள்ளார்.

*பலரைப் புணர்ந்து மிருட் பாவைக் குண்டென்றும்*
*கணவர்க்குத் தோற்றாத கற்பு.*

எனினும் இவ் ஆணவம் ஆன்மாக்களின் ஏனைய மலங்களின் செயற்பாடுகளுக்குக் காரணமாக இருப்பதுடன் இறுதியிலே வீடுபேறு அடைவதற்கும் துணையாக இருக்கின்றது. முத்தி நிலையில் வறுத்த வித்து முளை திறன் அற்றுக் கிடப்பது போல் வலிமை குன்றி காணப்படும். ஆணவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலத்தின் வலிமை காரணமாக ஆன்மா கன்மத்தில் இறங்கும். பின்பு மாயை மூலம் நாம் அறிவைப் பெற்று கன்மத்தின் பலனை உணர்ந்து நிஷ்காமிய வினை புரிவதனால் ஆணவத்தின் வலிமை குறைவடைந்து ஆன்மா முக்தியடைகின்றது.

## II. கன்மம்

கன்மம் என்பது வினை அல்லது செயல் எனப் பொருள் படும். கன்மம் மாயை என்னும் மலங்களும் இடையில் வந்து செயற்கையாகக் கூடுவதனால் ஆகந்து மலம் என்றும் கூறுவர். சைவ சித்தாந்திகள் ஒவ்வொரு ஆன்மாவின் நிலைக்கும் அவை புரிந்த வினையே காரணம் எனக் கூறுகின்றனர். அதாவது ஒரு மனிதன் உலகிலே பெற்றுக் கொள்கின்ற இன்ப துன்பங்கள். உயர்வு தாழ்வுகள் ஆகிய அனைத்திற்கும் அவனது வினையே காரணம் எனக் கூறுகின்றனர். இவ்வாறான வினை ஒருவனுக்கு எண்ணம். சொல். செயல் ஆகியவற்றால் பிறக்கின்றது என்றும் அவ்வாறு பிறக்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு எனவும் சித்தாந்திகள் துணிகின்றனர்.

கரும மலம் ஆன்மாவுக்கு அனாதியாக அமைந்த ஒன்றாகும். பௌத்தம். சமணம் போன்ற சமயத்தார் வினைக் கொள்கையில் வேறுபாடான விளக்கத்தைத் தருகின்றனர். இந்துக்களின் வினை விளக்கப்படி **வகுத்தான் வகுத்த வகை** என்று கூறுவதால் வினை புரியும் ஆன்மாக்களுக்கு அவ் வினைகளை மீண்டும் கூட்டுவிக்க ஒருவன் உளன் எனக் குறிப்பிடுவர். எனவே வினை. வினையின் வகை. வினை செய்தோன் வினையின் பயனை வினை செய்தோனுக்குக் கூட்டுவிக்கும் திருவருள் எனும் நான்கு விடயம் பொருள்களை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

கன்மத்தினால் இருத்தல். கிடத்தல். விடுதல். இயற்றல். பரநிந்தை. மேவல் போன்ற ஆறு குணங்கள் ஆன்மாவுக்கு ஏற்படுகின்றன. இவற்றின் தொழிற்பாடாக இந்திரிய வழிச் செல்லுதல். அவ்வழியில் ஒடுங்கி நிற்றல். முயலுதல். நன்மை தீமைகளைச் செய்தல். பிறன் பழி கூறல். பல பிறப்புக்களில் மேவுதல் ஆகியவற்றைச் செய்கின்றோம் என இருபா இருபஃது பாடல்மேல்வருமாறு விளக்குகின்றது.

*இருத்தலும் கிடத்தலும் இருவினை இயற்றலும்*
*விடுத்தலும் பரநிந்தை மேவல் என்று எடுத்த*
*அறுவகைக் குணனும் கருமத்து அருளினை*

சித்தாந்தம் கன்ம வினையை மூன்று வர்க்கமாகக் கூறுகின்றது. சஞ்சிதம் (தொகை வினை). பிரார்த்தம் (துவக்க வினை). ஆகாமியம் (மேல்வருவினை) என்பனவாக அவையுள்ளன. பிராரத்துவம் என்பது பழவினையாம். இதை அனுபவிப்பதற்காகவே ஒரு ஆன்மா அவ்வினைக்கேற்பத் தனு. கரண. புவன போகங்களைப் பெற்றிருக்கின்றது. இதை **பண்டு செய்த பழவினையின் பயன் கண்டுங் கண்டுங் களித்தியால் நெஞ்சமே** என்று அப்பர் பாட **அலவனைக் காதலித்துக் கால்மரித்துத் தின்ற பழவினை வந்தடைந்தக் கால்** என்று நாலடியார் பாடலிலும் கண்டு கொள்ள முடிகின்றது. ஆகாமியம் என்பது ஒவ்வொரு பிறப்பிலும் ஆன்மா புரியும் புதிய வினைகளாகும் எனப் பொருள்படுகின்றது. பிராரப்த வினையை அனுபவிக்கப் பிறந்த ஒருவன் அதை அனுபவிக்கும் போது ஆகாமிய வினையில் இறங்குகின்றான். சஞ்சிதம் என்பது கூடிக் குவிந்து கிடப்பது என்ற பொருளைத் தருகின்றது. ஆகாமிய வினையில் இறங்கும் ஒருவனால் முன் செய்த வினைகளையெல்லாம் அவனால் முடித்துக்கொள்ள முடியாமற் போகின்றது. அதற்காக இறைவன் எடுத்திருக்கின்ற உடலை அழித்து மீண்டும் ஒரு உடலைக் கொடுக்க வேண்டியேற்படும் போது அந்த நேரத்தில் அவனால் அனுபவிக்க முடியாமல். அறிய முடியாமல் கொஞ்ச வினை எஞ்சி நிற்கும். அதையே சஞ்சிதம் என்பர். பின்னர் அவன் வேறொரு உடலை எடுத்த பின்பு இச் சஞ்சித வினையே பிராரப்த வினையாக மாறி வருகின்றது. இதனால் இறப்பும் பிறப்பும் ஒரு மனிதனுக்குச் சங்கிலித் தொடர்பு போல் ஏற்பட்டு வருகின்றது. இதனை உமாபதி சிவம் போற்றிப் பஃறொடையில் **கடிய பிறப்பாற்பட்ட புண்ணாம் இருவினையும் போயகல** என்றும் நெஞ்சு விடு தூதில். **பிறப்பெல்லாம் பிறந்தும் இறந்தும் இருவினையின் பொல்லாங்கு துய்க்கும் பொறியிலியேனை** என்றும் பாடியுள்ளார்.

இக்கன்மத்தால் விளையும் மறுபிறவிகளை மாணிக்கவாசகர் சிவபுராணத்தில் **புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி...** என்று பாட. உமாபதி சிவம் சிவப்பிரகாசப் பாடலொன்றில் மேல்வருமாறு பிறப்பெடுக்கும் வகைகளைப் பகுத்துள்ளார்:

*"தோற்றியிடும் அண்டங்கள் சுவேதசங்கள் பாரில்*
*துதைந்து வரும் உற்பீசம் சராயுசங்கள் நான்கில்*
*ஊற்றமிகு தாபரங்கள் பத்தொன்பது என்றும்*
*ஊர்வனபதினைந்து அமரர் பதினொன்றோடு உலவா*
*மாற்றரு நீர் உறைவன நற் பறவைகள் நாற்காலி*
*மன்னியிடும் பப்பத்து மானுடர் ஒன்பதின்மர்*
*ஏற்றி ஒரு தொகை அதனில் இயம்புவர்கள் யோனி*
*எண்பத்து நான்கு நூறாயிரம் என்று எடுத்தே."*

இதிலிருந்து விடுபடுவதற்கு ஒருவன் தான் புரியும் ஆகாமிய வினையை நிஷ்காமிய வினையாகப் புரிதல் வேண்டும் அதன் மூலம் இறப்பு பிறப்பு என்பனவற்றிலிருந்து விடுதலையடையலாம் எனக் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## III. மாயை

மாயையை ம்+யா எனப் பிரித்து பொருள் விளக்கம் தருகின்றனர். ம்-என்றால் தோன்றுதல் யாது என்றால் ஒடுங்குதல் எனவாகி பிரபஞ்சம் தோன்றி மீள ஒடுங்குதற்கிடமாகியிருப்பது மாயை எனப் பொருள் விரிக்கின்றனர். இதன் விளக்கத்தை மெய்கண்டதேவர் சிவஞான போதத்தில் ஒடுக்கத்தை முன்னுமாக, தோற்றத்தைப் பின்னுமாக **ஒடுங்கின அங்காரத்தினல்லது உற்பத்தியில்லை** எனப் பாடியுள்ளார்.

மாயையின் விபரமான இலக்கணங்களைச் சிவாகமங்களிலே தெளிவாகக் கண்டுணரலாம். மிருகேந்திர ஆகமத்தில் மாயை என்பது ஏகப் பொருள். அது உயிரை மயக்கும் பொருள். உலகிற்கு மூல காரணமான பொருள். அது வியாபகமாய், நித்தமாய் உள்ள பொருள் என மாயாபிரகரணத்தில் வரை விலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. **மதங்க பாரமேஸ்வர** ஆகமத்தில் மாயாபடலம் என்ற தனியொரு அத்தியாயமே உள்ளது. அதில் **சைதன்ய நிலையம், விஸ்வம், அசேதனம், அரூபகம்** என மாயா விலக்கணங்களை அடுக்கிக் கூறுகின்றது. இவ்வாறு ஆகமங்கள் தரும் மாயை விளக்கத்தையே சைவசித்தாந்த நூல்கள் ஒழுங்குபடுத்திக் கூறுகின்றன. இதற்கேற்றால் போல் அமைவது சிவஞான சித்தியாரின் பாடலாகும்.

***நித்தமாய் அருவாய் ஏகநிலையதாய் உலகத்துக்கோர்***<br>***வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமலனுக்கோர்***<br>***சத்தியாய்ப் புவனபோகந் தநுகரணமு முயிர்க்காய்***<br>***வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமுஞ் செய்யுமன்றே***

இப்பாடலின் படி மாயை என்பது ஒன்றுதான் உளது. அது உண்மையானது. கண்ணுக்குப் புலப்படாதது. உலகின் தோற்றத்திற்கு வித்துப்போன்றது. எங்கும் மறைந்து வியாபகமாய் இருப்பது. இறைவனுக்கு பரிக்கிரக சக்தியாய் விளங்குவது. ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன போகங்களை அனுபவிப்பதற்கு காரணமாக அமைவது என மாயையின் இலக்கணங்களைக் கூறுகின்றது.

இருபா இருபஃது பாடல் அடிகளொன்றில் மாயைக்கு ஏழு குணங்கள் உண்டு என அருணந்தி சிவம் அருளியுள்ளார்.

***அஞ்ஞானம் பொய் அயர்வே மோகம்***<br>***பைசால சூனியம் மாச்சரியம் பயம்***<br>***ஆய ஏழ் குணனும் மாயைக்கு அருளினை***

மாயை தத்துவ விளக்கம் கொண்ட மலமாகும். **ஆகின்ற ஆறு ஆறு அருஞ்சைவம்** எனத் திருமூலர் கூறுவதில் மாயா தத்துவம் 36 எனக் குறிப்பிடுகின்றார். தத்துவங்கள் மாயேயம் - அது நித்தியம் என்பதை மெய்கண்டார் **மாயாதனு விளக்கம்** என்பார். இவ்வாறான தத்துவங்களடங்கிய மாயை **சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை** என மூன்று வகைப் படுகின்றது. சுத்த மாயையில் இருந்து நாதம், விந்து, சாதாக்கியம், மகேசுவரம், சுத்தவித்தையென்னும் ஐந்து சிவதத்துவங்கள் உற்பத்தியாகின்றன. இவ்வாறான மாயை நித்தியமாய், அருவாய், சடமாய், மயக்கஞ் செய்யாததாய், சொல்வடிவம் சுத்தமாகிய பொருள் வடிவுந் தோன்றுவதற்கு முதற் காரணமாய், மூவகை உயிர்களிடத்தும் நிறைவுடையதாய், விஞ்ஞானகலரும், பிரளயாகலருக்கும் தன் காரியமாகிய விந்துவிலிருந்து சுத்த தனு, கரண, புவன போகங்களை உற்பத்தியாக்கிக் கொடுப்பதாய் இருக்கும்.

அசுத்த மாயையில் இருந்து காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மூலப்பிரகிருதி என்னும் ஏழு வித்தியா தத்துவங்கள் தோற்றம் பெறுகின்றன. இவ் ஏழின் தோற்றங்களையும், அதன் தொழில் முறைகளையும் அருணந்தியார் சிவஞானசித்தியார் பாடல்களிற் தெளிவுறுத்தியுள்ளார்.

1. காலத்துவம் தோன்றும் முறையும் தொழில்பாடும்:
   **மாயையிற் காலமோடு நியதி பின் கலாதி தோன்றும்**<br>**ஆயவக் கால மூன்றாக்கியு மளித்தும்...**

2. நியதி, கலை, வித்தைகள் தோன்றும் முறையும் தொழில்பாடும்:
   **நியதி பின் றோன்றிக் கன்ம நிச்சயம் பண்ணி நிற்கும்**<br>**அயர்விலாக் கலைபின் றோன்றி யாணவ மொதுக்கிச்**<br>**சித்தின் செயல்புரி கிரியா சக்தி தெரிவிக்குஞ் சிறிதே வித்தை....**

3. அராகம், புருடன் தோன்றும் முறையும் தொழில்பாடும்:
   **விச்சையி னராகந் தோன்றி வினைவழி போகத் தின்கண்**<br>**இச்சையைப் பண்ணி நிற்குந் தொழிலறி விச்சை மூன்றும்**<br>**வைச்சபோ திச்சா ஞானக்கிரியைமுன் மருவி யான்மா**<br>**நிச்சய புருடனாகி....**

4. மூலப்பிரகிருதி தோன்றும் முறையும் தொழிற்பாடும்:
   **வருங்குண வடிவாய் மூலப் பிரகிருதி கலையிற் றோன்றிக்**<br>**தருங்குண மூன்றா யொன்றிற் றான் மூன்றாக மும்**<br>**மூன்றாகும்....**

பிரகிருதி மாயையில் இருந்து சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்வை, ஆக்கிராணம் முதலிய ஞானேந்திரியங்களும், வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் ஆகிய கன்மேந்திரியங்களும், ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி ஆகிய பஞ்ச பூதங்களும் சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம் முதலிய அந்த கரணங்கள் ஈறாக ஆன்ம தத்துவங்கள் 24உம் உற்பத்தியாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு முப்பத்தாறு தத்துவங்களும் மாயையில் இருந்து தோற்றம் பெறுகின்றன. அவை ஆன்மாவுக்குப் புரியும் மொத்தச் செயல்களையும் அருணந்தி சிவாச்சாரியார் மேல் வரும் பாடலில் இரத்தினச் சுருக்கமாகக் கூறுவார்:

*சுத்ததத் துவங்க ளென்று முன்னமே சொன்ன வைந்தும்*
*இத்தகை மையினி யம்பு மிவை முப்பத் தொன்றுமாகத்*
*தத்துவ முப்பத் தாறாஞ் சைதன்னி யங்களைந்து*
*சித்தசித் தான்மா வொன்று முப்பது மசித்தே செப்பின*

(சு. து.)

## பாசுபதயோகம்

பதுமாசனத்தில் அமர்ந்து விநாயகர், சிவபெருமான் தனது குரு ஆகியோரைத் தனது மனத்தினால் வணங்கி, உடல் வளையாமல் நேரேயமர்ந்து தன்னுடைய மூக்கின் நுனியைப் பார்த்தவாறே யோகப் பயிற்சி செய்ய வேண்டும். தனது சிரசிற்கு மேலே பன்னிரண்டு அங்குல உயரத்தில் வெண்தாமரை மலர் இருப்பதாகவும், அதன் நடுவில் பொன்னிறமாய் பிரணவ வடிவில் சிவபெருமான் ஒளிமிகுந்து பிரகாசிப்பதாகவும் பாவனை செய்து தியானிக்க வேண்டும். இதுவே பாசுபத யோகம் எனப்படும். இந்த தியான சாதனையால் பேரானந்தம் கிட்டும். (வ. வை.)

## பாசுபதம்

நூல்கள், சாசனங்கள் என்பவற்றின் மூலம் அறிமுகமாகும் சைவசமயப் பிரிவுகளில் மிகவும் பழைமையானது பாசுபதம். பசுபதியை முழுமுதற் கடவுளாகப் போற்றும் சமயநெறி பாசுபதம் எனப்படும். சைவசமயத்தின் உற்பத்தி வேதங்களுக்கும் முற்பட்டது என்று அறிஞர் பலர் கொள்வர். சிவனைப் பற்றிய சிந்தனைகளும் கோட்பாடுகளும் காலாகாலமாக வளர்ச்சி பெற்றவை. வேதங்கள் போற்றும் உருத்திரன் முதலான தேவர் பலரின் பண்புகள் சிவனுக்கு உரியனவாகின. ஸ்வேதாஸ்வதர உபநிஷதம் சிவனை மகாதேவனாகப் போற்றுகின்றது. இந்திரன் முதலான மற்ற எல்லாத் தேவர்களிலும் மேலானவனாகச் சிவனை அது கொள்கின்றது. அது சைவ தரிசனங்களுக்கு முன்னோடியானது, ஆதாரமானது என்றுங் கொள்ளலாம். சிவனாகிய மகாதேவனே பரப்பிரம்மம் என்பது அதன் துணிபாகும்.

பாசுபதம் என்பதனை மகாபாரதம் குறிப்பிடுகின்றது. சாங்கியம், யோகம், பஞ்சராத்திரம், வைதிகம் என்பவற்றோடு அது இணைத்துச் சொல்லப்படுகின்றது. பசுபதி, ஸ்ரீகண்ட என்னும் நாமங்களை உடையவரும் உமாபதியுமாகிய சிவனே பாசுபதம் என்னும் ஞானத்தை உபதேசஞ் செய்தார் என்றும் மகாபாரதம் கூறும். வாயுபுராணத்திலே சிவனுடைய அவதாரம் பற்றிய கதையுண்டு இருபத்தெட்டாவது மகாயுகத்தில் மகாவிஷ்ணு வாசுதேவராக அவதரிக்கும் காலத்தில் தான் நகுலின் என்னும் பெயருடைய பிரமச்சாரியாக வரப்போவதாகப் பிரமதேவனுக்குச் சிவபிரான் சொன்னார். சித்தர்களின் பூமியான காயாரோகணத்திலே சுடுகாடொன்றில் இடப்பட்ட பிரேதமொன்றிலே புகுந்து வடிவெடுக்கப் போவதாகச் சொன்னார். குஸிகர், கார்கி, மித்திரகர், ருஷ்ட என்னும் நான்கு சீடர்களுக்குச் சித்தாந்தத்தை உபதேசிக்கப் போவதாகவும், அதனைக் கேட்டதும் அவர்கள் உருத்திரலோகம் போவார்கள் என்றும், அதன் பின் பூலோகத்திற்கு வரமாட்டார்கள் என்றும் சொன்னார். இக்கதை இலிங்க புராணத்திலும் காணப்படுகின்றது. அதிலே சிவனின் அவதாரமாகிய நகுலின் என்னும் பெயர் லகுலின் என மாறிவிடுகின்றது.

லகுலின் (நகுலின்) என்ற சைவசமய ஆசாரியார் ஒருவரைப் பற்றிப் பிற்காலத்துச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. கதையினைக் (லகுலம்) கையிலேந்திய சிவனுடைய அவதார புருஷரைப் பற்றி உதைப்பூருக்குச் சில மைல்களுக்கு அப்பாலுள்ள ஏகலிங்கம் என்னுமிடத்து நாதர் கோயிலிலுள்ள சாசனத்திற் குறிப்புண்டு. அச்சாசனம் கி.பி. 971 ஆம் ஆண்டிற்குரியது. லகுலின் பிருகுகச்சத்திலே தோன்றினார் என்று அதிலே சொல்லப்படுகின்றது. சிவனது அவதாரமாகிய பட்டாரக ஸ்ரீ லகுலீஸர் பற்றிய கதை 13 ஆம் நூற்றாண்டுச் சாசனமொன்றிலே இடம்பெற்றுள்ளது. சிவன் பட்டாரக ஸ்ரீ லகுலீசர் என்ற பெயருடன் அவதாரமாகி லாட்ட தேசத்திலே காரோஹணத்தில் வாழ்ந்தமை பற்றியும் அவரது நான்கு சீடர்களான கௌசிகர், கார்க்கியர், கௌருஷர், மைத்திரேயர் என்போர் பற்றியும் அது குறிப்பிடுகின்றது. சைவசமயத்தில் நான்கு பிரிவுகள் ஏற்படுவதற்கு அந்நால்வரும் காரணமாயிருந்தனர் என்றும் சொல்லப்படுகின்றது.

லகுலீசர் என்னும் பெயருடைய சமயஞானி ஒருவர் சைவசமயம் பற்றிய ஒருவகையான சிந்தனைகளைப் போதித்தார் என்பதற்கு இக்குறிப்புகளைச் சிலர் ஆதாரமாகக் கொள்வர். பஞ்சார்த்த வித்யா என்னும் நூலை அவரே இயற்றினார் என்றும் கருதலாம். மாதவர் எழுதிய சர்வதர்சன சங்கிரகத்திலே பாசுபதம் பற்றிய பகுதியில் இந்நூல் குறிப்பிடப்படுகின்றமை கவனித்தற் குரியது.

ஆன்மாக்கள் விடுதலை அடைவதற்கென்று ஐந்து வகையான விடயங்களைப் பற்றிச் சிவபெருமான் உபதேசம் பண்ணியுள்ளாரென்று பாசுபதர் கொள்வர். அவை (1) காரியம், (2) காரணம், (3) யோகம், (4) விதி, (5) துக்காந்தம் என்பனவாகும். இவற்றைப் பற்றிய தெளிவான உணர்வு மோட்ஷத்திற்கு அடிப்படையானது. முதலிரண்டும் நுட்பமான தத்துவங்கள் பற்றியவை. மூன்றாவதான யோகம் சித்தத்தாற் சிவனோடு இணைதல் பற்றியது. யோகம் இருவகைப்படும். ஒன்று செயலாற்றும் வகையானது. மற்றது செயல் துறந்த நிலையில் உள்ளது. மந்திரோபாசனை, தியானம் முதலானவை முதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைக்குரியவை. இரண்டாவது உணர்வன்றி வேறொன்றும் அல்லாத நிலையிலுள்ளமையாகும். தர்ம சொரூபமான இறைவனை அடைவதற்கு ஏதுவானது விதி. அதிற் பிரதானமானது. இணையானது என்று இரு அம்சங்கள் உண்டு. சரியை என்பது பிரதானமான வழி. அது நேரடியானது. அதில் விரதம். துவாரம் என்று இரு கோணங்கள் உண்டு. உடம்பு முழுவதும் திருநீற்றைப் பூசுதல். சாம்பரிற் படுத்தல். சிரித்தல். பாடுதல். ஆடுதல் போன்ற உபஹாரங்கள் செய்தல். மந்திரோபாசனை. வலம்வருதல் என்பன விரதங்களாகும். போலியான உறக்கம் போன்ற அசாதாரணமான பாவனைகள் துவாரங்கள் எனப்படும். அவை விரதங்களுக்குத் துணையானவை.

துக்கத்திலிருந்து முற்றாக விடுபடும் நிலை துக்காந்தம் எனப்படும். அது அநாத்மக(ம்) சாத்மக(ம்) என இரு வகைப்படும். அநாத்மகம் என்பது துன்ப உணர்வுகளிலிருந்து முற்றாக விடுபடுதல். திருஷ்டி சாதனை என்பன தொடர்பாக அபூர்வமான ஆற்றலையும் ஆளுமையினையும் அடையும் நிலையே சாத்மகம் என்பது (1) தரிசனம். (2) சிரவணம். (3) மனனம். (4) விஞ்ஞானம். (5) சர்வக்ஞத்தவம் என்பன திருஷ்டியின் இயல்புகளாகும்.

நுட்பமானவற்றையும் சூக்குமமானவற்றையும் மறைந்துள்ளனவற்றையும் மிகத் தூரமானவற்றையும் கண்டு உணரும் ஆற்றலே தரிசனம். எல்லா வகையான ஓசையொலியெலாம் கேட்டு உணரும் அபூர்வமான சக்தியே சிரவணம். மனனம் என்பது சிந்தனைக்கு எட்டிய எல்லாவற்றையும் அறிந்துகொள்ளும் அற்புதமான ஆற்றலாகும். ஞானம். ஞான நூல்கள். ஞானபோதனைகள் என்பன பற்றிய வரைவிலாத அறிவே விஞ்ஞானம். சர்வகஞத்தவம் என்பது சமயநெறி முறைகள் பற்றிய சகல விடயங்களையும் பற்றிய அதீதமான ஞானமாகும்.

வினைத்திறன் (1) மனோஜவித்துவம். (2) காமரூபித்தவம். (3) விகரணதர்மித்துவம் என மூவகைப்படும். எதனையும் உடனடியாகவும் இயல்பாகவும் செய்யும் ஆற்றல் மனோஜவித்வம் என்பதாகும். எதுவித முயற்சியுமின்றி விரும்பிய வடிவங்களையும் உடம்புகளையும் உணர்வுகளையும் அடையும் ஆற்றலே காமரூபித்துவம். எல்லாம் வல்ல ஆற்றல் விகரணதர்மித்துவம் எனப்படும். இந்திரியங்கள் செயற்படாத நிலையிலும் அது இயங்கும். பாசுபத நெறியிலே விதிக்கப்பட்டுள்ள ஆசாரங்களை நெடுங்காலமாகவும் இறுக்கமாகவும் கடைப்பிடிப்பதன் மூலமே அசாதாரணமான ஞானத்தையும் ஆற்றலையும் அடையலாம். துக்க நிவாரணமே மோக்ஷமென்று மற்றச் சமயநெறிகள் கொள்ளும். ஆனாற் பாசுபதர்கள் மோக்ஷத்திலே துக்கநிவாரணத்தோடு வரம்பிலா ஆற்றல். ஞானம் போன்ற சித்துக்களும் கிடைக்குமென்று கொள்வர்.

மோரியர் காலம் முதலாக இந்திய மக்களிடையே செல்வாக்குப் பெற்ற சைவசமயப் பிரிவுகளிற் பாசுபதமும் அடங்கும். பதஞ்சலியின் மகாபாஷ்யத்திலே சிவபாகவதர்களைப் பற்றிய குறிப்புண்டு. நியாயம். வைசேஷிகம் ஆகிய தர்சனங்களை முறையே போதனை செய்தவர்களான கௌதமரும் கணாடரும் சைவர்களென்று 'சட்தர்சன சமுச்சய' என்ற நூலில் ஹரிபத்திரர் குறிப்பிட்டுள்ளார். நையாயிகர் சைவர் என்றும் வைசேஷிகர் பாசுபதர் என்றும் அந்நூலுக்கு எழுதிய உரையிலே குணரத்தின(ர்) சொல்வார்.

அசோகனுக்குப் பின் அரசு புரிந்த மோரியருள் ஒருவனாகிய ஜலௌகன் சைவநெறி தழுவியவன். குஷாண மன்னர் சிலர் சைவநெறியில் அபிமானங் கொண்டிருந்தனர். சிவசின்னங்களாகிய திரிசூலம். நந்தி என்பவற்றின் உருவங்கள் அவர்களின் நாணயங்களிற் பொறிக்கப்பட்டன. இராமாயணம் சிதிகண்ட. மஹாதேவ. உருத்திரன். திரியம்பக. சங்கர. பசுபதி எனப் பலவாறு சிவனைக் குறிப்பிடுகின்றது. ஆதிகாவியமான இராமாயணம் உருவாகிய காலத்திற் சைவம் சமூகத்திற் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தது. பின்பு. புராணங்களில் விரிவாகச் சொல்லப்படும் கதைகளின் சாராம்சங்கள் அதிற் காணப்படுகின்றன.

(சி. ப.)

# பாஞ்சராத்திரம்

வைணவ ஆகமம் இரு பிரிவாக உள்ளது. ஒன்று பாஞ்சராத்திரம். மற்றையது வைகானசம். வேதங்களும். ஆகமங்களும் ஸ்ரீமத் நாராயணனால் அருளப்பட்டவை என அவர்கள் நம்புகின்றனர். வேதங்களின் விரிவை விளங்கமுடியாதவர்களுக்கு அதன் சாரமாக அமைந்தவை இவ் ஆகமங்கள் எனவும் விளக்குவர். ஆகமங்களை வேதங்களின் சிறப்பாக உபநிடதங்களின். தெளிவாகக் கூறும் மரபுண்டு.

பொதுவாக இவை இரண்டிற்கும் அதிக வேறுபாடில்லை. ஆகம உண்மைகளைக் காட்சி அளவையாலோ அனுமான அளவையாலோ விளங்கிக் கொள்ள முடியாது என்பதும் இறையருளினாலேயே விளங்கிக் கொள்ளமுடியும் என்பதும் வைணவர்களின் நம்பிக்கை.

ஆகம மரபினைப் பாஞ்சராத்திர மரபு. வைகானச மரபு என இரண்டாகப் பாகுபடுத்திக் கூறினும் இவ்விரண்டிற்கும் அடி நிலைத் தத்துவம் ஒன்றே என்பர். ஆயினும் பாகவத சாத்திரத்தைப் பாஞ்சராத்திரம் என்றும். பாகவத தர்மத்தைப் பின்பற்றுவோரைப் பாஞ்சராத்திரிகள் என்றும் கூறுவதே பெருவழக்காக உள்ளது. பாஞ்சராத்திரம் என்னும் பெயருக்கான காரணம் தெளிவாக வில்லை. இவர்கள் பஞ்ச காலப் பூசை செய்பவராக இருத்தல் வேண்டுமென பாஞ்சராத்திர நூல்கள் கூறுகின்றன. ஒரு நாளை ஐந்து காலப் பகுதியாகப் பிரித்து ஒவ்வொரு காலத்திற்கும் தனியான வழிபாட்டு முறைகளைக் கொண்டவர்களாக இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுகிறார்கள். இறைவன் பால் மனம், வாக்கு, காயம் என்ற மூன்றையும் செலுத்தி லயித்தல், கோயிலை நாடுதல், அபிகமனம் வழிபாட்டுத் திரவியங்களைச் சேகரித்தல், உபாதானம் - வழிபாடு செய்தல், தெய்வீக நூல்களைக் கேட்டல், சிந்தித்தல், தியானித்தல், உரையாடல், சொற்பொழிவாற்றல், கற்றல், ஸ்வாத்யாயம் - யோக நெறியைப் பயிலல் என வழிபாடு ஐந்தெனக் கருதப்படுகின்றது. பரம்பொருள், பர வியூக, விபவ, அந்தர்யாமி, அர்ச்ச என்னும் ஐந்து கோலங்களில் வெளிப்படுமாற்றைக் கூறுவது பாஞ்சராத்திரம் என்பர் சிலர்.

தயிரிலிருந்து வெண்ணெய் எடுப்பதுபோல், உபநிடதத்திலிருந்து பாஞ்சராத்திரம் தோன்றிற்று என்பர். இதற்கு மாறாக வேதங்களில் உள்ளம் தெளியாத சாண்டில்யர் பாஞ்சராத்திரத்தைப் பயின்றதாகக் கூறி இவ் ஆகமங்களுக்கு ஏற்றம் கூறுவதுமுண்டு. பாஞ்சராத்திர வழிபாட்டு மரபை அறிந்தவர் பஞ்ச கால ஞானி என அழைக்கப்படுகிறார்.

பாஞ்சராத்திர வழிபாட்டு மரபிலே தீட்ஷை பெறுவது முக்கிய சடங்காகக் கருதப்படுகின்றது. இதற்கு கார்த்திகை மாதம் விசேடமானதாகக் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. வளர் பிறைப் பருவத்துப் பன்னிரண்டாம் நாள் பாஞ்சராத்திர தீட்ஷை பெறுவதற்கு உகந்த நாள் என பூனா செப்புப் பட்டயம் ஒன்று கூறுகிறது. இதில் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு இப் புனிதமான சடங்கினை மேற்கொள்ளக் கூடாது என்றும் நம்பிக்கையுடைய வர்கள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும் என்றும் ஜெயாக்கிய சம்ஹிதை நிபந்தனை விதிக்கிறது. அச் சடங்கு முடிந்ததும் உணவும் பிற கொடைப் பொருள்களும் பாஞ்சராத்திர வைணவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என இந் நூல் குறிப்பிடுகின்றது. தீட்க்ஷை பெற்றவர் விஷ்ணுவோடு தொடர்புடைய பெயரால் அழைக்கப்பட்டார். அத்துடன் தீட்க்ஷை மூலம் இரகசியமான ஞானத்தையும், புனிதமான மந்திரத்தையும் அடையப்பெற்று இயற்கைக்கு மேலான ஆற்றலைப் பெறலாம் என்பது வைணவரின் கொள்கை.

தீட்க்ஷை பெற்றவர்கள் கைகளில் விஷ்ணுவின் ஆயுதங்களான சக்கரம், சங்கு முத்திரையைப் பதித்துக் கொள்ள வேண்டுமெனப் பாஞ்சராத்திர சம்ஹிதைகள் பரிந்துரைக்கின்றன. இவ்வாறு சக்கரம் பதிக்கும் சடங்கை சக்கரதாரணம் என சர்வ தரிசன சங்கிரகம் என்னும் நூல் விவரிக்கின்றது. மகாபாரதம் அசுவமேதிக பர்வதத்தில் சக்ரதாரண முனிவரொருவர் நினைத்த மாத்திரத்தில் மறைந்து போகவும், விரும்பிய இடத்திற்குப் போவதற்கும் வல்லமை உடையவராக இருந்தார் எனக் கூறப்படுகின்றது. பாஞ்சராத்திர வழிபாட்டு மரபில் விஷ்ணு சக்கரம் சிறப்பு மிக்கது. விஷ்ணு சக்கரவடிவில் இருப்பதாக அஹிர் புதன்ய சம்ஹிதை கூறுகிறது. அசுவகோசரின் புத்த சரிதம் புத்தர் தவம் செய்ச் சோலையில் நுழைந்தபோது சக்ரதார முனிவர்கள் தமது பெண்டிர்புடை சூழக் கைகளில் யோக தண்டங்களைத் தாங்கியவர்களாய்த் தலைகளைப் பாதி தாழ்த்தியவர்களாய் இருக்கக் கண்டார் எனக் கூறுகிறது.

இப்பிரிவினர் பிராமண ஆன்மீகக் குருவின் மேன்மையை ஒப்புக் கொள்கின்ற அதேவேளை பிறவருணப் பிரிவைச் சார்ந்தவர்களுக்கும் தீட்சை வழங்கலாம் எனக் கூறுகின்றனர். உலகம் முழுவதற்குமே சமய தீட்சை வழங்கப்பட வேண்டுமென ஜயாக்கிய சம்ஹிதை கூறுகின்றது.

"தீக்வுயேன்மேதனீம் சர்வாம் கிம் புனஸ்கோப
சர்ப்பிதான்"

பாஞ்சராத்திரத்தில் சக்திவழிபாடு மிகப் பிற்காலத்தில் புகுத்தப்பட்டு இருக்கலாம். ஆனால் தொடக்கத்திலிருந்தே இந்த வழிபாடு தாந்திரிகத்துடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என அறிஞர் பலர் ஒப்புக் கொள்கின்றனர்.

பாஞ்சராத்திர ஆகமங்கள் இந்தியாவின் பல்வேறு இடங்களிலே பல்வேறு காலங்களிற் தோன்றியவை. பாரதத்தில் சாந்தி பர்வத்திலுள்ள நாரதீய பகுதிக்கு முற்பட்ட காலங்களிலும் சில பாஞ்சராத்திர சம்ஹிதைகள் இருந்திருக்க வேண்டும் என்றும் இராமானுஜருக்குப் பின்னும் சில தோன்றியிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. (நி. நி.)

## பாஞ்ச ஜன்யம்

இந்தியப் பௌராணிக மரபில் சங்குவகைகளில் மிக உயர்ந்ததாகப் பாஞ்சசன்யம் குறிப்பிடப்படுகிறது.

ஆயிரம் இப்பிகள் சூழ்ந்தது ஒரு இடம்புரி
ஆயிரம் இடம்புரிகள் சூழ்ந்தது ஒரு வலம்புரி
ஆயிரம் வலம்புரிகள் சூழ்ந்தது ஒரு சலஞ்சலம்
ஆயிரம் சலஞ்சலங்கள் சூழ்ந்தது ஒரு பாஞ்சசன்யம்.
திருமாலின் இடதுகரத்தில் வீற்றிருப்பது பாஞ்சசன்ய சங்காகும்.

*"ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன*
*பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன்னியமே"*

என்ற கோதையின் கூற்றுக்கொப்ப பாரதப்போரில் வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டு நூற்றுவர் வீழ்ந்தனர். ஐவர் வாழ்ந்தனர். கொல்களிற்றின் மருப்பொசித்த மாதவனின் கற்பூரமும் கமலப்போதும் கலந்த வாய்ச்சுவையை நன்கு அறிந்திருக்கும் பேறு பெற்றது பாஞ்சசன்யம்.

பஞ்சாயுத ஸ்தோத்திரம் திருமாலின் ஆயுதங்களான சங்கு, சக்கரம், கதை, வாள், வில் இவைகளின் பெருமைகளைக் கூறி இவைகளைத் துதிப்பவர்கள், பாவம் நீங்கி, துன்ப நீக்கம் பெற்று இன்புறுவார்கள் என்று கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"விஷ்ணோர் முகோத்தானில பூரிதஸ்ய*
*யஸ்யத்வனிர் தானவதர் பஹந்தா!*
*தம் பாஞ்ச ஜன்யம் சசிகோடி சுப்ரம்*
*சங்கம் சாதஹோம் சரணம் ப்ரபத்யே!"*

**இதன்பொருள்:** விஷ்ணுவின் வாயில் வைத்துக் கிளம்பும் எந்த மேகராஸியானது அசுரகூட்டங்களுக்குக் காலனோ, அதைத் தோற்றுவிக்கும் ஆயிரங்கோடி சந்திரப் பிரபையுடன் விளங்கும் அந்தப் பாஞ்சஜன்யத்தை நான் எப்பொழுதும் சரணமடைகிறேன்.

மேலும் கவிதார்க்கிக சிங்கம் எனக் கூறப்பெறும் ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஸ்ரீ ஷோடசாயுத ஸ்தோத்திரத்தில் ஆயுத புருஷனான சுதர்சனத்தின் பதினாறு ஆயுதங்களை வர்ணிக்கின்றார். அதில் பாஞ்ச ஜன்யத்தை

*"தாரத்வம் யஸ்யஸம்ஸ்தானே சம்தேச பரிதிருச்யதே!*
*ப்ரபோ: ப்ரஹரணேந்த்ரஸ்ஸ பாஞ்ச ஜன்ய: ஸபாதுவ:"*

"எந்த சங்கின் உருவிலும், ஒளியிலும் பிரணவத்தின் வழுவும் தன்மையும் காணப்படுகிறதோ அந்த ஆயுதராஜனான பிரபு ஸ்ரீ சுதர்சன புருஷனுடைய பாஞ்சஜன்யம் உங்களைக் காத்தருள்க என்பதாகும்."

மேலும் பாஞ்சஜன்யம் ஓம் எனும் பிரணவத்தை ஒத்துள்ளது. நாதமே பிரணவமாகும். உலகின் தோற்றுவாய் பிரணவமே. இதுவே பாஞ்சஜன்யத்தின் பெருமைக்குக் காரணமாகும்.

சங்கை ஏந்திய தடக்கையனான சங்கபாணிக்குப் பல்லாண்டு கூறியதோடு அமையாது படைப்போர் புக்கு முழங்கும் அப்பாஞ்ச ஜன்யமும் பல்லாண்டே எனப் பெரியாழ்வார் பல்லாண்டு கூறி பெருமைப்படுத்தியது நினைந்து மகிழ்வதற்கு உரியது.

(வ. வை.)

## பாட்ட சித்ரா ஓவியங்கள்

ஒரிசா மக்களின் கலைப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் கலைகளில் குறிப்பிடத்தக்க ஒன்று பாட்ட சித்திரா ஓவியங்கள். இவ்வோவியங்களின் தோற்றம் புகழ் பெற்ற பூரி ஜகந்நாதர் ஆலய வழிபாட்டு முறையிலிருந்து ஆரம்பமானதாகக் கருதப்படுகின்றது.

பூரிஜகந்நாதர் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் ஸ்நான பூர்ணிமா என்னும் திருவிழா ஒன்று நடைபெற்று வருகிறது. ஆனி மாதத்தில் 15 நாட்கள் இத்திருவிழா நடைபெறும். இத்திரு விழாவின் சிறப்பு என்னவென்றால் திருவிழா நடைபெறும் பதினைந்து நாட்களும் பூரி ஜகந்நாதர் மற்றும் அவருடன் இருக்கும் தெய்வங்களான பாலபத்திரர், சுபத்திரா தேவி ஆகியோரின் மூல விக்கிரகத்திற்கு பதிலாக அவர்களுடைய உருவங்கள் வரையப்பட்ட திரைச்சீலை ஓவியங்கள் தான் கர்ப்பக்கிரகத்தில் வைக்கப்பட்டிருக்கும். மூல விக்கிரகங்களைத் திரைமூடிப் பக்தர்களின் பார்வையிலிருந்து மறைத்து விடுவார்கள்.

ஆனி மாதம் பௌர்ணமி நாளிலிருந்து அடுத்த அமா வாசை வரை பதினைந்து நாட்களுக்கு பூரி ஜகந்நாதரை வணங்க வரும் மக்கள் அனைவரும் கர்ப்பக்கிரகத்தில் உள்ள திரைச்சீலையில் வரையப்பட்ட பூரி ஜகந்நாதர் மற்றும் உமா தேவதைகளின் உருவங்களைத் தான் வழிபடுவார்கள். அவ்வாறு கர்ப்பகிரகத்தில் வைக்கப்படும் திரைச்சீலை ஓவியங்களுக்கு பாட்ட சித்ரா ஓவியங்கள் எனப் பெயரிட்டு அழைக்கப்படுகிறது. பாட்டா என்ற சொல்லுக்கு ஒரிய மொழியில் துணி என்று பொருள். சித்ரா என்பது ஓவியத்தைக் குறிக்கும். பாட்ட சித்ரா என்பது துணியில் வரையும் ஓவியங்களைக் குறிக்கும். பூரி ஜகந்நாதர் ஆலய வழிபாட்டு முறையிலிருந்து உருவானவையே பாட்ட சித்ரா ஓவியங்கள்.

இவ் ஓவியங்கள் முற்காலத்தில் ஒரிசாவில் மட்டுமல்லாது இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு அரசர்களின் அரண்மனை களிலும் பிரபுக்களின் மாளிகைகளிலும் இடம்பெற்றிருந்தன. இப்பொழுதும் பூரிஜகந்நாதர் கோயிலுக்கு வரும் பக்தர்களிற் பெரும்பாலோர் பாட்ட சித்ரா ஓவியங்களை வாங்கிக் கொண்டு போய்த் தங்கள் வீடுகளில் வைக்கிறார்கள்.

இவ் ஓவியங்களை வரைவதற்கான துணி அவ் ஓவியர்களாலேயே தயாரிக்கப்படுகின்றது. வெள்ளைத் துணியில் புளியங் கொட்டையை அரைத்து உருவாக்கப்பட்ட ஒரு பசையும் சுண்ணாம்புத்தூள், கலந்த வேறு ஒரு பசையும் பூசப்பட்டு உலர விடப்படுகின்றது. இவ்வாறு பதப்படுத்தப்பட்ட துணி ஒரு விதமான கல்லினாலே தேய்க்கப்பட்டு சொரசொரப்பில்லாமல் வழுவழுப்பான நிலைக்குக் கொண்டு வரப்படுகின்றது.

இவ் ஓவியங்களை வரைவதற்கு வெள்ளை, கறுப்பு, மஞ்சள், சிவப்பு, நீலம் ஆகிய 5 நிறங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த 5 நிறங்களும் இயற்கை வர்ணங்களே என்பதும் குறிப்பிடத்தக்கது. வண்ணச் சாயங்களை உருவாக்க இயற்கைப் பொருட்களான வெண் சங்கு, விளக்குப் புகை, ஒரு வகை மஞ்சள் கற்கள், கெகு என்னும் பொருள் ஆகியன பயன்படுத் தப்படுகின்றன.

பாட்ட சித்ரா ஓவியங்களில் பூரி ஜகந்நாதரின் திருவுரு வமும் அவருடன் தொடர்புடைய புராண இதிகாசக் கதைகளுமே அதிகமாக வரையப்படுகின்றன. ஜகந்நாதர் ஆலயத்து முக்கிய தெய்வங்களான பாலபத்திரர், சுபத்திரா தேவி தொடர்பான சடங்குகளின் போது திருமேனிகளை வெவ்வேறு வகையாக அலங்காரம் செய்வதுண்டு. வேள என்று அழைக்கப்படும் இந்த அலங்காரங்கள் திருமேனிகளுக்கு 21 வகைகளில் செய்யப்படு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. அவைகளில் சில கணேசர், வாமனர் நாகர்ஜுனர், பத்மம், பட சிங்காரம் ஆகியவைகளாகும். இவ் 21 அலங்காரங்களின் அடிப்படைச் கருத்துக்களை வைத்தே பாட்ட சித்ரா ஓவியங்கள் வரையப்படுகின்றன. அதனுடன் தசாவதாரம், ராச லீலா, ஒரியா, கவிஞர் சரனதாசரின் மகாபாரதம், பூரி அரசன் புருஷோத்தம தேவனின் காஞ்சிப் படையெடுப்பை விளக்கும் காஞ்சி அபயான், ஜயதேவரின் *கீத கோவிந்தம்* போன்றவற்றிலிருந்து பாட்ட சித்ரா ஓவியக்காட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வகைப்படுத்தப்படுகின்றன.

ஓரிசா மாநிலத்துப் பாரம்பரியப் பண்பாட்டின் சின்னமாக விளங்கி வரும் பாட்ட சித்ரா ஓவியங்களைப் பூரியைச் சுற்றியுள்ள ஏராள மான கிராமங்களில் வாழும் மக்கள் நீண்டகாலமாக வரைந்து வருகின்றனர். (தே. ஹ.)

# பாண்டுரங்கம்

சிவபிரான் ஆடிய ஆடல்களில்/கூத்துக்களில் பண்டரங்கம் அல்லது பாண்டரங்கமும் ஒன்றாகும். கலித்தொகையிலுள்ள கடவுள் வாழ்த்துச் செய்யுளிலே சிவபிரான் ஆடிய கொடுகொட்டி, பாண்டரங்கம், கபாலம் ஆகிய ஆடல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள்ளே பாண்டரங்கம் பற்றி "மண்டமர் பல கடந்து மது கையால் நீறணிந்து பண்டரங்கமாடுங்கால்" எனக் குறிப்பிட்ட செய்யுள் கூறும்.

சிலப்பதிகாரத்திலே மாதவி ஆடிய பதினொரு ஆடல்களும் தெய்வங்களால் ஆடப்பட்டவை. இவற்றுள் கொடுகொட்டியும், பாண்டரங்கமும் சிவபெருமான் ஆடியவை. சிலப்பதிகாரத்திலுள்ள கடலாடு காதையிலே பாண்டுரங்கம்

*"வானோராகிய தேரில் நான் மறைக்கடும்*
*புரவிபூட்டி, நெடும்புற மறைத்துக்*
*கூர் முட் பிடித்துத் தேர் முன்பு நின்ற திசைமுகன்*
*காணும் படி பாரதிவடிவாகிய இறைவன்*
*வெண்ணீறணிந்தாடிய பாண்டரங்கக் கூத்து"*

என்ற பொருள்படக் கூறப்பட்டுள்ளது.

இவ்விரு குறிப்புகளையும் தொகுத்து நோக்கும் போது, சிவபிரான் முப்புரங்களையும் எரித்த பின் பிரமா காணும் வண்ணம் அச்சாம்பலை வெண்ணிறத் திருநீறாக அணிந்து இவ் ஆடலை சுடுகாட்டினை அரங்காகக் கொண்டு ஆடினார் என்பது புலப்படும்.

இவ் ஆடல் பற்றிப் பிற்பட்ட காலத் தமிழிலக்கியத்திலும் குறிப்பு உண்டு. எடுத்துக் காட்டாகக் கந்தபுராணம், "பாண்டரங்கமதியற்றுவான்" எனக் குறிப்பிடுகின்றது. பிங்கல நிகண்டு பாண்டரங்கக் கூத்தாடுபவராகச் சிவபிரானைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

**குறிப்பு:** சிவபிரான் முப்புரங்களை எரித்தமை பற்றிய சிறு விளக்கக் குறிப்பு **இந்துக்கலை களஞ்சியம்** 7ம் தொகுதியிலே (பக் 228-229) உள்ளது.

**பாண்டரங்கன்:** பாண்டரங்கக் கூத்தினை ஆடுகின்ற சிவபிரான் பாண்டரங்கன் எனவும் அழைக்கப்படுகிறார். (வி. சி.)

# பாணபத்திரர்

வரகுண பாண்டியனது அவைக் களத்தில் இசை வாணராக விளங்கியவர். பண்ணிசைத்துப்பாடும் பெரும்புலவர். மன்னனை மகிழ்வித்ததோடு தம் இன்னிசையால் இறைவனையும் கவர்ந்தவர்.

பாணபத்திரனின் இசையால் வயப்பட்ட இறைவன் அவருக்காகச் செய்த அற்புதங்களைத் திருவிளையாடற் புராணத்திலே கூடற்காண்டத்தில் விறகு விற்றபடலம், திருமுகம் கொடுத்தபுராணம், பலகையிட்ட படலம் ஆகிய பகுதிகளிலே பரஞ்சோதி முனிவர் கூறுகின்றார். சிவன் புவியின் மேல் விறகு சுமந்து, விற்கும் ஆளாகி நடந்து, பாணபத்திரனுக்கு அடிமையென்று கூறி, அவனைக் கொண்டருளிய திருவருள் திறத்தை விறகு விற்றபடலம் எடுத்துரைக்கின்றது.

பாணபத்திரர் பாண்டியனின் அவைக்களப் பாணராக இருந்த காலத்தில், வடநாட்டில் பெரிய இசைமேதையாக இருந்த ஏமநாதன், மதுரை நகரை வந்தடைந்தான். அவன் பாண்டியனின் அவையை அடைந்து, தனது இன்னிசையினால் மன்னனை மகிழ்வித்து, மன்னனிடம் இருந்து பல பரிசில்களையும் பெற்றான். பாண்டிய மன்னன் கையால் பரிசில்களைப் பெற்ற செருக்கினாலும் பெருமைமிக்க தன்னோடு இனிய இசை பாடுவதற்கு வல்ல யாழிசைப்புலவர் இங்கு வேறு எவரும் இல்லை எனக்கருதி இறுமாப்புக் கொண்டான். தன்னோடு இசையில் போட்டி போட்டு வெல்ல இயலாது எனத் தருக்கி நின்றான். அரசன் வரகுணபாண்டியன் ஏமநாதனோடு போட்டியிட்டு வெல்ல வேண்டும் என்று பாணபத்திரரைக் கேட்டுக்கொண்டான்.

மன்னனின் சொற்படியே நாளை வந்து ஏமநாதனோடு பாடி வெல்வேன் என்று கூறிச் சென்ற பாணபத்திரர் ஏமநாதனிடம் இசை கற்கின்ற மாணவர்களின் இசையைக் கேட்டு, மாணவர்களின் இசைபாடும் தன்மை இது, ஏமநாதன் பாடும் முறை எத்தகையதோ? நான் நாளைக்கு இசைபாடி வெல்வது எப்படி? எனக் கலக்கம் அடைந்தார். வருத்தம் அடைந்த அவர் சோமசுந்தரக்கடவுளின் திருக் கோயிலை அடைந்து இறைவனை வணங்கி வீடு சென்றார்.

பாணபத்திரரின் கவலையைத் தீர்க்க திருவுளம் கொண்ட இறைவன் விறகு வெட்டியாக வேடம் தாங்கி வந்தார். தெருவிலே நடந்து விறகு விற்றார். வடதிசை இசைமேதை ஏமநாதன் காதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமாறு மிக உயர்ந்த முறையில் சாதாரிப் பண்ணைப் பாடினார். அதுகேட்ட ஏமநாதன் நீயா அவன்? என வினவினான். விறகு வெட்டியாக வேடம் தரித்த இறைவன் ''நான் பாணபத்திரனின் அடிமை'' எனக் கூறினார்.

இறைவனின் இசையைக் கேட்ட ஏமநாதன் இவனின் பாட்டு இத்தகையது எனில் பாணபத்திரனின் இசை வல்லமை எத்தகையதோ என எண்ணி மதுரையை விட்டே ஓடினான். இது திருவிளையாடற் புராணத்து விறகு விற்ற படலச் செய்தியாகும்.

பாணபத்திரர் வறுமையால் வருந்திய போது அவருக்காகப் பாண்டிய மன்னனுடைய களஞ்சியத்திலிருந்து இறைவனே பொன்னை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தான் என்ற செய்தியும் கிடைக்கிறது. இறைவன் ஒருமுறை சேரமன்னன் ஒருவனுக்கு திருமுகம் எழுதி அதைப் பாணபத்திரரிடம் கொடுத்துச் சேரனிடம் கொண்டு போய்ச் சேர்க்குமாறு பணித்தார். பாணபத்திரரும் அவ்வாறே அந்தத் திருமுகத்தைச் சேரனிடம் சேர்ப்பித்தார். திருமுகம் பெற்ற சேரன் செய்தியறிந்து பெரும்பொருளைப் பரிசாகப் பாணபத்திரருக்கு அளித்தார். இந்தச் செய்தியைத் திருமுகங்கொடுத்த படலம் என்ற பகுதியில் திருவிளையாடற் புராணம் கூறுகின்றது.

சோமசுந்தரனாகிய இறைவன் மீது அளவிலா அன்பும் பக்தியும் கொண்ட பாணபத்திரர் மூன்று காலத்திலும் இறைவன் திருமுன் நின்று நெக்குருகிப் பாடும் இயல்புடையவராய்த் திகழ்ந்தார். இவர் தாமே யாழ் மீட்டிப்பாடும் திறம் கொண்டவர். பாணர்கள் கோயிலில் உள்ளே செல்லக் கூடாது என்ற ஒரு வழக்கம் அக்காலத்தில் நடைமுறையில் இருந்தது. அதனால் இறைவனின் திருக்கோயிலுக்கு வெளியில் நின்று பாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் பாணபத்திரர்.

ஒருநாள் நள்ளிரவில் இறைவனின் திருமுன் நின்று யாழிசைத்துப் பாடத் தொடங்கினார். அப்போது கடுமையான குளிர் காலமாதலால் உடம்பெல்லாம் குளிரால் விறைத்துப் போய்விட்டது. கைவிரல்கள் தடுமாறின. யாழின் நரம்புகள் பனியால் நனைந்தன. அந்நிலையிலும் சோர்வின்றி இரவு முழுவதும் இறைவனைப் பாடிக் கொண்டே இருந்தார். இறைவன் பாணபத்திரர் நின்று பாடுவதற்காக ஒரு பொன்னாலான பலகையைத் தந்தருளினார். இச்செய்தி திருவிளையாடற் புராணத்துப் பலகையிட்ட படலப் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

*''பாடுவார் இருவர்க்கன்று பரிசிலாக் கொடுத்த சங்கந்*
*தோடுவார் செவியிலூட்டுத் தொண்டு கண்டிதன்மேனின்று*
*பாடு வாயுனக்கே யிந்தப் பலகையென் றாழ்ந்த வன்பின்*
*நாடுவார் விசும்பிற் கூறி நகை மணிப்பலகையிட்டார்''*

(திருவிளையாடற்புராணம் 2143 ஆம் பாடல்)

இவ்வாறு பாணபத்திரரின் பெருமையை மூன்று படலங்களாகப் பாடியுள்ளார் பரஞ்சோதிமுனிவர். பாணபத்திரரின் இசை மேன்மைக்கு இவை சிறந்த சான்றுகளாக அமைகின்றன.

(தே.ஹ.)

## பாணாசுரன்

விஷ்ணு வாமனராக அவதரித்து மூவுலகையும் தனது ஈரடிகளால் அளந்து விட்ட நிலையில் அவரது திருவடியை மூன்றாவது அடியாகத் தனது சிரமேற்கொள்ளும் பாக்கியம் பெற்ற அசுரனாகிய மகாபலிச் சக்கரவர்த்தியின் மூத்த புதல்வனே பாணாசுரன்.

பாணாசுரன் மிகுந்த பலசாலி. எவராலும் வெல்ல முடியாத வரம் பெறச் சிவனை நோக்கித் தவம் செய்தான். கைலாசநாதரும் அவனது தவத்தில் மனமகிழ்ந்து அவன் முன் தோன்றி வேண்டிய வரம் கேட்குமாறு கூறினார். பாணன் ''நீங்கள் உங்கள் புதல்வர்களோடும், பூதகணங்களோடும் என் கோட்டையைக் காவல் காக்க வேண்டும்'' என, சிவனும் அவ்வாறே வரமளித்தார்.

சிவனையே காவலனாகப் பெற்ற பாணாசுரன் பயமேதுமின்றித் தன் நாட்டை ஆண்டு வந்தான். நாள் தோறும் சிவபூசையும் செய்து வந்தான். நாளாகப் பாணாசுரன் மனதில் ஒரு கர்வம் ஏற்பட்டது. சிவனையே காவலனாகப் பெற்றுள்ளேன். என்னை யாரால் வெல்ல முடியும் என்று எண்ணத்தொடங்கினான்.. ஒரு நாள் சிவபூசையின் முடிவில் சிவனிடமே கேட்டான். ''இறைவா போர்புரியாமல் என் தோள்கள் தினவெடுத்து வருந்துகின்றன. மூவுலகங்களிலும் எனக்கு நிகரான எதிரிகள் இல்லை. என் போர் ஆசை எப்படித் தணியும் எப்போது தணியும்?'' தன்னிடம் வரம் பெற்று தன்னையே காவலாக்கிக் கொண்டு, தன்னிடமே கர்வமாகக் கேட்கும் பாணாசுரன் மேல் சிவனுக்கு அதீத கோபம் ஏற்பட்டது. ''உனது போர் ஆசைக்கு விரைவிலேயே வேலை வருகிறது உன் கொடிமரம் என்று முறிந்து விழுகிறதோ அன்று என்னையும் விடப் பலசாலி ஒருவன் தோன்றுவான் அப்போ அவனால் நீ தோற்கடிக்கப்படுவாய்'' எனக் கூறினார்.

பாணாசுரனுக்கு உஷை என்று ஒரு மகள் இருந்தாள். அழகியாகிய உஷை சகலகலைகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கினாள். பருவமடைந்த உஷை ஒருநாள் கனவில் அழகிய வாலிபன் ஒருவனைக் கண்டாள். அதே ஏக்கத்தால் ஊன்உறக்கமின்றி உடல் மெலியலானாள். உஷையின் தோழி இந்திரலேகா. சிறந்த புத்திசாலியான அவள் தன் எஜமானியின் காதல் நோயை அறிந்து கொண்டாள். எனினும் கனவில் கண்ட வாலிபனை யார் என்று உஷையினால் கூறமுடியவில்லை. சிறந்த ஓவியக்காரியான சித்திரலேகா பலநாட்டு இளவரசர்களின் படத்தை வரைந்து தனது தலைவியிடம் காண்பித்தாள். இறுதியில் கிருஷ்ணரின் பேரனான பிரத்யும்மனின் மகனான அனிருத்தனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உஷையின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவன் என அறிந்து கொண்டாள். சித்திரலேகா தோழி மட்டுமல்ல மந்திர தந்திரங்களிலும் வல்லவள். திரஸ்கரணி என்னும் வித்தையினால் துவாரகைக்குச் சென்று அநிருத்தனனை உஷையின் அந்தப்புரத்திற்குக் கொண்டு வந்துவிட்டாள்.

அநிருத்தனனும், உஷையும் இன்பமாகச் சில நாட்களைக் கழித்தனர். இவர்களது இரகசியக் காதல் பாணாசுரன் காதுகளுக்கு எட்டியது. தன் மகள் உஷையின் அந்தப்புரத்துக்குத் திடீரெனச் சென்றான். அங்கு உஷையும் அநிருத்தனனும் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருப்பதைக் கண்டு கோபம் கொண்டான். அநிருத்தனை நாக பாசத்தினால் கட்டிச் சிறையிலடைத்தான். உஷை கதறி அழுதபோதும் பாணாசுரன் இரங்கவில்லை.

இதற்கிடையில் அநிருத்தனன் காணாமல் போனது பெரும் கலவரத்தை ஏற்படுத்தியது. நாரதர் மூலம் அநிருத்தனன் பாணாசுரனின் சிறையில் அகப்பட்டிருப்பது தெரிய வந்தது. அநிருத்தனை மீட்கப் பாணாசுரனின் பெரும்படை தோணிபுரத்தை நோக்கித் திரண்டு வந்தது.

பாணாசுரன் சிவபூசைக்கு வழக்கம் போல் கிளம்பினான். அப்போது அவனது கொடி மரம் முறிந்து கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டான். அவ்வேளையில் கிருஷ்ணர். "பாணாசுரா உன் படைகளோடு வா யாதவ வீரர்கள் உன் அசுரப்படைகளோடு மோத ஆயத்தமாய் உள்ளனர்" என்றார். பாணாசுரன் தன் படைகளுடன் போருக்கு ஆயத்தமானான். பாணாசுரனின் கோட்டை வாயிலின் கிழக்குப் பகுதியைச் சிவனும், தெற்கு வாயிலை கணபதியும், மேற்கு வாயிலை முருகனும், வடக்கு வாயிலை பூதகணங்களும் காத்து நின்றன. சிவனோடு போரிட்டு நேரத்தை வீணடிக்க விரும்பாத கிருஷ்ணர் மோகனாஸ்திரத்தைப் பிரயோகித்துக் காவலில் நின்ற அனைவரையும் மயக்கிக் கோட்டைக்குட் புகுந்து பாணாசுரனுடன் கடுமையாகப் போரிட்டார்.

கிருஷ்ணனின் பாஞ்சஜன்யம் ஒலிகேட்டு பாணாசுரனின் தாய் தன் ஆடை அவிழ்ந்தது கூடத் தெரியாமல் ஓடிவந்து தன் மகனுக்கும், கிருஷ்ணனுக்கும் நடுவில் நிர்வாணமாக நின்று விட்டாள். நிர்வாணமாக நிற்கும் பாணனின் தாயைக் காணவிரும்பாமல் கிருஷ்ணர் முகத்தைத் திருப்பிக் கொள்ள பாணாசுரன் இரதத்தில் ஏறித் தப்பி ஓடி விட்டான். பின் மீண்டும் நெடுநேரம் கிருஷ்ணனோடு போரிட்டான். அவ்வேளையில் பாணாசுரன் சிவனை நினைந்து மனமுருக சிவபெருமான் பாணாசுரனை மன்னிக்கும்படி கிருஷ்ணனைக் கேட்டுக் கொண்டார். பிரகலாத வமிசத்தில் வந்தவர்களைத் தான் கொல்லுவதில்லை என்று வரமளித்திருப்பதைக் கிருஷ்ணனுக்கு நினைவூட்டினார்.

பாணாசுரன் கிருஷ்ணரையும், பலராமனையும் மற்ற யாதவர்களையும் வரவேற்றுத் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று தன் மகள் உஷைக்கும் அநிருத்தனனுக்கும் திருமணம் செய்து வைத்தான். (நி. நி.)

## பாண்டுரங்கன்

விஷ்ணுவின் நாமங்களில் ஒன்று. "பரப்ரஹம் லிங்கம் பஜ பாண்டுரங்கே" என விஷ்ணு விழிக்கப்படுகிறார். ஜய ஜய விட்டல ஹர ஹர விட்டல பண்டரிநாதா பாண்டுரங்கா என்கிறது கிருஷ்ணாமிர்தம்; பாண்டு ரங்காஷ்டகம் என்னும் ஒன்பது பாடல்கள் அடங்கிய தொகுப்பு விஷ்ணுவின் சிறப்பினையே குறித்து நிற்கின்றது. அஷ்டோத்திர சத நாமாவளி "பாண்டுரங்க பரப்பிரமனே" என்கிறது.

பாண்டுரங்க க்ஷேத்திரத்தில் கோயிலமைத்து வழிபட்டமையால் பாண்டு ரங்கா என வழிபட்டனர் என ஒரு கதையும் உண்டு. இத்தலம் கர்மபீரா நதி சென்று கலக்கும் பீமா நதியின் தெற்குத் திசையில் ஒரு யோசனை தூரத்தில் உள்ளது. இத்தலத்தில் கற்பகாலத்தில் இருபத்தெட்டாவது துவாபரயுகத்தின் இறுதியில் புண்டரீகன் என்ற பெயருடைய அந்தணன் ஒருவன் வாழ்ந்து வந்தான். பெற்றோருக்குக் கடமை செய்தலையே தனது முதற்கருமமாகக் கொண்ட இவன் கடமை முடிந்ததும் தேவாராதனை செய்து பூஜைகளை முடித்து இராஜயோக தியானத்தில் இருப்பான். அளவு கடந்த பக்தியுடைய புண்டரிகனுடைய தவத்தினை அறிந்து மகிழ்ந்த கண்ணபிரான் அவன் முன்னே தோன்றினான். தோன்றிப் பக்தனாகிய புண்டரீகனைக் கடாட்சித்து "பாகவதசீலனே நீ உன் தந்தையாரிடம் கொண்டிருந்த உண்மையான அன்பையும் நன்றியுணர்வையும் உன் ஞானபக்தி வைராக்கியத்தையும் நீ செய்து வரும் பூஜைகள் தவம் முதலியவற்றையும் கண்டு நாம் பெரிதும் மகிழ்ந்தேன் நீபெற விரும்பும் வரத்தைக் கேட்பாயாக" என்றார். அதைக் கேட்டதும் புண்டரீகன் "அடியேனுக்கு இப்போது தரிசனம் தந்த வண்ணமே என்றும் இவ்விடத்தில் எழுந்தருளியிருந்து இந்த ஸ்தலத்தையும் தீர்த்தத்தையும் சிறப்படையச் செய்தருள வேண்டும்" என வேண்டினான். ஸ்ரீ கிருஷ்ணன் "அன்பனே உன் விரும்பம் இன்றே நிறைவேறும். யாம் இந்தக் கணமுதல் பாண்டுரங்கநாதன் என்ற பெயருடன் இவ்விடத்தில் இருப்போம். உன் பெருமைக்கு அறிகுறியாய் இந்தத் தவம் புண்டரீக க்ஷேத்திரம் என்ற பெயருடன் விளங்கும்" எனக் கூறி மறைந்தார். பாண்டுரங்க நாதன் அமர்ந்துள்ள இக் கோயில் வைகுண்டத்தை விடச் சிறப்புடையது புதுமையானது எனக் கூறுவர். (இ. ச.)

## பாண்டிருப்பு திரௌபதையம்மன் கோயில்

மட்டக்களப்பிலே அமைந்துள்ள திரௌபதையம்மன் கோயில்களில் தொன்மையானதும், வரலாற்றுப் புகழ் மிக்கதும், முதன்மையானதுமான பதி பாண்டிருப்புத் திரௌபதையம்மன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் பாண்டிருப்பு மட்டக்களப்பிற்கு தெற்கே சுமார் 25 மைல் தொலைவில் கல்முனை நகருக்கு அருகாமையில் அமைந்திருக்கின்றது. இங்குள்ள ஆலயத்தில் இடம் பெறும் பெருந்தீ வேள்வி மட்டகளப்பு வழக்கிலே தீப்பள்ளயம் என்றழைக்கப்படுகின்றது.

பாண்டிருப்பு பட்டயக் கூற்றுக்கள், தாதன் கல்வெட்டு போன்ற ஆவணங்கள், திரௌபதையம்மன் கோயிலையும், அதன் வரலாறு, வழிபாட்டு ஒழுங்கு முறைகள் பற்றிய செய்திகளைத் தருகின்றன. கி.பி 15ஆம் நூற்றாண்டளவில் வட இந்தியாவிலிருந்து வந்த தாதன் தான் கொண்டு வந்த வழிபாட்டுப் பேழையை அவ்வூரில் வைத்து இராசனாகிய எதிர்மன்ன சிங்கனின் வேண்டுகோளிற் கிணங்கத் திரௌபதை வழிபாட்டைச் செய்து காட்டினான் என்று தாதன் கல்வெட்டுக் கூறுகின்றது. அதேவேளை இக்கோயிலும் வழிபாடும் கண்டி அரசனான விமலதருமசூரியன் (கி.பி. 1594-1604) காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டதாகவும் கூறுவர்.

"சீர்மேவு பூவுலகில் திருமால் மதத்தொழுங்கை
பார்மேவு தாதன் பகுக்க மனத்திலெண்ணி
அரியோன் பதத்தை யடிபணிந்து தெண்டனிட்டுக்
குருவின் கருவில் குதித்தோர் சரித்திரத்தை
மடலில் வரைந்து மனத்தை யொருப்படுத்திக்
கொடையிற் சிறந்த குகனிடத்தில் செல்ல வென்று
காவியுடுத்திக் கமண்டலமுங் கைப்பிடித்து
ஆவி யடக்கி அஞ்செழுத்தை யுச்சரித்துப்
பல்லோர் துதிக்கப் பாருலக மீடேற
வில்லிசையன் செய்தவத்தை மேன்மை பெறக் காசினியில்
பத்திபோற் காட்டப் பகுத்தறிவாய்த் தாதனுந்தான்
சுற்றம் மகிழத் துதித் தெழுந்து தென்னிலங்கை
சென்றுமட்ட மாநகரில் திருக்கோயிற் சந்நிதியைக்
கண்டு நமஸ்கரித்துக் கைகூப்பி நிற்கையிலே
கலிங்க குலத்துக் காவலனு மப்பொழுது
இலங்குந் திருப்பணிக்கு யிடுபூசை காணையிலே
பரத நாட்டிற் பிறந்தா னெனவறிந்து பார்வேந்தன்
இரத நடை வீதி என்னுமிடம் வரவழைத்து
எதிர்மன்ன சிங்க மென்னும் நரபதியும்
கதி தங்கு மிப்புவியில் கண்டதில்லை உந்தனைத்தான்"
ஆர்நீ ரறையும் அந்தணனோ சுந்தரஞ்சேர்
பேரேது ஊரேது பெருமையுட னோது மென்னத்
தாதன் மனமகிழ்ந்து தாரளந்த மாயவன்றன்
பாதம் பணிந்து பரிவுடனே ஓதுகிறான்
கோங்கு நகர்மேவுங் கோவசியர் தன்குலத்தில்
பாங்குடனே யானுதித்துப் பாரதமென் றோர்மதத்தை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கம் காலிங்கம் மலையாள மத்திரபுரம்
அங்கங்கு சென்று அரியோ னடியார்க்கு
காட்டிய பின் தென்னிலங்கைக் கலிங்கர் குலத்தோர்க்குச்
சூட்ட நினைவு கொண்டு துளசிமணி மாலையிட்டு
வந்தே னெனது மரபிதென்ன மன்னவனும்
சந்தோஷமாகித் தாதன் றனைத் தழுவி
வடவால் நிறைந்திருக்கும் வனமுங் கடலருகும்''
''அடைவாகத் தேடி ஆழியரு காய்வரவே
கண்டார்க ளால்வனத்தைக் கடலு மருகிருக்கத்
தொண்டரொடு தாதன் துதித்து நமஸ்கரித்து
பஞ்சாட் சரத்தைப் பதித்துமனத் தொன்றாக்கி
கஞ்சன் முதலாக ஐவர் விந்தஞ் சேர்ந்த மட்டும்
தீட்டி ஒளியாக்கித் தீவளர்த்துப் பாய்ந்த பின்பு
காட்டி முறையப்படியே காலிங்க குலத்தோர்க்கு
வரிசை கொடுத்து. மால்பதத்தைச் சேர்ந்த பின்பு
கரிசனையோர் நம்பி சிறை கட்டுவர்க்கச் சட்டமுடன்
தீர்த்து எதிர்மன்ன சிங்கன் மனமகிழ்ந்து
பார்த்தவர்கள் கொண்டாடப் பாரதத்திற் சொன்னபடி
கம்பம் வனவாசம் கடல்குளித்துத் தீப்பாய்தல்
அம்பு வில்லுத் தண்டுடனே ஐவர் கொலு வாக்கி வைத்து
ஆடலொடு பாடி ஆதி துரோபதைக்கு
மாடமுயர் கோயில் வரிசையுட னியற்றிக்
கும்பிட்டார் தெண்டனிட்டார் குவலயத்தைக் காருமென்று.''

முன்னே கண்டவாறு வடநாட்டுக் கோங்கு நகரிலுள்ள தாதன் என்னும் தபசி. வைணவ சமயத்தைப் போதிப்பதற்காக. மகாபாரதத்தின் சரித்திரத்தை மடலில் வரைந்து கொண்டு. காவிவஸ்திரமும் கமண்டலமும் தாங்கி கோங்கு நாடைவிட்டு இலங்கை. மட்டகளப்புக்கு வந்து. நாகர்முனைக் குகனைத் தரிசனம் செய்து. மடலில் வரைந்து வந்த மகாபாரதக் கதையை அவ்வாலயத்திற் போதித்தான். அதையறிந்த திக்கதிபரொருவர் எதிர்மன்னசிங்கதிருபனுக்கு அறிவித்தார். எதிர்மன்னசிங்கனும் அவ்வாலயம் சென்று தாதனைக் கண்டு உம்முடைய குலம். கோத்திரம். நாமம். சுயநாடு. இவைகளை அறிவியும் எனக் கூறினன். தாதனும் அரசனை நோக்கி அரசே! என் குலம் வசியன். என் நாமம் தாதன். என்னுடைய கோத்திரம் விஷ்ணு. என்னுடைய சுயநாடு கோங்குநகர். நான் பாண்டவ குலத்துத் தர்மாதிகளுக்கு நாகர்குலத்துத் துரியோதனாதிகள் செய்த தீமைகளைக் காண்பிக்கும்படி வந்தேன் என்று கூறினன். அதற்கு அரசன் தனக்கு அறிவிக்கும்படி தாதனிடம் வேண்டினான். அதன்படி தாதனும் அவற்றைச் செய்து காண்பித்தான்.

தாதனும் தான் கொண்டு வந்த சிலைகளை வைத்துப் பூசை பண்ணுவதற்கு பொருத்தமான இடத்தில் ஆலயம் அமைக்க உதவ வேண்டும் எனக் கேட்டதற்கிணங்க. எதிர்மன்ன சிங்கனும். தாதனின் வேண்டுகோளை ஏற்று. கோயில் அமைப்பதற்காக திருக்கோயில் கடற்கரையிலிருந்து வடக்குப்புறமாக உள்ள கிராமங்கள் ஊடாகச் சென்று பார்வையிட்டு. கொத்துப் பந்தலிட்டு கோயில் அமைத்து வழிபட்ட இடமே பாண்டிருப்பு எனும் கிராமமாகும். இந்த இடத்தில் பாண்டவருடைய உறுப்பை ஆறுபேருக்கு உண்டாக்கி அதனை நம்பும்படி தீவளர்த்து. அதிலிறங்கியும் காட்டினான். அதன் பின்பு அரசனின் ஒத்துழைப்போடு கொக்கட்டி மர நிழலிற் கொத்துக் குழைகளால் பந்தலிட்டு அதற்குள் தான் கொண்டு வந்த சிலைகளை வைத்துப் பதினெட்டு நாட்கள் பூசை வழிபாடுகள் செய்து மகாபாரத வரலாற்றுச் சிறப்பினை எடுத்து அங்கிருந்த மக்களுக்கு விளக்கிக் காட்டித். தாதன் கல்வெட்டில் கூறப்பட்டதுபோல் கம்பம். வனவாசம். கடல்குழிப்பு. தீப்பாய்தல் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளையும் நடாத்திக் காண்பித்துப் பல வருடங்கள் சென்ற பின்பு தாதன் முத்தியடைந்தான்.

அதன் பின்னர் எதிர்மன்னசிங்கன் வன்னிமை பதினாறு குடிமக்களுக்கும் பூசைகளை வழங்கிப் பாண்டவர் கொலு. காளிகொலு. வீரபத்திரர் கொலு என்பனவற்றுக்கேற்றோர்களைத் தெரிவு செய்து கொலு நிறுத்தி வருடா வருடம் உற்சவத்தைப் பல காலமாக நடத்திய பின்னர் நற்பிட்டிமுனைப் பிரதேசத்தைப் பரிபாலனஞ் செய்த வன்னியர் குடியினரிடம் ஆலயத்தை ஒப்படைத்துச் சென்றான் எனக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

இங்கு வழிபாடுகள் வருடம் தோறும் புரட்டாதி மாதம் வரும் செவ்வாய்க் கிழமை கதவு திறக்கும் நிகழ்வுடன் ஆரம்பிக்கப்பட்டு பூரணை தினத்தை உள்ளடக்கிய ஒரு வெள்ளிக் கிழமையில் தீப்பள்ளயத்துடன் நிறைவு பெறும். உற்சவம் ஆரம்பமாகும் முதலாம் நாள் ஆலயத்திற் சாந்திகள் செய்து மாலை வேளையில் பாண்டவர்கள். பூசகர் பரிவாரத் தெய்வங்களாகக் கொலுவில் நிற்கும் அனைவரும் தங்களுக்குரிய ஆயுதங்களோடு கடல்குளித்து. ஆயுதங்களைக் கழுவி கையிலெடுத்துக் கொண்டு பறைமேளம். உடுக்கு. சிலம்பு. சங்கு முழங்க மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தை வந்தடைந்து. பூசை வழிபாடு செய்து. திரௌபதை. தருமன். வீமன். அருச்சுனன். சகாதேவன் போன்றோரின் சிலைகளை எடுத்துக் கொண்டு திரௌபதை ஆலயத்தை வந்தடைவர். அதன் பின்னர் சடங்குகள் ஆரம்பிக்கும் முகமாக கொடியேற்றம் நடைபெறும். வெள்ளை நிறத் துணியில் விஷ்ணுவின் பத்து அவதாரங்களைக் குறிக்கும். மீன். ஆமை. பன்றி போன்ற சின்னங்களோடு. சூரியன். சந்திரன். சங்கு. சக்கரம் போன்றவற்றையும் வரைந்து பாண்டவர்களின் தலைவரான தருமராற் கொடியேற்றப்பட்டுப் பதினெட்டு நாட்கள் தொடர்ந்து சடங்குகள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் நாள் ஏடவிழ்க்கும் பூசை இடம்பெறும். சாயங்காலப் பூசை முடிவுற்றதும் சந்தன மண்டபத்தினுள் தாதனால் கொண்டுவரப்பட்ட பேழையை மடையில் வைத்து, பஞ்சபாண்டவர், கிருஷ்ணர், கட்டுக்கு நிற்போர் யாவருக்கும் உரிய ஆயுதங்களை கொடுக்கும் சம்பிரதாயம் முடிவுற்றதும், மகாபாரத ஏடவிழ்த்துப் பாராயணம் தொடங்கப்படும்.

ஏழாம் நாள் சுவாமி எழுந்தருளப் பண்ணற் சடங்கு இடம்பெறும். கிருஷ்ண பகவான் துவாரகாபுரியிலிருந்து, அத்தினாபுரியிலிருக்கும் பஞ்ச பாண்டவர்களைக் காண்பதற்காக வரும் காட்சியினை நாடகப் பாங்கிற் சடங்காக நிகழ்த்திக் காட்டப்படும். கிருஷ்ணர் இருக்கும் துவாரகாபுரியாக மாணிக்கப் பிள்ளையார் ஆலயமும், அத்தினாபுரியாக திரௌபதையம்மன் ஆலயமும் கொள்ளப்பட்டு, பஞ்சபாண்டவர்களால் கிருஷ்ணரது சிலை அம்மன் ஆலயத்திற்குச் கொண்டுசெல்லப்படுவதைக் குறிப்பதாக அமையும்.

எட்டாம் நாள் நாட்கால் வெட்டும் சடங்கு இடம்பெறும். திரௌபதை வேள்வித் தீயில் இருந்து பிறந்தவள் என்பதை நினைவூட்ட இச்சடங்கு நடைபெறும் எனக் கூறுகின்றனர். அன்று பாண்டவர்கள் வனம் சென்று வீரமரக்கிளையினை வெட்டியெடுத்துக் கொண்டு வருவர். இம்மரத்தையே 18 ஆம் நாள் தீமூட்டுவதற்கு முதல் பொருளாகப் பயன்படுத்துவர் இத்தினத்திலிருந்து தோத்திரப் பாடல் படிக்கும் முறை ஆரம்பமாகும். குறிப்பாக குந்திதேவி, தருமர், வீமர், அருச்சுனன், திரௌபதை போன்றோருக்கு மேல்வரும் முதலடிகளைக் கொண்ட பாடல்களைப் பாடி வழிபடுவது தாதன் வகுத்த வழிபாடாகும்.

குந்திதேவிக்கு

*மந்திரா தேவி பிறக்க மகிமை பிறந்தது*
*சுபத்திரா தேவி பிறக்க ஆதி அனுமன் பிறந்தான்*
*குந்தம்மா தேவி பிறக்க ஐவர் கொலுப் பிறந்தது........*

தருமராசனுக்கு

*தந்தாரவாரம் தயங்காத நித்திரையாம்*
*உண்ணார வாரம் உறங்காத நித்திரையாம்.*
*கறுத்த விழி சடையன் கர்ணனுக்கு நேரிளையான்*
*பொறுத்திருந்து அரசாளும் புண்ணியனாந் தருமகுரு—*

வீமனுக்கு

*மந்தகன் மாமேருவன் வாயுதேவன் வலக்குமாரன்*
*மன்மதன் வயிரத் தூணன்*
*ஆதி அனுமானுக்கு நேரிளையான்*
*கைகளொரு காதம் கால்களொரு காதம்*
*மூக்குத் துவாரத்தால் யானை போய் வருமாம்*

*விளங்கு மா மண்டபத்தில் வீற்றிருந்த வீமன்......*

அர்ச்சுனனுக்கு,

*முன்னழகன் பின்னழகன் முதுகிலே மச்சரேகை*
*நாவிலே நட்சத்திரம் பல்லிலே பரச வீணை*
*தோளிலே துளசிமாலை தொப்புழுவில் வீணாகானம்*
*புறங்காலைப் பார்த்தாலும் பிரமதேவனுக் கொப்பிடலாம்......*

திரௌபதைக்கு,

*பாஞ்சாலி பெண் பிறக்கப் பத்து மோரெட்டு*
*வண்ண மகள் திரௌபதையே*
*பாரதமும் பிறந்ததம்மா..........*

பன்னிரண்டாவது நாள் சுயம்வரத்துக்கு கால்கோள் இடுவதற்கு ஏற்பாடாக கல்யாணக்கால் வெட்டும் சடங்கு இடம்பெறும். அன்று மாலைப் பூசை முடிவுற்றதும், பாண்டவர்களும், பரிவாரங்களும், பக்தர்களும் புடைசூழப் பாண்டிருப்பில் இதற்கென உள்ள நிலத்தில் உள்ள பூவரசமரத்தில் தடியொன்றை வெட்டி அதனை அம்மனாகச் சோடனை செய்து ஆலயத்தில் வைத்துப் பூசை இடம்பெறும். பதின்மூன்றாம் நாள் அலங்காரப் பூசை இடம்பெற்று பதின்நான்காம் நாள் துச்சாதனன் திரௌபதையை துகிலுரித்த கதையை அம்மனாக பூசாரி வேடமணிந்து இப்பாவனை நடாத்தப்படும்.

பதினாறாம் நாள் வனவாசம் நடைபெறும். துரியோதனனுடன் சூதாடித் தோற்ற பஞ்ச பாண்டவர்களும், திரௌபதையும் நாடு நகரமிழந்து பன்னிரண்டு வருடங்கள் வனவாசம் செல்லும் காட்சி நாடகமாக நடித்துக் காட்டப்படும். மணற்சேனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய கிராமங்களுக்கும் இந் நிகழ்வுகள் தொடர்ந்து செல்லும். இந் நிகழ்வில் தாதனால் கொண்டு வரப்பட்ட வீரவாளை தருமரிடமும், வீமனிடமும் கொடுக்கும் காட்சியும் நடாத்தப்படும்.

பதினேழாம் நாள் தவநிலை இடம்பெறும். குருஷேத்திரப் போரிலே துரியோதனாதியோரை வெற்றி கொள்வதற்கு அருச்சனன், சிவனை நோக்கித் தவம் செய்து பாசுபதாஸ்திரம் பெறும் நிகழ்வு நள்ளிரவில் நடைபெறும். இதன் போது அருச்சுனன் தவ வேடம் பூண்டு தவநிலையை நோக்கிச் செல்லும் போது தருமரிடம் ஆசி பெற்றுச் செல்ல, அருச்சுனனின் தவத்தைக் கலைக்க தேவேந்திரனால் அனுப்பப்பட்ட ரம்பை மயக்கியும், மயங்காத அருச்சுனன் விலகிச் சென்றான். அதன் பின்னர் துரியோதனன் அருச்சுனனை அழிக்க முகாசூரன் எனும் பன்றி ரூபம் கொண்டவனை அனுப்பினான். அருச்சுனன் அந்த அசுரனை எதிர்த்து அழித்தான். பின் அருச்சுனன் தவநிலையில் ஏறிச் சிவனை நோக்கி,

*அருமறைப் பொருளே ஆடகச்சபையில்*
*அருந்தவர் மகிழ்ந்துற நோக்கத்*
*திருநடஞ் செய்யும் தேவனே தேவர்*
*திரை கடல் மதித்த நாள் தோன்றும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கருவிட முண்ட கண்டனே யுந்தன்*
*கால் மலர் துதித்திட வறியேன்.*

எனத்தொடரும் தோத்திரப் பாடல்களைப்பாடிச் சிவனிடம் பாசுபதாஸ்திரம் பெற்று. தவநிலை இறங்கிய பின் அரவானைக் களப்பலியூட்டும் சடங்கு நடைபெறும். அரவான் அருச்சுனனுக்கும் நாககன்னிக்கும் மகனாகப் பிறந்தவன். இவனை துர்க்கைக்கு பலியிடும் நிகழ்ச்சியே இதுவாகும்.

பதினெட்டாம் நாள் பாண்டவர்களும். பரிவாரமும் தீ மிதிக்கும் வைபவம் இடம்பெறும். இதனைப் பஞ்சபாண்டவர்கள் தங்கள் பாவங்களை எல்லாம் நீக்கிப் புதுப் பிறவி எடுத்தல் என்ற கருத்தினைச் சித்தரிக்கும் வகையிலே நிகழ்த்திக் காட்டுவர். தீப்பாயும் நாள் அதிகாலை தீக்குழிவெட்டப்பட்டு தீப்பாயும் சடங்கிற்குரிய ஆயத்தங்கள் செய்யப்பட்டு அன்று பக்தி சிரத்தையுடன் பக்தர்கள் புடை சூழ்ந்து நிற்க தீ மிதிப்பு வைபவம் இடம்பெறும்.

இறுதி நாள் பாற்பள்ளயச்சடங்கு நடைபெறும். அது பாரதப் போரில் இறந்த பாண்டவர்களின் உறவினர்களுக்காகச் செய்யப்படும் பிதிர் வழிபாடாகும். இச்சடங்கு நடைபெறுவதற்கு முன்னர் தருமருக்கு முடி சூட்டும் விழா நடைபெறும். இதன்போது பாரதக் கதையின் இறுதி அத்தியாயம் படித்து முடிக்கப்படும். அதன் பின்னர். கிருஷ்ணர் தருமருக்கு முடிசூட்டும் வைபவம் நடைபெறும். இதனையடுத்தே பாற்பள்ளயச் சடங்கு இடம்பெறும். அன்றைய தினம் ஊரார் பொங்கலிட்டு. மடைவைத்து. வழிபாடு செய்து. தீக்குழியிற் பால் வார்த்தலுடன் அது நிறைவு பெறும்.

திரௌபதியம்மனை ஏன் வழிபாடு செய்ய வேண்டும் என்பதற்கு தாதன் கல்வெட்டே விடை கூறுகின்றது.

*"ஆவினங்கள் வாழ அறமுயர்ந்து சாலி எழ*
*பாவலர் பாடப் பல்லுயிரெலாம் வாழ்க*
*மாதத்தில் மூன்று மழை மட்டு நகர் பெய்து வர."*

இதன்படி பசுக்கள் நோயின்றி வாழவும். மழை பொழியவும் பெண்களின் குறைபாடுகளைத் தீர்க்கவும். வாழ்க்கை ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிக்கவும் இவ் அம்மனுக்கு விழா எடுக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பிலே தனித்துவமும். சிறப்பும் வாய்ந்த மூத்த கோயில் பாண்டிருப்பு திரௌபதையம்மன் கோயிலாகும். திரௌபதியம்மன் வழிபாடு ஏனைய அம்மன் சடங்கு வழிபாடுகளில் இருந்து வேறுபட்டது. தமிழகத்து மகாபாரத இலக்கியத்தின் மரபுகளை நாடகத் தன்மையாக வெளிப்படுத்திக் காட்டும் வழிபாடாகும். இக்கோயிலை அடியொற்றியே பழுகாமம். புளியந்தீவு. மட்டக்கழி. புதூர். மகழவெட்டுவான் போன்ற ஊர்களிலும் திரௌபதியம்மன் வழிபாடும் சடங்கும் பின்பற்றப்பட்டு வருகின்றன. (சு. து.)

## பாணர்

தமிழ் இலக்கிய வரலாற்றில் தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட பழங்காலத்திலிருந்து சங்க காலம் வரையிலும் இசை. கூத்து ஆகிய இரு கலைகளின் மரபைப் போற்றி வளர்த்த பெருமை பாணருக்கும் பாடினியருக்கும் உண்டு. பண் இசைப்பவர்கள் பாணர் எனப்பட்டனர். இவர்கள் பாடல்களைப் பாடுவதிலும். யாழ் இசைப்பதிலும். கூத்துக் கலை நிகழ்ச்சிகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கினர். "துடியன் பாணன் பறையன் கடம்பனென்று இந்நான்கல்லது குடியும் இல்லை" என புறநானூற்றுச் செய்யுள் குறிப்பிடுகின்றது. பாணர்களில் ஆடவரைச் சென்னியர். வயிரியர். செயிரியர். மதங்கர். இன்னிசைகாரர் பாணரென்ப என பிங்கல நிகண்டும் மகளிரைப் பாடினி. விறலி. பாட்டி. மதங்கி. பாடல் மகடூஉ பாண்மகளாகும் எனத் திவாகர நிகண்டும் கூறுகின்றன. பாணன் சூடான் பாடினியணியாள் எனப் புறநானூறும். பாணந் வருக பாட்டியா வருக என மதுரைக் காஞ்சியும் குறிப்பிடுகின்றது பாணர்கள் மூவகையினர் எனத் தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு (91) உரை எழுதிய நச்சினார்க்கினியர் குறிப்பிடுகின்றார் இசைப் பாணரும் யாழ்ப்பாணரும் மண்டைப் பாணரும் எனப் பலராம் என்கின்றார். இசைப் பாணரைப் பாடற்பாணர் அம்பணவர் அகவர் எனக் குறிப்பிடுகின்றார் யாழ்ப்பாணர் யாழிசைத்துப் பாடுபவர் பேரியாழ் மகரயாழ் சகோட யாழ் செய்கோட்டியாழ் ஆகியவை இவர்கள் வாசித்தவற்றில் சிறப்பானவையாகும். இதில் பேரியாழ் வாசித்த பாணரை பெரும்பாணர் என்றும் செங்கோட்டி யாழாகிய சிறியாழை வாசித்த பாணரை சிறுபாணர் எனவும் அழைத்தனர். பெரும்பாணாற்றுப் படை சிறுப்பாணாற்றுப் படை என்ற நூல்கள் இவர்களையே சிறப்பித்துக் கூறுகின்றன மண்டைப் பாணர் என்போர் மண்டை என்னும் உண்கலமுடையோர். யாழினராகவும் கூத்தினராகவும் விளங்கிய இவர்களைச் சென்னியர் என்பர்.

இசையாலும் கூத்தாலும் மக்களை மகிழ்வித்த இவர்கள் வறுமையில் செம்மையான வாழ்க்கையை நடாத்தினர். பிழைப்பிற்காகப் பிறதொழில் நாடியமையையும் காணலாம். கேரளத்தில் திருவரங்கப் பாணர். மீன்பிடிக்கும் பாணன் குடைகட்டிப் பாணன். புற்றுவப் பாணன் என நான்கு பிரிவினர் காணப்படுகின்றனர். அஞ்சி லோதி யசை நடைப் பாண் மகள் இன்மீன் சொரிந்து பன்னெற் பெறூஉம் என ஐங்குறு நூறு குறிப்பிடுவதில் இருந்து மீன்பிடித்தலை விரும்பினர் என அறியமுடியும். இவர்கள் புலவர்களைப் பாடுவதனால் அவர்களால் பொருள் கொடுத்துக் கௌரவிக்கப்பட்டனர். சூழலுக்கேற்பவும் காலத்திற்கேற்பவும் பண்களை வகுக்கும் திறனுடைய இவர்கள் மன்னர்கள் போருக்குச் செல்லும் போதும் உடனிருந்து பல பாடல்களைப் பாடியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககாலத்திற்கு பின் கி.பி. 3ஆம் நூற்றாண்டளவில் களப்பிரர் தமிழ்நாட்டை கைப்பற்றிய போதும் இசை கூத்து போன்ற கலைகள் படிப்படியாக மறையத் தொடங்கின. பாண்டிய மன்னன் கடுங்கோனும் பல்லவ அரசன் சிம்மவிஸ்னுவும் களப்பிரரை வென்றதும் இக்கலையை வளர்த்தனர். பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருப்பாணாழ்வாரும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான திருநீலகண்ட யாழ்ப்பாண நாயன்மாரும் பாணர் குடியில் தோன்றிய திருத்தொண்டர்களாவர். பிற்காலத்தில் இவர்கள் இசைவேளாளர் என்றும் மேளக்காரர் எனவும் அழைக்கப்பட்டனர். ( இ.ச. )

## பாணினி

இந்திய இலக்கண வித்தகரிற் பாணினி மேலானவர். சமஸ்கிருத மொழிக்கு இலக்கணம் வகுத்தவர்களில் அவர் புராதனமானவர்; முதன்மையானவர். அவரின் சாதனை உலகிலே பிரசித்தமானது. உலகிலே தோன்றிய மிகப் புராதனமான இலக்கண நூலை எழுதியவர் என்ற சிறப்பும் அவருக்குண்டு. நவீன காலத்து மொழியியல் வல்லுநர்கள் பாணினியை மொழியியலின் பிதாமகராகக் கொள்வர்.

வியாகரணத்திற்கு வேதகாலம் முதலான வரலாறு உண்டு. வேதங்களைப் பயிலுவதற்குத் துணையாக வேதாங்கங்களை வகுத்தனர். வியாகரணம் அவற்றிலொன்று. பாரம்பரியமான மொழியியல் ஆய்வுகளின் உன்னதமான வளர்ச்சி நிலையினைப் பாணினியம் பிரதிபலிக்கின்றது. தன் முன்னோர்களான சாகடாயன(ர்) சௌனக(ர்) என்னும் வியாகரண விற்பன்னர்களைப் பாணினி குறிப்பிடுகின்றார்.

உத்தராபதத்தின் மேற்குப் பகுதியொன்றிலுள்ள சலாதுர என்னும் ஊரிற் பிறந்தவர் பாணினி. இவரின் காலத்தை உறுதியாக வரையறை செய்ய முடியவில்லை. சிலர் அவரை கி.மு ஆறாம் நூற்றாண்டினராகக் கொள்வர். வேறு சிலர் அவர் கி.மு நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பர். பாணினி யவனரைப் பற்றிக் குறிப்பிடுவதால் அவர் கி.மு நான்காம் நூற்றாண்டளவில் வாழ்ந்தவர் என்று கொள்வதே பொருத்தமானது. பாணினியின் நூல் **அஷ்டாத்யாயி** என்னும் பெயரால் வழங்குகின்றது. எட்டு அத்தியாயங்களைக் கொண்ட நூல் என்பதால் அது அப்பெயரைப் பெற்றது. அதில் ஏறக்குறைய 4,000 சூத்திரங்கள் உள்ளன. பாணினியம் மொழி வழக்கிலுள்ள **சொல்லும்** பொருளும் பற்றிய பெருநூல். **தொல்காப்பியம்** தவிர அதற்கிணையான இலக்கண நூல் வேறொன்றில்லை. தொல்காப்பியம் அதற்குக் காலத்தாற் பிற்பட்டது. சொல், பொருள் என்பன பற்றிய கோட்பாடுகளில் இரு நூல்களுக்கும் இடையிலே ஒற்றுமைகள் உண்டு. எழுத்துப் பற்றிய இலக்கணம் தொல்காப்பியத்திற் புதுமையாக வருகின்றது.

தனது காலத்தில் வழங்கிய மொழியை வர்ணிப்பதும் விளக்குவதுமே பாணினியின் குறிக்கோளாகும். வேத இலக்கியத்தின் மொழி வழக்கினைச் **சந்தஸி, நிகமே, மந்த்ரே** எனப் பலவாறு பாணினி குறிப்பிடுவார். பாணினியின் இலக்கண விதிகளுக்கு அடிப்படையான மொழிவழக்கு ஓரளவிற்குப் பிராமணங்களின் மொழி நடையைப் போன்றது. அது பிற்காலச் சமஸ்கிருத வழக்கிலிருந்தும் குறிப்பிடத்தக்க அளவில் வேறுபட்டது. அந்த வழக்கிலே பொதுவாக வரும் பெரும்பாலான சொற்றொடர்களும் சொல்லமைப்புகளும் பாணினியத்திலே காணப்படவில்லை.

வியாகரணிகளின் வரிசையிலே பாணினிக்கு அடுத்தவராக வந்தவர் காத்தியாயனர். **வார்த்திகம்** என்பது அவரது நூல். அது பாணினீயத்தின் விருத்தி உரை போன்றது.காத்தியாயனர் கி.மு மூன்றாம் நூற்றாண்டளவில் வாழ்ந்தவர். இருவருக்கும் இடைப்பட்ட காலத்திற் பாணினி குறிப்பிடும் சொற்கள் பல வழக்கொழிந்து விட்டன; வேறு பல சொற்கள் வழக்கில் வந்துள்ளன. காத்தியாயனர் அந்த மாற்றங்களைத் தனது வார்த்திகங்களிலே குறிப்பிடுகின்றார். பாணினியின் இலக்கண விதிகளை உறுதிப்படுத்தி விளக்குவதோடு, பொருத்தமான இடங்களில் அவற்றைக் காத்தியாயனர் மாற்றிவிடுகின்றார். மேலும் அவர் சில புதிய விதிகளையும் அமைத்துள்ளார்.

பதஞ்சலியின் மகாபாஷ்யம் காத்தியாயனரின் நூலைக் காட்டிலும் விரிவானது. பதஞ்சலி கி.மு இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் பாணினியின் சூத்திரங்களை விளக்குவதோடு சில சமயங்களில் அவற்றிலே குறைகண்டு நிவர்த்தி செய்ய முற்படுகிறார். காத்தியாயனர் பிழைகாணும் இடங்கள் சிலவற்றில் அவர் பாணினியின் கருத்துகளை ஆதரிக்கின்றார். பாணினிக்குப் பின் மொழிவழக்கில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அமையப் பதஞ்சலி சில உபவிதிகளை உருவாக்கியுள்ளார். பதஞ்சலி பழமொழிகளைக் கையாளும் விதமும் அன்றாட நிகழ்ச்சிகளை உதாரணமாகக் கொண்டு இலக்கண விதிகளை விளக்குவதும் மிகவும் கவர்ச்சியானவை. முறைப்படி எழுதப்பட்ட உரைநூல்களில் மகா **பாஷ்யம்** முதனூலாகும். பதஞ்சலியின் உரை பிற்கால உரைகாரருக்கு முன்மாதிரியாகி விட்டது.

இலக்கண நூலாக அமைந்த பாணினியம் பாரத நாட்டுப் பண்பாட்டு அம்சங்களின் கருவூலமாகும். நாட்டுப் பிரிவுகள், இயற்கை வளம், பருவகாலங்கள், மக்கட் பிரிவுகள், குடும்ப உறவுகள், உற்பத்திப் பொருள்கள், உணவுப் பொருள்கள், சமய வழிபாடுகள், சடங்குகள் முதலியன பற்றிய வர்ணனைகள் அதில் அடங்கியுள்ளன. கணராச்சியம், வம்சாவழி மன்னரின் இராச்சியம் என்ற இருவகையான அரசுகளைப் பற்றி அவர் குறிப்பிடுகின்றார். அவற்றை முறையே கணசங்கம் என்றும் ஜனபதம் என்றும் அவர் சொல்வார்.

க்ஷுத்திரக, மாலவ, அம்பஷ்ட, ஹாஸ்திநாயன, ப்ரகண்வ, மத்ர, மதுமந்த, ஆப்ரித, வஸாதி, வக்க, சிவி, ஆஸ்வாயன, அஸ்வகாயன முதலான கணராச்சியப் பெயர்கள் அவரின் நூலிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. இவற்றுட் பல மகா அலெக்ஷாந்தரின் படையெடுப்பு நடைபெற்ற காலம் வரை நிலைபெற்றிருந்தன. அவர் குறிப்பிடும் ஜனபதங்களில் கந்தார(ம்), அவந்தி, கோசலம், உசீநர, விதேக(ம்), மகத(ம்), அங்க (தேசம்), வங்கம் என்பன பிரதானமானவை.

பாணினியின் காலத்தில் பாகவதம் தோன்றிவிட்டது. **வாசுதேவக** என்ற சொல்லை விளக்குமிடத்து அது வாசுதேவர் மேல் பக்தி கொண்டுள்ள ஒருவரைக் குறிக்கும் என்கிறார். வேத சாகைகளைப் படிக்கும் மாணவிகளைப் பற்றியும் அவர் குறிப்பிடுகின்றார். **உபாத்யாயா** என்ற சொல் ஆசிரியரான பெண்களைக் குறிக்குமென்று காத்தியாயனர் சொல்வார்.

புராதன காலம் முதலாகச் சாலைகளிலும் ஆச்சிரமங் களிலும் பிரம்மதேயங்களிலும் பாணினியின் நூலைப் பயின்றனர். சிலர் அதனைச் சீவனோபாயமாகக் கொண்டனர். (சி. ப.)

## பாபநாசம் - தலம்

திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து 47கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது பாபநாசம். பாபநாசம் பேரூராக விளங்குகிறது. மக்கள் தொகை அதிகமாகக் காணப்படுவதுடன் மலைத்தொடர்கள் நிறைந்த இயற்கை எழில் கொஞ்சும் பிரதேசமாக விளங்குகின்றது. இவ் இயற்கை எழிலுடன் குடிகொண்டிருக்கிறார் உலகம்மை சமேத பாபவிநாசர். பொதிகை மலையில் உற்பத்தியாகும் தாமிரவருணி நதி மலையடி வாரத்தில் பாபநாசம் நீர்த்தேக்கத்தை அடைந்து, பின்னர் பாபவிநேஸ்வர ஆலயத்துக்கு முன்பாகத் தவழ்ந்து செல்லுகின்றது கோயிலுக்கு முன்பு நதிக்கரையில் நீராடும் துறை உள்ளது கோயிலுக்குள் செல்பவர்கள் நதியால் நீராடியே செல்ல வேண்டும் என்பது மரபு

அகத்திய முனிவருக்கு இறைவன் தனது திருமணக் கோலத்தை காட்டிய தலம் பாபநாசமாகும் அகத்தியரின் சீடராகிய உரோமச முனிவர் பாபநாசம் உள்ளிட்ட ஒன்பது தலங்களில் சிவபிரதிஷ்டை செய்து வழிபட்டார். இதனால் பாபநாசம் நவகலை சாதிகளில் ஒன்றாக விளங்குகிறது.

எழுநிலை ராஜகோபுரத்துடன் கோயில் அழகாக காட்சி அளிக்கும். கருவறையிற் பாபவிநாசேஸ்வரர் லிங்கத் திருமேனி யாகக் காட்சித் தருகிறார். கருவறைச் சுற்றில் தக்ஷிணா மூர்த்தியும் எதிராக அறுபத்து மூவரும், நாயன்மார் நால்வரும், அகத்தியர் வழிபட்ட லிங்கமும், சப்த மாதர்களும் காணப்படுகின்றனர். கன்னி மூலையில் விநாயகரும் சோமாஸ்கந்தரும் உள்ளனர். கல்யாண சுந்தரர் சந்நிதியிற் சிவன் உமையுடன் விடைமீதமர்ந்து காட்சி தருகிறார். முன் மண்டபத்தில் நடராஜர், சபையுள்ளது. இவற்றை விட அம்மன் சந்நிதி சுப்பிரமணியர் கோயில், உலகம்மை கோயில், திருமால் கோயில் முதலானவை காணப்படுகின்றன.

நாள்தோறும் நான்கு காலப் பூசைகள் இடம் பெறுகின்றன. வருடப் பிறப்பு மிகவும் சிறப்பான விழாவாகக் கொண்டாடப் படுகிறது. இறைவன் பாபவிநாசர், பாபவிநேஸ்வரர், முக்காலீஸ்வரர் எனும் பெயர் கொண்டு அழைக்கப்படுகிறார். நான்கு வேதங்களும் முக்காள மரமாக நின்று இறைவனை வழிபட்டதால் முக்காலீஸ் வரர் எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார். இறைவி உலகம்மை நின்ற கோலத்துடன் அருள் புரிகிறார். தலமரம் முக்காலி மரமாக விளங்குகிறது.

தீர்த்தமாக தாமிரவருணி நதி விளங்குகிறது. இத்தீர்த்தத்தில் நீராடி பாபவிநேஸ்வரரை வழிபடுபவர்கள் இப்பிறவித் துன்பங்கள் அகன்று வீடுபேறு அடைவார்கள். இதனை விளக்க ஒரு புராணக் கதையும் கூறப்படுகிறது. ஒரு தந்தை, மகன், மகள் சூழ்நிலை காரணமாக பிரிந்துள்ளனர். பின்னர் அண்ணனும் தங்கையும் தாம் சகோதரர்கள் என்பதை அறியாது திருமணம் செய்தனர் உறவு முறை தெரியவர முனிவரை அணுகி தம் நிலமையை எடுத்துக் கூறினார்கள். அவர் நீங்கள் இருவரும் கருப்பு நிற உடையணிந்து சிவ தலங்களுக்குச் சென்று நீராடி இறைவனை வழிபடுங்கள். எங்கு உங்கள் கருப்பு நிற ஆடை வெண்ணிறமாக மாறுகிறதோ அங்கே நீங்கள் பாப விமோசனம் பெறுவீர்கள் எனக் கூறினார். பல தீர்த்தங்களில் நீராடி இருவரும் பாபநாசத்தில் உள்ள தாமிரவருணியில் இறுதியாக வந்து நீராடினார்கள். அங்கு அவர்களது ஆடை வெண்ணிறமானது. அவர்களும் பாப விமோசனம் பெற்றனர். இவ்வாறு இத்தலத்தின் தீர்த்த விஷேடம் கூறப்படுகிறது.

இத்தலத்திற்கு பிற்காலப் பாண்டியர் திருப்பணிகளை மேற் கொண்டுள்ளனர். பாபநாசம் சூரியனுக்கு உகந்த தலம். சூரிய தோஷ நிவர்த்திக்கு இத்தல வழிபாடு நன்மை தரும். பாவத்தை நாசம் செய்யும் தலமாக விளங்கும் பாபநாசம் இயற்கை எழிலுடன் மூலிகை வாசனை கலந்த காற்றும், தெளிந்த தாமிரவருணி ஆற்றின் நீரும், பக்தர்களின் உடலுக்கும் மணத்திற்கும் ஆரோக்கியத்தையும் மகிழ்வையும் அளிக்கின்றது. இத்தலம் தேவாரப் பாடப்பெற்ற தலம் இல்லை. எனினும் திருநாவுக்கரசரின் பாடல் ஒன்றில் (பொது பாடல்) இவ்வாலயம் பாடப்பட்டுள்ளது. (ஹே. கு.)

## பாபநாச தீர்த்தம்

இலங்கையிலே தேவாரப் பாடல் பெற்ற தலமாக விளங்குவது திருக்கோணேஸ்வரம். வரலாற்றுப் பழமைமிக்கது. இவ்வாலய தீர்த்தமாக விளங்குவது பாபநாசத் தீர்த்தமாகும். இதன் பொருள் பாவத்தை நாசம் செய்வது என்பதாகும்.

ஆலயத்தின் வடகிழக்கு திசையில் வற்றாத நீருற்றாக, கடல் மட்டத்துக்கு கீழே அழகுடைய தீர்த்தமாக பாபநாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகிறது. இத் தீர்த்தக் கேணி நீள் சதுர வடிவுடையதாய் கருங்கற்களாலான படித்துறைகளை உடையதாக விளங்குகிறது. இத் தீர்த்தத்தில் அடியவர்கள் நீராடி, கோணேசரப் பெருமானைத் தரிசித்து தங்கள் பாவங்களை நீங்கிச் சித்தி பெற்றுச் செல்கின்றனர். பாவநாசத்தை சுற்றி ஐந்து தீர்த்தக் கிணறுகள் அமைந்துள்ளன.

தீர்த்தக் கேணிக்கு வடக்கு பக்கத்தில் ஆஸ்தான மண்டபம் அமைந்துள்ளது. மாதுமையம்மாள் சமேத கோணேஸ்வரப் பெருமான் பாபநாசத்தில் தீர்த்தமாடிய பின் இம்மண்டபத்தில் எழுந்தருளுவார். இத்தீர்த்தம் பற்றிய செய்திகள் கோணேஸ்வர ஆலயம் பற்றிய கோணேசர் கல்வெட்டுகளிற் காணப்படுகிறது. (ஷே. கு.)

## பாம்பன் சுவாமிகள்

அண்மைக் காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்த முருக பக்தர் பாம்பன் சுவாமிகள். பாம்பன் என்னும் சிற்றூரில் சிவாலயப் பணி செய்து வாழ்க்கை நடத்திய சாத்தப்பப் பிள்ளைக்கும் அவரது துணைவியார் செங்கமல அம்மாளுக்கும் புதல்வராகச் சுவாமிகள் கி.பி. 1853 ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர் இவருக்கிட்ட பெயர் அப்பாவு.

தமது ஆரம்பக் கல்வியை முனியாண்டிப் பிள்ளையிடமும், உயர் கல்வியை அவ்வூர் கிறீஸ்தவ நிலையத்திலும் பயின்றார். இவர் தம் கல்விப் புலமைச் சிறப்பால் பல பரிசுகளையும் பெற்றார். ஆயினும் இவருக்கு உலகியற் கல்வியில் நாட்டம் இருக்கவில்லை. ஆன்மீக ஈடுபாடு கொண்டவராகவே விளங்கினார். சில காரணங்களால் அவரது உலகியற் கல்வி தடைப்பட்டது. ஆயினும் அவரது ஆன்ம மலர்ச்சி எழுச்சி பெறத் தொடங்கியது.

ஒருமுறை சுவாமிகள் தென்னந் தோப்புகளைப் பார்த்து வருவதற்காகச் சென்றபோது இளஞ்சூரியன் ஒளியைப் பரப்பிக் கொண்டு எழுவதைக் கண்டதும், அக்காட்சி செவ்வேள் முருகனை நினைவு கூர, அவனைச் செந்தமிழ்ப் பாடல்களால் பாடித்துதிக்க வேண்டும் என்ற உந்துதல் உண்டாயிற்று. உடனே முருகனைத் தியானித்து 'உன்னைப் பாடும் பணியை எனக்கருளுக' என வேண்டினார். நான் ஒவ்வொரு பதிகத்தையும் அருணகிரிநாதப் பெருமானின் பெயரை வைத்தே முடிப்பேனாக, அவரது வாக்குத் திறம் எனக்கும் வருமாறு அருள் புரிய வேண்டும்' என இரந்து நின்றார். முருகனின் திருவருளால் அவரது வாய்வழியே 'கங்கையைச் சடையில்' எனத் தொடங்கி 'ஆதியே அமரர் கோவே' என முடித்தார். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு அவர் நாள் தோறும் ஒவ்வொரு பாடலாக நூறு பாடல்களை உணவு கொள்வதற்கு முன் பாடவேண்டும் என சங்கற்பம் செய்து பின் அவ்வாறே பாடித் தெய்வ வணக்கமாக மூன்று பாடல்களையும் இயற்றி அதனை நூலின் முதலிற் சேர்த்தார். இவரது இப்பாடல் தொகுப்பின் சிறப்பினையும், பக்குவ நிலையினையும் உணர்ந்த சேதுமாதவ ஐயர் என்பார் விஜயதசமித் திருநாளில் இராமேசுவர அக்கினித் தீர்த்தக் கரையில் அவருக்கு திருவாறெழுத்து மந்திரத்தை உபதேசித்து சமஸ்கிருத நூல்களையும் கற்க வேண்டும் என உத்தரவிட்டார்.

ஒருநாள் முருகப் பெருமான் கனவில் ஒரு அழகிய சைவப் பெரியவராகத் தோன்றி அவரை ஒரு கட்டிடத்திற்கு அழைத்துச் சென்று, ஓர் இடத்தில் அமர்த்தி, வாழை இலையில் பாற்சோறு பிசைந்து இட்டு அதனை உண்ணும்படி கூறினார். அவரும் உண்டார். கனா நிகழ்ச்சிக்குப் பிறகு அவருக்குப் பாடும் திறனும், தமிழ், வடமொழி நூலறிவும் பல மடங்கு அதிகரித்தது எனத் தெரிய வருகிறது.

ஒருமுறை சுவாமி துறவு நோக்கத்துடன் பழனிக்குப் புறப்பட்டார். அவ்வேளையில் நண்பரொருவர் "பழனிக்குச் செல்லுமாறு முருகனின் உத்தரவோ" என்று கேட்டபோது 'ஆம் ஆண்டவன் கட்டளை' என்று கூறிவிட்டார். இதனால் முருகன் கோபம் "இனி நான் உன்னைப் பழனிக்கு வருமாறு கட்டளை இடுகிற வரையில் நீ பழனிக்கு வரக்கூடாது" என்று ஆணை யிட்டார் எனவும் மனம் வருந்திய சுவாமிகள் தன் பிழையுணர்ந்து மூன்று பதிகங்கள் பாடினார் என்றும் கூறப்படுகிறது.

தலயாத்திரை செய்த போது சுவாமிகளுக்குக் காஞ்சிபுரத்தில் ஓர் அருள் நிகழ்ச்சி நடைபெற்றது. அங்கு எல்லாக் கோயில்களையும் தரிசித்து விட்டதாகக் கருதிக் கொண்டு சுவாமிகள் ஊருக்குத் திரும்ப முற்பட்ட போது வெள்ளைத் தலை பாகையும், வெண்ணிற ஆடையும் அணிந்து திருநீற்றுப் பொலிவுடன் வந்த ஒருவர் 'குமரகோட்டம் தரிசித்ததுண்டோ' எனக் கேட்டு சுவாமிகளை அவ்விடம் அழைத்துச் சென்று மறைந்து விட்டார். இது முருகனின் அருட் செயல் என உணர்ந்து நெஞ்சம் நெகிழ்ந்தார்.

சுவாமிகள் பிரப்பன் வலசை என்னும் மயானத்தில் கொட்டகை ஒன்று அமைத்து, தியானத்தில் ஈடுபட்டார். நிட்டையின் போது அவருக்குக் கிடைத்த உபதேசம் பின்னர் 'தகராலய ரகசியம்' என்னும் நூலாக வடிவெடுத்தது. துறவறம் மேற்கொண்ட சுவாமிகள் பாம்பன் பதியை நீங்கிச் சென்னை வந்தடைந்தார். அங்கு பக்குவம் வாய்ந்த அன்பர்கள் பலருக்கு ஞான தீட்சை அருளித் திருவாறெழுத்து மந்திரத்தையும் உபதேசித்து அருளினார். சிதம்பரத்துக்கருகிலுள்ள குயவன் பேட்டை என்னும் இடத்தில் தங்கியிருந்த போது *பரிபூரணந்த போதம், தகரலாய ரகசியம்* என்னும் சாஸ்திர நூல்களையும் கந்தர் *ஒலியியல் அந்தாதி, குகப் பிரம அருட்பத்து* முதலான தோத்திரங்களையும் பாடினார். வேத நூலுக்குச் சமமான 'திருப்பா' என்னும் நூலையும் பாடினார்.

பாம்பன் சுவாமிகள் துறவறம் மேற்கொண்டிருந்த போதும் வெள்ளை ஆடையே தரித்திருந்தார். காசி சென்று குமரகுருபர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் மடத்தில் தங்கியிருந்த போது இவர் காவியுடை ஏற்றார். சென்னைக்குத் திரும்பிய பின் தன் அனுபவங்களைக் *காசி யாத்திரை* என்னும் நூலாக எழுதினார். இதில் அவரது பயண அனுபவங்களும், அருள் அனுபவங்களும் அத்துவிதம் எனப்படும் தத்துவம் தொடர்பான விளக்கங்களும் இடம் பெற்றுள்ளன. '*குமாரவேள் பதிற்றுப்பத்தந்தாதி*' என்னும் நூலையும், வடமொழி கலவாது தனித் தமிழில் பாடவேண்டும் என்னும் நோக்கில் அவர் சேந்தன் செந்தமிழ் என்னும் நூலையும் இயற்றினார்.

பாம்பன் சுவாமிகள் சிதம்பரத்துக்கருகில் இருந்த பின்னத்தூர் என்னும் இடத்தில் சிவ நிட்டையில் இருக்கத் தீர்மானித்தார் ஆனால் சண்முகப் பெருமானின் சித்தம் அவரை வேறு திசையில் திருப்பியது. காட்டு மன்னார் குடி முதலான வேறு பல ஊர்களிலும் வாழ்ந்த வைணவர்கள் தமது வைணவக் கோட்பாட்டையும் புரிந்து கொள்ளாமல், சைவ சமய உண்மையினையும் உணர்ந்து கொள்ளாமல் விபூதி, உருத்திராக்கம் போன்றவற்றைத் தூஷித்தும் சிவலிங்க வடிவத்தை இகழ்ந்தும் வந்தனர். அவர்களை எல்லாம் வாதில் வென்று சைவ சித்தாந்த உண்மையினை நிரூபித்தார். வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள் அனைத்தும் சைவ சித்தாந்தத்தை உறுதிப்படுத்துகின்றன என்பதைத் தெளிவாக விளக்கி '*சைவ சமய சரபம்*' என்னும் நூலை எழுதினார். இந்நூல் தகர்க்க முடியாத சைவக் கோட்டை என வர்ணிக்கப்படுகின்றது. சைவத்தின் பெருமையை நிலை நாட்ட அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பல; அவை அனைத்தும் அவருக்கு வெற்றியையே தந்தது.

சுவாமிகள் தாம் முன்னர் எழுதிய *பரிபூரணந்த போதம்* என்னும் நூலுக்கு *சிவ சூரியப்பிரகாசம்* என்னும் உரையும், தகராலய ரகசியம் என்னும் நூலுக்கு *சதானந்த சாகரம்* என்னும் உரை நூலையும் எழுதி வெளியிட்டார். தமக்கு ஏற்பட்ட துன்பத்திலிருந்து நீங்க வேண்டிச் *சண்முக கவசம்* என்னும் நூலையும், தமக்கு ஏற்பட்ட வெப்பு நோய் நீங்கும் முகமாக *குமாரஸ்தவம்* என்னும் நூலையும் இவர் இயற்றினார் முருகபக்தர்களுக்கு இவ் இரு நூல்களும் ஔடதங்களாக உள்ளன.

கந்தபுராணத்தை மூல நூலோடு முரண்படாத வகையில் பாட விரும்பிய பாம்பன் சுவாமிகள் *ஸ்ரீமத் குமாரசுவாமியம்* என்னும் காவியத்தை எழுதினார். ஐந்து காண்டங்களால் நூலை முடித்த பிறகு பல்வேறு கோயில்களுக்கும் சென்று அவ்வப்போது பாடிய பதிகங்களையும் தன் காப்பியத்தோடு இணைத்துக் கொண்டு வந்தார். இவரது தல யாத்திரையின் போது ஓரிடத்தில் குதிரை வண்டிச் சக்கரம் ஏறிக் கால் எலும்பு முறிந்து விட்டது. வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இவரது காலினை ஆராய்ந்த வைத்தியர்கள் எலும்பு பொருந்துவது கடினம் என்று கூறிவிட்டனர். இந்நிலையில் பாம்பன் சுவாமிகளின் சீடர் சுப்பிரமணிய தாசர் என்பவர் சுவாமிகளின் கால் குணமாக வேணும் என வேண்டிச் சிரத்தையுடன் சண்முகக் கவசத்தை பாராயணம் செய்து வந்தார். சில நாட்களில் அதிசயிக்கத் தக்க வகையில் கால் எலும்புகள் இணைந்து கொண்டன.

பாம்பன் சுவாமிகள் வைத்திய சாலையில் இருந்த காலத்தில் ஓர் அற்புதமான தெய்வக் காட்சியைக் கண்டார். மேற்குத் திசையிலிருந்து இரு மயில்கள் நடனமாடிக் கொண்டே சுவாமிகளை நோக்கி வந்தன. அதில் ஒன்று மிகப் பெரியது. அது தன் தோகையை விரித்து வானவெளி முழுவதையும் மறைத்திருந்தது. தாம் கண்ட அற்புத மயில் வாகனக் காட்சியை "*அசோக சால வாசம்*" என்னும் பெயரில் எட்டுப் பதிகங்களாக வரைந்து *ஸ்ரீமத் குமாரசுவாமியம்* என்னும் நூலுடன் சேர்த்துக் கொண்டார். இவ்வருட் காட்சியைப் போற்றும் வண்ணம் வருடந்தோறும் "மயூர வாகன சேவனம்" என்னும் திருவிழாவையும் நடத்தினார்.

சுவாமிகள் அருளிய ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு (6666) திருப்பாட்டுகளும் ஆறு மண்டலங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவர் திருவான்மியூரில் வைகாசி மாதத் தேய்பிறை பக்ஷ ஆறாவது நாள் சமாதி எய்தினார். இந்த நாள் இவரது குரு பூசைக்குரிய நாளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. (நி. நி.)

## பாம்பாட்டிச் சித்தர்

பதினெண் சித்தர்களில் ஒருவர். இவர் திருக்கோகர்ணத்தில் பிறந்தார். பாண்டி நாட்டில் வாழ்ந்தார் என்று கூறப்படுகிறது. மேலும் மருத மலையில் வாழ்ந்தார் என்ற செய்தியும் அறியக்கூடியதாக உள்ளது. இம் மலையில் வாழ்ந்தார் என்பதற்கு அடையாளமாக அங்கு பாம்பாட்டிச் சித்தர் குகை, அணை முதலியன உள்ளன.

இவர் ஒரு முறை காட்டுவழியே சென்று கொண்டிருந்த போது சீறி வந்த பாம்பை அடித்துக் கொன்று விட்டுப் போய்விட்டார். நாளடைவில் பாம்புகளைப் பிடித்துக் கொல்வது இவருக்குப் பொழுது போக்காகிவிட்டது. இவரது வீரத்தைக் கேட்டறிந்த வைத்தியர்கள் சிலர் நவரத்தின மயமான உடம்பு கொண்ட தலையில் மாணிக்கம் உள்ள பாம்பைத் தேடித் தருமாறு கோரினர். அத்தகைய பாம்பைத் தீவிரமாகத் தேடி அலைந்த போது பூர்வ புண்ணிய பலனால் சித்தர் ஒருவரைச் சந்தித்தார்.

அச் சித்தர் (சட்டை முனிவர்) பாம்பாட்டிச் சித்தரை நோக்கி "வெளியிலே திரியும் பாம்பை விட்டு விடு. உன் உடம்பில் இருக்கும் பாம்பை அடக்க வழிதேடு" என்று உபதேசித்தார். இதுவரை காலமும் வெளியில் திரிந்து பாம்புகளைத் தேடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைந்த பாம்பாட்டிச் சித்தருக்கு ஒவ்வொருவருக்குள்ளும் பாம்பு ஒன்று இருக்கிறது என்ற செய்தி ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இது பற்றி மேலும் அறிய விரும்பிய சித்தர் விளக்கம் வேண்டி நின்றார்.

இறைவனின் படைப்பில் உருவான இவ்வுடம்பில் குண்டலினி என்னும் பாம்பு உள்ளது. வெளியில் திரியும் பாம்புகளை எல்லோரும் அறிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் உள்ளே உள்ள இந்தப் பாம்பை யாரும் தெரிந்து கொள்வதில்லை. இந்தப் பாம்பு தான் மனிதர்களின் அறிவை மழுங்கச் செய்து அறியாமையைத் தூண்டி விடுகின்றது. அறியாமை நீங்கி உள்ளம் ஒளி பெற, அடங்கிக் கிடக்கும் குண்டலினி சக்தி கிளர்ந்து எழ வேண்டும். அதற்கு ஜபம், தியானம் ஆகிய இரண்டு அவசியம் என உபதேசித்தருளினார். அதன்படி பாம்பாட்டிச் சித்தர் தியானத்தில் ஈடுபட்டுச் சாதனை படைத்தார்.

இவரது இயற்பெயர் பற்றிய குறிப்புக்கள் இல்லை. தனது இளமைக் காலத்தில் பாம்புகளைப் பிடித்து அடக்கினார். பின்னர் குருவின் உபதேசம் பெற்றுக் குண்டலினி என்னும் பாம்பினை எழுப்பிச் சாதனை புரிந்தார். இதனால் இவருக்குப் பாம்பாட்டிச் சித்தர் என்று பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இவர் சித்தர்களின் சித்தாடும் வல்லமையைப் மேல்வருமாறு கூறுகின்றார். கட்டுக்கடங்காத பாம்பைக் கட்டுவோம். இந்திரன் உலகை இங்கே காட்டுவோம். தூணைத் துரும்பாகவும், துரும்பைத் தூணாகவும் ஆக்குவோம். கடலைக் குடிப்போம். மண்டலங்களைக் கையால் மறைப்போம். வானத்தை வில்லாய் வளைப்போம். நெருப்புக்குள் மூழ்கிவிடுவோம். நீருக்குள் மூச்சை அடக்குவோம். வன்புலியைத் தாக்குவோம். இப்பெரும் உலகை இல்லாமல் செய்வோம். செங்கதிரைத் தண் கதிராய் மாற்றுவோம். பிரம்மா தேவர்களை ஏவல் செய்யச் செய்வோம். படைக்கும் தொழில் செய்வோம். கலைகள் யாவும் அறிவோம். நாதனுடன் சமமாக வாழ்வோம் (25-39 வரிகள்) என்கிறார்.

இவர் எழுதிய பாடல்களை கடவுள் வணக்கம், குரு வணக்கம், பாம்பின் சிறப்பு, சித்தர் வல்லபங் கூறல், பொருளாசை விலகல், பெண்ணாசை விலகல், சரீரத்தின் குணம், அகப்பற்று நீக்கல் என்னும் தலைப்பிற் காணலாம்.

*"எள்ளில் எண்ணெய் போலவுயிர் எங்கு நிறைந்த*
*ஈசன்பத வாசமலர் எண்ணி யெண்ணியே*
*உள்ளபடி அன்புபக்தி ஓங்கி நிற்கவே*
*ஒடுங்கி யடங்கித் தெளிந்து ஆடுபாம்பே"*

எள்ளுக்குள் எண்ணெய் போல் இவ்வுலக உயிர்கள் அனைத்திலும் இறைவன் நெருக்கமாக நிறைந்துள்ளான். மனதை அடக்கி, ஒடுக்கித் தியானம் செய்து ஈசன் பாதமலர் எய்த வேண்டும் எனத் தமது கடவுள் வாழ்த்திற் கூறியுள்ளார்.

மனித உடலின் நிலையற்ற தன்மையை அனைவரும் வியப்புறும்படி பாடியவர் பாம்பாட்டிச் சித்தர்.

*"இருவர்மண் சேர்த்திட ஒருவர் பண்ண*
*ஈரைந்து மாதமாய் வைத்த சூளை*
*அருமையாய் இருப்பினும் அந்தச் சூளை*
*அரைக் காசுக்கு ஆகாதென்று ஆடுபாம்பே"*
*"நீரில் எழும் நீர்க்குமிழி நிலைகெடல் போல*
*நில்லாது உடல் நீங்கி விடும் நிச்சயம்"*
*"ஊத்தைக் குழிதனிலே மண்ணை எடுத்தே*
*உதிரப்புனலினிலே உண்டை சேர்த்தே*
*வாய்த்த குயவனார் அவர் பண்ணும் பாண்டம்*
*வறையோட்டுக்கும் ஆகாதென்று ஆடுபாம்பே"*

நீரில் ஏற்படும் குமிழி தோன்றிக் கணப்பொழுதில் மறைந்து விடுவதுபோல அரைக்காசுக்கும் பெறுமதியில்லாத, வறையோட்டுக்கும் ஆகாத இவ்வுடலில் பற்றுவைத்துப் பாழ்நிலை எய்தாமல் சிந்தையைச் சிவன்பால் செலுத்தும்படி வேண்டுகிறார்.

பொதுவாக மக்கள் தம் வீடு, பொருள், ஏனைய பொருள்கள் இவைகளிலெல்லாம் பற்று வைத்துக் கெட்டியாகப் பிடித்திருப்பார்கள். இத்தனை பொன்னும், பொருளும் எமன் வந்து உயிரைப் பறிக்கும் போது உதவமாட்டா. ஆகவே பயனற்ற இந்தச் செல்வங்களை விடுத்து என்றென்றும் இன்பம் தரக் கூடிய சிவன் திருவடிகளை நினைந்து ஆடுபாம்பே என்று பாடுகிறார்.

*"நாடுநகர் வீடுமாடு நற்பொருள் எல்லாம்*
*நடுவன்னு ரும்பொழுது நாடிவருமோ*
*கூடுபோன பின்பு அவற்றால் கொள்பயன் என்னோ?*
*கூத்தன் பதங் குறித்து நின்று ஆடுபாம்பே"*
*"மாடகூட மாளிகைகள் வண்ண மண்டபம்*
*மதில் சூழ்ந்த அரண்மனை மற்றும் உள்ளவை*
*கூடவாரா வென்று அந்தக் கொள்கை அறிந்தோர்*
*குலவாமல் வெறுப்பாரென்று ஆடுபாம்பே"*

இப் பாடல்கள் அனைத்து நிலையற்ற உலக வாழ்வின் தாற்பரியத்தைச் செம்மையாகப் புலப்படுத்துகின்றன.

மக்களிற் சிலர் இறைவனைத் தேடிக் காடுகளிலும், மலைகளிலும், நதிகளிலும், புண்ணியத் தலமான காசிக்கும் சென்று அல்லற்படுகின்றனர்.

"காடுமலை நதிபதி காசி முதலாய்க்
கால் கடுக்க ஓடிற்பலன் காணலாகுமோ"
"நாட்டுக்கொரு கோயில்கட்டி நாளும் பூ சித்தே
நாதன் பாதம் காணார்கள் என்று ஆடுபாம்பே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுகள், மலைகள், புண்ணிய நதிகள் என்று அலைந்து திரிவதால் பலன் இல்லை. முத்தி வேண்டினால் தூய உள்ளத்துடன் இறைவனை வழிபட அவன் அங்கே குடிகொள்வான். எம்மை ஆட்கொள்வான் என்று தம் பாடல்கள் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

எண்ணரிய புண்ணியங்கள் எல்லாம் செய்தும் என் ஏகன் அடி நெஞ்சமதில் எண்ணாவிடிலே.... என்ற பாடல்வரிகள் எண்ணுவதற்கரிய புண்ணியங்கள் பல ஒருவர் செய்திடினும் அவற்றால் எவ்வித பயனும் இல்லை. பண்ணுவதற்கு அரிய தவமும், இறைவன் மேல் பக்தியும் இல்லாத நிலையில் ஒருவர் செய்யும் புண்ணியங்கள் பாழ்படும் என்பது பாம்பாட்டிச் சித்தரின் கூற்று.

சித்தர்களின் குறிக்கோள் சித்தாகாசம் எனப்படும் வெட்ட வெளியில் ஆன்மாவைக் கலந்து மணமில்லாப் பெரு வாழ்வு வாழ்வதே பேரின்பம். சித்தாகாசத்தில் ஒளியாய் இருக்கும் சிவனோடு ஆன்மா கலந்துவிட்டால் உடல் ஒளிமயமாகிவிடும். ஆன்மஞானம் கைவரப் பெற்றால் மட்டுமே இறைவனோடு கலக்க முடியும். இந்த சாயுச்சிய நிலை அடைவதையே ஆன்மீகப் பயணத்தின் முடிவாகச் சித்தர்கள் கருதுகின்றனர். இதனால் தான் சடங்குகள் சம்பிரதாயங்களை மறுக்குமிவர்கள் யோகத்தையும், ஞானத்தையும் வலியுறுத்துகின்றனர்.

இக் கருத்தினைப் பாம்பாட்டிச் சித்தரும் தனது பாடல்களில் வலியுறுத்தி உள்ளார்.

"நாதனுடன் சமமாக நாங்களும் வாழ்வோம்"
"ஆயத் துறைகடந் தப்பாற் பாழின்
ஆனந்தம் சேர்ந்தோம் என்றாடு பாம்பே"

சாதி பேதமற்ற சமநிலைச் சமுதாயம் ஒன்றைக் காணவேண்டும் என்ற நோக்கு பொதுவாகச் சித்தர்களிடம் காணப்பட்டது.

"சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்" என்கிறார் பாம்பாட்டிச் சித்தர்.

ஒருமுறை இறந்த அரசன் உடலிற் புகுந்து வாழ்க்கையின் நிலையற்ற தன்மை பற்றிய பல தத்துவக் கருத்துக்களைப் பாடலாகப் பாடினார் என்றும் கூறப்படுகிறது. இவர் இரவு பகலாகப் பல இடங்களில் சுற்றித் திரிந்து ஆதரவற்றோர்க்கு ஆதரவுகாட்டி மக்களை மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிவகுத்தார்.

(நி. நி.)

## பார்த்தசாரதி

பார்த்தனுக்கு (அர்ச்சனன்) சாரதியாகக் கிருஷ்ணன் பாரதப் போரிலே கடமையாற்றினான். எனவே கிருஷ்ண பரமாத்மாவே பார்த்த சாரதி என அழைக்கப்படுகிறான்.

கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்குமிடையிற் போர் மூண்டது. அவ்வேளையில் அர்ச்சுனனும் துரியோதனனும் கிருஷ்ணனின் உதவியை நாடி அவனிடம் வந்தனர். துவாரகைக்கு முதலிலே வந்த துரியோதனன் துயின்று கொண்டிருந்த கண்ணனின் தலைப்பக்கத்தில் ஆசனத்தில் இருந்தான். அருச்சுனன் பின்னர் வந்து கால் மாட்டில் அமர்ந்தான்.

கிருஷ்ணன் கண் விழித்ததும் முதலில் கால் பக்கத்தில் இருந்த அருச்சுனனைக் கண்டான். நல்வரவாகட்டும் என்றான். பின் திரும்பிப் பார்த்தான் துரியோதனன் ஆசனத்தில் வீற்றிருந்தான். அவனது சுகதுக்கங்களை விசாரித்தான்.

துரியோதனனே முதலிற் பேசினான். யுத்தம் உண்டாகும். அந்த யுத்தத்திற்கு நீர் எனக்கு உதவி செய்ய வேண்டும் எனக் கேட்டான். அருச்சுனனும் நானும் சமமான பிரியம் உன்னிடத்திற் கொண்டுள்ளோம்; உறவு முறையும் அப்படித்தான் என்றான்.

அதற்குக் கிருஷ்ணன் நீ முதலில் வந்தது உண்மையாக இருந்தாலும் நான் முதலில் அர்ச்சுனனையே பார்த்தேன். நான் இருவருக்கும் கடமைப்பட்டுள்ளேன். இருவருக்கும் உதவி செய்கிறேன் என்றார். மேலும் "எதை யார் விரும்புகிறார்களோ அதை அவர்கள் நன்றாக யோசித்துப்பெற வேண்டும்" என்றான். "போர் செய்வதில் எனக்கு ஒப்பானவர்களும், மகாவீரர்களுமான என் படைகள் வேண்டுமா?" என முதலில் பார்த்த சாரதி அருச்சுனனைக் கேட்டான். நன்றாக யோசித்த பின் அருச்சுனன் போருக்கு ஆயுதம் ஏந்தாத கண்ணபிரான் தனக்கு உதவியாக வந்தால் போதும் என்றான்.

இவ்வேளையில் துரியோதனன் அருச்சுனன் ஏமாந்தான் என நினைத்தான். பின்னர் ஸ்ரீ கிருஷ்ணனின் படைகளை அவன் கேட்டுப் பெற்றுக் கொண்டான். மிகுந்த மகிழ்ச்சியுடன் நடந்த விடயங்களைப் பலராமனிடம் கூறினான். கிருஷ்ணன் இல்லாத படையில் நான் கண நேரம் கூட இருக்க மாட்டேன் கௌரவருடன் சேரமாட்டேன் எனக் கூறித் தலயாத்திரை புறப்பட்டு விட்டான்.

அருச்சுனன் ஆகியோர் நன்றாக ஏமாந்து விட்டார்கள். துவாரகையின் படைகள் என் படையுடன் சேர்ந்து விட்டமையால் என் படை பெருகிவிட்டது என மகிழ்ந்தான். நானே யுத்தத்தில் வெற்றி பெறுவேன் என இறுமாந்தான். கிருஷ்ணன் அருச்சுனனை நோக்கிக் எனது சேனைப்பலத்தை விட்டு ஆயுதமேந்தாத என்னை விரும்பியது எதற்காக என்று கேட்டான். அதற்கு அருச்சுனன் நான் சேனைகளுடன் போராடி வெல்லுவேன். நீ தேரோட்டியாக மட்டும் இருந்து உதவி செய்தால் போதும் என்றான். அவன் வேண்டுகோளுக்கிணங்கிய கிருஷ்ண பரமாத்மா பார்த்தனுக்குத் தேரோட்டியாய்ப் பாரதப்போரில் திகழ்ந்து பார்த்த சாரதியானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணரும் அர்ச்சுதனும் இணைந்த அவதார புருஷர் என்ற மரபுண்டு

நர, நாராயண என்னும் மகரிஷிகளின் மறு அவதாரம் அவர்கள்என்ற கருத்தும் உண்டு.

தர்மத்தைப் பாரதப் போர் வழியாக நிலை நாட்டுவதே கிருஷ்ணாவதாரத்தின் நோக்கம். அதனாற் கிருஷ்ணர் பார்த்த சாரதியானார். (தி. தி.)

## பார்த்தன் பள்ளி

திருக்கோயில் மேற்கு நோக்கியது. மூன்றுநிலை செங்கல் கோபுரம் அழகானது. திருநாங்கூர் திவ்ய தேசங்களில் திருநகரி, பார்த்தன் பள்ளி, அண்ணன் கோயில், குடமாடுங் கூத்தர் கோயில் ஆகிய நான்கிற்கும் கோபுரங்கள் உள்ளன. சுமார் 75 அடி உயரமுள்ள இதனைக் கோட்டூரார் கோபுரம் என்பர். இதைக் கட்டிய கோட்டூர் அரங்கநாத முதலியாரின் சிலையும் கோபுர வாசலில் உள்ளது. கோபுரமும் கோயிலும் புதுப்பிக்கப் பெற்று 31-8-81இல் மகாசம்புரோட்சணம் நடைபெற்றது. கோயிலினுள் மேற்குத் திருச் சுற்றில் புதிதாகக் கட்டப்பெற்ற அனுமார் சந்நிதியும், தெற்குத் திருச்சுற்றில் பழைய பார்த்தன் சந்நிதியும் உள்ளன. அர்ச்சுனன் கத்தியுடன் அஞ்சலித்த வண்ணம் வடக்கு நோக்கி உள்ளான். தாயாரின் திருநாமம் தாமரை நாயகி.

மண்டபத்துள் வந்தால், அங்கு பராங்குச, பரகாலயதிவராதி களைத் தரிசிக்கலாம். உட்சுற்றும் உண்டு. கருவறையில், நாராயண விமானத்தின் கீழ் ஸ்ரீதேவி, பூதேவி நாச்சியார் புடைசூழ பார்த்த சாரதிப் பெருமாள் நின்ற கோலத்தில் சேவை சாதிக்கிறார். திருவல்லிக்கேணி பார்த்தசாரதி இரு கரங்களுடையவர். பார்த்தன் பள்ளியார் நான்கு கரங்களுடையவர். சங்கு சக்கரமுடையவர். அல்லிக்கேணியாருக்கு அழகிய மீசை உண்டு. இவருக்கு மீசை இல்லை. பார்த்தசாரதிப் பெருமாள் உற்சவருடன் கோலவில்லி ராமன் உற்சவரையும் இங்குக் காணுகிறோம். முன்பு, கோல வில்லிராமருக்கு இக்கோயிலினுள்ளே தனிச்சந்நிதி இருந்ததென்றும், அது கிலமாகிவிட்டதால் பிறகு, ஔவையார் குளத்தருகே தனிக்கோயில் கட்டப்பெற்றதென்றும் கூறுவர். உற்சவர் மட்டும் இங்குள்ளார். இங்கு தைப்பூசத்தில் பெருவிழாவும், தை அமாவாசையில் திருமங்கை ஆழ்வார் இங்கு எழுந்தருளி நடத்தும் மங்களாசாசன உற்சவமும் நடைபெறுகின்றன. ஆடி அமாவாசையில் பெருமாள் பூம்புகார் கடலுக்குச் சென்று தீர்த்தம் கொடுக்கிறார். வழக்கம் போல மார்கழியில் வைகுந்த ஏகாதசி உண்டு. பாஞ்சராத்திர ஆகமப்படி இங்கு பூசைகள் நடக்கின்றன. பொய்கை ஆழ்வாரும் இங்கு மங்களாசாசனம் செய்துள்ளதாகச் சொல்வார்கள். அவர் இங்கு அருளியதாகச் சொல்லப்படும் "பெயருங்கருங்கடலே நோக்கும்.." என்னும் பாசுரம் இந்தப் பதிக்குரியதுதானா என்பதில் சர்ச்சை உண்டு.

### பரகால நாயகி :

திருமங்கை ஆழ்வார் பார்த்தசாரதியிடம் காதல் கொண்டு நாயக - நாயகி பாவத்தில் மங்களா சாசனம் பண்ணிய பாசுரங்கள் நெஞ்சை அள்ளும் தமிழ் ஆரங்கள். பரகாலநாயகி என்னும் பெயரில் ஆழ்வாரின் பெண்மை ஏறிட்ட பேச்சுக்கள் அகப்பொருட் சுவையும் பக்தி ரசமும் பெருக்கெடுப்பன. பராங்குச நாயகியாம் நம்மாழ்வாரைப் போல பரகால நாயகியாம் மங்கை மன்னரும் இராமாவதாரத்திலும் கிருஷ்ணாவதாரத்திலும் ஈடுபாடுடையவர். இத்தலத்தில் அவர் அருளிச் செய்த ஒரே பதிகத்தில் இரு அவதாரங்களையும் அனுபவித்திருப்பதே அதற்கு நல்ல சான்றாகும். தாய், தோழி, தலைவி என்னும் மூன்று நிலைகளிலும் நின்று அகச்சுவை பொருந்திய பக்திப்பாடல்களைப் பாடும் பரகால். இங்குத் தாய்மை நிலையை ஏறிட்டுக் கொண்டு, தன் மடந்தையின் தாபத்தைப் பாடுமிடங்கள் தெவிட்டாத தேனமுதங்கள்:

*கவளயானைக் கொம்பொசித்த*
*கண்ணனென்றும் காமருசீர்க்*
*குவளைமேக மன்னமேனி*
*கொண்டகோன் என்ஆனைஎன்றும்*
*தவளமாட நீடுநாங்கைத்*
*தாமரையாள் கேள்வனென்றும்*
*பவளவாயாள் என்மடந்தை*
*பார்த்தன்பள்ளி பாடுவாளே.*

ஆழ்வாரின் பாசுரத்தால் தாமரையாள் கேள்வனென்ற திருநாமத்தை அனுபவிக்கிறோம். இப்பதியும் நாங்கூர் நாட்டைச் சேர்ந்ததென்றும், இங்கு மாடங்களும் வீதிகளும் இருந்தனவென்றும் அறிகிறோம்.

### கோலவில்லி:

ஏகவில், ஏகசொல், ஏகஇல் - இவைகள் இராமாவதாரத்தின் தனிச்சிறப்புக்கள். இந்த இப் பிறவியில் இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன் என்று ஜாக்கிரதையாக வரங்கொடுத்தவன் இராமன். அடுத்த அவதாரத்தில் கண்ணனாக வந்தபோது தாரங்கள் பலவன்றோ! எனவே இராமனை ஏகதாரத்தோடுதான் நாம் எங்கும் கண்டிருக்கிறொம். இங்கே ஒரு புதுமை! கோலவில்லிராமன் ஸ்ரீதேவி பூதேவி நாச்சியாருடன் காட்சிதருகிறான். தசரதன், புத்ர காமேஷ்டி யாகம் செய்யும்போது, எளியனாகிய எனக்கோ ஸ்ரீமன் நாராயணன் குழந்தையாக வந்து பிறக்கப்போகிறான் என்று ஐயுற்றபோது, அவன் ஐயந்தீர்க்க, யாககுண்டத்தில் நாராயணன் தேவியர் இருவருடனும் காட்சி தந்தாராம். அக்காட்சியைத்தான் இங்கு நாம் சேவிக்கிறோம். திருவடிகள் யாககுண்டத்தினின்று எழுகின்ற வண்ணத்திலுள்ளன. இவரைத் திருமங்கையார்,

*"அரக்கராவி மாளவன்று*
*ஆழ்கடல் சூழ் இலங்கை செற்ற*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரக்கரச னென்றும்
கோலவில்லி என்றும் மாமதியை
நெருக்குமாட நீடுநாங்கை
நின்மலன் என்றென்றோதிப்
பரக்கழிந்தாள் என்மடந்தை
பார்த்தன்பள்ளி பாடுவாளே''

என்று அனுபவிக்கிறார்.

### பெருந்தோட்டம்:

மங்கை மடத்தின் தென்பகுதியிலுள்ளது யோகீசுவரம் என்னும் சிவன் கோயில். அதனைத் தரிசித்துவிட்டு பேருந்து மூலம் நேர்கிழக்கே 2 கி. மீ. சென்றால், பெருந்தோட்டம் என்னும் ஊர் உள்ளது. பெரிய ஏரியும், பசிய வயல்களும், அடர்ந்த சோலைகளும் பார்க்கத் தெவிட்டாதன. இங்குள்ள முக்கிய கோயில்கள் மூன்று.

### ஆதிகேசவப் பெருமாள்கோயில்:

மிகவும் பழுதடைந்திருந்த இக்கோயில் முற்றிலும் புதிதாகக் கட்டப்பெற்று 1983-இல் குடமுழுக்கு செய்யப்பட்டது. தாயார் கோயிலும் புதிதாகக் கட்டப்பெறவுள்ளது. இங்கு உள்ள திருமங்கை ஆழ்வாரின் செப்புச்சிலை போன்று வேறெங்கும் காண இயலாது. கூப்பிய கரமும், கூரிய ஈட்டியும் கொண்டு குமுதவல்லி நாச்சியாருடன் மிகக் கம்பீரமாகக் காட்சி தருகிறார் ஆழ்வார்.

### கயிலாசநாதர் கோயில்:

கிழக்கு நோக்கிய சந்நிதி. தெற்கே திருக்குளம். எதிரே உள்ள வௌவால்நெற்றி மண்டபமும், தெற்கு நோக்கிய அம்பாள் சந்நிதியும் பழுதடைந்துள்ளன. பிரகாரத்தில் பிள்ளையார், முருகன், சண்டீசர் கோயில்கள் உள்ளன. கருவறையிலுள்ள மூலவர், பெரியவர், கயிலாசநாதர் என்று திருநாமம். தெற்கு நோக்கிய அம்பாள் நீலாயதாட்சி. நடராசர், பிட்சாடனர், சோமாஸ்கந்தர் ஆகிய உற்சவ மூர்த்திகளும் உள்ளர்.

### ஐராவதேசுவரர் கோயில்:

தற்போது ஊரின் கிழக்கே உள்ளது இக்கோயில் ஒரு காலத்தில் இக்கோயிலை மையமாக வைத்தே நான்கு வீதிகளைக் கொண்ட இவ்வூர் இருந்துள்ளது. கிழக்கே 1 1/2 கி. மீ. - இல் உள்ள கடல்நீர் அடிக்கடி ஊருள் வந்து விடுவதால் வீடுகள் கோயிலுக்கு மேற்கே இடம் பெயர்ந்து விட்டன. இக் கோயில் பிற்காலச் சோழர் காலத்தியது. அத்தீசுவரம் என்று அப்பரால் பாடப்பெற்ற வைப்புத் தலம் என்பர். ஆழ்வார் குறிச்சிக்கு அருகிலுள்ள சிவசைலமே அத்தீச்சரம் என்று கூறுவர். அத்தி என்றால் யானை. ஐராவதம் எனும் யானை வழிபட்டதால் கோயிலை அத்தீச்சரம் என்றும், சுவாமியை ஐராவதேசுவரர் என்றும் அழைப்பர். அம்பாள் பெயர் அதிதுல்ய குஜாம்பிகை.

கிழக்கு நோக்கிய சந்நிதி. பிரகாரத்தில் வாதாடும் பிள்ளையார், தலவிநாயகர், சுப்பிரமணியர், மகாலட்சுமி கோயில்கள் உள்ளன. இவைகள் அண்மையில் திருப்பணியாகியுள்ளன. கருவறையும், மகாமண்டபமும் திருப்பணிக்குக் காத்துள்ளன. திருப்பணி செய்யும் காலத்தில் இப்பழமையான கருவறை, விமானம் முதலியவைகளை மாற்றவேண்டிய அவசியமில்லை. கருவறைக்குச் செல்லும் படியிலும், நிலையிலும் உள்ள கல்வெட்டுக்கள் ஆராய வேண்டியவை. இங்குள்ள நடராசர், சோமாஸ்கந்தர், தனி அம்பாள் முதலிய சோழர் காலப் படிமங்கள் மிகவும் அழகு வாய்ந்தவை. திருவெண்காட்டுக் கோயிலுடன் கட்டடக் கலையிலும், படிமக்கலையிலும் புராணச் செய்திகளிலும் தொடர்புடைய இப்பழமையான கோயில் விரிவான ஆராய்ச்சிக்கு இடந்தருகிறது.

கழுகரசன் சம்பாதி சிறகிழந்த பின் இருந்த சம்பாதி வனமொன்று பூம்புகாரில் இருந்ததாக மணிமேகலை கூறுகிறது. அவ்வனமே இப் பெருந்தோட்டமாக இருந்திருக்கலாமெனத் திரு டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் கருதுகிறார். புராணம் இவ்வூரை உத்யான வனம் என்கிறது. தேவர்கள் மட்டும் விரும்பும், மனிதராலும் வண்டுகளாலும் நுகரப்படாத மலர்வனம், உய்யானம் என்ற பெயரில் இங்கிருந்ததாக மணிமேகலை கூறுகிறது. உய்யானமே புராணத்தில் உத்யானவனமாயிற்றோ என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது. மேலும், சடாயு என்னும் கழுகரசன் வைத்தீசுவரன் கோயிலிலிருந்து தினம் ஒரு காததூரம் சென்று பூக்கொணர்ந்து வழிபட்டதாகப் புராணம் கூறுகிறது. திருஞானசம்பந்தரும் ``யோசனை போய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளு மொழி யாமே பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே'' என்று பாடுகிறார். ஆதலின் சடாயு பூ எடுத்துச் சென்ற வனமாக இது இருந்திருக்கக் கூடும். வைத்தீசுவரன் கோயிலுக்கு நேர்கிழக்கே ஒரு காத தூரத்தில் பெருந்தோட்டம் உள்ளது. மங்கை மன்னன் வைத்த பெருந்தோட்டம் இங்கிருந்ததால் இதற்குப்பெயர் பெருந் தோட்டமாயிற்று என்பது செவிவழிச் செய்தி. திருவெண்காட்டுக் கோயில் கல்வெட்டு இவ்வூரைக் கலியுகக் கண்ணன் சதுர்வேதி மங்கலம் என்று குறிப்பிடுகிறது. (த. அ.)

## பார்வதி

பார்வதி என்ற சொல் இந்துக்களின் பெண்தெய்வத்தையே குறித்து நிற்கின்றது. இந்துப் பாரம்பரியத்தில் அன்னையை சாந்த வடிவத்திலும், கோர வடிவத்திலும் பாவனை செய்து வழிபடுவர். உலகமனைத்தையும் படைத்துக் காப்பது அவளது சாந்த வடிவம். காலரூபியாக இருந்து அனைத்தையும் அழிப்பது. அசுரர்களை அழிப்பது அவளது கோரவடிவத்தில் நிகழும் செயற்பாடுகளாகும். கோரவடிவமாக அவள் தோன்றும் போது துர்க்கை, சண்டி, சாமுண்டி, காளி என அழைப்பர். செல்வத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபதி இலக்குமி. கல்விக்கு அதிபதி சரஸ்வதி என அழைக்கப்படுவது போல் அறத்தில் பற்றுதலும் அழியா நிலமையாகிய மோட்சத்தையடைய ஞானத்தை அளிக்கும் போது அவளை பார்வதி என அழைப்பர். பார்வதியை ஞானாம்பாள். தர்மாம்பாள். ஆனந்த வல்லி. வேத நாயகி. பிரவித்தியாம்பாள். யோகாம்பாள் என்றெல்லாம் போற்றுவர்.

பார்வதி - பர்வதராஜனுடைய புதல்வி. இம்மண்ணுலகில் அமைந்துள்ள மலைகளுள் மிகப் பெரியதாகிய இமய மலைக்குப் பர்வதராஜன் என்னும் பெயர் பொருத்தமாக அமைந்திருக்கிறது. உயிரற்றதாக தென்படும் மலையானது உயிருள்ளதாகத் திகழ்வதை இமாசலத்தில் காணலாம். அக்காட்சியை முன்னிட்டே அம்பிகைக்கு பார்வதி என்ற பெயர் வந்துள்ளது. வரைந்துள்ள ஓவியங்கள் உயிரற்றவைகள். அந்த ஓவியங்களை எல்லாம் விடப் பன்மடங்கு சிறந்தவைகளாக பார்வதி இமாசலத்தில் விளங்குவதால் அவள் உயிர் ஓவியம் என்று இயம்பப் பெறுகின்றாள். அசேதமாய் இருப்பது சேதனமாக மாறியமைவது இயற்கையின் பெருந்திட்டம் என்று நவீன விஞ்ஞானமும் இயம்புகின்றது. பார்வதி என்னும் பதம் இக் கோட்பாட்டுக்கு முற்றிலும் பொருத்தமானதே.

பார்வதி என்ற பெண் கடவுள் சிவனுடன் இணைத்தே வழிபடப்பட்டாள். வடநாட்டில் குப்தர் சிற்பங்களில் மிகவும் அழகு வாய்ந்தவை பார்வதி சிற்பங்கள். தென்னாட்டிற் சிவன் பார்வதி வடிவத்தினை சிவனாலயங்களிற் காணலாம். அர்த்தநாரீ மூர்த்தமும் சிவலிங்கத்தைத் தழுவிக்கொண்டிருக்கும் பார்வதியின் மூர்த்தமும் சிவன் சக்தி ஐக்கியத்தைச் சுட்டி நிற்கும் வடிவங்களாகும். எனினும் குமரனை நடுவில் வைத்த சிவன் பார்வதி வடிவமாகிய சோமாஸ்கந்த வடிவம் சிறப்புடையதாகவே காணப்படுகிறது.

இலிங்கவடிவத்திற் பார்வதி கண்ணுக்கு தெரியாமல் சிவனுடன் இணைந்துள்ளாள் சிவன் கோயிலில். பரமசிவன் பார்வதியுடன் நவரத்தின மணிபீடத்தில் ஏகாந்தத்தில் சரச சல்லாப மூர்த்தியாய் மூழ்கியிருந்தார். சந்தர்ப்பம் தெரியாமல் உள்ளே புகுந்தார் பிருகு முனிவர். இவர்களது சல்லாபத்தைக் கண்ட பிருகு முனிவருக்கு கோபம் மேலிட்டது. தாமச குணம் நிறைந்தவர் என சிவனை நினைத்து "மகேஸ்வரா உன் அன்பு அடியார்களை அவமதித்த உனக்கு அவனியில் எங்குமே உருவ வழிபாடு இல்லாமல் போகக் கடவது. உன்னை பூஜிக்க எண்ணுவோர் லிங்க வடிவத்தில் மட்டுமே பூஜிப்பார்களாக" எனச் சபித்தார். இதனால் பார்வதி பரமேசுவர உருவ வழிபாடு இன்று இலிங்க வடிவில் வழிபடலாயிற்று.

பரம்பொருளை அருவமாகவும். உருவமாகவும். அருவுருமாகவும் வழிபடும் முறை இந்து சமயத்திலே நீண்ட காலமாக நிலவி வந்துள்ளது. இறைவனை உருவ வடிவிலே வழிபடும் போது அவற்றை ஆணாகவோ பெண்ணாகவோ மக்கள் வழிபடுவர். இறைவனைப் பெண்ணாக உருவகித்து வழிபடும் முறை மிகப் பழமையானதாகும். தாய்த் தெய்வ வழிபாடு இயற்கை வழிபாட்டிலிருந்து (பூமி. மலை போன்ற வழிபாட்டிலிருந்து) தோன்றியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இந்த வகையிலே சிவப்பிரானுடைய சக்தி. பார்வதி. உமா. தேவீ. லலிதா. புவனேஸ்வரி. அம்பிகா எனப் பல திருநாமங்களால் அழைக்கப்படுகின்றார். சக்தி வழிபாடு முதலிலே தனியாக விளங்கிப் பின்னர் சிவ வழிபாட்டுடன் ஒன்றிணைந்ததாக ஒரு சாரார் கூறினாலும் இவ்விரு வழிபாடுகளும் காலப்போக்கில் ஒன்றிணைந்து சிவசக்தி வழிபாடாகவே உருப்பெற்றுள்ளதெனலாம்.

பார்வதி என்னும் பதம் பர்வதத்தின் அதாவது மலையின் மகள் எனப் பொருள்படும். சைவ மரபிலே அம்பாள் இமயமலையாகிய அரசனின் மகளாகப் பார்வதி. சைலஜா. கிரிஜா. ஹேமவதி. சைல புத்திரீ. கிரிராஜ புத்திரி எனப் பலவாறு அழைக்கப் படுகிறாள். உலகிலுள்ள மிக உயர்ந்த மலை இமயமலையே. எனவே அதனை மலையரசன் (கிரிராஜ) எனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. மலையரசன் மகளாகிய அம்பாள் மலைமகள் என்று பொருள்படும். மேற்குறிப்பிட்ட திருநாமங்களால் போற்றப்படுகின்றாள். சிவபிரானுக்குரிய பிறிதொரு பெயரான ருத்திரனுக்கு ஏற்ப அம்பாள் ருத்ராணி எனப் போற்றப்படுகிறாள். பௌராணிக மரபிலே அம்பாள் மலைமகளாச் சிறுபிராயத்திலே தவம் செய்ய முற்பட்ட போது. அவளின் தாயார் "மோனா (தவம்) செய்ய வேண்டாம்" என்ற பொருள் படும் 'உமா' எனக் கூறியதால் உமா என அவர் அழைக்கப்பட்டார் என அறியப்படுகின்றது. காளிதாசரும் *குமாரசம்பவம்* எனும் பெருங்காப்பியத்தில் இது பற்றி குறிப்பிட்டுள்ளார். இங்கு அவர் சிவபெருமானை வரனாகப் பெறும் முகமாகவே தவம் செய்தார். அவர் இலையைக் கூட உண்ணாது மிகக் கடுமையாக தவம் புரிந்தமையால் அபர்ணா என அழைக்கப்பட்டார். மேலும் சிவனும் கடுந்தவம் புரிந்த பின்னரே திருமணம் புரிந்தார்.

அம்பா. அம்பிகை எனும் பதங்கள் தமிழிலே தாயைக் குறிக்கும் அம்மா என்னும் பதத்திலிருந்து வந்துள்ள வடமொழிச் சொற்களாகும். எனவே தாய்த் தெய்வ வழிபாட்டின் தொன்மையும் சிறப்பும் தெளிவாகும். மேலும் அம்பிகை கேன உபநிஷத்திலே மேலான ஞானத்தைத் தேவர்க்கும் புகட்டியதாகக் கூறப்படுகின்றது. அந்த உபநிஷத்திலே அம்பிகை 'உமா' என்று கூறப்படுகிறாள். இப் பெயர் அம்மா எனும் தமிழ் பதத்தின் வழி வந்ததாகலாம்.

பார்வதியைப் போலவே சிவபிரானும் மலையுடன் தொடர்புப் பட்டுள்ளார். அவருக்குரிய சிறப்பிடமாக இமயமலைக்கு அருகிலுள்ள கைலாசமலை சைவ நூல்களிலே நன்கு சிறப்பிக்கப்படுகின்றது.

சிவனும் பார்வதியும் பற்றிப் பல்வேறு கதைகள் இதிஹாஸங்கள். புராணங்கள். பிற்பட்ட வடமொழி நூல்கள். தமிழிலுள்ள சைவ நூல்கள் முதலியன பற்றி விரிவாக வந்துள்ளன. ஏற்கனவே குறிப்பிட்டவாறு கடுந்தவம் புரிந்தே பார்வதியும் சிவபிரானும் இணைப்பிரியாத நிலையினைப் பெற்றனர். உலகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோராகிய இருவரும் சொல்லும் பொருளும் போல் என்றும் இணை பிரியாதவர்களாக, அர்த்த நாரீஸ்வர வடிவத்தில் (அரைவாசி அம்பாளாகவும் அரைவாசி சிவனாகவுமுள்ள வடிவத்தில்) விளங்குகின்றனர் எனக் காளிதாசர் ரகுவம்ச மஹா காவியத்திலே உள்ள காப்புச் செய்யுளிலே சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

அம்பிகையின் திருப்பெயர்களையும் சிறப்புகளையும், *தேவி மாஹாத்மியம், லலிதா சஹஸ்ர நாமாவலீ, லலிதா திரிசதி, தேவி பாகவதம், அபிராமி அந்தாதி* போன்றவற்றிலே காணலாம்.

உலகத் தோற்றத்திற்கும் அதிலுள்ள உயிர்வர்க்கங்கள் தொடர்ந்து நிலவுவதற்குமான மூலகாரணமாகவுள்ள பரம் பொருளை - உலகின் அன்னை அப்பனாகப், பார்வதி சிவனாக உருவகித்துக் கூறும் பாங்கு சைவ சமயத்திலுள்ள தனிச் சிறப்பே.

மேலும் பார்வதியே பல்வேறு நோக்கங்களுக்காகத் துர்க்கா, சிவா, ஈசானி, பவானி, ஈஸ்வரி, சண்டிகா, சாமுண்டி, பைரவி, காளி, ஸர்வாணி, பராசக்தி, மஹாலக்ஷ்மி, சரஸ்வதி, காத்யாயனி, கௌரி முதலிய பல திருநாமங்களாற் போற்றப்படுகிறாள். ஒரே தாய்த் தெய்வமே பல்வேறு வடிவங்களிலே வணங்கப்படுகிறாள். தாயன்புடன் ஆன்மாக்களுக்குத் திருவருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள். எனவே தனியாகவும், சிவபிரானோடு சேர்ந்த இறைவியாகவும் பார்வதி விளங்குகிறாள். (வி. சி.)

## பாலர்வம்சம்

வடஇந்திய வரலாற்றிலே கன்னோசிக் காலத்து இராச்சியங் களில் வங்காளத்துப் பாலர்களின் பேரரசு மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. பாலர்கள் அரசியலிலும் சமய, பண்பாட்டுத் துறைகளிலும் அரிய சாதனைகள் புரிந்துள்ளனர். வங்காளம் முழுவதையும் முதன்முதலாக ஒரே இராச்சியமாக இணைத்த சிறப்பு அவர்களுக்கு உரியதாகும். கன்னோசியைக் கைப்பற்றி அங்கிருந்த வண்ணமாக வடஇந்தியாவின் பேரரசாக அவர்கள் சில சமயங்களிற் தம்மைப் பிரகடனப்படுத்திக்கொள்ள முடிந்தது. வடஇந்திய அரசியலிலும் பண்பாட்டு வளர்ச்சிகளிலும் அவர்கள் ஏற்படுத்திய செல்வாக்கு குறிப்பிடத்தக்கது. பௌத்தர்களான பாலர் வம்சத்தவர்கள் பௌத்த சமயத்தின் பேராதரவளராக விளங்கினர். நாலந்தா, விக்கிரமசீலா, ஒதந்தபுரி என்னும் இடங்களிற் பெரும் விகாரைகளையும் கோயில்களையும் கல்லூரிகளையும் அவர்கள் உருவாக்கி, அவற்றை ஆதரித்தனர். சைவம், வைணவம், சாக்தம் ஆகிய சமயங்கள், பாலரின் ஆட்சியில் அடங்கிய பகுதிகளில் மக்களிடையே அதிக செல்வாக்கைப் பெற்றிருந்தன. பாலர் காலத்து இலக்கிய வளர்ச்சியிற் பௌத்த சமயச் சார்புடைய தாந்திரீக நூல்களும் சாக்த தந்திரங்களுஞ் சிறப்பிடம் பெறுகின்றன.

வங்காளத்துப் பிரதானிகள் அனைவரும் கோபால என்னும் அரசனைத் தங்கள் முதல்வனாக ஒப்புக் கொண்டனர். அதன் விளைவாக அவன் வங்காளத்து வேந்தனாக முடிசூடிக் கொண்டான். முடியாட்சி முறையின் வழமைக்கேற்ப கோபாலனின் காலம் முதலாக வங்காளத்தில் அரசுரிமை பாலரின் சந்தான வழி உரிமையாகியது.

கோபாலனின் இளமைக்கால வரலாறு பற்றிய தெளிவான குறிப்புகள் கிடைக்கவில்லை. அவன் போரில் வல்லவனாகவும் சாதுரியமான பிரதானியாகவும் விளங்கினான் என்று கருதலாம். அவனுடைய தகப்பனான வாப்யட தனது பகைவர்களை வென்றவன் என்று சொல்லப்படுகின்றது. அவனது முன்னோர்கள் அரசியல் அதிகாரிகளாகவோ சேனாதிபதிகளாகவோ பதவி பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. கோபாலனின் பேரனாகிய தாயித விஷ்ணு அவ்விதமான பதவிகளைப் பெற்றிருக்கவில்லை. பாலரின் பட்டயங்கள் அவர்களின் குலமுதல்வராகிய தாயித விஷ்ணுவைக் கல்வியிற் பாண்டித்தியம் பெற்ற ஒருவராகவே வர்ணிக்கின்றன. பாலர்வம்சத்து முதலரசனாகிய கோபாலன் பௌத்த சமயத்தவன். கோபாலன் நாலந்தாவின் பௌத்த விகாரமொன்றை அமைத்தா னென்று திபேத்திய நூல்கள் கூறும். வடவங்காளத்து வரேந்திரீ என்பது பாலரின் ஜன்மபூமி என்பதை **ராமசரிதம்** என்னும் நூல் வழியாக அறிய முடிகின்றது. கோபாலன் புந்தரவர்த்தனத்துச் க்ஷத்திரிய குலமொன்றைச் சேர்ந்தவனென்று திபெத்ய நாட்டு வரலாற்றாசிரியரான தாராநாதர் குறிப்பிட்டுள்ளார். கோபாலனுடைய ஆட்சி தொடங்கிய காலத்தில் வங்காளத்தின் கிழக்குப் பகுதியான **வங்கம்** என்பது அவனுடைய ஆட்சியில் அடங்கியிருந்தமை தாராநாதரின் குறிப்பால் உணர்த்தப்படும்.

### தர்மபாலன் (770-810)

தர்மபாலனின் ஆட்சியில் வட இந்தியாவிலே தங்கள் மேலாதிக்கத்தை ஏற்படுத்துவதற்குப் பாலர்கள் பல முயற்சிகளை மேற்கொண்டனர். அக்காலத்தில் மேலாதிக்கத்தின் சின்னமாகக் கன்னோசி நகரம் விளங்கியது. அது ஹர்ஷவர்த்தனனின் ஆட்சிக்காலம் முதலாக அந்நிலையினை அடைந்தது. செல்வச் செழிப்பு, பிரமாண்டமான சமய நிறுவனங்கள், கோயில்கள், வித்தியாபீடங்கள், பண்பாட்டு வளர்ச்சிகள் என்பவற்றால் அது முதன்மை பெற்றது.

வடஇந்தியாவின் பிரதானமான அரசியல் மையமாகவும் கேந்திரமுக்கியத்துவம் கொண்ட பிராந்தியமாகவும் அது அமைந்திருந்தது. கன்கோசியைக் கைப்பற்றுவதற்கு மும்முனைப் போராட்டம் நடைபெற்றது. வங்காளத்துப் பாலர்களும் ராஜபுதனத்து குர்ஜரப் பிரதிகாரரும் தக்கிணத்து இராஷ்டிரகூடரும் அதில் ஈடுபட்டனர்.

கன்னோசி தொடர்பான முதலாவது போர் **துவாப்** என்று சொல்லப்படும் ஆற்றிடை (கங்கை, யமுனை) நிலப்பகுதியில் வங்காளத்து தர்மபாலனுக்கும் குர்ஜரப் பிரதீகார வம்சத்து வத்ஸ ராஜனுக்கும் இடையில் நடைபெற்றது. அதில் வத்ஸராஜன் பாலரைத் தோற்கடித்து, கொற்றக்குடை முதலான அவர்களின் அரச சின்னங்களையும் கவர்ந்து கொண்டான். ஆயினும் வத்ஸ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜனாற் போரிலே கிடைத்த வெற்றியின் பயன்களை அனுபவிக்க முடியவில்லை. இராஷ்டிரகூட மன்னராகிய துருவனின் மகாசேனை இராசபுத்திர மன்னனின் படைகளோடு சமர் புரிந்து அவற்றை நிலைகுலையச் செய்தது. வடஇந்தியாவில் வத்ஸராஜனின் ஆதிக்கம் சரிந்தது. அவன் தனது பரிவாரங்களோடு இராஜபுதனத்துக்கு ஓடிவிட்டான். துருவன் ஆற்றிடைப் பகுதிக்கு முன்னேறிச் சென்று, அங்கு நிலைக்கொண்டிருந்த தர்மபாலனைத் தோற்கடித்தான். அதன் பின் துருவன் அங்கிருந்து வெளியேறித் தக்ஷிணா பதத்திற்குச் திரும்பிச் சென்றான். தர்மபாலன், அதனால் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி இந்தியா முழுவதும் பல வெற்றிகளைப் பெற்று, அங்கு தனது மேலாதிக்கத்தை ஏற்படுத்திக்கொண்டான். கன்னோசியினைக் கைப்பற்றி, முன்பு அங்கு வத்ஸராஜனால் நியமிக்கப்பெற்ற இந்திராயுதனைப் பதவியிலிருந்தும் நீக்கி விட்டு அரசபதவியைச் சக்கிராயுதன் என்பவனுக்கு வழங்கினான். தர்மபாலன் தனது வெற்றி விழாவினைக் கன்னோசியிற் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்தான். போஜ, மத்ஸ்ய, மத்ர, குரு, யது, யவன, அவந்தி, காந்தாரம் முதலிய நாடுகளைச் சேர்ந்த அரசர்கள் அங்கு சென்று, தர்மபாலனுடைய மேலாதிபத்தியத்தினை ஒப்புக்கொண்டதாகப் பாலரின் ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. பதினொராம் நூற்றாண்டில் வாழ்ந்த குஜராத்திய கவிஞர் ஒருவர் **உத்தராபதஸ்வாமி** என்று தர்மபாலனை வர்ணிக்கின்றார்.

தர்மபாலன் காலத்துப் பாலரின் பேரரசில் மூன்று வகையான பிரதேசங்கள் இருந்தன. வங்காளம், விகார் என்னும் மாநிலங்கள் பாலரின் இராச்சியத்தில் இணைக்கப்பெற்ற பகுதிகளாகும். அவற்றிலே பாலரின் அதிகாரிகள் நிர்வாகம் புரிந்தனர். மேற்கிலுள்ள கன்னோசி இராச்சியம் பாலரின் கட்டுப்பாட்டில் அமைந்த ஒன்றாகும். அதன் அரசன் தர்மபாலனின் ஆதரவோடு அரசபதவி பெற்றவன். எனவே அவன் பாலரின் ஆதரவிலேயே தங்கியிருக்க நேர்ந்தது. உள்ளூர் விவகாரங்களைப் பொறுத்த வரையில் அவன் எதுவித தலையீடுமின்றிச் சுதந்திரமாக ஆட்சிபுரிய முடிந்தது. பாலரின் மேலாதிக்கத்தை ஒப்புக்கொள்ள நேர்ந்தது. உத்தரப் பிரதேசத்தின் பெரும்பகுதிகள் கன்னோசியில் அடங்கியிருந்தன. கன்னோசிக்கு மேற்கிலும் தெற்கிலும் ஏற்பட்ட பாலரின் செல்வாக்கு தற்காலிகமானதாகும். நேபாளத்திலும் தர்மபாலனின் மேலாட்சி ஏற்பட்டிருந்ததென்று **ஸ்வயம்பூ புராணம்** என்னும் நூல் குறிப்பிடும்.

திக்குவிசயத்தினை மேற்கொண்ட பொழுது தர்மபாலனுடைய படைகள் கேதாரம், கோகர்ணம் ஆகிய புனித தலங்களுக்குச் சென்று ஆலயதரிசனம் பண்ணியதாகச் சொல்லப்படுகின்றது. கேதாரம் இமயமலைச் சாரலிலுள்ள பிரசித்தமான தலமாகும். கோகர்ணம் என்பது நேபாளத்திலே பாக்மதி நதிக்கரையிலுள்ள புனித தலமாகும்.

கன்னோசியின் காரணமாகப் பாலர்கள் குர்ஜப்பிரதீகாரரின் சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இரண்டாம் நாகபட்டன் பிரதீகாரரின் ஆதிக்கத்தைப் புனருத்தாரணஞ் செய்தான். அவன் சக்கராயுதனைக் கன்னோசியிலிருந்தும் துரத்தினான். அதனாற் பீரதீகாரருக்கும் பாலருக்கும் இடையிலே போர் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. "*கருமேகங்கள் ஒன்று திரண்டு வந்தாற் போன்ற, பெருவலி படைத்த வங்கத்து வேந்தனின் நிரைநிரையான யானைகள், குதிரைகள், ரதங்கள்* என்பன கூடிய மகாசேனையை" நாகபட்டன் தோற்கடித்தா என்று பிரதீகாரரின் சாசனங்கள் வர்ணிக்கின்றன.

வடஇந்தியாவில் பிரதீகாரர் தங்கள் ஆதிபத்தியத்தை நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சியை இரண்டாவது முறையாக இராஷ்டிரகூடர் பயனற்றதாக்கி விட்டனர். மூன்றாம் கோவிந்தன் பிரதீகாரரின் சேனைகளைத் தோற்கடித்து, வடஇந்தியாவில் அவர்களின் ஆதிக்கத்தை அழித்தான். தர்மபாலனும் சக்கராயுதனும் இராஷ்டிரகூடரோடு மோதலைத் தவிர்த்துக் கொண்டனர். தர்மபாலனும் சக்கராயுதனும் கோவிந்தனுக்குப் பணிந்து, அவனது மேலாதிக்கத்தை ஒப்புக் கொண்டனர் என்று இராஷ்டகூடரின் ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. கோவிந்தனோடு தகராறு கொள்ளாது தர்மபாலன் தனது படைபலத்தைச் சீரழியாது பாதுகாத்துக் கொண்டான். இராஷ்டிரகூடர் முன்புபோல மிக விரைவிலே கங்கைச் சமவெளியிலிருந்தும் வெளியேறித் தக்கிணத்திற்குத் திரும்பி விட்டனர்.

மூன்றாம் கோவிந்தனுடைய வட இந்தியப் படையெடுப்பு பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. நாகபட்டனுடைய ஆதிக்கம் மீட்சிபெற முடியாத அளவிற்குச் சீர் குலைந்து விட்டது. அதே சமயம் பாலரின் ஆதிக்கம் உறுதியாக ஏற்படுவதற்கு வாய்ப்பான சூழ்நிலை உருவாகியது. தர்மபாலன் 32 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். அவன் சிறந்த ஆட்சியாளனாகவும் படைத்தலைவனாகவும் விளங்கினான். வங்காள தேசத்தவரின் தலைமையில் வடஇந்தியப் பேரரசொன்றை அமைக்க வேண்டும் என்ற சாசாங்கனின் கனவு தர்மபாலனது ஆட்சியிலே சாதனையாகி விட்டது. **பரமேஸ்வர, பரமபட்டராக மகாராஜாதிராஜ** போன்ற பேரரசருக்குரிய பட்டப் பெயர்களை தா்மபாலன் சூடிக்கொண்டான். கன்னோசியிற் போலப் பாடலிபுத்திரத்திலும் அரசர் சபை ஒன்றினை அவன் கூட்டினான் என்பதைச் சாசனங்கள் மூலம் அறியமுடிகின்றது. அதன் சிறப்புகள் இலக்கிய நயம்பட வர்ணிக்கப்பட்டுள்ளன.

மகதநாட்டிலே, கங்கைக் கரையிலே அமைந்த மலையிலே விக்கிரமசீலா விகாரத்தை அவன் அமைத்தான். நாலாந்தாவிற்கு அடுத்த சிறப்புடைய பௌத்தப் பெரும் பள்ளியாக அது விளங்கியது. விக்கிரமசீல என்பது தர்மபாலனுடைய விருதுப் பெயர்களில் ஒன்று.

வரேந்திரியிலே சோமபுரி விகாரத்தை அவன் அமைப்பித்தான். பௌத்த சமயம் தொடர்பாகப் பல நூல்களை எழுதிய ஹரிபத்திரர் தர்மபாலனின் ஆதரவைப் பெற்றவர். இவர் ஐம்பதுக்கும் மேலான பௌத்த சமய நிலையங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கினாரென்று திபெத்நாட்டு வரலாற்றாசிரியரான தாராநாதர் குறிப்பிடுகின்றார்.

தர்மபாலனின் தேவி ரண்ணாதேவி. அவள் இராஷ்டிரகூட வம்சத்துப் பரபலனின் மகள். அவளின் மகனாகிய தேவபாலன் தர்மபாலனுக்குப் பின் அரசுரிமை பெற்றான். தேவபாலனின் ஆட்சிக் காலத்தில் (810-850) பாலரின் ஆதிக்கம் மேலும் வளர்ச்சியுற்றது. தர்பபாணி, கேதாரமிஸ்ர என்போர் தேவபாலனின் அமைச்சர்களாக விளங்கினர். போரில் வல்லவனாகிய ஜயபாலன் படைத்தலைவனாகப் பணிபுரிந்தான்.

தேவபாலனது சாசனங்களிலே படையெடுப்புகள் பலவற்றைப் பற்றிக் குறிப்புகள் உண்டு. அவற்றிலே சில வரலாற்றுச் செய்திகளும் புனைந்துரைகளும் கலந்துள்ளன. தேவபாலனுடைய காலத்திற் காமரூபம், கலிங்கம் என்பவற்றின் மீது பாலர் படையெடுத்துச் சென்றனர். ஜயபாலனது தலைமையிலான படை காமரூபத்தில் நுழைந்ததும், பிராக்யோதிஷ வேந்தன் பாலருக்குப் பணிந்து விட்டான் என்று சொல்லப்படுகின்றது. தெற்கிலே உத்கல (கலிங்கம்) வேந்தன் பாலரது படை சென்றதும் தனது இராசதானியிலிருந்து ஓடி விட்டான். ஹூணர், பிரதீகாரர், திராவிட வேந்தர் ஆகியோரின் செருவினைத் தேவபாலன் அடக்கினான் என்றும் சொல்லப்படுகின்றது. இக்காலத்திலே, இமாலயத்தின் சாரல்களில் ஹூணரின் ஆட்சியின் கீழமைந்த பல சிறிய இராச்சியங்கள் அமைந்திருந்தன. அவற்றைப் பாலர் படை கொண்டு அடக்குவது சாலாக் காரியம். திராவிட அரசனை வென்றடக்கியதாகச் சொல்லப்படும் சாசனக் குறிப்புகளும் இவ்வாறு கொள்ளத்தக்கவை. தேவபாலன் வடஇந்தியாவின் மிகவும் பலம் பொருந்திய மன்னான விளங்கினான் என்பதில் ஐயமில்லை. அவனுடைய ஆட்சிக் காலத்திலே பிரதீகாரரினால் எதனையுஞ் சாதிக்க முடியவில்லை. இராஷ்டிரகூடரும் வட இந்திய விவகாரங்களிலே தலையிடுவதைத் தவிர்த்துக் கொண்டனர்.

தேவபாலன் நாற்பது வருடங்கள் வரை ஆட்சி புரிந்தான். பாலருக்கும் சைலேந்திரப் பேரரசருக்கும் இடையில் நல்லுறவுகள் ஏற்பட்டிருந்தன. கடாரத்து அரசனாகிய பாலபுத்திரதேவன் தேவபாலனிடம் தூதுவன் ஒருவனை அனுப்பியிருந்தான். அவனது வேண்டுகோளை நிறைவேற்றும் வண்ணமாக நாலாந்தாவிலுள்ள விகாரமொன்றுக்கு ஐந்து கிராமங்களை மானியமாக தேவபாலன் வழங்கினான். நகரஹாரத்துப் பௌத்த பிக்கு ஒருவரைக் கௌரவித்து அவருக்கு நாலாந்தா விகாரையின் தலைமைப் பதவியை வழங்கினான்.

தேவபாலனுக்கு பின்பு விக்கிரகபாலன் அரசபதவி பெற்றான். ஆயினும், சில வருடங்கள் சென்றதும் அவன் அரச பதவியைத் துறந்து துறவறம் மேற்கொண்டான். அவனுக்குப் பின் அவனுடைய மகன் நாராயணபாலன் அரசனாகி நெடுங்காலம் ஆட்சி புரிந்தான். நாராயணபாலனின் காலத்திலே பாலரின் ஆதிபத்தியம் சிதைவுற்றது. இராஷ்டிரகூடர் 860ஆம் ஆண்டிற்குப் பின்பு பாலரைத் தோற்கடித்தனர். பாலரின் பலவீனத்தைச் சாதகமாகப் பயன்படுத்திய பிரதீகாரர் கிழக்கு நோக்கித் தங்கள் ஆதிபத்தியத்தை விஸ்தரித்தனர். நாராயணபாலன் வீகார் மீது அதிகாரம் இழந்தான். பாலரின் ஜென்மபூமியான வங்காளத்தின் வடபகுதியினையும் பிரதீகார மகேந்திரபாலன் கைப்பற்றினான். பிரதீகாரரின் ஆதிக்கம் வளர்ச்சியடைந்த சமயத்திற் பாலரின் சாமந்தர் பலர் சுதந்திரமாக ஆட்சி புரியத் தலைப்பட்டனர். காமரூபத்திலே ஹர்ஜரன் என்பவன் பாலரின் மேலாதிக்கத்திலிருந்து மீட்சி பெற்றதோடு பேரரசருக்குரிய பட்டப்பெயர்களைச் சூடிக் கொண்டான். சைலோத்பவ வம்சத்தவர்கள் கலிங்க தேசத்திலே தங்கள் ஆட்சியை உறுதியாக ஏற்படுத்திக் கொண்டனர். இவ்வண்ணமாகப் பாலரின் பேரரசு சீர்குலைந்து விட்டது. ஒரு கட்டத்தில் நாராயணபாலனின் அதிகாரம் வங்காளத்தின் ஒரு சிறிய வட்டாரத்திற் சுருங்கி விட்டது. ஆயினும் அவன் சில வருடங்களில் வட வங்காளத்தையும் வீகாரின் தென்பகுதியினையும் மீண்டும் கைப்பற்றிக் கொண்டான்.

இராஷ்டிரகூட அரசனான இரண்டாம் கிருஷ்ணன் பிரதீஹாரரைத் தோற்கடித்தமையால் பாலர் தாம் இழந்த பிரதேசங்கள் சிலவற்றை மீண்டும் கைப்பற்ற முடிந்தது. கி.பி.908ஆம் ஆண்டளவில் நாராயணபாலனின் ஆட்சி முடிந்தது. அதன் பின் அவனது மகனாகிய ராஜ்யபாலன் அரசபதவி பெற்றான். அவனுக்குப் பின் இரண்டாம் கோபாலன், இரண்டாம் விக்கிரகபாலன் ஆகியோர் எண்பது வருடங்கள் ஆட்சி புரிந்தனர். அவர்களின் ஆட்சியிற் பாலரின் ஆதிக்கம் பெரிதும் பலவீனமாகியது. பிரதீஹார இராச்சியம் சீர்குலைந்த பொழுது அதிலிருந்து உற்பத்தியான சந்தெல்லா, கலசூரி என்னும் வம்சங்களைச் சேர்ந்த அரசர்களும் கௌட, நாட்ட, அங்க, வங்காளம் என்னும் தேசங்கள் மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றதாகக் கூறிப் பாராட்டுகின்றனர்.

பௌத்த சமய வரலாற்றிலே பாலர் வம்சத்தவர் வழங்கிய ஆதரவு ஒரு சிறப்புமிக்க அத்தியாயமாக அமைகின்றது. பால வம்சத்து அரசர் அனைவரும் பௌத்தராவர். அவர்களின் ஆட்சியின் கீழமைந்த வங்காளம், பீகார் ஆகியவற்றிலே பௌத்த சமயம் மிகுந்த செல்வாக்குடன் விளங்கியது பிரசித்தி பெற்ற பெரும் பள்ளிகளும் வித்தியாபீடங்களும் அங்கு அமைந்திருந்தன. அவை சர்வதேசத் தொடர்புகளைக் கொண்டிருந்தன. சீனம், சாவகம், நேபாளம்,அருமணம், இலங்கை முதலான தேசங்களிலுள்ள பௌத்த நிறுவனங்களோடு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தன. பாலர் வம்சத்து முதலரசனாகிய கோபாலன் நாலந்தா விகாரத்தைப் புனர்நிர்மாணம் பண்ணியதோடு பல புதிய விகாரங்களையும் அமைத்தான். கோபாலனுடைய காலத்தில் பெருஞ்செல்வனான உபாசகன் ஒருவன் பிரமாண்டமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதந்தபுரி விகாரத்தை அமைத்தான். அதன் சுவர்களும் கூடங்களும் ரம்மியமான கோலத்தில் அமைக்கப்பட்டன. திபெத்தில் அமைக்கப் பெற்ற ஆதியான பௌத்த விகாரம் அதனை முன்மாதிரியானதாகக் கொண்டது. நியாயத்திலும் ஆகம சாஸ்திரங்களிலும் சிறந்த புலமையாளரான சாந்தரக்ஷிதர் கோபாலனின் காலத்தவர். திபெத் நாட்டு அரசனின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, அங்கு சென்ற அவர் கி.பி.762 வரை அங்கு தங்கியிருந்தார். அவரைத் திபெத் நாட்டவர்கள் போதிசத்துவ பண்டிதர் என்றும் தர்மசாந்திகோஷர் என்றும் குறிப்பிட்டனர். வங்காள தேசத்து அரசகுலம் ஒன்றைச் சேர்ந்தவரான சாந்தரக்ஷிதர் **ஸ்வாதந்திரின மாத்யமிக** என்னும் பௌத்த சமயப் பிரிவைச் சேர்ந்தவர். அவரது நூலாகிய **தத்துவ சங்கிரகம்** யோகசாரக் கோட்பாடுகளை வலியுறுத்துகின்றது. அதில் அவர் பௌத்த இந்து சமயப்பிரிவுகள் பலவற்றைச் சேர்ந்த ஆசிரியர்களின் கொள்கைகளையும் வாதங்களையும் நிராகரிக்கின்றார். தர்ம கீர்த்தியின் **வாதநியாயம்** என்னும் நூலுக்கு ஒரு விளக்கவுரையினையும் அவர் எழுதியுள்ளார்.

தர்மபாலன் **பிரக்ஞாபாரமிதா** சூத்திரங்களில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தான். யோகாசார தத்துவ விற்பன்னரும் பிரக்ஞாபாரமிதா சூத்திரங்களின் போதனாசிரியருமான ஹரிபத்திரர் தர்மபாலனின் இராஜகுருவாக விளங்கினார். யோகாசாரக் கோட்பாடுகளைப் போதிப்பதற்கு ஐம்பதுக்கும் மேற்பட்ட விகாரங்களை தர்மபாலனின் ஆதரவோடு அவர் அமைப்பித்தார். தர்மபாலன் விக்கிரமசீலா விகாரத்தை அமைத்து அங்கு யோகாசாரம் கற்றவர்களுக்கு மானியங்கள் பலவற்றை வழங்கினான். தர்மபாலனது காலத்திலே பிரக்ஞாபராமிதாக்களின் போதனைகள் வெகுவிரைவாகப் பரவத் தொடங்கின என்று தாராநாதர் குறிப்பிடுகிறார்.

ஹரிபத்திரர் இறந்த பின்பு அவரது சீடரான புத்தஞானபாதர் தர்மபாலனின் இராஜகுருவானார். ஹரிபத்திரர் மாத்யமிக நூல்களை சாந்தரக்ஷிதரோடு கற்றவர். அவர் யோகாசார நூல்களை வைரோசன பத்திரரோடு பயின்றவர். **அஷ்டசாகஸ்ரிகா பிரக்ஞாபாரமிதா** போன்ற நூல்கள் பலவற்றுக்கு அவர் உரை எழுதியுள்ளார்.

ஹரிபத்திரர் **அபிசமயாலங்கார** என்னும் நூலுக்கு எழுதிய உரை அவரது உன்னதமான புலமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். யோகாசாரக் கொள்கையின் அடிப்படையில் **பிரக்ஞா பாரமிதா** சூத்திரங்களை **அபிசமயாலங்காரம்** விளக்குகின்றது. திரைகூடக விகாரத்தில் வாழ்ந்த ஹரிபத்திரர் தர்மபாலனின் இருபதாம் ஆட்சியாண்டு முடிவடைந்த பின் இறந்தார்.

ஹரிபத்திரரின் சீடரான புத்தஞானபாதர் கிரியா, யோக தந்திரங்களிலும் குறிப்பாக **குஹ்யசமாஜ, மாயாஜால, சந்திர குஹ்யதிலக, மஞ்ஜுஸ்ரீக்ரோத** ஆகியவற்றிலும் விளக்கப்படும் கோட்பாடுகளையும் கிரியைகளையும் பற்றிப் போதனை செய்தார். விக்கிரமசீல விகாரத்தின் அபிஷேகச் சடங்கினைச் செய்து, பின்பு அதன் வஜ்ராச்சாரியர் ஆயினார்.

பாலர் காலத்திலே பௌத்த சமயப் பிரிவுகள் பலவற்றிலே மிகுந்த பாண்டியத்தியம் பெற்ற பலர் இருந்தனர் அவர்களை மூன்று பிரிவினராக மேல்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. தாந்திரிக ஆச்சாரியர்கள்:-

   பிரசாந்தமித்ர, புத்தகுஹ்ய, புத்தசாந்தி (மூவரும் புத்தஞான பாதரின் சீடர்), ராகுலபத்ர, காஷ்மீரத்து ஆச்சார்யரான பத்மாகரகோஷ(ர்)

2. உரையாசிரியரான கமலசீல(ர்)

3. நையாயிகரான கல்யாணரக்ஷித(ர்), சோபவியூக(ர்), சாகரமேக(ர்), பிரபாகர(ர்), பூர்ணவர்த்தனர், காஷ்மீரத்து தர்மாகரதத்தர்.

   ஞானபாதரின் சீடரான பிரசாந்தமித்திரர் பிரக்ஞா பாரமிதங்களையும் கிரியா, யோக தந்திரங்கள் சிலவற்றையும் பயின்றவர், யாமாந்தகசித்தி அடைந்தவர்.

   நாலாந்தாவிற்குத் தென்பால் அமைந்த அமிர்தாகர விகாரம் அவரது திருப்பணியாகும்.

மகத தேசத்திலே தர்மபாலன் நிர்மானித்த விக்கிரமசீல விகாரம் பிரபல்யமான பௌத்த கல்வி நிலையமாக வளர்ச்சியுற்றது. அதில் எல்லாமாக 108 கூடங்கள் இருந்தன. அவற்றில் 53 கூடங்கள் தாந்திரிக சாதனைகளைப் பயிலுவோருக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. 54 கூடங்கள் பௌத்த பிக்குகளின் பாவனைக்கு உரியனவாகும். விகாரத்தை சுற்றி 8 வாயில்கள் பொருந்திய சுற்றுமதில் இருந்தது. விகாரத்தின் நிர்வாகம் 108 பிக்குகளின் பொறுப்பாக இருந்தது. அவர்கள் ஒவ்வொருவரின் கடமைகளும் பொறுப்புகளும் வரையறை செய்யப்பட்டிருந்தன. பௌத்த படிமங்களுக்கும் தேவர்களுக்கும் வழிபாடு செய்தல், ஓமம் வளர்த்தல், உபாசகரைச் சங்கத்தவராக அங்குரார்ப்பணம் செய்தல், விகாரத்திலுள்ள வளர்ப்புப் பறவைகளைப் பராமரித்தல், வழிபடுவோரையும், பள்ளியிற் கம்மியரையும் மேற்பார்வை செய்தல், மாணவர்களுக்குப் போதனை வழங்குதல் போன்றவை அவர்களின் கடமைகளாகும்.

இலக்கணம், பரஞானம், நியாயம், கிரியாசாரங்கள் முதலானவற்றைப் போதனை செய்தனர். 108 பண்டிதர்களும் அரச மானியங்களைப் பெற்றிருந்தனர் அவர்களிடம் கல்வி பயின்ற வர்களும் உணவும் பணமும் பெற்றனர். அங்கு படித்தவர்களுக்கு பட்டங்கள் வழங்கப் பெற்றன. இந்த வைபவங்களில் அரசரும் ஈடுபாடு கொண்டிருந்தனர். நிறுவனத்துக்குரிய வருமானங்களை 108 பண்டிதர்களும் சம அளவுகளிற் பகுந்து கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரமசீல விகாரத்திலே படிப்பதற்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் திபெத், அருமணம் போன்ற பிற தேசங்களிலிருந்தும் மாணவர் சென்றனர். சமஸ்கிருத மொழியிலிலுள்ள பல நூல்களை அங்குள்ளவர்கள் திபெத்திய மொழியிலே மொழி பெயர்த்தனர். **பிருகத ஸ்வயம்பூ புராணம்** குறிப்பிடும் தர்ம ஸ்ரீமித்திரரும் சர்வக்ஞ மித்திரரின் சிரக்தரா தோத்திரத்திற்கு உரை எழுதிய ஜினரக்ஷிதரும் விக்கிரமசீலவில் வாழ்ந்தனர்.

தாராநாதர் எழுதிய நூலின் 38ஆம் அத்தியாயத்தில் விக்கிரமசீல விகாரத்திற் பதவியிலிருந்த வச்சிராச்சாரியர்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றார்.

**மேல்வரும் பெயர்கள் அதிற் காணப்படுகின்றன:**

புத்தஞானபாத(ர்).

திபங்கர பத்திர(ர்).

ஜயபத்திர(ர்), ஸ்ரீதர(ர்).

பவபத்திரர், பவ்யகீர்த்தி,

லீலாவஜ்ரர்,

துர்ஜனசந்திரர்,

கிரிஷ்ணசமயவஜ்ர(ர்).

ததாகதரக்ஷித, போதிபத்திர (ர்).

கமலரக்ஷித(ர்).

தர்மபாலனது காலத்தில் விக்கிரமசீல விகாரத்திற் சைந்தவ சிராவகர் என்போர் கலகம் புரிந்தனர். அவர்கள் ஹேருக தேவரின் படிமத்தை அழித்துவிட்டு மந்திர நூல்களை எரித்தனர். மகாயானம் புத்தரின் போதனைகளுக்கு முரண்பட்டவை என்று சொல்லி, வங்காளத்திலிருந்தும் யாத்திரை போன உபாஸகர்களைத் தங்கள் சமயத்துக்கு மாற்றினார்கள். அவர்களிற் பெரும்பாலானவர்கள் சிங்கள தேசத்தவர். அவர்களின் செயல்களாற் கோபமடைந்த தர்மபாலன் அவர்களைத் தண்டிக்க விரும்பிய போதும் புத்தஞானபாதரின் அறிவுரைக்குப் பணிந்து, அந்த எண்ணத்தைக் கைவிட்டான்.

விக்கிரமசீல விகாரம் நூறு வருடங்களுக்கு மேலாகச் சிறப்புடன் இயங்கியது. அது ஒரு உன்னதமான வித்தியா பீடமாக வளர்ச்சி பெற்றது. ஆறு துவார பண்டிதர்கள் மாணவர்கள் நிறுவனத்திலே சேருவதற்கு அனுமதி வழங்கினார்கள். அவர்கள் பரசமயவாதிகளோடும் விவாதம் புரிந்தனர். தர்மபாலனின் காலத்திலே பதவி பெற்றிருந்த துவார பண்டிதர்களின் பெயர்கள் மேல்வருவனவாகும்.

1. கிழக்கு வாசல் : ரத்நாகரசாந்தி
2. மேற்கு வாசல் : வாகீஸ்வரகீர்த்தி
3. வடக்கு வாசல் : நாரோபா
4. தெற்கு வாசல் : பிரக்ஞாகரமதி
5. முதலாம் மகாஸ்தம்பம் : காஷ்மீரத்து ரத்னவஜ்ர(ர்)
6. இரண்டாம் மகாஸ்தம்பம் : கௌடதேசத்து ஞானஸ்ரீமிதிரர்

மணலிற் புதைந்திருந்த திரைகூடக விகாரத்தைப் புனர் நிர்மாணஞ் செய்து, அதனை விசாலமாக அமைத்தமை தேவ பாலனது குறிப்பிடத்தக்க சாதனையாகும். காலப்போக்கில் அது புதிய சோமாபுரி விகாரம் என்ற பெயரால் வழங்கியது. அதன் அழிபாடுகள் பகார்பூரில் உள்ளன. ஹரிபத்திரர் தனது **அபிசமயலங் காராலோக** என்னும் நூலில் அதனைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். புகழ் பெற்ற வித்தியாபதிகள் வாழ்ந்த அந்த உத்தமமான திரைகூடக விகாரத்திலே தான் வாழ்ந்ததாக அவர் குறிப்பிடுகின்றார்.

விபுலஸ்ரீமித்திரரின் நாலாந்தாக் கல்வெட்டு பௌத்தர்களிடையில் ஏற்பட்ட பெருங் கலவரம் ஒன்றைப்பற்றிக் குறிப்பிடுகின்றது. விபுலமித்திரர் அசோகமித்திரரின் சீடர். அசோகமித்திரர் மைத்திரீ ஸ்ரீ மித்திரரின் சீடரானவர். மைத்திரி மித்திரரின் ஆசிரியரான கருணா ஸ்ரீ மித்திரர் சோமபுரி விகாரையில் இருந்த காலத்தில் வங்காளத்துப் படையொன்றினால் எரித்துக் கொல்லப்பட்டார். தர்மபாலனின் காலத்திலே, முன்கண்டவாறு சைந்தவ சிராவகர்கள் கலகம் புரிந்து பெருந்திரளான நூல்களை எரித்தனர். விக்கிரமசீல விகாரத்துத் துவாரபண்டிதரான ஞான ஸ்ரீ மித்திரர் முன்பு சைந்தவ சிராவகராக இருந்தவர். அவர் காலப் போக்கிலே தாந்திரியானத்தை ஒப்புக் கொண்டார்.

தேவபாலனின் காலத்துக்குப் பிற்பட்ட ஆச்சாரியார்களைப் பற்றிய மரபுவழிக் கதைகள் சிக்கலானவை, தெளிவற்றவை. சர்வஞானதேவ(ர்), ஜினமித்திர(ர்), காஷ்மீரத்து தாநசீல(ர்), தர்மாகரர் ஆகியோர் பௌத்த நூல்களை மொழி பெயர்ப்பதற்காகத் திபெத்திற்குப் போனார்கள்.

மகாபால(ன்) என்னும் அரசனது காலத்து நிகழ்ச்சிகளைப் பற்றித் தாராநாதர் குறிப்பிடுகின்றார். மகாபாலன் நாலந்தா விகாரம், சோமபுரி திரை கூடகம் ஆகியவற்றைப் புனரமைத்து, அவற்றிலே பல புதிய கட்டிடங்களையும் உருவாக்கினான். அவன் ஸ்தவிர வாதிகளுக்கு ஆதரவளித்தான். அவர்களைச் சைந்தவ சிராவகர் என்றும் சிங்கள பிக்குமார் என்றும் தாராநாதர் குறிப்பிடுகின்றார். அவர்களிற் பெருந்தொகையானோர் ஓதந்தபுரி விகாரத்தில் இருந்தனர். மகாபாலன் அங்கு உருவாச விகாரம் என்ற புதிய நிறுவனத்தை அமைத்தான். அவனுடைய காலத்திலே பிடோ என்பவர் **காலசக்கரதந்திரம்** என்ற சம்பிரதாயத்தை அறிமுகஞ் செய்தார். புத்தஞானபாதரின் சீடரான ஜேதாரி, கிருஷ்ண சமய வஜ்ர(ர்) என்போர் அவனது காலத்துப் பிரபல்யமான ஆச்சாரியர்கள் ஆவர். ஜேதாரி பல மொழிகள் பயின்றவர், அவர் சகலாகம பண்டிதன், பிறதேசத்துச் சமயவாதிகள் பலரை வாதங்களிலே வென்றவர், விக்கிரமசீலத்திலிருந்து தர்மோபதேசஞ் செய்தவர். சந்திரதேவரின் சிக்ஷாசமுச்சய, போதிசர்யாவதார ஆகாசகர்ப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூத்திர(ம்) முதலான நூல்களுக்குச் சுருக்கமான விளக்கவுரை களை அவர் எழுதினார். **ஹேதுதத்துவ உபதேச(ம்), தர்ம-தர்ம-விநிச்சய(ம்), பாலாவதார தர்க்கம்** என்பன நியாயம் பற்றி அவர் எழுதிய நூல்களாகும். (சி. ப.)

## பாலாவி

இலங்கையில் புகழ்பூத்து விளங்கும் சிவாலயங்களுள் சிறப்புக் குரியதாக விளங்குவது திருக்கேதீஸ்வரம் ஆகும். இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றினாலுஞ் சிறந்து விளங்குகின்றது. இவ்வாலயத்தின் தீர்த்தம் தனிப் பெருஞ் சிறப்புடைய பாலாவித் தீர்த்தமாகும். இது மிகப்பழைய வரலாற்றுச் சிறப்புக் களைக் கொண்டு விளங்குகின்றது.

பாலாவித் தீர்த்தம் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் அம்மன் சந்நிதிக்கு நேர் எதிரே தென்பால் சிறிது தூரத்தில் உள்ளது. பாலாவி என்பது ஒரு நதியாகும். இது மாத்தளைப் பகுதியில் பரந்த பள்ளத்தாக்கில் ஓடிய நீரும், மல்வத்து ஓயாவும் சேர்ந்தே பாலாவி என்ற பெயருடன் மாந்தைக் கடலில் கலந்துள்ளது. இது கி.பி 9ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியான சுந்தரமூர்த்தி நாயனார் வாழ்ந்த காலப்பகுதியிலும் பெருநதியாக இருந்து மேலைக் கடலுடன் கலந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பாலாவியின் முகத்துவாரத்தில் மாந்தைத்துறைமுகம் அமைந்திருந்தது. பாலாவியின் தென்கரையிற் களஞ்சியக் கட்டடங்களும், பாலத்துறையும் அமைந்து விளங்கின. அவ்விடமே இன்று வங்காலை என அழைக்கப்படுகின்றது. அதே போன்று பாலாவியின் வட கரையில் திருக்கேதீஸ்வரம் அமைந்துள்ளது. ஆனால் தற்போது பாலாவித் தீர்த்தம் அணைக்கட்டித் தேக்கிய நீர்நிலை போல் அமைந்து கீழ் மேல் மிக நீண்டு அகன்று ஏரி போன்று அமைந்துள்ளது.

பாலாவித்தீர்த்தம் தொடர்பாக ஐதீகக் கதைகளிலும், வரலாற்று நூல்களிலும், தேவாரத்திருப் பதிகங்களிலும், திருக்கேதீஸ்வர புராணம் போன்றவற்றிலும் பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. பாலாவி பற்றிய ஐதீகக் கதையானது சூரபத்மனுடைய மனைவியின் தகப்பனுடைய தகப்பன் 'துவட்டா' என்பவனுடைய கதையுடன் தொடர்புபட்டிருக்கின்றது. துவட்டா நெடுங்காலமாக பிள்ளைப் பேறில்லாது இருந்து திருக்கேதஸ்வரத்திற்கு வந்து பாலாவியில் நீராடிக் திருகேதீஸ்வரப் பெருமானை வழிபட்டு பிள்ளைப் பாக்கியம் கிடைத்ததாக ஐதீகம் காணப்படுகின்றது. மேலும் வடமொழியிலுள்ள ஸ்கந்த புராணத்தின் பகுதியாம் *தக்ஷிணகைலாச* மகாத்மியத்திலே ஸ்ரீ கேதீஸ்வரக்ஷேத்திரவைபவம் என்ற பிரிவிலே திருக்கேதீஸ்வரச் சிறப்பு பௌராணிகர் ரீதியிலே கூறப்பட்டுள்ளது. அதில்

*'எவ்வருணத்தினனாயினும் எக்குலத்தினனாயினும் பாலாவித் தீர்த்தத்திலே மூழ்கித் திருக்கேதீச்சர தரிசனம் செய்வானேல் போகம், மோக்ஷம் இரண்டையும் பெறுவான்'*

என முக்காலம் உணர்ந்த சூதமுனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்கு எடுத்துரைத்ததாக கூறப்பட்டுள்ளது. இதனை திருக்கேதீஸ்வரப் புராணத்தில் அச்சுவேலி ச.கு.வைத்தீஸ்வரக் குருக்களும் பாடியுள்ளார்.

பௌத்த இலக்கியங்களில் கி.மு 3ஆம் நூற்றாண்டளவில் மாதோட்ட நகர் மகாதீர்த்தம் என்ற பெயரைப் பெற்றுள்ளது. மாதீர்த்தம் - மிகப்புனிதமான ஒரு புண்ணியத் தலம் எனவும் தீர்த்தம் - பரிசுத்தம் புனிதமாக்குவது, அதாவது தன்னிடம் வந்து முழுகுவோரின் பாவங்களைப் போக்கித் தூய்மை செய்வது என்பதாகும். இங்கு கூறப்பட்டுள்ள மகாதீர்த்தத்திற்கு அருகே பாலாவி என்ற சிவநதி ஒன்று ஓடுகின்றது. அது மக்களின் பாவம் போக்கும் புனித தீர்த்தமாக விளங்கிற்று.

புராணங்களில் ராகு, கேது எனும் கிரகங்களாகிய இரு பாம்புகளோடு தொடர்புடைய கதையில் இராகுவும், கேதுவும் திருக்கேதீஸ்வரம் என்று கூறப்படுகின்ற சிவன் கோயிலில் தினமும் பாலாவியில் நீராடி தவமிருந்து முக்தியடைந்ததாக கூறப் பட்டுள்ளது. இங்கு திருக்கேதீஸ்வரநாதர் எனும் பெயர் கேது பூசித்தமையால் ஏற்பட்டதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

திருக்கேதீஸ்வரத் திருத்தலத்தின் தீர்த்தமாக விளங்கும் பாலாவியின் சிறப்பினை கி.பி7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரும், கி.பி 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனாரும் தமது திருக்கேதீஸ்வரப் பதிகத்தில் பாடியுள்ளார். பத்தாவது பதிகத்தில் 'தத்தர் மன்னுபாலாவியின் கரையிற்கே' எனவும், சுந்தர மூர்த்தி நாயனார் தன் திருக்கேதீஸ்வரப் பதிகத்திலே தேவாரம் ஒவ்வொன்றிலும் 'பாலாவியின் கரைமேல்' எனவும், 'பங்கஞ் செய்த பிறை சூடினன் பாலாவியின் கரைமேல்' எனவும் 'பரிய திரை எறியவரு பாலாவியின் கரைமேல்' எனவும் 'பாவம் வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்' எனவும் பாலாவியின் சிறப்பினைக் குறிப்பிட்டுள்ளார்.

பாலாவித் தீர்த்தம் பெரும் மகிமை கொண்டதாகும். இப்பாலாவி தீர்த்தம் சிவவடிவாகும். இது திருக்கேதீஸ்வர ஆலயம் தோன்றிய போதே தோன்றியதாகும். இமயத்திலுள்ள 'மானசவாவி' எனும் தெய்வத் தடாகத்தைப் போல மிக மேன்மை உடையதாகும். இதனை 'பரம்பரன் உருவாய் உற்ற பாலாவி' என்றும், பலவினைக் குறும்பு போக்கும் பாலாவி' என்றும் திருக்கேதீஸ்வரப் புராணம் புகழ்ந்து கூறுகின்றது. ஒருவர் பாலாவித் தீர்த்தத்தில் நாள் தோறும் ஸ்நானம் செய்து, கேது நாதனைத் தரிசிக்கின் இஷ்ட சித்திகளைப் பெறுவர். அவ்வாறு இயலாதவர் விஷேட புண்ணிய காலத்திலேனும் வந்து ஸ்நானம் செய்து திருக்கேதீஸ்வர நாதனைத் தரிசிக்கின் இஷ்ட சித்திகளைப் பெற்று உய்வர் என்பது திண்ணம். ஒரு நாளேனும் பாலாவியில் வந்து ஸ்நானம் செய்யாதவர் அவரது மானுடப் பிறவி ஒரு பிறவி ஆகுமோ? ஆகாது என்று திருக்கேதீஸ்வரத் தலபுராணம் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் புண்ணிய தீர்த்தங்களான கங்கை, யமுனை, கோதாவரி, காவேரி, குமரித்துறை போல ஈழத்திருநாட்டில் பாலாவித் தீர்த்தம் அமைந்துள்ளது. ஆடி அமாவாசையிலும், அந்தியேட்டி தினங்களிலும் பலர் பிதிர்க்கடன் செய்வதுண்டு. அவ்வகையில் ஒருவர் தமது பிதிர்த்தினத்தில் இப்பாலாவியில் வந்து நீராடி அத்தீர்த்தத்தை வெள்ளிக் குடங்களிலே எடுத்து வந்து கோயிலின் மேற்கு புறத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள மகாலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து இஷ்டசித்திகளைப்பெற்றுக் கொள்வர். சிவராத்திரி தினத்தன்று பாலாவித் தீர்த்தக்கரையில் பக்தர் வெள்ளம் அலைஅலையாகத் திரண்டு வந்து நீராடுவர். இக்காலத்தில் தொழிநுட்பத் திணைக்களத்தால் நடத்தப்படும் திருக்கேதீஸ்வர பாலாவி சேவா சங்கம் தாக சாந்தி தொண்டு மேற் கொண்டு வருகின்றது. இவ்வகையில் அமைந்துள்ள பாலாவித் தீர்த்தம் அடியவர்களின் பாவங்களையும் பிணிகளையும் நீக்கி நற்கதி அருளவல்லது எனும் நம்பிக்கை இந்துக்களிடையே காணப்பட்டு வருகின்றது. (த. ம.)

## பானுகோபன்

பானுகோபன் வரலாறு *கந்தபுராணம், கந்தபுராணச் சுருக்கம்* என்னும் தமிழ் நூல்களாலும், வடமொழியிலுள்ள *சிவரகசிய கண்டம்* என்னும் நூலின் பகுதியாலும் அறியமுடிகின்றது.

இவன் சூரபன்மனின் குமாரன். இவன் இளமைப் பருவத்தில் தொட்டிலில் தூங்கும் பொழுது சூரியனின் வெப்பம் யன்னல் வழியாகத் தாக்க சூரியனைக் கோபித்து, பிடித்துக் கட்டி, பிரமனின் வேண்டுகோளால் விட்டுப் பானுகோபன் என்ற பெயர் பெற்றான். பானு-சூரியன் கோபன்-கோபித்தவன். இவனது உடன் பிறப்பினர்களாக அக்கினிமுகன், இரணியன், வச்சிரவாகு என்போரைக் கூறுவர்.

தன் தந்தையுடன் பிறந்த அசமுகி, இந்திராணிக்குத் தொல்லை கொடுத்தமையால் கைவெட்டப்பட்டாள். அசமுகியின் கையை அறுத்தவர்களை தண்டித்தற்குத் தந்தையின் ஏவலால் புறப்பட்டு இந்திரனின் நாட்டைக் கொளுத்தி சயந்தனைச் சிறையிலிட்டான்.

முருகப் பெருமானுக்கும் சூரபன்மனுக்கும் நிகழ்ந்த போரில் முதல் நாளில் பானுகோபன் சேனைகள் சூழப் போர்க் கோலம் பூண்டு புறப்பட்டான். நாரத முனிவர் கந்தவேளிடத்து வந்து பானுகோபனுடைய மாயைத் திறங்களைக் கூறினார். முருகப் பெருமான் வீரவாகு தேவரைப் பானுகோபனுடன் போரிட அனுப்பி வைத்தார். பானுகோபன் பிரம்ம தேவர் தந்த மோகப் படையை ஏவி மயக்கத்தை மாற்றினார். பானுகோபன் நாணமடைந்து தன் நகரத்தையடைந்தான். இரண்டாம் நாள் போரில் தோல்வி அடைந்த சூரபன்மன் பானுகோபனைச் சந்தித்து வீரவாகுவைத் தணித்துப் போரிட்டு வென்று வா என்று அனுப்பினான்.

பானுகோபன் மூன்றாம் நாள் போரிலே தன் பாட்டியாகிய மாயை தந்த மாயாபாசத்தை எடுத்துக்கொண்டு போருக்குச் சென்றான். வீரவாகு தேவரும் பானுகோபனும் கடும் போர் புரிந்தார்கள். இருவரும் சிவப்படைக் கலங்களை ஏவினார்கள். அவை ஏவியவரிடத்தே திரும்பின. பானுகோபன் தளர்ந்தான். விண்ணில் மறைந்து நின்று மாய பாசத்தை விடுத்தான். அப்படை பூத சேனைகளையும் வீரவாகு முதலிய இலட்சத்து ஒன்பதின் மரையும் மயக்கி கட்டிக்கொண்டு போய் நன்னீர் கடலில் அமிழ்த்தி மேலெழா வண்ணம் காத்து நின்றது. பானுகோபன் எல்லோரும் இறந்து விட்டதாகக் கருதித் தந்தையிடம் கூறி வெற்றிவிழாக் கொண்டாடினான். முருகவேளின் வேற்படையால் மாயப்படை அழிந்தது. தேவர்கள் சூரபன்மனது வீரமகேந்திரபுரியை நெருப்பிட்டு அழித்தனர்.

நான்காம் நாள் அக்கினியாட்சுரன் தோற்றான். ஐந்தாம் நாள் பானுகோபன் சூரபன்மனுக்கு அறிவுரை கூறினான். பயனில்லாது போகவே மீண்டும் வீரவாகுவுடன் போரிட்டு இரண்டு கரங்களும் முடிகளும் அறுபட்டு இறந்தான். சூரபன்மன் அதனை அறிந்து பெரிதும் புலம்பினான். இவன் வரலாறு இராவணனது மகனாகிய இந்திர சித்தின் வரலாற்றை ஓரளவு ஒத்தது.

(தே. ஹ.)

## பாஸ்கரராயர்

ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமத்திற்கு உரை எழுதிய சான்றோர் பாஸ்கரராயர் அவர்கள். மகாராஷ்டிரப் பிரதேசத்தில் பாகா என்னும் ஊரில் பிறந்தவர். கௌசிக கோத்திரத்திற் பிறந்த ஸ்ரீ கம்பீரராயர் இவரது தந்தை தாய் கோநாம்பிகை.

அறிஞர்களிடம் அதிகம் பயிலும் சஹஸ்ரநாமங்கள் மூன்று. முதலாவது ஸ்ரீ கணபதி ஸஹஸ்ரநாமம். இது கணேச புராணத்திலுள்ளது. இரண்டாவதாக ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமம். இது மகாபாரதத்திலுள்ளது. மூன்றாவது ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம். இது பிரும்மாண்ட புராணத்திலுள்ளது. விஷ்ணு சஹஸ்ரநாமத்திற்கு ஸ்ரீ ஆதி சங்கரரும், ஸ்ரீ பராசர பட்டரும் உரை எழுதியிருக்கின்றனர். அது போன்று ஸ்ரீ கணேச சஹஸ்ரநாமத்திற்கும், ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமத்திற்கும் மிகச் சிறந்த உரையை எழுதியிருப்பவர் ஸ்ரீ பாஸ்கரராயர்.

உத்தமப் பெற்றோர்களால் காசியில் உபநயனம் செய்விக்கப் பெற்று, ஸ்ரீ ந்ருஸிம்ஹாத்வரி என்பவரிடம் பதினெட்டு வித்யா ஸ்தானங்களையும் கற்றார். சிறுவயதில் தந்தையிடமிருந்து பெற்ற **ஸரஸ்வதி மந்திர** உபாஸனையின் பயனால் சகல வித்தைகளிலும் எளிதிலே தேர்ச்சி அடைந்தார். ஸ்ரீ கங்காதர வாஜபேயயாதி என்ற சோழ தேசப் பண்டிதரிடம் தர்க்க சாஸ்திரம் கற்றார். குஜராத்திலுள்ள ஸூரத்தில் ஸ்ரீசிவதத்தசுக்லர் என்பவரிடம் ஸ்ரீவித்யை உபதேசிக்கப் பெற்று பூர்ணாபிஷேகம் நிகழ்த்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார். ஸ்ரீ பாஸுராநந்தர் என்பது இவரது தீக்ஷாநாமம். ஆனந்தி, பார்வதி என இரு மனைவியர். இவர்களுடன் பாரத தேசத்தைச் சுற்றி வரும்பொழுது மந்திர சக்தியின் துணைகொண்டு காசியிற் சக்ரேஸ்வரருக்கும் கோங்கணத்தில் கம்பீரநாதருக்கும், மூலஷ்ரதத்தில் பாண்டுரங்கனுக்கும், இராமேசுவரத்தில் வஞ்ரேசுவரருக்கும் ஸர்வயில் சந்திரலம்பாவிற்கும், சோழநாட்டில் கஹோளேசருக்கும் கோயில் கட்டினார். இவரது மனைவி ஆனந்தி அம்மையார் இவர் பெயரைக் கொண்டு பாஸ்கரராஜபுரத்தில் பாஸ்கரேசுவரர் என்ற பெயருடன் சிவபெருமானுக்குக் கோயிலமைத்தார். தஞ்சை அரசன் இவரது உபாசனையின் மேம்பாடு, புலமைத்திறம் முதலியவைகளைக் கண்டு மகிழ்ந்து உள்ளன்புடன் அளித்த கிராமமே பாஸ்கரராஜபுரமாகும். இக்கிராமம் திருவிடை மருதூரில் உள்ளது. பாஸ்கரராயர் தமது வாழ்வின் இறுதி நாட்களை இங்கேயே கழித்தார்.

பாஸ்கரராயர் லலிதா சஹஸ்ரநாம உரைக்கு **ஸௌபாக்கிய பாஸ்கரம்** என்று பெயரிட்டுள்ளார். பாஸ்கரராயரைப் பற்றிய சுவையான ஒரு குறிப்பு உள்ளது. காசியில் பாஸ்கரராயர் கௌலமார்க்கத்தில் மஹாயாகம் எனும் பிரமாண்டமான வழிபாட்டை ஏற்படுத்தி அதில் பங்குகொள்ளுமாறு காசியிலுள்ள தேவிபக்தர்களையும், பண்டிதர்களையும் அழைத்தார். குங்குமானந்தர் என்ற யோகியைத் தலைவராகக் கொண்டு பண்டிதர்கள் அந்த வேள்வியில் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். குங்குமானந்த யோகி பாஸ்கரராயரது வழிபாட்டின் உயர்வையும், சிறப்பையும் கண்டு மகிழ்ந்து தேவியின் அருட்ப்பொலிவை உணர்ந்தார். பொறாமையால் மதியிழந்த சிலபண்டிதர்கள் பாஸ்கரராயரை வாதுக்கழைத்தனர்.

**மஹா சதுஷ்ஷஷ்டி கோடி யோகினி கணஸேவிதா** என்ற லலிதா சஹஸ்ரநாமத்தில் வரும் நாமாவில் வரும் 64 கோடி யோகினிகள் யாவர்? அவர்கள் பெயர் என்ன? என்று அடுத்தடுத்து வினாக்களை எழுப்பினர்.

மஹாயாகத்தில் யோகினி வழிபாடு முக்கியமானது. பாஸ்கரராயரை அவமதிப்பிற்கு உள்ளாக்குவதே அப்பண்டிதர்களின் உள்நோக்கம். பாஸ்கரராயர் உடனே எழுந்து யோகினிகளின் பெயர்களைத் தான் கூறுவதாகவும், அதனை எழுதிக் கொள்ளுமாறும் பண்டிதர்களைக் கேட்டுக்கொண்டார். யோகினி தேவதைகளின் பல்லாயிரக்கணக்கான நாமங்கள் மடைதிறந்த வெள்ளமென ராயரது திருவாயினின்று பெருக்கெடுத்தது. பண்டிதர்கள் கைசளைத்தனர். பெரியவரது வேகத்திற்கு ஈடுகொடுத்து அவர்களால் எழுத முடியவில்லை. மன்னிப்புக்கோரினர். இதைத் தமது ஞான திருஷ்டி மூலம் கவனித்த குங்குமானந்தர், அம்பிகை பாஸ்கரராயரது தோளில் அமர்ந்து தானே பாஸ்கரரது வாயிலிருந்து யோகினிகளின் பெயர்களை பாயவைப்பதைக்கண்டு தரையில் விழுந்து வணங்கி கண்ணீர் மல்க நின்றார்.

குங்குமானந்தர் கண்டு மகிழ்ந்த தேவியின் திருவுருவத்தைத் தானும் கண்டு மகிழவேண்டும் எனப் பிடிவாதம் பிடித்த நாராயணதீர்த்தர் என்பவர் பாஸ்கரரது கருணையால் அக்காட்சியைக் கண்டார். அடுத்த கணமே அவரது கண்பார்வை பறிபோயிற்று. பாஸ்கரர் பூஜா தீர்த்தத்தினால் கண்களைத் துடைக்க மீண்டும் பார்வை பெற்றார்.

பாஸ்கரராயர் தேவியைப் பற்றிய இரகசியமான பல விவரங்களை அறிந்தவரானாலும் தமது உரையிற் சிலவற்றை மட்டும் மிகவிளக்கமாகக் கூறிவிட்டு, மிகுதியை குருவிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார். இதனைக் காணும் பொழுது மந்திர சாஸ்திரத்தை மறைமுகமாகக் காப்பாற்றுவதன் அவசியத்தை நமக்கு உணர்த்தியிருக்கின்றார். (வ. வை.)

## பாஷ(ர்)

சமஸ்கிருத மொழியில் மிகக் கூடிய எண்ணிக்கையிலுள்ள நாடகங்களை எழுதியவர் என்ற சிறப்பு பாஷருக்கு உரியது. அவர் வாக்பதி, காளிதாசர், பாணபட்டர், ராஜசேகரர் போன்ற பெரும்புலவரின் அபிமானத்தைப் பெற்றவர். அவரின் நாடகங்கள் சூத்திரதாரனின் பிரவேசத்தோடு ஆரம்பாகுமென்றும் அவற்றிலே கதாபாத்திரங்கள் மிகப் பலர் என்றும் அவற்றிலே பதாதைகள் பலவாகுமென்றும் பாணபட்டர் கூறுவார்.

பாஷரின் காலம் பற்றி அறிஞரிடையே வேறுபாடான கருத்துக்கள் உண்டு. அவர் காளிதாசருக்கு முற்பட்டவர். காளிதாசரின் காலம் கி.பி நான்காம் நூற்றாண்டு என்பது இப்பொழுது பொதுவாக அறிஞரால் ஒப்புக் கொள்ளப்படுகின்றது. அவர் பெரும்பாலும் சௌரசேனிப் பிராகிருதத்தைப் பயன்படுத்துகின்றார். அவரின் பிராகிருத மொழிவழக்கு அஸ்வகோஷருக்குப் பிற்பட்டது; காளிதாசருக்கு முற்பட்டது. **பிரதிஜ்ஞா யௌகந்தராயணம், சாருதத்த** என்னும் நாடக நூல்களில் மாகதியின் செல்வாக்குக் காணப்படுகின்றது. பாஷரின் சமஸ்கிருத மொழிநடை பாணினி, காத்தியாயனர், பதஞ்சலி முதலியோரின் விதிகளுக்கு அமைவானதாகும்.

நாட்டிய தர்ப்பணம் என்னும் நூலின் இணையாசிரியர்களான ராமச்சந்திர(ர்), குணச்சந்திர(ர்) ஆகியோர் **ஸ்வப்நவாஸவதத்த** என்ற நூலை பாஷர் எழுதினார் என்று குறிப்பிட்டுள்ளனர். அதன் செய்யுளொன்றையும் மேற்கோளாகக் கையாண்டுள்ளனர். பாஷர் **ஸ்வப்தவாஸவதத்த** முதலான பல நாடக நூல்களின் ஆசிரியர் என்று ஒரு மரபுவழிச் செய்யுளும் குறிப்பிடுகின்றது. அவர் வேறெந்த நாடக நூல்களை எழுதினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை அண்மைக் காலம் வரை எவரும் அவ்வளவு தெளிவாக அறிந்திருக்கவில்லை.

1912 இல் திருவனந்தபுரத்திலே பதின்மூன்று நாடக நூல்களின் ஏட்டுச் சுவடிகளைக் கணபதி சாஸ்திரி என்னும் வித்தகர் அடையாளங் கண்டார். அவர் அவற்றைப் படித்து. அவற்றின் வாசகங்களை அச்சிலே பதிப்பித்து வெளியிட்டார். அவற்றிலே ஆசிரியரின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. ஆயினும். அவற்றின் பதிப்பாசிரியரான கணபதி சாஸ்திரி பாஷர் அவற்றை எழுதினார் என்ற கருத்தைத் துல்லியமாக வலியுறுத்தினார். அவற்றின் ஆசிரியர் ஒருவரே என்பதை நூல்களின் அகச்சான்றுகள் மூலம் அறியமுடிகின்றது. நூல்களின் அமைப்பிலே பொதுப் பண்புகள் உண்டு. பொதுவாக அவை **நாந்த்யந்தே ததஹ் ப்ரவிஸாதி சூத்ரதாரஹ்** என்ற தொடரோடு ஆரம்பமாகின்றன. அவை எல்லாவற்றிலும் **ப்ரஸ்தாவநா** என்ற சொல்லே இடம்பெற்றுள்ளது. நாட்டிய சாஸ்திர விதிகளுக்கு மாறாக அவற்றிலே மரணம். யுத்தம். கிரீடை. நித்திரை என்பன பற்றிய காட்சிகள் அரங்கத்தில் இடம் பெறுகின்றன. அவற்றிலே வரும் சொற்கள். சொற்றொடர்கள் என்பவற்றில் அதிக ஒற்றுமை உண்டு. சில செய்யுள்களும் அவற்றுக்குப் பொதுவானவை. அதிகமான இலக்கணப் பிழைகளும் பிராகிருத வழக்குகளும் பொதுவானவை. பாணபட்டர் பாஷரின் நாடகங்கள் பற்றிச் சொன்ன பண்புகள் கணபதி சாஸ்திரி வெளியிட்ட எல்லா நூல்களுக்கும் பொருத்தமானவை.

பாஷர் எழுதியவை என்று கொள்ளப்படும் பதின்மூன்று நூல்களிற் சாருதந்த தவிர்ந்த எல்லா நூல்களும் முழுமையாகக் கிடைத்துள்ளன. அவை இராமாயண. மகாபாரதக் கதைகளை மூலமாகக் கொண்டவை. அவற்றுள் **மத்யம - வியாயோக, ஊருபங்க, தூதகடோத்கச, கர்ணபார, தூதவாக்ய, பஞ்சராத்ர** ஆகியவை மகாபாரதக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவை. இவற்றுட் பல ஓரங்க நாடகங்கள். பாலசரித என்பது கிருஷ்ணரைப் பற்றிய கதைகளை ஆதாரமாகக் கொண்டது. **பிரதிமா நாடக(ம்), அபிஷேக நாடக(ம்)** என்பனவற்றுக்கு இராமாயணக் கதைகள் அடிப்படையானவை. **அவிமாரக, சாருதத்த, பிரதிஜ்ஞா யௌகந்தராயண(ம்), ஸ்வப்நவாஸவதத்த** என்பவை சமகாலத்தில் வழங்கிய கதைகளைத் தழுவி எழுதப்பட்டவை.

இராமாயணத்தை மூலமாகக் கொண்ட நாடகங்களில் ஆசிரியர் கதையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்த வில்லை. கதையில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகள் விவரங்களைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் இல்லாதவை. தசரதன் இறந்த பின் பிரதிமாசாலையில் வைத்த அவனது பிரதிமையின் பெயரால் அமைந்தது **பிரதிமா நாடகம்** அதில் இராமன் வனவாசம் போனமையும் **இராவண சங்காரம்** முடிந்த பின் அயோத்தியா புரிக்குத் திரும்பிச் சென்றமையும் வர்ணிக்கப்படுகின்றன. அபிஷேக நாடகத்தில் வாலிவதை முதலாக இராமர் பட்டாபிஷேகம் வரையிலான நிகழ்ச்சிகள் விளக்கப்படுகின்றன.

பாஷரின் ஆளுமையும் புலமையும் மகாபாரதக் கதைகளை மூலமாகக் கொண்ட நாடகங்களிலே சிறப்பாக விளங்குகின்றன. அவற்றிலே சுவைநயம் கருதி மூலக்கதை விவரங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கதாபாத்திரங்கள் பற்றிய வர்ணனைகளும் உயிரோட்டமானவை. வீமசேனன். இடும்பி ஆகியோரின் தொடர்பினைப் பற்றியது **மத்யமவியாயோக** நாடகம். இடும்பி சூழ்ச்சியால் வீமசேனனைத் தன்னிடம் வரவழைத்த கதை இதிலே கவர்ச்சியான கோலத்திலே சித்திரிக்கப்படுகின்றது.

அபிமன்யுவைக் கொன்று களிப்புற்ற கௌரவரிடம் தூது சென்ற கடோற்கசனைப் பற்றியது **தூத கடோற்கச** என்னும் நாடகம். இந்திரன் கிழப்பிராமணர் வடிவந்தாங்கிய கோலத்திலே கர்ணனிடஞ் சென்று கவசகுண்டலங்களை இரந்து பெற்றமை அதிலே சித்திரிக்கப்படுகின்றது. பாரதப் போரைத் தவிர்க்கும் நோக்கத்தோடு நடைபெற்ற கிருஷ்ணன் தூது தொடர்பானது **தூத வாக்கியம், ஊருபங்க** என்னும் நாடகத்திலே துரியோதனன் பெருவீரனாக வருகின்றான். ஆயினும் சமரிலே தொடை எலும்பு முறிந்து அவன் மடிகின்றான். பஞ்ராத்திர(ம்) என்பது ஆனிரை கவர்தலால் வீராட இராசனுக்கும் துரியோதனாதி களுக்கும் இடையில் ஏற்பட்ட சமரைப் பற்றியதாகும். ஐந்து இரவுகளுக்குட் பாண்டவரைப் பற்றி அறிந்து கொள்ளுமிடத்து இராச்சியத்தின் அரைப்பாகத்தை அவர்களிடம் ஒப்படைத்து விடுவதாகத் துரோணருக்குத் துரியோதனன் ஒரு சமயத்தில் வாக்குறுதி அளித்திருந்தான் அதனாற் **பஞ்சராத்ரம்** என்ற பெயர் இந்நூலுக்கு உரியதாகியது.

**பாலசரிதம்** கிருஷ்ணனின் பால்ய பருவத்து லீலைகளைப் பற்றியது. கதையிலே ஆசிரியர் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார். அதிலே கிருஷ்ணரின் பிறப்புடன் கதை ஆரம்பிக்கின்றது. முடிவிலே உக்கிரசேனன் மதுரையில் மீண்டும் ஆதிக்கம் பெறுகின்றமை சொல்லப்படுகின்றது. அவிமாரகன். குறங்கி என்போரின் காதலைப் பற்றியது. **அவிமாரக(ம்)** என்னும் நாடக நூல். யானையொன்றின் பிடியிலிருந்து பெண்ணைக் காப்பாற்றுவதோடு ஆரம்பமாகின்றது. நாரதர் அவனது பிறப்பினை உணர்த்துவதோடு கலியாணம் பற்றி ஏற்பட்ட இடர் நீங்கிவிடுகின்றது. காதலர் இருவரும் கருத்தொருமித்து ஆதரவுபடுகின்றனர்.

**சாருதத்த** என்ற நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. அதன் நான்கு அங்கங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. கதையமைப்பில் அதற்கும் பிற்பட்டதான மிருச்சகடிதத்திற்கும் இடையில் ஒற்றுமை காணப்படுகின்றது. அது வறுமையுற்ற வணிகனான சாருதத்தனுக்கும் வசந்தசேனன் என்னும் கணிகைக்கும் இடையிலான காதலைப் பற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஜ்ஞா யௌகந்தராயண(ம்), ஸ்வப்ந வாஸவதத்த என்னும் நாடகங்கள் உதயணன் கதையினைக் கருப்பொருளாகக் கொண்டவை. இவற்றில் முதலாவது நாடகத்தில் வரும் கதையின் தொடர்ச்சியை இரண்டாவது நாடகத்திலே காண முடிகின்றது. சூழ்ச்சியின் வலைப்பட்ட அரசனாகிய உதயணனைச் சிறைக்கைதியாக உஜ்ஜயினிக்குக் கொண்டு சென்றனர். அவனது அமைச்சனாகிய யௌகந்தராயணன் உதயணனை விடுதலை செய்வதாகப் பிரதிக்ஞை செய்தான். அவனது முயற்சிகள் பலித்தன. உதயணன் உஜ்ஜனியிலுள்ள இராசதானியிற் கைதியாக இருந்த காலத்தில் அங்குள்ள இராசகுமாரியான வாஸவதத்தை அவன் மேற் காதல் கொண்டாள். உதயணனைச் சிறையிலிருந்து மீட்டுச் செல்லும் வேளையில் யௌகந்தராயணன் வாஸவதத்தையினையும் அழைத்துச் சென்றான். அருணி என்பவனின் கிளர்ச்சியால் உதயணன் தனது நாட்டில் அரச பதவியை இழந்தான். அதன் பின்பு வாஸவதத்தையும் அமைச்சனாகிய யௌகந்தராயனும் காட்டிலே பரவிய தீயில் அகப்பட்டு உயிரிழந்தனர் என்று செய்தி கிடைத்தது.

அதன் பின்பு மகத நாட்டு இளவரசியான பத்மாவதியை உதயணன் தன் தேவியாகக் கொண்டான். உதயணன் தனது உறவினரின் உதவியோடு தான் இழந்த இராச்சியத்தை மீண்டும் பெறுகின்றான். அதன் பின் தனது மந்திரியினையும் வாஸவதத்தையினையும் காண்கின்றான். அவளைக் கண்டதும் கனவு கண்டது போன்ற உணர்வு அவனது உள்ளத்திலே ஏற்படுகின்றது. அந்த உணர்வினை அடிப்படையாகக் கொண்டே நாடகத்துக்கு ஆசிரியர் பெயரிட்டார். பாஷரின் நாடகங்களில் அதுவே மிகவுஞ் சிறந்தது.

பாஷரின் மொழிநடை இலகுவானது;அலங்காரமானது. அவர் கதையினை விளக்கும் திறன் கவர்ச்சியானது. இராமாயணம். மகாபாரதம் என்பவற்றின் கதாபாத்திரங்களே அவருடைய நாடகத்தில் வரும் கதாபாத்திரங்களாகும். ஆயினும். அவரின் சமவாதங்கள் நகைச்சுவை மிக்கவை. உணர்ச்சி பூர்வமானவை. அவை இலக்கிய ரசனை செறிந்தவை. அவரது நாடக நூல்கள் காளிதாஸர். பவபூதி என்போரின் ஆக்கங்களுக்கு முன்னோடியானவை. (சி. ப.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி

## பிங்களாஷன்

குபேரனின் மற்றொரு பெயர் பிங்களாக்ஷன். பிங்களம்+அக்ஷம் எனப்பிரித்து பசந்த கண்களை உடையவன் என்று பொருள் கொள்ள வேண்டும்.

ஒருசமயம் இவன் இமயமலைச் சாரலில் தவம் செய்துக் கொண்டிருக்கையில் அங்கு எழுந்தருளிய சிவபெருமானின் சக்தியாகிய உமாதேவியின் மேல் இடது கண் பார்வையைச் செலுத்தினான். அக்குற்றத்தால் கண் பசந்து ஒளிமங்கியது. அதனால் ஏகாக்ஷி பிங்கள என்ற பெயரைப் பெற்றான் என்று உத்தர காண்டம் உரைக்கின்றது.

விநாயகர், அனுமான் இவர்களையும் பிங்களாக்ஷன் என்று அவர்களது அஷ்டோத்திரஸ்கள் மூலம் அறிகிறோம். இடுங்கிய கண்கள் உடையவர் என்பது இதன் பொருள். (வ. வை.)

## பிச்சாடனர்

சைவமரபிலே முழுமுதற்கடவுளாகிய சிவபிரான் அருவம், உருவம், அருவுருவமாக வழிபடப்படுகின்றார். பார்க்கு மிடந்தோறும் நீக்கமறவிளங்கும் அப்பெருமான் ஆன்மாக்க ளுடைய ஈடேற்றத்திற்காகப் பல அருளுருவத் திருமேனிகளுடன் எழுந்தருளியுள்ளார். இத்திருமேனிகள் 25 எனவும், 64 எனவும் சமய நூல்களிலே கூறப்பட்டுள்ளன. அவர் கலையாகவும், கலைஞானமாகவும் விளங்குகிறார். "எட்டிருங்கலை...... உணர்ந்தவர் (64 கலைகளையும் உணர்ந்தவர்) என்பது திருஞானசம்பந்தரின் திருவாக்கு. இறைவனின் திருவுருவங்கள் அனைத்தும் குறைபாடுகளின்றி நிறைவானவை. ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுச் சிவபிரான் பல்வேறு திருவடிவங்களை மேற்கொள்ளுகிறார் என்பது

*"குறித்த தொன்றாக மாட்டாக் குறைவிலன் ஆதலானும்*
*நெறிப்பட நிறைந்த ஞானத்தொழிலுடை நிலைமையாலும்*
*வெறுப்பொடு விருப்புத்தன்பால் மேவுதல் இலாமையானும்*
*நிறுத்திடும் நினைந்த மேனி நின்மலன் அருளினாலே"*

எனச் சிவஞானசித்தியார் கூறுவதால் அறியப்படும்.

மேற்குறிப்பிட்ட இறைவனின் திருமேனிகளிலே பிச்சாடனர் திருவுருவமும் ஒன்றாகும். எல்லாம் வல்லவரும், எல்லாச் செல்வங்களையுமுடையவருமான இறைவன் பிஷாடனராக (பிஷை எடுப்பதற்காக அங்குமிங்கும் திரிபவராக) விளங்குவது பெருவியப்பே.

மேலும் இவர் பிச்சைத்தேவர். பிச்சை உவக்கும் பெருமான் எனவும் அழைக்கப்படுகிறார். "ஆரூர் எம்பிச்சைத் தேவா என் நான் செய்கேன் பேசாயே" என மாணிக்கவாசகர் திருவாசகத்திலே கூறியுள்ளார்.

இத்திருவுருவத்தின் அமைப்பினை நோக்கலாம். அவருக்கு நான்கு திருக்கரங்கள் உள்ளன. இடக்கையிலே பிச்சைப் பாத்திரமும் வலக்கையில் தமருகம் அல்லது சூலமும் அமைந்திருக்கும். இடக்கால் தரையில் ஊன்றியிருக்கும். வலக்கால் நடப்பதற்கு அடையாளமாகச் சற்று வளைந்து தளர்ந்திருக்கும் என்றும் நிற்கும் நிலையில் அவர் உள்ளார். தலையிலே சடாபாரம் அல்லது சடாமண்டலம் காணப்படும். இடுப்பினைப் பாம்பு ஒன்று சுற்றி அணிசெய்யும் "அற்றம் மறைப்பது முன்பணியே" என ஞானசம்பந்தர் கூறியுள்ளார். அப்பாம்பு அற்றம் (மறைவிடம்) தோன்றாதபடி அழகு செய்து கொண்டிருக்கும் பிச்சாடனர் ஆடை தரித்திருக்கமாட்டார்.

அவரது நெற்றியிற்பட்டம் திகழும் முக்கண்கள், நீலகண்டம் முதலிய சிறப்பியல்புகளும் இவருக்கு உள்ளன. வலத்திருக்காலில் வீரக்கழல் மிளிரும். இவரது திருக்கரத்திலுள்ள பிச்சைப்பாத்திரம் பிரமாவின் தலையோடு எனக் கருதப்படுகின்றது. கபாலத்தைத் தாங்கி நிற்பதால் இவர் கபாலி எனவும் அழைக்கப் படுகிறார்.

முழுமுதற் கடவுளாகிய சிவபிரான் பிச்சைப்பாத்திரம் ஏந்திக் கொண்டு பிச்சை ஏற்பவராக விளங்குவது குறித்து ஒருசாரார் ஏதேனும் ஏளனமாகக் கூறலாம். ஆனால் அவ்வாறு அன்றி அருமை மிக்க இறைவன் தன்னுடைய எளிமைத்தன்மை இனிது விளங்கும்படி திகழும் நிலையே பிச்சைத் தேவரின் திருவருட் கோலமாகும். மணிவாசகப்பெருமான் சிவபிரானை அருமையில் எளிய அமுதே போற்றி எனச் சிறப்பித்துள்ளார். இவ்வகையில் பிச்சைத்தேவர் அருமை, எளிமை, அழகு என்னும் மூன்றும் ஒருங்கே அமைந்து இலங்குகின்றார் எனலாம்.

பிச்சாடனர் ஒருவரிடம் பொன்னும் பிறபொருளும் கேட்கின்றிலர். மாறாக, ஒருவரின் அன்பையும் நன்றியுணர் வினையுமே அவர் பெறவிரும்புகின்றார். ஒருவகையில் இரத்தலும் ஈதல் போன்றதெனவும் கருதப்படுகின்றது. இரத்தலும் ஈதலே போதும் எனத் திருவள்ளுவரும் கூறியுள்ளமை குறிப்பிடற்பாலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர் திருமந்திரத்திலே இறைவன் இரத்தல் பற்றிய தனிச் சிறப்பினைக் குறிப்பிட்டுள்ளார். அதாவது "பரந்துள்ள ஏழு உலகங்களையும் படைத்த இறைவனாகிய சிவபிரானை ஒருசாரார் இரந்துணி (இரந்து உண்பவன், பிச்சைக்காரன்) என்று கூறி ஏளனஞ் செய்கின்றனர். ஆனால் எதற்காக இறைவன் இரக்கிறான்? தனக்காகவா? இல்லை, இல்லை. தான் இரத்தலை மேற்கொள்ளுவதன் மூலம் அவனுக்கு நாம் ஈயப்பெறும் வாய்ப்பினை அவன் நமக்கு ஏற்படுத்திக்கொடுத்து, அதன் வாயிலாக நாம் அவனுடைய எட்டாத திருவடிகளை எட்டிப்பிடித்துக் கொள்ளும்படி இறைவன் இன்னருள் பாலிக்கிறான்." எனக் கருதப்படும்.

*"பரந்துலகேழும் படைத்தபிரானை*
*இரந்துணி என்பார்கள், எற்றுக்கு இரக்கும்?*
*நிரந்தரமாக நினையும் அடியார்*
*இரந்துண்டு தன்கழல் எட்டச்செய்தானே"*

எனும் செய்யுள் குறிப்பிடற்பாலது.

"தமக்கெல்லாம் எல்லாவகையான நலங்களையும் ஒருசேர அளித்தருளும் பெருவள்ளலாக விளங்கும் சிவபிரான் தானே நம்மிடம் இருந்து ஏதோ ஒன்றைப் பெறவிரும்பும் இரவலன்போல இனியதொரு நாடகம் நடித்து அவ்வழியாகவேனும் நம்மையெல்லாம் ஆட்கொண்டருளவேண்டும் எனவிரும்பி எளிவந்து எழுந்தருளுகிறான் இப்பேரருள் நிலையை விளக்குவதே பிச்சைத்தேவர் திருவுருவம் ஆகும்."

சிவபெருமான் எல்லாம் வல்லவனாக எல்லாச் செல்வங்களையும் கொண்டிலங்கும் பெருவள்ளலாக விளங்குபவராயினும், ஒருவகையில் பெரிய பிச்சைக்காரனாக இருத்தலையும் விரும்புகிறான். அவன் நம்மிடம் அன்பாகிய பிச்சை பெறுதலையே விரும்புகிறான். நம்முடைய இதயக் கதவுகள் எப்போது திறக்குமென எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். நம்முடைய இதயத்தைத் தூய்மைப்படுத்தி, அதன் கண் அருளொளிபரப்பி நலம் செய்யப் பெரிதும் ஆவலாக உள்ளான். நம்முடைய துன்பம், பாவமாகிய சுமைகளைத்தான் பெற்றுக் கொண்டு, கவலையற்று நாம் இருக்கும் வண்ணம் நம்மைத் தேடிவந்து இரந்து எளிவந்து நிற்கிறான். நாம் புறக்கணித்தாலும், அதனைப் பொருட்படுத்தாது நம்மைப் புறக்கணிக்காமலும், கைவிடாமலும் காப்பாற்றி அருள் பாலிக்கிறான். நம்முடைய ஆன்ம ஈடேற்றத்திற்காக நம்மை நாடிவரும் அப்பெருமானை வழிபட்டு உய்தலே சிறந்த வழியாகும்.

பிச்சாடனரின் திருக்கோலத்திலே ஏற்கனவே குறிப்பிட்ட மாணிக்கவாசகர், திருமூலர் மட்டுமன்றி திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலியோர் கொண்டிருந்த மிக்க ஈடுபாட்டினையும் குறிப்பிடலாம்.

*"உலந்தார் என்பு அணிந்தே ஊர் இடு பிச்சயைராகி"* எனவும்,
*பற்றி ஒரு தலை கைதனில் ஏந்திப் பலிதேரும்*
*வெற்றி அதுவாகித் திரிதேவர் பெருமானார்"* எனவும்,
*திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.*
*"பூதம், கொடுகொட்டிக் கொட்டிக்குனித்துப்பாட*
*உள்ளங்கவர்த்திட்டுப் போவார்"* எனத்,

திருநாவுக்கரசர் போற்றியுள்ளார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பிச்சாடனர் திருக்கோலத்திலே நன்கு லயித்தவர். பிச்சாடனர் திருவடிவத்திலே மயங்கிக் காதல் கொண்ட பெண்கள் பற்றி

*"மின்னும் நுண்ணிடை மங்கைமார் பலர்வேண்டிக்*
*காதல் மொழிந்த"* சொல்லாகத் தமது பதிகம்
அமைத்துள்ளார்.
*"குரவம் ஏறிய குழலினார்வளைகொள்வதே தொழிலாநீர்*
*இரவும் இம்மனை அறிதிரே இங்கே நடந்து போகவும் வல்லீரே"*

என அவர் போற்றியுள்ளார். சிவபிரானின் வேறெந்த திருவுருவம் பற்றியும் சுந்தரர் பதிகம் பாடியதாகத் தெரியவில்லை.

*"பாரிடஞ் சூழ்வரத்தான் பலிகொண்டு பாதமலர் சேர் அடியார்க்குப் பெருவாழ்வு அளிப்பான்"* என வரதுங்கபாண்டியன் தனது திருக்கருவைக் கலித்துறை அந்தாதியிலே குறிப்பிட்டுள்ளான்.

பௌராணிக ரீதியிலே தம்மை அவமதித்த பிரமாவின் ஐந்தாவது தலையினைத் தமது பைரவத் திருவுருவத்தைக் கொண்டு கொய்தார் எனவும் பின்னர் அதனைப் பிச்சைப் பாத்திரமாகப் பயன்படுத்தினார் எனவும் கூறப்படுகின்றது. மேலும் தாருகாவனத்து முனிவர்களின் அகந்தையை நீக்குமுகமாக சிவபிரான் பிச்சாடன வடிவமும், திருமால் மோஹினி வடிவமும் தாங்கினர். பிச்சாடனரைக்கண்டு முனிவர்களின் மனைவியரும், மோஹினியின் அழகிலே முனிவர்களும் மதிமயங்கினர் அம்முனிவர்கள் சிவபிரானுக்கு எதிராக ஒரு பெரிய வேள்வி செய்து அதிலிருந்து உடுக்கை, மான், யானை, புலி, சிங்கம், முயலகன் முதலியனவற்றை உண்டாக்கி அவருக்கு எதிராகப் பயன்படுத்தினர். ஆனால் சிவபிரான் அனைத்தையும் வென்றார். பின்னர் அவர்கள் அப்பெருமானின் பெருமையை உணர்ந்து வணங்கி அருள் பெற்றதாகக் கூறப்படுகின்றது. இது பற்றிச் சுந்தரர் தமது தேவாரத்திலே "தங்கிய மாதவத்தின் சுழல் வேள்வியினின்று எழுந்த சிங்கமும் நீள்புலியுஞ் செழுமாங்கரியோடு அலறப் பொங்கிய போர் புரிந்து ஈருரி போர்த்தது" எனக் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே குறிப்பிட்டவாறு தாருகாவனத்து முனிவர்களின் அகந்தையை அழிக்க மேற்கொண்ட திருவடிவமே பிச்சாடத் திருவடிவம் எனக் கூறப்படுகின்றது. பிச்சாடனரின் சிறப்புப்பற்றி உலகப் புகழ்பெற்ற தத்துவஞானியும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசியரும், இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியுமான ச. ராதாகிருஷ்ணன் "இந்து பௌராணிகவியலில் இறைவன் (சிவன்) என்றுமுள்ள ஒரு பிச்சைக்காரனாக நோக்கப்படுகிறார். அவர் தம்முடைய அருளாகிய பேரொளியால் இருள் நிறைந்த எம்முள்ளே புகுந்து முழுமையாக ஒளிபாய்ச்சுவதற்காக வாசலிலே காத்துக்கொண்டிருக்கிறார். இங்கு மனிதன் மட்டும் இறைவனை நாடிச் செல்வதில்லை. இறைவனே மனிதனைத் தேடிவந்து கொண்டிருக்கிறான். அபாயம் நிறைந்த காட்டுக்குள்ளே புகுந்து எம்மை அதிலிருந்து மீட்டு வழிகாட்டுகிறான். இறைவன் உலகத்தின் (மக்களின்/ ஆன்மாக்களின்) மீது மிகுந்த அன்பு கொண்டிருக்கிறபடியால், அதற்காகத் தம்மை ஈடுபடுத்தியுள்ளார். ஒரு நண்பனாக, காதலனாக, தோழனாகத் தம்மை நாம் நோக்குமாறு எதிர்பார்க்கிறார். அவர் என்றும் உலகத்தைக் காப்பாற்றிக் கொண்டேயிருக்கிறார்" எனக் கூறியுள்ளமை குறிப்பிடற்குரியது. (வி.சி.)

## பிதிர்கடன்

பிதிர்களுக்காகச் (இறந்த மூதாதையர்கள்) செய்யப்படும் கிரியைகள் பிதிர்கடன் என அழைக்கப்படும். பொதுவாக அபரக்கிரியைகள் உத்தரக்கிரியைகள், சிரார்த்தக் கிரியைகள் என இருவகைப்படும். ஒருவர் இறந்தவுடன் அந்தச் சந்தர்ப்பத்திலே செய்வது உத்தரக் கிரியைகள். வருடம் ஒரு முறை இறந்த திதியிற் செய்யப்படுவது சிரார்த்தக் கிரியைகள் அல்லது பிதிர்க்கடன் என்று அழைக்கப்படும்.

பிதிர்கடன் இறந்தவர்களில் அன்புடையவர்களால் சிரத்தையுடன் செய்யப்படுவது. அதனால்த் தான் அதனைச் சிரார்த்தக் கிரியைகள் என அழைப்பர். ஒருவர் இறந்த திதியைக் கொண்டே சிரார்த்தம் நிச்சயிக்கப்படுகிறது. ஒரு மாதத்தில் இரண்டு முறை சிரார்த்தத் திதி வந்தால் பின்னைய திதியினைக் கைக்கொள்ள வேண்டும். சிரார்த்தம் செய்யும் தினத்தில் ஆசௌசம் இருக்குமாயின் குறிப்பிட்ட ஆசௌசம் கழிந்த பின்பு தான் சிரார்த்தம் செய்ய வேண்டும். ஆசௌசம் கழிந்த தினத்தில் செய்ய முடியாவிடின் அம்மாத அமாவாசையில் அல்லது ஆடி அமாவாசையில் தந்தைக்கும் சித்திரா பூரணையில் தாய்க்கும் செய்ய விதி உண்டு.

சிரார்த்தக் கிரியைகள் பின்வரும் ஒழுங்கு முறையில் மேற்கொள்ளப்படவேண்டும். சங்கற்பம், விநாயகர் பூசை, வருண கும்ப பூசை, பஞ்ச கவ்விய பூசை, புண்ணியாகவாசனம், அனுக்ஞை, உபவீததாரணம், சூரிய பூசை, மாசிகம், அந்தணருக்கு உணவுப் பொருட்கள் வழங்கல், பிண்டம் போடுதல், பிண்ட ஆராதனை, எள்ளும் தண்ணீரும் இறைத்தல் (தர்ப்பணம்) ஆராதனை, ஆசீர் என்று அவை மேற் கொள்ளப்பட வேண்டும்.

**சிரார்த்த வகைகள்:** நாள் தோறும் தம் முன்னோர்கள் குறித்துச் செய்யப்படுவது நித்திய சிரார்த்தம் எனப்படும்.

தந்தை, தாயார் இறந்த மாதம், திதியில் வருடந் தோறும் முறைப்படி மேற்கொள்வது நித்திய சிரார்த்தம்.

அமாவாசை, சூரிய கிரகணம், சந்திரகிரகணம், உத்தராயணம், சித்திரை மாதப் பிறப்பு, கார்த்திகை வளர்பிறை நவமி, புரட்டாதி தேய்பிறைத் திரயோதசி, மாசி அமாவாசை, ஆகிய தினங்களிற் புண்ணிய தீர்த்தங்களில் நீராடிப் பிதிர் தர்ப்பணம் செய்வது காமிய சிரார்த்தம்.

வீட்டில் சுபகருமங்கள் நடைபெறும் போது (விரதம், விவாகம், கிருகப் பிரவேசம்) பிதிர்களைக் குறித்து அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெறும் பொருட்டுச் செய்வது விருத்தி சிரார்த்தம்.

இந்தியாவில் காயா என்னும் இடத்தில் பிண்டமிட்டுத் தர்ப்பணம் செய்வது மிக விசேடமாகக் கருதப்படுகிறது. இதைவிட காசி, காஞ்சி, மாயை, மதுரை, அவந்தி, அயோத்தி, துவாரகை ஆகிய முத்தித் தலங்களிலும் சிரார்த்தம் செய்தல் சிறந்த புண்ணியமாகும்.

சிரார்த்த தினத்தில் கோயிலில் அபிடேக ஆராதனைகளில் ஈடுபடுவது, திருவிளக்கேற்றுவது, சிரார்த்தம் நடக்கும்போது புராணம், இதிகாசம், தேவாரம் போன்றவற்றைப் படிப்பது நன்மை விளைவிக்கும்.

சிரார்த்தத்திற்குப் பொருள், இல்லாதவன் காய், கனி, கிழங்கு, எள் இவைகளை அந்தணர்களுக்குக் கொடுத்துத் தர்ப்பணம் செய்யலாம். தர்ப்பணம் செய்வதற்கும் வல்லமை இல்லாது இருப்பின் பசுக் கூட்டங்களுக்கு புல்லைக் கொடுத்தல் தக்க பலனை அளிக்கும்.

*"இடி கொண்மாவினாற் பிண்டமேயாயினு மிடுக*
*இல்லையென்றிடிலெள்ளுடன் புனல்கையாலிறைக்க*
*வல்லவம் பெறாதாயினுமாவின மருந்தப்*
*புல்லதாயினும் போடுக"*

என்று திருச் செந்தூர்ப் புராணம் கூறுகிறது.

**பிண்டம்:** பிண்டம் என்றால் தேகம். அதாவது ஒருவர் இறந்த பின் அவரது ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு அரிசி, உழுந்து, எள்ளு, தயிர், பால், தேன், வாழைப்பழம், நெய் ஆகிய பொருட்களை ஒன்றாகச் சேர்த்து உருண்டையாக்கி உருட்டி எடுப்பது பிண்டமாகும். பிதிரர்களுக்குச் செய்யும் இக் கிரியையைப் பிதிர்த் தேவர்கள் பெற்று, இறந்தவர்க்கும், அவரது முன்னோர்க்கும் வழங்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகோதிட்டத்தின் போது ஒரு பிண்டமும், மாசிமகத்தின் போது பதினைந்து பிண்டங்களும், சபிண்டீகரத்தின் போது ஏழு பிண்டங்களும் ஆப்திக வருட சிரார்த்தத்தின் போது நான்கு பிண்டங்களும், மாசிகம் செய்யாது விட்டு ஆப்திக சிரார்த்தத்தில் மாசிகமும் சேர்த்துச் செய்தால் பத்தொன்பது பிண்டங்களும், சாதாரண திவசத்தில் நான்கு பிண்டங்களும் இடப்படவேண்டும்.

**மஹாளய சிரார்த்தம் (மாளயம்):** மஹாளயம் என்பது மகான்களாகிய பிதிரர்கள் பூவுலகிலும் தங்கும் காலமாகும். புரட்டாதி மாத அபரபட்சமே (தேய்பிறைக் காலம்) மஹாளய பட்ச தினமாகும். சூரியன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்கும் தெட்சணாயன காலத்தின் நடுப்பகுதி புரட்டாதி மாதமாகும். இக் காலம் சூரியன் பூமிக்கு நேரே நிற்கும் காலம். சந்திரனும் தென்பாகத்திற் பொருந்தி நிற்கும் இக் காலம் பிதிர் கருமங்களுக்கு ஏற்ற காலப்பகுதியாகும்.

ஒருவர் இறந்த தினத்தில் சிரார்த்தம் செய்ய வேண்டும். இறந்த தினம் தெரியாவிட்டால் அந்த மாதத்தில் அமாவாசையன்று செய்யலாம். தெரிந்தோ, தெரியாமலோ சிரார்த்தத்தைச் செய்யாது விட்டவர்கள் மஹாளய பட்சத்தில் பிதிர்க் கருமம் செய்ய விதி உண்டு. (நி. நி.)

## பிரகலாதன்

திருமாலின் எண்ணற்ற பக்தர்களுள் முதன்மையானவர் பிரகலாதன். இவன் திருமாலே 'பரம்பொருள்' என்ற வைணவ சமயக் கொள்கையை முதன் முதலில் நிலைநாட்டியவன். திருமால் தன்னைத் தஞ்சமடைந்தவர்களை ஒரு நாளும் கைவிடான் என்ற சரணாகதிக் கொள்கையையும் நிலைநிறுத்திக் காட்டினான்.

பிரகலாதன் இரணியகசிபுவின் மகன், கடும் தவ நோன்பிலிருந்து பிரமனிடமிருந்து அரிய வரங்களைப் பெற்ற அரக்கர் தலைவன் இரணியன் மூவுலகங்களையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்தான். அவ்வரக்கவரசனின் மூன்றாம் பிள்ளையே பிரகலாதன். அசுரர் குலத்திற் பிறந்தாலும் இறைவுணர்வு மிக்கவன். திருமாலே முழுமுதற் கடவுள் என்றும் உறுதிப் பாட்டுடன் திருமால் துதியில் ஈடுபட்டிருந்தான்.

இரணியன் தன் உடன்பிறந்தானாகிய இரணியாட்சனை வராக உருவெடுத்து வஞ்சனையாகக் கொன்றார் எனக் கருதி, திருமால் மீது தீராப் பகையும் பழியுணர்வும் கொண்டான். மூவுலகங்களிலும் திருமாலைத் தொழுவதோ, அவரது துதி பாடுவதோ கூடாது என ஆணையிட்டான். தானே கடவுள் என பறைசாற்றி "இரணியாய நம" என்று மனிதர், தேவர் அனைவரும் ஒலி எழுப்ப வேண்டுமெனவும் கூறி அதைக் கடைப்பிடிப்பதைக் கட்டாயமாக்கினான். வேள்விகளிலும் திருமாலுக்குச் சேர வேண்டிய பங்கினை தானே பெற்று, தனக்கே முதல் மரியாதைகள் வழங்கப்படுமாறு பணித்தான். இதனால் எல்லாத் தேவர்களும் அஞ்சி, நடுங்கி, ஓடிஒளித்து இறுதியாகத் திருபாற் கடலிற் பள்ளி கொண்ட பரமனைத் தஞ்சமடைந்தனர்.

திருமால் பக்தனாகிய பிரகலாதன் தன்தந்தை என்றும் பாராமல் இரணியனின் ஆணையை மீறினான் அதனால் வெஞ்சினமுற்ற அரக்க அரசன் பலவழிகளில் தன் மகனைத் திருத்த முயன்றான் கொடிய வன்முறைகளை கையாண்டும், "திருமாலின்றி ஓரணுவும் அசையாது" என்கின்ற கொள்கையில் பிரகலாதன் மிக உறுதியோடு இருந்தான்.

அல்லாரை அடக்கி, அடியாரைக் காக்கவும், குலைந்த அறத்தை மீண்டும் இவ்வுலகினில் நிலைநிறுத்தவும், திருவுளம் கொண்டார் திருமால்.திருமாலின் மீது தீராத காதல் கொண்டிருந்த பிரகலாதனைத் தந்தை பேச, "எங்கும் இருக்கின்றான் ஹரி" என்று தனயன் கூற தன் அரண்மனையிலிருந்தோர் தூணை இரணியன் வாளால் தட்ட, அண்டமே பிளந்து விட்டது போன்ற பேரலம் அந்ததூணில் எழுந்தது. தூணில் இருந்து நரசிம்மமாகத் திருமால் வெளிவந்தார். இரணிய கசிபுவினைத் தம் தொடை மீது வைத்துத் தன் கூர் நகங்களால் அவன் உடலை கிழித்தெறிந்தார்.

கிழித்தெறிந்த பின்னர் நரசிம்மர் அங்கே சிம்மாசனத்தில் அமர்ந்தாலும் அவர் கோபம் தணியவில்லை. அவரது திருவடிகளை பிரகலாதன் தொட்டு வணங்கிய பின்னரே அவர் சீற்றம் தணிந்தது. நரசிம்மரின் மனம் மகிழ்ந்தது. துதித்து நின்ற பாலகனிடம் உனக்கு வேண்டும் வரம் கேள் என்றார். அவனோ "மனதில் எந்த வித கோரிக்கையும் எழாமல் இருக்கும்படி தாங்கள் திருவருள் புரிய வேண்டும் என்று வேண்டினான். மனம் மகிழ்ந்த மாதவன் பிரகலாதனை அசுரேந்திரத்திற்கு அரசனாக இருக்கும்படி அநுக்கிரகித்தார்.

இப்பிரகலாத சரித்திரத்திலிருந்து வெளிப்படும் அரிய தத்துவம் எண்ணற்ற முனிவர்கள் கடுமையான நியதிகளை மேற்கொண்டும் நேரிலே காணமுடியாத திருமால் எங்குமுளான் கண்ணன் என்று சொன்ன அளவிலே, கற்பனைக்கும் எட்டாத அச்சத்தக்க ஆளரியாகத் தோன்றி, அச்சொல் உண்மையானதே என்று மெய்ப்பித்துப் பாலகனாகிய பிரகலாதனைக் காப்பாற்றியருளியதாகும். அந்த இளம் பக்தனுடைய சொல்லுக்குட்பட்டு இறைவன் 'எங்குமுளான் கண்ணன்' என்று சொன்ன அளவிலேயே இவ்வுலக முழுமையும் நிறைத்தான் எனச் சான்றோர் கூறுவர். (தே. ஹ.)

## பிராணாயாமம்

பிராணவாயுவைக் கட்டுப்படுத்திச் சுவாசத்தை நெறிப்படுத்துவதன் மூலம் மனத்தை ஒருவழிப்படுத்தி இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவில் நிறுத்துதல் பிரணாயாமம் எனப்படும். (பிராண - ஆயாமம்) வலக்கைச் சுட்டுவிரல் நடுவிரல்களை உள்ளே மடக்கி பெருவிரலினால் வலது மூக்கை மூடியபடி இடது மூக்கால் மூச்சை உள்ளிழுத்து, மோதிர விரலினால் இடது மூக்கையும் மூடி மூச்சை உள்ளடக்கி பின் இடது மூக்கை அடைத்த படி வலது மூக்கால் சுவாசத்தை வெளிப்படுத்துவதே பிராணாயாமம் செய்யும் முறையாகும். (தே. ஹ.)

## பிரத்யங்கிரா தேவி

இரணியகசிபு என்னும் அரக்கன் பிரம்மாவை நோக்கித் தவம் செய்தான். இத்தவத்தின் பயனாக தேவர்களாலும், மனிதர்களாலும் விண்ணிலும், மண்ணிலும் இரவிலும், பகலிலும் வீட்டிலும், வெளியிலும் தனக்கு மரணம் நேரக்கூடாது என்ற விநோதமான வரத்தைப் பெற்றான். இவ்வரத்தின் பயனாக இவன் பல அட்டகாசங்கள் செய்து அனைத்துலகையும் துன்புறுத்தினான்.

இவனுக்கு மகனாகப் பிரகலாதன் பிறந்தான். இவன் ஸ்ரீமந் நாராயணனையே தன் தெய்வமாக ஆராதித்தான். இதனால் கோபம் அடைந்த இரணியகசிபு தன்னையே கடவுளாக வழிபடவேண்டும் எனக் கட்டளையிட்டான். பிரகலாதன் ஏற்கவில்லை. பிரகலாதனைக் கொல்ல பல வழிகளிற் முயன்றான் முடியவில்லை. சலிப்படைந்த இரணியன் உன் நாராயணன் இந்த தூணில் இருக்கிறானா? என்று கேட்டு கற்றூணை கதாயுதத்தால் அடித்தான். கற்றூணைப் பிளந்து கொண்டு வந்த நரசிம்மமூர்த்தி இரணியனைச் சம்ஹாரம் செய்தார். ஆயினும் அவர் கோபம் அடங்கவில்லை.

நரசிம்ம மூர்த்தியின் கோபத்தை அடக்குவதற்காக சிவபெருமான் சரபேஸ்வரமூர்த்தியாக அவதாரம் எடுத்தார். நரசிம்மரை அடக்க வந்த சரபமூர்த்திக்கு ஓர் இறக்கையாக உதவ வந்தவள் பிரத்யங்கிரா தேவி என்கிற பத்ரகாளி. பயங்கர தோற்றம் கொண்டதால் ''உக்ரா'' என்றும் அழைக்கப்படுகிறாள். ஆங்கிரஸ், பிரத்யங்கிரஸ் என்ற இரண்டு மகரிஷிகள் இவளுடைய மந்திரத்தை கண்டு பிடித்தவர்கள். ஆகையால் இவள் பெயரில் ஆங்கிரஸ், பிரத்தியங்கிரஸ் பெயர்களும் அடங்கியிருப்பதால் பிரத்யங்கிரா என்று அழைக்கப்படுகிறாள். இவளைச் சரபசக்தி என்றும் கூறுவர்.

இவளுடைய மந்திரங்கள் எதிரிகளை அழிக்கவே பயன்படுவதாக அமைந்துள்ளன. உக்ர நரசிம்மரின் சக்தி அடக்கப்பட்டதால் பிரத்யங்கிரா தேவியை அனைவரும் போற்றினர். சிவன் தன் அக்னி மயமான நெற்றிக் கண்ணில் இருந்து ஆயிரம் முகங்களை கொண்ட உக்ரபிரத்யங்கிரா தேவியை சிருஷ்டி செய்து நரசிங்கத்தை விளங்கச் செய்தார். பிரத்யங்கிரா தேவி சிம்மமுகத்தினள். சரபசக்தி, ஆயிரம் முகங்கள். இரண்டாயிரம் கைகள், கரங்களில் சூலம், கபாலம், பாசம், டமருகம் ஆகியன வைத்திருப்பாள். வராகத்தின் கொம்பு, ஆமை இவை கோர்க்கப்பட்ட நரம்புகளை மாலையாக போட்டுக்கொண்டு பிரகாசிப்பவள். கரிய நிறம் நீல ஆடை. இவளை உபாசித்தால் சத்ரு பயம் கிடையாது. நம்மீது பிறரால் ஏவிவிடப்பட்ட தீய சக்திகள் பிரத்யங்கிரா தேவியின் திருவருளால் ஏவியவர்களையே திரும்பிச் சென்று அழிக்கும் என உமாபதி சிவம் என்ற சிவபக்தர் இயற்றிய ''குஞ்சி தாங்க்ரீஸ்தவம், ருக்மந்திரம், பாத்வம்கிர கல்பம்'' ஆகியவை புகழ்கின்றன.

சரபேஸ்வரரின் ஒரு சக்தியாக (இயற்கை வடிவத்தில்) பிரத்யங்கிரா தேவி விளங்குவதால் மாடம்பாக்கம் தேனுபுரீசுவரர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் சரபேஸ்வரரின் எதிரிலே தோஷ சாப நிவர்த்திக்காக ''பிரத்யங்கிரா தேவி யாகம்'' செய்கின்றார்கள்.

(தே.ஹ.)

## பிரதக்ஷிணம்

கோபம் முதலான தீயவை அகன்று மலநிவாரணம் பெற்று மோட்சம் எனும் திருவருட்பேறு அடைவதற்காகக் பிரதக்ஷிணம் செய்யப்படுகிறது. இறைவனை வலம் வருதல் எனவும் பொருள்படுகிறது. பிரதக்ஷிணம் செய்யும்போது மனம், வாக்கு, காரியங்களை ஒருமுகப்படுத்தி சிவத்தியானம் செய்துகொண்டும், சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டும் பொதுவாக வலம் வருதல் வேண்டும். கர்ப்பக்கிருகம் திறந்திருக்கும் போதே பிரதக்ஷிணம் செய்யப்படல் வேண்டும்.

பல்வேறு கோயில்களிலும் பிரதக்ஷிணம் செய்யும் எண்ணிக்கை பலவாக விளங்குகின்றன. விநாயகருக்கு ஒருமுறையும், சூரியனுக்கு இரண்டு முறையும், சிவனுக்கு மூன்று முறையும், அம்பிகைக்கும் திருமாலுக்கும் நான்கு முறையும் வலம் வருதல் வேண்டும். எனினும் தாம் விரும்பிய பலன் கிடைத்த பின்னர் அல்லது கிடைக்கவேண்டுமெனத் தம் இஷ்ட தெய்வங்களை 3,7,5,9,11 என ஒன்றை எண்வர வலம் வருவோரும் உண்டு. ஆலயத்தை வலம் வருவதனால் ஏற்படும் பயன்களாவன.

மூன்றுமுறை - விரும்பிய காரியம் நடைபெறும்
ஐந்துமுறை - காரிய வெற்றி
ஒருமுறை - நல்லெண்ணம், நற்குணம், அமைதி
ஒன்பதுமுறை - ஆயுள் விருத்தி
பன்னிரண்டுமுறை - உடல் வலிமை

அத்துடன் ஒவ்வொரு நேரப்பூசைக் காலத்தில் வலம் வருவதனாலும் பலன்கள் உண்டு. அப்பலன்களாவன :

காலையில் வலம் வருதல் - நோய்நீக்கம்,
(முற்பிறவியில் செய்த பாவம் நீங்கல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல் வலம் வருதல் - (வேண்டிய வரம், தனம் பெருகும். (இருபிறப்பிலும் செய்த பாவம் நீங்கும்)

மாலையில் வலம் வருதல்- பாவம் நீங்கல் (இப்பிறவிற் செய்த பாவம் நீங்கும்)

அர்த்த யாமம் - மோட்சம், வீடுபேறு என்பன கிடைக்கும்

ஆலய மூர்த்திகளை வலம் வருவதனால் எமது புத்தியும், சக்தியும் வளர்கிறது. பிரதக்ஷிணம் இடமிருந்து வலமாக ஆலயத்தைச் சுற்றி போய் வழிபடுதலாகும். செய்யப்படுகின்றன. அங்கங்கள் பூமியிற் படும்படி செய்யப்படுவது அங்கப்பிரதக்ஷிணம் இது ஆண்களால் செய்யப்படுகிறது. பெண்கள் இதை செய்வது தவறு. பெண்கள் அடிமேல் அடிவைத்து அங்கப்பிரதக்ஷிணம் செய்யலாம். (ஹே. கு.)

## பிரதிட்டா கலை

சைவ சித்தாந்தம் முப்பத்தாறு தத்துவங்கள் பற்றிக் கூறுகின்றது. அவை சிவ தத்துவம் (சுத்ததத்துவம்) - 05, வித்யா தத்துவம் - 07, ஆன்ம தத்துவம் - 24 என மூவகைப்படும். இவற்றில் வித்யா தத்துவத்தில் அடங்குவனவாகக் காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்பன அமைந்துள்ளன.

இவ்வித்தியா தத்துவங்கள் ஏழும் அசுத்த மாயையில் இருந்து தோன்றுவன. அதனால் அவற்றை அசுத்த மாயை தத்துவங்கள் என்றும் கூறுவர். **'கலை'** என்பது **'கலித்தல்'** என்ற சொல்லில் இருந்து தோன்றியது. கலித்தல் என்னும் சொல் நீக்குதலும், செலுத்துதலும் எனப் பொருள்படும். எனவே, கலை தத்துவமானது மூலமலமான ஆணவமலத்தில் மறைக்கப் பட்டிருக்கும் ஆன்மாவை அம்மல மறைப்பிலிருந்து சிறிது நீக்கி ஆன்மாவின் கிரியா சக்தியை முதலில் எழுப்பித் தொழிற்பட வைப்பது ஆகும்.

**கலை** நிவிர்த்தி கலை, பிரதிட்டா கலை, வித்யா கலை, சாந்தி கலை, சாந்தியதீத கலை என ஐந்து வகைப்படும். நிவிர்த்தி கலையானது, வாய் மூலமாக ஓர் சொல்லை பிறர் கேட்கும் வண்ணம் சொல்வதாகும். பிரதிட்டா கலை என்பது கண்டத்தில் இருந்து எழும் சொல்லைத் தான் கேட்கச் செய்வதாகும். வித்யா கலை இருதயத்தில் சொல்ல வேண்டிய சொல்லைப் பிரித்தறி விப்பது. சாந்தி கலையானது உந்தியில் எழுத்தை அடக்கித் தோற்றுவிப்பது. சாந்தியதீத கலையானது நாபியிலிருந்து எழுத்தின் தோற்றத்திற்கான ஒலியைத் தோற்று விப்பதாகும். இவ்வாறாக ஐந்து கலைகளும் ஐந்து வகையான செயல்களைக் (கிரியை) செய்கின்றன. (ந. ச.)

## பிரதோஷ விரதம்

சிவபெருமானின் அருளை நினைவு கூர்ந்து அனுட்டிக்கப் படும் விரதம் பிரதோஷ விரதமாகும். பிரதோஷம் என்பது சாயங்காலம் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. பிரதோஷ விரத காலம் என்னும் போது இரவும், பகலும் சங்கமிக்கும் நேரம். அதாவது மாலை ஐந்தே முக்கால் மணி முதல் முன்னிரவு ஆறரை மணி வரை உள்ள காலந்தான் அது என்பது அறிஞர் கருத்து.

அமாவாசையின் பின்வரும் பதின்மூன்றாம் நாளும் பௌர்ணமியின் பின்வரும் பதின்மூன்றாம் நாளும் திரயோதசித் திதி நாளே இந்த விரதத்திற்குரிய தினமாகும். எனவே ஒரு மாதத்தில் இருமுறை இவ்விரத நாள் அமையும். ஆயினும் ஐந்து பிரதோஷ வகை பற்றி 1997 ஆண்டுக்குரிய கார்த்திகை "மங்கை ஆலய மலரில் பிரதோஷ விரதம்" என்னும் தலைப்பில் சக்திதாஸ் என்பவர் தாம் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். **நித்திய பிரதோஷம்** நாள் தோறும் சூரியன் மறைவதற்கு முன் ஐந்தே முக்கால் மணி முதல் ஆறரை மணிவரை உள்ள காலம். **பட்சப் பிரதோஷம்:** சுக்கில பட்சச் சதுர்த்தி நாள் மாலை வேளை (பிரதோஷ நேரம் பொதுவானது). **மாதப் பிரதோஷம்** அமாவாசையின் பின்வரும் பதின்மூன்றாம் நாளும் பௌர்ணமியின் பின் வரும் பதின்மூன்றாம் நாளும் வரும் திரயோதசித் திதியில் வருவது **மகாப் பிரதோஷம்** மாதப் பிரதோஷ நாளொன்று சனிக்கிழமையில் வருவது. **பிரளயப் பிரதோஷம்** பிரளய காலத்தில் எல்லாம் சிவனுடன் ஒடுங்கும் வேளையில் வருவது.

இவற்றிற்கும் மேலாக சோமவார தினங்களிற் பொருந்தி வரும் பிரதோஷம் மிகவும் மேலானது என்றும் அந்நாளில் உரிய முறைப்படி விரதத்தை அனுட்டிப்போர் இம்மை, மறுமை பேறுகளைப் பெறுவார்கள் எனப் பிரமோத்திர காண்டம் என்னும் நூலின் சோமவார விரத மான்மியங் கூறும்.

தேவர்களும் அசுரர்களும் அமுதத்தைப் பெறுவதற்குத் திருப்பாற் கடலைக் கடைந்த போது மந்தர மலையை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டார்கள். இரு பிரிவினரும் வேகமாகக் கடைந்ததால் வாசுகி வேதனை அடைந்து ஆலகாலம் என்னும் விஷத்தைக் கக்கியது. அந்த விடத்தின் வேதனையைத் தாங்க முடியாமல் தேவர்கள் சிவனிடம் முறையிட்ட போது அவர் தன் அணுக்கத் தொண்டரான சுந்தரரை அனுப்பி விடத்தை எடுப்பித்து உண்டு தமது கண்டத்தில் நிறுத்தி நீலகண்டரானார். இதனை நினைவுப் படுத்தும் நாள் ஏகாதசி விரத நாளாகும். விஷத்தின் வேதனை ஒழிந்த பின் தொடர்ந்தும் திருப்பாற் கடலைக் கடைந்து அமிர்தத்தைப் பெற்று அருந்தி இறவா நிலை எய்தினார்கள் தேவர்கள். அமிர்தம் தோன்றிய நாள் துவாதசி என்னும் பன்னிரண்டாம் நாளாகும். அமிர்தம் உண்ட களிப்பில் ஆடிப் பாடி அன்றைய நாளைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கினர். மறு நாள் தங்களுக்கு வாழ்வளித்த சிவபெருமானுக்கு முன்னமே வணக்கம் செய்து வழிபட மறந்ததை எண்ணி வருந்தி மகாதேவரிடம் சென்று தமது குற்றத்தைப் பொறுத்தருளும்படி வேண்டி நின்றனர். கருணைக் கடவுளான சிவபெருமான் அவர்கள் வேண்டுகோளுக்கிரங்கித் தேவர்கள் கண்டு களிக்கும் வண்ணம் அம்பிகையுடன் எழுந்தருளித் திருநடனம் செய்தார். சிவபெருமான் திருநடனஞ் செய்தருளியவேளை திரயோதசி என்னும் பதின்மூன்றாம்நாள் மாலைப் பொழுது. தேவர்கள் இடபதேவரின் கொம்பு களுக்கிடையில் இறைவன் திருநடனத்தைக் கண்டு அருள் பெற்றார்கள். ஆகவே பாவ மன்னிப்புக்கும், பெரும்பேறுக்கும் உரிய காலம் பிரதோஷ காலமாகும்.

சிவபெருமான் தேவர்களின் குற்றத்தை மன்னித்தருளி அவர்களுக்குத் தம் திருநடனக் காட்சியை கொடுத்தருளியமை ஒரு சனிக்கிழமையோடு கூடிய பிரதோஷம். ஆகையால் சனிப்பிரதோஷம் மிக மேலானது என்று கருதப்படுகிறது. பிரதோஷ விரதத்தைத் தொடங்குவோர் ஒரு சனிப்பிரதோஷத்தில் தொடங்கி ஒரு சனிப்பிரதோஷத்தில் நிறுத்திக் கொள்வர். அத்தகைய சனிப்பிரதோஷம் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் வருவது மிக நன்று.

பிரதோஷ விரதமிருப்போர் சிவாலயம் சென்று பிரதோஷ காலத்தில் வழிபாடியற்றுவது நல்லது. நந்தி தேவருக்கு அறுகம் புல்லை அணிவித்து, மாவினால் அகல் விளக்குச் செய்து, தூய நெய்விட்டுத் தீபமேற்றி நந்தி தேவருடைய இரு கொம்புகளுக் கிடையே இறைவனைக் கண்டு வழிபட வேண்டும். சிவபெருமான் உமாதேவியாரோடு இடபாரூடராய்ப் பிரதோஷ காலத்தில் உலா வருதலைத் தரிசிப்பது மிகப் பெரிய புண்ணியமாகக் கருதப் படுகிறது. முதல் முறை வேதபராயணத்துடனும், இரண்டாம் முறை திருமுறைப் பராயணத்துடனும், மூன்றாம் முறை மங்கள இசைகளுடனும் சுவாமி வலம் வரும் முறைமை உண்டு. மூன்றாம் முறையாக வீதியுலா வரும் போது ஈசான மூலையில் இறைவனையும், இறைவியையும் எழுந்தருளச் செய்து கற்பூர ஆராதனை இடம் பெறும். இதனைத் தரிசிப்பது பெரும் பாக்கியம். நாளும் ஆலயத்தை வலம் வருதல் போன்று பிரதோஷ விரத நாட்களிலும் வலம் வருதல் பொருத்தமற்றது. அன்றைய தினம் சோமசூக்தப் பிரதக்ஷிணம் செய்தல் வேண்டும் என்பர். அதாவது முதலில் சிவலிங்கப் பெருமானையும் பின் இடபதேவரையும் வணங்கிக் கொண்டு பிரதக்ஷிசணமாய் சண்டேஸ்வரர் சந்நிதி வரை சென்று அவரை வணங்கிய பின் வந்த வழியே மீண்டும் சிவலிங்கப் பெருமானையும், இடபதேவரையும் வணங்குதல் முறை. பிரதோஷ காலத்தில் நியமமாக மெய்யன்போடு வழிபடின் வறுமை, நோய், கடன், பாவம் இவைகள் நீங்கிப் பெருவாழ்வு கிட்டும். (நி. நி.)

# பிரபஞ்சம்

இந்து சமய இலக்கியங்களிலும், இந்து சமய கோட்பாடுகளிலும் பேசப்படும் தத்துவம் பிரபஞ்சம். இதை உலகம், அண்டம், புவனம் என்றும் கூறுவர். வேத சிந்தனையிலிருந்து பிரபஞ்சத்தின் சிருஷ்டி, அழிவு, பிரளயம், பிரபஞ்ச காரியங்கள், பிரபஞ்சத்தின் வித்து, அதன் மூலகர்த்தா பற்றிய சிந்தனைகளும் வழிபாடுகளும் இந்து சமய தத்துவ கோட்பாடுகளுக்குள் முக்கியத்துவம் பெற்றுவந்துள்ளன.

## பிரபஞ்சம் பற்றிய சிந்தனைகள்

### (அ) வேதங்கள்

நாஸதீய சூக்தப் பாடல்களிற் பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய சிந்தனைகள் ஐய உணர்ச்சிகளாக வினாவிடைத் தொகுப்பில் விளக்கம் காணப்பட்டுள்ளன. ரிக்வேதத்தில் அப்பாடல் மேல்வருமாறு அமைந்துள்ளது.

**உலகின் தொடக்க நிலை எத்தகையது?,**
**அக்காலத்தில் எவையேனும் காணப்பட்டனவா?,**
**அல்லது ஒன்றுமே காணப்பட வில்லையா?, ஆகாயம்,**
**இடைவெளி இவை தானும் காணப்பட்டனவா?**
**எல்லாவற்றையும் மூடிப் பரந்து நின்றது யாது? எது**
**பாதுகாப்பாக அமைந்தது?,.....**

இப்பாடல்கள் பிரபஞ்சத்தின் சிந்தனைகளை இந்து தத்துவ மரபில் தொடக்கி வைத்த மூலங்கள் எனலாம்.

வருண சூக்தப் பாடலிலே "உலகம் ரிதத்தினாலேயே தாங்கப்படுகின்றது எனவும் இது பற்றி இறைவனே மிகச்சிறப்பாக எடுத்துரைப்பவர்" எனவும் ருக்வேதம் (85.1) கூறுகிறது. இப்பிரபஞ்சத்தின் ஒழுங்கினையும் சட்டத்தினையும் வருணபகவானே தர்மமாகத் தாங்குகின்றான். விஷ்ணுவும் 'உலக நியதிகளை (தர்மானி)த் தாங்கி நிற்கின்றார்' என வருகின்ற கூற்றுக்கள் கவனிக்கற்பாலன. "தர்மமே உலக சிருஷ்டிக்கு ஆதாரம்" என்பதை மகாபாரதம் கர்ண பர்வத்தில் கூறப் பட்டிருப்பதும் நோக்கத்தக்கது.

பிரஜாபதி, விஷ்வகர்மன் போன்ற தேவர்களைப் பற்றிக் குறிப்பிடும் பாடல்களிலே பிரபஞ்சப் படைப்புக்கு அவர்கள் காரணமானவர்கள் என்ற குறிப்புக்கள் வருகின்றன. ரிக்வேதப் பாடலொன்றில் விஸ்வகர்மனே எல்லாவற்றையும் படைத்தான். அவன் தேவலோகங்களையும், கடலிடங்களையும் உருவாக்கிய தேவ தச்சனாகவும் கூறப்படுகின்றான்.

ரிக் வேதத்தின் புருஷ சூக்தப் பாடலில் யாகத்தின் மூலம் உலகம் படைக்கப்பட்டதாகக் குறிப்புகளுண்டு. யாகத்தின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புருஷனைத் தோற்றுவித்து அவனுக்கு 1000 கண்கள், 1000 கால்கள், 1000 கைகள் உடையனவாகவும் உருவாக்கி இவ்வுலகம் முழுவதையும் மூடியும், பரந்தும் நின்று அவனது வாயிலிருந்து தீயும், சுவாசத்தில் காற்றும், செவியிலிருந்து திசைகளும், தலையிலிருந்து ஆகாயமும், பாதத்திலிருந்து பூமியும், மனம் கண்களிலிருந்து சூரியனும் சந்திரனும் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. இத்தகைய கருத்தோட்டங்கள் ஐதரேய உபநிடதத்திலும் விரவியுள்ளன.

## (ஆ) உபநிடதங்கள்

பிரபஞ்சம் என்பது இயற்கை. இயற்கை முழுவதும் பிரமம். பிரமத்திலிருந்து உண்டானதே பிரபஞ்சம் என்ற சிந்தைனைகள் பல உபநிடதங்களில் விரவியுள்ளன. சாந்தோக்கிய உபநிடத்திற் சாண்டில்ய வித்யா என்ற பகுதியில் பிரம்மம் தஜ்ஜலன் என்ற மறை பொருளால் வரையறுக்கப்படுகின்றது. இதன் பொருள் தத்- அதுவெனும் பிரமம்; ஜ- உலகத்தைத் தோற்றுவிப்பது; லி- தன்னுள் ஒடுங்குவது; அன்- தாங்குவது. அதாவது உலகம் தோன்றி எதனால் நிலைபேறடைந்தது ஈற்றில் எங்கு ஒடுக்கம் காணுகின்றதோ அதுவே பிரமம் எனப் பிரமத்தின் தொழிற் பாடாகவே உலகத்தை உபநிடதம் வர்ணிக்கின்றது.

உபநிடத காலத்தில் உலகத்திற்கு முதல் விளக்கம் சொன்னவர் ஞாக்ஞவல்கியர். பிரபஞ்சத்தை அவர் ஆகாசமெனவே கூறுகின்றார். முண்டக உபநிடதம் ``சிலந்தியிலிருந்து நூல் தோன்றுவது போலவும், பூமியிலிருந்து செடி கொடிகள் முளைப்பது போலவும், உடலிலிருந்து உரோமம் முளைப்பது போலவும் பிரம்மத்திலிருந்து உண்டானவையே பிரபஞ்சம்'' என்று வர்ணிக்கின்றது. தைத்தீரிய உபநிடதம் ``தான் தன்னைப் பெருகப் பண்ணுவேன் என எண்ணிய பிரமம் தவத்தினால் இப் பிரபஞ்சம் முழுவதையும் படைத்தது'' எனக் கூறுகின்றது.

## (இ) புராணங்கள்

பிரம்ம, விஸ்ணு, சிவ, லிங்க, கருட பிரம வைவர்த்த பிரமாண்ட புராணங்களிலே உலகப் படைப்பு, சதுர்யுகங்கள் பற்றிய கதைகள் விளக்கப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் இந்து சமய தத்துவ விளக்கத்திற்கும் ஆதாரமானவை என்பதும் குறிப்பிடற்பாலது.

லிங்க புராணத்தில் சிவனே உலகப்படைப்பின் மூல கர்த்தா என்ற குறிப்பொன்றைத் தருகிறது.

*``ஈசனின் தலை-சுவர்க்கம், ஆகாயம்-தொப்புள், மூச்சுடர்கள்-முக்கண்கள், திக்குகள்-செவி, பாதா ளம்-திருவடி, விண்ணவர்கள்-புயங்கள், கடல்-ஆடை மேகம்-ஜடாபாரம், வாயு-மூச்சு, பிரகிருதி-தேவி''*

என்று இயற்கை வடிவில் ஈசனின் படைப்பை உவமிக்கி ன்றது. பிரம புராணத்தில் பிரமன் தனது உந்திக் கமலத்தில் இருந்து உலகைப் படைத்தார் என்றும் கூறப்படுகின்றது.

உலக படைப்பில் காலம் உருவான வரலாற்றை பிரம்ம வைவர்த்த புராணம் மேல்வருமாறு எடுத்தியம்புகின்றது.

*``கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்று நான்கு காலங்கள் உற்பத்தியாயின. இவை நான்கும் சேர்ந்து மகாயுகம் எனப்படும். 360 மகாயுகங்கள் ஒரு திவ்விய யுகம். 71 திவ்விய யுகங்கள் சேர்ந்து ஒரு மன்வந்தரம். 14 மன்வந்தரங்கள் சேர்ந்து பிரமனுக்கு ஒரு நாள். அத்தகைய 360 நாட்கள் சேர்ந்து பிரமனுக்கு ஒரு வருடம்...''*

இவ்வாறு சதுர்யுகங்கள் பற்றிய கதைகளும் உலக படைப்பு வரலாற்றைக் கூறுகின்றன.

இந்து சமய தத்துவங்களிலே பேசப்படுகின்ற தோற்றம், ஒடுக்கம், அழிவு பற்றிய கருத்துக்களை புராணங்கள், சர்க்கம், பிரதிசர்க்கம் எனும் இலக்கணங்களிலே கூறி வைத்துள்ளன. இதில் சர்க்கம் என்பது புதிதாக உலகம் படைக்கப்பட்ட வரலாற்றைக் கூற, பிரதி சர்க்கம் உலகம் அழிந்து மீண்டும் படைக்கப்பட்ட வரலாற்றைக் கூறுகின்றது. ஆக மொத்தத்தில் உலக படைப்பு பற்றிய விபரங்களை மிகையான கதைகளாகக் கூறுகின்ற இலக்கியம் புராணங்கள் என்றால் அது மிகையாகாது.

## (ஈ) பகவத் கீதை

மகாபாரதத்தில் உலகப் படைப்பு பற்றிய கதைகள் விளக்கப்பட்டுள்ளன. அதிலடங்கியுள்ள கீதையின் 10ஆம், 11ஆம் அத்தியாயங்களில் இறை தத்துவத்துடன் பிரபஞ்ச தத்துவ விளக்கங்களும் கூறப்பட்டிருக்கின்றன. விஷ்வரூப தர்சன யோகத்தில் கிருஷ்ணர் ``பிரபஞ்சத்தின் செயற்பாடுகள் அனைத்திற்கும் நானே காரணம்'' என்று கூறுவதிலிருந்தும் நானே பிரமம்; நானே உலகம்; நானே அனைத்தினுள்ளும் நிறைந்திருக்கின்றேன்'' என்பதிலிருந்து பிரபஞ்ச செயற்பாடுகள் அனைத்திற்கும் விஷ்ணுவே காரணம் என்பதை கீதை விளக்குகின்றது.

## இந்து சமய தத்துவங்களில் பிரபஞ்ச சிந்தனைகள்

உலகம் என்றால் என்ன? இது எதிலிருந்து, எவ்வாறு படைக்கப்பட்டது? யார் படைத்தார்? போன்ற வினாக்கள் எல்லாச் சமயத்தினரின் மெய்யியல்களில் எழுகின்ற பொதுவான பிரச்சனை யாகும். இதற்கு வைதீக சமயத்தார் ஒருவிதமான விளக்கமும் அவைதீக சமயத்தார்கள் வேறொரு விளக்கத்தையும் தருகின்றனர். அதே வேளை வைதீக சமயத் தத்துவங்களுக்கிடையேயும் உலக படைப்பு தொடர்பாக வேறுவேறான விளக்கங்களும் உள்ளன.

உலகம் பற்றிய முதற் சிந்தனைகளை வேத உபநிடத தத்துவங்களிலேயே காண்கின்றோம். ரிக் வேதத்தின் நாஸதீய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூக்தப் பாடல்கள் உலகம் பற்றிய சிந்தனைகளுக்கு முன்னோடியானவை. இச் சிந்தனைகளை உபநிடதங்கள் சற்று விரிவாகப் பேசுகின்றன. பிரபஞ்சத்தின் மூலகர்த்தா பிரமம் என்னும் இறைவனே. அவ்வாறான பிரமம் பிரபஞ்சத்துடன் கூடிப் பிரபஞ்ச நிலையாகவும், பிரபஞ்சத்தைக் கடந்து நிஷ்பிரபஞ்ச நிலையாகவும் இயங்குகின்றது. இவ் விளக்கத்தையே சைவ சித்தாந்திகள் உலகம் உயிர்களுக்குள் நின்று இயக்குபவனும், அவற்றைக் கடந்து நின்று இயக்குபவனும் ஆகையால் கடவுள் என்ற நாமத்தினையும் பெறுகிறான் என்பது கவனித்தற்பாலது.

இந்து சமய தத்துவ மரபில் உலகம் உண்மையானது. உலகின் ஆதாரம் தொடர்பாக விளக்குவதற்கு இரண்டு வாதங்கள் காரண காரியத் தொடர்புகளின் மூலம் முன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சாங்கியம், விஷிட்டாத் துவைதம், சைவ சித்தாந்தம் எனும் மூன்று தத்துவங்களும் `சத்காரிய வாதம்' பற்றிப் பேச, நியாயம், வைசேடிகம், ஹீனயான பௌத்தம், உலகாயுதம், மீமாம்சகர்களில் ஒரு சாரார் `அசற்காரிய வாதம்' பற்றிப் பேசுகின்றனர்.

சூனியவாத பௌத்தம், விஞ்ஞான வாத பௌத்தம், சங்கர அத்வைதம் ஆகிய தத்துவங்கள் விவர்த்த வாதத்தில் நம்பிக்கை கொண்டவை. விவர்த்த வாதப்படி காரணமான பிரமம் மட்டும் உண்மை அதிலிருந்து தோன்றுகின்ற காரியமான உலகம் தோற்றம் என்று சங்கரர் நிறுவுகின்றார். இங்கு காரணம் உண்மை காரியம் தோற்றம் என்பதே அசற் காரிய வாதமாகும். இவரின் கருத்துப்படி காரியம் காரணத்தின் உண்மையான மாற்றமல்ல. எனவே உலகு ஆகாயத் தாமரை போல, முயற்கொம்பு போல, மலடிக்கு மகன் போல தோற்றமான பொருளே என சங்கரர் விளக்கமளிக்க, கடவுளை ஏற்காத மதத்தினர் ஒன்றுமிலா மையாகிய சூன்யத்திலிருந்தே உலகம் படைக்கப்பட்டது என்று கூறுகின்றனர். இவ்வாறு அசற்காரிய வாதிகள் உலகிற்கு கொடுத்திருக்கும் விளக்கம் வில்லங்கமானது என்பது சுருக்கமாகக் கூறற்பாலது.

சாங்கிய தர்சனம் சடகாரியமான உலகு பிரகிருதியிலிருந்து பரிணமிக்கின்றது; அதற்கு இறைவன் நிமிர்த்த காரணன் இல்லை என்பது அவர்களது நிலைப்பாடாகும். இப் பிரகிருதியிலிருந்தே உலகம் தோன்றி, அழியும் காலத்தில் மீண்டும் பிரகிருதியிலேயே ஒடுங்குகின்றது என்கின்றனர். பௌதீகப் பிரபஞ்சத்தின் முக்கிய இயல்புகளாக அமைவது ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூவகைக் குணங்களாகும். இதனை சத்காரிய வாதம் கொண்டு நிரூபித்துக் காட்டுகின்றனர். சத்காரிய வாதம் என்பது ``உளதில் இருந்து உளதே தோன்றும்; இல்லதில் இருந்து உளது தோன்றாது'' என்பதாகும். காரியம் ஒவ்வொன்றுக்கும் காரணம் இருந்தே ஆகவேண்டும். ஆனால், சாங்கியர் இவ்விளக்கத்தில் சற்று உயர்வான ஒரு விளக்கத்தினை முன் வைக்கின்றனர். எள்ளில் எண்ணெய் முன்பே உளது போலவும், மண்ணினுள்ளே ஏலவே பானை உளது போலவும் காரியம் புதிதாகத் தோன்றுவதல்ல. அது உற்பத்திக்கு முன்னரே உளது என்பது சாங்கியரது நினைப்பாகும். அதுபோல உலகமும் பிரகிருதிக்கு முன்பே உள்ள நித்தியப் பொருள் என்பதே அவர்களின் வாதமாகும். எனவே அவர்களின் கருத்துப்படி காரணத்திலிருந்து காரியம் தோன்றும் போது காரணம் உண்மையாக காரியமாக மாறிவிடுகின்றது. மண் பானையாக மாறுவது போல பிரகிருதியும் உலகமாக மாறுகின்றது. இதனைப் பரிணாம வாதம் அல்லது மாற்றம் பற்றிய கொள்கை என்று அதற்குப் பெயர் கூறுவர்.

சைவசித்தாந்திகள் முப்பொருட் கோட்பாட்டினுள்ளே உலகம் நித்தியமான, அநாதியான உள் பொருளென்றே குறிப்பிடுகின்றனர். சிலர் உலகம் அழியாது; உலகில் உள்ள பொருட்களே அழியும் என்கின்றனர். இதனை வள்ளுவர் ``ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப், பொன்றும் துணையும் புகழ்'' என்று பாட, சீவகசிந்தாமணி ``மூவா முதலா உலகம் ஒரு மூன்றும் ஏத்த'' என்று பாடியிருக்கின்றது. உலகம் தோற்றம், நிலைபேறு, அழித்தல் எனும் மூன்று பண்புகளை உடையது என்பதை ``காத்தும், படைத்தும், கரந்தும், விளையாடி'' என்ற பாடலடியால் உணர்த்துகின்றார் மாணிக்கவாசகர். உலகம் ஒருங்கே அழிவதில்லை. இரு பக்கம் அழியினும் ஒரு பக்கம் அழியாது நிற்கும் என்பது பொருந்தாது. மழைக்காலத்திலே தோன்றும் முளைகளெல்லாம் பின்பு வெப்ப காலத்தில் ஒருங்கே அழியுந் தன்மை போல, உலகமும் ஒரு காலத்திலே தோன்றிப் பின்னர் பின்னொரு காலத்தில் முழுவதும் அழியுமாம் என சிவஞான சித்தியார் பாடல் ஒன்று சான்று பகருகின்றது.

*``ஓரிடம் அழியப் பின்னும் ஓரிடம் நிற்கும் ஒக்கப்*
*பாரிடம் அழிவது இன்றாம் என்றிடில் பயில் வித்து எல்லாம்*
*காரிடம் அதனில் காட்டும் அங்குரம் கழியும் வேனில்*
*சீருடைந்து உலகு காலம் சேர்ச்சிடப் பெயர்ந்து செல்லும்''*

(சுபக்கம் - 29)

சைவசித்தாந்திகள் உலகம் உள்பொருள் என்பதை காரண காரியத் தொடர்பால் சத்காரிய வாத நிலைப்பாட்டில் நின்று விளக்கம் தருகின்றனர். சைவ சித்தாந்திகளின் கருத்துப்படி சுத்தமாயையிலிருந்து நிமித்த காரணனான இறைவனால் சடகாரியமான உலகு பரிணமிக்கின்றது. இதன் படி மாயையென்னும் உள் பொருளிலிருந்தே உலகு எனும் உள் பொருள் தோன்றியுள்ளது. அத்துடன் இறைவனின் அழித்தல் செயற்பாட்டால் மீண்டும் உலகு மாயையினுட் சென்று ஒடுங்குகின்றது. முன்னது ஏதுவான முறையில் காரியமானது தன்னிருப்பைக் காரணத்தில் கொண்டிருப்பது போலவே, காரணமும் தொடர்ச்சியாக காரியத்தில் உள்ளடங்கியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனாலேயே உலக அழிவின் பின்னும் மீண்டும் உலகம் சுத்த மாயையிலிருந்துப் படைக்கப்படுகின்றது. இவை யாவற்றுக்கும் இறைவனே நிமித்த காரணன். இவ் விளக்கத்தை சிவஞான சித்தியார் பாடல்

*''உள்ளதும் இலதும் இன்றி நின்றது ஒன்று உளதேல்*
*உண்டாம் இல்லதேல் இல்லை ஆகும் தோற்றமும்*
*இசையாதாகும் உள்ள காரணத்தில் உண்டாம் காரியம்*
*உதிக்கும் மண்ணில் இல்லதாம் படம்கடாதி எழில் தரும்*
*இயற்று வானால்''*

என்று கூறுகின்றது.

ஒரு காரியப் பொருள் ஒரு கருத்தாவில்லாமல் தானே தோன்றி தானே அழியுமெனின், தோன்றுமெனின் இனிஅழியாது. அழியுமெனின் இனித்தோன்றாது. ஆகையினால் ஒரு காரணகர்த்தா ஒருவன் தேவைப்படுகின்றான். இனி, காரியப் பொருள் அழியும், காரணப் பொருள் அழியாதெனின், காரணப் பொருள் போலவே காரியப் பொருளும் உள்பொருளாகவே இருக்கும். இங்கு காரணப் பொருள் இறைவன்; காரியப் பொருள் உலகம். இவ்விளக்கத்தை ''ஒரு பொருள் ஒருவன் இன்றி உளது இல ஆகும் என்னில்'' என்ற பாடலில் சிவஞான சித்தியாரின் ஆசிரியர் கூற, ''உலகம் எல்லாம் ஒருவனோடு ஒருத்தி ஒன்று என்று உளதாகி நின்று அளவில் ஒடுங்கும்...'' என்ற பாடலில் சிவப்பிரகாச நூலாசிரியர் கூற, சிவஞான போத ஆசிரியர் ''அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின் தோன்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம் அந்தம் ஆதி'' என்று பாடுகின்றார்.

சைவ சித்தாந்திகள் இறைவன் உலகினைத் தோற்றுவிக்கும் முறைமையை உவமை மூலம் விளக்கியுள்ளனர். காரியப் பொருளான உலகம் உருவாகுவற்கு முன், முதல், துணை, நிமித்த என மூன்று காரணங்கள் இன்றியமையாதவை. ஒரு குடம் உருவாவதற்கு முதற் காரணம் களிமண்; திரிகையெனும் கருவி துணைக் காரணம்; குயவன் நிமித்த காரணன். அது போல உலகம் தோற்றம் பெறுவதற்கு முதற் காரணம் சுத்த மாயை; துணைக் காரணம் சிவசக்தி; நிமித்த காரணம் இறைவன். இதற்குச் சான்று பகர்வது மேல்வரும் சிவஞான சித்தியார் பாடலாகும்.

''காரிய காரணங்கள் முதல் துணை நிமித்தம் கண்டாம் பாரின் மண் திரிகை பண்ணும் அவன் முதல் துணைநிமித்தம் தேரின் மண் மாயை ஆகத் திரிகை தன்சக்தி ஆக ஆரியன் குலாலன் ஆய் நின்று ஆக்குவன் அகிலம் எல்லாம்''

மாயை, சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என மூன்று வகைப்படும். இம்மூன்றும் பிரபஞ்ச தோற்றத்திற்கு முதற் காரணங்களாகும். அதனால் அவற்றின் காரியங்களும் முறையே சுத்தப் பிரபஞ்சம், சுத்த அசுத்தப் பிரபஞ்சம், அசுத்தப் பிரபஞ்சம் என மூன்றாகுமாம். **சுத்தப் பிரபஞ்சத்திலிருந்து** சிவம், சக்தி, நாதம் விந்து ஆகியன தோன்றும். விந்திலே சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் நான்கு வாக்குகளும் தோன்றும். மிருகேந்திர ஆகமம் சுத்தமாயையின் காரியத்தினை சொற்பிரபஞ்சம், பொருட்பிரபஞ்சம் என இருவகைப்படுத்திப் பேசுகின்றது. இவ்வியல்பு முறைகளை சிவஞான சித்தியார் **"...வந்திடும் விந்துத் தன்பால் வைகரி ஆதிமாயை"** என்ற பாடலடியால் உணர்த்திக் காட்டுகின்றது. **சுத்தாசுத்தப்** பிரபஞ்சத்திலிருந்து காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்தும் தோன்றுகின்றன. **அசுத்தப் பிரபஞ்சத்திலிருந்து** அந்தக் கரணங்கள் நான்கும், ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும், தன்மாத்திரை ஐந்தும், பூதங்கள் ஐந்தும் ஈறாக இருபத்துநான்கு காரியங்கள் தோன்றுகின்றன. இதனை சிவஞான சித்தியார் பாடலில்,

*''முக்குண மாதி மூலந் தந்திடும்''*

என்று கூறியுள்ளது.

பொதுவாக சித்தாந்திகள் உலக அமைவை வரையறுக்கும் போது பஞ்ச பூதங்களின் கூட்டுறவாக அமைந்ததே உலகம் என்கின்றார்கள். இதைத் தொல்காப்பியரும் **"நிலம் தீ நீர்வளி விசும் பொடைந்தும் கலந்து மயக்கம் உலகம்"** என்று சான்று பகருகின்றனர். பிரபஞ்சத்தின் காரியமான ஐம்பூதங்கள் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து நிலைநிறுத்தி அழிக்கும். இவற்றுக்கப்பால் தோற்ற நாசம் செய்பவனாக இறைவன் இருக்கிறான் என்பதனைச் சிவஞான சித்தியார் **" நிலம் புனல் அனல் கால் காண, நிறுத்திடும் அழிக்கும் ஆக்கும், பலம் தரும் ஒருவன்"** என்ற பாடலில் காட்டியுள்ளது. அதே நூலில் **"உலகமே உருவம் ஆக, யோனிகள் உறுப்பது ஆக"** என்ற பாடலில் உலகத்தின் அவயவங்களாக யோனிகள் அமைகின்றன. இதை,

*''தோற்றிடும் அண்டசங்கள் சுவேதசங்கள் பாரில்*
*துதைந்து வரும் உற்பீசம் சராயுதங்கள் நான்கில்*
*ஊற்றமிகு தாபரங்கள் பத்தொன்பது என்றும்*
*ஊர்வ பதினைந்து அமரர் பதினொன்றோடு உலவா*
*மாற்றரு நீர் உறைவன நற் பறவைகள் நாற்காலி*
*மன்னியிடும் பப்பத்து மானுடர் ஒன்பதின்மர்*
*ஏற்றி ஒரு தொகை அதனில் இயம்புவர்கள் யோனி*
*எண்பத்து நான்குநூறாயிரம் என்று எடுத்தே''*

என்ற சிவப்பிரகாசப் பாடல் மூலம் யோனிகளின் பிறப்பு வகைகளை அறிந்து கொள்ள முடிகின்றது. (ச.து.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபத்தி

இறைவனை அடைவதற்கு பல உபாயங்கள் அல்லது மார்க்கங்கள் உண்டு. அவை பக்தியோகம், இராசயோகம், ஞான யோகம் முதலியனவாகும். அவை அனைத்தும் உயர்ந்தவை. ஈடு இணையற்றவை. ஆனால் அவை எல்லோராலும் பின்பற்றவியலாதவை. ஞானயோகம் முதலியவற்றைப் பின்பற்ற இயலாதவர்களுக்கு அமைந்த எளிய நெறியே பிரபத்தியாகும்.

இறைவனையே பூரணமாக நம்பி மற்றைய நெறிகளை ஒதுக்கி உறுதியாக இருப்பது பிரபத்தியின் இலக்கணம். பிரபத்தி என்னும் சொல் 'பரம்பொருளையே சார்கை' என்னும் மெய்ம்மையை உணர்த்தும். பக்தியைப் பின்பற்றுபவன் 'பக்தன்' என்னும் ஞானத்தைப் பின்பற்றுபவன் ஞானி என்றும் பெயர் பெறுவது போல பிரபத்தியினைப் பின்பற்றுபவன் 'பிரபந்தன்' என்னும் பெயரைப் பெறுகின்றான்.

நம்மாழ்வாரை பிரபந்த கூடத்தர் (கூடத்தவர் - குலத்தவர்) என்றும் இராமாநுச நூற்றந்தாதியைப் பிரபந்த காயத்திரி என்றும் வழங்குவது வைணவ மரபாகும். ஞானயோகம் முதலானவற்றைப் பின்பற்றுவோர் இன்ன குலத்திற் பிறந்தவராக இருக்க வேண்டும். இன்ன பண்புகளை உடையவராக இருக்க வேண்டும் என்னும் கடுமையான நியதிகள் உண்டு. பிரபத்திக்கு எந்த விதமான நெறியும் இல்லை. இதனை வேதாந்த தேசிகர் அந்தணர் அந்தியர் எல்லையில் நின்ற அனைத்துலகும் வந்தடையும் நெறி என்று குறித்துள்ளார்.

பிரபத்திக்குத் தேசநியமம், காலநியமம், பிரசார நியமம், அதிகார நியமம், பவ நியமம் இல்லை என சீரி பூடணம் கூறும்.

பிரபத்திக்கு ஐந்து அங்கங்கள் உண்டு. அவை

1. அனுகூல சங்கற்பம் (பெருமான் திருவுள்ளம் விரும்பும் செயலையே செய்வதாக உறுதி எடுத்தல்)
2. பிரதிகூல வருச்சனம் (இறைவன் விருப்பத்திற்கு மாறுபட்டவையை விலக்குதல்)
3. மகாவிசுவாசம் - (எம்பெருமான் திருவருள் நம்மைக் கைவிடாது என்று பூரணமாக நம்புகை)
4. கோத்திருத்துவ வரணம் - (பக்தியோகம் முதலான வழிகளாக இருந்து அருளுக என்று பெருமான் பால் விண்ணப்பம் செய்தல்)
5. கார்ப்பணியம் - மற்றைய நெறிகளைப் பின்பற்றாமல் இருத்தல்.

பிரபத்தர்கள் இவற்றை எளிதே உணர, தேசிகர் சார சங்கிரகத்தில் 'நின்னருளாம் கதியின்றி மற்றொன்றில்லை' என்றும் 'நெடுங்காலம் பிழை செய்த நிலை கழிந்தேன்' என்றும் 'உன் அருளுக்கு இனி தான் நிலையுகற்றேன் என்றும் உன் சரணே சரண் என்னும் துணிவு பூண்டேன்' என்றும் 'வானவர் தம் வாழ்ச்சி தர வரித்தேன் உன்னை' என்றும் கூறிப் பிரபத்தி செய்க என்கிறார்.

ஆன்மாக்களின் பண்புக் கேற்ப இப்பிரபத்தி நான்கு வகைப்படும். அவை சுவநிட்டை, உத்தி நிட்டை, ஆசாரிய நிட்டை, பாகவத நிட்டை என்பனவாகும். எல்லா ஆறுகளும் கடலை அடைகின்றன. அது போல் எல்லாப் பிரபத்திகளும் பிரபந்தனை இறைவனிடம் சேர்ப்பிக்கின்றன.

1) சுவ நிட்டை:- ஒருவைணவன் பிறர் உதவியின்றித் தானே எம்பெருமானை நம்பிப் பிரபத்தி செய்து விட்டுக் கவலையற்றிருப்பது.

2) உத்தி நிட்டை:- ஆசாரியன் உபதேசத்தின் வழி நின்று பிரபத்தியைப் பின்பற்றுவது.

3) ஆசாரிய நிட்டை:- ஆசாரியனே! எனக்கு ஏதும் தெரியாது. அடியேன் உன்னுடைய திருவடியே நம்பியுள்ளேன் என்று கூறி எல்லாவற்றையும் ஆசாரியனிடத்தே ஒப்படைத்து விட்டு அவன் பிரபத்தியில் ஒன்றி நிற்றல்.

4) பாகவதன் நிட்டை:- ஆசாரியன் திருவருளில் தன்னை ஒப்படைப்பது போல் ஒரு பாகவதனின் பிரபத்தியில் ஒடுங்கியிருத்தல்.

5) ஆசாரிய நிட்டையும், பாகவத நிட்டையும் எந்த வித ஆற்றலும் இல்லாதவர் பொருட்டு அமைந்தது. அவற்றைப் பின்பற்றுபவர்களுக்கு உறுதியான நம்பிக்கையே ஆதாரம். பிரபத்தி பிரபந்தனை திருமாலிடம் அடைவிக்கின்றது.

(சு.து.)

# பிரமச்சரியம்

தனிமனிதன் ஒருவனின் வாழ்க்கை நெறி பிரமச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என நான்கு நிலைகளாக வகுக்கப்படும். இவை படிமுறையில் அமைவன. ஒன்றன் பின் ஒன்றாக இந்நிலைகள் ஏற்படும். இவற்றை ஆச்சிரம தர்மம் என்றும் அழைக்கப்படும். அவற்றில் முதற்கட்டமாக அமைவது பிரமச்சரிய நிலையாகும்.

பிரமச்சரியம் என்பது மாணவப்பருவ நிலையாகும். பரம்பொருளைத் தெளிவுபடுத்தும் குருவிடம் சென்று சீடன் வேதங்களைக் கற்று ஒழுகுதல் பிரம்மச்சரியம் எனப்பொருள் படுகின்றது. இந்து சமய வாழ்வியல் ஆசாரப்படி ஐந்து வயது முதல் பதினாறு வயது வரை பிரமச்சரிய நிலையில் நின்று ஒழுகவேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒழுகும் சீடன் பிரமச்சரிய விரதம் பூண்டு, பஞ்ஷேத்திரங்களை அடக்கி குருகுலவாசம் மேற்கொண்டு ஆன்மீக ரீதியில் உயர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் வேதங்களில் உள்ள பிரமச்சரிய சூக்தமும் இதை தெளிவாகக் கூறுகின்றது.

குருவின் ஆசிரமத்திலே உறைந்து கல்வி கற்கும் சீடன் குருவிற்கு பணிவிடைகள் புரிந்து, கீழ்ப் பணிவுடன் நடத்தல் வேண்டும்.அதிகாலையிலே துயிலெழுந்து சைவ அனுஷ்டானங்களை மேற்கொள்ள வேண்டும். காலை, நண்பகல், மாலை வேளைகளில் குருவை நமஸ்கரித்தல் வேண்டும். குருவின் பூசைக்கு தேவையான தர்ப்பை, பூ, பத்திரம், நீர் முதலானவற்றைத் தேடிக் கொடுக்க வேண்டும். குருவிற்கு மரியாதை செய்யும் முகமாக குரு நீராடிய நீரில் நீராட வேண்டும். குரு எழுந்து செல்கையில் எழுந்தும், அமரும் போது ஆசனம் பார்த்து அமருதலும் வேண்டும். குருவின் வாக்குகளை வேதவாக்காகக் கொண்டு ஒழுகுதல் வேண்டும். அவர் முன்னிலையில் அமர்ந்து புலன்களை அலைய விடாமல் வேதங்களை ஓத வேண்டும். இவ்வாறு பிரமச்சரிய கல்வியை கற்று முடிப்பவன் கிருஹஸ்த நிலைக்குச் செல்லும் பக்குவத்தை அடைந்து கொள்வான்.

புராண, இதிகாச இலக்கியங்களிலும் பிரமச்சரிய நிலையின் கடமைகள், பண்புகள், வழிபாடு முதலிய கூறுகள் கூறப்பட்டுள்ளன. மகாபாரதத்தில் ஏகலைவன் துரோணச்சாரியாருக்கு பெருவிரலைக் குரு தட்சணையாக வழங்கிய சம்பவம் குரு சீடர் கல்வி முறையின் சிறப்பினை உணர்த்திக் காட்டுகின்றது. ஔவையார் **'எண்ணும் எழுத்தும் இருகண்ணெத்தகும்'** எனப் பாட திருவள்ளுவர் **'அவையகத்தில் முந்தியிருப்பதற்கும் வானுறையும் தேவரை அடைவதற்கும் ஆதாரமாக விளங்குவது கல்வி** எனக் கூறுகின்றார். கல்வியை விட மேலானது ஒழுக்கம். எனவே கல்வியையும் ஒழுக்கத்தையும் சேர்த்துப் பயிலுகின்ற பருவமே பிரமச்சரிய நிலை எனக் கூறப்படுகிறது.

சீடன் குருவிற்கு தட்சணை வழங்கிய பின், அவர் சீடனின் நல்வாழ்வுக்கு ஆதாரமான உபதேசங்களை அருளுவார். இதை தைத்திரீய உபநிடதம் மேல்வருமாறு கூறுகின்றது.

'சத்தியம் வத, தர்மம் ஸர, மாத்ரு, பித்ரு
குரு தேவோ பவ - (ச.து.)

## பிரம்மசமாஜம்

பிரம்மசமாஜம் வங்காளத்தைச் சார்ந்த இராஜாராம் மோகன்ராய் என்பவரால் இந்து சமய சமூக சீர்த்திருத்தங்களுக்காக 1828 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட முதல் சீர்த்திருத்த இயக்கமாகும்.

வங்காளத்தில் பெரிய நிலக்கிழாராகவிருந்த இராமகாந்து என்பவரின் மகன் மோகன்ராய் செல்வச் சூழ்நிலையில் ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டார். இவருக்கிருந்த செல்வச் செழிப்பால் நிறையப்படிக்க முடிந்தது. இந்திய சமய தத்துவங்களையும் இஸ்லாம், கிறிஸ்தவம் என்பவற்றையும் அவற்றின் மூல மொழிகளினூடாகக் கற்றறிந்து பல ஒப்பீட்டு ஆய்வுகளை மேற் கொண்டார். கலை இலக்கியம் சார்ந்த துறைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் கால இந்திய மண்ணின் அரசியல், சமூக, பொருளியல் முதலிய துறைகளின் ஈடுபாட்டுடன் செயற்பட்டவர். வங்கத்தில் டொராசியோ என்பவரால் 1820 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட மறுமலர்ச்சிச் சிந்தனைகளை முன்னெடுத்துச் சென்ற அறிஞர் வரிசையில் முதன்மையாகத் திகழ்ந்தவர். சமஸ்கிருத்த மொழியில் உள்ள பிரம்ம சூத்திரத்தை வங்க மொழியிலும், வேதாந்த நூல்கள், பல உபநிடதங்களையும் வங்க மொழி ஆங்கிலம் இரண்டிலும் மொழி பெயர்த்தவர்.

இந்திய சிந்தனை வரலாற்றில் பல நுட்பமதியுடைய பேரறிஞர் பலர் உளர். ஆயினும் அவர்கள் அனைவரிலும் வேறுபட்ட புதிய, பரந்த தளத்தில் மோகன்ராய் நின்றார். 19 நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய சமுதாயம் சமய, சமூக நிலைகளில் எதிர் நோக்கிய பல பிரச்சனைகளுக்குத் தனி ஒருவராக நின்று தீர்வு காண முயன்றார். இந்திய மக்கள் தமது பாரம்பரிய பண்பாட்டு அடிப்படைகளினின்றும் விலகாமலே புதிய காலப்பகுதிக்கு ஏற்ற வகையில் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளலாம் என்பதைத் தம் சிந்தனையாலும் செயலாலும் தெளிவுபடுத்தினார்.

சமயத்திற்கும், சமூகத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பதை உணர்ந்து கொண்ட ராஜா ராம், சமுதாயத்தின் ஒழுங்கு முறைகளைக் காக்கவும், ஒழுங்குபடுத்தவும் கண்டறியப்பட்ட சாதனமே மதம் என்றார். பல்வேறு சமயக் கோட்பாடுகளையும் கற்றறிந்த இவர் அனைத்து மதங்களுமே மேலான உண்மைப் பொருளை (இறைவன்) நம்புகின்றன எனக் கருதினார். சமயக் காழ்ப்பற்ற பண்பாளராகத் திகழ்ந்தார். இந்து சமயத்திற்குரிய ஆதார நூல்களை ஆழமாகக் கற்ற மோகன் ராய் இந்து சமயத்திலும், சமூக பழக்கவழக்கங்களிலும் சீர்த்திருத்தங்கள் கொண்டுவருவது இன்றியமையாதது என எண்ணினார். இந் நோக்கங்களிற்காகத் தன் கொள்கைகளை ஆதரித்த நண்பர்களுடன் சேர்ந்து பிரம்ம சமாஜம் என்னும் சீர்த்திருத்த இயக்கத்தை ஆரம்பித்தார்.

இந்து சமயத்திற்குச் சீர்த்திருத்தம் அவசியம் அவ்வாறு செய்வதன் மூலம் தான் அதனை அழிந்துவிடாமல் காப்பாற்றலாம் எனக் கருதினார்.

பல கடவுட் கொள்கையையும், உருவ வழிபாட்டையும் வெறுத்த ராஜா ராம் கடவுள் ஒருவரே என்ற சிந்தனைக்கான அடிப்படை இந்தியப் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் உள்ளது என்பதை வேதங்கள், உபநிடதங்கள், வேதாந்த தத்துவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றினூடாகத் தெளிவுபடுத்தினார். எவ்விடத்திலும் நீக்கமற இருக்கும் தெய்வத்தை கல்லால் செய்யப்பட்ட சிலையில் இருக்கிறான் என்பது அறியாமை என்றார். வேத நூல்களின்படி தியானமே இறைவனை அடைவிக்கும் வழி என்றார். உருவ வழிபாடும். பலியிடுதலும் மனிதன் தன் சுயநலத்திற்காக உருவாக்கப்பட்டவை என்றும் கூறினார்.

*"உயிருள்ள அல்லது உயிரற்ற பொருள்கள்*
*எதுவாக இருந்தாலும் இன்று இருப்பதாகவோ.*
*இனிமேல் தோன்றக் கூடியதாகவோ இருந்தாலும்*
*அவற்றை வழிபாட்டிற்குரிய பொருளாக ஏற்றுக்*
*கொள்ளக் கூடாது"*

இது பிரம்மசமாஜ அறநிலையப் பத்திரத்தில் முன்வைத்துள்ள நிபந்தனையாகும். இவரது இக் கருத்துக்கள் பல்வேறு தெய்வங்களை வழிபட்டு தம்முட் பிளவுபட்டிருந்தவர்களிடத்து. வேறுபாடுகளுக்கு அப்பாலான ஒருமைப்பாட்டுணர்வுக்கு அடி எடுத்துக் கொடுத்தது. வேறு சடங்குகள். சம்பிரதாயங்களில் திளைப்பதே மதம் எனக் கருதியிருந்தவர்களுக்கு அவற்றிற்கு அப்பால் உணர்வு நிலையிலே சமயப் பொதுமை காண இவை வழிவகுத்தன. மேலும் ராஜாராம் இந்து மதம் தொடர்பாக எழுதிய நூல்களுக்கு மேலைத்தேய இறையியலாளர்களிடையே கணிசமான வரவேற்பிருந்தது. இதனால் இந்தியர் தமது பாரம்பரியம் தொடர்பான நியாயமான பெருமிதம் கொள்வதற்கு அடிகோலியது. இந்தியர்கள் அஞ்ஞானிகள் எனக் கூறியதுடன் அவர்களுக்கு நாம் ஞானச் சுடர் ஏற்றுகிறோம் எனத் தம்பட்டம் அடித்து வந்த கிறிஸ்தவ குருமாருக்கும். அவர்களின் போதனைகளால் ஈர்ப்புண்டு தமது பண்பாட்டுப் பாரம்பரியங்களை இழந்து கொண்டிருந்த கல்விகற்ற இந்தியச் சமூகத்தினர் சிலருக்கும் மோகன் ராயின் சிந்தனைகளும். எழுத்துக்களும் பெரும் சவாலாக அமைந்தது.

ஐரோப்பிய ஆட்சியாளரின் அதிகார ஆதரவுடன் பெரும் அலையாகப் பரவிக் கொண்டிருந்த கிறிஸ்தவ மதத்தைத் தடுத்து அணைகட்டும் வகையில் அறிவாற்றலுடன் செயல்பட்ட முதல் இந்திய சீர்திருத்தச் சிந்தனையாளர் மோகன்ராய் அவர்கள் என்பது மனம்கொள்ளத்தக்கது.

பிரம்ம சமாஜத்தின் கடவுட் கொள்கை எந்தவிதமான புதிய சிந்தனைகளை கொண்டிருக்கவில்லை. இருக்கு வேதம். உபநிடதம். பகவத் கீதை போன்ற சமய நூல்களையும் இராமானுஜர். துளசிதாசர். சைதன்யர் போன்ற சமயப் பெரியார்களினதும் கருத்துக்களையுமே வலியுறுத்தியது. தியான முறையிலும் எந்தவிதமான புதுமையோ புரட்சியோ செய்யவில்லை. காயத்திரி மந்திரத்தின் மூலமும். உபநிடதங்களின் மூலமும் கடவுளைத் தியானிப்பதை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இவர் இந்து சமயத்தின் அரசியல். சமூகம் சார்ந்த கூறுகளை மட்டுமே மாற்ற நினைத்தார். மதத்தின் புனிதத் தன்மையை மாற்ற நினைக்கவில்லை.

இந்தியப் பாரம்பரியத்தில் தெளிவாகக் காலூன்றி நின்ற இவர் சமகால இந்திய இந்து சமூகத்தில் காணப்பட்ட பல மனித நேயமற்ற நடைமுறைகளையும். பொருளற்ற சடங்கு சம்பிரதாயங்களையும் தீவிரமாக வெறுத்து ஒதுக்கினார். சமூகத்தால் காணப்பட்ட சாதி வேறுபாடுகளைக் கண்டித்தார். எனவே சமாஜத்தில் வாரந்தோறும் நடைபெறும் தியான வழிபாட்டுக் கூட்டத்தில் அனைவரும் வேறுபாடின்றிக் கலந்துகொள்ள வழிவகுத்தார். இந்து மதத்தின் புனித நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எல்லாப் பிரிவினருக்கும் இந் நூல்கள் உரியவை எனக் கூறி அவர்களும் இவற்றை படிப்பதற்கு வழிசமைத்தார்.

பெண்கள் மீது பல நிலைகளில் நிகழ்ந்து வந்த ஒடுக்கு முறைகளை எதிர்த்தார். பருவமடையாத சிறுமிகள். குழந்தைகளுக்குத் திருமணம் செய்விக்கப்பட்ட கொடுமை மோகன் ராயால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. கணவன். இறந்த பின் உடன்கட்டை ஏறும் "சத்" என்னும் வழக்கத்திற்கு எதிராகப் போராடி வெற்றியும் கண்டார். 1829 ஆம் ஆண்டு இவ்முறைமை சட்ட ரீதியாகத் தடுக்கப்பட்டது. மேலும் இவரது காலத்தில் பலதார மணம் (Polygamy) பரவலாக நடைமுறையில் இருந்தது. இவ் வழக்கத்தை வன்மையாக எதிர்த்த ராஜாராம் இந்து சமயச் சட்டத்திற்கு முரணானது என்றும். சில தவிர்க்க இயலாத நிலைகளிலேயே மறு திருமணங்கள் செய்து கொள்ளலாம் என்றும் இந்து சமயச் சட்டங்களை இயற்றிய யாக்ஞவல்கியர் போன்றோர் தம் நூல்களை ஆதாரமாக எடுத்து விளக்கினார். மேலும் விதவைப் பெண்கள் மறுமணம் புரிந்து கொள்ளச் சமூகம் வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் புரட்சிகரமான சிந்தனையை முன்வைத்தார்.

மேலும் இவர் ஆங்கிலக் கல்வி அமைப்பு முறையையும். மேலைநாட்டு அறிவியலையும் இந்தியக் கல்வி நிறுவனங்களில் புகுத்துதலை மிகவும் விரும்பினார். அப் புதிய கல்வி முறையில் ஒரு இந்துக்கல்லூரி. ஆங்கிலப் பள்ளி. வேதாந்தக் கல்லூரி ஆகியன உருவாகத் துணைநின்றார். நாட்டின் முன்னேற்றத்திற்குப் பல புதிய முறைகளைக் கூறினார். புலவர்கள். வித்துவான்களால் கற்பிக்கப்படும் கல்வி நடைமுறைக்கு ஒவ்வாதது என வாதிட்டார். இந்தியாவின் சமூக வாழ்க்கையைக் கெடுக்கின்ற தகாத பழக்கங்களையும். ஊழலையும் ஒழிப்பதற்கு மேலை நாட்டுக் கல்வியும். அறிவும் மட்டும் போதாது இந்தியப் பண்பாட்டைச் சரியாக அறிந்து அதற்கேற்ப நடக்கவும் வேண்டும் எனக் கூறினார். அன்பையும். மனித நேயத்தையும் வலியுறுத்தினார்.

மோகன்ராயின் இத்தகைய புதிய சிந்தனைகள் செயன் முறைகள் என்பவற்றை நிறுவன நிலையிற் செயற்படுத்தும் அமைப்பாகவே பிரமசமாஜம் செயற்பட்டது. இவரது இப் புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை மரபினால் இந்தியப் பண்பாடானது உலகின் எந்தப் பண்பாட்டிற்கும் தரத்தில் தாழ்ந்ததல்ல. அது அனைத்துப் பண்பாட்டையும், மதிக்கவும் விமர்சிக்கவும் வல்ல சிந்தனைப் பலம் கொண்டது. இந்தியச் சமூகம் தன் பாரம்பரியப் பண்பாட்டுத் தளத்தில் நின்று கொண்டே புதிய காலப்பகுதிக்கு ஏற்றவகையில் தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளும். ஐரோப்பிய நாகரீகம் கிறிஸ்தவ மதம் என்பவற்றிற்கு இந்தியா அடிபணிய வேண்டியதில்லை என்ற தன்மான உணர்வு ஆகிய கருத்துக்களை வளர்க்கக் கூடியதாக இருந்தது.

ஆயினும் இவரது புரட்சிகரமான கருத்துக்களை எதிர்த்தவர்களும் இருந்தார்கள். பிரம்ம சமாஜத்தை எதிர்த்து தர்ம சபா என்றொரு நிறுவனத்தை வைதீக இந்துக்கள் நிறுவினர். இவரது பகுத்தறிவுப் பார்வை, மனிதநேய நோக்கு என்பன பாரம்பரியத்தைச் சிதைத்துவிடும் என அக்காலப் பழமை வாதிகள் அஞ்சினர் கடுமையாக விமர்சித்தனர்.

ராஜாராம் மோகன் ராய் அவர்கள் தமது இறுதிக் காலத்தில் இங்கிலாந்து சென்று அங்கே 1833 இல் காலமானார். இவரது மறைவுக்குப் பின் பிரம்ம சமாஜம் தொடர்ந்தும் அவர் தம் எண்ணங்களை நிறைவேற்றப்பாடுபட்டது. முக்கியமாகப் பெண்கள் கல்வியிலும், விதவைகள் மறுவாழ்விலும் கவனம் செலுத்தியது.

அக்காலத்தால் வங்காளத்தில் பெண்கள் கல்வி கற்பதை மக்கள் ஏற்கவில்லை. ஆனால் பெண்கள் கல்வியின் முக்கியத்து வத்தை உணர்ந்த பிரம்ம சமாஜம் அதை நடைமுறைப்படுத்த முயற்சி எடுத்தது. பிரம்ம சமாஜவாதியும் சிறந்த சீர்திருத்த வாதியுமான சந்திர வித்யாசாகர் பெண்கள் கல்விக்காக அரும்பாடு பட்டார். தன் சொந்தப் பணத்திலேயே பல பெண்கள் பள்ளிகளைத் தொடக்கினார். இவரைப் போன்றே கேசப் சந்திர சென் சசிபத பானர்சி என்பவரும் பெண்கள் கல்வியிலும் சமூகப் பணியிலும் மிகுந்த அக்கறை காட்டினார்.

சசிபத பனார்சி விதவைகளுக்கென மறுவாழ்வு இல்லம் ஒன்றை கி. பி. 1887 ஆம் ஆண்டு கொல்கத்தாவுக்கருகில் உள்ள பாரக நகரில் நிறுவினார். மேலும் பிரம்ம சமாஜம் விதவைகள் மறுமணத்திலும் கவனம் செலுத்தியது. சந்திர வித்யா சாகர் விதவைகள் மறு மணத்தை தீவிரமாக ஆதரித்தார். இந்து சாத்திரங்கள் விதவைகள் மறுமணத்தைத் தடுக்கவில்லை என்றும் அனுமதி வழங்கியுள்ளன என்றும் எடுத்துக் கூறி தனது விளக்கங்களை ஒரு சிறு நூல் வடிவில் வெளியிட்டார். விதவைகள் மறுமணம் சட்டபூர்வமாக்கப்பட வேண்டும் என இவர் அரசிடம் விண்ணப்பம் ஒன்றினையும் செய்திருந்தார். 1856 ஜூலையில் இந்து விதவைகள் மறுமணச் சட்டப் பிரேரணை அமுலுக்கு வந்தது. பிரம்ம சமாஜம் விரிவான மதச்சடங்கு களையும் பெரிய விழாக்களையும் எதிர்த்தது. கடவுள் வழிபாட்டிலும், திருமணம் போன்றவற்றிலும் எளிமையையே கடைப்பிடித்தது. பிரம்ம சமாஜம் 1866 இல் தேவையற்ற திருமணச் சடங்குகளைத் தவிர்த்து ஒரு புதிய முறையிலான திருமண விழாபற்றி ஒழுங்குபடுத்திக் கூறியது. இவ்வாறான சமூக நலப் பணிகளால் பிரம்ம சமாஜம் இந்தியச் சமய சமூக வரலாற்றில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

ராஜா ராமுக்குப் பின் பிரம்ம சமாஜத்தால் பெரு மாற்றங்கள் நிகழ்ந்தன. அந்த நிறுவனம் முறையே ஆதிப் பிரம்ம சமாஜம் இந்தியப் பிரம்ம சமாஜம், சாதாரணப் பிரம்ம சமாஜம் என மூன்றாகப் பிளவுபட்டது. ஆதிப் பிரம்ம சமாஜம் இந்தியப் பண்பை முதன்மைப்படுத்தியது. இதற்கு மோகன் ராயின் நண்பரான மகரிஷி தேவேந்திரநாத தாகூர் தலைமை தாங்கினார். இந்தியப் பிரம்ம சமாஜத்திற்கு சந்திர சென் தலைமை வகித்தார். இவருக்கு கிறிஸ்தவ சமயத் தாக்கம் மிகுதியாகக் காணப்பட்டது. தாழ்த்தப்பட்டோர் நலனில் அதிக அக்கறை கொண்ட சிவநாத சாஸ்திரி சாதாரண பிரம்ம சமாஜத்தைத் தோற்றுவித்தார். இதன் செயற்பாடுகள் நாளடைவில் இந்தியத் தேசிய காங்கிரஸ் உருவாவதற்கான முன்னோடி முயற்சிகளாக அமைந்தன.

காலகதியில் அனைத்துப்பிரம்ம சமாஜ இயக்கமும் வலுவிழந்தது. இருப்பினும் இந்து சமயத்திற்கும், சமூகத்திற்கும் முக்கியமான காலகட்டத்தில் ஆற்றிய சேவைகள் மறக்கற்பாலது.

(நி. நி.)

## பிரம்ம சூத்திரம்

உபநிடதங்களில் கூறப்பட்ட விடயங்களைத் தெளிவாகச் சூத்திர வடிவில் கூறும் நூலே பிரம்மசூத்திரம் ஆகும். இது பிரஸ்தானத் திரயத்தில் ஒன்று. ஏனைய இரண்டும் உபநிடதமும், பகவத்கீதையுமாகும்.

சூத்திரம் என்ற சொல்லை பத்மபுராணம் விளக்குகின்றது. குறைந்த எழுத்துக்களை உடையதாகவும், சந்தேகத்திற் கிடமில்லாததாகவும், வாதங்களின் சாரத்தைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். ஒரே விடயத்தை மீண்டும், மீண்டும் கூறாமலும் பிழையற்றதாகவும் இருக்க வேண்டும்.

தமிழிலும் பவணந்தி முனிவர் சூத்திரத்தைப் பற்றி விளக்கம் தந்துள்ளார்.

*"சில்வகை எழுத்தில் பல்வகை பொருளைச்*
*செவ்வன் அடியில் செறிந்து இனிது விளக்கி*
*தட்பநுட்பம் சிறந்தன சூத்திரம்"*

பிரம்ம சூத்திரம் உபநிடத வாக்கியங்களில் உள்ள முரண் பாடுகளைக் களைந்து தெளிவு காணும் நோக்கிலும், மிக நீண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கங்களைச் சுருக்க வேண்டியும் எழுதப்பட்டதே பிரம்ம சூத்திரம். உபநிடதங்கள் பெரும்பாலும் குருவுக்கும் சீடனுக்கு மிடையில் நடைபெற்ற உரையாடல்களாகவே காணப்படுகின்றன. பல்வேறு சூழ்நிலைகளில் முனிவர்கள் தங்களை அணுகிய சீடர்கள் வினவிய வினாக்களுக்கு அளித்த விடைகளாகவே இவை உள்ளன. ஆகவே உபநிடதங்கள் முழுவதையும் ஒரு ஆசிரியர் குறிப்பிட்ட ஒரு காலத்தில் உருவாக்கவில்லை. அதனால் ஒரே விடயத்தைப் பற்றியே பற்பல இடங்களில் பலவிதமான குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. நாம் ஒரு விடயத்தை அறிய விரும்பினால் அதன் விபரம் முழுவதும் அது சம்பந்தப்பட்ட உரையாடலில் இடம் பெறுவதில்லை. சீடர்கள் எழுப்பிய வினாக்களுக்குரிய விடைகள் மட்டும் காணப்படும். அந்த விடயத்தைப் பற்றி உபநிடதங்களில் உள்ள கருத்துக்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தாலும் கூட சில சமயங்களில் அவ்விடயத்தைப் பற்றிப் பூரணமாக அறிய முடிவதில்லை. ஒரே விடயத்தை ஒரு முனிவர் ஒரு விதமாகவும் மற்றொரு முனிவர் வேறு விதமாகவும். கூறியிருப்பதைக் காண கூடியதாகவுள்ளது.

இவ்வாறு கருத்து வேறுபாடுகளுக்கு இடம் தரும் வாக்கியங்கள் மட்டுமின்றி ஒன்றுக்கொன்று மாறாகத் தோன்றும் கருத்துக்களையும் உபநிடதங்களிலே காணலாம். மூலப்பொருள் ஒன்றா பலவா? என்ற வினாவிற்கு உபநிடதம் முழுவதும் ஒரே விதமான விடையைக் காணமுடியாதுள்ளது. மூலப் பொருள் ஒன்று என்ற கருத்தை வலியுறுத்தும் ஆதாரங்களும். பல என்ற கருத்தைப் பிரதிபலிக்கும் வாசகங்களும் உள.

எனவே இத்தகைய முரண்பாடுகளைக் களைந்து அவற்றிடையே ஒருமைப்பாட்டைக் காணவேண்டிய தேவை ஏற்பட்டதுடன் விரிந்தும் பரந்தும் கிடந்த உபநிடதங்களைச் சுருக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இக்காரணங்களை மனதில் கொண்டே பாதாராயணார் பிரம்மசூத்திரத்தை எழுதினார். ஆயின் உபநிடதங்களின் விரிவு அதன் விளக்கமின்மைக்கு காரணமாக அமைய. பிரம்மசூத்திரம் மிகச் சுருங்கிய சூத்திர வடிவில் எழுதப்பட்டதால் அதில் தெளிவு காணப்பட வில்லை. எனவே சுருக்கம் மீண்டும் விரிவை நாடி நின்றது.

பராசர மகரிஷியின் மகனான ஸ்ரீ கிருஷ்ணத்வை சாயனர் வேதங்களைப் பிரித்துச் சீர்படுத்தினார். ஆகவே அவருக்கு வேத வியாசகர் என்ற பெயர் ஏற்பட்டது. இந்த வியாசர் தான் பிரம்மசூத்திரத்தின் ஆசிரியரான பாதாராயணர் என்ற ஒரு ஒருமரபும் உண்டு.

உபநிடதங்களிற் கூறப்பட்டுள்ள கருத்துக்களைப் பலர் ஆராய்ந்து தங்களது முடிவான எண்ணங்களை நூல்களில் வெளியிட்டுள்ளார்கள். பல நூற்றாண்டுகளாக வெளியான இந்த நூல்களையும் அதை எழுதியவர்களின் பெயர்களையும் பிரம்மசூத்திரத்தில் காணக்கூடியதாக உள்ளது. அவர்களுடைய கருத்துக்களையும் ஆராய்ந்து தம் முடிவுகளையும் நூலில் கூறியுள்ளார். ஆகையால் பிரம்ம சூத்திரம் மிகப்பழமையான நூல் அல்ல எனவும் கி.மு 2ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்றும் பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இக்கருத்துக்கு மாறாக பகவத்கீதையில் உள்ள ஒரு சுலோகத்தில் பிரம்மசூத்திரம் என்ற சொல்லைக் காணக் கூடியதாக உள்ளது. எனவே பிரம்மசூத்திரம் மகாபாரதம் எழுந்த காலத்திற்கும் முற்பட்டது என்ற கூற்றும் உள்ளது. **"கீதாரஹஸ்யம்"** என்ற நூலை எழுதிய பாலகங்காதர திலகர் பகவத்கீதையில் உள்ளடக்கப்பட்ட விஷயங்கள் முதல்பாதி உபநிடதங்களையும், பின்பாதி பிரம்மசூத்திரத்தையும் கொண்டுள்ளது என்கிறார். வேதங்களை ஆராய்ந்த மேல்நாட்டு அறிஞர்களான மக்ஸ் மூலர் (The Six Systems of Indian Philosophy) பிரம்ம சூத்திரம் பகவத் கீதைக்கு முற்பட்டது என்கிறார்.

பிரம்ம. ஆன்மா. உலகம் என்ற முப்பொருள் பற்றிய விசாரணைகள் பிரம்மசூத்திரத்தில் இடம்பெற்றுள்ளது. இறைவனே இவ்வுலகைப்படைத்தார் என்றும் அவரே மக்களுக்கு அவர்களு டைய கர்மங்களுக்குத் தக்கவாறு பலன்களை அளித்தார் என்றும் இந்நூல் கூறுகிறது. மேலும் ஏனைய சமயங்கள் பிரம்மத்தைப் பற்றிக் கூறும் மறுப்புகளுக்குத் தகுந்த விளக்கங்களையும் இந்நூல் தருகிறது.

முதல் சூத்திரத்தில் பிரம்மத்தை ஆராய்வோம் எனக் கூறி பாதநாராயணர் இரண்டாவது சூத்திரத்தில் பிரம்மத்தை ஓரளவு விவரிக்கின்றார். உலகப் படைப்பிற்கும் அதை காப்பதற்கும் அதன் அழிவிற்கும் காரணம் பிரம்மம் என்கிறார். பிரம்மத்தின் குணங்கள் ஒன்றையும் கூறாமல் அது புரிந்த செயலை மட்டும் கூறுவதிலிருந்து பிரம்மத்திற்குக் குணங்கள் இல்லை அது நிர்க்குணம் என்று விளங்குகிறது. இக்கருத்துக்களை வலியுறுத்தி சங்கரர் பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதியுள்ளார். ராமானுஜர் ஸ்ரீபாஷ்யம் எனும் தன் உரையில் பிரமம் குணங்களோடு கூடியது என்கிறார். தம் அனுபவத்தில் குணங்களற்ற எதையும் நாம் நிரூபிக்க முடியாது. பிரம்மத்தால் மட்டுமே இருந்து கொண்டு மற்ற எதிலும் காணப்படாதவைகளே அதன் சிறப்புக் குணங்களாகும். சுருதியில் பிரம்மம் நிர்குணம் எனக் கூறும் வாக்கியங்கள் அதற்குத் தீங்கான குணங்கள் இல்லை என்பதை வலியுறுத்துகின்றன. குணங்களே இல்லை என்பது அதன் குறிக்கோள் இல்லை. பிரம்மம் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தும் காத்தும் முடிவில் அதை அழிக்கிறது. அது பிரபஞ்சம் முழுதும் ஊடுருவி அதன் உள்ளிருந்து ஆள்பவராக உள்ளது. உயிருள்ளவையும். உயிரற்றவையுமான இவ்வுலகம் அதன் உடலாக விளங்குகிறது. ஜீவாத்மாவிற்கு மெய்யான வாழ்க்கை உண்டு. அறிவின் இயல்பதாக இருந்து கொண்டு கர்ம வினையால் உடலுடன் கூடியதால். தன்னைத் தனி மனிதனாய் எண்ணுகிறது. இது ராமானுஜர் பிரம்மசூத்திரத்திற்கு எழுதிய விளக்கவுரையில் கூறும் வாதம். இவர்களை விட மத்வர். நிம்பாரகர். வல்லபர். யாதவப் பிரகாசர். பாஸ்கரர். ஸ்ரீ கண்டர் போன்ற பலர் தத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைகளுக்கேற்ப உரைகளை இயற்றியுள்ளனர். இதன் விளைவாக இந்து சமய தத்துவத்திற் பல உட்பிரிவுகள் ஏற்பட்டன. இத்தகைய கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதற்கு பிரம்ம சூத்திரத்தில் உள்ள சூத்திரங்கள் எல்லாம் மிகச்சுருக்கமாக அரை வரியிலும், ஒரு வரியிலும்மாக இருப்பதால் அவை பிரமத்தை நிர்குணம் என்று பேசுகின்றனவா? அல்லது சகுனம் என்று கூறுகிறதா என்று உறுதிபடக் கூறமுடியாதுள்ளது. முடிவான கருத்துக்களைப் பிரம்மசூத்திரம் உறுதியாகக் கூறாததால் இந்திய தத்துவ ஞானம் பல்வேறு பிரிவுகளாகப் பிரியும் நிலை ஏற்பட்டது.

உபநிடதங்களில் பரம்பொருளைப் பற்றி உரைநடையிலும், காவிய நடையிலும் காணப்படும் விளக்கங்களைச் சூத்திர வடிவில் மிகச் சுருக்கமாகக் கூறும் நூலே பிரம்ம சூத்திரம் ஆகும்.

சூத்திரம் என்ற சொல்லைப் பத்ம புராணம் விளக்கு கின்றது. அது குறைந்த எழுத்துக்களை உடையதாகவும், சந்தேகத்துக்கிடமில்லாததாகவும், வாதங்களின் சாரத்தைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் கூறாமலும் பிழையற்றதாகவும் இருக்க வேண்டும்.

தமிழிலும் பவணந்தி முனிவர் சூத்திரத்தைப் பற்றி விளக்கம் தந்துள்ளார்.

*"சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருளைச்*
*செவ்வன் அடியில் செறிந்து இனிது விளக்கி*
*திட்பநுட்பம் சிறந்தன சூத்திரம்"*

உபநிடதங்கள் பெரும்பாலும் குருவுக்கும், சீடனுக்கு மிடையில் நடை பெற்ற உரையாடல்களாகவே காணப்படுகின்றன. பல்வேறு சூழ்நிலைகளில் முனிவர்கள் தங்களை அணுகிய சீடர்கள் வினவிய வினாக்களுக்களித்த விடைகளாக இவை உள்ளன. ஆகவே உபநிடதங்கள் முழுவதையும் ஒரு ஆசிரியர் குறிப்பிட்ட ஒரு காலச் சூழலில் உருவாக்கவில்லை. அதனால் ஒரு விடயத்தைப் பற்றி பற்பல இடங்களில் பலவிதமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. நாம் ஒரு விடயத்தை அறிய விரும்பினால் அதன் விவரம் முழுவதும் அது சம்பந்தப்பட்ட உரையாடலில் இடம் பெறுவதில்லை. சீடர்கள் எழுப்பிய வினாக்களுக்குரிய விடைகள் மட்டுமே காணப்படும். அந்த விடயத்தைப் பற்றி உபநிடங்களில் உள்ள கருத்துக்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தாலும் கூட சில சமயங்களில் அவ்விடயத்தைப் பற்றிப் பூரணமாக அறிய முடிவதில்லை. ஒரே விடயத்தை ஒரு முனிவர் ஒரு விதமாகவும், மற்றொரு முனிவர் வேறு விதமாகவும் கூறியிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு கருத்து வேறுபாடுகளுக்கு இடம் தரும் வாக்கியங்கள் மட்டுமன்றி ஒன்றுக்கொன்று மாறாகத் தோன்றும் கருத்துக்களையும் உபநிடதங்களிலே காணலாம். மூலப் பொருள் ஒன்றா? இல்லை பலவா? என்ற வினாவுக்கு உபநிடதம் முழுவதும் ஒரே விதமான விடையைக் காண முடியாதுள்ளது. மூலப் பொருள் ஒன்று என்ற கருத்தை வலியுறுத்தும் ஆதாரங்களும் உள.

ஆகவே இத்தகைய முரண்பாடுகளைக் களைந்து அவற்றிடையே ஒருமைப் பாட்டைக் காண வேண்டிய தேவை ஏற்பட்டதுடன், விரிந்தும் பரந்தும் கிடந்த உபநிடதங்களைச் சுருக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இக் காரணங்களை மனதிற் கொண்டே பாதராயணர் பிரம்ம சூத்திரத்தைப் புனைந்தார். ஆயின் உபநிடதங்களின் விரிவு அதன் விளக்கமின்மைக்குக் காரணமாக அமைய, பிரம்ம சூத்திரம் மிகச் சுருங்கிய சூத்திர வடிவில் எழுதப்பட்டதால் அதில் தெளிவு காணப்படவில்லை. எனவே சுருக்கம் மீண்டும் விரிவை நாடி நின்றது.

பிரம்ம சூத்திரத்திற்கு விளக்கம் கொடுக்க காலம் காலமாகப் பல தத்துவ அறிஞர்கள் முனைந்துள்ளார்கள். இவர்களுக்கிடையில் தோன்றிய கருத்து வேறுபாடுகள் தான் சங்கரரின் அத்வைதம், இராமானுஜரின் விசிஷ்டாத்வைதம், மத்துவரின் துவைதம், சைவர்களின் சித்தாந்தம் என இந்து சமய தத்துவத்திற் பல உட்பிரிவுகளை ஏற்படுத்தக் காரணமாய் அமைந்தன. மிகச் சில எழுத்துக்களிலே பல்வகைப் பொருள்களைக் கூறியிருப்பதால் பிரம்ம சூத்திரத்தில் கூறப்பட்ட விடயங்கள் உரையாசிரியர்களிடம் இத்தகைய கருத்து முரண்பாடுகளை உருவாக்கிவிட்டன.

பராசர மகரிஷியின் மகனான கிருஷ்ணத்வைசாயனர் வேதங்களைப் பிரித்துச் சீர்படுத்தினார். ஆகையால் அவருக்கு வேத வியாசர் என்ற பெயர் ஏற்பட்டது. இந்த வியாசர் தான் பிரம்ம சூத்திரத்தைப் புனைந்த பாதராயணர் என்று ஒரு மரபு உண்டு. உபநிடதங்களில் கூறியுள்ள கருத்துக்களைப் பலர் ஆராய்ந்து தங்களது முடிவான எண்ணங்களை நூல்களில் வெளியிட்டுள்ளார்கள். பல நூற்றாண்டுகளாக வெளியான இந்த நூல்களையும் அதை எழுதியவர்களின் பெயர்களையும் பிரம்ம சூத்திரத்தில் காணக்கூடியதாக உள்ளது. அவர்களுடைய கருத்துக்களையும் ஆராய்ந்து பாதராயணர் தம் முடிவுகளை நூலிற் கூறியுள்ளார். ஆகையால் பிரம்ம சூத்திரம் மிகப் பழமையான நூல் அல்ல எனவும் கி.மு 2ம் நூற்றாண்டில் புனையப்பட்டது என்றும் பல ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். பகவத் கீதையில் உள்ள ஒரு சுலோகத்தில் பிரம்ம சூத்திரம் என்ற சொல்லைக் காணக் கூடியதாக உள்ளது. எனவே பிரம்ம சூத்திரம் மகா பாரதம் எழுந்த காலத்திற்கு முற்பட்டதென்ற கூற்று உள்ளது.

**'கீதாரஹஸ்யம்'** என்ற நூலை எழுதிய பாலகங்காதர திலகர் பகவத்கீதையில் உள்ளடக்கப்பட்ட விஷயங்களில் முதல் பாதி உபநிடதங்களையும், பின் பாதி பிரம்ம சாத்திரத்தையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளது என்கிறார். வேதங்களை ஆராய்ந்த மேல் நாட்டு அறிஞரான மக்ஸ் மூலர் (The six Systems of Indian Philosophy என்ற நூலில்) பிரம்ம சூத்திரம் பகவத் கீதைக்கு முற்பட்டது என்கிறார்.

பிரம்மம், ஆன்மா, உலகம் என்ற முப்பொருள் பற்றிய விசாரணைகள் பிரம்ம சூத்திரத்தில் இடம் பெற்றுள்ளன. இறைவனே இவ்வுலகைப் படைத்தார் என்றும், அவரே மக்களுக்கு அவர்களுடைய கருமங்களுக்குத் தக்கவாறு பலன்களை அளித்தார் என்றும் இந் நூல் கூறுகிறது. மேலும் ஏனைய சமயங்கள் பிரம்மத்தைப் பற்றிக் கூறும் மறுப்புகளுக்குத் தகுந்த விளக்கங்களையும் இந்த நூல் தருகிறது. (நி. நி.)

## பிரம்ம முகூர்த்தம்

சூரியன் உதித்தெழுவதற்கு நாற்பத்தெட்டு நிமிடங்களுக்கு முன் பிரம்ம முகூர்த்தம் ஆரம்பமாகின்றது. பிரம்ம + முகூர்த்தம் என்பது பிரம்ம நான்முகனைக் குறிக்கின்றது. படைத்தற் தொழிலைப் புரியும் நான்முகன் தன்னுடைய நாவில் சரஸ்வதியை அமரச் செய்து 24 கலைகளையும் படைத்தார். எனவே பிரம்ம முகூர்த்தம் என்பது பிரம்மனுடைய சக்தியை நினைவாற்றலை தன்னைத்தானே வழிப்படுத்திக்கொண்டு மேன்மை அடைய வேண்டிய நிலைக்கு அடித்தளம் இடும் காலமாகும். அத்துடன் பிரம்மனுடைய பத்தினி சரஸ்வதி தேவி விழித்துச் செயற்படும் நேரம் பிரம்மமுகூர்த்தம் என்பதும் நம்பிக்கை. இதனால் இந் நேரம் சரஸ்வதி யாமம் எனவும் அழைக்கப்படுகின்றது.

பிரம்மமுகூர்த்தத்தில் எழுந்து செயற்படும் போது மனநிலையானது ஒருநிலைப்படுகின்றது. அதற்கு ஏற்ற காலமாக இது விளங்குகின்றது. அதிகாலையில் சூரிய வெப்பம் கிடையாது. சந்திரனுடைய வெப்பதிட்ப குளுமையும் கிடையாது. இவை இரண்டுக்கும் மத்தியில் நிலவுவது பிரம்ம முகூர்த்தம் இந்நேரத்தில் எழுந்து ஜெபிப்பது, தியானம் செய்வது, யோகம் செய்வது, கல்வி கற்பது, வேலைகள் செய்வது சிறந்த பயனைத் தருவதோடு ஞாபக சக்தியும் விருத்தியாகும்.

உபாசனைக்கு காலையில் பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்திருக்க வேண்டும் என்பது முக்கியமானதொரு கடமையாகும். இக்காலம் ஜீவன்களை எழச்செய்வது போல மந்திரங்களையும் எழச் செய்கின்றது. மந்திரங்கள் ஜெபிப்பவனுடைய மனதிலிருந்து படிப் படியாக அவனுடைய நுண் அலைகளை ஒலி அலைகளாக மேலே எழுப்பிச் செபம் செய்பவனது மந்திர ஒலியானது வெளிப்படச் செய்கிறது. இவ்வாறு பிரம்மமுகூர்த்தத்தில் அவன் செய்யும் ஜெபம் அவன் செல்லும் இடமெங்கும் அவனை அறியாமலே நன்மைகளை விளைவிக்கின்றது.

அதிகாலையில் எழுவதும், படிப்பதும் சிறந்தது என பெரியவர்கள் கூறுவார்கள். இதை இன்று விஞ்ஞானமும் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்துக்கள் அதிகாலையில் எழுந்து வீடு வாசல் பெருக்கி, நீர் தெளித்து கோலமிடுவார்கள். தங்கள் முன் வாசலை திறந்து வைப்பார்கள். அதிகாலை இலக்குமி வீட்டிற்குள் வரும் நேரம் என்பது நம்பிக்கை. இவ்வதிகாலை பொழுதே பிரம்ம முகூர்த்தமாகும். இக்காலத்தில் எழுந்து படித்தால் ஒரு போதும் மனதிலிருந்து மறக்காது தலையில் இடது பக்கம் இருக்கும் கல்வி மையம் செயற்படும் போது படிப்பது மிகவும் பயனைத் தரும் என்பது விஞ்ஞான கண்டுபிடிப்பு. இதனால் அதிகாலையில் எழுந்து படிக்க வேண்டும்.

பிரம்மமுகூர்த்தத்தில் எழுவதற்குறிய பழக்கத்தை நாமே பழகிக் கொள்ள வேண்டும். பிரம்மம் அறியப்படாதது போல பிரம்ம முகூர்த்தத்தின் இனிமையும் சாதாரணமாக அறிய முடியாதது. அந்நேரத்தில் எழுந்து அனுபவத்தாலே அதன் பயன் விளங்கும். இந்நேரத்தில் தெய்வங்களுக்கு ஜெபம் செய்து மேன்மையடையலாம். தெய்வீகக் காரியங்கள் படிப்படியாக மேலோங்கி வளரும். சாதாரணமாக அந்நேரத்தில் அதாவது அதிகாலையில் எழுந்து எமது கடமைகளை செய்தால் அந்த நாள் முழுவதும் உற்சாகமும் மனஅமைதியும் கிடைப்பதை உணரலாம்.

எமது புராண இதிகாசங்களில் முனிவர்கள் அதிகாலையில் நீராடித், தியானத்தில் இருந்ததை அறிகின்றோம். அவர்களது அமான்ய சக்தியையும் அவற்றைக் கொண்டு அவர்கள் செய்த வித்தைகளையும் படித்திருக்கின்றோம். அவற்றை நாம் முழுமையாக நம்பாவிடினும் பிரம்ம முகூர்த்தத்திற்கு அபாரசக்தி ஒன்றுள்ளது என்பதை உணர்வு பூர்வமாக அனுபவித்து அறியலாம். இன்று விஞ்ஞானம் கூறும் இவ்வுண்மையை அன்று அஞ்ஞானம் அனுபவபூர்வமாக வெற்றிக் கண்டுள்ளது.

(ஹே. கு.)

## பிரம்மஞான சபை

இந்து சமய, சமூக சீர்த்திருத்த இயக்கங்களின் ஒன்று பிரம்மஞான சபை. ரஷ்ய நாட்டு அறிஞர் பிளாவாட்சுகி என்ற அம்மையாரும், ஒல்கொட் என்பவரும் சேர்ந்து அமெரிக்க ஐக்கிய நாட்டில் இச் சபையை 1875 இல் நிறுவினர். 1879 இல் அதன் கிளை சென்னை அடையாற்றில் நிறுவப்பட்டது.

பிரபஞ்ச மனிதநேய சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு சாதி, மத, இன வேறுபாடின்றி ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குவது, சமயப் பொதுமை, தத்துவம் ஆகிய விடயங்கள் பற்றிக் கற்கும் ஆர்வத்தைத் தூண்டுவது, மனிதனிடம் மறைந்து கிடக்கும் சக்திகளை ஆய்வு செய்வதென்பது இச்சபையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையாகும். சமயக் கருத்துக்கள் மாறுபடினும் சமயக் காழ்ப்புணர்ச்சிகளைக் களைந்து நல்லெண்ணம் கொண்ட மனிதர்களை உருவாக்கவும். சமய உண்மைகளைப் படித்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் சபை உறுப்பினர்கள் ஆர்வமுடன் ஈடுபட்டனர்.

இச் சபையின் மற்றுமொரு முக்கியமான கொள்கை பொறுமை. பொறுமையற்று அலைபவர் உட்பட அனைவர் மீதும் பொறுமை காட்டப்பட வேண்டும். அறியாமைக்கு தண்டனை வழங்குதலைத் தவிர்ந்து அன்பினால் அவர்களை நல்வழிப்ப டுத்துவதே தமது கடமையாக இச் சபை உறுப்பினர் கொள்ளவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. அமைதி அல்லது சமாதானமே பிரமஞான சபையின் தாரக மந்திரம். உண்மையான பிரம்ம ஞானியாக வேண்டும் என விழைபவர்கள் கற்பதில் ஆர்வமுடையவர்களாகவும். பொறுமை மிக்கவர்களாகவும். உயர்ந்த நோக்கமுடையவர்களாகவும். அயராது உழைப்பவர் களாகவும் அனைத்து மக்களுடனும் ஒற்றுமையாக வாழ விரும்புபவர்களாகவும் இருக்க வேண்டும். இதுவே பிரம்மஞான சபையினரின் தலையாய நோக்காகவும். கடமையாகவும் கருதப்பட்டது.

பிளாவாட்சுகி அம்மையாரும். ஓல்கொட் என்பாரும் 1879 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்தார்கள். தமது கருத்துக்களை இங்கு பரப்ப முயன்ற இவர்கள் இந்தியச் சமயச் சூழல் வளமுடன் இருப்பதைக் கண்டு பிரம்மஞான சபையின் தலைமைப் பீடத்தை சென்னைக்கு அருகில் உள்ள அடையாறு என்னுமிடத்திற்கு மாற்றி அமைத்தனர். இச் சபை இந்தியாவில் தனது தலைமைப் பீடத்தை அமைப்பதற்கு துணை புரிந்தது ஆரிய சமாஜமாகும்.

அயர்லாந்தில் பிறந்து இந்தியாவைத் தனது தாயகமாகக் கொண்ட டாக்டர் அன்னிபெசண்டு அம்மையார் (1847-1935) இந்துப் பெண்களைப் போன்று உடை அணிந்து இந்துக்களின் வாழ்க்கை முறைகளை மேற்கொண்டு இச் சபையை ஓங்கி வளரச் செய்தார். இவர் இங்கிலாந்தில் இருந்தபோது பெண்களின் உரிமைக்காக பலமான குரல் எழுப்பியவர். அவர்களின் வேலை நேரத்தைக் குறைத்து ஊதியத்தை அதிகப்படுத்தினார். ஆண் களைப் போலவே பெண்களுக்கும் வாக்குரிமை அவசியம் எனப் போராடி அப் போராட்டத்தில் வெற்றியும் கண்டார். இப் பின்ன ணியிலேயே அம்மையாரின் இந்திய சமய. சமூகச் சீர்த்திருத்தப் பணிகளும் அமைந்தது. இவர் முதன் முதல் இந்தியாவில் ஆற்றிய உரையும் பெண்களைப் பற்றியதாகவே இருந்தது. ஒரு நாட்டின் உயர்நிலையையும். பண்பாட்டு வளர்ச்சியையும் பெண்களால் தான் பாதுகாக்க முடியும் என்பதில் இறுக்கமான நம்பிக்கை கொண்டிருந்தார். பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு இவர் கொடுத்த ஆதரவால் பெண்கள் பலர் கல்வி கற்று உயர்தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டனர்.

1917 இல் மாதர் சங்கத்தை தோற்றுவித்து அதன் முதற் தலைவராகவும் இருந்தார். இதனைத் தொடர்ந்து நாடெங்கிலும் பல மாதர் சங்கங்கள் தோன்றி கல்வி. தொழில். அரசியல் போன்ற பல்வேறு வழிகளில் பெண்கள் முன்னேறுவதற்கு வழிவகுத்தது. பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த அம்மையார் காசியில் மத்திய இந்துப் பாடசாலை ஒன்றையும் நிறுவினார். இப்பாடசாலை படிப்படியாக வளர்ந்து பனாரிஸ் இந்துப் பல்கலைக்கழகமாக இன்று திகழ்கிறது. அனிபெசன்டு அம்மையாரின் மதிநுட்பத்தாலும். வாக்கு வன்மையாலும் அலுவலக நிர்வாகத் திறமையாலும் பிரம்ம ஞான சபையை உலகெங்கும் போற்றிப் புகழும் நிலைக்கு உருவாக்கினார். தலைமைச் செயலகம் இன்று அடையாற்றில் பல கட்டடங்களுடன் உலகமெங்கும் புகழ் பரப்பும் நூல் நிலையத்துடன் செயற்படுகிறது.

இந்து சமயம் இன்றேல் இந்தியாவிற்கு எதிர்காலம் இல்லை என வலியுறுத்திக் கூறிய இவர் தன் வாழ்நாள் முழுவதும் பிரம்மஞான சபையின் வளர்ச்சிக்குப்பாடுபட்டார். (நி.நி.)

## பிரமன்

உலக உற்பத்தியின் காரணனாகவும். முத்தொழில்களில் படைத்தற் தொழிலின் தெய்வமாகவும் போற்றப்படுபவரே பிரமன் ஆவார். தாமரை மலரிற் தோன்றியவர் என்பதனால் **'பதுமப்பிரமன்'** எனப் போற்றப்படுவதுடன் **"தாமரைப்பூவினுட் பிறந்தோன்" "மலர் இருந்த அந்தணன்"** என்பன போன்ற இலக்கியச் சொற்தொடர்கள் அவர் தோற்றத்தை ஆதாரப்படுத்துகின்றன எனினும் சில சமயகிரந்தங்கள் பிரமனை விஷ்ணு நாராயணனின் நாபிக்கமலத்திலிருந்து தோன்றியவர் என்றும் கூறுகின்றன.

நான்கு முகங்களும் மேல் வலக்கையில் செபமாலையும். இடக்கையில் தண்டாயுதமும் கீழ் இடக்கையில் சருக்கு சுருவமும் வலக்கையில் கமண்டலமும் கொண்ட தோற்றத்தினையுடைய பிரமன். திலோத்தமையைப் படைத்து அவள் அழகைக் கண்டு விரும்பியபோது அவள் நான்கு திக்கிலும் ஓட அத்திக்குகளில் ஒவ்வொரு முகங்கொண்டு பார்த்ததனால் நான்முகன் ஆனார் என பிரமபுராணம் கூறுகின்றது.

திரிமூர்த்திகளில் ஒருவராகப் பிரமன் இடம் பெற்ற போதும் அவர் பெருந் தெய்வமாக நிலைத்து நிற்கவில்லை. சங்கத மொழியிலுள்ள காந்தம். அடிமுடி தேடிய காலத்தில் முடியைக் கண்டதாகப் பிரமன் பொய் கூறியதால் மக்களால் வழிபடப்பட மாட்டார் என்று சிவன் சாபமிட்ட கதையொன்றினைக் கூறுகின்றது.

இந்தியாவிலே இராஜஸ்தானில் புஷ்கர் என்ற இடத்தில் மட்டும் தான் பிரமனுக்கு தனிக்கோயில் இருப்பதாகக் கூறுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓரிஸ்ஸா, சௌராஷ்டிரம், மைசூர், மண்டகப்பட்டு, மகாபலிபுரம், ஆனைமலையடிவாரம் முதலிய இடங்களில் காணப்படும் திரிமூர்த்தி கோயில்களிலும் பிரமன் முக்கியத்துவம் பெறுகின்றார். இலங்கையில் மோதரை விஷ்ணு ஆலயத்திலும் மற்றும் சில ஆலயங்களிலும் அவர் பிரகாரத் தெய்வமாக இடம் பெறுகின்றார். தாய்லாந்தில் பிரமன் வழிபாடு பிரபல்யம் மிக்கதாக இன்றுவரை விளங்கி வருகின்றது.

வேதகாலத்தில் பல தெய்வங்கள் படைப்புத் தெய்வங்களாகக் கொள்ளப்பட்டாலும் இவருக்கு வேதத்தில் **'பிரம'** என்ற பெயர் படைப்புத் தொழிலுடன் தொடர்பு பட்டுக் காணப்படுகின்றது. இருக்கு வேதத்தில் இடம்பெறும் பிரஜாபதி 'பிராஹ்மனுடனும்' பிம்மனுடனும் இணைத்துக் காணப்படுகிறார். பிரஜாபதி ஒரு பாசுரத்தில் ஹிரண்யகர்ப்பனாகவும் கருதப்படுகின்றார்.

இந்தியாவின் கிழக்குப் பிரதேசத்தில் பௌத்தத்தின் எழுச்சிக்கு முன்பு பிரமன் வழிபாடு பிரபல்யமிக்கதாக இருந்திருக்கின்றது. என்பதைப் பௌத்த கிரந்தங்கள் சான்று பகர்கின்றன. இன்னும் இந்துக்களின் சந்தியக் கிரியைகளிலும் திருமணச் சடங்குகளிலும், மூதாதையர் தர்ப்பணத்திலும், சிரார்த்தக் கிரியைகளிலும் பிரமபூஜை சிறப்பிடம் பெறுவதை நாம் காணலாம். தீயிலிருந்து காத்துக் கொள்ளும் பொருட்டு பிரமனை வங்காளத்தின் சில பிரதேசங்களில் ஏழுநாட்கள் வழிபடும் மரபொன்று உண்டு. வீடு கட்டுதல், குடிபுகுதல் முதலியவற்றோடு தொடர்புபட்ட சமயக் கிரியைகளிலும் பிரமனுக்கு முக்கிய இடம் தரப்படுகின்றன. வாஸ்து சாஸ்திரங்கள், வீடுகட்டும் கலை என்பன பிரமனால் தோற்றுவிக்கப்பட்டது என்றும் **"வாஸ்தோஷபதி"** என்ற மாற்றுப் பெயர் கூட பிரமனுக்கு உள்ளதாகவும் பாசுரங்களில் கூறப்படுகின்றது.

சரஸ்வதி, சாவித்திரி, காயத்ரி ஆகிய தேவியரின் கணவர் என்றும் சித்தி புத்தி என்னும் விநாயக சக்திகளின் தந்தை என்றும் போற்றும் காஞ்சிப்புராணம் குமாரக் கடவுள் கேட்ட பிரண வத்திற்கு பொருள் தெரியாது அவரால் குட்டுப்பட்டு சிறையுண்டு சிவனால் மீண்டவர் என்றும் கூறுகின்றது.

இராவணனுக்கும், பல அசுரர்களுக்கும் அதிகமாக வரமளித்த தேவர் பிரமன் மட்டுமே என்று கூறும் பிரமபுராணம் இவரை அதிகமாக யாகம் இயற்றியவரென்றும் அதிக படைக்கலங்களுக்கு அதிபதி என்றும் போற்றி இருப்பதனைக் காணலாம்.

**"சத்திய யுகத்திலே பிரமா மதிக்கத்தக்கவர்"** என பிரமாண்ட புராணத்தில் வரும் சிவபிரான் கூற்று பிரமன் வேதத்திற்கு முந்தியவர் என்ற கருத்தையும் சிறப்பையும் உணர்த்துகின்றது. (ப. மு.)

## பிரமாண்ட புராணம்

சமஸ்கிருத மொழியிலுள்ள மகா புராணங்களில் இதுவும் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. புராணம் எனில் பழையது, பழைய வரலாறு எனப் பொருள்படும். வடமொழி இலக்கிய மரபில் இஃது ஒரு பழைய இலக்கிய வடிவமாகும். மரபு வழியான கருத்துப்படி புராணத்திலே சர்க்கம் (பிரபஞ்சப் படைப்பு, பிரபஞ்ச அழிவின் பின், பிரதிசர்க்கம் (மீள்படைப்பு), வம்சம் (தேவர்கள் ரிஷிகள் வரலாறு), மன்வந்த ராணி ஒவ்வொரு ஊழியிலும் மக்களுக்கு ஆதிபுருஷனாக விளங்கிய ஒவ்வொரு மனுவின் காலம், வம்சாநு சரிதம் (மன்னர்களின் வரலாறு) ஆகிய ஐந்து விடயங்கள் இடம்பெற வேண்டும். ஆனால் இன்று கிடைத்துள்ள புராணங்கள் அனைத்திலும் மேற்குறிப்பிட்ட ஐந்து லக்ஷணங்களும் முழுமையாக இல்லை. ஒவ்வொன்றிலும் இவை பல்வேறு அளவுகளிலே தான் காணப்படுகின்றன. இவற்றிலே காலப் போக்கிலே பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இன்று கிடைத்துள்ள புராணங்களிலே, மேற்குறிப்பிட்ட லக்ஷணங்கள் நாற்பதில் ஒன்று தான் காணப்படுகின்றன என இவை பற்றி ஆராய்ந்த கலாநிதி ஏ. டி. புசல்கார் குறிப்பிட்டுள்ளார். மேற்குறிப்பிட்ட கருத்து பிரமாண்ட புராணத்திற்கும் பொருத்தமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பிரபஞ்சம் தோன்றுவதற்கு ஏதுவான மிகப்பெரிய முட்டைவடிவிலான மூலப்பொருளே பிரமாண்டமாகும். இதன் மூலமாகவே பரம்பொருள் (இங்கு படைத்தற் கடவுளான பிரமா) இப் பிரபஞ்சத்தை முகிழ்க்கச் செய்கிறார். எனவே இது பிரமாண்டம் என இந்து சமயப் படைப்பியலிலே கூறப்படுகின்றது. இது பற்றிக் கூறுவதாலும், பிரமாவினால் வெளிப்படுத்தப் பட்டமையாலும் இப்புராணம் இவ்வாறு அழைக்கப்படு கிறதெனலாம்.

இப் புராணம் காலத்தால் முந்தியதாக மத்ஸ்யபுராணத்தில் கூறப்பட்டுள்ளதாகவும் கருதப்படுகின்றது. ஆனால் இது பிற்பட்ட புராணமாகவே காணப்படுகின்றது. மேலும் இது வாயவீய பிரமாண்ட புராணம் எனவும் அழைக்கப்படுகின்றது. அதாவது வாயு பகவானால் பிரகடனம் செய்யப்பட்டதென்பதாம்.

வருங்காலக் கல்பங்கள் பற்றிக் கூறும் வகையில் 12,200 செய்யுட்கள் இதில் உள்ளன. இந்நூலின் மூலப்பிரதி முழுமையாகக் கிடைக்காவிடினும், இன்று கிடைத்துள்ள பிரதியிலே மஹாத்மியங்கள் தோத்திரங்கள், உபாக்கியானங்கள் முதலியன இடம்பெற்றுள்ளன. ஒரு பிரபல்ய நூலான அத்யாத்மராமாயணம் இப்புராணத்திலடங்கியுள்ளதாகக் கொள்ளப்படுகின்றது. இது இராமபக்தியைக் குறிப்பிடுகிறது. இதனைச் சிவபிரான் பார்வதிக்கு உபதேசித்ததாகக் கூறப்படுகின்றது. இதை விட ராமஹிர்தயம், ராமகீதை என்பனவும் இதில் இடம்பெற்றுள்ளன. (வி. சி.)

## பிரயாகை

இத்தலம் அலகாபாத் புகையிரத நிலையத்திலிருந்து தெற்கே நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. பிரம்மா இங்கே யாகம் செய்ததன் காரணமாக இது பிரயாகை என்ற காரணப்பெயரைப் பெற்றது என்பர். இவ்விடத்திற்கு தசாசுவ மேத காட் (பிரம்மதேவர் பத்து அஸ்வமேத யாகம் புரிந்தமையால் இப்பெயர் பெற்றது), விஷ்ணு பிரஜாபதி சேத்திரம் (பிரம்மா, விஷ்ணு சம்பந்தப்பட்ட புராண நிகழ்ச்சிகள் தொடர்பாக) என்னும் வேறு பெயர்கள் உள்ளன.

இத்தலத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் சந்திக்கின்றன. இது திரிவேணி சங்கமம் எனப்படும். ‘பிரயாகையின் முக்கியமே இந்த திரிவேணி சங்கமத்தில் தான் இருக்கின்றது’ ‘திரிவேணி சங்கமத்தில்’ ஒரு தடவை மூழ்கி நீராடும் ஒருவனுக்கு சுவர்க்க லோக வாசம் நிச்சயமாக கிட்டும் என்கிறது ரிக்வேதம்.

பிரயாகையில், இறந்துவிட்ட முன்னோர்களுக்கான பித்ரு கர்மங்களைச் செய்வதையும், இறந்து விட்டவர்களின் அஸ்தியைக் கரைப்பதையும் இந்துக்கள் விசேடமானதாகக் கருதுகின்றனர். இறந்துவிட்ட மனிதனின் அஸ்தியைப் பிரயாகையிலுள்ள திரிவேணி சங்கமத்தில் கரைக்க வேண்டும். அவ்விதம் கரைக்கப்பட்ட அஸ்தி திரிவேணியில் எத்தனை ஆண்டுகள் இருக்கின்றனவோ அத்தனை ஆயிரம் ஆண்டுகள் அவனுக்கு சொர்க்கலோக வாசம் கிடைக்கும் என்று வடமொழி சுலோகம் ஒன்று குறிப்பிடுகின்றது.

பிரயாகை தலத்தில், யமுனையாற்றின் கரையில் பெரிய கோட்டையொன்று இருக்கின்றது. அக்கோட்டையின் மதிற் சுவரைக் கடந்து உள்ளே சென்றால் அங்கே பூமிக்கு அடியில் குகைக்கோயில் போன்ற அமைப்பில் கட்டடங்கள் இருக்கின்றன. நிலத்திற்கு கீழே இறங்கிச் சென்றால் கிருஷ்ணன், கங்கை, பார்வதி, மார்க்கண்டேயர், நரசிம்மமூர்த்தி ஆகிய கற்சிலை விக்கிரகங்களைக் காணலாம்.

இந்தப் பாதாளக் கோயிலுக்குள் காற்றும், வெளிச்சமும் வரும் பொருட்டு மேலே உள்ள தரையில் சதுர வடிவத்தில் ஆங்காங்கே ஜன்னல்களை அமைத்து அவற்றின் மேல் சிற்ப மண்டபம் கட்டி இருக்கின்றார்கள். அக் கோட்டையில் அக்ஷயவடம் என்னும் பெரிய ஆலமரம் உள்ளது. இதில் மூன்று பெரிய கிளைகள் உள்ளன. இக்கிளைகள் மூன்றையும் மும்மூர்த்தியின் சொரூபம் என்பர்.

கோட்டைக்குச் சற்றுத்தொலைவில் ஆஞ்சனேயர் கோயில் ஒன்று இருக்கின்றது. அங்கே சதுர வடிவத்தில் குளம் போன்று இருக்கும் பெரிய பள்ளத்தில் ஆஞ்சனேயர் விக்கிரகம் படுத்த நிலையில் உள்ளது. அவரது தோளில் ராமர், இலட்சுமணர் சிலைகள் உள்ளன. காலுக்கு அடியில் இராவணன் சிலை இருக்கிறது. இக்கோயில் சிறியதானாலும் இங்கு வரும் கூட்டம் அதிகமானதாகும்.

பிரயாகையில் அலோபிமாயி எனும் சக்திக் கோயில் உள்ளது. இந்தக் கோயில் மூலஸ்தானத்தில் தேவிவிக்கிரகம் இல்லை. கருவறையில் ஒரு சிறிய தொட்டி உள்ளது. அதில் குங்குமத் தண்ணீர் தேங்கி இருக்கின்றது. அதைச் சுற்றி மலர் மாலைகள் உதிரிப்பூக்களின் குவியல்கள் உள்ளன. அந்தக் குங்கும நீர்த் தொட்டியைத் தேவியாக வழிபடுகிறார்கள்.

யமுனையின் அக்கரையில் சுயம்புலிங்கமாக திகழ்கின்ற சோமநாதப் பெருமானையும், பார்வதி தேவியரையும் கொண்டுள்ள சோமேசுவர் ஆலயம் உள்ளது. சந்திரனை ஒரு சமயம் சயரோகம் பற்றிக் கொண்டதாம். அந்த நோயிலிருந்து விடுபட சந்திரன் சிவலிங்கம் அமைத்து வழிபட்டான். அது இந்தச் சோமேசுவர ஆலயம் ஆகும் என்பர்.

சோமநாதரின் திருச்சந்நிதி அழகிய சோலையின் இடையே அமைந்திருக்கின்றது. இப்பெருமான் மார்க்கண்டேயருக்கு அருளாட்சி அளித்தவராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாராகஞ்சில் மாதவம் என்னும் விஷ்ணு கோயில் உள்ளது. இங்கிருந்து ஒன்றரைக் கி. மீ. தொலைவில் வாசுகி என்னும் நாகப்பிரதிட்டைக் கோயிலும் உள்ளது.

பிரயாகையைப் பொறுத்த வரையில் முக்கியமான பெருவிழா கும்பமேளா ஆகும். தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்தபொழுது அமிர்த கலசம் கிடைத்தது. அசுரர்களுக்கு கிடைக்கச் செய்யாமல் இருக்கும் பொருட்டு அதைத் தேவர்கள் ஹரித்துவார், உஜ்ஜயினி, நாசிக், பிரயாகை ஆகிய நான்கு இடங்களில் வெவ்வேறு காலங்களில் மறைத்து வைத்தனர். அதன் நினைவாக இந்த நான்கு இடங்களிலும் கும்ப மேளா என்னும் பெருவிழா 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகின்றது. பெருமளவிலான மக்கள் இதில் கலந்து கொள்கின்றனர்.

இப்பிரயாகையில் இராமானந்தர் மடம், துர்வாச மகரிஷி ஆச்சிரமம், சக்கரதாரர், நாகேசுவரகோயில், சங்கரர் நினைவு மண்டபம் ஆகியனவும் காணப்படுகின்றன. (தே. ஹ.)

## பிரம்ம வைவர்த்தபுராணம்

வடமொழியிலுள்ள பதினெண்மகாபுராணங்களிலொன்றான இது பிரமை கவர்த்த புராணம் எனவும் அழைக்கப்படுகின்றது. பின்னைய பெயர் தென்னிந்தியாவிலேதான் நிலவுகின்றது. இப்பெரிய நூல் நான்கு காண்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது. பிரமகாண்டம் எனும் முதலாவது காண்டத்திலே ஆதிபுருஷனாகிய பிரமா இப்பிரபஞ்சத்தைப் படைத்தவாறு எடுத்துக்கூறப்படுகின்றது. இங்கு கிருஷ்ணனே பிரமாவாகக் கொள்ளப்படுகின்றார். பழைய கதைகள் சிறப்பாக நாரதர் பற்றியவையும் இதிலிடம் பெற்றுள்ளன. இதிலுள்ள பதினாறாவது அத்தியாயம் மருத்துவம் பற்றியதாகும்.

இரண்டாவதான பிரகிருதிகாண்டம் அனைத்துக்கும் மூலப் பொருளான பிரகிருதி பற்றியதாகும். கிருஷ்ண பகவானுடைய ஆணைக்கேற்ப இம் மூலப்பொருள் துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி, சாவித்திரி, ராதையென்னும் ஐந்து பெண் தெய்வங்களாக விளங்குவதாக கொள்ளப்படுகின்றது.

மூன்றாவது காண்டமாகிய கணேசகாண்டம் யானை முகத்தவராகிய கணேசப் பெருமானின் சிறப்புகளைக் கூறும் பல கதைகளைக் கொண்டதாகும். வேறு மூலங்களிலே பெரும்பாலும் கூறப்படாத வகையிலே கணேசர் இதிலே கிருஷ்ணரின் அவதாரமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளார். நாலாவதான கிருஷ்ண ஜன்மகாண்டம், கிருஷ்ணனின் பிறப்புப் பற்றிக்கூறும். இக்காண்டம் ஏனைய காண்டங்களிலும் பார்க்க மிகப்பெரிதாகும். இதிலே கிருஷ்ணனுடைய பிறப்பு மட்டுமன்றி, அவருடைய வாழ்க்கை முழுவதும், குறிப்பாக அவர் செய்த போர்கள், கோபிகளுடன் அவர் கொண்டிருந்த காதல் லீலைகள் நன்கு வருணிக்கப்பட்டுள்ளன. இப்புராணத்தின் முக்கியபகுதி இதுவே.

கிருஷ்ணனையும் அவனுடைய மிகுந்த அன்புக்குரிய மனைவியான ராதையைப் பற்றிய பல புராதன கதைகளும், பாடல்களுமே இக்காண்டத்திலே பரவலாகச் சிறப்பாக இடம்பெற்றுள்ளன. ராதையே கிருஷ்ணனின் பிரதான சக்தி. இப்புராணத்தின்படி, தெய்வங்கள் அனைவரிலும் பார்க்கக் கிருஷ்ணனே மிகமேலான தெய்வமாகும். பிரமா, விஷ்ணு, சிவபெருமான் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் மேலானவராக அவர் இதிலே சிறப்பிக்கப்படுகிறார்.

இப்புராணத்திலே பல மாஹாத்மியங்கள் (தெய்வங்கள், தெய்வத் திருத்தலங்கள் பற்றிய புகழ்மாலைகள்) இடம் பெற்றுள்ளன. (வி. சி.)

## பிரளயம்

பிரளயம் என்பதனைப் பர+லயம் என்று கொண்டால் விசேடமான (லயம்) மறைவு என்பதே பொருள்.

சிருஷ்டியும், பிரளயமும் மாறி மாறி வருகின்றன. தனி ஜீவனின் ஜனனமும், மரணமும் போல், பகலும் இரவும் போல் விழிப்பும் உறக்கமும் போல் பிரளயம் ஏற்படுகின்றது. பிரளயம் ஏற்படும் முன் கடைசியாக இருந்த பிராணி வர்க்கங்கள் மறைந்து அடுத்தப் பிறவியைப் பெறவேண்டும். அடுத்தப் பிறவியைத் தரவிருக்கும் வினைகளாகிய விதைகள் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பது போல் இயக்கமற்று இருக்கின்றன. இதனைப் பிரளயம் என்றோரும், வினை - வினையைத் தாங்கி நிற்கும் காரண சரீரம், அதனை வெளியாக்கி அனுபவிக்கும் ஸுக்ஷ்ம சரீரம் இவை அனைத்தும் மிகமிக நுண்ணிய முறையில் பிரகிருதி நிலைக்கு மாற்றப்படுகின்றன. அந்தப் பிரகிருதியும் மூலப் பிரகிருதியுமான மாயையினுள் அடங்கி விடுகின்றது. பரம் பொருள் மட்டும் தனித்தும் எல்லாமாயும் உள்ளது இந்த நிலை.

ஐந்தொழில் திரோதானம் ஸம்ஹாரத்திற்குப் பின் பிரம்ம தத்துவத்தில் உலகம் ஒடுங்குகின்றது.அனுக்கிரகம் சிருட்டிக்கு முன் பிரம்மத்திலிருந்து உலகம் வெளியாகின்றது. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற இவ்வைந்து தொழில்களும் ஒவ்வொரு கணத்திலும் நடைபெற்று வருகின்றன. சங்கிலித் தொடர்போல் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இவ்வைந்து தொழில்களும் முழுவதும் நின்று போகும் நிலை மகாப்ரளயம் ஆகும் (B) ஆகும்.

2000 சதுர்யுகங்கள் பிரம்மாவிற்கு ஒருநாள். ஒரு சதுர்யுகம் என்பது 43.2000 ஆண்டுகள் (கலியுகம் 4.32.000. - துவாபதம் - 8.64.000. திரேதா - 12.96.000. கிருதம் - 17.28.000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகள்) பிரம்மாவின் ஒருநாள் 864 கோடி ஆண்டுகள் அதில் பகல் 432 கோடி - இரவு 432 கோடி. இதன் முடிவில் ஏற்படுவதே பிரம்மப் பிரளயம்.

**மஹாப் பிரளயம்**

பிரம்மாவின் பகலாகிய 432 கோடி ஆண்டுகள் மனுக்கள் உலகை ஆள்கின்றனர். ஒவ்வொரு மனுவின் ஆளுகைக் காலமும் மந்வந்தரம் என அழைக்கப்படுகின்றது. தற்பொழுது நடைபெறும் பிரம்ம தினத்தில் ஸ்வாயம்புவர், ஸ்வாரோசிஷர், உத்தமர், தாமஸர், ரைவதர், சாக்ஷிரிஹர் என்ற ஆறு மனுக்களின் அந்தரங்கள் நடைபெற்று விட்டன. வைவஸ்வத மன்வந்த்தரம் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. இதன் பின் ஸாவர்ணி, தக்ஷஸாவர்ணி, பிரம்ஹஸாவர்ணி, தர்ம ஸாவர்ணி, ருத்ர ஸாவர்ணி, தேவ ஸாவர்ணி, இந்திர ஸாவர்ணி என்ற ஏழு மனுக்கள் இனி வர உள்ளனர். ஒரு மனுவின் ஆட்சிக் காலம் 71/6/14 சதுர்யுகங்கள். 30.8571428 ஆண்டுகள். பகலில் 14 மனுக்கள் ஆண்ட பின் பிரம்மாவின் இரவு தொடங்குகின்றது. இரவாகிய ஆயிரம் சதுர் யுகங்களும் ஒரு பிரளய காலம். இந்தப் பிரளம் **பிரும்ம தினப் பிரளயம்** ஆகும்.

ஒவ்வாரு மனுவின் ஆட்சியின் முடிவிலும் ஒரு பிரளம் உண்டு. இது மன்வந்திரப் பிரளயம் - அஹந்திரம் பிரளயம் - வைக்ருதிக பிரளயம் எனப்படும். மன்வந்திரத்தின் இறுதியிலும் அவாந்திரப் பிரளயம் நிகழ்கின்றது. இதில் பூலோகம் மறைகிறது. அடுத்த மன்வந்திரத்தின் அதிபதியாக இருக்கத்தக்கவர், வேதத்தைக் காப்பாற்றும் ஸப்தரிக்ஷிகள், உணவு விதைகள், மனிதன் முதலான எல்லாப் பிராணி இனத்தையும் அடுத்த மன்வந்தரத்தில் துவக்கி வைக்கக் கூடியவர்கள். இவர்கள் தான் காப்பாற்றப்படுவார்கள். மற்றவை அனைத்தும் அந்தப் பிரளய நீரில் கரைக்கப்பட்டுச் சூட்சுமமாக்கப்பட்டு மஹாபூத நிலைக்குக் கொணரப்படுகின்றன. அவைகள் தன் மாத்திரைகளாக்கப்பட்டு திரோதானமடைகின்றன. அடுத்த மன்வந்தர ஆரம்பத்தில் பிரளய காலத்தில் காப்பாற்றப்பட்ட மனு முதலியவர்களால் சிருட்டி துவக்கப்படும் பொழுது பூஉலகமும் தன் மாத்திர நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு ஐந்து மஹாபூதங்களாகி பிராணிகளாகவும், மரம் செடி கொடிகளாகவும் படைக்கப் படுகின்றன. பிரகிருதி; பிரகிருதி - விகிருதி; விகிருதி என்ற மூன்று நிலைகளிலுள்ள மூலப் பொருள்களில், விகிருதி என்ற நிலையிலுள்ள மூலப் பொருள்கள் மட்டும் இலயமாவதால் இதனை **வைகிருதிகப் பிரளயம்** என்பர்.

நமது வாழ்வில் ஒவ்வொரு கணத்திலும் முத் தொழில்களும் நடைப்பெறுகின்றன. ஒரு பொருள் மற்றொரு பொருளாக மாறும் பொழுது ஒன்றின் அழிவும் மற்றொன்றின் படைப்பும் இடையில் காத்தலும் நிகழ்கின்றன. அதே வேகத்தில் வினைப் பயனைக் கணக்கிட்டு மூலப்பொருள்களை அதற்கேற்ப மாற்றி அமைத்து ஸ்தூல சூக்ஷ்ம காரண தேகங்களின் மாற்றமும் நடைப்பெறுகின்றது. வினைப் பயனுக்கேற்ப மூன்று தேகங்களை அமைக்கும் பந்தமும் பந்தத்திலிருந்து விடுவிக்கும் அனுக்கிரகமுமாக நிகழ்ந்து கொண்டிருக்கும். இது நித்தியமும் நடைபெறுவதால் **நித்தியப் பிரளயம்** எனப்படும். ஒவ்வொரு இரவிலும் அடையும் ஒரு பிரளயமே ஆத்மாவிடம் மற்றவை அடங்கும். இதுவும் நித்தியப் பிரளயமே ஆகும்.

பிரம்ம தினத்தைக் கல்பம் என்பர். தற்பொழுது நடப்பது சுவேதவராஹ கல்பம். பிரம்ம தினத்தின் மாலைக்கு பின் இரவு தொடங்கும் பொழுது ஏற்படும் பிரளயம் **கல்பாந்தப் பிரளயம்** இதில் பூலோகம் புவர்லோகம் ஸீவர் லோகம் எனும் மூன்றும் மறையும். மனு முதலியவர்களும் மறைவர். பிரகிருதி தவிர மற்றவை மறைவதால் இது **பிராகிருதப் பிரளய**மாகும்.

மஹாகல்பம் எனும் பிரம்மாவின் ஆயுட்காலம் முடிந்ததும் சிருஷ்டியும், ஸ்திதியும் நின்று விடுகின்றன. பிரம்மா ஒருவனல்ல. ஒவ்வொரு கல்பத்திற்கும் புதிய பிரம்மாக்கள். இதனை திருநாவுக்கரசர் தனது ஆதிபுவனத் திருக்குறுந்தொகையில்

*"நூறுகோடி பிரமர்கள் நொந்தினார்*
*ஆறுகோடி நாராயணர் அங்ஙனே*
*ஏறுகங்கை மணலெண்ணில் இந்திரர்*
*ஈறி லாதவன் ஈசன் ஒருவனே"*

என்று குறிப்பிடுகின்றார்.

மஹாகல்ப்ப முடிவில் பதினான்கு உலகங்களும் மறைகின்றன. மும்மூர்த்திகளும் செயலிழந்து தேவியிடம் ஒடுங்குகிறார்கள். ஈசன் ஐம்பூதங்களை தன் மாத்திரங்களிலும், தன்மாத்திரங்களை, அகங்காரத்திலும் அகங்காரத்தை மஹத்திலும் மஹத்தை அவ்யக்தத்திலும், அவ்யக்தத்தை மூலப் பிரகிருதியிலும், மூலப் பிரகிருதியை மாயையிலும் ஒடுக்கி விடுகிறார். மகாகல்பத்தில் இறைவன் ஊழித்தாண்டவம் ஆடி இறுதியில் பராசக்தியிடம் ஒடுங்கி விடுகின்றார் இது மஹாப்பிரளயம். பின்னர் தேவியிடம் சிருஷ்டிக்கான சங்கல்பம் எழும்பொழுது சதாசிவன் தேவியிடம் ஒடுங்கியவைகளை வெளிக்கொணர்ந்து, உலகப் படைப்பிற்கான மூலப் பிரகிருதி முதலியவற்றை விடுவிக்கின்றார். இந்த அனுக்ரஹம் நிகழ்ந்ததும் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்ற முத்தொழில்களும் மீண்டும் தொடங்குகின்றன.

பிரகிருதி வரை ஏற்படும் இந்தப் பிரளயம் கீழ்க்கண்ட முறையில் அமைகின்றது. நூறாண்டுகள் பூமியில் மழை இருக்காது. உணவுப்பயிர்கள் மறையும். பிராணிகள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு மாண்டவரை உண்டுவாழ்வர். பூமி, கடல், பிராணிகளின் உடல் முதலியவற்றிலுள்ள நீர்ப் பகுதியை பிரளயகால சூரியன் வற்றச்செய்கிறான். திரும்ப மழையாக விடாமல் தன்னுள் அடக்கிக்கொள்கின்றான். பிரளயகால நெருப்பு நூறாண்டுகள் எரிகிறது. நன்கு எரிந்த கோமயப் பிண்டம் போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமாகின்றது. அதனைப் பேய்க்காற்று அணைந்து எரிந்தவற்றைச் சாம்பலாக்கிப் புழுதியாக்கிப் பறக்க விடுகின்றது. இதனைத் தொடர்ந்து நூறாண்டுகள் பிரளயமேகங்கள் தொடர்ந்து மழை பொழிகின்றன. நீரில் உலகம் கரைந்து விடுகின்றது. பூமியின் இயற்கை குணமான மணம் நீரில் கரைந்து மறைந்ததும் பூமி தத்துவம் நீரில் லயமடைகின்றது. நீர் வற்றி நெருப்பில் மறைகிறது. நெருப்பு காற்றில் மறைகிறது.

காற்று ஆகாசத்திலும், ஆகாசமும் இந்திரியங்களும் மனமும் பிராணனும் அகங்காலத்திலும், அகங்காரம் மஹத்திலும், மஹம் அவ்யக்தத்திலும், அவ்யக்தம் மூலப்பிரகிருதியிலும், மூலப்பிரகிருதி மாயையிலும், மாயை பிரும்மத்திலும் மறைகின்றன. தோன்றிய முறையே மறைவும் ஏற்படுகின்றது. கடைசியில் புகுந்தது முதலில் வெளியாகி மற்றவற்றின் தோற்றத்திற்குக் காரணமாகின்றது. (வ. வை.)

## பிரளயாகலர்

சைவ சித்தந்தம் கூறும் முப்பொருள்களுள் ஒன்றாக ஆன்மா விளங்குகின்றது. இவ் ஆன்மாவானது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களால் பீடிக்கப்பட்டது. அந்த அடிப்படையில் ஆன்மாவும் மூவகைப் பட்டது. அவை சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் எனப்படுவர்.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களையும் கொண்டவர்கள் சகலர். ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களைக் கொண்டவர்கள் பிரளயாகலர். ஆணவம் என்னும் ஒரு மலத்தை மட்டும் கொண்டவர்கள் விஞ்ஞானகலர் ஆவர்.

பிரளயாகலர் என்பவர் பிரளயம் ஒடுங்கும் காலத்தில் முதல்வன் (இறைவன்) தானே குருவாய் வந்து உணர்த்துவதால் தம் செயலற்றவராய் பந்தம் நீக்கப் பெற்றவராய் விளங்குவர். இவர்களுக்கு மாயாமலம் இல்லாததால் முக்குண மயக்கம், சுகதுக்க மோகம் என்பன இல்லை. இதன் காரணமாக ஆகாமிய கன்மம் அதிகரிக்கும். எனவே இவர்கள் சில பிறப்புக்களிலேயே முத்தி பெற்றுவிடுவர்.

பிரயாகலரை சிவஞான முனிவர் இயற்கைப் பிரளயாகலர், சாதனைப் பிரளயாகலர் என இரு பிரிவாகக் கூறுகிறார். இயற்கைப் பிரளயாகலர் என்பவர் ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களின் கட்டுக்களை மட்டும் கொண்டவர்கள்.

சாதனைப் பிரளயாகலர் என்பவர் இடையில் அமைந்த சாதனைகளால் பரிபக்குவ விசேடம் பெற்று மாயாமலபந்தம் நீங்கி ஆணவம், கன்மம் என்னும் இரு மலங்களை உடையவர்களாவர்.

(ச. து.)

## பிராகிருதம்

பிராகிருதம் என்பது புராதன காலத்தில் இந்தியாவில் வழங்கிய மொழிகளில் ஒன்றாகும். அது வேதங்கள் பிரதிபலிக்கும் சமஸ்கிருத மொழியின் வழிவந்ததென்பது மொழிவரலாற்று அறிஞரின் கொள்கையாகும். ஆரியமல்லாத மொழிகள் பலவற்றைப் பேசியவர்களின் மத்தியிலே புராதனமான சமஸ்கிருதம் செல்வாக்குப் பெற்றதும் அது உரு மாறிவிட்டது. வேற்றுமொழிச் சொற்கள் பல அதிற் கலப்புற்றன. சொல்லமைதியிலும் உச்சரிப்பிலும் பெருமாற்றங்கள் ஏற்பட்டன. பிராகிருதம் இலகுபடுத்தப்பட்ட பேச்சவழக்கான மொழியாகும். திராவிட மொழிகளின் செல்வாக்கும் அதிற் கணிசமான அளவில் ஏற்பட்டுள்ளது.

பிராகிருத மொழியினைப் பற்றிக் கவனிக்க வேண்டிய சில பிரதான அம்சங்கள் உண்டு. அது வட இந்தியாவின் பாகங்கள் பலவற்றிலே பேச்சுமொழியாக வழங்கியது. பிராகிருத மொழி வழக்கிலே பிராந்திய வேறுபாடுகள் காணப்பட்டன. உத்தராபதம் (வடமேற்குப் பகுதி), மத்தியதேசம், (மத்திய பகுதி), கிழக்குப் பகுதி ஆகியவற்றில் வழங்கிய பிராகிருத வழக்குகளிற் கணிசமான வேறுபாடுகள் இருந்தன. காந்தாரி, சௌரசேனி, மாகதி, அர்த்தமாகதி, மஹாராஷ்ட்டிரி என்பன தனித்துவமான பிராகிருதங்களாகும். மராட்டிய தேசத்திற்குத் தென்பாலான நாடுகளிற் பயன்பட்ட பிராகிருதத்தைப் பைசாசி என்று குறிப்பிட்டனர். அங்கு பிராகிருதம் பேச்சு வழக்கு மொழியாகவன்றித் தொடர்புமொழியாகவே வழங்கியது.

அசோகன் காலம் முதலாக கி.பி. நான்காம் நூற்றாண்டு வரை பிராகிருதம் இந்திய துணைக் கண்டத்தில் ஒரு தொடர்பு மொழியாகப் பயன்படுத்தப்பட்டது. அரசர்கள் பிராகிருதத்தை ஆவண மொழியாகப் பயன்படுத்தினார்கள். திராவிட மொழிகள் வழங்கிய கர்நாடகம், ஆந்திரபிரதேசம் ஆகியவற்றிலும் ஈழத்திலும் பிரகிருதமே ஆவண மொழியாக வழங்கியது. திராவிட மொழிகளிற் பிராகிருதச் செல்வாக்குக் குறிப்பிடத் தக்களவில் ஏற்பட்டுள்ளது. மத்திய காலத்தில் உருவாகிய ஹிந்தி, பஞ்சாபி, குஜராத்தி, மராத்தி, வங்காளி, காஷ்மீரி, சிந்தி போன்ற இந்திய மொழிகள் பிராகிருதத்தை மூலமாகக் கொண்டவை. பிராகிருதச் செல்வாக்கினால் அங்கு வழங்கிய புராதன மொழிகள் பலவிடங்களில் வழக்கொழிந்துவிட்டன. இலங்கையிலுள்ள ஆதிகாலச் சாசனங்கள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளன. அதன் மேலோங்கிய செல்வாக்கினால் அங்கு நிலவிய ஆதியான மொழிகள் தென்னிலங்கையில் அழித்துவிட்டன. இலங்கையில் வழங்கிய பிராகிருதம் மூலமாகவே சிங்கள மொழி உருவாகியது.

சமணர், பௌத்தர் ஆகியோரின் போதனா மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் பிராகிருதம் வழங்கியது. பரத கண்டத்திலே பல நூற்றாண்டுகளாக அதனைத் தொடர்பு மொழியாகக் கொண்டனர். மத்தியாசியாவிலும் பிராகிருதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்குப் பெற்றிருந்தது. அங்குள்ள பட்டினங்களில் வணிகரும் பௌத்த சமயத்தவரும் பிராகிருத மொழியைப் பயன்படுத்தினர். பிராகிருத மொழியில் அமைந்த பல சாசனங்களும் நூல்களின் பகுதிகளும் அங்கு கிடைத்துள்ளன.

பிராகிருதம் இலக்கிய வடிவம் பெறுவதற்கு சமண, பௌத்த சமயங்களே காரணமாயிருந்தன. கிழக்கிந்தியாவில் வைதீக கலாசாரம் மிகுந்த செல்வாக்கினை அடையவில்லை. வைதீக வழிபாட்டு நெறிக்கும் அதற்கு ஆதாரமான சமுதாய வழமைகளுக்கும் எதிரான பிரசாரங்கள் அங்கே உதயமாகின. மகாவீரரும் கௌதம புத்தரும் பேச்சு வழக்கான பிராகிருத மொழியிலே தங்கள் கருத்துகளைப் போதனை செய்தனர்.

சமணரதும் பௌத்தர்களதும் புராதனமான நூல்கள் பிராகிருத மொழியில் அமைந்தவை. திரிபிடகத்திலும் சமணரின் மறை நூல்களிலும் சமகாலப் பிராகிருத மொழியின் இயல்புகளைக் காணலாம். மோரியப் பேரரசனாகிய அசோகனது காலம் முதலாகப் பிராகிருதம் ஆவண மொழியாக அரசர்களாற் பயன்படுத்தப்பட்டது. பரதகண்டத்தின் தென்னாடுகளிற் பிராகிருத மொழியினை ஆதியில் வணிகர் அறிமுகஞ் செய்தனர் என்று கருதலாம். தக்கிணத்தில் ஆதிபத்தியம் பெற்றிருந்த சாதவாகனரும் அவர்களின் பின் வந்த மன்னர் குலத்தவரும் பிராகிருத மொழியைப் பயன்படுத்தினார்கள்.

பிராகிருத மொழிகளின் வளர்ச்சியில் இரண்டாவது கட்டத்தை அஸ்வகோசரின் (கி.பி. 100) நாடக நூல்களிற் காணலாம். அக்காலம் முதலாகவே அர்த்தமாகதி, மாகதி, சௌரசேனி, மகாராஷ்ட்டிரி என்ற மொழி வேறுபாடுகளை அவதானிக்க முடிகின்றது. மகாவீரரும் கௌதமபுத்தரும் தங்கள் போதனைகளிற் பிரதேசவழக்கான அர்த்தமாகதியைப் பயன்படுத்தினார்கள் என்பதில் ஐயமில்லை. ஆயினும், அவர்களின் போதனைகள் அடங்கிய மறை நூல்கள் சற்று வேறுபட்ட மொழிவழக்கினைப் பிரதிபலிக்கின்றன. சமணரின் ஆதியான மறைநூல்கள் மறைந்து ஒழிந்துவிட்டன. ஸ்வேதாம்பர சமணரின் மிகப் பழைய நூல்கள் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கு உரியவை.

அவற்றிலே மஹாராஷ்ட்டிர பிராகிருதத்தின் இயல்புகள் கூடுதலாகக் காணப்படுகின்றன. பௌத்தர்களின் திரிபிடகத்தைப் பொறுத்த வரையில் அதன் மிகப் புராதனமான வடிவங்கள் தேரவாதச் செல்வாக்கு மேலோங்கியுள்ள இலங்கை, மியன்மார் (பர்மா), தாய்லாந்து ஆகியவற்றில் உள்ளன. ஆயினும், அவற்றை ஆதாரமாகக் கொண்டு உருவான பாளி மொழியின் மூலங்கள் பற்றி அறிஞரிடையே வேறுபாடான கருத்துகள் உண்டு. சிலர் அதனை மாகதியின் வளர்ச்சியாகக் கொள்வர். வேறு சிலர் பாளி மொழி மத்தியதேசத்துக் கௌசாம்பி, அவந்தி என்பவற்றின் பிராகிருதங்களோடு கூடிய தொடர்புகளைக் கொண்டது என்று கொள்வர்.

தென்னாசியாவிற் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட 3500 வரையான கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவற்றுட் கணிசமான அளவிலுள்ளவை இலங்கையிற் கிடைத்துள்ளன. கி.பி. நான்காம் நூற்றாண்டளவிலே தொடர்பு மொழி என்ற வகையிற் பிராகிருதம் வழக்கொழிந்தது. சமஸ்கிருதம் அதன் இடத்தைப் பெற்றுவிட்டது. அக்காலமளவிலே சமணரும் பௌத்தரும் சமஸ்கிருத மொழியில் நூல்களை எழுதத் தொடங்கினார்கள். ஆயினும், அதன் பின்பும் பிராகிருத மொழியிற் சில நூல்கள் எழுதப்பட்டன. புலவர் பலர் எழுதிய தனிப்பாடல்கள் கிடைத்துள்ளன. ஹால என்பரின் காதாசப்தசதீ என்பது அத்தகைய பாடல்கள் பலவற்றின் தொகுப்பு நூலாகும். அதில் அடங்கிய பாடல்கள் இனிய சந்தங்களில் அமைந்தவை.

அவற்றிற் பல பெண்புலவர்களின் பாடல்களாகும். புராதன காலத்துப் பிராகிருத நூல்களில் முதன்மையானது குணாத்யரின் பிருகத்கதாவாகும். அது பைசாசி பிராகிருதத்தில் எழுதப்பட்டுள்ளது. ஷேமேந்திரர், சோமதேவர் ஆகியோர் அதனைச் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்துள்ளனர். பிருகத்கதாவை அடிப்படையாகக் கொண்டு பல நூல்கள் எழுந்தன.

சமஸ்கிருத மொழியிலுள்ள நாடகங்களிலே பிராகிருத மொழிப் பகுதிகள் உண்டு. அவற்றிலே சம்வாதங்களிற் கதாநாயகிகளும் பிற பெண்களும் பணிமக்களும் பிராகிருத மொழியிற் பேசுவதைக் காணலாம். காளிதாசர் முதலியோரின் பிரபலமான நாடகங்களில் மகாராஷ்ட்டிரி பிராகிருதம், சௌரசேனிப் பிராகிருதம் என்பனவே இடம்பெற்றுள்ளன.

பரதகண்டத்திற்கு வெளியே, இந்தியப் பண்பாடு பரவிய தேசங்களிற் பிராகிருதம் செல்வாக்குப் பெற்றிருந்தது. தென்கிழக்காசியாவிற் கிடைத்துள்ள மிகப் புராதனமான சாசனங்கள் பிராகிருத மொழியில் அமைந்தவை. மத்தியாசியாவிலே, 1892 இல், கோட்டானிற் பிராகிருதமொழியில் எழுதிய தம்மபத ஏட்டுச் சுவடிகள் கிடைத்துள்ளன. துருக்கிஸ்தானிற் கரோஷ்டி லிபியில் எழுதிய பிராகிருத ஆவணங்கள் பல கிடைத்தமை கவனித்தற்குரியதாகும். (சி. ப.)

## பிராமி வரிவடிவங்களும் சாசனங்களும்

பிராமி என்பது புராதன காலத்திலே பரத கண்டத்தில் வழங்கிய ஒரு வகையான எழுத்துமுறை. ஏறக்குறைய கி.மு. 260 முதல் கி.பி. 350 வரை பிராமி எழுத்துகள் பயன்படுத்தப்பட்டன. அங்கு கிடைத்துள்ள மிகப் பழைய ஆவணங்கள் பிராமியில் எழுதப்பட்டுள்ளன. அவற்றிலே அசோகனுடைய சாசனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தால் முற்பட்டவை. அச்சாசனங்களிற் காணப்படும் எழுத்துகள் வளர்ச்சி பொருந்திய நிலையிற் காணப்படுகின்றன. அவை செம்மையாகவும் அழகான முறையிலும் வெட்டப் பட்டுள்ளன.

பிராமி எழுத்துகளின் பரிணாம வளர்ச்சியினை அறிந்துகொள்ள முடியவில்லை. அதன் உற்பத்தியினை அடையாளங் காண முடியவில்லை. ஹரப்பா பண்பாட்டு மக்கள் ஒருவகையான எழுத்துமுறையினைப் பயன்படுத்தினார்கள். ஆனால் அதற்கும் பிராமி வரிவடிவங்களுக்கும் இடையிலே தொடர்புகளை நிரூபிப்பது சாலாக்காரியம். வேதாங்கங்கள் சிலவற்றிலே லிபி (எழுத்து) பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமை கவனித்தற்குரியது. மத்தியதரைக் கடற் பிரதேசத்தில் வழங்கிய சில எழுத்துகள் வடிவமைப்பிற் பிராமி அக்ஷரங்களை ஒத்துள்ளன. பிற நாடுகளோடு ஏற்பட்ட வாணிபத் தொடர்புகளின் பயனாகப் பிராமி வரிவடிவங்கள் இந்திய துணைக்கண்டத்தில் உற்பத்தியாகின என்று கருதலாம்.

பரதகண்டத்து எழுத்தியல் வரலாற்றிற் பிராமி வரிவடிவங்களுக்குச் சிறப்பிடமுண்டு. இந்திய மொழிகளை எழுதுவதற்குப் பயன்படும் எழுத்து முறைகள் எல்லாம் பிராமி வரிவடிவங்களை மூலமாகக் கொண்டவை. பிராமியிலிருந்து வளர்ச்சி பெற்றது தேவநாகரம் என்னும் எழுத்தின வகையாகும். அது குப்தப் பேரரசரின் காலத்திலே வழக்கில் வந்தது. சமஸ்கிருத மொழி ஆவணங்களையும் நூல்களையும் வட இந்தியாவிலும் தக்ஷிணாபதத்திலும் தேவநாகரத்தில் எழுதினார்கள். அத்துடன் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் தென்கிழக்காசிய நாடுகளிலும் தேவநாகரம் ஓரளவில் வழங்கியது. தேவநாகரத்தின் மூலம் வங்காளி, ஹிந்தி, மகாராஷ்ட்ரி, குஜராத்தி முதலிய வடஇந்திய மொழிகள் எழுதப்படும் வரிவடிவங்கள் வளர்ச்சி பெற்றன.

பரதகண்டத்திலே எல்லாத் தேசங்களிலும் பிராகிருத மொழி வாசகங்களை எழுதுவதற்குப் பிராமி எழுத்துகளைப் பயன்படுத்தினார்கள். பிராகிருத மொழியிலே பிராந்திய வேறுபாடுகள் காணப்பட்டன. அந்த மொழியிற் காந்தாரி, சௌரசேனி, அர்த்த மாகதி, மாகதி, மகாராஷ்டரி என்ற தனிப்பிரிவுகள் இருந்தன. வட இந்தியப் பிராந்தியங்களிற் பேச்சுவழக்கு மொழியாகிவிட்ட பிராகிருதம் தென்னாசியா முழுவதிலும் ஒரு தொடர்பு மொழியாக விளங்கியது. அந்த நிலை ஏற்படுவதற்கு வாணிபமும் சமண, பௌத்த சமயங்களும் காரணமாய் இருந்தன என்று கருதலாம். சமூக, தேச வேறுபாடுகளையும் மொழி வேறுபாடுகளையும் கடந்த நிலையில் வாணிபம், அரசியல், சமயம், பண்பாடு ஆகிய துறைகளிலே தொடர்பு கொள்வதற்கும் கருத்துகளைப் பரிமாறுவதற்கும் ஒரு பொது மொழி தேவைப்பட்டது. அதன் காரணமாகவே பிராகிருதம் தொடர்பு மொழியானது. நான்காம் நூற்றாண்டளவில் அது அந்த நிலையை இழந்துவிடச் சமஸ்கிருதம் அதன் இடத்தை பெற்றுவிட்டது. சமஸ்கிருத வாசகங்கள் எழுத்து வடிவம் பெற்ற பொழுது பிராமி தேவநாகரமாகப் பரிணாம வளர்ச்சி அடைந்துவிட்டது.

இந்தியாவில் ஏறக்குறைய 2000 பிராமிச் சாசனங்கள் கிடைத்துள்ளன. அவை தானசாசனங்கள், அரசப் பிரகடனங்கள் என இருவகைப்படும். அசோக சாசனங்கள் தான சாசனங்களன்று. அவை அரசனுடைய சிந்தனைகள் அடங்கிய வாசகங்களைக் கொண்டவை. அவை நிர்வாக அமைப்பிலுள்ள அதிகாரிகள், நாட்டு மக்கள் எல்லோரும் படித்தற்குரிய பிரகடனங்கள். அரசாங்க அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டிய பணிகள் பற்றிய கட்டளைகளும் அவற்றில் இடம்பெற்றன. அசோகனுடைய சாசனங்கள் பாறைக் கல்வெட்டுகள், சிறிய பாறைக் கல்வெட்டுகள் தூண் கல்வெட்டுகள் என மூவகைப்படும். அவற்றுள் முன்னைய இரு வகைகளைச் சேர்ந்தவை அவனுடைய தர்மக் கொள்கை பற்றியவை. தூண் சாசனங்கள் பௌத்த சங்கம் தொடர்பாக அவன் ஏற்படுத்திய பிரகடனங்களாகும்.

அசோகனது கல்வெட்டுகள் தவிர்த்த பிராமிச் சாசனங்கள் பெரும்பாலும் தான சாசனங்களாகும். அவை அரசரும் பிறரும் சமண முனிவருக்கும் பௌத்த சங்கத்தாருக்கும் பிராமணருக்கும் ஆசிவிகருக்கும் வழங்கிய தானங்கள் பற்றியவை. மோரியரின் ஆட்சி ஒழிந்த பின்பு சாதவாகனரும் கலிங்கத்து அரசரும் யவனரும் குஷானரும் தங்கள் ஆவணங்களைப் பிராமி வரிவடிவங்களிலும் பிராகிருத மொழியிலும் எழுதினார்கள். முத்திரைகளிலும் நாணயங்களிலும் அரசரதும் பிறரதும் பெயர்களும் பட்டப்பெயர்களும் பிராமி எழுத்துகளிலே எழுதப்பட்டன.

திராவிட மொழிகள் பேச்சுவழக்கு மொழிகளாக விளங்கிய கர்நாடகம், தெலுங்குதேசம் ஆகியவற்றிலுள்ள புராதனமான சாசனங்கள் பிராமி வரிவடிவங்களிலும் பிராகிருத மொழியிலும் அமைந்துள்ளன. அங்கு வழங்கிய எழுத்து முறையிலும் பிராகிருத மொழியிலும் சில வேறுபாடுகள் உண்டு. பட்டிப்ரோலுப் பிராமி என்பது சில சிறப்பியல்புகளைக் கொண்டது. அங்கு எழுதிய சாசனங்களிற் காணப்படும் பிராகிருதம் ஒரு கலப்பு மொழியாகும். வட இந்திய பிராமிச் சாசனங்களிற் காணப்படாத சில சொற்கள் அவற்றிலே இடம்பெற்றுள்ளன. அத்தகைய சொற்கள் திராவிடமொழிச் சொற்களாகும். வேங்கி தேசத்திலுள்ள தேவகுலங்களுக்கும் பிரம்மதேயங்களுக்கும் காஞ்சிபுரத்துப் பல்லவ அரசர்கள் வழங்கிய தானங்கள் பற்றிய விவரங்களை வர்ணிக்கும் பட்டயங்கள் முதலிற் பிராகிருத மொழியிலும் பின்பு சமஸ்கிருத மொழியிலும் எழுதப்பட்டன.

இலங்கையில் ஏறக்குறைய 2000 பிராமிச் சாசனங்கள் கிடைத்துள்ளன. அவை பிராகிருத மொழிச் சாசனங்கள். அவற்றிலே கையாளப்படும் பிராகிருதம் ஒரு செயற்கை முறையிலான கலப்புமொழியாகும். சாசன வாசகங்கள் மிகச் சுருக்கமானவை. ஒரு சில பொதுச் சொற்களே அவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் மீண்டும் வருகின்றன. இந்தியப் பிராகிருத மொழிச் சாசனங்களிற் காணப்படாத பல சொற்கள் அவற்றில் வருகின்றன. அவற்றிலுள்ள பிராகிருதம் அல்லாத சொற்கள் தமிழ், பிற திராவிடமொழிகள். புராதன காலம் முதலாக இலங்கையில் வாழ்ந்த குருணிக் கற்கால மக்கள் பேசிய மொழி என்பவற்றின் மூலமான சொற்கள் அவற்றிலே அடங்கியுள்ளன. அவற்றின் வேற்று மொழிச் சொற்கள் பெயர்ச்சொற்களாகும். மக்களின் பெயர்களும் குலப்பெயர்களும் இனப்பெயர்களும் இடப்பெயர்களும் பதவிப் பெயர்களும் அவற்றில் உள்ளன. ஆதி காலத்தில் மாகதி, சௌரசேனி என்ற வகைப் பிராகிருதங்களைப் பேசிய பௌத்த சங்கத்தார் வட இந்தியாவிலிருந்தும் வந்து அநுராதபுரம், மிகிந்தலை போன்ற தலங்களிலே வாசஞ்செய்த காலத்தில் தமிழ், ஆதி ஒஸ்ற்றலேசிய மொழி முதலியவற்றைப் பேசிய மக்களிடையே தர்மோபதேசஞ் செய்தனர். அவர்கள் போதனை செய்த பௌத்தசமய இலக்கியம் பிராகிருதத்தில் அமைந்திருந்தது. சங்கத்தாருக்கு வழங்கிய தான விவரங்கள் அடங்கிய வாசகங்கள் பிராகிருத மொழியிலும் பிராமி வரிவடிவங்களிலும் சாசனங்களாகக் குகைகளின் விழிம்புகளில் எழுதப்பட்டன. அந்தச் சாசனங்களிற் பன்மொழிச் சொற்கள் இடம்பெறுவது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றாகும்.

இலங்கையின் பல பகுதிகளிற் பௌத்த சமயம் பரவிய முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் தமிழ் மொழி பேசியவர்கள் வாழ்ந்தமைக்குப் பிராமிச் சாசனங்கள் ஆதாரமாகின்றன. அவற்றிலே தமிழ்ச் சொற்களும் பிற திராவிடமொழி சொற்களும் அடங்கியுள்ளன. தமிழ் மொழிக்குச் சிறப்பாகவுள்ள தமிழ்ப் பிராமி எழுத்துகள் அவற்றிலே காணப்படுகின்றன. பிராகிருதச் சொற்கள் பல தமிழ்ச் சொல்லமைதிகளுக்கு ஏற்ப விகாரமாகி வருகின்றன.

அச்சாசனங்களிற் காணப்படும் பருமக (ன்), பருமகள, மருமக, மருமான, மருக, மாற(ன்), அய, அபி, வேள போன்றவை தமிழ்ச் சொற்களாகும். பிராகிருத மொழியில் வேற்றுமொழிச் சொற்களை எழுதுமிடத்து அவற்றை அம்மொழியின் இலக்கண மரபுகளுக்கமைய அமைத்துள்ளனர். பிராகிருதத்திலே சொற்கள் மெய்யெழுத்தில் முடிவதில்லை. அவை பொதுவாக உயிரேறி வரும். எனவே பருமகள், மருமகன், மருமான், அய் (ஐ) என்னும் சொற்கள் முறையே பருமகள, மருமகன, மருமான, அய என்று எழுதப்படும்.

ஐ (அய்) என்ற சொல் தமிழ் வழக்கில் அரசன், தலைவன், இறைவன், முதியவன் என்னும் பொருள்களில் வரும். ஐ (அய்) என்பது பிராமிச் சாசனங்களில் அய என வருகின்றது. அது குமாரர்களில் மூத்தவனைக் குறிக்கும் வகையிலே கையாளப்படுகின்றது. சிங்கள மொழி வழக்கில் மூத்த சகோதரனை அய்யா என்பர். பிராகிருதத்தில் ஒற்றுக்கள் இரட்டிப்பதில்லை. சொல்லின் இறுதியில் மெய்யெழுத்துகள் வருவதில்லை. எனவே அய்யன் அல்லது அய் என்ற சொல் அய என்ற உருவத்தைப் பெறும். ஆர்ய என்ற சமஸ்கிருதச் சொல்லின் மூலமாக அய என்னும் பிராகிருத வடிவம் தோன்றியது என்று கொள்ளவியலாது ஆர்ய என்பது பாளி மொழியில் அரிய என வரும் என்பதை மகாவம்சத்தின் மூலமாக அறியமுடிகின்றது.

இலங்கைப் பிராமிச் சாசனங்களில் வரும் அபி$_3$ என்ற சொல் அய என்பதன் பெண்பால் வடிவமாகும். அது அவ்வி, அவ்வை (ஔவை) என்ற சொற்களுக்கு நிகரானது. அவை தலைவி, முதுமகள், மதிப்பிற்குரியவள் என்ற பொருள்களில் வரும். கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் அபி$_3$ என்ற சொல் அதே பொருள்களைக் குறிக்கும் வகையில் வழங்கிவருகின்றமை குறிப்பிடற்குரியது.

தமிழ்ப் பிராமிக்குச் சிறப்பாகவுள்ள ள, ழ, ற, ன ஆகிய எழுத்துகளின் வடிவங்கள் இலங்கைப் பிராமிச் சாசனங்களில் வருவது அவற்றின் மற்றுமொரு சிறப்பம்சமாகும். ராஜா என்னுஞ் சொல்லில் ரா காரத்துக்குப் பதிலாலா றா காரமும் வேள என்பதில் ள கரமும் தமேழ என்பதில் ழ கரமும் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடற்குரியது. தென்னிலங்கையிலே கிடைத்துள்ள புராதனமான நாணயங்களில் தமிழ்மயப்படுத்தப்பட்டுள்ள சில பிராகிருத மொழிப் பெயர்கள் அன் விகுதி பெற்றுள்ளமை கவனித்தற்குரியது. அதிகாரமும் செல்வாக்கும் பெற்ற தமிழர்கள் இலங்கையின் தென், தென்கிழக்குப் பகுதிகளில் கி.பி முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளிலே வாழ்ந்தமைக்கு இத்தகைய தொல்பொருட் சின்னங்கள் சான்றாய் அமைந்துள்ளன. தென்னிலங்கையில் வாழ்ந்த நாகர் அக்காலமளவிலே தமிழ், பிராகிருதம் ஆகிய இரு மொழிகளையும் கையாண்டுள்ளமைக்கு உதாரணமான நாணயவாசகம் உண்டு. திஸபுர தா(ட்)டணாகரசந் என்ற சொற்கள் ஒரு நாணயத்தில் எழுதப்பட்டுள்ளன. நாகன் ஒருவனுடைய பெயர் இதில் அடங்கியுள்ளது. அவனுடைய பெயர் தா(ட்)ட(ன்). ஒற்றுக்கள் பிராகிருதத்தில் இரட்டிப்பதில்லை என்பதால் தாட்ட(ன்) என்பதை தாட(ன்) என்று எழுதியுள்ளனர். அம்மொழியிற் சொற்கள் மெய்யெழுத்துகளில் முடிவதில்லை என்பதால் தாட்டன் என்ற பெயரின் ஈற்றெழுத்தான னகர மெய்யும் மருவிவிட்டதென்று கொள்ளலாம்.

ணாக என்பதை அடுத்து ரசந என்ற எழுத்துகள் உள்ளன. ராசன் என்பதே இவ்வாறு எழுதப்பட்டுள்ளது என்பது அவற்றைப் பற்றிய யதார்த்த பூர்வமான விளக்கமாகும். பிராமியில் நெடிலைக் குறிலாக எழுதும் வழக்கமுண்டு. அதன் அடிப்படையில் ர என்பதை ரா என்று கொள்ளமுடிகின்றது.

இலங்கையிலே பொது வழக்காகிவிட்ட பிராமி வரிவடிவங்கள் காலப்போக்கிலே சிங்கள எழுத்துமுறையாக வளர்ச்சி பெற்றன. கி.பி. நான்காம் நூற்றாண்டு முதலாக இம்மாற்றம் ஏற்பட்டது. அதே போலப் பிராமிச் சாசனங்களின் மூலம் அறிமுகமாகின்ற கலப்பு மொழியான பிராகிருதம் காலப்போக்கிலே சிங்கள மொழியாக அபிவிருத்தி பெற்றது. சிங்கள மொழி வசன அமைப்பு முறையிலே தமிழையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வளத்திலே பெரும்பாலும் இந்தோ-ஆரிய மொழிகளையும் ஒத்திருக்கின்றமை குறிப்பிடற்குரியது. அதிலே கணிசமான அளவிலே திராவிடமொழிச் சொற்களும் இலங்கையில் மிகப் புராதன காலம் முதலாக வாழ்ந்த ஆதிவாசிகளின் பேச்சுவழக்கில் அடங்கிய சில சொற்களும் உள்ளன. ஒழுவ. ஓய. கதுல என்பன அதற்குரிய உதாணரங்களாகும்.

பிராமிச் சாசனங்களைப் பற்றிய அம்சங்களை விளக்குமிடத்து தமிழ்ப் பிராமிச் சாசனங்களைப் பற்றியும் கவனித்தல் வேண்டும். ஏனைய பிராமிச் சாசனங்களைப் போலத் தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. நான்காம் நூற்றாண்டு வரையான காலத்திற்குரியவை. அவை பிராகிருத மொழியிலன்றித் தமிழில் எழுதப்பட்டுள்ளன. அவையே தமிழ் மொழியிலுள்ள மிகவும் புராதனமான ஆவணங்களாகும். அச்சாசனங்கள் பெரும்பாலும் சமண சமயம் தொடர்பானவை. மலைக் குகைகளில் வாழ்ந்த சமணத் துறவிகளுக்கு வழங்கப் பெற்ற தானங்களை அவை பதிவு செய்கின்றன. தானம், தானம் வழங்கியோர், தானத்தை ஒப்புக் கொண்டோர் என்னும் விடயங்கள் தொடர்பான மிகவுஞ் சுருக்கமான விவரங்கள் அவற்றில் அடங்கும். மேல்வரும் வாசகங்கள் அவற்றுக்குப் பொருத்தமான உதாரணங்களாகும்:

(1) வெண்பள்இ அறுவை வணிகன் எ(ள்)
ளஅடன்.

(2) நல்லிஊர்-ஆ பி(ட்)டன் குறும் மகள் கீரன்
கொ(ற்)றி செய்பி(த்)த பாளி.

தமிழ் மொழி வரலாறு, தமிழக வரலாறு என்பன தொடர்பான மூலங்கள் என்ற வகையிலே தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் கணிசமான முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. அவை தென்னிந்தியப் பெருங்கற் படைக்காலத்தின் பிற்பகுதிக்குரியவை. பழந்தமிழ் நூல்களின் காலமும் அதுவேயாகும். அவற்றிலே காணப்படும் சொற்களில் ஏறக்குறைய 27% பிராகிருதச் சொற்கள். பிராகிருதச் சொற்கள் எல்லாம் பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் யாவும் தமிழ்ச் சொற்கள். அச்சாசனங்களில் இடம்பெற்றுள்ள மொழி பேச்சுவழக்கில் உள்ளது. அது சமணரிடையே வழங்கிய மொழி வழக்கு. சமணத் துறவிகளின் பெயர்கள், சங்கத்தாரின் பதவிப் பெயர்கள், சமணம் சம்பந்தமான கோட்பாடுகள் போன்றன தொடர்பாகவே பிராகிருதச் சொற்கள் வருகின்றன. ஒட்டு மொத்தமாகச் சமகாலத் தமிழ் மொழி வழக்கில் இவற்றிற் போன்று மிகுந்த அளவிலான பிராகிருதச் சொற்கள் இடம்பெறவில்லை. பழந்தமிழ் நூல்களிலும் பிராகிருதச் சொற்கள் மிக அரிதாகவே உள்ளன.

பிராமி, தமிழ்ப் பிராமி என்பனவற்றிற்கு இடையிலான வேறுபாடு விளக்க வேண்டியதாகும். பிராகிருத மொழியில் இடம் பெறாத ஒலி வடிவங்கள் சில தமிழில் உண்டு. தமிழுக்குச் சிறப்பான ஒலி வடிவங்களைக் குறிப்பதற்குப் புதிய எழுத்துகளை உருவாக்கினார்கள். ழ, ள, ற, ன என்பனவே அவ்வெழுத்துகள். ஏனைய எழுத்துகள் எல்லாம் வடபிராமிக்கும் தமிழ்ப் பிராமிக்கும் பொதுவானவை. ஈ, ம என்னும் எழுத்துகளைத் தமிழ்ப் பிராமியில் எழுதும் முறை வடபிராமியில் உள்ளதனைக் காட்டிலும் வேறுபட்டது. தமிழ் மொழியை எழுதுவதற்குப் பயன்பட்ட பிராமி வரிவடிவங்களே தமிழ்ப் பிராமி எனப்படுபவை. ஆதி காலத்து இந்திய மொழிவல்லுநர்கள் தமிழ்ப்பிராமியின் சிறப்பியல்புகளை இனங்கண்டிருந்தனர். அதனைத் தாமிழி என்றுந் திராவிடி என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். தமிழ்ப் பிராமி எழுத்துகள் சாசனங்களில் மட்டுமன்றி முத்திரைகளிலும் மோதிரங்களிலும் எழுதப்பட்டுள்ளன. பானைகளதும் வேறு மட்பாண்டங்களினதும் கழுத்துப் பகுதிகளில் எழுதப்பட்டுள்ளமை தமிழ்ப் பிராமியின் சிறப்பம்சமாகும். அழகன்குளம், அரிக்கமேடு, கொடுமணல் முதலான இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் இத்தகைய எழுத்துப் பொறித்த கலவோடுகள் நூற்றுக்கணக்கிலே கிடைத்தன.

உப அன், வேள்இ சாம்பன், தித்தன், பேர் ஆவதன், கண்ணன், ஆதன், பதுமாற் கோதை, விசாகன் போன்ற பெயர்கள் அவற்றில் உள்ளன. தமிழ்ப் பிராமியில் எழுதிய கலவோடுகள் நூற்றுக்கணக்கில் ஈழத்திலே கிடைத்து ள்ளமை குறிப்பிடற் குரியது. அநுராத புரத்திலே மையப் பகுதியில் அகழ்வா ராய்வுகள் நடைபெற்ற காலத்தில் நூற்றுக்கும் மேலான பிராமி எழுத் துகள் பொறித்த கலவோடுகள் கிடைத்தன. அவற்றுள் ஐந்து, ஆறு கலவோடுகளின் படங்களை மட்டுமே மீண்டும் மீண்டும் அகழ்வாய்வுகளை நடத்திய அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர். எழுத்துகள் பொறித்த எல்லாக் கலவோடுகளும் வெளியிடப்படின் பௌத்த சமயம் இலங்கையிலே அறிமுகமாகிய காலத்தில் அநுராதபுரம் அடங்கிய வட பகுதிகளிற் கணிசமான தொகையினராகிய மக்கள் தமிழ் மொழி பேசினார்கள் என்ற கருத்து மேலும் உறுதியாகிவிடும்.

தமிழ்ப்பிராமி வரிவடிவங்கள் வட்டெழுத்து முறையின் வளர்ச்சிக்கு மூலமாயிருந்தன. பல்லவர் காலத்திலே சமஸ்கிருத மொழியை எழுதுவதற்குத் தமிழகத்தில் உருவாக்கப்பட்ட கிரந்த எழுத்துகளுக்கும் சோழப்பேரரசர் காலத்திலே தென்னிந்தியாவிலும் ஈழத்திலும் பரவி வழமையாகிவிட்ட தமிழ் வரிவடிவங்களும் தமிழ்ப் பிராமி எழுத்துகளை மூலமாகக் கொண்டவை.

(சி.ப.)

## பிருகதாரணியக உபநிடதம்

பழமை வாய்ந்த உபநிடதங்கள் பத்தினுள் பிருகதாரணியக உபநிடதமும் ஒன்றாகும். பிருகது + ஆரணியகம் எனும் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களைக் கொண்டது. பிருகது என்றால் பெரியது. ஆரணியகம் எனின் காட்டுப் பகுதிகளில் இசையுடன் பாடப்படும் உரைப்பகுதி என்னும் பொருள்படும். பிருகதாரணியகம் அளவிலும் உரைக்கின்ற பொருளிலும் உபநிடதங்கள் அனைத்திலும் பெரியது அதனாலேயே இப் பெயர் கொண்டு அழைத்தனர். ஆங்காங்கு காணப்படும் சில செய்யுட் பகுதிகளைத் தவிர்த்து முழுமையும் உரைநடையாகவே இவ்வுபநிடதம் ஆக்கப்பட்டுள்ளது.

சதபதப் பிரமாணத்தின் இறுதிப் பகுதியாக அமைந்துள்ள பிருகதாரணியாக உபநிடதம் மது காண்டம், முனிகாண்டம், கீலகாண்டம் என்ற மூன்று பிரிவுகளையுடையது. ஒவ்வொரு பெரும் பிரிவும் அதிகாரங்கள் எனப்படும். இது இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அமைந்த ஆறு இயல்களும் பிராமணங்கள் எனக்கூறப்படும். இவை நாற்பத்தேழு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவும் காண்டங்கள் எனப்படும். பிருகதாரணியக உபநிடதத்தில் உள்ள முப்பெரும் பிரிவுகளும் முறையே எடுத்துக் கொண்ட பொருளின் விளக்கம், விரிவு, சிந்தனை (உபதேசம், உபபத்தி, உபாசனம்) ஆகியவற்றினையே விளக்கி நிற்கின்றன.

பிருகதாரணியகத்தின் முதலாம் இயலில் உள்ள ஆறு பிரிவுகளும் அஸ்வமேத யாகம், வேள்வித் தீ, கடவுளுக்கும் தீய ஆவிகளுக்குமிடையே உள்ள போட்டியுணர்வுகள், உயிரினங்களின் தோற்றம், உணவுவகைகள், பெயர், வடிவம், செயல் ஆகியவற்றின் தொகுதியாகிய இயலுலகு ஆகியவை பற்றிக் கூறுவதுடன் எவ்வகை வேள்விகளை இயற்றினும் அவற்றின் பயன்கள் உயிரின் அறியாமையை நீக்காது என்றும் பிரமத்தைப் பற்றிய அறிவே அதனை நீக்கும் என்றும் எடுத்துரைக்கின்றன.

இரண்டாம் இயலின் ஆறு பிரிவுகளும் பிரம்மத்தைப் பற்றிய அறிவைத் தருவனவாகும். பிரமத்தின் வரம்பற்ற வரம்புடைநிலைகள், பரு-நுண்ணிய நிலைகள், உயர்நிலை ஆற்றல், பிரமத்தைப் பற்றிய அறிவைப் பெறுதற்குரிய வழியான இயலுலகப் பற்றுதலைத் துறத்தல் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. தத்-துவம்-அஸி அகம்-பிரம்மாஸ்மி நானே பிரம்ம என்பதை உணர்ந்தவன் எல்லாமாகிறான் அவ்வாறு பிரம்மாவாவதைக் கடவுள் கூடத்தடுக்க முடியாது ஏனெனில், அவனே அவர்களின் ஆன்மாவாகிறான் என இவ் உபநிடதம் கூறுகின்றது. சிருஷ்டி கர்த்தாவாகிய பிரஜாபதி பற்றிக் கூறும்போது ஆதியில் பிரமமான ஆன்மாவே இந்தப் பிரபஞ்சமாயிருந்ததென்றும் தனிமையை வெறுத்த பிரமம் ஆணும் பெண்ணுமாயிற்றென்றும் பின்னர் ஆண் பெண் விலங்குகளை உண்டாக்கிற்றென்றும் ஈற்றில் நீர், தீ, தெய்வங்கள் உண்டாக்கப்பட்டன வென்றும் இவ்வுபநிடதம் கூறுகின்றது.

பிருகதாரணியத்தின் அடுத்த இருஇயல்களும் யாக்ஞவல்கியர் தொடர்பானவையாகும். மூன்றாம் இயலின் ஒன்பது பிரிவுகளும் யாக்ஞவல்கியருடன் பல அறிவாளிகள் நடாத்தும் சொல்லாடல் மூலம் பிரமத்தைப் பற்றி அறிவையே விளக்குகின்றன. நான்காம் இயலில் ஆறு பிரிவுகளும் பிரமத்தைப் பற்றி மேலும் சில செய்திகளும், உபபிரிவின் மூவகை இயலுலக நிலைகளான விழிப்பு கனவு உறக்கம் ஆகியனவும், மறுபிறப்புக் கோட்பாடும், பிரமநிலையடையும் வழி என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆன்மா எங்கும் நிறைந்தது உறையில் கிடக்கும் க்ஷவரக் கத்தி போலவும், விறகிலுள்ள அக்கினி போலவும், எவரும் காண முடியாதது. அது முற்றாகக் காணப்படுவதில்லை. அது மூச்சுவிடும்போது மூச்சு என்கிறோம், பேசும்போது குரல் என்கிறோம், கேட்கும்போது காது என்கிறோம், நினைக்கும் போது மனம் என்கிறோம். இவையெல்லாம் அதன் சேஷ்டைகள். இவற்றில் ஒன்றை ஆராதிப்பவன் அதை அறியமாட்டான் ஆன்மாவாகவே அதை ஆராதிக்க வேண்டும். ஏனெனில், இவை யாவும் அதில் ஒன்றுபடுகின்றன. ஆன்மா பற்றி இவ்வுபநிடதம் கூறும்போது பெரியதுமன்று, சிறியதுமன்று, நீண்டதுமன்று, குறுகியதுமன்று குருதியில்லாதது, கொழுப்பில்லாதது, நிழலற்றது, இருளற்றது, காற்றில்லாதது, ஆகாயமில்லாதது, ஒட்டுவதன்று, தொட்டுப்பாக்கக் கூடியதன்று, மனமற்றது, சுவையற்றது, கண், காது, குரல், மனம் இல்லாதது, வெப்பமற்றது, மூச்சற்றது, வாயில்லாதது, நாமகோத்திரமில்லாதது, முதிர்வில்லாதது, மரணமில்லாதது, பயமற்றது, நித்தியமானது என்றெல்லாம் குறிப்பிட்டுச் செல்கிறது.

இறுதி இரு இயல்களும் பிற்சேர்க்கைகளாகும். ஐந்தாம் இயலின் பதினைந்து பிரிவுகள் பிரமத்தைச் சிந்திக்கும் வழிமுறைகளை எடுத்துரைக்கின்றன. எடுத்துக் காட்டாக அவை பிரமத்தை ஓங்காரமாகவும், உண்மையாகவும், மனமாகவும், வேதங்களாகவும், உயர் நிலையாகவும், காயத்திரியாகவும் சிந்திக்கலாம் என்று கூறுகின்றன. தன் முனைப்பான சிந்தனைக்குத் தன் கட்டுப்பாடு, ஈகை, இரக்கம் ஆகியவை சிறந்த கடைப்பிடிப்புக்களாகும் என்பது இவ்வியலில் கூறப்பட்டுள்ளது. ஆறாம் இயலின் ஐந்து பிரிவுகளில் உயிர் நிலை ஆற்றலின் சிறப்பு, துறக்க உலகு, மழைக்கடவுள் இயலுலகு, பெண் ஆண் ஆகியவற்றில் இயங்கும் ஐவகை நெருப்பு, இதனைச் சிந்தித்தால் அடையப் பெறும் நிலைகள், உயர்நிலை, செல்வம் பெறுவதற்குரிய சடங்கு ஆகியவை விரித்துரைக்கப்பட்டுள்ளன. இவ்வுபநிடதம் பொதுவாக பிரமம், ஆன்மா, மறுபிறப்பு பற்றியே விளக்கி நிற்கின்றது.

(இ. ச.)

## பிருங்கி முனிவர்

இவர் சிவபெருமானையன்றி வேறு எவரையும் வழிபடாத உறுதி கொண்டவர். சிவன் அருளால் இவர் மூன்று கண்களைப் பெற்றிருந்தார் என்பர். இவர் கையில் செபமாலையும் தண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கியிருப்பார். இறைவன் திருமுன் ஆடிப்பாடி மகிழ்பவர். இவர் தம்மை நீக்கித் தம் ஒரு கூறாகிய சிவனையே வழிபட்டு வந்ததால் சக்தி உமை இவரது உடலில் உள்ள ஆற்றலை (சக்தியை) வற்றச்செய்து, உடலில் சதையே இல்லாமல் ஆற்றலை குன்றச் செய்துவிட்டார். அந்நிலையிலும் இவர் விடாது சிவனையே வழிபட்டு வந்தார்.

உடல் வெறும் எலும்புக் கூடாய் நடக்க முடியாதவராய், நோய் நிற்க வலு விழந்து விட்டாலும், இவர் தனது கொள்கையில் உறுதியாக இருந்ததால் சிவபெருமான் பிருங்கி முனிவருக்கு காலொன்றையும் தண்டையும் அளித்து அவரை நிமிர்ந்து நிற்கச் செய்தார். அவற்றின் உதவியால் அவர் தம் வழிபாட்டு முறையைத் தொடர்ந்து வந்தார்.

அதுகண்ட பார்வதி அம்மையார் சிவபெருமானை வேண்டித் தம்மை அவரது உடலில் ஒரு பாதியாக ஏற்றுக் கொள்ளும்படி செய்தார். அதனால் சிவனது உடல் ஒரு பாதி ஆணாகவும் ஒரு பாதி பெண்ணாகவும் மாறியது. அதுவே அர்த்தநாரி வடிவமாகும். அவ்வுருவமைப்பில் பிருங்கிமுனிவர் சிவனை மட்டும் வழிபடவோ வலம் வரவோ முடியாதாகையால் அவர் வண்டுருவம் கொண்டு அவ்விரு பாதிகளுக்கும் இடையில் துளை செய்து அதன் வழியே ஆணுருவை மட்டும் வலம் வந்து அர்ச்சித்து வழிபட்டார். வண்டுருவம் பெற்றதால் அவர் பிருங்கி எனப்பட்டார். இவர் இசையிலும், நடனத்திலும் வல்லவர் என்று போற்றப்படுகிறார். (தே. ஹ.)

## பிருந்தாவனம்

மதுராபுரியிலிருந்து இருபது கிலோமீட்டர் தொலைவில் பிருந்தாவனம் உள்ளது. பிருந்தா என்றால் துளசி எனப் பொருள் படும். இப்பிருந்தாவனம் கோயில்கள், குளங்கள், மடங்கள், ஆசிர மங்கள், படித்துறைகள், தோட்டங்கள் நிறைந்த ஊராகும்.

பிருந்தாவனத்தின் அதிபதி வைகுண்ட பகவான் "ஓம் பிருந்தாவனாதிபதியே வைகுண்டாய நம" என்பது மந்திரம். இப்பிருந்தாவனத்தில் தான் கோவர்த்தனம் இருந்தது என ஸ்கந்த புராணம் பகர்கின்றது.

இடைவிடாது இறைவன் நாமத்தைக் கேட்டுக் கொண்டு பிருந்தாவனத்திற்கு கிழக்குப்பக்கமாக யமுனை ஓடுகிறது. யமுனை நதிக்கரையில் பல துறைகள் உள்ளன. யமுனை துறைகளுள் மிக முக்கியமானது காலியதவஹ் எனப்படும் துறையாகும். அந்தத்துறையிலேயே கண்ணன் காளிங்கன் என்னும் பாம்புடன் போராடி, அதன் தலை மீது நர்த்தனம் புரிந்தான் எனப்படுகிறது. அந்த துறையில் ஒரு கதம்ப மரம் உள்ளது. அதன் அருகில் ஒரு மேடையும் கோயிலும் இருக்கின்றன. கமலீ தலா என்பது இன்னுமொரு புகழ் பெற்ற இடம். அங்கே பழைய புளியமரம் ஒன்று உள்ளது. அந்த இடத்தைத் தவிர பிருந்தா வனத்தில் வேறு எங்கும் புளிய மரம் இல்லை. இவ் விடத்தில் சைத்தன்யர் பஜனை செய்த இடமான புளிய மரத்தைச் சுற்றி அழகான சலவைக் கல் மேடை அமைத்திருக்கிறார்கள். இங்கு ராதை கிருஷ்ணனுடன் நிதாயி நிமாயிக்கும் வழிபாடு நடை பெறுகிறது.

கண்ணன் தன் புல்லாங்குழல் இசையால் கோபியரைக் கவர்ந்த இடம் வம்சீவட் என்பதாகும். வம்சி என்றால் புல்லாங்குழல் வட் என்றால் ஆலமரம் என்று பொருள். இங்கு அமர்ந்திருக்கும் மூலவரின் திருநாமம் வம்சீவடவிஹார். கிருஷ்ணன் பல வடிவெடுத்து ஒவ்வொரு கோபியுடனும் லீலை புரிவதைக் கோயிலுக்குள் ஓவியமாகத் தீட்டி வைத்திருக்கிறார்கள். நான்கு பக்கங்களிலும் வரிசைப்படி இராமானுஜர், மத்வர், விஷ்ணுஸ்வாமி, நிம்பார்க்கர் ஆகிய ஞானிகளின் விக்கிரகங்கள் வடிக்கப்பட்டுள்ளன.

சிருங்கார்வட் என்னும் இடத்தில் உள்ள கோயிலில் நிதாயி சைதன்யர் விக்கிரகமும் இராதா கிருஷ்ணர் விக்கிரகமும் இருக்கின்றன. ஸோவாகுஞ்ஜ் எனப்படும் நிகுஞ்சவனம் ராதா தாமோதரக் கோயிலுக்கு பக்கத்தில் தென் கிழக்குத் திசையில் உள்ளது. வெள்ளைக் கல்லில் கட்டப்பட்ட இக்கோயிலில் ராதை யின் படத்திற்கு பூசை நடைபெறுகின்றது. படத்தில் ராதாவின் பாதங்களைக் கிருஷ்ணன் வருடுவது போன்று காட்டப் பட்டுள்ளது. இங்கே ஒரு சயனமஞ்சமும் இருக்கிறது. ஒவ்வோர் இரவும் ராதையும் கிருஷ்ணனும் இங்கு வருவதாக மரபு. இங்கே ஒரு கதம்ப மரமும் இருக்கின்றது. கதம்ப மரத்தின் பல இடங்களில் கருமையான திட்டுக்கள் காணப்படுகின்றன. இவை வெண்ணெய் தோய்ந்த கண்ணனின் கைத்தடம் என்பர்.

நிதுவன் என்னும் இடத்தைப் பற்றிப் பத்ம புராணம் சிறப்பாக கூறுகிறது. ராதையும் கிருஷ்ணனும் பல விளையாட்டுக்களில் பகல் முழுவதும் நிதுவனத்தில் ஈடுபட்டிருந்தார்களாம். இரவு நேரங்களில் இந்த வனத்தில் தங்கியும் விடுவார்கள் என்று கூறப்படுகின்றது. நிதுவனத்தின் நாற்புறமும் சுற்றிச் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. அடர்ந்த கொடிகளும் குட்டையான துளசி முதலிய செடிகளும் மரங்களும் நிறைந்த அழகான தோட்டம் இது. குதிரை வடிவில் தன்னை அழிக்க வந்த கேசி என்னும் அரக்கனைக் கண்ணன் கொன்றான். இரத்தக்கறை படிந்த கைகளைக் கழுவிய துறை கேசித்துறை. கேசிகாட் எனப்படுகிறது. இத்துறையில் நீராடித் தம்மைப் புனிதப்படுத்திக் கொள்ள படிக்கட்டுகளுடன் கூடிய மண்டபங்கள் உள்ளன.

நிதுவனத்தில் சங்கீத சாதனையில் ஈடுபட்டிருந்த ஹரிதாஸ் சுவாமிகளுக்கு விசாகா குண்டத்திலிருந்து (கோபி குளத்தி லிருந்து) பாங்கோ பிஹாரியின் விக்கிரகம் கிடைத்தது என்பர். பாங்கே பிஹாரி விக்கிரகம் தான் இங்குள்ள பிரசித்தி பெற்ற கோயிலில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இந்த வனத்தில் ஹரி தாஸ் சுவாமிகளின் சமாதி உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிருந்தாவனத்தில் உள்ள கோவிந்த தேவர் கோயில் பழமையான கோயிலாகும். சைதனிய மகா பிரபுவின் தூண்டுதலால் ஜெயப்பூர் மகாராஜா மான்சிங் இந்தக் கோயிலைக் கட்டினார். இக்கோயில் செந்நிறக் கற்களால் ஆனது. அரண்மனை போன்ற வடிவத்தில் தரைக்கு சற்று உயரே அமைந்து மிகப் பொலிவுடன் காணப்படுகிறது. கோயில் என்பதை விட கோவிந்தரின் அரண்மனை என்றே இதனைச் சொல்லலாம். உள்ளே கலையழகு மிளிரும் வேலைப்பாடுகள் உள்ளன. கோயிலில் கூரைப்பகுதி தட்டை யானது. கம்பீரமான தூண்களுக்கு இடையில் அமைந்த கோயிலில் முன் பகுதியைக் கடந்தால் சற்று உயரே கர்ப்பக்கிரகம் அமைந்திருப்பதைக் காணலாம். ஸ்கந்த, பத்ம, வராக புராணங்களில் இந்தக் கோயிலின் புனிதம் விளக்கப்பட்டுள்ளது.

பிருந்தாவனத்தின் பெரும் பகுதியைத் தன் சொத்தாகக் கொண்ட கோயில் ரங்கஜி மந்திர் கோயில். இது புராதன கோயில்களுள் ஒன்று. மதன மோகனார் கோயில், ராமதாஸ்கபூர் என்னும் மூலநான் நகரவியாபாரி இந்தக் கோயிலை கட்டுவித்தார்.

ஆறு கை ·மகாபிரபு கோயிலில் உள்ள விக்கிரகம் (சைதன்யர்) ஆறு கைகள் கொண்டிருக்கிறது. நவத்வீபத்தில் சைதன்யர் தம்பக்தர் பட்டாசாரியருக்கு இந்த உருவத்தைக் காட்டினாராம். ''நானே கிருஷ்ணன் நானே ராமன் நானே சைதன்யர்'' என்னும் உண்மையை பட்டாசாரியருக்கு உணர்த்தினார் என்கிறார்கள். அதற்கு ஏற்றா் போல இறைவன் திருவுருவத்தில் மேலே உள்ள கைகள் ராமருடையதாகவும், நடுவில் உள்ளவை குழல் ஏந்திய கண்ணன் உடையதாகவும் கீழே தண்டம் கமண்டலம் ஏந்திய சைதன்யர் கைகளாகவும் அமைந்துள்ளன.

பாங்கே பிகாரி என்னும் கோயிலும் பிருந்தா வனத்தின் புராதன கோயில் ஆகும். இக்கோயில் இடைக்காலத்தில் அந்நிய மதத்தினரால் இடிக்கப்பட்டது. இப்போதுள்ள கோயில் பக்தர்களால் எழுப்ப பட்டதாகும். இக்கோயிலில் வாயிலில் உள்ள கலையழகு சொட்டும் வேலைப்பாடுகள் நம் கவனத்தை ஈர்க்கும் ஈரடுக்குக் கோயில். கருவறையில் மூலவருக்காக பங்கா (காற்று வருவதற்குரிய விசிறி) அமைக்கப்பட்டிருக்கிறது. அதை இயக்க பக்தர்கள் போட்டியிடுவார்கள். இங்கே தீபாராதனையின் போது மணியடிக்கப்படுவதில்லை. இங்கு இன்னொரு விஷேடமும் உண்டு மூலவரை ஒரு நிமிடத்திற்கு ஒரு தடவை அர்ச்சகர் ஒரு திரையால் மூடி மூடித் திறக்கின்றார். எனவே விட்டு விட்டுத்தான் மூலவரை தரிசிக்க முடியும். இங்கு கண்ணனுக்கு ஒருநாள் கீரிடதரிசனம், ஒரு நாள் புல்லாங்குழல் தரிசனம், ஒருநாள் ஊஞ்சல் சேவை, ஒரு நாள் மங்கள தீபாராதனை இப்படியாக தினமும் ஒரு சேவை நடக்கும்.

காலியதஹ் படித்துறைக்கு எதிரிலும் ஒரு பாங்கே பிகாரி கோயில் இருக்கிறது. அங்கே ஸ்ரீ கிருஷ்ணனுடன், நந்தகோபர், தயிர் கடையும் யசோதை ஆகியோரும் காட்சி தருகின்றனர். இந்த கோயிலுக்குள் நுழைந்ததும் ஒரு மரத்தினடியில் கண்ண னது பாதச்சுவடுகளும் காணப்படுகின்றன. இக்கோயிலில் மடைப்பள்ளியிலே தயாராகும் ''போக்'' எனப்படும் படையல்களை இறைவனுக்குப் படைக்கிறார்கள். அதைப் பிரசாதமாக பக்தர் களுக்கும் வழங்குகிறார்கள்.

ஷாஜிகோயில் செல்வ செழிப்பில் அடுத்ததாக திகழும் நவீன கோயிலாகும். அது கடந்த நூற்றாண்டில் ஏறத்தாழ பத்து இலட்ச ரூபாய் செலவில் முழுவதும் சலவைக் கல்லால் கட்டப்பட்டது. இந்த கோயிலை லலிதகுஞ்ஜ் (நளிதை தோட்டம்) என்றும், டேடேகம்பேகா மந்திர் (கோணல் தூண்கள் கொண்ட கோயில்) என்றும் வழங்குகிறார்கள். இங்குள்ள இறைவன், ராதா ரமண்லால் ஆவார். இந்தக் கோயிலின் நுழைவாயில் மிகவும் வனப்புள்ளது. உள்ளே அழகிய தோட்டம் உள்ளது.

இக்கோயிலுக்குள் நுழைந்தால் எழில் நிறைந்த ஓவியங்கள், கல் விக்கிரங்கள், கோயிலின் ஒரு பகுதியில் வசந்த மண்டபம் ஆகியன உள்ளன. வசந்த மண்டபத்தில் அநேக அலங்காரப் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. நடுவே, பொன்வேய்ந்த அரியாசனம் உள்ளது. அதன்மீது ராதா அமர்ந்து, ஆவணி - மாசி மாத உற்சவ தினங்களில் காட்சி தருகிறார்.

இரங்கநாதர் ஆலயம் தமிழ்நாட்டுப் பாணியில் கட்டப் பட்டிருக்கிறது. அது கி.பி 1854ம் நூற்றாண்டில் 45 இலட்சம் ரூபாவில் லட்சுமி சந்த் சேட் என்பவரால் கட்டப்பட்டதாகும். மூலவராகிய ரங்கநாதர் நின்ற நிலையில் இருக்கிறார். அவரின் பக்கத்தில் லட்சுமி, கருடன் ஆகியோர் உள்ளனர். சந்நிதிக்கு எதிரில் பொன்வேய்ந்த கொடிக்கம்பம் உள்ளது. இக்கோயிலின் வழிபாட்டு முறைகள் தமிழ்நாட்டுப் பாணியில் நடக்கின்றன. கோயில் பிரகாரத்திற்கு வெளியே குளம் உள்ளது. ஆவணி மாதத்தில் இந்தக் குளத்திலே கஜேந்திர மோட்சக் கதையை யானை, முதலை ஆகிய மொம்மைகளை கொண்டு நடாத்தி காட்டுகிறார்கள்.

கும்பமேசுவரர் என்னும் மகாதேவர் கோயில் வம்சவீட் பகுதியில் உள்ளது. இங்கு பங்குனி மாதம் பெரும் உற்சவம் நடைபெறுகிறது. இங்குள்ள சிவனுக்கு அபிஷேகம் செய்து வழிபடுவார்கள். இது சிவ சதுர்த்தியன்று நடைபெறுகிறது. இக் கோயில் மிகப் புராதனமான கோயிலாகும்.

இங்கு ஜெய்பூர்வாலா மந்திர், ஞானப்பித்தர் கோயில், கிருஷ்ண ராமர் கோயில் என்னும் பல கோயில்களும் உண்டு. அதேபோன்று ராமராஜருடையமடம், சாத்தியாயினி மடம் போன்றனவும் இங்கு காணப்படுகின்றன. (தே. ஹ.)

## பிள்ளை உறங்கா வில்லிதாசர்

திருமால் பக்தர். சோழ நாட்டின் உறையூரை ஆண்ட அகளங்கன் என்னும் மன்னனின் மெய்ப்பாதுகாவலன். மறக்குடியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிய இவர் சற்றும் கண்ணுறங்காமல் இருந்து அரசனைப் பாதுகாத்து வந்தார். மன்னன் அவரது சோர்வற்ற தன்மையை அறிந்து அவருக்குப் "பிள்ளை உறங்கா வில்லி" என்னும் சிறப்புப் பெயரை அளித்தான்.

மன்னன் அகளங்கன் தன் அன்பிற்குரிய மெய்ப்பாது காவலருக்கு மணம் முடிக்கக் கருதி அதே குடியிற் பிறந்த பொன்னி என்னும் பெண்ணைத் தேர்ந்தெடுத்து இனிதே திருமணத்தை நடத்தி வைத்தார். அந் நங்கையின் எழிலில் மயங்கிய பிள்ளை உறங்கா வில்லி அந் நங்கையை விட்டுப் பிரியமனமின்றி மன்னனுக்குச் சேவை புரியச் செல்கையில் தன்னுடன் அழைத்துச் சென்று ஓர் இடத்தில் இருத்தி, தன் சேவையை முடித்துக் கொண்டு, மீண்டும் தன் இருப்பிடம் செல்கையில் அவளையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு செல்வார். இவ்வாறு பல நாட்கள் நடந்தன.

ஒரு நாள் பிள்ளை உறங்கா வில்லியார் தனது கடமையை முடித்துக் கொண்டு வீடு திரும்பினார். அப்போ இளவேனிற் காலம் திருவரங்கப் பெருமானுக்கு வேனில் திருவிழா நடந்து கொண்டிருந்தது. அவ்விழாக் காண இராமானுஜரும் தம் சீடர்களுடன் காவேரிக் கரையில் தங்கி இருந்தார்.

பிள்ளை உறங்கா வில்லி காவேரி ஆற்றைக் கடந்து மறுகரைக்குச் செல்ல வேண்டும். வெப்பம் அதிகமாக இருந்ததனால் ஆற்றில் நீர் வற்றி நடப்பவர்களைச் சுடும் தன்மையைக் கொண்டிருந்தது. அம்மணலின் வெப்பம் தாங்காமல் பொன்னி தவித்தாள். இதனைக் கண்ணுற்ற வில்லியர் மனம் பதறி தன் மேலாடையை நடை பாவாடையாகப் பரப்பி அதன் மேல் தன் மனைவியை நடக்கச் சொல்லி, தலைக்கு மேல் குடையை விரித்துப் பிடித்துக் கொண்டு மெல்ல அழைத்துச் சென்றார்.

இராமானுஜர் இதனைக் கண்டு வியப்புற்று, இவர்கள் இந்த அன்பின் ஒரு சிறுபகுதியை எம்பெருமான்பாற் செலுத்தின் ஒன்றாலும் துன்புறாத பேரின்ப வீட்டை எய்துவார்கள் என எண்ணி அவர்கள் இருவரையும், தன் சீடர்களை அனுப்பி அழைத்து வரச் செய்தார். பிள்ளை உறங்கா வில்லியும் அவர் மனைவியும் இராமானுஜரிடம் வந்து வணங்கித் தம்மைப் பற்றிய விவரங்களைக் கூறினர்.

இராமானுஜர், பிள்ளை உறங்கா வில்லியை நோக்கி உமது மேலாடையை தரையில் விரித்து இவரை நடத்திச் செல்லக் காரணம் என்ன? என வினவினார். சூரியக் கதிர்களால் மிகக் கொதிப்பேறி உள்ள இந்த மணலில் நடக்கமாட்டாமல் எனது மனைவி வருந்தினாள். ஆதலின் அங்ஙனம் மேலாடையை இவள் நடந்து வருவதற்காக விரித்து இட்டுச் சென்றேன் எனக் கூறினார். பெண்கள் இல்லத்தில் வருத்தமின்றி இருக்க ஆடவர் வெளியிற் சென்று தத்தம் தொழிலைச் செய்து வருவது தானே மரபு. அவ்வாறு இருக்கையில் இப் பெண் வருந்தும்படி நீர் உடன் அழைத்துச் சேர்வதற்குக் காரணம் யாது? என்றார்.

அதற்கு பிள்ளை உறங்கா வில்லி, எனது மனைவியின் எழில் தோற்றம் என்னை முற்றும் கவர்ந்துவிட்டது. ஆதலின் சிறுபோதும் என்னால் பிரியமுடியவில்லை என்றார். இராமானுஜர் நகைத்து, இந்த உடல், இளமை அனைத்தும் நிலையற்றது. ஆண்டுகள் செல்ல முதுமையும் கூடவே பிணியும் உடலைப் பற்றிக் கொள்ளும். இது அனைவருக்கும் பொது நியதி. ஆயினும் பிணி, மூப்புகள் இன்றி என்றும் ஒரே தன்மையராய் விளங்கும் இருவர் உளர். அவர்களுள் ஒருவர் உலகின் அன்னையார். ஒருவர் உலகின் அப்பனார். அவர்களால் நோக்கப் பெறும் பேறு பெறின் அவர்கள் என்றும் அழியாத பேரின்ப நிலையை எய்துவார்கள். என்னுடன் வருவீர்களாயின் அவர்களை உங்கட்குக் காட்டுகின்றேன் என்றார்.

அவர்கள் இருவரையும் அழைத்துச் சென்று இளவேனில் விழாவின் பொருட்டு காவேரிக்கரையில் இடப்பட்டுள்ள பந்தலின் கீழ் எழுந்தருளியுள்ள திருவரங்க நாதனையும், திருவரங்க நாயகியையும் சுட்டிக்காட்டிச் சேவிக்கச் செய்தார். தம் அறியாமை நீங்கப் பெற்று இருவரும் அவ் உருவங்களை நன்கு வணங்கி மனதில் அமைத்துக் கொண்டு பின் இராமானுஜரை வணங்கி நின்றார்கள். இராமானுஜர் அவர்கள் தோள்களிலே சங்கு சக்கர இலச்சினை இட்டு, நெற்றியிலே திருமண் தரித்துத் திருமந்திரத்தை ஓதித் திருவரங்க நாதனையும், நாயகியையும் வழிபடும்படி கூறி அடிமைப் பெயராக "பிள்ளை உறங்கா வில்லிதாசர்" என்றும், "பொன்னாச்சியார்" என்றும் பெயரிட்டார். பின்னர் இருவரும் திருவரங்கத்திலேயே இருப்பிடம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு மன்னனிடம் இருந்து பெறும் வருவாயைத் தான தருமத்தில் செலவிட்டு வந்தார்கள்.

இராமானுஜர் காவேரியில் நீராடச் செல்லும்போது கூரத்தாழ்வானும், முதலியாண்டானும் அவருக்கு இரு புறங்களிலும் உடன் செல்வார்கள். அவர் நீராடித் திரும்புகையில் அவர் இருவர் கைமேலும் ஈரத்துணியை இட்டு அதன் மேல் தம்முடைய கையை வைத்துப் பிடித்துக்கொண்டு வருவார். ஒரு நாள் அங்ஙனம் வருகையில் பிள்ளை உறங்கா வில்லிதாசர் வந்து இராமானுஜரை வணங்கினார். இராமானுஜர் இருவர் மீதும் வைத்திருந்த தம்முடைய கையை எடுத்து வில்லிதாசரின் தோள்மேல் வைத்து, அவர் மேற் சாய்ந்து நடந்து சென்று மடத்துள் நுழைந்தார். கூரத்தாழ்வானும், முதலியாண்டானும் வெளியிலே நின்றார்கள். அவர்களுக்குத் தமது குருவின் செயல் வியப்பை அளித்தது. தாம் இருவரும் உயர்குலத்தில் பிறந்தவர்கள், என்றும் நிழல் போல் குருவிடம் இருப்பவர்கள் அப்படி இருக்க இராமானுஜர் எமது கைகளைத் தொடுதல் ஆகாது என்று கொண்டு கைகளின் மீது ஈரத்துணியை இட்டு அதன் மேல் தம்முடைய கையை வைத்துப் பற்றி வருபவர். இன்று வழியில் வந்து வணங்கிய வேட வில்லியர் தோளின் மீது கையை வைத்து சாய்ந்து கொண்டு நடந்து வந்தாரே என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசனப்பட்டனர். இருப்பினும் இதற்கு ஏதோவொரு காரணம் இருக்க வேண்டும் எனவும் தமக்குள் பேசிக் கொண்டனர்.

தனது சீடர்களின் முகக் குறிப்பால் அவர்களின் மனக்கிடக்கையை உணர்ந்து கொண்ட இராமானுஜர் அவர்களை நோக்கி ! எமக்கும் பிள்ளை உறங்கா வில்லிக்கும் வேறுபாடு உண்டு. நம் மனதில் எப்போதும் உயர் குலத்தில் பிறந்தவர்கள் என்னும் எண்ணம் உள்ளது. அதனால் மனதில் செருக்கு அதிகமாகவுள்ளது. இம் மனநிலை இறைவன் எழுந்தருளுவதற்கு ஏற்புடையதில்லை. வில்லியார் மனதில் செருக்குச் சிறிதும் இல்லை. அதனால் அவரது மனமாகிய பீடம் எம்பெருமான் வீற்றிருக்க ஏற்புடையதாய் உள்ளது. அதனால் அவர் உடம்பின் தீண்டல் நம்முடைய குலச் செருக்காகிய நோய்க்குச் சிறந்த மருந்து ஆகும். அதனால் அவர் உடலைத் தீண்டினேன் என்று கூறினார்.

இராமானுஜர் மடத்தில் இருந்த சிலர் பிள்ளை உறங்கா வில்லிதாசரின் தொண்டில் பொறாமை கொண்டு அவரைப் பலவாறு இழித்துக் கூறலானார்கள். இவர்களுக்கு வில்லியாரின் மனப்பக்குவத்தைப் புலப்படுத்த விரும்பிய, இராமானுஜர் ஒரு நாள் இரவு அனைவரும் நன்றாக உறங்கிய பின் வில்லிதாசரை இழித்துக் கூறியவர்களின் துணிகளில் ஒவ்வொரு சாண் அளவு துணியைக் கிழித்துக் கொண்டுபோய் ஓர் இடத்தில் வைத்துவிட்டு உறங்கச் சென்றுவிட்டார். மறு நாட் காலை தமது துணிகளின் சிறு பகுதியை யாரோ கிழித்தெடுத்துவிட்டார்கள் என்பதை அறிந்து பலவாறு வைதார்கள். இந் நிலையில் இராமானுஜர் தமது சீடர்களில் இருவரை அழைத்து, எமது மடத்தில் அடியவர்களுக்கு அமுதிடுவதற்குப் பொருள் இல்லை ஆதலால் வில்லியாரின் இல்லம் ஏகி அவரது மனைவியாரின் பெறுமதி மிக்க அணிகலன்களை அவர் உறங்கும் சமயத்தில் அபகரித்துவரும்படி கூறினார். அவர்களும் சென்று பொன்னாச்சி அம்மையார் தூங்கும்போது ஒருபக்க நகைகளைக் கழற்றிக் கொண்டனர். இவர்கள் நகைகளைக் களைவதை உணர்ந்து கொண்ட அம்மையார், இவர்கள் இவ்வாறு செய்வதற்குக் காரணம் வறுமையே. ஒரு பக்க நகைகளைக் கொண்டு சென்றால் அவற்றை விற்கும் போது ஊர்காவலர்கள் இவர்களைப் பிடித்துக் கொள்வார்கள் எனவே மறுபக்க நகைகளையும் கழற்றிச் செல்லட்டும் எனக் கருதி மறுபக்கம் திரும்பிப்படுத்தார். ஆயின் இராமானுஜரின் சீடர்கள் அம்மையார் எழுந்துவிட்டார் எனக் கருதி அவற்றைக் கழற்றாது தமது மடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

தமது மனைவி ஒரு பக்க அணிகலன்களுடன் இருப்பதை அறிந்த பிள்ளை உறங்கா வில்லிதாசர் மனைவியிடம் காரணத்தைக் கேட்க அவர் நடந்தவற்றைக் கூறினார். திருட வந்தவர்கள் தமது வறுமையினால் தான் இச்செயலைச் செய்ய முன்வருகிறார்கள். பிறருடைய வறுமையைப் போக்குவதற்குத் தம்முடைய பொருளை மகிழ்வுடன் அளிப்பதே வைணவ நெறியாகும். உன்னுடைய நகைகள் பறிக்கப்படுகிறதே என நீ அஞ்சித் திரும்பியதால் தான் அவர்கள் ஓடிவிட்டார்கள். ஆகவே நீ வைணவ நெறிக்குத் தகாதவள் என தன் மனைவியை வைது சென்றார்.

பிள்ளை உறங்கா வில்லி தாசருக்கும், மனைவிக்கும் இடையில் மனக்கசப்பு நிலவுவதை அறிந்த அன்பர்கள் சிலர் இராமானுஜரிடம் கூற, இராமானுஜர் இருவரையும் அழைத்து இருவருக்குமிடையில் ஊடல் ஏற்பட்டதன் காரணத்தை அறிந்து, இராமானுஜர் அங்குள்ளவர்களை நோக்கி, இவர்களுடைய மனநிலையை அறிந்தீர்கள் அல்லவா? இது தான் வைணவத்தின் உண்மை நெறியாகும். நூல்களைக் கற்கையில் ஒரு கொள்கையும், ஒழுக்கத்தில் வேறொரு கொள்கையும் கொள்வது வைணவ நெறியாகாது.

உங்கள் துணிகளில் சிறிது கிழிந்த போது எவ்வாறு புலம்பினீர்கள். இன்று இவர்களது மனப்பக்குவத்தையும் அறிந்து கொண்டீர்கள் தானே. இவ்விரு கைங்கரியங்களையும் மேற்கொண்டவர் நான் தான் எனக் கூறினார். எம்பெருமான் விரும்புவது தூய உள்ளமும், நல்லொழுக்கமுமே அன்றி, உயர்குலமும், பொருள் முதலியவற்றால் வரும் மேன்மையும் அல்ல என அறிவுறுத்தினார். வில்லிதாசருக்கு மனைவியின் தூய உள்ளத்தை எடுத்துக் கூறி இருவரும் முன்போலவே மனமொன்றி வாழவேண்டும் என இராமானுஜர் வாழ்த்தினார். (நி. நி.)

## பிள்ளையார்பட்டி

பிள்ளையார்பட்டி மதுரையில் இருந்து சுமார் எழுபத்தைந்து கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. திருவீங்கைக்குடி, மருதங்குடி, ஈக்காட்டூர் என வேறு பெயர்களும் உண்டு. இங்கு குடி கொண்டுள்ள பிள்ளையாரின் பெருமையால் இவ்வூர் பிள்ளையார்பட்டி எனக் கூறப்படுகிறது.

முற்காலப் பாண்டியரால் அமைக்கப்பட்ட இக்கோயில் ஒரு குடவரைக் கோயிலாகும். இங்குள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு கி.பி 6 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. குடைவரை அரைத்தூணின் பக்கப் பகுதியில் காணப்படும் இக் கல்வெட்டு தமிழ் எழுத்திலிருந்து வட்டெழுத்து தோன்றும் தொடக்க காலத்தைச் சார்ந்தது. இதன் மூலம் பிள்ளையார்பட்டி குடைவரையின் காலத்தை நிர்ணயிக்கலாம். இஃது கி.பி 55 ஆம் ஆண்டளவில் குடையப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது. எனின் பல்லவர்களுக்கு முன்பே பாண்டியர்கள் குடைவரைக் கலையில் சிறந்து விளங்கினர் எனக் கொள்ளலாம்.

பிள்ளையார்பட்டிக் கோயில் குன்றைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மேற்காக நீண்டுள்ள குன்றின் வடக்குப் பக்கமாகக் குடைந்து கோயிலை அமைத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைவாயிலிருந்து உள்நோக்கினால் குடைவரையில் அமைந்துள்ள கற்பக விநாயகரைத் தரிசிக்கலாம். இதன் உட்பகுதி தூங்கானை மாடம் போல் அமைந்துள்ளதால் இதனை கஜவிருஷ்ட கர்ப்பக்கிரகம் என அழைப்பர். மூலவரான கற்பக விநாயகர் ஆறு அடிக்கு மேல் உயரமும் ஐந்து அடி அகலமும் உடைய உருவத்துடன் அமர்ந்தவாறு உள்ளார். இரு கைகளில் வலக்கரத்தில் மோதகமும், இடது கரம் வயிற்றுக் கச்சையையும் தொடுகிறது. தும்பிக்கை வலது புறம் வளைந்துள்ளதால் இவர் வலம்புரி விநாயகர் எனப்படுகிறார். பாசாங்குசமின்றி பத்மாசனக் கோலத்தில் கால்களை மடித்தவாறு அமர்ந்துள்ளார். முப்புரி நூலுக்குப் பதிலாக மூன்று பட்டைகளான உதரபந்தம் உடலை அலங்கரிக்கின்றது. எளிமையான மகுடத்துடனும் விரிந்த காதுகளுடனும் காணப்படும் இவ்விநாயகர் தமிழகத்தில் கிடைத்துள்ள மிகப் பழமையான விநாயகர்களுள் ஒருவர்.

இக்குடவரையின் முகப்பில் மூன்று தூண்கள் மேலும் கீழும் சதுரங்களையும் நடுவில் எட்டுப் பட்டையுடனும் காணப் படுகின்றன. தூண்களில் சதுரங்களில் தாமரை இதழ்கள் உள்ளன. கருவரையின் உள்ளே பாறையிலே குடைந்த இலிங்கம் காணப் படுகிறது. இங்குள்ள பிள்ளையாருக்கும் இலிங்கத்திற்கும் நடுவில் சிற்பம் ஒன்று நின்ற நிலையில் இடக்கையை இடுப்பில் ஊன்றிக் கொண்டு வலக்கையில் வரத முத்திரை அளிப்பது போன்று காட்சியளிக்கின்றது. மார்பில் முப்புரி நூலும் தலையில் ஜடா மகுடமும் தரித்த இவ்வுருவத்தை சுப்பிரமணியர், சங்கர நாராயணர், கல்யாண சுந்தரர் என்று அறிஞர்கள் பல கருத்துக்க ளைத் தெரிவித்துள்ளனர்.

கருவறையின் வலப்புறத்தில் இலிங்கோற்பவரின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இடுப்பு வரை உருவாக்கப்பட்டு கீழ்ப்பகுதி தூண் போன்று காட்டப்பட்டுள்ளது. இங்கு திருமாலும், நான்முகனும் இடம் பெறவில்லை. இடுப்புக்கு மேலுள்ள சிவ பெருமான் மிக எளிமையானவராகக் காட்டப்பட்டுள்ளார்.

பாண்டியர் காலத் திருப்பணிக்குப் பின் மூன்று திருப் பணிகள் நடந்து கோயில் இன்றுள்ள அளவுக்குப் பரந்து விரிந்திருக்கின்றது. பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தப் பிரதேசத்திற்கு இடம் பெயர்ந்த நகரத்தார், பெருமக்கள் இத் திருப்பணியைச் செய்துள்ளனர். இவர்கள் காலத்திலேயே இப்பகுதி பிள்ளையார் பட்டி என்ற பெயரும் ஏற்பட்டது. கோயிலில் திருப்பணி செய்தபோது மருதீச்சரம் என்ற அருகில் இருந்த கோயிலையும் சேர்த்து ஒரு கோயிலாகச் செய்து இருக்கிறார்கள். ஆகவே இக் கோயில் மகா தேவர் அவருடைய தேவியான சிவகாமி அம்மன் மருதீசர் அவருடைய தேவியான வாடாமலர் மங்கை என்று தனித்தனி திருவுண்ணாழிகளில் எழுந்தருளி யுள்ளார்கள். இங்கு சுவாமி சந்நிதிக்கெதிரே ஏழு நிலைகளை யுடைய இராஜ கோபுரமும், விநாயகர் சந்நிதிக்கெதிரே மூன்று நிலைகளையுடைய இராஜகோபுரமும் உள்ளன. சிவ பெருமானுக்கு இரு சந்நிதிகளும், அம்மனுக்கு இரு சந்நிதிகளும் உள்ளன.

இங்குள்ள சிற்பங்கள் நகரத்தாரின் கலைப் பாணிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக உள்ளது. மருதீசர் சந்நிதியின் கோஷ்டத்தை அலங்கரிக்கும் தட்ஷிணா மூர்த்தி ஒரு அழகிய படைப்பு. திருவடியை அபஸ்மாரத்தின் மீது ஊன்றியவாறும், இடது காலை வலது கால் மேல் நிறுத்தியவாறும், காதுகளில் ஓலைக்குழை, முத்தால் இழைக்கப்பட்ட நெற்றிப் பட்டம், கழுத்தில் உருத்திராக்க மணிகளால் ஆன மாலைகள் ஆகியவற்றுடன் காட்சியளிக்கிறார். சனகாதி முனிவர் மூவர் சுவடி, அக்கமாலை ஆகியவற்றுடன் காணப்படுகின்றனர். வீணை மீட்டும் முனிவர் ஒருவரும், நந்திக்களமும் தூண்களில் செதுக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே மகா மண்டபம், முக மண்டபம் ஆகிய இடங்களிலும் சிறப்பு மிக்க சிற்பங்கள் இடம் பெற்றுள்ளது. புராணக் கதைகளை சித்தரிக்கும் சிற்பங்கள் பலவும் இதில் அடங்கும். இலட்சுமி மண்டபத் தூண்களில் திருமகளின் எட்டுவகையான தோற்றங்கள் செதுக்கப்பட்டுள்ளன. திருச்சுற்று மாளிகையில் உள்ள தூண்களில் ஊர்த்துவ தாண்டவர், காளி ஆகியோரின் நடனச் சிற்பங்கள் உள்ளன.

இக் கோயிலில் கி.பி ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த **'எக்காட்டுருக் கோன் பெருந்தசன்'** என்று எழுதப்பட்ட கல்வெட்டும், பிற்காலப் பாண்டியருக்கு உரித்தான பத்துக் கல்வெட்டுக்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. இக் கல்வெட்டு ஆதாரங்கள் மூலம் கோயில் நிர்வாகம், அளிக்கப்பட்ட நிவந்தங்கள் முதலியவற்றை அறியக்கூடியதாகவுள்ளது. ஆவணியில் நடைபெறும் விநாயகர் சதுர்த்தியே இவ்வூரில் நடைபெறும் திருவிழா ஆகும். விநாயகர் சதுர்த்திக்கு ஒன்பது தினங்களுக்கு முன்பே கொடியேற்றம் நடைபெறும். நாள்தோறும் மாலையில் வெவ்வேறு வாகனங்களில் விநாயகப் பெருமான் உலா வருவார். ஒன்பதாம் நாள் தேர்ப்பவனியும் இறுதி நாளில் காலை தீர்த்தோற்சவமும் மாலையில் அனைத்து உற்சவங்களும் தமக்குரிய வாகனங்களில் உலா வருதலும் இடம் பெறும்.

நகரத்தாரின் மேற்பார்வையில் இக் கோயிலில் பூஜைகள் மிகவும் சிறப்பானதாகவும் எல்லா உபசாரங்களும் மிக விமரிசையாகவும் முறைபிசகாமலும் செய்யப்படுகின்றன. (நி. நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பு

# புகழ்ச் சோழ நாயனார்

அறுபத்து மூன்று நாயன்மார்களின் புகழ்ச்சோழ நாயனாரும் ஒருவர். சிறந்த சிவபக்தனான இவர் சிவனடியார்களை சிவனெனக் கருதிய செம்மல். சோழ நாட்டின் உறையூரில் ஆட்சி செய்த புகழ் சோழ நாயனார் இருமுறை தமது பரிசனரால் சிவனடியார்க்கு நேர்ந்த தீங்கு தம்மால் நேரே நேர்ந்த தீங்கெனக் கருதிப் பரிகாரம் வேண்டி நின்ற செய்தியை அறியக் கூடியதாகவுள்ளது.

ஒரு முறை சிவகாமியாண்டார் என்ற சிவனடியார் திரு ஆனிலைக் கோயிற் சிவனுக்கெனச் சுமந்து சென்ற திருப்பூங்கூடை தமது பட்டத்து யானையாற் சிதறடிக்கப்பட்டதற்குப் பதிலாக எறிபத்த நாயனாரால் யானையும், பாகரும் கொலையுண்ட செய்திகேட்டு நாயனாரைச் சந்தித்து விசாரித்தார். தம் யானையாலும், பாகனாலும், நேர்ந்த தீங்கு தம்மால் நேர்ந்த தீங்கு எனக் கூறி அதற்குத் தீர்வாகத் தம்மையும் கொல்ல வேண்டும் எனத் தாமே தமது உடைவாளை எறிபத்த நாயனாரிடம் நீட்டினார். ஆயின் இறை திருவருளால் பாகனும், யானையும் உயிர்பெற்றதாக புகழ்ச் சோழ நாயனார் வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

மற்றொரு சமயம் குறும்பொறைநாடன் என்ற சிற்றரசன் திறைசெலுத்த மறுத்துவிட்ட காரணத்தால் புகழ்ச்சோழனாரின் படைகள் அச்சிற்றரசன் ஆண்ட ஊரின் மேற் படையெடுத்து, வெற்றி கொண்டு, சிக்கிய வீரர்களின் தலைகளுடனும், நிறைந்த திரவியங்களுடனும் நாடு திரும்பினர். எதிரி வீரர்களின் தலைக் குவியலில் ஒரு தலையைக் கண்டதும் அரசர் திடுக்கிட்டார். சடைமுடியோடு கூடிய அத்தலை சிவனடியார் ஒருவருடையது என்பதைக் கண்டு மனம் வருந்தினார்.

சிவனடியார்கள் எல்லாம் சிவனே எனக் கருதி அவர்களுக்குத் தொண்டு புரிந்து வரும். நான் அடியார் ஒருவரது மரணத்துக்குக் காரணமாகிவிட்டேனே என மறுகி, இனி நான் உயிர் வாழ்வதிற் பயனில்லை எனக் கருதி அரசபரிபாலனத்தை தன் புதல்வனிடம் ஒப்படைத்து விட்டு, தீ வளர்த்து அதனுட் பாய்ந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டார் என்பதை இவரது புராணம் மேல் வருமாறு கூறுகிறது. "கண்டசடைச் சிரத்தினையோர் கனக மணிக் கலத்தேந்திக் கொண்டு முடித்தாங்கிக் குலவுமெரி வலங்கொள்வார் அண்டர்பிரான் திருநாமத் தஞ்செழுத்தும் எடுத்தோதி மண்டு தழற் பிழம்பினிடை மகிழ்ந்தருளி உட்புக்கார்."

தன்னை எரிக்கு அர்பணமாக்க முனைந்த புகழ்ச்சோழனார் அச்சிவனடியார் சிரத்தைப் பொற்றாம்பாளத்தில் இட்டுச் சிரசின் மேற் சுமந்து அக்கினியை வலம் வந்து பஞ்சாட்சர மந்திரத்தை ஜெபித்தபடி எரியுட் பிரவேசித்த செய்தியையே அவரது புராணத்தில் இடம்பெற்ற மேற்படி பாடல் விளம்புகிறது. மன்னன் தன்னை அக்கினிக்கு ஆகுதியாக்கிய வேளையில் மலர்மாரி சொரிய, தேவர் துந்துபி முழங்க, முடிவில் மன்னன் சிவபெருமான் சேவடிக் கீழ் அமரும் பேறு பெற்றார்.

"புக்கபொழு தலர்மாரி புவிநிறையப் பொழிந்திழிய மிக்கபெரு மங்கல தூரியம் விசும்பின் முழக்கெடுப்பச் செக்கர் நெடுஞ்சடைமுடியார் சிலம்பலம்பு சேவடியின் அக்கருணைத் திருநிழற் கீழ் ஆராமை அமர்ந்திருந்தார்" எனவரும் பாடல் குறிப்பு புகழ்ச்சோழனாரின் இச்செயற்கரிய செயற்திறத்தால் சிவப்பேறு பெற்றார் என்பதைப் புலப்படுத்துகிறது. (நி. நி.)

# புகழ்த் துணை நாயனார்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான புகழ்த்துணை நாயனார் செருவிலிப்புத்தூர் ஆதி சைவ குலத்தில் பிறந்தவர். இறைவனை சிவாகம முறைப்படி பூசனை செய்தவர். பரமசிவனிடம் மிகுந்த பக்தி கொண்ட இவர், அபிஷேகப் பிரியனான சிவனை ஆறு காலங்களிலும் அபிஷேகம் செய்து அர்ச்சனை செய்வார்.

இந் நாயனார் திருவாரூர்த் திருக்கோயில் வளாகத்தில் திருத் தொண்டாற்றிக் கொண்டிருக்கையில் ஒரு நாள் அங்கு சென்றிருந்த கழற்சிங்கர் என்ற அரசரின் பட்டத்துத் தேவி திருபூமண்டபத்தின் பக்கத்திற் கிடந்த பூவொன்றை எடுத்து மோர்ந்து பார்த்துவிட்டார். அதற்குரிய தண்டனையாக பட்டத்தரிசியின் மூக்கையே அறுத்துவிட்டார். திருப்பூமண்டபத்திற்கு அருகிற் கிடந்த தேனும் சிவபெருமானுக்குச் சாத்துவதற்கெனக் கொண்டு வந்த பூ என்பதால் அதனை அரசி முகர்ந்து பார்த்ததும் தாங்கொணச் சினம் தலைக்கேற இக் குரூரச் செயலை புகழ் துணை நாயனார் மேற்கொண்டார். "பரமர் செய்ய சடை முடியிலேறும் மலர்மோந்த மூக்கைத் தடிவனென்று கருவியினா லரிந்தார்" எனச் சேக்கிழார் அருளியுள்ளார். சிவத் திரவியமதைப் பேணுவதில் இருந்த தொண்டுறுதி காரணமாக சேக்கிழார் அவரைத் "தலைமைத் தனித் தொண்டர்" எனப் போற்றுகிறார். (தீவிரமான தொண்டுறுதி கொண்டவர்களில் தலைமையானவர் என்பது பொருள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறை நாட்டிற் கொடும் பஞ்சம் தோன்றியதால் உணவொன்றுமின்றி உடல் முற்றாக வற்றிச் சோர்வுற்றார். இந் நிலையிலும் அபிஷேக, அர்ச்சனை நியமத்தினின்றும் தவறாதிருந்தார். ஒரு நாள் அபிஷேகக் குடத்தைத் தாங்கும் திறனின்றிச் சோரக் குடம் வழுவிச் சுவாமி தலையில் விழுந்து விட்டது. ஏற்கனவே இருந்த உடற் பலவீனத்துடன் அபச்சாரம் நேர்ந்துவிட்டதே என்ற நிலையில் உள்ளமும் தளர்ந்து மயங்கி உறக்க நிலை எய்திவிட்டார் புகழ்த்துணை நாயனார்.

"தொண்டு படு தொண்டர் துயர் தீர்ப்பான் தான் காண்" என அப்பர் சுவாமிகள் கூறியது போல் தன் அடியார்களின் தொண்டு நெறிக்கு இன்னல் ஏற்படும் போது அதனைத் துடைத் தெறியும் கருணாகரனான சிவபெருமான், உறக்க நிலையில் இருந்த நாயனாரின் கனவில் தோன்றி உன் தொண்டிற்கு இடை யூறாகவுள்ள பஞ்ச வேதனையைப் போக்க நாளும் பொற்காசு தருவோம் நம் பீடத்தின் கீழ் கண்டெடுத்துக் கொள்க என அறிவித்தார். இந் நிகழ்ச்சி அவர் புராணத்தில் சேக்கிழாரால் "மாலயனுக் கரியானை மஞ்சன மாட்டும் பொழுது சாலவுறு பசிப்பிணியால் வருந்தியே தளர்வெய்திக் கோலநிறை புனல் தாங்கு குடந்தாங்க மாட்டாமை ஆலமணி கண்டத்தார் முடிமீது வீழ்த்தயர்வார் என்றும் சங்கரன்றனருளாலோர் துயில் வந்து தமையடைய அங்கணனுங் கனவின்கணருள்புரிவானருந்துணவு மயங்கிய நாள் கழியாவும் வைப்பது நித்தமுமொருகா சிங்குனக்கு நாமென்ன இடர் நீங்கி எழுந்திருந்தார்" என்று கூறப்படுகின்றது. பஞ்ச நிலையினால் உடல் தஞ்சங்கெட்டுத் தளர்ந்து போதும் உள்ளத்துறுதியுடன் அபிஷேக அர்ச்சனைகளை கைவிடாது தொடர்ந்து மேற்கொண்ட புகழ்த்துணை நாயனாரின் தொண்டின் திறன் மனம் கொள்ளத் தக்கது. (நி. நி.)

## புத்தர் பெருமான்

பரத கண்டத்தில் மிகவும் புராதனமான காலத்திலே தோன்றிய சீர்திருத்தவாதிகளில் முதன்மையானவர் கௌதம புத்தர். அவரின் போதனைகளை அடிப்படையாகக் கொண்ட பௌத்தம் காலப்போக்கில் ஒரு சமயமாகி விட்டது. அது ஆசியாக் கண்டத்தின் பெரும்பாலான தேசங்களிற் பரவியது. இந்திய ஆன்மீக நெறி சார்ந்த சிந்தனை வளர்ச்சியிலே புத்தரின் போதனைகள் புரட்சிகரமானவை. கடவுள், ஆன்மா, என்னும் கோட் பாடுகளை நிராகரித்த கௌதமர் வேள்வி, வழிபாடு, கிரியை, சடங்கு என்பவற்றையும் நிராகரித்தார். ஆயினும், வைதீக சிந்தனையில் அடங்கிய வினைப்பயன், மறுபிறப்பு என்னும் கோட்பாடுகள் அவரின் தத்துவ விசாரங்களுக்கு அடிப்படையானவை.

பிறவி வினைப்பயனோடு தொடர்புடையது. வினைப்பயன், பந்தபாசங்களுக்குக் கட்டுப்பட்டது. வினைப்பயனால் விளையும் பிறவி எல்லையிலாதது. பிறவி பிணி போன்றது. பிறவியிலிருந்து நீங்குவதே வீடுபேறு. ஒழுக்க சீலங்கள் மூலமாகவே அதனை அடைவதற்குரிய பக்குவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். புத்தரின் போதனைகள் அளவைப் பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டவை. ஆதி காலத்திலே கற்றோர் மத்தியிற் பௌத்த சமயம் மிகுந்த செல்வாக்கினைப் பெற்றது. கௌதமரின் வித்துவ பூர்வமான வாதங்களும் ஆளுமையும் மிகவும் கவர்ச்சியானவை. கௌதம புத்தரின் வாழ்க்கை வரலாறு முற்றிலும் தெளிவுடையதாக விளங்கவில்லை. எனினும் கிறிஸ்தவ மரபிலுள்ள யேசுநாதரின் வாழ்க்கை வரலாறு பற்றிய செய்திகளைக் காட்டிலும் புத்தர் பெருமானைப் பற்றிய விவரங்கள் வரலாற்றுச் சார்புடையன என்பது குறிப்பிடற்குரியது. அந்த விவரங்கள் காலப்போக்கிற் பௌராணிகமான தன்மையைப் பெற்று விட்டன. காலத்தாற் பிற்பட்ட பௌத்த நூல்களிலே காணப்படும் குறிப்புகளிலும் கதைகளிலும் அவரைப்பற்றிய வரலாற்றுச் செய்திகளை அலங்காரமான புனைந்துரைகளிலிருந்து வேறுபடுத்த முடியாத நிலை ஏற்பட்டு விடுகின்றது.

வரலாற்று நாயகனான கௌதமர் இராசதானிகளோடும் அரசர்களோடும் பண்டிதர்களோடும் உறவாடியவர். இந்தியாவின் கிழக்குப் பகுதியில் அரசு புரிந்த மன்னர்களோடு உறவு கொண்டவர். சமுதாயத்தின் மேனிலையிலுள்ளவர்களுக்கு நன்கு அறிமுகமானவர். சமகாலத்துச் சமுதாயம் பற்றி நன்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்தவர். புத்தராவதற்கு முன்பு வெவ்வேறு சமய நெறிகளைப் பின்பற்றிய துறவிகளோடும் சமயவாதிகளோடும் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தவர். தனது விசாரங்களின் பயனாகவும் அனுபவங்களின் வழியாகவும் வினைப்பயனாகிய பிறவியிலிருந்து விமோசனம் பெற்று விட்ட உணர்வினைக் கொண்டவர். அவர் தனது உணர்வுகளைச் சமுதாயத்திற்கு அறிமுகஞ் செய்வதற்கென்று மக்களுக்குப் போதனை செய்தவர். பலர் அவரது புதிய சிந்தனைகளை வரவேற்றனர். அவர்களிற் பாண்டியத்தியம் பெற்ற பிராமணரிற் சிலரும் அடங்குவர். கௌதமரின் போதனைகளை ஒப்புக் கொண்ட சிலர் அவரின் சீடராகித் துறவறம் பூண்டனர்.

கௌதமரின் சிந்தனைகளைப் போதிப்பதற்கென்று பௌத்த சங்கம் உருவாக்கப்பட்டது. ஆதியான சங்கத்தவர் புத்தர்பிரானின் சீடர்களாவர். பௌத்த நெறியினை ஒரு சமயமாக அமைத்துக் கொள்வதில் அவர்கள் குறிப்பிடத்தக்க பங்கினை வகித்தனர். காலப்போக்கில் **மும்மணிகள்** என்ற மரபு பௌத்தரிடையே உருவாகியது. **புத்தர், தர்மம், சங்கம்** ஆகியனவே மும்மணிகள். அவை பௌத்த சமயத்திற்கு அடிப்படையானவை. அவை அபிமானத்திற்குரியவை; விவாதத்திற்கும் பரிசோதனைகளுக்கும் அப்பாலானவை என்ற உணர்வு ஏற்பட்டதும் பௌத்தம் அளவைப் பிரமாணங்களுக்கும் வாதப் பிரதிவாதங்களுக்கும் அப்பாலானதாகி விடுகின்றது. அந்த நிலையிற் கௌதம புத்தரைப் பற்றிய கருத்துகளும் பெருமளவுக்கு மாறிவிடுகின்றன. மிகுந்த மனோசக்தி படைத்தவராகவும் நவமான சிந்தனைகளின் போதனாசிரியராகவும் விளங்கிய புத்தர் பெருமான் பூவுலகில் வாழ்ந்த மனிதர் என்ற நிலையிலிருந்து நீங்கிச் சர்வலோகங்களினதும் நாயகர் என்ற பதவியை அடைந்து விடுகின்றார். அவரது இயல்புகள் உபநிடதங்கள் குறிப்பிடும் பிரமத்திற்கு உரியனவற்றை ஒத்தனவாகும். எனவே, புத்தரைப் பற்றிய பார்வையில் இரு வேறு பரிமாணங்கள் உள்ளன. ஒன்று வரலாற்று நோக்கில் அமைந்தது. மற்றையது சமய சிந்தனைகள், மரபுகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டது. இரண்டாவது அறிவியல் சார்ந்த விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டது. புத்தரைப் பற்றிய இலக்கியக்குறிப்புகளை நோக்குமிடத்து இந்த வேறுபாடுகளைப் பற்றிய புரிந்துணர்வு அவசியமானது. சமயவாதிகள் பலரைப் பொறுத்த வரையிலும் அது பொருத்தமானது.

புத்தரின் வாழ்க்கை வரலாறு பற்றிய குறிப்புகள் பல வகையான இலக்கியங்களிற் காணப்படுகின்றன. அவற்றுட் புத்தரின் போதனைகள் அடங்கியவை என்று கொள்ளப்படும் திரிபிடகங்கள் ஒரு வகையானவை. அவையே காலத்தால் முற்பட்டவை. அவை ஓரளவிற்குச் சமகாலத்தவை என்ற சிறப்புங் கொண்டவை. அவற்றிலே புத்தரின் வாழ்க்கை வரலாறு பற்றிய ஆதாரபூர்வமான விவரங்களைக் காணலாம். அஸ்வகோஷர் போன்றவர்கள் எழுதிய நாடக நூல்களும் காவிய நூல்களும் வேறொரு வகையானவை. அவை கௌதமரின் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளாற் பிற்பட்டவை. அவை எழுந்த காலத்திலே புத்த சமயம் பெருமளவில் மாறிவிட்டது. அது, புத்தரைப் பௌத்தராயினோர் கோயில்களிற் படிமக் கோலத்தில் வழிபட்ட காலம். அது போதிமாதவரைக் குறைவிலா நிறைவாகக் கொண்டவொரு காலம். அப்பொழுது அவரைப் பற்றிய உணர்வுகள் உணர்ச்சி மயமாகிவிட்டன. **புத்த சரிதம்** காட்டும் புத்தர் குணசாகரர்; தர்மசாகர். அவர் சாக்கியர் குலத்து இராசகுமாரனாகப் பிறந்த கௌதமரிலிருந்தும் மிகவும் வேறுபட்டவர்.

பௌத்தர்களின் காலக்கணிப்புகளின் அடிப்படையிற் கௌதமர் கி.மு 563இற் பிறந்தவர். அவர் நேபாளத்தின் எல்லைப் புறத்திலுள்ள லும்பினிவனத்திற் பிறந்தார். அவ்விடம் இந்தியாவின் கிழக்குப் பகுதியின் வடக்கு எல்லையில் இருந்த ஊராகும். சுத்தோதனர், மாயாதேவி என்போர் அவரின் பெற்றோர். அவருக்குப் பெற்றோர் வழங்கிய பெயர் சித்தார்த்தர் என்பதாகும். சித்தார்த்தர் பிறந்த பின் ஏழு நாட்கள் கழிந்ததும் தாயாரான மாயாதேவி இறந்து விட்டார். தாயாரின் சகோதரியான கோதமியின் அரவணைப்பில் சித்தார்த்தர் வளர்ந்தார். சுத்தோதனர் சாக்கிய குலத்தலைவர். கபில வஸ்துவிலிருந்து அரசு புரிந்தவர்.

சித்தார்த்தர் பிறந்த சமயத்திலே பல அற்புதங்கள் நிகழ்ந்தமை பற்றிப் பழைய பௌத்த நூல்களிற் சொல்லப்படுகின்றது. அவை பௌராணிகமான கதைகள். மிகப்புராதனமான பௌத்த இலக்கியங்களிற் சித்தார்த்தரின் இளமைக்காலக் கல்விப் பயிற்சி பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. அவரது கல்வி, படைக்கலப் பயிற்சி, நிர்வாகத்திறன் பற்றியன தொடர்பாக **லலிதவிஸ்தர** என்ற நூலிற் காணப்படும் விவரங்கள் கற்பனாபூர்வமானவை.

பசி, பிணி, அங்ககவீனம், மூப்பு, நரைதிரை, மரணம் ஆகியவையே மனித வாழ்க்கையின் உண்மையான கோலங்கள் என்பதைக் கிழவன் ஒருவனையும், முடவனொருவனையும், துறவி ஒருவனையும், பிரேதம் ஒன்றையும் கண்டதன் பயனாக சித்தார்த்தர் கண்டார் என்ற ஐதிகமும் புனைந்துரையாகும். **சுத்த நிபாத, அரிய பரிவேசன சுத்த** போன்ற ஆதியான பௌத்த இலக்கியப் பகுதிகளில் இத்தகைய கதைகளின் அடையாளங்கள் காணப்படவில்லை. இல்வாழ்க்கை ஒழுக்கவீனத்துக்கு ஏதுவானதென்றும் அது பந்த பாசங்களை வலுப்படுத்தும் இயல்புடையதென்றும் துறவு வாழ்க்கை மூலம் அவற்றினின்றும் விடுபட்டு, சுதந்திரமாக இயங்க முடியுமென்றும் சித்தார்த்தர் உணர்ந்து கொண்டார் என்பதை இவை குறிப்பிடுகின்றன.

கௌதமர் இளமைக்காலத்திலே யஸோதரை என்னும் கன்னியை மணம் முடித்துக் குடும்ப வாழ்க்கை நடத்தினார். பத்தகச்சானா என்னும் மறுநாமங் கொண்ட யசோதரை சாக்கிய குலத்துச் சுப்பபுத்தனின் மகள்; தேவதத்தனின் சகோதரி. யசோதரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகுலன் என்னும் குமாரனைப் பெற்றாள். கௌதமரான சித்தார்த்தர் தனது 29ஆவது வயதிலே துறவறம் பூண்டார்.

அவர் இரகசியமாக இரவு வேளையில் வீட்டிலிருந்து வெளியேறிவிட்டார் என்பது ஐதிகமான கதை. அவர் பல ஊர்களைக் கடந்து வைசாலி நகரை அடைந்தார். அந்நகரின் எல்லைப்புறத்தில் ஆச்சிரமம் ஒன்றினை அமைத்திருந்த ஆராத காலம என்பவரை அடைந்து அவரோடு சில காலம் தங்கினார். அங்கிருந்த காலத்தில் அவர் **ஆகிஞ்சநியாயதனம்** என்னும் பற்றற்ற மனோநிலையினைத் தியானத்தின் மூலம் அடைந்தார். ஆராதகாலமர் சாங்கியக் கோட்பாட்டைப் பின்பற்றியவர் என்பதை **புத்தசரிதம்** மூலம் அறியமுடிகின்றது. ஆராத காலமரின் சீடராக இருந்த பின் சாங்கிய தர்சன போதனைகளிற் திருப்தி அடையாத கௌதமர் வைசாலியை விட்டு நீங்கி ராஜகிருகிருகத்திற்குப் போனார். அங்கு ருத்திரக ராமகுப்தர் என்பவரின் சீடரானார்.

ராஜகிருகத்திற்குப் போகும் வழியிற் கௌதமர் மகத தேசத்து அரசனான பிம்பிசாரனைக் கண்டார். துறவற வாழ்க்கையினைக் கைவிடுமாறு அரசன் அவருக்கு ஆலோசனை கூறினான். ஆயினும், சித்தார்த்தர் அதற்கு உடன்படவில்லை. தியானத்தின் உன்னத நிலையினை ராமகுப்தர் அடைந்துள்ளார் என்பதை அவர் உணர்ந்து கொண்டார். ஆயினும் அது வீடுபேற்றுக்கு வழியாகாதென்று உணர்ந்தார். அதனால் அவர் ராமகுப்தரையும் கைவிட்டுச் செல்ல நேர்ந்தது. அதன் பின்பு பிராமணர் ஐவரோடு கூடிக் கடுந்தவங்களைப் புரிந்தார். அதனாற் பலவீனமுற்று, இறப்பு நிகழும் என்ற அச்சத்தின் காரணமாக உயிரைக் காப்பாற்றுவதற்கான மனோவலியைப் பெறும் நோக்குடன் அதற்குத் தேவையான சொற்ப உணவினை உண்டார். அதனால் அவரோடு கூடியிருந்த பிராமணர்கள் அவரை விட்டு நீங்கினர் என்ற கதை உண்டு.

கௌதமர், அதன் பின்பு உருவெலாவிற்குச் சென்று, அரசமரம் ஒன்றின் கீழ் இருந்தார். அங்கு சுஜாதா என்னும் பெண், அவரை **விருஷக** வடிவமென்று கருதிப் பால் கொடுத்தாள். அதனைக் குடித்த பின்பு, போதிநிலையினை அடையும் உறுதியான எண்ணத்தோடு, பத்மாசனக் கோலமாகித் தியானத்தில் மூழ்கிவிட்டார். அவர் நதியின் அலைகளால் அரவணைக்கப் படுவதும் பல கிராமங்களாற் சூழப்பட்டதுமான உருவெலாவிலே, ரம்மியமான தலத்திலே போதிநிலை அடைந்தார் என்று **ஆரியபரிவேசன சுத்தவிற்** கூறப்படுகின்றது. கௌதமர் போதிநிலை அடைந்ததும் புத்தரானார். அவர் பூரணமான அறிவும் ஞானமும் பெற்றார். தான் வீடுபேறு அடைந்து விட்டதாகவும் சம்சார சாகரத்தைக் கடந்து விட்டதாகவும் அவர் கருதினார். பரஞானம் கிடைத்ததால் ஏற்பட்ட ஆனந்தக் களிப்பில் ஏழு வாரங்கள் சென்றன. அதன் பின் பிரம்ம தேவனின் வேண்டுதலினால் ஆன்மீக அனுபவம் பெற்றவர்களுக்குப் போதனை செய்வதற்கு உடன்பட்டார் என்பது கதை. தனது குரவரான ஆராட காலமருக்கும் ருத்திரக ராமகுப்தருக்கும் போதனை செய்ய விரும்பினார். ஆனால் அவர்கள் இருவரும் அக்காலமளவில் இறந்து விட்டனர். எனவே, தன்னோடு தவம் புரிந்த பிராமணர் ஐவருக்கும் தனது அனுபவங்களின் அடிப்படையிலேயே போதனை செய்வதற்கென்று அவர்களின் இருப்பிடமான ரிஷிபட்டணத்துக்குச் (சாரநாத்) சென்றார். புத்தரின் முதலாவது தர்மோபதேசம் அங்கு நிகழ்ந்தது. அதனைப் பௌத்த மரபில் **தர்மச்சக்கர பிரவர்த்தனம்** என்று சொல்வர். பிராமணர் ஐவரும் அவரின் போதனைகளை ஏற்றுக்கொண்டனர்.

அதன் பின்பு, அவர்களையும் அழைத்துக்கொண்டு புத்தர் காசிக்குப் போனார். அங்கே யஸ என்னும் வணிககுமாரனையும் அவனது நண்பர்கள் பலரையும் தம் வழிக்கு மாற்றிக் கொண்டனர். அவர்களில் இருவர் புண்ணஜி, கவம்பதி என்னும் பிரபலமான பிக்குகளாவர்.

காசியிலிருந்து புத்தர் ராஜகிருகத்துக்குப் போனார். மகத தேசத்தில் வைதிக நெறியினையும் வேறு சம்பிரதாயங்களையும் சேர்ந்த பிரபலமான சமயவாதிகளும் துறவிகளும் இருந்தனர். அவர்களோடு சமயவாதம் புரிவதிலும் அவர்களின் கோட்பாடுகளை நிராகரிப்பதிலும் புத்தர் காலத்தைக் கழிக்க வேண்டி இருந்தது. அவற்களிற் பலரை அவராற் கவர்ந்து கொள்ள முடிந்தது. பிரபலமான பலர் அவருடைய போதனைகளை ஒப்புக் கொண்டு பௌத்த உபாசகர் ஆயினர். சாரிபுத்தர், மொக்கல்லானர் என்போரும், பிராமணத் துறவிகளும், நெடுஞ்சடை தாங்கிய யோகிகளும் நிகண்ட நாகபுத்திரரின் சீடர்களான உபாலி, கபதி, அபையராஜ, குமார என்போரும், பெருஞ்செல்வனான வணிகன் அநாதபிண்டிகனும் மகதநாட்டு மன்னர்களான பிம்பிசாரன், அஜாத சத்துரு என்போரும் அவரது தர்ம நெறியை ஒப்புக்கொண்டனர். இராஜகிருஹளத்திலிருந்து காயா, உருவெலா, நாலாந்தா, பாடலிபுரம் ஆகிய இடங்களுக்கும் புத்தர் பிரயாணஞ் செய்தார்.

மகத தேசத்தில் உதயமாகிய பௌத்தம் கோசல நாட்டில் அதற்குரிய வடிவத்தைப் பெற்றது. கோசலத்தில் வைதீக சமயத்தின் செல்வாக்கு மேலோங்கியிருந்தது. புத்தர் தனது இறுதியான 21 வஸ்ஸ காலங்களைச் சிராவஸ்தியிலே கழித்தமை குறிப்பிற்குரியது. தர்மம் பற்றிய பெரும்பாலான போதனைகளும் அங்குதான் நடைபெற்றன. விநயக பிடத்தின் பெரும்பகுதி அங்கு உருவாகியது. பெருஞ்செல்வனான அநாதபிண்டிகனுடைய ஆதரவோடு புத்தர் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது. அவர் பெரும்பாலும் ஜேதவன என்னும் ஆராமத்திலே தங்கியிருந்தார். அதன் கட்டடங்களை அதிக விலையில் அநாதபிண்டிகன் கொள்வனவு செய்து புத்தருக்குத் தானம் பண்ணினான்.

கோசலராசனாகிய பிரசேனசித்து புத்தருடைய போதனைகள் பலவற்றை விநயமாகக் கேட்டான். அரசனது தேவியான மல்லிகாவும் அவனது சகோதரிகளான சோமா, சகுலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்போரும் பௌத்த உபாசகராயினர். விசாக(ன்) என்ற வேறொரு தனவந்தனும் கௌதம புத்தருக்கு ஆதரவு புரிந்தான். அவன் புவ்வாராமத்தைக் கட்டியதோடு பிக்குணிகளை ஆதரிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தான்.

ஒரு சமயத்தில் புத்தர் கபிலவஸ்துவிற்குப் போயிருந்த பொழுது, அவரது அற்புதமான ஆற்றல்களைப் புரிந்து கொண்டதும் சாக்கியர்கள் அவரை உரிய மரியாதைகளோடு வரவேற்றனர். அங்கு புதிதாக அமைக்கப் பெற்ற சாந்தாகார என்னும் சபாமண்டபத்தின் திறப்பு விழாவை நடத்துமாறு அவரை அழைத்தனர்.

புத்தர் பெருமான் தனது ஐந்தாவது வஸ்ஸ காலத்தை வைசாலி நகரிலே கழித்தார். அங்கே அம்பபாலி என்னும் பிரபலமான கணிகை பௌத்தநெறி புகுந்து, தனது மாந்தோப்பினைச் சங்கத்தாருக்குத் தானம் பண்ணினாள். ஆநந்தரதும் கோதமியினதும் வற்புறுத்தலினாற் பிக்குணிகளுக்கு தனிமையான சங்கமொன்றை உருவாக்குவதற்கு அவர் உடன்பட்டார்.

மல்லர்கள் புத்தரின் போதனைகளை ஏற்கவில்லை. யாராயினும் புத்தரை வரவழைத்தால் அவர்மீது 500 கர்ஷாபணங்கள் தண்டனை விதிக்கப்படும் என்று பிரகடனஞ் செய்தனர். புத்தர் தனது ஒன்பதாவது வஸ்ஸ காலத்தைக் கௌசாம்பியிற் கழித்தார். கௌசாம்பி அரசனாகிய உதயணன் புத்தர் மீது எதுவிதமான பற்றுங் கொண்டிருக்கவில்லை. ஆயினும் அவனது தேவிகளில் ஒருத்தியான சாமாவதி புத்தர் பெருமான் மீது மிகுந்த அபிமானங் கொண்டிருந்தாள்.

தனது 12ஆவது வஸ்ஸ காலத்தைக் கௌதமர் மதுராவிற்கு அண்மையிலுள்ள வேரஞ்ஜா என்னுமிடத்திலே கழித்தார். அதற்கு மேற்கிலுள்ள இடங்களுக்கு அவர் பிரயாணஞ் செய்யவில்லை. ஒரு சமயத்தில் அவந்திராசனான சந்திரப் பிரத்யோதன் தனது நாட்டிற்கு வருமாறு கௌதமரை அழைத்தான். அவர் அதற்கு இணங்கவில்லை. தனது கருத்துக்களைப் போதனை செய்வதற்கு அங்கு மகாகச்சாயனரை அனுப்பி வைத்தார். அவரது போதனைகளை கேட்ட சிலர் பிடகநெறியிற் சேர்ந்தனர். கௌதமர் அங்க தேசத்திலே வஸ்ஸ காலத்தைக் கழிக்காத போதிலும் அங்குள்ள சம்பா, ஆபன, அஸ்ஸபுர(ம்), கஜங்கல முதலிய இடங்களுக்கு விஜயஞ் செய்தார்.

அவர் தனது வாழ்க்கையில் இறுதி நாட்களை மல்ல(ர்) கணத்தவரின் தலை நகரமான குஸிநாராவிற் கழிக்க நேர்ந்தது. அங்கு தங்கிய காலத்தில் அவர் நோய்வாய்ப்பட்டு, தனது 80 ஆவது வயதில் இறந்தார்.

அவரது மரணம் பௌத்தசமய மரபிலே மகாபரி நிர்வாணம் என்று சொல்லப்படும். ஆநந்தர் முதலான அவருடைய சீடர்கள், ஈமச்சடங்கினை நடத்தினார்கள். புத்தரின் அஸ்தியிற் பங்கு தருமாறு பலர் கேட்டார்கள். வைசாலி நகரத்துலிச்சவிகல், கபில வங்து நகரத்துச் சாக்கியர்கள், அளகப்பா என்னுமிடத்து புலி கணத்தோர், ராமகாமத்துக் கோலியர், வேததீபத்துப் பிராமணர், குஸிநாரா நகரத்து மல்லர்கள், பிப்பலிவனத்து மோரியர், தோண என்னும் பிராமணர் ஆகிய அனைவரும் உரிமை கோரினார்கள். புத்தர் பெருமானின் அஸ்தியைப் பேழைகளில் அடைத்து அவற்றைப் புதைத்த இடங்களிலே சேதியங்களை அமைத்தனர். சேதியங்கள் வழிபாட்டுச் சின்னங்களாகி விட்டன. கடவுளையும் வழிபாட்டையும் மறுத்த புத்தர் அவரின் அபிமானிகளால் வழிபாட்டிற்கு உரியவரானார். முதலாவது கட்டத்திலே சேதியம், போதி மரம், பாதச்சுவடுகள், தர்மச்சக்கரம் என்பனவற்றைப் புத்தரின் அடையாளங்களாகக் கொண்டு வழிபட்டனர். அடுத்த கட்டத்திலே அவரைப் படிமக் கோலத்தில் வழிபட்டனர். (சி. ப.)

## புத்தகயா

கயாவிலிருந்து சுமார் 10 கி. மீ. தூரத்தில் அமைந்துள்ளது. புத்தகயா. ஒரு காலத்தில் மகத சாம்ராஜ்ஜியத்தில் பௌத்தர்களின் தொட்டிலாக விளங்கிய புத்தகயா இன்று சுற்றுலாத் தலமாக சிறந்து விளங்குகிறது. அரசனாகப் பிறந்து, துறவியாக வாழ்ந்து, ஆண்டியாக இறந்த புத்தரின் வரலாற்றில் பின்னிப் பிணைந்து நிற்கும் சிறப்பு மிக்க இடங்கள் எட்டு.

கபிலவஸ்துவில் பிறந்து, புத்தகயாவில் ஞானம் பெற்று, சாரநாத்தில் முதல் பிரசங்கம் செய்து, ராஜகிரிகாவில் மதயானையை அடக்கி, வைஷாலியில் குரங்கிடம் தேனைப் பருகி, சரஸ்வதியில் அற்புதத்தை நிகழ்த்தி, சங்கஸ்யாவில் வானத்திலிருந்து இறங்கி, குஷி நகரத்தில் இறுதி மூச்சை விட்ட புத்த பகவானின் வாழ்க்கை வரலாற்றில் புத்தகயா முக்கியமானதாகும்.

நிரஞ்சனா நதிக்கரையில் ஆரவாரமற்ற அமைதியான சூழ்நிலையில் அழகாக அமைந்திருக்கிறது புத்தகயா ஆலயம். வடநாட்டு ஆலயத்துக்கே உரித்தான மூலஸ்தான கோபுரம். ஆனால் சற்றே மாறுபட்டது. நான்கு பக்கமும் சதுர வடிவிலான 7 அடுக்குகளை உடைய கோபுரம் பிரமிட் வடிவில் 180 அடி உயரம் கொண்டது. மாறுபட்ட தோற்றத்தைக் கொண்ட கோபுரத்தின் உச்சியும், வானுயர்ந்த கோபுர கவசமும், ஆலயத்தை சமநிலைப்படுத்தும் வகையில் நான்கு மூலைகளிலும் கட்டப்பட்டுள்ள சிறு சிறு கோபுரங்களும் பக்தர்களைப் பெரிதும் கவர்கின்றன. மனித வாழ்க்கையின் ஐந்து தத்துவங்களைக் குறிக்கும் வகையில் இந்த 5 கோபுரங்களும் கட்டப்பட்டுள்ளன.

கர்ப்பக்கிரகத்தில் வீற்றிருக்கும் புத்தர் விக்கிரகம் தங்கத் திலானது. புத்தர் ஞானம் பெறுவதற்காக கடைப்பிடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையான நெறிமுறைகளை வெளிப்படுத்துவதற்காகப் பூமியைச் சாட்சியாக அழைப்பதன் பொருட்டு வலதுகையில் பூமியைத் தொட்டுக் கொண்டிருக்கும் காட்சியை வேறு எங்கும் காண இயலாது.

இவ் ஆலயத்தின் தென்புறத்தில் குளத்தின் நடுவே தவக் கோலத்தில் அமர்ந்திருக்கும் புத்தர் மழையில் நனையாமல் இருக்க, ஐந்து தலை நாகம் குடை விரித்தாற் போல் இருக்கும் காட்சி சற்று வித்தியாசமானது.

ஆலய வளாகத்தில் தனியாக பீடம் அமைத்து, புத்தரின் பாதங்களை செதுக்கியுள்ளனர். இது வழிபாட்டுக்குரியது. புத்தர் ஞானம் பெறுவதற்காக அமர்ந்திருந்த போதி மரத்தடியில் உள்ள பீடத்தை தனியாக அடையாளமிட்டுள்ளனர். அங்கு தற்போது உள்ள மரம் ஆதியில் இருந்த மரம் அல்ல. ஆதியில் இருந்த மரத்திலிருந்து ஒரு கிளையைத் தனது மகள் சங்கமித்திரையை இலங்கைக்கு அனுப்பிய போது உடன் அனுப்பி வைத்தார் அசோகர்மன்னன்பின்னர் அந்தக் கிளையிலிருந்து தோன்றிய மரத்திலிருந்து ஒரு கிளையை எடுத்து வந்து மீண்டும் இங்கு ஒரு மரத்தை உற்பத்தி செய்தார்கள். அதுதான் தற்போதுள்ள மரமாகும்.

புத்தர் ஞானோதயம் பெற்ற பிறகு தம்முடைய கொள்கைகளை எவ்வாறு வெளிப்படுத்துவது என்று யோசித்தவாறு ஏழு தம்படிகளை எடுத்து வைத்தார். ஆபரண நடை (Jewell walk) என்று அதைச் சொல்வார்கள். அதற்கான மேடை தனியாக உள்ளது. மேலும் ஞானோதயம் பெற்ற பின்னர் புத்தர் பெருமான் ரத்னாகர் என்னும் ஆலயத்தில் ஒரு வார காலம் கழித்தார் என்பர். அச்சமயம் அவருடைய உடலிலிருந்து 5 வகையான வண்ணங்களில் ஒளிக் கதிர்கள் வீசினவாம். அந்த ஆலயத்தை இங்கு காணலாம்.

இங்கு திபெத், தாய்லாந்து, ஜப்பான், பூடான், பர்மா, இலங்கை, சீனா ஆகிய நாட்டினர்கள் தம் நாட்டு கட்டிடக் கலை பரிணமிக்கும் வகையில் வெவ்வேறு அமைப்பில் ஆலயங்களை எழுப்பியுள்ளனர். ஒவ்வொன்றும் ஒவ்வொரு அமைப்பு அவற்றில் எவை சிறந்தது என பகுத்துணர்வது கடினமாகும். இவை இந்தியாவில் தோன்றிய பௌத்த மதம் பிற நாடுகளில் அதிகம் போற்றப்படுகின்றது என்பதற்கு சான்றுகளாக உள்ளன.

(தே. ஹ.)

## புரந்தர தாஸர்

புரந்தரதாஸர் 1484 ஆம் ஆண்டு கன்னட மாநிலத்தில் வரதப்பா எனும் பெரிய தனவந்தரின் புதல்வராகப் பிறந்தார். இவருக்கு இளமையில் சீனப்பா என்ற பெயரும், பின்னர் திம்மப்பா, திருமலையப்பா என்ற பெயர்களும் இடப்பட்டன. மிகவும் லோபியாகவும் பணமீட்டுவதிலும் குறியாக இருந்த இவரை பக்தி மார்க்கத்திற்கு திருப்பிய சம்பவம் இவரது வாழ்க்கை வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சியாகும்.

பரமலோபியாக இருந்த சீனப்பா (புரந்தரதாஸர்) ஒரு சமயம் ஏழைப்பிராமணர் ஒருவரின் வீட்டு உபநயச் சடங்கிற்கு நிதி உதவி செய்வதாக வாக்களித்து விட்டுக் கடைசி நேரத்தில் ஏமாற்றி விட்டார். ஏமாற்றமடைந்த வயோதிப பிராமணர் சீனப்பாவின் மனைவியாகிய சரஸ்வதிபாயிடம் தனது ஏமாற்றத்தை விளக்கினார். சரஸ்வதிபாய் அவ்வயோதிகருக்கு உதவி செய்தற் பொருட்டுத் தான் அணிந்திருந்த மூக்குத்தியை வழங்கினார். இவ்விடயம் கணவருக்குத் தெரிந்த பொழுது தனது செய்கைக்காகப் பயந்து உயிரை மாய்த்துக் கொள்ள முயன்ற பொழுது கிருஷ்ண பரமாத்மாவின் தரிசனம் கிடைத்தது. இதிலிருந்து மனைவியின் பக்திப் பிரபாவத்தை உணர்ந்து கொண்ட சீனப்பா, தனது மடமையை எண்ணி மனம் வருந்தினார். அது முதற் கொண்டு பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டார். அவர் முதன் முதலாக அடானா இராகத்தில் '*மோசஹோகிதேனல்லோ*' என்னும் கீர்த்தனையைப் பாடினார்.

புரந்தர தாஸருக்குக் '*கர்நாடக சங்கீத பிதாமகன்*', '*ஆதிகுரு*' என்ற புனைப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஏனெனில் இவர்தான் ஆரம்ப இசைப் பயிற்சிக்கான ஸ்வராளிகள், ஜண்டை வரிசைகள், அலங்காரங்கள், கீதங்கள் முதலியவற்றை இயற்றியவர். *மாயாமாளவ கௌளை இராகம்* தான் ஆரம்ப பயிற்சி பெறுபவருக்கு ஏற்ற இராகம் எனத் தேர்ந்தெடுத்தவரும் இவரே. இவர் 4,75,000 கிருதிகளைச் செய்துள்ளதாக 'வாசுதேவ நாமாவளிய' என்ற உருப்படியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவரது உருப்படிகள் கன்னடத்திலும் வடமொழியிலும் உள்ளன. இவரது உருப்படிகளை ***'தாசர்பதகளு'*** எனக் குறிப்பிடுவதுண்டு.

இவரது முத்திரை '*புரந்தர விட்டல*' என்பதாகும். இவரது உருப்படிகளின் நடை எளிது. இவரது கீர்த்தனைகளில் வேத உபநிடதம் முதலியவைகளின் சாராம்சத்தைக் காணலாம். *மார்சீஸ பைரவி, மாரவி, வசந்த பைரவி, சியாம கல்யாணி* போன்ற அபூர்வ இராகங்களிலும் இவர் உருப்படிகளைச் செய்துள்ளார்.

இவர் 1564ஆம் ஆண்டு தனது 80வது வயதில் இறைவனடி அடைந்தார். (தே. ஹ.)

## புராணங்கள்

புராணம் என்று சொல்லப்படும் நூல்கள் பலவகையானவை. சமஸ்கிருத மொழியிலும் தமிழ் முதலான பிற இந்திய மொழிகளிலும் புராணம் என்ற வகைக்குரிய இலக்கியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. மகா புராணங்கள் என்பன அவற்றுட் பிரதானமானவை, புராதனமானவை. தமிழ்மொழிப் புராணங்களிற் பெரும்பாலானவை தலபுராணங்கள். அவை பாடல் பெற்ற தலங்களைப் பற்றியவை. பெரும்பற்றப்புலியூர்ப் புராணம், திருவிளையாடற்புராணம், சேதுபுராணம் முதலியவை தலபுராணங்கள். பெரியபுராணம் வேறொரு வகைக்குரியது. அது நாயன்மார்களின் மரபுவழிச்சரிதங்களைச் சைவ சமய கோட்பாடு களோடு இணைத்துச் சொல்லும் பான்மை கொண்டது. கந்த புராணம் இன்னுமொரு வகையானது. சமண நூலான சாந்தி புராணம் என்பதற்கும் பெரிய புராணத்துக்கும் இடையிலே சில தொடர்புகள் உண்டு. இலக்கிய வடிவங்கள் சிலவற்றின் உற்பத்திகளைப் பொறுத்த வரையில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் ஆகிய சமய மரபுகளுக்கிடையிலே தொடர்புகள் இருந்தன.

இலக்கிய வடிவங்களை அவற்றின் சிறப்புப் பெயர் மூலமாக விளக்குவது ஒரு மரபாகிவிட்டது. **புராணம்** என்பது பழையது, பழைய மரபு, தொன்மையான கதை எனப்பொருள் படும் ஆயினும் இவ்விளக்கத்தின் அடிப்படையிலே புராணங்களின் பொருள் மரபினை அறியுமாறில்லை. **புராணம்** என்னும் சொல் பற்றிய இவ்வாறான விளக்கம் இராமாயணம் மகாபாரதம் என்பனவற்றுக்கும் பொருந்தும். ஒரு வகையில் அது வேதங்கள், ஸ்மிருதிகள் என்பனவற்றுக்கும் பொருந்தும் அவையாவும் புராணங்களிலிரு ந்தும் வேறுபட்டவை. இலக்கிய வகைகளையும் வரலாறுகளையும் அறிவியல் பூர்வமாக நோக்க வேண்டும். அவற்றைப் பற்றிய விளக்கங்கள். பொருளடக்கத்தைப் பற்றியனவாதல் வேண்டும்.

## மகா புராணங்கள்

மகாபுராணங்கள் எத்தகையவை? அவற்றிலே கூறப்படும் விடயங்கள் எத்தகையவை? இந்து சமய வளர்ச்சியிலும் வரலாறிலும் அவை பெறும் முக்கியத்துவம் என்ன? என்பன வற்றை சுருக்கமாக விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். புராணம் என்ற சொல் வேதங்களில் **இதிகாசம்** என்பதோடு தொடர்புபடுத்திச் சொல்லப்படுகின்றது. அது ஒரு வகையான இலக்கியமன்றிப் புராதனமான கதைகள், ஆக்கியானங்கள் என்பவற்றையே குறிக்கின்றது. ஆனால் காலப்போக்கில் அந்நிலை மாறிவிடுகின்றது. பழங்கதைகள், ஆக்கியானங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய ஒருவகை இலக்கிய மரபாகப் புராணம் வடிவு பெற்றுள்ளது. "சதுர்த்த மிதிஹாஸ புராணம் பஞ்சமம் வேதானாம் வேதமிதி" என்று சாந்தோக்கிய உபநிடதம் கூறும். அதன் அடிப்படையில் புராணங்களை ஐந்தாவது வேதம் என்று சொல்லும் மரபொன்று உருவாகிவிட்டது. ஆனால் வைதீக மரபிலே புராணங்களை வேதங்களுக்கு நிகரானவையாக, பிரமாண நூல்களாகக் கொள்வதில்லை. சைவ சமய மரபிலும் அதுவே நிலையாகும். தேவார திருவாசகங்களும் திருமந்திரமும் வேதம், ஆகமம் என்பவற்றையே முதன்மைப்படுத்துகின்றன. ஐந்தாவது வேதம் எனக்குறிக்கப்படும் எந்த நூலும் வேதங்களுக்கு நிகராவதில்லை. மகாபாரதத்தையும் ஐந்தாம் வேதம் என்பர். பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரமும் சில சமயங்களில் அவ்வாறு வர்ணிக்கப்படும். சமய வழிபாடுகள், தத்துவ சிந்தனைகள் ஆகியன பற்றிய விடயங்களில் வேதங்கள் நான்கு என்பதுவே உறுதியான மரபு. இதனைப்பற்றிய தெளிவின்மையால் புராணங்கள், இதிகாசங்கள் என்பன பற்றி இந் நாட்களில் தவறான சிந்தனைகள் ஏற்படுகின்றன. பாடநூல்களில் அவை இடம்பெறுகின்றன. அதனால் மாணவர்களின் மனங்களிலும் தவறான கருத்துக்களும் ஆதாரமற்ற சிந்தனைகளும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

வேதங்களிலே சொல்லப்படும் சமயமரபுகளும், சடங்குகளும் தத்துவ சிந்தனைகளும் புராணங்களில் உள்ளவற்றைக் காட்டிலும் வேறுபட்டனவாகும். வேத சம்கிதைகளிலே தொகுதியான பாடல்கள் அக்கினி, இந்திரன், வருணன் முதலிய தேவர்கள் பற்றிய தோத்திரப் பாடல்கள். ஆனால் புராணங்கள் சிவன், மகாவிஷ்ணு என்னும் தெய்வங்களின் வழிபாடுகளைப் பற்றியவை. ஈஸ்வரன் என்னும் முழுமுதற் கடவுள் பற்றிய சிந்தனைகள் அவற்றிலே அழுத்தம் பெறுகின்றன. யாகங்களைப் பற்றிய விளக்கமாய் அமைந்த பிராமணங்கள் போன்ற பகுதிகளும் புராணங்களிற் காணப்படவில்லை. உபநிடதங்களைப் போன்ற பகுதிகளும் அவற்றில் முனைப்பு பெறவில்லை. வேதங்களும் புராணங்களும் வெவ்வேறு காலங்களுக்குரியவை. இந்து சமய வளர்ச்சியில் அவை வெவ்வேறு காலங்களுக்குரிய மரபுகளையும் சிந்தனைகளையும் பிரதிபலிக்கின்றன. காலத்தால் வேதங்களுக்கு மிகவும் பிற்பட்டனவாகிய புராணங்கள் குப்தப் பேரரசர் காலத்தில் வளர்ச்சியடைந்தன.

## மகாபுராணங்களின் உற்பத்தி

புராணங்கள் தெய்வீகமானவை என்ற குறிப்புகள் அதர்வவேதம், பிருஹதாரண்யக உபநிடதம் போன்றவற்றில் உள்ளன. லோமஹர்ஷணரே புராணக் கதைகளைச் சொன்னாரென்று அவற்றிலே சொல்லப்படுகின்றது. அவர் வியாசரிடமிருந்து அவற்றைக் கேட்டார் என்றும் முன்னே அவற்றை வியாசருக்கு இறைவன் உபதேசஞ் செய்தாரென்றும் சொல்லப்படுகின்றது. வியாசருக்கும் புராண உபதேசங்களுக்கும் தொடர்புண்டு என்பதை உறுதி செய்ய முடியவில்லை. அது ஒரு புனைகதை.

புராணம் என்ற ஒருவகை இலக்கிய மரபு தர்மசூத்திரங்கள் எழுதப்பட்ட காலத்தில் உருவாகிவிட்டது. தர்மசூத்திரங்கள் கி.மு ஐந்தாம் நூற்றாண்டு முதல் மூன்றாம் நூற்றாண்டு வரையான காலத்திற்குரியவை. ஆபஸ்தம்ப தர்மசூத்திரம் பவிஷ்ய புராணத்தை தவிர்ந்த வேறெந்தப் புராணத்தின் பெயரும் சூத்திர நூல்களிலோ இதிஹாசங்களிலோ காணப்படவில்லை. அரச வம்சங்கள், ரிஷிகுலங்கள் என்பவற்றின் கதைகள் அடங்கிய ஆதியான புராணங்களை மூலமாகக் கொண்டு காலப்போக்கில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றோடு வேறு பல விடயங்களைப் பற்றிய பகுதிகளையும் இணைத்துக் கொண்டமையின் விளைவாகப் புராணங்கள் பிரமாண்டமான உருவத்தைப் பெற்றன என்று கருதலாம்.

### பதினெண் புராணங்கள்

மகாபுராணங்கள் சிலவற்றிலே பதினெண் புராணங்களின் பெயர்களும் குறிப்பிடப்படுகின்றன. அவற்றை **வைணவ புராணங்கள், பிரம்ம புராணங்கள், சிவபுராணங்கள்** என மூன்று வகையினவாகப் பத்ம புராணம் பாகுபாடு செய்கின்றது. அந்த வகைகள் மேல்வருமாறு உள்ளன.

### வைணவ புராணங்கள்

விஷ்ணு புராணம், நாரத புராணம், பாகவத புராணம், கருட புராணம், பத்ம புராணம், வராக புராணம்.

### பிரம்ம புராணங்கள்

பிரமாண்ட புராணம், பிரம்ம வைவர்த்த புராணம், மார்க்கண்டேய புராணம், பவிஷ்ய புராணம், வாமன புராணம், பிரம்ம புராணம்.

### சிவ புராணங்கள்

மத்ஸ்ய புராணம், கூர்ம புராணம், இலிங்க புராணம், வாயு புராணம், ஸ்கந்த புராணம், அக்கினி புராணம்.

### பிரம்ம புராணம்

ஆதி புராணம் என்னும் பெயராலும் வழங்கும். அதனை நைமிஷ ஆரண்யத்திலே கூடியிருந்த ரிஷிகளுக்குச் சூத முனிவர் சொன்னார் என்பது கதை. அதன் பெரும் பகுதி திருத்தலங்களின் சிறப்புகளை வர்ணிக்கின்றது. கிருஷ்ண லீலைகள் பற்றிய கதைகள் அதில் விரிவாக் சொல்லப்படுகின்றன. உலகின் தோற்றம், மனுக்களின் காலம், அரச பரம்பரையின் வரலாறுகள், சுவர்க்க நகரங்கள் பற்றிய வர்ணனைகள் என்பன பற்றிய பகுதிகளும் அதிலுள்ளன. நூலின் இறுதிப் பகுதிகள் சிராத்தங்கள், வர்ணாஸ்ரம தர்மங்கள், விஷ்ணுவை வழிபடுவதாற் கிடைக்கும் பலன்கள் என்பன பற்றியவை.

### பத்ம புராணம்

பிரமன் தோன்றிய கமலத்தைப் பற்றி சொல்லுகின்றது. அதனால் அதற்குரிய பெயர் உருவாகியது. இதன் வாசகம் இரண்டு வடிவங்களிற் கிடைத்துள்ளது. பழைய சுவடிகளில் ஐந்து காண்டங்கள் காணப்படுகின்றன. பிந்திய வடிவத்துச் சுவடிகளில் ஆறு காண்டங்கள் அடங்கியுள்ளன. வைஷ்ணவர் அனுஷ்டிக்க வேண்டிய ஆசாரங்களும் விரதங்களும் இதிலே சொல்லப் படுகின்றன. ஐந்தாவது காண்டத்திலே தசாவதாரங்கள் பற்றிய கதைகள் இடம் பெற்றுள்ளன.

இப்புராணத்தில் இராமகாதை விரிவாக விளக்கப் படுகின்றது. சகுந்தலை, புரூரவன், ரிஷ்யசிருங்கன் முதலியோரைப் பற்றிய கதைகள் மிகுந்து காணப்படுகின்றன. திருவரங்கம், திரு வேங்கடம் போன்ற தலங்களைப் பற்றிய செய்திகளும் உண்டு. பிந்திய பிரதியின் இறுதிக் காண்டத்திலே சைவம், காணபத்தியம் என்பனவற்றைச் சிறப்பிக்கும் பகுதிகள் அடங்கியுள்ளன. உலகின் படைப்பு, மனுவந்தரம், வம்சானுசரிதம் என்பன பற்றிய பகுதிகளும் இதில் உள்ளன. வம்சானு சரிதம் பற்றிய பகுதி மத்ஸ்ய புராணத்தில் உள்ளதனைப் போன்றது.

### விஷ்ணு புராணம்

பஞ்சலக்ஷணங்கள் என்று கொள்ளப்படும் அம்சங்கள் எல்லாம் அடங்கிய பெருநூலாகும். அது மகா விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகப் போற்றுகின்றது. இவ்வுலகம் தோன்றி நிலைபெறுவதற்கு மகாவிஷ்ணுவே காரணமானவர் என்ற கருத்து அதில் வலியுறுத்தப்படுகின்றது. முதலாவது காண்டத்தில் உலகின் உற்பத்தி, தேவர், அசுரர் முதலான விடயங்களைப் பற்றிய பெருங்கதைகள் இடம் பெறுகின்றன. அவற்றிலே பாற் கடலைக் கடைந்தமை, துருவன், பிரஹலாதன் கதை என்பவை குறிப்பிடத்தக்கவை.

பூலோகம், சுவர்க்கலோகம், பாதாளலோகம் என்பன பற்றிய வர்ணனைகள் இரண்டாம் காண்டத்தில் உள்ளன. மூன்றாங் காண்டம் மன்வந்தரங்கள் பற்றியது. நான்காவது காண்டம் சூரிய, சந்திர வம்ச அரசர்களின் வரலாறுகள் பற்றியது. ஐந்தாவது காண்டம் கிருஷ்ணவதாரம் பற்றியது. அதிலே கிருஷ்ணரின் லீலைகள் பற்றிய விரிவான கதைகள் உள்ளன. ஆறாவது காண்டம் கலியுகம் பற்றியது. அதிலே நடைபெற வேண்டியவை வருங்கால நிகழ்ச்சிக்களாகச் சொல்லப்படுகின்றன. விஷ்ணு புராணம், பத்து அவதாரங்களைப்பற்றி விரிவாகக் கூறுகின்றது. ஆதி சங்கரர் இப்புராணத்திலிருந்து பல மேற்கோள்களைக் காட்டியுள்ளார்.

### வாயு புராணம்

சிவபுராணம் என்றும் சொல்லப்படும். அது வாயுபகவானால் உரைக்கப்பட்டதால் வாயு புராணம் என்னும் பெயர் பெற்றது என்பது கதை. ஆதியான புராண நூல்களின் அம்சங்கள் இதிலே அதிகம் உண்டென்று அறிஞர் சிலர் கொள்வர். சிவனை முழு முதற் கடவுளாக முன்னிலைப் படுத்தும் வாயு புராணம் சிவனைப் பற்றிய பெருந்தொகையான கதைகளைப் பதிவு செய்துள்ளது. இப்புராணத்தை பற்றி ஹர்ஷசரிதத்திலே பாணபட்டர் குறிப்பிடுகிறார்.

### பாகவத புராணம்

புராணங்களில் மிகப்பிரசித்தமானது. வைணவ புராணங்களில் மிகவும் விரிவானது. இரசனை மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ச்சியான நடையில் அமைந்தது. பொருளமைப்பில் பாகவதம் விஷ்ணு புராணத்தைப் பின்பற்றிய விசாலமான கதைகள் உள்ளன. கபிலரும் கௌதம புத்தரும் இதிலே திருமாலின் அவதாரங்களாக வர்ணிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடற்குரியது. பத்தாம் கண்டம் கிருஷ்ண வதாரம் பற்றியது. அது இலக்கியச் சுவை மிகுந்த பகுதி. அது பாகவதர்களால் மிகுந்த அபிமானத்தோடு படிக்கப்படுவது. திருமாலின் தலைசிறந்த அடியார்கள் திராவிட தேசத்திலே தோன்றுவார்கள் எனப் பாகவதம் கூறும். ஆழ்வார்களையே அவ்வாறு இப்புராணம் குறிப்பிடுகின்றது. இப்புராணத்தை இலக்கண வித்தகரான போப்பதேவர் (கி.பி.1260 - 1309) எழுதினார் என்று சிலர் கொள்வர். மகாபுராணங்களில் இதுவே காலத்தாற் பிந்தியது என்பதில் ஐயமில்லை. காண்டங்கள் ஒவ்வொன்றும் ஸ்கந்தங்கள் என்னும் பிரிவுகளைக் கொண்டது.

### அக்கினி புராணம்

அக்கினி தேவனால் வசிட்ட முனிவருக்கு உரைக்கப்பட்டது. என்று சொல்வர். அது சிவபுராணம் எனினும் அதில் மகாவிஷ்ணு வைப் பற்றிய பல கதைகள் உள்ளன. அது ஒரு அறிவுக் களஞ்சியம் போன்றது. பல்துறைகள் சார்ந்த விடயங்கள் அதிலே விளக்கப் படுகின்றன. புராணங்களுக்குரிய பொதுவான அம்சங்களோடு மருத்துவம், சோதிடம், அரசியல், சட்ட வழமைகள், யாப்பு, இலக்கணம், கலியாணச்சடங்குகள், அபரக்கிரியைகள் என்பன பற்றிய பகுதிகள் உண்டு. இலிங்க வழிபாடு, துர்க்கை வழிபாடு ஆகியன பற்றிய வர்ணனைகளும் அதிலுண்டு.

பவிஷ்ய புராணத்திற் கிரியைகள் , சடங்குகள், வர்ண தர்மங்கள் என்பன பற்றிய விளக்கங்கள் அடங்கியுள்ளன. சாகதீபத்தில் நிலவிய சூரியவழிபாட்டின் குருமார்களாகிய போஜக, மக என்போரை இப்புராணம் குறிப்பிடுகின்றது. சூரிய வழிபாடு, அக்கினி வழிபாடு, நாக வழிபாடு என்பன பற்றிய பகுதிகள் இதில் உள்ளன. பல நிகழ்ச்சிகளும் வரலாறுகளும் இப்புராணத்திலே தீர்க்க தரிசனங்களாகச் சொல்லப்படுகின்றன. கி.மு நான்காம் நூற்றாண்டிற் குரியதும் ஆபஸ்தம்ப தர்மசூத்திரம் குறிப்பிடுவதுமாகிய ஆதியான பவிஷ்ய புராணத்திற்கும் பிற்காலத்தில் அப்பெயருடன் விளங்கிய புராணத்திற்கும் இடையில் அதிக வேறுபாடு உண்டு.

பிரம்ம வைவர்த்த புராணம் உலகம் பிரம்மனாற் படைக்கப பட்டமையினை வர்ணிக்கின்றது. இரண்டாவது காண்டத்திலே பிரகிருதியானது துர்கை, லக்ஷ்மி, சரஸ்வதி, சாவித்திரி, இராதை என்போராக வடிவம் கொண்டமை இதில் வர்ணிக்கப்படுகிறது. மூன்றாம் காண்டம் கணேசரைக் கிருஷ்ணரின் அவதாரமாக வர்ணிக்கின்றது. அதன் இறுதியான காண்டம் கிருஷ்ணரைப் பற்றியதாகும்.

இலிங்க புராணம், வராக புராணம் ஆகிய இரண்டும் ஏனைய புராணங்களிலிருந்தும் பொருளமைப்பில் வேறுபட்டவை. அவற்றை மிகவும் புராதனமானவை என்றுங் கொள்ள முடிவதில்லை. சிவபெருமான் இலிங்கமயமாக இருந்து உபதேசம் செய்த காரணத்தால் அதற்கு இலிங்க புராணம் என்னும் பெயர் உருவாகியது என்பது ஓர் ஐதீகம். சிவபெருமானுடைய 28 அவதாரங்கள் பற்றிய கதைகள் அதில் அடங்கியுள்ளன. தந்திரங்களின் செல்வாக்கு அதில் ஏற்பட்டுள்ளது என்பர். இலிங்க வழிபாடுகள் பற்றிய கோட்பாடுகளும் நெறிகளும் அதில் விளக்கப் பட்டுள்ளன. வராக புராணத்தில் சிவன், துர்க்கை, கணேசர் பற்றிய கதைகளும் இடம்பெற்றுள்ளன. வராக புராணம் வைணவ வழிபாட்டில் ஈடுபடுவோருக்குரிய நூலாகும். ஸ்கந்த புராணம் முழுமையான வடிவத்தில் இதுவரை கிடைக்கவில்லை. அதன் பகுதிகளாகக் கொள்ளப்படும் விசாலமான சம்கிதைகளும் காண்டங்களும் ஏட்டுச் சுவடிகளாகக் கிடைத்துள்ளன. பல மகாத்மியங்களும் அப்புராணத்தின் பகுதிகளானவை என்று கொள்ளப் படுகின்றன. சிவ தத்துவங்ளை விளக்கும் ஆறு காண்டங்கள் அதில் அடங்கியிருந்தன என்று கொள்வர். **காசி காண்டம்** அவற்றிலொன்று அது புனித ஷேத்திரமான காசியின் சிறப்புகளையும் அங்குள்ள கோயில்கள், தீர்த்தங்கள் என்ப வற்றையும் வர்ணிக்கும் பெருநூலாகும். குப்தர் கால வரி வடிவங்களில், ஏழாம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட அதன் ஏட்டுச்சுவடி யொன்று கிடைத்துள்ளது. புராணங்களுக்கு இயல் பானவை என்று கொள்ளப்படும் பஞ்சலக்ஷணங்கள் அதிற் காணப்படவில்லை.

வாமன புராணத்திற் பெரும்பகுதி இலிங்க வழிபாடு பற்றியது. சிவன், உமா, கணேசர், கார்த்திகேயர் என்போரைப்பற்றி அதிற் பெருமளவிலான கதைகள் உள்ளன. ஆமை வடிவிலே தோன்றிய மகாவிஷ்ணு உபதேசஞ் செய்த புராணம் என்பதால் கூர்ம புராணம் என்னும் பெயர் உருவாகியது. அது இந்திரத்துாய்மன் என்னும் அரசனுக்கு உபதேசஞ் செய்யபட்டது. பஞ்ச லக்ஷணங்களோடு வேறு பல விடயங்கள் அதில் அடங்கியுள்ளன.

ஆதியான வடிவம் குறிப்பிடத்தக்களவு மாற்றமடையாத உருவில் ஏட்டுச்சுவடிகள் வழியாகக் கிடைத்துள்ள புராணங்களில் மத்ஸ்ய புராணம் ஒன்றாகும். அது உருவத்தில் மச்சத்துக்கும் மனுவுக்கும் இடையில் நடந்த சம்வாதம் போல அமைந்துள்ளது. ஊழிப்பெரு வெள்ளத்தில் மனுவை மச்சம் காப்பாற்றியது. வேறு பல புராணங்களிற் போன்று இதிற் பெருந்தொகையான கதைகள் உள்ளன. யயாதி, சாவித்திரி என்போரைப் பற்றியவை பிரதான மானவை. பல கிரியைகளும் உற்சவங்களும் சடங்குகளும் அதில் விளக்கப்படுகின்றன. பல திருத்தலங்கள் அதில் வர்ணிக்கப் படுகின்றன.

கருட புராணம் வைஷ்ணவ வழிபாட்டு முறைகளை விரிவாக விளக்குகின்றது. அது அக்கினி புராணம் போல வடிவ மைப்பில் ஒரு கலைக்களஞ்சியம் போன்றது. இராமாயணம், மகாபாரதம், ஹரிவம்சம் என்பனவற்றின் கதைகள் இதிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சருக்கமாகச் சொல்லப்படுகின்றன. பிரபஞ்சம், வானசாஸ்திரம், சோதிடம் சொற்பனம், மருத்துவம், யாப்பு, இலக்கணம், இரத்தினப் பரீட்சை, அரசியல் என்பன பற்றிய பகுதிகள் அதில் உண்டு. யக்ஞவல்க்ய தர்ம சாஸ்த்திரத்தின் கணிசமான பகுதியும் அதில் அடங்கியுள்ளது. பிதிர் கடன்கள், அபரக்கிரியைகள் ஆகியனவும் அவற்றில் விளக்கப்படுகின்றன.

பிரமாண்ட புராணம் அண்ட வடிவமான பிரம்மத்தின் கோலத்தை விளக்கும் வண்ணமாகப் பிரம்ம தேவனால் உபதேசிக்கப்பட்டதென்று மத்ஸ்ய புராணம் கூறும். வருங் காலத்துக் கற்பங்களைப் பற்றிய தீர்க்க தரிசனங்கள் அதில் அடங்கியுள்ளன என்றும் சொல்லப்படும். ஆயினும் இப்புராணத்தின் ஏட்டுச் சுவடிகளில் இவையன்றி வேறு விடயங்களே விரிவாகச் சொல்லப்படுகின்றன. அவற்றிலே திருத்தலங்களைப் பற்றிய வர்ணனைகளும் தோத்திரப் பாடல்களுமே சிறப்பிடம் பெற்றுள்ளன அத்யாத்ம - ராமாயணம் இப்புராணத்தின் ஒரு பகுதியென்று கொள்ளப்படுகின்றது. இந்நூல் அத்துவைத வேதாந்தத்தைப் போதிக்கின்றது. இராமபக்தி மூலமாகவே விமோசனம் பெறலா மென்பது அதன் கோட்பாடாகும்.

மார்க்கண்டேய புராணம் குப்தர் காலத்திற்குச் சற்று முன்பாக எழுந்த புராணங்களில் ஒன்று. அது கி.பி மூன்றாம் நூற்றாண்டிற்குரியது என்று சிலர் கொள்வர் சூரிய தேவனைப் பற்றிய பல கதைகள் அதிலுண்டு. உலகின் படைப்பு, பிரளயம் என்பன பற்றி அதில் மிக விரிவான பகுதிகள் உள்ளன. நாரத புராணம் வைஷ்ணவ வழிபாடு, பக்திநெறி என்பன பற்றியதாகும். அதனை நாரதர் சனற்குமாரருக்கு உபதேசம் செய்தார் என்பது ஐதீகம்.

உபபுராணம் என்று கொள்ளப்படும் நூல்களும் பல உள்ளன. உபபுராணங்கள் 18 என்பது மரபு. உபபுராணங்கள் சமயநெறிகளின் பிராந்திய வழமைகளைப் பிரதிபலிக்கும் நூல்களாகும். அவற்றுள் விஷ்ணு தர்மோத்தரம் குறிப்பிடத் தக்கவொன்று. அது வைஷ்ணவ சமயச் சார்புடையது. காஷ்மீர் தேசத்தில் எழுதப் பெற்றது. நடனம், இசை, ஓவியம், சிற்பம் முதலியன பற்றியும் அதிலே விளக்கப்படுகின்றது. பிர்ஹத்தர்ம புராணம் வான்மீகி, வியாசர், கபிலர், கௌதம புத்தர் என்போரை மகா விஷ்ணுவின் அவதாரங்களாகக் கொள்கின்றது. கல்கி புராணம் என்னும் நூலிற் கலியுகத்தின் முடிவில் விஷ்ணு புரியும் செயல்கள் விளக்கப்படுகின்றன.

## பஞ்சலக்ஷணங்கள்

ஆறாம் நூற்றாண்டினரான அமரசிங்கர் மகாபுராணங்கள் பஞ்சலக்ஷணங்கள் பற்றியவை என்னும் கருத்தை முன்வைத்தார். அவரின் காலம் முதலாகப் பஞ்சலக்ஷணங்களின் அடிப் படையிலேயே புராணங்களை நோக்குவது மரபாகிவிட்டது. அந்த மரபின் செல்வாக்கு நவீன கால இலக்கிய வரலாற்றாசிரியர், இலக்கிய விமர்சகர் என்போரின் மனங்களிலும் ஆழப் பதிந்துவிட்டது.

(1) சர்க்கம் - உலகின் படைப்பு

(2) பிரதிசர்க்கம் - ஊழியின் பின் புனராக்கம்

(3) மன்வந்தரம் - மனுக்களின் காலம்

(4) வம்சம் - தெய்வபரம்பரைகள்

(5) வம்ஸானுசரிதம் - அரசவம்சங்களின் வரலாறு

ஆகியனவே பஞ்சலக்ஷணங்கள்.

பஞ்சலக்ஷணங்கள் பற்றி எல்லாப் புராணங்களும் வர்ணிக்க வில்லை. அவற்றுள் மிகச்சிலவே அந்த ஐந்து விடயங்களைப் பற்றியுங் கூறுகின்றன. விஷ்ணு புராணம், பிரம்ம புராணம், பத்ம புராணம் ஆகியவற்றில் மட்டுமே பஞ்சலக்ஷணங்கள் என்பதில் அடங்கிய விடயங்கள் விளக்கப்படுகின்றன. வேறு சிலவற்றில் அதிலடங்கும் ஓரிரு விடயங்களே இடம்பெற்றுள்ளன. மார்க்கண்டேய புராணம் சர்க்கம், பிரளயம் என்பனவற்றைப் பற்றி மட்டுமே விளக்குகின்றது. பிரம்ம வைவர்த்த புராணத்தில் முதலாம் காண்டமான பிரம்ம காண்டம் சர்க்கம் பற்றியது. பஞ்ச லக்ஷணங்களில் வேறெதனைப் பற்றியும் அதில் விரிவான கதைகள் காணப்படவில்லை. இங்கு இதுவரை கவனித்தவற்றின் அடிப்படையிற் புராணங்களின் இயல்புகளைப் பிரதிபலிக்கும் பொதுப்பண்புகளாகப் பஞ்சலக்ஷணங்களைக் கொள்ள முடிய வில்லை. முழுமையான மகாபுராண இலக்கியத்தின் ஒரு பிரதான அம்சமாக மட்டுமே பஞ்சலக்ஷணங்களைக் கொள்ளலாம். அவற்றைப் பற்றிய காண்டங்கள், ஸ்கந்தங்கள், படலங்கள் போன்றவை அடங்கிய விஷ்ணு புராணம் போன்றவை வேறு பல விடயங்களைப் பற்றிய பகுதிகளையுங் கொண்டுள்ளன.

சில புராணங்களில் உலகியல் விடயங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. வானசாஸ்திரம், சோதிடம் புவியியல், அரசியல், சட்ட நெறி, மருத்துவம், கலியாணச் சடங்குகள், அபரக் கிரியைகள், இலக்கணம், யாப்பு முதலியன பற்றிய பகுதிகள் அக்கினி புராணத்தில் அடங்கியுள்ளன.

கருட புராணத்தில் முன் கண்டவாறு பிரபஞ்சம், வான சாஸ்திரம், சோதிடம், சகுனம், மருத்துவம், இலக்கணம், அணியி லக்கணம், தண்டநீதி, ரத்தினப் பரீக்ஷை போன்ற விடயங்கள் விளக்கப் படுகின்றன. பஞ்சலக்ஷணங்களைப் போல இவற்றையும் புராணங்களின் பொதுப் பணபுகளாக கொள்ளலாகாது.

பிரதானமான இலக்கியங்கள் சிலவற்றின் பகுதிகளும் புராணங்களில் இடம் பெற்றுள்ளன. கருட புராணத்தில் இராமாயணம், மகாபாரதம், ஹரிவம்சம் என்பனவற்றின் கதைகளும் யக்ஞவல்க்ய ஸ்மிருதியின் கணிசமான பகுதியும் அடங்கியுள்ளன. அத்யாத்ம ராமாயணம் பிரமாண்ட புராணத்தின் ஒரு பகுதியாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்படுகின்றது. இதனால் புராணங்கள் பொதுமையில் இந்திய இலக்கியங்கள் பலவற்றின் தொகுப்பானவை என்று கொள்ளமுடிவதில்லை. மேல்வரும் குறிப்புகளின் அடிப்படையிலே புராணங்களின் பொதுவான பண்புகள் யாவை என்பதை மீள்பரி சீலனை செய்ய வேண்டும்.

## புராணங்கள் சமயநெறி பற்றிய நூல்கள்

சமயநெறியே புராணங்களின் பிரதான அம்சமாக பொதுப்பண்பாக அமைந்துள்ளது. அந்தச் சமயநெறி வைதீகச் சார்புடையது. ஆனால் அது வேதங்களிற் காணப்படும் நெறியிலிருந்து வேறுபட்டது. அதிலிருந்து விருத்தி பெற்றது. அது பிரதானமாக சைவம், வைணவம் என்பன பற்றியது மார்க் கண்டேய புராணம் பெரும்பாலும் சூரியவழிபாடு பற்றியது. அறு வகைச் சமயங்களில் மூன்று புராணங்களிற் சிறப்புற்றிருப்பதைக் காணலாம். காணபத்தியம், கௌமாரம், சாக்தம் என்பன புராணங்களில் வளர்ச்சியடைந்த சமயங்களாக விளங்கவில்லை. ஆயினும் விநாயகர், குமாரக் கடவுள், துர்க்கை என்போர் பற்றிய குறிப்புகள் புராணங்களில் அதிகம் உண்டு.

உண்மையிற் புராணங்கள் சமயநெறி பற்றியவை என்பது புராணநூலோரின் கருத்துமாகும். அதன் அடிப்படையிலேயே புராணங்களை வைணவ புராணங்கள், பிரம்ம புராணங்கள், சிவபுராணங்கள் என்று மூன்று வகையினவாகப் பத்ம புராணத்திற் பாகுபாடு செய்துள்ளனர். அவற்றுட் பிரம்ம புராணங்களில் அடங்கிய விடயங்கள் பெரும்பாலும் வைணவத்தையோ சைவத்தையோ சார்ந்தனவாகும். புராணங்கள் சைவம், வைணவம் என்பன பற்றிய முழுமையான நூல்களாகும். முழுமுதற் கடவுளாகிய ஈஸ்வரனின் பதி இலக்கணங்களை விளக்கும் வண்ணமான பெருமளவிலான, பொதுவழக்கான கதைகள் அவற்றில் இடம் பெற்றுள்ளன.

வைணவ புராணங்கள் அவதாரங்களைப் பற்றிய கதைகளைக் கூறுகின்றன. விஷ்ணு புராணம், பாகவத புராணம் என்பன தசாவதாரங்களைப் பற்றிய கதைகளை விளக்ககின்றன. பிரம்ம வைவர்த்த புராணத்தின் நான்காவது காண்டம் முழுமையும் கிருஷ்ணாவதாரம் பற்றியது. பிரம்ம புராணத்தில் இராமர் கதை சொல்லப்படுகின்றது. திருமாலின் வராக, கூர்ம, மச்ச, வாமன அவதாரங்களைப் பற்றிய புராணங்கள் முறையே அவ்வப் பெயர்களால் வழங்குகின்றன. வழிபாட்டின் மூலமே விமோசனம் கிடைக்கும் என்பதைப் புராணங்கள் வலியுறுத்துகின்றன. புராணங்களின் சமயநெறி, பக்திநெறியினை அடிப்படையாகக் கொண்டதாகும். ஈஸ்வரனின் மகிமை, தலவழிபாடு, திருத்தலச் சிறப்பு விரதம், சடங்கு, கிரியை முதலான விடயங்கள் வைணவ புராணங்கள் சிவ புராணங்கள், சௌர புராணங்கள் ஆகிய எல்லாவற்றுக்கும் பொதுவானவை. அவதாரங்கள் பற்றிய கதைகள் வைணவ புராணங்களிற் சிறப்பிடம் பெறுகின்றன.

## புராணங்களின் காலம்

இலக்கிய வரலாற்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டு புராணங்களைப் புரிந்து கொள்வது சாலாக்காரியம். புராணங் களைக் காலநிலைப்படுத்துவதன் வழியாகவும் அவற்றைச் சமூகநிலைப்படுத்துவதன் மூலமுமே அவற்றில் அடங்கிய கதை களையும் மரபுகளையும் புரிந்து கொள்ள முடியும். அதற்கு வரலாற்றுணர்ச்சியும் தொல்பொருட் சின்னங்கள் பற்றிய அறிவும் அவசியமானவை, தவிர்க்க முடியாதவை. புராணங்களை ஆராய்ந்த அறிஞர் ஒருவரின் கணிப்பின் படி சில புராணங்களின் காலவரையறை பற்றிய விவரங்கள் மேல்வருவனவாகும்:

| | |
|---|---|
| 1. மார்க்கண்டேய புராணம் | - கி.பி 200 - 500 |
| 2. பிரமாண்ட புராணம் | - கி.பி 200 - 400 |
| 3. வாயு புராணம் | - கி.பி 200 - 400 |
| 4. விஷ்ணு புராணம் | - கி.பி 200 - 300 |
| 5. பாகவத புராணம் | - ஆறாம்நூற்றாண்டு |
| 6. மத்ஸ்ய புராணம் | - ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகள் |

பவிஷ்ய புராணம் பற்றி ஆபஸ்தம்ய தர்மசூத்திரம் குறிப்பிடுவதனை முன்பு அவதானித்தோம். பாகவத புராணம் காலப்போக்கில் விசாலமாகி கிபி 12ஆம் நூற்றாண்டளவில் அதன் இன்றைய வடிவத்தை எய்தியது என்று சிலர் கருதுவர். எவ்வாறாயினும் புராணங்கள் சுங்கரின் ஆட்சிக் காலம் முதலாக (கிமு 185 - 44) வளர்ச்சி பெற்று குப்தப் பேரரசர் காலத்தில் (கிபி 320 - 550) இலக்கியங்களாக அறிமுகமாகிவிட்டன. எனவே புராணங்கள் பிரதிபலிக்கும் சமயநெறி கிமு இரண்டாம் நூற்றாண்டு முதல் கிபி ஆறாம் நூற்றாண்டு வரையான காலத்திற்குரியது. அது ஏறக்குறைய எட்டு நூற்றாண்டுகளைக் கொண்ட யுகம். அது புராதனகால இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சியின் உன்னத காலம். இக்காலத்தின் தொடக்கத்தில் எழுச்சி பெற்ற சைவ, வைணவ சமயங்கள் கிபி ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில் இந்திய துணைக்கண்டத்திலே முதன்மைச் சமய நெறிகளாகி விட்டன. இந்திய அரசவம்சங்கள் எல்லாம் அவற்றைச் சார்ந்திருந்தன. அவற்றின் சமய சின்னங்கள் அரசசின்னங்களாகி விட்டன. சாகதீபத்து சௌரசமய குருமாரைப் பற்றிய குறிப்பு பவிஷ்ய புராணத்திலுண்டு.

சகரின் ஆட்சிக் காலத்து நிலைகளையே இப்புராணம் குறிப்பிடுகின்றது. பிரம்ம வைவர்த்த புராணத்தின் இரண்டாம் காண்டம், பிரகிருதி, துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி, சாவித்திரி, ராதை என்னும் தேவதைகளின் கோலமாகியமை பற்றி விளக்குகின்றது. சாவித்திரி தவிர்ந்த ஏனைய தேவதைகள் கிபி முதல் நான்கு நூற்றாண்டுகளில் சிறப்புப் பெற்றனர் என்பதை இலக்கியங்கள் மூலமாகவும் தொல்பொருட் சின்னங்களினாலும் அறியமுடிகின்றது. காளிதாஸர் போன்ற கவிஞரின் நூல்களிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரஸ்வதி பற்றிய துதிப்பாடல்கள் உள்ளன. வைசாலியிற் கிடைத்த நூற்றுக் கணக்கான முத்திரைகளில் லக்ஷ்மியின் உருவங்கள் வனப்பான கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

புராணங்கள் சைவ, வைணவ, சௌர சமய நெறிகள் எழுச்சிபெற்ற யுகத்தின் பண்பாட்டுக் கோலங்களையும், வழிபாட்டு முறைகளையும் சமய சிந்தனைகளையும் வாழ்க்கை நெறியினையும் பிரதிபலிக்கின்றன. அவை இறைவன் உலகம், மனிதவாழ்க்கை வழிபாடு விமோசனம் என்பன பற்றியவை; புராணங்களில் அறிமுகமாகும் இறைவன் குணங்கள் பொருந்தியவன், ஆதியும் அந்தமுமாகிக் காலங்கடந்தவன், எல்லாவற்றுக்கும் காரணமானவன் முழு முதலாகி முற்றுமுணர்ந்தவன், உயிர்கள்மேல் கருணை கொண்டவன், தன்னை நாடும் பக்தர்களை நெறிப்படுத்துபவன். இறைவனுடைய ஆற்றல்களை விளக்குமிடத்து படைப்பு, ஊழி, ஊழியின் பின் படைப்பு ஆகியன பற்றிய கதைகள் உருவாக்கப்பட்டன. இந்திய சமுதாயத்தின் பிரபஞ்சக் கோட்பாட்டியல் பற்றிய சிந்தனைகள் புராணங்களிற் காணப் படுகின்றன.

பிரபஞ்சமானது மீண்டும் மீண்டும் தோன்றி மறைவது. அதன் தோற்ற ஒடுக்கங்கள் இடைவிடாது நிகழ்பவை. ஆதியும் அந்தமுங் கடந்த காலமும் பரவெளியும் அவற்றின் களமாகும். இப்பிரமஞ்சம் இறைவனை ஆதாரமாகக் கொண்டு, இயங்கும் ஆற்றலைப் பெறுகின்றது. காலம், கற்பம், மகாயுகம், யுகம் என்னும் பிரிவுகளைக் கொண்டது. கிருத, திரேத, துவாபர, கலி என்பவை நான்குயுகங்கள். இந்த யுகங்களில் வரிசைக் கிரமமாக மனிதப் பண்புகள் சரிவை நோக்கிச் செல்கின்றன என்பது பௌராணிக சிந்தனை. மகாயுகம் ஒவ்வொன்றும் நான்கு யுகங்களைக் கொண்டது. ஒரு கற்பத்திற் பல மகாயுகங்கள் அடங்கும். மனிதரின் யுகங்களான நான்கில் ஒவ்வொன்றிலும் மனிதப் பண்புகளிற் சில மேலாதிக்கம் பெறும். எமது காலம் கலியுகத்தில் அடங்கியது. கலியுகத்தின் இயல்புகள் பற்றி விஷ்ணு புராணம் மேல்வருமாறு கூறும்: ``மனித உரிமைகள் பற்றிய சிந்தனைகள் தெளிவற்றனவாகிவிடும். சொத்துடைமைகள் காப்பாற்ற முடியாதனவாகி விடும். இன்பமும் செல்வமும் நிலையற்றனவாகி விடும்.``

### விதியும் முயற்சியும்

புராணங்கள் சமய நோக்கில் மனிதரின் கடமைகளையும் பொறுப்புகளையும் போதிக்கின்றன. விதி, சுயமுயற்சி என்பவற்றுக்கு அடிப்படையான சிந்தனை முரண்பாடுகள் மிக நுட்பமான முறையில் மத்ஸ்ய புராணத்தில் ஆராயப்பட்டுள்ளன. காலம் இருள்மயமான விதியன் கர்ப்பமன்று. அது செயற்பாடுகளின் காட்சியைத் தோற்றுவிக்கும் களமாகும். அது ஒரு பெரும் வீழ்ச்சியை நோக்கி நகர்ந்து செல்வதில்லை. ஆயினும், நிகழ்ச்சி களின் பலனாக மனிதரைப் பெருமளவிற்குப் பாதிக்கக் கூடிய நெருக்கடிகள் ஏற்படக்கூடும். அவை விதியின் நிழல்போலத் தோன்றலாம் ஆனால், அது மனிதர்கள் ஆற்றிய வினைகளின் பயன் என்பது ஆழமான சிந்தனையால் உணரப்படும். மனிதரின் சுயமுயற்சியினால் மட்டுமே அந்த வினைப் பயனின் வலியினை அடக்கமுடியும். இவ்விதமான கருத்துகளை வலியுறுத்தும் மத்ஸ்ய புராணம் மனிதருக்குச் சுயநம்பிக்கையினை ஏற்படுத்தும் சாதனமாக அமைகின்றது. உறுதியான முயற்சியினால் எதிர்நோக்கும் சவால்களுக்கு முகங்கொடுக்க முடியும். வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு சரிவின் பின்பும் மனிதர் விழித்தெழுந்து நின்று முன்னேற்றப்பாதையில் நடைபோட வேண்டும் என்பது மத்ஸ்ய புராணத்தின் உபதேசமாகும்.

### உடல்நலம் பேணல்

பௌராணிக சிந்தனையில் உடலை ஒறுக்கும் மனப்பாங்கு தவிர்க்கப்படுகின்றது. காயமானது காரியங்களைச் சாதிப்பதற்கான கருவி என்பதால் அது பரிசுத்தமானது (Sacred). எனவே, உடலை ஒறுக்கும் மனப்பான்மை தவிர்க்கப்பட வேண்டும். ``அழிந்த வீட்டையும் கிராமத்தையும் புனர் நிர்மாணஞ் செய்யலாம். இழந்த செல்வங்களை மீட்டுக் கொள்ளலாம் ஆனால் உடலை விட்டு நீங்கிய உயிரை மீட்பதற்கு வழியில்லை`` என்பது கருட புராணத்தின் குறிப்பு. பஞ்சேந்திரியங்கள் சிறப்பாக இயங்குவதற்கு உடல்நலம் மிகவும் அவசியமானது. தர்மம் புரிவதற்கு உடல் கருவியாகும். ஆதலினால் அது பரிசுத்தமானது. இவ்வாறான கருத்துக்களின் அடிப்படையில் ஆயுள் வேதக் கோட்பாடுகளைப் புராணங்கள் விளக்குகின்றன.

### இல்லறத்தின் சிறப்பு

கடினமான விரதங்கள் கூடிய துறவறத்தைக் காட்டிலும் இல்லறம் மேலானது என்பது புராணங்களில் வலியுறுத்தப் படுகின்றது. மணம் புரிந்து இல்லறம் நடத்துமாறு பிரமன் நாரதருக்குக் கட்டளையிட்டார். துறவறம் மேற்கொள்ளப் போவதாக நாரதர் பிடிவாதமாக இருந்ததனால் அவரைப் பிரம்மா சபித்தார்.

### சமய சமரசம் : திரிமூர்த்திக் கோட்பாடு

பலவகையான சமயங்கள் நிலவிய காலத்திற் புராணங்கள் எழுந்தன. சமணம், பௌத்தம் ஆகியன வலிகுன்றிய பொழுதிலும் பிரமாண்டமான சங்கத்தார் பள்ளிகளும் கோயில்களும் இருந்தன. ஆற்றல் மிக்க எழுத்தாளர் பலர் கவர்ச்சி மிக்க பௌத்த நூல்களை எழுதினார்கள் இது மகாயான பௌத்தம் எழுச்சி பெற்ற காலமாகும். பௌத்தம், இந்து சமயம் ஆகியவற்றுக்கு இடையே பரஸ்பரத் தொடர்புகள் ஏற்பட்டன. சமண, பௌத்த சமயங்களுக்கு எதிரான பகையுணர்ச்சிகளைப் புராணங்கள் அதிகம் வெளிப்படுத்தவில்லை. கௌதமபுத்தரைத் திருமாலின் அவதாரமாகக் கொண்டமை குறிப்பிடற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனை மேன்மைப்படுத்துமிடத்துச் சில சமயங்களிலே மகாவிஷ்ணுவையும் மகாவிஷ்ணுவை மேன்மைப்படுத்துமிடத்து சிவனையும் இழிவு படுத்தும் தன்மைகள் இடையிடையே புராணங்களிற் காணப்படுகின்றன. பாமரர் வழக்கிலுள்ள தீவிரமான பக்தர்களின் மனப்பாங்கினை இவ்வண்ணமாகப் புராணங்கள் வெளிப்படுத்துகின்றன போலத் தெரிகின்றது.

சமயநெறிகள் சக்திவாய்ந்த இயக்கங்களாக வளர்ச்சியுற்ற பொழுது அவற்றிடையே போட்டி ஏற்பட்டது. வாயுபுராணம் பிரம்மா, விஷ்ணு என்போரைக் காட்டிலும் சிவனே மேலான தெய்வம் என்பதை வலியுறுத்துகின்றது. கலியின் செல்வாக்கினால் மகா விஷ்ணுவும் பிரம்மாவும் தம்மில் யார் பெரியவர் என வாதம் புரிந்து மோதலில் ஈடுபட்டனர். அச்சமயம் ஒளிமயமான தூணொன்று அவர்களிடையே தோன்றியது. அதனால் வியப்புற்ற இருவரும் அதனை ஆராய முற்பட்டனர். திருமால் வராக வடிவுகொண்டு அதன் அடியைத் தேட முற்பட்டார். நிலத்தின் கீழே நெடுந்தூரஞ் சென்றும் அதன் அடியைக் காணமுடியாது திரும்பினார். அன்னப் பறவையின் வடிவங் கொண்டு மேலே பறந்து சென்ற பிரம்ம தேவனால் தூணின் தலைப்பாகத்தைக் காணமுடியவில்லை. சிவனின் கிரீடத்திலிருந்து மலரொன்று கீழே விழுந்தது. பிரம்ம தேவர் அதனை எடுத்துக் கொண்டு தூணின் தலைப் பாகத்தைக் கண்டுவிட்டதாகச் சொன்னார். அந்தப் பொய்யைச் சொன்னதால் சிவன் அவரைச் சபித்துவிட்டு, பிரம்மனை வணங்குவதற்குக் கோயிலமைக்கக் கூடாதென்று கட்டளையிட்டார். இந்தக் கதையின் அம்சங்களை உருவகப் படுத்தும் வகையில் ஆலயங்களில் இலிங்க உருவங்களை அமைக்கும் வழக்கம் ஏற்பட்டது. இவ்வண்ணமாகவே அம்மனின் பரமார்திக நிலையினை தேவீ பாகவதம் விளக்குகின்றது.

வேற்றுமை கடந்த ஆழமான சிந்தனை வழியாகச் சமயப் பொதுமை நோக்கு ஏற்பட்டது. சிவன், மகாவிஷ்ணு என்பன ஈஸ்வரனின் நாமரூப பேதங்கள் என்ற சிந்தனை உதயமாகிறது. ``சிவனும் நானே`` என்று மகாவிஷ்ணு மார்க்கண்டேயருக்கு உபதேசம் பண்ணிய கதை பிரம்ம புராணத்தில் உண்டு. கடவுளரில் ஒருவரை மேலானவர் என்றும் மற்றவர்கள் கீழானவர் என்றுங் கொள்வது அஞ்ஞானமென்றும் அவர்களை ஒருவராகக் காண்பது ஞானதிருஷ்டி என்றும் சிவபுராணமான *வாயுபுராணம்* குறிப்பிடுகின்றது. ஒரே கடவுளின் மூன்று தோற்றங்களே பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வர வடிவங்கள் என்றுஞ் சொல்லப்படுகின்றது. திரிமூர்த்திக் கோட்பாடு புராணங்களுக்குச் சிறப்பானது என்பது இதனாற் தெளிவாகின்றது. அது சைவசமய மரபிலே சிறப்புப் பெற்றது. மண்டகபட்டிலே மகேந்திரவர்மன் உருவாக்கிய குடபோகம் **ப்ரஹ்ம - விஷ்ணு - ஈஸ்வர கிருஹம்** என்று வர்ணிக்கப்படுகின்றது.

ஒருவராகிய கடவுள் படைத்தல், காத்தல், மறைத்தல் என்னும் தொழில்களைப் புரியுமிடத்து முறையே பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் மூன்று வேறான வடிவங்களைக் கொள்வார் என்பது விஷ்ணு புராணக் குறிப்பாகும்.

மகாபுராணங்கள் சமயநெறிகளைப்பற்றிய பெருநூல்கள். அவை பெரும்பாலும் சைவம், வைணவம், சௌரம் என்பன பற்றியவை. புராணங்கள் தோன்றி வளர்ச்சி பெற்ற காலத்தில் இம் மூன்று நெறிகளும் பரத கண்டத்திலே எழுச்சி பெற்றிருந்தன. மொழி வேற்றுமைகளைக் கடந்த நிலையிலும் சமூக வேறுபாடுகளைக் கடந்த நிலையிலும் வர்ண பேதங்களைக் கடந்த நிலையிலும் அவை பரவலாயின. புராணங்கள் இந்து சமுதாயம் முழுவதையும் பிரதிபலிக்கும் நூல்களாகும்.

ஈஸ்வரனின் மகிமை, வழிபாடு, திருத்தலம், தோத்திரம், பாப விமோசனம், சமயாசாரங்கள், தசாவதாரங்கள் என்பனவே புராணங்களில் விளக்கப்படும் பொதுவான விடயங்களாகும். புராணங்கள் பிரதிபலிக்கும் சமயநெறி சமூகவாழ்க்கையோடு தொடர்புடையது. அது பரத கண்டத்து மக்கள் வாழ்க்கையுடன் தொடர்பானது. எனவே அக்கண்டம் பற்றிய விவரங்கள் அவற்றில் விரிவாகச் சொல்லப்படுகின்றன. இயற்கை வளம், சமூகப் பிரிவுகள், மன்னர் குலங்களின் வரலாறுகள் என்பவற்றை இணைத்துக் கொள்வது அவசியமானதென்று கருதப்பட்டது.

உலகம் பிரபஞ்சத்தின் அம்சமானது. பிரபஞ்சம் காலம், பரவெளி என்பவற்றைக் களமாகக் கொண்டு இயங்குவது. அது காலம், பரவெளி ஆகியவற்றிற் செறிந்து அவற்றுக்கும் அப்பாலான பரம்பொருளின் சக்தியால் இயங்குவது. காலம் பல கற்பங்களைக் கொண்டது. அது கணிக்க முடியாதது. உலகின் படைப்பு, நிலைபேறு, ஒடுக்கம் என்பன பற்றிய சிந்தனைகள் இந்துசமய தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டவை. புராணங்கள் பஞ்சலக்ஷணங்கள் பற்றியவை என்ற கோட்பாடு பொருத்தமற்றது. அடிப்படையிற் சமயநூல்களான புராணங்களில் வேறு பல விடயங்களைப் போலப் பஞ்சலக்ஷணங்களும் முக்கியமான அம்சங்களாக இடம்பெற்றுள்ளன என்று கொள்வதே பொருத்தமானது. இந்து சமயம், இந்து சமுதாயம், இந்து நாகரீகம் என்பவற்றை ஆராய்ந்து அறிவதற்கான இலக்கியங்களிற் புராணங்கள் முதன்மையானவை. அவற்றிலுள்ள கதைகளும் மரபுகளும் பாமரவழக்கோடு சங்கமமாகிவிட்டன. விக்கிரவியலும் படிமக்கோலங்களும் அவற்றின் செல்வாக்கைப் பிரதிபலிக்கின்றன.

## விஷ்ணு புராணம் 3

### பரத கண்டம்

**பராசரர் சொன்னார்:**

``தெற்கிலே சமுத்திரத்தையும் வடக்கிலே இமாசலத்தையும் எல்லையாகக் கொண்ட தேசம் பாரதம் எனப்படும். பரதனுடைய சந்ததியினர் இங்கு வாழ்வதால் அந்தப் பெயர் உருவாகியது. அது 9,000 காதம் அளவினை உடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் இங்கு ஆற்றுகின்ற புண்ணிய கருமங்களினால் சொர்க்கத்தையும் பாப விமோசனத்தையும் பெறுகின்றார்கள்.''

''மகேந்திரம், மலயம், சஹ்யம், சுக்திமான், ரிஷ, விந்தியம், பாரியாத்ர என்பன இங்குள்ள குலபர்வதங்கள். இங்கு போல உலகின் வேறெப் பாகத்திலும் சுவர்க்க மோக்ஷங்களைத் தரவல்ல புண்ணிய கருமங்கள் நடைபெறுவதில்லை.''

புவியியல், சமூக நிலைகள் என்பனவற்றைப் பொறுத்தவரையில் புராணங்கள் இணையற்ற அறிவியற் களஞ்சியங்களாகும். இவற்றைப் பற்றிய மிக விரிவான விவரங்கள் இந்திய இலக்கியப் பரப்பில் வேறெங்கும் காணப்படுவதில்லை. அந்த விவரங்களும் பெரும்பாலும் ஆதார பூர்வமானவை. மலைகள், மலைத்தொடர்கள், ஆறுகள், தேசங்கள், அங்கு வாழும் சமூகங்கள் ஆகியன புராணங்களில் மிக விரிவாக விளக்கப்படுகின்றன. பரத கண்டத்தின் எல்லைகளுக்கு அப்பாலுள்ள தேசங்களும் அங்கு வாழும் சமூகங்களும் அவற்றிலே குறிப்பிடப்படுகின்றன.

## விஷ்ணு புராணம்

### 23ஆம் அத்தியாயம்

**[வம்ஸானு சரித்திரத்திலுள்ள பகுதி]**
**மகத தேசத்தை ஆளப்போகும் அரசர், பிருகத்திரதனின் சந்ததியினர்**

''இப்போது பிருகத்திரதனின் வம்சாவழியினர் பற்றிச் சொல்லுவேன். அவர்கள் மகத தேசத்து அரசராவர். இந்த வம்சத்தைச் சேர்ந்த ஆற்றல் மிக்க அரசர் பலர் இருந்தனர். அவர்களில் ஜராசந்தன் மிகவுஞ் சிறந்தவன். அவனது மகன் சகாதேவன். அவனது மகன் சோமாபி. சுருதவான் அவனது மகனாக வருவான். அவனுக்கு அயுதாயு என்ற மகனொருவன் இருப்பான். அவனுக்கு நிரமித்திரன் என்றொரு மகன் இருப்பான். சுக்ஷத்திர அவனுக்கு மகனாக வருவான். பிருகத்தர்மன் அவனது மகனாக வருவான். சேனஜித் அவனது மகனாக வருவான். அவனுக்குப் பின் அவனது மகன் சுருதஞ்ஜயன். அவனுக்குப் பின் அவனது மகன் விப்ரன். அவனுக்கு பின் அவனது மகன் சுசி. அவனுக்குப் பின் அவனது மகன் ஷேமஜன். அவனுக்குப் பின் அவனது மகன் சுவிரதன். அவனுக்குப் பின் அவனது மகன் தர்மன். அவனுக்குப் பின் அவனது மகன் சுஸ்ராமன். அவனுக்குப் பின் அவனது மகன் திரிதசேனன். அவனுக்குப் பின் அவனது மகன் சுமதி. அவனுக்குப்பின் அவனது மகன் சுபலன். அவனுக்குப் பின் அவனது மகன் சுமிதன். அவனுக்குப் பின் அவனது மகன் சத்யஜித். அவனுக்குப் பின் அவனது மகன் விஸ்வஜித். அவனது மகன் ரிபுஞ்ஜயன். பிருகத்திரதர்களான இவர்கள் ஆயிரம் வருடங்கள் ஆட்சி புரிவார்கள்.''

### 24ஆம் அத்தியாயம்

**மகத தேசத்து வருங்கால மன்னர்**

பிரத்யோத வம்சத்தவர் ஐவர், சைசுநாகர் பதின்மர், நந்தர் ஒன்பது பேர், மௌரியர் பதின்மர், சுங்கர் பதின்மர், காண்வாயனர் நால்வர், ஆந்திர விருத்தியர் முப்பதின்மர். வேறு பல குலங்களையும் வர்ணங்களையுஞ் சேர்ந்த மன்னர்களும் அவர்களின் ஆட்சிக் காலங்களும்.

''பிரத்யோத வம்சத்துக் கடைசி மன்னனாக ரிபுஞ்ஜயனின் அமைச்சனாக சுணிக என்றொருவன் இருப்பான். அவன் அரசனைக் கொலை செய்து விட்டுத் தனது மகன் பிரத்தியோதனனை அரசானாக்குவான். அவனது மகன் பாலகன். அவனது மகன் விஸாகயூவன். அவனது மகன் ஜனகன். அவனது மகன் நந்திவர்த்தனன். பிரத்தியோக வம்சத்து மன்னர்களான இவர்கள் நிலவுலகை 138 வருடங்கள் ஆட்சி புரிவார்கள்.''

''அதற்குப் பின் சிசுநாகன் அரசனாவான். அவனது மகன் காகவர்ணன். அவனது மகன் ஷேமதர்மன். அவனது மகன் க்ஷத்திரஜஸ். அவனது மகன் விம்பிசாரன். அவனது மகன் அஜாத சத்துரு. அவனது மகன் உதயாஸ்வன். அவனது மகன் நந்தி வர்த்தனன். அவனது மகன் மகாநந்தி. சைசுநாகரான இவர்கள் பதின்மரும் அவனியில் 362 வருடங்கள் ஆட்சி புரிவர்.''

''மகாநந்தியின் மகன் சூத்திர குலப் பெண்ணின் குமாரனாவான். அவனது பெயர் நந்த. அவனை மகாபத்ம என்று சொல்வர். அவன் பேராசை கொண்டவன். அவன் க்ஷத்திரிய குலங்களை நிர்மூலனஞ் செய்வான். அவனுக்குப் பின் சூத்திரரே அரசராவார். அவன் அவனி முழுவதையும் தனது ஆட்சியின் கீழ் அடக்குவான். அவனுக்குச் சுமால்ய முதலான அவனது எட்டுப் புதல்வர்கள் ஆட்சி புரிவார்கள். மகாபத்மனும் புதல்வர்களும் 100 வருடங்கள் ஆட்சி புரிவர். கௌடல்யர் என்னும் பிராமணர் நவநந்தரின் ஆட்சியை நிர்மூலனஞ் செய்வார்''

''நந்தர்களின் ஆட்சி முடிந்த பின் அவனி மௌரியரின் வசமாகும். கௌடில்யர் சந்திரகுப்தனை அரசனாக அபிஷேகம் செய்வார். அவனது மகன் விந்துசாரன். அவனது மகன் அசோகவர்த்தனன். அவனது மகன் சுயஸஸ். அவனது மகன் தசரதன். அவனது மகன் சௌகதன். அவனது மகன் சாலிசுகன். அவனது மகன் சோமசர்மன். அவனது மகன் சததன்வன். அவனுக்குப் பின் பிருகத்ரதன் அரசனாவான். மௌரிய வம்சத்தவரான இப்பதின்மரும் 137 வருடங்கள் இந்த அவனியில் ஆட்சி புரிவர்.''

''அவர்களைத் தொடர்ந்து சுங்க வம்சத்தவர் ஆட்சியதிகாரம் பெறுவர். சேனாதிபதியான புஷ்யமித்திரன் தனது அரசனை (பிருகத்ரதனை)க் கொன்றுவிட்டு அரச பதவி பெறுவான் அவனது மகன் அக்னிமித்திரன். அவகது மகன் புலிந்தகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது மகன் கோஷவசு. அவனது மகன் வச்சிரமித்திரன். அவனது மகன் பாகவதன் அவனது மகன் தேவபூதி. சுங்க வம்சத்தவரான இப்பத்து அரசரும் இராச்சியத்தை 112 வருடங்கள் பரிபாலனம் செய்வார்கள்.

சுங்கரில் இறுதியான அரசன் ஒழுக்கமற்றவனாகவும் சுக போகங்களில் மயங்கியவனாகவும் இருப்பான். அவனது அமைச்ச னாகிய வாசுதேவன் என்னும் பெயருடைய கண்வன் அரசனைக் கொன்று, அரச பதவியை அபகரித்துக் கொள்வான். அவனது மகன் பூமிபுத்திரன். அவனது மகன் நாராயணன். அவனது மகன் சுசர்மன் காண்வாயனர் 45 வருடங்களுக்கு அவனியில் ஆட்சி புரிவர்.''

புராணங்களிலுள்ள வம்ஸானுசரிதம் மிக நீளமானது. அது வேத காலத்து அரசர்களான அனு, துருஹ்யு, பூரு, யது துர்வாஸ முதலியோரின் காலம் முதலாக குப்தப் பேரரசர் காலம் வரையான மன்னர் குலங்கள் பலவற்றிலுள்ள அரசரின் பெயர்ப்பட்டியல்களைக் கொண்டது. அது பல அத்தியாயங்களில் வருகிறது. காண் வாயனருக்குப் பின்பு ஆந்திரரான 30 அரசர்களின் பெயர்கள் வருகின்றன. அவர்களைச் சமகாலச் சாசனங்கள் சாதவாகனர் என்று குறிப்பிடுகின்றன. வாயு புராணம், மத்ஸய புராணம், பிரமாண்ட புராணம் போன்றவற்றிலும் வம்சானுசரிதம் இடம் பெறுகின்றது. ஆனால் மகத நாட்டு மன்னர், ஆந்திரர் ஆகியோரைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மன்னனும் எத்தனை வருடங்கள் ஆட்சி புரிந்தான் என்று அவற்றிலே சொல்லப் படுகின்றது. (சி. ப.)

## புராண படனம்

புராணம் என்ற சொல் பழைய இலக்கியம் என்ற பொருளில் வழங்கி வந்துள்ளது. பழையதும் புதியதும் புராணமாம் என்ற மரபைத் தருவதும் புராணமாகும். சமஸ்கிருத மொழியிலும், தமிழ் மொழியிலும் பல புராணங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அத்தகைய புராணங்கள் கடவுள், வழிபாடு, ஆசாரம், தத்துவம், அரசியல், கலை, வரலாறு, ஒழுக்கம், சமூகம், ரிஷிகளின் வரலாறு போன்றவற்றைப் புலப்படுத்தும் களஞ்சியமாக இந்துக்களின் பண்பாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றன. இத்தகைய சிறப்புமிக்க புராணங்கள் புராண படனமாக இந்துக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன.

புராணமொன்றை ஒருவர் இசையோடு பாடிக் காண்பிக்க, மற்றொருவர் இசையோடு பொருள் விரித்துக் கூறும் மரபையே *புராண படனம்* என்கின்றோம். ஈழத்திலே இதனைப் புராணப்படிப்பு என்றுங் கூறுகின்றனர். புராணத்திற்கு பொருள் கூறிய பயன் பற்றி வியாக்கியானம் செய்தலும் புராண படனம் என்று சொல்லப்படும்.

கலாநிதி. எஸ். சிவலிங்கராஜா புராணபடனம் பற்றி மேல்வருமாறு குறிப்பிடுகின்றார்!

''புராணத்திற்குப் பொருள் கூறுவதைப் பயன் சொல்லுதல் என்றே அழைப்பர். புராணத்தின் பயன் உரையே என்ற கணிப்பீட்டின் வெளிப்பாடாகவே இச்சொல் வழக்கு நிலவியதெனக் கருதலாம். சாதாரண பொது மக்கள் புராணத்தைக் கேட்டுப் பயன் பெறுவது செய்யுளாலன்றி, உரையாலேயே நிகழ்ந்துள்ளது. எழுதப் படிக்கத் தெரியாத

மக்களுக்குச் சமயச் செய்திகளையும் அறிவுபதேசங் களையும் கொண்டு செல்லும் சிறந்த ஊடகமாகப் புராண படனம் பயன்பட்டது. அதனாலேயே உரை கூறுவதைப் பயன் சொல்லுதல் என்று அழைத்திருத்தல் வேண்டும்''

தமிழ் நாட்டிலே தமிழ் மொழிப் புராணங்கள் தோற்றம் பெற்ற காலத்திற்குப் பின்பே புராணபடன மரபு வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் எனக் கருத முடிகின்றது. ஈழத்தில் எப்போது புராணபடன மரபு ஆரம்பிக்கப்பட்டது என்பதிலும் உறுதியான முடிவுகளைக் கூற முடியாதுள்ளது. சிலர் கச்சியப்ப சிவாசாரியாரின் அன்பரான கச்சிக் கணேசையரால் ஈழத்திற்கு இம்மரபு கொண்டுவரப்பட்டது என்பர். சிலர் ஆறுமுக நாவலரின் பணிகளுள் புராணபடன மரபு இலங்கையிலே தளிர்த்தது என்று கூறுவாரும் உள்ளனர். இருப்பினும் கணேசையராலேயே கந்தபுராணப்படிப்பு ஈழத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது என்பதை பல ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். அதன் பின்னரே இம்மரபு ஈழத்தில் வளர்ச்சி பெற்றது என்பர்.

இப்புராண படன மரபு ஈழத்தில் முக்கியத்துவம் பெற்றமைக்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் போன்றோர்களின் ஆட்சியாற் சைவப்பண்பாடு வீழ்ச்சியுற்றமையும் அதனால் ஆலய வழிபாடுகள் நிர்க்கதியானமை, சைவ இலக்கியங்கள் தோன்ற முடியாத சூழ்நிலை காணப்பட்டது என்பன கவனத்திற்கு உரியவை.

புராணங்களிலே பொதிந்துள்ள பழைய கதைகளையும் அவற்றில் உள்ள நுட்பங்களையும் மக்களுக்குப் போதிக்கும் பொருட்டுத் தமிழ்நாட்டு அரசர்கள் மண்டபங்கள் பலவற்றைக் கட்டியிருந்தனர். புராண பிரசங்கம் ஆலயங்களில் நடைபெறும் பொருட்டு ஏராளமான மக்கள் கூடியிருக்கக் கூடிய நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் போன்றன கட்டப்பட்டன. அத்தகைய மண்டபங்களில் புராண பிரசங்கம் செய்வதற்கு அரசர்களும் செல்வந்தர்களும் புலவர்களுக்குப் பல வசதிகளைச் செய்து கொடுத்தனர். அவர்களுக்கு மானியமும், நிலமும் தானமாகக் கொடுத்தனர். இதனை புராண விருத்தி என்று கல்வெட்டுப் பேசுகின்றது. கி.பி 12 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இரண்டாம் இராஜராஜ சோழன் காலத்தில் ஆளுடைய நம்பிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ புராணத்தை வாகீச பண்டிதர் விரிவுரை செய்தார் என்ற குறிப்பு சாசனத்தில் எழுதப்பட்டுள்ளது.

புராண படனத்திற்குப் பொருளாகின்ற நூல்கள் மேல் வருவனவாகும் : *கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், திருச்செந்தூர்ப்புராணம், சிவராத்திரி விரதம், ஏகாதசிப் புராணம், விநாயகர் புராணம்.* இவை தவிர மகாபாரதத்தைப் படித்துப் பயன் சொல்வதும் சித்திர புத்திரனார் கதை, கோவலன் கதை, கண்ணகி வழக்குரை போன்றவற்றைப் படித்துப் பயன் கூறுவதும் இலங்கையில் வழக்கமாகும்.

ஈழத்திலே புராணபடன மரபுக்கு இலக்கணமாக அமைந்த நூல் கந்தபுராணமாகும். யாழ்ப்பாணத்திலே உள்ள மக்கள் கந்தபுராணத்தைத் திருமுறைக்கு ஈடாக வைத்துப் பூசை செய்து, புனிதம் காத்து, விரதம் இருந்து கற்றோரும், மற்றோரும் போற்றித் துதித்துப் பாடுவதும், அதன் பொருள் கேட்பதும் வழக்காக இன்றும் கடைப்பிடித்து வருகின்றனர்.

புராணபடனம் செய்பவர் வடக்கு நோக்கியும், பயன் சொல்பவர் கிழக்கு நோக்கியும் அமர்ந்து கொண்டு அவர்கள் அருகாமையில் உள்ள கும்பத்துப் பூசையில் கலந்து கொள்ள வேண்டும். பின்னர் மரத்தால் செய்யப்பட்ட பீடத்திலே பாராயணத்திற்குரிய நூலை வைத்து வணங்கி, அருகில் விளக்கேற்றி புத்தகத்திற்கு பூசை செய்து முதல் காப்புச் செய்யுளை பாட, மற்றவர் அதற்குப் பயன் கூறுவார். புராணத்தை வாசிப்பவர் முதற் செய்யுளை இசையுடன் பாடி, மீண்டும் அதே செய்யுளை இசையில்லாமலும் பாடுவார். இதற்கேற்ப பயன் சொல்பவரும் பொருள் கூறும் சில முக்கியமான இடங்களில் விரிவான விளக்கங்களும், தெளிவான எடுத்துக் காட்டுக்களும் எடுத்துரைப்பார். புராண படனம் முடியும்போது, பொருள் கூறுபவர் மீண்டும் முதற் செய்யுளைப் படித்து முடிப்பார். அதன் பின்பு கும்பப் பூசை நடைபெற்றுப் புராணபடனம் கேட்டவர்களுக்கு விபூதிப் பிரசாதம் வழங்கி இறுதி நாள் புராண படனக்காரர்களுக்கு காணிக்கை வழங்கிக் கௌரவிப்பர்.

ஆகம முறையிலமைந்த சந்நிதிகளிலும், ஆகம முறைசாராத சந்நிதிகளிலும் புராணபடனம் நடைபெறுவது வழக்கம். சிவன், அம்மன், விநாயகர், முருகன் ஆலயங்களிலும் கண்ணகி, மாரியம்மன், திரௌபதை போன்ற கிராமியத் தெய்வக் கோயில்களிலும் புராணபடனம் நிகழ்த்தப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி கோயில், செல்லச் சந்நிதிமுருகன் கோயில், வண்ணை வைத்தீஸ்வரன் கோயில், புலோலி பசுபதீஸ்வரம், காரைநகர் சிவன்கோயில், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் போன்றவற்றிலும் மட்டக்களப்பில் ஆனைப்பந்தி, மாமாங்கம், களுதாவளைப் பிள்ளையார் கோயில்களிலும், திருப்படைக் கோயில்களிலும், கொழும்பு, முல்லைத் தீவு போன்ற இடங்களில் உள்ள கோயில்களிலும் நான்கு ஈஸ்வரங்களிலும் புராணபடனம் பேணப்பட்டும் போற்றப்பட்டும் வருகின்றது.

பங்குனி உத்தரம், வைகாசி விசாகம் போன்ற காலங்களில் புராண படனம் நடைபெறும். அதேபோல் விரதங்கள் நடைபெறும் போது புராணபடனம் நடைபெறுவது நியதியாகவும் இருந்து வருகின்றது. சிவராத்திரி விரதத்தின் போது விடிய விடிய சிவராத்திரி புராணம் படிக்கப்படும். கந்தசஷ்டி விரதத்தின் போது கந்தபுராணமும் திருச்செந்தூர் புராணமும் ஆறு நாட்களும் தொடர்ந்து படிக்கப்படும். திருவாதிரை விரதத்தின் போது சில சிவாலயங்களிலே திருவாதவூரடிகள் புராணம் படிக்கப்படுவதும் மரபாக இருந்து வருகின்றது. சித்திரைப் பூரணையின் போது அனைத்துக் கோயில்களிலும் சித்திரபுத்திரனார் கதை படிக்கப்படும். இவ்வாறு படிப்பவர்களும் அவற்றைக் கேட்பவர்களும் விரதம் இருந்து காப்புக் கட்டி விநாயகர் தோத்திரம் பாடி அமருவர். புராணபடனம் நடைபெறும் போது இடையில் எழுந்து செல்லுதல் கூடாது.

ஈழத்திலே புராண படனத்தைச் சிறப்பித்த பெருமைக் குரியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் அவரைத் தொடர்ந்து வந்த நாவலர் பரம்பரையினரும் ஆவர். நாவலரின் பணி பற்றிப் பண்டிதமணி மேல்வருமாறு சொல்வார்.-

> *"கந்தபுராணப்படிப்பு நாவலர் காலத்தில் உச்சநிலையை அடைந்தது. அவருக்கு ஒரு மருகர் உரை சொல்வதற்கென்றே பிறந்தவர். அப்பொழுது சைவாலயங்கள் தமிழும், சைவமும் வளர்க்கும் சர்வ கலாசாலைகளாயின."*

புராண படனத்தை அனுசரிப்பதாற் பல பயன்கள் கிட்டுகின்றன. அவையாவன:

1. இசை வளர்ச்சி
2. இலக்கண இயல் அறிவு
3. இலக்கிய அறிவு
4. சமய தத்துவ அறிவூட்டம்
5. ஆன்மீகத்திற்கு வழிப்படுத்தல்
6. பக்தி இறையுணர்வு அதிகரித்தல்
7. பாண்டித்தியம் வளர்தல்
8. வித்துவம் வலிமை பெறுதல்
9. ஆன்மீக சாந்தி
10. சமய ஒழுகலாறு வழிப்படுத்தல்
11. உரை நூல்கள், பதிப்புப்பணி விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சிறப்புப் பெற்ற புராணபடன மரபை எதிர் காலத்திலும் முன்னெடுத்துச் சைவத்தையும், அதன் தத்துவத்தையும், சைவப் பண்பாட்டையும் பாதுகாக்கும் தலையான பணி எமக்குண்டு. (ச. து.)

## புருடார்த்தங்கள்

உயிர் ஈடேற்றம் பெற்றுப் பேரின்ப நிலையாகிய முக்தியெய்துவதே வாழ்க்கையின் குறிக்கோள். உயிரானது தனு, கரண, புவன, போகங்களைப் பெற்று, அவற்றை அனுபவித்தவாறே முக்தி நிலையாகிய இறுதிக் குறிக்கோளை எய்துவதற்குத் தன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டும். எனவே முக்திப் பேற்றைக் குறிக்கோளாகக் கொண்ட வாழ்க்கையில் எய்தற்கியன்றவை உறுதிப் பொருட்கள் எனப்படும். இவற்றையே வட மொழியில் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்றும், தமிழ்மொழியில் அறம், பொருள், இன்பம், வீடு என்றும் கூறுவர். இந் நான்கும் இணைந்தே புருடார்த்தங்கள் எனும் பொருளைத் தருகின்றன.

புருடார்த்தங்களில் முதல் மூன்றுமான அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைத் திரிவர்க்கம் அல்லது முப்பால் என்று கூறுவர். இவை மூன்றும் இல்லற வாழ்விற்கு ஆதாரமானவை. இவற்றை அறவழி நின்று வாழ்ந்து, அதன்படி முறையாகப் பொருள் ஈட்டி முறையான இன்பத்தை நுகர வேண்டுமென்பதே வாழ்வின் ஆதார விதிகளாகும். இம் மூன்றையும் முறையாகக் கடைப்பிடிப்போருக்கு வீடுபேறு தானாகவே கிட்டும். இதனாலேயே திருவள்ளுவரும் திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் மூன்றையும் திறம்பட வகுத்திருப்பது சிறப்பிக்கப்பாலது.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருட்களை ஔவையார் மேல் வரும் பாடலொன்றில் இரத்தினச் சுருக்கமாக வரைவிலக்கணப்படுத்தியுள்ளார்.

*"ஈதல் அறம் தீவினைவிட் டீட்டல் பொருள் எஞ்ஞான்றும்*
*காதலிருவர் கருத்தொருமித்து - ஆதரவு*
*பட்டதே இன்பம் பரனை நினைத்து இம்மூன்றும்*
*விட்டதே பேரின்ப வீடு"*

பண்டைய இந்துக்கள் தங்களுடைய வாழ்க்கை முறைகளை நெறிப்படுத்தவும், உயர்வான இலட்சியப் பேற்றை அடைந்து கொள்ளவும், சிறப்புறக் கடைப்பிடிக்க வேண்டிய மேலான கடமைகளின் ஒழுங்கே புருடார்த்தங்கள் என்று வரையறுத்துக் கூறுபவரும் உளர். எனவே இந் நான்கு உறுதிப் பொருட்களுக்குமுள்ள தொடர்புகள் யாவை?, அவை எவ்வாறு இந்துக்களின் வாழ்க்கை நெறியினை ஒழுங்குபடுத்துகின்றன என்பவற்றைத் தெளிவாக விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

**அறம்:** அறுதல்/அறுத்தல் எனும் வேர்ச்சொல்லில் இருந்து வந்தது அறம் எனலாம். மறத்தையெல்லாம் நீக்குதல் அறம் என "அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் இவை நான்கும் இழுக்காறு இயன்றது அறம்" எனும் குறளில் வள்ளுவர் தெளிவாக்கியுள்ளார். மேலும் தமிழிலே கடமையை நன்கு உணர்ந்து வாழ்வது, பண்புகளைப்பெருக்கி ஆன்மாவைச் சுத்தி செய்து வாழ்வது, ஒழுக்கம், தானம், நோன்பு, கட்டுப்பாடு, கடமை, தெய்வம், சமயம், சமய விழுமியம், அறிவியல், நற்செயல் முதலிய பல பொருள்பட்டு விளங்குவதும் அறமாகும்.

அறத்தை வடமொழியில் தர்மம் என்று கூறுவர். அது த்ரு எனும் வேர்ச் சொல்லில் இருந்து தோன்றியது. இதன் பொருள் தரதி இதி தர்மம் என்பதாகும் அதாவது உலகைத் தாங்குவது, உயிரைக் காப்பாற்றுவது, உலக, மனித ஒழுங்குகளைப் பேணுவது என்றும் பொருள் கூறுவர். தர்மம் என்பது தெய்வத்தைச் சுட்டும் பெயராகவும் குறிப்பிடப்படுகின்றது. வருணன், யமன் போன்றோரைத் தருமதேவதைகளாகக் கொள்வது நினைவு கூறத்தக்கது. மேலும், விதி, கட்டளை, நீதி, சட்டம், கடமை, வழிபாடு, நேர்மையானவழி முதலிய பல பொருள்பட்டும் இருக்கின்றன. அறம், தர்மம் என்ற இருமொழிச் சொற்களின் பொருள்கள் ஒரே கருத்துடையதாக விளங்கினாலும், அறத்தை விட தர்மம் விரிவுபட்டது என்ற கருத்தும் உள்ளது.

இவ்வாறான அறம், தர்மம் என்பவை அரசியல், சமுதாயம், குடும்பம், தனிமனிதன், அவர்களின் வாழ்வாதாரங்கள் அனைத்திலும் முக்கியமான இடத்தினையும் பெற்று வந்திருக்கின்றன. திருக்குறள், சிலப்பதிகாரம், நாலடியார், ஔவையாரின் நீதிநூல்கள், இதிகாசங்கள், தர்மசாஸ்திரங்கள் முதலிய இலக்கியங்களிலே அறம் என்றால் என்ன? அறத்திற்கும் வாழ்க்கை நெறிக்குமுள்ள தொடர்புகள் எவை? அறத்தின் முக்கியத்துவம் யாது? போன்ற வினாக்களுக்கு விடை காண்கின்ற விவரங்கள் விளக்கமாக ஆராயப்பட்டிருக்கின்றன.

அறம் பற்றிக் அறன் வலியுறுத்தல் எனும் அதிகாரத்தில் செயற்பாலது ஒரும் அறம் அறத்தால் வருவது இன்பம், அன்று அறிவோம் என்னாது அறம் செய்க, மனத்துக்கண் மாசு இலன் ஆதல், அனைத்து அறன் அறத்தினூங்கு ஆக்கம் இல்லை போன்ற குறளடிகளின் மூலம் அறத்தின் முக்கியத்துவமான சிறப்புக்களை எடுத்துக் காட்டிய வள்ளுவர் இல்லறம், துறவறம் ஆகிய வாழ்க்கை முறைகளும் அறத்தால் கட்டுப்பட்டவையே என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார். இல்லற இயலிற் பதினைந்து அதிகாரங்களிலும், துறவற இயலில் பதின்மூன்று அதிகாரங்களிலும் ஈரடிக் குறள்பாக்கள் மூலம் இரத்தினச் சுருக்கமாகப் பாடியுள்ளார். இவற்றில் சில கருத்துக்களை மட்டும் நோக்குமிடத்து, பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாது, உயர் நெறியில் காப்பன காத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிவன கடிந்து வாழ்வதே அறநெறியாகும். இன்னும் அற்றோர்க்கும். பொருள் நாடி வருவோருக்கும் தருமஞ் செய்தல் அறமாகும். இவ்வாறானவற்றுக்கெல்லாம் அடிப்படையாக அமைகின்ற அறக் கோட்பாடு ஒன்றை வள்ளுவர் வகுத்துக் காட்டியுள்ளார்.

*"மனத்க் கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*
*ஆகுல நீர் பிற"*

என்ற குறள் மூலம் அறம் என்பது

உள்ளத்தளவில் உருவாவது எனக் கூறுகின்றார். ஒருவரின் சொல். செயல் எல்லாம் உள்ளத்தை தூய்மைப்படுத்துவதாக வழிப்பட்டமைவது அறம் என்பது அவரின் சீரிய கருத்து.

அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை எனக் கூறும் வள்ளுவர். இல்வாழ்வோர் அற்றோர்களுக்கும். அலந்தோர்க்கும் ஆதரவளிப்பதே அறம் என்பதை

*"துறந்தார்க்கும் துவ்வாத வர்க்கும் இறந்தார்க்கும்*
*இல்வாழ்வான் என்பான் துணை"* என்ற குறளிலும்

பிதிரர். தெய்வம். விருந்தினர். சுற்றத்தார் தான் என்று சொல்லப்படுகின்ற ஐவர்க்கும் அறம் புரிந்து வழுவாது வாழ்வது இல்வாழ் வானுக்குரிய தலைமையான கடமை என்பதை

*"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று*
*ஆங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"* என்ற குறளிலும் கூறியுள்ளார்.

ஆத்திசூடியில் அறம் செய விரும்பு என ஔவையாரும் அறத்தை முதன்மைப்படுத்தியுள்ளார். அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாதல் அல்லவை செய்தவர்க்கு அறம் கூற்று முதலிய கூற்றுக்களால் அறத்தை நிலை நிறுத்தும் சிலப்பதிகாரத்தில் மனிதனின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் ஆதாரமானது அறம் என்பதை மேல்வரும் பாடலடிகளால் இளங்கோவடிகள் சுட்டிக் காட்டியிருப்பது குறிப்பிடற்பாலது.

*"நாளைச் செய்குவம் அறமெனில் இன்றே*
*கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்*
*இது மென வரைந்து வாழு நாளுணர்ந்தோர்*
*முழு நீர் உலகில் முழுவதுமில்லை" (சில.28)*
*நண்ணுமிருவினையும் நண்ணுமின்கள் நல்லறமே*

(சில.28)

பகவத்கீதை தனக்கு விதிக்கப்பட்ட கடமையைச் செய்யும் போது இறத்தலே நன்று என "ஸ்வதர்மவே நிதனம் சிரேயஹ" எனும் சுலோகத்தின் மூலம் வலியுறுத்துகின்றது.

மானவதர்ம சாஸ்திரம். யஜ்ஞவல்கிய ஸ்மிருதி முதலிய ஸ்மிருதிகளுக்கு எழுதப்பட்ட உரை நூல்களிலே பல வகையான தர்மங்கள் பற்றிக்குறிப்பிடற்படுகின்றது. அவற்றில் ஸ்வதர்மம். இராஜதர்மம். ஆச்சிரமதர்மம் போன்றவை இந்துக்களின் வாழ்வியலோடு தொடர்பானவை.

எனவே தர்மத்தின் அடிப்படை நோக்கம் மானிடப் பண்புகளை அறிவியல் ரீதியில் குறிப்பிடத்தக்க நிலையை அடைவதற்கும். இறைவனை அடைவதற்கும். வழிகாட்டியாக அமைகின்றது. அது உயிரினும் மேலானது. "தர்மம் தலை காக்கும் தக்க சமயத்தில் உயிர்காக்கும்" என்பது ஆன்றோரின் கூற்று.

**பொருள்:** பொருள் என்றால் அர்த்தம். ஆக்கம். செல்வம் போன்ற பெயர்களால் சுட்டப்படுகின்றன. பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது வள்ளுவனின் வாசகம். இதன்படி இவ்வுலக வாழ்க்கைக்கு அறத்தோடு ஆதாரமானது பொருள் என்று கூறுகின்றார். அறத்தையும் இன்பத்தையும் கொடுப்பது பொருள். அன்பினால் பெறப்பட்ட அருள் என்ற குழவி பொருள் என வள்ளுவர் பொருள் செயல்வகை அதிகாரத்தின் மூலம் பொருளின் இன்றியமையாத் தன்மையைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

தனிமனித வாழ்விற்கும். சமுதாய வாழ்விற்கும். உலகியல் வாழ்விற்கும் ஆதாரமாக இருப்பது பொருள் ஆகும். இதை வீடு. காணி. பணம். உணவு. உடை. ஆபரணம் எனப் பலவாறு கூறுவர். இவைகள் ஒவ்வொருவரின் தகைமைகளுக்கு ஏற்ப வேறுபடுபவைகள் இவற்றைக் கொண்டே வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும். இதன் பொருட்டு இந்தப் பொருளை அறவழியில் தாளாண்மையாற் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். அவற்றை தானும் அனுபவித்து தானதர்மம் செய்தும். மீதம் செய்தும் வாழ வேண்டும். இவ்வாறாக வாழ்க்கை நடாத்துகின்ற பொருளே நிலையான. நிறைவான இன்பத்தைத் தரும்.

பொருள் தேடும் முறை பற்றியும். அதன் இயல்பு பற்றியும் சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகைப் பாடல் ஒன்றின் கருத்துரையின்படி.

*"கிழவரின்னோ என்னாது. பொருள்தான்.*
*பழவினை மருங்கின் பெயர்பு பெயர் புறையும்"*

(பாலைக்கலி.21)

பொருளானது இத்தன்மையோர் தனக்கு உரியவர் என்று கருதாமல் ஒருவரிடத்து நின்ற நல்வினையாலே மீண்டும் மீண்டுஞ் சென்று தங்கும் என்பது இப்பாடல் அடிகளின் கருத்தாகும். ஒருவனுக்குப் பொருள் சேர வேண்டுமானால். அவன் அறிவில் அல்லது குணத்தில் தங்கவில்லை. அவன் முன்பு செய்த வினையிலேயே தங்கியிருக்கின்றது. அதிகம் முயற்சி செய்பவர்களும். அற்ப லாபத்தை மட்டும் அடைவதற்கும் சிலவேளை. அதுவுமில்லாமற் போவதற்கு இதுவே காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் சிறுமுயற்சியாலேயே பெருந்தனவந்தராகி விடுகின்றனர். இதற்கு அவர் செய்த முயற்சியோ அறிவாற்றல்களோ காரணமல்ல. முன் செய்த பழவினையே காரணமாகும். ஆகவே பொருளுக்காக ஒருவன் தீமையைச் செய்ய எண்ணுவதும், மற்றவரைக் கெடுக்க முயல்வதும் அறியாமையேயாகும். அந்த வழிகளிலேனும் அவன் கருதிய பொருள் கைகூடப் போவதில்லை. அதற்கு மாறாக, அடுத்த பிறவிகளிலும் அவன் தரித்திர நாராயணனாக இருக்க வேண்டி வரும். ஆகவே இப் பிறவியில், பொருள் கிடையாவிட்டாலும், சோர்ந்துவிடாது தன்னாலான நன்மைகளைச் செய்து கொண்டு வருதலே அடுத்த பிறவிகளில் பொருள் சித்திக்கச் செய்வதற்கு உரிய வழியாகும்.

நேர்மையான வழிகளில் பொருள் தேடாவிட்டால் அப்பொருள், அதைத் தேடியவனுக்கு இம்மையிலும், மறுமையிலும் பகையாக இருக்கும் என்ற உண்மையைக் கலித்தொகையின் பிறிதோரிடத்தில் காணமுடிகின்றது.

*"செம்மையின் இகந்து ஓரி இப் பொருள் செய்வார்க்கு,*
*அப்பொருள் இம்மையும் மறுமையும் பகையாவது*
*அறியாயோ?"* (பாலைக்கலி-14)

இதையே வள்ளுவரும் நேர்மையற்ற வழிகளில் தேடிய பொருள் இருந்த இடம் இல்லாமல் அழிந்து போய்விடும் என மேல்வரும் குறளில் உணர்த்தியுள்ளார்.

*"கனவினால் ஆக்கிய ஆக்கம் அறவிழந்து*
*கெடுவது போல் கெடும்"*

செல்வத்தை நேர்மையான வழியில் சம்பாதித்து நல்ல காரியத்திற்குப் பயன்படுத்துவார்களானால் அது திரவிய யஞ்சமாகின்றது. பேராசையில் கட்டுண்டு, பொய்யும் களவும் புரிந்து பொருளைப் பெருமிதமாகத் தேடி போகத்தில் மூழ்குவது அசுரச் செயலாகும் என அத்தியாயம் - 16:12 இல் பகவத்கீதை மேல்வரும் சுலோகப் பாடலில் கூறியுள்ளது:-

*"ஆசாபாச சதைர் பத்தா: காமக் ரோதபராயணா:*
*ஈஹந்தே காம போகார்த்தமன்யாயேனார்த்தஸஞ்சயான்."*

வரவுக்கு மேல் செலவு செய்பவன் பழிபாவங்களை அடைவான். ஆகையால் வரவுக்குத் தக்க செலவு செய்ய வேண்டும் என ஔவையார் நல்வழி: 25 ஆம் பாடலில் மேல்வருமாறு பாடியுள்ளார்.

*"ஆனமுதலில் அதிகஞ் செலவானால்*
*மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை."*

நன்னெறி பாடிய துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் உலோபிகளின் பொருளை எடுத்து, ஈவோரின் பொருளாகவே கொள்ளவேண்டும் என்று

*"பிறர்க்குதவி செய்யார் பெரும் செல்வம் வேறு*
*பிறர்க்குதவி யாக்குபவர் பேறாம்"* என்ற பாடலடியால் உரைத்துள்ளார்.

மநுதர்ம சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம் போன்ற நூல்களிலும் இந்துக்களின் வாழ்க்கை நெறிக்கு ஒப்பான பொருளாதாரச் சிந்தனைகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. மநு தர்ம சாஸ்திரத்தில் ஐவகைப் பெருவேள்விகள் புரிந்து வாழும் இல்வாழ்வானுக்கு பொருள் அவசியமானது எனக் கூறப்பட்டுள்ளது.

**இன்பம்:** இல்லறத்தை நல்லறமாக மாற்றும் சாதனங்களில் மூன்றாவது இன்பமாகும். இதை வடமொழியில் காமம் என்பர். இது ஆண், பெண் உறவைப் பற்றிக் கூறுகின்றது. இல்வாழ்க்கை நடத்தும் போது ஆதாரமாக விளங்குவது இன்பமாகும். இதனைச் சிற்றின்பம், உலகியல் இன்பம் என்றும் பலர் கூறுவர். ஔவையார் காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம் என்று பாடியுள்ளார். திருவள்ளுவர் திருக்குறளில் காமத்துப்பால் அதிகாரத்தினூடாகச் இன்பத்திற்கு மேல்வருமாறு விளக்கமளித் திருக்கின்றார்.

*"வடுவிலா வையத்துள் மன்னிய மூன்றுள்*
*நடுவன வந்தெய்தி இருதலையும் எய்தும்"*

அறம், பொருள், இன்பம் முதலிய இம் மூன்றிலும் நடு நாயகமாக விளங்குவது பொருள். அறமும், இன்பமும் பொருளைச் சார்ந்தவை. அதாவது பொருள் இருந்தால் அறத்தைச் செய்து சாதனை புரியலாம். இன்பமும் பெறலாம். எனவே அறவழியில் பொருளீட்டி அறவழியில் இன்பம் பெறுவது சிறப்பானது எனச் சொல்லப்படுகின்றது.

வேதம், உபநிடதம், புராணம், இதிகாசம் போன்ற வைதிக இலக்கியங்களிலும் தமிழ் மொழி இலக்கியங்களிலும், வடநூலான வாத்ஸ்யாயனரின் காமசூத்திரம் போன்ற நூல்களில் முறையான இன்பநுகர்வு பற்றியும், ஆன்மீக வாழ்வு பற்றிய பேரின்ப நிலையும் விளக்கப்பட்டிருக்கின்றன. ரிக் வேதத்தில் 10 ஆவது மண்டலத்தில் 86 ஆவது சூக்தம் இந்திரனுக்கும், இந்திராணிக்கும் நடந்த உரையாடல்களில் நங்கை மனதை நிறைவாக மகிழ்விக்க இயலாத கணவன் எவ்வகையிலும் செல்வமுள்ளவனாகான் என்று கூறப்பட்டுள்ளது. பிருஹதாரண்யக உபநிடதத்தில் ஸர்வேஷாம் ஆனக்தானாம் உபஸ்த ஏக ஆயதனம் என்ற வரியில் எல்லோருக்கும் இன்பம் என்பதற்கு பால் உறுப்பே நிலைக்களன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சிவபுராணத்திலும் ஐந்து அத்தியாயங்கள் வரை காமத்தின் சிறப்புக்கள் விளக்கப்பட்டுள்ளன. அவற்றில் உலகபடைப்பில் முதன் முதலாக காமதேவனே தோன்றினான். பிரமன் மக்களைப் படைத்து அவர்களின் வாழ்க்கை சிறப்புற தர்ம, அர்த்த, காம சாதனங்களை விளக்கும் லட்சப் பாடல்களை இயற்றினார் போன்றவை கூறத்தக்கவையாகும். காமமும், குரோதமும் ரஜோ குணத்தால் தோன்றுபவை எனக் கிருஷ்ணர் பகவத்கீதையில் உரைத்திருக்கின்ற கருத்தும் கூறற்பாலது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க இலக்கியங்களில் அகத்திணை மரபுகள் எனக் கூறத்தக்க ஊடல், கூடல், புணர்தல், பிரிதல் போன்ற பண்புகள் இல்வாழ்க்கையில் துய்க்க வேண்டிய இன்ப நுகர்வுகளை எடுத்தியம்புகின்றது. இவ்வாறானதொரு மரபு வடமொழி மரபில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் வடமொழியில் எழுந்த காமசூத்திரம் தமிழில் உள்ள திருக்குறளின் காமத்துப்பாலை விட இன்ப உணர்வுகளையும், அனுபவங்களையும் ஒளிவுமறைவின்றிக் கூறுவது சிறப்பிற்குரியது.

**வீடு:** வீடு என்பது மோட்சம் எனப் பொருள்படும். இது ஆன்மாவின் இறுதி லட்சியப் பொருளாகும். இல்வாழ்க்கையில் ஏற்படும் இம்மை இன்பத்திற்கு அப்பாற்பட்ட மறுமை உலக இன்பத்தை அளிப்பது மோட்சம் ஆகும். இதுவே நிரந்தரமான இன்ப நிலையாகும்.

ஒருவன் இறப்பு, பிறப்பு என்கின்ற பிறவிப் பிணியில் இருந்து ஈற்றில் நற்கதி பெறுகின்ற நிலை மோட்சம் ஆகும். இதை விளக்கி வருணிக்க முடியாது. அதை உணர்ந்து பேரானந்தம் அடைந்து கொள்கின்ற நிலையாகும். இதை இந்து சமய பக்தி நூல்களும், தத்துவ நூல்களும் தெளிவாக எடுத்தியம்புகின்றன.

ஒருவனது இல்வாழ்க்கை மாசிலா அறம் பயின்றதாய்ப் பிறருக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டதாய் நடைபெறுமாயின் அதுவே சிவபோகம் ஆகிய இலட்சியத்துக்கு இட்டுச் செல்லும் நன்னெறியாகும் என்று ஒரு சாரார் கூற, இன்னொரு சாரார் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் முறையாக அனுசரிப்போருக்கு இயல்பாகவே வீடு கிடைக்கும் எனக் கூறுகின்றனர். இவற்றில் திருவள்ளுவர் இரண்டாம் சார்பாளராகவே விளங்குகின்றார்.

எனவே நான்கு உறுதிப் பொருள்களிலும் அறம் புத்தியைச் சார்ந்தது. பொருள் உடலைச் சார்ந்தது. காமம் மனத்தைச் சார்ந்தது. வீடு ஆன்மாவைச் சார்ந்தது எனக் கூறுவர். இவை நான்கும் இந்துக்களின் வாழ்க்கை நெறியில் ஓர் ஒழுங்கு நெறியாக விளங்குவதனால் இந்து சமய தத்துவ மரபிலே புருடார்த்தங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. (சு. து.)

## புரூரவன் (புரூரவஸ்)

கத்யுமனன் என்ற மன்னனுக்கும் சந்திரனின் மகனான புதனுக்கும் பிறந்தவனே புரூரவன். இரு ஆண்களுக்குப் பிறந்தவன் எனக் கூறப்பட்டாலும் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமே மகனாகப் பிறந்தவன். கத்யும்னன் என்பவன் பெண்ணுருவெடுத்த வேளையிலேயே இவன் பிறந்தான். கத்யும்னன் என்ற மன்னன் சத்திரிய குலத்தில் பிறந்தவன். தருமசீலன் பஞ்சேந்திரியங்களை வென்றவன். ஒருநாள் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான் பின் இளைப்பாறுவதற்காக மேருமலையின் அடிவாரத்தில் உள்ள அழகிய சோலை வனத்திற்குச் சென்றான் குளிர்ந்த காற்றும் மலர் மணங்கமழும் செடி கொடிகள் நிறைந்ததும், பறவைகளின் இனிய ஒலியையும் உடைய அவ்வனத்திற்குள் புகுந்ததும் பெண் உருப்பெற்றான். அவன் ஏறி இருந்த குதிரையும் பெண்ணுருவடைந்தது.

பெண்ணுருவெடுத்ததிற்கு ஒரு வரலாறு உண்டு. சனகாதி முனிவர்கள் சிவபெருமானைப் பார்க்க விரும்பி ஆகாயமார்க்கமாக அவ்வனத்தை நோக்கிப் புறப்பட்டபோது சிவபெருமான் உமாதேவியாரொடு உல்லாசமாக மகிழ்ந்திருந்தார். அவ்வேளையில் சனகாதி முனிவர்களின் ஒளி உமாதேவி மேல்பட்டதும், வெட்கமடைந்து ஒளிந்து கொண்டாள். இதனை அறிந்த சிவன் அன்றுதொட்டு இந்த உத்தியான வனத்திற்குள் வருபவர் யாராயினும் பெண்ணுரு எடுப்பர் எனச் சாபமிட்டார். இதனை அறியாமல் உட்சென்ற கத்யும்னன் என்ற மன்னனும் பெண்ணுருப் பெற்றான். மன்னன் பெண்ணாகி இளை என்ற பெயருடன் வனத்தில் திரிந்து கொண்டிருந்த வேளையில் புதனைக்கண்டாள். புதன் மேல் காதல் கொண்டு அவனைப் புருஷனாக அடைந்து கருப்பவதியானாள். அக்குழந்தையே புரூரவன்.

கத்யும்னன் மன்னன் பெண்ணுருக்கொண்டதால் அவன் மகன் புரூரவன் சகல சம்பந்துக்களோடும் சக்கரவர்த்தியாகி பிரதிஷ்டா என்ற நகரத்தைச் சிறப்பாக ஆட்சி புரிந்து வந்தான். அவன் ஆணழகன், நற்குணங்கள் வாய்க்கப்பெற்றவன். அரசியல் அறிவும் ஆட்சித் திறமையும் படைத்தவன். உற்சாக சக்தியும் பிரபுத்துவ சக்தியும் அவனிடம் எப்போதும் நிறைந்திருக்கும். அவன் தன் இரகசியங்கள் எதிரிகளுக்குத் தெரியாதவாறும் எதிரிகளின் இரகசியங்களை எளிதாக உணர்ந்தும் நான்கு வருணத்தவர்களும் நல்லொழுக்கத்துடன் வாழும்படி செங்கோல் செலுத்தி வந்தான். அஸ்வமேத யாகம் போன்ற பல யாகங்களையும் கோதானம் முதலான பல தானங்களையும் செய்து வந்தான்.

இவனுடைய பெரும் அரசாட்சி, பேராண்மை பெருங்குணம் முதலியவற்றை இந்திரலோகத்தில் உள்ள ஊர்வசி என்னும் தேவகன்னி அறிந்து இவன் மேல் காதல் கொண்டாள். இதையறிந்த பிரமன் விண்ணுலகத் தேவர்களை மோகிக்க வேண்டிய நீ மண்ணுலகத்து மானிடனைக் காதலித்ததால் தேவலோகத்தில் வசிப்பதற்கு தகுதியற்றவளாகிறாய் எனச் சபித்தார். ஊர்வசி பூலோகம் சென்று ஷரூரவஸ் சக்கரவர்த்தியை கந்தர்வ மணத்தின் மூலம் கூடினாள்.

ஊர்வசி புரூரவசுவிடம் மண்ணுலக மன்னரே என்னை நீர் ஒருபோதும் மறக்காமல் காதலித்து காத்து வரவேண்டும். இன்று முதல் நான் கொடுக்கும் நெய்யையே நாள்தோறும் நீர் சாப்பிடவேண்டும் வேறு உணவு ஒன்றையும் சாப்பிடக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிடம் இருக்கும் சலங்கைகளை உன்னிடம் கொடுக்கிறேன். அதனைக் கள்வர்கள் கவர்ந்து செல்லாதவாறு பாதுகாத்தல் வேண்டும் நீர் நிர்வாணமாக இருக்கும் போதோ வேறு மங்கையுடன் கூடிக் கலந்திருக்கும் போதோ நான் உம்மைப் பார்க்கமாட்டேன். இவ்விடயங்களை, நீர் கடைப்பிடித்து வருவீரானால் நான் உம்மிடத்து மாறாத காதலுடையவளாக இருப்பேன். நீர் ஏதாவது ஒன்றில் தவறினால் கூட உம்மைவிட்டுப் போய்விடுவேன் என்றாள். இவர்கள் இன்பமாக வாழும்போது தேவேந்திரன் ஊர்வசியை தேவலோகத்திற்கு அழைக்க விரும்பினான். கந்தர்வர்களைப் பூலோகத்திற்கு அனுப்பி ஊர்வசியின் சலங்கைகளை கவர்ந்து எடுத்து வந்துவிட்டனர். தனது வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாத கணவன் தனக்கு வேண்டாம் என்று அழுதாள். அதுமட்டுமன்றி ஒரு மின்னலைத் தோற்றுவித்து ஊர்வசியின் கண்களுக்கு புரூரவஸை நிர்வாணமாக தோன்றச் செய்தனர். இதனால் மேலும் ஊர்வசி கோபமடைந்தாள். அரசனை விட்டுப் பிரிந்தாள். அதனால் அதிக துக்கத்திற்கு ஆட்பட்ட புரூரவஸ் தன் அரசியல் கடமை யாவற்றையும் சரிவரச் செய்ய முடியாதவனானான். (இ.ச.)

## புலியூர்ப் புராணம்

ஈழத்தில் எழுந்த புராணங்களுள் புலியூர்ப் புராணமும் ஒன்றாகும். இந்நூலைப் பாடியவர் யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழையைச் சேர்ந்த பன்னாலை என்னும் ஊரினைப் பிறப்பிடமாகக் கொண்ட வித்துவான் ச.சிவானந்தையர் ஆவார்.

சிவானந்தையர் தமிழ் நாட்டிலேயுள்ள சிதம்பரத்தின் மான்மியத்தைப் போல, புராண முறைமையாலே உருவாக்கிய நூலே புலியூர்ப் புராணமாகும். இந்நூலிற்கு சூதசங்கிதை, வாசிட்டலிங்கம், பவிடியோத்தர புராணம், காந்தம் ஆகிய சங்கத நூல்கள் முன்னோடியாகக் கொள்ளளப்பட்டன. இதற்கு **"ஓத நின்ற பத்தொன்பதாம் படலங்களுள்ளுஞ் சூத சங்கிதை....."** என்ற 2ஆம் பாயிரப் பாடலும், **"மன்று ளாடுவா ரூர்த்துவ தாண்டவ மாண்பு, நின்றி டும்பவி டியோத்தர புராணத்து....."** என்ற 3ஆம் ஆயிரப் பாடலும் சான்று கூறுகின்றன. இந்நூல் தோன்றுவதற்கு காரணமாக விளங்கியவர் தெல்லிப்பழை க.தம்பையாப்பிள்ளையவர்கள் ஆவார். இதை சிவானந்தையர் அவையடக்கம் 6ஆம் பாடலில் சொல்லியுள்ளார்.

இந்நூலின் அமைப்பையும், பொருள் மரபுகளை நோக்கும் போது, காப்பு, கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நாட்டுப் படலம், நகரப் படலம் ஆகியன அமைந்துள்ளன. அதனுள் காப்பு முதல் பாயிரம் ஈறாகவுள்ள பகுதிகளிலே 373 செய்யுள்களும், சிவலிங்கப் பூசனைப் பயனுரைத்த படலம் முதலாக திருவாதிரை விரதப்படலம் ஈறாகப் பதினேழு படலங்களில் 850 செய்யுள்களும் காணப்படுகின்றன. இந்நூலில் நாட்டுப்படலம், நகரப்படலம், நைமிசாரணியப் படலம் என்பன சிறப்புப் பெற்றவை. இப்படலங்களை இந்நூலில் வைப்பதற்கு சீவகசிந்தாமணி, கந்தபுராணம் போன்ற நூல்களை ஆதாரப்படுத்துகின்றார்.

கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இருபதில் ஒன்பது பாடல்களில் சைவ நாயன்மார்கள் போற்றப்பட்டுள்ளனர். சம்பந்தர், அப்பர், சுந்தர மூர்த்தி, மாணிக்கவாசகர், சண்டேஸ்வரர், தில்லை மூவாயிரவர் உட்பட ஏனைய அடியவர்கள் அதில் போற்றப்பட்டுள்ளனர்.

நாட்டுப் படலத்திலேயே பொருள் இலக்கண அறிவை நயம்பட சிவானந்தையர் கையாண்டுள்ளார். அவற்றிலொரு பாடலை மேல்வருமாறு நோக்கலாம்.

*'உளம்படு புணர்ச்சிப் பின்ன ருறுமுறைப் பிரிவு கொண்டு*
*களம்படு பொலிவுக் கேற்பக் காமரு புணர்ச்சி கொண்டு*
*வளம்பரு மலைக்கு றிங்கி மரீஇப்புறுஞ் சூழ்ந்து மாறாத்*
*தளம்படு வளங்கள் சாலத் தழைப்பது பழிப்பில்பாலை'*

இப்புராணத்தை ஏழாலை ஐ.பொன்னையாபிள்ளை மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சியந்திர சாலையிலே 1936ஆம் ஆண்டு பதிப்பித்தார். இப்பதிப்பிற்கு சி.கணேசய்யரவர்கள் உதவியாக இருந்தார். (க. து.)

## புலிப் பாணிச் சித்தர்

**அபிதான சிந்தாமணி** எனும் நூல் வகைப்படுத்தும் பதினெண் சித்தர் பட்டியலில் ஒருவராகப் புலிப்பாணிச் சித்தர் அமைகின்றார். வேறெந்தப் பதினெண் சித்தர் பட்டியலில் இவரின் பெயர் காணப்படவில்லை என்பதும் கூறத்தக்கது. போகரின் சீடர்களில் இவரும் ஒருவர். போகரோடு சீன நாட்டிலிருந்து வந்து, அவர் திரும்பும் போது அவருடன் செல்லாது தமிழ் நாட்டிலேயே தங்கி வசித்தவர். இவரும், போகரும் சில காலம் பழனி மலையடி வாரத்தில் உள்ள வைகாவூரில் வாழ்ந்தனர் என்பதைக் கொங்கு மண்டல சதகம் என்ற நூல் கூறுகின்றது. இவர் தமிழ் நாட்டுப் பொன் வணிகர் குலத்தைச் சேர்ந்தவர் என அவர் இயற்றிய நூலின் மூலம் அறிய முடிகின்றது.

இவரைப் புலிப்பாணிச் சித்தர் என்ற பெயரால் அழைக்கப்படுவதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. இவர் புலியை நட்பாகிக் கொண்டு பழனி மலையில் உள்ள முருகனுக்கு புலி மீது ஏறிக் குடத்திலே தண்ணீர் எடுத்துச் சென்று நீராட்டி வழிபட்டமையால் இப் பெயர் ஏற்பட்டது என இவரின் நூலொன்றின் மூலம் அறிய முடிகின்றது.வியாக்கிர பாதர் என்ற பெயரோடு விளங்கியவரே புலிப் பாணிச் சித்தர் எனவும் சிலர் கூறுகின்றனர். இறைவனுக்கு வண்டுகளின் எச்சில் நுகராத மலர்களை அதிகாலையில் பறிப்பதற்காக, மரங்களில் ஏறுவதற்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க புலியின் பாதத்தை வேண்டிப் பெற்றுத் தொண்டு புரிந்து வந்தமையாலும் **புலிப்பாணி** என்ற பெயரால் அழைக்கப்பட்டார் என்றும் கூறப்படுகின்றது.

இவர் வைத்திய முறைகளிலும், ஜாலத்திலும் கைவரப் பெற்றவர். இவர் இயற்றிய **வைத்திய சூத்திரம் 500** என்ற நூலில் மந்திரம், சாலம், சிந்து, வாதம், சோதிடம், ஜாலம், வைத்தியம் முதலிய அம்சங்களை உணர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. இவர் சித்த மருத்துவத்திற் கற்பக முத்தொளி மூலிகையைக் கண்டுபிடித்து அதனை நீரடைப்பு, காயம், வெள்ளை போன்ற நோய்களைக் குணப்படுத்தவல்லது எனவும் சொல்லியுள்ளார். இவர் நான்கு சூத்திர நூல்களை எழுதியுள்ளார். அவை **சூத்திரம் 16, சூத்திரம் 25, சூத்திரம் 50, சூத்திரம் 100** என்பனவாகும். மேலும் **மாந்திரீக வைத்தியம், சண்முகபூசை, வன்மவிதி, சாந்திமுறை, சிதம்பர பூஜாவிதி, சோதிடம் 300** என பல நூல்களையும் இயற்றியுள்ளார். (சு. து.)

## புலோமன்

இவன் ஒரு அசுரன். இவனுடைய பெண் சசீதேவி. புலோமனை அழித்து சசீதேவியை இந்திரன் மணந்தான் எனப் புராணங்கள் கூறும்.

1. திதியின் புத்திரன் புலோமன். இவன் திருமாலிற்குப் பயந்து பிருகு முனிவரிடம் அடைக்கலம் புகுந்தான். அடைக்கலம் புகுந்த அசுரனை கொடுக்கும்படி விஷ்ணுமூர்த்தி கேட்க முனிவர் மறுத்தார். அதனால் திருமால் பிருகு முனிவரையும், புலோமனையும் கொன்றார்.
2. இவனது தந்தை விப்பிரசித்து. இவன் இந்திரனால் கொல்லப்பட்டான். புலோமனின் தங்கையாகையால் இந்திராணி பௌலோமி எனப்பட்டாள்.
3. புலோமன் பிருகு முனிவரின் பத்தினியாகிய புலோமையை இச்சித்து சியவன முனிவரால் நீறானவன். (வ. வை.)

## புவனங்கள்

அத்துவாக்கள் ஆறு. அத்துவா என்ற சொல்லிற்கு வழி என்பது பொருளாகும். மந்திராத்வா, பதாத்வா, வண்ணாத்வா, புவனாத்வா, தத்துவாத்வா, கலாத்வா என ஆறாகும். ஆசாரியன் அத்துவா சுத்தி செய்து ஆன்மாவில் சிவத்தை பிரகாசிக்கச் செய்வான். அதுவே அத்துவாசுத்தி எனப்படுவது. ஆறத்வாக்களிலும் எஞ்சியிருக்கின்ற, (சஞ்சிதம்) கன்மங்களையெல்லாம் நசிப்பித்தலாகும். கன்மம் நசிய மாயை நீங்கும் ஆணவ மலத்தடை ஒழியும். ஆணவம் அகல சிவஞானம் பிரகாசிக்கும்.

அத்துவ சுத்தியாவது ஆறு அத்வாக்களில் மந்திரம் பதத்திலும், பதம், வன்னத்திலும், வன்னம் புவனத்திலும், புவனம், தத்துவத்திலும், தத்துவம் கலையிலும் ஒடுங்கும். ஒடுங்கிய கலையை திரோதான சக்தியிலும் திரோதான சக்தியை சிவத்திலும் ஒடுக்குவதாம்.

மந்திரங்கள் - 11, பதங்கள் 81, வன்னம் - 51, புவனங்கள் 224, தத்துவங்கள் 36, கலைகள் 5, இதில் மந்திரம், பதம், வன்னம் மூன்றும் சுத்தமாயா காரியமாதலாற் **சுத்தாத்துவா** எனவும், தத்துவம் சுத்தமாயை, அசுத்த மாயைகளின் காரியமாதலால் **மிச்சிராத்துவா** எனவும், புவனம் சுத்தமாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயைகளின் காரியமாதலால் **அசுத்தாத்துவா** எனவும் கூறப்படும்.

இனி நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை சாந்தி கலை காந்தியாதீதக் கலைகளில் அடங்குகின்ற புவன தத்துவங்களைப் பார்ப்போம். புவன தத்துவங்கள் மொத்தம் 224.

நிவிர்த்திகலை :- காலாக்கினி ருத்திர புவனம் முதல் பத்திரகாளி புவனம் வரையில் 108

பிரதிட்டாகலை :- அமரேச புவனம் முதல் சீகண்ட புவனம் வரையில் 56

வித்தியாகலை :- வாம புவனம் முதல் அங்குட்ட மாத்திர புவனம் வரையில் 27.

சாந்திகலை :- வாமை புவனம் முதல் சதாசிவ புவனம் வரையில் 18.

சாந்தியாதீதகலை :- நிவிர்த்தி புவனம் முதல் அநாசிரித புவனம் வரையில் 15

ஆக புவனங்களின் மொத்த எண்ணிக்கை 224. (வ. வை.)

## புவனேசுவரம்

ஒரிசா மாநிலத்தின் தலைநகர் புவனேசுவரம். புவனேசுவரத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் மௌரியர் காலந்தொட்டே சிறப்புற்றிருந்தன ஆயின் கி.பி 7ஆம் நூற்றாண்டின் பின்னரே வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரமாகத் திகழ்ந்துள்ளது. இங்கு குப்தர் கலைப் பாணியில் உருவாக்கப்பட்ட கணபதி, கார்த்திகேயன், உமா மகேசுவரர், பார்வதி ஆகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. ஆகவே குப்தர் காலக் கோயில்கள் இருந்து அழிந்திருக்க வேண்டும் என்று கொள்ள இடமுண்டு.

சைலோற்பவ குல அரசர்கள் கி.பி 7ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த போது புவனேசுவரத்தைக் கைப்பற்றிப் பல கோயில்களைக் கட்டியுள்ளனர். கீழைக் கங்க மன்னர்களின் காலத்திலும் புவனேசுவரத்தில் பல கட்டடங்கள் புதிதாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டன. புவனேசுரத்தில் இருபதுக்கு மேற்பட்ட கோயில்கள் உள்ளன. அவை பல காலங்களில் பல அரசவம்சத்தவரால் எடுக்கப்பட்டவை. அவற்றை காலவரிசைப்படி மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவை முதற் காலம் (கி.பி 750 - 900) இடைக்காலம் (கி.பி 900 - 1100) பிற்காலம் 1100க்குப் பிற்பட்டவை.

### பரசுராமேசுவரர் கோயில்

பரசுராமேசுவரர் கோயில் ஓரிசாவின் முற்காலக் கட்டிடக் கலைக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. சிறிய கோயிலாக இருந்த போதும் கலை நுணுக்கங்கள் மிகுந்து காணப்படுகின்றது. பல காலங்களைச் சார்ந்த கல்வெட்டுக்கள் இக் கோயிலில் காணப்படுகிறது. எனினும் இக்கோயில் யாரால் கட்டப்பட்டது என்பது தெளிவாக இல்லை. கருவறையில் உள்ள கல்வெட்டுக்களின் எழுத்தின் அடிப்படையில் இது கி.பி 7ஆம் நூற்றாண்டுக்குரிய கோயிலாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. கிழக்கு வாயிலில் உள்ள கல்வெட்டொன்றில் இக்கோயில் இறைவன் பராசீசுவர என்று குறிக்கப்பட்டுள்ளார்.

இக் கோயில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. செவ்வக வடிவில் அமைந்துள்ள இக்கோயிலில் கருவறை, ஜகன் மோகன் (யாத்திரிகர் கூடும் இடம்) என்ற மண்டபம் ஆகியன உள்ளன. கருவறை திரிதர அமைப்பு முறையிற் கட்டப்பட்டுள்ளது. கருவறையின் பாதப்பகுதியிற் மனித, மிருக உருவங்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள சிற்பங்களில் குறிப்பிடத் தக்கவை யாளிச் சிற்பமாகும். முன்னிரு கால்களைத் தூக்கித் தலையைப் பின்புறம் திரும்பிப் பார்க்கும் நிலையில் உள்ள சிங்கத்தின் பின்னிரு கால்களின் கீழ் யானை ஒன்று அமர்ந்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. ஜகன்மோகன் என்னும் மண்டபத்தில் வெளிச்சம் வரச் சாளரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சாளரங்களில் அழகான சிற்பவடிவங்கள் நடனமாடுபவர், இசைக்கருவி வாசிப்பவர், பார்வதி, சிவன், அர்த்தநாரீசுவரர், வருணன், சப்த மாதர் ஆகியோரின் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

பழுதடைந்த திருச்சுற்றின் உட்புறத்தில் அமைந்துள்ள 'வைடால் தேவுல்' என்னும் கோயிலும் கருறை, ஜெகன் மோகன் போன்ற பகுதிகளைக் கொண்டுள்ளது. கருவறை விமானம் மாட்டு வண்டியின் கூரை அமைப்பை போன்று அரைவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இது காகர விமானம் என அழைக்கப்படுகின்றது.

வைடால் தேவுல் கருவறையின் வெளிப்பகுதியில் உள்ள அரைத்தூண்களில் சிற்ப வேலைப்பாடுகள் நேர்த்தியான முறையில் செதுக்கப்பட்டுள்ளன. முன்னங்கால்களைத் தூக்கிப் பின்னிரு கால்களில் நின்று கொண்டு தலையைப் பின்புறம் திரும்பிப் பார்க்கும் சிங்கத்தின் மேல் வீரன் அமர்ந்த நிலையிலும், சிங்கத்தின் கீழ் வீரன் படுத்திருப்பது போன்றும் சிற்பங்கள் உள. அரைத்தூண்களுக்கிடையில் உள்ள தேவ கோட்டங்களில் மகிடாசுர மர்த்தினி, ஹரிஹரன் போன்றவர்களுக்கான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

ஜகன் மோகனில் உள்ள சாளரத்தின் கீழ் பகுதியில் ஏழு குதிரைகள் பூட்டிய வண்டியில் சூரியன் செல்வது போன்று செதுக்கப்பட்டுள்ளது. அதன் மேற்பகுதியில் நடராஜர் சதுர தாண்டவம் ஆடும் சிற்பம் உள்ளது. கருவறையில் எட்டுக் கரங்களுடன் கூடிய கபாலினி என்று கூறப்படுகின்ற சாமுண்டா தெய்வம் உளது. அருகில் சப்த மாதர்கள், வைரவர் போன்ற தெய்வங்கள் உள்ளன. இது தந்திர வழிபாட்டு முறைக்குரிய கோயிலாகும்.

### சதுர்கணேசுவரர் கோயில்

மூன்று கோயில்கள் சதுர்கணேசுவரர் கோயிலின் உட்புறத்தில் உள்ளன.

1. இலட்சுமனேசுரர்
2. பரதீசுவரர்
3. சதுரகணேசுவரர்

ஆகிய மூன்று கோயில்களும் கி.பி 6, 7ஆம் நூற்றாண்டுகளிற் கட்டப்பட்டவை என்பதைக் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. சதுர்கணேசுவரர் கோயில் கட்டடக்கலை அமைப்பிற் பரசுராமேசுவரர் கோயிலை ஒத்துக் காணப்படுகிறது. விமானத்தில் அமைக்கப்பட்டுள்ள இராவண அனுக்கிரக மூர்த்தி, நடராஜர் அமர்ந்த நிலையில் உள்ள லகுலீசர் போன்ற சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை.

### முக்தீசுவரர் கோயில்

இடைக்காலத்திற் கட்டப்பட்ட கோயில்களிற் முக்தீசுவரர் கோயில் முதன்மை பெறுகின்றது. பெர்குசன் என்பவர் இக்கோயிலை ஓரிசாவின் சிறப்பு இரத்தினம் என்கிறார். வடக்கு நோக்கி அமைந்துள்ள இக் கோயிலின் கோபுரம், தோரணவாயில், மண்டபங்கள் என்பன பல சிறப்பம்சங்களைக் கொண்டவை. ஆலயத்தின் வெளிச்சுவரில் மனிதன், மிருகங்கள் ஆகிய சிலைகள் வண்ணக் கலப்போடு அலங்காரமாக விளங்குகின்றன. கருவறை, ஜெகன் மோகன் ஆகிய அமைப்புகளுடன் கூடிய கோயில் நுழைவாயிலில் அரைவட்ட வடிவத்திற் தோரணம் ஒன்று எழுப்பப் பட்டிருக்கிறது. இரு தூண்களின் மேல் அமைக்கப்பட்டிருக்கும் அத் தோரணத்தில் பெண்கள் அமர்ந்திருப்பது போன்ற அலங்காரம் உள்ளது. கருவறையின் இரு பக்கங்களிலும் கங்கை, யமுனை ஆகிய சிற்பங்கள் உள்ளன. கருவறை விமானம் நாகர பாணியில் அமைந்துள்ளது. அரைத்தூண்களில் யானையின் மீதமர்ந்த சிற்பத்தின் உருவம் குறிப்பிடத்தக்க சிற்பமாகும். கோயில் 35 அடி மட்டுமே உயரமுடையது. சிற்பச் சிறப்பில் மிகவும் உன்னத நிலையில் உள்ளது எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலிங்கராசா கோயில்

கோயிலில் உள்ள மண்டபத்தில் கி.பி 14 - 15ஆம் ஆண்டைச் சார்ந்த கங்க மன்னன் அனந்தவர்மன் சோடங்கனின் கல்வெட்டு ஒன்று உளது. அக் கல்வெட்டில் 'இலிங்கராசா கோயில் கீர்த்தி வாசா' என்ற பெயர் கூறப்படுகின்றது.

இக்கோயில் மிகப் பெரியது. கோயிலைச் சூழ சிறியனவும், பெரியனவுமாகப் பல கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன. இக் கோயில்கள் பல காலத்தைச் சேர்ந்தவை. இவை எல்லாவற்றையும் உள்ளடக்கிப் பெரிய மதிற் சுவர் எடுக்கப்பட்டுள்ளது. கிழக்குப் பக்கம் பிரதான நுழைவாயிலும் தெற்கு, வடக்குப் பகுதிகளிலும் சிறிய நுழைவாயில்களும் உள்ளன. இக்கோயில் நான்கு பகுதிகளைக் கொண்டது. கருவறை, ஜெகன்மோகன் என்னும் மண்டபம், நாட்டிய மந்திர் என்னும் விழா மண்டபம், போகமண்டபம் என்னும் பூசைப் பொருட்கள் படைக்கும் மண்டபம் ஆகியனவாகும். அவை ஒன்றின் முன் ஒன்றாகக் கட்டப்பட்டுள்ளது.

கருவறை பஞ்சரத பாணியில் கட்டப்பட்டுள்ளது. இங்கு இடம் பெற்றுள்ள சிற்பங்களில் சூரியன், கார்த்திகேயன், பார்வதி, பிரம்மா, சிவன் போன்ற சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. ஜெகன் மோகன் 28 மீற்றர் உயரமுடையது. அதன் வெளிப்பகுதியில் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை ஆகியன செல்வது போன்று சிற்பவரிசை காட்டப்பட்டிருக்கின்றன. அடுத்துள்ள நாட்டிய மந்திர், போக மந்திர் ஆகியன பிற்காலத்தில் எடுக்கப்பட்டன.

இக்கோயிலின் பரப்பு சுமார் நான்கு ஏக்கர் என்று கூறப்படுகிறது. முழு இடமும் உயரமான மதிலால் சூழப்பட்டுள்ளது. இலிங்கராசருக்கு சித்திரை மாதத்தில் தேர்த் திருவிழா நடைப்பெறுகிறது. அது மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. காலையில் திருப்பள்ளியெழுச்சி பிறகு திருமஞ்சனம் பகலில் நைவேத்தியம் பின் பள்ளி அறை உற்சவம் முதலியன தினமும் நடைப்பெறுகின்றன. இலிங்கராசா கோயிலுக்கு வடக்கே மிகப் பிரமாண்டமான குளம் ஒன்று உளது. இந்தக் குளத்தில் எல்லாப் புண்ணிய தீர்த்தங்களும் ஐக்கியமாவதாக ஐதீகம். இங்கு ஸ்நான யாத்திரா என்ற திருவிழா விசேடமானது.

### இராசாராணிக் கோயில்

இக்கோயில் வயல்களுக்கிடையே இருக்கின்றது. இக் கோயிலில் சிலை ஒன்றும் இல்லை. வாயிற் கதவுகளுக்கு மேல் நவக்கிரகங்களின் சிலைகள் இருக்கின்றன. திருமகள் உருவம் ஒன்றும் இருக்கிறது. இது பெருமாள் கோயிலாக இருக்கலாம் என்கிறார்கள். வேறு சிலர் அரசனும் அரசியும் தங்குவதற்காகக் கட்டப்பட்டது என்றும் கூறுகின்றனர். பெண்களின் சிலைகள் சுவர்களில் நகை முகத்துடன் காணப்படுகின்றன. ஆபரணம், புடவை, புடவையின் கரை முதலியவற்றில் சிற்பி தன் கைத்திறனைக் காட்டி உள்ளான். இங்குள்ள பல சிலைகள் எங்கோ எடுத்துச் செல்லப்பட்டிருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு.

புவனேசுவரத்தைச் சுற்றி மூன்று மைலில் உதயகிரி, கண்டகிரி, நீலகிரி என்ற மூன்று மலைகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும் கல்லில் குடையப்பட்ட மலைக்குகைகள் இருக்கின்றன. இவை இந்து, சமய, பௌத்தர்களுக்குரியதாக கொள்ளப்படுகின்றன. இங்கு வசித்த முனிவர்கள் சிற்பக்கலையில் சிறந்தவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் இக்குகைக் கோயில்களில் பல சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இக்குகை சிற்பங்கள் மூலம் அக்கால ஆடை, ஆபரணங்கள் பழக்க வழக்கங்கள் முதலியவற்றை அறியலாம்.

பொதுவாக கூறிடின் இந்தியப் பழைய நாகரீகத்தை இவை பிரதிபலிப்பதுடன் கவனிப்பாரற்ற நிலையிலும் அவற்றின் உயிரோட்டம் குறையவில்லை எனலாம். (நி. நி.)

## புள்ள மங்கை

சோழநாட்டுத் தலம். காவேரி ஆற்றின் ஒரு கிளை நதியான குடமுருட்டி ஆற்றின் கரையில் இத் திருத்தலம் உள்ளது. பண்டைய நாளில் ஊர்ப் பெயர் புள்ள மங்கை என்றும் கோயிற் பெயர் ஆலத்துறை என்றும் வழங்கப்பட்டது. **'புள்ளமங்கை ஆதியவர் கோயில் திருவாலந்துறை தொழுமின்'** என்ற ஞானசம்பந்தர் பாடல் இக்கருத்தைத் தெளிவுப் படுத்துகின்றது. கல்வெட்டுக்களில் ஆலத்துறை மகாதேவர் கோயில் என்று குறிக்கப்படுகின்றது. இன்று ஊர்ப் பெயர் மாறி பசுபதி கோயில் என்று வழங்கப்படுகிறது. ஆலமரத்தைத் தலமரமாகக் கொண்டு விளங்கிய நீர்த்துறைத் தலம் ஆதலின் **'ஆலந்துறை'** என்ற பெயர் பெற்றிருத்தல் வேண்டும் என்பர். அமுதத்தைக் கடைந்த போது தோன்றிய விஷத்தை இறைவன் பருகிய இடம் இஃது என்பது தலபுராணச் செய்தி ஆகும்.

சம்பந்தப் பெருமானால் பாடப் பெற்ற இத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் பிரமபுரீஸ்வரர், ஆலந்துறை நாதர், பசுபதீஸ்வரர், பசுபதி நாதர் என்றும் இறைவி அல்லியங் கேபாதை, சௌந்தர நாயகி என்று அழைக்கப்படுகின்றனர். தீர்த்தம் கோயிலின் எதிரில் அமைந்துள்ளது.

பிற்காலத்தில் கட்டப்பட்ட உயர்ந்த மதிற்சுவரின் உள்ளே கோயில் அமைந்துள்ளது. கோயிலின் கருவறையும் அதன் முக மண்டலமுமே சோழர் காலத்தில் கட்டப்பட்டவை. ஏனைய கட்டிடங்கள் பிற்காலத்தில் கட்டப்பட்டவை. கிழக்கு நோக்கி அமைந்திருக்கும் கோயிலின் வாயிலில் மூன்று நிலைகளைக் கொண்ட கோபுரம் அமைந்துள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாலும் மேற்பகுதி செங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளது. சிகரத்தில் ஆறு கலசங்கள் இடம் பெற்றுள்ளன.

கோபுர வாயிலைக் கடந்ததும் மகாமண்டபம். அர்த்த மண்டபம், அடுத்து கருவறையும் உள்ளது. திருச் சுற்றில் மூன்று பரிவாரத் தெய்வங்களின் சந்நிதிகள் இருக்கின்றன. தென்மேற்கில் விநாயகரும், மேற்கில் முருகனும், வடக்கில் சண்டேஸ்வரரும் கோயில் கொண்டுள்ளனர்

சதுர அமைப்பில் அமைந்துள்ள கருவறை இருக்கிறது. உள்ளே திருவாலந்துறை மகா தேவர் இலிங்க வடிவில் அமர்ந்துள்ளார். கருவறை வெளிச்சுவரில் உள்ள மூன்று மாடங்களில் தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரமா ஆகியோரின் சிற்பங்கள் உள்ளன.

தெற்குக் கருவறை மாடத்தில் சிறிய தட்சிணா மூர்த்தியின் உருவம் வைக்கப்பட்டுள்ளது. இது பிற்காலச் சேர்க்கை என்றும் கோயிலை அமைத்தவர்கள் வைத்த பெரிய சிற்பம் அகற்றப்பட்டு விட்டது என்றும் கூறப்படுகிறது. வடக்குக் கருவறைச்சுவரில் உள்ள லிங்கோற்பவர் சிற்பத்தின் மேல் பகுதியில் பிரமாவும், கீழ்ப்பகுதியில் விஷ்ணுவும் இருக்கிறார்கள். சிவபெருமானின் முகம் சிதைவடைந்துள்ள போதும் அவரது ஜடாமகுடமும், பிறைச்சந்திரனும் தெளிவாக உள்ளன. லிங்கோற்பவருக்கு இருபுறமும் பிரமாவும், விஷ்ணுவும் இளவயதுத் தோற்றத்துடன் கம்பீரமாகச் செதுக்கப்பட்டுள்ளார்கள். கருவறையின் வடக்கு மாடத்தில் பிரமாவினை மகுடமும், அணிகலன்களும் தரித்து மெல்லிய உடற்கட்டோடு கூடிய இளைஞனாக வடிவமைத்துள்ளார் சிற்பி. கருவறையின் அடித்தளத்தில் உள்ள சிற்பங்களில் பிட்சாடனர், கங்காதரர், நரசிம்ம மூர்த்தி, சிவபெருமானின் தாண்டவம் கஜசம்கார மூர்த்தி, காமதகன மூர்த்தி ஆகியன குறிப்பிடத்தக்கவை.

கோயிலின் முக மண்டபத் தெற்குச் சுவரில் பிள்ளையார் சிற்பம் தாமரை மலரில் அமர்ந்திருக்கும் கோலத்தில் செதுக்கப் பட்டுள்ளது. வடக்கு மாடத்தில் துர்க்கையின் சிற்பம் எழிலுடன் உருவாக்கப் பட்டுள்ளது. துர்க்கையின் காலடியில் இருக்கும் மனிதன் தன் தலையைத் தானே அறுத்து பலியிட முனைகிறான். கொற்றவைக்கு வீரர்கள் தம்மைப் பலியிட்டுக் கொள்ளும் வழக்கம் முற்காலச் சோழர்காலத்திலும் காணப்பட்டது என்பதனை இச்சிற்பம் புலப்படுத்துகிறது.

விமானத் தளத்தில் ஆடல் மகளீர், இசைக் கலைஞர்கள் ஆகியோரின் 19 சிற்பங்கள் இடம் பெற்றிருக்கின்றன. எல்லா ஆடல் மகளிரும் ஸ்வஸ்திக கரணத்திலேயே காணப்படுகின்றனர். இசைக் கலைஞர்கள் இடக்கை என்ற தாள வாத்தியத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

இராமாயணக் காட்சிகள் பலவும் சிற்பங்களாக வடிக்கப் பட்டுள்ளன. வாலியின் இறப்பைக் குறிக்கும் காட்சி, விராடன் என்ற அசுரன் இராமனை அச்சுறுத்தும் காட்சி போன்றவை இடம் பெற்றுள்ளது.

இக் கோயிலில் எல்லாமாக 22 கல்வெட்டுகள் இருக்கின்றன. இவை எல்லாம் சோழக் காலத்தவை. முதலாம் பராந்தகன் ஆட்சிக் காலம் தொடக்கம் இரண்டாம் ஆதித்தன், முதலாம் ராஜராஜன், விக்கிரம சோழன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோர் காலம் வரை வெட்டப்பட்ட கல் வெட்டுக்கள் இவை. அக்காலத்தில் இப்பகுதியில் வாழ்ந்த மக்களின் சமூக, பொருளாதார, நிலைகளையும், நாடு, அரசு, ஊரின் சபையோர், கோயில் நிர்வாகம் போன்ற விடயங்கள் அனைத்தும் இக் கல்வெட்டுக்கள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

புள்ள மங்கை ஒரு பிரமதேயம் அந்தணர்களுக்குக் கொடையாக அளிக்கப் பட்ட ஊர்களே பிரமதேயங்களாகும். பிரம தேயத்து நிர்வாகம் ஒரு சபையின் மூலமே நடைபெறும். அந்தச் சபையை மகா சபை என அழைப்பர். இக் கோயிலில் கிடைக்கப் பெற்ற கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அக்கால மக்களின் வாழ்க்கை கோயிலைச் சார்ந்ததாகவே இருந்தது என்பதும் புலனாகின்றது. (நி. நி.)

# புறப்புறச் சமயங்கள்

இந்தியச் சமயங்களை உற்று நோக்கின் வைதீகம், அவைதீகம் எனச் சமயப் பிரிவுகள் பல பேசிப்படுகின்றது. சைவசித்தாந்த நோக்கில் சிவஞான சித்தியார், சங்கற்பநிராகரணம் போன்ற சாத்திர நூல்கள் புறப்புறம், புறம் அகப்புறம், அகம் என நான்கு வகைப்பட்ட சமயப் பிரிவுக்குள் ஆறு ஆறு சமயங்களாக இருபத்திநான்கு பிரிவுகள் வர்க்கப்படுத்தப்பட்டுள்ளன.

புறப்புறச்சமயங்கள் ஆவன உலகாயதம், பௌத்தம், ஆருகதம், பௌத்த சமயத்தில் வரும் மாத்தியமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம் போன்றவற்றுடன் ஆறாகும். இவை வேதாகம நூல்களை உண்மை நூல்களாக ஏற்காதவை. ஆதலால் அவை புறப்புறச் சமயங்கள் என்று ஏற்கப்படுகின்றன.

## உலகாயதம்

உலகாயதம் ஒரு வாழ்க்கை நெறி. பிரபஞ்சத்தை விளங்கிக் கொள்வதற்கான ஒரு பார்வை. உண்மையை அறிந்து செயல்பட, அதன் மூலம் மாற்றத்தை விளைவிக்கும் ஒரு மனிதகுல வழிமுறை என்று உலகாயத தத்துவத்தைப் பேசிக்கொண்டே செல்லலாம். இச்சமயத்தை சார்வாகம் என்றும் கூறுவர். அவர்கள் காட்சி அளவையை மட்டுமே ஏற்றுக் கொள்கின்றனர். இச்சமயத்தின் புனித நூலை தேவர்களின் குருவான பிருகஸ்பதி அருளினார். சிவஞான சித்தியார் நூலாசிரியரும் பிருகஸ்பதி அருளிய நூலின் வழிநின்று தமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைகளைக் கடைப்பிடித்ததாக மேல்வரும் பாடலொன்றால் அறியத் தருகின்றார்.

*'இந்திர புரோகிதன் இயம்பும் ஒரு நூலின்*
*தந்திரம் எனாது அறிவினோடு அருள் இலாமல்*
*சந்தனை புயத்துமன மாலைகள் தயங்க*
*உந்தி உலகத்தில் உலகாயதன் உரைப்பான்.'*

பொறிகளுக்குப் புலப்படாதவை உண்மையாகாது. பொறிவழியிலே அறியக் கூடிய நிலம், நீர், வாயு, தீ என்ற நான்கு பூதங்களுமே உண்மையானவை. கடவுள் ஆன்மா என்பன பொய். நான்கு பூதங்களுமே கூடி உருவானதே உடம்பு. உதாரணமாக பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு கூடிச் சிவப்பு நிறப்பொருள் தோன்றுவது போல பூதங்கள் நான்கும் கூடி ஓர் உணர்வு உண்டாகும். அவ்வுணர்வு தேகம் வரை வளரும். தேய்ந்தால் தேயும் இதனைச் சிவஞான சித்தியாரில் வரும் பரபக்கப்பாடல்கள் பல உணர்த்தி நிற்கின்றன. உடம்புக்கு வேறாய் உயிர் உளது என்பது பொய். உடம்பிற்கு இன்ப, துன்பம் இயல்பாய் உள்ளன. இன்ப துன்பத்திற்கு இருவினை மூலம் என்பதும் பொய். இதைச் சிவஞான சித்தியார் பாடலொன்று 'இன்பொடு துன்பம் எல்லாம் எய்வது கன்னம் என்னில்' எனப் பகிர்கின்றது. உலக ஐம்புல இன்பங்களை நுகர்வதே சொர்க்கம். வறுமையாலும், பகைவராலும், நோயாலும் வருந்துவதே நரகம் என்றும் உலகாயதர் பேசுகின்றனர்.

## பௌத்தம்

புத்தர் நாற்பதைந்தாண்டுகள் தமது கொள்கைகளை மக்களிடையே போதனை செய்தார். ஆனால் நூலுருவம் ஆக்கவில்லை. பாளி மொழியில் செவிமரபாக அவரின் போதனைகள் பரப்பப்பட்டது. அவருடைய இறப்புக்குப பின் அவருடைய சீடர்கள் செவிமரபாகக் கேட்கப்பட்டதை தொகுத்து 'திரிபிடகம்' என்ற நூலை இயற்றினார். சுத்த பிடகம், வினயபிடகம், அபிதம்ப பிடகம் என்ற மூன்றும் சேர்ந்ததே திரிபிடகம். பௌத்த சமயத்திற் புத்தர், தர்மம், சங்கம் என்ற மூன்றும் தலையான கொள்கையாக விளங்குகின்றது. இம் மூன்றையும் திரிரத்தினம் எனவும் அழைப்பர்.

இச்சமயம் கடவுளைப் பற்றிக் கூறவில்லை. ஞானமே ஆன்மா. அதுவும் நீரோட்டம் போன்றது. புத்தரின் போதனைகளை அலசி ஆராயும் பொழுது 'ஆசையே பற்று துன்பத்திற்கு அடிப்படை' என்பது புலனாகின்றது. துன்பம் என்பது பிறவித் துன்பமாகும். இத்துன்பத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து, அஷ்ட மார்க்கங்கள், தசமார்க்கங்கள், பஞ்சசீலங்கள் முதலிய உபாயங்களில் நின்று ஒழுகுவதன் மூலம் பரிநிர்வாண நிலை அடையலாம் என்பதே பௌத்தசமய சாராம்சமாகும். பௌத்தத்தில் நால்வகைப் பிரிவுகள் உள்ளன. அவை மாத்தியமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம் என்பனவாகும்.

## மாத்தியமிகம்

ஆசிரியர் மொழிந்ததை அப்படியே ஏற்றுக் கொண்டதனால் தலை மாணாக்கர். அதற்கு மேல் சிந்தித்து வினா எழுப்பாமையால் கடை மாணாக்கர் என இரண்டும் ஒருங்குற்று நின்றமையால் மத்தியில் நின்றவர் என்ற பொருள் தருவதால் மாத்தியமிகர் எனப்பட்டனர். இவர்கள் எல்லாப் பொருட்களும் சூன்யம் என்பர். சூனியம் என்றால் ஒன்றும் அற்றது எனப் பொதுவாகப் பொருள் கொள்வர். ஆனாற் பௌத்தரின் கருத்துப்படி இன்னது என வரையறுத்துக் கூற முடியாதது எதுவோ அதுவே சூனியம் என்பர்.

மாத்தியமிகரின் கொள்கைகளைச் சிவஞான சித்தியார் பாடலொன்று மேல் வருமாறு காட்டி நிற்கின்றது.

*'அவயம் பொருளாய்த் தோன்றும்*
*அவயம் அழிந்தால் பின்னை*
*இவை பொருள் என்ன வேறு ஒன்று*
*இலாமையால் பொருள்கள் இன்றாம்*
*அவை பொருள் இலாமையாலே*
*அறிவும் இன்றாகும் என்று*
*நவைதரு மொழியினாலே*
*நவிலும்மாத் தியமி கன்தான்'*

இக்கொள்கைகளை அருணந்தி சிவாச்சாரியார் இரண்டு பாடல்களில் மறுத்துரைத்திருப்பதும் கவனிக்கப்பாலது.

## யோகாசாரம்

பௌத்த சமயத்தில் ஆசிரியன் கூறுவதை உடன் படுதலை ஆசாரம் என்பர். மேன்மேலும் வினாக்களைத் தொடுப்பது யோகம் என்பர். இவ்விதம் ஆசிரியர் கூறுவதை உடன்பட்டு மீண்டும் மேலும் வினாவியதால் இம்மதத்தாரை யோகாசாரர் எனக் கூறுவர். இப்பிரிவு கி.பி. நான்காம் நூற்றாண்டில் அசங்கராலும், வசுபந்துவாலும் வரையறை செய்யப்பட்டது.

இவர்கள் புறப்பொருள் மட்டுமே சூனியம் என்பர். ஞானம் என்பது உண்மை. அது இருவகைப்படும் வடிவத்தோடும், நிறத்தோடும் உள்ளத்தின் உள்ளே தோன்றுவது. இது சகார ஞானம் எனப்படும். கட்டு நீங்கிய வழி அவ்வாறு வேறுபாடு இன்றித் தொடர்ச்சியாய் எழும் ஞானம் நிராகார ஞானம் எனப்படும். இதை சிவஞான சித்தியார் பாடலொன்று மேல்வருமாறு கூறுகின்றது.

'போதமே பொருளாய்த் தோன்றும்
பொருளதாய் எழலால் போதம்
வாதனை அதனால் கூடி
வருதலால் வடிவிலாமை
ஆதலால் கனவே போலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகம் உளது அறிவே யாம் என்று
ஓதினான் ஓதானாய
உணர்வினால் யோகா சாரன்'

இதற்கும் அருணந்தி சிவாச்சாரியார் இரண்டு மறுதலைப் பாடல்களைப் பகர்ந்துள்ளார்.

## சௌத்திராந்திகம்

இப்பிரிவை உருவாக்கியவர் குமாரலபதர். இவர் கி.பி இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இப்பிரிவினர் சூத்திர பிடகத்தைப் பின்பற்றுபவர்கள். புறப் பொருட்கள் எல்லாம் நிலம், நீர், தீ, காற்று என்ற நான்கு வகைப்பட்ட பரமாணுக்கள் ஒன்று சேர்ந்து உருவானவை. இவை புறச்சமுதாயம் எனப்படும். உள்ளத்துக்குள்ளே நிகழும் அறிவு அகச்சமுதாயம் எனப்படும். அது சித்தமும், சித்தப்பகுதியும் என இருவகைப்படும். இவ்விரண்டும் உருவம் ஞானம், வேதனை, குறி, வாசனை என ஐந்து கந்தங்களாகும். ஓசை, ஊறு, உருவம், சுவை, நாற்றம் ஆகியவை உருவ கந்தம் ஆகும். உருவகத்தை உணர்வது ஞானக்கந்தமாகும். அந்த ஞானம் விரிவடையும் போது பிரவிருத்தி விஞ்ஞானம் ஏற்படும். ஒடுங்கும் போது ஆலய விஞ்ஞானம் ஏற்படும். அவை முறையே சரகாரம், சவிதற்பம் என்று கூறப்படும். இவற்றால் வேறுபடும் இன்பதுன்பங்களைக் கந்தம் என்பர். இவை ஐந்துவகை. இவ்வைந்தும் கெடுவதுவே முக்தி என்கின்றனர்.

பௌத்தரில் சௌத்திராந்திக மதத்தினைப் பற்றி, முப்பத்தொரு பாடல்களில் சிவஞான சித்தியார் நூலாசிரியர் குறிப்பிட்டதோடு நாற்பது பாடல்களில் அவற்றின் மறுதலைகளையும் குறிப்பிட்டுள்ளார்.

## வைபாடிகம்

பௌத்த சமய ஆசிரியர் புறப் பொருள் காட்சிப்படுவன அல்ல கருதியே அறியப்படுவன என்று கூறியதோடு மாணவர்கள் சிலர் உடன்படவில்லை. கருதலளவை என்பது காட்சி அளவையின் அடிப்படையிலே நிகழும். காட்சியின் றிக் கருதல் இல்லை. ஆகவே நீங்கள் கூறியது மாறுகோள் உரையோ? என வினவினர்? மாறுகோள் என்பது புத்த சமயத்தில் விபாடை என்ற சொல்லால் குறிக்கப்படும். ஆதலால் இவ்வாறு வினா எழுப்பியவர்கள் 'வைபாடிகர் எனப்படுவர்.

இச்சமயப் பிரிவு கி.மு. முதல் நூற்றாண்டில் தின்னாராரும், தரும கீர்த்தியாலும் ஏற்படுத்தப்பட்டது. இவர்கள் அபிதம்ம பிடகத்தை கடைப்பிடிப்பவர்கள். மஞ்சளும், சுண்ணாம்பும் கூடிச் சிவப்பு நிறம் உண்டாதல் போலக் காணப்படும் புறப்பொருள்களும், அறிவும் கூடியதே இவ்வுலகம். இதனை அறிதலே ஞானம் இஞ்ஞானத்தைத் தெளிதலே வீடுபேறு என்பது இவர்களின் கொள்கைகள்.

## சமணம்

சமண சமயத்தை ஜைனம், ஆருகதம், நிகண்டம் எனப் பல பெயர்களால் அழைப்பர். சமணர் என்றால் துறவி என்பது பொருள். புலன்களையும், கருமங்களையும் ஜெயித்தவர் என்ற பொருளில் வருவதால் 'ஜினர்' என்றும் துறவிகளை அழைப்பர். சமண சமயக் கொள்கைகளை உலகத்திலே பரப்பச் செய்வதன் பொருட்டுத் தீர்த்தங்கரர்கள் என்னும் பெரியோர்கள் அவ்வப்போது தோன்றுகின்றனர் என்பது சமணசமயக் கொள்கை. இதுவரை இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் இச்சமயக் கொள்கையைப் பரப்பினர். பின்பு வந்த தீர்த்தங்காரர்கள் இச்சமயம் கொள்கைகளைப் போதித்தார்கள் என்றும் கூறப்படுகின்றது. சமணசமயம் வர்த்தமான மகாவீரரின் காலத்திலேதான் சரியாகவும் திட்டவட்டமாகவும் தெளிவுபடுத்தப்பட்டது.

சமண சமயக் கொள்கைப்படி உலகம், உயிர்கள் இறைவனால் ஆக்கப்பட்டவை அல்ல. உயிர்கள் தம் நல்வினை, தீவினைக்கேற்ப இன்பதுன்பங்களை அடைகின்றது என்றும் தூய துறவு வாழ்க்கையால் வீடு பேற்றை அடைந்து கொள்வான் என்று தெளிந்து நடந்து கொள்வது நல்லறிவாகும். அதற்கு வாய்மை, அகிம்சை, திருடாமை, துறவு, அவாவறுத்தல் முதலிய ஐந்து மாவிரதங்களைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும்.

சமணர்கள் ஒரு கேள்விக்கு ஏழு விடைகள் கூறுவர். i)உண்டாம் ii) இல்லையாம் iii) உண்டாம் இல்லையாம் iv) சொல்லொணததாம் v) உண்டுமாம் சொல்லொணாததாம் vi) இல்லையுமாம் சொல்லொணதுமாம் vii) உண்டும் இல்லையுமாம் சொல்லொணததுமாம் இவ்வாறான ஏழையுமே சப்தபங்கவாதம் என்றும் அல்லது சீயாத்வாதம் என்றும் கூறுவர். ஒரு பொருளுக்குப் பல முடிவுகள் கூறுவதால் இதனை அநேகாந்தவாதம் என்றும் கூறுவர். (சு.து.)

# புஷ்கர்ணி

**'புஷ்கர்'** என்று சொல்லப்படும் புனித தலம் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ளது. புண்ணியம் அளிக்கும் புஷ்கரணி தீர்த்தமும் இங்கு தான் உண்டு. பிரமாவை மூலவராகக் கொண்ட இத்திருத்தலத்தில் மட்டுமே, தன் கணவர் பிரம்மாவை வழி படலாம் என்றும், தவிர்த்து வேறு இடத்தில் யாரும் வழிபடக்கூடாது என்றும் அப்படி வழிப்பட்டால் பாவம் சேரும் என சரஸ்வதி சாபமிட்டதாக புராணக்கதை ஒன்று கூறுகின்றது.

பூமியில் வாழுகின்ற மக்களுக்கு நன்மையை ஏற்படுத்த ஒரு யாகம் செய்ய வேண்டும் என்று பிரமாவிற்கு ஆசை ஏற்பட்டதாகவும் அதன் காரணமாக யாகத்தை நடத்த புஷ்கர் தலத்தையும் அங்குள்ள அற்புத மகிமை பெற்ற குளத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுத்தார் என்றும் யாகத்திற்கு நாள் குறித்து சிவன், விஷ்ணு, இந்திரன் தேவர்கள், மகரிஷிகளையும் அழைத்திருந்தார் என்றும் அவர் துணைவி சரஸ்வதி தேவி குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேராததால் காமதேனுவின் வயிற்றிலிருந்து **'காயத்ரி'** என்று பெயரிட்டு அவளை மணந்து அந்த யாகத்தை பிரம்மா நடத்தியதாக இத்தல புராணம் கூறுகின்றது.

காலம் கடந்து அங்கு வந்த சரஸ்வதிக்கு தன்னை விட்டு இன்னொரு பெண்ணுடன் அமர்ந்து, யாகம் செய்த கணவர் மீது கோபம் கொண்டே அத்தகைய ஒரு சாபத்தை வழங்கியதாக தல புராணம் குறிப்பிடுகின்றது.

பிரமா தன் கையிலிருந்த தாமரை மலரை பூமியில் போட்ட இடமே புஷ்கரணி என்று சொல்லப்படும் புனிதம் நிறைந்த குளம். அந்தக்குளத்தருகிலேயே பிரமா அமர்ந்து விடுகிறார் என்றும், ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் சுக்கிலபட்ஷ பௌர்ண மிக்கு ஐந்து நாட்கள் முன்னதாக இந்த புஷ்கரணியில் நீராடுபவர்களை இறப்புக்குப் பின்னும் சொர்க்கம் சென்றடைய ஆசிர்வதிக்கப்படுகிறார்கள் என்றும் நம்பப்படுகின்றது.

இத்தலத்திற்கு வந்து இந்தப் புஷ்கரணியில் நீராடி 108 இல்லது 1008 முறை காயத்ரி மந்திரத்தை ஜெபம் செய்து பிரம்மனை வழிபட்டால் புண்ணியம் கிடைக்கும் என்பது ஐதிகம்.

குளத்திற்கு மேல் உள்ள ரத்னகிரியில் சரஸ்வதிக்கு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

புஷ்கரணியைச் சுற்றி பத்ரி நாராயணர், வராஹர், சிவன் கோயில்களும் உள்ளன. இங்கு அகத்திய முனிவர், பாண்டவர்கள், மார்க்கண்டேயர் போன்றோர் தங்கி தவம் செய்து பலனடைந் துள்ளனர்.

இக்கோயிலினதும் குளத்தினதும் மகிமையை அறிந்து பிற்காலத்தில் மன்னர்களான பிருத்விராஜ், ஷாஜஹான், ஔரங்கசீப் போன்றவர்களும், ஆங்கில நாட்டவர்களும் இங்கு சென்று இறை வழிபாடு செய்ததாக வரலாறு மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

(ப. மு.)

## புஷ்பம்

இந்துக்களின் இறை வழிபாடு இயற்கையுடன் இரண்டரக் கலந்தது. ஆலய வழிபாட்டில் முக்கிய இடம் பெறுவது பூசை. பூசைக்கு முதன்மையானது புஷ்பம். புஷ்பங்கள் பற்றியும் புஷ்ப விதிகள் பற்றியும் சிவாலயங்களிலும் பத்ததிகளிலும் சிறப்பாக விளங்கப்பட்டுள்ளது. திருமுறைகளிலும் இதன் அவசியம் கூறப்பட்டுள்ளன.

*"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு"*
*"கைகள் கூப்பித்தொழீர் கடிமாமலர் தூவி நின்று"*
*"சலம்பூ வொடு தூபம் மறந்தறியேன்"............*
*அருபொடு மலர்கள் கொண்டு".....................*

போன்ற வரிகள் இதன் அவசியத்தை உணர்த்துகின்றன. இப் புஷ்பங்கள் பூ, மலர் எனவும் அழைக்கப்படுகிறது. ஆலய வழிபாட்டில் மாத்திரமன்றி மனித வாழ்க்கையில் எல்லா நிகழ்வுகளிலும் மத வேறுபாடின்றி பூக்கள் முதலிடம் பெறுகின்றன.

பூக்கள் கோட்டுப்பூ , கொடிப்பூ , நிலப்பூ , நீர்ப்பூ என நான்கு வகைப்படும். கோட்டுப்பூக்களில் சிறப்புக்குரியன கொன்றை, செண்பகம், புன்னை, பாரிஜாதம், பன்னீர், பாதிரி, மகிழம்பூ , செங்கழுநீர் என்பனவாகும். கொடிப் பூக்களாவன, முல்லை, மல்லிகை, இருவாட்சி, பிச்சிப்பூ முதலியவையும் நிலப்பூக்கள் தும்பை புலிநாகக் கொன்றை, மாதுளை, அடுக்கு அலரி, வெள்ளை அரலி, மாந்தாரை, செவ்வந்தி, சூரியகாந்தி, நந்தியா வட்டை, வெட்சி, செவ்வரளி முதலியவை முக்கியமானவை. நீர்ப்பூக்களாக செந்தாமரை, வெண்டாமரை செங்குவளை, கருங்குவளை, நீலோற்பலம் முதலியனவாகும்.

பூக்களின் நிறங்களைக் கொண்டு அவற்றின் தன்மைகள் வகைப்படுத்தப்படுகின்றன. வெண்ணிற மலர்கள் சாத்வீக குணத்தை உடையவை. செந்நிற மலர்கள் ராஜச குணத்தையுடையவை. கரிய மலர்கள், தாமச குணத்தை உடையன. (இதில் நீலோற்பலம் மாத்திரம் சாத்வீக குணத்தை யுடையது.) இதில் சாத்வீக மலர்களால் பூசை செய்வதனால் மோட்ச பலனும், ராஜச மலர்களால் போகமும் தாமச மலர்கள் பொதுப் பலன்களைத் தரும்.

ஒவ்வொரு மலர்களும் சிறப்புடையன. இவற்றில் தேவர்களும், தேவதைகளும் உறைகின்றனர்.

| | | |
|---|---|---|
| சிவபெருமான் | - | தாமரை |
| உமாதேவி | - | நீலோற்பலம் |
| விஷ்ணு | - | கொக்கரகு |
| லட்சுமி | - | வில்வம் (பத்திரம்) |
| பிரமா | - | அலரிப்பூ |
| சரஸ்வதி | - | கோங்கு பூ |
| இந்திரன் | - | மந்தாரம் |
| குபேரன் | - | ஊமத்தம்பூ |
| சூரியன் | - | செங்கழுநீர்ப்பூ, எருக்கம்பூ |
| சந்திரன் | - | குமுதம் |
| அக்கினி | - | வன்னி (பத்திரம்) |
| நந்திதேவர் | - | நந்தியாவர்த்தம் |
| வாயு | - | புன்னை பூ |
| செவ்வேள் | - | செண்பகம் |
| வருணன் | - | மாவிலங்கு |
| நிருதி | - | வாகை |
| ஈசானன் | - | சாதிப்பூ |

இவ்வாறாக சாஸ்திரங்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி எவ்வகையான பூக்கள் எந்தெந்த தெய்வங்களுக்கு பூசை செய்வது என்பதை எடுத்துக் கொண்டால் இதில் ஒரு ஆகமத்தில் கூறப்பட்டது. இன்னோர் ஆகமத்தில் விலக்குமாறு சொல்லப்படுகிறது. எனவே ஓர் ஆலயத்தில் எவ் ஆகமத்தின் அடிப்படையில் பூசை நடைபெறுகிறதோ அவ் ஆகமத்தை அடிப்படையாக கொண்டே பூக்களும் தீர்மானிக்கப்படுகிறது.

விநாயகர் - சண்பகம். பாதிரி. சூரியகாந்தி (அறுகு. வன்னி பத்திரங்கள்)

சிவன் - கொன்றை. தும்பை. செம்பருத்தி சங்குபூ (வில்வம் பத்திரம்)

விஷ்ணு - வாகை. கருங்கால் கொன்றை அலரி. செம்பருத்தை. குருத்து (துளசி. மருக்கொழுந்து. பத்திரம்)

பிரம்மா - அலரி

முருகன் - வெட்சி. முல்லை. மல்லிகை. குறிஞ்சி. காந்தன். கூம்பு

உமாதேவி - நீலோத்பவம். தாமரை. சூரிய காந்தி. செம்பவள மல்லி. நந்தியாவர்த்தை

இலக்குமி - செந்தாமரை. நெய்தல்

சரஸ்வதி - வெண்தாமரை

வரலட்சுமி - ஐந்துமடல் கொண்ட தாழம்பூ

துர்க்கை - அரலி. கொன்றை செவ்வெருக்கு

அக்கி - வன்னி பத்திரம்

சூரியன் - செந்தாமரை

சந்திரன் - வெள்ளரலி

செவ்வாய் - செண்பகம்

புதன் - வெண்காந்தள்

வியாழன் - முல்லை

வெள்ளி - வெண்தாமரை

சனி - கருங்குவளை

ராகு - மந்தாரை

கேது - செவ்வல்லி

பொதுவாக எல்லாத் தெய்வங்களுக்கும் மல்லிகை. முல்லை கருங்குவளை முதலிய பூக்களாலும் உக்கிரமான தெய்வங்களுக்கு செந்நிறப் பூக்களைக் கொண்டும் பூசை செய்யலாம்.

ஸ்ரீமத் அப்பயதீஷிதர் அவர்களால் இயற்றப்பெற்ற சிவார்சனா சந்திரிகா எனும் நூல் 108 புஸ்பங்களை அதன் தன்மை. எவ்வெவ் காலங்களில் எவை சிறந்தவை எனப் பல வகையான விளக்கங்கள் காணப்படுகின்றன. அதில் நித்திய பூசையின் புஸ்ப விசேசம் பற்றி பின்வருமாறு கூறுகிறது.

காலை - நந்தியாவட்டை. சிரியாவர்த்தம் வெள்ளெருக்கு

காலை சந்தி - வெண்தாமரை. செந்தாமரை. மகிழம்பூ. பாதிரி. தாமரை. மூங்கில் பூ அசோகம். புரசு. வெண்கொன்றை

மத்தியானம் - தும்பை. அரளி. கொன்றை. ஊமத்தை. பாதிரி. அல்லி. செண்பகம்

சாயங்காலம் - செண்பகம். மல்லிகை. தாமரை மொட்டு. வள்ளி பூ. வெண்காக் கொன்றை

அர்த்தயாமம் - சிறுசெண்பகம். அல்லி. ஊமத்தை. கடம்பம். தாழம்பூ. வெற்றிவேர். வில்வம். நிலத்தாமரை

"நித்ய பூஜா லஷணஸங்க்தஹம்" வாரங்களின் அடிப்படையில் பூக்களின் விசேசம் பற்றி கூறுகிறது.

ஞாயிறு - வில்வம்

திங்கள் - துளசி

செவ்வாய் - விளா

புதன் - மாதுளங்கம்

வியாழன் - மந்தாரை

வெள்ளி - நாவில் பத்திரம்

சனி - விஷ்ணுசங்ராந்தி

இதேபோல் ஒவ்வொரு ருதுக்கள். மாதங்களுக்குரிய புஷ்ப விசேடனம் பற்றி "சிவார்சனா சந்திரிகா" கூறுகிறது.

சித்திரை - வில்வம்

வைகாசி - நாயுருவி

ஆனி - எருக்கம்பூ

ஆடி - தும்பை

ஆவணி - அல்லி

புரட்டாதி - தாமரை

ஐப்பசி - கொன்றை

கார்த்திகை - ப்ருஹதீ

மார்கழி - அட்டஸ்சத்தய

தை - வள்ளி

மாசி - செண்பகம்

பங்குனி - பாதிரி எனவும்

வசந்த காலம் - கடம்பம். செண்பகம். செங்கழுநீர் (சித்திரை. வைகாசி) புன்னை. தர்ப்பைப்பூ

இளவேனிற் காலம் - பாதிரி. மல்லிகை (ஆனி. ஆடி)

வேனிற் காலம் - தாமரை மல்லிகை (ஆவணி. புரட்டாதி)

கார் காலம் - ஊமத்தை. செங்கழுநீர். அல்லி (ஐப்பசி. கார்த்திகை)

முன்பனிக் காலம் - அரளி. அல்லி (மார்கழி. தை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பனிக் காலம் - கொங்கு (மாசி, பங்குனி)

இவ்வாறு பூக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தெய்வத்துக்கும் பூசை செய்ய உகந்த பூக்கள் உள்ளது போன்று பூசை செய்யக்கூடாத பூக்களும் உள்ளன அவையாவன:-

| | | |
|---|---|---|
| விநாயகர் | - | துளசி |
| சிவன் | - | தாழம்பூ |
| விஷ்ணு | - | அட்சதை, எருக்கம்பூ, ஊமத்தம்பூ |
| வைரவர் | - | நந்தியாவர்தம், மல்லிகை |
| சூரியன் | - | வில்வம் |
| உமாதேவி | - | நெல்லி |
| துர்க்கை | - | அறுகு |
| இலட்சுமி | - | தும்பை |
| சரஸ்வதி | - | பவளம் |

என்பவை விலக்க வேண்டிய பூக்களாகும். இவற்றை விட எல்லாத் தெய்வங்களுக்கும் பூசைசெய்ய முடியாத நிலையிலுள்ள பூக்கள், வாசனை இல்லாதவை தரையில் விழுந்தவை, வாடிய பூக்கள், மூக்கினால் நுகரப்பட்ட பூக்கள், செயற்கைப் பூக்கள், காய்ந்த பூக்கள் முதல் நாள் பறித்து வைத்தவை, கைகளிலும், துணியிலும் சுற்றி கொண்டு வரும் பூக்கள் முதல் நாள் மொட்டு பறித்து வைத்து மலர்ந்த பூக்கள் என்பவையும் பூசைக்கு உகந்தவையல்ல.

சில பூக்கள் விசேடமானவை இவை பலநாட்கள் வைத்து பூஜிக்கத்தக்கவை. இதனால் பாவம் ஏற்படாது. அவையாவன:

| | | |
|---|---|---|
| சண்பகம் | - | ஒரு நாள் |
| அரளி | - | மூன்று நாட்கள் |
| தாழம்பூ | - | ஐந்து நாட்கள் |

தாமரை - ஏழு நாட்களும் வைத்து பூசை செய்யலாம். பூக்களை கிள்ளிப் போட்டு பூசை செய்யக் கூடாது. முழுமையாக இட்டுப் பூசை செய்ய வேண்டும் என்பது விதி.

இப்புஷ்பங்களில் எருக்கம்பூ, தாமரை, புன்னை, நந்தியாவட்டை, பாதிரி, அரளி, சண்பகம், நீலோற்பலம் என்பவை "அஷ்ட புஸ்பங்கள்" என்று சிறப்பிக்கப்படுகின்றன. அட்டா மலர்கள் எனும் செயல் தேவாரத்தில் பல இடங்களில் இடம்பெறுகின்றன. புஷ்பங்களை தனித்தனியே தூவி வழிபடுவதுடன் மாலைகளாகவும் சாத்தி வழிபடலாம். இவை இண்டை, பிணையில், மாலை, தார் என பூக்களை தொடுத்து இறைவனுக்கு சார்த்தப்படுகிறது. மனத்தை ஒருமுகப்படுத்தி சரியை நெறி நின்று தொண்டு வழிபாடு செய்வது இலகுவான வழிபாடாக அமைகிறது. நந்தவனம் அமைத்தல் மலர்பறித்தல், தொடுத்தல் என்பன சரியை தொண்டுகளில் சிலவாகும். எனவே புஷ்பங்களின் பெருமைகளையும் பயன்பாட்டினையும் ஆகமங்கள், வேதங்கள், திருமுறைகள் என பல சாத்திரங்களும் சிறப்பிக்கின்றன. இறை வழிபாட்டிற்கு மாத்திரமன்றி மருத்துவ குணங்களை கொண்டவையாக இப்புஷ்பங்கள் விளங்குகின்றன. (ஹே. கு.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூ

## பூசலார்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். தொண்டை நாட்டிலுள்ள திருநின்றவூரில் அந்தண குலத்தில் தோன்றியவர். வேத சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்த இவர் எம் பெருமானுக்குத் தொண்டு செய்வதே பெரும்பணி எனக் கருதியவர்.

அவ்வூரில் இறைவனுக்குத் திருக்கோயில் இல்லாத படியால் அடியார்கள் நாள்தோறும் பக்கத்து ஊர்களுக்குச் சென்று வழிபட்டு வந்தார்கள். அடியார்கள் படும் சிரமத்தைக் கண்ட பூசலார் அவ்வூரில் ஈசனுக்கு ஆலயம் ஒன்று எழுப்ப எண்ணம் கொண்டார். அதற்குரிய பொருள் தேட முயன்றும் அஃது கைகூடாத நிலையில் அப் பணியை அகக் கண்களால் கண்டு மகிழ எண்ணினார்.

பூசலார் கோயில் கட்ட விரும்பிப் பொருள் தேட முற்பட்ட வேளையில் கொடிய பஞ்சம் நாட்டில் நிலவியமையால் அவரது முயற்சி கைகூடவில்லை. பல்லவ மன்னன் இராசசிம்மனின் அவைப் புலவரான தண்டி தான் வரைந்துள்ள அவந்தி சுந்தரி கதையில் அக்காலத்தில் நிலவிய பஞ்சம் பற்றி விவரித்துள்ளார். தமிழ் நாடு வற்கடத்தால் வாடியது. குடும்பப் பெண்கள் கொடுமையாக நடத்தப்பட்டார்கள். வேள்விகள் குன்றின. களஞ்சியங்கள் காலியாயின. வீடுகட்குரியவர் வெளியே விரட்டப் பட்டனர். நாநயம் கெட்டது. தோட்டங்கள், யாகமேடைகள் அழிக்கப்பட்டன. பணக்காரர் கொல்லப்பட்டனர். சாலைகள் பழுதுபட்டன. உற்றார் உறவினர் இன்றியும் நண்பரால் துறக்கப்பட்டும் தண்டி நாடு முழுவதும் அலைய நேரிட்டது.

இக்கொடிய பஞ்சம் பல்லவ, சாளுக்கிய போர்களின் விளைவால் ஏற்பட்டிருக்கலாம். இப்பஞ்ச காலம் சுமார் மூன்றாண்டுகள் இருந்ததென்றும் கி.பி. 689 இல் காஞ்சியை அடைந்த வஜ்ர போதி என்ற பௌத்த துறவி பிரார்த்தனை மூலம் மழை பெய்யச் செய்தார் என்றும் சீன நூல் ஒன்று கூறுகிறது.

கச்சியில் முதன்முதல் கற்றளி கட்டிய மன்னன் இராஜ சிம்மன். அவனே பூசலார் காலத்தவனாதல் வேண்டும் என்பது அறிஞர் கருத்து. புறத்தே கோயில் எழுப்பும் முயற்சி நிறைவேறாததால் தமது அகத்திற் பெருஞ் சிறப்பக் கோயிலொன்று எழுப்பி சிவப்பிரதிஷ்டையும் செய்து முடித்தார். அது அவர் புராணத்தில், "அன்றினார் புரமெரித்தார்க் காலயமெடுக்க வெண்ணி ஒன்றுமங்குதவாதாக மனத்தினாலெடுக்கலுற்ற நின்றவூர்ப் பூசலார்" எனவும், "அன்பரு மமைந்த சிந்தையாலயத்தரனார் தம்மை நன்பெரும் பொழுது சாரத்தாபித்து நலத்தினோடும் பின்பு பூசனைகளெல்லாம் பெருமையிற் பலநாட் பேணிப் பொன்புனை மன்றுளாடும் பொற்கழனீழல் புக்கார்" எனவும் வருவனவற்றால் அறியக் கூடியதாகவுள்ளது.

பூசலார் நாயனார் பூர்வ புண்ணியப் பேறாகத் தமது இளமையில் இருந்தே திருத்தொண்டிற்கென அர்ப்பணிக்கப்பட்ட உள்ளத்தவராய் இருந்தமையால் கோயிலெழுப்புவதற்கு வேறு வழி காணா நிலையில் அவர் மனக் கோயில் கட்டத் தொடங்கி நன் முகூர்த்தம் வைத்து அத்திவாரமிட்டதிலிருந்து பிரதிஷ்டை ஆகும் வரை மனஞ் சற்றும் அசையாது கருமமே கண்ணாயிருந்துள்ளார் இதனைச் சேக்கிழார் "சாதனத்தோடு தச்சர் தம்மையும் மனத்தால் நாதனுக் காலயஞ்செய் நலம்பெறு நன்னாட் கொண்டே ஆதரித் தாகமத்தா லடிநிலை பாரித்தன்பாற் காதலிற் கங்குற் போதுங் கண்படா தெடுக்க லுற்றார்" எனக் கூறியுள்ளார்.

பூசலார் மனக் கோயில் எழுப்பிய வேளையில் காஞ்சியில் பல்லவ மன்னன் கைலாசநாதருக்கு ஆலயம் எழுப்பி இருந்தான். அவனும் பூசலார் கும்பாபிஷேகத்திற்கு நாட் குறித்த திகதியிலேயே தானும் குறித்திருந்தான். விடிந்தால் கும்பாபிஷேகம் இந்நிலையில் இறைவன் மன்னன் கனவில் தோன்றி நின்றவூரில் என் பக்தன் பூசலார் எழுப்பிய ஆலயத்துட் புக உள்ளேன் அதனால் உன் ஆலயத்துக்கான கும்பாபிஷேகத்தை இன்னொரு நாள் வைத்துக் கொள் என்று கூற மன்னன் அதிசயத்து பூசலாரின் கோயில் எங்கு உளது என அறியப் புறப்பட்டு அவர் மனதால் கோயில் எழுப்பிய இயல்பு அறிந்து, வியந்து பூசலாரின் பக்தி மகிமைக்கு அடிபணிந்தான்.

இந் நிகழ்வுக்கு ஆதாரமாக திருநின்றவூரில் விளங்கும் புராதனமான மனக்கோயில் கொண்டார் கோயிலும் (ஹிருதயாலேஸ்வரர் கோயில்) அதிற் சுவாமி சந்நிதியிற் பூசலார் திருப்படிமம் தாபிக்கப்பட்டு பூசிக்கப்பட்டு வருதலும் கருத்திற் கொள்ளத்தக்கது. அக்கோயில் தூண்கள் சம்பந்தப்பட்ட பல்லவ மன்னன் காலத் திருப்பணி எனப்படத்தக்க வகையிற் சிங்க உருவங்கள் பொருந்தக் காணப்படுவதும், கோயில்மண்டபத்தில் அதே மன்னனின் உருவச் சிலை நிறுவப்பட்டு இருப்பதுவும் மனங்கொள்ளத்தக்கது. மேலும் காஞ்சியில் கைலாசமலை மாதிரியான உருவ அமைப்பில் சிறப்பான சிற்ப அலங்காரங்களுடன் விளங்கும் கைலாசநாதர் கோயில் கல்வெட்டுகளில் அவன் அசரீரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டான். அவன் இக் கலியுகத்தில் அசரீரி கேட்டது வியப்பே இவன் கலியுகத்தின் வானொலி கேட்டான். அவன் சிறந்த சிவபக்தன் ஆகமப் பிரியன் என்னும் கீர்த்திகள் இருப்பதுவும் நோக்கற்பாலது. இச் செய்திகள் பூசலாரின் திருத் தொண்டுண் மைக்கு சான்றாகவுள்ளது. (நி. நி.)

# பூதங்கள்

நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்பவை ஐம்பூதங்கள் ஆகும். உலகின் ஜடத் தோற்றத்திற்கு மூலமாக அமைந்து ள்ளவை பஞ்ச பூதங்கள். இவைகள் ஒவ்வொன்றும் தனித்த குணங்களை உடையவை. ஆகாயம் (சப்தம் - ஒலி), வளி (ஸ்பர்சம்-தொடும் உணர்ச்சி) தீ (ரூபம்-நிறம்), நீர் (ரஸம்-சுவை) நிலம் (கந்தம்-மணம்) இவை பூதங்களின் ஸ்தூல நிலையில் தனித்து உணரப்பெறுபவை.

இந்த ஐம்பூதங்களையும், அதிசூக்ஷ்ம நிலையில் ஐந்து மலரம்புகளாக வலது முன்கரத்தில், அம்பிகை தரித்திருக்கின்றாள். இவைகளில் தூலவடிவம் ஐந்து மலர்கள். அவை தாமரை, செங்கழுநீர், செவ்வல்லி, செவ்வாம்பல், மாம்பூ என்பன. இவைகள் இலக்கை நோக்கிப் பாயும் பொழுது ஜீவன் பக்தனாக இருந்தால் தேவியின் அம்புகளுக்கு நல்ல இலக்கு ஆகின்றான். அவனே குற்றம் செய்தவனானால் அம்பின் பணிகளும் மாறுபட்டு அமையும். அவை ஹர்ஷணம் (மகிழ்விப்பது) ரோசனம் (சுவையூட்டுவதும்) மோஹனம் (மயக்குவது) சோஷணம் (வற்றவைப்பது) மாரணம் (மாய்ப்பது) ஞானாவர்ணம் என்ற நூலில் இம்முறை சிறிது வேறுபடும். அவையாவன: க்ஷோபணம் (குழப்புவது) த்தாவணம் (இளக்குவது) ஆகர்ஷணம் (தன்பால் ஈர்ப்பது) வஸ்யம் (தன்வசப்படுத்துவது) உத்மாதனம் (மனம் பேதலிக்கச் செய்வது)

மணிமேகலையில் அங்காடி பூதம் எனவும் சதுக்கபூதம் எனவும் கூறப்படுகிறது........ பூதக்கூட்டத்தில், பேய், பிசாசு, வேதாளம் பிரம்ம ராக்ஷஸம் இவைகளும் அடங்கும். பதினெண்க ணங்களுள் பூதகணமும் அடங்கும். ஹரிஹர புத்திரனாம் ஐயப்பனுக்கு பூதநாதன் என்றும் ஒரு பெயருண்டு. இதற்கு பூதகணங்களின் தலைவன் என்பது பொருள். விநாயகரும் பூதகணங்களின் தலைவன் பூத கணபதிஸேவிதம் என்று கூறப்படுகின்றது.

குண்டோதரர், கும்போதரர், மகோதரர், கஜகர்ணர், விசித்திர கர்ணர் வியாக்ரமுகர், சிங்கமுகர் பட்சபாட்சர் முதலிய எண்மரும் பூதகண நாதர்கள் ஆவர்.

சிலப்பதிகாரத்தில் நாளங்காடி பூதம் பற்றிக் குறிப்பிடப் பெறுகின்றது.

ஒருகாலத்தில் விண்ணுலகில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த அமிழ்தத்தை கருடன் கவர்ந்து சென்றான். அதனை மீட்கக் கருதிய தேவேந்திரன் யான் சென்று மீளும் வரையில் இந்திர உலகை பாதுகாப்பவர் யார்? என்று வினவியபொழுது சோழமன்னனாகிய முசுகுந்தன் யான் பாதுகாப்பேன் என உறுதி கூறினான். அது கேட்டு இந்திரன் மகிழ்ந்து ஒரு பூதத்தை சோழ மன்னனுக்குத் துணையாக நிறுத்திச் சென்றான்.

அவ் சமயம் அவுணர்கள் ஒருங்கு திரண்டு, இந்திரத் தலைநகரைக் கைப்பற்றப் போரிட, அவர்கள் முசுகுந்தனின் போர்வலிக்கு ஆற்றாது தோற்றோடினர். தோற்றோடியவர்கள் சிலகாலம் பொறுத்துப் பின்பு ஒருங்குகூடி, சூழ்ச்சி செய்து, மாயத்தூண் பேரிருட்கணை யொன்றை விடுக்க எங்கணும் இருள்சூழ்ந்தது. முசுகுந்தனும் செய்வகையறியாது திகைத்து நிற்க, இந்திரன் வைத்த பூதம் அவ்விருளைப் போக்க அவுணர்களைச் சோழமன்னன் வென்றான்.

அமுதத்தை மீட்டு மீண்டு வந்த வாசவன், நடந்ததையறிந்து, அப்பூதத்தை முசுகுந்தனுக்கே மெய்க்காவலாகு மாறு நிலவுலகிற்கு அனுப்பி வைத்தான். அப்பூதமும் புகார் நகரில் நாளங்காடியில் இருந்து பலியேற்று வருவதாயிற்று. இச் செய்தியினை அடியார்க்கு நல்லார் தனது உரையில் காட்டிய மேற்கோள் செய்யுளொன்றால் அறியலாம்.

''முன்னாளிந்திரன்...........காவலழித்துச் சேவல்
கொண்டெழுந்த
வேட்கை யமுத மீட்க வெழுவோன்,
இந்நகர் காப்போர் யாரென நினைதலும்
நேரிய னெழுந்து நீவரு காறும்
தார்கெழு மார்ப தாங்கலென் கடனென
உவந்தனன் கேட்டுப் புகழ்ந்தவிப் பூதம்
நின்வழி யாகனே நிறீஇப் பெயர்வுழிக்
கடுவிசை யவுணர் கணங்கொண் டீண்டிப்
பொருதுபோர் தொலைந்தனராகிப் பெரிதழிந்
தாழ்ந்த நெஞ்சிற் சூழ்ந்தனர் நினைத்து
வஞ்ச மற்றிது வஞ்சத்தல்லது
வேற லரிதெனத் தேறினர் தேறி,
வளைத்துத் தொடுத்த வல்வா யம்பின்
அயின்முகங் காண்ற லாரிருள்
வெயிலோன் இருகணும் புதையப் பாய்தலின்
ஒருகணும் நெஞ்சங் காணா நிற்ப நின்ற
வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது முசுகுந்தன் பரிதி மரபினனாய சோழர்குல முன்னோன் ஆதலின் அவன் பதியாகிய புகாரின் கண் பூதம்வந்து தங்குவதாயிற்று. (வ. வை.)

## பூதத்தாழ்வார்

முதலாழ்வார் மூவருள் இரண்டாமவரான இவர் திருக்கடல்மல்லையிலே ஐப்பசி மாத அவிட்ட நட்சத்திரத்திலே அவதரித்தவர். துறவு பூண்டு, உண்டி, உடையென உகந்தோடும் இம்மண்டலத்தாரொடுங் கலவாது வாழ்ந்த இவர், கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி முதலாக ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை வாழ்ந்தவர் என்பர்.

ஓரிடத்து இராது தொடர்ந்து பயணித்து வந்த இவர், மழை நாளொன்றின் இரவில், சமகாலத்தவரான பொய்கையாழ்வார், பேயாழ்வார் ஆகியோரோடு திருக்கோவலூரில் ஒரு வீட்டின் இடைகழியில் ஒதுங்கினார் என்றும், திருமால் தாமும் இவர்களுக்கிடையே நான்காமவராக இருந்து இருளிலே நெருக்கத்தை உண்டு பண்ணினார் என்றும், வேறு வெளிச்சமின்மையால் பூதத்தாழ்வார் ஆதியோர், அன்பே தகளியா.......... எனத் தொடங்கும் பாசுரம் முதலியவற்றால் ஏற்றிய ஞானவிளக்கின் துணையால், இறை சொரூபத்தை அனுபவித்து ஆனந்தித்தனர் என்றும், இந்த அனுபவத்தின் வெளிப்பாடாகப் பூதத்தாழ்வார் இரண்டாம் திருவந்தாதியை அருளிச் செய்தனர் என்றும் ஆழ்வார்களின் வாழ்க்கைச் சம்பவங்கள் குறித்து வழங்குங் கதைகள் தெரிவிக்கின்றன. இச்சம்பவத்தை வில்லிபாரதச் சிறப்புப் பாயிரத்தில் வரந்தருவாரும், தேசிகப் பிரபந்தத்தில் வேதாந்த தேசிகரும் பாடியுள்ளனர்.

100 வெண்பாக்களால் அமைந்த இரண்டாந் திருவந்தாதியில் 19 ஆவது பாடல், இன்னிசை வெண்பா யாப்பினது. ஏனையவை நேரிசை வெண்பாக்களாம். நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தின் மூவாயிரத்தில் முதலாந் திருவந்தாதியை அடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டாந் திருவந்தாதியில், பூதத்தாழ்வார், திருவரங்கம், திருமலை, திருக்கோட்டியூர் முதலாக 13 திருத்தலங்களை மங்களாசாசனம் செய்துள்ளார்.

உலகளந்தமை, ஆதிமூலமே என்ற ஆனைக்கு அருளியமை, கோளரியாய் இரணியன் மார்வகம் பிளந்தமை என்றவாறாகப் புராண இதிகாசச் சம்பவங்கள் பலவற்றையும் தமது திருவந்தாதியிலே சிறப்பித்துள்ள ஆழ்வார், அருளும் கேடும் இறையே என்றும் ஐம்பூதங்களும் அவனே என்றும் தெரிவிக்கிறார். வேதசாரம், நாதனது நாமமே என்கிறார்.

மகிழ்ந்த சிந்தை, துணிந்த சிந்தை என்றெல்லாம் தம்மால் தேடி ஓடும் மனத்தின் இயல்பு கூறுகின்றார். திருமாலின் திருவடிப் பெருமை கூறி, பிறரையும் சேவிக்குமாறு ஆற்றுப்படுத்துகிறார்.

பூதத்தாழ்வார் குறித்து, திருக்குருகைப்பிரான் முதலிய பலர் பாடியுள்ள தனியன்கள் உள.

இவர், துவாபரயுகம் எட்டு லட்சத்து ஆறாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றொராவது ஆண்டான சித்தார்த்தி வருடம், கதாம்சமாக, நந்தவனம் ஒன்றில் குருக்கத்தி மலரில் அவதரித்தவர் என்கின்றன குருபரம்பரைக் கதைகள்.

(ஸ்ரீ. பி.)

## பூதேவி

திருமாலின் தேவியர் இருவருள் இளையவராகக் கருதப்படுபவர் பூதேவி. திருமாலின் அவதாரங்களில் ஒன்றானவராக அவதாரத்தின் போது பூமி தேவியை அவர் திருமணம் செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. சிற்பங்களிலே திருமாலின் இடப்புறத்தில் பூதேவியின் உருவம் நிற்கும் நிலையிற் செதுக்கப்பட்டிருக்கும்.

பூதேவியின் தோற்றம் பற்றி ஆகமங்களிலும், புராணங்களிலும் வெவ்வேறு குறிப்புக்கள் காணப்படுகின்றன. இளம் பச்சை நிறத்தை ஒத்தவளாக தலையில் கரண்ட மகுடமும் பல வகையான அணிகலன்களும் மஞ்சள் நிறத்தில் ஆடையும் அணிந்த தோற்றத்தினள். இரண்டு கரங்களிலும் தாமரை அல்லது நீலோற்பவ மலர்களைத் தாங்கிய நிலையில் இருப்பாள். பீடத்தில் நின்றவாறோ அமர்ந்தவாறோ சிற்பங்களில் வடிவமைக்கப் பட்டுள்ளாள்.

பூதேவியின் தோற்றம் பற்றி காரணாகமம் வேறொரு தகவலைத் தருகிறது. கருகிய மேனியும், சிவந்த ஆடையும் அணிந்து பொன்னாலான புரிநூல் கொண்டிருப்பாள் என்று அந்நூல் கூறுகிறது.

விஷ்ணு தருமோத்திரத்தில் இவள் நிறம் வெண்மை என்றும் நான்கு கரங்கள் கொண்டவள் என்றும் குறிப்பிடுகின்றது.

இவள் தன் நான்கு கைகளிலும் இரத்தின பாத்திரம் (மணிகள் அடங்கிய பாத்திரம்) சன்னிய பாத்திரம் (காய்கனிகள் அடங்கிய பாத்திரம்) ஔசத பாத்திரம் (மூலிகைகள் அடங்கியது) தாமரை மலர் ஆகியவற்றை பெற்றிருப்பவள். நான்கு திசை யானைகளில் அமர்ந்தவளாய்க் காட்சி தருவாள். இத்தகைய திருவுரு பெரும்பாலும் தனித்த தேவியாக அமைக்கப்படும் பொழுது இத் தெய்வம் தானே தோன்றியவளாய் செடி கொடிகள், மணிகள் போன்றவைப் படைப்பவளாய்க் காணப்படுவாள்.

பொதுவாக கற்சிற்பங்களிலும், செப்புத் திருமேனிகளிலும் வடிக்கப்படும் பூதேவி திருமாலின் இடப்புறம் நிற்கும் படியாக அமைக்கப்படுவாள். மேலும் இடக்கரம் வளைந்து தொங்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலும் வலக்கரம் தாமரை மலரை ஏந்திய நிலையிலும் காணப்படும். (நி. நி.)

## பூபால பிள்ளை
### (கி.பி. 1856-1921)

இவர் ஈழநாட்டில் உதித்த தமிழ்ப்புலவர். தமிழ் மீதும், சமயத்தின் மீதும் பேரபிமானம் கொண்டவர். இவர் மட்டகளப்பிலுள்ள புளியந்தீவிற் செழுங்குடி முதல்வரான சதாசிவம் பிள்ளைக்கும் வள்ளியம்மைக்கும் புதல்வராக 1856 இல் பிறந்தார். இளம் பிராயக் கல்வியை மட்டக்களப்பு கிறிஸ்தவக் கல்லூரியிற் பயின்றார். தமிழ், கணிதம், ஆங்கிலம் போன்ற துறைகளிலும் புலமையுடன் திகழ்ந்தார். வல்வையூர் வைத்தியலிங்கப்பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், திருகோணமலை த. கனகசுந்தரம்பிள்ளை முதலியோரிடமும் கல்வி பயின்று தமிழ், சமய அறிவுகளை வளர்த்துக் கொண்டார். குடும்ப வறுமையின் காரணமாக அரச இலிகிதர் சேவை புரியும் காலத்தில் பூவை கலியாண சுந்தரமுதலியாரின் நட்புக் கிடைத்தது. அதன் பின் அரச பணியிலிருந்து கொண்டு கிடைத்த நேரங்களிலே தமிழ்த் தொண்டும் புரிந்து வந்தார்.

அரச கடமையுணர்வோடும், தமிழ்த் தொண்டாற்றியும், வரும் காலத்தில், இவர் தமிழ் இலக்கண, இலக்கியத் துறைகளிற் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதினார். இவருடைய இக் கட்டுரைகள் தமிழகத்திலும் வரவேற்புப் பெற்று, புகழாரமும் பெற்றன. குறிப்பாக இவர் இயற்றிய தோத்திரப்பாடல்கள், தனிப்பாடல்கள் பல வகைப்பட்டவை. மதுரைத் தமிழ்ச் சங்கம் இவரின் சமய, தமிழ்ப் புலமையை அறிந்து பண்டித பரீட்சைக் குழுவிலும் இவரை ஓர் அங்கத்தவராக இணைத்துப் பெருமைப்படுத்தியது. இதன் மூலம் தமிழகத்தால் போற்றி மதிக்கப்பட்ட மட்டக்களப்பு புலவர்களில் முதற் புலவர் இவரேயென்பது சிறப்பிற்கப்பாலது. அதே போல் யாழ்ப்பாணத்துப் பேரறிஞர்களும் போற்றிய மட்டகளப்பின் முதற் புலவர் இவரென்பதும் குறிப்பிடற்குரியது. இவ்வாறு இவரின் சிறப்பால் மட்டகளப்பின் புகழ் ஓங்கியது. அதன் பின்பே மட்டகளப்பார் இவருக்கு வித்துவான் என்ற பட்டத்தினைச் சூட்டிக் கௌரவித்தனர்.

தமிழிலக்கிய உலகிலே இவருக்குப் பெரிய புகழை ஈட்டிக் கொடுத்த நூல் தமிழ் வரலாறு என்னும் உரைநடை நூலாகும். மேலும் மாவிட்டபுர வெண்ணெய்க் கண்ணனார் என்றழைக்கப் படும் புலவர்மணி க. நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்கள் இயற்றிய உலகியல் விளக்கம் என்னும் நூலுக்கு வித்துவான் அவர்கள் உரையொன்றினையும் எழுதினார். இவரது உரைவளத்தை சுவாமி விபுலானந்தர் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டார். இதன் மூலம் மட்டகளப்பிலே தோன்றிய நல்ல உரையாசிரியர்களுள் பூபாலபிள்ளை அவர்களும் அடங்கியிருப்பது தெளிவாகின்றது.

வித்துவான் பூபாலபிள்ளை சமயம் சார்பான இலக்கியங்களையும் எழுதியுள்ளார். அவற்றுள் சீமந்தனி புராணம் மிகவும் சிறப்பு வாய்ந்த நூலாகும். ஆரிய வர்த்தகச் சருக்கம் முதல் பாவனைச் சருக்கம் ஈறாக பத்துச் சருக்கங்களையும், அவற்றிலே 789 செய்யுட்களையும் கொண்டுள்ளது. சிவனை நோக்கி அனுட்டிக்கப்படும் சோமவார விரதத்தின் சிறப்பினையும் அதன் நலன்களையும் இந்நூல் எடுத்துக் கூறுவதோடு "பொருவிறவ வியாசன் முன்முரைப்பக் கேட்டுப் புராணமுனி புகன்ற சில தகதைடதமிற் எனும் பாடலாற் சூதமுனிவர் கூறிய கதையை மூலமாகக் கொண்டே பூபால பிள்ளை சீமந்திப் புராணத்தை 1884 ஆம் ஆண்டு இயற்றினார் எனக் கூறப்படுகின்றது. புராணமான்மியங்கள் பற்றிக் கூறுகின்ற நூல்களுள்ளே கூடுதலான பேறுகளைக் கொண்ட புராணம் சீமந்திப்புராணம் என்பது ஈழத்து இலக்கியக்காரர்களின் பொதுவான கணிப்பாகும். இவ்வாறான சிறப்புக்கள் பொருந்திய நூலை வல்வை ச. வைத்தியலிங்கனாரால் பரிசோதிக்கப்பட்டு" சென்னை - இட்டா நாராயண சாமி நாயுடு என்பவர் 1894 ஆம் ஆண்டு அச்சிலேற்றி வெளியிட்டார்.

இந் நூல் தவிரத் தெய்வங்கள் பற்றியும் பல இலக்கியங்களையும் பூபால பிள்ளை எழுதியுள்ளார். 1882 ஆம் ஆண்டு மட்டகளப்பு பெரியதுறை என்னும் இடத்தில் அமைந்துள்ள முருகப் பெருமான்மீது அவரது ஆறுமுகங்களின் பொலிவினை பக்தியோடு திருமுகப் பதிகம் என்ற பெயரில் தோத்திர நூலை இயற்றியுள்ளார். 1905 ஆம் ஆண்டு மட்டக்களப்புப் புளியநகர் ஆனைப்பந்திச் சித்தி விக்னேஸ்வரர் பதிகம் என்ற நூலையும் எழுதினார். 1906 ஆம் ஆண்டு கண்டி நகர்ச் சைவமக்களின் விருப்பிற்கமைய சிவதோத்திரம் ஒன்றையும் பாடினார். 1913 ஆம் ஆண்டு கண்டி நகர்க் கதிரேசர் பதிகம், கண்டிநகர்ச் செல்வ விநாயகர் பதிகம் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார். 1919 ஆம் ஆண்டு நல்லிசை நாற்பது என்ற அரிய நூலையும் இயற்றியுள்ளார். 1920 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்து அரசடி விநாயகர் மீது விநாயகர் அகவல் ஒன்றையும் பாடியுள்ளார். இவற்றோடு மட்டு நகர்க் கொத்துக் குளத்து மகா மாரியம்மன் அந்தாதி, கணேசர் கலிவெண்பா, மட்டுநகர்ச் செல்வவிநாயகர் பதிகம் ஆகிய நூல்களையும் பாடியுள்ளார். இவ்வாறான தோத்திரப் பாடல்கள் அனைத்தையும் முதற்பாகமாக தோத்திரக்கோவையாக சென்னை கம்மர்ஷியல் பதிப்பகத்தில் 1923 ஆம் ஆண்டு திருமயிலாப்பூர் சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளையவர்கள் சிறு பிரபந்தத் தொகுப்பாகப் பதிப்பித்து வெளியிட்டார். இதன் இரண்டாம் பாகம் வெளிவந்ததாக அறிய முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளிலும் ஆர்வம் கொண்டவர் என்பதற்கு 1918 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட முப்பொருளாராய்ச்சிக் கட்டுரை எனும் உரை நூலைக் குறிப்பிடலாம். இந் நூலில் அக் காலத்துப் போலிப் பண்டிதர்களின் உரைகளை மறுத்து, சித்தாந்த நுட்பங்களைத் தெளிவாக நிறுவி எழுதியுள்ளார். இது கண்டன உரை நூலாகவும் அமைந்திருக்கின்றது. இந் நூலை அதே ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர் செந்தமிழ் என்ற இதழில் வெளியிட்டிருந்தனர். இத்தகைய கைங்கரியத்தின் மூலம் இலங்கையர் சைவசித்தாந்தத்திற்குப் புரிந்த பங்களிப்புக்களில் இவருடைய பணிகளும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றன.

இவர் ஒரு சமய சொற்பொழிவாளராகவும், தோத்திரப்பாடல்களைச் சாமர்த்தியமாகப் பாடுவதில் இசைப்புலமை கைதேர்ந்தவராகவும், கண்டன வீரராகவும், கவிப்புலவராகவும், ஆராய்ச்சியாளராகவும், இலக்கியக்காரராகவும் விளங்கித் தமிழுக்கும் சைவசமயத்திற்கும் தொண்டாற்றி ஈழத்து சமய வரலாற்றில் முக்கியத்துவம் பெற்று, 1921 ஆம் ஆண்டு 65 ஆம் வயதிலே பரமபதம் அடைந்தார். (சு. து.)

## பூம்பாவை

திருமயிலாப்பூரில் பெருவணிகர் குடியில் தோன்றியவர் சிவநேசர். இவர் கடல்வாணிபத்தில் பெரும்பொருளை ஈட்டி அளவற்ற செல்வத்திற்கு அதிபதியானார். சிவபெருமானின் திருவடிக்கு பேரன்பு பூண்டு ஒழுகும் நீர்மையாளர். பரசமய இருளைப் போக்க வேண்டும் என்பதில் தீவிர ஆர்வம் கொண்டவர்.

இவர், சீர்காழியிலே தோன்றிப், புறச் சமய இருள் நீக்கும் ஞானக்கதிரவனாம் ஞானசம்பந்தரது பெருமைகளைச் சிவனடியார்கள் வாயிலாகக் கேட்டுச் சிந்தை மகிழ்ந்தார். அவரது திருவடிக்குக் கழிபேரன்பு பூண்டார்.

எல்லாச் செல்வங்களையும் பெற்ற சிவநேசர் மக்கட்பேறு எனும் செல்வத்தில் வறியவரானார். அருந்தவம் செய்தும், சிவனடியார்களிடம் பேரன்பு பூண்டும் ஒழுகிய புண்ணியத்தின் பயனாக இவருக்குத் திருமகளை ஒத்த ஓர் பெண்குழந்தை பிறந்தது. அப்பெண் மகவின் பொற்பும், பண்பும் பூமகளை ஒத்து விளங்கியதால் பூம்பாவை எனப் பெயரிட்டார்.

குழந்தை வானத்துப் பிறை நிலவைப் போன்று நாள்தோறும் வளர்ந்து அழகுப் பெட்டகமாக விளங்கினாள். பருவமுற்றத் தனது பெண்ணிற்கு காழிப்பிள்ளையாரே தகுந்த மணாளன் என்று உறுதி பூண்டு பூம்பாவையுடன் எனது நிரம்பிய செல்வத்தையும் காழியர் கோவிற்கே உரித்தாக்குவேன் என்று உற்றாரிடமும், ஊரவரிடமும் கூறி மகிழ்ந்திருந்தார்.

இந்நிலையில் ஒருநாள் பூம்பாவையார் தோழிகளுடன் கன்னிமாடத்தையடுத்த பூஞ்சோலையில் மலர்கொய்து கொண்டிருந்தாள். சீர்காழிச் செல்வர்க்கே தனது சிறந்த மகளாரைத் திருணம் செய்து கொடுக்க வேண்டும் என்று எண்ணிய சிவநேசனின் எண்ணத்தை விதி வேறுவிதமாக எழுதி எண்ணியது போலும். மல்லிகைப் பொதும்பரிலே மறைந்திருந்த விடநாகம் ஒன்று மலர் பறிக்கும் பூம்பாவையின் பூவிரலில், காளி, காளாத்திரி, யமன், யமதூதி என்னும் தனது நான்கு நச்சுப் பற்களையும் அழுந்தப் பதித்தது. விடம் தலைக்கேற மெல்லிய மலர்மாலை அனலிடைப்பட்டது போல நிலத்தே விழுந்தாள் பூம்பாவை. செய்தி அறிந்த சிவநேசர் சிந்தை துடித்தார். விடத்தைத் தீர்த்திடும் மந்திரம் வல்லவர்களை விரைந்து வரவழைத்தார். அவர்களும் தாங்கள் கற்ற வித்தைகளை முழு மூச்சுடன் பிரயோகித்தனர். இருந்தும் விதியை யாரால் வெல்ல முடியும். விடம் ஏழுவேகமும் தலைக்கொண்டதால் பாவையின் உயிர் பிரிந்தது.

பெருந்துன்பமுற்ற சிவநேசர் ஒருவாறு தெளிந்து சீர்காழிப் பிள்ளையாருக்கு என்று உறுதி கொண்டு விட்ட படியால் துன்புறத் தேவையில்லை என்று மனந்துணிந்து, பூம்பாவையின் உடலைத் தகனம் செய்து, எலும்பையும் சாம்பலையும் ஒரு குடத்துள் இட்டுத் திருஞானசம்பந்தர் திருமயிலை வரும் வரையும் காத்துவைக்கத் திருஉளம் பற்றினார். எலும்புக் குடத்தைக் கன்னிமாடத்தில் பஞ்சணை மேல் வைத்து அதற்குத் தாதிமார்களை காவலுக்கு அமைத்தார். அக்குடத்திற்கு மெல்லிய துகிலும் பொன்னும் மணியும் பொற்பூண்களும் அணிவித்தார். நாடொறும் தவறாமல் திருமஞ்சனம், மாலை, சந்தனம், அன்னம், விளக்கு முதலானவற்றால் உபசாரம் செய்தார். சிவநேசரின் செயலைக் கண்டு மயிலை மக்கள் வியந்தனர்.

இந்நிலையில் திருஞானசம்பந்தர் அடியார் பெருமக்களோடு திருவொற்றியூருக்கு எழுந்தருளிய செய்தியை சிவநேசர் செவியுற்றார். சிவனடியார்களுக்கெல்லாம் ஆடைகளையும் ஆபரணங்களையும் வாரி வழங்கினார். திருமயிலையிலிருந்து திருவொற்றியூர்வரை நடைப்பந்தல் அமைத்தும், ஆடையால் விதானம் அமைத்தும், மகரத் தோரணங்கள், வாழை, கமுகு கட்டியும் மாலைகள் தூக்கியும் இந்திரலோகம் போல அலங்கரித்தார். சிவனடியார்கள் புடைசூழ; திருஞானசம்பந்தரை எதிர்கொண்டு வணங்கித் திருவொற்றியூர் விரைந்தார். அப்பொழுது கவுணிய குலவேந்தர் திருவொற்றியூரினின்று திருமயிலாப்பூர் வழிபட எழுந்தருளி வந்தார். அடியார்கள் திருக்கூட்டத்தினை நெடுந்தூரத்திலேயே கண்டு மகிழ்ந்த சிவநேசரும் அன்பர்களும் நிலமுறப் பணிந்து வணங்கினார்கள். தமது முத்துச் சிவிகையினின்றும் இறங்கிய பிள்ளையார் அடியார் குழாத்தோடு திருமயிலாப்பூரை அடைந்தார்.

ஆளுடைய பிள்ளையார் சிவநேசருக்கு நிகழ்ந்தவற்றை எல்லாம் திருவுள்ளத்துக்கொண்டு திருமயிலை கபாலீச்சரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானை வணங்கி, திருக்கோயிலின் புறத்தே எழுந்தருளி உலகத்தவர் அனைவரும் அறியும்படி சிவநேசரிடம் உமது மகளின் என்பு நிறைந்த குடத்தைத் திருமதிற்புறத்தே கொண்டு வருக எனப் பணித்தார். ஆணையினைச் சிரமேற்று, பூம்பாவையின் கன்னிமாடம் சென்று வெந்தசாம்பரோடு எலும்பு பெய்து வைத்த மட்குடத்தினை சிவிகையிலேற்றி, சேடிப்பெண்கள் சூழ எடுத்துச் சென்று மயிலைக் கபாலீச்சரப் பெருமானின் திருக்கோபுரத்தின் புறத்திலே அடிமுகமாக வைத்து ஞானக்கன்றின் திருவடி தொழுது நின்றார்.

பசு கரணமற்று சிவகரணமுற்று, சிவனடியார்கள் புடைசூழ, திருக்கோபுர வாயிலின் நேரே வந்து எலும்பு நிறைந்த சாம்பட்குடத்தினை அருளொடு நோக்கினார். சண்பையர் கோமான் பூம்பாவை பேர் செப்பி மண்ணினிற் பிறந்தார் பெறும் உண்மைப் பயன் உணர்த்தி உலகவர் முன் வருக'' எனப்பொருள்கொண்டு

*''மண்ணி னிற்பிறந்தார்பெறும் பயன் மதிசூடும்*
*அண்ண லாரடி யனர்தமை யமுது செய்வித்தல்*
*கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்*
*உண்மை யாமெனில் உலகர்முன் வருக''*

என்று உரைத்து ''மட்டிட்டபுன்னை'' எனத் தொடங்கும் திருப்பதிகத்தை அருளிச் செய்தார்.

அப்பதிகத்தினுள் போதியோ என்ற திருவாக்குக்கு அமிர்தம் பாய குடத்துள்ளே இருந்த எலும்புகள் பொருந்த உருவமாகியது. முதற் பாடல் தொடங்கியவுடனே பிராணவாயு உட்புகுந்து உருவம் பெறும் அங்கப் பகுதிகள் வடிவு கொண்டன. மேல் எட்டுத் திருப்பாடல்களில் பன்னிரண்டு வயதுக்கான வளர்ச்சி பெற்று பத்தாவது திருப்பாடலில்

*''உரிஞ்சாய வாழ்க்கை அமணுடையைப் போர்க்கும்*
*இருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டில்*
*கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரத்தான் தன்*
*பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்''*

மலர்க்கரம் வெளியே தோன்றக் குடமுடைந்து திருவினும் அழகுமிக்க பூம்பாவை எழக்கண்டு, பெருமான் திருக்கடைக்காப்பு சாத்தி அருளினார்.

விண்ணவர் மலர்மாரி பொழிய, மண்ணவர் கண்மாரி பொழிய விண்ணதிர ஹரஹர கோஷம் ஒலித்தது. இவ்வற்புதத்தைக் கண்ட புறச்சமயத்தார் நிலை தளர்ந்து பூமியிலே விழுந்தனர்.

எழுதவொண்ணா எழிலுடன் தோன்றிய பூம்பாவை பிரம்மனின் படைப்பையும் விஞ்சினாள்.

எண்ணில்லாத ஆண்டுகள் முதிர்ந்த நான்முகன் தான் படைத்த திலோத்தமையின் எழிலில் மயங்கி, அவளது அழகைத் தனது நான்முகங்களில் அமைந்த கண்களால் ஆரப் பருகினான். ஆனால் சிவபுண்ணியமே ஓர் வடிவு கொண்டது போல வந்த பதினாறு ஆண்டுகளே அமைந்த காழிச் செல்வர், திலோத்தமையை விட அழகிய பூம்பாவையின் அழகை சிவபெருமானின் கருணைப் பெருவெள்ளமென ஆயிரம் முகங்களால் கண்டருளினார்.

*''எண்ணிலாண்டு எய்தும் வேதாப் படைத்(து) அவள் எழிலின் வண்ணம்*
*கண்ணுநான் முகத்தால் கண்டான். அவளினும் நல்லாள் தன்பால்*
*புண்ணியப் பதினாருண்டு பேர்பெறும் புகலிவேந்தர்*
*கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிரம் முகத்தால் கண்டார்''*

பூம்பாவை உயிருடன் எழுந்ததைக் கண்ட சிவநேசர் மகிழ்ச்சிக் கடலுள் மூழ்கினார். ஆளுடைப் பிள்ளையாரின் திருவடிகளில் அடியற்ற மரமென வீழ்ந்து பணிந்தார். பூம்பாவையும் கபாலீச்சரப் பெருமானைப் பணிந்து கவுணியர் குலதனத்தை வணங்கி நின்றாள். சம்பந்தப் பெருமானும் சிவநேசரை நோக்கி பூம்பாவையை இல்லத்திற்கு அழைத்துச் செல்லுமாறு அருளினார். ஆனால், சிவநேசரோ பூம்பாவை தங்களுக்காகவே வளர்ந்தவள், ஆதலின் தேவரீர் மணம்செய்து ஏற்றருள வேண்டும் என வேண்டினார். ஆனால் பிள்ளையாரோ அதனை மறுத்து நீர் பெற்ற பெண் அரவு தீண்டி மரணமடைந்தபின், கபாலீச்சரப் பெருமானது திருவருளால் மீண்டும் தோற்றுவிக்கப் பெற்றுள்ளாள். அதனால் நீர் இவ்விதம் உரைத்தல் தகாது என ஆகமத் துணிபுகளை எடுத்துக் கூறி அவர்களது துயரத்தைத் தணித்துத் தனது யாத்திரையை மேற்கொண்டார்.

சிவநேசரும் ஆளுடைப் பிள்ளையாருக்கென அர்ப்பணித்த பூம்பாவையை வேறெவர்க்கும் மணம்செய்து கொடுக்க இசைவேன் என்று திருமகளாரைக் கன்னிமாடம் சேர்த்து அமைதியுற்றார். பூம்பாவையும் தவத்தைச் செய்து சிவத்தை அடைந்தார். (வ. வை.)

## பூரி ஜெகந்நாதர்

பூரி ஜெகந்நாதர் ஆலயம் ஒரிசா மாநிலத்தில் உள்ளது. இது வடக்கில் உள்ள புகழ் பெற்ற வைணவத் தலங்களில் ஒன்று. ஒரிசா மாநிலத்தின் தலைநகரான புவனேஸ்வரத்தில் இருந்து 62 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்றது. இத்தலத்தில் கிருஷ்ண பரமாத்மா ஜெகந்நாதன் என்னும் திருநாமத்துடன் அண்ணன் பலராமனுடனும் தங்கை சுபத்திரையுடனும் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றார். இக்கோயில் பற்றிய மரபுக் கதை ஒன்றுமுளது.

இந்திரதையுமா என்னும் ஓர் அரசன் இந்தப் பகுதியை ஆண்டு வந்தான். சிறந்த பக்திமானான இம் மன்னனின் கனவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணு தோன்றி தமக்கு ஒரு கோயில் எழுப்புமாறும் கடலில் மிதந்து வந்து கரையில் ஒதுங்கும் பொருளில் தன் சிலையை உருவாக்கி அக் கோயிலில் பிரதிஷ்டை செய்யுமாறும் கூறி மறைந்தார்.

மன்னன் தன் கனவில் கண்டபடியே கடலில் ஒதுங்கிய பெரிய மரக் கட்டையால் தெய்வ திருவுருவங்களைச் செதுக்கு மாறு ஊரிலுள்ள சிற்பிகளுக்குக் கட்டளையிட்டான். அவ்வாறே சிற்பிகள் மரத்தில் உளியைப் பதித்து உருவங்களைச் செதுக்க முற்பட்ட போது உளி உடைந்து விட்டது. அதனால் கவலையோடிருந்த மன்னன்முன் விஷ்ணு முதிய சிற்பியைப் போலத் தோன்றி தமக்கு இருபத்தொரு நாள் அவகாசம் கொடுக்கும்படியும் அதற்குள் தெய்வ உருவங்களை தான் செதுக்கி தருவதாகவும் கூறினார். ஆயின் இருபத்தோராவது நாட் கழிந்த பின்பே உருவங்கள் செதுக்கும் அறைக்கதவைத் திறக்க வேண்டும் எனவும் நிபந்தனை விதித்தார். மன்னனும் சம்மதித்தான். பதினைந்து நாட்கள் சென்றன. அறைக்குள் இருந்து எதுவித சத்தமும் வராததால் சிற்பி என்ன செய்கிறார் என்று பார்க்கும் ஆவலில் மன்னன் கதவைத்திறந்தான். அவ்வளவில் சிற்பி மறைந்து விட்டார். அறையினுள் பூர்த்தி செய்யப்படாத ஜகந்நாதர். பலராமன். சுபத்திரா ஆகிய உருவங்கள் செதுக்கப்பட்ட நிலையில் இருந்தன.

அரசன் மனம் வருந்த. விஷ்ணு நீ அவசரப்பட்டு விட்டாய் இந்த விக்கிரகங்களுக்கே ஆலயம் அமைத்து வழிபாடு செய் எனப் பணித்தார். அதன்படி ஆலயத்தில் முற்றுப் பெறாத திருவுருவங்களை வைத்து வழிபாடியற்றினர் என்றொரு கதை உள்ளது. இம்மன்னனின் காலத்திற்குப் பிறகு கோயில் பாழ்பட்டதாகவும் கடல் கொண்டதாகவும் செய்தி உண்டு. மொத்தம் பன்னிரு முறை இக்கோயில் அழிக்கப்பட்டு புதுப்பிக்கப் பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. தற்போதைய கோயில் அனங்காபிமாதேவ் என்னும் மன்னனால் 1135 ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாக அறியப்படுகின்றது.

ஒரிஸாவில் உள்ள கோயில்கள் எல்லாமே தேர்போல உயரமான கோபுரங்களைக் கொண்டிருக்கின்றன. இம் மாநிலத்தில் உள்ள மற்றக் கோயில்களை விட இந்தக் கோயிலே உயரமானது. கோயில் கோபுரத்தின் உயரம் 213அடி. மூலவர் சந்நிதி உள்ள கர்ப்ப கிருகத்துக்கு மேலே மட்டும் கோபுரம் உள்ளது. இராஜகோபுர அமைப்பு இல்லை.

ஜகந்நாதர் கோயில் இரு சுற்றுப் பிரகாரங்களுடன் காணப்படுகின்றது. கோயிலைச் சுற்றி நான்கு வாயில்கள் இருக்கின்றன. கிழக்கு சிங்கவாயில். தெற்கு குதிரைவாயில். வடக்கு யானை வாயில் மேற்கு புலிவாயில் என்று வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வாயிலும் பிரமிட் பாணியில் கட்டப்பட்டுள்ளன.

ஜகந்நாதர் ஆலயத்துக்குள் நான்கு மாளிகைகள் இருக்கின்றன. யோக மண்டபம். நாதமண்டபம். முக்யசாலா. பாதநூலா என்பன அவற்றின் பெயர்கள். இந்தக் கோயிலின் அமைப்பு பஞ்சரதப் பாணியில் அமைந்துள்ளது.

கோயிலின் கருவறையில் இடமிருந்து வலமாக முதலில் பலராமர் ஆறடிச் சிம்மாசனத்திலும். சுபத்திரா நான்கடிச் சிம்மாசனத்திலும். மூன்றாவதாக ஜகந்நாதர் ஐந்து அடிச் சிம்மாசனத்திலும் அமர்ந்துள்ளனர். விஷ்ணு ஆயுதமான சுதர்சனம் (சக்கரம்) ஜகந்நாதருக்கு அருகிலே வைக்கப்பட்டுள்ளது.

இத் தலத்தில் ஆண்டு தோறும் யூன் மாதத்தில் புதிய மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் மூல விக்கிரகங்களுக்குத் திரையிட்டு மறைத்திருப்பார்கள்.

பூரி ஜகந்நாதர் கோயிலின் தேர்த்திருவிழா சிறப்பான விழாவாகும். யூன். யூலை மாதங்களில் இவ்விழா நடைபெறுகிறது. இந்த ரத யாத்திரை இருபத்தொரு நாட்கள் நடைபெறுகின்றது. அலங்கரிக்கப்பட்ட மிகப் பெரிய தேர்களில் ஜகந்நாதர். பலராமர். சுபத்திரை ஆகிய மூவரையும் வைத்து நீண்ட வடம் கொண்டு மக்கள் இழுத்துச் செல்வர்.

இந்த ஆலயத்தில் உள்ள தீபஸ்தம்பத்தில் பக்தர்கள் அகல் விளக்கொன்றை வாங்கி வைத்து வழிபாடு இயற்றுகிறார்கள். சிலர் தீப ஸ்தம்பத்தை கட்டியணைத்து வழிபடுவதும் வழக்கம். கோயிலின் சுற்றுப் பிரகாரத்தில் விநாயகர். அரங்கநாதர். ஆஞ்சநேயர் மற்றும் அம்மன் ஆகியோரின் சந்நிதிகள் உள்ளன. அம்மன் கோயிற் சுவரில் அழகிய சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. வாழைப்பூ போன்ற கோபுரத்தில் உள்ள சிற்பங்களும் தேரில் உள்ள சிற்பங்களும் ரசிக்கத்தக்கவை.

இக்கோயில் ஜகந்நாதருக்கு நாள்தோறும் ஐம்பத்தாறு வகைப் பிரசாதங்கள் நைவேத்தியம் செய்யப்படுகின்றன. காலை பதினொரு மணிமுதல் ஒருமணி வரையில் பல பானைகளில் சாதம். காய்கறி. குழம்பு. கூட்டு முதலியவற்றை நிவேதனம் செய்கிறார்கள். சுவாமிக்கு நிவேதனம் செய்யப்பட்ட சாதத்தை உலர்த்தி வைத்துக் கொண்டு விற்பனைச் செய்கிறார்கள். இதற்கெனத் தனியாக ஒரு கடைத் தெரு உண்டு.

இத்தலத்திற்கு வட திசையில் பாதாளேசுவரர் கோயில் எனப்படும் சிவாலயம் இருக்கிறது. ஜகந்நாதரின் கோயிலுக்கு அருகிலேயே இலட்சுமிக்கும் கோயில் இருக்கிறது.

பூரித்தலம் கடற்கரை ஓரத்தில் அமைந்திருக்கிறது. அதனால் சமுத்திர ஸ்நானம் செய்து பின் இறைவனை வழிபடுவது சிறந்தது. கீதகோவிந்தம் என்னும் ஒப்பற்ற நூலை இயற்றியவர் ஜெயதேவர். அவர் இத்தலத்திலேதான் முத்தியடைந்ததாகக் கருதுகின்றனர். இங்கு ஜெயதேவரின் அஷ்டபதி நாள்தோறும் பாடப்படுகிறது.

(நி. நி.)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெ

## பெரிய தம்பிரான்

நாட்டார் புறத் தெய்வ வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகின்ற ஆண் தெய்வங்களுள் பெரிய தம்பிரானும் ஒருவர். இவர் தெய்வங்களுள் ஒருவர் என்றும் நம்பப்படுகின்றது. இவரைப் பற்றிப் புராணக் கதைகளிலும், பழைய மரபுக் கதைகளிலும் பல செய்திகள் காணப்படுகின்றன.

பொதுவாகப் புராணக் கதைகளில் தக்கனின் யாகத்தை அழிக்கத் தோன்றிய தேவதைகளில் இவரும் ஒருவர் என்ற மரபே பரவியுள்ளது. சிவனை மதியாது தக்கன் யாகம் செய்தபோது தக்கனின் யாகத்தை அழிக்க சிவனால் பல தேவதைகள் அனுப்பப் பட்டார்கள். அவர்களில் பெரிய தம்பிரானும் ஒருவர். இவர் தக்கனுடன் யுத்தத்திற்குச் சென்ற போது தக்கன் கொடுத்த பலாப்பழத்தில் மயங்கி வந்த வேலையை மறந்து விட்டார். போன தேவதைகள் திரும்பி வராமையினால் கோபமடைந்த சிவன் தனது நெற்றியில் வழிந்த வியர்வையை வழித் தெறிந்த போது அதிலிருந்து வீரபத்திரர் தோன்றினார். வீரபத்திரர் கோப வெறி கொண்டு தக்கனின் யாகத்திற்கு வந்து தேவர்களை துவசம் செய்து தக்கனின் தலையை வெட்டி யாகக் குழியில் இட்டார். இதைக் கண்ட பெரியதம்பிரான் ஓடிப்போய்க் காளியன் என்னும் சலவைத் தொழிலாளியின் சாடிக்குள் ஒழிந்துக் கொண்டார். வீரபத்திரர் தம்பிரானைக் காணாது சலவைத் தொழிலாளியிடம் வினாவிய போது தொழிலாளி வீரபத்திரரைச் சாந்தப்படுத்தித் தம்பிரானுக்கு அடைக்கலம் அளித்த உண்மையைக் கூறினான். வீரபத்திரரும் "நீ காப்பாற்றிய பெரியதம்பிரான் இன்றிலிருந்து உங்கள் குல தெய்வம். அவனை வணங்கி பேறு பெறுங்கள்" என வாக்களித்துச் சென்றார். அன்றிலிருந்து சலவைத் தொழிலாளிகள் பெரிய தம்பிரானைக் குல தெய்வமாகக் கொண்டு வழிபாடு செய்து வருகின்றனர்.

யாகத்திலே தோன்றியவர்களுள் இவரை என் பிரானிலும் பெரிய தம்பிரான் போற்றி எனத் துதித்து நின்றனர். இம் மரபை மட்டக்களப்பார் பெரிய தம்பிரானை சிவனாகவே பாவனை செய்து போற்றுகின்றனர். இதனை மேல்வரும் ஏட்டுச் செய்திகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

*"மெய்யா பெரிய தெய்வமே தயாபர மகேஸ்வர*
*யாகேஸ்வர அருள் தர வேணும் இறைவனே*
*அங்காளியம்மையே அயனே அருள் பெரிய தெய்வமே*
*கங்காதரனே கைலாச வாசனே காளிக்குடி*
*புகுந்தவா மங்காதவாறு போல் என்னையும்*
*வழுத்துடுவாய் மகிட அவதாரம் கொண்டு*
*தக்கனை அழிக்க அடியேன் என்னைக்*
*காத்திடுவாய் சிவபெருமானே"*

பெரிய தம்பிரான் வழிபாட்டோடு நீலா சோதையன் என்னும் தெய்வத்தையும் இணைத்து வழிபாடு செய்வது மரபு. நீலா சோதையன் காவியம் ஒன்றிலே பெரியதம்பிரானும் நீலா சோதையனும் ஒரே முகூர்த்தத்தில் தோன்றியவர்கள் எனக் கூறப்படுகின்றது. வலவை என்னும் நகரை பெரியதம்பிரான் அரசராகவும், நீலாசோதையன் அமைச்சராகவும் இருந்து ஆட்சி புரியும் காலத்தில் அவர்களிருவரும் நகர சோதனைக்குச் சென்றபோது ஒரு வீட்டில் ஒரு தாயின் அழுகுரல் கேட்டது. அதன் காரணத்தை விசாரித்த போது பாண்டிய அரசன் அவளது கணவன் பிள்ளைகள் உட்பட பலரை சிறைப்படுத்திச் சென்று விட்டான் எனத் தெரிய வந்தது. நீலாசோதையன் அத்தாயின் துயரத்தைப்போக்கி அனைவரையும் சிறைமீட்டுத் தருவதாக வாக்களித்தான். பின்பு இருவரும் பாண்டி நாட்டை நோக்கிச் சென்று, தம்பிரான் பாண்டிய அரசனது தொடையிலே தண்டாயுதத்தின் ஒரு பகுதியை வைத்தார். வலி பொறுக்க முடியாத பாண்டிய அரசன் தம்பிரானைப் பார்த்து நீ யார்? உனது குலமென்ன? எதற்காக வந்தாய்? என வினாவினான். அதற்குத் தம்பிரான் விடை கூறாமல் எனது நாட்டுக் குடிகளில் ஆறாயிரம் பேரைச் சிறைப் பிடித்துள்ளாய் அவர்களைச் சிறை மீட்கவும், உனக்குத் தண்டனை அளிக்கவும் வந்தேன் எனக் கூறினார். பாண்டியன் இதனைக் கேட்டுப் பயந்து நீங்கள் கேட்பதையெல்லாம் தருகின்றேன் என்று கூறித் தண்டாயுதத்தை எடுக்கும்படி வேண்டினான். அதே வேளை நீலாசோதையன் யானைப் பந்தியிற் புகுந்து யானைகளைப் பிடித்து ஒன்றுடன் ஒன்று மோதவைத்துக் கொன்று குவித்தான். இவ் இருவர்களின் செயல்களைக் கண்டு அஞ்சி வியந்த பாண்டிய அரசன், சிறைப்பிடித்த ஆறாயிரம் பேருடன் மேலும் ஆறாயிரம் திறைகளையும், திரவியங்களையும், வேறு அன்பளிப்புக்களையும் கொடுத்துக் கீழ்ப்பணிந்தான். இவற்றைப் பெற்றுக் கொண்டு இருவரும் நாடு திரும்பினர்.

இவ்வாறு பெரிய தம்பிரான் அரசோச்சி வருங் காலத்தில் தென் இந்தியாவிலிருந்து இலங்கை வந்த பிராமணன் ஒருவன் பெரியதம்பிரான் ஆட்சி செய்வதைப் பொறுக்காது அவர் மீதும், நீலா சோதையன் மீதும் பேய், காளி போன்ற துஷ்டதேவதைகளை மந்திர சக்தியூடாக அனுப்பி, போர் செய்ய வைத்தான். இப்பிராமணனின் ஏவுதல் படி சகல துஷ்டதேவதைகளும் பெரியதம்பிரானையும், நீலாசோதையனையும் எதிர்த்துத் தோல்வி கண்டனர். நீலா சோதனையன் பிராமணனைத் தண்டாயுதத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்து பேய், காளிகளை மடக்கிப் பிடித்துத் தம்பிரான் முன்னிலையில் நிறுத்தினான். இதனால் தனக்குச் சமமாக நின்று நாட்டைக் காத்தமையால் நாட்டிற்கு முதல் மந்திரியாக வைத்தார். இறுதியில் இருவரும் தெய்வமானார்கள் என மரபு வழியான கதை கூறுகின்றது.

இத் தம்பிரான் வழிபாடு தமிழ் நாட்டில் அருகியதாகவும் இலங்கையில் யாழ்ப்பாணப் பிரதேசத்திலும், மட்டக்களப்புப் பிரதேசத்திலும் பரந்த வழிபாடாகவும் காணப்படுகின்றது. சலவைத் தொழிலாளிகள் அதிகம் வாழும் பகுதிகளிலே ஆலயம் அமைத்து, பந்தல்கள் கட்டி வழிபட்டு வருகின்றமையைக் காணவும் முடிகின்றது. (சு.து.)

# பெரியபுராணம்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் கடையாக, நிறையாக அமைந்திருப்பது பெரியபுராணமாகும். இதனைத் திருத்தொண்டர்புராணம் எனவும், திருத்தொண்டர் மாக்கதை எனவும் சிறப்பிப்பர். பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ என்று சிறப்பிக்கப்படுபவர் இக்காப்பியத்தை அருளிய சேக்கிழார்பெருமான் ஆவார். இவர் சுந்தரமூர்த்தி சுவாமி அருளிய திருத்தொண்டர் தொகையை முதல்நூலாகவும், நம்பியாண்டான்நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியை வழி நூலாகவும் கொண்டு, இப் பெருங்காப்பியத்தைப் படைத்தார். இந்நூல் இரண்டு காண்டங்களையும், பதின்மூன்று சருக்கங்களையும், நாலாயிரத்து இருநூற்று எண்பத்தேழு விருத்தப்பாடல்களையும் கொண்டிருப்பதோடு அறுபத்துமூன்று தனியடியார் வரலாறுகளும், ஒன்பது தொகையடியார்களது வரலாறுகளும் இதில் இடம்பெற்றுள்ளன. தமிழ்நாட்டுச் சைவசமய நெறிமுறைகளையும், பண்டைத் தமிழர் வாழ்க்கைமுறைகளையும், அவர்களின் நாகரிக நுண்ணுணர்வுகளையும் அதிற் பரக்கக் காணலாம். இந்நூலில் எக்காலத்திற்கும், எவர்க்கும் பொருந்தக் கூடிய பொருள் பொதிந்த சயம, சமூக சிந்தனைகள் ஆங்காங்கு மணிகளென ஒளி வீசித் திகழ்கின்றன. அவற்றையெல்லாம் எடுத்துச் சிந்தித்துப் பார்க்கும் போது அவற்றைப் பாடிய தெய்வச் சேக்கிழாற் புலவரின் புலமைகள் எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. எனவே சமய சமூகப் பெட்டகமாக அமையும் இப்பெரியபுராணத்தை ஆழமாகச் சிந்தித்துக் கற்போருக்கு அது ஓர் அருவிருந்தாகும்.

## பெரியபுராணம் காட்டும் சமய நெறி

### சைவ சமயம்

சைவ மெய்யுண்மைகளின் ஆழ அகலங்களை எடுத்துக் காட்டும் கலங்கரை விளக்காய்ப் பெரியபுராணம் காட்சியளிக்கின்றது. வேதாகம வழியில் நெறிப்பட்டதே சைவ சமயம் என்பதை வேதநெறி தளைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க எனச் சேக்கிழார் ஓர் பாடல் தொடரிற் சுட்டிக் காட்டுகின்றார். பெரியபுராணம் சைவக்காப்பியம் என்பதற்கேற்ப சிவபெருமானின் அடையாளங்களையும் அருட்செயல்களையும் சேக்கிழார் தன் நூலில் தெளிவாகப் பதிவு செய்துள்ளார்.

அலகில் சோதியன் அம்பலத் தாடுவான் (01)
இன்ன தன்மையன் என்று அறியாச் சிவன் (23)
முந்தை மறை ஆயிரம் மொழிந்த திருவாயான் (179)
அருமறை முறையிட்டு இன்னும் அறிவதற்கு அரியான் (192)
முன்னாகி எப் பொருட்கும் முதலாகி நின்றான் (1421)
எவ்வுயிர்க்கும் தாயானான் (2385)

அருவாகி உருவாகி அனைத்துமாய் நின்றபிரான் (4163) எனவரும் பாடல் தொடர்கள் குறிப்பிடற்பாலன.

மேலும் சிவலிங்கம் உருவம் அன்று, உருவம் அற்றதும் அன்று, அருவமும் உருவமும் இணைந்த ஓர் சிவவழி பாட்டுச்சின்னம் எனச் சேக்கிழார் மேல்வரும் பாடலில் விளக்கம் தருகின்றார்.

*"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்*
*நீள் நாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்"* (3648)

### சிவனடியார்

சமண ஆதிக்கத்தைத் தடுத்துச் சைவத்தை வளர்க்கச் சிவனடியார்களின் கதைகளை சேக்கிழார் பெரியபுராணமாக எழுதினார் என்று கூறப்படுகின்றது. சிவன்மீது பற்றுக்கொண்ட அறுபத்துமூன்று நாயன்மார்களையும், ஒன்பது தொகையடியார்களையும் ஒரு குலமாக ஒருங்கிணைத்துப் பேசுவதை சிவனடியார் என்ற பதம் தாங்கி நிற்கின்றது. இவர்களின் வரலாற்றைக் கூறுவதன் மூலம், சைவத் திருமுறைகளில் தேவாரங்கள் தோற்றிய பதிக வரலாற்றையும், அவற்றின் பொருள் விளக்கங்களையும், சிவபெருமானின் திருவருள் பெருக்கால் அவ்வப்போது நாட்டில் நிகழ்ந்த அற்புதங்களையும், அதனால் சமூகத்தில் நிகழ்ந்த மலர்ச்சியையும், அதனால் சைவசமயம் பெற்ற பெருமையையும் சேக்கிழார் இந்நூலில் விளக்கியிருப்பது மானுடர் எவரும் செய்ய முடியாதவோர் கைங்கரியம் எனக்கூறுவது வியற்கப்பாலது.

பெரியபுராணம் பிழிந்த சாரம் தொண்டு எனும் வழிபாடே ஆகும். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பரின் வாக்கும், "தொண்டு புரி பலனை எதிர்பாராதே" என்ற கிருஷ்ணரின் வாக்கும் இதனை மேலும் வலுப்படுத்துகின்றது. சிவனடியார்கள் தங்களுடைய இறைத் தொண்டிற்கு எத்தகைய இடர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாலும், இறைவன் மீது அன்பு கொண்டு தங்கள் இறை பணியைச் செவ்வனே செய்வார்கள் என்பதை மூர்த்திநாயனார் கண்ணப்பர் நாயனார் என்போரின் வரலாற்றிலிருந்து சேக்கிழார் படம் பிடித்துக்காட்டுகின்றார்.

### சிவவழிபாடு

பெரியபுராணம் சிவவழிபாட்டையும் அதன் பேற்றினையும் இயம்புகின்ற இலக்கியமாகவும் அமைந்துள்ளது. சைவாகம வழிபாட்டில் இறைவனை வீழ்ந்து வணங்கும் முறைகளாக பஞ்சாங்கநமஸ்காரம், அட்டாங்கநமஸ்காரம் என இரண்டு உள்ளன. இதில் பஞ்சாங்க நமஸ்காரத்தைப் பற்றி ''மண்ணுற ஐந்து உறுப்பால் வணங்கி (270)'' என்றும் அட்டாங்க நமஸ்காரத்தைப் பற்றி ''அங்கம் மாநிலத்து எட்டுற வணங்கி'' என்றும் சேக்கிழாரால் விளக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிவனடியார்கள் குரு, லிங்க சங்கம வழிபாட்டில் நின்று உயர்பேறடைந்தவர்கள் என்பதைச் சேக்கிழார் கூறும் வரலாற்றுச் செய்திகளினின்று இனம் பிரித்துக் காட்டுகின்றார். அவற்றில் குருவழிபாட்டில் பன்னிருவரும், லிங்க வழிபாட்டு நிலையில் முப்பத்து மூவரும், சங்கம வழிபாட்டில் இருபதுபேரும் அடங்குகின்றனர்.

இளையான்குடிமாறர், இடங்கழியார், அப்பூதியடிகள், அமர்நீதி நாயனார், மானக்கஞ்சாரர் முதலிய நாயன்மார்கள் தாம் புரியும் சிவப்பணிகளோடு சிவனடியார்களுக்குப் பசி போக்கத் திருவமுது செய்யும் பணிகளையும் சிறப்புடன் செய்து வந்தார்கள் என்பதையும் சேக்கிழார் பெரியபுராணத்தில் எடுத்துக்காட்டியுள்ளார். இளையான்குடிமாற நாயனார் தம்பதிக்கு இறைவன் அருள் செய்த வரலாற்றை மேல்வரும் பாடல் விளக்குகின்றது.

*''அன்பனே! அன்பர் பூசை அளித்த நீ அணங்கினோடும்*
*என்பெரும் உலகம் ஏந்தி இருநிதிக் கிழவன் தானே*
*முன்பெரு நிதியம் ஏந்தி மொழி வழி ஏவல் கேட்ப*
*இன்பமர்ந்திருக்க என்றே அருள் செய்தான் எவர்க்கும் மிக்கான்''*

### சிவனடியார் கூட்டச்சிறப்பு

பெரியபுராணத்தின் முதற்சருக்கத்தில் சிவனடியார்களின் திருக்கூட்டச் சிறப்பின் பெருமைகள் விதந்துரைக்கப்பட்டுள்ளன. சிவனடியார்கள் புறத்தூய்மையும், அகத்தூய்மையும் உள்ளவர்கள். அவர்கள் பூசும் திருநீறு போல் புனிதர்கள். அவர்கள் இன்பதுன்பங்களின் பாதிப்போ, பொன் பொருள்களில் நாட்டமோ இல்லாதவர்கள் என்பதனை மேல்வரும் பாடல் சான்றுரைக்கின்றது.

''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'' (143)

சிவனடியார்களின் அகப்புறத் தூய்மைகளை

''ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணி அலது ஒன்றிலர்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலர்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ'' (144)

### சிவசின்னம்

சிவசின்னங்களில் பெருமை மிக்கது திருநீறு. திருநாவுக்கரசர், திலகவதியார் ஆகியோரின் வரலாற்றிலிருந்து சேக்கிழார் திருநீற்றின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றார். இறைவனின் திருவுளப்பாங்கின் கொடிய சூலை நோய் பெற்ற நாவுக்கரசர் திலகவதியாரை அண்டிய போதுத் திருவைந்தெழுந்து ஓதித் திருநீற்றைத் திலகவதியார் கொடுக்க சூலை நோய் நீங்கி பெருவாழ்வு பெற்றார் என மேல்வரும் இரண்டு பாடல் வரிகளின் மூலம் உணர்த்துகின்றார்.

*''நின்மலன் பேர் அருள் நினைந்து*
*சென்று திரு வீரட்டம் புகுவதற்குத் திருக்கயிலைத்*
*குன்று உடையார் திரு நீற்றை அஞ்செழுத்து ஓதிக்*
*கொடுத்தார்''*

*''திருவானன் திருநீறு திலகவதியார் அளிப்பப்*
*பெருவாழ்வு வந்தது எனப் பெருந்தகையார்''*

### சிவமந்திரம்

தூல, சூட்சும பஞ்சாட்சரங்களின் மறைபொருளைப் பற்றியும், அவற்றில் அடங்கியுள்ள தத்துவங்களைப் பற்றியும், அவற்றை ஓதும் முறை, அதனால் ஏற்படும் பயன் என்பன பற்றியும் பல சமய நூல்கள் எடுத்தியம்புகின்றன. எனினும் பெரியபுராணத்திற் சேக்கிழார் பல சிவனடியார்கள் இம்மந்திரத்தை ஜெபித்து இம்மை, மறுமைப் பயன்களைப் பெற்றார்கள் எனவும் எடுத்துக் காட்டுகின்றார்.

திருநகரச்சருக்கத்தில், அந்நாட்டு மக்கள் திருவைந் தெழுத்தை முறையாக ஓதுவதனால் அவர்களைப் பிடிக்க பிறவிப்பணியும் அஞ்சும் என 'ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணிவரத்தான் அஞ்சும்' (84) என்ற பாடலடியில் குறிப்பிடுவதோடு, திருக்காட்சி சிறப்புப் பகுதியில் சிவனடியார்களின் பெருமைகளை ''நீரந்த நீற்று ஒளியும் புரந்த அஞ்செழுத்தும் ஓசையும்'' என்று வர்ணிக்கின்றார்.

ஆனாய நாயனார் ஆநிரைகளைக் காத்து வந்தபோது, சிவன் கொன்றை மரத்திற் காட்சியளிக்க அன்பின் உருக்கத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வேய்ங்குழலில் ஐந்தெழுத்தை இசையாக்கிச் சமர்ப்பணம் செய்ய எம்பிரானும் அகமகிழ்ந்து அருள் கொடுத்தார் என்பதை

எடுத்த குழல் கருவியினில் எம்பிரான் எழுத்து அஞ்சும் என வரும் பாடலில் விளக்கியுள்ளார்.

நாவுக்கரசர் கடலிலிருந்து மீண்டு வரும் போது பாடிய சொற்றுணை வேதியன் என்று தொடங்கும் முதற் பதிகத்தைக் "கொண்டு அற்ற முன் காக்கும் என்று குறிப்பிட்டும் சேக்கிழார் பாடியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

*"சொற்றுணை வேதியன் என்னுந் தூய் மொழி*
*நற்றமிழ் மாலையா நமச்சிவாய என்று*
*அற்ற முன் காக்கும் அஞ்செழுத்தை அன்போடு*
*பற்றிய உணர்வினால் பதிகம் பாடினார்."* (1391)

இதே போலப் பல இடங்களில் மீண்டும் மீண்டும் இதன் உண்மையை சேக்கிழார் வலியுறுத்திக் காட்டுகின்றார். இவர்களைப் போல் திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார், அமர்நீதிநாயனார், புகழ்ச்சோழநாயனார் போன்றோரின் வரலாறுகளிலும் சிவன் ஐந்தெழுத்து மந்திரத்தினுள் இருந்து அவர்களுக்கு அருள் வழங்கிய காட்சியைப் பல பாடல்களிற் சேக்கிழார் பதிவு செய்து இருப்பது நோக்கத்தக்கது.

## சிவபக்தி

தமிழ்நாட்டுச் சிவனடியார் வரலாற்றை முதன் முதலாகப் பக்தி ரசத்தோடு பெரியபுராணத்திற் காட்டிய பெருமை சேக்கிழாரையே சாரும். பக்தியென்பது இறைவனிடம் செலுத்தப்படும் அன்பான ஓர் அனுபவநிலையாகும். இதை அனுபவித்தே சேக்கிழார் பெரியபுராணம் பாடியிருக்கின்றார். இச்சிறப்பை நன்குணர்ந்த திரிசிபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் 'பக்திச் சுவை நனி சொட்டப் பாடிய கவிவலவ' என்று சேக்கிழாரைப் புகழ்ந்துள்ளார்.

பெரியபுராணத்திற் பக்திரசத்தை வெளிப்படுத்தும் முறைகளை சேக்கிழார் நாயன்மார்களின் வாழ்க்கை முறைகளிலிருந்து சித்தரித்துக்காட்டுகின்றார். சாக்கியநாயனார் பௌத்த சமயத்தவராக இருந்து கொண்டு சிவலிங்கத்திற்குக் கல்லெறிந்து வழிபட்டார். எந்த வேடம் பூண்டாலும் சிவனின் தாளை மறவாமல் பக்தி கொள்வதை நாள்தோறும் தொண்டிருந்தார் என்பதை சேக்கிழார் மேல்வரும் பாடலொன்றில் சித்தரித்துள்ளார். இப்பாடல் உண்மையான பக்தனின் நிலைப்பாட்டை தெளிவாக எடுத்தியம்புகின்றது.

*"எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்*
*மன்னிய சீர்ச்சங்கரன் தான் மறவாமை பொருள் என்றே*
*துன்னிய வேடந்தன்னைத் துறவாதே தூய சிவம்*
*தன்னை மிகும் அன்பினால் மறவாமை தலை நிற்பார்"*

ஈசன் மீது அன்பு கொண்டு எதுசெய்தாலும் அது எம்பிரானுக்கு பக்தி வழிபாடாகவே ஏற்கப்படும் என்பதைக் கண்ணப்ப நாயனாரின் வரலாற்றிலிருந்து உணர்த்துகின்றார். குடும்பித் தேவரைக் கண்ட கணத்திலிருந்து கண்ணப்பர் அவர் மீது அன்புருவாக மாறினார் என்பதை பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்புருவம் ஆனார் எனச் சேக்கிழார் விளக்குகின்றார். அத்துடன் திருக்காளாத்தி மலையிலே இறைவனைக் கண்டு அணைத்துக் கொண்டு நீங்காது நின்ற நிலையினை "வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும்பு என்ன நீங்கள்" என்றும் பாடுகின்றார் இக்கண்ணப்பனின் பக்தியை மாணிக்கவாசகப் பெருமானும் கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் என்று மெச்சிப் பாடியுள்ளார்.

## சைவ சித்தாந்தம்

சைவத்தின் சிறப்புக்களை உலகிற்கு எடுத்துக்காட்டிய சேக்கிழார் அடுத்துச் சைவ சித்தாந்த சிந்தனைகளையும் பெரியபுராணத்திற் பதித்திருப்பது அவரின் புலமையை மேலும் ஒருபடி உயர்த்திக் காட்டுகின்றது. பதி, பசு, பாசம், சைவ நாற்பாதங்கள், இருவினையொப்பு, மலபரிபாகம், தீட்சை, பஞ்ஞாட்சரமந்திரம், முக்தி ஆகிய சைவசித்தாந்தக் கருத்துக்கள் பெரியபுராணத்தில் பொதிந்துள்ளன.

*"உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்*
*நிலவு லாவிய நீர் மலி வேணியன்*
*அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்*
*மலர்சி லம்படி வாழ்த்திவ ணங்குவாம்"*

எனும் முதல் பாடலையே சேக்கிழார் சித்தாந்த விளக்கமாக முன்வைத்துள்ளார். இதில் முதல் வரிப்பாடல் இறைவனின் சொரூப நிலையாகவும், இரண்டாம் வரிப்பாடல் இறைவனின் உருவ இயல்பாகவும், மூன்றாம் வரிப்பாடல் இறைவனின் தடத்த நிலையாகவும், நான்காம் வரிப்பாடல் சந்நிதிபாத நிலையாகவும் அமைந்துள்ளது. இப்பாடல் விளக்கத்தையொத்த பாடலாக சிவஞான போதப் 12ஆம் சூத்திரம் அமைந்திருக்கின்றது என்று கூறினால் அதில் தவறு எதுவுமில்லை.

*"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்*
*பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்*
*உவமையிலா கலை ஞானம் உணர்வரிய மெய்ஞ் ஞானம்*
*தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்"*

எனும் பாடலில் சேக்கிழார், ஞானப்பால் உண்ட சம்பந்தருக்குக் கிடைத்த கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்னும் நால்வகை நெறிகளை உணர்த்திக் காட்டுகின்றார். இதனை சிவஞான சித்தியார் பாடலில் அடியொற்றியும் நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"கேட்டலும் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தலென*

*வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்"*

பிறவியென்னும் கடலில் தடுமாறும் மக்களை கரையேற்றும் வல்லமை அஞ்ஞெழுத்து மந்திரத்திற்குண்டு என்பதை நாவுக்கரசரின் வரலாற்றிலிருந்து சேக்கிழார் மேல் வரும் பாடலில் எடுத்துக் காட்டுகின்றார்.

*"இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்*

*வருபவக் கடலில் வீழ்மாக்கள் ஏறிட*

*அருளும் மெய் அஞ்செழுத்து"*

மும்மல விளக்கத்துடன் மலநாசம் பெற்ற ஆன்மா இரசவாதத்தால் இரும்பு பொன்னாவது போல் சிவச்சுூர்பு அடையும் என்பதைக் கண்ணப்ப நாயனாரின் வரலாற்றிலிருந்து பிரதிபலித்துக் காட்டுகின்றார்.

*"முன்பு திருக்காளத்தி முதல்வனார் அருள் நோக்கால்*

*இன்புறுவே தத்திரும்பு பொன்னானாற் போல் யாக்கை*

*தன் பரிசம் வினையிரண்டும் சாருமல மூன்றுமற*

*அன்பு பிழம் பாய்த்திரிவர் அவர் கருத்தின் இளவினரோ"*

## பெரியபுராணம் காட்டும் சமூக நெறி

### அரசியல்

சோழமன்னருக்கு அமைச்சுப் பதவி வகித்த சேக்கிழார் பெரியபுராணத்தில் அரசியல்நெறி முறைகள் பற்றியும் இயம்பியுள்ளார். சேர, சோழபாண்டிய அரசர்களும், வேளிர் குலத்தவரும், வேறு பல மரபினருமாக பதின் நான்கு பேர்களை சேக்கிழார் குறிப்பிட்டுக் காட்டுகின்றார். அவர்களின் பெயர்கள் மேல்வருவனவாகும் :

| | | |
|---|---|---|
| சேரமன்னர் | - | சேரமான் பெருமான் |
| சோழமன்னர்கள் | - | கோச்செங்கட்சோழன், புகழ்ச்சோழன் |
| பாண்டியமன்னர்கள் | - | நின்றசீர்நெடுமாறன், மங்கையர்க்கரசி |
| குறுநிலமன்னர்கள் | - | மெய்ப்பொருள் நாயனார், நரசிங்கமுனையதரையர், பெருமிழலைக்குறும்பர், இடம் கழிநாயனார். |
| படைத்தலைவர்கள் | - | சிறுதொண்டர், மானக்கஞ்சாறார், ஏயர்கோன் கலிக்காமர், கோட்புலியார். |
| அமைச்சர் | - | குலச்சிறையார். |

கன்றை இழந்த பசு ஆராய்ச்சி மணியடித்து நீதிகேட்டதற்கிணங்க தன்மகனையும் கன்றைக் கொன்றது போலக் கொன்றான் மனுச்சோழன். தன் அரசாட்சியில் மக்கள் மட்டுமல்லாது பிற உயிரினங்களும் துன்பப்படக் கூடாது என்று நினைப்பவன். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் பாகுபாடு பாராமல் தண்டனை வழங்குபவன் எவனோ அவனே உண்மையான அரசாட்சி புரியும் அரசன் என்பதை மேல்வரும் பாடலில் எடுத்துக் காட்டுகின்றார்.

*"மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங்காலை*

*தானதனுக் கிடையூ று தன்னால் தன் பரிசனத்தால்*

*ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர் தம்மால்*

*ஆனபய மைந்துந் தீர்த் தறங்காப்பா னல்லனோ"* (36)

இப்பாடலின் மூலம் தன்னால், தன் பரிசனத்தால் ஊனமிகு பகைத்திறத்தால், கள்வரால், உயிர்கள் தம்மாலான பயம் முதலிய ஐந்தும் தீர்த்து அறம் காப்பான் என்று அரசனின் கடமைகளைச் சேக்கிழார் வலியுறுத்துகின்றார்.

### இல்வாழ்க்கை

பெரியபுராணம் இல்வாழ்க்கைக்குரிய நல்வாழ்வியல் நெறிகளையும், அதன் நுண்ணுணர்வுகளையும் இயம்புகின்ற காப்பியமாகும். சேக்கிழார் பல இடங்களில் இல்லறத்தின் சிறப்புக்களை எடுத்துக் காட்டியுள்ளார். செம்மை இல்லறமே நல்லறமாகும் இல்லறத்தில் கணவன் மனைவிக்குள் ஏற்படும் பிரச்சினைகளைப் பிறர் அறியாவண்ணம் வாழ வேண்டும். தன்கொள்கைக்கு இணங்கக்கூடிய இல்லறத்தாளை தேர்வு செய்யவேண்டும், வையகம் போற்ற இல்லறம் சிறக்க அறம் புரிந்து ஏனைய உயிர்களுக்கு ஒத்தாசையாக வாழ வேண்டும் இவ்வாறான வாழ்வியல்களைச் சேக்கிழார் அடியார்களின் வாழ்வில் இருந்து தெளிவுபடுத்தியுள்ளார்.

திருநீலகண்டநாயனார் திருநீலகண்டத்துப்பெருமான் மீது பக்திகொண்டவர். திருமணமானவர். இவர் தாசி வீட்டிற்குச் சென்று வருவதையறிந்த அவரின் மனைவி கணவனிடம் ஒன்றும் வினவாமல் தன் கடமைகளை அவருக்குச் செய்து கொண்டு வந்தாள். ஒரு நாள் தன் மனைவியை ஆசைமொழி பேசி தொடமுற்பட்ட போது திருநீலகண்டப் பெருமான் மீது ஆணையாக இனி என்னைத் தொடக் கூடாது என்று ஆணை யிட்டாள். அன்றிலிருந்து ஒரு பெண்ணையும் தொடுவதில்லை என உறுதிபூண்டு, இப்பிரச்சனையை அயலவரும் அறியாத வண்ணம் வயதாகும் வரை வேறுவேறாக வாழ்ந்தார்கள் என்பதை சேக்கிழார்.

*"கற்புறு மனைவியாரும் கணவனார்க் காண எல்லாம்*

*பொற் புற மெய்யுறாமல் பொருந்துவ போற்றிச் செய்ய*

*இன்புறம் பொழியாது அங்கண் இருவரும் வேறுவைகி*

*அன்புறு புணர்ச்சியின்மை அயலறியாமை வாழ்ந்தனர்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும், அவர்களின் இல்லறச் சிறப்பை ''வையகம் போற்றும் செய்கை மனை அறம் புரிந்து வாழ்வோர்'' என்றும் விளக்குகின்றார்.

'இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பு வதற்கே' என்ற திருவள்ளுவரின் கூற்றுக்கமையச் சேக்கிழாரும் காரைக்காலம்மையார், இளையான்குடிமாறநாயனார், இயற்பகைநாயனார் சிறுதொண்டர் ஆகியோரின் வரலாற்றிலிருந்து விரும்தோம்பற் சிறப்பை நன்கு எடுத்துக் காட்டுகின்றார். காரைக்காலம்மையாரின் இல்வாழ்க்கை அறச்சிறப்பை ஓங்கிய அன்புறு காதல் ஒழிவின்றி மிகப் பெருகப் பாங்கில் வரும் மனை அறத்தின் பண்புவழாமையில் பயில்வார் எனச் சிறப்பிக்கின்றார். அம்மையாரின் தொண்டைச் சமுதாயக் கொள்கையாக கொண்டொழுக வேண்டும் என ஞானசம்பந்தன் கருதியதை சேக்கிழார் மேல்வரும் பாடலில் விளக்கிக் காட்டுகின்றார்.

*''மண்ணில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்*
*அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்*
*கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல்*
*உண்மை ஆம் எனில் உலகர் முன் வருக என உரைப்பார்''*

இளையான்குடிமாறநாயனார் இல்லறத்திலே விரும்தோம்பல் பண்பிலே வழுவாது நின்று இறைபணியில் நின்று வாழ்ந்தார். இவரின் விருந்தோம்பல் முறையைச் சேக்கிழார் மேல்வரும் படலிற் காட்டியுள்ளார்.

*''காலினால் தடவிச் சென்று கைகளால்*
*சாலிவெண் முளை நீர் வழிச் சார்ந்தன*
*கோலி வாரி இடா நிறையக் கொண்டு*
*மேல் எடுத்துச் சுமந்தொல்லை மீண்டனர்''*

## திருமணமுறைகள்

சேக்கிழார் அக்காலத்தில் நிலவிய திருமணமுறைகள், திருமணச்சடங்குகள், திருமணச்சம்பிரதாயங்கள் முதலிய வற்றைப் பெரியபுராணத்தில் உள்ளடக்கிக் காட்டுகின்றார். திருமணமுறைகளிலே நிச்சயார்த்த திருமணம், காந்தர்வ திருமணம், கலப்புத் திருமணம் பற்றிப் பல அடியார்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து எடுத்துக் காட்டுகின்றார். காரைக்கால் அம்மையார், மானக்கஞ்சாற நாயனார், திருஞானசம்பந்தர், முதலிய அடியார்களின் வரலாற்றில் மணமகளின் வீட்டைச்சார்ந்த பெரியோர் சிலர் பெண்ணின் பெற்றோரை நாடி மணம் பேசி முடிப்பர். இதனைப் பேசி முடிந்த திருமணம் எனக்கூறுவர். காந்தர்வ திருமணத்திற்கு சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாற்றிலிருந்து சேக்கிழார் ஆதாரம் காட்டுகின்றார் பூங்கோயிலில் உள்ள இறைவனை வணங்கிவிட்டு தன் அடியார்களுடன் நம்பியாரூரர் திரும்பிக் கொண்டிருந்த போது பரவையாரைக் கண்டு காதல் கொண்டார் என்பதை

*''கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ*
*பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ''*

எனும் பாடலில் குறிப்பிட்டதோடு, பரவையார் நம்பியின் முகம் கண்டு முகம் நாணினாள் அவளும் காதல் கொண்டாள் என்பதை,

''முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனோ பெருகொளியால்
தன் நேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ''

எனும் பாடலிலும் வெளிக்காட்டுகின்றார். அத்தோடு ஆதி சைவராக விளங்கிய சுந்தரர் வேளாளர் குலத்திற் பிறந்த சங்கிலியாரையும் மணந்தார் இது அக்காலத்தில் நிலவிய கலப்புத் திருமணமாகக் கூறலாம்.

சாதகம் பார்த்தல் குலம், குடி, உரிமை எனும் மூன்றும் அமையக்கூடிய பெண்ணை மணம் பேசுதல், கடவுள்காப்புக் கட்டுதல், மணமகளை வரவேற்றல், நீர்வார்த்தல், நிறைகுடம் வைத்தல், பொன்மணி நூல்பூட்டுதல், பாணிக்கிரகணம், தாம்பூலம் போன்ற திருமணச் சடங்கு சம்பிரதாயங்களையும் சேக்கிழார் பெரியபுராணத்தில் எடுத்துக்காட்டுகின்றார்.

## பெண்களின் உரிமை

பெரியபுராணத்தில் சேக்கிழார் 28 பெண்கள் பற்றிய செய்திகளைத் தருகின்றார். அவர்களில் மங்கையர்க்கரசியார், இசைஞானியார், காரைக்காலம்மையார் ஆகிய மூவர் மட்டுமே நாயன்மார்களாக வழிபடும் அருட்பேறு பெற்றவர்கள். பெண்களுக்கும் ஆன்மீகத் துறைக்கும் வெகுதூரம் என்ற காலகட்டத்தில் தான் விரும்பிய ஆன்மீகத் துறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட முதல் பெண் காரைக்காலம்மையார் என்றால் அதை மறுப்பதற்கு எவரும் இல்லை. தான் கணவனால் புறக்கணிக்கப்பட்டாலும் முகம் தொலைந்து போகாமல் ஆன்மீகத்தில், துறவறத்தில் ஈடுபடுத்திய தாயவள் என்பதைச் சேக்கிழார் அம்மையாரின் வரலாற்றிலிருந்து பெண் உரிமை பற்றிப் பேச முயல்கின்றார்.

சேக்கிழார் இல்வாழ்க்கையிற் பெண்களுக்குள்ள உரிமையையும், அவர்களின் பேறுகளையும் இளையான்குடிமாற நாயனாரின் இல்லத்தரசி இசைஞானியார் போன்ற அடியார்களின் வரலாறுகளில் இருந்தும் எடுத்துக்காட்டுகின்றார். அதிலும் குறிப்பாக காரைக்காலம்மையாரையும் மங்கையர்க்கரசியாரையும் பெண்குலத்திற்கே பெருமையாய் அமையும்படியாக தெய்வ அங்கீகாரத்தை அளிக்கின்றார்.

*''மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்*
*வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி*
*செங்கமலத் திருமடந்தை கன்னி நாடான்*
*தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை''*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### ஒழுக்க நெறி

சேக்கிழார் மானிட வாழ்க்கை வளம்பெற ஏராளமான ஒழுக்கநெறிச் சிந்தனைகளை நாயன்மார்களின் வாழ்வியலில் இருந்து எடுத்துக்காட்டுகின்றார். சமத்துவம் பேணல், ஜீவகாருண்யம், கொடை, கற்புநெறி, முதுசொம்கேட்டல், விருந்தோம்பல், நீதி, சமுதாயவிழிப்புணர்வு போன்ற நல்ல சிந்தனைகளை வாழ்க்கை முறைகளிற் சேக்கிழார் இணைத்துக் காட்டியிருப்பது அவருடைய மாண்புகளை மேலும் ஒருபடி உயர்த்திக் காட்டுகின்றது.

பெரியபுராணம் ஓர் சமரச சமத்துவ முரசு என்று கூறுவதற்கிணங்க சிவனடியார்கள் அனைவரையும் ஒரே சமத்துவமாகக் இக்காவியம் விளக்கிக் காட்டுவது வியற்கப்பாலது. அதுமட்டுமன்றி சாதியால் உண்டாகும் ஏற்றத் தாழ்வுகளைப் போக்கி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பல நிலைகளில் சேக்கிழார் பெருமான் பல அடியார்களின் வரலாறுகளைத் தந்துள்ளார். நாயன்மார்களிலே வேளாளர், அந்தணர், ஆதிசைவர், வணிகர், இடையர், வேடர், புலையர், குயவர், பாணர், சாலியர், ஏகாலியர், எனும் வகுப்பினரைச் சேர்ந்தவராக விளங்கிய போதிலும் சாதிப் பிரிவினை காட்டாது எல்லோரும் ஒரு குலம் எனக் கருதி திருவிழா எடுத்து, இறைவழிபாடு ஒருமித்து நடத்தினார்கள் என சேக்கிழார் குறிப்பிடுகின்றார். இதை சாதியொழிப்புக்கு எதிராக வழங்கும் ஓர் சீரிய சிறந்த செய்தியாகக் கூறலாம்.

பெரியபுராணத்தில் வரும் அடியார்கள் அறத்தை தங்கள் முழுமையான வாழ்க்கை நெறியாகவே கருதினார்கள். அறங்கள் முப்பத்திரண்டு வகையாகக் கூறப்படுகின்றது. இவற்றில் பல அறங்களில் நாயன்மார்கள் நின்று ஒழுகியுள்ளனர் என்பதைச் சேக்கிழார் நன்கு புலப்படுத்துகின்றார். திருக்கோயிலில் தொண்டு செய்த அறுவரை இப்புராணம் இனம் காட்டுகின்றது. மூர்த்தி நாயனார் தம் கையையே சந்தனக்கல்மீது தேய்த்தார் என்று எண்ணும் போது அவரின் அறத்தொண்டின் பற்று எமக்கு நன்கு புலப்படுகின்றது.

*"நாளும் பெருங்காதல் நயப்புறும் வேட்கையாலே*
*கேளும் துணையும் முதற்கேடில் பதங்களெல்லாம்"*

என்று இவரைப் பற்றிச் சேக்கிழார் பாடியுள்ளார் இவ்வாறு சேக்கிழார் தொண்டினைத் தூய்மை, உண்மை, அறம், நீதி, அன்பு, அருள், தியாகம், பகிர்தல், தர்மம் போன்ற மனித வாழ்வியலுடன் தொடர்புபடுத்திக் காட்டுகின்றார்.

#### தமிழர் இசைமரபு

'இசை விளங்கிட இயல்பினில் பாடி நின்றேத்தி' என்று சேக்கிழார் இசைமரபுகளைப் பெரியபுராணத்தில் தொடங்கி வைத்துள்ளார். பண்ணிசை, இன்னிசை, தமிழிசை, ஏழிசை போன்ற இசைக்குறிப்புகள் இசைக் கருவிகள் பற்றிய குறிப்புக்கள் முதலியவற்றைச் சுட்டிக்காட்டுகின்றார்.

திருஞானசம்பந்தரின் புராணத்தில் தமிழர் இசையறிவுடன் சுருதி உணர்வும் மிக்கவர்கள் என்பதை சேக்கிழார் தமது பாடல் வழியாகத் தெளிவுறுத்துகின்றார்.

*"சொற்றமிழ் மாலையினிசைகள் சுருதி யாழ்முறை தொடுத்தே*
*அன்றை நாள் பாலொன்றும் அகலா தன்புடனமர்ந்தார்"*

தமிழர் அமுதச் சுவையுடைய இசைப்பாட்டை இசைத்துப்பாடும் திறமை வாய்ந்தவர்கள் என்பதை திருநீலகண்ட நாயனார், மதங்கசூளாமணி ஆகியோர் அக்கைங்கரியத்தில் ஈடுபட்டவர்கள் என்பதை மேல்வரும் பாடலில் சேக்கிழார் காட்டுகின்றார்.

*"திரு நீலகண்டத்துப் பெரும் பாணர் தெள்ளமுதின் வரு*
*நீர்மை இசைப்பாட்டு மதங்க சூளாமணியர்"*

சேக்கிழார் பண்ணிசைக் கருவிகளாக விபஞ்சி, வீணை, யாழ், குழல், சங்கு, தாளம், கொம்பு, கின்னரம், தாரை முழவு, தண்ணுமை, படகம், சிறுபறை, பேரிகை, பம்மை, முரசு, உடுக்கை போன்ற தாள இசைக் கருவிகளையும் அடியார்கள் பலரின் வரலாறுகளிற் பதிவு செய்திருப்பது கூறத்தக்கது.

மேலே கூறப்பட்ட செய்திகளின் மூலம் சேக்கிழாரின் பெரியபுராணம் சமய சமூக சிந்தனை மரபுகளை விபரிக்கும் பெட்டகம் என்பது தெள்ளத் தெளிவாகின்றது. சேக்கிழார் இவ்வாறான திருத்தொண்டர்களின் மாக்கதைகளைப் பாடியிருக்காவிட்டால் தமிழ், சைவ உலகம் பெரியபுராணம் என்னும் பெட்டகத்தை இழந்திருக்கும் அதன் மூலம் சைவ சமயமும் சமூக வாழ்வியலும் குறைபட்டிருக்கும் என்றும் கூறுவதில் தவறில்லை.

*"தெய்வ வருட் சேக்கிழார் செந்தமிழ் நூல் யாத்திலரேல்*
*உய்யு நெறி நீறஞ் செழுத்துண்மை சைவமறை*
*மூவர் தமிழ் மூலரம்மை வேந்திருவர் பாட்டமிழ்தம்,*
*யாவருணர் வாருய்ய இங்கு"*

(சு. து.)

# பெரியாழ்வார்

தென்பாண்டிநாட்டின் ஸ்ரீ வில்லிபுத்தூரில், வடபத்ரசாயி இறைவனைச் சேவித்து வந்த வேயர் குல அந்தணர் மரபில் குரோதன வருடம் ஆனிமாதம் சுக்கில பட்சத்து ஏகாதசி சுவாதி நட்சத்திரத்தில் அவதரித்தவரே பெரியாழ்வார் ஆவார். தந்தையார் - முகுந்தபட்டர், தாயார் - பத்மவல்லி, விஷ்ணுசித்தன் எனும் நாமத்தை இயற்பெயராகக் கொண்ட இவர், பிறந்த ஊரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பிலே, தம்மை 'வில்லிபுத்தூர்க்கோன்' என்றும் 'புதுவை மன்னன்' என்றும் தமது பாசுரத் திருமொழிகளின் நிறைவில் அமைத்துள்ள முத்திரைக்கவிகளில் தெரிவித்துள்ளார். எனினும், இறைவனுக்கே பல்லாண்டு பாடிய சிறப்பால், பக்த பரம்பரையில் வழங்கப் பெற்ற பெரியாழ்வார் எனுந் திருநாமமே இவர்க்குரியதாய்ப் பெருவழக்காயிற்று.

மதுரையிலே சீவல்லப பாண்டியன் (கோ நெடுமாறவர்மன்) அவையில், சமய வாதஞ்செய்து பலரையும் இவர் வென்றதனால், அரசனால் பொற்கிழியும், பட்டர் பிரான் எனும் சிறப்புப்பெயரும் வழங்கப்பெற்றவர். பெரும்பான்மையும் சைவர்களாக விளங்கி வந்த பாண்டிய அரச வம்சத்தினருள், சீவல்லப பாண்டியனும், அவன் மகன் பராந்தகன் நெடுஞ்சடையனும் வைணவத்தைச் சார, பெரியாழ்வாரே பெருங்காரணர் என்பர்.

நின்றசீர் நெடுமாறனின் பேரனாகிய சீவல்லப பாண்டியனைத் தமது திருமாலிருஞ்சோலைப் பாசுரத்துள் பெரியாழ்வார் குறிப்பிடுவதனால் ("கொன்னவில் கூர்வேல் கோநெடுமாறன்") அவன் காலமாகிய கி. பி. எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இவர் வாழ்ந்துள்ளமை துணிபு. இதனால், 85 ஆண்டுகள் வாழ்ந்தவர் எனக் கருதப்படுகின்ற பெரியாழ்வார் வாழ்க்கைக் காலம் கி.பி. 690 முதலாக 775 வரையானது என்பார் மு. இராகவையங்கார்.

கருட அம்சமாகச் சிறப்பிக்கப்படுகின்ற பெரியாழ்வார், திருநந்தவனம் அமைத்து மாலைகட்டுதலாய திருத்தொண்டிலே தலைநின்றவர். இவர் பாடிய திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி இரண்டும், நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தின் முதலாயிரத்துத் தொடக்கத்தே வைக்கப்பட்டுள்ளன. இவ் விரண்டினையும் தனித்தனிப் பிரபந்தகளாகக் கொள்வர் தென்கலை வைணவர். வடகலையாரோ, திருப்பல்லாண்டைத் திருமொழியின் தொடக்கமாகக் கொண்டு ஒரே பிரபந்தமாகக் கருதுவர்.

இறைவனுக்குப் பல்லாண்டு பாடுவதானல் (மங்களாசாசனம் செய்வதனால்) "திருப்பல்லாண்டு" எனும் பெயர் பெற்ற பிரபந்தத்தில் 12 பாசுரங்கள் விளங்குகின்றன. குறள்வெண் செந்துறை யாப்பிலமைந்த முதற்பாசுரம் இரு அடிகளையுடையது. ஏனைய 11 பாசுரங்களும் தலா நான்கடிகளுடைய அறுசீர் ஆசிரிய விருத்தப்பாக்களாம். இப்பிரபந்தத்தில் திருமால், திருமகள் இருவர்க்கும் சங்கு, சக்கரம் ஆதியனவற்றுக்கும் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது.

பெரியாழ்வார் திருமொழி 461 பாசுரங்களை உடையது. வேதம் எனும் பொருளதான "திருமொழி" எனும் பதம், ஆக்கியோன் பெயரோடு இணைத்து இவ்வாறு வழங்கப்படுகின்றது. பெரும் பிரிவுகள் எனப்படத்தக்க 5 பத்துகளாக இது வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பத்தும் தலா 10 பதிகங்களை (வைணவ சம்பிரதாயத்திலே திருமொழிகளை) உடையது. எனினும், முதற் பத்து 9 திருமொழிகளோடும் ஐந்தாம் பத்து 4 திருமொழிகளோடும் இன்று விளங்குகின்றன. இதனால், திருமொழிகள் எண்ணிக்கை 43 ஆகும். ஒவ்வொரு திருமொழியும் 10 அல்லது 11 பாசுரங்கள் கொண்டது. முதற் பத்தின் இரண்டாம் திருமொழியில் புறநடையாக 21 பாசுரங்கள் உள. பதிகப் பலன்களை உரைக்கும் முத்திரைக் கவிகளை (பல சுருதிப் பாக்கள்) திருமொழிகளின் நிறைவிற் காணலாம்.

பெரியாழ்வார் பாசுரங்களில், கண்ணபிரான் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தமை, கம்சனை வதைத்தமை, நரகாசுரனை வதைத்தமை, ருக்மணி, நப்பின்னை ஆகியோரைத் திருமணம் முடித்தமை, மல்லர்களை வதம் செய்தமை, சீதை சிறையிருந்தமை, பஞ்சவர்க்காகக் கண்ணபிரான் தூது நடந்தமை, பார்த்தனுக்குத் தேரோட்டியமை முதலாய புராண, இதிகாசக் கதைகள் பல குறிப்பிடப்பட்டுள்ளன. திருமாலிருஞ்சோலை, திருக்கோட்டியூர், திருவரங்கம் ஆகிய தென்னகப் பதிகளும், ஓரிரு வட இந்தியப் பதிகளும் பாடப்பட்டுள்ளன. திருமாலின் அவதாரங்கள் பலவற்றையும் பெரியாழ்வார் குறிப்பிட்டுச் சென்றிருக்கின்றபொழுதும், கண்ணபிரான் அவதாரமே அவரைப் பெரிதுங் கவர்ந்து கொண்டுள்ளது. கண்ணனை, யசோதையாய் அழைத்து ஆழ்வார் பாடியுள்ள பாக்கள் பக்தி ரசமும் இலக்கியச் சுவையுங் கொண்டவை. தாலப்பருவம், அம்புலிப்பருவம், செங்கீரைப் பருவம், சப்பாணிப் பருவம், தளர்நடைப் பருவம், அச்சோப் பருவம் என்றவாறு ஆழ்வார் பகுத்துப் பாடியுள்ள திருமொழிகள்தாம் தமிழில் பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் தோற்றத்துக்கு வித்திட்டன. இதனால் சமய இலக்கிய வரலாற்றில் மிகமுக்கியத்துவம் உடையன.

மூக்குறிஞ்சி முலையுண்ணக் கண்ணனை அழைப்பதாகவும், அவன் சேற்றில் புரளுவதாகவும் காட்டும் பெரியாழ்வார் பாசுரங்கள், இயற்கைச் சித்திரிப்புத் திறன் மிக்கனவாகவும், வாய்மொழி இலக்கியப் பாரம்பரியத்தினை நெருங்கி நிற்பனவாகவும் உள்ளன.

பெரியாழ்வார் குறித்து வடிவழகிய நம்பிதாஸர், பாண்டியபட்டர் முதலியோர் பாடியுள்ளனர். வைணவ மரபிலே சிறப்பிக்கப்படுகின்ற ஆண்டாள், பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாவார். (ஸ்ரீ. பி.)

## பெரும்பற்றப் புலியூர் நம்பி

நம்பி என்பது ஒரு சிறப்புப் பெயர். சிவபிரானுக்கும் திருமாலுக்கும் வழங்குவது. இருவர் அடியார்களுக்கும் வழங்குவது. சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் ஒன்பதாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறையானது இருபத்தெட்டு திருவிசைப்பா பதிகங்களும் ஒரு திருப்பல்லாண்டு பதிகமும் கொண்டது. இத்திருமுறையைப் பாடினோர் ஒன்பதின்மர். இவ் ஒன்பதின்மர் காலமும் 10 ஆம் 11 ஆம் நூற்றாண்டுகளாகும். இவ் ஒன்பதின்மருள், நம்பி என்ற ஈற்றுச் சொல்லையுடையராக பூந்துருத்தி நம்பிகாடநம்பி, புருடோத்தம நம்பி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மேலும் பன்னிரு திருமுறைகளுள் பதினொராந் திருமுறையாசிரியர்கள் பன்னிருவருள் பதினொராவது ஆசிரியராக நம்பியாண்டார் நம்பி குறிப்பிடப்படுகின்றார். இவர் திருவிரட்டை மணிமாலை முதலிய பத்துப் பிரபந்தங்களை ஆக்கியளித்துள்ளார். வைணவ சமய வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தோர் வரிசையில் சொட்டை நம்பி, திருக்கச்சி நம்பிகள், திருமலை நம்பி ஆகியோர் குறிப்பிடப் படுகின்றனர்.

பெரும்பற்றப் புலியூர் நம்பி கி.பி 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அந்தண மரபினர். பாண்டி நாட்டில் மதுரைக்கு வடகிழக்கில் வைகையாற்றின் வடகரையிலுள்ள வேம்பத்தூர் என்னும் செல்லி நகரிற் பிறந்தவர். வேம்பத்துள் நிம்பை எனவும் வழங்கும் பாண்டி நாட்டில் வேம்பத்துள் சோழியார் குலத்தில் கௌணிய கோத்திரத்தில் பிறந்த வேதியர். இவர் ஊர் செல்லிநகர். இவர் ஒரு சைவர். இவர் வேம்பத்துள் சங்கத்தவர். இவர் திருவால வாயுடையார் திருவிளையாடல் பாடியவர். இவர் மரபினை தில்லை நடராசப் பெருமானிடம் பேரன்பு பூண்டவர்கள். இவரைத் தில்லை நம்பி எனவும் கூறுவர். இவருடைய ஞானாசிரியர் சிதம்பரம் மாளிகை மடத்திலிருந்த வெண்காடருடைய மாணவரான விநாயகர் என்பர். அக்காலத்திலிருந்த பாண்டியனொருவன் வேண்டிக் கொண்டதன் மேல் இவர் திருவிளையாடற் புராணம் பாடினார். இது திருவாலவாயுடையார் திருவிளையாடல் என வழங்குகிறது. **"முத்தமிழ்ச் சங்கத் தெய்வப் பாவலர் வீற்றிருக்கும் பாண்டி நன்னாடு போற்றி"** என்று அந்த நாட்டைத் திருவிளையாடற் புராணத்தை முதலாவதாக எழுதிய பெரும்பற்றப்புலியூர் நம்பி வாழ்த்துகிறார்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பாண்டியருடைய சாம்ராஜ்யம் மூன்றாம் தடவையாகத் தலைதூக்கி ஓங்கி மதுரையிலிருந்து ஒளிவீசத் தொடங்கியது. இக்காலத்தில் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்ற ஒரு சிறந்த புலவர் திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணம் என்ற பெயரில் மதுரை சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல்களைப் பற்றி வழங்கி வந்த கதைகளை எல்லாம் ஒன்று சேர்த்துத் தொகுத்து முதன்முதலாக ஒரு நூலை இயற்றினார். அந்நூலுக்கு, சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஓர் அருமையான பதிப்பை வெளியிட்டு, தமிழாராய்ச்சிக்குப் பெரும் பணி செய்த டாக்டர் உ.வே. சாமிநாதையர் எழுதுவதாவது. "திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமென்னும் இந்நூல் உத்தர மகா புராணம் என்னும் வடநூலின் ஒரு பகுதியிலிருந்து மொழி பெயர்த்து, செல்லிநகர் பெரும்பற்றப் புலியூர் நம்பியென்பவரால் செய்யுள் நடையாக இயற்றப் பெற்றது. உத்தர மகாபுராணம் என்னும் வடமொழி நூல் இப்பொழுது கிடைக்கவில்லை. இந்த நூல் கிடைக்காததால் இது எந்தக் காலத்தைச் சேர்ந்தது என்று கூற இயலாது. ஆனால் திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணந்தான் தமிழிலுள்ள திருவிளையாடல் புராணங்களில் காலத்தால் முந்தியது. இந்நூல் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தின் அம்பாள் சந்நிதியின் கோபுரத்தை ஆனந்த தாண்டவ நம்பி கி.பி 1227ல் கட்டியதற்கு முன்பு இயற்றப்பட்டிருக்க வேண்டுமென்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் கருதுகிறார்.

"மதுரை திருப்பணி மாலையிலுள்ள ஒரு பாட்டில் கூறப்பட்டுள்ள ஆனந்த தாண்டவ நம்பி அம்பிகையின் சந்நிதிக் கோபுரம் கட்டுவித்த காலம் சாலிவாகன சகாப்தம் 1150 (கி.பி-1227-28) என்று மதுரைக் கோயிலொழுகு தெரிவிக்கின்றமையால், ஆனந்த தாண்டவ நம்பி என்பவர் இன்றைக்கு 700 வருஷங்களுக்கு முந்தியிருந்தாரென்று மட்டும் தெரிகின்றது. அதற்கு முன் இந்நூலுடையார் காலம் இவ்வளவினதென்று தெரியவில்லை" என டாக்டர் உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த திருவாலவாயுடையார் புராணப் பதிப்பின் முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

இந்த ஆனந்த தாண்டவ நம்பியே பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பதும் அவரே திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தை எழுதியிருக்க வேண்டும் என்பதும் டி.வி சதாசிவ பண்டாரத்தார் என்பவரது கருத்தாகும். இந்த முடிவு ஏற்றுக் கொள்ளத் தக்கதாய் இருக்கிறது. ஆகவே தமிழிலுள்ள இந்த முதற் திருவிளையாடற் புராணம் மதுரையில் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சுமார் கி.பி 1230-40 இல் தோன்றிற்று எனக் கொள்ளலாம்.

இந்தத் திருவிளையாடற் புராணத்தில் தான் சிவ பெருமானுக்கும், தமிழ், தமிழ்ச்சங்கம், தமிழ்ப்புலவர் சிலருக்கும் தொடர்பு கூறும் திருவிளையாடல்கள் எல்லாம் முதல் முதலாகத் தமிழிலில் விரிவாய்ப் புராணப் பாங்குடன் கூறப்பெற்றிருக்கின்றன. இந்த நூல் இலக்கிய சரித்திர ஆராய்ச்சிக்கு மிகவும் இன்றியமை யாததாய் அமைந்திருக்கின்றது.

முதன்முதலாக, பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவால வாயுடையாரின் திருவிளையாடற் புராணத்தில் தான் முதற் சங்கம், இடைச்சங்கம் ஆகியவைகளைப் பற்றிப் பிரஸ்தாபம் செய்யப்பட்டிருக்கின்றது. இந்தப் பாட்டு, கடல் சுவார வேலெறிந்த திருவிளையாடல் அதிகாரத்தின் இறுதியில் காணப்பெறுகிறது.

*"மனத்தின்பம் பயக்கும் பொன்மதிட் டங்குந் தமிழ்க்*
*கூடற்றனித் தென்றுஞ் சிறக்குந் தண்டமிழ்சங்கந் தனைப்பண்பி*
*னினைக்*
*கீங் கண் முதற் சங்கம் மிடைச்சங்கந் நிலைத்தாகு*
*மினிச் சங்கம் புனற் கங்கைக் கரைப்பங்கின் புறத்தென்ப"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரை மாநகரத்தில் சிவபெருமான் செய்த திருவிளையாடல்கள் அறுபத்து நான்காகும். அவையானவை:

1. குருவையிழந்த இந்திரனது சாபத்தைப் போக்கியது.
2. வெள்ளை யானைக்குத் துர்வாசகரால் வந்த சாபந் தீர்த்தது.
3. கடம்பவனத்தையழித்து நாடாக்கியது.
4. உமாதேவியார் மலயத்துவச பாண்டியற்குத் தடாதகையாய்த் திருஅவதரித்தது.
5. சிவபெருமான் சோமசுந்தர பாண்டியனாக எழுந்தருளித் தடாதகைப் பிராட்டியாரைத் திருமணங் கொண்டது.
6. பதஞ்சலி, வியாக்ரபாத ரிஷிகளிருவருக்கும் வெள்ளியம்பலத் திருக் கூத்துத் தரிசனங் காட்டியருளியது.
7. தடாதகைப் பிராட்டியார் பொருட்டுக் குடையாளாகிய குண்டோதரனுக்கு அன்னமிட்டருளியது.
8. குண்டோதரன் பொருட்டு வைகையையும் அன்னக் குழியையும் வருவித்தது.
9. தடாதகைப் பிராட்டியாரின் வேண்டுகோளுக் கிரங்கிக் காஞ்சன மாலையாட எழுகடல் அழைப்பித்தது.
10. காஞ்சன மாலையுட னீராடச் சுவர்கத்திருந்தி மலையத்துவசனை வருவித்தது.
11. தடாகைப் பிராட்டியிடம் உக்ரகுமார பாண்டியன் திருவவதரித்தது.
12. உக்ரகுமார பாண்டியற்கு வேல், வளை கொண்டருளியது.
13. கடல் சுவற வேலெறிந்தது.
14. அவ்வுக்ர குமாரன் தன்னுடன் எதிர்த்த இந்திரன் முடிமேல் வளையெறிந்தது.
15. மேருவிலிருந்த நிதியெடுக்கக் கொடாத மேருவைச் செண்டாலெறிந்தது.
16. வேதத்திற்குப் பொருளறியாது மயங்கிய இருடிகளுக்குப் பொருள் அருளிச் செய்தது.
17. பாண்டிய குமாரன் கிரீடத்தின் பொருட்டு மாணிக்கம் விற்றது.
18. மதுரை மீது வருணன் விட்ட கடலை வற்றச் செய்தது.
19. வருணன் ஏவிய மழையைத் தடுத்து நகரத்தை நான்மாடக் கூடலாக்கியது.
20. எல்லாம் வல்ல சித்தராய் எழுந்தருளிச் சித்துச் செய்தது.
21. சோதிக்க வந்த பாண்டியன் பொருட்டுக் கல்லானைக்கு கரும்பருத்தியது.
22. மதுரையை அழிக்கச் சமணர்களேவிய யானையை எய்தது.
23. கௌரியம்மையின் பொருட்டு விடுத்த குமாரர் பாலரானது.
24. பாண்டியனின் பொருட்டு கால்மாறியாடினது.
25. கொலைக்கஞ்சிய வேடன் பொருட்டுப் பழிக்கஞ்சி, வேண்டிய பாண்டியற்காக வணிகன் மனத்திற் காக்ஷி காட்டியருளியது.
26. தந்தையைக் கொன்று, தாயைப் புணர்ந்தான் மாயாதகந் தீர்த்தது.
27. வாட்படையாசிரியன் மனைவியை வலிமையிலிச் சித்த மாணாக்கனது அங்கம் வெட்டியது.
28. சமணர் மதுரை மீதேவிய நாகத்தை எய்தது.
29. சமணர் ஏவிய பசுவை நந்திதேவரை ஏவிக் கொல்வித்தது.
30. சவுந்தர சாமந்தனெனுஞ் சேனாதிபதியின் பொருட்டுப் போர்ச் சேவகராய் மெய்க் காட்டிட்டது.
31. பாண்டியனுக்கு உலவாக்கிழியருளியது.
32. மதுரை வீதியில் அவதரித்திருந்த இருடிபத்தினிகள் பொருட்டு வளையல் விற்றது.
33. இயக்கியர்களுக்கு அஷ்டமாசித்தி அருளிச் செய்தது.
34. சோழன் பொருட்டு மீன் இலச்சினையிட்டிருந்த கதவைத் திறப்பித்துத் தரிசனஞ் தந்து அவன் மீண்ட பின் இடபக் குறியிட்டது.
35. பாண்டியன் படைக்குத் தண்ணீர்ப் பந்தல் வைத்தது.
36. பொன்னனையாள் பொருட்டு ரசவாதஞ் செய்தது.
37. மதுரை மீது படை கொண்டு வந்த சோழனை மடுவில் ஆழ்த்தியது.
38. வேளாளராகிய அடியவர் பொருட்டு உலவா நெற் கோட்டையருளியது.
39. தாயத்தார் வழக்கிட மயங்கிய வணிகன் முருகன் பொருட்டு மாமனாக வந்து வழக்குத் தீர்த்தருளியது.
40. வரகுண தேவர் பொருட்டுச் சிவலோகம் காட்டியருளியது.
41. இசைவல்ல பாணபத்திரர்க்குப் பகைவனை விறகனாய் இசைபாடி ஓட்டுவித்தது.
42. பாணபத்திரர் பொருட்டுச் சேரமான் பெருமாணாயனாருக்குத் திருமுகந் தந்தருளியது.
43. அப்பாண பத்திரர் மழையால் வருந்தாது பாடப் பலகையிட்டது.
44. ஈழதேசத்துப் பாணவல்லானைப் பாணபத்திரர் மனைவி வெல்ல அருள் செய்தது.
45. தாயிழந்த பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்தது.
46. பன்றிக்குட்டிகளைப் பாண்டியர்க்கு மந்திரியர் ஆக்கியது.
47. கரிக்குருவிக்கு உபதேசஞ் செய்தருளியது.
48. நாரைக்கு முத்தி கொடுத்தருளியது.
49. பிரளயத்தழிந்த மதுரை மாநகரின் எல்லையை அரவகங் கணத்தால் அறிவித்து ஆலவாயாக்கியது.
50. பாண்டியன் பொருட்டுப் படைத்துணை சென்று சுந்தரப் பேரம் பெய்தது.
51. நக்கீரர் முதலிய புலவர் பொருட்டுச் சங்கப் பலகை தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. பாண்டியன் ஐயம் தீர்த்த தருமிக்குக் கவி தந்து கிழியறுத்துந் கொடுப்பித்தது.

53. தருமிக்குத் தந்த கவிக்குக் குற்றங் கூறிய நக்கீரரைப் பொற்றாமரைத் தீர்த்தத்தில் வீழ்வித்துப் பின் கரையேற்றியது.

54. கீரருக்கு இலக்கணம் உரைப்பித்தது.

55. சங்கத்தார் கலகத்தை மூங்கைப் பிள்ளையால் தீர்ப்பித்தது.

56. பாண்டியனுடன் கோபித்து நீங்கிய இடைக்காடர் பிணக்குந் தீர்த்தருளியது.

57. பரதர் குலப் பெண் பொருட்டு வலைவீசி அவளை மணந்தருளியது.

58. வாதவூரடிகளுக்கு உபதேசித்தது

59. அரசனுக்கஞ்சிய வாதவூரர் பொருட்டு நரிகளைப் பரிகளாக்கியது.

60. பாண்டியனுக்கு அளித்த பரிகளை நரிகளாக்கியது.

61. வாதவூரடிகள் பொருட்டு வைகைவெள்ளம் வருவித்து அதை அடைக்க ஏவிய வந்தி பொருட்டுக் கூலியாளாகச் சென்று பிட்டுக்கு மண் சுமந்தது.

62. திருஞான சம்பந்த சுவாமிகளால் கூன் பாண்டியனின் சுரத்தையும் கூனையும் நீக்குவித்தது.

63. சம்பந்த சுவாமிகளின் வாதத்திற் தோற்ற சமணர் கழுவேறியது.

64. வணிகப் பெண்ணுக்குச் சாட்சியாக வன்னியும் கிணறும் இலிங்கமும் வருவித்தது.

இவர் பாடிய திருவிளையாடலைப் பாண்டியன் அவையில் அரங்கேற்றிய போது பாண்டியன் இவர் பிறந்த செல்லி நகரை முந்நூட்டாகக் கொடுத்துப் பல்லக்கு முதலிய சிறப்புக்களையுஞ் செய்து பாராட்டினான். இந்நூலை இவர் எழுதிய போது தங்கியிருந்த ஊர் மதுரைக்குக் கிழக்கேயுள்ள மழைக்குப் புணை கொடுத்த மங்கல நாடென்பர். இது கார்வளங் கொள் மண்டல மெனவும் வழங்கும்.

உமாபதிசிவம் என்பவர் பதினான்காம் நூற்றாண்டில் கோயில் புராணம் என்னும் தல புராணம் பாடினார். அதற்குப் பிறகு அதையொட்டி எழுந்த பல நூல்கள் பல. தல புராணங்களுள் புகழ் பெற்றவை மதுரையில் உள்ள சிவபெருமானின் அறுபத்து நான்கு திருவிளையாடலைக் கூறும் புராணங்களே. வேம்பத்தூரார், பெரும் பற்றப் புலியூர் நம்பி, பரஞ்சோதி என்னும் புலவர்கள் திருவிளையாடற் புராணங்கள் இயற்றியவர்கள். பரஞ்சோதி இயற்றிய திருவிளையாடலே இன்று பெரிதும் போற்றப்பட்டு வருகிறது. அவருடைய விருத்தப் பாக்கள் இனிமையும் தெளிவும் உடையனவாக இருத்தலே அதற்குக் காரணம் ஆகும்.

(ப. க.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பே

## பேயாழ்வார்

முதலாழ்வார்களுள் மூன்றாமவராகக் கொள்ளப்படுகின்ற இவர் மயிலாப்பூரில் ஐப்பசி மாதச் சதய நட்சத்திரத்திலே அவதரித்தவர். ஆக்கவுங் கெடுக்கவும் பாடவல்ல இருடிகளுள் ஒருவராக யாப்பருங்கல விருத்திகாரராலே உரைக்கப்படும் இவர் ஒரு துறவி. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் அடுத்த நூற்றாண்டுத் தொடக்கம் வரை இவர் வாழ்ந்தார் என்பர்.

திருநந்தவனத் திருத்தொண்டிலே தலைநின்றவரான இவர், சமகாலத்தவரான பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் இருவரொடும் மழைநாள் இரவொன்றிலே, திருக்கோவலூரில் ஒரு வீட்டின் இடைகழியில் ஒதுங்கினார் என்றும், திருமால் தாமும் இவர்களுக்கிடையே நான்காமவராக இருந்து இருளிலே நெருக்கத்தை உண்டுபண்ணினார் என்றும், இம்மூவரும் இறையை ஞானவிளக்கின் துணையாலே கண்டு ஆனந்தித்தனர் என்றும், இந்த அனுபவ வெளிப்பாடாய் பேயாழ்வார், 'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்' என்பது முதலாக மூன்றாம் திருவந்தாதியை அருளிச் செய்தார் எனவும் ஆழ்வார்கள் வரலாறு குறித்த கதைகள் கூறுகின்றன. வில்லிபாரதத்துக்கு வரந்தருவார் தந்துள்ள சிறப்புப்பாயிரமும், வேதாந்த தேசிகரது தேசிகப் பிரபந்தமும் இச்சம்பவத்தைக் கூறுகின்றன.

100 நேரிசை வெண்பாக்களைக் கொண்ட இவர் பிரபந்தம், நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தின் மூவாயிரத்தில் இரண்டாந் திருவந்தாதியை அடுத்து வைக்கப்பட்டுள்ளது. தமது மூன்றாந் திருவந்தாதியிலே, திருவரங்கம், திருமலை, திருவல்லிக்கேணி, திருவெஃகா, திருவேளுக்கை உள்ளிட்ட 15 திருப்பதிகளை இவர் மங்களாசாசனம் செய்திருக்கின்றார்.

மூவடியால் உலகளந்தமை, இரணியன் ஆகம் கீண்டமை, இலங்கையர்கோன் வீழ இலங்காபுரம் எரித்தமை முதலிய பல அவதாரச் செயல்களில் ஈடுபட்டபோதும் ஆழ்வார் பெரிதும் மூழ்கிப் பாடியது கண்ணாவதார லீலைகளிலேயே. எழு பிறப்பும் பெருமாளுக்கு அடிமை செயும் பேறு வேட்கும் ஆழ்வார் இறையின் திருக்கண், திருக்கை, திருத்தாள் முதலியவைகளைத் தாமரைகளாகக் கண்டு அவன் திருவடிவ அழகில் திளைத்தவர். 'நல்நெஞ்சே நாம் தொழுதும்' என்று நெஞ்சுக்குப் பன்முறையும் அறிவுறுத்தியவர். எப்பொருளாயும் இறை இருக்கின்ற தன்மையையும் அதேவேளை அவ்விறை தானே தனக்கு உவமனாய் இருக்கின்ற தன்மையையும் பாடியவர்.

வேதங்கள், பாற்கடல், பாம்பணை, மலராள் தனம், பக்தர் மனம், திருவேங்கடம் முதலிய திருப்பதி முதலியவற்றைத் திருமாலின் திவ்விய இருப்பிடங்களாகச் சுட்டும் ஆழ்வார் தமது மூன்றாம் திருவந்தாதியிலே திருப்பதிகளை மங்களாசாசனம் செய்கையில் குரங்கு முதலியவற்றின் செயற்பாடுகளைச் சித்திரித்திருப்பதனூடு பாசுரங்களை அணியிலக்கணஞ் சிறந்தனவாயும், குறிப்புப் பொருள் தருவனவாகவும் அமைத்திருக்கின்றார்.

இவ்வாழ்வாரை முன்னிட்டு குருகை காவல் அப்பன் முதலியோர் தனியன்கள் பாடியுள்ளனர்.

இவர், எட்டுலட்சத்து ஆறாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றொராவதான சித்தார்த்தி வருடம், நந்தக அம்சமாக, பொய்கை ஒன்றில் அல்லி மலரிலே அவதரித்தவரெனக் குருபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. (ஸ்ரீ. பி.)

## பேரியாழ்

பழந்தமிழரின் இசைக் கருவியான யாழ் வகைகளுள் இதுவுமொன்றாகும். பேரியாழ் என்னும் பெயரிலிருந்து இது பெரிய உருவம் கொண்ட யாழ் என்று அறியப்படலாம் என நூல்கள் கூறுகின்றன. இது பெருங்கலம் எனவும் பரவையாழ் எனவும் பெயர்கொண்டது

*"ஆரியப் பதங்கொள் நாரதப் பேரியாழ்"*<br>*"தும்புரு கருவியுந்துன்னி நின்றிசைப்ப"*<br>*"கீசகப் பேரியாழ் கிளையுடன் முரல"*

என்னும் கல்லாடக் குறிப்புக்களிலிருந்தும்

*"ஆயிரம் பேரியாழ் ஆதியாழெனப் பெயர்பெறும்"*<br>*ஆயிரம் நரம்பிற்றாதி யாழாகும்"*

-பிங்கலந்தை

*"பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்*<br>*சீர் பொலி செங்கோடு செப்பினராற் - நார்பொலிந்த*<br>*மன்னன் திருமாறன் வண் கடற்கோமானே*<br>*யின்ன முளவே சில"*

பஞ்சமரபு - (யாழ்மரபு-இசை மரபு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"பெருங் களிறடக்கிய பெறற் கரும் பேரியாழ்*
*மகர யாழின் வான்கோடு தழீஇ"*

-மணிமேகலை

போன்ற நூல்களில் குறிப்பிடப்படும் குறிப்புக்களிலிருந்தும் நாரதயாழ், தும்புருயாழ், கீசகயாழ், ஆதியாழ் ஆகியவை பேரியாழுடன் தொடர்புடையவை எனத் தெரிகின்றது. கல்லாடக் குறிப்புக்கள் நாரதயாழும் தும்புரு யாழும் ஒன்பது நரம்புகளைக் கொண்டவை என்றும் தும்புரு யாழின் ஒன்பது நரம்புகளில் ஒன்று சுருதி நரம்பு என்றும், கீசக யாழ் 100 நரம்புகளைக் கொண்டது என்றும் உணர்த்துகிறது. நிகண்டுக் குறிப்புக்கள் ஆயிரம் நரம்புகள் கொண்ட பேரியாழ் "ஆதியாழ்" எனப்பெயர் கொண்டு முன் காலத்தில் இருந்தது என்று உணர்த்துகிறது. ஆனால் "பேரியாழ் முதலியன ஏலவும் இறந்தெனக் கொள்க" என்னும் அடியார்க்கு நல்லார் உரைப் பாயிரத் தொடர் ஆயிரம் நரம்புகள் கொண்ட ஆதியாழ் அடியார்க்கு நல்லார் காலத்தின் முன்னரே இறந்துபட்டது என்பதை உணர்த்துகின்றது.

ஆயிரம் நரம்புகளும் அறுந்து போகாமல் சுருதி கூட்டுவது கடினமாக இருந்திருக்கும். இக்கருவியை இடத்துக்கிடம் எடுத்துச் செல்வதில் இதன் வடிவு. அளவு ஒரு தடையாக இருந்திருக்கும். இது போன்ற சில காரணங்களால் ஆதியாழ் இறந்து பட்டிருக்கலாம். இவ்வாறு இக்கருவி இறந்து பட்டிருப்பினும் பேரியாழ் என்ற நரம்புகளின் அடிப்படையிலான பெயர் மாற்றம் இல்லை. பஞ்ச மரபு காலத்தில் அதிக நரம்புகளின் எண்ணிக்கை 21 என வரையறை செய்யப்பட்டு அதற்கு பேரியாழ் என்று பெயரிட்டு இருக்கலாம். நரம்புகள் 21 என்பதனை புறநானூறும் சிலப்பதிகாரமும் பின்வருமாறு கூறுகின்றன.

*"இருபத்தொரு நரம்பினாற் தொடுக்கப்படும் பேரியாழ்"*

புறநானூறு (152ம் செய்யுள்)

*"இருபத்தொரு கோவை முதலாக நானாற்*
*கோவையீறாகக் கிடந்த கோவைகளுள்"*

என வேனிற்காதையும் கூறுகின்றன.

பஞ்ச மரபு உரையில் பேரியாழுக்கிலக்கணமாகப் பின்வரும் செய்யுள் காணப்படுகின்றது.

"கோட்டத்தளவே பதினொருசாணே
பத்தலளவே யேழு சாணாகும்
புட்டிலளவே முச் சாணாகும்
பொதிகை யெருந்தற் தலையே முகனோ
டேதமின்றி இயைந்த வகை கொளல்
தந்திரி தானும் பதின் முச் சாணே
யவ்வுறு திவ்வே யான்றோ ரதற்குக்
கவ்வரி முண்டகங் கட்டுதல் மரபே"

இதிலிருந்து பேரியாழ், கோடு, பத்தல், புட்டி, தந்தரி, திவ்வு, முண்டகம் ஆகிய உறுப்புக்களைக் கொண்டது என்றும், இவற்றின் அளவுகளாக கோட்டின் அளவு 11 சாண், பத்தல் அளவு 7 சாண், புட்டி 3 சாண், தந்திரி 13 சாண் என்றும் தெரிகின்றது. சுவாமி விபுலானந்தர் சாண் என்பது தற்கால மேனாட்டு அளவின்படி ஒன்பது அங்குலம் எனக்கருதுகிறார்.

(யாழ் நூல்)

இந்த அளவின் படி பேரியாழின் அளவு தற்போதைய வீணை தம்புராவைக் காட்டிலும் இருமடங்காக இருந்திருக்கும் என்று ஊகிக்கலாம். எனவே இக்கருவி ஏதேனும் ஓரிடத்தில் நிலையாகப் பொருத்தி வைக்கப்பட்டு திருவிழா போன்ற காலங்களில் மட்டும் பயன்பட்டிருக்கலாம். பேரியாழ் கி.பி எட்டாம் நூற்றாண்டு வரையில் வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்றும் எட்டாவது நூற்றாண்டுக்குப் பிறகு இது படிப்படியாக வழக்கொழிந்து போயிற்று என்னும் ஊகிக்கலாம் கி.பி எட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சீவக சிந்தாமணியிற் பரவையாழ் என்பதற்கு பேரியாழ் என்று உரையில் கூறப்பட்டுள்ளது.

(ஹ. தே.)

## பேரீதாடனம்

நாதத்துவமே பிரபஞ்ச சிருஷ்டிக்கு மூல காரணம் நடராஜமூர்த்தியின் வலக்கரமொன்றில் இருக்கும் உடுக்கிலிருந்து பிறக்கும் ஓசையே ஒலிகள், மொழிகள், இசைகள் என்பனவற்றிற்கும் சகல சிருஷ்டிக்கும் ஆதாரமாக இருக்கின்றது. சரஸ்வதி வீணை வாசிப்பதும், கண்ணன் வேயங்குழல் ஊதுவதும் நாரதர் தம்புரா இசைப்பதும் நடராஜ தாண்டவத்தின் போது மகாவிஷ்ணு தாளம் கொட்டுவதும் நந்தி மத்தளம் வாசிப்பதும் குறிப்பிடத்தக்கன.

இங்ஙனம் படைத்தல் தொழிலைக்கு நிற்கும் கொடியேற்ற விழா ஆரம்பத்தில் நாதத்துவத்தைப் பேரி எனப்படும் மேளத்தில் பூஜித்து மந்திரசகிதமாக குரு, மேளத்தில் ஒலியெழுப்பி சகல தேவர்களையும் அங்கு எழுந்தருளும் படி வேண்டுதலே பேரீதாடனமாகும்.

மண்டபத்திலே அரிசிமாவினால் கோலமிட்டு நெல் மேடைப் பரப்பி இரு மண்டலங்கள் அமைத்து முதலாவதில் அஸ்திரதேவரையும் இரண்டாவதில் மேளவாத்தியத்தையும் வைப்பர். பூர்வாங்க கிரியைகளின் பின்னர் அஸ்திரதேவரைப் பூசித்து மேளத்திலே நாத தத்துவத்தை ஆவாகனம் செய்து பூசை செய்வர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேளம் அடிக்கும் கம்பினை சிவசக்தி ரூபமாக பாவனை செய்து சிவாச்சாரியார் அதனை எடுத்து வேத மந்திரங்களை கூறி முறையே ஒருமுறை, இருமுறை மும்முறை என்ற வகையில் மேளத்தை அடித்துப் பின்னர்

*"இன்ன தெய்வத்திற்கான மகோற்சவ விழாவை நடத்துவதற்கான சகல தேவர்களையும் இங்கு அழைக்கின்றேன். சகல மங்கல வாத்தியங்களையும் இப்போது ஆரம்பித்து வைக்கின்றேன்"*

என்று பிராத்திப்பர். பேரீ தாடனம் என்னும் இக்கிரியை சில இடங்களில் கும்ப பூசை ஆரம்பமாகும் போதே செய்து விடுவதுண்டு. (தே. ஹ.)

## பேலூர் சென்ன கேசவர் ஆலயம்

ஹொய்சாலர் பாணியில் விஷ்ணுவர்த்தனனின் ஆட்சியில் கட்டப்பட்ட மிகச் சிறந்த கோயில் கர்நாடக மாநிலத்தில் உள்ள பேலூர் சென்ன கேசவர் ஆலயமாகும். தலைக்காட்டில் சோழர்களை வெற்றி கொண்டதன் நினைவுச் சின்னமாக விஷ்ணுவர்த்தனன் பேலூர் கோவிலைக் கட்டினான். கேசவர் கோவில் உள்ள விஷ்ணுவின் பெயர் விஜய நாராயணன் என்று அழைக்கப்படுவது விஷ்ணுவர்த்தனனின் வெற்றியைக் குறிப்பிடுவதற்காகவேயாகும்.

மற்றக் கோவில்களில் உள்ளது போலவே இங்கும் கர்ப்ப க்கிரகமும் அர்த்த மண்டபமும் தூண்கள் அமைந்த முன் மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. கோவிலின் உள் மண்ட பமானது தூண்கள் வைத்த ஒரே மண்டபமாக இருப்பதற்குப் பதிலாக தூண்களாலான ஒருமைய மண்டபமும் அதைச் சுற்றி பல்வேறு கோவில் மண்டபங்களுடன் அமைக்கப்பட்டு நுணுக் கமாக வடிவமைக்கப்பட்ட ஒரு நட்சத்திரம் போன்று இக்கோவில் காட்சியளிக்கின்றது. இத்தகைய அமைப்பு மற்றக் கோயில்களில் இல்லாத ஒன்றாகும்.

ஹொய்சாலர் பாணி கட்டட அமைப்பில் கட்டப்பட்ட கோவில்கள் பெரும்பாலானவற்றில் ஒரே கோவில் கட்டடம் இருப்பதற்குப் பதிலாக இரட்டைக் கோவில்களை ஒன்றாக அமைத்திருப்பதைக் காணலாம். மூன்று நான்கு மற்றும் ஐந்து கோவில்களைக் கொண்டதாகவும், ஒரு கோவிலின் கட்டட அமைப்புக்கள் உள்ளது.

ஒவ்வொரு கர்ப்பக்கிரகத்திலிருந்தும் மேலே சிகரத்திற்கு எழுப்பப்படும் கோபுரத்தின் அமைப்பு கிடைமட்ட கோடுகளாலும் அலங்கார வளைவுகளாலும் அழகுபடுத்தப்பட்டு, பல்வேறு அடுக்குகளாகக் குறைந்து உச்சியில் குறுக்கலாக ஒன்று சேர்வதாக உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கோவிலுக்கு மூன்று வாயில்கள் இருக்கின்றன. தென்புலம் இருப்பது வெள்ளிக்கிழமை வாயில் என்பர். வடபுறம் இருப்பது தெய்வீக வாசல் என்பர். இக்கோயிலின் பிரதான வாசல் கிழக்கு நோக்கியது. இது மகாத் வாரம் என்ற பெயருடன் உயர்ந்த கோபுரத்தை தாங்கி நிற்கின்றது. இக் கிழக்கு வாசலின் மதிலை ஆனே பாசிலு என அழைக்கின்றனர். இந்த வாயிலிலே மன்மதன், இரதி சிற்பங்கள் அழகாக இருக்கின்றன. மேலும் மகாபாரதம், இராமாயணம் முதலிய இதிகாசக் காட்சிகளும் செதுக்கப்பட்டி ருக்கின்ற இந்த வாயிலைக் கடந்து வெளிப் பிரகாரத்தில் நுழைந்து அங்கு சென்ன கேசவரை எதிர் நோக்கி நிற்கும் கருடனையும் வணங்கி பின்னே கோயிலுக்குள் செல்லவேண்டும். இங்குள்ள பிரதான கோயில் 178 அடி நீளமும் 156 அடி அகலமு முள்ள ஒரு உயர்ந்த பீடத்தின் மேல் கட்டப்பட்டிருக்கின்றது.

கோயிலின் சுவர்களில் ஏழு, எட்டு வரிசையில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அடியில் உள்ள வரிசையில் யானைகள் ஒன்றையொன்று துரத்திக் கொண்டும், சிறிய கொடிகள், நடனப் பெண்கள், ஹரிஹரன், சிவனது மூர்த்தங்கள், பரசுராமன், வாமனன், வாசுகி, சூரிய நாராயணன், மஹிஷமர்த்தனி, அர்ச்சுனன் முதலிய வடிவங்களும் நிறைந்திருக்கின்றன. இவற்றில் சிறப்பானவை பெண்மையின் வடிவங்களே, பொட்டிடும் நங்கை, கிளி ஏந்திய பெண், ஆடையில் தேள் ஒன்றிருக்கிறது என்று தெரிந்ததும் ஆடையை உதறிவிடும் மங்கை, காதலனை எதிர் நோக்கி நிற்கும் காதலி என்ற வகையில் எண்ணிறந்த பெண்கள் சிற்பங்களாக உள்ளனர்.

கோயிலினுள் முதலில் இருப்பது நவரங்க மண்டபம், இந்த மண்டபத்தைத் தாங்கி நிற்கும் தூண்கள் ஒவ்வொன்றும் அற்புத வேலைப்பாடுகள் அமைந்தன. இவைகளில் சிறப்பானவை இரண்டு ஒன்று நரசிம்ம வடிவம் தாங்கியது. இன்னொன்று மோகினி வடிவம் தாங்கியது. ஒவ்வொரு தூண்களுக்கும் விதானத்திற்கும் இடையில் மதனிகை வடிவங்கள் அமைக்க ப்பட்டுள்ளன. இவை மிகவும் அழகு வாய்ந்தவை. இவைகளில் ஒன்றே நடன சரஸ்வதி, இந்த வடிவங்களை அமைப்பதில் மிகுந்த அக்கறை எடுத்து இருக்கின்றார். சிற்பி என்பதனை சிற்பங்களின் அமைப்பினைப் பார்த்துப் புரிந்து கொள்ளலாம். அதேபோன்று அந்த ஆலயத்தின் வாயிலில் உள்ள இரண்டு துவார பாலகர்கள் சிற்பங்களும் மிகுந்த வனப்பு மிக்கவை.

இக் கோயிலின் பிரகாரத்தில் தென் கிழக்கு மூலையில் கப்பே சென்னகராயர் கோவில், மேற்கில் வீரநாராயணர் கோயிலும், ஆண்டாள் கோயில்களும் உள்ளன. கப்பே சென்னகராயர் கோயில் இரண்டு கருவறையுள்ளது. ஒன்றில் சென்னகராயரும் மற்றொன்றில் வேணு கோபாலனும் இருக்கின்றார்கள். இந்தக் கோயிலிலும் நிறைய சிற்ப வடிவங்கள் உண்டு. லக்ஷ்மி, நாராயணன், சரஸ்வதி, விநாயகர், மஹிஷமர்த்தனி முதலியோர் சிற்பங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்று விஷ்ணுவர்த்தனின் பட்டத்து மகிஷி சகுந்தலதேவி சங்கீதம் மற்றும் நாட்டியத்தில் வல்லவள் என்று கூறுகின்றது. இங்குள்ள கல் ஸ்தம்பத்தில் இரண்டு வடிவங்கள் காணப்படுகின்றன. அவை விஷ்ணு வர்த்தனனும் அவனது பட்டத்து மகிஷியும் என்று கருதப்படு கின்றது. (தே.ஹ.)

## பேஷயானி

பேஷயானி என்ற பெயரால் அதர்வ வேதம் குறிப்பிடப்படினும் இது அதர்வ வேதத்தின் ஒரு பகுதியேயாகும். வேதத்தின் மந்திரங்களான நான்கினையும் கூறும் சந்தர்ப்பம் ஒன்றில் இருக்கு, யசுர், சாமானி பேவுஜா என்னும் சொற்றொடரில் அதர்வவேதத்தைக் குறிக்க வரும் பேஷயா என்னும் சொல் அதன் கருத்தை பொறுத்த அளவில் அவ்வேதம் முழுவதையும் சுட்டாது இதன் ஒரே ஒரு பிரிவை மட்டும் குறித்து நிற்கத்தக்கது. எனினும் இது அதர்வவேதம் முழுவதையுமே குறிக்கின்றது என்பதைச் சந்தர்ப்பம் நோக்கி நாம் உய்த்துணரல் வேண்டும். இந்திய இலக்கியப் பரப்பில் சிறப்பாகச் சமயநூல்களில் இவ் வேதத்தைப் பற்றிக் குறிப்பிடும் இடங்களிலெல்லாம் இவ் வேதத்தின் நன்மையைக் குறித்து வரும் பகுதிகளைக் கருத்திற் கொண்டே அதர்வம் எனவும், பேஷயானி எனவும் சாந்தம் எனவும் பௌஷ்டிகம் எனவும் அவ்வவ் நூலாசிரியர் குறிப்பிடுவர். பேஷயானி என்று அதர்வ வேதம் கூறும் பகுதிகள் மக்களுக்கு நன்மை விளைவிக்கும் கிரியைகளைச் சுட்டுவனவாக அமைந்துள்ளன.

அதர்வவேத சங்கிதையிற் பேஷயானி எனும் இனத்தைச் சார்ந்த மந்திரங்களில் சில நோய்களைக் கை, கால் முதலிய உறுப்புக்களை உடையனவாய் உருவகப்படுத்தி, அவற்றை விளித்துப் பாடிய பாட்டுக்கள். சில அரக்கர்களை குறித்துப் பாடப்பட்டவை. இவர்கள் நோயைத் தோற்றுவிப்பவர்கள். நோயைப் பெருகச் செய்யும் இவர் புறத்தே நின்று தம் தொழில் புரிவர். இதைவிட தாம் தாக்குவதற்கு விரும்பும் மக்களைப் பீடித்து அவர்களில் ஆவேசமாகி நோயால் அவர்களை அல்லலுற வைப்பர்.

அதர்வவேதத்தில் வரும் சில மந்திரங்கள், நோயைத் தீர்க்கவல்ல மூலிகைகளை விளித்துக் கூறப்பட்டுள்ளன. இம்மந்திரங்களுக்கும் நோய் நீக்கும் ஆற்றல் உண்டு. நோய் நீக்க வல்லதான நீரை அபிமந்திரிக்கும் பொழுது பிரயோகிக்கப்படும் மந்திரங்கள் சில உள்ளன. சில அரக்கர்களைத் துரத்தும் வலிமை மிக்க அக்கினியை விளித்துக் கூறுவன. இவையும் நோய் நீக்குவதற்காகப் பிரயோகிக்கப்படுவனவே. மந்திர சக்தி வாய்ந்தன எனக் கருதப்படும் இப்பாடல்களும் இவற்றின் பிரயோகத்தைப் பற்றிய பகுதிகளுந்தாம் இந்திய மருத்துவ நூலின் தோற்றுவாயாகக் கொள்ளப்படுகின்றன.

கொடிய அரக்கர்களையும் பேய்களையும் தவிர அப்சரஸ் பெண்களும் கந்தர்வர்களும் இரவில் மக்களை அணுகிப் பீடிப்பவர். அப்சரஸ்களும் கந்தர்வர்களும் பெரும்பாலும் ஆறுகளையும் காட்டில் நிறைந்துள்ள மரங்களையும் அடுத்து வசிப்பவர்கள். இவர்களை விரட்டி, ஓட்ட அஜசிருங்கி என்னும் மூலிகை உரிய மந்திரத்துடன் பிரயோகிக்கப்படும். பேஷயானி எனும் மந்திரங்கள் நீண்ட வாழ்வை அளிக்க வல்லவையான ஆயுஷ்ய சூக்தங்கள். நோயை நீக்கினால் மட்டும் போதாது வாழ்வும் நீண்டு அமைதல் வேண்டும் என்ற உண்மையை எடுத்துரைக்கின்றன. நோய் நீக்குவதற்காகப் பிரயோகிக்கப்படும் மந்திரங்களிலும் இவை வேறுபட்டவை அல்ல. வீட்டில் விசேஷ நிகழ்ச்சிகள் நிகழும்பொழுது இவை பிரயோகிக்கப்பட்டன. சௌளம், உபநயனம் முதலிய கிரியைகள் இவ்வாறு வீட்டில் நிகழும் கிரியைகள் நூறு சரத்காலங்கள் வாழ்வு அமைதல் வேண்டும், நூறு மழைக்காலங்கள் வாழ்தல் வேண்டும் என்று இம் மந்திரங்கள் எடுத்துக் கூறுகின்றன. இவற்றின் ஈற்றடிகள் ஒரேவகையாகத் திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளன. பதினெட்டாம் காண்டத்தில் வரும் ஒரு சூக்தம் முப்பது பாடல்களையுடையது. இது ஆயுஷ்ய சூக்தம் என வழங்குகின்றது. இவ்வாறு வாழ்வுக்கு நன்மை பயக்கக் கூடிய பல கர்மங்களை பேஷயானி குறித்து நிற்கின்றது. (இ. ச.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பை

## பைடால குருமூர்த்தி சாஸ்திரி

இவர் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். புரந்தர தாஸருக்குப் பிறகு அதிகமான கீதங்களைச் செய்த வாக்கேயக்காரர் இவரே. இவர் திருசெல்வேலி ஜில்லாவிலுள்ள கயத்தார் என்னும் கிராமத்தில் பிறந்தார். முறிகிநாடு வகுப்பைச் சேர்ந்த தெலுங்குப்பிராமணர். பைடால என்பது வீட்டின் பெயர். சமஸ்கிருதம், தெலுங்கு, இசை முதலியவற்றில் ஆழ்ந்த அறிவு பெற்று, சாஸ்திரத்திலும் வல்லவராய் விளங்கினார். இவரது நாட்டாராக கீதத்தில் 'கானவித்யாதுரந்தர வெங்கட சுப்பாரியகுரோ' என்ற வரிகளினின்றும் இவருக்கு குரு, சொண்டி வெங்கடசுப்பய்யர் என்பது புலனாகிறது. தனது குருவிற்கு அஞ்சலி செலுத்துகின்றார். இந்த கீதமானது ஒரு சப்த தாள கீதமாகும்.

குருமூர்த்தி சாஸ்திரிகள் இளமையிலேயே சென்னைக்கு வந்து, மணலி சின்னைய்யா முதலியார் அவர்களால் ஆதரிக்கப்பட்டார். சென்னை ஒரு சங்கீத பீடமாக கருதப்படு வதற்கு இவரது நீண்டகால வாசமும் ஒரு காரணம் ஆகும். குருமூர்த்தி சாஸ்திரிகள், சஞ்சாரி கீதங்கள், லக்ஷண கீதங்கள், பிரபந்தங்கள் கீர்த்தனைகள் முதலியவைகளை சமிஸ்கிருத பாஷையில் செய்துள்ளார். இவர் ஒரு ஸ்வநாம முத்திரைகாரர். கீதங்களின் சாஹித்தியங்கள் யாவும் கடவுளைத் துதிப்பதாகவே அமைந்துள்ளன. ஆயிரக்கணக்கில் கீதங்களைச் செய்த காரணத்தினாலேயே இவர் 'வெயிகீத பைடால் குருமூர்த்தி சாஸ்திரி' என குறிப்பிடப்படுகிறார்.

இவர் நல்ல காயர்கர். வாய்ப்பாட்டில் தனிச் சிறப்புப் பெற்று விளங்கினார். கன, நய, தேசிய பாணியில் பாடும் ஆற்றல் பெற்றவர். தஞ்சை மன்னர் இவருக்கு ஒரு 'மேனா' வழங்கி கௌரவித்தார். இவருக்கு 'நாலு பதி வேலராகால' குருமூர்த்தி சாஸ்திரி எனவும் பெயர் வழங்குவதுண்டு. 40,000 ராகங்கள் இவருக்குத் தெரியும் எனக் கருதப்படுகிறது. இவரது சிஷ்யர்கள் சோபனாத்ரி, கூடால சேஷய்யர்.

(பி. செ.)

## பைரவர்

சிவபெருமானின் அறுபத்து நான்கு மூர்த்தங்களில் பைரவர் ஒன்றாகும். பைரவர் என்ற வடமொழிச் சொல் மிகப் பயங்கரமானவர் என்ற பொருளில் கொள்ளப்படுகிறது. எதிரிகளுக்குப் பயம் தந்து தன்னை வழிபட்டவர்களுக்கு அருள் பாலிப்பவர் என்றும் கருதப்படுகிறது. மேலும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலை இறைவன் ஆற்றுவதால் பைரவன் என்று அழைக்கப்படுகிறார் எனவும் கொள்ளப்படுகிறது.

பைரவர் - வைரவர் எனவும் அழைக்கப்படுகிறார். பைரவர் என்ற சொல்லின் மருவிய வடிவே வைரவர் ஆனால் வைரம் போன்ற திண்மையான தேகத்தினை உடையவராய், பக்தர்களுக்கு பலம் வாய்ந்த கோட்டை போன்று காவல் தெய்வமாக விளங்குவதாலும், சிவபெருமானின் காவல் திருக்கோலம் வைரவர் என்று அழைக்கப்பட்டது என்றும் பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பைரவரின் தலைமைப் பீடமாக விளங்குவது "சீர்காழி", "காழ்" என்ற சொல் வைரம் பொருந்தியது எனப் பொருள்படும் என்பது இங்கு நோக்கற்பாலது.

சிவபெருமான், வலிமைமிக்க ஞான மூர்த்தியான ஸ்ரீ பைரவ மூர்த்தியை உற்பத்தி செய்து அவரிடம் உலகினைக் காக்கும் பொறுப்பினை அளித்தார்.

அவர் உயிர்களுக்கும் அவர்களின் உடமைகளுக்கும் அஷ்ட மூர்த்தங்களில் நின்று அவற்றைக் காத்து வருகின்றார்.

சிவபெருமானின் மூர்த்தங்களை விரித்துக்கூறும், சிவபராக்கிரம நூலில் பைரவர் திருமேனி சம்பந்தமான புராண நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக ஐந்து பகுதிகளில் விளக்கப் பட்டுள்ளது. அவை பைரவமூர்த்தி, ஆபதோத்தாரண மூர்த்தி, வடுக மூர்த்தி, க்ஷேத்திர பாலக மூர்த்தி, பிரம்ம சிரச்சேதமூர்த்தி என்பனவாகும்.

ஹிரணியாக்ஷன் குமாரனாகிய அந்தகாசுரனைச் சங்கரித்துத் தேவர் துன்பமகற்ற எழுந்தருளிய அவதாரம் "பைரவ மூர்த்தம்" எனப்படுகிறது.

தேவர், முனிவர் ஆகியோர் ஆபத்துக் காலத்தில் தமது துயர் கூறி இரந்து நிற்க அவர்கள் துன்பத்தைத் தொலைத்து அருளுவதற்கு எழுந்த கோலமே "ஆபதோத்தாரண மூர்த்தம்".

பிரமனைத் துன்புறுத்திய முண்டாசுரனை வதம் செய்ய எடுத்த மூர்த்தமே "வடுக மூர்த்தமாகும்".

உலகத்தின் ஊழிக் காலத்தில் உற்ற துன்பத்தைத் தீர்த்து இரட்சித்தருளியமையால் க்ஷேத்ர பாலக மூர்த்தி என்ற பெயர் மகேஸ்வரருக்கு ஏற்பட்டது. க்ஷேத்ரம் - பூமி, பாலகர் - காப்பவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்மூர்த்திகளில் ஒருவரான பிரம்மன் அகந்தையினால் அறிவு மயங்கி சிவ நிந்தனை செய்த போது சிவபெருமான் பைரவனைத் தோற்றுவித்தார். பைரவர் பிரம்ம தேவரின் ஐந்தாவது தலையைக் கிள்ளியெடுத்து கபாலமாக்கி, அவனுக்கு அறிவுபுகட்டினார். இவர் "பிரம்ம சிரச்சேத மூர்த்தி" எனப்பட்டார்.

இந் நிகழ்வு திருக்கண்டியூரில் இடம்பெற்றுள்ளது.

அசுரர்களின் தொல்லையால் இவ்வுலகம் துன்புற்ற போதெல்லாம் சிவபெருமான் தம் அம்சமாகப் பைரவரைத் தோற்றுவித்து அசுரர்களை வென்று இன்பம் பெருகச் செய்கிறார் எனப் புராணங்கள் கூறுகின்றன. இவர்களில் எட்டுப் பைரவர்கள் விசேஷமாகக் கருதப்படுகின்றனர். அசிதாங்க பைரவர், குருபைரவர், சண்ட பைரவர், குரோதன பைரவர், உன்மத்த பைரவர், கபால பைரவர், பீஷண பைரவர், சம்ஹார பைரவர், சிவபெருமானின் வீரச் செயல்கள் எட்டாகும். அவரது வீரத்தின் வெளிப்பாடாக விளங்கும் பைரவரும் எட்டு உருவங்கள் தாங்கி அருள் பாலிக்கின்றனர். இவர்கள் சிவனின் அட்ட மூர்த்தங்களாகிய பஞ்சபூதங்கள் சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டிலும் நீங்காது நின்று அருள் பாலிக்கின்றனர். இந்த எண்மருக்கும் தேவியராகத் திகழ்பவர்கள் அஷ்டமாதர்களாகிய பிராம்மஹி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி, சண்டிகை ஆகியோர். இவர்கள் அந்தகாசுரவதத்தின் பொருட்டுச் சிவபெருமானால் தேவர்களின் சக்தியில் இருந்து தோற்றுவிக்கப்பட்டவர்கள். பின்னர் அஷ்ட பைரவர்களுக்கு தேவியர்களாக அளிக்கப்பட்டவர்கள்.

சீர்காழி பிரம்மபுரீஸ்வரர் ஆலயத்தின் வெளிப் பிராகாரத்தில் வல்லம்புரி மண்டபம் என்ற ஒரு சந்நிதி உள்ளது. இங்கு எட்டு பைரவ உருவங்களும் அமைக்கப்பட்டு வழிபாடு இயற்றப்படுகின்றது.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலய கால பைரவர் ஆலயத்தின் முகமண்டபத்திலும் இந்த எட்டு பைரவர்களின் சுதைச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

அசுரர்களை அழிக்க வந்த இந்தப் பைரவர்கள் உக்கிரவடிவம் கொண்டவர்கள். அகன்றவிழிகள், கோபம் கக்கும் முகம், தீப்பிழம்பு போல் மேல் நோக்கி விளங்கும் சடைக்கற்றை, வலிய சூலத்தையும், அச்சமூட்டும் பாம்பையும், பாரிய ஒலியை எழுப்பும் டமருகத்தையும் கொண்டவர்கள், நாயை வாகனமாக உடையவர்கள் பெரும்பாலும் நின்ற திருக்கோலத்தில் நான்கு கரங்களுடன் விளங்கும் இவரே கோயிலின் பாதுகாவலரும், ஊரின் காவலருமாவார்.

சிவாலயங்களில் பொதுவாக வடகிழக்கு மூலையில் பைரவ சந்நிதியினைக் காணலாம். இங்கு இடம்பெறும் நித்திய பூசை காலையில் சூரியனிடமிருந்து தொடங்கி அர்த்தசாமத்தில் பைரவருடன் முடிவடைகிறது. பைரவ மூர்த்திக்கு தனி ஆலயம் அமைக்க விதி உண்டு. இவருக்குரிய பரிவாரங்கள் பற்றிய செய்திகளும் காணப்படுகிறது. காலப்போக்கில் பைரவ வழிபாடு தன் இயல்பினின்றும் நழுவிவிட்டதால் பரிவாரத் தெய்வங்களைக் கொண்ட பைரவ ஆலயங்களைக் காண்பதரிது. அபூர்வமாகச் சில தலங்களில் பைரவருக்குத் தனிச் சிற்றாலயம் அமைக்கப் பட்டுள்ளதைக் காணலாம்.

சிவாலயங்களில் மாலையில் பூசை முடிந்ததும் பைரவருக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்து ஆலயத்தின் கதவுகளை மூடிச் சாவிகளை அவர் காலடியில் வைப்பது வழக்கம். பைரவருக்குப் பிரியமானவை நெய் அபிஷேகம், சிவப்பு மலர்கள், நெய்த் தீபம், உடைக்கப்படாத முழுத் தேங்காய், மாவிளக்கு, நார்ப்பழங்கள், தேன், வடை, முதலியன. பிரம்மோற்சவத்திற்கு முன்னும், பின்னும் பைரவருக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படவேண்டும் என பூஜா பத்ததி நூல்கள் கூறுகின்றன.

அபூர்வமாகச் சில தலங்களில் ஆறு, எட்டுக் கரங்களைக் கொண்ட பைரவரைக் காண்கிறோம். சிவாலயங்களில் பைரவர் மேற்கு நோக்கி இருப்பது உத்தமம், தெற்கு நோக்கி இருப்பது மத்திமம், கிழக்கு நோக்கி இருப்பது அதமம் என்று பிரதிஷ்டா நூல்கள் கூறுகின்றன.

பைரவருக்குரிய வழிபாட்டு நேரம் நள்ளிரவாகும். இவ்வேளையில் பராசக்தி பைரவி என்னும் பெயரில் நடமாடுகிறாள். அவளுடன் பெருமான் பைரவராக வீற்றிருக்கிறார். பரமஞானிகளும், யோகிகளும் தமது தூக்கத்தை விடுத்து அந்த வேளையில் திரிபுர பைரவியையும், பைரவரையும் தியானிக்கின்றனர். "யாமம் பைரவர் ஏத்தும் பொழுது" என்று பாடுகிறார் அபிராமிப்பட்டர்.

சிவபெருமானுக்குப் பஞ்சமுக அர்ச்சனையும், சக்திக்கு நவசக்தி அர்ச்சனையும், முருகப்பெருமானுக்கு ஷண்முகார்ச்சனையும் செய்யப்படுவது போல பைரவருக்கு அஷ்டவிதார்ச்சனை செய்யப்படுகின்றது. அப்போது எட்டுவித மலர்கள், தளிர், இலைகள் கொண்டு எட்டு சிவாச்சாரியார்கள் சூழ்ந்து நின்று பைரவருக்கு அர்ச்சனை செய்கின்றனர். பின்பு எட்டுவிதமான அன்னங்களும், பட்சணங்களும் நிவேதிக்கப்படுகின்றது. இறுதியாக எட்டு ஆரார்த்திகளைக் கொண்டு தீபாராதனை காட்டப்படுகிறது.

### சைவ அகப்புறச் சமயங்களில் பைரவ வழிபாடு

திபெத்திய பௌத்த நூல்களில் 84 வகைப் பைரவர் திருவுருவங்களும் தியான நெறிகளும் கூறப்படுகின்றன. சமண சமயத்திலும் மிக விரிவாக பைரவ வழிபாடு கூறப்படுகிறது. இதில் தொண்ணூற்றாறு பைரவர் கோலங்கள் குறிப்பிடப்படுகின்றன.

அத்வைத மத தாபகரான சங்கரர் காசியில் வாழ்ந்த காலத்தில் கங்கையில் நீராடிவிட்டு வருகையில் அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமஞானம் அருளவந்த கோலம் பைரவ கோலமாகும். பிரம்மஞானம் உணர்த்துபவர் பைரவர் என அத்துவித வைதீக ஆசார்யார்கள் கருதுகின்றனர்.

மகாவிரதப் பிரிவினர் பைரவரைத் தங்கள் பரம்பொருளாகக் கொண்டவர்கள். இவர் பிரம்ம சிரச்சேதன மூர்த்தியைத் தங்கள் வழிபடு தெய்வமாகக் கொண்டவர்கள்.

காபாலிகள் திரிசூலமும், காபாலமும் கைகளில் ஏந்தி கபாலமாலை அணிந்து, எலும்பணிகள் பூண்டு நாடு திரிந்து பலியேற்று உண்பவர்கள். இவர்களின் வழிபடுமூர்த்தி கபால பைரவர் ஆவார். காளாமுகர் மைந்நிற மேனியராய் வர்ணிக்கப்படும் பயிரவத் திருமேனியை வழிபடுபவர்.

பாசுபதர் சுடுகாட்டுச் சாம்பலை மேனி முழுவதும் பூசி பைரவ வழிபாடு செய்பவர்கள்.

வீரசைவர்கள் வீரபத்திர மூர்த்திகளைக் குருநாதர்களாகக் கொண்டவர்கள். (நி. நி.)

## பைரவி

பைரவி என்னும் இராகம் பழமையான இராகமாகும். இந்த இராகத்தைப் பற்றிய செய்திகள் சங்கீத இரத்னாகரம், சங்கீத மகரந்தம், சங்கீத சமயசாரம் முதலிய பழைய இசை நூல்களில் கூறப்பெற்றுள்ளன.

பைரவிராகப் பாடலைப் பாடக்கேட்டாலும் இசைக்கருவிகளில் இசைக்கக் கேட்டாலும், உள்ளத்தை ஈர்க்கும் ஆற்றல் படைத்ததாகும். பைரவி இராகத்தைக் கேட்கும் பொழுதெல்லாம் ஏதோ ஒரு தேவியின் உருவத்தை பார்த்து அதிசயிப்பது போன்ற உணர்வு உண்டாகும் என்று இசையறிஞர்கள் கூறுவார்கள்.

இவ் இராகம் விஸ்தாரமான ஆலாபனைக்கு ஏற்ற இராகம். தானம் பாடுவதற்கும் பல்லவி பாடுவதற்கும் ஏற்ற சிறந்த இராகமாகும். எப்பொழுதும் பாடக்கூடிய இராகம். பக்திச் சுவை நிரம்பியது. எல்லா வகையான இசைவடிவங்களும் இந்த இராகத்தில் உள்ளன.

இவ் இராகம் 72 மேளகர்த்தாக்களில் இருபதாவது மேளமாகிய நடபைரவியின் ஜன்யமாகும். பைரவி இராகத்தின் சுரங்கள் ஸட்ஜம், சதுஷ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்த மத்திமம், சுத்த தைவதம், கைசிகி நிஷாதம் ஆகியவையாகும். ஆரோகண அவரோகணங்களில் ஏழு சுரங்களையும் முறையாகக் கொண்ட சம்பூர்ண இராகமாகும்.

உபசாரமுலனு எனத் தொடங்கும் தியாகராஜர் பாடலும் பாலகோபாலா எனத் தொடங்கும் முத்துசாமி தீட்ஷிதர் பாடலும், நீ பாதமுலே என்றும் பட்டணம் சுப்பிரமணிய அய்யர் பாடலும், ஆருக்கு பொன்னம்பலம் என்னும் கோபால கிருஷ்ண அய்யர் பாடல், யாரோ இவர் யாரோ? எனும் அருணாசலக்கவிராயர் பாடலும், அத்தருணம் அபயம் எனத் தொடங்கும் பாபநாசம் சிவன் பாடலும் பைரவி இராகப் புகழ்பெற்ற பாடல்களுள் சிலவாகும். (தே.ஹ.)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொ

## பொப்பிலி கனம் கேசவய்யா

கனம் எனப்படுவது சங்கீத மார்க்கங்களுள் சிறந்ததொன்றாகும். கனமார்க்கத்தையே சாதித்து முதன் முதலாகப் பாடியவர் கேசவய்யா அவர்களே. இவர் தஞ்சைக்கு வந்தபோது, அப்போது அங்கிருந்த கிருஷ்ணையர் என்பவர் அவரிடம் கனமார்க்கப் பயிற்சிப் பெற்று அதனைப்பாடியதால்தான், கனம் கிருஷ்ணையர் என அழைக்கப்பட்டார்.

மூலாதாரத்திலிருந்து கம்பீரமான ஒலியை உண்டாக்கிப்பாடுவதே கனமார்க்கமாகும். தொடங்கும் போதே ஹீங்கார சப்தத்தோடு பலவகை சங்கதிகள் வரும்படி பாடுவதாகும். அங்கசிரேஷ்டைகள் இல்லாமல் பாடுவது கனமார்க்கத்தின் முக்கியமானதொரு லக்ஷணமாகும். தேவார இசையிலுள்ள உள்ளாளப்பாட்டு என்பது கனமார்க்கத்தையொத்ததே. கேசவய்யா கி.பி 1763ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ந் திகதி பொப்பிலி சமஸ்தானத்தில் பிறந்தார். இவரது தந்தை கோபாலய்யா, தாய் ரங்கநாயகி.

கேசவய்யா சிறுவயதிலே தெலுங்கு, சமஸ்கிருதம் முதலியவைகளைக் கற்று சிறந்த பாண்டித்தியம் அடைந்தார். சிறுவயது முதற் கொண்டே புதிய மார்க்கத்தைக் கற்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்ட கேசவய்யா தன் தகப்பனாரிடமிருந்து கனமார்க்கத்தின் லட்ணங்களையறிந்து அதனை அப்பியாசிக்கத் தொடங்கினார். நரசிமமயோகி என்பவரிட மிருந்து அப்பியாசத்திற்குச் சாதகமாக பிராணாயாமம் கற்றார். ஆரம்பத்தில் கேசவய்யா மிகவும் கஷ்டமடைந்தார். உடல் நிலை சிறிது பாதிக்கப்பட்டது. ஆயினும், தனது விடாமுயற்சியாலும், கஷ்டமான சாதகத்தாலும் கனமார்க்கத்திற் சிறந்த பாண்டித்தியமடைந்தார்.

தாய் தந்தையரும் பொப்பிலி ராஜாவும் கேசவய்யாவின் சாதனையைக் கண்டு மனமகிழ்ச்சி அடைந்தனர். இவரது கனமார்க்கச் சாதனையால் பொப்பிலி சமஜ்தானம் இசைவ சிறப்பு எய்தியது. பல சமஸ்தானங்களிலிருந்தும் பல வித்துவார்கள் இவரது கனமார்க்கத்தினைக் கேட்ட பொப்பிலி சமஜ்தானத்திற்கு விஜயம் செய்தனர்.

இப்படி கேசவய்யா உச்சநிலையில் புகழ் பெற்றிருந்த காலத்தில் தான், அவரது தாய் ரங்கநாயகி அம்மையார் காலமானார். தாயின் பிரிவாற்றாமையினால் மனம் நொந்த கேசவய்யாவை, மன ஆறுதலுக்காக திக்விஜயம் செய்யும்படி பொப்பிலிராஜா கேட்டுக கொண்டார். அதன்படி யாத்திரை கிளம்பிய கேசவய்யா பல சமஸ்தானங்களுக்கும் சென்று கனமார்க்கத்தைப்பாடி மகிழ்வித்தார். தம்பூராவைப் பரிசாகப் பெறுவதே சங்கீத மேதைக்கு சிறப்பாகும் என்று அவர் கருதியதால், ஒவ்வொரு சமஸ்தானமும் அவருக்கு தம்பூராவையும் பரிசிலாக வழங்கியது.

இவரது திக்விஜயத்தின் போது தஞ்சாவூர் சமஸ்தானத்திற்கும் வந்தார். அப்போது தஞ்சையின் அரசராகிய சரபோஜி இவர் பாடிய கனமார்க்கத்தைக் கேட்டு மிகவும் வியந்தார். சங்கீதத்தில் சிறந்த தஞ்சை சமஸ்தானத்தில் கனமார்க்கப் பயிற்சி பெற்றவர் ஒருவருமில்லை. ஆகவே கேசவய்யா அவர்களை தஞ்சையிலேயே தங்கியிருந்து கனமார்க்கத்தில் ஒருவரைத் தயார் செய்யும்படி சரபோஜி கேட்டுக்கொண்டார். கேசவய்யா அரசரின் வேண்டுகோளின்படி இரண்டு வருடம் தஞ்சையிலே தங்கி கிருஷ்ணய்யருக்கு கனமார்க்கத்தில் பயிற்சி அளித்தார். பின் சரபோஜியினால் பரிசில்கள் வழங்கப்பட்டு கேசவய்யா பொப்பிலிக்குத் திரும்பினார். இப்படி கனமார்க்கத்தைச் சாதித்து தன் புகழை நிலை நாட்டினார் பொப்பிலி கேசவய்யா. இவரது வழி வந்தவர்களே வீணை வரதய்யா முதலானோர்.

### குறிப்பு

பொப்பிலி கேசவய்யாவைப் பற்றிய ஆதார பூர்வமான குறிப்புகள் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சுவாமிநாதய்யர் எழுதியுள்ள கனம் கிருஷ்ணய்யர், என்னும் நூலில் கொடுக்கப் பட்டுள்ளன.

### குறிப்பு

மேலும் பல வாக்கேயகாரர்களின் வாழ்க்கைக் குறிப்புகளும், அவர்களின் இசைத் தொண்டினையும் பற்றிய விவரங்களை மூன்றாம் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. (பி. செ.)

## பொய்கையாழ்வார்

முதலாழ்வார் மூவருள் முதலாமவரான இவர் சங்கின் கூறாகத் தோன்றியவர் காஞ்சிபுரத்தில் சித்தார்த்தி ஆண்டு ஐப்பசி மாதம் வளர்பிறை எட்டாம்நாள் செவ்வாய்க்கிழமை திருவோண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்மீனில் சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயிலை அடுத்துள்ள பொய்கைபூத்த தாமரைப் பூவில் தோன்றியவர். பொய்கையிடமாகத் தோன்றியதால் பொய்கையார் என்ற பெயர் பெற்றார். துறவு பூண்டு, ஒருநாள் இருந்த இடத்தில் மறுநாள் இராமல் தொடர்ந்து பயணித்து வந்த இவர் வாழ்ந்த காலப்பகுதி கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதலாக, ஆறாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதி வரையானது என்பர்.

பொய்கையாழ்வார் ஊர் தோறும் இறைவன் பெருமையைப் பரவிவருங்காலத்து ஒருசமயம் தென்பெண்ணை ஆற்றங்கரையில் உள்ள திருக்கோவலூர் வந்தார். இதே தொண்டு செய்து வரும் மற்ற இரு ஆழ்வார்களான பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும் அவ்வூர் இறைவனை வழிபட்டு வெவ்வேறு இடங்களில் எழுந்தருளியிருந்தார்கள். அன்றிரவு நெருங்கியதும் பொய்கையாழ்வார் ஒரு அடியவர் திருமாளிகைக்குச் சென்று அதன் இடைகழியில் படுத்துக் கொண்டிருந்தார். பிறகு பூதத்தாழ்வாரும் தங்குவதற்கு இடம் தேடி அங்கு வந்து, அடியேனுக்குப் படுக்க இடமுண்டோ என்று வினவ, ஒருவர் படுக்கவும் இருவர் உட்காரவும் ஏற்புடைத்து என்று சொல்ல இருவரும் சேர்ந்து உட்கார்ந்து கொண்டனர். அவ்வளவு நெருக்கமான இடம் அது. சற்று நேரம் கழித்துப் பேயாழ்வாரும் அவ்வாறே இடம்தேடி வந்து, அவ்விருவரும் இருக்குமிடம் வந்தடைந்தார். அவர்க்கும் ஒருவர் படுக்கவும் இருவர் உட்காரவும் மூவரானால் நிற்கவுமுமே வசதியுள்ளது என்று விடைபகர அம்மூவரும் சேர்ந்து அவ்வண்ணமே நின்றுகொண்டிருந்தனர்.

இதை அறிந்த இறைவன், அவர்கள் மூவரும் நிற்பதற்குக் கூட முடியாத அளவுக்கு மிகுந்த நெருக்கமுண்டாக்கினார். அம்மூவரும் இடநெருக்கடியைத் தாங்க முடியாதவர்களாய் இது என்ன காரணம் என்று ஞானத்தால் நோக்குங்கால் திருமால் இலக்குமியோடு திருக்காட்சி வழங்கினார்.

மூவரும் தங்கள் திருவடியை மறவாதிருக்கவும் சீரடியார்களுடன் கூடியிருக்கவும் கருணை அருளவேண்டி மகிழ்ச்சிக் கண்ணீர் மலைந்தனர். இறைவனும் உலக உயிர்கட்கு ஞானமேற்றி எம்மிடம் வாருங்கள் என்று கருணை சுரந்தார்.

உடனே பொய்கையாழ்வார் வையந்தகளி என்று முதல் திருவந்தாதி தொடங்கினார். அவ்வண்ணமே பூதத்தாழ்வாரும் இனிய செந்தமிழில், அன்பே தகளி என்று இரண்டாந் திருவந்தாதி தொடங்கினார். பேயாழ்வாரும் காண அரிதான இறைவனைக் கண்டுவிட்ட மகிழ்ச்சியால் வேதங்களை வெல்லும் இனிய செந்தமிழில் திருக்கண்டேன் என்று மூன்றாம் திருவந்தாதி பாடினார்.

100 நேரிசை வெண்பாக்களால் அமைந்த தமது முதலாம் திருவந்தாதியில் இவர், திருவரங்கம், திருமலை உள்ளிட்ட 6 திருப்பதிகளை மங்களாசாசனம் செய்திருக்கின்றார். இவர் திருவந்தாதி நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திலே மூவாயிரத்தின் தொடக்கத்திலே வைக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர், நச்சினாக்கினியர் "விருந்து" என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு உரைகூறும்போது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலானோர் செய்த அந்தாதிச் செய்யுள் என்று நூன்முறை உதாரணம் காட்டுவர் (தொல். செய். 231-பேரா. நச்சி. உரை). வெண்பாவில் அமைந்த அந்தாதித் தொடை என்ற செய்யுள் மரபை நோக்கும்போது காலத்தால் முற்பட்டவர் என்பது பொருந்துவதாக உள்ளது.

இவர் உலக இயற்கையின்கண் இறைவனைக் கண்டவர். புறக்காட்சி அமைப்பாகவே இறைவனை வழிபட்டார். இவர் வடவேங்கடத்தானிடம் ஆராக்காதல் கொண்டு திளைத்தவர். பக்திக்கு நெறியைச் சொன்னவர் (மு.தி.5). அந்த உணர்வு வெளிப்படவும் பாடியவர். சிவன், திருமாலைப் பாடி அவர்களை ஓர் உருவாகக் காணும் சமயப் பொறையுடையார் (மு.தி. 4,5, 32, 44, 47, 74, 97, 98). பக்திப்பாடலில் நீதி நூல் கருத்திட்டு நெறியும் படுத்தினார் (மு.தி. 79). தம் நெஞ்சுக்குத் தாம் கூறுவதுபோல் கூறி, உலக நெஞ்சைத் தொட்டார் (மு.தி.99).

தாயை நாடும் கன்றாய் இறைவனை அடைந்தவர் (மு.தி.30). உள்ளமும் புறமும் அவனைப் பாடுதற்கே (மு.தி.63) என்ற மன உறுதிபடைத்தவர். கண்ணும் செவியும் இறைவனின் பெருமையைக் காணவும் கேட்கவும் உள்ளனவெனும் தீவிரப் பற்றாளர். பிணி, மூப்பு, சாக்காடு (மு.தி.71) என்ற மெய்நெறியை உணர்த்தியவர்.

இறைவனை ஐம்பூதமாகக் கண்டு (மு.தி.73) அதையே வழிபாட்டுப்பொருளாகவும் படைத்தார் (மு.தி.1). ஒவ்வோர் ஊரிலும் உள்ள கோயிலில் இறைவனின் தோற்றம் எந்த எந்த வண்ணம் உள்ளதெனப் பாடியவர் (மு.தி.77) பொதுவான அடியவர் போன்று இறைவனுக்கு மலர்சூட்டி வழிபடும் முறையில் நிறைவு பெறாத இவர், ஐம்பூதத்தையே வழிபாட்டுப் பொருளாக்கிச் சொன்மாலை சூட்டியவர். புறக்காட்சி வழியே அகத்துள் இறைவனைப் பெய்கின்றார். சமயக்காழ்ப்பு இல்லை, இருந்திருப்பின் சைன, பௌத்தத்தாக்கம் இருந்திருக்கும். பிற்காலமே இத்தாக்கத்திற்கு இலக்காயிற்று. இவர் காலப் பழமையுடையவர்.

முதலாந் திருவந்தாதியில், உலகை வராகமாய் இடந்தமை, இரணியன் ஆகம் பிளந்தமை, உலகளந்தமை, அம்பால் மராமரம் செற்றமை, ஆழியால் பரிதியை மறைத்தமை போன்ற அவதாரச் சம்பவங்கள் பலவும் சிறப்பிக்கப்பட்டுள்ளன. திருமால் ஐம்பூதங்களிலும் நிறைந்தவர், சங்கு சக்கர கரத்தர், மலர்மகள் ஆகத்தர், சிவனைத் திருமேனியில் உடையவர் எனப் போற்றப்பட்டுள்ளார். மும்மூர்த்திகளுக்கும் முதல்வர் மூரிநீர்வண்ணன் எனக் கூறப்பட்டுள்ள அதேவேளை, அரன், நாரணன் உருவம் இரண்டு மேனி ஒன்று எனவுங் கூறப்பட்டுள்ளது. நூலில், தமது நெஞ்சையும் பிறரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுமாறு ஆற்றுப்படுத்தியிருக்கும் பெரியாழ்வார் இறை திருவடி வணங்கல் முக்திக்கு வழி என்கிறார்.

நான்முகனைப் படைத்தல் (மு.தி.28), யானையைக் காத்தல் (மு.தி.29), குன்றமெடுத்தல் (மு.தி.54), ஆன்மேய்த்தல் (மு.தி. 54), புள்வாய்கீண்டல் (மு.தி. 54), இரணியனை அழித்தல் (மு.தி.36), இராவணனை அழித்தல் (மு.தி.35), அரவம் விட்டிறுத்தல் போன்ற இறைவனின் செயல்களைப் பாடியவர். தம்மை ஆண்டவனுக்கே ஆள் என்று அறிவித்தவர் (மு.தி. 80).

இவர் குறித்து முதலியாண்டான் முதலியோர் தனியன்கள் பாடியுள்ளனர். (ஸ்ரீ. பி.)

# பொய்யடிமையில்லாத புலவர்

மன்னுயிர்த் தொண்டே மகாதேவன் தொண்டு என்று எண்ணி வாழ்ந்த அடியார்களின் வாழ்க்கை வரலாறு இயம்பும் நூல் பெரியபுராணம். அது உடல் பொருள் ஆவி அனைத்தையும் வழங்கிய அறுபத்து மூன்று தனியடியார்களையும் ஒன்பது தொகையடியார்களின் பெருமையையும் பாடும் தமிழ்த் தேசிய இலக்கியம். ஒன்பது தொகையடியார் வரிசையில் இப்புலவர் இடம்பெறுகிறார். தில்லைவாழந்தணர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச்சிவன் பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழு நீறுபூசிய முனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார் என்று ஊர், குலம் அறிய இயலாத நிலையில் அமைந்தவர்களோடு இவரும் சேர்க்கப்பட்டு விளங்குகின்றார். இவர் மெய்யன்பு செலுத்திடும் இயல்பின் காரணமாகப் பொய்யடிமையில்லாத புலவர் என்று குறிப்பிடப்படுகிறார். இவர் பலராவர்.

முதனூலாகிய திருத்தொண்டத் தொகையில் சுந்தரர், பொய்யடிமையில்லாத புலவர்க்கு அடியேன் என்று குறிப்பிடுவார். வழிநூலாம் திருத்தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பி பொய்யடிமையில்லாத தமிழ்ச் சங்கமதிற் கபிலர், நக்கீரர் முதல் நாற்பத்தொன்பது பல்புலவோர் என்று குறிப்பிடுவார்.

பொய்யடிமையில்லாத புலவர் நாற்பத்தொன்பதின்மர் என்றும் அவர்கள் கபிலர், பரணர், நக்கீரர் முதலாக வரும் சங்கப் புலவர்கள் என்றும் கருதப்படுகின்றனர். இவரை ஒரு கூட்டத்தார் என்றும் ஒருவர் என்றும் ஐயப்படுகின்றனர். ஒருவரே என்று முடிவுரைப்போர், அவர் மாணிக்கவாசகர் ஆவார் என்று உரைக்கலாயினர். சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார், தம்முடைய பெரியபுராண உரையில் ''பொய்யடிமையில்லாத புலவர் என்பதாற் கொள்ளும் பொருள்தானே யாதோ எனின்? அது மாணிக்கவாசகரைக் குறிக்கும்'' என்கிறார்.

பொய்யடிமை இல்லாத புலவரைப் பற்றிய செய்திகள் திருத்தொண்டர் புராணத்தில் மூன்று பாடல்களில் இடம் பெற்றுள்ளன. அப்பாடல்களில் இவர்தம் பணியாது? என்ற செய்தி இடம் பெறுகிறது. இவர்கள் கயிலைமேவும் கடவுளுக்கே ஆளானவர்கள். செய்யுட்களில் பயிலும் சொற்களுக்கு நன்கு தெளிவாகப் பொருள் செய்பவர்கள். அறிவு நிறைந்த பொது அடியார்களாகிய இவர்கள் கற்றவர்க்குத் தாம் வரம்பாக விளங்குவார்கள். நூல் பல கற்ற நுண்ணிய மதிபடைத்த இவர்கள் ஐயம் நீங்கிய மெய்யுணர்வு பெற்றவர்கள். சிவபெருமானை யன்றி வேறு ஒரு பொருளைப் பெரிதாக நினைந்து உணராதவர்கள். மெய்யன்புடன் இறைவனுக்கு அடிமை பூண்டு பதிநூல்களை ஓதியுணர்ந்து உருகி ஒருமைப்பட்டு நிற்பவர்கள். இத்தகு செய்தியை மட்டுமே பொய்யடிமையில்லாத புலவர் பற்றிச் சேக்கிழார் எடுத்துரைத்துள்ளார்.

பெரியபுராணத்தில் பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம், எட்டாம் சருக்கமாக வார்கொண்ட வனமுலையாள் சருக்கத்தை அடுத்து இடம் பெறுகிறது. கூற்றுவநாயனார் புராணத்தை அடுத்துப் பொய்யடிமை யில்லாத புலவர் சருக்கம் தொடங்குகிறது. பொய்யடிமை யில்லாத புலவர் சருக்கம் என்ற பெரும்பகுதிக்குள், இப்புலவரைப் பற்றிய செய்தி முதலில் இடம்பெறுகிறது.

(சு.து.)

# பொலன்னறுவை

இலங்கையின் இராசதானிகளிற் பொலன்னறுவை அளவிற் பெரியது, மிகவும் பிரசித்தமானது அதன் பிரமாண்டமான கட்டுமானங்களும் பண்பாட்டுச் சின்னங்களும் 12 ஆம் நூற்றாண்டில் உருவானவை. அவை, குறிப்பாக, முதலாம் பராக்கிரமபாகு (1153-1186), நிசங்கமல்லன் (1187-1196) ஆகியோரின் காலத்தவை. அக்காலம் இலங்கையின் வரலாற்றில் முடியாட்சியும் அரசும் உன்னத வளர்ச்சியடைந்த காலமாகும்.

அளவிற் பொலன்னறுவை அநுராதபுரத்தைக் காட்டிலும் விசாலமானது. அநுராதபுரத்துத் தொல்பொருட் சின்னங்கள் பெரும்பான்மையும் சமயச்சார்புடையவை. பௌத்த சமயம் பற்றியவை. அங்கு அரண்மனையின் அழிபாடுகள் மிகச் சொற்பமானவை. ஆனாற் பொலன்னறுவையில் அரண்மனை தொடர்பான கட்டுமானங்களும் கோயில்களும் வேறு சமய சின்னங்களும் காணப்படுகின்றன. அவற்றைத் தெளிவாக வேறுபடுத்தி அடையாளங் காணமுடிகின்றது. பொலன்னறுவையின் மேலுமொரு சிறப்பம்சம் அங்கு பௌத்த கோயில்களும் சைவக் கோயில்களும் கணிசமான அளவிலே அமைந்திருந்தமையாகும். அங்குள்ள கட்டட அழிபாடுகளும் பிற தொல்பொருட் சின்னங்களும் சிங்களவர், தமிழர், ஆகியவிரு சமூகங்களையுஞ் சேர்ந்தவை. அவை இரு சமய நெறிகளையுஞ் சார்ந்தவை. பொலன்னறுவையில் நிர்வாகம், இராணுவ சேவை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணிபம், கைத்தொழில் ஆகிய துறைகளிலே தமிழர் சிறப்புற்றிருந்தமையினைச் சாசனங்கள் மூலமாக அறியமுடிகின்றது.

பொலன்னறுவை நகரத்தின் வரலாறு அநுராதபுர காலத்தின் பிற்பகுதியில் ஆரம்பமாகியது. ஆதியில் அது ஒரு படைத்தளமாக உருவாக்கப்பட்டது. *கந்தவுரு நுவர* என்பது அதன் பழம் பெயர். *மகாவம்சம்* பொலன்னறுவையினைப் பொதுவாகப் புலத்திநகர என்று குறிப்பிடுகின்றது. பொலன்னறுவையின் உற்பத்திக்கும் புலஸ்தியர் என்னும் ரிஷிக்கும் இடையிலே தொடர்புண்டு என்ற நம்பிக்கையாற் புலத்திநகரம் என்ற பெயர் உருவாகியதென்று கருதலாம். பொத்குல் விகாரையின் வளாகத்திலே காணப்படும் ஸ்தானகக் கோலமான சிற்பத்தின் அடித்தளத்தில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டிற் புலஸ்தி என்ற சொல் காணப்படுகின்றதென்று ஒரு காலத்திலே சேனரத் பரணவிதான கூறினார்.

அநுராதபுர இராசதானியின் பாதுகாப்பினைப் பொறுத்தவரையிற் பொலன்னறுவை கேந்திர முக்கியத்துவங் கொண்டவொரு பகுதியாகும். உறுகுணையிலிருந்து இராஜரட்டைக்குப் போகும் கரையோரப் பாதை வழியாகச் செல்வோர் தஸ்தோட்ட கடவு வழியாகப் பொலன்னறுவையினை அடையலாம்.

அந்தக் கடலிலே ஆற்றுவழியாகப் பாயும் நீரின் மட்டம் குறைந்திருப்பதால் இலகுவாக ஆற்றினைக் கடந்து செல்ல முடியும். அதனால் உறுகுணையிலிருந்து ஏற்படக்கூடிய படையெடுப்புகளைத் தடுப்பதற்கும் அப்பிராந்தியத்தினைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் பொலன்னறுவையிற் படைகளை வைத்திருப்பது அவசியமானதென்று கருதப்பட்டது.

ஆரம்பத்திலே படைத்தளமாக அமைந்திருந்த புலத்திநகரம் காலப்போக்கில் இரண்டாவது இராசதானியாகியது. அங்கு அரசமாளிகை, விகாரங்கள், ஆதுலர்சாலை என்பன அமைக்கப்பட்டன. பொலன்னறுவை பற்றி மகாவம்சத்திற் காணப்படும் முதலாவது குறிப்பு மூன்றாம் அக்கபோதியின் காலம் (628) தொடர்பானது. அவன் மஹாபான தீப என்னும் விகாரையை அங்கு அமைத்தான். நான்காம் அக்கபோதி (667-683) ஏழாம் அக்கபோதி (772-777) ஆகியோர் தங்கள் ஆட்சிக் காலத்தின் முடிவிலே அங்கு வாழ்ந்தனர். எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இரண்டாம் மஹிந்தன் (777-797) தாமவிகாரை, சன்னீரதித்த விகாரை என்பவற்றை அமைப்பித்தான். முதலாம் உதயன் (797-801) சேனாதிபதியும் யுவராசனும் ஏற்படுத்திய கலகங்களை அடக்கிவிட்டு, அநுராதபுரத்திலிருந்து வெளியேறிப் பொலன்னறுவையில் வாழ்ந்தான். அங்கவீனர், குருடர், பிணியோர் ஆகியோரைப் பராமரிப்பதற்கு அரசன் அங்கு அறச்சாலைகளை நிர்மாணிததான்.

முதலாம் சேனன் (833-853) காலத்து நிகழ்ச்சிகள் தொடர்பாகவும் *மகாவம்சம்* பொலன்னறுவை பற்றிக் குறிப்பிடுகின்றது. அநுராதபுரத்து அரண்மனையிலுள்ள இளவரசனொருவன் அரசனின் பொறுப்பிலிருந்த இளவரசி ஒருத்தியைக் கைப்பற்றிக் கொண்டு பொலன்னறுவைக்கு ஓடிவிட்டான். உதயன் என்ற பெயருடைய அந்த இளவரசனுக்கும் அரசனுக்குமிடையிலே, பின்பு, ஒருவாறு இணக்கம் ஏற்பட்டது. பத்தாம் நூற்றாண்டின் ஆரமபத்தில் உபஸக்க என்னும் கொள்ளை நோயினாற் பீடிக்கப்பட்டவர்களைப் பராமரிப்பதற்கும் நான்காம் கஸப்பன் (898-914) அநுராதபுரத்திலும் பொலன்னறுவையிலும் ஆதுலர்சாலைகளை நிர்மாணித்தான்.

படைத்தளமாகவிருந்த பொலன்னறுவை ஏழாம் நூற்றாண்டு முதலாகப் படிப்படியாக வளர்சசிபெற்று, ஒரு பெருநகரமாகியது. அது இரண்டாம் இராசதானிஎன்ற நிலையை அடைந்து விட்டது. அங்கு கணிசமான அளவிற் குடிசனப் பெருக்கம் ஏற்பட்டது. அதனால் விகாரங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றை அரசர்கள் உருவாக்கினார்கள். அவற்றின் கட்டடங்கள் யாவும் எதுவிதமான சுவடுகளுமின்றி மறைந்துவிட்டன.

### ஜனநாதபுரம்

பத்தாம் நூற்றாண்டின் முடிவில் அநுராதபுர இராச்சியம் சீர்குலைந்தது. இராசதானியில் ஏற்பட்ட படைக்கலகம் ஒன்றின் விளைவாக ஐந்தாம் மகிந்தன் அங்கிருந்து வெளியேறி உறுகுணைக்கு ஓடிவிட்டான். இராச்சியத்தின் பல பகுதிகளிற் படைத்தலைவர்கள் தாம் விரும்பியவாறு ஆட்சிபுரிந்தனர். இலங்கையின் அரசியல் நிலைகளை அவதானித்த சோழர் அங்கு படையெடுத்துச் சென்று, அதன் பெரும் பகுதியைக் கைப்பற்றினார்கள். அவ்வாறு கைப்பற்றிய பகுதிகளை ஈழமான மும்முடிச்சோழ மண்டலம் என்னும் பெரும் நிர்வாகப் பிரிவாக அமைத்தனர். பொலன்னறுவை, இலங்கையிற் சோழர் ஏற்படுத்திய இராச்சியத்தின் தலைநகராகியது. இதனை மகாவம்சத்திற் காணப்படும் மேல்வரும் குறிப்புகள் உறுதிசெய்கின்றன.

"இக்கால கட்டத்திற் கேசதாது குலத்தவர் பிரதானிகளில் ஒருவனாகிய கஸப்ப(ன்), எழுச்சிபெற்று, உறுகுணையில் ஆட்சி புரிந்தான். இதனைப் பற்றிக் கேட்டதும், சோழரின் சேனாபதி புலத்திநகரிலிருந்து வெளிப்பட்டுக் கதிர்காமத்திற்குப் படையெடுத்துச் சென்றான்."

"அறிவு நிரம்பிய இளவரசன், முரசறைந்து ஆட்சியதிகாரத்தை மேற்கொண்டு, தனது ஆதரவாளர் பலருக்கு அவரவர் தகைமைக்கேற்பப் பதவிகளை வழங்கினான். ராஜரட்டையிலே சேதங்கள் பல விளைவித்த சோழரை அழிப்பதற்கென்று நாற்படையினரையும் ஆயத்தமாக்கிய வண்ணம் உறுகுணையிலே தங்கியிருந்தான். இவற்றை அறிந்த சோழ மன்னன் புலத்திநகரிலிருந்த சேனாபதியைப் படை, பரிவாரங்களோடு (அவனுக்கெதிராக) அனுப்பினான்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிற் சோழரின் பிரதானமான படைத்தளமாகவும் நிர்வாக நிலையமாகவும் பொலன்னறுவை விளங்கியது என்பதை *மகாவம்சம்* மூலமாக அறியமுடிகின்றது. சோழர் அதனை ஜனநாதமங்கலம், ஜனநாதபுரம் என்னும் பெயர்களாற் குறிப்பிட்டனர்.

சோழராட்சியிற் பொலன்னறுவை ஒரு பிரதான வர்த்தக தளம் என்ற பரிமாணத்தையும் பெற்றது. அந்த நிலை சோழருக்கும் ஐந்நூற்றுவர் என்னும் வணிக கணத்திற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பினால் ஏற்பட்டது. ஐந்நூற்றவரின் படைகளிலே சேவகம் புரிந்த வேளைக்காரர் முதலானோர் சோழரின் படைகளில் இணைந்திருந்தனர். என்று கொள்ள முடிகின்றது. மகாவம்சத்திலுள்ள குறிப்பொன்றும் இலங்கையிலுள்ள இரு சாசனங்களைப் பற்றிய ஆய்வுகளால் ஏற்பட்ட புரிந்துணர்வும் இதற்கு ஆதாரமாகின்றன.

சோழரின் ஆதிக்கம் ஏற்படுவதற்கு ஏதுவான சூழ்நிலையினையும் மகாவம்சம் மேல்வருமாறு விளக்குகின்றது.

"அக்கரையிலிருந்து இங்கு வந்த குதிரை வணிகன் ஒருவன் திரும்பிச் சென்றதும் இலங்கையிலுள்ள அரசியல் நிலைகளைப் பற்றிச் சோழ மன்னனுக்குச் சொன்னான். பெருவலி படைத்த அம்மன்னன் இலங்கையைக் கைப்பற்றுவதற்கு ஒரு பெரும்படையை அனுப்பினான். அது விரைவில் இலங்கையை அடைந்தது." இலங்கையில் வியாபாரஞ் செய்த வணிகனுக்கும் சோழ மன்னனுக்கும் இடையிலே ஒரு நெருங்கிய தொடர்பிருந்தது என்பது மகாவம்சத்தின் குறிப்பினால் உணரப்படுகின்றது. இவ்விடயந் தொடர்பான வேறு விவரங்களின் அடிப்படையில் நோக்குமிடத்து இக்குறிப்பு சோழரின் ஆதிக்கப்படர்ச்சி பற்றிய ஒரு பிரதானமான அம்சத்தைப் புரிந்து கொள்வதற்கு ஏதுவாகின்றது.

பதினொராம் நூற்றாண்டிலே, சோழராட்சியில், ஐந்நூற்றுவர் பொலன்னறுவையில் வியாபாரத் தலங்களை அமைத்து அதனை ஒரு வணிக நகரமாக விருத்தி செய்தனர் என்று கருதமுடிகின்றது. அக்காலத் தமிழ்ச் சாசனங்கள் பொலன்னறுவையினை ஜனநாதமங்கலம் என்றும் ஜனநாதபுரம் என்றுங் குறிப்பிடுகின்றன. ஜனநாதன் என்பது முதலாம் இராசராசனது சிறப்புப் பெயர்களிலொன்று. ஜனநாதன் என்ற பெயர்சொல்லுடன் மங்கலம், புரம் என்ற சொற்களிலொன்றை இணைத்துக் கொள்வதால் இப்பெயர்களில் ஒவ்வொன்றும் உருவாகியது. மங்கலம் என்பதைப் பின்னொட்டாகக் கொண்ட இடப் பெயர்கள் பல தென்னிந்தியாவில் உருவாகியிருந்தன. பிரம்மதேயங்களைச் சதுர்வேதிமங்கலம் என்று குறிப்பிடுவது வழமை. ஆயினும், ஜனநாத மங்கலம் என்ற பெயரை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பொலன்னறுவை ஒரு காலத்திற் பிரம்மதேயமாக அமைக்கப்பட்டதென்று கொள்வதன் பொருத்தமற்றது. அதனைப் பிரம்மதேயமென்று வர்ணிக்கும் குறிப்பெதுவும் இல்லை. அங்குள்ள பிராமாணர் குடியிருப்புகள் பற்றியும் மகாவம்சத்திலோ சாசனங்களிலோ சொல்லப்படவில்லை. பிரம்மதேயங்கள் அல்லாத ஊர்களையும் மங்கலம் என்று குறிப்பிடும் வழக்கமுண்டு. கலையமங்கலம் என்பது அத்தகைய ஊர்களிலொன்று. அது சேதிகுல மாணிக்கபுரம் என்னும் வணிக நகரத்தின் மற்றொரு பெயர். எனவே ஜனநாதமங்கலம் என்ற பெயர் வாணிபத்தோடும் வணிகரோடும் தொடர்புடையது என்று கொள்வது பொருத்தமானது. பொலன்னறுவையின் மறுபெயராகிய ஜனநாதபுரம் என்பது இதனை உறுதிப்படுத்துகின்றது.

சோழர் காலத்தில் வணிக நகரங்களையும் புரம் என்று குறிப்பிட்டனர். அவற்றில் ராஜராஜபுரம், கங்கைகொண்ட சோழபுரம் ராஜேந்திர சோழபுரம் (மதுரை) என்பன இராசதானிகள் புரம் என்று வர்ணிக்கப்படும் நகரங்களில் வணிக நகரங்களே மிகப்பெரும்பாலனவை அவை நூற்றுக்கணக்கானவை மேல்வருவன அவற்றுட் சிலவாகும்.

1. வாரணாசிப் பெருந்தெருவில் சோணாபய புரம், 2. பாண்டிமண்டலத்து சுந்தரபாண்டிய புரம், 3. வெள்ளூரான கோதண்டராமபுரம், 4 பாண்டிமண்டலத்து சீகலல்லபுர நாட்டுக் குலசேகரபுரம், 5. பாண்டிமண்டலத்து நகரம் தெலிங்ககுல காலபுரமான குலோர்துங்கசோழ பட்டினம், 6. பெருங்குடியான விருதராசபயங்கரபுரம். வணிக நகரங்கள் புரம் என்று குறிப்பிடப்பட்டமைக்கு இவை உதாரணங்களாகும். அவை அரசரின் பெயர்களையோ விருதுப் பெயர்களையோ முன்னொட்டுக்களாகக் கொண்டுள்ளன.

காஞ்சிபுரம், மாமல்லபுரம் என்பன வேறொரு வகையான நகரங்களாகும். அவை தமிழகத்தின் பெருநகரங்கள் . அவற்றிலே காஞ்சிபுரம் பல்லவரின் இராசதானி, சோழர் காலத்தில் அது இரண்டாம் நிலையிலுள்ள இராசதானியாக விளங்கியது. காஞ்சிபுரத்தை மாநகரம் காஞ்சிபுரம் என்றும் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. காஞ்சிபுரம் இரண்டு அம்சங்கள் பொருந்திய பெருநகரமாக விளங்கியது. அது இரசாதானியாகவும் வணிக நகரமாகவும் விளங்கியது. காஞ்சிபுரத்து வணிக நகரத்தின் ஆளுங்கணமான நகரத்தார் அரசியலிலுள் செல்வாக்குப் பெற்றிருந்தமை குறிப்பிடற்குரியது. மாமல்லபுரம் பல்லவரின் துறைமுகப்பட்டினங்களில் முதன்மையானது. அதனை மாநகரம் மாமல்லபுரம் என்றும் சாசனங்கள் குறிப்பிடும். அது ஏற்றுமதி, இறக்குமதி, கொள்வனவு விற்பனவுகள் பெருமளவில் நடைபெறும் வாணிப நகரமாயிருந்தது. இலங்கையின் துறைமுகப் பட்டினமாகிய மாதோட்டம் மாமல்லபுரத்தைப் போன்றது. பொலன்னறுவை காஞ்சிபுர்ததைப் போன்றது. ஆயினும் பொலன்னறுவையின் வரலாறு சுருக்கமானது.

பதவியா, பொலன்னறுவை போன்ற இடங்களைச் சோழரின் துணைப்படைகளாகச் செயற்பட்ட ஐந்நூற்றுவரின் படைகளே கைப்பற்றின என்று கொள்வதற்கான காரணமுண்டு. பொலன்னறுவையிலுள்ள வேளைக்காரரின் சாசனத்தை நுட்பமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலத்தில் ஆராய்ந்ததன் விளைவாக இதனை அறியமுடிந்தது. வேளைக்காரப் படையினைப் பற்றி இரண்டு அம்சங்கள் தெளிவாகின்றன.

முதலாவது வேளைக்காரர் பொலன்னறுவையிலிருந்த வளஞ்செயர் என்னும் வணிக கணத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நகரமொன்றின் காவற்படையினர் என்பது. இரண்டாவது அவர்கள் அரசபடையாகவும் சேவை புரிந்தனர் என்பதாகும். எனவே, வணிக கணத்திற்கும் பொலன்னறுவையில் ஆட்சிபுரிந்த அரசருக்குமிடையில் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருந்த காலத்தில் குறிப்பிட்ட வேளைக்காரப் படை உருவாகியிருத்தல் வேண்டும். வணிக கணமொன்றின் காவற்படை சோழர்படையோடு கூடியிருந்து, சோழரின் சார்பிலே பொலன்னறுவையைக் கைபற்றியதென்று கொள்ளமுடிகின்றது. வணிக நகரத்தின் காவலராயிருந்த காலத்தில் வேளைக்காரர் அரசபடையாகவுஞ் செயற்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறான இருதலைப்பட்சமான உறவுகள் சோழராட்சி முடிந்த பின்பும் நீடித்தமைக்கு வேளைக்காரரின் சாசனக் குறிப்புகள் சான்றாகும்.

புத்தளம் மாவட்டத்து ஏரியாவ என்னுமிடத்திலுள்ளதும் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்ததுமான கல்வெட்டின் மூலம் இலங்கையில் ஐந்நூற்றுவரின் படைகள் சோழரின் படையோடு இணைந்திருந்தமையினை அறியமுடிகின்றது. அதில் இராசேந்திர சோழத் தெரிந்த வீரர்வேளத்து ஐந்நூற்றுமன் குலமென்று ஒன்றிகன்றான் அந்நூற்றுவன் அம்பலம் என்னுந் தொடர் அமைந்துள்ளது. இராசேந்திர சோழனின் பெயரால் அமைக்கப்பட்ட வீரர்வேளத்தில் ஐந்நூற்றுவர் இருந்தமை குறிப்பிடற்குரியது.

சோழராட்சியில் வணிக நகரமான ஜனநாதபுரம் பொலன்னறுவையின் பிரதான பகுதியாக விளங்கியது. இயல்பாக நெடுங்காலமாக, அமைந்திருந்த வழிப்பாதைகள் சந்திக்கும் தலத்திலே ஐந்நூற்றுவர் தங்கள் பிரதானமான வணிக நகரமொன்றை அமைத்தமை எதிர்பார்க்கக் கூடியவொன்று. பொலன்னறுவையின் அபிவிருத்தி பற்றிய எமது விளக்கத்தின் அடிப்படையில் நோக்குமிடத்து பாதுகாப்பு மட்டுமன்றி வாணிபமும் சோழராட்சியிற் பொலன்னறுவை தலைநகரானமைக்கு ஏதுவாகியதென்று கருதலாம். திசையாயிரத்தஞ் ஞூற்றுவர் 11 ஆம் நூற்றாண்டிலே பொலன்னறுவையிலே தங்கியிருந்தமையினைக் கல்வெட்டொன்றின் மூலம் அறிய முடிகின்றது. நகரின் வடவாசலுக்கு அண்மையிலுள்ள சிவாலயமொன்றின் அழிபாடுகளிடையே காணப்பெற்ற அக்கல்வெட்டு திசையாயிரத்தைஞ் ஞூற்றுவர் பெரும்பள்ளி பற்றிக் குறிப்பிடுகின்றது. பௌத்தப்பள்ளியொன்றை வணிக கணத்தவர் அமைத்திருந்தனர் என்பது இதனாற் புலனாகின்றது.

வணிக கணத்தவரின் குடியிருப்புகள், விற்பனை நிலையங்கள் என்பவற்றின் பெருக்கத்தால் புலத்திநகரம் ஒரு வணிக நகரின் கோலத்தைப் பெற்றது. அத்துடன், சோழ இலங்கேஸ்வரனின் மாளிகையும் நிர்வாக நிலையங்களும் அதன் சுற்றாடல்களில் அமைந்திருக்க வேண்டும். சோழரின் பிரதானமான படைத்தளங்களும் அங்கிருந்தன. நகரைக் கோட்டைகளும் அரணகளும் சூழ்ந்திருந்தமை பற்றி *மகாவம்சம்* குறிப்பிடுகின்றது.

## பொலன்னறுவை அரசரின் கட்டுமானங்கள்

உறுகுணையிலே தனது 18 ஆம் வயதில் (1055) அதிகாரம் பெற்ற முதலாம் விஜயபாகு 1070 இல் சோழரைத் தோற்கடித்து, அதன் பின் அநுராதபுரஞ் சென்று அங்கு இலங்கேஸ்வரனாக முடிசூடிக் கொண்டான். ஆயினும், அவன் அங்கிருந்து வெளியேறிப் பொலன்னறுவையிலே தங்கிவிட்டான். அக்காலம் முதலாக பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை பொலன்னறுவை இலங்கை மன்னரின் இராசதானியாக விளங்கியது. விஜயபாகுவின் ஆட்சியிலே (1070-1110) பொலன்னறுவை புனர்நிர்மாணம் பெற்றது. அரசமாளிகையும் பல விகாரங்களும் பௌத்த கோயில்களும் புதிதாக அமைக்கப்பட்டன. மூன்று நிகாயத்துச் சங்கத்தாருக்கும் விகாரங்களை அவன் நிர்மாணித்தான். நகரின் எல்லைகள் விஸ்தரிக்கப்பட்டன. நகரத்தைச் சுற்றிப் புதிய அரண்கள் அமைக்கப்பட்டன.

விஜயபாகுவின் காலத்துக் கட்டடங்களில் அட்டதாகே என இந்நாட்களில் வழங்கும் தளதாய்ப்பெரும்பள்ளி மட்டுமே சிதைவடைந்த கோலத்தில் எஞ்சியுள்ளது. விஜயபாகு இறந்த பின்பு அவனது இளைய சகோதரனாகிய ஜயபாகு அரசனாக அபிஷேகஞ் செய்யப்பெற்றான். சங்கத்தாரும் அமைச்சர்களும் ஒன்றிணைந்து, முன்னைய அரசனின் மகனாகிய விக்கிரமாகுவின் உரிமையைப் புறக்கணித்துவிட்டு, மருகனாகிய மானாபரணனை யுவராஜனாக அபிஷேகஞ் செய்தனர். அதனால் நாட்டு வழமைகளை அவர்கள் மீறிவிட்டார்களென்று மகாவம்சம் கூறும். அதனாற் கலகம் ஏற்பட்டு, ஆட்சியுரிமை குறித்துப் போர் ஏற்பட்டது. அதன் பயனாகப் பொலன்னறுவை இராச்சியம் பிளவுற்றது. விக்கிரமபாகு பொலன்னறுவையைக் கைப்பற்றி, அங்கிருந்து 21 வருடங்கள் ஆட்சி புரிந்தான். அரசனாகிய ஜயபாகுவும் மருமக்களும் தென்னிலங்கைக்கு ஓடிவிட்டனர். விக்கிரமபாகுவின் பின் அவனுடைய மகனான கஜபாகு பொலன்னறுவையிலிருந்து 22 வருடங்கள் (1132-1153) ராஜரட்டையினை ஆட்சி புரிந்தான். பன்னிரண்டாம் நூற்றாண்டின் முதற் பகுதியிலே குறிப்பிடத்தக்க கட்டுமான வேலைப்பாடுகள் எதுவும் பொலன்னறுவையில் நடைபெறவில்லை.

முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலம் (1153-1186) இலங்கை வரலாற்றில் ஒரு சிறப்பு மிகுந்த காலமாகும். அவனுடைய சாதனைகள் நிகரிலாதவை என்றுஞ் சொல்லலாம். சிதைவுற்றிருந்த பொலன்னறுவை இராச்சியத்தை அவனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் இணைத்துக் கொள்ள முடிந்தது. முடியாட்சியின் அதிகாரங்களும் அதனைப் பற்றிய கோட்பாடுகளும் பெரிதும் வளர்ச்சியடைந்தன. முன்னொரு பொழுதிலுங் காணப்படாத அளவிலே படைபலம் வளர்ச்சியுற்றிருந்தது. அதன் மூலமாகப் பராக்கிரமபாகு தனது நோக்கங்களை நிறைவேற்றினான். பிற தேசங்களுக்குப் படையெடுத்துச் செல்லும் அளவிற்கு படைகள் வலுப்பெற்றிருந்தன.

நீர்ப்பாசனத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சிகள் வியப்பிற்குரியவை என்றும் கருதலாம். அதில் அவன் ஈட்டிய சாதனைகள் மகாசேனன், தாதுசேனன் ஆகியோரின் காலத்தனவற்றைக் காட்டிலும் மேலோங்கிவிட்டன. உற்பத்திப் பெருக்கம் வாணிப வளர்ச்சிக்கும் செல்வச் செழிப்பிற்கும் ஏதுவாகவிருந்தது. பிரமாண்டமான கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கான வளங்கள் கிடைத்தன. அவற்றைத் திறம்படப் பயன்படுத்தும் ஆற்றலை அரசன் பெற்றிருந்தான்.

பராக்கிரமபாகுவின் கட்டுமான வேலைகள் இராசதானியை மையமாகக் கொண்டவை. அவனது காலத்திற் போலப் பிரமாண்டமான தோற்றத்திலும் பெருந்தொகையிலும் இலங்கையில் வேறெவரும் கட்டடங்களை அமைத்ததாக வரலாறில்லை. பராக்கிரமபாகுவின் காலத்திற் பொலன்னறுவை நகரம் புனரமைக்கப்பட்டது. அவனது கட்டுமானப் பணிகளை *மகாவம்சம்* இரண்டு அத்தியாயங்களில் வர்ணிக்கின்றது. வர்ணனைகள் இலக்கியநயம் பொருந்தியவை எனினும் அவற்றிலடங்கிய விவரங்கள் ஓரளவிற்கு ஆதாரபூர்வமானவை. புதிய கட்டடங்களில் அரண்மனை, அரசமாளிகைகள், குளிப்பறைகள் மண்டபங்கள், நீர்த்தொட்டிகள், கோயில்கள், சங்கத்தார் பள்ளிகள், கல்லூரிகள், ஏட்டுச்சுவடி நிலையங்கள், மருத்துவமனைகள் என்பன அடங்கும்.

பராக்கிரமபாகுவின் காலத்துப் பொலன்னறுவை 7 கிலோமீற்றர் சுற்றளவுடையது. அதனைச் சுற்றி உயரமான மதில்கள் அமைந்திருந்தன. மேற்கிலே பராக்கிரமசமுத்திரத்தின் அணைக்கட்டு எல்லையாகவிருந்தது. நகரிலே அமைந்த கட்டுமானங்களைப் பற்றி மகாவம்சம் மேல்வருமாறு வர்ணிக்கின்றது.

``உத்தமமான புலத்திநகரை அழகு பொலிந்த பிரமாண்டமான பட்டினமாகப் புனரமைப்பதற்குப் பெருவீரனும் நிதானமாகச் சிந்திக்கும் மக்களின் ஆதரவுடையவனுமாகிய பராக்கிரமபாகு ராசன் தொடங்கினான். இந்நகரம் அவனது மகிமையினைப் பிரதிபலிக்கும் கோலத்தைப் பெற்றிருக்கவில்லை. அது சீரழிந்து பொலிவிழந்து விட்டதால் அதன் பெயர் மட்டுமே விளங்கியது. அரண்கள் அமைந்த நகரின் எல்லாப் புறங்களிலும் மிக உயர்ந்த மதில்களை மன்னன் கட்டினான். முன்னைய காலத்து மன்னர்கள் அமைத்த சுவர்களிலும் அவை பெரியவை. வெள்ளை நிறச் சுண்ணாம்பு பூசப்பட்டிருந்தமையால் அவை சரத்காலத்து முகில்கள் போலப் பிரகாசித்தன. அதனைச் சுற்றி மூன்று வெளிப்புற மதில்கள் அமைக்கப்பட்டன. அதன் பின் பல வீதிகளை அமைத்தான்.``

``நகரின் நடுவிலே மதில்களாற் சூழப்பெற்ற அரசமாளிகையினை அமைப்பித்தான். அது ஏழு தளங்கள் அமைந்த பெருமாளிகை. அதில் 1,000 அறைகளம் வண்ணச் சித்தரங்கள் கொண்ட பல நூற்றுக்காணக்கான தூண்களும் இருந்தன. பொன்முலாம் பூசிய கதவுகளும் பலகணிகளும் அங்கிருந்தன. பொருத்தமான முறையிற் சுவர்களும் படியேற்றங்களும் அமைக்கப்பட்டிருந்தன. எல்லாக் கால பருவங்களிலும் சுகபோகங்களுடன் வாழக்கூடிய வசதிகள் இருந்தன. பல்லாயிரக் கணக்கிலே, பொன், யானைத் தந்தம் முதலியவற்றாலான கட்டில்கள் அங்கிருந்தன. விலையுயர்ந்த படுக்கை விரிப்புகள் அவற்றிலே காணப்பட்டன.``

``அரண்மனையிலுள்ள கட்டுமானங்களில் அரசன் துயில்கொள்ளும் பள்ளியறை உத்தம வர்க்கத்திலுள்ளது அதன் நான்கு மூலைகளிலும் முத்துச் சரங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. அவற்றின் ஒளிப்பிரகாசம் நிலவின் ஒளி போன்றது. தேவலோகத்துக் கங்கையின் அழகைப் பழிக்கும் வண்ணமானது. பள்ளியறையிலுள்ள நிரை நிரையான விளக்கு நிலைகளிலிருந்து மலர்களின் இனிய வாசனையும் நறுமணமும் பரவிய வண்ணமாயிருந்தன. விஸ்வகர்மாவினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டுமானம் போல விளங்கிய நிகரற்ற அரண்மனைக்கு வைஜயந்த என்னும் பெயரை அரசன் வழங்கினான்.``

``பிராயச்சித்த கர்மங்களைப் பிராமணர் செய்வதற்கென்று ஹேமமந்திரத்தை அரசன் நிர்மாணித்தான். மந்திரோபாசனை செய்வதற்கென்று தாரணீகரம் உருவாக்கப்பட்டது. புத்தரின் ஜாதகக் கதைகளை ஓதுவதற்கு மண்டலமந்திரம் கட்டப்பெற்றது.``

மேலும் தர்மாகரம், சரஸ்வதி மண்டபம் முதலானவையும் பராக்கிரமபாகுவின் அரண்மனைப் பகுதியில் அமைந்திருந்தன.

காலவெள்ளத்தாற் பராக்கிரமபாகுவின் கட்டுமானங்கள் பலவும் அழிந்து மண்மேடுகளாகி விட்டன. அகழ்வாய்வுகளின் பயனாக அவற்றுட் பிரதானமான கட்டடங்களின் எஞ்சிய பகுதிகள் அடையாளங் காணப்பட்டுள்ளன. அரசமாளிகையின் அத்திபாரமும் சுவர்களின் சில பகுதிகளுந் தெரிகின்றன. அரண்மனையில் இருபெரும் பகுதிகள் அமைந்திருந்தன. அரச மாளிகை மத்திய பகுதியாகும். அதன் சுவர்கள் மிகவும் விசாலமானவை, அதிக பலங் கொண்டவை. அரண்மனையின் நடுப்பகுதி சதுரமானது. 150 நீளமும் அகலமுங் கொண்ட பக்கங்களை உடையது. அரண்மனையின் அடித்தளத்திலே, சதுரமான, சிறிய அறைகள் பெருந்தொகையானவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தன. அரண்மனையின் உட்பகுதியில் படிக்கட்டுகளினால் அடையக்கூடிய மேற்றளங்கள் இருந்தமைக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

கிழக்கு நோக்கிய அரண்மனை வாசலைப் படிக்கட்டுகள் வழியாக அடைந்ததும் 102 அடி நீளமும் 42 அடி அகலமுங் கொண்ட பெரிய மண்டபத்தினுள் பிரவேசிக்கத் தக்கதாகக் கட்டடம் அமைந்திருந்தது. அதன் மரத்தூண்கள் கல்லினால் அமைந்த தளங்களில் நிறுத்தப்பட்டிருந்தன. அரண்மனையின் முன்புறத்திலே பல மண்டபங்கள் அமைந்திருந்தமைக்கான அடையாளங்கள் தெரிகின்றன.

ராஜவேசிபுஜங்க மண்டபம் என்னும் சபாமண்டபம் அரண்மனைக்குச் சமீபத்தில் அமைந்திருந்தது. அதன் அலங்காரத் தோற்றமான அதிஷ்டானம் மூன்று தளங்கள் கொண்டது. ஒவ்வொரு தளத்தின் வெளிப்புறத்திலும் இயற்கையான கோலமுடைய சிற்ப அணிவரிசைகள் காணப்படுகின்றன. மேலே, பல வரிசைகளிற் கற்றூண்கள் அமைந்துள்ளன. அவை உயரங் குறைந்தவை. மண்டபத்தின் கூரைப் பகுதி முற்றாக அழிந்துவிட்டது.

## நந்தாவனம்

இயற்கைக் காட்சிகளையும் மலர் வனங்களையும் பறவைகளின் குரலோசைகளின் இனிமையினையும் இரசிப்பதில் இலங்கை மன்னர்களிற் பராக்கிரமபாகு முதன்மையானவன். அரண்மனைக்கு அண்மையில் அவன் அமைத்த உத்தமமான பூங்காவினை *மகாவம்சம்* நயம்பட வர்ணிக்கின்றது. நந்தன வனம் என்பது அதன் பெயர். அங்கு சண்பகம், அசோகு, நாகம், புன்னாகம், கேதகம், பாடலி, நீபம், கதம்பம், மாலதி, தமாலம், நவமாலிகை தெங்கு முதலிய மரஞ் செடி கொடிவகைகள் ஓங்கி, வளர்ந்தன. மரங்களைச் சுற்றிப் படர்ந்த மல்லிகைகளின் மலர்வாசம் எங்கும் பரவிய வண்ணமாயிருந்தது. மலர்கள் சொரிந்த நறவினை மாந்திய வண்டினங்களின் இன்னிசை ஒலித்தது. உவகையால் மயிலினங்கள் ஒலித்த அகவலோசையும் புள்ளினங்களின் ஒலிகளும் கேட்போருக்கு விருந்தாயிருந்தன.

பூங்காவில் அங்கும் இங்குமாகப் பல தடாகங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றிலே செந்தாமரை, நீலோற்பலம் முதலான மலர்ச் செடிகள் செழித்து வளர்ந்தன. சிலாபொக்கரணி, மங்களாபொக்கரணி, நந்தாபொக்கரணி என்னும் ரம்மியமான தடாகங்ளும் அங்கு உருவாக்கப்பட்டன.

தீபுய்யான என்னுமிடத்திலே மலர்வனங்களும் பல மண்டபங்களும் சூழ்ந்த அரசமாளிகை ஒன்றினைப் பரக்கிரமபாகு நிர்மாணித்தான். அது நான்கு தளங்களை உடையதாகும். சிங்காரவிமானம் என்னும் அம்மாளிகை சித்திரகூடம் போலக் காட்சியளித்தது.

பராக்கிரமபாகுவின் காலத்திலே பொலன்னறுவையிற் சனத்தொகை பெருகியது. பெருந்தொகையான வீதிகளும் அவற்றின் ஓரங்களிற் பல அளவுகளிலான மனைகளும் அமைக்கப்பட்டன. பொலன்னறுவையினைச் சுற்றி இசிப்பத்தன, குஸிநார, வேலுவன என்னும் புறநகர்ப்பகுதிகள் உருவாக்கப்பட்டன. உள்நாட்டு வணிகரும் கடல்வழி வாணிபஞ் செய்வோரும் கூடும் வணிகத் தலங்கள் பொலன்னறுவையில் இருந்தன. அங்குள்ள வணிகரில் ஐந்நூற்றுவர் முதன்மை பெற்றிருந்தனர். இராசதானி பெருமளவிலே வளர்ச்சியுற்றதால் சோழராட்சியில் ஐந்நூற்றுவர் அமைத்த வணிக நகரம் விசாலமாகிய பெருநகரத்தில் அடங்கிய பகுதியாகிவிட்டது. ஆயினும் வணிகரின் செல்வாக்கு சிறப்புற்றது. நகரம் சிற்று என்னும் வணிகர் தலைவன் அரசசபையில் அங்கத்தவராக இருந்தான்.

பொலன்னறுவையில் அமைந்த பிரமாண்டமான பௌத்த கோயில்கள், விகாரங்கள் என்பவற்றிலே பெரும்பான்மையானவை பராக்கிரமபாகுவின் காலத்தவை. தூபராம, லங்காதிலகம், திவங்க படிமாகரம், பத்தசீமாபாசாத, அலாஹர பிரிவுனா, கல்விகாரை, கிரிவிகாரை முதலியவை அவற்றிலே பிரசித்தமானவை. இக்காலத்துக் கோயில்களின் அமைப்பு முறையில் சைவ, வைணவக் கோயில்களின் அம்சங்கள் கலப்புற்றுள்ளன. நாற்சதுர மேடையில் அமைந்துள்ள தூபாராமம் அதன் வெளிப்புறத்தில் 84' 6' நீளமும் 52' 6' அகலமுங் கொண்டது. செங்கற் கட்டுமானமாகிய அக்கோயில் ஒரு படிமாகரமாக அமைக்கப் பட்டது. அதன் மூலஸ்தானம் 21' நீளமும், 14' அகலமுங் கொண்டது. அதிலே தாபனமாகிய பிரமாண்டமான புத்தரின் படிமம் செங்கற்களை அடுக்கிச் சுதையினால் மெழுக்கப்பட்டது. அது காலப்போக்கிலே சிதைவாகிவிட்டது. ஆசனக் கோலமான அப்படிமம் நடுவில் 14' அகலமானது. கோயிலினுள்ளே இரு பக்கங்களிலுமுள்ள நெடுநிலைக் கோட்டங்களில் நின்ற கோலமான புத்தர் படிமங்கள் அமைந்துள்ளன.

பொலன்னறுவைக் காலத்தில் பௌத்த கட்டுமானங்களில் ஏற்பட்ட புதுமையான வளர்ச்சிக்குத் தூபாராமம் சிறந்த உதாரணமாகும். அதிலுள்ள சிறப்பம்சங்கள் **லங்காதிலகம், திவங்க படிமாகரம்** என்பவற்றுக்கும் உரியனவாகும் . செங்கல் வேலைப்பாடான இவற்றின் கூரைகள் கூம்பிய கோலமானவை. அவை உயரமான அதிஷ்டானங்களின் மேல் அமைந்துள்ளன. சுவர்களின் வெளிப்புறங்களிலே கபோதங்கள் ஏந்திய அணைவுத் தூண்கள் அமைந்துள்ளன. அவற்றினிடையே சிற்றுருவக் கோயில்களும் படிமங்களும் அமைந்துள்ளன. படிமங்கள் சுதையில் உருவாக்கப்பட்டவை. கபோதங்கள் யாளிவரி, பூதகணவரி, அம்சமாலை ஆகியவற்றைப் பெற்றுள்ளன.

இவ்வம்சங்கள் அநுராதபுர காலத்துக் கோயில்களிற் காணப் பெறாதவை. அவை சமகாலத்துச் சைவ, வைணவக் கோயில்களிற் காணப்படுபவை. அது மட்டுமன்றி தூபாராமத்தின் கூரைப் பகுதியின் விளிம்புகளிலே கூடம், சாலை என்பன செம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களும் படிமங்களும் அமைந்துள்ளன. படிமங்கள் சுதையில் உருவாக்கப்பட்டவை. கபோதங்கள் யாளிவரி, பூதகணவரி, அம்சமாலை ஆகியவற்றைப் பெற்றுள்ளன.

இவ்வம்சங்கள் அநுராதபுர காலத்துக் கோயில்களிற் காணப் பெறாதவை. அவை சமகாலத்துச் சைவ, வைணவக் கோயில்களிற் காணப்படுபவை. அது மட்டுமன்றி தூபாராமத்தின் கூரைப் பகுதியின் விளிம்புகளிலே கூடம், சாலை என்பன செம்மையாகவும் பெரிய அளவிலும் அமைந்துள்ளன. இவற்றிலே மரபுவழியான பௌத்த கட்டுமான முறையோடு சமக் காலத்து இந்தியக் கோயில்களின் அம்சங்களுங் கலந்துள்ளன என்பது தெட்டத் தெளிவாக விளங்குகின்றது.

ஆளாஹன பிரிவினாவைச் சேர்ந்த லங்காதிலகம் தூபாரமத்தின் வடிவமைப்பினை முன்மாதிரியாகக் கொண்டது. ஆனால் அது அளவுப் பிரமாணங்களில் மிகப் பெரியது. பிரமாண்டமான வடிவமைப்பின் காரணமாக அது கலைவனப்பினை இழந்து விட்டது. அதன் சுவர்களின் மேற்பாககங்களும் கூரையும் சிதைந்து விட்டன. அதன் வாசற்புறத்தில் இடிந்த நிலையிற் காணப்படும் அதன் முகப்புகள் 55 அடி உயரமானவை. இக்கோயில் நிர்மாணிக்கப்பட்ட பொழுது அது 80' உயரமானது என்பது ஒரு கணிப்பீடு. அதன் மூலஸ்தானம் 124' நீளமும் 66' அகலமுங் கொண்டது. மண்டபம் 24' நீளமானது; முக மண்டபம் 32.5' நீளமானது. மூலஸ்தானத்திலுள்ள படிமம் 40' வரையான உயரமுடையது. அது பின்புறச் சுவரையொட்டி அமைந்துள்ள போதிலும் படிமத்தைச் சுற்றி வலம் வரும் பாதை அமைந்துள்ளது.

வெளிப்புறச் சுவர்களிலுள்ள கோட்டங்களிற் சிற்றுருவ விமானங்களும் பாசாதங்களும் சுதையினால் அமைக்கப்பட்டுள்ளன. கோட்டங்களின் இரு பக்கங்களிலும் அணைவுத் தூண்கள் உள்ளன. லங்காதிலகம் 186' நீளமும் 108' அகலமுங் கொண்ட தாங்கு தளத்தின் மேல் அமைந்துள்ளது.

திவங்க படிமாகரத்திற் கர்ப்பகிருகம், அந்தராலம், மண்டபம் என்னும் பகுதிகள் அடங்கியுள்ளன. அலங்கார வேலைப்பாடுகள் பெருமளவில் அமைந்துள்ளமை அதன் சிறப்பம்சமாகும். அது வெளிப்புறத்தில் 133' நீளமானது. அதன் மூலஸ்தானம் 67' 6" அகலமானது; அந்தராளம் 51' 6" அகலமுடையது; மண்டபம் 29' 6" அகலங் கொண்டது. உட்புறத்தில் மூலஸ்தானம் சதுரமானது; அதன் பக்கங்கள் 44' நீளமானது.

திவங்க படிமாகரத்தில் ஓவியங்கள் பல இன்றும் சிதைவுறாத நிலையிற் காணப்படுகின்றன. அவை சோழர் கலைப்பாணியில் அமைந்தவை என்று நுண்கலை விமர்சகரான பேராசிரியர் சூடாமணி நந்தகோபால் அவற்றைப் பார்த்தவுடன், எமக்குச் சொன்னார்.

வெளிப்புறச் சுவர்களிலுள்ள ஓவியங்கள் அலங்காரச் சித்திரங்கள் மண்டபத்திலும், முகமண்டபத்திலும் பௌத்த ஜாதகக் கதைகளை விளக்கும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. திவங்க படிமாகரம் ஒரு சித்திரக் கூடமாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடற்குரியது.

ஆளாஹன பிரிவுனாவைச் சேர்ந்த கட்டடத் தொகுதிகளின் உயரமான தளத்திலே அமைந்துள்ள பத்தசீமா பாசாத ஒரு உபோசதகரமாகும். அது 12 தளங்களுடைய கட்டடமென்று *மகாவம்சம்* குறிப்பிடுகின்றது. அடிமட்டத்தில், தெற்கு வடக்காக அது 113' நீளமுடையது; கிழக்கு மேற்காக அது 106 அடி நீளமானது. அதன் அதிஷ்டானம் 4' 6" உயரமானது. எல்லாப் புறங்களிலும் 7' 6" அகலமான சாலை அமைந்துள்ளது. நாற்புறங்களிலுமுள்ள வாசல்களில் ஏறிப்போவதற்குப் படிக்கட்டுகள் அமைந்துள்ளன. உள்ளே 60' நீளமும் 51' 6" அகலமுங் கொண்ட பண்டபம் உள்ளது. அதன் நடுவில் இரு தளங்கள் பொருந்திய மேடை அமைந்திருக்கின்றது. கீழ்த்தளம் 24 அடி சதுரமாகும்; அதன் மேலுள்ள தளம் 15 அடிச் சதுரமாகும்.

மண்டபத்தில் 108 கற்றூண்கள் இருந்தன. பிரதான மண்டபத்தைச் சுற்றி வெவ்வேறு அளவுகளிலமைந்த கூடங்கள் உள்ளன. கட்டடத்தின் மேற்றளங்களை அடைவதற்கு படிக் கட்டுக்கள் அமைந்த ஏற்றங்கள் இருந்தன. சுவர்கள் சிவப்பு நிறப் பூச்சினால் மெழுகப்பட்டிருந்தன. சுவர்களிற் பொட்டம் பொட்டமாக அவை இன்றுந் தெரிகின்றன.

பராக்கிரம பாகுவினால் அமைக்கப்பட்ட சங்கத்தார் பள்ளிகளின் தொகுதியான ஆளாஹன பிரிவுனா நகரின் வெளிப்புற மதிலுக்கு வடக்கே அமைந்துள்ளது. மலைப்பகுதியொன்றினைப் பல தளங்களாக வெட்டிச் செப்பனிட்டு, இங்குள்ள கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உச்சித் தளத்திலுள்ள **பத்தசீமாபாசாத** என்னும் சங்கத்தார் வழிபாட்டு நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அடித்தளத்திலே லங்காதிலக(ம்) என்னும் படிமாகரமும் கிரிவிகாரை என இந்நாட்களில் வழங்கும் தூபியும் அமைந்துள்ளன. பெருந்தொகையான சங்கத்தார் பள்ளிகள் கீழ்த்தளங்களின் எல்லாப் பக்கங்களிலும் அமைக்கப்பட்டன.

அடித்தளம் ஒவ்வொன்றிலிருந்தும் மேலே ஏறிப்போவதற்காகப் பாததைகள் உருவாக்கப்பட்டிருந்தன. சங்கத்தாரின் உபயோகத்திற்கென குளிப்பறைகள், கிணறுகள், மலசலகூடங்கள் என்பனவற்றோடு ஆரோக்கியசாலையும் இங்கு அமைக்கப்பட்டன. சுடுமண் குழாய்களின் மூலம் கழிவுநீரை அகற்றுவதற்கான வேலைப்பாடுகள் அமைக்கப்பட்டிருந்தன.

ஆளாஹன பிரிவுனாவோடு இணைந்த கிரிவிகாரை நன்கு பேணப்பட்ட நிலையில் இன்றுங் காணப்படுகின்றது. அது பக்கங்களில் 189' நீளங்கொண்ட சதுரமான மேடையொன்றில் அமைந்துள்ளது. தூபியின் அடியில் மூன்று தளங்கள் உள்ளன. அடித்தளம் 88' விட்டமுடையது. தூபியின் அண்டப் பகுதியின் விட்டம் அடியில் 70' அதனுள் மேற்றளத்தின் மட்டத்தில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த பாறைக்கல் பளிங்கு போலப் பளபளப்பான தன்மை கொண்டது. அதில் இளையோடுகின்ற நரம்பு போன்ற மென் பச்சைக் கோடுகள் செதுக்கு வேலைப்பாடுகள் உன்னதக் கோலம் பெறுவதற்கு ஏதுவானவை. நான்கு படிபமங்களில் இரண்டு ஆசனக் கோல மானவை; மற்றொன்று ஸ்தானக்கக் கோலமானது; நான்காவது அமைப்பு சயனக் கோலம்.

ஆசனக் கோலமான சிற்பங்களில் ஒன்று வித்தியாதர என்னும் சிறிய குகையைக் குடைந்து உருவாக்கப்பட்டுள்ளது. அது 15' 2.5" உயரங்கொண்டது. உயரமான பீடமொன்றில் அது அமைந்துள்ளது. படிமம் சமாதி நிலையிலுள்ள புத்தரின் கோலமாகும் அது 18' நீளமும் 4' 4" அகலமுங் கொண்ட பீடத்தில் அமைந்துள்ளது. அதன் அடிப்பாகத்திற் சிங்க உருவங்களும் அவற்றின் நடுவே வச்சிராயுதமும் செதுக்கப்பட்டுள்ளன. படிமத்தின் பின்புறமாக உன்னதமான அலங்கார வேலைப்பாடுகள் கொண்ட மகரதோரணம் அமைந் துள்ளது. ஒரு வகையில் அது சாஞ்சியிலுள்ள தோரணம் போன்றது. படிமத்தின் இருபக்கங்களிலுமுள்ள தூண்களின் தலைப்பாகத்தில் மூன்று சட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றின் நுனிப்பாகங்களில் மகரத்தலைகள் வடிவமைக்கப் பட்டுள்ளன. தோரணத்தின் பின்னால், இரு பக்கங்களிலும் சிற்றுருவச் சிற்பங்கள் அடங்கிய தேவகோட்டங்கள் தெரிகின்றன.

இப்படிமத்தில் அங்கலக்ஷணங்கள் ஓரளவு பொருத்தமான அளவுப் பிரமாணங்கள் பொருந்தியவை. காதுகள் வழமை போல நீளமானவை ஆடையின் மடிப்புகள் நுட்பமான முறையில் சித்திரிக்கப் பெற்றுள்ளன. ஆயினும் முகபாவத்திற் புத்தருக்குரிய இலட்சியமயமான கோலங்கள் தெரியவில்லை. நெற்றி ஒடுக்கமானது. முகம் சோகம் படிந்த கோலமானது. மூக்கு வழமைக்கு மேலாக நீண்டுள்ளது. கண்களும் சிறியவை. பௌத்த சமய தத்துவங்களின் நுட்பங்களைப் புரிந்து கொள்ளாத கலைஞரினால் இப்படிமஞ் செதுக்கப்பட்டிருத்தல் கூடும்.

ஆசனக் கோலமான இரண்டாவது படிமம், கற்பாறையினை உட்புறமாக 4.5' ஆழத்திற்கு வெட்டி உருவாக்கப்பட்ட படிமாகரத்தில் அமைந்துள்ளது. அப்படிமாகரம் 26' நீளமும் 12' 9" உயரமுங் கொண்டது. சிரஸபட்டம் நீங்கலான படிமத்தின் உயரம் 4' 7" புத்தரின் தலைமேல் அலங்காரமற்ற சுற்றுவட்டம் அமைந்துள்ளது. அது 1' 10" விட்டங்கொண்டது. படிமத்தின் தலைப்பாகத்தின் பின்னால் அரைவட்டத்தின் கோலமான தோரணம் உள்ளது. அதிலே பொருந்தியுள்ள சட்டங்களின் வெளிப்புறத்திற் பின்னங்காலை மடக்கி, முன்னங்கால்களை ஊன்றிய கோலத்தில் இருக்கும் சிங்க வடிவங்கள் அமைந்துள்ளன. அவற்றிலே கொம்புகள் தெரிகின்றன.

பொலன்னறுவைக் காலத்துச் சிற்பிகள் கல்விகாரையிலே தென்னிந்தியா, மகதம், வங்காளம் ஆகியவற்றின் கலைமரபுகளைப் பின்பற்றியுள்ளனர் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

கல் விகாரையிலுள்ள ஸ்தானகக் கோலமான படிமம் 22' 9" உயரமானது. அது வட்டமான தாமரைப்பீடத்தில் அமைந் துள்ளது. அப்பீடம் 2' உயரமானது. அதில் ஒன்பது இதழ்கள் தெரிகின்றன. செதுக்கப்பட்டுள்ள பீடப்பகுதியின் சுற்றளவு 5' 10." இப்படிமத்திலே பொலன்னறுவைக் காலத்திற்குரிய சில சிறப்பான பண்புகள் தெரிகின்றன. இப்படிமத்தில் முகபாவங்கள் அசாதாரணமானவை. அதன் முகபாவம் பிறரின் சோகத்தைப் பார்த்துக் சோகமடைந்த, **பரதுக்கதுக்கித,** நிலையினைக் குறிக்குமென்று பரணவிதான கூறுவார். ஆனால் புத்தர் போதி நிலையை அடைந்த பின்பு பற்று, துக்கம், கவலை ஆகியவற்றிலிருந்து விடுபட்டு, ஆனந்த நிலையினை அடைந்தார் என்பதுதான் பௌத்த மரபு. சில சமயங்களிற் புதுமையானவை என்று சிலவற்றைச் சொல்லும் பொழுது அறிஞரிற் சிலரும் அடிப்படைக் கோட்பாடுகளை புறக்கணித்து விடுவதுண்டு. யேசுநாதரைப் பற்றிக் கிறிஸ்தவத்திற் காணப்படும் சிந்தனைகள் தேரவாத பௌத்த மரபில் இல்லை. படிமக்கோலம் தியானக் கோலத்தையன்றி சோகமான உணர்வினை வெளிப்படுத்துகின்றது. கைகள் அமைந்திருக்கின்ற கோலமும் அசாதாரணமானது. படிமம் கைக்கட்டிய கோலத்தில் அமைந்துள்ளது. புத்தரின் பரிநிர்வாணம் ஏற்பட்ட பொழுது, அவர் உலகிலிருந்து மறைந்து விட்டார் என்று துன்பமுற்ற சீடரான ஆநந்தரின் வடிவமே இங்கு படிமக்கோலமாகியுள்ளது என்பது கலாவிமர்சகர் சிலரின் கூற்றாகும். ஆயினும், தக்க காரணங்கள் சொல்லாது இக்கருத்தை நிராகரித்தல் இந்நாட்களில் வழமையாகி விட்டது. தேரவாதக் கோட்பாடுகளின் அடிப் படையில் மட்டும் இக்காலத்து கலாசார சின்னங்களை நோக்கு மிடத்து பொருத்தமான விளக்கங்களைச் சொல்வது கடினம். முற்காலத்து மூன்று நிகாயங்களும் பராக்கிரமபாகுவின் காலத்தில் மீண்டும் இணைக்கப்பட்டன என்பதும் இங்கு குறிப்பிடற்குரியது. அது தேரவாத நோக்கியலான சங்கசுத்தியாக அமையவில்லை. இணைப்பின் விளைவாகச் சங்கத்தார் ஜனரஞ்சகமாகிவிட்ட மகாயான மரபுகளையும் ஒப்புக்கொள்ள நேர்ந்தது. எனவே, கல் விகாரைச் சிற்பம் பற்று வெறுப்பற்ற நிலையில் மீள்பரீசீலனைக் குரியதாகும்.

கல் விகாரையிலுள்ள சயனக் கோலமான படிமம் உன்னத வேலைப்பாடு என்ற பாராட்டைப் பெற்றுள்ளது. அது 46' 4" நீளங்கொண்ட பிரமாண்டமான வடிவமாகும். அது புத்தபிரான் பள்ளி கொண்ட கோலம். அங்கலக்ஷணங்கள் மிகவும் பொருத்தமான அளவுப் பிரமாணங்களை உடையவை. முகபாவத்திற் சாந்தம், அமைதி ஆகிய பண்புகள் விளங்குகின்றன. **தசபலம், மகாபுருஷ லக்ஷணம்** என்பன பார்வையாளருக்கு விளங்குமாறு இப்படிமம் வடிவமைக்கப் பெற்றதென்று சிலர் கருதுவர். ஆடை மென்மையானதாக விளங்கும் வண்ணம் நுட்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இது புத்தர்பிரானின் பரி நிர்வாணக் கோலமானது எனக் கருதலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலன்னறுவையின் ஆரோக்கியசாலை

சங்கத்தார் பள்ளிகளுக்குச் சமீபமாக வைத்தியசாலைகளை அமைக்கும் பழக்கம் புராதனமானது. மிகிந்தலை, மதிரிகிரி ஆகியவிடங்களில் அத்தகைய நிறுவனங்கள் இருந்தன. கலாசார முக்கோணம் பொலன்னறுவையில் அகழ்வாய்வுகளை நடத்திய பொழுது, 1983இல் ஆரோக்கிய சாலையொன்றின் பகுதிகள் அடையாளங் காணப்பெற்றன. அதன் கட்டடம் நீள்சதுரமானது (25.75மீ X 16.25 மீ) அதில் இரண்டு பிரதான பகுதிகள் இருந்தன: ஒன்று நோயாளிகள் தங்குமிடம், மற்றது நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்யும் பகுதி. முதலாவது பகுதியில் ஒரு வெளியான முற்றத்தைச் சுற்றி வசிப்பறைகள் இருந்தன. முற்றத்தின் வடக்கிலே கற்கள் வரிசைக் கிரமமாக அமைக்கப்பட்டிருந்தன. அவை தூண்கள் பொருந்திய மண்டபமொன்றின் அடையாளங் களாகும்.

தென்புறமாக அமைந்த இரண்டாம் பகுதியின் நடுவிலும் ஒரு முற்றம் அமைந்துள்ளது. அதன் தென்கிழக்கு மூலையில் மனித வடிவிலே செதுக்கப்பட்ட மருந்துப் பேழை உண்டு. அது 195 சென்ரிமீற்றர் நீளமும் 42 சென்ரிமீற்றர் அகலமுங் கொண்டது. வாதம், விஷகடி போன்றவற்றைக் குணப்படுத்தும் மருந்துகள் அதிலிருந்தன. பல சத்திரசிகிச்சைக் கருவிகளும் மருத்தெண்ணைகளின் கொள்கலங்களாகிய சீனச்சாடிகளும் இங்கு கிடைத்தன.

## நிசங்கமல்லனின் கட்டுமானங்கள்

நிசங்கமல்லனின் ஆட்சிக்காலம் (1187 - 1196) குறுகியதெனினும் கட்டுமானங்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமான ஒரு காலப்பகுதியாகும். இலங்கை மன்னரில் அவனே மிகக் கூடுதலான சாசனங்களை வெளியிட்டவன். அவற்றுட் சில மிகவும் நீளமாவை. அவற்றுட் பல பொலன்னறுவையில் உள்ளன. அவனது வாழ்க்கை வரலாறு பற்றிய சில விசாலமான குறிப்புகள் அவற்றில் அடங்கும். முடியாட்சி பற்றிய சிந்தனைகளை விளக்கும் சிறப்பும் அவற்றுக்குண்டு.

அரச மாளிகைகளும் பௌத்த கோயில்களும் அவனால் அமைக்கப்பட்டன. பொலன்னறுவையிலுள்ள நாற் சதுர மேடையில் அவனது காலத்துக் கட்டடங்கள் மூன்றுள்ளன. அவை நிசங்கலதா மண்டபம், ஹற்றதாகே, வட்டதாகே என்பன. அவனது கட்டுமானமாகிய சத்மால் பாசாத என்னும் ஏழடுக்கு மாளிகையும் அவற்றுக்குச் சமீபத்தில் உள்ளது. அவனது திருப் பணியான ரங்கொத் விகாரை பொலன்னறுவைக் காலத்து மிகப் பெரிய சேதியம்.

நிசங்கமல்லன் தனக்கெனக் தனியான அரசமாளிகையினை அமைத்தான். அது பராக்கிரமபாகுவின் அரண்மனையிலுஞ் சிறியது. அது காலப்போக்கிற் சிதைவாகி அழிந்து விட்டது. நில மட்டத்தில் அத்திபாரங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. அங்கே வெளிப்புறத்தில் 133' நீளமும் 61' அகலமுங் கொண்ட பெரு மண்டபம் இருந்தது. அதன் தென்கிழக்குப் புறத்திற் கோபுரம் போன்ற கட்டடம் அமைந்துள்ளது.

நிசங்கமல்லனுடைய சபாமண்டபம் ராஜவேஸி புஜங்கத்தை மாதிரியாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் அது அளவிற் பெரியது. அதன் தூண்கள் அலங்காரமற்ற தாங்கு தூண்கள். அம்மண்டபத்தின் அதிஷ்டானம் 133' 63' அகலமுங் கொண்டது. அதன் தென்மூலையில் அளவிற் பெரியதும் அகலமானதுமாகிய சிங்க உருவம் இருந்தது. அரசனின் சபை கூடிய வேளைகளில் அரசனின் சிம்மாசனமான விளங்கியது. சிம்மாசனத்தின் வலப்பக்கத்திலுள்ள ஆசனம் யுவராஜனுக்குரியது. அரசசபையிற் கூடியிருக்கும் வேறு பிரதானிகள் எண்மரின் பதவிப்பெயர்களும் அவர்களின் ஆசனங்களும் தூண்களிலுள்ள சாசனங்களிற் குறிப்பிடப்பட்டுள்ளன.

நிசங்கமல்லனின் கட்டுமானமாகிய ரங்கொத் விகாரை பொலன்னறுவைச் சேதியங்களில் மிகப்பெரியது. அது அடிமட்டத்தில் 93' விட்டங் கொண்டது: அதன் உயரம் 165' அது 558' சதுரமான மேடையின் நடுவில் அமைந்துள்ளது. அதன் நான்கு பக்கங்களிலும் கோயிலை அடைவதற்கான வழிகள் அமைக்கப்பட்டிருந்தமை அண்மைக்கால அகழ்வாய்வுகளின் மூலம் தெளிவாகியுள்ளது. வாயிற்புறங்களில் நான்கு திசை களையும் நோக்கிய கோலமான வாகல்கடவுகள் இரண்டிலே சில புதுமையான அம்சங்கள் உண்டு. ரங்கொத் விகாரையின் வாகல்கடவுகள் தூபியினை நோக்கி முன்றில் பெற்றுள்ளன. அவற்றிலே தூபியை வழிபடும் கோலமானவரின் படிமங்கள் அமைந்துள்ளன. வாகல்கடவுகளின் வெளிப்புறச் சுவர்களிற் சிற்ப அணிவரிசைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பொலன்னறுவையிலுள்ள ஹற்றதாகே என்னும் தாளதாப் பெரும்பன்னி கற்சுவர்களினாற் சூழப்பட்ட பிரகாரத்தில் அமைந் திருந்தது. அதன் வளாகம் 120' நீளமும் 90' அகலமுங் கொண்டது. அதன் வாசல் வடக்கில் இருந்தது. அதன் கட்டுமானம் விஜயபாகு அமைத்த தளாதாப் பெரும் பள்ளியினை முன்மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்டது. வடக்கிலே வாயிற் புறத்திலே முகமண்டபம் இருந்தது. கோயிலின் மூலஸ்தானம் 47' நீளமும் அகலமுங் கொண்டது: அந்தராலம் 30' சதுரமாகும். செம்மையாக உருவாக்கப்பட்ட அதிஷ்டானத்தின் மேல் கட்டடம் அமைந்துள்ளது. சுவர்களின் உயரம் 9'. கட்டடத்தில் ஸ்தானகக் கோலமான மூன்று புத்தர் படிமங்கள் இருந்தன. அந்தராளத்து இடப்பக்கத்து மூலையில் ஏற்றமாகப் படிக்கட்டுகள் இருந்தன. மேற்றளம் மரவேலைப்பாடானது என்பதால் முற்றாக அழிந்து விட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹற்றதாகே, என்னும் தளதாமாளிகைக்கு எதிர்புறமாக அமைந்துள்ளன. வட்டதாகே, நிசங்கமல்லனது காலத்து மற்றுமொரு கட்டடமாகும். **சேதியம்** என்னும் வகைக்குரிய இக்கோயில் இருதள வட்டமேடையின் மேல் அமைக்கப் பட்டுள்ளது. அடித்தளம் 120' விட்டமும் 5' 3" உயரமுங் கொண்டுள்ளது. வடக்கிலே இத்தளம் முன்னோக்கி நீண்ட வாசலைக் கொண்டுள்ளது. படிக்கட்டுக்களின் வழியே ஏறிச்சென்றதும் முதலாம் தளத்தை அடையமுடியம். படிகளின் இரு பக்கத்து கைப்பிடிச்சுவர்களின் முகப்பில் நாகர் வடிவங்கள் அமைந்த வாயிற் காவலர் சிற்பங்களும் வாசலின் முகப்பிற் சந்திரவட்டக் கல்லும் அமைந்துள்ளன.

இரண்டாவது தளத்தில் வழிபாட்டுக்குரிய சிறிய, இருதளத்தூபி அமைந்துள்ளது. இத்தளத்தில் நான்கு வாயிற் புறங்கள் உள்ளன. அவற்றைநோக்கிய கோலத்திலே தூபியை ஒட்டிய வண்ணமாக ஒவ்வொரு புத்தர் படிமம் இருக்கின்றது. தூபியைச் சுற்றி உயரமான சுவர் அமைந்துள்ளது. அதற்கும் தூபிக்குமிடையில் அகலமான வலம் வரும் பாதை காணப் படுகின்றது. இத்தளத்தின் விளிம்பிலே கைபிடிச்சுவர் உருவாக்கப்பட்டுள்ளன. அதில் அலங்கார வேலைப்பாடுகளாக மலர்வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவை இக்கோயிலுக்குச் சிறப்பாக உரியவை. இரு தளங்களிலும் தூண் வளையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கட்டடத்தின் கூரையினைத் தாங்கும் வகையில் அவை அமைக்கப்பட்டிருந்தன. கூரை முற்றாக அழிந்து விட்டதால் அதனைப் பற்றி இங்கு குறிப்பிடத் தேவையில்லை.

நிசங்கலாதா மண்டபம் அதன் வேலைப்பாடுகளிலிருந்தும் வேறுபட்டது. அதிலிருந்த வண்ணம் அரசன் பிரித் ஓதலைக் கேட்டான். இம்மண்டபத்தின் கம்பங்களும் குறுக்குச் சட்டங்களும் அலங்கார வேலைப்பாடுகள் இல்லாதவை. கம்பங்களை எல்லையாகக் கொண்ட, கிழக்கு மேற்காக 34' 3" நீளமும் தெற்கு வடக்காக 28' 6" அகலமுங் கொண்ட தளத்தின் நடுவில் அடித்தளத்தில் அமைந்த மண்டபமொன்று உண்டு . அதன் நடுவில் சிற்றுருவமான சேதியம் வழிபாட்டுச் சின்னமாக வைக்கப்பட்டுள்ளது. 8' 1" உயரமான எட்டுத் தூண்களை ஆதாரமாகக் கொண்டு கூரை அமைந்திருந்தது. காலப்போக்கில் அது முற்றாக அழிந்து விட்டது. தூண்கள் விசித்திரக் கோலமானவை. அவற்றின் அடித்தளம் சதுரமானவை. இடையிடையே அவற்றின் நுண்ணிய இலைவடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. தூண்களின் தலைப்பாகம் எண்கோணமானது. தாமரை மொட்டுகள் மலரும் கோலத்தில் அது வடிவமைக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவையிலுள்ள சத்மஹால் பாசாத (ம்) தனித்துவமான பண்புகளைக் கொண்டது. அது ஏழு நீள்சதுரமான தளங்களையுடைய புதுமையான கட்டுமானம். அதனைப் போன்ற கட்டடமொன்று தாய்லாந்தின் வடபகுதியில், சன் மஹா பொன் என்னுமிடத்திற் காணப்படுகின்றது. சத்மஹால் பாசாதவிலுள்ள தளங்கள் ஒவ்வொன்றும் அதன் கீழமைந்த தளத்தைக் காட்டிலும் அளவிற் சிறியது. தளங்களின் புறச்சுவர் ஒவ்வொன்றிலும் தேவகோட்டங்கள் அமைந்துள்ளன. இக்கட்டடத்தின் வேலைப்பாடுகள் 12ம் நூற்றாண்டுக்குரியவை. பதின்மூன்றாம் நூற்றாண்டிலே பொலன்னறுவையிற் சிறப்பு மிக்க கட்டடம் எதுவும் அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

(சி. ப.)

## பொலன்னறுவைப் படிமங்கள்

### 1. கோயிற் சிற்பங்கள்

பொலன்னறுவை நகரம் இராசதானியாக அமைந்திருந்த காலத்தில் அந்நகரத்திலே பல இந்துக் கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஒரு நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாக நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளின் பயனாக 14 கோயில்களின் தொல்பொருட் சின்னங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. அவற்றுள் 7 கோயில்கள் சிவாலயங்கள்; 5 கோயில்கள் பெருமாள் கோயில்கள்; ஒன்று அம்மன் கோயில். அவற்றிலே பெருமளவிலான கற்சிற்பங்கள் அமைக்கபட்டிருந்தன. கோயிலின் மூலஸ்தானத்திலும், மண்டபங்களிலும் பரிவார தேவர் கோட்டங்களிலும் தாபனம் பண்ணப்பட்டிருந்த விக்கிரகங்கள் ஒரு வகையானவை. அவை அபிஷேகம் செய்யப்பட்டுத் தாபனஞ் செய்யப்பட்ட கடவுட் படிமங்களாகும். நாள்தோறும் அவற்றை வழிபாடு செய்தனர். சிவன், உமாதேவியார், மகாவிஷ்ணு, கணபதி, குமாரக் கடவுள் ஆகியோரின் படிமங்கள் இவற்றுள் அடங்கும்.

கர்ப்பக்கிருகம், மண்டபங்கள் ஆகியவற்றிலும் விமானத்திலும் வெளிப்புறமாக அமைக்கப்படும் சிற்பங்கள் இன்னொரு வகைக்குரியவை. அவை சிற்பசாஸ்திர முறைப்படி கட்டட அமைப்பின் அம்சங்களாக அமைக்கப்பட்டவை. அவை ஆலயம் பற்றிய தத்துவக் கோட்பாடுகளையும், சமய தத்துவங்களையும் புராணக் கதைகளையும் விளக்கும் பாங்கில் அமைக்கப்பெற்றவை. தேவ கணங்கள், சிவகணங்கள், நாகர், யக்ஷர், முனிவர்கள் முதலாயினோரின் உருவங்கள் இவற்றில் அடங்கும்.

பொலநறுவையிலுள்ள கோயில்கள் பெரும்பாலும் இடிந்து அழிந்து விட்டதால் அவற்றுள் அமைக்கப்பட்டிருந்த சிற்பங்களிற் பெரும்பாலானவை கிடைக்கவில்லை. கிடைத்தனவற்றையும் பாதுகாப்பாக வைத்துப் பேணும் மனப்பாங்கு இல்லாதமையாலும், அகழ்வாராய்வுகளிலே முற்காலங்களிற் கிடைத்த உருவங்கள் பலவற்றை இப்போது காணமுடிவதில்லை. அங்கு கிடைத்த வெண்கலப்படிமங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ச்சி மிக்கவை என்பதால் ஆராய்ச்சியாளரும் தொல்பொருட் திணைக்களத்தாரும் அவற்றிலே கவனஞ் செலுத்தினார்கள். ஆயினும், பொலநறுவைக் கோயில்களின் அழிபாடுகளிடையே காணப்பெற்ற கற்சிற்பங்கள் ஒரு உன்னதமான கலைப்பாணியின் குணாம்சங்களைப் பிரதிபலிக்கும் சின்னங்கள் என்பது கவனித்தற்குரியதாகும். எனவே அவற்றைப் பற்றிய விவரங்கள் அடங்கிய அறிக்கையொன்றினைத் தொகுத்து வைத்தல் அவசியமாகும். இல்லாவிடின் அவ்வரிய படிமங்களின் சிறப்புகளை அறிஞரும் பிறரும் அறிந்து கொள்ள முடியாது.

முதலாம் சிவாலயத்தின் அழிபாடுகளிடையே அநேகமான கற்சிற்பங்களின் துண்டங்கள் காணப்பெற்றன. அவற்றின் உருவங்களை அடையாளங் காண முடியாத அளவிற்கு அவை சிதைந்து விட்டன. விநாயகர், குமாரக் கடவுள், காளி ஆகியோரின் படிமங்கள் மட்டுமே அடையாளங் காணக்கூடிய வண்ணமாய் உள்ளன. ஆசனக் கோலத்திலுள்ள விநாயகரின் படிமத்தில் நான்கு கரங்கள் அமைந்துள்ளன. அது 1 அடி 6 அங்குலம் உயரங் கொண்டது. கார்த்திகேயரின் படிமம் 1 அடி 4 அங்குலம் உயரமுடையது; அதில் நானாவிதமான படைக்கலங்களை ஏந்திய கோலத்தில் எட்டுக் கரங்கள் காணப்படுகின்றன. உருவம் ஸ்தானக நிலையில் உள்ளது. அம்மனின் படிமம் 2 அடி 2 அங்குலம் உயரமானது. அதன் அங்கங்களில் வழமையான ஆபரணங்களின் உருவங்கள் தெரிகின்றன.1

ஐந்தாவது சிவாலயத்தின் இடிபாடுகளிடையே கிடைத்த படிமங்களில் மேல்வருவன குறிப்பிடத்தக்கவை:

1. ஆசனக் கோலத்து விநாயகர்.
2. நான்கு கரங்கள் பொருந்திய ஸ்தானக விஷ்ணு.
3. ஸ்தானக நிலையிலுள்ள அம்மனின் படிமம்.
4. நந்தி.
5. தோளிலே தண்டத்தைத் தாங்கிய ஆசன நிலையிலுள்ள தெய்வப் படிமம்.
6. சப்தமாதர், பிராஹ்மி, சரஸ்வதி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி.
7. விநாயகரின் படிமம் செதுக்கப்பட்ட கற்றூண்.
8. சிவலிங்கம்.2

ஆறாவது சிவாலயத்தின் வளாகத்தினுள் விநாயகர், விஷ்ணு ஆகியோரின் படிமங்களும் நந்தியின் உருவமுங் கண்டெடுக்கப் பெற்றன. விஷ்ணுவின் வடிவம் ஆசனக் கோலமானது. அதில் இரண்டு கரங்கள் உள்ளன. கால்களில் ஒன்று மடித்து ஆசனத்தில் வைத்த நிலையிற் காணப்படுகின்றது. திருமாலின் இரு பக்கங்களிலுஞ் சக்திகளின் உருவங்கள் அமைந்துள்ளன. இரண்டாம் விஷ்ணு கோயிலின் மூலஸ்தானத்திலே ஸ்தானக நிலையிலுள்ளதும் நான்கு கரங்களை உடையதுமான விஷ்ணுவின் வனப்பு மிக்க படிமம் உள்ளது.

ஏழாவது சிவாலயத்தின் அழிபாடுகளிடையிலும் பல படிமங்கள் உடைந்த நிலையிற் காணப்பட்டன. அவற்றுட் கணேசரின் களிமண் படிமமும் கார்த்திகேயரின் உருவமான கற்சிற்பமுங் குறிப்பிடத்தக்கவை. பத்மாசனத்திலும் ஸ்தானக நிலையிலுங் கார்த்திகேயரின் படிமம் அமைந்துள்ளது. அதன் தலையும் தோள்களும் கரங்களும் உடைந்து விட்டன. மிகவுஞ் சேதமடைந்த நிலையிலுள்ள சிவனின் உருவமும் கணேசரின் கற்சிற்பமும் அங்கு காணப்பெற்றன.4

பொலன்னறுவையிலிருந்த அம்மன் கோயிலின் மூலஸ்தானத்திலே மகிஷமர்த்தினியின் விக்கிரகம் ஸ்தாபனமாயிருந்தது. அகழ்வுகள் தலத்திலே நடந்த போது அது ஆலயத்தின் வெளிப்புறத்திலே உடைந்த நிலையிற் காணப்பெற்றது. அப்படிமம் ஸ்தானக நிலையிலும் மகிஷத்தின் உருவம் பொருந்திய பீடத்திலும் அமைந்துள்ளது. வாள், கதை, சங்கு, சக்கரம் முதலானவற்றை எண்கரங்களும் பிடித்த வண்ணமாயுள்ளன. பீடத்திலுள்ள மகிஷம் மகிஷாசுரனின் அடையாளம் என்பதாற் படிமம் மகிஷமர்த்தனியான துர்க்கையின் கோலம் என்பது உறுதியாகின்றது. எனவே மகிஷமர்த்தனியை மூலவராகக் கொண்ட கோயிலைப் பொலநறுவையிலுள்ள நானாதேசி வணிகர் அமைந்திருந்தனர் என்று கொள்ள முடிகின்றது. அவர்களின் கணதெய்வமான ஐயப்பொழில் பரமேஸ்வரியின் தோற்றத்தைத் தங்கள் வெண்கல முத்திரையில் நானாதேசி வணிகர் இவ்வண்ணமாக அமைந்திருந்தமையுங் குறிப்பிடற்குரியது.

## 2. வெண்கலப் படிமங்கள்

பொலன்னறுவைச் சிவாலயங்கள் அமைந்துள்ள தலங்களிலே தொல்பொருள் அகழ்வுகளை நடத்திய சமயங்களில், 1907 ஆம் ஆண்டு முதலாக வெவ்வேறு காலகட்டங்களிலே பெருமளவிலான கடவுட் படிமங்களும், வேறு வெண்கல உருவங்களுங் கிடைத்துள்ளன. அவை பெரும்பாலும் முதலாம் சிவாலயம், ஐந்தாம் சிவாலயம் ஆகியவற்றின் வளாகங்களிலிருந்து கிடைத்துள்ளன. வனப்புமிக்க, கவர்ச்சியுடைய கலைப்பொருட்கள் என்பதாலும், தொன்மையானதும் பிரபலமானதுமான சமய மரபொன்றின் தத்துவங்களையும் வழிபாட்டு முறைகளையும் பிதிபலிப்பதாலும் அவை அறிஞரின் கவனத்தைப் பெற்றன. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்திலே தொல்பொருட் திணைக்களத்துக்கும் கொழும்பிலுள்ள அருங்காட்சியகத்துக்கும் பொறுப்பதிகாரிகளாயிருந்தவர்களும் அப்படிமங்களைப் பேணிப் பாதுகாப்பதிலும், அவற்றைப் பற்றிய விவரங்கள் அடங்கிய குறிப்புகளை எழுதி வைப்பதிலும், அவற்றை ஆராய்வோருக்கு ஊக்கம் அளிப்பதிலும் ஆர்வமுடையோராய் விளங்கினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதாம் நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்திலே, 1907 ஆம் ஆண்டிலும், 1908 ஆம் ஆண்டிலுங் கண்டெடுக்கப் பெற்ற சைவசமயம் சம்பந்தமான உலோகப் படிமங்களை முதன்முதலாக ஆராய்ந்த பொன்னம்பலம் அருணாசலம் அவற்றை அடையாளங் கண்டு, விளக்கி, விமர்சன ரீதியாக இரண்டு கட்டுரைகளை வெளியிட்டார். பின்பு அவரின் மைத்துனரும் கலாதத்துவ மேதையாக விளங்கியவருமான மு. ஆனந்தகுமாரசுவாமியும் கொழும்பு அருங்காட்சியகத்திலுள்ள உலோகப் படிமங்கள் பற்றிய தனது நூலில் இப்படிமங்களின் அம்சங்களை விளக்கியுள்ளார். அவர்களிருவரும் இந்து கலாசாரம் பற்றிய பரந்த, ஆழமான அறிவின் அடிப்படையிலும் வித்துவப் புலமை சான்ற வகையிலும் பொலன்னறுவைப் படிமங்களை விளக்கியுள்ளனர். அத்தகைய புலமையினை இலங்கையில் இதுவரை வேறெவருங் கொண்டிருக்கவில்லை. தமிழில் அவற்றைக் கலாதத்வ நோக்கில் விமர்சிப்பதற்கு எவரும் முற்படவில்லை.

பொலன்னறுவையிலே சைவசமயம் சம்பந்தமான உலோகப் படிமங்கள் கிடைத்தவற்றைச் சுருக்கமாக இங்கு வர்ணித்தல் அவசியமாகின்றது. தொல்பொருட் திணைக்கள ஆணையாளராக இருந்த எச்.சீ.பீ. பெல் முதலாம் சிவாலயம் அமைந்துள்ள தலத்தில் 1907 ஆம் ஆண்டில் அகழ்வுகளை நடத்திய போது பல வெண்கலப் படிமங்கள் எதிர்பாராத வண்ணமாகக் கிடைத்தன. எல்லாமாக எட்டு வெண்கல உருவங்கள் கிடைத்தன. அவற்றுளொன்று நடராசரின் படிமம். இரண்டு படிமங்கள் சிவகாமி சமேத நடராசரின் தோற்றங் கொண்டவை. ஒரு படிமம் உமாதேவியாரின் உருவமாகும். அப்பர், மாணிக்கவாசகர் ஆகிய சமயகுரவரின் படிமங்கள் ஒவ்வொன்றுங் காணப்பட்டன.

1908 ஆம் ஆண்டிலே எச். சீ. பீ. பெல் ஐந்தாம் சிவாலயத்தின் வளாகத்திலே தொல்பொருள் அகழ்வுகளை நடத்திய பொழுது பெருந்தொகையான வெண்கலப் படிமங்கள் கிடைத்தன. நான்கு சிவபெருமானின் நான்கு வடிவங்களும், பார்வதியின் படிமங்கள் நான்கும் அவற்றிடையே காணப்பட்டன. சுந்தரமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் ஆகியோரின் பல படிமங்கள் அங்கு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மகாவிஷ்ணுவின் ஸ்தானக நிலையிலுள்ள படிமமொன்றுங் காணப்பெற்றது.

மூன்றாஞ் சிவாலயத்தின் சுற்றுப்புறங்களை அகழ்ந்த பொழுது ஸ்தானக நிலையிலுள்ள பார்வதியின் உருவமொன்று கிடைத்தது.

சோழராட்சிக் காலத்துக் கோயில்களில் ஒன்றாகக் கொள்ளத்தக்க ஆறாஞ் சிவாலயம் அமைந்துள்ள தலத்திற் பதினான்கு உலோகப் பொருட்கள் கண்டெடுக்கப் பெற்றன. அவற்றுள் நடராசர் வடிவமும் அம்மனின் சிற்பங்கள் இரண்டும் விக்கிரகங்களாகும். ஏனைய யாவும் ஆராதனை வேளைகளிற் பயன்படுத்தப்பட்ட பொருட்களாகும். அவற்றின் விவரங்கள் மேல்வருமாறுள்ளன.

1. தாம்பாளம்: 10 1/2 அங்குல விட்டங்கொண்டது.
2. முக்காலி: உயரம் 6 அங்குலம்: விட்டம் 10 1/2 அங்குலம்
3. கிண்ணம்: 5 1/2 அங்குலம் விட்டங்கொண்டது.
4. மணி: 1 அடி 1 அங்குலம் உயரமானது. ஸ்ரீ ஆண்பிள்ளை பெருமாள் என்னும் பெயர் எழுதப்பட்டுள்ளது.
5. தடப்பை: 1 அடி 3 அங்குல நீளம்.
6. தடப்பை: 1 அடி 2 அங்குல நீளம்.
7. தூவக்கல் (வாசனைப் பொருள் எரிக்கும் கலம்): உயரம் 3 அங்குலம்: நீளம் 9 1/2 அங்குலம்
8. தூவக்கல்: உயரம் 3 அங்குலம்: நீளம் 9 1/2 அங்குலம்.
9. சங்கு:நீளம் 8 1/2 அங்குலம்:அகலம் 4 1/2 அங்குலம்.
10. சங்கு:நீளம் 8 1/2 அங்குலம்: அகலம் 41/2 அங்குலம்.10

### 1960 ஆம் ஆண்டு அகழ்வுகள்

ஐந்தாம் சிவாலயத்தின் வளாகத்திலே 1960 ஆம் ஆண்டிலே தொல்பொருட் திணைக்கள ஆணையாளராகவிருந்த சீ.ஈ. கொடகும்புறவினாலே அகழ்வுகள் நடத்தப் பெற்ற பொழுது மேலும் பல வெண்கலப் படிமங்கள் கிடைத்தன. அவற்றைப் பற்றிய கட்டுரை ஒன்றைச் சமர்ப்பித்த சமயத்திலே அவர் மேல்வருமாறு கூறினார்.

> பொலன்னறுவையிலுள்ள இரண்டாம் சிவாலயத்தின் தலத்திலே அகழ்ந்தெடுக்கப்பட்ட மேலும் சில வெண்கலப் படிமங்களைப் பற்றியும் வேறு சில தொல்பொருட் சின்னங்களைப் பற்றியும் இப்பொழுது நான் உங்களுக்கு விவரமாக விளக்கப் போகின்றேன். அவை கிடைத்தமை பற்றிய விவரங்கள் மேல்வருவனவாகும். 1960 ஆம் ஆண்டு செப்தெம்பர் 18ஆம் திகதி ஐந்தாம் சிவதேவாலயத்தின் இடிபாடுகளை அகற்றும் பொழுது அக்கோயிலுக்கும் நான்காம் விஷ்ணு தவாலயத்துக்கும் இடையிலுள்ள பகுதியில் 5 1/2 அங்குலம் உயரங் கொண்ட ஒரு பெண்ணின் வெண்கலப் படிமம் காணப்பட்டது. உருவத்தின் வலக்கரத்துக் கைவளையில் ஒரு பறவையின் உருவந் தெரிகின்றது. அதனைக் கிளியென அடையாளங் காணலாம். அதனாலும் உருவத்தின் தலை மேலுள்ள அணியின் வடிவமைப்பின் அடிப்படையிலும் அப்படிமத்தில் அமைந்திருப்பது பிரம்மாவின் சக்தியான சரஸ்வதியின் உருவமென்று கொள்ளலாம். ஒரு மரத்துக்குப் பின் வேறு பல படிமங்கள் கிடைத்தன. அவை அளவிற் பெரியவை. சிவலாயத்தின் பின்புறத்தே அதன் பிரமாண்டமான விமானம் விழுந்து கிடந்த இடத்துக்குச் சமீபத்திலிருந்து அவை எடுக்கப் பெற்றன. தீபாவளி நாளான ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதியன்று நானும் தொல்பொருட் கிணைக்களத்தைச் சேர்ந்த என்.எச்.ஆர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலன்னறுவைக்கால வெண்கலப்படிமங்கள்



சிவன் பார்வதி



தேவியருடன் விஷ்ணு



பார்வதி



சூரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடராசர்



சிவன் பார்வதி



நடராசர்



சிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுந்தரர்



மாணிக்கவாசகர்



அப்பர்




சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலந்தா கெடிகே (பல்லவர் கலைப்பாணி) இரு தோற்றங்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நளவங்ஸவும் அவ்விடத்திலே அகழ்வுகளை ஆரம்பித்தோம். சிவாலயத்தின் அத்திபாரத்தினின்றும் 3 அடி கீழேவெட்டப்பட 5 அடி நீளமும் 3 அடி அகலமுங் கொண்ட ஒரு கிடங்கிலே ஒரு தொகுதியான வெண்கலப் படிமங்கள் புதைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் சில பீடங்களே காணப்பட்டன. வேறு சிலவற்றின் திருவாசிகளும் அவற்றோடு வைக்கப்பட்டிருந்தன அந்தக் கிடங்கு படிமங்களைப் புதைப்பதற்கென்றே வெட்டப்பட்டதாகும். நடராஜரின் விக்கிரகமும். ஆசனக் கோலத்திலுள்ள சிவனின் உருவமும் மகாவிஷ்ணு. பார்வதி ஆகியோரின் படிமங்களும் நாயன்மார் இருவரின் வடிவங்களும் அக்கிடங்கிலே அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. அப்படிமங்கள் கிடைத்த பின் ஒரு வாரத்திற்குள். ஆலயத்தின் தென்புறத்திலே. சுமார் 28 அடி தூரத்திலே. ஒக்டோபர் 26 ஆம் திகதியிலே ஒரு குடத்தினுள் அளவிற் சிறியனவான எட்டு வெண்கலப் படிமங்களும் வேறுபல பொருட்களுங் கண்டெடுக்கப்பெற்றன. நடராசர். வைரவர். குமாரக் கடவுள். பாலகிருஷ்ணர். அம்மன் ஆகியோரின் ஏழு படிமங்களும் நந்தியின் உருவமும் அக்குடத்தில் இருந்தன. முக்காலி. தூவக்கால். மணி. சங்கு முதலியனவும் அவற்றோடு காணப்பட்டன.

27 ஆம் திகதியன்று கோயிலின் அத்திரபாரத்திற்கு மேற்கிலே. 18 1/2 அடி தூரத்திலே அளவிற் பெரிதான விநாயகரின் படிமங் காணப்பெற்றது. கால் நூற்றாண்டு கழிந்த பின்பு. மேலும் பல வெண்கலப் படிமங்கள் கண்டெடுக்கப்பெற்றன. கலாசார முக்கோணம் அகழ்வுகளை நடத்திய பொழுது ஐந்தாம் சிவாலயத்தின் சுற்றுப் புறங்களிற் பல படிமங்கள் கண்டெடுக்கப் பெற்றுள்ளன. 1997 ஆம் ஆண்டிலே ஜப்பானிய அறிஞரான காறஷீமாவுடன் பொலன்னறுவையிலுள்ள தமிழ்ச் சாசனங்களைப் படிவமெடுப்பதற்குச் சென்றிருந்த பொழுது அவற்றுள் இரண்டினை எமக்கு பார்வையிடுவதற்கென்று எடுத்து வைத்திருந்தனர். அவற்றிலொன்று அர்த்தநாரியின் வடிவமாகும். மற்றையது வீரபத்திரரின் உருவம் போலத் தெரிந்தது. அவற்றைப் போன்ற படிமங்கள் இலங்கையில் முன்பு கிடைக்கவில்லை. கலாசார முக்கோணத்தினால் எத்தனை படிமங்கள் வெளிக்கொணர ப்பட்டுள்ளன என்பது தெரியவில்லை. அவை எந்தவொரு அருங்காட்சியகத்திலும் பார்வைக்கு வைக்கப்படவில்லை. அவற்றைப் பற்றிய விவரங்கள் எதுவும் வெளியிடப்படவுமில்லை. அவற்றைப் பற்றிய விவரங்கள் கிடைக்காதவரை பொலநறுவையிலுள்ள சைவசமயந் தொடர்பான வெண்கலப் படிமங்களைப் பற்றிய பூரணமான. வித்துவார்த்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முடியாது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

## படிமங்களின் பிரதிமாலக்ஷணங்கள்

## முதலாம் சிவாலயத்துப் படிமங்கள்

i. **நடராசர்:** உயரம் 90.4 சென்ரிமீற்றர். பிரபா மண்டலம் வட்டமானது. அதனடியில் இரு பக்கங்களிலும் மகர வடிவங்கள். சிகையின் மேற்பாகம் வத்தவேணி ஆகும். முடி கொக்கின் இறகுகளை அடுக்கினாற் போன்றது. பின்தலையிலே வட்டமான முடிச்சுப் போன்ற சிகைச் சக்கரம் தெரிகிறது. சிகையின் கீழ்ப்பாகம் தாண்டவத்திலே வீசித் தொங்கும் லம்பவேணியாகும். முடியின் கீழ் கபாலத்தின் உருவமுண்டு. லம்பவேணியின் வலப்பக்கத்திலே கங்கையும் இடப்பக்கத்திலே பிறையும் பாம்பும் உள்ளன.

உருவத்தில் நெற்றிக்கண் தெரிகின்றது. வலது பக்கத்திலே மகர குண்டலமும். இடது பக்கத்திலே தாடங்கமுங் காதணிகளாய் உள்ளன. ஆணாகியும். பெண்ணாகியும். அப்பேதங்கடந்துமுள்ள பரத்துவ நிலையினை இவை உணர்த்தும். கழுத்திலே கபால மாலை அமைந்துள்ளது. படைத்தல். காத்தல். அழித்தல் ஆகியன மாறி மாறி நிகழும் அநந்தமான ஊழியின் முதல்வன் சிவன் என்பதற்கு அது அடையாளம். சிவனின் கழுத்திலே உருத்திராக்க மாலையும் அமைந்துள்ளது. சிவனடியார்கள் மீது இறைவன் கொண்டுள்ள அளவிலாத அன்பிற்கு உருத்திராக்கம் அடையாளம் என்பர் அருணாசலம். அவர்களின் துன்பங்கைளக் கண்டு இறைவன் உகுத்த கண்ணீர்த் துளிகள் உருத்திராக்க வடிவம் பெற்றன என்றும் அன்னார் கூறுகிறார். இடது தோள் மேலும் வலது கரத்தின் கீழும் உபவீதம் உள்ளது. அது 96 நூல்களால் இழைத்தது. அது பிரபஞ்சத்தின் இயக்கத்துக்கு ஆதாரமான 96 தத்துவங்களைக் குறிப்பது. உபவீதம் தரியாத எவரும் கிரியைகளைச் செய்யலாகாது. சிவன் சர்வகர்மார்க்ககன். எல்லாக் கிரியைகளுக்கும் நாயகன் என்பதால் அவன் உபவீதம் அணிந்துள்ளான்.

சிவனுடைய அங்கங்களையும் சிகை மண்டலத்தையும் நாக பாம்புகள் சுற்றிச் சுழல்கின்றன. யோக மார்க்க சிந்தனையாளர் பிரபஞ்ச சக்தியின் ஒடுங்கிய நிலையின் அடையாளமாக நாகத்தைக் கொள்வர். நடராசர் படிமத்திலே தெரிகின்ற நாகங்கள் சிவன் வசமாயுள்ள மூலாதாரப் பிரபஞ்ச சக்தியின் அடையாளங்களாகும். உருவத்தில் நான்கு கரங்கள் உள்ளன. மேல் வலக்கரம் டமருகம் ஏந்திய வண்ணமாயுள்ளது. கீழ் வலக்கரம் அபயகரமாகும். மேலான இடக்கரம் அக்கினி குண்டத்தை ஏந்திய கோலத்தில் உள்ளது. கீழான இடக்கரம் வீசித் தொங்கிய வண்ணமானது. வலக்கால் அபஸ்மார புருஷன் என்னும் முயலகனை ஊன்றிய கோலத்தில் உள்ளது. இடக்காலை உயர்த்தி. வீசிக் கீழ்நோக்கித் தொங்கிய கோலதத்தில் உள்ளது. இடையிலே புலித்தோல் போர்த்த கோலந் தெரிகிறது. கால்களிலே வீரக் கழல்கள் உள்ளன. உருவம் தாமரைப் பீடத்தில் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. **நடராசர்:** உயரம் 64.5 சென்ரி மீற்றர் (25.8) பிரபா மண்டலம் காணப்படவில்லை. முடி முன்னையதில் உள்ளதனைக் காட்டிலும் வேறானது. அது கரண்ட மகுடம் போலானது. சிகை பின்னலானது. ஒவ்வொரு பக்கத்திலும் ஐந்து பின்னல்கள் அடுக்கிய கோலத்தில் நீட்டிய வண்ணமாயுள்ளன. அங்க லக்ஷணங்கள் பொருத்தமான முறையில் அமையவில்லை.

iii. **நடராசர்:** உயரம் 61.5 சென்ரி மீற்றர் ஸ்ரீ 26.6 அங்குலம். தனித்துவமான அம்சங்கள் பொருந்தியது. பிரபா மண்டலமில்லை. பீடமுமில்லை. மகுடம் கரண்ட மகுடமாய் அமைந்துள்ளது. அதன் வலப்புறத்திலே பாம்பும் இடப்புறத்திலே பிறையுந் தெரிகின்றன. கால்கள் கனதியான. அகன்ற தோற்றங் கொண்டவை. முகத்திலே குமுண்சிரிப்புத் தெரியும் வண்ணமாக உருவம் அமைக்கப்படவில்லை.

iv. **நடராசர்:** உயரம் 1 அடி 6 அங்குலம். பத்மாசனம் அமைந்த பீடம் உள்ளது. பிரபா மண்டலம் வட்டமான தோற்றங் கொண்டது. பிரதிமா லக்ஷணங்கள் முதலாவது உருவத்திற் போல அமைந்தவை. வடிவம் வனப்பு மிக்கது. சமகாலத் தென்னிந்தியக் கோயில்களில் இருந்தவற்றை ஒத்துள்ளது.

v. **நடராசர்:** உயரம் 4 அடி 8 அங்குலம். உருவம் மிகப் பெரியது. இதுவரை கிடைத்துள்ள நடராசர் படிமங்களில் இதுவே மிகப் பெரியதென்று சொல்லப்படுகின்றது. பிரபா மண்டலமும் அமைப்பிலே தனித்துவமானது. இரு பக்கங்களிலும் அதன் அடிப்பாகங்கள் கால்கள் போற் காட்சியளிக்கின்றன. அவை அமைப்பிலே தூண்கள் போலானவை. பீடம் முத்தள அமைப்புடையது. அடித்தளம் தாமரை வடிவமானது. நடுவிலுள்ள தளத்திலே இசைக் கருவிகளை மிழற்றும் பெண்களின் உருவங்கள் அமைந்துள்ளன. கையிலே தாளம் ஏந்திய பெண். சங்கூதி. வேய்ங்குழல் வாசிப்பவர். மேளம் அடிக்கும் பெண். தாளம் போடும் பெண் ஆகியோரின் உருவங்கள் வலமிருந்து இடமாகத் தெரிகின்றன.

இவ்வாறான உருவங்கள் தென்னிந்தியக் கோயில்கள் சிலவற்றிலே காணப்படும் நடராசரின் கற்சிற்பங்களில் உள்ளன. பீடத்தின் மூன்றாவது தளம் சிறியது. அதன் மேல் முயலகனின் உருவம் அமைந்துள்ளது.

காதணிகளும் வேணியும் உருவத்திலே காணப்படவில்லை. அவை உடைந்துவிட்டன என்று கொள்ளலாம். மகுடம் கரண்ட மகுடம் போலானது. அதன் கீழே கபாலமாலை தெரிகின்றது. கால்களும் கைகளும் மெலிந்த தோற்றங் கொண்டவை. வனப்பில்லாதவை. இப்படிமம் வேலைப்பாட்டிலே மத்திமமான வர்க்கத்தைச் சேர்ந்த ஒன்றாகும்.

vi. **நடராசர்:** வடிவம் எல்லா அம்சங்களுடனும் காணப்படுகின்றது. உயரம் 5 1/2 அங்குலம். வனப்பு மிகுந்தது.

## சோமஸ்கந்த வடிவங்கள்

i. ***முதலாம் சிவாலயம் 1907:*** உமாசஹித கோலத்தில் அமைந்துள்ளது. சிவனதும் உமையினதும் உருவங்கள் ஒரு பொதுவான பீடத்தில் அமைந்துள்ளன. சிவனது படிமம் 60.3 சென்ரி மீற்றர் உயரங் கொண்டது. அம்மனின் படிமம் 51 சென்ரி மீற்றர். நாற்சதுரமான இருதள பீடத்தின் மேலமைந்த பத்மாசனங்களிலே அம்மையப்பரின் உருவங்கள் உள்ளன. சிவனின் இடதுகால் மடித்து ஆசனத்தில் வைத்த நிலையிலுள்ளது. வலக்கால் கீணோக்கி மடித்துப் பீடத்தில் ஊன்றிய கோலத்தில் உள்ளது. மகுடம் கரண்ட மகுடமாகும். அதிற் பிறையும் பாம்பும் தெரிகின்றன. வலது காதில் மகர குண்டலமும் இடது காதில் தோடும் அணிகளாய் உள்ளன. நெற்றிக் கண் தெரிகின்றது. நான்கு கரங்களிற் பின் வலக்கரம் மழு ஏந்திய வண்ணமாயுள்ளது. பின்னிடக் கரத்தில் மான் அமைந்திருக்கின்றது. முன் வலக்கரம் அபயகரமாகும். மற்றைய கரம் கடக ஹஸ்தமாகும்.

அம்மனின் உருவத்தில் வலக்கால் மடித்து ஆசனத்தில் வைக்கப்பட்டுள்ளது. இடக்கால் கீழ்நோக்கி மடித்துப் பாதம் பீடத்திலே தங்கும் நிலையிலுள்ளது. வலக்கரம் தாமரை மொட்டினை ஏந்திய கோலமானது. இடக்கரம் வரதகரமாகும். குமாரனின் பிரதிமை உருவத்திலே காணப்படவில்லை. இப்படிமம் வனப்பு மிக்கது. அதன் வேலைப்பாடு தரத்தில் உன்னதமானது. இதிற் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குரிய படிமங்களின் அம்சங்கள் காணப்படுகின்றன.

ii. ***ஐந்தாம் சிவாலயம் 1960:*** பிரதிமாலக்ஷணங்களிற் சிற்ப சாத்திர விதிகளுக்கு மாறான அம்சமொன்று உண்டு. வழமைக்கு மாறாகச் சிவனது வலக்கரம் மடித்து ஆசனத்தில் வைக்கப்பட்டுள்ளது. இடக்கால் கீழ்நோக்கித் தொங்கிய நிலையிலுள்ளது. உமாதேவியாரின் உருவம் உடைந்து படிமத்தினின்று நீங்கிவிட்டது. வேலைப்பாடு சாதாரணமானது. உருவம் வனப்பற்றது.

## பிரதோஷமூர்த்தி

i. ***முதலாம் சிவாலயம் 1907:*** உயரம் 47 சென்ரிமீற்றர். உமாதேவியார் சகிதமான சிவனின் தோற்றம். உருவங்கள் ஸ்தானக நிலையில் அமைந்தவை. உருவங்கள் ஒவ்வொன்றும் பொதுவான பத்திராசனமான பீடத்தின் மேலுள்ள தனித்தனியான பத்மாசனத்தில் அமைந்துள்ளன. சிவனின் உருவம் திரிபங்கமானது. வலப் பாகத்துப் பின்கரம் மழுவேந்திய கோலமானது. முன்கரம் அபயகரமாய் உள்ளது. இடப்பாகத்துப் பின்கரம் தேவியை அணைத்த வண்ணமாயுள்ளது: முன்கரம் கடக ஹஸ்தமாயுள்ளது. மகுடம் உயரமான கரண்ட மகுடமாகும். அதில் பாம்பும் பிறையும் அமைந்துள்ளன. நெற்றியின் மேலே பட்டமாலை தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. **காதணிகள்:** வலப்புறத்திலே மகர குண்டலமும் இடப்புறத்திலே தோடும் காதணிகளாக அமைந்துள்ளன. மூன்று ஆரங்கள் கழுத்தணிகளாய் உள்ளன. உபவீதம், கடிசூத்திரம், உதரபந்தம் என்பன தெளிவான தோற்றம் கொண்டவை. அம்மனின் உருவமும் திரிபங்கமானது. உருவம் மெலிந்த தோற்றங் கொண்டது. அங்கலக்ஷணங்கள் இயற்கை எழில் பொருந்தியவை. இலங்கையில் இதுவரை கிடைத்துள்ள சைவப் படிமங்களில் இதுவே உன்னதமானது.

இதனை இதுவரை எவரும் அடையாளங் காணவில்லை. சிவன் பார்வதி ஆகியோரின் படிவமென்றே ஆனந்த குமாரசுவாமியும் இதனை வர்ணித்தனர். எல்லா அம்சங்களிலும் இதனையொத்த வடிவம் தஞ்சாவூர் மாவட்டத்து வெள்ளலகரத்திலே காணப்பெற்றது. அதனைப் பிரதோஷமூர்த்தியென்று ஸ்ரீநிவாசன் வர்ணித்துள்ளார். எனவே, இலங்கையிலுள்ள படிமமும் பிரதோஷ மூர்த்தியின் படிமமென்றே கொள்ள வேண்டியதாகும்.

### விருஷவாகன மூர்த்தி

i. **ஐந்தாம் சிவாலயம் 1908:** உயரம் 87 சென்ரிமீற்றர். அம்மனின் உருவமும் நந்தியின் வடிவமும் கூடிய கோலம். உருவம் திரிபங்கமானது. இடுப்பிலுள்ள வளைவு இடது பக்கம் நோக்கியது. பத்மாசனத்தில் அமைந்தது. கால்கள் மடித்து அமைந்த நடனக்கோலம் மிகச் சிறப்பானது. கரங்கள் அமைந்த முறை புதுமையானது. மேலாகவுள்ள இரு கைகளும் வழமைக்கு மாறாகத் தோளிலிருந்ததன்றி முழங்கை மட்டத்திலிருந்து பிரிகின்றன. உயர்த்திய வலக்கரம் மழு ஏந்திய கோலமானது. மற்றைய வலக்கரம் கடகஹஸ்தமானது. இடக் கரங்களில் ஒன்று அபயகரம் போல அமைந்துள்ளது. வஸ்திராபரணங்கள் வழமையானவை. பொலிந்த தோற்றங் கொண்டவை. முன்பு இதனை அருணாசலமும் பிறரும் சந்தியாமூர்த்தி என்று பிழையாக அடையாளங் கண்டனர். இப்படிமமும் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து கிடைத்த விருஷவாகனர் வடிவமும் அமைப்பிலும் தோற்றத்திலும் ஒரே மாதிரியானவை. தரத்தில் மிக உயர்ந்தவை. இவற்றைப் 11 ஆம் நூற்றாண்டுக்குரியவை எனக் கொள்ளலாம்.

### உமாதேவியாரின் படிமங்கள்

i. **முதலாம் சிவாலயம் 1907:** உயரம் 78.7 சென்ரிமீற்றர். ஸ்தானக வடிவம். திரிபங்கமானது. முத்தள அமைப்பிலுள்ள பீடத்தின் மேலுள்ள பத்மாசனத்திலே உருவம் அமைக்கப்பட்டுள்ளது. வஸ்திரம் அலங்காரமான துகில் போன்றது நாட்டியக் கோலத்துப் பெண்கள் அணியும் ஆடை போன்று கால்களைச் சுற்றி மடிப்புகளுடன் காணப்படுகின்றது. இடுப்பின் கீழும் கால்களின் பக்கங்களிலும் அலங்காரமாகத் தொங்கும் மடிப்புகள் உள்ளன. வலக்கரம் மலர்மொட்டினை ஏந்திய கோலமானது. இடக்கரம் லோல ஹஸ்தமாகத் தெரிகின்றது.

மகுடம் கரண்ட மகுடமாய் அமைந்துள்ளது. அகன்ற தோடுகள் காதணிகளாய் உள்ளன. கழுத்திலே அமைந்துள்ள மூன்று மாலைகளில் இரண்டு பெரியனவாகத் தோன்றுகின்றன. உபவீதம் இடது தோளின் மேலிருந்து வலப்பாகத்திலே உதர பந்தத்தை அணையும்படியாக உருவாக்கப்பட்டுள்ளது. இப்படிமம் முற்றிலும் சிற்பநூல் விதிகளுக்கமையச் செய்யப்பட்ட வார்ப்பாகும் இதனைப் 12 ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கொள்ளலாம்.

ii. **மூன்றாம் சிவாலயம் 1908:** ஸ்தானகக் கோலம். உயரம் 63.6 சென்ரி மீற்றர் (1 அடி 8 அங்குலம்)

iii. **ஐந்தாம் சிவாலயம் 1908:** ஸ்தானகக் கோலம். உயரம் 1 அடி 4 1/2 அங்குலம்.

iv. **ஐந்தாம் சிவாலயம் 1908:** உயரம் 1 அடி 11 அங்குலம். ஸ்தானகக் கோலம்.

v. **ஐந்தாம் சிவாலயம் 1908:** ஸ்தானகக் கோலம். உயரம் 38 அங்குலம். வனப்புமிக்கது.

vi. **ஐந்தாம் சிவாலயம் 1960:** அம்மனின் படிமம். ஸ்தானகக் கோலம். உயரம் 32 1/2 அங்குலம். கனதியான தோற்றம். அங்க அளவுப் பிரமாணங்கள் பொருத்தமற்றவை.

vii. **ஐந்தாம் சிவாலயம் 1960:** ஸ்தானகக் கோலம். உயரம் 4 1/2 அங்குலம்.

viii. **ஐந்தாம் சிவாலயம் 1960:** ஸ்தானகக் கோலம். 5 அங்குலம்.

ix. **ஐந்தாம் சிவாலயம்:** ஆசனக் கோலம். உயரம் 2 அங்குலம். லலிதாசனத் தோற்றம்.

### கணபதியின் தோற்றம்

**ஐந்தாம் சிவாலயம்:** 1960. படிமத்தின் உயரம் 23 அங்குலம். அதன் பீடம் 9 அங்குலம் உயரமானது.26 வடிவம் சிற்ப சாத்திர இலக்கணங்களுக்கு ஏற்ப அமைந்துள்ளது. பீடம் இருதள பத்மாசனமாகும். அது வட்ட வடிவங் கொண்டது. உருவம் கனதியான பருத்த தோற்றங் கொண்டது. கால்கள் குறளானவை. வளையமும் மணிகளும் அணிகளாய் உள்ளன.

மகுடம் கரண்ட மகுடமாய் அமைந்துள்ளது. பின்புறத்திலே சிகை சுருள்களாகித் தொங்குகின்றது. காதுகள் பருத்து அகன்றனவாய் அமைந்துள்ளன. கண்கள் சிறியனவாயும் மூடிய கோலத்திலுந் தெரிகின்றன. கழுத்தணிகளாக மூன்று மாலைகள் உள்ளன. நடுவிலமைந்த மாலை அகன்று பெரிதாகத் தெரிகின்றது. இரட்டைப்பட்டு நூலாக அமைந்துள்ள உதரபந்தம் பெரிதாகத் தெரிகின்றது. வலப்பக்கத்திலே தந்தம் ஒடிந்த நிலையிலுள்ளது. வக்கிரம் துங்கமானது. இடநோக்கு வளைவு கொண்டது. கை ஒவ்வொன்றிலும் மூன்று வளையல்கள் தெரிகின்றன. மேல் வலக்கரம் மழுவேந்திய கோலமானது. கீழ் வலக்கரம் கடகஹஸ்தமானது. அது ஒடிந்த தந்தத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளது. இடப்பாகத்திலுள்ள மேற்கரம் அக்ஷமாலையினை ஏந்தியுள்ளது. நான்காவது கரத்திலே மோதகம் அல்லது மாங்கனி போன்ற உருவந் தெரிகின்றது. அதன் எல்லா அம்சங்களைப் பொறுத்தவரையிலும் விநாயகரின் படிமம் தென்னிந்திய சிற்பமுறையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**சமயகுரவரின் படிமங்கள்**

i. **அப்பர்:** முதலாம் சிவாலயம். 1907. உயரம் 1 அடி 9 அங்குலம் 27.

ii. **அப்பர்:** ஐந்தாம் சிவாலயம். 1908. உயரம் 1 அடி 7 அங்குலம். உருவம் திரிபங்கமானது. கால்கள் இரண்டும் சற்று வளைந்து காணப்படுகின்றன. இடுப்பில் வளைவு இடப்பக்கம் நோக்கியது. உருவம் ஸ்தானக நிலையில் கூப்பிய கைகளுடன் வழிபடும் கோலத்தில் அமைந்துள்ளது. உழவாரப்படை இடப்பாகத்துத் தோளுடன் அணைந்துள்ளது.

உடல் மெலிந்த தோற்றங் கொண்டது. தலையிலே சிகை தெரியவில்லை. தலைமாலை தெரிகின்றது. காதுகள் நீளமானவை. அவற்றிலே அணிகளில்லை. மூன்று ஆரங்கள் கழுத்தணிகளாய் உள்ளன. முழங்கைக்குச் சற்று மேலாக வலையந் தெரிகின்றது. பத்திராசனமாகிய பீடத்திலுள்ள பத்மாசனத்திற் படிமம் அமைந்துள்ளது. உருவம் உன்னதமான படைப்பாகும்.

iii. **திருஞானசம்பந்தர்:** ஐந்தாம் சிவாலயம். உருவம் 1 அடி நான்கு அங்குலம். உருவம் ஸ்தானக நிலையிலுள்ளது. அபங்கமானது. கைகளிலே பொற்றாளம் உள்ளது. சிகை தலையின் உச்சிமேற் குடுமி போல் அமைந்துள்ளது. காதுகள் நீளமானவை. கழுத்திலே கண்டிகையும் ஆரங்கள் இரண்டும் ஆபரணங்களாய் உள்ளன. உபவீதம் தெரிகின்றது. உடம்பில் உதரபந்தமும் அரைஞாணும் தெளிவாகத் தெரிகின்றன. கணைக்காலிற் சிலம்பும் அதற்கு மேல்கழலுந் தெரிகின்றன. பத்திராசனத்தின் மேலமைந்த பத்மாசனத்திலே படிமம் அமைந்திருக்கின்றது.

iv. **சுந்தரமூர்த்தி நாயனார்:** ஐந்தாம் சிவாலயம். 1908. உயரம் 1 அடி 8 அங்குலம். திரிபங்கமான ஸ்தானகக் கோலம். இடக்கால் உள்நோக்கிய வளைவு கொண்டது. உருவம் வஸ்திராபரணங்கள் சகிதமான மணவாளக் கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. முகபாவம் ஆச்சரியபாவமானது. தலையிலே தலைமாலை அமைந்துள்ளது. குண்டலங்கள் காதணிகளாக உள்ளன. உபவீதம் முப்புரி நூலாகும். கழுத்திலே மூன்று அலங்காரமான பெரிய ஆரங்கள் அமைந்துள்ளன. கடிபந்தம், உதரபந்தம் என்பன வழமை போல அமைந்துள்ளன. கேயூரம், வலையங்கள் என்பன கைகளில் ஆபரணங்களாக அமைந்திருக்கின்றன. பத்மாசனமும் பீடமும் அழகுற அமைந்துள்ளன.

படிமம் 11 ஆம் நூற்றாண்டுக்குரியது. அதன் கலைவனப்பு விநோதமானது.

v. **சுந்தரமூர்த்தி நாயனார்:** ஐந்தாம் சிவாலயம். 1908. பிரதிமாலக்ஷணங்களில் முன்னையதைப் போன்றது. உடலின் தோற்றம் சற்று கனதியானது. சிறிது பிற்பட்ட காலத்திற்குரியது. உயரம் 1 அடி 1 1/2 அங்குலம்.

vi. **சுந்தரமூர்த்தி நாயனார்:** ஐந்தாம் சிவாலயம். 1960. உயரம் 1 அடி 7 3/4 அங்குலம்.

vii. **மாணிக்கவாசகர்:** முதலாம் சிவாலயம். 1907. உயரம் 54.2 சென்ரிமீற்றர். உருவம் திரிபங்கமானது. சிகை விசிறி போலப் பரந்த வேணியாகும். நெற்றியின் மேலே உருத்திராக்க மாலை தெரிகிறது. கழுத்திலே இடை வரை நீண்டு தொங்கும் உருத்திராக்க மாலையுண்டு. உபவீதம் பிரபலமாக விளங்குகின்றது. வலக்கை சின்முத்திரை வடிவில் அமைந்துள்ளது. இடக்கை ஏட்டினை ஏந்திய வண்ணமாயுள்ளது. அதில் நமசிவாய என்னும் மொழி எழுதப்பட்டுள்ளது. இப்படிமம் 12 ஆம் நூற்றாண்டுக்குரியது போலத் தோன்றுகிறது.

**காரைக்காலம்மையார்**

**ஐந்தாம் சிவாலயம் 1960:** எலும்பாகிவிட்ட உடம்பின் தோற்றம், கைகளிலே தாளம் உண்டு. கோலம் பெரியபுராணத்திலுள்ள வர்ணனைகளுக்கு ஒப்பானது.

**சண்டேஸ்வரர்**

i. **ஐந்தாம் சிவாலயம் 1908:** உயரம் 1 அடி 10 அங்குலம். வரைவிலாத வனப்புமிக்க வடிவு கொண்டது. சர்வாபரண பூஷிதமானது. வஸ்திரம் அலங்காரமானது. கைகூப்பி வணங்குங் கோலத்தில் வடிவம் அமைந்துள்ளது.

ii. **ஐந்தாம் சிவாலயம் 1960:** உயரம் 2 அடி 2 1/2 அங்குலம். பிரதிமா லக்ஷணங்கள் யாவும் முன்னையதைப் போன்றவை.

**சமயஞானமும் பிரதிமாலக்ஷணங்களும்**

**ஆனந்த தாண்டவம்**

சமய நூல்களும் சிற்பநூல்களும் நாட்டியசாஸ்திரமும் வர்ணிக்கின்ற ஏழுவகைத் தாண்டவங்களில் மிகவும் பிரசித்தமானது ஆனந்த தாண்டவம் என்னும் நாதாந்த நடனம். அந்த நடனத்தின் உருவகத் தோற்றமே நடராசர் வடிவம். அது சிற்பநூல் விதிகளுக்கமைய உருவாக்கப்படுவது. சமயஞானமும், நடனக்கலையும், சிற்பக்கலையும், தொழில்நுட்பமும், அதில் இணைந்து விடுகின்றன. அந்தச் சேர்க்கை கலைஞனின் கைவண்ணத்தாற் செம்மை பெறுகின்றது. அவனது கற்பனைத் திறனில் மரபுவழிச் சிந்தனைகள் காட்சிப் பொருள்களாக உருவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்றன. அவனுடைய கைவண்ணதால் அவை கலைவனப்புடன் விளங்குகின்றன.

சிவபெருமானுடைய உருவத்திருமேனிகளில் நடராசரின் தோற்றம் உன்னதமானதென்று சைவர்கள் ஆதிகாலம் முதலாகப் போற்றி வந்துள்ளனர். தமிழகச் சைவசமய மரபிலே பதிகளிலெல்லாம் உத்தமதானமாக விளங்குவது பேரம்பலமாகிய பொன்னம்பலமேயாகும். அங்கு முதன்மைத் தானத்திலே அமைந்திருப்பது நடேசரின் திருவுருவமாகும். கோயில் என்னுந் திருநாமமும் சிதம்பரத்திற்கே சிறப்பாக உரியது.

சொரூப நிலையில் அருவமான சிவம், உருவமான தடத்த நிலையில் பிரபஞ்சத்தினுடைய இயக்கத்திற்குக் காரணமாய் அமைகின்றது. இவ்வியக்கத்திலே பஞ்ச கிருத்தியங்கள் என்று சொல்லப்படும் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழில்கள் நிகழுகின்றன என்பது சைவசமய தத்துவம். பிரபஞ்ச இயக்கத்திற்குக் காரணனாகிய சிவனின் பதி இலக்கணங்களையும் மகிமையினையும் உருவகப்படுத்தும் வடிவமே ஆனந்த தாண்டவக் கோலமான நடராசர் வடிவமாகும்.

நடராஜர் வடிவத்தின் பிரதிமாலக்ஷணங்கள் சிற்பசாஸ்திர நூலொன்றிலுள்ள தியான சுலோகங்களிலே மேல்வருமாறு வர்ணிக்கப்படுகின்றன:

ஸ்ரீ நடராஜ வடிவம் மூன்று கண்களும், நான்கு தோள்களும், சாந்த குணமும் சிவப்பு நிறமும், புன்முறுவல் செய்யும் முகமும் உடையதாகவும், தலையினோடும் கொக்கிறகும், ஊமத்தையும், எருக்கும், கங்கையும், நிலவும் ஆகியவற்றைச் சிரசில் அணிந்ததாகவும் வலப்பாதம் அபஸ்மார (நினைப்பு நீங்கிய) முயலகன் மேலே ஊன்றி நிற்பதாகவும், இடப்பாதம் தூக்கப்பட்டுச் சற்றே குஞ்சித்தாகவும், வலக்கரங்களுள் முன்கரம் அபயம் அளிக்கும் கரமாகவும், பின்கரம் டமருகந் தாங்கியதாகவும், இடக்கரங்களுள் முன்னது வீசித் தொங்க விட்டுள்ளதாகவும், பின்னது அக்கினி ஏந்தியதாகவும், இடச்செவியில் திருத்தோடும், வலச்செவியில் மகரகுண்டலம் அணிந்ததாகவும், அபயகரத்தில் நாகபூஷணம் பூண்டதாகவும், சர்வாங்கத்திலும் விபூதி தரித்து நிலவுவதாகவும் மேற்காட்டப்பட்ட சிவமந்திரத்தாற் பூசிக்கற்பாலது.

தில்லையம்பலத்து நடேசப் பெருமானைக் கோயிற்புராணம் மேல்வருமாறு வர்ணிக்கின்றது:

*திருவடி நிலையும், வீசும் செய்ய காலும் - சிலம்பும்*
*உருவளர் ஒளியும், வாய்ந்த உருவும், உடுத்த தோலும்*
*அரைதரு புரிவும், கச்சின் அணிகளும் அழகார் - உந்தி*
*மருவிய உதரபந்தக் கோப்பும், நூல் வாய்ப்பு மார்பும்.*
*வீசிய செய்ய கையும், விடதரக் கரங் குளித்த*
*தேசம், வண்துடியும் அங்கிச் செறிவும் - முன்திரண்ட தோளும்*
*காசைகொள் மிடறும், தோடார் காதும்-வெண்குழையும் காண*
*மாசிலா மணிவாய்விட்டு வயங்கிடா நகை மயக்கும்.*

*ஓங்கிய கமலச் செவ்வி ஒளிமுக மலரும், கண்கள்*
*பூங்குழல் உடைய நோக்கும் புரணமும், புகுவப் பொற்பும்*
*பாங்கமர் நுதலும், பின்தாழ் சடைப்பரப்பும், பாம்பும்*
*நீங்கரும் தாரும், நீரும், நிலவும், மேல்நிலவு நீறும்.*

நடராசர்த் திருமேனி எவ்வாறு அமைய வேண்டும் என்பதைச் சிற்பநூல் விளக்கும். அவ்வண்ணமாக அமைக்கப் பெற்றதும், பேரம்பலத்திலுள்ளதுமான திருவடிவத்தை கோயிற்புராணம் விளக்குமாற்றை இங்கு கவனித்தோம்.

திருவுருவத்தின் அம்சங்களைப் பற்றிய தத்துவார்த்தமான விளக்கங்களைச் சமயஞானிகளின் அருட்பாக்களிலே காணலாம்.

*அரன் துடி தோற்றம் அமைப்பில் திதியாம்*
*அரன் அங்கிதன்னில் அறையில் சங்காரம்*
*அரனுற்றணைப்பில் அமரும் திரோதாயி*
*அரனடி என்றும் அனுக்கிரகம் என்னே*

என்பது திருமந்திரம். இக்கருத்தினை உண்மை விளக்கம் மேல்வருமாறு செப்புகின்றது:

*தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்*
*சாற்றிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா*
*ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம்: முத்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு.*

நடராசர் வடிவங் குறிக்குந் தத்துவங்களைக் குமரகுருபர சுவாமிகள் மேல்வருமாறு விளக்குவார்:

*பூமிலி கற்பகப் புத்தேள் வைப்பும்*
*நாமநீர் வரைப்பில் நானில வளாகமும்*
*ஏனைப் புவ னமும் எண்ணியீங்குயிரும்*
*தானே வகுத்ததுன் தமருகக் கரமே*

*தனித்தனி வகுத்த சராசரப் பகுதி*
*அனைத்தையும் காப்பது உன் அமைத்த - பொற்கரமே:*
*தோன்றுபு நின்றவத் தொல்வல கடங்கலும்*
*மாற்றுவது ஆரழல் வைத்ததோர் கரமே.*
*ஈட்டிய வினைப்பயன் எவற்றையும் - மறைத்து நின்று*
*ஊட்டுவ தாகும்நின் ஊன்றிய பதமே*
*அடுத்த இன்னுயிர்கட்கு அளவில் பேரின்பம்*
*கொடுப்பது முதல்வ! நின் குஞ்சித பதமே.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவத்தின் பிரதிமாலக்ஷணங்களும் அணிய லங்காரங்களும் சமயத்தத்துவங்களின் அடையாளங்களாய் உள்ளன. உருவமில்லாத இறைவனுக்கு உருவத்தைக் கொடுத்துள்ளனர். எண்ணரிய பிறவிகளில் மானிடப் பிறவி மேலானது என்பதால் மானிட வடிவில் இறைவனை உருவகப்படுத்தினர். உடலானது ஆகாசத்தின் அடையாளமாகக் கொள்ளப்பட்டது. ஆகாசமாம் உடல் என்றார் திருமூலர். விண்ணவர் முதலா வேறொர் இடமாக் கொண்டுறை விசும்பே கோலநின் ஆகம் என்றார் பட்டினத்தடிகள்.

**கரங்கள்:** நடராச வடிவத்தில் நான்கு கைகள் அமைந்துள்ளன. எட்டு. பத்து. பதினாறு கரங்கள் கொண்ட வடிவங்களுமுண்டு. திருமேனியின் கரங்கள் திசைகளின் அடையாளங்களாகக் கொள்ளப்படும். திசைகள் எட்டும் திருக்கைகள் என்பது திருமூலர் வாக்கு. பத்துத் திசைகளும் பத்துக் கைகளாகும் என்று காமிகாகமத்திற் கூறப்படுகின்றது திசைதோள் என்றார் சேரமான் பெருமாள் நாயனார். எண்டிசை எண்டோள் என்பர் பட்டினத்தடிகள்.

### திருவடிகள்

இறைவன் இயற்றும் ஐந்தொழில்களில் மறைத்தல். அருளல் என்னும் இரண்டும் அவனுடைய பாதங்களால் உணர்த்தப்படும். தாண்டவமூர்த்தியின் ஊன்றிய திருப்பாதம் மறைத்தல் என்னும் தொழிலை உணர்த்தும். அது உயிர்களுக்கு ஏற்படும் நல்வினை. தீவினையாகிய இருவினையொப்பு. மலபரிபாகம் என்னும் நிலையை ஏற்படச் செய்கின்றது. தூக்கிய திருப்பாதமாகிய குஞ்சிதபாதம் அருளல் என்னும் தொழிலின் அடையாளமாய் அமைந்துள்ளது. அதுவே ஆன்மாக்களுக்கு அனுக்கிரகமாகிய பேரின்பத்தை அளிக்கின்றது.

*ஈட்டிய வினைப்பயன் எவற்றையும் ~ மறைத்து நின்று*
*ஊட்டுவதாகும் நின் ஊன்றிய பதமே.*
*அடுத்த இன்னுயிர்கட்கு அளவில் பேரின்பம்*
*கொடுப்பது, முதல்வ! நின் குஞ்சித பதமே.*

என்பார் குமரகுருபர சுவாமிகள்.

"*பரை உயிரில் யான் எனதென்று நின்றதடியாம்*" என உண்மைநெறி விளக்கம் பகர்கின்றது.

**முக்கண்:** சூரியன். சந்திரன். அக்கினி ஆகிய மூன்று பேரொளிகளை இவை குறிக்கும் என்பர். "மோகாய முக்கண் மூன்றொளி" என்பது திருமந்திரம். அதனை வேறுவிதமாக விளக்குவதுமுண்டு. இச்சா சக்தி. கிரியா சக்தி. ஞான சக்தி என்னும் மூன்று சக்திகளையும் உடையவர் கடவுள் என்பதை அவருடைய மூன்று கண்களும் குறிக்கின்றன என்று காமிகாகமம் கூறும். ஞான. இச்சா. கிரியைகளாகவும். சோம சூரிய அக்கினிகளாகவும் உள்ள விசாலம் பொருந்திய கண்களையுடையவர் என்பர்.

### அகோரசிவாசாரியார்

**குமிண்சிரிப்பு:** உயிர்களுக்கு ஏற்படுகிற ஆகாமியம். சஞ்சிதம். பிராரப்தம் என்னும் மூன்று வகைத் துன்பங்களையும் தமது புன்முறுவலினாலே கடவுள் கொடுத்தருளுகிறார் என்பது இதன் தத்துவப்பொருள்.

"இடர் மூன்றும் இழித்தருளும் இளமுறுவல் முகமலரிலங்க" என்பது சிவதருமோத்தரம்.

**சடைமுடி:** சடைமுடி ஞானத்திற்கு அடையாளம் என்பர். எனவே. கடவுள் ஞான உருவன். பேரறிவுடையவன் என்பதைச் சடைமுடி தெரிவிக்கின்றது. "நுண்சிகை ஞானமாம்" என்பது திருமந்திரம்.

**நிலவு:** சிவனது சடைமுடியில் அமைந்துள்ள பிறையின் வடிவமானது அவருடைய முற்றறிவாகிய பேரறிவைக் குறிக்கும் என்று காமிகாகமம் கூறுகின்றது. நுண்சிசை ஞானமாம் என்பர் திருமூலர்.

**திருநீறு:** பராவணமாவது நீறு என்பர் திருஞானசம்பந்தர். பாசத்தை அளிப்பது நீறு என்றுஞ் சொல்லப்படும். பாசமும் அங்கது கழியப் பண்ணும் திருவெண்ணீறும் என்பது கோயிற் புராணம்.

**உபவீதம்:** சிவபெருமான் மார்பில் அணிந்திருக்கிற பூணூலைக் குண்டலினி சக்தி என்பர். ஆயினும். திருமந்திரம் நூலது வேதாந்தம் என்கின்றது.

**கோவணம்:** அது வேதத்தின் அடையாளமானது. மன்றுகலை துன்னு பொருள் மறை நான்கும் வான் சரடாத் தன்னையே கோவணமாச் சாத்தினான் காண் சாழலோ என்பது மணிவாசகரின் அருள்வாக்கு.

**காலணிகள்:** நடராசப் பெருமானுடைய திருப்பாதங்களிலே சிலம்பும் வீரக்கழலும் அணிகளாக அமைக்கப்படும். ஆன்மாவின் பழைய வினைகளையும் பிறவித் துன்பத்தையும் அறுத்து. வீடுபேறளிப்பவர் தாமொருவரே என்பதை இவை உணர்த்துகின்றன என்பர்.

கள்ளவினை. வென்று பிறப்பறுக்கச் சாத்திய வீரக்கழலும் என்னுந்தொடர் போற்றிப் பஃறொடை வெண்பாவில் அமைந்துள்ளது. வேதத்தைச் சிலம்பாகச் சிவபெருமான் அணித்துள்ளாரென்றுஞ் சிலர் கொள்வர்.

**காதுகள்:** தாண்டவப் பெருமானின் திருக்காது ஓங்காரத்தைக் குறிக்கிறது என்பர். இறைவன் தமது கையில் உள்ள துடியை ஒலித்து உண்டாக்கும் ஓசை (நாதம்) ஓங்கார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவுடையது என்பர். அந்த ஓங்காரத்தைத் தான் இறைவனது திருச்செவி குறிக்கிறது என்பர் ஞானசம்பந்தர். தோடுடைய செவியன் என்று திருச்செவியை முதன்முதலில் எடுத்தோதியதும் ஓங்காரத்தைக் குறிக்கவே என்பர்.

வலக்காதில் மகரகுண்டலமும் இடக்காதிலே தாடங்கமான சங்க வெண்குழையும் அணிகளாய் அமைந்திருக்கும். அது சிவம் ஆணாகிப் பெண்ணாகிப் பேதங்கடந்த நிலையுமாகி உள்ளதனைக் குறிக்கும்.

**டமருகம்:** சிவபெருமானுடைய வலக்கையொன்றில் அமைந்துள்ள துடி (உடுக்கை) ஐந்தொழில்களில் முதலாவதாகிய படைத்தலைக் குறிக்கும். அதனையே தோற்றம் துடியதனிலே என்று சொல்வர்.

**அங்கி:** சிவபெருமானுடைய இடக்கரங்களில் ஒன்று ஏந்தியுள்ள தீச்சுடரானது அழித்தல் என்னும் தொழிலைக் குறிக்கும் அடையாளமாகும். அதனை அரன் அங்கி தன்னில் அறையில் சங்காரம் எனத் திருமந்திரம் செப்புகின்றது.

சங்காரச் சக்தியான தீச்சுடரானது மகாமாயையின் மேலிருக்கிற பொருட்களை வெளிப்படுத்துகிறதாயும் பாசங்களை எரித்து நீறாக்குகிறதாயும் இருக்கின்றது என்று காமிகாகமம் கூறும்.

**அபயகரம்:** நடராசர் வடிவத்திலுள்ள வலக்கரங்களில் ஒன்று அபயகரமாய் அமைந்துள்ளது. அது அமைத்த கை என்றுஞ் சொல்லப்படும். அது காத்தல் தொழிலைக் குறிக்கும்.

அமைத்தல் திதியாம் என்று திருமந்திரம் கூறும். தனித்தனி வகுத்த சராசரப் பகுதி அனைத்தையும் காப்பதுன் அமைத்த பொற்கரமே என்றார் குமரகுரபரர்.

அபயகரமானது உலகங்களைக் காக்கிற சக்தியாகும் என்று காமிகாகமம் கூறுகின்றது.

**வீசியகை:** அது எடுத்த பொற்பாதத்தைக் காட்டிக் கொண்டிருக்கும் நிலையில் அமைந்திருக்கும். உயிர் மலத்தினின்று விடுபட்ட நிலையினைத் தூக்கிய திருவடி காட்டிய வண்ணமாயுள்ளது. அதனைச் சுட்டுகின்ற வீசிய கரம் ஆன்மாவானது வீடுபேறாகிய பேரின்ப நிலையில் லயப்பட்டிருப்பதனைக் குறிக்கும்.

**பாம்பு:** சிவபெருமானுடைய நடராச வடிவத்திலே, உடம்பிலும், அரையிலும், கையிலும் பாம்பின் உருவங்கள் அமைந்துள்ளன. கம்பீர வடிவமான நாக சக்தியானது யாவற்றையும் நியமிக்குமென்று காமிகாகமம் கூறும். உலகம் தோன்றவும் ஒடுங்கவும் தான் நிமித்த காரணன் என்பதை உணர்த்தக் குண்டலினி சக்தியுருவமாகிய பாம்பைச் சிவன் ஏந்தியுள்ளார்.

**முயலகன்:** முயலகனின் உருவம் ஆன்மாவைப் பற்றிக் கொண்ட மலத்தைக் குறிக்கின்றது. முயலகன் கருநிறமும் விகார உருவமும் உள்ளவன். அவனைக் கரு என்றும், குறள் என்றும் அபஸ்மாரன் என்றுஞ் சொல்வதுண்டு. தாண்டவப் பெருமானின் ஊன்றிய பாதத்தைக் கருவின் மிதித்த கமலப் பதம் என்று திருமூலர் வர்ணிக்கின்றார். அதனைக் கல்லாடம் காருடல் பெற்ற தீவிழிக்குறள் என்கின்றது. சுந்தரமூர்த்தி நாயனார் அதனை மூடாய முயலகன் என்பார்.

## கௌரியின் பிரதிமாலக்ஷணங்கள்

கௌரியின் உருவங்கள் ஸ்தானக நிலையிலும் ஆசன நிலையிலும் அமைக்கப்படும். கௌரி, பார்வதி ஆகிய இருவரின் படிமங்களையும் அமைக்கும் முறை பற்றி ஒரேவிதமான விதிகளையே சிற்ப நூல்கள் கூறுகின்றன. தென்னிந்தியாவிலும் இலங்கையிலுங் காணப்படும் பார்வதியின் படிமங்கள் எல்லாம் சாஸ்திரப் பிரமாணங்களுக்கேற்ப அமைக்கப்பட்டவை. அவற்றிடையே காணப்படும் வேற்றுமைகள் கலைஞரின் வேலைப்பாட்டின் காரணமாக உண்டானவை.

பரமேஸ்வரியின் கோலத்தை வர்ணிக்கும் தியான சுலோகம் மேல்வருமாறுள்ளது:

ஸ்யாமம் த்விநேத்ராம் த்விபூஜாம் த்ரிபங்கம்
ஸவ்யாபஸவ்ய ஸ்தித குஞ்சிதாங்க்ரிம்
ஸவ்யோத்பலாம் ஸத்கனக ஸ்தனாத்யாம்
ஹஸ்தான்யலம்பாம் பரமேஸ்வரீம் தாம்.

ஸ்யாம வர்ணமும், இரு கண்களும், இரு கரங்களுங் கொண்ட பரமேஸ்வரியின் வடிவம் திரிபங்கமானது. இடப்புறத்திலுள்ளது ஊன்றிய பாதம், வலப்பாதம் சற்று உயர்த்திக் குஞ்சிதமானது. தனங்கள் திரட்சியானவை. வலக்கரம் உத்பல மலரினை ஏந்தியுள்ளது. இடக்கரம் தொங்கு கரமாகும்.

கௌரி அம்மனின் அங்க லக்ஷணங்களையும் ஆபரணங்களையும் மானசாரம் மேல்வருமாறு வர்ணிக்கின்றது:

கௌரி அம்மனின் வடிவம் ஸ்தானக ஆசனக் கோலங்களில் அமைக்கப்படும். கௌரியின் உருவத்தில் இரு கரங்களும் இரு கண்களும் அமைந்திருக்க வேண்டும். கரண்டம், கேசபந்தம், குந்தளம் என்பவற்றிலொன்று மகுடமாய் அமைக்கப்படும். வலது கரத்தில் ஆம்பல் மலரும், இடது கரத்தில் வரமளிக்கும் முத்திரையும் அமைந்திருக்கும். இடது கரத்தினைத் தொங்கு கரமாகவும் அமைத்துக் கொள்ளலாம். வெண்பட்டாடை அல்லது பீதாம்பரம் வஸ்திரமாகும். கௌரி தேவியை நீண்ட கரங்களையுடையவளாகவும், மெல்லிடையாளாகவும், உயர்ந்த மார்பகங் கொண்டவளாகவும், இடுப்பின் கீழே உயர்ந்து பரந்த தோற்றமுடையவளாகவும் செய்ய வேண்டும். தேவியின் இடுப்பும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடையும் அகன்றவைகளாக இருக்க வேண்டும். இடையானது ஒட்டியாணமுடையதாகவும் அதனிலே தொங்கும் நீவ்யத்தையு டையதாகவும் இருக்க வேண்டும். முகம் அழகிய கழுத்தை யுடையதாகவும் அகன்றதாகவும் இருக்க வேண்டும். உன்னதமான மூக்கையுடையதாகவும் புன்னகையுடன் கூடியதாகவும் முகம் இருக்க வேண்டும். பிறைச் சந்திரனை அணியாகக் கொண்ட நெற்றியானது ப்ரமரா வ்ருதமாக (வண்டுகளாற் சூழப்பட்டது போன்று முன்னெற்றி மயிர்களைக் கொண்டதாக) இருக்கலாம். அல்லது நெற்றியில் பாலபட்டம் (நெற்றிப் பட்டம்) இருக்கலாம். இரு காதுகளிலும் மகர குண்டலங்கள் இருக்க வேண்டும்.

கௌரியின் ஆசனக் கோலத்தை இன்னொரு விதமாகவுஞ் செய்யலாம். அதில் வலது காலானது இடதுகாலைக் காட்டிலும், வெளியே பீடத்தில் ஊன்றப்பட்ட இடது கரத்தின் முடிபுவரை, மடக்கி வைத்துக் கொண்ட நிலையில் இருக்கும். இந்த நிலையில் இடது காலானது குஞ்சிதமாகத் தொங்கவிடப் பட்டிருக்கும். சில சமயங்களில் வலது கால் குஞ்சிதமாகவும் இடதுகால் ஸ்வஸ்திகமாகவும் அமைவதுண்டு.

கௌரி தேவியின் உருவம் மத்திய தசதாளத்தில் அமைக்கப்படும். அது இலிங்கத்தினதும் விக்கிரகங்களினதும் இடப்பக்கத்திலே தாபனஞ் செய்யப்படும்.

## சைவசமயமும் நாயன்மார் வழிபாடும்

தமிழகச் சைவசமய நெறியில் நாயன்மாருக்குச் சிறப்பிடமுண்டு. சைவசமயம் ஆலய வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட பக்திநெறியாகவே விளங்கியது. பக்தி இயக்கத்தின் மூலமாகச் சைவசமயம் தமிழகத்திலே மேன்மை பெற்றது. நாயன்மார்களின் பாடல்கள் எல்லாம் திருத்தலங்களைப் பற்றியவை. திருவாசகத்திலுள்ள பகுதிகளிற் பெரும்பாலா னவையும் அவ்வண்ணமானவை. நாயன்மாரின் பக்திப் பாடல்கள் வேதசாரமானவை. சிவபுராணங்களிலுள்ள தத்துவார்த்தமான கதைகள் அவற்றிலே சுருங்கிய வடிவிலே தெளிவாக்கம் பெற்றன. சைவசமயம் உலகியலோடு இயைந்த சமயநெறி என்னும் அடிப்படைத் தத்துவம் தேவாரப் பதிகங்கள் மூலமாக உணரப்பட்டது. இம்மைக்கும் மறுமைக்கும் உறுதுணையாக விளங்கும் பற்றுக்கோடாக உள்ளது. சிவம் என்னுஞ் செழும் பொருள் என்ற சிந்தனை அவற்றில் அழுத்தம் பெற்றது. தேவாரப் பதிகங்கள் இலகு தமிழிலும் இனிய சந்தங்களிலும் அமைந்தவை. சிவஞானத்தின் கனிவாகிய அப்பதிகங்கள் கேட்போருக்கு அளவிலாத இன்பம் பயப்பவை. தமிழுக்கு அணியானவை. இசைத் தமிழுக்கு இலக்கணமானவை.

பத்தியக்கத்தின் பயனாக ஐவகை நிலங்களைச் சேர்ந்த மக்களும் சாதிபேதங் கடந்த நிலையிலே திருத்தலங்களிலே ஒன்று கூடினார்கள். அங்கு கூடிச் சிவதருமங்கள் வகுத்துத் திருப்பணிகள் புரிந்தனர். இவ்வண்ணமாகச் சைவநெறி தமிழகத்து மக்களில் மிகப் பெரும்பான்மையோரின் சமயநெறியாகியது.

சொன்மாலைகளினாலே ஞானமொழி பேசிய சான்றோரைச் சமயகுரவர் எனக் கொள்வது வழமையாகியது. அவர்களும் நால்வரென்பது சைவசமய மரபாகிவிட்டது. ஆதிகாலத்துச் சிவனடியார்களிலே தலையானோரை மூலவரென்றும் நாயன்மாரென்றும் போற்றுவது வழமையாகியது. கர்நாடக தேசத்து வீரசைவரும் சைவ நாயன்மார் அறுபத்து மூவரைப் புராதனர் என்று கொள்வாராயினர்.

சைவசமயம் மேன்மைபெற்று விளங்குவதற்கு ஏதுவாயிருந்த நாயன்மார்களைப் போற்றி வழிபாடு செய்தல் சைவசமயத்தின் ஓரம்சமாகியது. சிவனடியாரைப் போற்றுவதும் ஆதரிப்பதும் சிவத்தொண்டு என்று கருதும் வழக்கம் பழமையானது. தென்னாட்டுச் சைவநெறியில் ஒரு பிரதான அம்சமாக நாயன்மார் வழிபாடு வளர்ச்சி பெறுவதிலே சுந்தரமூர்த்தி நாயனார் கொண்டிருந்த பங்கு மிக முக்கியத்துவங் கொண்டதாகும். திருத்தொண்டர் தொகையில் சிவனடியாரிற் சிறந்தோரான அறுபத்து மூவரின் பெயர்களைச் சொல்லி, அவர்களில் ஒவ்வொருவரினதுந் தனிச் சிறப்புகளையும் அவர் பாடியுள்ளார்.

நாயன்மார் அறுபத்து மூவரும் தொகையடியார்களும் திருத்தொண்டத் தொகையிலே வழிபாட்டுக்குரியோராகி விட்டனர். பல்லவர் காலத்தின் கடைக்கூற்றிலே கோயில்கள் சிலவற்றிலே திருப்பதியம் ஓதுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தமிழகத்திலே சோழப் பேரரசரின் ஆட்சி தொடங்கிய காலம் முதலாக நாயன்மார் வழிபாடு வளர்ச்சியடைந்தது. நாயன்மார்களின் படிமங்களைக் கோயில்களிலே தாபனஞ் செய்து அவற்றுக்கு வழிபாடாற்றினார்கள். முதன்மை வாய்ந்த கோயில்கள் சிலவற்றிலே நாயன்மார்களுக்கெனத் தனிக்கோயில்களும் அமைக்கப்பட்டன. சைவர்கள் அவர்கள் மீது கொண்டிருந்த அபிமானத்தினாலும், பெருமதிப்பின் காரணமாகவும் தங்கள் பிள்ளைகளுக்கு நாயன்மார்களின் பெயர்களையும் விருதுப் பெயர்களையும் சூட்டுவது வழக்கமாகியது. கோயில் வளாகத்திலுள்ள மடங்கள், வீதிகள், நந்தவனங்கள் என்பனவற்றுக்கும் அவ்வாறு பெயர்களைச் சூட்டினார்கள். முதலாம் இராசராசனின் காலத்தில் அத்தகைய மனப்பாங்கு சைவரிடையே முனைப்புப் பெற்றிருந்தது. வளர்ச்சி பொருந்திய நிலையிலுள்ள நாயன்மார் வழிபாட்டின் அம்சங்களைத் திருத் தொண்டர் திருவந்தாதி பிரதிபலிக்கின்றது. திருத்தொண்டத் தொகையினை ஆதாரமாகக் கொண்டு நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் பனுவலைப் பாடினார். நாயனாருக்கும் அவருக்குமிடைப்பட்ட காலத்தில் ஏற்பட்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுகளை நம்பியின் நூல் பிரதிபலிக்கின்றது. திருஞான சம்பந்தரைப் பற்றி ஆறு பனுவல்களையும் திருநாவுக்கரசரைப் பற்றி ஒரு பனுவலையும் நம்பி செய்துள்ளமை குறிப்பிடற்குரியது. அவரின் நூல்கள் யாவும் பதினோராம் திருமுறையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டன.

பன்னிரண்டாவது திருமுறையாக அமைந்துள்ளது சேக்கிழாரின் பெரியபுராணம். அது நாயன்மார் வழிபாட்டின் அம்சங்களை விளக்கும் பேரிலக்கியமாகக் கொள்ளத் தக்கது. நம்பிக்கும் சேக்கிழாருக்கும் இடையிலான கால இடைவெளி ஏறக்குறைய இரு நூற்றாண்டுகளாகும். அக்காலப் பகுதியிலே நாயன்மார்களுக்கு வழிபாடு செய்வதும், அவர்களின் படிமங்களை எழுந்தருளிகளாக விழாக்காலங்களில் ஊர்வலமாக எடுத்துச் செல்வதும், அவர்களின் திருநாள்களிலே குருபூசை செய்வதும், அவர்களின் பதிகங்களைக் கிரமமாக ஓதுவதும் பொதுவழக்காகி விட்டன.

நாயன்மார்களின் படிமங்கள் தரத்தால் மிக உயர்ந்தவை. கலைவனப்பு மிக்கவை. சிவனடியார் பிரதிமாலக்ஷணங்கள் சிற்பநூல்களிலே விளக்கமாக விவரிக்கப்படவில்லை. ஆயினும், தங்கள் கலாதத்துவ உணர்ச்சியின் அடிப்படையிலும், வார்ப்புக்கலையைப் பொறுத்தவரையிலே வேறெங்கணும் எக்காலத்திலுமே காணப்பெறாத ஈடிலாத் திறமையாலும், தென்னகத்துக் கலைஞர்கள் உன்னதமான படிமங்களை உருவாக்கினார்கள். அப்படிமங்கள் தசதாலப் பிரமாணங்களுக்கு ஏற்பவும், சைவசமய மரபிலே காணப்பட்ட சிந்தனைகளுக்கும் மரபுகளுக்கும் அமையவும் வார்க்கப்பட்டுள்ளன. பொலன்னறுவையிலுள்ள படிமங்களும் தென்னிந்தியக் கோயில்களில் அமைந்துள்ள சமகாலத்துப் படிமங்களும் அமைப்பிலும், கலை வனப்பிலும் ஒரே விதமானவை. அவை ஒரே கலைப்பாணியைச் சேர்ந்தவை என்பதில் எதுவிதமான ஐயமுமில்லை.

## காரைக்கால் அம்மையார்

சமய குரவர்களைக் காட்டிலுங் காலத்தால் முந்தியவர் காரைக்கால் அம்மையார். அவர் தமிழகத்திலே, சைவசமயமரபிலே பக்திநெறி ஊற்றாகி ஆறாகப் பெருகுவதற்கு மூலகாரணராக விளங்கியவர். திருத்தலம் பற்றிப் பதிகம் என்னும் வகையிலான பாடல்களை முதன்முதலாகப் பாடிய சிறப்பினையுடையவர். தேவாரப் பாடல்களுக்கெல்லாம் பொருள் மரபில் அவர் பாடிய பதிகங்களே முன்மாதிரியானவை. *அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்* ஆகிய மூன்றும் அவர் பாடிய பதிகங்களாகும்.

திருமருவிய வணிகர் நகரமான காரைக்காலிலே, பெரு வணிகர் மரபிலே பிறந்தவர் புனிதவதியார் என்னுங் காரைக்காலம்மையார். பொங்கிய பேரழகு மிகப் பொலிந்த கன்னியானதும் புனிதவதியாரை பெற்றோர்கள் பரமதத்தன் என்னும் வணிகனுக்கு மணம் முடித்து வைத்தனர். இதய கமலத்திலே ஞானபோதம் முகிழ்ந்தமையின் பயனாகக் காமந் துறந்தவராகிச் சிவன் மேற் காதல் கொண்டு சிவனடியார்களைப் போற்றி உபசரிக்குந் தொண்டுகளில் ஈடுபாடு கொண்டார். அம்மையாரின் ஆராத அன்பின் தன்மை கண்டு, அவர் மீது அருள் சுரந்து அற்புதமான மாங்கனியைப் பெருமான் வழங்கியதும், அதனைப் புரிந்து கொள்ளும் பக்குவமில்லாத கணவன், ஏக்கமுற்று, புனிதவதியார் பேய்மகள் என்ற நினைப்போடு அவரை விட்டு நீங்கிப் பரமதத்தன் புதுமனை புக்கான்.

புனிதவதியார் சிவநெறி ஓம்பி, சிவத்தொண்டு புரிந்து, திருப்பதிகம் பாடிப் பற்றொன்றிலானைப் பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்நாளைக் கழித்தார். இயல்பான பேரழகெல்லாம் நீங்கி என்பு வடிவமானார். அந்த என்புக் கோலத்தையே ஆலயங்களிலே படிமமாக வைத்து அம்மையாரைப் போற்றி வழிபட்டனர்.

காரைக்காலம்மையாரைப் பற்றிப் பெரியபுராணத்திலே வரும் பாடல்கள் கவனித்தற்குரியவை:

வங்கமலி கடற்காரைக்காலின்கண் வாழ்வணிகர்
தங்கள் குலத் தலைவனார் தனதத்தனார் தவத்தால்
அங்கவர்பாற் றிருமடந்தை யவதரித்தாளென வந்து
பொங்கிய பேரழகு மிகப் புனிதவதியார் பிறந்தார்.

ஆனவப்பொழுது, மன்றுளாடுவார் அருளினாலே
மேல்நெறி உணர்வுகூர வேண்டிற்றே பெறுவார் மெய்யில்
ஊனடை வனப்பை எல்லாம் உதறி எற்புடம்பே யாக
வானமும் மண்ணும் எல்லாம் வணங்கு பேய் வடிவமானார்.

உற்பவித்து எழுந்த ஞானத்து ஒருமையின் உமைகோன் தன்னை
அற்புதத் திருவந்தாதி அப்பொழுது அருளிச் செய்வார்
பொற்புடைச் செய்ய பாத புண்டரீகங்கள் போற்றும்
நற்கணத்தினில் ஒன்றானேன் நான் என்று நயந்து பாடி.

ஆயந்த சீர் இரட்டை மாலை அந்தாதி எடுத்துப்பாடி
ஏய்ந்த பேர் உணர்பு பொங்க எயிலொடு மூன்றாம் முன்னாட்
காய்ந்தவரிருந்த வெள்ளிக் கயிலைமால் வரையை நண்ண
வாய்ந்த பேரருள் முன்கூர வழிபடும் வழியால் வந்தார்.

வடதிசைத் தேயம் எல்லாம் மனத்தினும் கடிது சென்று
தொடையவிழ் இதழி மாலை சூலபாணியனார் மேவும்
படரொளிக் கயிலை வெற்பின் பாங்கு அணைந்த ஆங்குக் காலின்
நடையினைத் தவிர்ந்து பார்மேற் தலையினால் நடந்து சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்*
*பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்*
*மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி*
*அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.*

## அப்பர்

அப்பர் காலத்தாற் சுந்தரருக்கு முற்பட்டவர். ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவர். அவர் ஏழாம் நூற்றாண்டிலே, முதலாம் மகேந்திரவர்மனின் காலத்தில் வாழ்ந்தவர். அது சமயவாதங்களும் சமய பேதங்களும் மிகுந்தவொரு காலமாகும். வடநாட்டுத் தொடர்புடைய சமய நெறிகள் பலவும் தமிழகத்திலே பரவிப் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த நிலையிலே சமணம், பௌத்தம், சைவம், வைணவம் ஆகியவற்றுக்கிடையிலே போட்டிகளும், தகராறுகளும் ஏற்பட்டன. பல்லவர் காலத்தின் முற்பகுதியில் வைதீக கலாசாரம் தமிழகத்திலே பெருஞ் செல்வாக்கினைப் பெற்றது. சைவம், வைணவம் ஆகிய சமயநெறிகள் அதன் ஆதரவிலே புதிய பொலிவினைப் பெற்றன. அவற்றிலே ஆகமநெறி முறையிலான ஆலய வழிபாட்டு முறை விருத்தி பெற்றிருந்தது. அந்த வழிபாட்டு முறை பக்தியை அடிப்படையாகக் கொண்டது.

எல்லாச் சமயநெறிகளிலும் பக்திநெறியே மேலானது என்ற உணர்வினை நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஏற்படுத்தினார்கள். அவர்களின் அருந்தமிழ்ப் பாடல்கள் மறைபொருளின் தெளிவாக்கமானவை. பதியிலக்கணங்களையும், சமய தத்துவங்களையும் விளக்குபவை. சைவநாயன்மார்கள் சமயப் பிரசாரகர்களாகவும், சிவஞான போதகர்களாகவும், சிவநெறிக் காவலராகவும் விளங்கினார்கள். அந்த வகையிலே அப்பரும் சம்பந்தருந் தலையானவர்கள்.

அப்பரைக் குறித்து நம்பியாண்டார் நம்பி மேல்வருமாறு பாடுவர்:

*மணியினை மாமறைக் காட்டு மருந்தினை வண்மொழியால்*
*திணியின் நீள் கதவம் திறப்பித்தன: தென்கடலில்*
*பிணியன கல் மிதப்பித்தன சைவப் பெருநெறிக்கே*
*அணியன நாவுக்கரையர் பிரான் தன் அருந்தமிழே.*

நாவுக்கரசர் பெருமானின் அருமையான தமிழ்ப்பாடல்கள் எல்லாவற்றிலும் மேலான சைவசமயத்திற்கு அணியானவை. அவை திருமறைக் காட்டிலே பூட்டிய பெருங் கதவுகளைத் திறக்கும் அற்புதமான சக்தியினைக் கொண்டிருந்தவை. அவற்றினாலே திரைகடலிலே கட்டிப்போட்ட கல் மிதந்தது.

அப்பரின் தனிப்பெருஞ் சிறப்பினைச் சேக்கிழார் மேல்வருமாறு வர்ணிக்கின்றார்:

*திலகவதியார் பிறந்து சிலமுறை ஆண்டு அகன்றதற் பின்*
*அலகில் கலைத்துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ*
*உலகில் வரும் இருள் நீங்கி ஒளி விளங்கு கதிர் பொற்பின்*
*மலரும் மருள் நீக்கியார் வந்து அவதாரஞ் செய்தார்.*

மருணீக்கியாரென்றும் வாகீசரென்றும் வழங்கும் நாவுக்கரசரின் படிமக்கோலம் அபங்கமான நின்ற கோலம். தோற்றம் மெலிந்த வடிவமானது. காதுகள் நீண்டிருக்கும். கைகள் கூப்பிய கோலத்தில் அமைந்திருக்கும். தலையிலே தலைமாலையும் கழுத்திலே உருத்திராக்க மாலையும் ஆரங்களும் அமைந்திருக்கும். உளவாரப்படை தோளிற் சாரும் வண்ணமாகச் சித்திரிக்கப்படும். சில படிமங்களிலே திரிபங்கமான உருவம் காணப்படும். பொலன்னறுவையில் இரு வகையான படிமங்களுங் கிடைத்துள்ளன.

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

தமிழாகரன், சண்பையர் கோன், புகலியர், புகலியர் கோன் எனப் பல நாமங்களால் திருத்தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பியினால் புகழ்ந்து போற்றப்படும் திருஞானசம்பந்தர், சைவநாயன்மார்களின் முதல்வராகக் கொள்ளப்படுவர். அவரை எம்பிரான் சம்பந்தன் என்றார் சுந்தரர். உத்தம தானமாகிய சீர்காழியில், மறையவர் குலமாகிய கௌணியர் கோத்திரத்திலே, சிவபாதவிருதயர், பகவதியார் என்போரின் திருப்புதல்வராகத் தோன்றியவர் சம்பந்தப் பிள்ளையார். அவர் பாலமைப் பருவத்திலே உமாதேவியாரின் ஞானப்பாலையுண்டதும் ஞானமொழி பாடும் ஆற்றல் கைவரப் பெற்றவர் என்பதும் ஐதீகம்.

தேவாரப் பதிகங்களிலே மிகக் கூடுதலானவற்றைப் பாடியவர் சம்பந்தப் பிள்ளையார். அவர் சிவனடியார் கூட்டமொன்றுடன் திருத்தலங்கள் தோறுஞ் சென்று நூற்றுக்கணக்கான பதிகங்களைப் பாடினார். அவர் பரமேஸ்வரனிடமிருந்து பொற்றாளங்களைப் பெற்றவர். திருஞானசம்பந்தரின் பதிகங்கள் தனிச் சிறப்புகள் பொருந்தியவை. அவை ஒவ்வொன்றிலே தலம் பற்றிய வர்ணனைகள் உள்ளன. பொழில், பழனம், புனம், கானம் என்பவற்றின் காட்சிகளையும் தலம் பற்றிய புராணக கதைகளையும் அவை நயம்பட வர்ணிக்கின்றன. தலத்திலே பள்ளிகொண்டாரைப் பாடும் போது அதிலே சிவஞான தரிசனங்களைச் சேர்த்துவிடுவதிலே சம்பந்தர் தேவார முதலிகளில் முதன்மையானவர். அவருடைய பதிகங்கள் இசைத்தமிழுக்கு இலக்கணமானவை. பண்ணிசையின் களஞ்சியமானவை. அவரின் சிறப்புகளைப் பாடுவதிலே நம்பியாண்டார் நம்பி பேரானந்தங் கொண்டனர். சைவசமய மரபிலே சம்பந்தர் பெற்றிருந்த சிறப்பிடம் சேக்கிழாரின் மேல்வரும் பாடல்களால் ஒருவாறு உணரப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சைவம் முதல் வைதீகம் தழைத்து ஓங்க*
*தொண்டர் மனம் களிசிறப்ப தூய திருநீற்றொளிறும் நெறி*
*எண்திசையும் தனிநடப்ப, ஏழுலகுங் களிதூங்க*
*அண்டர்குலம் அதிசயிப்ப அந்தணர் ஆகுதி பெருக*
*வண்தமிழ் செய்தவம் நிரம்ப மாதவத்தோர் செயல் வாய்ப்ப*
*திசையனைத்தின் பெருமை எலாம் தென்திசைவெல்ல*
*மிசை உலகும் பிற உலகும் மேதினியே தனிவெல்ல*
*இசை முழுவதும் மெய்யறிவும் இடங்கொள்ளுநிலை பெருக*
*தவம் பெருக்கும் சண்பையிலே தவில்சரா சரங்களெல்லாம்*
*சிவம் பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரம் செய்தார்.*

படிமக்கோலத்திலே திருஞானசம்பந்தரின் உருவம் ஸ்தானக நிலையில் அபங்கமானது. உருவம் சிறயது. தோற்றம் மெலிந்தது. பிள்ளைப் பருவத்தைக் குறிக்கும் அங்கலக்ஷணங்களைக் கொண்டது. கையிலே பொற்றாளம் காணப்படும். தலையிலே சிறிய உச்சிக் குடுமியும் தலைமாலையும் தெரியும். பதக்கமிழைத்த இருபட்டு மாலையும் உருத்திராக்க மாலைகள் இரண்டும் கழுத்தணிகளாய் அமைந்திருக்கும். கையிலே முழங்கை மேற் கைவளையம் அமைந்திருக்கும். உபவீதம், அரைஞாண், சிறுமணிகள் கோர்த்த உதரபந்தம், கால் வளையம், கிண்கிணி போன்றவை உரியவிடங்களிலே அமைந்திருக்கும்.

## தம்பிரான் தோழர்

சுந்தரமூர்த்தி நாயனாரின் படிமங்கள் மணவாளக் கோலத்தில் அமைந்திருக்கும். அதற்கேற்ற வஸ்திராபணங்கள் பொருந்தியதாய் இருக்கும். படிமத்திலே உருவம் ஸ்தானக் கோலத்திலே திரிபங்கமானது. வலக்கால் இடுப்பிலே சற்று வளைந்து பத்மபீட மொன்றிலே பாதம் ஊன்றிய கோலமாயிருக்கும்.

இடக்காலானது முழங்கால் மட்டத்திலே சிறிது மடித்து ஊன்றிய கோலமாயிருக்கும். தலையிலே சிகை சில சிறிய முடிச்சுகளாகத் தெரியும். காதிலே அகன்றதோடுகள் அணிகளாக விளங்கும். நுண்ணிய வேலைப்பாடுகள் பொருந்திய மாலைகள் கழுத்தணிகளாகும். மேலும், உடலிற் கேயூரம், கைவளையம், கடிசூத்திரம், உதரபந்தம், உபவீதம், உத்தரீயம், தொங்கும் மடிப்புகளுடன் கூடிய வஸ்திரம் என்பன அலங்காரத் தோற்றத்துடன் அமைந்திருக்கும். பரவையார் சகிதமாகவும் சுந்தரரின் படிமத்தைச் சிலவிடங்களிலே செய்துள்ளனர்.

சுந்தரரின் படிமக்கோலம் வியப்புக் குறியை உணர்த்தும் வகையில் அமைந்திருக்கும். அது தடுத்தாட் கொண்ட சமயத்திலே தோன்றிய மனோபாவத்தைச் சித்தரிக்கும் கோலத்தில் அமைந்திருக்கும். மேல்வரும் பெரிய புராணப் பாடல்கள் கவனித்தற்குரியவை.:

*ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள*
*அளப்பரும் கரணங்கள் நான்கும்*
*சிந்தையேயாகக் குணமொருமூன்றும் திருந்து*
*சாத்துவிகமேயாக*
*இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில்*
*தனிப்பெரும் கூத்தின்*
*வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து*
*மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.*

முன்பு நீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூரப்
பின்பு நம் ஏவலாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர் நாம் தடுத்து ஆண்டோம் என்றார்.

*மற்று நீ வன்மைபேசி வன்தொண்டன் என்னும் நாமம்*
*பெற்றனை நமக்கும் அன்பின் பெருகிய சிறப்பின் மிக்க*
*அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால் மண்மேல் நம்மைச்*
*சொல்தமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயால்.*
*அன்பனை அருளி நோக்கி அங்கண் அருளிச் செய்வார்*
*முன்பெனைப் பித்தன் என்று மொழிந்தனை ஆதலாலே*
*என்பெயர் பித்தனென்றே பாடுவாய் என்றார் நிறை*

வன்பெரும் தொண்டர் ஆண்ட வள்ளலைப் பாடலுற்றார்.

## மாணிக்கவாசகர்

மாணிக்கவாசகரைப் பற்றித் திருத்தொண்டர் தொகையில் சுந்தரர் பாடவில்லை. ஆதலால், நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரும் அவரைப் பற்றிப் பாடவில்லை. மாணிக்கவாசகரின் காலம் ஒன்பதாம் நூற்றாண்டென்றும், அவர் காலத்தாற் சுந்தரருக்குப் பிற்பட்டவரென்றும் இந்நாட்களிற் பெரும்பாலான அறிஞர் கருதுவர். அவரைப் பற்றி இராசமாணிக்கனார் மேல்வருமாறு எழுதுகின்றார்:

இவர் மதுரையை அடுத்த வாதவூரினர். ஆமாத்தியப் பிராமணர். பாண்டியன் அமைச்சர். திருப்பெருந்துறையில் குதிரை வாங்கச் சென்ற இவர், அங்குக் குருவடிவில் இருந்த சிவனைக் கண்டு சீடராகி உபதேசம் பெற்றார். குதிரை வாங்க வைத்திருந்த பொருளைக் கொண்டு கோயில் கட்டினார். பின்னர் பாண்டியன் சீற்றத்துக்காளானார். இவரைக் காக்கச் சிவன் நரியைப் பரியாக்கியும் பிட்டுக்கு மண் சுமந்தும் திருவிளையாடல்கள் புரிந்தார். பாண்டியன் இவரது பக்திப் பெருக்கை அறிந்து வேலையிலிருந்து விடுதலை அளித்தான். பிறகு இவர் பெருந்துறை உத்தரகோசமங்கை முதலிய பல தளிகளைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசித்து இறுதியில் தில்லையில் தங்கித் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் பாடினார்.

மாணிவாசகர் காலத்தில், சங்கரரது அத்வைதக் கொள்கை நாட்டில் மிகுதியாகப் பரப்பப்பட்டது போலும். இவர் அதனை 'மிண்டிய மாயாவாதம் சண்டமாருதம் சுழித்து அடித்து ஆர்க்கிறது' என்றும் குறித்துள்ளார். பெண்கள் பலவகை விளையாட்டுக்களின் போது இறைவனுடைய சிறப்பியல்புகளைப் பலபடியாக எடுத்துக்கூறி ஆடுவதாக இவர் பாடியுள்ளார்.

பொதுவாகப் படிமங்களில் மாணிக்கவாசகரின் உருவம் ஸ்தானக நிலையிலே திரிபங்கமாயிருக்கும். இடக்கரம் ஏட்டினை ஏந்திய வண்ணமாயும் வலக்கரம் சின்முத்திரை வடிவு கொண்டதாயும் இருக்கும். சடை அகன்று விசிறி போன்றதாய் அமைந்திருக்கும். தலையிலே தலைமாலையும் காதுகளிலே நீண்டு தொங்கும் தோற்றமுடைய குண்டலங்களுந் தெரியும். ஆபரண அலங்காரங்கள் அதிகம் இருப்பதில்லை. உபவீதம், உருத்திராக்க மாலை ஆகியனவே கழுத்திலே அணிகளாயுள்ளன. வஸ்திரமும் உத்தரீயமும் அழகிய தோற்றங் கொண்டனவாயிருக்கும். உத்தரீயத்தின் மடிப்புகள் இடுப்பின் கீழே தொங்கும் நிலையிற் காணப்படும்.

### சண்டேஸ்வரர்

சிவாலயங்கள் எல்லாவற்றிலும் சண்டேஸ்வரருக்குத் தனிக்கோட்டம் உண்டு. விநாயகர் பூசையுடன் ஆரம்பமாகிச் சிவாலய கருமங்கள் சண்டேஸ்வரர் பூசையுடன் முடிவுபெறும். சுந்தரர் சண்டேஸ்வர நாயனாரை மேல்வருமாறு சிறப்பித்துப் பாடுகின்றார்:

*மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க*
*வெகுண்டெழுந்த தாதைதாண் மழுவினாலெறிந்த*
*எம்மையாளடிச் சண்டிப் பெருமானுக்கு அடியேன்.*

சண்டேஸ்வரர் தொல்பதியான சேய்ஞலூர் என்னும் சதுர்வேதி மங்கலத்திலே, காசிபகோத்திரத்துத் தலைமை சான்ற பெருங்குடியிலே, எச்சதத்தன் என்போனின் மகனாகப் பிறந்தவர். சைவசமய மரபிலே சண்டி பெற்ற சிறப்பினைச் சேக்கிழார் மேல்வருமாறு பாடுகின்றார்:

*நன்றி புரியும் அவர்தம்பால் நன்மை மறையின் துறைவிளங்க*
*என்று மறையோர் குலம் பெருக, ஏழு புவனங்களும் உய்ய*
*மன்றில் நடம் செய்பவர் சைவ வாய்மை வரை மாதவத்தோர்*
*வென்றி விளங்க வந்து உதயஞ் செய்தார் விசாரசருமனார்.*

சிவன் மேல் மீளா அன்புடையராய் விசாரசருமனார் இறைவனுக்கு அபிஷேக ஆராதனைகள் புரிந்து வழிபடும் தொண்டுகளில் ஈடுபடலானார். ஊரிலுள்ள பசுக்களை எல்லாம் கானிலும் புனத்திலும் மேய்த்து, அவை பொழிந்த நறும்பால் கொண்டு, நாள்தோறும் பெருமானுக்கு அபிஷேகம் செய்தார். ஊரவர் தந்தையாரிடம் முறைப்பட்டனர். அவர் மகனைக் கடிந்தார். விசாகசருமர் தந்தை சொற் கேளாராய் இடையறாது தான் மேற்கொண்ட பணியைச் செய்வாராயினார். கோபாவேசமுற்ற அந்தணர் ஆராதனை வேளையிலே பாற்குடங்களைக் காலினால் ஏற்றினார். அது கண்டு பொறாதாராகி விசாகசருமர் பக்கத்திலிருந்த மழுவாயுதத்தை வீசியதும் தந்தையானவர் காலொடிந்து வீழ்ந்து பட்டார். இச்சமயத்திலே சிவபெருமான் வடிவுகொண்டு தோன்றி விசாகசருமரைப் புதல்வராகக் கொண்டார். (சி. ப.)

## பொலன்னறுவைக் கோயில்கள்

பொலன்னறுவை நகரத்தின் பகுதிகள் பலவற்றிலே சைவக்கோயில்களும் வைணவக் கோயில்களும் அமைந்திருந்தன. அவற்றுட் சில கோயில்கள் தனித்தனியாக அமைந்திருந்தன. ஏனையவை தொகுதிகளாய் இருந்தன. ஐந்து கோயில்கள் நகரில், அரண்களாற் சூழப்பட்டிருந்த நடுப் பகுதியிற் காணப்பட்டன. தூபாராமம், வட்டதாகே போன்ற பெரும் பௌத்த கோயில்கள் அமைந்துள்ள நீள்சதுர மேடையின் தெற்குப் புறத்தில் முதலாம் சிவாலயம் உள்ளது. நகரத்தின் வடக்கு வாசலுக்குச் சமீபத்தில் மூன்று கோயில்களின் இடிபாடுகள் காணப்பட்டன. சிவாலயமொன்றும் பெருமாள் கோயிலொன்றும் ஒரு பிள்ளையார் கோயிலும் அங்கிருந்தன.

அகழிக்குச் சமீபத்தில் 1885 ஆம் ஆண்டில் நடைபெற்ற அகழ்வுகளின் பயனாகச் செம்மையாக அமைந்த சிறிய கற்றளியான பெருமாள் கோயிலின் அழிபாடுகள் அடையாளங் காணப்பட்டன. மூலமூர்த்தியான மகாவிஷ்ணுவின் வனப்புமிக்க படிமமும் வேறு பல அழகிய சிற்பங்களும் அவற்றிடையே கிடைத்தன.

வடவாயிற் புறத்தின் வழியே நகருக்குட் போகும் வீதியின் வலது புறத்தில் மிகப் பெரிய சைவாலயம் ஒன்றின் இடிபாடுகள் காணப்பட்டன. பிள்ளையாரின் படிமமொன்று அவற்றிடையே காணப்பட்டதால் அங்குள்ள அழிபாடுகள் பிள்ளையார் கோயிலொன்றின் அழிபாடுகளாதல் வேண்டுமென்று தொல்பொருள் திணைக்களத்தவர் கருதினார்கள். அதற்குத் தெற்கில், 60 அடி தூரத்திலே, சிவாலயமொன்று அமைந்திருந்தது. அதனை ஏழாம் சிவாலயமென்று இலக்கமிட்டனர். அதில் அமைந்திருந்த இலிங்கத்தின் பீடத்தில் நிசங்கமல்லனது (1186 - 1197) சாசனங் காணப்படுவதால் ஏழாம் சிவாலயம் 13 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமைக்கப்பெற்றது என்று கருதலாம்.

சைவ, வைணவக் கோயில்களிற் பெரும்பாலானவை நகரின் வெளிப்புறப் பகுதியில் இருந்தன. மின்னேரியாவிலிருந்து தோப்பவாவிக்குப் போகும் வீதியின் இரு பக்கங்களிலும் மூன்று கோயில்கள் இருந்தன. அவற்றிலொன்று நான்காம் சிவாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொன்று மூன்றாம் விஷ்ணு கோயில். மூன்றாவது கோயில் அம்மன் கோயில்.

தோப்பவாவியிலிருந்து அலுத் -ஓயாவினை நோக்கிச் செல்லும் வீதியில், கிரிவிகாரையின் பக்கமாகப் பிரித்து செல்லும் மாட்டுவண்டிப் பாதையில், மூன்று கோயில்களின் அழிபாடுகள் இருந்தன. அவற்றுட் கற்றளியான மூன்றாம் சிவாலயம் யோத - எல என்னும் சிற்றாற்றின் வலது பக்கத்தில், 90 அடி தூரத்தில் அமைந்திருந்தது ஐந்தாம் சிவாலயம், நான்காம் விஷ்ணு கோயில் என்பன அதற்கு அண்மையில் இருந்தன.

அவற்றிலிருந்து அரை மைல் தூரத்தில், வடக்கு நோக்கிப் போகும் பாதையில் ஆறாவது சிவாலயத்தின் அழிபாடுகள் காணப்பெற்றன. அதற்குத் தெற்கில் ஐந்தாம் விஷ்ணுகோயில் அமைந்திருந்தது. பொலன்னறுவையில் அமைந்த இந்துக் கோயில்களிற் பெரும்பாலானவை நகரின் வெளிப்புறங்களைச் சேர்ந்தவை. அவை இரண்டு அல்லது மூன்று கோயில்கள் அடங்கிய தொகுதிகளாக அமைந்திருந்தன. ஒவ்வொரு தலத்திலும் விஷ்ணு கோயிலொன்றும் இருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். சிவாலயங்களுக்கு மிகச் சமீபத்தில் பெருமாள் கோயில் அமைந்திருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும். சைவரும் வைணவரும் இவற்றின் சுற்றுப்புறங்களிற் கூடி வாழ்ந்தனரென்றும் அவர்களிடையே சமயவேற்றுமைகள் அதிகம் பாராட்டப்படவில்லை என்றுங் கருதலாம். மேலும் அக்கோயில்கள் சுற்றாடலில் வாழ்ந்த எல்லோரதும் ஆதரவினைப் பெற்றிருத்தல் கூடும்.

### முதலாம் சிவாலயம் :-

நகரின் மத்தியிலே, பிரதானமான பௌத்த கோயில்களுக்குச் சமீபமாக அமைந்திருப்பதனாலும் அதன் கட்டட வேலைப்பாடுகளின் காரணமாகவும் முதலாம் சிவாலயம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. அச்சிவாலயம் 61 அடி 9 அங்குல நீளமானது. அது 105 அடி நீளமும் 75 அடி அகலமும் கொண்ட பிரகாரத்தினுள் அமைந்திருந்தது. அதன் அதிஷ்டானப் படைகள் செம்மையாக அமைந்துள்ளன. கர்ப்பகிருகத்தின் வெளிப்புறச் சுவர்களிலே தேவகோட்டங்களும் அணைவு தூண்களும் மிகவும் செம்மையாக அமைக்கப்பட்டுள்ளன.

விகாரையிலுள்ள சிற்பங்களைச் செதுக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட கற்களே இக்கோயிலை அமைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கற்கள் மிகவும் பளப்பளமான, வெண்மையும் பச்சைநிறமும் இழையோடிய வண்ணமான நிறங்கொண்டவை. சிற்ப வேலைப்பாடுகள் நுட்பமான முறையில் அமைக்கப்படுமிடத்து அவை அலங்காரத் தோற்றத்துடன் பொலிந்து காணப்படுகின்றன. தூண்களில் பத்மதளம், கால், வரி, கலசம், இதழ், பலகை, போதிகை என்னும் உறுப்புகள் கவர்ச்சியான கோலத்துடன் அமைந்துள்ளன. இவ்வம்சங்கள் முதலாங் குலோத்துங்க சோழனின் காலத்து மேலைக் கடம்பூர் கோயில் முதலானவற்றிலுங் காணப்படுகின்றன. அதிஷ்டானம், தூண்கள், அணைவு தூண்கள், தேவகோஷ்டங்கள் ஆகிய அம்சங்கள் பிற்காலச் சோழர் பாணியிற் காணப்படும் அம்சங்களை ஒத்துள்ளன. எனவே, இக்கோயில் அக்காலத்திற்குரியதாகக் கொள்ளத்தக்கது. அது 12ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டதென்று கருதலாம். அரண்மனையிற் சைவசமயத்தின் செல்வாக்கு மேலோங்கியிருந்த காலப்பகுதியில், விக்கிரமபாகு, இரண்டாம் கஜபாகு ஆகியோரின் காலத்தில் அது அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அது அரண்மனை வாசிகளினதும் அரசப் பிரதானிகளினதும் வழிபாட்டுத் தேவைகளுக்கென நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும். முதலாம் பராக்கிரமபாகுவிற்கு முன் ஆட்சிபுரிந்த அரசர்கள் வாழ்ந்த அரண்மனையின் சமீபத்தில் அது அமைந்திருக்கின்றது.

இறையகத்தின் மேலுள்ள விமானம் முற்றாக இடிந்து வீழ்ந்துவிட்டது. அதன் கீழே கபோதமும் யாளிவரியும் இருந்தமைக்கான அடையாளங்கள் தெரிகின்றன. மண்டபத்தின் அதிஷ்டானம் 4' 5" உயரங் கொண்டது. அதில் உபானம், பத்மதளம், குமுதம், கண்டம், வியாளமாலம் கபோதம் என்னும் பகுதிகளும் ஏழு படைகளும் உள்ளன. அது முற்றிலும் வானவன் மாதேவீஸ்வரத்திலுள்ள விமானத்தின் அதிஷ்டானத்தை மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. கர்ப்பக்கிருகம் வெளிப்புறத்தில் 18 அடி சதுரமாக அமைந்துள்ளது.

மண்டபத்திலுள்ள தேவகோஷ்டங்கள் 3' 6" உயரமும் 1' 4" அகலமும் உடையனவாகும். அவற்றின் மேலே கற்களும் தோரணங்களும் அமைந்துள்ளன. அணைவு தூண்களின் உயரம் முழுத்தூண்களின் உயரத்தைக் காட்டிலுங் காற்பங்கு குறைந்தது. இரண்டாஞ் சிவாலயத் தூண்களில் அமைந்திருக்காத கலசம் இவற்றிலே தெரிகின்றது. அடியிலே குமுதமும் குமிழ் வடிவம் பெறாது தட்டையான தோற்றத்தைக் கொண்டுள்ளது.

கர்ப்பகிருகத்திற்கும் மண்டபத்திற்கும் இடையில் அமைந்துள்ள அந்தராளம் உட்புறத்தில் 8 அடி நீளமும் 9 அடி 9 அங்குலம் உயரமுங் கொண்ட அமைப்பாகும். அதன் இரு பக்கங்களிலுமுள்ள வழிகளிலே தோரணங்களைத் தாங்கும் அலங்காரத் தூண்கள் காணப்படுகின்றன.

மகாமண்டபத்தின் அடித்தளம் மட்டுமே எஞ்சியுள்ளது. அது 38' 3" நீளமும் 26' 8" அகலமுங் கொண்டது. அதன் வடபக்கத்தில் 22 நீளமும் 6 அகலமுங் கொண்ட சாலை அமைக்கப்பட்டிருந்தது. தெற்கிலே அதே போன்றளவு நீளமுடைய மேடை உள்ளது.

மூன்று பரிவாரதேவர் கோயில்கள் இருந்தமைக்கான அடையாளங்கள் உண்டு. கர்ப்ப கிருகத்திற்குத் தென்மேற்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் கோட்டம் அமைந்திருந்தது. அதில் 9' 6" நீளமும் 8' 9" அகலமுங் கொண்ட கர்ப்பகிருகமும் அதற்கொப்பான சுற்றளவுடைய அந்தராளமும் இருந்தன. வளாகத்தின் வடமேற்கு மூலையில் அதே அளவுகொண்ட தேவகோட்டமொன்று இருந்தது. அகழ்வுகளின் போது அதனிடத்திற் குமாரக் கடவுளின் சிலையொன்று கிடைத்தது.

இக்கோயில் வளாகத்தில் வெண்கலப் படிமங்கள் பல கிடைத்துள்ளன. அவை கலைச் சின்னங்கள் என்ற வகையில் வனப்புடையவை. சைவசமய வரலாற்றுச் சின்னங்களில் முதன்மையானவை. இலங்கையிலுள்ள இந்துக் கோயில்களிலும் பொலன்னறுவைக் காலத்துக் கட்டட, சிற்பக் கலை வரலாற்றிலும் இரண்டாம் சிவாலயத்திற்குச் சிறப்பிடமுண்டு.

### வானவன்மாதேவீஸ்வரம்

இலங்கையில் அமைந்துள்ள சிவாலயங்களிற் பொலன்னறுவையிலுள்ள இரண்டாம் சிவாலயம் மட்டுமே அரசி ஒருத்தியின் பெயரால் வழங்குவது. வானவன்மாதேவி என்னும் பெயர் கொண்ட சோழ அரசிகள் பலர். அவர்களில் ஒருவர் முதலாம் இராஜேந்திர சோழனின் தாயார். அன்னாரின் பெயரால் இக்கோயில் நிர்மாணிக்கப் பெற்றது என்று கருதலாம். இக்கோயிலுக்கு வேறும் பல சிறப்புகள் உண்டு. பொலன்னறுவையிற் காணப்படும் கட்டடங்களில் இதுவே காலத்தால் முற்பட்டது. அங்குள்ள கற்றளிகளிலும் இதுவே மிகப் பழைமையானது. இப்பொழுது இலங்கையிற் காணப்படுகின்றது. திராவிட கலைப்பாணியில் அமைந்த. கோயில்களிலும் இதுவே மிகப் புரதனமானது. அதன் கட்டுமான முறையின் செல்வாக்கினைப் பொலன்னறுவையிலுள்ள கோயில்கள் பலவற்றிலே காணமுடிகின்றது.

இக்கோயிலின் அதிஷ்டானத்திலே சோழரின் ஆட்சிக் காலத்திற்குரிய பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றிற் காலத்தால் முற்பட்டவை முதலாம் இராஜேந்திர சோழன் காலத்திற்குரியவை. அவை பெரும்பாலும் சிதைந்துவிட்டன. ஆலய வழிபாடு, நிர்வாகம், நன்கொடைகள், என்பன பற்றிய சில விவரங்கள் அதிராஜேந்திரனுடைய கல்வெட்டிலே காணப்படுகின்றன.

வானவன் மாதேவீஸ்வரம் பொலன்னறுவையின் அரணமைந்த பகுதியினுள், வடகிழக்கு மூலையின் சமீபத்திற் காணப்படுகின்றது. அகழ்வாய்வுகளை ஆரம்பித்த காலத்தில், சுமார் நூறு வருடங்களுக்கு முன்பு பொலன்னறுவையிலுள்ள சைவ, வைணவக் கோயில்களில் அதுவே நன்கு பேணப்பட்ட நிலையிற் காணப்பட்டது. ஆயினும், அண்மைக் காலங்களிற் கவனக்குறைவாற் பல சேதங்கள் ஏற்பட்டுள்ளன. கலாசார முக்கோணம் ஏற்பட்ட பின்பு இக்கோயிலும் ஏனைய இந்துக் கோயில்களும் போதியளவு கவனதைப் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை.

இக்கோயில் கர்ப்பகிருகம், அந்தராளம், அர்த்தமண்டபம், நந்திபீடம், மண்டபம், கோபுரவாசல், சுற்றுப்பிரகாரம் என்னும் பகுதிகளுடன் அமைக்கப்பட்டது. அதன் நீளம் 66' 4" கோயில் வளாகத்தைச் சூழ்ந்த மதிற் சுவர் 96 நீளமும் 84 அகலமுங் கொண்டதாகும். மதிற் சுவர்கள் செங்கற்களால் அமைந்தவை. வடக்கிலுங் கிழக்கிலும் மதிற்சுவர்கள் நகரின் அரண்களை ஒட்டியிருந்தன.

கற்றளியான இக்கோயில் கருங்கல், சுண்ணக்கல் ஆகிய இருவகையான கற்களையுங் கலந்து கட்டப்பட்டுள்ளது. கர்ப்பகிருகம், அதன் பக்கங்களில் 20' 6" அளவு கொண்ட சதுரமாகும். அதன் அதிஷ்டானம் 4' 1" உயரங் கொண்டது. கர்ப்பகிருகத்தின் சுவர்கள் 12 உயரமானவை. அவற்றில் 5 8 உயரமும் 1' 8" அங்குலமும் 1' ஆழமுங் கொண்ட தேவகோஷ்டங்கள் உள்ளன. சுவர்களிலுள்ள அணைவு தூண்களில் தடி, குமுதம், கண்டம், பலகை, பத்மஇதழ், போதிகை என்னும் உறுப்புகள் உள்ளன.

விமானம் திரிதள விமானம், அது 31' 9" உயரங் கொண்டது. சமகாலத்திலே தமிழகத்தில் அமைக்கப்பெற்ற விமானங்களோடு ஒப்பிடுமிடத்து இது சாதாரணமான அளவுடையது. கர்ப்பகிருகத்தின் மேல், அகன்ற வளைவுடைய கபோதமும் யாளி வரியும் அமைந்துள்ளன. முதலாவது தளத்தின் நான்கு மூலைகளிலும் கூடங்கள் உள்ளன. அவை அடியில் 3' நீளமும் 2' 8" உயரமுங் கொண்டவை. அவற்றிடையே சாலைகளும் நாசிகைகளும் அமைந்துள்ளன.

இரண்டாம் தளம் 13' 6" அளவுடைய பக்கங்களைக் கொண்ட சதுரமாகும். அதன் பீடம் குமுதம், கண்டம், பத்மபட்டிகை என்னும் படைகளைக் கொண்டுள்ளது. சுவர்களில் அரைத்தூண்கள் அமைந்துள்ளன. நான்கு பக்கங்களிலும் எல்லாமாக 12 அரைத்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. மூன்றாந் தளம் பக்கங்களில் 4' 6" அளவு கொண்ட சதுரமான பிரஸ்தரத்தில் அமைந்துள்ளது. இத்தளம் எண்கோண வடிவமானது. அதன் அரமியச் சுவர்களில் இரண்டாந் தளத்திலுள்ளவற்றைப் போன்ற அணைவு தூண்கள் உள்ளன. இரண்டு அடி ஒன்பது அங்குலம் உயரமான இத்தளத்தின் மேலுள்ள பத்மபட்டிகையில் அமைந்திருக்கும் சிகரமும் எண்கோணமானது.

அந்தராளத்தின் உள்ளே அதன் தளம் நிலமட்டத்திலிருந்து 3' 1" உயரமானது. அது வெளியிலுள்ள அதிஷ்டானத்தின் உயரத்திலிருந்து ஒரு அடி உயரங் குறைந்தது. அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகியன முற்றாக அழிந்துவிட்டன.

கிழக்கு நோக்கிய ஆலயத்தின் முன்புறத்தில் நந்திபீடம், பலிபீடம், கொடிமரம் ஆகியன அமைந்திருந்தன. கோயில் வளாகத்தின் வடகிழக்கு மூலையிற் பிள்ளையார் கோயில் செங்கல்லால் அமைக்கபட்டிருந்தது. கிழக்கு நோக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலையுடைய அக்கோயில் 8 சதுரமான இறையகம், 6 நீளமும் 5 அகலமுங் கொண்ட அந்தராளம் என்பனவற்றைப் பகுதிகளாகக் கொண்டிருந்தது. அது ஒரு அதிஷ்டானத்தின் மேல் அமைந்திருந்தது. வடமேற்கு மூலையில் இதனைப் போன்ற வேறொரு தேவ கோட்டம் இருந்தது. குமாரக் கடவுளின் படிமமும் மயிலின் உருவமும் அதன் சுற்றாடலில் வேறு சிற்பங்களோடு காணப்பெற்றமையால் அதுகுமாரக் கோட்டமாய் இருந்ததென்று அநுமானித்துக் கொள்ள முடிகின்றது.

தென்னிந்தியக் கோயில்களில் உருவாகியிருந்ததைப் போன்ற நிர்வாக முறையும் வழிபாட்டுமுறையும் இலங்கையிலுள்ள சைவக்கோயில்களிலும் காணப்பட்டது. அதனை வானவன் மாதேவி ஈஸ்வரத்திலுள்ள அதிராஜேந்திரன் காலத்துக் கல்வெட்டின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. பன்மாகேஸ்வரர் என்ற சிவனடியார் கூட்டம் பற்றி அதிற் கூறப்படுகின்றது. தானதருமங்களையும் கோயில் விவகாரங்களையும் மேற்பார்வை செய்தல் பன்மாகேஸ்வரரின் மரபு வழியான உரிமையாகும். பன்மாகேஸ்வரர் ரக்ஷை என்ற தொடர் கோயிற் சாசனங்களின் இறுதியிற் காணப்படுகின்றமையும் குறிப்பிடற்குரியது.

பதிபாதமூலப் பட்டுடைப் பஞ்சாசாரிய தேவகன்மிகள் என்ற குழுவினர் வானவன் மாதேவீஸ்வரத்தில் இருந்தனர். மூலஸ்தானத்தில் ஆராதனை முதலான கருமங்களைப் புரிகின்ற அந்தணரை அவ்வாறு அழைத்தனர். கோயிற் பணிகளைச் செய்கின்ற பரிசாரகர் என்னும் பணிமக்களும் அக்கோயிலிற் கடமை புரிந்தனர். மாணிக்கம் என்னும் பட்டம் பெற்ற தேவரடியார் பலர் வானவன் மாதேவீஸ்வரத்தில் இருந்தனர். கங்கைகொண்டசோழ மாணிக்கம், காமன் திருவியான கோதுகுல மாணிக்கம், கோவிந்தன் ஆடவல்லானான நாற்பத்தெண்ணாயிர மாணிக்கம், தேவன் காமியான இராஜேந்திர சோழ மாணிக்கம், தேவன் உய்யவந்தானான முடிகொண்டசோழ மாணிக்கம் என்னும் தேவரடியாரை அங்குள்ள சாசனங் குறிப்பிடுகின்றது.

இக்கோயிலில் விளக்கெரிப்பதற்குச் சோழமண்டலத்து விற்பேட்டு நாட்டு மங்கலப்பாடி வேளான் சோழ பல்லவரையன் என்னும் பிரதானி ஏற்பாடு செய்திருந்தான். அதற்கென 5 காசும் இரு சாணே நால்விரல் நீழாத்துத் தளராநிலை விளக்கு ஒன்றும் அவனால் வழங்கப்பட்டன. திருவாராதனை செய்வாரும் பரிசாரகரும் பன்மாகேஸ்வரக் கண்காணி செய்வாரும் நாட்டவரும் தேவராடியாரும் என்றென்றும் இடையறாது விளக்கெரிப்பதாகச் சம்மதித்துக் காசினைப் பொறுப்பேற்றனர்.

### மூன்றாம் சிவாலயம் :-

மதில்களாற் சூழப்பெற்ற மூன்றாம் சிவாலயம் அளவிற் சிறிதான கற்றளி. அது யோத எல என்னும் கால்வாயின் வலப்பக்கத்துக் கரையிலிருந்து 90 அடி தூரத்தில் அமைந்துள்ளது. அது 51' 6'' நீளங் கொண்டது. அதன் பிரகாரமும் கட்டடத்தின் எல்லாப் பகுதிகளின் கூரையும் இடிந்து விழுந்து விட்டன.

கிழக்கு நோக்கிய அச்சிவாலயம் கர்ப்பகிருகம், மண்டபம், அந்தராளம், முகமண்டபம் என்னும் பகுதிகளைக் கொண்டிருந்தது. எல்லாப் பகுதிகளும் ஒரு பொதுவான அதிஷ்டானத்தின் மேல் அமைந்திருந்தன. அது 3' 4'' உயரங் கொண்டது. அதில் உபானம், கண்டம், கபோதம், குமுதம், பத்மதளம் என்னும் ஐந்து படைகள் அமைந்திருந்தன. முதலாம் சிவாலயத்து மண்டபத்திலுள்ளனவற்றைப் போன்று சுவர்களிலுள்ள அணைவு தூண்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே இக்கோயில் 11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமைக்கப்பட்டதென்று கருதலாம். அவற்றிலே கண்டம், கலசம், பத்ம இதழ் ஆகிய அம்சங்கள் உள்ளமை குறிப்பிடற்குரியது. வெளிப்புறத்தில் மண்டபம் 22 அடி நீளமும் 20 அடி அகலமுங் கொண்டுள்ளது. உட்புறத்தில் அதன் நீளம் 16 அடி, அகலம் 14 அடி 4 அங்குலம். அந்தராளம் 8 அடி 4 அங்குல நீளமும் 6 அடி அகலமுங் கொண்டுள்ளது. வெளிப்புறத்திற் கர்ப்ப கிருகம் 21 அடி நீளமும் அகலமுங் கொண்டது. உட்புறத்தில் அது 21 அடி நீள அகலங் கொண்ட சதுரமாகும்.

### நான்காம் சிவாலயம் :-

மின்னேரியா - தோப்பவாவி வீதியில் அமைந்துள்ள நான்காம் சிவாலயம் செங்கல்லினால் அமைக்கப்பெற்ற கோயிலாகும். கோயில் வளாகம் 136 அடி நீளமும் 100 அடி அகலமுங் கொண்ட சுற்றளவினை உடையது. அதன் பிரகாசரச் சுவர்கள் 2 அடி அகலங் கொண்டவை. கிழக்கில் அமைந்திருந்த கோபுரவாசல் மதிற்சுவரிலிருந்து உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் நீண்டிருந்தது. அதற்கு முன்னால் வாசற்படிகள் இரு கட்டங்களில் அமைக்கப்பட்டிருந்தன. ஆலயத்திற்கு அண்மையில், கிழக்கில், வீதியொன்று இருந்தமைக்கான தெளிவான அடையாளங்கள் உள்ளன. ஆலயத்தின் தெற்கிலும் மேற்கிலும் நுழைவாசல்கள் இருந்தன.

கர்ப்பகிருகம் வெளிப்பக்கங்களில் 13' 6'' அளவுடைய பக்கங்களைக் கொண்ட சதுரமாகும். சுவர்களின் உள்ளே அது 9' நீளமும் 8' 4'' அகலமுங் கொண்டுள்ளது. இறையகம், மண்டபம் ஆகியவற்றின் இடையில் 15' நீளமான அந்தராளம் இருந்தது. அதன் நடுவிலமைந்த கதவு அதனை இரு பகுதிகளாகப் பிரிந்தது. கர்ப்பகிருகத்திற் கதவு அமைந்திருக்கவில்லை. அதில் 3' 6'' அகலமான வாசல் இருந்தது. மண்டபம் 22' நீளமும் 18' 2'' அகலமுங் கொண்டிருந்தது. அதில் 6' உயரமான 8 தூண்கள் இருந்தன. அதற்கு முன்னால் 24 அகலமுடைய மகாமண்டபம் 16 தூண்களோடு அமைக்கப்பட்டிருந்தது. அதன் வடக்கிலும் தெற்கிலும் சாலைகள் இருந்தன. தெற்குச் சாலையின் தெற்குச் சுவரில் 3' 4'' அகலமான வாசல் அமைந்திருந்தது. அதன் சுவர்கள் 3 அடி அகலமானவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் சிவாலயத்தின் மேற்குப் பிராகாரச் சுவரின் பக்கமாக மூன்று பரிவார தேவர் கோட்டங்கள் இருந்தன. தென்மேற்கு மூலையில் இறையகம், மண்டபம் என்னும் பகுதிகளைக் கொண்ட 18' 4" நீளமும் 9' அகலமுங் கொண்ட சந்நிதானம் இருந்தது. அதன் இறையகத்தில் இலிங்கம் இருந்தது. அதனருகில், அளவுப் பிரமாணங்களில் அதனை ஒத்த வேறொரு கோட்டம் இருந்தது. மூன்றாவது கோட்டம், பிராகாரத்துக்கு வெளியே, கோயில் வளாகத்திற்கு வடமேற்கிலே காணப்பட்டது. அது அளவில் ஏனையவற்றைக் காட்டிலும் சற்றுப் பெரிதாகும். அது 21' நீளமும் 11' 9" அகலமுங் கொண்டிருந்தது.

நான்காம் சிவாலயம் என்று வர்ணிக்கப்படும் கோயிலின் தென்மேற்குத் திசையில் இலிங்கம் ஸ்தாபனம் பண்ணப்பட்ட கோட்டம் இருந்தமையாற் பிரதான ஆலயம் ஈஸ்வரம் என்பதிற் சந்தேகம் உண்டாகின்றது. சிவன் கோயிலொன்றிலே பரிவாரதேவர் கோட்டமொன்றில் இலிங்கத்தைப் பிரதிஷ்டை பண்ணவேண்டிய தேவையில்லை. எனவே நான்காம் சிவாலயம் என்று கொள்ளப்படும் கோயில் ஈஸ்வரமன்று என்றும், அது சைவர்கள் வழிபடும் வேறொரு தெய்வத்தின் பெயரால் அமைக்கப்பட்டது என்று கருதலாம்.

**ஐந்தாம் சிவாலயம் :-**

பொலன்னறுவையிலே தங்கியிருந்த சோழர் பிரதானிகள் சிலரின் ஆதரவில் ஐந்தாம் சிவாலயம் அமைக்கப்பட்டது. இதனை அதன் அழிபாடுகளிடையிற் கிடைத்த சாசனங்கள் மூலம் அறிய முடிகின்றது. பொலன்னறுவையில் அமைக்கப்பட்ட சிவாலயங்களில் அதுவே அளவிற் பெரியதாகும். அது செங்கல் வேலைப்பாடான பல கட்டங்களின் தொகுதியாகும். அதன் மண்டபங்கள் வெவ்வேறு காலப் பகுதிகளில் அமைக்கப் பட்டிருத்தல் கூடும். பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை அதில் வழிபாடுகள் நடைபெற்றமைக்கான சான்றுகள் உண்டு. பொலன்னறுவைக் காலத்து வெண்கலப் படிமங்களில் மிகக் கூடுதலானவை அதன் வளாகத்திலிருந்து கிடைத்துள்ளன. அவற்றுட் சில சோழர் காலத்தவை. ஏனையவை 12ஆம் 13ஆம் நூற்றாண்டுகளுக்கு உரியவை.

ஆலயம் மிக விசாலமான பிராகாரத்தினுள் அமைந்திருந்தது. பிரகாரச் சுவரின் நடுவில் அமைந்திருந்த கோபுரவாசல் 8' 6" அகலமானது. அதன் இரு பக்கங்களிலும் 8' அளவுடைய பக்கங்களைக் கொண்ட சதுரமான அறைகள் இருந்தன. கோபுரவாசலுக்கு அப்பால் 60 அடி தூரத்தில் முதலாவது மண்டபம் இருந்தது. அது 75' 6" நீளமும் 33' 9" அகலமுங் கொண்டதாகும். அதன் கிழக்குச் சுவரின் நடுவிலும் எதிர்ப்புறத்திலே மேற்குச் சுவரின் நடுவிலும் வாசல்கள் இருந்தன. இம்மண்டபத்தில் நான்கு வரிசைகளில் 40 தூண்கள் அமைந்திருந்தன. அவற்றுட் சில சதுரமானவை. வேறு சில எண்கோணமானவை. அவற்றுள் 24 தூண்கள் சுவர்களை ஒட்டியிருந்தன. ஏனையவை தனித்தனியாக நிறுவப்பட்டிருந்தன.

இரண்டாவது மண்டபம் 24' நீளமும் 23' அகலமுங் கொண்ட அமைப்பாகும். அதில் 16 தூண்கள் இருந்தன. அவற்றுள் நடுவிலுள்ள நான்கும் செம்மையாகச் செதுக்கப்பட்டிருந்தன. அவற்றின் மேற்பகுதியில் அன்னப் பறவைகளின் உருவங்களும் குமுதமும் உள்ளன. மூன்றாவது மண்டபம் மகாமண்டபம் அது 25' நீளமும் 22' அகலமுங் கொண்டது. ஆறு வரிசைகளில் 24 சதுரமான தூண்கள் இருந்தன. அம்மண்டபத்தின் தெற்குப் பக்கத்தில் 9' நீளமும் 7' அகலமுங் கொண்ட சாலை இருந்தது.

அர்த்த மண்டபம், அந்தராளம் ஆகியன அளவுப் பிரமாணங்களிற் சிறிதளவு வேறுபாடுகளைக் கொண்டிருந்தன. அர்த்த மண்டபம் 9' 3" நீளமும் 8' 9" அகலமுங் கொண்டிருந்தது. வெளித் தோற்றத்திற் கர்ப்ப கிருகம் 21 அடிச் சதுரமாகும். சுவர்களின் உள்ளே அது 9 அடிச் சதுரமாகும். கர்ப்பகிருகம், அந்தராளம், அர்த்தமண்டபம் ஆகியன முதலாம் பிரகாரத்தினுள் அமைந்திருந்தன. அது செங்கல் மதில்களாற் சூழப்பட்டிருந்தது. அந்தப் பிரகாரத்தினுள் நான்கு பரிவாரதேவர் கோயில்கள் இருந்தன. வடமேற்கிற் பிள்ளையார் கோயில் இருந்தது. அர்த்த மண்டபத்தின் வடக்கே இரண்டாவது கோயில் அமைந்திருந்தது. வடகிழக்கில் வேறொரு கோயிலும் 20' ஆழமும் 4' விட்டமும் கொண்ட கிணறும் அமைக்கப் பட்டிருந்தன.

விமானம் 36' 4" உயரங் கொண்டதாகும். முதலாவது தளத்தின் மூன்று பக்கங்களில் ஆசனக் கோலமான படிமங்கள் அடங்கிய தேவகோஷ்டங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடற்குரியது. இரண்டாவது தளத்தில் அலங்கார வேலைப்பாடுகள் கொண்ட அணைவு தூண்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மூன்றாந் தளம் இரண்டாஞ் சிவாலயத்திற் போல எண்கோணமாக அமைந்துள்ளது. அதன் ஒவ்வொரு பட்டையிலும் நான்கு அணைவு தூண்கள் அமைக்கப்பட்டிருந்தன.

**சாசனங்கள் :-**

ஐந்தாம் சிவாலயத்தின் அழிபாடுகளிடையே நான்கு சுருக்கமான சாசனங்கள் அகழ்வாய்வுகளின் போது ஏறக்குறைய நூறு வருடங்களுக்கு முன் கிடைத்தன. அவற்றின் மைப்படிகளை வாசித்த கிருஷ்ண சாஸ்திரி சாசனங்களை வெளியிட்டார். அவை மேல்வருவனவாகும்.

1. ஸ்ரீ மோகனூருடையான் திருப்பூ வண தேவன்.
2. ஸ்ரீ தில்லைக்கரசு தியாகசிந்தாமணி மூவேந்த வேளான்.
3. ஸ்ரீ முகரிநாடாழ்வாந் மகள் கற்பகம்.
4. ஸ்ரீ நல்லூருடையாந் பஞ்சநெதிவாணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவரின் பெயர் குறிப்பிடப்படுகின்றது. திருப்பூ வண தேவன், தியாகசிந்தாமணி, கற்பகம், பஞ்ச நெதிவாணன் என்பன அவர்களின் இயற் பெயர்கள் போலானவை. மோகனூருடையான் நல்லூருடையான், முகரிநாடாழ்வான், தில்லைக்கரசு என்பவை பதவி நிலையினைக் குறிக்கும் பெயர்கள். இவர்களில் ஒருவன் மூவேந்தவேளான் என்னுஞ் சிறப்புப் பெயர் கொண்டவன். இவர்களின் பதவிப் பெயர்களை அவதானிக்குமிடத்துச் சாசனங்கள் குறிப்பிடுவோர் பிரதானிகள் வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தமிழகத்திலிருந்தும் சென்று ஈழத்திலே தங்கியிருந்து நிர்வாகப் பணிகள் புரிந்தவர்கள் என்பது புலனாகின்றது. அவர்களைச் சோழரின் நிர்வாக அமைப்போடும் படையணிகளோடும் தொடர்புடையவர்ளென்று கொள்ளலாம்.

**ஆறாம் சிவாலயம் :-**

ஐந்தாம் சிவாலயத்தின் சமீபத்தில் அமைக்கப்பட்டிருந்த ஆறாம் சிவாலயம் 54' 6" நீளங்கொண்ட அமைப்பாகும். அதிற் கர்ப்பகிருகம், அந்தராளம், அர்த்தமண்டபம் மண்டபம் என்ற பகுதிகள் அடங்கியிருந்தன. அதன் பிரகாரம் 40 அடி நீளமும் 33 அடி அகலமுங் கொண்ட சுற்றளவுடையதாகும். அதன் இறையகம் 8 அடி அளவான பக்கங்களைக் கொண்ட சதுரமாகும். அர்த்தமண்டபம் அந்தராளத்தைக் காட்டிலும் இரு மடங்கு அகலமானது. இறையகம் வெளிப்புறத்தில் 14 அடி நீளங் கொண்டிருந்தது.

அந்தராளம், அர்த்தமண்டபம் ஆகிய இரண்டுஞ் சேர்ந்து 15 அடி நீளங் கொண்டிருந்தன. மண்டபம் 25' 6" நீளமும் 14' 9" அகலமுங் கொண்டது. அதில் மூன்று வரிசைகளில் 6 தூண்கள் இருந்தன. அதற்கு வடக்கில் 17 அடிச் சதுரமான வேறொரு மண்டபமிருந்தது. கோயில் வளாகத்தில் மூன்று பரிவாரதேவர் கோட்டங்கள் இருந்தன. விமானத்தின் பின்னால் வடமேற்கிலமைந்த பிள்ளையார் கோயிலின் கர்ப்பகிருகம் கிழக்கு நோக்கியது. அதில் விநாயகரின் படிமம் காணப்பட்டது. இரண்டாவது கோட்டம் அர்த்த மண்டபத்திற்கு வடக்கிலும் மூன்றாவது கோட்டம் வளாகத்தின் வடகிழக்கு மூலையிலும் இருந்தன.

**ஏழாம் சிவாலயம் :-**

நகரத்தின் வடக்கு வாசலுக்குச் செல்லும் வீதியின் வலப்பக்கத்தில் அமைந்திருந்த சிவாலயத்தின் அத்திபாரம் மட்டுமே எஞ்சியுள்ளது. அது 64' 2" நீளமானது சுற்றுமதிலின் அடையாளங்கள் காணப்படவில்லை. அதன் கர்ப்பகிருகம் 8' 6" அளவுடைய பக்கங்களைக் கொண்ட சதுரமாகும். அங்கிருந்த மண்டபம் 20' 4" நீளங் கொண்டது. இரண்டுக்கும் இடையில் மிகவும் ஒடுக்கமான அந்தராளம் அமைந்திருந்தது. கோபுரவாசல் 3' 9" அகலமானது. அதன் இரு பக்கங்களிலுஞ் சிறிய கூடங்கள் இருந்தன.

**அம்மன் கோயில் :-**

அம்மன் கோயில் 97' நீளமும் 92' அகலமுங் கொண்ட பிராகாரத்தினுள் அமைந்திருந்தது. பிராகாரச் சுவர்கள் கற்சுவர்கள். ஆனாற் கோயில் செங்கல் வேலைப்பாடாகும். அது 47' 4" நீளமும் 21 அடி அகலமுங் கொண்டது. அதிஷ்டானம் 4' 3" உயரமானது.

கர்ப்பகிருகத்துச் சுவர்களில் மகரதோரணங்கள் பொருந்திய தேவகோட்டங்களும் அணைவு தூண்களும் அமைந்திருந்தன. மூலஸ்தானத்தில் எட்டுக் கரங்கள் பொருந்திய மகிஷமர்த்தனியின் உருவம் நின்ற கோலத்தில் தாபனம் பண்ணப்பட்டுள்ளது. அது ஐந்நூற்றுவரின் குலதெய்வமான ஐயப்பொழில் பரமேஸ்வரியின் கோலம் என்பதால் அம்மன் கோயிலையும் அதற்கு அண்மையிலிருந்த சிவன் கோயிலையம் விஷ்ணு கோயிலையும் ஐந்நூற்றுவரும் அவர்களோடு கூடியிருந்த சமுதாயப் பிரிவுகளும் அமைத்திருத்தல் கூடும்.

மண்டபம் 21 அடி அளவுகொண்ட பக்கங்களையுடைய சதுரமாகும். அதன் சுவர்கள் 2 அடி அகலமானவை. அதனோடு இணைந்த அந்தராளம் 8' நீளமும் 7' 6" அகலமுங் கொண்டது.

**இரண்டாம் விஷ்ணு கோயில் :-**

முதலாம் விஷ்ணு கோயிலைப் பற்றி எதுவிதமான விவரங்களையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இரண்டாம் விஷ்ணு கோயில் வடவாசற் புறத்தில், அரண்மனைக்கு அண்மையில் அமைந்த திடரிலே காணப்படுகின்றது. அதில் வழமைபோல இறையகம், அந்தராளம், மண்டபம் என்னும் பகுதிகள் அடங்கியிருந்தன. கோயிலும் மண்டபமும் வெவ்வேறான காலப்பகுதிகளில் அமைக்கப்பட்டவை என்று கருதப்படுகின்றது. கற்றளியாக அமைந்த இக்கோயிலின் இறையகம், அந்தராளம் ஆகிய இரண்டும் 4' 6" உயரமான அதிஷ்டானத்தில் அமைந்துள்ளன. அதிஷ்டானப் படைகளும் அவற்றிலுள்ள வேலைப்பாடுகளும் பொலன்னறுவையிலுள்ள ஏனைய இந்துக் கோயில்களில் உள்ளவற்றைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. கர்ப்பகிருகம் வெளியே 14 அடி நீளமும் 13' 9" அகலமுங் கொண்டுள்ளது. உள்ளே அதன் சுற்றளவு 8 9 நீளமும் 6' 9" அகலமுங் கொண்டுள்ளது. அதிலே ஸ்தானகக் கோலத்திலுள்ள விஷ்ணுவின் படிமம் பத்மபீடத்தில் அமைந்துள்ளது. படிமத்தில் நான்கு கரங்கள் உள்ளன. மேற்கரங்கள் சக்கரம், சங்கு என்பவற்றை ஏந்திய கோலமானவை. தொங்குகரமான கீழ் இடக்கரம் கதாயுதத்தினைத் தொடுகின்றது. மற்றைய கரம் அபயகரமாகும்.

அந்தராளம் வெளியே 7' 6" நீளமானது. உள்ளே அது ஒவ்வொரு பக்கத்திலும் 5 அடி நீளமான சதுரமாகும். மண்டபம் 20 அடி நீள அகலங் கொண்டது. கோயில் வளாகத்தில் முன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில சாசனத் துண்டங்கள் காணப்பெற்றதாகச் சொல்லப் படுகின்றது.

**மூன்றாம் விஷ்னு கோயில் :-**

அம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள விஷ்னு கோயிலை மூன்றாம் விஷ்னு கோயிலென்று சொல்வது வழக்கமாகிவிட்டது. அதன் வளாகம் மதில்களாற் சூழப்பட்டது. சுற்றுப்பிராகாரம் 150 அடி நீளமும் 100 அடி அகலமுங் கொண்டது. இறையகம், அந்தராளம், மண்டபம் என்னும் பகுதிகள் அதில் அடங்கியிருந்தன. அவை அனைத்தும் அடங்கிய கோயில் 53 அடி நீளமானது. கர்ப்பகிருகம் வெளிப்புறத்தில் 17' 6" நீளமான பக்கங்களையுடையது. ஆலய வளாகப் பகுதியினை அகழ்வாய்வு செய்த பொழுது இறையகத்தின் சுவர்ப்பாகங்கள் 6 அடி உயரத்திற் காணப்பெற்றன. இறையகத்தின் அழிபாடுகளிடையில் 3' 9" உயரமான ஸ்தானகக் கோலமான விஷ்ணுவின் படிமங் கிடைத்தது.

மண்டபம் 29 அடி நீளமும் 22 அடி அகலமுங் கொண்டது. அதில் 8 கற்றூண்களும் 8 மரத்தூண்களும் அமைந்திருந்தன. அந்தராளம் அளவிற் சிறியது. அது 9' 2" நீளமும் 7' 4" அகலமுங் கொண்டது.

**நான்காம் விஷ்னு கோயில் :-**

ஐந்தாம் சிவாலயத்தின் அருகில் அமைந்த விஷ்னு கோயில் இந்நாட்களில் நான்காம் விஷ்னு கோயிலென்று இலக்கமிடப்பட்டுள்ளது. அது 90 அடி நீளமுடையது. அதன் அகலம் 69 அடி அதன் சுற்றுப்பிரகாரம் 117 அடி நீளமும் 69 அடி அகலமுங் கொண்டது. கர்ப்பகிருகம் வெளியே 19 அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்டது. உள்ளே அதன் நீளம் 13' 4" அகலம் 6' 9" அந்தராளம் 11 அடி நீளமும் 6' 9" அகலமுங் கொண்ட அமைப்பாகும். எட்டுத் தூண்களோடு அமைத்த மண்டபம் 16' 9" நீளமும் 15' 6" அகலமுங் கொண்டிருந்தது. 20 அடி நீளமும் 17 அடி அகலமுங் கொண்ட மகாமண்டபம் சுவர்களினால் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பல கூடங்களோடு கூடிய கோபுர வாசலும் அமைக்கப்பட்டிருந்தது.

ஆறாம் சிவாலயத்திற்கு அண்மையில் அமைந்திருந்த ஐந்தாம் விஷ்னு கோயிலின் கர்ப்பகிருகத்தில் ஆசனக் கோலத்து விஷ்னு கோயிலின் கர்ப்பகிருகத்தில் ஆசனக் கோலத்து விஷ்ணுவின் படிமங் காணப்பட்டது. விஷ்ணுவின் படிமக்கோலம் லக்ஷ்மி, ருக்மிணி ஆகியோர் சகிதமானது. (க.இ.)

## பொன் வண்ணத்தந்தாதி

பொன் வண்ணத்தந்தாதி என்னும் நூல் சேரமான் பெருமாள் நாயனாரால் இயற்றப்பட்டது. பதினோராந் திருமுறை நூல்களில் ஒன்றாக விளங்குவது. இந்நூல் செய்யப்பெற்ற வரலாறு பெரியபுராணம் கழறிற்றறிவார் புராணத்தில் கூறப் பெறுகின்றது.

மாகோதையை ஆண்ட கழறிற்றறிவார் என்னும் சேரமன்னர் நாள்தோறும் தம்முடைய சிவபூசையின் இறுதியில் நடராசப் பெருமானின் நடனச் சிலம்பொலி கேட்டுப் பூசையினை நிறைவு செய்வார். ஒருநாள் சிலம்பொலி கேட்கத் தாமதமாயிற்று. சேரமான் வருந்தினார். அப்பொழுது தில்லைக் கூத்தப் பெருமான், "யாம் சுந்தரர் திருப்பாட்டைச் செவிமடுத்தோம். அதனால் தாமதம்" எனக்கூற, அச்சுந்தரரின் நட்பைக் கருதிச் சேரமான் சிதம்பரம் வருகின்றார். அப்பொழுது தில்லைக்கூத்தன் மீது அருளிச் செய்ததே "பொன்வண்ணத்தந்தாதி" யாகும். அதன் பின் திருவாரூரை அடைந்து சுந்தரரின் நட்பைப் பெற்று மகிழ்கின்றார்.

பொன்வண்ணம் என்னும் தொடரை முதற்பாட்டின் முதற்சீராகக் கொண்டு தொடங்கி இறுதிச் செய்யுளாகிய நூறாவது செய்யுளில் கனகமலையருகே போயின காக்கையும் அன்றே படைத்தது பொன் வண்ணமே என்று அமைத்து அந்தாதித் தொடை பொருந்துமாறு சேரமான் பெருமாள் இந்நூலை முடித்தமையால், இந்நூல் "பொன்வண்ணத்தந்தாதி" என்ற பெயர் பெற்றது.

இவ்வந்தாதியில் அகத்துறைப் பாடல்களும், இறைவனுக்குத் தொண்டு செய்முறைப் பாடல்களும், அவ்வாறு தொண்டுபட்ட மெய்யடியார்களுடைய இயல்பை விரித்துரைக்கும் பாடல்களும் அமைந்துள்ளன. அகத்துறைப் பாடல்களில் அகச்சுவையோடு பக்திச் சுவையும் திகழ்வதைக் காணலாம்.

இதன்கண் அமைந்துள்ள செய்யுட்கள் யாவும், மோனை, எதுகை முதலிய தொடைநயங்களும் இயமகம், திரிபு முதலிய சொல்லணிகளும் அமையப்பெற்று விளங்குகின்றன. ஆழ்ந்து பயில்வோருக்கு இந்த நூல் பேருவகை அளிக்கும். பொன்வண்ணமாகிய இறைவனது திருமேனிச் சிறப்பு நன்கு விளக்கப்படுகின்றது.

பாற்கடலில் நஞ்சு வர இறைவன் அதனை உண்டு தேவர்களுக்கு அமுதளித்த வரலாறு - பிரமனின் சிரம் கொய்த செய்தி, காமனை எரித்த செய்தி, மதியம் அணிந்த மாண்பு முதலிய வரலாறுகள் நன்கு விளக்கப்படுகின்றன.

இறைவனுக்குத் தம்முடைய உறுப்புகளை எவ்வெவ்வாறு அமைத்தேன் என்று விளக்கும் திறம் சிந்தித்துச் சிந்தித்து மகிழற்பாலது. முதலில் மனத்திற்கு வேலை தருகின்றார். சிந்தனை செய்ய மனம் அமைத்தேன் என்கின்றார். அவன் புகழைச் சொல்லுதற்கு நாவமைத்தேன் என்கின்றார். தலையை இறைவனை வணங்குவதற்காக அமைத்தேன் என்றும், இறைவனைத் தொழுமாறு கைகளை அமைத்தேன் என்றும் கூறுகின்றார். அன்பை இறைவனோடு தொடர்பு கொள்வதற்காக அமைத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபுதி அணிந்த சிவபெருமானுக்கு என் உறுப்புகளை அமைத்த முறை இவ்வாறாகும் என்னும் கருத்தமைந்த பாடல் பத்திச்சுவை சொட்டச் சொட்ட அமைக்கப்பட்டுள்ளது. (இ.இர.)

## பொன்னம்பலப் பிள்ளை

இலங்கையிலே தமிழுக்கும் சைவசமயத்திற்கும் தொண்டாற்றியவர்களிற் சிறந்த புலமை படைத்தவர் பொன்னம்பலம் பிள்ளை ஆவார். இவர் யாழ்ப்பாணத்திலே நல்லூரில் 1759 ஆம் ஆண்டு சித்திரைமாதம் 24 ஆம் திகதி பிறந்தவர். இவரின் தந்தையாரின் பெயர் சரவணமுத்துச் செட்டியார். தாயார் ஆறுமுகநாவலரின் தமக்கையார். இதனால் ஆறுமுகநாவலருக்கு மருமகனாவார்.

இளம் பிராயத்திலே கார்த்திகேய உபாத்தியாரிடம் தமிழ் இலக்கண. இலக்கியங்களைக் கற்றுப் புலமை பெற்றார். அதன் பின் தனது மாமனாராகிய ஆறுமுகநாவலரிடமும் பல காலம் கல்வி கற்று மேலும் புலமையடைந்தார். இவர் தனது நுண்மான் நுழை புலத்தாற் சங்கப்பாடல்களையும். சீவகசிந்தாமணி. சிலப்பதிகாரம். மணிமேகலை போன்ற தமிழ் இலக்கியங்களையும். தொல்காப்பியமென்னும் இலக்கண நூலையும். இராமாயணம் எனும் சமய காவியத்தையும். ஆழ அகலமாகப் படித்து ஆய்ந்தவர்.

தனது மாமனாரைப் போல புராணச் சொற்பொழிவுகள் ஆற்றுவதில் வல்லவர். இவரின் சமயப் பணிகளில் பெரும் பங்கு புரிந்தவை இப் பணியேயாகும். கந்த புராணம். பெரியபுராணம். திருவிளையாடற் புராணம் ஆகிய புராண நூல்களைக் கோயில்களிலும். மடங்களிலும் பாடிப் பொருள் பிரித்து ணர்த்தியவர். அத்தோடு இவர் இனிமையாகப் பாடுவதிலும் வல்லவராகையால் இவருடைய புராண படனம் யாழ்ப்பாணத்து மக்களை வெகுவாக ஈர்த்திருந்தது என்று கூறுவர். இவருடைய பொருளையும். இசையையும் கேட்டவர்கள் யாழிசையோ பாரதி தன் இன்னிசையோ என்று கூறுமளவிற்கு வியப்பிலாழ்த்தியவர். இதே போல் கம்பராமாயணத்திற்கும் இவர் பொருள் சொல்லும் சிறப்பை கம்பன் தானே பிறந்து தான் பாடிய நூலிற்கு பொருள் கூறுவது போல என்று வியக்கின்றனர். வண்ணார் பண்ணைச் சிவன் கோயில் வசந்த மண்டபத்திலே திருஞானசம்பந்தரின் திருக் கலியாணப் படிப்பினை மேற்கொண்டு மக்களிடையே அமைதியை உண்டாக்கியவர். இதே போல் நல்லூர்க் கந்த சுவாமி கோயிலிற் கந்த புராணத் திருக்கலியாணப் படலத்திற்குப் பொருள் விளக்கம் சொல்லியும் புகழ் புத்தவர். இவரின் இப்பணிகள் தொடர்பாக பிரம்ஸ்ரீ சி. கணேசையர் தான் பெற்ற அனுபவங்களை மேல்வருமாறு பகருகின்றார்.

"யான் இவரிடம் படிக்கும் போதும் வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலில் வசந்த மண்டபத்திலே கந்தபுராணமும். பெரியபுராணமும். இராமாயணமும் முறையே படிக்கப்பட்டன. அப்பொழுது இவரே பொருள் சொன்னார். இவர் சொல்லும் பொருளைக் கற்றவர்களும் பலர் வந்து கேட்டுச் செல்வர். கற்ப வர்களும் பலர் வந்து கேட்டுச். இவர் சொல்லும் பொருள்களுள் அரியனவற்றைக் காகிதங்களில் குறித்துச் செல்வர். இங்ஙனம் கேட்டும் குறித்தும் அறிஞர்க ளாயினோர் பலர். கந்த புராணம் முதலிய அந் நூற் குறிப்புக்கள் இப்போதும் பலரிடம் உண்டு. இவரிடம் கேட்டுக் குறித்த பெரியபுராணக் குறிப்புக்கள். மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளிவரும் செந்தமிழ்ப் பத்திரிகையிலே நாகை நீலலோசனிப் பத்திராதிபர் சதா சிவம் பிள்ளையால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன."

இவர் மகாபாரதத்தின் சில பருவங்களுக்கும். மயூரகிரிப் புராணத்திற்கும் உரை எழுதி அச்சிலேற்றியவர். யாழ்ப்பாணத்து நல்லூர் மகாவித்துவானான அரசகேசரி தமிழில் மொழி பெயர்த்து எழுதிய இரகுவம்சம் எனும் நூலைப் பரிசோதித்து அச்சிலேற்றியவர். பொன்னம்பலப் பிள்ளையிடம் கல்வி கற்றோர் ஏராளம் உள்ளனர். அவர்களில் சிலர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். சிலர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களில் மட்டுவில். க. வேற்பிள்ளை சிறப்பு வாய்ந்தவர். இவர் எழுதிய வாதவூரடிகள் புராணத்திற்கு எழுதிய விரிவுரையைப் படித்து. அவ் உரையின் சிறப்பையுணர்ந்து பொன்னம்பலப்பிள்ளை அவருக்கு உரை யாசிரியர் என்னும் சிறப்புப் பெயரினையும் கொடுத்தார். இதேபோல் சுவாமிநாத பண்டிதர். வண்ணார்பண்ணை. சி. பொன்னுத்துரை ஐயர். கொக்குவில் க. சபாரத்தின முதலியார். வடகோவைச் சபாபதி நாவலர். தாவடி. ஆ. மு. சோமஸ்கந்த பிள்ளை. கந்தர்மடம். வை. சி. சி. சிவகுருநாத பிள்ளை போன்றோரும் இவரிடம் கற்ற சீடர்களாவர்.

மட்டுவில் க. வேற்பிள்ளை அவர்கள் பொன்னம்பலப் பிள்ளை என்பாரின் சிறப்புக்களைப் பற்றி ஈழமண்டல சதகத்துள் பாடிய கவியொன்று மேல்வருவது:-

பொன்னம் பலப்பெயர்ப் புட்கலா வர்த்தம்
புராதன நியாயோததி
புகழ் சங்க லக்கியப் புணரிரா மாயணப்
பொருவறு மளக்கர் புவியிற்
றுன்னித் துலங்கிமலி சூதனொலி மாலையாந்
தொல்யோ ததி காவியத்
துங்கவார் கவிபார தம்பரவை லக்கணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுகடல்க டுய்த் தெழுந்தே
மின்னித் திடுக்கிட விடித்தியாழ்ப் பாணகிரி. (க. து.)

## பொன்னாகனார்

இவர் சங்க காலத்தைச் சேர்ந்த புலவர். எட்டுத் தொகை நூலைச் சேர்ந்த குறுந்தொகையில் 114-ஆம் பாடலை இவர் பாடியுள்ளார். அப்பாடல் இடத்துய்த்து நீங்கும் தோழி தலைமகற்குக் கூறியது என்னும் துறையில் அமைந்துள்ளது. தலைவியைக் குறியிடத்தில் விட்டுவந்த தோழி அதனைத் தலைவனிடத்தில் தெரிவிக்கும் நயம். நெய்தல் பரப்பில் என் பாவையைக் கிடத்திவிட்டுக் குறியிடம் கூற உன்னிடம் வந்தேன். என் பாவையின் நெற்றியை ஆரல் மீனை உண்ட நாரை மிதித்துவிடும் என்பதில் புலனாகிறது. தலைவன் தலைவியை வரைந்து கொள்ள வேண்டியமுறையையும், செல்ல வேண்டிய நெறியையும் புலவர் நயம்படப் பாடியுள்ளார். இது ஒரு நெய்தல் நிலப்பாடல். (வ. ம.)

## பொன்னையா பிள்ளை

இசை உலகில் பெயர் பெற்ற சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகிய தஞ்சை நால்வரின் மரபில் வந்தவர் இசை விற்பர் க. பொன்னையா பிள்ளையாகும். தீட்சதரின் சிஷ்ய பரம்பரையில் வந்த இவர் 1888ம் ஆண்டு தை மாதம் 2ம் திகதி, பந்தணை நல்லூர் என்ற ஊரில், வித்துவான் கண்ணுசாமி பிள்ளையவர்களுக்கு மைந்தனாகப் பிறந்தார். கண்ணுசாமிப் பிள்ளையவர்கள் பரோடா சமஸ்தானத்தில் நாட்டியக்கலை வித்துவானாக இருந்தவர்.

பொன்னையாப்பிள்ளை தன் மாமனாகிய பந்தனை நல்லூர் நாட்டியக் கலாநிதி வித்துவான் சு.மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களிடம் 15 ஆண்டுகள் தங்கியிருந்து இசை, நாட்டியம், மிருதங்கம் ஆகிய கலைகளை நன்கு கற்றதோடு, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றார்.

மற்றொரு மாமனாகிய நாட்டிய வித்துவான் நல்லையப்ப பிள்ளை இவருடைய திறமையைக் கண்டு இவரைச் சென்னைக்கு அழைத்துச் சென்றார். அங்குள்ள சிறந்த சங்கீத வித்துவான்கள் முன்பு பொன்னையாப்பிள்ளையை பாடச் செய்தார். இதன் விளைவாக பொன்னையாப்பிள்ளையவர்களுக்குப் பெரும் புகழ் உண்டாயிற்று. அங்கிருந்த பாலக்காடு அனந்தராம பாகவதரின் நன்மதிப்பைப் பெற்று, அவரிடமே பல பாடல்களை 6 மாதங்கள் பயின்றார்.

பொன்னையாப்பிள்ளை அவர்கள் அக்காலத்திலிருந்தே பரத நாட்டியக் கச்சேரிகளுக்குத் தம் மாமன் மீனாட்சி சுந்தரம் பிள்ளையோடு அடிக்கடி செல்வது உண்டு. நாட்டியக் கச்சேரிகளில் இவருடைய பாட்டைக் கேட்டப் பலரும் இவர் குரலிசையரங்கு நிகழ்த்துவதற்கு மிகச்சிறந்தவர் என்று கூறினர். அதுமுதல், நாட்டிய அரங்கு நிகழ்ச்சிகளோடு, குரலிசை அரங்கு நிகழ்ச்சிகளும் இவர் நடாத்தி வந்தார். பிள்ளையவர்களின் தந்தையார் பரோடா சமஸ்தானத்திலிருந்து ஓய்வு பெற்றுத் தஞ்சை வந்தவுடன் பிள்ளையவர்களும் சென்னை விட்டு தஞ்சைக்கு வந்து சேர்ந்தார்.

பொன்னையா பிள்ளையவர்களின் தந்தையாகிய கண்ணுசாமிப் பிள்ளையவர்களிடம் மாணவமாணவியர் நாட்டியம்,இசை, மிருதங்கம் கற்று வந்தனர். சில நேரங்களில் பொன்னையா பிள்ளையவர்களே இம்மாணவ மாணவியருக்குப் பாடங்களைக் கற்றுக் கொடுத்து வந்தார். தம் தந்தையார் அவர்கள், தஞ்சாவூர் பக்கிரி, கும்பகோணம் அழக - நம்பியாபிள்ளை, திருநெல்வேலி வயிரவம் பிள்ளை இன்னும் பலருக்குப் போதிப்பதை அடிக்கடி கேட்டு வந்த பொன்னையாப்பிள்ளைத் தாம் நன்கு மிருதங்கம் வாசிக்கக் கற்றுக்கொண்டதுமில்லாமல் பிறருக்கு நன்கு கற்றுக் கொடுக்கும் ஆற்றலும் பெற்றார். பிள்ளையவர்களிடம் காஞ்சிபுரம் நயினாப்பிள்ளை, திருச்சி பிடில் வித்துவான் கோவிந்தசாமிப் பிள்ளை, வீணைதனம்மாள் ஆகியவர்கள் மிக்க மதிப்பு வைத்திருந்தனர். இதுமட்டுமல்ல, இராமநாதபுரம் சமஸ்தானம், திருவனந்தபுரம் சமஸ்தானம், புதுக்கோட்டை சமஸ்தானம் ஆகியவற்றின் ஆதரவும் கபிஸ்தலம் மூப்பனார், புண்டி வாண்டையார், வடமட்டம் திருவேங்கடம்பிள்ளை ஆகியவர் 'களின் ஆதரவும் தம் பிள்ளையவர்களுக்குக் கிடைத்தது.

தஞ்சை மிருதங்க வித்துவான் வைத்தியநாதைய வர்களுக்குத் தொடக்க முதல் மிருதங்கம் கற்றுக் கொடுத்தது நம் பிள்ளையவர்களே ஆகும். வடமட்டம் திருவேங்கடம் பிள்ளை அவர்களும் பொன்னையா பிள்ளையவர்களை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று இசையும், மிருதங்கமும் அவரிடமிருந்து கற்றுக் கொண்டார்.

பொன்னையாப்பிள்ளையவர்களின் முன்னோர்கள் நீண்ட காலமாகத் தஞ்சை பெரிய கோயிலில் இசைத்தொண்டு செய்து வந்தவர்கள். ஆகவே நம்பிள்ளையவர்களும் சித்திரைத் திரு விழாவில் நடைபெறும் குறவஞ்சி நாடகத்தைச் சிறந்தமுறையில் நடத்திக் காட்டினார்.

பிள்ளையவர்களுக்கு 40வயது நடக்கும்போது இவருடைய தந்தையார் கண்ணுசாமிப்பிள்ளை காலமானார். தந்தையிடத்தில் கற்று வந்த மாணவ மாணவியர் தொடர்ந்து தம் பிள்ளையவர் களிடம் இசையும், நாட்டியமும், மிருதங்கமும் கற்றுவர ஆரம்பித்தனர்.

சுதேசமித்திரன் ஆசிரியர் திரு.சி.ஆர்.சீனிவாச ஐயங்கார் நம் பிள்ளையவர்களை 1928ஆம் ஆண்டு ராஜா அண்ணாமலைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டியாரிடம் அறிமுகம் செய்து வைத்தார். அண்ணாமலையில் ஓர் இசைக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. பொன்னையா பிள்ளையவர்கள் தொடக்கத்திலிருந்தே இசை ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். குரலிசை வகுப்பையும், மிருதங்க வகுப்பையும் தாமே நடாத்தினார். பலஜதிசுரங்களும், கானவர்ணங்களும் கீர்த்தனைகளும், தில்லானாக்களும் இயற்றி அவற்றை மாணவ மாணவியருக்குப் போதித்ததுமில்லாமல், தம் முன்னோர்களின் எண்ணிறந்த சுரஜதிகளையும், தானவர்ணங்களையும், கீர்த்தனைகளையும் கற்றுக்கொடுத்தார்.

சென்னைப் பல்கலைக்கழகத்திலும், சென்னை சங்கீத வித்துவத் சபையிலும் (Music Academy) முக்கிய உறுப்பினராக இருந்து பல பாடத்திட்டங்களை வகுத்துக்கொடுத்தார். தேர்வு அதிகாரியாகவும் பணி புரிந்தார். கோடை விடுமுறைக் காலங்களில் யாழ்ப்பாணம் சென்று கோடை இசைப்பள்ளி நடத்தித் தொண்டு செய்தார். அண்ணாமலை இசைக்கல்லூரியின் பாடத்திட்டத்திற் கேற்ப செயல்முறை இசைநூல் ஒன்று எழுதி ரூ.750 பரிசு பெற்றார். மற்றும் இசை அலக்கண நூல் ஒன்று இல்லாத குறையை அறிந்த பிள்ளையவர்கள் ''இசை இயல்'' என்ற இசை இலக்கண நூல் ஒன்றையும் எழுதி, அதையும் கற்பித்து வந்தார். 1932ம் ஆண்டு சென்னைச் சங்கீத விதவத் சபை நடத்திய இசை விழாவிற்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விழாவை நன்கு நடத்திக் கொடுத்துச் **''சங்கீத கலாநிதி''** என்ற பட்டத்தையும் பெற்றார். பின் சென்னைப் பல்கழைக்கழகத்தில் 5 ஆண்டுகள் இந்திய இசை டிப்ளோமா வகுப்புகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார். அந்த சமயத்தில் தன் முன்னோர்களின் சாகித்தியங்களைத் தொகுத்துச் சுரதாளக் குறிப்புடன் **'தஞ்சைப் பெருவுடையான் பேரிசை''** என்ற பெயரால் ஓர் அரிய நூல் வெளியிட்டார்.

அண்ணாமலை பல்கழைக்கழக இசைக்கல்லூரியில் முழுமையும் தமிழ்பாடல்களாகவே நடத்த வேண்டுமென்ற ராஜாசர் அண்ணாமலைச் செட்டியாரின் விருப்பத்திற்கிணங்க, மாதம் ரூ.100 சம்பளம் பெற்று, ஆரம்பப்பாடங்களுக்கு வேண்டிய இசைப்பகுதிகளைத் தயாரித்தார். தமிழிசையின் வளர்ச்சிக்காகப் பல மாநாடுகளில் கலந்துக் கொண்டார். 1941ம் ஆண்டு திருச்சியில் நடைபெற்றத் தமிழிசை மாநாட்டிற்கு இவரே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அண்ணாமலை நகரில் நடைபெற்ற தமிழிசை மாநாட்டில் நடைபெற்ற பாட்டுப்போட்டியிலும் சாகித்தியப் போட்டியிலும் இவருடைய பாடல்கள் முதற்பரிசைப் பெற்றன.

1941ஆம் ஆண்டு முதல் 1942ஆம் ஆண்டு அக்டோபர் முடிய எழுதிய பாடல்கள் அனைத்தும் ''ராஜா அண்ணாமலை தமிழிசைக் கருவூலம்'' என்ற பெயரில் ஓர் அருமையான நூலாக பிள்ளையவர்களின் மைந்தர்களான க.பொ. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை, க.பொ.சிவானந்தம் பிள்ளை ஆகியவர்களால் 1949ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இப்பாடல்கள் அனைத்தும் பிள்ளையவர்கள் குடும்பத்தின் குல தெய்வமாகிய தஞ்சைப் பெருவுடையான் பேரிலும், அண்ணாமலை அரசர் பேரிலும் இயற்றப்பெற்றவையாகும்.

இந்த நூலில் 35 அலங்காரங்கள், 8 சஞ்சாரி கீதங்கள் தீட்சிதர் அவர்களின் நவக்கிரகக் கீர்த்தனைகளைப் பின்பற்றி 7வாரகீதங்கள், நால்வர்துதி என்ற தலைப்பில் 1 கீதம், உலகியலைப் பற்றி 6 கீதங்கள், 8 இராக இலட்சணகீதங்கள், 5 ஜதிசுரங்கள், 4 சுரஜதிகள், பஞ்ச தாள குளாதி 1, திரிகால திரிதாள குளாதி 1, கைவாரப் பிரபந்தம் 1, தான வர்ணங்கள் 8, பதவர்ணங்கள் 2, கீர்த்தனைகள் 10, ஐந்திணைப் பதங்கள் 10, தேசிய அட்டராக மாலிகை 1, சப்த தாளராக மாலிகை 1, தில்லானாக்கள் 4 ஆகியவை அடங்கி உள்ளன.

பொன்னையா பிள்ளையவர்கள் ஓய்வு பெற்றுத் தம் சொந்த ஊராகிய தஞ்சைக்குச் சென்றார். கைவாரப் பிரபந்தம் ஒன்றை அமைத்து முடிக்கும் நிலையில், தம் உடல் நலக்குறைவின் காரணமாக, 1945ம் ஆண்டு ஜீன் திங்கள், 30ம் நாள் தம் 57வது வயதில் இறைவன் திருவடியை அடைந்தார். (பி. செ.)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போ

## போகர்

பதினெண் சித்தர்களில் ஒருவர். இவர் சீன நாட்டைச் சேர்ந்த மட்பாண்டத் தொழிலாளி என்பர். பௌத்த துறவி என்ற கருத்தும் நிலவுகிறது. 1600 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவிற்கு வந்து புத்தகாயா, பாடலிபுத்திரம் ஆகிய இடங்களைத் தரிசித்துப் பின் தமிழ் நாடு வந்தார் என்றும் கூறப்படுகிறது.

கி. பி. முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் போ (fo) அல்லது போகி (fohi) என்று ஒருவர் சீனாவிற்குச் சென்று புத்த சமயத்தைப் பரப்பினார் என்று இதிகாசம் கூறுகிறது. இவர் தான் இப் போகர் என்ற கருத்தும் நிலவுகிறது.

போகர் தமிழ் நாட்டில் தங்கியிருந்த காலத்தில் சோழ, பாண்டிய நாடுகளிலும், தஷிண தேசத்திலும் பலகாலம் தங்கியிருந்து அங்கு பண்டிதரார்களிடம் தாம் அறியாததைக் கேட்டறிந்தும், அறிந்ததை அவர்களுக்குக் கற்பித்தும் சீனதேசம் அடைந்தார். இவர் சீன தேசம் சென்ற போது சீடர்களாகத் தமிழர் சிலரும் சென்றார்கள். அக்காலத்தில் தஞ்சாவூர் பிருகதீஸ்வரர் ஆலய விமானத்துக் கபாலக் கல்லை மேலே ஏற்றும் உபாயம் தெரியாமலும், நாக பட்டினத்துப் புது வெள்ளிக் கோபுரத்துச் சக்கரத்தை நிறுத்தி, அக்கோபுரத்துள்ளே வைக்கப்பட்டு நெடுங்காலமாகக் கிடந்த பொற்குவையை எடுக்கும் வகை தெரியாமலும் இருந்தது. இந்த விடயங்களைப் போகரோடு சென்ற சீடர்கள் மூலம் கேள்வியுற்ற சீன தேசத்துச் சிற்பி உபாயம் ஒன்று கூறினான். இதனைப் போகருடன் சென்றிருந்த சீடன் ஒருவன் சோழமன்னனுக்கு அறிவிக்க, அரசன், சீனச் சிற்பி கூறிய உபாயப்படி விமானக் கல்லை ஏற்றியதுடன் சக்கரத்தையும் நிறுத்திப் பொற்குவையையும் பெற்று சீரங்கக் கோயில் ஏழ்மதில் திருப்பணியை முற்றுவித்தான் என்ற ஒரு கர்ணபரம்பரைக் கதை அபிதான கோசம் என்னும் நூலில் உள்ளது.

இவர் காலாங்கி நாதருக்கு மாணாக்கர். இவர் சித்தராய்ச் சப்த சமுத்திரங்களையும் தாண்டி சஞ்சீவி மூலிகைகள் கண்டுபிடிக்கையில் அவை கையில் அகப்படாதிருக்க, தம்பனா மந்திரத்தால் அதை ஓரிடத்தில் நிலைக்கச் செய்து பிடித்து வந்தவர்.

மேருவிற்கு அப்பால் சென்று தாதுவகை கொண்டு வந்தவர். சிங்கத்திற்கும், புலிக்கும், பூனைக்கும் ஞான உபதேசம் செய்தவர். இவர் ஆதிரசம் கொண்டு வந்தவர் என்று சொல்லுவர்.

இவர் தஷிணாமூர்த்தி சக்திக்கு அருளிச் செய்த ஏழு லஷத்தை ஏழு காண்டமாக்கித் தமது மாணாக்கருக்கு உபதேசிக்க, சித்தர்கள் அதைத் தஷிணாமூர்த்தியிடம் கூறத் தஷிணாமூர்த்தி இவரை வருவித்து நீர் செய்த நூலைக் கூறுமெனக் கேட்டுக் களித்து, சித்தர்களுக்கு நீங்கள் இதைப்பற்றி ஒன்றும் கவலை கொள்ள வேண்டாம், அவரவர்கள் தங்கள் சமர்த்தைத் தெரிவிக்கின் அதையேன் தடுத்தல் வேண்டுமெனக் கூறி, இருடிகளைத் தங்கள் இருப்பிடம் அனுப்பினார். அது முதல் சித்தர் பலர் இவரிடம் குளிகை பெற்றுப் போவர். இவர் ஒரு நாள் மலையடிவாரம் செல்ல அங்கு ஒரு புலி துரத்த, இடையனை விட்டுக் குகையில் ஒழித்து, கருவிழுதியின் பலத்தால் காயகற்பம் பெற்று, ஒரு கன்று போட்டு வசித்திருந்த பசு தன் கன்றுடன் இவரை வந்து திருவடியில் மோப்ப, இரங்கி அதற்கு உபதேசித்து நீங்கினார். இவர்செய்த தீஷை என்னும் நூலைச் சட்டை முனி கிழித்தெறிந்தார். இவர் செய்த நூல்கள் போகர் 7000, நிகண்டு 17000 சூத்திரம், யோகம் 700 என்பன. இவர் சதுரகிரி, சிவகிரி முதலிய இடங்களில் வசித்ததாகத் தெரிகின்றது.

கருவூர்த் தேவருக்குத் தஞ்சை சிவப்பிரதிட்டைக்காக ஓலை அனுப்பினார். இவருக்கு மாணாக்கர் கொங்கணர், கருவூர்த்தேவர், சுந்தரானந்தம், மச்சமுனி, நந்தீசர், இடைக்காடர், கமல முனி, சட்டை முனி முதலியவராம். இவரை அகத்தியர் மாணவர் என்றும் கூறுவர் என அபிதான சிந்தாமணி குறிப்பிடுகிறது.

1200 விருத்தங்கள் அடங்கிய யோகர் நிகண்டில் உள்ள

*"நிகண்டென வேதிருமூலநாயர் பாதம் போற்றி*
*நீங்காமள் காலாங்கியார் பாதம் போற்றி"*

என்ற பாடல் அடிகள் இவர் திருமூலர், காலாங்கி முதலியோரின் சமகாலத்தவராக இருக்க வேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறது.

போகர் சில ஆண்டு காலம் பழனிமலையில் தங்கி இருந்து பல சித்து விளையாடல்களைப் புரிந்துள்ளார். இதன் காரணமாகவே பழனிக்கு சித்தன் வாழ்வு என்ற பெயர் உண்டாயிற்று என்பர். இவர் நவபாஷாணங்களை ஒருங்கு கூட்டி நீர், நெருப்பு முதலியவற்றால் கரைந்தும் உருகியும் போகாத ஒரு தண்டாயுதபாணி உருவத்தைச் செய்தார் என்றும், அதுவே பழனி மூலஸ்தானத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள உருவம் என்றும் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறை இரணியவர்மன் என்னும் மன்னன் பல இடங்களுக்கு தீர்த்த யாத்திரை சென்று புனித நதிகளில் நீராடிப் பின் தில்லையை அடைந்தான். அங்குள்ள சிவகங்கைத் தீர்த்தத்தில் நீராடும்போது சிவனின் ஆனந்தத் தாண்டவத்தைக் கண்ணுற்று அதனை ஓவியமாக வரைந்து பின் தன் நாட்டிலுள்ள தலைசிறந்த சிற்பிகளை அழைத்து தான் வரைந்த ஓவியத்தை அவர்களிடம் காட்டி. இந்த விக்கிரகத்தை அப்படியே தூய்மையான தங்கத்தில் விக்கிரகமாகச் செய்து தர வேண்டும் எனக் கட்டளை இட்டார். மன்னனது விருப்பினை நிறைவேற்ற முடியாது சிற்பிகள் திகைத்து நின்ற வேளையில் போகர் தன் மாணாக்கரான கருவூர்த்தேவரிடம் சிற்பம் அமைக்கும் நுட்பத்தைக் கூறி மன்னனின் கட்டளையை நிறைவேற்றப் பணித்தார் என்ற செவிவழிக் கதையும் நிலவுகிறது.

உலக மாந்தர் மீது மிகுந்த அன்பும். இரக்கமும் கொண்ட இவர். அவர்கள் உய்யும் வழிமுறைகள் பலவற்றை கூறினார். தவம் செய்தவர்களுக்கு அவர்களின் உதவிக்காகத் தங்கம் செய்யும் முறையைச் சொல்லிக் கொடுத்தார். வியாதியால் வருந்தியவர்களுக்கு. நோய்களைத் தீர்த்ததோடு மறுபடியும் நோய் தாக்காமல் இருக்கும் வழிமுறைகளை உணர்த்தினார். போகத்தில் திளைக்க வேண்டும். என்று எண்ணம் கொண்டவர்களுக்கு அதன் நன்மை. தீமைகளை விவரித்தார். கிழத்தனத்தால் கஷ்டப்பட்டவர்களுக்கு அதை நீக்கும் வழிகளைச் சொன்னார். எந்தெந்தத் தெய்வத்தை எப்படி வழிபட வேண்டும் தெய்வங்களுக்குண்டான மந்திரங்கள் முதலானவைகளைச் சொல்லி வழிகாட்டினார். காயகல்ப ரகசியங்களையும். குளிகை செய்யும் முறைகளையும் தன் சீடர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்.

மந்திர ஜால வித்தைகள் காட்டுவது. இறந்தவர்களுடன் பேசுவது முதலான பல அதிசயங்களைச் செய்து காட்டினார். பஞ்ச பிராணன்களைப் பற்றி எழுதி எந்த நேரத்தில் காரியம் செய்தால். எல்லாக் காரியங்களும் வெற்றி அடையும் என்பதைப் பற்றிய விளக்கங்களை தந்துள்ளார். தெய்வங்களை வழிபடும் முறைகளை அவரவர்கள் பக்குவத்திற்குத் தகுந்தபடி உபதேசித்தார்.

இவ்வாறு பல விளக்கங்களையும். உபதேசங்களையும் மக்களுக்கு நல்கிய போகர் அவர்கள் இவ்வுலக வாழ்வின் லட்சியம் என்ன. அதனை நிறைவேற்ற மேற்கொள்ள வேண்டிய கைங்கரியங்கள் என்ன என்பது பற்றியும் கூறி உள்ளார்.

ஆன்மா தனது பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கு குரு வழிகாட்டல் அவசியம் என்கிறார் போகர். இருட்டான வீட்டிற்குத் தீபம் ஏற்றினால் இரண்டு கண்ணும் நன்றாகத் தெரியும். அதே போன்று உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் அஞ்ஞான இருளைப்போக்கி சிவஞானத் தீபத்தை ஏற்றுவதற்கு குருவின் வழிகாட்டல் அவசியம் என்கிறார். இதனை எவ்வளவு விளக்கிக் கூறினாலும் இம் மாநிலத்தோர் அதனைச் செவிமடுப்பதில்லை. அவர்கள் மனங்கள் எப்போதும் இருட்டாகவே உள்ளது என்கிறார்.

*"எத்தனைதான் துருசுவித்தை சொன்னாலுந்தா*

*னிகத்திலுள்ளோர் புத்தியெல்லா மிருட்டு வீடே"*

எனத் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார். மேலும் குரு புசை சிவபுசைக்குரிய சக்தி கொண்டது. அப்புசையினால் ஆன்மா சித்தானந்தப் பெருவாழ்வைப் பெற முடியும். இவ்வுலக வாழ்க்கை. நாம் அனுபவிக்கின்ற இன்ப. துன்பங்கள் அத்தனையும் அநித்தியம் என்றுணர்ந்து நித்தியானந்தப் பெருவாழ்வை ஆன்மா பெறும் என்று போகர் தமது ஞான சூத்திரத்தில் கூறி உள்ளார். மேலும் இந் நூலில் சித்தத்தை இறைவன்பால் ஒருமுகமாகச் செலுத்தி குண்டலினி சக்தியை சித்தர்கள் எழுப்புவது பற்றியும் பாடியுள்ளார்.

இவர் திருச்செந்தூர். திருத்தணிகை. திருப்பரங்குன்றம். கதிர்காமம் ஆகிய இடங்களில் சமாதி நிலையில் இருந்தார் என்று கூறுவர். பழனியில் உள்ள இவரது சமாதிக்குப் புலிப்பாணி முனிவர் மரபினர் வழி வழியாக வழிபாடு செய்து வருகின்றனர். வைத்திய முறைகளைப் புலிப்பாணி முனிவர் இவரிடமே கற்றார் என்று **A Tamil Dictionery of Proper Names** என்ற நூல் குறிப்பிடுகிறது.

போகர் பெயரில் சுவடிகள் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம். தஞ்சை சரசுவதி மகால் நூலகம். பாண்டிச்சேரி பிரெஞ்சு இந்திய ஆய்வுக் கழகம். சென்னை சித்த மருத்துவ மேம்பாட்டுக் குழு. சென்னை மத்திய ஆயுர்வேத சித்தவைத்திய ஆய்வு நிலையம். திருவனந்தபுரம். கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம். திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வரா சுவடிகள் நூலகம். தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழக நூலகம் ஆகிய இடங்களிலும். தனியாரிடமும் உள்ளன. (நி. நி.)

## போகிப் பண்டிகை

தைப்பொங்கலுக்கு முதல் நாள் கொண்டாடப்படுவது போகிப் பண்டிகையாகும். மார்கழி மாதத்தில் இறுதிநாளோடு தங்களது கஷ்டங்கள். பிணிகளைப் போக்கி தைத்திருநாள் பிறக்கப் போகிறது. அதனை வரவேற்க வேண்டும் என்ற நோக்கில் தம் வீட்டில் உள்ள பழைய பொருட்கள். எல்லாம் கொழுத்தி குப்பை கூழங்களை போக்குவார்கள். போக்கி எனும் சொல் மருவி போகிப் பண்டிகை ஆகிற்று என்று விளக்கம் சொல்லப்படுகிறது.

இந்திரனுக்குப் போகி என்று ஓர் பெயர் உண்டு. அவன் நினைவாக கொண்டாடப்படுவதால் இவ்விழா போகிப் பண்டிகை என்றும். இந்திரவிழா என்றும் அழைக்கப்படுகிறது. பழந்தமிழர் போகிப் பண்டிகையை இந்திர விழா என்றே அழைத்தனர். இவ்விழாவை தோடிதொட் செம்பியன் என்பவன் தொடக்கி வைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் முதலாக கொண்டாடப்பட்டு வருகிறது என்பர். இது புராணக் கதையுடன் தொடர்புடையது. அதாவது ஆயர்பாடியில் வளர்ந்த கண்ணன் தான் மூவுலகங்களுக்கும் அதிபதி என செருக்குற்று இருந்த இந்திரனது செருக்கை அடக்க நினைத்தார். அச்சமயம் ஆயர்பாடியில் மழை வரவேண்டி இந்திரயாகம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டனர். இதற்கு கண்ணனையே முன்நின்று நடத்துமாறு வேண்டினார்கள். கண்ணனோ இந்திரனுக்கு யாகம் செய்வதைவிடப் பரம்பொருளாகிய ஸ்ரீமத் நாராயணனுக்கே செய்யுங்கள் எனக் கூறினார். எனவே தேவர்களும் அப்படியே செய்தார்கள். கோபமடைந்த இந்திரன் மேகங்களுக்கு கொடும் மழையாக கொட்டி ஆயர்பாடியை அழிக்கும்படி உத்தரவிட்டான். கொடும் மழையைக் கண்டு ஆயர்பாடிகள் பயந்து கண்ணனிடம் முறையிட்டனர். கண்ணபிரான் கோவர்த்தன மலையை குடையாகப் பிடித்து ஆயர்பாடியை காப்பற்றினார். இதனால் கண்ணனை புரிந்து கொண்ட இந்திரன் அவரது காலில் விழுந்து தன் பிழையைப் பொறுத்தருளும்படி வேண்டினான். கண்ணனும் பிழையைப் பொறுத்து "இந்திரா சங்கராந்திக்கு முதல்நாள் மக்கள் உன் நினைவாக இந்திரவிழா கொண்டாடுவார்கள். அந்த விழாவிற்கு உமது போகி எனும் நாமத்தை சூட்டி மகிழ்வார்கள்" எனக் கூறினார். அன்றிலிருந்து இப்பண்டிகை கொண்டாடப் படுகின்றது என்பது புராணமரபு.

இவ்விழாக் காலங்களில் ஆலயங்களில் இந்திரனுக்காக வேண்டி விசேட பூசைகள் இடம்பெறும். வீட்டில் உள்ள பழைய பொருட்களைக் கழித்துச் சுத்தம் செய்வார்கள். பின் எண்ணெய் தேய்த்து நீராடி வடை, போளியுடன் சமையல் செய்து உண்பார்கள். அடுத்த நாள் தைப்பொங்கலுக்குரிய ஆயத்தங்களை மேற்கொள்வார்கள். இந்தியாவின் பல பிரதேசங்களில் இப்போகிப் பண்டிகை பல்வேறு பெயர்களில் கொண்டாடப்படுகிறது.

இந்தியாவின் தென் மாநிலங்களில் பண்டிகைக்கு முன்பு வீட்டை தூய்மை செய்து, சுண்ணாம்பு அடித்து, மெழுகி, மாக்கோலமிட்டு, செம்மண் பூசி அழகு செய்வார்கள். வடமாநிலங்களில் லோரி கொளுத்துவது எனக் கூறப்படுகிறது. கட்டைகளை அடுக்கி நெருப்பு மூட்டி அதில் அவல், பொரிகடலை, ஆகியவற்றை இட்டு எரித்துப் பின்னர் அதனை எல்லோருக்கும் வழங்குவார்கள். ஆந்திரா மக்களுக்கு போகிப் பண்டிகை முக்கியமான பண்டிகையாக விளங்குகின்றது.

இலங்கையில் இது பண்டிகையாக கொண்டாடப்படாத போதிலும் பொதுவாக பழைய பொருட்களை அகற்றுதல், வீடுவாசல்கள் கழுவுதல், வெள்ளையடித்தல் போன்றவை பின்பற்றப்படுகின்றன. இவை பழையவற்றை போக்கிப் புதியவற்றை ஏற்கும் போகிப் பண்டி கையை நினைவு கூறப்படுகிறது. எனவே மார்கழியின் இறுதிநாளில் பழையதை போக்கி தை முதல் நாளை பொங்கல் விழாவாக வரவேற்கின்றனர். (ஹே. கு.)

# போதிகை

ஒரு கட்டுமானத்தில் இடம் பெறும் தூணின் தலைப்பகுதியே போதிகை என்பது. போதிகையின் மீது தான் கூரையின் மேல் தளவரிசைக் கற்கள் அமரும். இப்போதிகை அமைப்பு, காலங்கள் தோறும் சிற்சில மாறுதல்களும், வளர்ச்சியும் பெற்று வந்துள்ளது. தமிழகக் கலை வரலாற்றில் இது அடைந்த மாறுதல்கள் பல்லவர் காலக் குடை வரைக்கோயில்களில் தொடங்கி இக்காலக் கட்டுமானங்கள் வரை நுணுகி ஆராய்வோரால் அறியப்படும்.

போதிகையின் வடிவம் பொதுவாகக் கல்தச்சனின் கற்பனையின் படி வடிக்கப்பட்டது. பல்லவர் காலத்தில் இவ்வமைப்பு மிகவும் எளிமையானதாக இருந்தது. வளைவானவையாகவும், சதுர வடிவமுடையனவாகவும் அக்காலப் போதிகைகள் இருந்தன. போதிகையின் வளர்ச்சியை ஆராய்ந்த அறிஞர்கள் இதில் ஐந்து கட்ட வளர்ச்சியைக் குறிப்பிடுகின்றனர்.

முதல் கட்டமான பல்லவர் காலத்தில் (கி.பி. 600 - 850) ஓரளவு வளைந்த போதிகையும், அதில் சில நேரங்களில் அலைகள் போன்ற வெட்டமைப்பும், இடம்பெறும். இதுவே, தரங்கப் போதிகை எனப் பெயர் பெற்றது. இது பல்லவர் காலத்திற்கே உரிய அமைப்பு எனலாம். இரண்டாம் கட்டம் முற்காலச் சோழர் காலத்தைச் (கி.பி. 850-1100) சேர்ந்தது. இக்காலப் போதிகை அமைப்பில் பல்லவர் கால வளைவு சற்றே மாறுபட்டு ஒரு வகையான விரிகோண வெட்டுத் தோற்றம் காணப்படும். அவை இடம்பெறாமையும் குறிப்பிடத்தக்கது. மூன்றாம் கட்டமான பிற்காலச் சோழர் காலத்தில் (கி.பி. 1100-1350) முற்கூறிய அமைப்புச் சற்றே மாறுபட்டிருக்கும். நான்காம் நிலை விசயநகர் காலத்தைச் (கி.பி. 1350 - 1600) சேர்ந்தது. இக் காலகட்டத்தில் போதிகை சற்றே வளைந்து மதலை, நாணுதல் என்ற பாகங்களைப் பெறுகிறது. அந்நிலையில் தாமரைப்பூ முனை போன்ற அமைப்பு சற்றே கீழ் நோக்கிக் காட்டப்படும். இறுதிக்கால கட்டத்தில் (கி.பி. 17 - ஆம் நூற்றாண்டுக்கு மேல்) மேற்சொன்ன பூ முனை நன்கு வளைந்து வாழைப்பூ ப் போல் கீழ்நோக்கித் தொங்கும். இதுவே, புட்பபோதிகை எனவும் பெயர் பெறுகிறது.

தொடக்கத்தில் மர உத்திரங்களின் இணைப்புகளில் தோன்றிய ஓர் அமைப்பு, போதிகை என்று பெயர் பெற்று, காலந் தோறும் அடைந்த வளர்ச்சியை இன்றும் பல வரலாற்றுச் சின்னங்களில் காணமுடிகிறது. (வ. ம.)

# போளுவாம் பட்டி

இது கோயம்புத்தூருக்கு மேற்கே 20 கி.மீ. தொலைவில் நொய்யல் ஆற்றங்கரையில் உள்ள ஒரு பழம்பெரும் ஊராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொய்யலாற்றின் இரு கரைகளிலும் அமைந்து இக்கரைப் பேரளூவாம்பட்டி, அக்கரைப் பேரளூவாம்பட்டி என்ற இரு பெயர்களில் இவ்வூர் அமைந்துள்ளது.

இக்கரைப் பேரளூவாம்பட்டிப் பகுதியில் முட்டம் என்ற பெயரில் பழம்பெரும் ஊர் இருந்தது. கொங்கு 24 நாடுகளில் ஒன்றான ஆறை நாட்டு ஊர்களில் முட்டம் ஒன்றாகும். முட்டம் என்றால் மலையைச் சார்ந்த ஊர் என்பது பொருள். நாடும் நகரும் நளிமலை முட்டமும் என்பது பெருங்கதை அடியாகும். சோழன் புருவ பட்டயம் இவ்வூரை வெள்ளியங்கிரி முட்டம், வெள்ளியங்கிரி அடிமுட்டம் எனக் கூறும்.

முட்டத்தின் ஒரு பகுதி விழுமிப்பட்டி என்று வழங்கப்பெற்றது. அப்பெயரே பேரளூவாம்பட்டி என மருவியது. புவிலுவர் என்னும் மக்கள் இங்குக் குடியேறியமையால் புவிலுவப்பட்டி, புவலுவப்பட்டி, பேரளூவாம்பட்டி என்று மருவியது என்று சிலர் கூறுவர்.

இவ்வூரிலுள்ள நாகீசுவரர் - முத்துவாளி அம்மன் கோயிலில் 20 கல்வெட்டுகள் உள்ளன. அவை இராசராசன், வீரராசேந்திரன், விக்கிரம சோழன் என்னும் கொங்குச்சோழர் கல்வெட்டுகளும், சடையவர்மன் சுந்தர பாண்டியன் கல்வெட்டும், ஒய்சள மன்னன் மூன்றாம் வீரவல்லாளன் கல்வெட்டும் ஆகும்.

ஆறை நாட்டின் ஒரு பகுதி பேரூர் நாடு, மூலை நாடு எனப் பிரிந்ததைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இரவிவர்மச் சதுர்வேதி மங்கலம், அமரபுயங்கர நல்லூர், முட்டத்து நல்லூர் என்பன பழம் பெயராகும்.

பேரளூவாம்பட்டிக் கணவாய் மேற்கு மலைத்தொடர் வழியாகச் சேர நாடு வரை அமைந்திருப்பதால் பழங்காலத்தில் இவ்வழியாக வணிகப் போக்குவரத்து நடைபெற்றது. முட்டத்தில் பல வணிகச் சக்கரவர்த்திகள் இருந்தனர் என்பதை முட்டம், பேரூர், அவிநாசிக் கல்வெட்டுகள் கூறுகின்றன. பல மன்றாடிகள் பெயர்களும் முட்டம் கல்வெட்டில் காணப்படுகின்றன.

தேவன் சேரமானான தம்பிரான் தோழன், சம்பந்தப் பெருமாள், தனபாலன், காவன் கூத்தன், தேவரடியாள் ஏலவார் குழலி என்பவர்கள் இங்குத் திருப்பணி செய்த சிலராவர். சடையவர்மன் சுந்தரபாண்டியனின் பிறந்தநாள் சுந்தர பாண்டியன் திருநாள் என்ற பெயரில் வைகாசிச் சுவாதியில் கொண்டாடப் பெற்றது. கொங்குச் சோழர் சிலர் இங்கு நேரில் வந்து திருப்பணி செய்தனர்.

நொய்யலாற்றில் உள்ள 32 அணைகளில் முதல் அணை இங்குதான் உள்ளது. இங்குள்ள நீலிவாய்க் காலின் பழம்பெயர் உத்தம சீலி வாய்க்கால் ஆகும். ஏரியைக் கல்வெட்டு, அதிசயச்சோழர் பேரேரி என்று குறிக்கிறது. இங்குள்ள திருமால் கோயிலின் பெயர் வெங்கடேச விண்ணகரம்.

கோட்டைக்காடு என்னும் பகுதியில் 54 ஏக்கர் பரப்பளவில் தொல்பொருட்கள் கிடைக்கும் மேட்டுப் பகுதி உள்ளது. தமிழக அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் 1980, 1987 ஆகிய இரு ஆண்டுகள் இங்கு அகழாய்வு மேற்கொண்டனர். அகழாய்வில் சேர சோழ பாண்டியர் சின்னமும் பெயரும் பொறித்த சுடுமண் முத்திரை கிடைத்தது. ஓலையில் வைக்க அம் முத்திரை பயன்பட்டிருக்கலாம்.

புதிய கற்கால ஆயுதங்கள், பல வண்ணப் பாசிகள், சங்கு வளையல்கள், சுடுமண் காதணிகள், சதுரங்கக் காய்கள், அம்பு நுனி, வாள் போன்ற இரும்புக் கருவிகள், தங்க அணிகலன் துண்டுகள், குறியீடுகள் உள்ள பானை ஓடுகள், வண்ணம் பூசப்பெற்ற மட்கலயங்கள், விளக்குகள், அம்மி ஆகியவை அகழாய்வில் கிடைத்துள்ளன.

இங்கு கிடைக்கும் செங்கற்கள் 60 செ.மீ. நீளமும், 30 செ.மீ. அகலமும், 20 செ.மீ. உயரமும் கொண்ட மிகப்பெரிய செங்கற்களாகும். அழகிய தலைப்பாகையும், சிரித்த முகமும், நீண்டு தொங்கிய காதுகளும் உடைய சுடுமண் பொம்மைகள் சில கிடைத்துள்ளன. அவற்றுள் சில உரோமானியச் சாயல் உள்ளவை.

பொன் ஏர் பூட்டி உழும் வெண்கல எருதுப் பொம்மைகளும் வெள்ளியாலும், செம்பாலும் செய்யப்பட்டு முத்திரை பதிக்கப்பெற்ற காசுகளும் கிடைத்துள்ளன. புத்த மைத்திரேயர், சமண இயக்கர் ஆகியோர் உருவங்கள் கிடைத்திருப்பது மிகச் சிறப்பானதாகும். 'சதகணிச' என எழுதப்பெற்ற சாதவாகனர் காசுகளும், சேரர், சோழர் காசுகளும் இங்கு கிடைத்துள்ளன. '...ரன் கொற்றி', '...ங்குசபை விற்றிக்குழி' எனப் பிராமியில் எழுதப் பெற்ற ஓட்டுச் சில்லுகள் கிடைத்துள்ளன.

தொல்பொருட்கள் கி.பி. 5- ஆம் நூற்றாண்டு வரை உள்ள பெருமைகளைக் கூறுகின்றன. கல்வெட்டுகள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை உள்ள வரலாற்றைக் கூறுகின்றன. பின்னர் இவ்வூர் பழம் பெருமையை இழந்தது. (சு. இரா.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌர்ணமி

பௌர்ணமி, புரணை, பூர்ணிமை, முழுமுழுநிலா எனப் பல பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. திதிகளில் ஒன்று. மாதத்தில் ஒரு முறை வருவது பௌர்ணமியை அடுத்து வருவது தேய்பிறை அல்லது கிருஷ்ண பட்ஷ திதி என அழைக்கப்படும். பௌர்ணமி சிறந்த நாளாகக் கொள்ளப்படுகிறது. அம்பிகை வழிபாடு பௌர்ணமி தினங்களில் முக்கியத்துவம் பெறுகிறது. ஸ்ரீ சக்கர நாயகியாகிய அன்னை பராசக்தி பதினாறு நித்தியையாக மகாதிரிபுர சுந்தரி என்னும் பெயருடன் புரணமான ஒளியுடன் பௌர்ணமி அன்று காட்சி தருவதாக புராணங்களும் சாஸ்திரங்களும் கூறுகின்றன. ஒளிமயமான தேவியை ஒளிமயமான தினத்தில் புசை செய்யும் போது விசேட பலன்கள் கிடைக்கின்றன. பௌர்ணமித் திதியில் துர்கா தேவியை வழிபட்டு விரும்பியதைப் பெறலாம்.

பௌர்ணமியில் சித்திரைப் பௌர்ணமி சிறப்புக்குரியது. இந்நாளில் சந்திரன் முழு வலிமை பெற்றுத் தன் முழுக் கிரணத்தையும் புமிக்கு அளிக்கிறான். அன்றைய தினம் சித்திரா பௌர்ணமி விரதம் அனுட்டிக்கப் படுகிறது. தாயை இழந்தவர்கள் இதை அனுஷ்ட்டித்து தானதருமம் செய்வது முக்கியமானதாக விளங்குகிறது. அத்துடன் எமது பாவ புண்ணியங்களைக் கணக்கெடுத்து யமதர்மனிடம் கொடுக்கும் பணியை செய்பவர் சித்திரகுப்தர் ஆவார். சித்திரா பௌர்ணமியில் தான் அவர் அவதரித்தார். எனவே அன்று அவரை வழிபடுவதும் முக்கிய மானதாகும். அவரை புஜிப்பதால் நமது பாவங்கள் குறைகின்றது. அறியாமையால் நாம் செய்யும் தவறுகள் சித்திரா பௌர்ணமி விரதத்தினால் நீங்குகிறது.

வைகாசி விசாகம் சரவணப் பொய்கையில் முருகப் பெருமான் திருஅவதாரம் செய்த நாள். அன்று பௌர்ணமி கூடுவது சிறப்பாகும். கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரம் கூடிய பௌர்ணமி விளக்கீடாக கொண்டாடப்படுகிறது. தை மாதப் பௌர்ணமி கூடிவரும் நாள் தைபுசம் முருகனுக்கு உகந்த தினமாக விளங்குகின்றது. ஒவ்வொரு பௌர்ணமியும் சிறப்பு வாய்ந்தாகக் காணப்படினும் மேற் கூறப்பட்ட சித்திரை, வைகாசி, கார்த்திகை, தை மாதங்களில் வரும் பௌர்ணமி அதி சிறப்பு வாய்ந்தனவாகவும் சக்தி வாய்ந்தனவாகவும் விளங்குகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை பௌத்தர்களுக்கும் பௌர்ணமி புனித நாளாக விளங்குகிறது. அன்று புத்தர் பரிநிர்வாணம் அடைந்த தினமாக ஒவ்வொரு பௌர்ணமியும் வழிபாடு, தான, தர்மம் எனச் சிறப்பிக்கின்றனர். அன்றைய தினம் அரசவிடுமுறையாகவும் காணப்படுகிறது.

(ஹே. கு.)

## பௌஷ்கராகமம் (ஞானபாதம்)

பௌஷ்கரம் என்பது புஷ்கரருக்கு உபதேசிக்கப் பட ஓர் உபாகமம் ஆகும். காமிகம் முதலிய 28 பிரதான ஆகமங்களில் 26 வதாக உள்ள பாரமேஷ்வர ஆகமத்தின் உபாகமங்கள் ஏழினும் இது நான்காவதாக உள்ளது. முதலில் இதனை சதாசிவதேவர் 'ருத்திரபேதங்களிலொருவராகிய உசனர் என்பவருக்குக் கூற, பின் அவரிடமிருந்து புஷ்கரரைத் தலைவராகவுடைய ரிஷிகணங்களுக்கு இது கூறப்பட்டுள்ளது.

இப்பௌஷ்கராகமத்தில் ஞானபாதமொன்றே சிறப்பாக உலகப்புகழ் பெற்று வழங்கிவருகின்றது. ஏனைய மூன்று பாதங்களும் (சரியா, கிரியா, யோகபாதங்கள்) அவ்வளவு பிரசித்தி பெற்றனவாக இல்லாதபடியால் அவற்றைப் பெறுதல் அரிதாக உள்ளது.

இந்நூல் பதிபடலம் தொடக்கம் தந்திரமந்திரோற்பத்தி படலம், ஈறாக எட்டுப் படலங்களும் 977 செய்யுட்களும் கொண்டுள்ளது. முதலாவதான பதிபடலத்திலே, சிவதத்து வோற்பத்தி சதாசிவ மகேஸ்வரபேதம், சாந்தியதீதகாலை முதலிய கலைகள் சிவசாதாக்ய ஈஸ்வர தத்துவங்கள் சதாசிவ பஞ்ச மந்திர ஷடங்கங்களின் விபரம், ஹாரிணி முதலிய சக்திகளின் தன்மை அபர ஞானமான ஆகமஞான பிரயோசனம், தீக்ஷாபிரயோசனம் ஆகியன பற்றிக் கூறப்படுகின்றது. இரண்டாவதான பிந்து படலத்திலே குண்டலினி என்னும் சுத்தமாயையால் அருவசிவம், உருவப் பிரபஞ்சத்தைச் செய்வதற்கிடந்தரும் இடம் என்பது கூறப்படுகின்றது. இதில் மாயாவாதி கிராகரணம், அநந்தாதி சிவபேதங்களின் தன்மை, அட்சரோற்பத்தி, ஞானத்திற்கிடம் வைகரியாதி கலைகளின் தன்மை, சுத்தாத்மாவாகிய சிவ சாதாக்ய ஈஸ்வர வித்தியாதத்துவங்களின் வியாபாரம், சுத்த கலைகளின் சம்பந்தம் ஆகியன பற்றிக் கூறப்படுகின்றது.

மூன்றாவதான மாயாபடலத்தில் சரீரேந்திரியாதிகளை யுடைய ஆன்மாக்களையும், அவர்களின் பும்ஸ்த்வபலத்தையும் தோற்றுவிக்கும் அசுத்தமாயை இவ்விதமிருக்கும் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுகின்றது. மேலும் இதிற் கலாதி பிருதிவி பரியந்தம் ஸ்தூல, சூக்கும சிருஷ்டி நிர்ணயம், பிரளயாகல சகலர் கட்சிருப்பிடம், மும்மலபிரகிருதி, முக்குண ஸ்வரூபங்கள், கர்மரூபம், தர்மாதியஷ்ட கருமம், சிவத்தால் அநுகிரகிக்கத்தக்க சகலத்தன்மையுடைய நூற்றுப் பதினெண் ருத்திரர்கள் பற்றிக் கூறப்படுகின்றது.

நான்காவதான பசு படலத்திலே பாசமலத்தால் தடைபட்டுள்ள மூவகை ஆருயிர் வர்க்கமாகிய சகலர், பிரளயாகலர், விஞ்ஞான கலர்களின் தன்மையிதுவெனக் கூறப்படுகின்றது. அத்துடன், இதில் அவர்கட்குரிய ஆணவ, மாயை, காமியமென்னும் மலங்களின் தன்மை, அவர்கட்கிருப்பிடம் பௌத்த சாங்கியாதி மதநிராகரணம், ஸ்தூல சூக்கும, தேகங்களின் விபரம், பிரளயாகலர்க்குரிய தீக்ஷை திரிவித கர்மபேதம், சக்திபாதலஷணம் சகலர்க்கும் (தாந ஷபண தீக்ஷை) சத்திதீக்ஷை, தீக்ஷையில்லாதாரடையும் பலன், மூவகை ஆன்மாக்கள் பரிபாதத்தாலடையுமிடம், ஆன்மா உண்டென்பதற்கு பிரமாணம், ஏகான்மவாத நிராகரணம், ஆன்மஞான வியாபகலஷணம், புத்தி அஞ்ஞானம், மலத்தின் ஏழுவிதபேதமான மோஹ, மத, ராக, விஷாத, தாப, சோஷ, வைசித்திரிய லஷணங்கள், ஆணவ மல லஷணம் ஆகியன கூறப்பட்டுள்ளன.

ஐந்தாவதாகிய பாச படலத்திலே கலைவித்தை ராகம் காலம் நியதிகளால் ஆன்மா பிணிக்கப்பட்டிருக்கும் என்பதும், இதில் அவைகளின் பேதங்களும் கூறப்பட்டுள்ளன.

ஆறாவதும், மிகநீண்ட படலமுமாகிய (358 செய்யுட்கள்) பும்ஸ்த்வ படலத்திலே சகலராயுள்ளார், கலாதி பஞ்சகங்களோடும், அவித்தையோடும் கூடி பிரகிருதியைப் புசித்து புருஷரெனப் பெயர் பெறுவர். அப்புருஷர்கட்குப் பிரகிருதியில் வந்திருக்கிற அவித்தையாதிகள் பும்ஸ்த்வமலமெனப்படும். மேலும், இதில் முக்குண ஸ்வரூபம் பிரகிருதி தத்துவத்திற்குக் கீழ்ப்பட்ட புவனங்களிருப்பு, மேற்படி தத்துவங்களின் தன்மை, தர்மாதி அணிமாதி சித்திகளின் தன்மை, சார்வாகாதி மதசித்திகளின் தன்மை, அவர்களடையும் புவனம் ஞானகர்ம லட்சணங்கள் ஆகியன கூறப்பட்டுள்ளன.

ஏழாவதான பிரமாணப் படலத்திலே அளவைகள் பற்றிக் கூறப்படுகின்றது. இதில் உத்தேச லட்சணங்களைப் பரீஷிக்கும் உபாயமான பிரத்யஷம், அநுமானம், சப்தம் (ஆகமம்), அர்த்தாபத்திகள் ஆகியனவற்றின் பேதங்கள், அவ்யாப்தி அதிவ்யாப்தி, அசம்பதோஷங்களின் தன்மை பிரமாண, பிரமேய, பிரமாதா பிரமதி லட்சணப் பிரதிஞ்ஞை, ஷேது, திருஷ்டாந்த உபநய நிகமன லட்சணபேதங்கள் பஷ சபஷ, விபஷ அபாதித அஸத்பிரதிபஷ அந்வய, வ்யதிரேக லட்சணங்கள், ஆகமோற்பத்தி விசேஷ விபரம், பிருதிவ்யாதி தத்வோபசம்ஹார கிரமம் ஆகியன கூறப்பட்டுள்ளன.

எட்டாவதும், இறுதியானதும், ஏனையவற்றிலும் பார்க்கச் சிறியதாகவுமுள்ள (45 செய்யுட்கள்) தந்திர மந்திரோற்பத்திப் படலத்திலே ஆகமங்களும், மந்திரங்களும், தோன்று முறைமை எடுத்துரைக்கப்படுகின்றது. மேலும் இதில் ஆகமங்களின் தொகை, அஷரோற்பத்தி, லட்சணம் ஆகியன கூறப்பட்டுள்ளன.

இவ்வாறு ஞானபாதம் அல்லது சைவ சித்தாந்தம் பற்றிய முக்கியமாக கருத்துக்களை இந்நூல் விளக்குகின்றது. பதி, பசு, பாசமாகிய முப்பொருள் பற்றிய விரிவான விளக்கங்களோடு, சைவசித்தாந்தம் சாராத ஏகான்மவாத, பௌத்த, சாங்கிய, சார்வாதக் கருத்துக்களையும் ஆசிரியர் நிராகரித்துத் தமது கருத்துக்களைத் தெளிவாகக் கூறியுள்ளார். ஞான பாதம் பற்றிய இவ் ஆகமத்திற்குச் சில உரைகள் வடமொழியில் எழுதப்பட்டுள்ளன. இவற்றுள்ளே தமிழிலே சித்தாந்த அஷ்டகங்களை இயற்றியவரும் சந்தானாச் சாரியர்களில் ஒருவருமாகிய உமாபதி சிவாச்சாரியர் எழுதியுள்ள உரை நன்கு குறிப்பிடற்பாலது. யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டையைச் சேர்ந்தவரும், திருவாவடுதுறை ஆதீனத்தால் நாவலர் பட்டமளிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டவருமாகிய ஸ்ரீமான் அம்பலவாணநாவலர், மேற்குறிப்பிட்ட உமாபதி சிவாச்சாரியரின் பௌஷ்கராகம உரையுடன் கூடிய பதிப் பொன்றிற்கு நீண்ட உபோற்காதம் (பாயிரம்) ஒன்றினைத் தமிழில் எழுதி இதன் முக்கியத்துவத்தினை நன்கு விளக்கியுள்ளார்.

"இதுவரை வடமொழியில் முதன்முதல் வெளிவந்த பிரமாண நூலாகிய வைதிக சித்தாந்த பாஷ்யம் இதுவாதலாலும், அதிலும் இது உத்தமாச்சாரியர் இயற்றியருளிய பாஷ்யரத்தினமென்னும் ராஜயாஷ்ய மாதலாலும், சித்தாந்த மஹிமையை வல்லார் ஒன்று கொண்டு பாஷ்ய விசாரத்திற் பிரவிர்த்திக்குமாறு இத்தனை விஸ்தாரமாய் உபோற்காதம் எழுதப்படலாயிற்றென்க. அதிலும் இப் பாஷ்யம் கேவலம் வடமொழி என்று தமிழர் பாராமுகம் செய்யாது இது ஒரு பாகம் தமிழ் நூலுமாயிற்றென்று ஒன்று அவ்விரண்டது பயன் கொள்ளுமாறு பாலோடியைந்த மருந்துபோல அதனது மகிமையை விளக்குவதாகிய உபோற்காதம் தமிழில் எழுதப்படலாயிற்றென்க" என இந்நூல் அதன் உரை, தமிழிலுள்ள உபோற்காதம் ஆகியனவற்றின் முக்கியத்துவத்தினை அம்பலவாணர் தமிழிலே தாம் எழுதியுள்ள மிக நீண்ட உபோற்காதத்தின் (180 பக்கங்கள்) முடிவிலே சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் இவ் ஆகமத்திற்கு யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த ஞானப்பிரகாச சுவாமிகளும் ஒரு விருத்தியுரையை எழுதியுள்ளார். இது தமிழகத்திலும், யாழ்ப்பாணத்திலும் பிரபல்யமாக விளங்கிற்று. இதனையும், வேறு சிலபிரதிகளையும் பயன்படுத்தி பருத்தித்துறையைச் சேர்ந்த ஆதிசைவ க. நா. குருசுவாமிகளின் விருப்பப்படி தமிழ் பெயர்ப்புடன் தமிழ் நாட்டவரான கொ. ஷண்முகசுந்தரமுதலியார் சென்ற நூற்றாண்டிலே சென்னையிலே வெளியிட்டுள்ளார். இவ்வாறு இவ் ஆகமத்திலே யாழ்ப்பாணத்துச் சைவ அறிஞர்கள் மிகுந்த ஆர்வம் காட்டி வந்துள்ளமை குறிப்பிடற்பாலது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லடைவு


| | |
|---|---|
| பகதத்தன் | 01 |
| பகவத் கீதை | 01 |
| பகழிக் கூத்தர் | 02 |
| பகன் | 04 |
| பகீரதன் | 04 |
| பங்குனி உத்திரம் | 06 |
| பங்குனி மாதம் | 07 |
| பசு (ஆன்மா) | 07 |
| பசுபதி | 08 |
| பசுபதி நாதர் ஆலயம் | 09 |
| பசோலி ஓவியங்கள் | 10 |
| பஞ்சகன்னியர் | 11 |
| பஞ்ச கிருத்தியம் | 12 |
| பஞ்ச கௌவியம் | 13 |
| பஞ்ச சுத்தி | 14 |
| பஞ்ச தசாஷரி | 14 |
| பஞ்ச துவாரகை | 15 |
| பஞ்சநதம் | 15 |
| பஞ்சபத்திரங்கள் | 15 |
| பஞ்ச பருவங்கள் | 17 |
| பஞ்ச பாரதீயம் | 18 |
| பஞ்சபுராணம் | 18 |
| பஞ்சபூத சிவத்தலங்கள் | 18 |
| பஞ்ச மகா யக்ஞங்கள் | 20 |
| பஞ்சமரபு | 20 |
| பஞ்சமி | 22 |
| பஞ்சமுக ஆஞ்சநேயர் | 22 |
| பஞ்சமுக வாத்தியம் | 23 |
| பஞ்சராத்திரம் | 23 |
| பஞ்சவரதர் திருத்தலம் | 23 |
| பஞ்ச வில்வங்கள் | 25 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பஞ்சாக்கரமாலை | 25 |
| பஞ்சாங்க நமஸ்காரம் | 25 |
| பஞ்சாங்கம் | 26 |
| பஞ்சாட்சரம் (பஞ்சாக்கரம்) | 27 |
| பஞ்சாமிர்தம் | 28 |
| பஞ்சாயுதம் | 28 |
| பஞ்சாயதன பூஜை | 28 |
| பஞ்சேந்திரியம் | 29 |
| பஞ்சோபசாரம் | 30 |
| பட்டணம் சுப்பிரமணிய அய்யர் | 30 |
| பட்ட நாராயண கண்டர் | 31 |
| பட்டினத்தார் | 32 |
| பட்டினத்துப் பல்லவனீச்சரம் | 32 |
| பட்டீஸ்வரம் துர்க்கை ஆலயம் | 34 |
| பண்டரிபுரம் | 35 |
| பண்டார்க்கர் இராமகிருட்டிண கோபால் | 36 |
| பண்டாரக் கவிராயர் | 37 |
| பண்டார சாத்திரம் | 37 |
| பண்டார மும்மணிக்கோவை | 38 |
| பண்டிகைகள் | 39 |
| பத்தராய்ப் பணிவார் | 42 |
| பத்திரகிரியார் | 43 |
| பத்திரபாகு முனிவர் | 45 |
| பத்திராசலம் | 46 |
| பத்திரி நாத்து | 46 |
| பத்தினித் தெய்வம் | 46 |
| பத்துமலை முருகன் கோயில் | 50 |
| பத்மநாபபுரம் | 50 |
| பத்ராசல ராமதாஸ் | 51 |
| பத்மபாணி | 52 |
| பத்மபுராணம் | 52 |
| பதஞ்சலி | 53 |
| பதம் | 54 |
| பதரி (திருவதரி) | 55 |
| பதவியா | 56 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பதார்த்தங்கள் | 60 |
| பதி | 62 |
| பதினான்கு சாத்திரங்கள் | 65 |
| பதினெட்டாம் பெருக்கு | 67 |
| பதினெண் கணத்தவர் | 67 |
| பதினெண் சித்தர்கள் | 68 |
| பதினெண் மடங்கள் | 77 |
| பதுமகோமளை | 82 |
| பதுமப் பிரமர் | 83 |
| பரசுராமர் | 83 |
| பரஞ்சோதி அடிகள் | 84 |
| பரஞ்சோதி முனிவர் | 84 |
| பரத்துவாசர் | 85 |
| பரதசேனாபதியம் | 86 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 87 |
| பரதம் | 92 |
| பரத முனிவர் | 98 |
| பரதர் | 99 |
| பரதன் - I | 99 |
| பரதன் - II | 99 |
| பரம்பொருள் | 100 |
| பரமனையே பாடுவார் | 101 |
| பரமாநந்தி | 101 |
| பரமாற வம்சம் | 102 |
| பரார்த்த பூசை | 105 |
| பரிபாடல் | 105 |
| பரிவார தேவதைகள் | 106 |
| பல்லவர் | 107 |
| பல்லவர்கால பக்தி இயக்கம் | 141 |
| பல்லாவரம் குடைவரை | 146 |
| பலராமர் | 147 |
| பவானி | 148 |
| பவித்திரம் | 149 |
| பழநி | 149 |
| பள்ளிகொண்டா | 151 |
| பன்றி மலைச் சுவாமிகள் | 154 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பாகவத மேளம் | 156 |
| பாசம் | 157 |
| பாசுபதயோகம் | 161 |
| பாசுபதம் | 161 |
| பாஞ்சராத்திரம் | 162 |
| பாஞ்ச ஜன்யம் | 163 |
| பாட்ட சித்ரா ஓவியங்கள் | 164 |
| பாண்டுரங்கம் | 165 |
| பாணபத்திரர் | 165 |
| பாணாசுரன் | 166 |
| பாண்டுரங்கன் | 167 |
| பாண்டிருப்புத் திரௌபதையம்மன் கோயில் | 167 |
| பாணர் | 171 |
| பாணினி | 172 |
| பாபநாசம் - தலம் | 173 |
| பாபநாச தீர்த்தம் | 173 |
| பாம்பன் சுவாமிகள் | 174 |
| பாம்பாட்டிச் சித்தர் | 175 |
| பார்த்தசாரதி | 177 |
| பார்த்தன் பள்ளி | 178 |
| பார்வதி | 179 |
| பாலர்வம்சம் | 181 |
| பாலாவி | 186 |
| பானுகோபன் | 187 |
| பாஸ்கரராயர் | 187 |
| பாஷ(ர்) | 188 |
| பிங்களாஷன் | 191 |
| பிச்சாடனர் (பிஷாடனமூர்த்தி) | 191 |
| பிதிர்கடன் | 193 |
| பிரகலாதன் | 194 |
| பிரணாயாமம் | 194 |
| பிரத்யங்கிரா தேவி | 195 |
| பிரதக்ஷிணம் | 195 |
| பிரதிட்டா கலை | 196 |
| பிரதோஷ விரதம் | 196 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பிரபஞ்சம் | 197 |
| பிரபத்தி | 201 |
| பிரமச்சரியம் | 201 |
| பிரம்மசமாஜம் | 202 |
| பிரம்ம சூத்திரம் | 204 |
| பிரம்ம முகூர்த்தம் | 207 |
| பிரம்மஞான சபை | 207 |
| பிரமன் | 208 |
| பிரமாண்ட புராணம் | 209 |
| பிரயாகை | 210 |
| பிரம்ம வைவர்த்தபுராணம் | 211 |
| பிரளயம் | 211 |
| பிரளயாகலர் | 213 |
| பிராகிருதம் | 213 |
| பிராமி வரிவடிவங்களும் சாசனங்களும் | 214 |
| பிருகதாரணியக உபநிடதம் | 217 |
| பிருங்கி முனிவர் | 218 |
| பிருந்தாவனம் | 219 |
| பிள்ளை உறங்கா வில்லிதாசர் | 220 |
| பிள்ளையார்பட்டி | 222 |
| புகழ் சோழ நாயனார் | 224 |
| புகழ் துணை நாயனார் | 224 |
| புத்தர் பெருமான் | 225 |
| புத்தகயா | 228 |
| புரந்தர தாஸர் | 229 |
| புராணங்கள் | 229 |
| புராண படனம் | 238 |
| புருடார்த்தங்கள் | 240 |
| புரூரவன் (புரூரவஸ்) | 243 |
| புலியூர்ப் புராணம் | 244 |
| புலிப் பாணிச் சித்தர் | 244 |
| புலோமன் | 245 |
| புவனங்கள் | 245 |
| புவனேசுவரம் | 245 |
| புள்ள மங்கை | 247 |
| புறப்புறச் சமயங்கள் | 248 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| புஷ்கர்ணி | 250 |
| புஷ்பம் | 251 |
| பூசலார் | 254 |
| பூதங்கள் | 255 |
| பூதத்தாழ்வார் | 256 |
| பூதேவி | 256 |
| பூபால பிள்ளை (1856-1921) | 257 |
| பூம்பாவை | 258 |
| பூரி ஜெகந்நாதர் | 259 |
| பெரிய தம்பிரான் | 261 |
| பெரியபுராணம் | 262 |
| பெரியாழ்வார் | 267 |
| பெரும்பற்றப் புலியூர் நம்பி | 268 |
| பேயாழ்வார் | 272 |
| பேரியாழ் | 272 |
| பேரீதாடனம் | 273 |
| பேலூர் சென்ன கேசவர் ஆலயம் | 274 |
| பேஷயானி | 275 |
| பைடால குருமூர்த்தி சாஸ்திரி | 276 |
| பைரவர் | 276 |
| பைரவி | 278 |
| பொப்பிலி கனம் கேசவய்யா | 279 |
| பொய்கையாழ்வார் | 279 |
| பொய்யடிமையில்லாத புலவர் | 281 |
| பொலன்னறுவை | 281 |
| பொன் வண்ணத்தந்தாதி | 314 |
| பொன்னம்பலப் பிள்ளை | 315 |
| பொன்னாகனார் | 316 |
| பொன்னையா பிள்ளை | 316 |
| போகர் | 318 |
| போகிப் பண்டிகை | 319 |
| போதிகை | 320 |
| போளுவாம் பட்டி | 320 |
| பௌர்ணமி | 322 |
| பௌஷ்கராகமம் (ஞானபாதம்) | 322 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org